வணிகவியல் சட்டம்

(MERCANTILE LAW)

K.N. இராமானுசம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—764

வணிகவியல் சட்டம்

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

கே. என். இராமானுசம், எம். காம்., எம். லிட்.,

விரிவுரையாளர், வணிகவியல் துறை,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

அண்ணாமலை நகர்.

தமிழ்நாட்டுப்

பாடநூல் நிறுவனம்

சென்னை

First Edition—September, 1977
Reprint—October, 1986
Number of Copies—2000

T.N.T.B.S. (C.P.) No. 764

© Government of Tamilnadu

MERCANTILE LAW

K. N. RAMANUJAM

Price : Rs. 24-00

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by

MANI PRINTERS, 30, Medawalkam Tank Road, Madras - 600 010

அணிந்துரை

(திரு. சி. பொன்னையன், தமிழகக் கல்வி மற்றும் சட்ட அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி இருபத்தாறாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்களின் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

அகராதியியல், அரசியல், இயற்பியல், உயிரியல், உளவியல், கணிதவியல், சட்டவியல், தாவரவியல், புவியமைப்பியல், புவியியல், புள்ளியியல், பொருளியல், பொறியியல், மனையியல், மெய்ப்பொருளியல், வணிகவியல், வரலாற்றியல், வாணியல், விலங்கியல், வேதியியல் முதலிய பல துறைகளில் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **வணிகவியல் சட்டம்** என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான **764**ஆவது வெளியீடாகும். தமிழ்மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களின் நல்லூக்கத்தினாலும் இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின், இப்பொழுது இந் நூல் மீண்டும் வெளிவருகின்றது. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பது தான். 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை **உதவி**களுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக!

சி. பொன்னையன்

பொருளடக்கம்

		பக்கம்
	தோற்றுவாய்	1
1.	ஒப்பந்தச் சட்டம்	5
2.	கருத்தொருமை	10
3.	ஏற்பு	18
4.	கைம்மாறு அல்லது மறுபயன்	24
5.	ஒப்பந்தத் தகவுடைமை	30
6.	இசைவில் தவறு	40
7.	சட்ட விரோதமான உடன்பாடுகள்	56
8.	ஒப்பந்தம் தீர்த்தல்	66
9.	ஒப்பந்த மீறுகைக்குப் பரிகாரங்கள்	80
10.	அரை ஒப்பந்தங்கள் அல்லது ஒப்பந்தப் போல்வு	86
11.	ஈட்டுறுதியும் உத்தரவாதமும்	90
12.	ஒப்படைவு	99
13.	பதிலாண்மை அல்லது முகமை	109
14.	சரக்கு விற்பனை	134
15.	கூட்டு வாணிகம்	170
16.	மாற்றுமுறையாவணச் சட்டம்	196
17.	சரக்கேற்றிச் சட்டம்	244
18.	காப்பீடு	263
19.	கம்பெனிச் சட்டம்	318
20.	திவால் அல்லது முறிவுச் சட்டம்	399
21.	நடுவர் அல்லது இசைவுத் தீர்ப்புமுறைச் சட்டம்	427
22.	தொழிற்சங்கச் சட்டம் (1926)	446
23.	தொழிலாளர்கள் இழப்பீடு சட்டம் (1923)	455
24.	தொழில் சர்ச்சைகள் சட்டம் (1947)	470
25.	தொழிற்சாலைகள் சட்டம் (1948)	494
26.	தொழிலாளர்கள் அரசு காப்பீட்டுச் சட்டம் (1948)	520
	கலைச்சொற்கள்	546

தோற்றுவாய்

சமுதாயத்தின் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்ட அரசாங்கம் வலியுறுத்தும் விதிகள்தாம் சட்டங்கள் எனப்படும். இச் சட்டங்கள் மனித இனத்தினிடையே அவர்தம் செயல்களை ஒழுங்குபடுத்தி ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் வழங்க முயல்கின்றன. மேலும், இச் சட்டங்களை அரசாங்கத்தின் அதிகாரம் ஆதரிக்கின்றது. சமுதாயத்தின் முன்னேற்றம் சட்டத்தின் எண்ணத்திலே ஒரு மாற்றத்தை உண்டாக்கிவிட்டது. தற்காலத்தில் சட்டங்களின் நோக்கமே சமுதாய-பொருளாதார நீதியை வலியுறுத்திச் சமுதாய-பொருளாதார அமைப்பில் நிலவும் பேதங்களை அகற்றுவதாகும். தற்காலச் சட்டங்களின் முக்கியப் பணி சமுதாய மதிப்பைப் பாதுகாத்து நல்வழிப்படுத்தி முன்னேறச் செய்வதுதான். அப்பொழுதுதான் சமுதாயத்தில் சுதந்தரமும் நீதியும் முன்னேற்றமடையும். வியாபார நடை முறைகளிலும் கோட்பாடுகளிலும் முரண்பாடில்லாத ஒத்த நிலையைக் கொணரச் சட்டங்கள் முயல்கின்றன. வியாபாரத்தில் சாதாரணமாகக் கடைப்பிடிக்க வேண்டிய சாதாரண விதிகளை அவை வலியுறுத்துகின்றன. மேலும், அரசாங்கத்தின் கொள்கை களுக்குச் சட்டங்கள் நல்லதொரு பயனை நல்குகின்றன.

வணிகவியல் சட்டம் அல்லது சட்ட வணிகம் (Law Merchant)

வியாபார நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி ஆளும் சட்ட சம்பந்தமான விதிகளை வணிகவியல் சட்டம் தன்னுள் அடக்கி யுள்ளது. இவ் விதிகள் வியாபார நடைமுறைகளில் ஒரு தெளிவை ஏற்படுத்துகின்றன. மேலும், ஓர் ஒப்பந்தத்தின் செல்லுபடித் தன்மையை அவை தீர்மானிக்கின்றன; அவ் வொப்பந்தத்தை நிறைவேற்றும் வழியையும் தன்மையையும் அவை குறிப்பிடு கின்றன. வணிகச் சட்டம் அநேக விதமான ஒப்பந்தச் சட்டங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. உதாரணமாக, கூட்டு வாணிபஇசைவு, சரக்கு விற்பனைச் சட்ட ஒப்பந்தம், பதிலாண்மை, ஒப்படைவு, ஈட்டுறுதி உத்தரவாதம், காப்புறுதி, செலாவணிப் பத்திர ஒப்பந்தம் ஆகியவைகள் எல்லாம் வணிகச் சட்டத்தின் கூறுகளாகும். கூட்டுப் பங்குக் கம்பெனி, சரக்கு கொண்டுசெல்லல், திவால், நடுவர் தீர்ப்புக்கு விடல் போன்றவைகளும் வணிகவியல் சட்டத்தில் அடங்கியவை

யாகும். சுருங்கக் கூறின், சமுதாயச் சட்டத்தின் முக்கியக் கிளைகளில் ஒன்றாக வணிகவியல் சட்டம் திகழ்கிறது.

இந்திய வணிகவியல் சட்டத்தின் மூல ஆதாரங்கள்
(Sources of Indian Mercantile Law)

இந்திய வணிகவியல் சட்டம் ஆங்கில வணிகவியல் சட்டத்தைப் பெரும்பாலும் பின்பற்றியுள்ளது. நம் நாட்டு நடைமுறைகளுக்கு ஏற்பச் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. 1872ஆம் ஆண்டுக்கு முன் நம் நாட்டில் வணிக நடைமுறைகள் தனியார் வழக்குச் சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்பட்டன. இருதரப்பினரும் இந்துவாகவோ முகமதியர்களாகவோ இருந்தால் முறையே இந்து அல்லது முகமதியச் சட்டம் வழக்கைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்பட்டது. வழக்காடிகள் பலதரப்பட்ட இனத்தோர்களாக இருந்தால் பிரதிவாதிச் சட்டம் பயன்படும். வழக்காடிகள் இந்துவாகவோ முகமதியர்களாகவோ இல்லாமல் இருந்தால் சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களிலுள்ள உயர்நீதிமன்றம் ஆங்கிலச் சட்டத்தை அமல் படுத்தியது.

சட்டங்களைத் தொகுத்து ஒரே விதமான கொள்கைகளை உடைய வணிகவியல் சட்டத்தை இயற்றும் பணி 1872-ல் இந்திய ஒப்பந்தச் சட்டத்தை நிறைவேற்றியதன்மூலம் வலுப் பெற்றது. அதுமுதல் ஏராளமான சட்டங்களை இயற்றி வணிக வியல் சட்டம் வலுப்படுத்தப்பட்டது. அவையாவன : செலா வணிப் பத்திரச் சட்டம் (1887), கம்பெனிச் சட்டம் (1956), சரக்கு விற்பனைச் சட்டம் (1930), கூட்டு வாணிபச் சட்டம் (1932) முதலியன.

இந்திய வணிகவியல் சட்டம் தோன்ற மூலகாரணமாக இருந்தவை : 1. ஆங்கில வணிகவியல் சட்டம், 2. இந்திய சட்ட மன்றங்கள் உருவாக்கிய சட்டம், 3. நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பு, 4. நடைமுறைப் பழக்கவழக்கங்கள்.

ஆங்கில வணிகவியல் சட்டம்
(The English Mercantile Law)

முன்பு கூறியதுபோல் இந்திய வணிகவியல் சட்டம் பெரும் பாலும் ஆங்கில வணிகவியல் சட்டத்தின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. இன்றும் இந்தியச் சட்டத்தில் காணப்படாத

விஷயங்களுக்கு ஆங்கிலச் சட்டத்தின் உதவியை நாடிதான் நாம் செல்ல வேண்டியுள்ளது. ஆங்கிலச் சட்டத்தின் முக்கிய மூல காரணங்களாவன :

1. இங்கிலாந்தின் பொதுச் சட்டம்,
2. சட்ட வணிகம்,
3. நியாயக் கொள்கைகள்,
4. சட்ட சம்பந்தமான விதிகள்.

இங்கிலாந்தின் பொதுச் சட்டம் (Common Law) என்பது அநேக நூற்றாண்டுகளாக ஆங்கிலேயப் பழக்கவழக்கங்களைக் கொண்டு ஆங்கிலேய நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளைக் கொண்ட சட்டமாகும். பழக்கவழக்கங்களைக் கொண்டு அநேக நூற்றாண்டுகளாகப் பழக்கத்தில் இருக்கும் எழுதப்படாத சட்டம் தான் இச் சட்டம். இதனை இயற்றாச் 'சட்டம்' என்றும் கூறுவர்.

சட்ட வணிகம் என்பது இங்கிலாந்தில் 14 அல்லது 15ஆம் நூற்றாண்டில் நடைமுறைப் பழக்கவழக்கங்களைக் கொண்டு ஆங்கிலேய வணிகர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட சட்டமாகும். முக்கியமாக வியாபாரிகள் தங்களுக்குள் நிறுவிய நீதிமன்றங்கள் மூலம் இச் சட்டத்தைக் கையாண்டார்கள். பின்னால் இது பொதுச் சட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

தகைமை மன்ற நெறி (Equity) அல்லது இயற்கை நீதி பொதுச் சட்டத்தின் கடுமையாலும், அது விடப்பட்ட குறை பாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும் எழுந்ததாகும். கால வேகத்தில் பொதுச் சட்டம் எவ்வித மாறுதலுமின்றி ஒரே மாதிரியாக இருந்தமையால் வழக்காடிகளின் நோக்கத்தை அதனால் நிறைவேற்ற இயலவில்லை. தகைமை மாறி நெறி களைக் கொண்ட சட்டமும் எழுத்தில் வடிக்காத வகையைச் சாரும். மக்கள் மன்றத்தில் தகைமை நெறிகளும், அரச மன்றத்தில் பொதுச் சட்டமும் கையாளப்பட்டன. 1873-லும் 1875-லும் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களினாலும் வேறுபாடுகள் அகற்றப்பட்டு இவ்விரு மன்றங்களும் ஒன்றாக இணைக்கப் பட்டன.

பாராளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்களை சட்ட சம்பந்தமான விதிகள் குறிக்கின்றன. பொதுச் சட்டத்தையும் தகைமை நெறிகளையும்விட இது மேலானதாகும்.

இந்தியச் சட்டசபைகள் இயற்றிய சட்டங்கள்

பெரும்பான்மையான இந்தியச் சட்டங்கள் பல்வேறு சட்ட சபைகள் நிறைவேற்றிய சட்டங்களையே உருக்கொண்டுள்ளன. மத்திய-மாநில சட்டமன்றங்கள் சட்டமியற்றும் அதிகாரத்தை நிரம்பப் பெற்றுள்ளன.

நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகள்

ஒரே விதமாகச் சட்டக் கருத்துகளைக் கடந்த காலத்தில் கூறிய தீர்ப்புகளை முன் நிகழ்ச்சியாகக்கொண்டு ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவது மிகவும் சகஜம். அவைகள் வியாபார நட வடிக்கைகளை ஒழுங்குபடுத்தி நீதி, நேர்மை, நல்ல மனச்சாட்சி ஆகிய கோட்பாடுகளைச் சட்டத்தில் புகுத்தி, சட்டங்கள் நெகிழ்ச்சியுள்ளதாகவும் முன்னேற்றம் உடையதாகவும் ஆக்கப் பட்டன. ஒரே நிலையிலுள்ள வழக்கு மன்றங்களுக்கு, முன்னால் கூறப்பட்ட தீர்ப்புகள் வழிகாட்டியாக விளங்கும். ஆனால், கீழ் நிலையிலுள்ள வழக்கு மன்றங்களுக்கு, கட்டுப்படுத்தக்கூடிய சக்தியாக விளங்கும். நம் நாட்டில் இறுதியாக முறையிடுவதற்கு உச்ச நீதிமன்றம் (Supreme Court) உள்ளது. ஆனால், சில வழக்குகளின் தீர்ப்பை வலியுறுத்துவதற்கு, ஆங்கில வழக்கு களின் தீர்ப்பை வலியுறுத்துவதற்கு ஆங்கில வழக்கு மன்றங் களான பிரிவி கவுன்சில்(Privy Council), ஹவுஸ் ஆப் லார்ட்ஸ் (House of Lords) போன்றவைகளின் தீர்ப்புகளை உதாரணங் களாக எடுத்துக்கொள்வதும் உண்டு.

பழக்கவழக்கங்கள்

சட்டத் தொகுப்புகளால் இந்திய வணிகச் சட்டம் முக்கிய மாக இயற்றப்பட்டிருந்தாலும், பழக்கவழக்கங்கள் மூலகாரண மாக ஒத்துக்கொள்ளப்படுவதில்லை என்று சொல்வதற்கில்லை. அநேக வியாபாரப் பழக்கங்கள், நடப்புகள் சட்டமாகச் சேர்க்கப்பட்டு நீதிமன்றங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய நடைமுறைப் பழக்கங்களையும் நடப்புகளையும் இந்திய ஒப்பந்தச் சட்டமும் செலாவணிப் பத்திரச் சட்டமும் அங்கீகரிக்கின்றன.

1. ஒப்பந்தச் சட்டம்

(Law of Contract)

இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி அமலுக்கு வந்தது. நம் நாட்டில் ஒரேவிதமான வணிகக் கொள்கைகளும் முறைகளும் இருக்கவேண்டும் என்பதே அதன் குறிக்கோள். ஜம்மு-காஷ்மீர் தவிர ஏனையப் பகுதிகளுக்கு அது செல்லுபடியாகும். இச் சட்டம் பெரும்பாலும் ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட பொது விதிகளைக் கொண்டது; உடன்பாட்டு (Agreement) விதிகளையோ அல்லது சட்டப் பிணைப்பு (Obligation) விதிகளையோ முழுக்கக் கொண்டதன்று. செல்லத்தக்க ஒப்பந்தத்தின் அமைப்பையும் அத்தியாவசியத்தையும் விளக்குகிறது. சட்டத்தால் மறைமுகமாக உணர்த்தும் ஒப்பந்தப் போல்வு (Quasi contract) போன்றவைகளையும் தொடர்பு கொண்டதாகத் திகழ்கிறது. ஒப்பந்தத்தை நிறை வேற்றாதவர்களுக்கு எதிராக வழக்கு மன்றத்தில் ஏற்படும் நிலைமைகளும் பரிகாரங்களுடன் அதில் விளக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தச் சட்டத்தைத் தவிர பலவித உடன்பாடுகளை ஒழுங்கு படுத்தும் அநேகச் சட்டங்களும் உள்ளன. உதாரணமாக, சொத்துரிமை மாற்றுச் சட்டம் (Transfer of Property Act), அசையாச் சொத்துகள் மாற்றும் சம்பந்தமான உடன்பாடுகளைக் கொண்டுள்ளது. செலாவணிப் பத்திரச் சட்டம் காசோலை (Cheque), மாற்றுச் சீட்டு (Bill of exchange), புரோநோட்டு (Promissory Note) போன்றவைகளைப் பற்றிய உடன்பாடுகளைக் கொண்டுள்ளது; சரக்கு விற்பனைச் சட்டம் (Sale of goods) பொருள்கள் விற்பதைக் குறிக்கிறது. கூட்டு வாணிபச் சட்டம் கூட்டு வாணிப உடன்பாட்டைப்பற்றி உணரச் செய்கின்றது. காப்புறுதிச் சட்டம் இன்சூரன்ஸ் சம்பந்தமான ஒப்பந்தங்களை உணர்த்துகிறது. சட்ட உடன்பாடுகளுக்கு முரணான குறிப்பிட்ட வியாபாரப் பழக்கவழக்கங்கள் தற் போதைய ஒப்பந்தச் சட்டத்தில் ஒன்றும் இல்லை. சில வழக்குகளில் சட்டத்திற்கு முரணான பழக்கவழக்கங்கள் நன்மை பயப்பதாகவும், வழக்கு மன்றங்கள் மேற்கொள்வதாகவும் உள்ளன.

ஒப்பந்தத்தின் இலக்கணம்
(Definition of Contract)

இநதிய ஒப்பந்தச் சட்டப்படி ஒப்பந்தம் என்பது சட்டத்தால் நடைமுறைக்குக் கொண்டுவரும் உடன்பாடாகும். ஓர் ஒப்பந்தம் செய்யக் குறைந்தது இரு நபர்கள் வேண்டும். இரண்டிற்கு மேலும் நபர்கள் இருக்கலாம். ஆனால், இருவர் இல்லாமல் ஒப்பந்தம் எழாது. 'கான்டிராக்டு' என்ற இலத்தீன் வார்த்தையில் 'கான்' என்றால் ஒன்றாக என்றும், 'டிராக்கோ' என்றால் இழு என்றும், அதாவது ஒன்றாக இழுத்தல் அல்லது ஒன்றாக வருதல் என்ற பொருளை உடையது. உடன்பாடு ஏற்படுவதற்கு முன் இருவர் மனமும் ஒத்திருக்கவேண்டும். ஓர் ஒப்பந்தம் அமையவேண்டுமானால் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்களிடையே கொடுக்கப்பட்டுள்ள பொருள்பற்றி ஓர் உடன்பாடு நிகழவேண்டும்.

'சட்டத்தால் வற்புறுத்தப்பட்ட' என்ற சொற்றொடரிலிருந்து சட்டத்தால் வற்புறுத்தப்படாத உடன்பாடுகளும் உண்டு என்று உணர இடமிருக்கிறது. எல்லா ஒப்பந்தங்களும் உடன்பாடுகளே. ஆனால், எல்லா உடன்பாடுகளும் ஒப்பந்தங்கள் என்று கூறுவ தற்கு இல்லை. உதாரணமாக, அன்பழகன் பாலகிருஷ்ணனை விருந்திற்கு அழைக்கிறார். ஆனால், அவருக்கு விருந்தளிக்கத் தவறிவிட்டார். பாலகிருஷ்ணனுக்கு அது ஏமாற்றமாகவும் அசௌகரியமாகவும் இருக்கலாம். ஆனால், பாலகிருஷ்ணன் இந் நிகழ்ச்சியை வைத்து வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர முடியாது ; நஷ்ட ஈடு எதுவும் கேட்க முடியாது ; அவருடைய செயலுக்குச் சட்டப் பின்னணி இல்லை. பால்ஃபோர் எ. பால்ஃபோர் (Balfour *Vs.* Balfour) என்ற வழக்கில் ஒரு கணவன் தன் மனைவிக்கு அவர் இலங்கையில் இல்லாதபொழுது மாதா மாதம் பணம் அனுப்புவதாக வாக்குறுதி தந்திருந்தார். ஆனால், அவர் தந்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. எனவே, அவர்மீது மனைவி வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றம் இவ் வழக்கை நிராகரித்து விட்டது. காரணம் மனைவியின் செயலில் போதிய காரணமில்லை. இதுபோன்ற உடன்பாடுகள் சமுதாயக் கடப்பாடுகளே தவிர, அவை முறியப்பெற்றால் சட்டத்தில் பரிகாரம் இல்லை.

நம் வாழ்வில் நித்தம் ஒப்பந்தங்கள் அதிக அளவில் நம்மை ஆள்கின்றன. மேக்மில்லன் பிரபு சொல்லியுள்ளபடி காலையில்

பால்காரன் வருவதிலிருந்து இரவு படுக்கப்போகும்வரை ஒரு மனிதனின் வாழ்வில் ஒப்பந்தங்கள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. பால்காரன் வீட்டுக்காரனுக்குப் பால் தருகிறான்; ஏனெனில், வீட்டுக்காரன் பால்காரன் வழங்கும் பாலுக்காக ஒரு குறிப்பிட்ட விலை தருவதாக ஒத்துக்கொண்டுள்ளான். இவ்வாறு எல்லாச் செயல்களும் ஓர் உடன்பாட்டால் நிகழ்கின்றன. உண்மையில் டென்னிசன் கூற்றான சட்டத்தால் நாம் வாழ்கிறோம் (We live by the law) என்பதிலிருந்து காலைமுதல் இரவுவரை, இரவுமுதல் காலைவரை சட்டத்தின் பிடியிலே நம் வாழ்வு நடந்துகொண்டிருக்கிறது. சட்டம் என்பதற்கு டென்னிசன் நேர்மை என்று பொருள் கொண்டிருந்தாலும் இதற்கும் அது பொருந்தும். காலை முதல் இரவுவரை ஏற்படும் செயல்கள் நாமறிந்ததே. இரவு முதல் காலைவரை என்ன செயல் என்று வினா எழலாம். உதாரணமாக, நம் வீட்டைக் காவல்காக்கக் காவலாளியை அமர்த்தி அவனுக்குக் கூலி கொடுப்பதும் ஓர் ஒப்பந்தமாகும்.

ஒப்பந்தக் கடப்பாடு (Contract obligation) உடன்பாட்டிலும் (Agreement) இரண்டு நீதிக் கொள்கைகள் உள்ளன. கடப்பாடு என்பது ஒரு கடமை அல்லது ஒருவன் எடுத்துக் கொள்ளும் பொறுப்பு. அந்தக் கடமை தெளிவாகவும், குறிப்பாகவும், இருபொருள் படாமலும் இருக்கவேண்டும். அதற்கேற்ற வகையில் சொல்லப்பட்ட கடப்பாடு மற்றொருவனால் ஒத்துக் கொள்ளப்படவேண்டும். ஒருவன் அளிப்புக்கூற்று (Offer) தர வேண்டும். மற்றொருவன் அளிப்புக்கூற்றை ஏற்க அல்லது ஒப்பவேண்டும். எனவே, ஒப்பந்தம் என்பது கடமைகளை உண்டாக்கும் உடன்பாடு. உரிமைகளை அழிக்கும் அல்லது மாற்றும் உடன்பாடுகளை ஒப்பந்தச் சட்டம் ஒத்துக் கொள்வ தில்லை. சால்மன்ட் (Salmond) சொல்லியுள்ளபடி 'ஒப்பந்தச் சட்டம் முழு உடன்பாட்டையோ, முழுக் கடமையையோ கொண்டதன்று. கடமையை எந்தெந்த உடன்பாடுகள் உண்டாக்குகின்றனவோ அல்லது எந்தெந்தக் கடமைகள் உடன் பாட்டின் மூலம் தோன்றுகின்றனவோ அவைகளின் சட்டம்தான் ஒப்பந்தம்'.

மேற்கூறிய கருத்துகளைக் கீழ்க்காணும் சொற்பொருள் விளக்கங்கள் மேலும் தெளிவாக்குகின்றன. 'நபர்களிடையே உடன்பாட்டை உண்டாக்கிக் கடமையை விளக்குவதுதான் ஒப்பந்தம்' என்று விளக்கம் சொல்கிறார் சால்மன்ட். 'இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்களிடையே சட்ட முறையில் கட்டுப்படுத்தும் உடன்பாடுதான் ஒப்பந்தம். மேலும் அவ்

வொப்பந்தத்தால் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் மற்றவர் அல்லது மற்றவர்கள் செயலையும் சகிப்புத் தன்மையையும் ஏற்றிட உரிமை ஏற்படுகிறது' என்று ஆன்சன் (Anson) கூறுகிறார். 'தங்களுக்குள் கடமையை உண்டாக்கும் நோக்கத்தோடு ஏகோபித்த விருப்பமுடன் பலர் ஒன்றுசேருவதே ஒப்பந்தம்' என்று விளக்குகிறார் சாவிக்னி (Savigny). 'ஒவ்வொரு வாக்குறுதியும் அல்லது வாக்குறுதிகள் பலவும் ஒவ்வொருவருக்கும் கைம்மாறு (மறுபயன்—Consideration) வழங்கினால் அதுதான் உடன்பாடு' என்று இந்திய ஒப்பந்தச் சட்டம் விவரிக்கிறது. ஒருவர் பரிவுரையினை (Proposal) மற்றொருவர் ஒத்துக்கொண்டால் அது வாக்குறுதியாகிறது. ஒருவர் ஒரு செயலைச் செய்வதற்குத் தன் விருப்பத்தையோ விருப்பமின்மையையோ தெரிவிப்பதுதான் பரிவுரை. அப் பரிவுரை அச் செயலைச் செய்வதற்கு மற்றவரின் ஏற்பைப் பெறுவதற்காகவும், அல்லது தவிர்ப்பதற்காகவும் நோக்கங்கொண்டு இருக்கலாம்.

ஓர் ஒப்பந்தம் வன்மையாக இருப்பதற்கு அது மாசில்லாமல் இருக்கவேண்டும். அதாவது, எக் காரணம் கொண்டும் கெட்ட நோக்கம் அங்கு தலைகாட்டக்கூடாது. அவற்றின் முக்கியப் பகுதிகளாவன :

1. கருத்தொருமை (Consensus-Ad-Idem)

ஒரு பொருளைப்பற்றி அதே கருத்தில் ஒத்துக்கொண்டு மன ஒற்றுமை திகழவேண்டும். ஓர் அளிப்புக்கூற்றும், அதை ஏற்றுக் ஞகாள்ளும் இசைவும் இருந்தால் அங்கே மன ஒற்றுமை இருக்கிறது என நாம் தெரிந்துகொள்ளலாம்.

2. மறுபயன் (Consideration)

ஒவ்வோர் ஒப்பந்தமும் மறுபயன் கருதிய அடிப்படையில் நிகழவேண்டும். அதாவது, வாக்குறுதிக்கு ஆதரவாக அது அமைய வேண்டும். மறுபயன் இல்லாமல் உடன்பாட்டை வலியுறுத்த இயலாது. வெற்றுடன்பாடு (Nudum pactum) என்பது மறுபயன் இல்லாத உடன்பாடாகும், இதன்மீது நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது.

3. ஒப்பந்தத் தகுதித் திறன் (Contractual Capacity)

உடன்பாடு செய்யும் நபர்கள் ஒப்பந்தம் செய்வதற்கு ஏற்ற தகுதிவாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். சட்டத்தில் சொல்லப்

பட்ட உரிமை வயதை (Majority) எட்டியவர்களாக இருக்க வேண்டும். குடிகாரர்களோ பைத்தியக்காரர்களோ இருக்கக் கூடாது.

4. சுயேச்சையான இசைவு (Free Consent)

தவறான வழிகளில் ஒப்பந்தம் செய்யக்கூடாது. தவறு, மோசம், தவறாக அறிவித்தல், நிர்ப்பந்தம், முறையற்ற செல்வாக்கு முதலியவைகளால் ஒப்பந்தம் கெடக்கூடாது. தன்னிச்சையாக முழுச் சம்மதத்துடன் அளிப்புக் கூற்று இருக்க வேண்டும்.

5. சட்டபூர்வமான நோக்கமும் மறுபயனும் (Legality of the Object and Consideration)

ஓர் ஒப்பந்தத்தின் உட்பொருளும் நோக்கமும் சட்டபூர்வ மானதாக இருக்கவேண்டும். சட்ட விரோதமாகவும் சமுதாயக் கொள்கைக்கு முரணாகவும் இருக்கக்கூடாது.

2. கருத்தொருமை

(Consensus-Ad-Idem)

ஒவ்வோர் ஒப்பந்தத்திலும் மன ஒற்றுமை அல்லது கருத்து ஒருமை இருக்க வேண்டும். அதாவது, ஒப்பந்தம் செய்வோர் ஒரே விஷயத்தை ஒரே கருத்தில் ஒத்துக்கொள்ள வேண்டும். மன ஒற்றுமை இருக்கிறதா இல்லையா என்பதைச் சோதனை செய்து அறிய முனைவும் ஏற்பும் பயன்படுகின்றன என்பதை முன்னரே பார்த்தோம். ஒரு வலியுறுத்தப்படும் ஒப்பந்தத்திற்கு அளிப்புக் கூற்றும் ஏற்பும் செல்லக்கூடியதாக இருக்க வேண்டும். சில நன்றாக உணரப்பட்ட கொள்கைகளோடு ஒத்திருக்க வேண்டும்.

முனைவு (Offer)

ஒவ்வொரு முனைவும் கீழ்க்காணும் தனிக் குணங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

(1) அது உறுதியுடையதாக இருக்கவேண்டும்.

(2) சட்டரீதியான தொடர்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.

(3) சட்ட விளைவுகளை உண்டாக்கக்கூடிய உட்கருத்து இருக்கவேண்டும்.

(4) குறிப்பிட்டலுக்கும் (Quotation) முனைவு அழைப்புக்கும் அது வேறுபட்டிருக்க வேண்டும்.

(5) ஓர் ஒப்பந்தப்புள்ளிக்கும் (Tender) நிலையான முனைவுக்கும் அது வேறுபட்டிருக்க வேண்டும்.

(6) அது பொதுவாகவும் அல்லது தனிப்பட்டதாகவும் இருக்கலாம்.

(7) அது மற்றவருக்குத் தெரிவிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய ஒவ்வொன்றையும் விவரித்துப் பார்ப்போம்.

(1) உறுதி (Certain)

ஒவ்வொரு முனைவும் உறுதியுடையதாக இருக்கவேண்டும் என்பது அடிப்படையானதே. குறைந்தபட்சம் உறுதியாக ஆக்கக்கூடியதாகவாவது அது இருக்க வேண்டும். முனைவு உறுதியாக இல்லாமலும், பொருள் தெளிவில்லாமலிருந்தாலும் மற்ற நபர் அதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? உதாரணமாக ஒருவர் ஒரு வீட்டை மாதம் ரூ. 200 வாடகைக்குப் பேசிக் குத்தகைக்கு எடுத்துக் கொள்வதற்காக ஒத்துக்கொண்டார். ஆனால், அந்த வீடு மனை அணியங்கள் நிறைந்ததாகவும், நன்றாகப் பழுதுபார்த்து நல்ல நிலையில் உள்ளதாகவும் இருக்க வேண்டும் என்று நிபந்தனை போட்டார். ஆனால், இந்த அளிப்புக்கூற்று தெளிவாக இல்லை. காரணம் அணியங்கள் நிறைந்ததாகவும் நன்றாகப் பழுதுபார்த்த நிலை என்பதுவும் தெளிவான பொருளைத் தரவில்லை. மனை அணியங்கள் நிறைந்தது என்று வீட்டு உரிமையாளர் எதைச் சொல்லுகிறாரோ அது குடியிருக்க வருவோருக்கு உகந்ததாக அல்லது அவர் விரும்பும்வண்ணம் இல்லாமலும் இருக்கலாம். மற்றுமோர் உதாரணம் பார்ப்போம். அருள், பலராமனுக்கு அவன் தன்னிடம் வேலைசெய்தால் கணிசமான ஊதியம் தருவதாக ஒப்புக் கொள்கிறான். இந்த முனைவு ஊதிய விஷயத்தில் அவ்வள வாகத் தெளிவில்லாமல் இருந்தாலும் ஒரு செல்லத்தக்க முனை வாகவே திகழ்கிறது. இது உறுதியாக ஆக்கக்கூடிய நிலையில் உள்ளது.

(2) சட்டபூர்வமான தொடர்பு (Legal Relation)

சட்டபூர்வமான விஷயங்களையே முனைவு சார்ந்திருக்க வேண்டும். சமுதாய அலுவல்களைக் கொண்டதாக அது இருக்கக்கூடாது. ஏற்கெனவே சொல்லப்பட்ட பால்ஃபோர் எ. பால்ஃபோர் என்ற வழக்கு இதைத் தெளிவுபடுத்துகிறது. வீக்ஸ் எ. டிபால்டு (Weeks *Vs.* Tybald) என்ற வழக்கில் ஒரு தந்தை ஏதோ பேச்சுவாக்கில் அவர் மகளைத் திருமணஞ் செய்துகொள்ள ஒத்துக்கொள்பவருக்கு 100 பவுண்டு பணம் தருவதாகச் சொன்னார். ஆனால், இது சட்டபூர்வமான முனைவு இல்லை யென்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது,

(3) சட்ட விளைவு (Legal Consequence)

முனைவு சட்ட விளைவுகளை உண்டாக்கும் என்று நபர் களின் உட்கருத்து இருக்கவேண்டும். இந்த உட்கருத்து இல்லை என்றால் ஒப்பந்தம் ஏற்படாது.

ரோஸ் ஃப்ராங் கம்பெனிக்கும் க்ராம்ப்டன் பிரதர்ஸுக்கும் (Rose Frank Co. *Vs.* Crompton Bros.) நடந்த வழக்கில் இவ்விரு நிறுவனங்களும் இழைமக் காகிதம் வாங்கி விற்க ஒப்பந்தம் செய்து கொண்டன. எந்த நேரத்திலும் வாக்குறுதி முறிவு ஏற்பட்டால் அதற்காக வழக்காட நீதிமன்றம் செல்லக்கூடாது என்பது ஒரு நிபந்தனை. இந்த நிபந்தனையால் சட்டப் பரிகாரம் இல்லாமல் போய்விட்டது. வாக்குறுதி முறிவு ஏற்பட்டு ஒரு தரப்பினர் வழக்குத் தொடுத்தார்கள். அது ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம் இல்லையென்பதால் வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்புக் கூறியது நீதிமன்றம்.

(4) குறிப்பிடல் (Quotation)

குறிப்பிடலிலிருந்தும் முனைவு அழைப்பினின்றும் முனைவு வேறுபடுகிறது. புத்தகங்களின் விலையைக் குறிக்கும் பட்டியலும் (Catalogue), கம்பெனி அளிக்கும் தகவலறிக்கையும் (Prospectus), நேரங்களை அறிவிக்கும் ரயில்வே கால அட்டவணையும் அளிப்புக்கூற்று அழைப்பின் தன்மையை ஒத்தவைகளாகும். முனைவு என அவற்றைக் கொள்ளலாகாது.

இந்தக் கருத்து அடிப்படையில் ஹார்வே எ. ஃபேசே (Harvey *Vs.* Facey) என்ற வழக்கு முக்கியமானது. A என்பவர் B-க்குப் பின்வருமாறு தந்தி அடித்தார். 'பம்பர் ஹால் பேனாக்களை எங்களுக்கு விற்பனை செய்வீர்களா? குறைந்த விலையைத் தந்திமூலம் தெரிவிக்க. பதிலுக்குப் பணம் செலுத்தப் பட்டுள்ளது.' பதில் தந்தி பின்வருமாறு அடித்திருந்தார்: 'பம்பர் ஹால் பேனாக்களின் குறைந்த விலை 9 பவுண்டு'. இதைத் தவிர பதில் தந்தியில் வேறு ஒன்றும் குறிப்பிடப்பட வில்லை. 'பம்பர் ஹால் பேனாக்களை வாங்கச் சம்மதம். உரிமைப் பத்திரங்களை அனுப்பவும்' என்று A மற்றொரு தந்தி அடித்தார், இதற்குப் பதில் வரவில்லை. A என்பவர் Bமீது வழக்குத் தொடுத்தார். பேனாக்களை விற்பதற்கு B-யிடமிருந்து முனைவு யாதுமில்லை என்று கூறி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பேனாக்களின் விலையை மட்டும் கூறினதே முனைவாக ஆகி விடாது. பேனாக்களை விற்பதற்கான B-யின் விருப்பத்தைக் குறிப்பிட்டுக் காட்டவில்லை.

மற்றொரு வழக்கில், அதாவது டென்டனுக்கும் கிரேட் நார்த்தேன் ரயில்வே கம்பெனிக்கும் (Denton *Vs.* Great Northern Railway) நடந்த வழக்கில் A என்பவர் ரயில்வே கால

அட்டவணையைப் பார்த்து அதில் குறிப்பிட்டிருக்கும் நேரப்படி பீட்டர் புரோவிற்கும், ஹல்லுக்கும் பயணம் செய்யத் திட்டமிட்டார். ஹல் என்ற இடத்திற்குப் போக இணைப்பு ரயில் கிடைக்கவில்லை. விசாரித்துப் பார்த்ததில் இந்த ரயில் ரத்து செய்யப்பட்டதாகவும் அதைக் கால அட்டவணையில் திருத்திக் காட்டவில்லையென்றும் தெரியவந்தது. எனவே, அவர் நஷ்ட ஈடு கோரி ரயில்வே கம்பெனியின்மீது வழக்குத் தொடர்ந்தார். ஆனால், அவருக்குச் சாதகமான தீர்ப்புக் கிடைக்கவில்லை. பட்டியலில் கூறப்பட்டுள்ள விலைகளைப்போல அட்டவணையில் உள்ள நேரமும் முனைவுக்கு ஓர் அழைப்பே தவிர, அதுவே முனைவாக ஆகாது என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

அதேபோல ஏல விற்பனையை (Auction Sales) அறிவிக்கும் தேதியை விளம்பரம் செய்வதுகூட முனைவு அழைப்பேயாகும். பொதுமக்களிடையே போட்டியை உண்டாக்கி அதிக விலைக்கு யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு விற்பனை செய்வதுதான் ஏலம் என்பது. ஏல விற்பனையில் உண்மையாகச் சொல்லும் விலைதான் முனைவு. பொதுமக்கள் விலை கூறக் கூற குறைந்த விலையிலிருந்து அதிகப்படியான விலை ஏறிக்கொண்டே போகும். இறுதி விலை குறிப்பிட்டவுடனே இறுதி அளிப்புக் கூற்று ஏற்படுகிறது. ஏலம் விடுபவன் மணியை அடித்தவுடனே அல்லது மரக்கொட்டாப்புளியைத் (Hammer) தட்டினவுடனே அவன் அந்த அதிக விலையை ஒத்துக்கொண்டான் என்றும் உடனே ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்றும் பொருள். அதிக விலையை உறுதிப்படுத்துவதற்குள் ஏலம் கேட்போனும் (Bidder) தான் கேட்ட விலையிலிருந்து பின் வாங்கலாம். ஏலமிடுபவனும் பொருளை விற்பதற்கு மறுக்கலாம். ஆனால், ஒரு தடவை ஒத்துக்கொண்ட பின்னர் அல்லது ஏற்பு நிகழ்ந்த பின்னர் ஏலம் கேட்போனும் ஏலம் விடுபவனும் மாறக்கூடாது. விற்பனை தள்ளிப் போடப்பட்டு பின் விற்கும் தேதியை விளம்பரம்மூலம் தெரிவித்தால் அந்தச் செலவைத் திரும்பப்பெற வழக்குத் தொடர்ந்தால் அது செல்லுபடியாகாது. காரணம் அவ் விளம்பரம் முனைவு அழைப்பே தவிர, முனைவு ஆகாது. இதேபோல் கம்பெனி வெளியிடும் தகவலறிக்கையில் உள்ள கூற்றுகளும் (Averment) முனைவு அழைப்பாகும். கம்பெனியின் பங்குகளை வாங்கப் பொதுமக்கள் அழைக்கப்படுகிறார்கள். தகவலறிக்கையில் குறிப்பிட்டுள்ள தகவல்படி கம்பெனியில் பங்கு வாங்க ஒருவர் விண்ணப்பிக்கலாம். அப்பொழுது அவர் கம்பெனியில் பங்கு வாங்க முனைவுசெய்கிறார். கம்பெனிப் பங்குகளின் ஒதுக்கீடு நடக்கும்போது முனைவு ஏற்பு ஏற்படுகிறது.

(5) ஒப்பந்தப்புள்ளி (Tender)

ஓர் ஒப்பந்தப்புள்ளியென்பது நிலைத்த அல்லது தொடரும் முனைவு. அதிக அளவில் சாமான்கள் தேவைப்படும்பொழுது இந்த ஒப்பந்தப்புள்ளிகள் (அதாவது, குறிப்பிட்ட விலை வீதத்தில் பொருள் வழங்கும் இசைவேற்பு) அழைக்கப்படுகின்றன. முனைவி லிருந்து ஒப்பந்தப்புள்ளி வேறுபடுகிறது. ஒப்பந்தப்புள்ளியின் தன்மைகள் ஆவன: (1) அதில் குறிப்பிட்டுள்ள காலம் முடிவதற்குள் அதை வாபஸ் செய்துவிடலாம். (2) இந்த ஒப்பந்தப் புள்ளிக்குக் கொடுத்தோரைத் தவிர வேறு நபர் களிடமும் பொருள் வாங்குவோர் தன்னிச்சைப்படி பொருள் வாங்க ஆர்டர் கொடுக்கலாம். (3) ஆனால், ஆர்டர் கொடுத்த பின்னர் ஒப்பந்தப்புள்ளி தந்தவர் (Tenderer) பொருள் வாங்க மறுக்கக்கூடாது. எப்படியும் முரணான ஒப்பந்தத்திற்கு இவைகள் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஒரு சிறப்புக் கைம்மாறுக் காக எல்லா ஆர்டர்களும் ஒப்பந்தப்புள்ளி தந்தவர்களிடமும் தான் செய்யவேண்டும் என்று இசைவு தந்திருந்தால் அவசியப் பொருள் வாங்குவோரை அது கட்டுப்படுத்தும். அவர்கள் அவரிடம்தான் பொருள் வாங்க வேண்டும்.

(6) பொதுமுனைவும் தனிப்பட்ட முனைவும் (General offer and Specific offer)

குறிப்பிட முடியாத தனி நபர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்குவது பொதுமுனைவாகும். அவற்றைப் பொதுவான முனைவு (Offer at large) என்றும் குறிப்பிடலாம். ஒரு தனிப்பட்ட நபருக்கோ அல்லது குறிப்பிட்டுக் கூறப்படும் நபர்களுக்கோ வழங்கப்படுவது தனிப்பட்ட முனைவாகும். ஒரு தனிப்பட்ட நபர் ஒரு பொது முனைவை ஒத்துக்கொண்டால் அது தனிப்பட்ட முனைவாகிவிடும். காணாமற்போன பொருளைத் திரும்பத் தருவதற்கும், அல்லது அதைப்பற்றித் தகவல் தருபவருக்கும் வெகுமதி அளிப்பதாக வரும் விளம்பரம் இதற்கு எடுத்துக்காட்டு. இத்தகைய விளம்பரம் பொதுமக்களுக்குச் செய்யப்படுகிறது. யார் காணாமற்போன பொருளைக் கண்டுபிடிக்கிறார்களோ அல்லது அதுபற்றித் தகவல் தருகிறார்களோ அவர்களுக்கு வெகுமதி கிடைக்கும்.

இக் கருத்தை, திருமதி கார்லில்லுக்கும் கார்போலிக் ஸ்மோக் பால் கம்பெனிக்கும் (Mrs. Carlile *Vs.* Carbolic Smoke Ball Company) நடந்த வழக்கில் காணலாம். சளிக்காய்ச்சலைப்

(Influenza) போக்கும் மருந்து தயாரிக்கும் கம்பெனி ஒன்று ஒரு விளம்பரம் செய்தது. அந்த மருந்து மிகவும் சக்தி வாய்ந்தது என்றும், அதனை மூக்குத்துளையின் வழியாக ஒரு நாளைக்கு மூன்று தடவை வீதம் ஒரு வாரம் எடுத்துக்கொண்டால் நோய் நீங்கிவிடும் என்றும் அந்தக் கம்பெனி விளம்பரத்தில் சொல்லியிருந்தது. மேலும் அவ்வாறு ஒரு வாரம் மருந்தைப் பயன்படுத்திப் பலன் இல்லை என்று சொல்லுவோருக்கு நஷ்ட ஈடாக 100 பவுண்டு தருவதாகவும், இதற்காக நிறையப் பணம் வங்கியில் போட்டிருப்பதாகவும் விளம்பரம் தெரிவித்தது. திருமதி கார்லில் இந்தச் சவாலை ஏற்றுச் சொல்லியுள்ள நிபந்தனைப்படி ஒரு வாரம் மருந்து போட்டுக்கொண்ட போதிலும் சளிக்காய்ச்சல் அவர்களுக்கு மீண்டும் வந்துவிட்டது. எனவே, நஷ்ட ஈடு கோரி அந்த அம்மையார் வழக்குத் தொடுத்தார்கள். ஆனால், அந்தக் கம்பெனி அம்மையாரின் செயலை எதிர்த்தது. ஆனால், அம்மையாருக்கு சாதகமாக நஷ்ட ஈடு வழங்கி நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இந்த வழக்கில் முனைவு நிச்சயமான வாக்குறுதியாகவும் செல்லுபடியாகவும் இருந்தது. மேலும், அது பொதுவான முனைவாக இருந்தது. திருமதி கார்லில் ஏற்றுக்கொண்ட பின்னர் தனிப்பட்ட முனைவாக ஆகிவிட்டது. செயல் நிறைவேற்றத்தோடு ஏற்பும் இணைந்து வந்தது. ஒப்பந்தக் காரணமும் சேர்ந்திருந்தது. நிபந்தனைகளை ஒத்துக் கொள்ளக்கூடிய ஒன்று அல்லது பல பேர்களால் ஒத்துக்கொள்ளக் கூடியதாக, முனைவு இங்குக் காணப்பட்டது. அதேபோல் தகவல் அறியத் தரும் விளம்பரத்தில் யார் முதலில் தகவல் தருகிறார்களோ அவர்களுக்குத்தான் பரிசு பெறும் தகுதி உண்டு.

தெரிவிப்பு (Communication)

ஒவ்வொரு முனைவும் தெரிவிக்க அல்லது அறிவிக்கப்பட வேண்டும். மற்றபடி முனைவு ஏற்பு ஏற்படாது. இந்த விதி பொது, தனிப்பட்ட முனைவுகளுக்கும் பொருந்தும். டெய்லர் ஸ். லாய்ர்டு (Taylor *Vs.* Laird) என்ற வழக்கில் ஒரு கப்பல் அதிகாரி, கப்பல் கடலில் சென்று கொண்டிருக்கும்போதே பதவியிலிருந்து விலகி, பின்னர் கொஞ்ச நாள் சென்று பழையபடியும் வேலையில் சேர்ந்து அவர் விருப்பப்படி வேலை செய்தார். பின்னர் தன் வேலைக்காகச் சம்பளம் கேட்டார். ஆனால், அவருக்குச் சம்பளம் இல்லையென்று தீர்ப்புக் கூறப்பட்டது காரணம் மீண்டும் வேலையில் சேர்ந்ததைக் கம்பெனிக்கு அவ தெரிவிக்கவில்லை. பொது முனைவுக்கும் இதே கொள்கைதான் பொருந்தும். உதாரணமாக, ஃபிட்ச் எ. ஸ்னெடகேர் (Fitch *Vs.*

Snedaker) என்ற வழக்கில் கொலையாளியைப் பற்றித் தகவல் தருவோருக்குத் தக்க பரிசு தருவதாகக் காவல் துறையினர் அறிவித்திருந்தனர். ஒரு பெண், கொலைகாரன் தன் சகோதரன் என்ற காரணத்தால் அவளுக்கு உண்மை தெரிந்திருந்தும் இத் தகவலைப் போலீசுக்குத் தெரிவிக்காமல் இருந்தாள். பின்னால் அந்தப் பெண் நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருந்த பொழுது மனச்சாட்சி உறுத்தியதால் தன் சகோதரன்தான் கொலையாளி என்று போலீசுக்குத் தெரிவித்தாள். எப்படியும் நோயிலிருந்து விடுபட்டுக் குணமான உடன் வெகுமதி கோரினாள். அவளுக்கு வெகுமதி அளிக்க வேண்டுமென்று நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. மேலும், அவளுடைய செயலின் உள்நோக்கத்தைப்பற்றி வினா எழுப்பக் கூடாது என்று நீதி மன்றம் கருத்துக் கூறியது. இத்தகைய நிகழ்ச்சிகளில் வெகுமதி கோருவோர் முனைவைப்பற்றி விவரம் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். வெகுமதி தருவோம் என்ற விளம்பரத்தை அறியாமலேயே தகவல் தருபவர்களுக்கு எவ்விதப் பரிசும் தரப் படமாட்டாது. பல்வேறு விதிகளைக் கொண்ட முனைவுகள் வழங்கும்போது முனைவு வழங்குபவன் ஏற்பவனின் அறிவுக்கு அத்தகைய நிபந்தனைகள் எட்டும்படி நியாயமான நடவடிக் கைகள் எடுக்கவேண்டும். அதாவது, அந்த நிபந்தனைகள் பற்றி ஏற்போனுக்குத் தெரிவிக்கவேண்டும். பயணிகள் சீட்டு அல்லது சரக்கு எடுத்துச் செல்லும்போது அளிக்கப்படும் சீட்டு போன்றவைகளில் பின்னால் இந்த நிபந்தனைகள் இருப்பதை நாமறிவோம்.

ஹெண்டர்சன் எ. ஸ்டீவென்சன் (Henderson *Vs*. Stevenson) என்ற வழக்கில் ஒரு நீர்வழிப் பயணத்தில் கவனக் குறைவாக நீர்வழிச் செலுத்தாததால் வழக்காடும் வாதி (Plaintiff) தன்னு டைய பயண மூட்டையைத் தொலைத்துவிட்டார். எனவே, கப்பல் கம்பெனியிடமிருந்து நஷ்ட ஈடு கோரினார். எதிர்த்தரப்பு வாதம் (Defender) என்னவென்றால், கொடுக்கப்பட்ட பயணச் சீட்டின் (Ticket) பின்னால் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கம்பெனி பொறுப்பாளியல்ல என்ற நிபந்தனை உள்ளது. எனவே, இவர்கள் நஷ்ட ஈடு தர முடியாது என்றார்கள். அத்தகைய நிபந்தனைகளைத் தனக்குத் தெரியாது என்று வாதி மீண்டும் வாதாடினார். பயணச் சீட்டின் பின்னால் அச்சடித்திருந்த எழுத்துகள் தெளிவாகவும் யாரும் படிக்க இயலாமலும் இருந்தன. எனவே வாதியின் கவனத்தை ஈர்க்கும்படியாக எதுவும் பயணச் சீட்டில் இல்லை. எனவே, அவருக்கு நஷ்ட ஈடு தரவேண்டு மெனத் தீர்ப்புக் கூறப்பட்டது. ஆனால், மாக்கில்விகம்

எ. மெசகெரீஸ்மேரி டைம்ஸ் கம்பெனி (Mackilligam *vs.* Messageries Maritimes Company) என்ற வழக்கில் எதிரிடையான தீர்ப்புக் கூறப்பட்டது. இந்த வழக்கிலும் முன்போல் நீர்வழிப் பயணத்தில் பயணமூட்டை தொலைந்துவிட்டது. பயணச் சீட்டில் உள்ள நிபந்தனைகள் ஃபிரஞ்சு மொழியில் உள்ளன. ஆங்கிலேயப் பயணி தனக்கு ஃபிரஞ்சு தெரியாது என்று வாதாடினார். தெரியாமை அல்லது அறியாமை சரியான காரணம் இல்லையென்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ஒரு வணிகர் என்ற தோரணையில் ஆங்கிலேயர் நிபந்தனைகளைச் சரி பார்த்து உணர்ந்திருக்க வேண்டும். எனவே, நட்ட ஈட்டிற்காக அவர் தொடுத்த வழக்குத் தள்ளப்பட்டது.

3. ஏற்பு

(Acceptance)

ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2 உட்பிரிவு (b) ஏற்பைக் கீழ்க் காணுமாறு விளக்குகிறது. "ஒருவருக்குப் பரிவுரை (Proposal) வழங்கப்பட்டு அவர் அதை ஒப்பும்போது பரிவுரை அவரால் ஏற்கப்படுகிறது". ஒரு பரிவுரை ஏற்றுக்கொள்ளும்போது அது உறுதிமொழி அல்லது வாக்குறுதியாக மாறுகிறது. ஏற்பை உறுதிப்படுத்தக் கீழ்க்காணும் அடிப்படைக் கோட்பாடுகள் தேவை. 1. ஏற்புத் தெரிவிக்கப்பட வேண்டும். 2. அத்தகைய தெரிவிப்பு விதி தளர்த்தக்கூடியதாக இருக்க வேண்டும். 3. முனைவு காலாவதி ஆவதற்கு முன்பு ஏற்பு ஏற்பட வேண்டும். 4. அது முழுமையானதாக (absolute) இருக்க வேண்டும். 5. முனைவு ஏற்பவரால் ஏற்புச் செய்யப்பட வேண்டும். 6. அது ஒப்பந்தத்தின் முடிவாக இருக்க வேண்டும். 7. ஏற்பு அழிக்கத் தக்கதாக அல்லது மாற்றிவிடக்கூடியதாக இருக்க வேண்டும்.

1. தெரிவிப்பு (Communication)

ஒவ்வொரு முனைவும் எவ்வாறு தெரிவிக்கப்பட வேண்டுமோ அவ்வாறு கட்டுப்படுத்தக்கூடிய ஏற்பும் தெரிவிக்கப்படவேண்டும். நபர்களின் மனநிலைபற்றி இங்கு அக்கறை வேண்டா. பிராக்டன்னிற்கும், மெட்ரோபாலிட்டன் ரயில்வே கம்பெனிக்கும் (Brodgen *vs.* Metropolitan Railway Co.) நடந்த வழக்கில் நிலக்கரி விற்றிட அல்லது அனுப்பிட ஏற்பு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்ட நிருவாகர் அல்லது மேலாளர் பத்திரத்தைத் தம் மேசைக்குள் வைத்துவிட்டார். இந்த ஏற்பு மற்ற நபருக்குத் தெரிவிக்கப்படவில்லை. எனவே இந்த வழக்கில் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது.

கண்ணன் என்பவர் கருப்பனின் குதிரையைத் தாம் வாங்கிக் கொள்ள விழைவதாக அவருக்குக் கடிதம் எழுதினார். கருப்பனும் இந்த முனைவை ஏற்றுக்கொண்டு அவர் மேலாளரிடம் குதிரையை ஏலத்தில் விற்க வேண்டா என்று சொன்னார். ஆனால், கருப்பனின் கட்டளையை மறந்துவிட்டு மேலாளர் ஏலத்தில் குதிரையை விற்றுவிட்டார். கருப்பன் தம் ஏற்பைக் கண்ணனுக்குத் தெரிவிக்காததால் கண்ணன் கருப்பன்மீது நஷ்டஈடு கோரி வழக்குத் தொடுத்தார்.

வாரியம் (Board) அல்லது ஒரு குறிப்பிட்ட பணிக்காகச் சிலறை உள்ளடக்கிய குழு (Committee) போன்றவைகள் சம்பந்தப்பட்ட உடன்பாட்டில் வாரியத்தில் அல்லது குழுவில் உள்ள ஒருவர் மட்டும் அதன் தீர்மானத்தைத் தெரிவித்தால் போதாது. தனிப்பட்ட முறையில் அல்லது குறிப்பாக அந்த ஒருவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் ஒழிய, அக்குழுக் கூட்டுப் பொறுப்புடன்தான் செயலாற்ற வேண்டும். எனவே அதிகார மில்லாத ஒருவரால் தெரிவிக்கப்படும் உடன்பாடு எல்லோராலும் அனுப்பப்படும் செய்தியாக ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

2. உரிமை விடல் (Waiver)

ஏற்பைத் தெரிவிக்கும் உரிமையை விட்டுவிடலாம் அல்லது தளர்த்திவிடலாம் அல்லது ஏற்பு முறை ஒன்று வகுத்துக்கொள்ள லாம். எவ்விதத்திலும் மௌனம் சம்மதத்தின் அறிகுறியாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏற்கெனவே சொல்லப்பட்ட திருமதி கார்லில் தி கார்பாலிக் ஸ்மோக் பால் கம்பெனி வழக்கு இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. விளம்பரத்தில் காணப் பட்ட விதிகளை ஏற்போர் அங்குக் கடைப்பிடித்ததால் ஏற்புத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற விதி அங்குத் தளர்த்தப்பட்டது. செயலாற்றலோடு ஏற்பு அங்கே சேர்ந்துவந்தது.

3. முனைவு காலாவதி ஆவதற்குமுன் (Before the offer lapses)

முனைவு முடிவடைவதற்குமுன் ஏற்பு ஏற்பட வேண்டும். குறிப்பிட்ட முறையில் முனைவு ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், அல்லது குறிப்பிட்ட காலவரைக்குள்ளும் அல்லது அது மறுக்கப் பட்டபொழுதும், அல்லது எதிர்மாறான முனைவு ஏற்பட்டாலும், அல்லது அந்த நபர்கள் இறந்தாலும், அல்லது திவாலானாலும் அல்லது முனைவினை மாற்றிவிட்டாலும் அது காலாவதியாகி விடும்.

ஏற்புக்கென ஒரு வழி குறிப்பிடப்பட்டிருந்தால் அதைப் பின்பற்ற வேண்டும். சொல்லிய வழியில் ஏற்பு இல்லாதபொழுது குறிப்பிட்ட முறையில் ஏற்பு நிகழவேண்டும் என்று ஏற்போரைக் கேட்க வேண்டிய கூடுதலான கடமை முனைவு அளிப்போருக்கு உண்டு என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 7 (2)ஆம் பிரிவு கூறுகிறது. ஏற்புக் காலம் குறிப்பிடாதபொழுது நியாயமான காலவரைக்குள் ஏற்பு நிகழ வேண்டும். மாற்று முனைவு அளிப்புக் கூற்று ஏற்பட்டால் முதலில் ஏற்பட்ட முனைவு காலா வதியாகிவிடும். உதாரணமாக அறிவழகன் தம் வீட்டை ரூ. 25000-க்கு விற்பதற்காக முனைவு தருகிறார். ஆனால்

பாலன் ரூ. 20000-க்கு அதை வாங்க ஒப்புக்கொள்கிறார். இது மாற்று முனைவாகும். பாலனுடைய முனைவினை அறிவழகன் ஏற்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

ஏற்பு நிகழ்வதற்குமுன் எந்த நேரத்திலும் முனைவினை மாற்றிவிடலாம். ஆனால் அத்தகைய மாற்றத்தைத் தெரிவித்தாக வேண்டும். ஒரு முனைவு ரத்தாவதற்கு முன் ஏற்புச் செய்ய வேண்டும். ஒப்பந்தச் சட்டத்தில் 4, 5 உட்பிரிவுகள் ரத்து செய்வதைப் பற்றிக் கூறுகின்றன. ஒரு பரிவுரை அதன் ஏற்புச் செய்தி ஏற்போனை எட்டுவதற்கு முன் எந்த நேரத்திலும் ரத்துசெய்துவிடலாம். ஒருவனுடைய நடத்தையாலும் பரிவுரை ரத்தாகலாம். ஒரு முனைவினைப் பகிரங்கமாக வைத்திருப்பதாக ஒருவர் வாக்குறுதி செய்திருந்தால் அது மறுபயன் கொண்டதாக இருக்கவேண்டும்.

4. முழுமை (Absolute)

இயற்கையாகவே ஏற்பு என்பது முழுமையாகவும் நிபந்தனையற்றதாகவும் இருக்கவேண்டும். ஒருவன் அதை ஏற்றுக்கொண்டால் தெளிவாகவும் பொருள் மயக்கமில்லாமலும் உறுதியாகவும் அது இருக்கவேண்டும். ஒரு முனைவில் நிபந்தனைகள் மாறினாலும் அல்லது முனைவுக்கு நிபந்தனைகள் சேர்க்கப்பட்டாலும் ஏற்புத் தகுதியுடையதாக ஆகாது. உட்காருமிடம் (seat) இல்லாத ஒரு சைக்கிளை விற்பதற்கு முனைவு அளிப்பதாக வைத்துக் கொள்வோம். ஆனால், அதை வாங்குபவர் உட்காருமிடத்தோடு வாங்க ஒத்துக்கொண்டாரென்றால் அது நிபந்தனைகளிலிருந்து வேறுபட்ட அல்லது மாறிய ஏற்பாகும். அது மாற்று முனைவாகும். முனைவு அளிப்பவர் அம் மாறுதலுக்குச் சம்மதம் அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒப்பந்தம் எப்படியும் சாதாரணத் தன்மையுடன், நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் ஓர் உடன்பாடு ஏற்பட முடியும். ஒருவர் ஒரு முனைவினை ஒத்துக்கொள்ளலாம். என்றாலும் மாமூலான பத்திரம் தயாரித்துக் கையெழுத்து வாங்கினால்தான் அது செல்லுபடியாகும்.

5. முனைவு ஏற்போரால் ஏற்பு நிகழவேண்டும் (Acceptance must be by the offeree)

யாருக்கு முனைவு அளிக்கப்படுகிறதோ அவர் அதை ஏற்க வேண்டும். இக் கருத்தை போல்டன் எ. ஜோன் (Bolten *vs.* Jones) என்ற வழக்கு விளக்குகியது. A என்பவர் பொருள் வாங்க B என்னும் கம்பெனியிடம் ஆர்டர் கொடுத்தார். B கம்பெனியிடம் A-க்கு கணக்கு உண்டு. அவர் தரவேண்டிய பணத்தை

வாங்கும் பொருளுக்காகச் சரிகட்டும் உரிமையும் உண்டு. B-யினுடைய வியாபாரத்தை வாங்கிக்கொண்டே C என்பவர் A-யினுடைய ஆர்டரை ஏற்றுக்கொண்டு அவருக்குச் சரக்கு அனுப்பினார். ஆனால் B-யினிடமிருந்து வியாபாரம் தமக்கு மாறியதை A-க்குத் தெரிவிக்கவில்லை. சரக்கின் விலையை C-க்கு A தரவேண்டா என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. காரணம் முதன் முதலில் முனைவினை ஏற்ற A-யிடமிருந்து ஒப்புதல் வராமல் C-யிடமிருந்து வந்தது. முனைவினை ஏற்பவரைப்போலவே வெளியாரிடம் ஒப்பந்தம் செய்ய முனைவு வழங்குபவன் விரும்பினால் அந்த வெளியாரின் ஏற்பையும் ஒப்பந்தமாகக் கருதலாம்.

6. ஏற்பு ஒப்பந்தத்தில் முடிகிறது (Acceptance concludes the contract)

ஒரு தடவை ஏற்பு ஏற்பட்டால் அதிலிருந்து தப்ப முடியாது. ஒப்பந்தம் செய்பவர்கள் சந்தித்து ஓர் உடன்பாட்டிற்கு வந்தால் அங்கு ஒப்பந்தம் ஏற்படத் தடையில்லை. ஆனால் அவர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்து செய்தித் தொடர்புகொள்ள காலமானால் அங்குதான் சிக்கல் ஏற்படும். அத்தகைய சூழ்நிலையைச் சமாளிக்கத் தகுதியான சட்ட உடன்பாடு தேவை. இதுகுறித்துச் சட்ட முன்னேற்றங்கள் உண்டாயின. கீழ்க்காணும் வழக்குகள் இம் முன்னேற்றங்களை விளக்குகின்றன.

ஆடம்ஸ் எ. லிண்ட்செல் (Adams *vs.* Lindsell)

இவ் வழக்கில் ஆட்டுரோமம் விற்பதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. முனைவு வழங்கிய கடிதம் 2—2—1817-ல் 'மறு தபாலில் உங்கள் பதிலை எதிர்பார்க்கிறோம்' என்ற வாசகத்தோடு தபாலில் சேர்க்கப்பட்டது. மற்றவருக்கு அக் கடிதம் 5—9—1817-ல் கிடைத்தது. அன்றே ஏற்புக் கடிதம் தபால் மூலம் அனுப்பப்பட்டது. அது முனைவு அளித்தோருக்கு 9—9—1817-ல் கிடைத்தது. ஆனால் அவர் எட்டாம் தேதியே ரோமங்களை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார். ஒப்பந்தமீறலுக்காக வாதி வழக்குத் தொடுத்தார்; வழக்கிலும் வெற்றியடைந்தார். ஏற்புக் கடிதம்போட வெளிப்படையான உரிமை (Express Authority) உண்டு. அதன்படி 5—9—1817 அன்றே அது போடப்பட்டதால் ஏற்போருக்கு நஷ்ட ஈடு உண்டு எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

டன்லப் எ. ஹிக்கின்ஸ் (Dunlop *vs.* Higgins)

இவ் வழக்கும் மேற்சொன்ன கருத்தையே இன்னும் வலியுறுத்துகிறது. 2500 டன் தேனிரும்பு விற்பனை பற்றிய வழக்கு இது. முனைவுக் கடிதம் 28—1—1845-ல் தபாலில் சேர்க்கப்பட்டது. அது 30—1—1845-ல் தபாலில் சேர்க்கப் பட்டது. அது 30—1—1845-ல் எதிர்த்தரப்பினரைச் சேர்ந்தது. அன்றே ஏற்புக் கடிதம் தபாலில் போடப்பட்டது. கடிதப் போக்கு வரத்தில் ஏற்பட்ட தாமதத்தால் 1—2—1845-ல்தான் கடிதம் கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்தது. ஆனால், கம்பெனி சரக்கு வழங்குவதற்கு மறுத்துவிட்டது. அங்கு முடிவடைந்த ஒப்பந்தம் ஏற்பட்டதால் சரக்கு வழங்கக் கம்பெனி மறுப்பது சரியில்லை என நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இந்த வழக்கில் ஏற்புக் கடிதம் போட வெளிப்படை உரிமை இல்லை யென்றாலும், முனைவு வழங்குவோர் அளிப்புக் கடிதம் போடும் போது அத்தகைய வெளிப்படை உரிமை வந்துவிட்டது என்று உணர்ந்தறிய வேண்டும் என நீதிமன்றம் சொல்லியது. தபால் போக்குவரத்தில் காணாமற்போன கடிதமும் காலம் தாழ்த்தி வந்த கடிதமும் இங்கு ஒன்றாகவே கருதப்படுகின்றன.

ஹவுஸ்ஹோல்டு பயர் இன்சூரன்ஸ் கம்பெனி எ. கிரான்ட் (Household Fire Insurance Company *vs.* Grant); இந்த வழக்கில் பிரதிவாதி (Defendent) 100 பங்குகளுக்காக விண்ணப்பித்திருந்தார். கம்பெனி போட்ட ஏற்புக் கடிதம் கிரான்டிற்கு வரவே இல்லை. கம்பெனி கலைப்பு (winding up) ஏற்பட்ட பின்னர்க் கொடுக்கப்பட்ட நடவடிக்கையில் கம்பெனி கடனைப் பகிர்ந்து கொள்வோர் என்ற முறையில் கிரான்டு கம்பெனியும் கடனுக்குப் பொறுப்பாளி என்று நீதிமன்றம் முடிவு தெரிவித்தது. பங்கு ஒதுக்கல் கடிதம் போட்டபொழுதே அங்கு முடிவடைந்த ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அதற்குப்பின் அந்தக் கடிதம் என்னவாயிற்று என்பதுபற்றி அக்கறையில்லை.

மேற்கூறிய வழக்குகளில் கூறியுள்ள கோட்பாடுகள் எல்லாம் தபால் போடுவதை ஒரு செய்தித்தொடர்பு சாதகமாக ஏற்றுக் கொண்டால் பலனளிக்கும். கள்ளமில்லா இருவரில் யார் வெளியாருக்கு நஷ்டம் ஏற்படச் செய்கிறாரோ அவர்தான் அந்த நஷ்டத்தை ஏற்க வேண்டும். தபாலில் போடுவது சரியாகவும் கவனத்துடனும் போடவேண்டும். முனைவு அளிப்பவருக்கு விலாசமிட்டுக் கடிதம் அனுப்ப வேண்டும்; அவரிடம் கொடுக்கச் சொல்லி அவருடைய பதிலாளுக்கு அனுப்பக் கூடாது. வேறு விதமான ஏற்புமுறை குறிப்பிட்டிருந்தால் கடிதமுறை முடிவான ஒப்பந்தமாக ஆகாது.

'யாருக்கு முனைவு வழங்கப்படுகிறதோ அவர் செய்தித் தொடர்பு மூலம் அதை அறிந்தால்தான் முனைவு நிறைவு எய்துகிறது' என்று ஒப்பந்தச் சட்டத்தில் 4ஆவது பிரிவு சொல்கிறது.

ஏற்பின் ரத்து (Revocation of acceptance)

இந்தியச் சட்டப்படி ஏற்பை ரத்து செய்துவிடலாம். 'ஏற்பின் உடன்பாடு தெரிவிப்பதற்குமுன் எந்நேரத்திலும் ஏற்பை ரத்து செய்துவிடலாம். ஆனால் அதற்குப்பின் இயலாது' என்று சட்டத்தின் 5ஆவது பிரிவு உரைக்கின்றது. ஏற்போரின் நிலை உண்மையில் பொறாமை கொள்ளத்தக்கதாகும். அவரைப் பொறுத்தமட்டில் ஏற்புக் கடிதத்தைத் தபாலில் சேர்க்க வேண்டியதுதான் அவர் வேலை. அக் கடிதம் காலதாமதமாகச் சென்றாலும் சரி தொலைந்துவிட்டாலும் சரி அது முனைவு அளித்தோரைத்தான் கட்டுப்படுத்தும். மேலும் ஏற்போர் தம் ஏற்பை ரத்துசெய்யும் உரிமையும் பெற்றுள்ளார். ஆனால் அந்த ரத்தானது முனைவு தருபவரை அடைந்தால்தான் செல்லுபடியாகும். தபால் போக்குவரவில் ரத்துக் கோரும் கடிதம் தொலைந்துவிட்டால் ஏற்போருக்கெதிராக முனைவு தந்தவர் ஒப்பந்தத்தை வலியுறுத்தலாம். ஆனால் ரத்துக் கடிதம் போட்ட கணக்கிலிருந்து தமக்கொன்றும் பொறுப்பில்லை என்று ஏற்போர் அளிப்போர்க்கெதிராக வலியுறுத்த முடியாது. ஆங்கிலச் சட்டத்தில் ஏற்பு ஏற்றுக்கொண்டால் அதுதான் முடிவானது. ரத்து செய்ய முடியாது.

4. கைம்மாறு அல்லது மறுபயன்

(Consideration)

ஏற்கெனவே சொல்லியபடி ஒவ்வொரு வாக்குறுதியும் கைம் மாறுடன் திகழவேண்டும். கைம்மாறு இல்லாமல் ஒப்பந்தம் ஏற்படாது. கைம்மாறில்லாத உடன்பாடு உயிரற்ற உடன் பாடாகி விடும் (Naked Pact-nudam Pactum). உயிரற்ற உடன் பாட்டால் செயலாற்றல் ஏற்படாது (Ex Nuds Paeto Non oritor Actio) உடன்பாட்டின் ஒவ்வொரு நபரும் அடையும் ஒரு மதிப்பு விலைதான் கைம்மாறு. அது ஏதோ ஒன்றைச் செய்வதற்காகவும் அல்லது செய்யாமல் தடுப்பதற்காகவும் அல்லது செய்வதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டதற்காகவும் அல்லது செய்ய வாக்குறுதி தடுப்பதற்காகவும் ஏற்படுகிறது. ஆனால் அவசியம் அது வாக் குறுதியின்றான் தோன்றுகிறது. ஏனெனில், கைம்மாறுதான் வாக்குறுதியைக் கட்டாயமாக்குகிறது. 'கைம்மாறு என்பது ஏதோ ஓர் உரிமை, அக்கறை, ஒரு நபருக்கு ஏற்படும் பயன், செயல்தடுப்பு, பாதகம், நஷ்டம், வருந்தக்கூடிய பொறுப்பு அல்லது பிறரால் ஏற்றுக்கொள்வது' என்று கூரி எ. மிசா (Cuvry *vs.* Misa) என்ற ஆங்கில வழக்கில் விளக்கப்படுகிறது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(d) இவ்வாறு விளக்கு கிறது. 'வாக்குறுதி அளிப்போரின் விருப்பத்தின் பேரில் வாக்குறுதி ஏற்போன் அல்லது வேறு யாராவது செய்தாலும் சரி அல்லது செய்யாமலிருந்தாலும் சரி அல்லது அவரே வாக்குறுதி செய்தாலும் சரி அல்லது வாக்குறுதி அளிக்காமல் இருந்தாலும் சரி அத்தகைய செய்யும் செயல் அல்லது செய்யாமை போன்றவைகள் எல்லாம் வாக்குறுதியின் கைம்மாறு'. உதாரணமாக X-என்பவர் Y-க்கு ஒரு டஜன் புத்தகங்களை ரூ. 100-க்கு விற்பதற்கு ஒப்புக்கொள்கிறார். X-க்கும் Y-க்கும் விலைமதிப்புள்ள ஏதோ ஒன்று வருகிறது. X ரூ. 100 பெறுகிறார். அதுதான் அவருடைய வாக்குறுதிக்குக் கைம்மாறு. Y-ஒரு டசன் புத்தகங்கள் பெறுகிறார். அதுதான் அவருடைய வாக்குறுதிக்குக் கைம்மாறு.

கைம்மாறு விளக்கத்தின் பொருளைப் பகுத்துப் பார்த்தால் கீழ்க்காணும் குறிப்பிடும்படியான முக்கியப் பகுதிகள் காணப்படுகின்றன :

1. வாக்குறுதி அளிப்போரின் விருப்பத்தில் கைம்மாறு கொடுக்கப்படவேண்டும்.

2. வாக்குறுதி ஏற்போராலும் அல்லது வேறு யாராலும் அது கொடுக்கப்படவேண்டும்.

3. ஒரு செயலை உள்ளடக்கி அல்லது தவிர்த்து அமைந்து இருக்கலாம்.

4. இறந்த-நிகழ்-வருங்காலமாகவும் அமைந்து இருக்கலாம்

5. கொஞ்சம் சட்டமதிப்பு உடையதாக அமைந்து இருக்கலாம்.

1. வாக்குறுதி செய்வோர் விருப்பம்.

ஒரு செயல் வாக்குறுதி செய்வோரின் விருப்பத்துக்கிணங்கச் செய்யப்பட வேண்டும் மற்றபடி அது தானாக வலியவந்த செயலாகிவிடும். உதாரணமாகச் சேரன், பாண்டியன் வீட்டில் ஒரு டசன் புத்தகங்களை வைத்துவிட்டுப் பின்னர் அதற்குரிய விலையைத் தரவேண்டுமெனக் கேட்டால், பாண்டியன் பணம் செலுத்தவேண்டிய கட்டாயத்தில் இல்லை. காரணம் அவர் புத்தகம் வேண்டுமென்று கேட்கவில்லை.

2. வாக்குறுதியை ஏற்போரும் அந்நியரும்

வாக்குறுதியை ஏற்பவராக இருந்தாலும் சரி, அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி அதாவது அந்நியர்களாக இருந்தாலும் சரி அவர்கள் கைம்மாறு அளிக்கலாம். உதாரணமாக முருகன், சரவணனுக்கு வைத்தியம் செய்கிறார். ஆனால் அதற்குரிய பணம் வாங்க மறுத்துவிடுகிறார். ஆனால் சரவணன் முருகனின் குமாரனான, இளங்கோவிற்குப் படிப்புச் செலவிற்காக ரூ. 200 தருவதாக உறுதி அளித்தார். சரவணனின் உறுதிமொழிக்கு இளங்கோ எந்தவிதக் கைம்மாறு தராவிட்டாலும் அவ் வாக்குறுதியை வற்புறுத்திப் பணம் கேட்கலாம். கைம்மாறுக்கு இளங்கோ ஓர் அந்நியர். முருகனின் சேவை, இளங்கோவிற்குச் சரவணன் அளித்த வாக்குறுதிக்குக் கைம்மாறாகத் திகழ்கிறது.

சின்னையா எ. ராமய்யா (Chinnaiah *vs.* Ramiah) என்ற வழக்கில் ஒரு தாய் தன் சொத்துகளை அவள் மகளுக்கு வெகுமதியாக எழுதிவிட்டார். பதிலுக்கு மகள் தன் தாயுக்கும் மாமனுக்கும் ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட தொகையை அளிப்பதாக வாக்குறுதி தந்தாள். தாய் இறந்த பின்னர் மாமனுக்கு அளிக்கவேண்டிய தொகையை அவள் தரவில்லை. அவள்மீது மாமன் வழக்குத் தொடர்ந்து வெற்றியும் பெற்றார். இங்குக் கைமாற்றுக்கு அந்த மாமன் அந்நியராக இருந்தாலும், வழக்குத் தொடர்ந்து நிவாரணம் பெற உரிமை ஏற்பட்டது. அவருடைய சகோதரி அவள் மகளுக்குச் சொத்துகளை வெகுமதியாகத் தந்தபோது ஏற்பட்ட கைம்மாறு அவரைக் காப்பாற்றியது. எனவே, இந்தியச் சட்டத்தில் கைம்மாறுக்கு அந்நியராக இருப்பவர்கூட வழக்குத் தொடரலாம். ஆனால், ஆங்கிலச் சட்டத்தில் அந்நியர் அவ்வாறு வழக்குத் தொடர முடியாது.

டட்டன் எ. பூல் (Dutton *vs.* Pool) என்ற வழக்கில் ஒரு தகப்பனார் தம் மகளுக்கு இடம் தருவதற்குத் தம் நிலத்தில் உள்ள எல்லா மரங்களையும் வெட்ட ஆரம்பித்தார். ஆனால் அவர் மகன் அவருடைய மகளுக்கு 1000 பவுண்டு தருவதாகவும் மரங்களை வெட்டவேண்டா என்றும் கேட்டுக்கொண்டார். அதன்படியே தகப்பனாரும் மரங்களை வெட்டவில்லை. ஆனால் கொஞ்ச நாள்களுக்குப் பின் உறுதி அளித்தபடி அவர் மகளுக்கு மகன் பணம் தரவில்லை. மகள் வழக்குத் தொடுத்தாள். ஆனால் ஆங்கிலச் சட்டத்தில் கைம்மாறுக்கு அந்நியர் வழக்குத் தொடர முடியாததால் அந்த வாக்குறுதியை வற்புறுத்த முடியவில்லை. வழக்கில் அவள் தோற்றாள். இதே விதத்தில்தான் ட்வீடில் எ. அட்கின்சன் (Tweddle *vs.* Atkinson) என்ற வழக்கும் டன்லப் நேமட்டிக் டயர் கம்பெனி எ. செல்ப் ரிட்ஜ் அண்டு கோ. (Dunlop Pneumatic Tyre Company *vs.* Self Ridges Co.) என்ற வழக்கிலும் மேற்கூறிய கருத்தோடு தீர்ப்புக் கூறப்பட்டது.

3. ஆனால் ஓர் ஒப்பந்தத்திற்கு அந்நியர் வழக்குத் தொடர இயலாது. எனினும், இரு கட்சிகளிடையேயுள்ள சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட உறவு இத்தகைய வழக்குகளில் காணப்படுகிறது. உடன்பாடு செய்த நபர்கள்தாம் உடன்பாட்டை வலியுறுத்த முடியும். எப்படியும், அங்கீகரிக்கப்பட்ட இரண்டு விதிவிலக்குகள் இந்திய-ஆங்கிலேயச் சட்டங்களில் காணப்படுகின்றன. நம்பிக்கை அல்லது பொறுப்பு ஏற்பாடு (Trust Arrangement) தன் தவற்றால் தடைசெய்தல் அல்லது முரண்தடை

(estoppel), இந்தியாவில் உருவாக்கிய அசையாப் பொருள்மேல் உள்ள ஈடுகாட்டு, இந்தியாவில் செய்துள்ள குடும்ப ஏற்பாடு ஆகியவைகளில் அவ் விதிவிலக்குகள் ஏற்படுகின்றன.

நம்பிக்கைப் பொறுப்பில் நம்பிக்கை ஏற்படுத்துபவருக்கும் பொறுப்பாளருக்கும் (Trustee) இடையே ஓர் ஏற்பாடு ஏற்படுகிறது. இத்தகைய உடன்பாட்டில் எப்பொழுதும் அந்நியருக்கும் ஆதாயம் ஏற்படும். அவர்தான் உடன்பாட்டை வலியுறுத்த முடியும். நம்பிக்கை அல்லது பொறுப்பு ஏற்பாடு சிறப்புச் சட்டத்தின்கீழ் அவருக்கு நன்மை தருகிறது.

மறுக்கமுடியாமை அல்லது தம் தவறாமல் தடைசெய்தல் என்பது வாக்குறுதி அளிப்போர் தம்முடைய நடத்தையால் அவருக்கும் அந்நியர் ஒருவருக்கும் ஏற்படும் தனிப்பட்ட ஒப்பந்தத்தால் ஏற்படுவது. ஆறுமுகம், சந்திரனுக்கும் பணம் தருவதாகச் சொல்லிப் பரதனிடம் பணம் வாங்கினதை, சந்திரனிடமே ஒத்துக்கொண்டார். சந்திரன் பணம் கோரும்போது ஆறுமுகம் அதை மறுக்க முடியாது.

இந்தியாவில் சொத்துகளை ஈடுகாட்டுவதும், குடும்ப ஏற்பாடுகளும் சகஜம். மூன்றாம் மனிதருக்கு மாதா மாதம் பணம் செலுத்துவதற்காக அசையாப்பொருள் ஈடுகாட்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாட்டிற்கு மூன்றாம் மனிதர் அந்நியராக இருந்தாலும் அவர் இந்த ஈடுகாட்டை வலியுறுத்த முடியும். க்வாஜா முகம்மது எ. ஹுசையின் பேகம் (Khwaja Muhammed *vs.* Hussaini Begum) என்ற வழக்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

இந்தியக் குடும்பத்தின் வயதுவந்த (major) அங்கத்தினரால் ஏற்படுத்திக்கொள்ளும் குடும்ப ஏற்பாட்டை இக் கோட்பாடு குறிக்கும். இந்த ஏற்பாடு திருமணம் செய்யவோ பாகப் பிரிவினை ஏற்படுத்தவோ அல்லது குடும்ப அங்கத்தினர் ஒருவரைப் பராமரித்தல் பற்றியோ இருக்கலாம். சுப்பம்மாளுக்கும் சுப்ரமணியா (Suppu Ammal *vs.* Subramania) என்பவருக்கும் நடந்த வழக்கில் குடும்ப ஏற்பாட்டிற்குச் சம்மதமில்லாத பாட்டி (தகப்பனாரின் தாய்) ஒருத்தி உடன்பாட்டை வலியுறுத்தித் தன் வாழ்க்கைச் செலவிற்குப் பணம் பெற்றாள்.

இதர வழக்குகளில் ஒப்பந்தத்தில் சம்பந்தப்படாத அந்நியர் வழக்காட முடியாது. பாலனுக்கு, ஆலன் பணம் தரவேண்டும். ஆலன் தமக்கு வரவேண்டிய பணத்தை வசூலித்துப்

பாலனுக்குத் தரச்சொல்லிச் சந்திரனை வேண்டிக் கொண்டார். சந்திரன் பாலனுக்குப் பணம் தரத் தவறினால் பாலன், சந்திரன் மீது வழக்குத் தொடுக்க முடியாது. காரணம் அவர்கள் இருவருக்குள் தனிப்பட்ட ஒப்பந்தம் எதுவுமில்லை. வேண்டுமானால் பாலன் ஆலன்மீது வழக்குப் போட்டு, சந்திரனிடமிருந்து வரவேண்டிய தொகையைக் கட்டுப்படுத்தலாம்.

4. இந்தியாவில் கைம்மாறு இறந்த-நிகழ்-வருங்காலங்களை உடையதாக இருக்கலாம். அதாவது, அது இறந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டதாக விளங்கும். ஆனால் ஆங்கிலச் சட்டத்தில் கடந்த காலக் கைம்மாறு கைம்மாறாகக் கருதப்படமாட்டாது. ரோஸ்கார்லா எ. தாமஸ் (Roseorla *vs.* Thomas) என்ற வழக்கில் கடந்தகாலக் கைம்மாறு கைம்மாறாகாது எனத் தீர்ப்பு வழங்கப் பட்டது. A என்பவர் B-யிடமிருந்து விலைக்கு குதிரை வாங்கினார். கொஞ்ச நாள்களுக்குப்பின் B என்பவர் குதிரையின் தேக ஆரோக்கியத்தையும், பயிற்சி பெறும் தன்மைபற்றியும் சரி பார்த்தார். குதிரை அடங்காமல் அவரைக் காயப்படுத்தி விட்டது. உத்தரவாத முறிவுக்காக A வழக்குத் தொடுத்தார். ஆனால், வழக்கில் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கவில்லை. காரணம் B தந்த உத்தரவாதத்திற்குக் கைம்மாறு இல்லை. இறந்த காலக் கைம்மாறு இந்தியாவில் செல்லுபடியாகும். B மைனராக இருந்தபோது A அவருக்குத் தொண்டுச் செய்தார். எனவே B வயதுவந்ததும் A-யினுடைய தொண்டிற்காகப் பரிசளிப்பதாக உறுதி அளித்தார். இந்த வாக்குறுதி இறந்த காலச் சேவைபற்றி இருந்தாலும் Aஎன்பவர் இந்த வாக்குறுதியை வலியுறுத்தலாம். (சிந்தா எ. அப்ரஹாம், Sindha *vs.* Abraham.)

5. கைம்மாறு உண்மையானதாகவும் தகுதி உடையதாகவும் இருக்கவேண்டும்; போலியாகவும் கற்பனையாகவும் இருக்கக் கூடாது. அது போதுமானதாக மட்டும் இருந்தால் போதாது; கொஞ்சம் சட்ட மதிப்பு உள்ளதாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக ஆனந்தன் தம்முடைய ரூ. 1000 பெறுமதியான வானொலிப் பெட்டியை ரூ. 300-க்குப் பரதனுக்கு விற்பதாக ஒப்புக்கொண்டார். இவ் வாக்குறுதி வலியுறுத்தப்படலாம். இதில் ஐயமின்றிக் கைம்மாறு போதுமான அளவு உடையதாக இல்லை. காரணம் விற்பனை விலை அடக்க விலைக்குச் சமமாக இல்லை. இருப்பினும் ரூ. 300 என்பதுவும் மதிப்புள்ளதே. கைம்மாற்றின் போதாமை இந்த உடன்பாட்டைக் கெடுத்துவிட முடியாது பலாத்காரத்தை எதிர்த்துப் பாதுகாக்கவும், அல்லது முழுச் சம்மதம் தேவைப்படும்

பொழுதும் இவ் விதியைப் பயன்படுத்தலாம். '100 பவுண்டு பணத்தைப் பைசல் செய்ய ஒரு சிறு தானியம்கூட நல்ல கைம்மாறாகும்' என்று ஆங்கில நீதிபதி ஒருவர் அடிக்கடி சொல்வார். ஆனால் அக் கைம்மாறு சட்டத்திற்கெதிராகவும், ஒழுங்கீனமாகவும் இருக்கக் கூடாது. வழக்குத் தொடராமல் இருக்கவும் மத்தியஸ்தர் தீர்ப்புக்கு அடங்கி இருக்கவும் செய்யப் பட்ட உறுதிமொழிகள் கைம்மாறினைக் கொண்டுள்ளன. ஏறின விகிதத்தில் வட்டி செலுத்த ஒருவர் உறுதிமொழி அளித்திருந் தால் அதன்மீது வழக்குத் தொடர ஒருவருக்கு உரிமை உண்டு. இங்கும் உறுதிமொழி கைம்மாறோடு வருகிறது. அத்தகைய உரிமையை வலியுறுத்த முடியாமல் அந்த உறுதிமொழியால் நஷ்டம் ஏற்பட்டாலும் அதிலும் கைம்மாறு இருக்கிறது. ஆனால் முன் தோன்றும் சட்டக் கடமை போதுமான கைம்மாறில் நம்பகமாக இல்லை. ஏற்கெனவே ஒரு செயல் செய்யச் சட்டக் கடமை இருந்தால் இவ் வுறுதியை மட்டும் வைத்துப் பின்வரும் உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாது. உறுதிமொழி ஏற்போன் சட்டபூர்வமாகச் செய்யக் கடமைப்பட்டதைவிட இன்னும் அதிகமானதாக நிரூபிக்க வேண்டும். கைம்மாறில்லாமல் ஒப்பந்தமில்லை என்ற விதிக்கு மூன்று விதிவிலக்குகள் ஒப்பந்தச் சட்டத்தின் 25ஆவது பிரிவில் காணப்படுகின்றன. அவையாவன:

1. எழுத்து மூலம் பதிவு செய்யப்பட்ட உடன்பாடுகள். நெருங்கிய உறவினர்களிடையே இயற்கை அன்பால் ஏற் பட்டவை. உதாரணமாக A-என்பவர் தம்முடைய தமக்கை மகன் B-க்குத் தம் சொத்தை இனாமாக எழுதி வைக்கிறார். சட்டப்படி அந்த இனாம் பத்திரம் பதிவு செய்யப்படுகிறது.

2. கடந்தகாலச் சேவைகளுக்கும் அல்லது சட்டப்படி ஒருவர் கட்டாயம் செய்யவேண்டிய சேவைகளுக்கும் பணம் தர ஏற்படும் உடன்பாடுகள்.

3. காலாவதியான கடனைப் பைசல் செய்ய ஏற்படும் உடன்பாடுகள். அதாவது, அந்த உடன்பாடுகள் எழுத்துமூலம் இருக்க வேண்டும். மேலும் உறுதிமொழி ஏற்போர் கையொப்ப மிட்டிருக்க வேண்டும்.

இம் மூன்று சூழ்நிலையிலும் மறுபயன் இல்லாமல் ஒப்பந்தம் ஏற்பட்டாலும் அது வலியுறுத்தப்படும். உண்மையில் இவை களில் சில தேவையில்லாதவை. தனிப்பட்ட முறையில் குறிப்பிட வேண்டிய தேவையும் இல்லை. இருப்பினும் இவை மிகவும் எச்சரிக்கையுடன் ஏற்படுத்தப்பட்டவை.

5. ஒப்பந்தத் தகவுடைமை

(Capacity to Contract)

ஒப்பந்தத் தகுதி அல்லது தகவுடைமை என்பது ஒப்பந்தம் செய்யும் நபர்களின் தகுதியாகும். 'சட்டத்தில் சொல்லப்படும் வயதடைந்த ஒவ்வொரு நபரும் ஒப்பந்தம் செய்யத் தகுதியுள்ளவர்களே. மேலும், அவர்கள் மனச் சம நிலையுடையவர்களாகவும், சட்டத்தால் ஒப்பந்தம் செய்யத் தகுதியற்றவர்கள் என்று விலக்கப்படாதவர்களாகவும் இருக்க வேண்டும்' என்று ஒப்பந்தச் சட்டத்தின் 11ஆம் பிரிவு கூறுகிறது.

ஒப்பந்தம் செய்யக் கீழ்க்காண்பவர்கள் தகுதியற்றவர்களாகின்றனர்.

1. உரிய வயது வராதவர் (Minor) அல்லது இளவர்
2. மனச் சம நிலையில்லாதவர் அல்லது பித்தர்
3. பிற சட்டங்களால் ஒப்பந்தம் செய்யத் தகுதியற்றவர்.

1. உரிய வயது வராதவர் (Minor)

1875ஆம் ஆண்டின் இந்திய உரிய வயதடைந்தோர் சட்டத்தின் படி, (Indian Majority Act, 1875) யாரொருவர் தம் 18ஆம் வயது நிறைவுபெறா நிலையிலுள்ளாரோ அவர்தான் வயது வராதவர் (மைனர்) எனக் கருதப்படுகிறது. ஒருவர் உரிய வயது வராதவராக இருக்கும்போது அவரையும் அவர் சொத்தையும் பாதுகாக்கக் காப்பாளரை நியமித்திருந்தாலும், அல்லது அவர் சொத்துகள் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் இருந்தாலும் அவர் தம்முடைய 21ஆவது வயதில் உரிய வயதுடையவராக ஆகிவிடுகிறார். ஆனால், இங்கிலாந்தில் எல்லா நிலைகளிலும் 21 வயது ஆனவுடனே ஒருவர் வயதுவந்தவராக ஆகிவிடுவார்.

வயது வராதவரின் உடன்பாடு பற்றிய விதி (Law Relations to Minor's Agreement)

இந்திய ஒப்பந்தச் சட்டம் மைனருக்குச் சிறப்புரிமைகள் பல தந்துள்ளது. அவர் தம் செயலின் நன்மைகளை அடைய அவர் அனுமதிக்கப்படுகிறார். ஆனால் எவ்விதக் கடமையினையும் அவர் செய்ய வேண்டியதில்லை. அவருடைய தவறுகளுக்காகத் தனிப்பட்ட முறையில் அவர் பொறுப்பாளியல்லர். அவருடைய தவறான நடத்தைகளுக்கும், பொய் வாக்குறுதிகளுக்கும் அவர் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க இயலாது. மைனரின் பெற்றோர்கள் முகவர்களாகச் செயல்பட்டாலொழிய அவர் செய்த ஒப்பந்தத்திற்குச் சட்டபூர்வமாகப் பொறுப்பாளிகள் அல்ல.

மைனருடன் செய்த உடன்பாட்டின் முக்கிய நிலைகளைக் கீழே காண்போம்.

1. முழுதும் செல்லாது (Absolutely Void)

மைனருடன் செய்த ஒப்பந்தம் செல்லாது. செல்லாதது மட்டுமன்று முழுதும் செல்லாது. அத்தகைய ஒப்பந்தம் ஆரம்ப முதல் வெளித்தோன்றாமலும், செல்லக் கூடியதாகவும் கருதப்பட வில்லை. மைனர் வியாபாரம் செய்யும்போது ஏற்படும் ஒப்பந்தத் திற்கு அவர் பொறுப்பாளி அல்லர்.

உதாரணமாக மோஹோர் பீபீ எ. தர்மதாஸ் கோஷ்(Mohori Bibi *vs.* Dharmodas Ghosh) என்ற வழக்கில் ஒரு மைனர் ரூ. 20000-க்கு அடைமானம் வைத்து ரூ. 8000 அடைமானம் பெறுவோனிடம் (Mortgagee) வாங்கினார். அடைமானத்தை நிராகரிக்க வழக்குத் தொடரப்பட்டது. ஆனால் அடைமானம் பெறுவோர் அவர் கொடுத்த ரூ. 8000 திரும்பி அளிக்க வேண்டு மென்று வேண்டினார். மைனருடைய ஒப்பந்தம் முழுதும் செல்லாது. ஆகையால், பணம் திரும்பத் தரவேண்டும் என்ற வினாவே எழக்கூடாது என்று பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது.

ஆனால், மைனருடன் செய்த ஒப்பந்தம் செல்லாதேயொழியச் சட்ட விரோதமானதன்று. ஒருவர் தாம் மைனராக இருக்கும் போது வாங்கிய கடனை வயதுவந்ததும் கொடுத்துவிட்டார். அதன்பிறகு அப் பணம் திரும்பி அளிக்கப்படவேண்டுமென்று அவர் வழக்குத் தொடர முடியாது.

2. ஏற்புறுதி செய்ய இயலாது (No Ratification)

மைனருடன் செய்த ஒப்பந்தம் முழுதும் செல்லாதாகையால் அவர் மைனராக இருக்கும்போது செய்த ஒப்பந்தத்தைப் பின் வயதுவந்தவுடன் ஏற்புறுதி செய்ய முடியாது. ஆதிமுதல் (Ab initio)செல்லாத ஒப்பந்தத்தை ஏற்புறுதி செய்தல் இயலாது. மைனர் தாம் மைனராக இருக்கும்போது கடன் வாங்கிப் பின்னால் வயதுவந்தவுடன் பணம் திருப்பித் தருகிறேன் என்று உறுதி மொழி தந்தால் அது செல்லாது. காரணம் மைனராக இருக்கும் போது சொன்ன கைம்மாறு கைம்மாறாகவே கருதப்பட மாட்டாது.

3. மீட்டடைவிப்பு (No Restitution)

செல்லத்தகாத ஒப்பந்தம் மூலமாகக் கிடைத்த பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்கோ அல்லது பெற்ற பயனை ஈடுகட்டு வதற்கோ மைனர் பொறுப்பாளி அல்லர். இருப்பினும் சில நிகழ்ச்சிகளில் மைனர் எழுதித் தந்த பத்திரங்களை ரத்து செய்தாலும் தனி நிவாரணச் சட்டம் (Specific Relief Act) பிரிவு 41-ல் உள்ளபடி எதிர்த்தரப்பினருக்கு மைனர் நஷ்டஈடு தரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆரம்ப முதற் கொண்டே மைனர் செய்த ஒப்பந்தம் செல்லாததால் அவ் வொப்பந்தத்தின் தனிப்பட்ட நிறைவேற்றல் என்பது நிகழாது.

4. முரண்தடை இல்லை (No Estoppel)

தவறாக அறிவித்த காரியங்களுக்கு மைனர் பொறுப்பாளி அல்லர். நேர்மையற்ற முறையில் ஒரு மைனர் தம்மை வயது வந்தோராகக் காட்டிக்கொண்டு ஒப்பந்தம் செய்திருந்தால், அப்பொழுது அவர் தம்முடைய வயதடையா நிலையைப் பாதுகாப்பாகக் காட்டி வாதாடுவதை யாரும் தடுக்க முடியாது. ஏனென்றால் அவர் அவ் வொப்பந்தத்தின்கீழ்ச் செலுத்திய பணத்தை மைனர் திரும்பப் பெற்றுக் கொள்ளமுடியும். ஆனால் அவ் வொப்பந்தத்திலிருந்து உண்மையான பயனை அவர் அடைந்திருக்கக்கூடாது.

5. பயன்பெறும் மைனர்

தம்மைக் கட்டுப்படுத்தாத ஒப்பந்தத்தை தமக்குச் சாதக மாக மைனர் வலியுறுத்தலாம். அவருடைய பயன் கருதி ஒப்பந்தத்தை அவர் வலியுறுத்தலாம். சேவை செய்வதற்கு மைனர் ஒப்பந்தம் செய்தால் அது அவருடைய நன்மை கருதி

செல்லத்தக்கதாகும். நியாயமான நன்மை கருதிக் கற்பித்தல், வேலைவாய்ப்புப் போன்றவைகளுக்கு மைனர் செய்யும் உடன் பாடுகள் அவரைக் கட்டுப்படுத்தும். மைனர் பயிற்சி செய்யும் பொருட்டு அளிக்கப்பட்ட உடன்பாட்டின்மீது தடை செய்வது சட்டப்படி செல்லுபடியாகும். ஆனால், அத் தடை நியாயமான தாகவும், மைனருக்கு நன்மை பயப்பதாகவும் இருந்தால்தான் அது அவரைக் கட்டுப்படுத்தும். அதேபோல் சில சொத்துகளை அடைந்து அதில் தனி அக்கறை செலுத்தும்விதம் ஒப்பந்தம் மைனருக்கு ஏற்பட்டுவிட்டால் அதுவும் அவரைக் கட்டுப்படுத்தும். வயதுவந்த கொஞ்ச நாள்களுக்குள்ளாகவோ அல்லது அதன் முன்னரோ அவர் அந்த ஒப்பந்தத்தை மறுத்துவிட்டால் அது அவரைக் கட்டுப்படுத்தாது.

6. வாக்குறுதி ஏற்கும் மைனர் (Minor Promisee)

வாக்குறுதியை ஒரு மைனர் ஏற்கலாம். மைனருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட புரோநோட்டுச் செல்லும். அதை வலியுறுத்தலாம். தன்மேல் பொறுப்பு விழாமல் மைனர் செலாவணிப் பத்திரங்களை விடுக்கலாம்; பணமாக மாற்றலாம்; மேலெழுதித் தரலாம். பதிலாளாக (Agent) மைனரே அமர்த்தலாம். கூட்டு வாணிப (Partnership) ஒப்பந்தத்தில் மைனர் சேரமுடியாது. மற்றக் கூட்டாளிகளின் இசைவோடு கூட்டு வாணிப நன்மைகள் பெறும்பொருட்டு மைனரைச் சேர்த்துக்கொள்ளலாம்.

7. அவசியங்களுக்காக மைனர் ஏற்கும் பொறுப்பு (Minor's Liabilities for Necessities)

மைனருடைய சொத்துகளிலிருந்து ஓர் ஆள் தஷ்டஈடு பெறலாம். ஆனால் அவர் வாழ்க்கைக்கு அல்லது அவருடைய குடும்பத்தினர் வாழ்க்கைக்கு அவசியமானதைத்தான் அவர் அடையலாம். அத்தகைய கடன்களுக்கு மைனர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளி அல்லர். மைனருடைய பாதுகாப்பாளர் செய்த ஒப்பந்தம் மைனரைக் கட்டுப்படுத்தும். ஆனால் அந்த ஒப்பந்தம் பாதுகாப்பாளரின் அதிகாரங்களுக்குட்பட்டும் மைனரின் நன்மை கருதிச் செய்யப்பட்டதாகவும் இருக்கவேண்டும். மைனர் ஈடுபட்டுள்ள வியாபாரத்தைப்பற்றிய ஒப்பந்தம், அவசியங்களுக்காக ஏற்பட்டதில்லையாதலால் அது செல்லாது.

8. மைனர் பதிலாள் அல்லது முகவர் (Minor Agent)

மைனர் முகவராக நியமிக்கப்படலாம். மற்றவர்களோடு ஏற்படும் தொடர்புகளில் மைனர் தன் முதலாளிக்காகத்

(Principal) தானே காரியமாற்றலாம். தம்முடைய மைனர் பதிலாளின் செயலுக்கு முதலாளி பொறுப்பாவார். தவறான செயல்களுக்கு இங்கும் மைனர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியல்லர். இத்தகைய சூழ்நிலையில் முதலாளிக்குத் தான் பொறுப்பு அதிகம். மைனரின் செயலால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடு ஒன்றும் கிடைக்காது.

9. மைனர் கூட்டாளி (Minor Partner)

ஒரு மைனர் கூட்டு வாணிபத்தில் கூட்டாளியாக ஆக முடியாது. என்றாலும் கூட்டு வாணிபத்தின் பயன்களுக்கு அவரைச் சேர்த்துக்கொள்ளலாம். அவருக்குக் கூட்டு வியாபாரத்தில் எவ்வளவு அக்கறை உள்ளதோ அந்த அளவிற்கு அவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. வியாபார நிருவாகத்தில் தலையிட அவருக்கு உரிமையில்லை. அதேபோல் வியாபாரக் கணக்குகளை நகல் எடுத்துக்கொள்ளவும் மேற்பார்வையிடவும் அவருக்கு அதிகாரமில்லை.

உதாரணமாக, ஒரு மைனர் தாம் வயதுவந்தவராகத் தவறாக நடித்து ஒருவனிடமிருந்து ரூபாய் 1000 கடனாகப் பெற்றார். கடன் கொடுத்தோன் பணம் திரும்பக்கோரி மைனர் மீது வழக்குத் தொடுக்க முடியுமா? என்ற கேள்வி எழும். இங்குக் கடன் கொடுத்தோர் மைனர்மீது வழக்குத் தொடரமுடியாது. காரணம் மைனருடைய தவறான செய்கை கடன் கொடுத்தோருக்குத் தெரியாமலிருக்க முடியாது. மேலும் மைனர் செய்யும் ஒப்பந்தம் செல்லாது. எனவே, அவர் பணம் திரும்பத் தராமல் தப்பித்துக்கொள்வார். எனினும், பணம் மைனரிடம் காணப்பட்டால் அவர்மீது ஒரு தடை விதிக்கலாம். ஆனால், பணத்தை வசூல்செய்ய வழக்குத் தொடரமுடியாது.

ஒரு மைனரின் மனைவி ஒரு கடைக்காரனிடம் கடனுக்குச் சாமான் வாங்கினாள். இது செல்லத்தக்க ஒப்பந்தமா? சட்டத்தின் 60ஆவது பிரிவுப்படி குடும்பத்திற்கு அவசியமான சாமான்கள் வாங்கியிருந்தால் மட்டும் அது செல்லத்தக்க ஒப்பந்தம். மைனருக்கும் அவரைச் சார்ந்துள்ளவருக்கும் வழங்கப்பட்ட அவசியமான பொருள்களுக்கு மைனர் பொறுப்பாளியாவார்.

ஆதவன், பாலகிருஷ்ணனை மைனர் என்று அறியாமல் கடனுக்குத் தன் கடையிலிருந்து பொருள்கள் விற்றான். பணம்

செலுத்துவதற்குக் குறிப்பிட்ட காலம் முடிவடைந்தது. ஆனால், பணம் செலுத்தவில்லை. கொஞ்ச நாள்கள் சென்று பால கிருஷ்ணன் வயதுவந்தடைந்த பின்னர் ஆதவன் அவன்மீது வழக்குத் தொடுத்தான். வழக்குமன்றம் என்ன தீர்ப்பு வழங்கி ஆதவனுக்குப் பரிகாரம் வழங்கும்?

மைனரோடு செய்த ஒப்பந்தம் செல்லாது. எனவே ஆதவன் மைனருக்கு அவசியமான பொருளைத் தந்தாலொழிய அவர்மீது வழக்குத் தொடர முடியாது. அதிலும் சாமான்களின் விலையை மட்டும்தான் மைனருடைய சொத்திலிருந்து பெறமுடியும். தனிப்பட்ட முறையில் மைனர் பொறுப்பாக மாட்டார். மைனர் வயதுவந்தவராக மாறியதும் தான் மைனராக இருந்தபோது செய்த ஒப்பந்தத்தை ஏற்புறுதி செய்ய இயலாது. ஆதவனுக்குச் சாதகமாகச் சொல்லவேண்டுமானால் அவருடைய பொருளை மைனர் வைத்திருந்தால் அதை அவர் திரும்பப் பெறலாம்.

மைனர் சம்பந்தப்பட்ட சில வழக்குகளைப் பார்ப்போம். ரைடர் எ. ஊம்ப்வெல் (Ryder *vs.* Wombwell) என்ற வழக்கில் ஒரு மைனர் ஒரு தங்கக் கோப்பையையும், ஒரு ஜோடி தங்கக் கைப் பொத்தான்களையும் அவருடைய நண்பனுக்குப் பரிசாக அளிக்க வாங்கினார். ஆனால், கடைக்காரருக்குப் பணம் தரவில்லை. எனவே வியாபாரி பணத்திற்காக வழக்குத் தொடுத்தார். இந்த ஒப்பந்தம் செல்லாதென்று நீதிமன்றம் இவ் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது. கடைக்காரர் வழங்கிய பொருள்கள் வாழ்க்கைக்கு அவசியமானவை அல்ல; மேலும் மைனருடைய வாழ்க்கைக்குத் தேவையானவையும் அல்ல.

நாஷ் எ. இன்மேன் (Nash *vs.* Inman) என்ற வழக்கில் ஆக்ஸ் போர்டு பல்கலைக்கழக இளநிலைப் பட்டப்படிப்புப் படிக்கும் மாணவ மைனர் ஒருவர், இடுப்புவரையிலுள்ள ஒரு டசன் கையில்லாச் சட்டைகள் தைத்துத் தருமாறு ஆணை விடுத்தார்; ஆனால், அவற்றிற்குப் பணம் தரவில்லை. அவர் அந்தச் சட்டைகளை வாங்கிப் போவதற்குள் அவர் தந்தை அவருக்கு அதேவிதமான இரண்டு சட்டைகளை வாங்கித் தந்துவிட்டார். எனவே நீதிமன்றம் தையற்காரருக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறவில்லை. காரணம் ஒரு டசன் சட்டைகள் அவசியமானவை யல்ல; மேலும் மைனருக்கு வேண்டிய இரண்டு சட்டைகளை அவர் தகப்பனார் அளித்துவிட்டார். மைனருடைய வாழ்க்கைத் தரத்திற்கு அந்தச் சட்டைகள் அவசியம் என்பதைத் தையற்காரர் நிரூபிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கருதியது. விற்பனை

செய்வதற்கு உடன்பாடு ஏற்பட்டபோது மட்டுமல்லாமல் பொருளைப் பெற்றுக்கொள்ளும்போதும் அது அவசியமானதாக இருக்கவேண்டும். சரக்கு விற்பனைச் சட்டமும் 'அவசியங்களை' இவ்வாறு விளக்குகிறது. அதாவது, மைனர் அல்லது மற்றவர்களின் வாழ்க்கைத்தரத்திற்கு வேண்டிய அவசியமான பொருள்களைத்தாம் அவர்கள் விற்கும்போதும், பொருளைப் பெறும்போதும் நாட்டவேண்டும்.

ராபர்ட்ஸ் எ. கிரே (Roberts *vs.* Gray) என்ற வழக்கில் மைனர் ஒரு பில்லியர்டு விளையாட்டுப் பயிற்சி தருவாரோடு உடன்பாடு செய்தார். அதாவது, அப் பயிற்சியாளர் அவருக்கு விளையாட்டை நன்றாகக் கற்றுக்கொடுத்து, அவருக்கு அவ் விளையாட்டு நன்றாக விளையாடத் தெரிந்துவிட்டால் அவர் பயிற்சியாளருக்கு 6000 பவுண்டு தரவேண்டும் என்பது உடன் பாடு. மைனர் நன்றாகப் பயிற்சிபெற்றுச் சிறந்த விளையாட்டுக் காரராகியும் பயிற்சியாளருக்குப் பணம் தரவில்லை. எனவே வழக்குத் தொடரப்பட்டது. பயிற்சியாளரால் பலனடைந்து விளையாட்டைத் தெரிந்து ஒரு தொழில் விளையாட்டுக்காரராகவே மைனர் ஆகிவிட்டதால் பணம் தரவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. ஆனால், இத்தகைய வழக்குகளில் மைனருடைய சொத்துகள்தாம் பாதிக்கப்படுமேயொழிய, தனிப்பட்ட முறையில் மைனர் பாதிக்கப்படமாட்டார்.

வயதடையாமை — ஒரு வரம்
(Minority - A Boon)

மைனர்களுக்குச் சட்டம் அளித்திருக்கும் உரிமைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் அது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இவ் வுரிமைகள் அவர்களுக்கு ஒரு தகுதியை உண்டாக்கி அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கும் கேடயமாக அமைகின்றன. சட்டம் மைனர்களுக்கு இவ்வளவு பாதுகாப்பு வழங்குவதன் காரணம், அவர்கள் பக்குவம் அடையாதவர்கள். யாரும் அவர்களைத் தவறான வழியில் ஈடுபடுத்திவிடலாம். 'சட்டம் மைனர்களைக் காப்பாற்றுகிறது; அவர்களின் உரிமைகளையும் சொத்துகளையும் பாதுகாக்கிறது; அவர்தம் குறைகளை மன்னிக்கிறது; அவர்தம் வேண்டுகோளுக்கு உதவுகிறது. நீதிபதிகள் அவர்தம் ஆலோசகர்கள்; நடுநிலைத் தீர்ப்புக் கூறுவோர்கள் அவர்தம் பணியாள்கள்; சட்டம் அவர்தம் பாதுகாப்பாளர்' என்று சால்மண்ட் என்பவர் மைனர்களின் ஏகபோக உரிமைகளை விளக்குகிறார்.

சம மனநிலை இழந்தவர்கள்

(Persons of Unsound Mind)

'எவனொருவன் ஒப்பந்தம் செய்யும்போது அதைப் புரிந்து கொள்பவனாகவும், அதில் தன் அக்கறையை நியாயத் தீர்ப் பாகவும் உணர்கிறானோ அவன்தான் சீரான மனநிலையுடை யவன்' என்று சட்டத்தின் 12ஆம் பிரிவு கூறுகிறது. எனவே, பிறவிமந்தன் (idoit), பித்தர், குடிகாரர் ஆகியவர்களைச் சீர்கெட்ட மனநிலையுடையவர்கள் எனச் சொல்லலாம்.

பிறவி மந்தன்

சிந்தனைத் திறனும் நியாயமான தீர்ப்பும் இல்லாதவனை முட்டாள் எனக் கூறலாம். வாழ்க்கை அவசியத்தைத் தவிர்த்து அவருடன் செய்யும் ஏனைய உடன்பாடுகள் செல்லாதவை.

பித்தர் (Lunatic)

மனத்திறன் சரியில்லாதவர்களைப் பித்துப் பிடித்தவர் எனக் கூறுகிறோம். எனவே, அவர் சுயநினைவோடு செய்த உடன் பாட்டைத் தவிர ஏனைய உடன்பாடுகள் செல்லாதவை. இங்கும் வாழ்க்கைக்கு வேண்டிய அவசியங்களுக்காகச் செய்த உடன்பாடு செல்லும். வாழ்க்கைக்கு அவசியம் என்பது பிறவிமந்தன் அல்லது பித்தர் ஆகியவர்களின் மனைவிமக்களுக்கும் அவசிய மானவை என்று பொருள்படும். ஆனால், இவர்களின் நன்மை கருதிச் செய்யப்பட்ட உடன்பாடு செல்லுபடியாகும்.

குடிகாரர் (Drunkard)

மதுபானம் அல்லது மருந்துவகை அருந்திக் கொஞ்சநேரம் தம் சுயநினைவு இழந்து காணப்படுவர்கள் குடிகாரர்கள். அவர்கள் போதையில் இருக்கும்போது செய்யும் ஒப்பந்தம் செல்லுபடியாகாது. வேறு நபர் குடிகாரரின் மனநிலையும் தன்மையும் அறிந்து அவரோடு ஒப்பந்தம் செய்தால் அவர் அதை வலியுறுத்தமுடியாது. மயக்கம் தெளிந்து தம் நிலைக்கு வந்து ஒப்பந்தத்தை ஒத்துக்கொண்டார் என்ற வினாவே எழாது. ஆங்கிலச் சட்டத்தில் அத்தகைய உடன்பாடு செல்லத்தக்கது அன்று. குடிபோதை தெளிந்தவுடன் அவ் வொப்பந்தத்தை உறுதி செய்யலாம் என்று மேத்யூஸ் எ. பக்ஸ்டெர் (Mathews *vs.* Baxter) என்ற வழக்கில் கூறப்பட்டது.

ஒப்பந்தம் செய்யத் தகுதியில்லாதவர்கள்

(Persons Disqualified)

1. அயல்நாட்டு விரோதி (Foreign Enemy)

இந்தியக் குடிமகன் அல்லாதவர் அயல்நாட்டாராவார். அயல் நாட்டு அரசாங்கமும் இந்தியாவும் சமாதானமாக இருந்தால் அயல்நாடு நட்புநாடு என்றும், அவ்வாறில்லாமலிருந்தால் அயல்நாட்டைப் பகைநாடு என்றும் கூறுகிறோம். இந்திய அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு நட்புள்ள அயல் நாடுகள் நம் நாட்டில் ஒப்பந்தம் செய்யலாம். உதாரணமாக நம் நாட்டுக் கப்பல்மீது அயல்நாட்டு அரசாங்கம் சொந்த உரிமை கொண்டாட முடியாது. இந்தியாவிற்கும் அயல்நாட்டிற்கும் போர் மூண்டால், போர் நடக்கும் தருணம் மத்திய அரசாங் கத்தின் அனுமதியின்றி எவ்வித ஒப்பந்தமும் செய்ய இயலாது. போருக்கு முன்னரே செய்த ஒப்பந்தத்தைப் போர்க்காலங்களில் தள்ளிப்போட வேண்டும். போர் முடிந்த பின்னர் அதை நிறை வேற்றலாம். நாட்டு நலங்கருதி அவ்வொப்பந்தத்தை அரசாங்கம் தடை செய்யலாம்.

2. அந்நியநாட்டு உயர் தலைவர் (Foreign Sovereign)

மத்திய அரசின் முன் அனுமதி பெற்று அந்நிய அரசாங் கத்தின் மேலோ அல்லது அதன் பிரதிநிதிகளின்மேலோ இந்திய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். அந்நிய அரசாங்கம் ஒப்பந்தத்தில் ஈடுபலாம். அதை நம் நீதிமன்றம் மூலமாக வலியுறுத்தலாம். ஆனால், முன்னாள் அரசர்களுக்கு இத் தனி உரிமை இல்லை. சாதாரணக் குடிமகனைப்போல் இந்தியா விலுள்ள எந்த வழக்குமன்றத்திலும் அவர்மீது வழக்குத் தொடரலாம்.

3. குற்றவாளிகள் (Convicts)

சிறைவாசம் செய்யும் குற்றவாளி ஒப்பந்தத்தில் ஈடுபட முடியாது. சிறைவாசம் முடிந்தாலும் அல்லது அவர் மன்னிக்கப் பட்டாலும் ஒப்பந்தம் செய்யலாம்.

4. வேலையில் உள்ளோர் (Professional Persons)

இங்கிலாந்தில் வழக்கறிஞர்கள் தங்கள் கட்சிக்காரர்களின் மீது வாதாடும் தொகைக்காக வழக்குப் போட முடியாது.

இந்திய உயர்நீதிமன்ற வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொள்ளுபவர் வாதாடும் தொகைக்காகத் தம் கட்சிக்காரர்மீது வழக்குத் தொடரலாம். 1926ஆம் வருடத்திய இந்தியச் சட்ட ஆலோசனைக் குழுச் சட்டத்தின்படி ஒவ்வொரு வழக்கறிஞரும் பயிற்சி தொடங்குவதற்குமுன் தம் பெயரை உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

5. கம்பெனி

சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நபர்தான் கம்பெனி. அது ஒரு சட்டத்தின் உருவம். அது சொத்துப் பெற்றிருக்கலாம். சரக்கு வாங்கவும் விற்கவும் அதற்கு உரிமை உண்டு; அது செய்துள்ள ஒப்பந்தங்கள்பற்றி அதுவும் வழக்குத் தொடரலாம். அதன்மீது வேறுநபர்கள் வழக்கும் தொடுக்கலாம். சட்டத்தால் இயற்றப்பட்டிருப்பதால் அமைப்புப் பத்திரத்தில் (Memorandum of Association) கூறியுள்ள நோக்கங்களுக்கு மாறுபடாமல் கம்பெனி நடக்க வேண்டும். ஒரு கம்பெனி அதன் அமைப்புப் பத்திரத்தில் உள்ளபடி டிராம் வண்டி வாங்கி நடத்த உரிமை பெற்றிருந்தது. ஆனால் அது பிரயாணிகளை ஏற்றிச்செல்லக் கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது (நிஹால் சந்த் எ. தில்வார்கான் என்ற வழக்கு). கம்பெனியின் நோக்கத்திற்குப் புறம்பான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டால் அவை கம்பெனியைக் கட்டுப்படுத்தா. தவிர திருமணம் செய்வதற்குச் செய்யும் ஒப்பந்தம்போல் உள்ள சில ஒப்பந்தங்களைக் கம்பெனி செய்யவே முடியாது.

6. திருமணமான மகளிர்

ஒப்பந்தம் செய்யும் தகுதியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு இல்லை. இந்தியாவில் திருமணமான பெண்களோ அல்லது திருமணமாகாத பெண்களோ ஆண்களைப்போல் ஒப்பந்தம் செய்யும் தகுதியைப் பெற்றுள்ளனர். ஒரு பெண் பெற்றிருக்கும் சொத்தின்மீது அதை அனுபவிக்கும் முழு உரிமையும் அவளுக்குண்டு. அவன்மீது தனிச் சொத்தை அவள் விருப்பம்போல் எதுவும் செய்யலாம். இத்தகைய ஒப்பந்தங்களுக்கு அவள் கணவன் பொறுப்பாளி அல்லன். ஆனால், வாழ்க்கைக்கு அவசியமானவைகளை அடைய அவள் கணவனையும் பொறுப்பாளியாக ஆக்கலாம்.

6. இசைவில் தவறு

(Error in Consent)

ஒரு புனைவுக்கு வழங்கும் இசைவு தடையில்லாமலிருக்க வேண்டும்.

1. தவறு (Mistake).
2. தவறாகத் திரித்துக் காட்டல் (Misrepresentation).
3. மோசம் செய்தல் (Fraud).
4. தகாத வழியில் செல்வாக்குச் செலுத்துதல் (Undue influence).
5. பலவந்தப்படுத்துதல் அல்லது வலுக்கட்டாயம் (Coercion) முதலியவைகளிலிருந்து விடுபட்டதாக இருக்கவேண்டும்.

தவறு

(Mistake)

தவறு என்பது இசைவினைத் தவறான வழியில் ஊக்குவிக்கும் குறைபாடு. அது சட்டத் தவறாகவோ அல்லது பொருண்மைத் தவறாகவோ (Mistake of fact) இருக்கலாம். ஒரு நாட்டின் சட்டம், அயல்நாட்டுச் சட்டம், தனிநபர் சொத்துரிமை ஆகியவைகளில் குற்றம் ஏற்படுவது சட்டத் தவறாகும். தன் தாய்நாட்டின் சட்டம் தெரியாதென ஒருவன் வாதாட முடியாது. 'சட்டம் அறியாமை மன்னிக்கக்கூடியதன்று' (Ignorantia juris hand excusat). ஒவ்வொரு மனிதனும் தன் நாட்டுச் சட்டங்களை அறிந்திருக்க வேண்டும். சட்டம் தெரியாமையை ஒருவருக்கு அனுகூலமாக்கினால் அதனால் குழப்பம் ஏற்படும். அயல்நாட்டுச் சட்டம் தெரியாது என வாதிடலாம். அது நிரூபிக்கப்பட்டுவிட்டால் அதனால் ஏற்பட்ட ஒப்பந்தத்தைச் செல்லுபடியாகாமல் செய்யலாம். ஏனெனில் அயல்நாட்டுச் சட்டதிட்டங்களை ஒரு மனிதன் அவசியம் அறிந்திருக்க வேண்டியதில்லை. அதேபோல் தனிஉரிமைச் சட்டமும் தெரியாதிருத்தல் தக்க பாதுகாப்பு அளிக்கும். கூப்பர் எ. பியட்ஸ் (Cooper *vs.* Phiads) என்ற வழக்கில் ஒருவர் ஒரு குட்டையில் மீன்பிடிக்கும்

உரிமையைக் குத்தகைக்கு எடுத்திருந்தார். அவர்தாம் அந்தக் குட்டையின் உரிமையாளர் என்ற உண்மை அவருக்குத் தெரியாது. பின்னால் இந்த உண்மை அவருக்குத் தெரியவந்த பொழுது குத்தகைப் பணம் தர மறுத்தார். அவர் தரவேண்டிய அவசியம் இல்லையென நீதிமன்றமும் தீர்ப்பளித்தது.

ஒப்பந்தத்தின் தன்மை, ஒப்பந்தம் செய்யும் நபர்கள், ஒப்பந்தம் செய்யப்படும் பொருள் ஆகியவை குறித்த தவறுகள் பொருண்மைத் தவறுகளாகும். இசைவைத் தவிர்க்க வேண்டுமென்றால் அதனுடைய தன்மையைப் பற்றிய தவற்றைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமேயொழிய, அத் தவற்றின் நிபந்தனைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது. உதாரணமாக ஆனந்தன், சந்திரனிடம் தம் சொத்துகளைக் குத்தகைக்கு விட உடன்படுகிறார். ஆனால் விற்பனைப் பத்திரத்தில் அவர் கையெழுத்துப் போட நேரிடுகிறது. ஆனால் உடன்பாட்டின் தன்மை வேறு என்றும், தாம் தம் சொத்துகளை விற்பனை செய்ய விரும்பவில்லையென்றும் ஆனந்தன் கூறுகிறார். விற்பனையில் முழு உரிமையும் மாறிவிடுகிறது. ஆனால் குத்தகையில் சொத்துப் பெற்றிருக்கும் உரிமை மட்டும் மாறுகிறது.

ஒவ்வோர் ஒப்பந்தத்திலும் ஒரு நிபந்தனையைக் குறிப்பிட வேண்டும். அத்தகைய நிபந்தனை கட்டுப்பாட்டின்மீதோ அல்லது ஆதாரத்தின்மீதோ இருக்கவேண்டும். அத்தகைய நிபந்தனைகளடங்கிய பத்திரத்தை ஒருவர் கையெழுத்திட்டால் அவர் கையெழுத்துப் போடுவதற்குமுன் நன்றாகப் படித்து உணரவேண்டும். பின்னால் அந்த நிபந்தனைகளை ஏற்க மறுக்கக்கூடாது. அதில் குற்றமுள்ளது வாதாட முடியாது என்று எழுதிய எழுத்துத்தான் செல்லும் (Litera Scripta Manet). இதற்கு விதிவிலக்கு 'இது உண்மை இல்லை' அல்லது 'இது பத்திரமன்று' (Non est tactum) என்று வாதாடுவதுதான். இந்த விதிவிலக்கைக் கோரும் நபர் உடன்பாடு செய்யும்போது அலட்சியமாக இருக்கக்கூடாது. இக் கருத்து தரோகுட்ஸ் (Thoroughgoods case) என்ற வழக்கில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சொத்து வாடகைப் பத்திரத்தைப் பைசல் செய்ய ஒரு படிக்காதவனிடம் கையெழுத்து வாங்கப்பட்டது. ஆனால் உண்மையில் அவனை ஏமாற்றி அந்தச் சொத்து உரிமைகள் மூழுவதும் இழப்பதாக அந்தப் பத்திரத்தில் காணப்பட்டது. 'இது உண்மையன்று' என்ற விதிவிலக்கைப் பயன்படுத்திப் படிக்காத பாமரன் வழக்குத் தொடர்ந்தான். இதைச் சரியென ஏற்று ஒப்பந்தத்தைத் தள்ளித் தீர்ப்புக் கூறப்பட்டது. இக் கருத்து

ஃபாஸ்டர் எ. மக்கினன் (Foster *vs.* Mackinnon) என்ற வழக்கில் மேலும் கூறப்பட்டுள்ளது. இதில் ஒருவர் நீண்ட நாள்களுக்கு முன் ஒரு பத்திரத்தை உத்தரவாதப் பத்திரம் என்று தவறாக எண்ணிக் கையெழுத்திடுமாறு செய்யப்பட்டார். ஆனால், உண்மையில் அப் பத்திரம் ஒரு மாற்றுச்சீட்டுச் சம்பந்தப்பட்டது. எனவே ஒப்பந்தம் தள்ளப்பட்டுவிட்டது. லெவிஸ் எ. கிளே (Lewis *vs.* Clay) என்ற வழக்கில் ஒரு படித்த மனிதர் ஒரு பத்திரத்தில் பல இடங்களில் அசல் பத்திரத்தின் நகல் எனத் தவறாகக் கருதிக் கையெழுத்துப் போட்டுவிட்டார். ஆனால் உண்மையில் அப் பத்திரம் ஒரு புரோநோட்டு. எனவே தாம் தவறாகக் கையெழுத்துப் போட்டதாக நிரூபித்து அவர் ஒப்பந்தத்தைத் தள்ளிவிடலாம்.

இவ் வழக்குகளில் கவனக்குறைவு இல்லை. இருந்தாலும் நீதி மன்றம் கையெழுத்திட்டவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது. ஆனால் இப் பாதுகாப்பு செலாவணிப் பத்திரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் கிடைக்காது. ஏனெனில் இப் பத்திரங்களில் முதலில் கையெழுத்திட்டவர் பின்னால் முறைப்படி பெற்றவர்களுக்குப் பொறுப்பாளியாவார். காரணம் அவர்களுக்குப் பத்திரம் செல்லுபடியாகாத சூழ்நிலை தெரிய அவசியமில்லை.

ஓரியன்டல் பாங்க் கார்ப்பரேஷன் எ. பிளேமிங் (Oriental Bank Corporation *vs.* Fleming) என்ற வழக்கில் ஓர் இயக்குநர் ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்கள் தாம் என எண்ணிக் கடிதங்கள் அதிகம் வந்த நாளில் கையெழுத்திட்டுவிட்டார். செயலாளரும் அத்தகைய நிபந்தனைகளும் அந்தப் பத்திரத்தில் காணப்பட்டன என்று எடுத்துரைத்தார். ஆனால் பின்னர் இயக்குநர் அப் பத்திரத்தில் வேறு நிபந்தனைகளும், கம்பெனி நோக்கத்திற்கு எதிரானவைகளும் அடங்கியுள்ளன என்பதைக் கண்டுபிடித்தார். எனவே, அவர் அவ் வொப்பந்தத்தைத் தள்ளி விட்டார். இங்கு இயக்குநர்மீது கவனக் குறைவு இருப்பதாகத் தெரியவில்லை.

ஆள்கள்பற்றிய தவறுகள் (Mistakes as to Persons)

சில நேரங்களில் ஒப்பந்தம் செய்யும் மாந்தர்களின் கருத்தொருமைபற்றிய தவறு ஏற்படுகிறது. அப்பொழுது அவர்களிடையே கருத்தொருமை இருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும். அதாவது, அவர்களிடையே மன ஒற்றுமை இருக்கிறதா இல்லையா என்று பார்க்கவேண்டும். இஃது ஒருவர் மற்றவரோடு இணைந்து செயல்படுகிறாரா என்பதைப் பொறுத்

துள்ளது. உதாரணமாக ஒருவருக்காக மற்றொருவர் பொருள்கள் வாங்குவது அல்லது தவறான வழியில் தம்மை மற்றவர் எனச் சொல்லுவது போன்றவைகளாகும். முன்னால் சொல்லியதில் கருத்தொற்றுமை ஏற்பட்டு வாங்குவோர்க்குச் சொத்துரிமை போய்ச் சேருகிறது. ஆனால், பின்னால் சொல்லியதில் ஒப்பந்தத்தில் ஏற்புடைய மாந்தர்களிடையே கருத்தொற்றுமை இல்லை. எனவே, பொருள்மீதுள்ள உரிமை அல்லது சொந்தம் மாறவில்லை. இக் கருத்தினை விளக்கும் சில வழக்குகளைப் பார்ப்போம்.

பிலிப்ஸ் எ. புரூக் (Phillips *vs.* Brooks) என்ற வழக்கில் நார்த் என்பவர் தாம் லண்டன் ஜேம்ஸ் ஸ்கொயரிலுள்ள சர் ஜார்ஜ் புல்லோ என்று சொல்லிக்கொண்டு ஒரு கடையில் நகைகள் வாங்கினார். அதற்கு 450 பவுண்டிற்கு ஒரு செக்கு விடுத்தார். பின்னர் அந்தச் செக்கு மறுக்கப்பட்டது. ஆள் மாறாட்டத்தை உணர்ந்த வியாபாரி நகைகளைத் திரும்பப் பெறுவதற்கு நார்த்மீது வழக்குத் தொடர்ந்தார். இதற்குள் அந்த நகைகளை நார்த்து அடகு வைத்துவிட்டார். இந்த வழக்கில் நார்த்தினுடைய மனமும் நகை வியாபாரியின் மனமும் ஒன்றாகக் கலந்தன. அதாவது கருத்துகள் ஒன்றாகின. பெரிய மனிதர்போல் நடித்தாலும் நார்த் தமக்காகவே நகைகள் வாங்கினார். ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தம் செல்லுபடியாக விளங்கியது; ஆனால் தவறு கண்டுபிடிக்கப்பட்டதும் செல்லாத தாக மாறிவிட்டது. 'ஒப்பந்தம் செல்லும் நிலைகளை அடகு பிடித்ததால் அடகு பிடித்தவர் (Pledgee) பயப்பட வேண்டாம்' என்று நீதிமன்றம் கருத்து வழங்கியது.

இதற்கு மாறாகக் கண்டி எ. லிண்ட்சே (Cundy *vs.* Lindsay) என்ற வழக்கில் ஒப்பந்தம் இல்லையென்றும், ஆரம்ப முதல் அவ்வுடன்பாடு செல்லாதென்றும் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. ஆல்பிரெட் பிளங்கரன் தம்மைத் தம் தெருவிலேயே லண்டனில் வியாபாரம் செய்யும் புகழ்வாய்ந்த பிளங்கிரான் அண்டு சன் என்று பாவித்துக்கொண்டு சாமான்கள் வரவழைக்க ஆர்டர் கொடுத்தார். சாமான்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவைகளை வேறு வியாபாரியிடம் அடகு வைத்துவிட்டுப் பணத்தோடு ஓடிவிட்டார். இக் குற்றம் தெரிந்த பின்னர் வியாபாரி பொருள்களைத் திரும்பப் பெறுவதற்கு வழக்குத் தொடர்ந்து அதில் வெற்றி பெற்றார். அது ஓர் ஒப்பந்தமே இல்லையென்றும், பொருளை வாங்கும்போது ஆல்பிரட்டிற்கு அதிகாரம் இல்லையென்றும், அவர் அவ்வாறிருக்கும்போது

வேறு ஒருவருக்குச் சரக்குரிமையை மாற்ற முடியாது என்றும் நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. அடகு பிடித்தவர் பொருள்களைத் திரும்பத் தரவேண்டும் என்று ஆணையிட்டது.

லேக் எ. சிம்ப்சன் (Lake *vs.* Simpson) என்ற வழக்கிலும் இதேபோன்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ் வழக்கில் ஒரு பெண், தான் திருவாளர் பாரனின் மனைவி என்று சொல்லிக் கொண்டு பாரனுக்காக நகைகளை வாங்கினாள். பிறகு அந் நகைகளை வேறு ஒருவருக்குத் தந்துவிட்டாள். இவ் வுண்மை தெரிந்து வழக்குப் போடப்பட்டது. ஒப்பந்தம் வேறு ஒருவருக்காக ஏற்பட்டது. அதேபோல் நகைகளும் வேறு ஒருவருக்காக வாங்கப்பட்டது. எனவே, அந்தப் பெண் நகை களைத் திரும்பத் தரவேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

அடுத்து செட் எ. பட் (Said *vs.* Butt) என்ற வழக்கில் ஒரு திறனாய்வாளர் தாம் திரையரங்கத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார் என்று தெரிந்தும் வேறு ஒருவர் மூலமாக டிக்கட்டு வாங்கி உள்ளே நுழைவதற்கு முயன்றார். ஆனால் அவர் உள்ளே போக அனுமதி மறுக்கப்பட்டது. ஒப்பந்த முறிவிற்காக அவர் திரையரங்க உரிமையாளர்மீது வழக்குத் தொடர்ந்தார். ஆனால் அவருக்கும் திரையரங்க உரிமையாளருக்கும் ஒப்பந்தம் இல்லை. எனவே நட்டஈடு இல்லை என நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

இந்தியாவில் இஸ்மாயில் எ. தத்தாத்ரியா (Ismail *vs.* Dattatriya) என்ற வழக்கில் நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தை வலியுறுத்தியது. அங்குத் தவறான வழியில் தயாரிக்கப்பட்ட அடைமானப் பத்திரம் செல்லாதெனத் தள்ளப்பட்டது. காரணம் இங்கு ஒப்பந்தம் செய்தவர்கள் பற்றிய தவறு இருந்தது.

ஒப்பந்தம் கூறுஞ் செய்தி பற்றிய தவறு (Mistake as to the Subject Matter of Contract)

இத்தகைய தவறுகள் பொதுவாக உளதாய் இருத்தல், முற்றொருமை (identity), விலை உரிமை, அளவு, குணம் ஆகியவைகளை ஒப்பந்தம் செய்யும் செய்திகளில் அடங்கியிருக்க வேண்டும். நியாயமான சூழ்நிலைகளில் உடன்பாடு ரத்துச் செய்யப்படும்.

தோன்றி இருத்தல் (Existence)

ஆறுமுகம் கந்தனுக்குத் தம் நிலத்தை விற்பதாக ஒத்துக் கொண்டார். ஆனால் நில விற்பனைக்கான முயற்சிகள் எடுத்த

போது அந் நிலத்தை அரசாங்கம் கட்டாயப்படுத்தி எடுத்துக் கொண்ட விவரம் தெரியவந்தது. எனவே, கந்தனுக்கு உரிய காலத்தில் இச் செய்தி அறிவிக்கப்பட்டது. ஆறுமுகத்தினிடம் விற்பதற்கு உண்மையிலேயே நிலம் இல்லாமலிருப்பதால் இந்த ஒப்பந்தம் செல்லாது.

முற்றொருமை (Identity)

ராபில்ஸ் **எ.** விச்சல் ஹாஸ் (Raples *vs.* Wichchel Haus) என்ற வழக்கில் 125 கட்டுகள் சூரத் பருத்தி ஏற்றுமதி செய் வதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒரே பெயரினையுடைய இரு கப்பல்கள் இருந்தன. ஒன்று அக்டோபரில் புறப்படுவதாகவும், மற்றொன்று டிசம்பரில் புறப்படுவதாகவும் இருந்தது. வாதி அக்டோபரில் கிளம்பும் கப்பலையும், பிரதிவாதி டிசம்பரில் கிளம்பும் கப்பலையும் தவறாகப் புரிந்துகொண்டார். அவர் களிடையே மனவொற்றுமை அல்லது கருத்தொற்றுமையே ஏற்படாததால் ஒப்பந்தம் செல்லாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

விலை (Price)

வெப்ஸ்டர் **எ.** சீசில் (Webster *vs.* Cecil) என்ற வழக்கில் சொத்து விற்பனைப் பத்திரத்தில் உரிமையாளர் நினைத்த 2250 பவுண்டிற்குப் பதிலாக 1250 பவுண்டு எனத் தவறுதலாக எழுதப் பட்டது. எனவே ஒப்பந்தம் மறுக்கப்பட்டுவிட்டது.

உரிமை (Title)

ஏற்கெனவே சொல்லப்பட்ட கூப்பர் **எ.** பிப்ஸ் என்ற வழக்கில் இக் கருத்துக் கூறப்பட்டுள்ளது. அவர்தாம் உரிமை யாளர் என்று தெரியாமல் ஒரு குட்டையில் மீன்பிடிக்கும் குத்தகை உரிமைக்காகச் செய்த ஒப்பந்தம் நீதிமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டது. எனவே உரிமை தெரிந்து ஒப்பந்தம் செய்தல் நலம்.

அளவு (Quantity)

ஒரு வழக்கின் பிரதிவாதி ராணுவக் கருவி செய்யும் ஒரு தொழிற்சாலைக்கு மூன்று துப்பாக்கிகள் அனுப்பும்படி தந்தி கொடுத்தார். தந்தியில் உள்ள ஆங்கில எழுத்துகள் 'Three' என்பதற்குப் பதிலாக 'The' என்று தவறுதலாகத் தந்தித்துறை கொடுத்தது. எனவே தொழிற்சாலையில் இருப்புள்ள 50 துப்பாக்கிகளையும் வாதி அனுப்பிவிட்டார். ஆனால் வழக்குத் தொடரப்பட்டது. பிரதிவாதி மூன்று துப்பாக்கிகளுக்கு உரிய தொகை கொடுத்தால் போதும், மீதித் துப்பாக்கிகளைத் திரும்ப

அனுப்பிவிட வேண்டும். காரணம் அளவு முறையில் ஏற்பட்ட தவற்றுக்குப் பிரதிவாதி பொறுப்பாளியல்லர் என நீதிமன்றம் கூறியது.

குணம் அல்லது தன்மை (Quality)

வாங்கும் பொருள்களால் ஏற்படும் தவறுகளால் சில இன்னல்கள் ஏற்படுகின்றன. முக்கிய விஷயங்களுக்காக ஒப்பந்தம் செய்வோர்களிடையே தவறு நேர்ந்தால்தான் அவ் வொப்பந்தம் பாதிக்கப்படும். அங்காடியில் பொருள்கள் வாங்கும் போது 'வாங்குவோர் கவனிக்க' (Caveat Emptor) என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும். அதாவது, ஒருவன் பொருளைச் சரியாகக் கவனிக்காமல் வாங்கிவிட்டுப் பின்னால் குறைகூறக் கூடாது. பொருள்கள் வாங்கும்போது கவனத்துடன் வாங்க வேண்டும்; தனக்குக் குறை வாராமல் காத்துக் கொள்ள வேண்டும். ஒரு தடவை பேரம்பேசிப் பொருள் வாங்கிவிட்டு அதனால் திருப்தி அடைந்துவிட்டுப் பின்னால் அது சரியில்லை என்று சொல்லக்கூடாது. பாதுகாப்பு ஒப்பந்தங்களைப் போலல் லாமல் அத்தகைய வியாபார நடவடிக்கை நன்னம்பிக்கையை (good faith) உண்டாக்கா. இருப்பினும் இவ் விதிக்குச் சில விதிவிலக்குகளும் காணப்படுகின்றன. அதாவது 'பொருள் வாங்குவோர் கவனிக்க' என்ற விதி கீழ்க்காணும் தருணங்களில் கடைப்பிடிக்க முடியாது : (1) விற்போரின் திறமையையும், தீர்ப்பையும் வாங்குவோர் சார்ந்திருக்கும்போது, (2) பழக்க வழக்கங்களுக்கு இவ் விதி ஒத்துவராதபோது, (3) பொருள்களின் தகுதி குறித்த நிபந்தனையைப் பின்பற்றும்போது, (4) பொருள் களை விவரித்து விற்பனை செய்யும்போது, (5) விற்பனை செய்வோர் மோசடி செய்யும்போது; ஆகிய தருணங்களில் பொருள் வாங்குவோர் ஒப்பந்தத்தைக் கைவிட்டுவிட்டுப் பொருள் வாங்கு வதற்கு மறுக்கலாம். 'விற்பனையாளர் செய்யும் வாக்குறுதியின் தன்மையைப் பொறுத்துத்தான் தவறு நிகழவேண்டும். ஒப்பந்தச் செய்தியின் தன்மைபற்றித் தவறு நிகழக்கூடாது' என்று ஆன்சன் கூறுகிறார். தன்மையின் தவற்றால் ஓர் ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டுமானால் நாம் கீழ்க்காணும் வினாக்களை எழுப்பிக்கொள்ள வேண்டும். அதாவது ஒருவர் தவறான வழியில் நடத்தப்பட்டாரா? (misled) அல்லது தவறாக உணரப்பட்டாரா? (Mistaken). தவறான வழியில் ஒருவர் நடந் திருந்தால் ஒப்பந்தத்தை அழித்துவிடலாம். தவறாக உணரப்பட் டிருந்தால் அது நடவாது. நன்னம்பிக்கையுடைய ஒப்பந்தங்கள் வேண்டிய விவரங்களை முழுவதும் திறந்து வெளிப்படையாகக்

காட்டக்கூடியதாக இருக்கவேண்டும். ஏனெனில் அங்ஙனம் வெளியிடாததால் ஒப்பந்தங்கள் அழிந்தொழிந்துவிடும்.

தவறாகத் திரித்துக்காட்டல்

(Misrepresentation)

ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும்போதோ அதற்கு முன்போ ஒருவரை அவ் வொப்பந்தத்தில் சேரும்படி செய்யும் கருத்துடன் நிகழ்கால அல்லது இறந்தகாலப் பொருண்மை குறித்துப் பொய்யான செய்தியால் அவரை மற்றொருவர் தூண்டி இசையவைத்த பொய்ம்மை, 'திரித்துக் காட்டல்' எனப்படும். இந்தப் பொய்ம்மை செயலாலோ, சொல்லாலோ, முக்கியக் கூற்றினை மறைப்பதாலோ இருக்கலாம் (ஆன்சனின் ஒப்பந்தச் சட்டம்). திரித்துக்காட்டல் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தம் செல்லுபடியாகாது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 18ஆவது பிரிவு திரித்துக்காட்டலை விளக்குகிறது. ஒப்பந்தம் தருணத்திலோ அல்லது அதற்கு முன்னரோ ஒப்பந்தச் செய்திபற்றி உரைப்பதுதான் எடுத்துக்கூறல் (Representation) எனப்படும். ஒருவர் தவறாக எடுத்துரைத்த திரித்துக்காட்டலை நன்னம்பிக்கையோடு ஒருவர் நம்பியிருக்க வேண்டும். அதனால் அவருக்கு நட்டம் ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறிருந்தால்தான் திரித்துக் காட்டல் என்ற அடிப்படையில் பரிகாரம் ஏற்படும். எடுத்துரைத்தல் ஒரு பொருளின் முக்கியமான உண்மையைப் பற்றியதாக இருக்கவேண்டும். மேலும் ஒப்பந்தத்தைத் தூண்டும் முக்கியச் சூழ்நிலையில் அது உரைக்கப்பட வேண்டும்.

பானர்மேன் எ. ஒயிட் (Bannerman *vs.* White) என்ற வழக்கில் 549 மூட்டை கசப்புள்ள செடிவகையை (hops) விற்பனை செய்வதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அச் செடி கந்தகம் கலந்த மண்ணில் பயிரானதாக இருக்கக்கூடாதென்பது நிபந்தனை. ஆனால் அச் செடி பயிரான நிலத்தில் ஒரு பகுதி கந்தகம் கலந்த பகுதியாகக் கண்டுபிடித்த பின்னர் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டது. கந்தகம் பயன்படுத்தவில்லை என்ற எடுத்துரை பொய்யாகிவிட்டது. ஷெப்பர்டு எ. கெயின் (Shepherd *vs.* Kain) என்ற வழக்கும் இது சம்பந்தமான வழக்குதான். இங்குத் தாமிரத்தால் கட்டப்பட்ட கப்பலை விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், பின்னர் அது தாமிரத்தால் கட்டப்படாமல் வேறு உலோகத்தால் கட்டப்பட்டது என்று தெரியவந்ததும் ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது. கப்பல் கம்பெனி நட்டஈடு

தரவேண்டும் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. காரணம் தவறான முறையில் திரித்துக் காட்டல் (Misrepresentation) இங்கு நடந்ததால் உத்தரவாத முறிவு ஏற்பட்டது. எனவே, ஒப்பந்தம் செல்லுபடியாகவில்லை. திரித்துக் கூறுவோன் தரும் செய்தியால் உத்தரவாதமாகாமல் எங்கு எவரும் நம்பும்படியான உண்மையின் எடுத்துரை ஏற்படுகிறதோ அங்குதான் அது ஏற்படுகிறது. எடுத்துரை வழங்குபவன் அது உண்மை என்றே நம்புவது அவனுக்கு அனுகூலமான செய்தி அன்று. மோகன்லால் எ. ஸ்ரீகங்காஜி காட்டன் மில்ஸ் கம்பெனி (Mohanlal *vs.* Sri Gangaji Cotton Mills Co.) என்ற வழக்கில் சந்திரன் என்பவர் கம்பெனியின் இயக்குநர் என்று கம்பெனியின் தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தத் தகவலை நம்பி, பரதன் கம்பெனியில் பங்கு வாங்கினார். ஆனால் சந்திரன் இயக்குநராக ஆகவில்லை. அப்படி இயக்குநராக அவரது இசைவு தரவில்லை என்று பின்னர்த் தெரியவந்தது. ஆனால், அவர் ஒத்துக்கொள்வார் என்ற நம்பிக்கையில் அத் தகவலைக் கம்பெனி வெளியிட்டு விட்டது இது. ஒரு திரித்துக் காட்டல் எனத் தீர்மானிக்கப் பட்டது. ஆனால் இது ஒரு தீங்கற்ற திரித்துக்காட்டலாகும். இயக்குநர் குற்றவாளியல்லர். உடன்பாடு செய்துள்ள இருவரில் ஒருவர் உடன்பாட்டுப் பொருள்பற்றித் தவறு செய்தால் பொய்க் கூற்று அங்கே எழுந்திடும். ஓசானிக் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி எ. சுந்தரதாஸ் (Oceanic Steam Navigation Co. *vs.* Sunderdass) என்ற வழக்கில் ஒரு கப்பலின் எடைத் தொடர்பான திரித்துக்காட்டல் கூறப்பட்டது. அந்தக் கப்பலின் உண்மையான எடை 3045 டன். ஆனால் 2800 டன் எனக் கூறப்பட்டது. அந்த நபர் குறைவான டன் அளவுள்ள கப்பலை விரும்பியதால் இக் கப்பலை வாங்க மறுத்துவிட்டார். அவருடைய முக்கியக் கருத்து குறைந்த பளுவாக இருப்பதால் அவர் ஒப்பந்தத்தை மறுத்தது சரியென நீதிமன்றமும் தீர்ப்புக் கூறியது.

கூட்டுப் பங்குக் கம்பெனியில் தகவலறிக்கையில் தவறான கூற்றுகள் கூறப்பட்டிருந்தால் ஒப்பந்தங்களைப் பங்குதாரர்கள் ரத்துச் செய்துவிடலாம். தகவலறிக்கையில் கூறப்பட்டுள்ளதை நம்பித்தான் பங்குதாரர்கள் விண்ணப்பம் செய்த பின்னர்ப் பங்குகள் அவர்கட்கு வழங்கப்படுகின்றன. எனவே, தகவலறிக்கையில் தவறான கூற்றுகள் காணப்பட்டால் பங்குதாரர்கள் ஒப்பந்தங்களை ரத்துச் செய்துவிடலாம் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. டெரி எ. பீக் (Derry *vs.* Peek) என்ற வழக்கில் கோவேறு கழுதைகளால் இழுத்துச் செல்லப்பட்ட ஒரு டிராம் (Tram) கம்பெனி தாங்கள் நீராவிப் பொறியைப் பயன்படுத்த

வாணிகத்துறை வாரியம் (Board of Trade) அனுமதி அளித்து விட்டதெனத் தகவலறிக்கையில் வெளியிட்டார்கள். இத் தகவலை நம்பி ஏராளமான பேர்கள் பங்கு வாங்கினார்கள். பிறகு வாணிகத்துறை வாரியம் நீராவி பயன்படுத்த அனுமதி கொடுக்க மறுத்துவிட்டது. எனவே, பங்குதாரர்கள் ஒப்பந்த முறிவு கோரி வழக்குத் தொடுத்ததில் அவர்கள் செய்தது சரி எனத் தீர்ப்புக் கூறியது. எனினும், இயக்குநர்கள் இவற்றிற்குப் பொறுப்பாளி அல்லர். பீக் எ. கர்னே (Peek *vs.* Gurney) என்ற வழக்கில் ஒரு கம்பெனி வெளியிட்ட தகவலறிக்கையில் அக் கம்பெனி வகை உள்ள (Solvent) கம்பெனியாகக் கருதப்பட்டது. அதை நம்பிப் பல பேர்கள் பங்கு வாங்கினார்கள். கம்பெனி ஒரு முக்கியமான கணக்குப் புத்தகத்தை மறைத்துவிட்டு அது பற்றிய விவரத்தைச் சொல்லத் தவறிவிட்டது. மேலும், உண்மையிலேயே கம்பெனி நிதி விஷயத்தில் மோசமாக இருந்தது. எனவே, பங்குதாரர்கள் தங்கள் ஒப்பந்தங்களை ரத்துச்செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியது. காரணம் முக்கிய விவரங்கள் அடங்கிய ஏடுகளை வெளிக்காட்டாதது திரித்துக்காட்டலாகும் என்று நீதிமன்றம் கருதியது. இது போலவே ஸ்மித் எ. ரீஸ் ரிவர் வேலி கம்பெனி (Smith *vs.* Rees River Valley Co.) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வெள்ளித் தாதுப்பொருள் கிடைப்பதாக இயக்குநர் தவறாகத் தகவலறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவ்வாறு அப் பகுதியில் வெள்ளித் தாதுப்பொருள் இல்லையெனத் தெரிய வந்தது. சரியான விவரத்தை ஆய்ந்து பார்க்காமல் கவனக் குறைவாக விடுத்த இக் கூற்றைத் திரித்துக் காட்டலென நீதி மன்றம் கருதி வழக்கை வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு வழங்கியது.

மோசடி

(Fraud)

வேண்டுமென்றே கூறும் பொய்க்கூற்றுதான் மோசடி. மேலும் அது வஞ்சனையோடு கூறும் பொய்க்கூற்று. ஏமாற்றும் நோக்கத்தோடு, தப்பான கூற்றுக் கூறுவதுதான் மோசடி. மோசடியில் ஒரு வழக்குப் போடவேண்டுமென்றால் அங்குக் குற்ற நோக்கமிருக்க வேண்டும். குற்றமில்லாத பொய்க்கூற்றிற்கும் மோசடிக்கும் வேறுபாடு சில உண்டு. ஒப்பந்தம் செய்யும் மற்ற நபரின் இசைவு பெறும்பொருட்டு உண்மை என்ன என்பது

தெரியாமல் சொல்லும் கூற்றால் அவ் வொப்பந்தம் மோசடியாக மாறிவிடும். இதேபோல் ஏமாற்றும் நோக்கத்தோடு அது பொய்யென்று தெரிந்து கூறும் கூற்றும் மோசடியாகும். ஒருவர்மீது மோசடியைச் சாட்டும்போது உண்மையை நன்றாகக் கவனத்துடன் அலசிப் பார்த்துதான் காட்டவேண்டும்.

ஒப்பந்தச் சட்டத்தின் 17ஆவது பிரிவு, மோசடி உண்டாக்கக் கூடிய பல செயல்களை விளக்குகிறது. அவையாவன: வேண்டு மென்றே பொய்க்கூற்றுக் கூறுவது; உண்மை என்னவென்று தெரிந்ததும் வேண்டுமென்றே அதை மறைப்பது, அல்லது பொய்யானதை உண்மையென்றே நம்பிவிடுவது; சொன்ன சொல் காப்பாற்றக் கூடாதென்றே வாக்குறுதி வழங்குவது; சட்டப்படி வெளியிடவேண்டிய முக்கிய விவரங்களை வெளி யிடாதது; ஏமாற்றக்கூடிய ஏனைய செயல். மேற்கூறிய யாவும் மோசடியின் பாற்பட்டதாகும். ஒப்பந்தம் செய்பவரோ அல்லது அவருடைய பதிலாளோ மோசடி செய்யலாம். பதிலாள் செய்யும் மோசடி முதலாளியைப் பாதிக்கும். சில நேரங்களில் முதலாளியின் அந்தரங்க அனுமதி பெற்று மோசடி செய்வதுண்டு. மௌனமாக இருப்பது மோசடி அன்று; அம் மௌனம் இறுதியில் பேசக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தினால் அது மோசடியாகும். அவ்வாறு மௌனமாக இருந்தவர் பேசித் தீரவேண்டிய கடமை யுடையவராவார். உதாரணமாக, இளங்கோ தன்னுடைய கடிகாரத்தில் குறையிருப்பது தெரிந்தும் சாத்தனிடம் விற்கிறான். இது மோசடி அன்று. காரணம் தன் பொருளின் குறையைச் சொல்லவேண்டிய கடமை இளங்கோவிற்கு இல்லை. ஆனால், இளங்கோவின் திறமையை நம்பிச் சாத்தன் அதை வாங்கி யிருந்தால் அப்பொழுது இளங்கோ அக் குறையைச் சாத்தனிடம் சொல்லியிருக்க வேண்டிய கடப்பாடுண்டு. அவ்வாறு சொல் லாமல் மௌனமாக இருந்தால் அது மோசடியையொத்த செயலாகும்.

மேலும், உண்மையை மறைத்துப் பொய்மையைக் குறித்தல் (Suppressio veri suggestio falsi) அதாவது, ஓர் ஒப்பந்தத்தில் ஈடுபட ஒருவரைத் தவறாக ஊக்குவித்தலே மோசடிதான். ராயல் மெயில் ஸ்டீம் பாக்கெட் கம்பெனியின் (Royal Mail Steam Packet Company) இயக்குநர் கில்சன்ந் பிரபு ஒவ்வோர் ஆண்டு இலாபத்திலிருந்தும் பங்காதாயம் பங்குதாரர்களுக்கு ஒழுங்காகத் தரப்படுகிறது என்று கம்பெனியின் தகவலறிக்கையில் விளம்பரப் படுத்தியுள்ளார். ஆனால், உண்மையில் போர்க்கால அசா தாரணச் சூழ்நிலையில் சம்பாதித்த இலாபத்திலிருந்து பங்

காதாயம் கொடுக்கப்பட்டது. தகவலறிக்கை தவறான விவரத்தைக் கொண்டுள்ளதால் அஃது ஒரு மோசடியாகும். 'உண்மையை மறைத்துக் கூறும் எல்லாப் பொய்க் கூற்றுகளும் ஒரு பகுதியோ அல்லது முழுதுமான உண்மையைச் சொல்லாதிருத்தலும், சொல்லாதிருத்தலைத் தவறாகச் சொல்லுதலும் மோசடியாகும்' என்று பீக் எ. கர்னே (Peek *vs.* Curney) என்ற வழக்கில் கர்னே பிரபு விளக்கியுள்ளார். எனவே, மோசடியின் பலன்கள் யாவை எனக் காண்போம். மோசடியால் ஒப்பந்தம் நிறைவேறாமல் தடுக்கலாம். சாதாரண நிலையில் ஒப்பந்தம் செய்பவர்களை ஒப்பந்தம் நிறைவேற வலியுறுத்தலாம்; வழக்குத் தொடுத்து நட்டஈடு கோரலாம். மோசடி ஒரு குற்றமானதால் குற்றச்சாட்டுகள் சுமத்தலாம். ஒரு குறிப்பிட்ட செயலுக்காக வழக்குத் தொடரலாம். ஒப்பந்தம் செய்தவரின் இசைவை மோசடிமூலம் பெற்றிருந்தால் அவர் விருப்பம் பெற்று ஒப்பந்தத்தைச் செல்லுபடியாகாமல் செய்யலாம்.

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து திரித்துக்காட்டலுக்கும் மோசடிக்கும் வேறுபாடு உண்டெனத் தெரியவருகிறது. அவ் வேறுபாட்டைக் காண்போம் :

மோசடியில் உண்மையென்று தெரிந்தும் திரித்துக்காட்டல் வழங்கப்படுகிறது. அல்லது அதனுடைய உண்மையை நம்பாமல் கூற்றுக் கூறப்படுகிறது. ஆனால், திரித்துக்காட்டலில் ஏமாற்றும் எண்ணமே இல்லை. இரண்டாவதாக, மோசடி ஒரு சமூகக் குற்றமானதால் ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவும், நஷ்டஈடு கோரவும் வழக்குத் தொடுக்கலாம். ஆனால், திரித்துக்காட்டலில் ஒப்பந்தத்தை மட்டும் ரத்துச் செய்யலாம்; நஷ்டஈடு கோர முடியாது. மோசடியில் குற்றம் புரிந்தோர் உண்மையைக் கண்டு பிடிக்கத் தனி வழி இருந்தும் கண்டுபிடிக்க ஒருவன் தவறி விட்டான் எனச் சொல்வது பொருந்தாது. ஏனெனில், அவன் எப்பொழுதும் தன் உரிமைகளை வலியுறுத்தலாம். ஆனால், திரித்துக்காட்டலில் ஒருவர் தம்முடைய சாதாரணத் திறமையால் உண்மையைக் கண்டுபிடிக்க வழியிருந்தும் கண்டு பிடிக்கத் தவறினால் ஒப்பந்தத்தைத் தவிர்க்க முடியாது. இறுதியாக மோசடி செய்தவன்மீது சமூக-குற்றப் பிரிவுகள் இரண்டு வகையிலும் வழக்குத் தொடரலாம். ஆனால் திரித்துக் காட்டியவர்மீது சமூகப் பிரிவு வழக்கு மட்டும்தான் தொடரலாம். ஒப்பந்தத்திற்குக் கெடுதல் அவரால் ஏற்பட்டாலொழிய நஷ்ட ஈடு கோரமுடியாது.

தகாநிலை வற்புறுத்தம்
(Undue Influence)

தகாத வற்புறுத்தத்தைப் பயன்படுத்தி ஒருவன் ஓர் உடன் பாட்டிற்கு மற்றொருவனை இணங்கவைத்தால் அந்த உடன்பாடு செல்லாது. அதாவது, யார்மீது அந்தச் செல்வாக்குப் பயன்படுத்தப்படுகிறதோ அவர் அவ் வுடன்பாட்டை ஏற்க வேண்டா. அவ்விதம் அவ் வுடன்பாட்டை ரத்துச் செய்வதற்குமுன் சட்டத்தின் 19ஆம் பிரிவில் சொல்லியபடி சில சூழ்நிலைகள் தோன்றுகின்றன. அதாவது, ஒருவர் மற்றொருவர் மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும். தம் தகுதியை அல்லது அதிகாரத்தைப் பயன்படுத்தி மற்றொருவர்மீது தகாத வழியில் வற்புறுத்தம் செய்யவேண்டும். அவருடைய செயல் தகாத முறையில் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் இருக்க வேண்டும். ஒருவர் மற்றொருவர்மீது ஆதிக்கம் செலுத்துகிறார் என்றால் அவர் உண்மையாகவும் அல்லது புறத் தோற்றத்திலும் அவர்மீது அதிகாரம் செலுத்துவோராகத் திகழவேண்டும். அத்தகைய சூழ்நிலையில் ஏற்படும் இசைவு சுயேச்சையான இசைவு அன்று. வேறு ஒருவருடைய மனநிலை சரியில்லாத போதும் அல்லது அவருடைய பலஹீனத்தைப் பயன்படுத்தியும் தமக்குச் சாதகமாக ஒருவர் செய்யும் ஒப்பந்தம் இந்த வகையைச் சார்ந்ததாகும்.

உதாரணமாக ஆதவன் நோய்வாய்ப்பட்டு, மிகவும் இளைத்துவிட்டார் என வைத்துக்கொள்வோம். பகலவன் தம்மை ஒரு மருத்துவர் எனச் சொல்லி ஆதவன்மீது ஆதிக்கம் செலுத்தி அவருக்கு மருத்துவம் செய்ததற்காக ஒரு தொகை கேட்கிறார். ஆதவனும் அதற்கு ஒத்துக்கொள்கிறார் என்றால் இங்கு, ஆதவன்மீது பகலவன் தகாத வற்புறுத்தலைச் செலுத்துகிறார் என்று பொருள். இதேபோல் ஒருவர் கருத்துமீது மற்றொருவர் ஆதிக்கம் செலுத்தும் உரிமையுடைய தொடர்புகளும் நிகழ் கின்றன. உ-ம் : பெற்றோரும் குழந்தையும், பாதுகாவலரும் மைனரும், மருத்துவரும் நோயாளியும், குருவும் சீடரும், வழக் கறிஞரும் கட்சிக்காரரும், தர்மகர்த்தாவும் பயனடைபவரும் ஆக அனைவரும் தகாத முறையில் வற்புறுத்தலைப் பயன்படுத்தி ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால் அது தகாத வற்புறுத்தலால் வந்தது என நிரூபிக்கும் பொறுப்பு, அம் முறையில் ஆதிக்கம் செலுத்தியவரைச் சாராது; பாதிக்கப்பட்டவரைத்தான் சாரும். சிறப்பான, தொடர்பு இருந்தால் ஒழிய, மற்ற வகைகளில்

குற்றம் சாட்டுபவர்தாம், தகாத ஆதிக்கம் ஏற்பட்டதை நிரூபிக்க வேண்டும்.

ஆல்கார்டு எ. ஸ்கின்னர் (Allcard *vs.* Skinner) என்ற வழக்கில் குமாரி ஆல்கார்டு கன்னிமடத்தில் சேர்ந்து கன்னித் துறவியாக ஆகிவிட்டாள். தன்னுடைய சொத்துகளைக் கன்னி மடத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டாள். பின்னர்க் கன்னிமடத்தைவிட்டு வெளியேறித் தன் சொத்துகளைத் திரும்பக்கேட்டு வழக்குத் தொடுத்தாள். மதத்தலைவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு அவரின் தகாத செல்வாக்கால் தான் பொருளை யெல்லாம் கொடுத்துவிட்டதாக அவள் வழக்கில் கூறினாள். ஆனால், அவளுக்கு நிவாரணம் அளிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. காரணம் 'அவள் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர்தான் கன்னிமடத்தைவிட்டு வெளியேறினாள். மேலும், அவள் உண்மையான அறிவுரையைத் தன்னிச்சையாகப் பயன்படுத்தவில்லை. மேலும், ஒருவர் அதிகார நிலையில் உள்ள தால் மட்டும் அவர் மற்றொருவரைத் தவறாக ஆதிக்கத்திற்கு உட்படச் செய்தார் என்று கூறுவது சரி இல்லை. எல்லோரும் தங்கள் அதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்துவார்கள் எனச் சொல்ல முடியாது' என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. நம் நாட்டில் கோஷாபர்தா ஹசின் பெண்கள் ஒப்பந்த முறிவிற்கு இத்தகைய பாதுகாப்பைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

வலுக்கட்டாயம்
(Coercion)

ஓர் உடன்பாட்டில் ஒருவர் சேரும்படி செய்யும் கருத்துடன் இந்தியக் குற்றச்சட்டத்தில் விலக்கப்பட்டுள்ள செயல் எதையும் செய்தல், செய்யப்போவதாக அச்சுறுத்தல், மற்றவரது சொத்தை அவருக்குப் பாதகம் விளைக்கும் வகையில் சட்ட முரணாக நிறுத்திவைத்தல், நிறுத்திவைப்பதாக அச்சுறுத்தல் இவை வலுக்கட்டாயம் ஆகும்(இந்திய ஒப்பந்தச் சட்டம் 15ஆம் பிரிவு). ஒப்பந்தம் செய்வதற்கு ஒருவர் யாரையாவது வற்புறுத்தினாலோ, ஒருவர் கட்டாயப்படுத்தினாலோ, பய முறுத்தினாலோ அவ் வொப்பந்தம் செல்லாது. அங்ஙனம் பெற்ற அச்சுறுத்து இசைவு தெரியக்கூடியதே யொழிய உண்மையானதன்று. இதற்கு ஆங்கிலச் சட்டத்தில் 'டுரஸ்' (Duress) அதாவது, உடற்கட்டாயம் என்று பெயருண்டு. வலுக்கட்டாய உடன்பாடு உடற்கட்டாயத்தால்

பெறப்பட்டது அல்லது கொடுக்கப்பட்டது என்று பொருள். ஆனால், இங்கிலாந்தைவிட நம் நாட்டுச் சட்டம் விரிவான கருத்துடையதாகக் காணப்படுகிறது. வலுக்கட்டாயம் ஏற்படும் இடத்தில் இந்தியக் குற்றச் சட்டம் அமலில் இருக்கிறதா இல்லையாவென்று பார்க்கவேண்டிய அவசியமில்லை. குற்றச் சட்டத்தின்கீழ் எவையெல்லாம் கைவிடப்படவேண்டியவை களோ அவைகளை இந்தியக் குற்றச் சட்டம் கூறுகிறது. ஒரு நபரைப்பற்றியோ அல்லது அவரின் சொத்துப்பற்றியோ பயமுறுத்துதல் ஏற்படலாம். வலுக்கட்டாயமாக ஓர் உடன் பாட்டிற்கு இசைவதற்குக் குற்றம் புரியலாம். அல்லது குற்றம் செய்யப்போவதாகப் பயமுறுத்தலாம். ஒருவர் மற்றொருவருக்கோ அவர்தம் சொத்துக்கோ தீமைபுரியலாம். அல்லது, அவ்வாறு தீமை செய்யப் போவதாகப் பயமுறுத்தலாம். இவ்விதம் பயமுறுத்தி ஏற்படும் ஒப்பந்தம் நீடித்து நிற்காது. மேலும், அது ஒரு தன்னிச்சையான ஒப்பந்தமாக ஆகாது.

அம்மி ராசு எ. சேஷம்மா(Ammi Razu *vs.* Seshamma) என்ற வழக்கில் ஒரு கணவன், தம் மனைவியும் தம் மகனும் அவர்கள் மீதுள்ள சொத்துரிமையை தமக்கு மாற்றி விடுதலைப் பத்திரம் அளிக்காவிட்டால் தாம் தற்கொலை செய்துகொள்ளப்போவதாக அவர்களைப் பயமுறுத்தினார். உண்மையிலே அவர் அவ்வாறு தற்கொலை செய்துகொண்டு விடுவாரோ என அஞ்சிய அவர் மகனும் மனைவியும் அவர் வேண்டியபடி சொத்துகளை அவர் பெயருக்கு மாற்றித் தந்தார்கள். பின்னர் அவர்கள் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தபோது அவர்களுக்கு அனுகூல மாகத் தீர்ப்புக் கூறப்பட்டது. காரணம் மனைவியும் மகனும் உடன்பாட்டிற்குச் சுயேச்சையாக ஒத்துக்கொள்ளவில்லை; கட்டாயப்படுத்தப்பட்டார்கள். எனவே, அவர்கள் செய்த சொத்துரிமை மாற்றம் செல்லாதென நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. மேலும் தற்கொலை செய்ய முயல்வது இந்தியக் குற்றப் பிரிவுச் சட்டத்தின்கீழ்க் குற்றமாகும். ஆனால், இங்கிலாந்தில் தற்கொலை முயற்சி குற்றமன்று. கூப்பர் எ. க்ரேன் (Cooper *vs.* Crane) என்ற வழக்கில்கூடத் தற்கொலை முயற்சி குற்றமன்று.எனவே அது வலுக்கட்டாயச் செயல் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

இதேபோல் ரங்கநாயகம்மா எ. ஆழ்வார் செட்டி (Ranganaya kamma *vs.* Alwar Chetty) என்ற வழக்கும் இக் கருத்தை வலுப்படுத்துகிறது. பதின்மூன்று வயதுடைய இளம் விதவை ஒருத்தி ஒரு பையனைத் தன் கணவன் இறந்த அத்

தருணத்திலேயே சுவீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என வற்புறுத்தப்பட்டாள். அவ்வாறு இசையாவிட்டால் பிணத்தை அப்புறப்படுத்தி ஈமக்காரியங்கள் செய்யக்கூட அனுமதிக்க மாட்டோம் என உறவினர்கள் பயமுறுத்தினார்கள். அச் சூழலில் அவள் அதற்கு இணங்குவதைத் தவிர வேறு வழி தெரியாததால் அதற்குச் சம்மதித்தாள். கொஞ்ச நாள்கள் சென்றபின் அவள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தாள். நீதிமன்றமும் அவள் உடன்பாடு எதேச்சையாக வராததால் அச் சுவீகாரம் செல்லாதெனத் தீர்ப்புக் கூறியது.

வலுக்கட்டாயத்துக்கும் (Coercion) உடற் கட்டாயத்துக்கும் (Duress) ஒரே பொருள்தான் என்றாலும், சில வேறுபாடுகள் உள்ளன. முதலாவதாக உடற்கட்டாயம் என்பது ஒருவருடைய வாழ்க்கைமீதோ, ஒரு குடும்பத்தின் மற்ற எல்லா அங்கத்தினரின் இசைவு பெற்று உள்ள ஒரு சுதந்தர மனிதன் மீதோ ஏற்படுத்தலாம். ஆனால், அவன் சொத்துமீது ஏற்படுத்த இயலாது. அதற்கு மாறாக வலுக்கட்டாயம் யார்மீதாவது திணிக்கலாம். அந்நியர்களையும் அவர்தம் சொத்துகளையும் கூடக் கட்டாயப்படுத்தலாம். இரண்டாவதாக, உடற்கட்டாயம் ஒப்பந்தம் செய்வோரிடமிருந்தோ அவனுடைய பதிலாளிடமிருந்தோ ஏற்படவேண்டும். ஆனால், வலுக்கட்டாயம் யாரிடமிருந்தும் ஏற்படலாம். மூன்றாவதாக, உடற்கட்டாயம் முரட்டுத்தனத்தின் துன்பத்தில் முடியும். வலுக்கட்டாயத்தில் முரட்டுத்தனத்தின் துன்பம் இல்லை. இறுதியாக உடற்கட்டாயம் சாதாரண மன உறுதியுடைய ஒரு மனிதனைப் பாதிக்கும். வலுக்கட்டாயம் அவ்வாறில்லை.

7. சட்ட விரோதமான உடன்பாடுகள்

(Unlawful Agreements)

ஓர் உடன்பாடு வலியுறுத்துவதற்குமுன் சட்ட முறையான தாக இருக்கவேண்டும். அவ்வாறன்றிச் சட்டத்திற்குப் புறம் பாக இருந்தால் அதை வலியுறுத்த முடியாது. ஒரு மறுபயனோ அல்லது உடன்பாட்டின் நோக்கமோ சட்டவிரோதமாக இருந்தால் அங்கு வலியுறுத்திச் செயல்படும் ஒப்பந்தம் தோன்றாது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 23ஆவது பிரிவின் படி எவ்விதக் கைம்மாறும் அல்லது உடன்பாட்டின் நோக்கமும் சட்டத்தால் புறக்கணிக்கப்படுவதாக இருந்தாலோ, அல்லது மோசடியாகவோ அல்லது சட்டத்தின் விதிகளுக்கு முரணாகவோ அல்லது ஒருவரின் தனிப்பட்ட தன்மைக்கோ அல்லது அவர்தம் சொத்துக்கோ இழுக்கு ஏற்படுவதாக இருந்தாலோ, அல்லது சமூகக் கோட்பாட்டிற்கு முரணாக இருந்தாலோ அவைகள் சட்ட விரோதமாகத் திகழ்கின்றன. மேற்சொன்ன சட்ட விதிகளுக்குப் புறம்பாக உள்ளவை சட்ட விரோதமாகவும் செல்லுபடி யாகாமலும் போய்விடும். நேர்மைக்கும் ஒழுக்கத்திற்கும் ஊறு செய்யும் எல்லா உடன்பாடுகளும் தவிர்க்கப்படவேண்டும் என்று 23ஆம் பிரிவு கூறுகிறது. செல்லாத ஒப்பந்தத்திற்கும் சட்ட விரோத ஒப்பந்தத்திற்கும் வேறுபாடு உண்டு. முதற்கண் கூறியது ஆதிமுதலிலிருந்தே செல்லுபடியாகாததால் அதை எப்பொழுதும் அமலுக்குக் கொண்டுவர முடியாது. பின்னால் கூறப்பட்டதோ முக்கிய அலுவல் மட்டுமல்லாமல் அதைச் சார்ந்த அலுவல்களும் செல்லாமல் போய்விடுகின்றன. உதாரணமாக ஆறுமுகம் பாஸ்கரனிடமிருந்து ஒரு துப்பாக்கி வாங்குவதற்காக ரூ. 500 கடன் வாங்கலாம். ஆனால், அதைத் திரும்பக் கொடுத்தாக வேண்டும். ஒருகால் சந்திரனைச் சுடுவதற்காக அவன் துப்பாக்கி வாங்கினால் அல்லது, அந் நோக்கம் அவனுக்குத் தெரிந்திருந்தால் பாஸ்கரன் பணத்தைத் திரும்பப் பெற இயலாது. அதேபோல் சந்திரனைக் கொல்பவருக்குப் பரிசு உண்டு எனச் சேவியர் விளம்பரம் செய் திருக்கலாம். அப்பொழுது ஆறுமுகம் சேவியர்மீது வழக்குத் தொடர முடியாது. மேலும் சந்திரனைக் கொன்றுவிட்டுப் பரிசு

கேட்கவும் முடியாது. காரணம் இவையெல்லாம் சட்டத்தால் தடுக்கப்பட்ட சட்ட விரோதமான செயல்கள். உடன்பாட்டுச் சட்டம், பொதுச்சட்டம், கடமை பூர்வமான சட்டம் ஆகியவைகளுக்கு முரணாக உடன்பாடு சட்ட விரோதமானதாகும். ஓர் உடன்பாட்டைச் சட்டம் தடுப்பதற்குப் பல காரணங்கள் உள. தடைச்சட்டம் அமலில் இருந்தால் அதற்கு முரணான எந்த உடன்பாட்டையும் நல்லதாகக் கருத முடியாது. உதாரணமாக, அரசாங்கத்திடமிருந்து சுங்கவரி வசூலிக்கும் ஒப்பந்தத்தை ஒருவர் எடுத்து அதை வேறு ஒருவருக்கு மாற்றிவிட்டார். ஆனால், அவர் இவருக்குக் குத்தகைத் தொகை கொடுக்க வில்லை. சுங்கவரிச் சட்டம் இத்தகைய உள்குத்தகையைத் தடை செய்துள்ளது. இவ் விதிக்குப் புறம்பாக நடப்பவருக்கு அபராதமும் சொல்லப்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு குத்தகைப் பணத்தைக் கட்டுமாறு குத்தகை கொடுத்தோருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது. காரணம் சுங்கவரிச் சட்டத்தில் கூறப்பட்ட தடை, வருவாய் நோக்கத்தைக் கொண்டுதானே தவிர வேறு எதற்குமில்லை. மேலும் இங்கு ஒப்பந்தம் சட்ட விரோதமானதுமன்று. என்றாலும் அரசாங்கத்திற்கு முதற் குத்தகைதாரர் அபராதம் கட்டியே ஆகவேண்டும். இதேபோல் மதுபானத் தயாரிப்பு அனுமதி (Abkari Licence) வழங்குவதிலும் ஒப்பந்தத்தை மூன்றாம் நபருக்கு உள்குத்தகை விடுவது தடை செய்யப்பட்டுள்ளது. காரணம் இது பொதுமக்கள் ஒழுக்கத்தைப் பாதிப்பதாகும். இவ் வொப்பந்தத்தை வலியுறுத்தினால் சட்டத்தின் நோக்கமே தோற்றுவிடும்.

ஒப்பந்தச் சட்டத்தின் 30ஆவது பிரிவு சூதாட்டச் சட்டங்களைச் (Wagering Contracts) செல்லாதெனக் கூறுகிறது. எதிர்கால நிச்சயமற்ற நிகழ்ச்சி ஏற்பட்டாலோ அல்லது ஏற்படாமல் போனாலோ ஒரு குறிப்பிட்ட தொகையோ அல்லது அத் தொகைக்குப் பெறுமான பொருளோ செலுத்துவதற்கு அளிக்கும் வாக்குறுதிதான் சூதாட்ட ஒப்பந்தம். அதன் சிறப்புகளாவன :

(1) பணமோ அல்லது பணத்திற்குத் தகுந்த பொருளோ செலுத்துவதற்கு வாக்குறுதி அதில் இருக்க வேண்டும்.

(2) ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தாலோ அல்லது நிகழாமலிருந்தாலோ அதற்கு ஒரு நிபந்தனை இருக்க வேண்டும்.

(3) அந் நிகழ்ச்சியும் நிச்சயமானதாக இருக்கக் கூடாது. எதிர்கால நிகழ்ச்சி நிகழ்வதாலோ அல்லது நிகழாமலிருப்பதாலோ அதைப் பொறுத்து ஒருவர் வெற்றி கொள்ளவும்

பிறிதொருவர் தோல்வி அடையவும் சூதாட்ட ஒப்பந்தம் காரணமாகிறது. சூதாட்டக்காரர் செய்யும் விளையாட்டின் முடிவிற்காகவும், அல்லது அவர் விளைக்கும் நிச்சயமில்லா நிகழ்ச்சி நிகழ்வதாலும், சொன்ன அல்லது குறிப்பிட்ட தொகையை அடைவதற்கு அவர் வழக்குத்தொடரலாம். இதற்கு ஒரு விதிவிலக்குண்டு. அதாவது, குதிரைப் பந்தயத்தில் வெற்றி பெறுபவருக்கு ரூ. 500 பரிசு தரப்படும் என்று அறிவித்து அதற்காகப் பரிசு தொகையையும் நிறுவியிருந்தால் இது சூதாட்ட ஒப்பந்தம்போல் ஆகாது. சட்டத்தின் 30ஆவது பிரிவு லாட்டரியைத் தடை செய்துள்ளது. திறமையைப் பரிசோதிக்காமல் அதிஷ்டத்தை மட்டும் நம்பியுள்ளது லாட்டரி. பம்பாயில் சூதாட்ட ஒப்பந்தங்கள் சட்ட விரோதமானவை.

இதேபோல் **காப்புறுதி ஒப்பந்தங்கள்** (Insurance Contracts) நிபந்தனையுள்ள ஒப்பந்தங்களாகும். இவைகள் சூதாட்ட ஒப்பந்தங்களை ஒத்திருந்தாலும் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகக் கூடிய ஒப்பந்தங்கள். காப்புறுதி ஒப்பந்தங்களில் பாதுகாப்பு உரிமை அல்லது அக்கறை திகழ்தல் வேண்டும். மேலும் அவை நட்டஈடு தரும் ஒப்பந்தங்களாக விளங்குகின்றன. சூதாட்ட ஒப்பந்தங்களில் இத்தகைய பாதுகாப்பு உரிமை இருப்பதில்லை. பாதுகாப்பு ஒப்பந்தம் சமுதாயத்திற்கு நன்மை பயக்கிறது. ஆனால், சூதாட்ட ஒப்பந்தம் சமூகத்திற்குத் தீமை பயக்கின்றது. சீட்டு நிதி (Chit Fund) நடவடிக்கைகள் சூதாட்ட நடவடிக்கைகளிலிருந்து வேறுபடுகின்றன. ஏனெனில், சீட்டு நிதி நடவடிக்கைகளில் இலாபம் இருந்தாலும் நிச்சயமாக நட்டமில்லை. ஆனால், அதே சீட்டு நிதி லாட்டரியாக மாறினால் அது சட்ட விரோதமானது. வியாபார நடவடிக்கைகள் சூதாட்ட நடவடிக்கைகளாக மாறுமா அல்லது மாறாதா என்பது அவற்றின் தன்மையைப் பொறுத்தது. வியாபாரிகளின் நோக்கம் சரக்குக் கொடுத்துச் சரக்கு வாங்குவதாக இருந்தால் அவ் வொப்பந்தம் செல்லுபடியாகும். மாறாகக் கொள்ளை இலாப நோக்குடன் வியாபாரம் செய்தாலும், சூதாட்டமாக வியாபாரத்தை மாற்றி விலையேற்றத்தை உண்டுபண்ணினாலும் அவ் வொப்பந்தம் செல்லாது. அதேபோல் நடக்கமுடியாத செயலைச் செய்வதற்கு ஒப்பந்தம் செய்தாலும் அதுவும் செல்லாது. பொருள் உறுதியில்லாத உடன்பாடுகளும் செல்லாதன.

தீய ஒழுக்க (ஒழுக்க முரண்) உடன்பாடுகள் (Immoral Agreements)

நல்லொழுக்கங்களுக்கெதிரான உடன்பாடுகள் சட்ட விரோதமானவை. நீதிமன்றம் அவைகளை ஏலா. பியர்ஸ் **எ.** புரூக்ஸ்

(Pears *vs.* Brooks) என்ற வழக்கில் பொதுமகள் வீட்டிற்கு அவள் வாடிக்கைக்காரர் ஒருவரை வண்டியில் ஏற்றி வந்ததற்கு வண்டிச் சத்தம் தராததால் வண்டிக்காரர் அப்போது அவள்மீது வழக்குப் போட்டார். ஒழுக்கக் குறைவான இச் செயல் தெரிந்தும் வண்டிக்காரர் இதற்கு உடன்பட்டதால் அவர் வழக்கை நீதி மன்றம் தள்ளிவிட்டது. வண்டிச் சத்தம் அவருக்குக் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் பிரிவதற்குக் கணவன் மனைவியிடையே ஏற்படும் உடன்பாடு நல்லொழுக்கத்திற்கு முரணானதால் செல்லாது.

கைம்மாறோ அல்லது உடன்பாட்டின் உட்பொருளோ ஒரு பகுதி மட்டும் சட்ட விரோதமாக இருப்பின் அவைகளுக்கெனச் சில விதிகள் காணப்படுகின்றன:

(1) பல நோக்கங்களும், ஒரே ஒரு கைம்மாறு மட்டும் இருந்து அந் நோக்கங்களில் ஏதாவது ஒன்று சட்ட விரோதமாகக் காணப்பட்டால் உடன்பாடு முழுதும் செல்லாது (பிரிவு 24).

(2) பல கைம்மாறுகளும் ஒரே ஒரு நோக்கமும் இருந்து ஒரே ஒரு கைம்மாறு மட்டும் சட்ட விரோதமானால் உடன்பாடு முழுவதும் செல்லாது.

(3) ஓர் உடன்பாட்டிலிருந்து சட்டபூர்வமானதையும் சட்டவிரோதமானதையும் பிரிக்க முடியுமானால் சட்டபூர்வ மானதை வலியுறுத்தியும், சட்டவிரோதமானதைச் செல்லுபடி யாகாமலும் செய்யலாம் (பிரிவு 57).

(4) சட்டபூர்வமான-சட்டவிரோதமான வாக்குறுதிகளை மாறிமாறி அளிக்கும்போது, சட்டபூர்வமான வாக்குறுதியையே வலியுறுத்தவேண்டும். பொது ஒழுக்க நெறிக்கு முரணான உடன் பாடு (Agreement Opposed to Public Policy) பொதுமக்கள் கொள்கை என்ன என்பதைத் தெளிவாக விவரிக்க இயலாது. 'அஃது ஒருமுரட்டுக்குதிரை' என்று ஒரு நீதிபதி விவரித்துள்ளார். அத்தகைய உடன்பாடுகள் பொதுமக்கள் நலனைப் பெருமளவில் பாதிக்கும்; நாட்டு நன்மையைக் கெடுக்கும்; நீதி நிருவாகத்தில் தலையிட்டு அதையும் பாதிக்கும்; தனிப்பட்டோர் உரிமையைக் குலைக்கும். பொது அலுவலகப் பதவியை விற்றல் (Sale of Public Offices), நேர்மையற்ற செல்வாக்குகள் (Corrupt influences), வழக்குத் தொடர்தலை அடக்குதல், நீதிமன்றங்களின் அதிகார

வரம்பை ஒழித்துவிடுதல், எதிரி நாட்டோடு வாணிபஞ் செய்தல் போன்றவை அத்தகைய உடன்பாடுகளுக்கு உதாரணங்களாகும். வழக்கு வகையில் வெளியார் உதவிக்காகப் பேசப்படும் பங்கு பேரம், சட்டவிரோதமாக வழக்காடுபவர்களுக்கு உதவி செய்யுங்குற்றம் (Champerty and Maintenance), வணிகத் தடையீடு(Restraint of Trade)திருமணம் பெற்றோர் உரிமைகள், தனிப்பட்டோர் தனியுரிமை போன்ற உடன்பாடுகளில் நீதி மன்றம் அவ்வளவாக வலியுறுத்தல் செய்யாது காரணம் பொது மக்கள் கொள்கைக்கு அவை எதிரானவை.

பொதுப் பதவியை விற்றல் (Sale of Public Offices)

வேறு ஒருவருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்பொருட்டு அரசாங்க அலுவலர் ஒருவரை அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னரே ஓய்வுபெற ஊக்குவிக்கும் முனைவு சட்டவிரோதமானதாகும். இக் கைம்மாறுக்காக அவருக்குத் தரும் பணத்தை அவர் அவ்வாறு செய்யாவிடில் திரும்பப் பெற முடியாது. ஒருவருக்கு இலஞ்சமாகக் கொடுத்த பணத்தையும் அவ்வாறு தருவதற்காகத் தரப்பட்ட பணத்தையும் திரும்பப் பெறமுடியாது. ஓர் ஆங்கிலேய வழக்கில் டியூக் அல்லது மார்கியூஸ் என்ற பட்டம் கிடைக்கவில்லையென்றால், அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் காலாவதியாகிவிடும் என்று ஒருவர் வில் (Will) எழுதி வைத்து விட்டார். அத்தகைய உடன்பாடு பொது ஒழுக்கநெறிகளுக்குப் புறம்பானவை என்று நீதிமன்றம் கூறியது.

நீதிவிசாரணையைத் தடுப்பதற்கான உடன்பாடு இரண்டு விதத்தில் ஏற்படுகின்றன. வழக்குத் தொடர்தலை நீதி மன்றத்தில் தாக்கல் செய்யும்போதும், நீதிமன்ற அதிகார வரம்பை அழித்துவிடும்போதும் அவை ஏற்படுகின்றன. ஒருவர் தம் குற்றத்தைத் தமக்கு இலாபம் தரும் கருவியாக மாற்ற முடியாது. அருணன் ஒரு குற்றத்தைச் செய்தார். பகலவனுக்கு அது தெரியும். இருந்தாலும் ஏதோ கைம்மாறு கருதி அவர் அதை வெளியிடவில்லை. இது வழக்குத் தொடர்தலைத் தடை செய்கிறது. சிலர் ஒரு குறிப்பிட்ட தொகைக்காகத் தங்கள் வழக்கை மீட்டுக்கொள்வதும் உண்டு. ஒரு குற்றம் கலப்பில்லாமல் இருந்து உடன்பாடு பொது ஒழுக்கநெறிக்குப் புறம்பாக இருந்தால் அவ் வுடன்பாடு வலியுறுத்தப்படமாட்டாது. திவால், மோசடி, ஜாமீன் பொறுப்பிலிருந்து விடுபடுதல் போன்ற உடன்பாடுகளும் இவ்வகையைச் சார்ந்தவைகளேயாகும். பரிகாரம் கோரி நீதிமன்றம் செல்லமுடியாதபடி செய்துகொள்ளும் உடன்பாடுகளும் பொது ஒழுக்கநெறிக்கு எதிரானவையாகும். ஆனால்,

தற்பொழுது நீதிமன்றம் செல்லாமலேயே சமாதான முறையில் சர்ச்சைகளை நிறைவேற்றிக் கொள்ளும்படி செய்துள்ள உடன் பாடுகளும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. சட்டமுறைகளைத் தவறான வழியில் பயன்படுத்திய உடன்பாடுகள் சட்ட விரோத மானவை. டான் எ. கர்சன் (Dann *vs.* Curzon) என்ற வழக்கில் ஒரு கணவனும் மனைவியும் தங்களுக்குள் ஒருவரை முரட்டுத் தனமாகத் தாக்கி, அதனால் ஏற்படும் குற்றஞ்சாட்டும் வழக்கில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு உடன்பாடு செய்து கொண்டார்கள். காரணம் இதன்மூலம் அவர்கள் விளம்பரம் பெற்று அத் திரையரங்கத்திலே வேலைவாய்ப்பு ஏற்படலாம். அத்தகைய உடன்பாடு சட்டமுறைகளைத் தவறான வழியில் பயன்படுத்தப்பட்டதாகும் என நீதிமன்றம் அதனைத் தள்ளி விட்டது. சட்ட விரோதமான வழக்குத் தொடருபவருக்குச் செய்யும் உதவியும், அதற்காகப் பேசப்படும் பேரமும் 'பங்கு விழை வழக்குதவி' (Champerty and Maintenance) எனப்படும். ஒரு வழக்கில் அல்லது நடவடிக்கையில் வெற்றி பெற்றுச் சம்பந்தப்பட்ட நிலம் அல்லது சாமான்களைப் பெறும்போது அவற்றில் ஒரு பகுதியைத் தாம் அடைய வேண்டுமென்ற நிபந்தனையுடன் அவ் வழக்கை அல்லது நடவடிக்கையை வாதி அல்லது பிரதிவாதிக்காக மற்றொருவர் நடத்துதல் பங்குவிழை வழக்குதவியாகும். இங்கிலாந்தில் இது சட்ட விரோதமாகும். தயாள குணத்தோடு உதவும் வழக்குதவி செல்லுபடியாகும். ஆனால், இந்தியாவில் இவ் வேற்பாட்டை எடுத்துக் கொள்வதில்லை. நம் நாடு ஏழ்மையுடையதாக இருப்பதால் நியாயமாகத் தரும் பண உதவிகளைக்கூட ஒத்துக் கொள்வதில்லை. எப்படி இருப்பினும் தவறான எண்ணத் தோடும் மோசம் செய்யும் நோக்கத்தோடும் தரும் இத்தகைய உதவி சட்டவிரோதமாகும்.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி மைனரைத் தவிர மற்றவர் செய்துகொள்ளும் திருமணத்தைத் தடை செய்யும் ஒப்பந்தம் செல்லாதது. இந்தியாவில் திருமண ஒப்பந்தங்கள் மிகவும் சகஜம். பெரும்பாலும் இத் திருமணங்கள் பெற்றோர் களாலும் பாதுகாவலர்களாலும் நிச்சயிக்கப்படுகின்றன. பொதுவாக இந்திய நீதிமன்றங்கள் இத்தகைய ஒப்பந்தங்களை ஆதரிப்பதில்லை. ஆனால், இத் திருமண ஒப்பந்தங்களை ஏற்கும் தம்பதிகளின் பெற்றோர்களுக்கு வழங்கப்படும் பணம் பொதுமக்கள் கொள்கைக்கு முரணானதன்று. ஒரு நாடு மற்ற நாட்டோடு போரில் ஈடுபட்டிருக்கும்போது எல்லா ஒப்பந்தங்

களும் தள்ளி வைக்கப்படுகின்றன. ஆனால், அரசாங்கம் தனி அனுமதி வழங்கினால் அவ் வொப்பந்தங்களும் வலியுறுத்தப் படலாம்.

வணிகத் தடையீடு (Restraint of Trade)

பொதுமக்கள் கோட்பாட்டிற்குப் புறம்பாக இருப்பதால் வணிகத்தடையீட்டு ஒப்பந்தங்கள் செல்லுபடியாகா. ஒவ்வொரு மனிதனும் அவரவர் விருப்பப்படி சட்ட விரோதமில்லாத வியாபாரம் அல்லது தொழில் செய்யச் சுதந்தரமுண்டு. 27ஆவது பிரிவு, இத்தகைய உரிமையைத் தடைசெய்யும் உடன்பாட்டை ஒத்துக்கொள்ளவில்லை. நம் நாட்டின் சட்டத்தில் சில விதி விலக்குகள் சொல்லப்பட்டுள்ளன. கீழ்க்காண்பவைகளில் வணிகத் தடையீடு செல்லுபடியாகும்.

வாணிக நற்பெயர் விற்பனை (Sale of Goodwill)

ஒரு கூட்டு வாணிபத்தை விற்கும்பொழுது அதை வாங்குபவர் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அதே விதமான வியாபாரத்தை நடத்தும்வரை, விற்றவர் அத்தகைய வியாபாரத்தை நடத்தவில்லை என்று ஒத்துக்கொள்ள வேண்டும். வரையறுக்கப்படும் எல்லை நியாயமானதாக இருக்க வேண்டும்.

பிரம்மபுத்திரா டீ எஸ்டேட் எ. ஸ்கார்த் (Brahmaputra Tea Estate *vs.* Scarth) நாற்பது மைல் சுற்றளவிற்கு டீ விற்கும் வியாபாரம் ஐந்து வருடத்திற்கு நடத்தக்கூடாது என்ற உடன் பாட்டை நீதிமன்றம் செல்லாதெனத் தீர்ப்புக் கூறியது. காரணம் தடையீடு தகுந்த காரணத்துடன் இல்லை. வணிகத் தடை யீட்டிற்குத் தேவையான காரணங்களாவன :

(1) தடையீடு ஒரேவிதமான வியாபாரத்திற்குத்தான் விதிக்கவேண்டும்.

(2) ஒரு குறிப்பிட்ட உள்ளூர் எல்லையில்தான் இருக்க வேண்டும்.

(3) நியாயமானதாக இருக்கவேண்டும்.

(4) வாங்குவோரோ, அவருடைய பிரதிநிதிகளோ அதே விதமான வியாபாரம் தொடங்கும்வரை தடையீடு அமலிலிருக்க வேண்டும்.

இந்தியக் கூட்டு வாணிபச் சட்டத்தின் பிரிவு 11 (2)-ன்படி ஒரு கூட்டு நிறுவனத்தின் கூட்டாளி, அதில் கூட்டாளியாக இருக்கும்வரை அதே வியாபாரத்தைத் தொடங்குவதற்குத் தடை யீடு உண்டு. அதேபோல் 36 (2)ஆவது பிரிவின்படி கூட்டு வாணி பத்திலிருந்து விலகினாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அதே வியாபாரத்தை நடத்துவதில்லை என மற்றக் கூட்டாளியோடு உடன்பாடு செய்துகொள்ள வேண்டும். அதேபோல் 54ஆவது பிரிவின்படி கூட்டு வாணிபத்தில் தலைப்பை முன்கூட்டி, ஒரு கூட்டாளி மேற் சொன்ன வகைத் தடையீட்டிற்கு இசைவு தரலாம்.

தொழிலையும் பொருள்களின் விலையையும் ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் ஒன்றாக இணையும் வியாபாரச் சேர்க்கைகளான (Trade combination) பூல்ஸ் (Pools), கார்ட்டல்ஸ் (Cartels) போன்றவைகள் செல்லுபடியாகும். உடன்பாடுகள் உடன்பாடு செய்வோர்களின் நலங் கருதியே இவ் வியாபாரச் சேர்க்கைகள் நிகழ்வதால் அவை ஏற்றுக்கொள்ளப்படும். பிராசர் அண்டு கப்பெனி எ. பாம்பே ஐஸ் கம்பெனி (Froser and Company *vs.* Bombay Ice Company) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட குறைந்த விலையின்கீழ் ஐஸ் விற்பதில்லை என்ற உடன்பாடு ஏற்பட்டது. அமலாக்கப்பட்டும்விட்டது. எப்படியிருப்பினும் இத்தகைய வியாபாரச் சேர்க்கை பொதுமக்கள் கொள்கைக்கு முரணானவைதான். மேலும் அவை விற்பனை முற்றுரிமை (Monopoly) ஏற்படுத்துமானால் அது மிகவும் கெடுதல் உண்டாக்கி விடும். சேவை அல்லது தொண்டுசெய்ய ஏற்படும் ஒப்பந்தங் களின் எதிர்மறை நிபந்தனைகள் நியாயமானதாக இருந்தால் அவைகளை அனுமதிக்கலாம்.

மேற்சொன்னவைகளை விடுத்து ஏனைய தடையீடு தீமை பயக்கும். இங்கிலாந்தில் முதன்முதலில் இத்தகைய தடையீடு மொத்தமாகச் செல்லவே செல்லாது. பின்னர்ப் பகுதித் தடையீடு அவ்வளவாகத் தீமை புரிவதில்லை. முடிவாக இங்கிலாந்து நாட்டு நீதிமன்றங்கள் தற்பொழுது நியாயமான தடையீடுகளை ஏற்கின்றன.

நார்டன்பெல்ட் எ. மாக்சிம் நார்டன்பெல்ட் கம்பெனி Nordenfelt *vs.* Maxim Nordenfelt) என்ற வழக்கில் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஒருவர்-துப்பாக்கி, இன்னும் ராணுவ வெடி மருந்து போன்றவைகளைத் தயாரிப்பவர்-மேக்சிம் நார்டன் பெல்ட் கம்பெனிக்கு 200000 பவுண்டிற்கு வியாபாரத்தை விற்று

விட்டது. இன்னும் 25 ஆண்டுகளுக்குள் அவ் வியாபாரத்தைத் தொடங்கவில்லையென்றும், வாங்கியவரோடு போட்டிபோட வில்லையென்றும் வாக்குறுதி அளித்தது. உடன்பாட்டில் முறிவு ஏற்பட்டதால் வழக்குத் தொடரப்பட்டது. இது நியாயமான தடையீடு என்றும், அதை அமல்படுத்த வேண்டும் என்றும் பிரபுக்கள் சபை (House of Lords) தீர்ப்புக் கூறியது.

சட்டவிரோதமான உடன்பாடுகளை அமலாக்குதல் (Enforceability of Unlawful Agreements): சட்ட விரோதமான ஓர் உடன்பாட்டை அமலுக்குக் கொணர நீதிமன்றம் உதவாது. கெட்ட நடத்தையால் எந்தச் செயலும் உருவாகாது. 'தூய்மையான நீதியை எந்தக் கறைபடிந்த கரங்களும் தொடமுடியாது' என்று வில்மோட் என்ற அறிஞர் சொல்கிறார். ஓர் ஒப்பந்தம் செய்யும்பொழுது அ த னு டை ய சட்ட விரோதமான ஒழுங்கின்மை அதைச் செய்யும் நபர்களுக்கு முதலில் வெளிப்படையாகத் தோன்றினாலும் தோன்றும். அஃது உள்ளுக்கு மறைந்து பின்னர் வெளிப்பட்டாலும் படும். அது முன் விளைவாக இருந்தாலும் இருக்கலாம். அல்லது பின் விளைவாக இருந்தாலும் இருக்கலாம். உதாரணமாக நாட்டில் போர் அறிவித்தாலும், ஒரு சிறு அரசியல் சட்டம் நிறைவேற்றினாலும் இவ் விளைவு தோன்றும். இவைகளில் ஒப்பந்தம் அமலுக்கு வாராது. சில நேரங்களில் ஓர் உடன்பாட்டின் ஒரு பகுதி சட்ட பூர்வமாகக் காணப்படும். உதாரணமாகத் தானிய வியாபாரி தானியத்தை அரசாங்கக் கொள்முதல் மூலமாகவும் வாங்கலாம்; கடத்தல் மூலமாகவும் வாங்கலாம். இதுமாதிரி உள்ள உடன் பாட்டில் சட்டபூர்வமான, விரோதமான பகுதியை அதிலிருந்து பிரிப்பது கடினமானதால், முழு உடன்பாடும் சட்டவிரோதமாக மாறிவிடும். ஆனால், பொதுவாக நினைத்துப்பார்ப்பது என்ன வென்றால் எல்லாவகையிலும் ஒப்பந்தம் சட்டபூர்வமாக இருக்க வேண்டும் என்பதுதான். சட்டவிரோதமான உடன்பாட்டை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆனால், அது பொய்யான நிரூபணம் என்று பின்னர் விளங்கும்.

ஓர் ஒப்பந்தத்தில் இரு சாரார்களுமே குற்றஞ் செய்திருந்தால் நீதிமன்றம் இருவருக்குமே உதவி செய்வதில்லை; அது நடுநிலைமை வகிக்கிறது. இப் போக்கினால் ஒருசாரார் நன்மை அடைகிறார்கள். எப்பொழுதும் பிரதிவாதிக்கு இந் நன்மை கிட்டுவதால் நீதிமன்றம் அவரை ஆதரிக்கிறதுபோலத் தோன்றும். 'இருசாராரும் குற்றவாளிகளாக இருக்கும்போது

பிரதிவாதியின் நிலைமை நன்றாக உள்ளது' என்று சொல்லப்படுகிறது. ஆனால், இஃது இயற்கையாகத் தோன்றும் முடிவே தவிர, உண்மையில் நீதிமன்றம் சார்புடையதாக இருக்காது. இருப்பினும் இக் கொள்கைக்கும் கீழ்க்காணும் விதி விலக்குகள் இருக்கின்றன:

1. இருசாராரும் குற்றமுள்ளவர்களாக இல்லாமலிருந்தாலும் இருக்கலாம். இருசாராருக்கும் உள்ள தொடர்பு ஒருவர் இன்னொருவர்மீது ஆதிக்கம் செலுத்துவதாக இருந்து, அவ் வாதிக்கத்தைத் தம் நன்மைக்காகப் பயன்படுத்தலாம். அட்கின்சன் எ. பெல் (Atkinson *vs.* Bell) என்ற வழக்கில் இவ் வுண்மையைக் காணலாம்.

2. சட்ட விரோதமான காரியங்களைச் சாராமல் தம் செய்கைகளுக்கு ஒருவர் நல்ல காரணம் பெற்றிருக்கலாம். உதாரணமாக அருணன் என்பவர் தம் வீட்டை ஒரு கணிகைக்கு வாடகைக்கு விட்டிருக்கலாம். அது சட்ட விரோதமான நோக்கம் என்பது அவருக்கும் தெரிந்திருக்கலாம். பின்னர் வாடகை சரியாகக் கொடுக்காதபோது அவள்மீது வழக்குத் தொடர முடியாது. ஆனால், அவளை வீட்டைவிட்டு வெளியேற்றும் உரிமை அவருக்குண்டு. எனவே, அவர் வழக்குத் தொடுத்து அவளை வெளியேற்றிடலாம்.

3. எந்த இனத்தார் நலனைப் பாதுகாக்கச் சட்டம் சில உடன்பாடுகளை ஒத்துக்கொள்ளாமல் சட்டவிரோதமாக ஏற்றுக் கொண்டுள்ளதோ, அவ்வினத்தை வாதியும் சார்ந்திருக்கலாம்.

4. சட்டவிரோதமான உடன்பாட்டில் ஒருவர் ஈடுபட்டு, பின்னால் மிகவும் வருந்தித் திருந்தி அவ் வொப்பந்தம் நிறைவேறும் முன்னர் அதை ரத்து செய்துவிடுகிறார். டெய்லர் எ. பவர்ஸ் (Taylor *vs.* Bowers) என்ற வழக்கில் டெய்லர் தமக்குச் சொத்துகள் இல்லையென்று சொல்லிக்கொண்டு தம் கடன் கொடுத்தோர்களிடம் கடன் பைசல் திட்டம் முடியும்வரை தம் பொருள்களை வைத்திருக்கும்படி செய்துவிட்டார். உண்மையிலேயே கடன் பைசல் செய்யும் பங்குவீதம் நடைபெறவில்லை. டெய்லர் வெற்றியுடன் தம் பொருளைத் திருப்பித்தரச் சொல்லி வழக்குத் தொடந்தார்.

5. உண்மையிலேயே பிரதிவாதி, வாதிக்குக் கணக்குக் காட்டவேண்டியிருக்குமானால் அதாவது, முதலாளிக்குப் பதிலாள் கணக்குக் காட்டவேண்டும்.

மேற்கூறியவைகள் குற்றச் சமநிலை' என்னும் கோட்பாட்டிற்கு விதிவிலக்காகத் திகழ்கின்றன.

8. ஒப்பந்தம் தீர்த்தல்

(Discharge of Contract)

ஓர் ஒப்பந்தம் அஃது ஏற்படுத்திய கடமை முடிவுறும்பொழுது தான் தீர்க்கப்படும். அவ்வொப்பந்தம் கீழ்க்காணும் விதங்களில் தீர்க்கப்படலாம் :

1. இசைவினால் (By Consent).
2. ஒப்பந்த நிறைவேற்றத்தால் (By Performance of the Contract).
3. அளிப்புமுனைவு அல்லது முயன்று நிறைவேற்றுதலால் (By Tender attempted or Performance).
4. முறிவினால் (By Breach).
5. நிறைவேற்ற இயலாமையால் (By Impossibility of Performance).

1. இசைவினால் முடிவு (By Consent)

ஒப்பந்த நிறைவேற்றம் நிகழவில்லையென்றால், இசைவினால் அது முடிக்கப்படுகிறது. ஒப்பந்தத்தை அமலாக்கும் உரிமையை ஒருவன் இழந்துவிடுகிறான். இச் சூழ்நிலையில் அத்தகைய இசைவு உட்கிடையாகவோ வெளிப்படையாகவோ கொடுக்கப்பட்டிருக்கும். வெளிப்படையான இசைவு, ஒப்பந்தம் செய்யும்போது தரவேண்டும். ஆனந்தன் பாலாஜிக்குப் பணம் தரும்போது அவன் சந்திராவை மணந்துகொண்டால், அப் பணத்தைத் திரும்பத் தரவேண்டா என்று சொல்லியிருந்தார். பாலாஜி சந்திராவை மணந்தபோது ஒப்பந்தம் பாலாஜியின் இசைவால் முடிவாகிறது. ஹெட் எ. டட்டர் சால் (Head *vs.* Tatter Sal) என்ற வழக்கு உதாரணமாக விளங்கும். ஒருவர் ஒரு குதிரையை வாங்கும்போது வேட்டையாடுவதற்குத் தகுந்த பயிற்சியில்லை யென்றால் குதிரையைத் திரும்பக் கொடுத்து விடுவதாகக் கூறினார். பின்னால் குதிரைக்குப் போதிய பயிற்சி இல்லையென்பதால் அதைத் திரும்பக் கொடுத்துவிட்டுத் தம் பணத்தைக் கோரினார்.

ஒப்பந்தத்திற்குப்பின் தொடர்ந்து இசைவு கொடுப்பதும் உண்டு.

1. உரிமைவிடல் (Waiver).

2. ஒத்திசைவும் உளநிறைவும் (Accord and Satisfaction).

3. புத்தீடு (Novation).

4. சேர்க்கையும், முக்கிய மாறுதலும் (Merger and Materiai Alterations) போன்றவை ஒப்பந்தங்களுக்குப் பின்னர் ஏற் படுவதாகும்.

1. உரிமைவிடல் (Waiver): ஒப்பந்தஞ் செய்வோர் தங்கள் உரிமையை அறவே விட்டுவிட வேண்டும். அகிலா, பானுமதிக்கு ரூ. 300 தரவேண்டும். பணம் திரும்பத் தரும் காலம் வரும் போது அகிலா பணம் தரவேண்டிய அவசியமில்லை என்று பானுமதி கூறிவிட்டாள்.

2. ஒத்திசைவும் உளநிறைவும் (Accord and Satisfaction): பழங்காலச் சின்னமாக இங்கிலாந்தின் விந்தையான விதியாக இச் சட்டம் காணப்படுகிறது. ஒப்பந்த முடிவிற்குக் கைம்மாற்றுக் கொள்கையை இஃது அறிமுகப்படுத்துகிறது. ஒருதலைப் பட்சமான கடப்பாடு தொடர்ந்திருக்கும்போது ஒருவர் தாம் ஒப் பந்தம் செய்ததை விடுத்து அதற்குப் பதிலாக வேறு ஒன்றைச் செய்தால், மற்றொருவர் அதற்கிணங்கினால் ஒப்பந்த முடிவு ஏற்படும். இதற்கு இரண்டு விதிவிலக்குகள் உள்ளன.

(1) ஒத்திசைவு, உளநிறைவு ஏற்படுவதற்கு முன்னரே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். நிறைவேற்றப்பட்ட இசைவு நல்லதன்று.

(2) பின்னெல்ஸ் வழக்கில் (Pinnels Case) உள்ள விதி, இச் சட்டத்திற்கு விதிவிலக்கானது. ஒருவர் அவர் தரவேண்டிய தொகைக்குக் குறைந்து செலுத்த முடியாது; பொறுப்பிலிருந்தும் தப்பித்துக்கொள்ள இயலாது. வேறு ஒருவர் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்ட பின்னர் மீதிப் பணத்திற்காக வழக்காடலாம். குறைவாக ஏற்றுக்கொள்வது பாதகமாகவும், கைம்மாறில்லாத பொது முடிவாகவும் ஒத்துக்கொள்ள முடியாது. எதையாவது தருவது அதாவது புத்தகம், பேனா போன்ற எதையாவது தருவது நல்லது. ஒப்பந்த முடிவாக அஃது அமையும். இங்கிலாந்து

நாட்டுச் சட்டத்தை இந்திய விதி பின்பற்றவில்லை. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 63ஆவது பிரிவின்படி ஒரு கடன்தொகையின் ஒரு பகுதியைக் கொடுத்தாலும், அது முழுக் கடனின் பைசலுக்கு முடிவாகும். கடன்காரர் ஒரு பகுதியைத் தரலாம், அல்லது முழுவதையும் தரலாம், அல்லது நிறைவேற்றும் காலத்தை நீட்டிக் கேட்கலாம், அல்லது மனநிறைவிற்காக எதையும் ஒத்துக்கொள்ளலாம்.

3. புத்தீடு (Novation) நோவேஷன் என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் புத்தீடு (புதிய ஒப்பந்தம்) எனப் பொருள் அதாவது, பழைய ஒப்பந்தத்திற்குப் பதிலாகப் புது ஒப்பந்தத்தைச் செய்வது. ஆறுமுகம், பழனிக்கு ரூ. 1000 செலுத்த ஒப்புக்கொண்டார். பின்னர்ச் சந்திரனுக்குத் தருவதற்காகப் பழனியை வலியுறுத்தினார். சந்திரன் பணம் தருவதற்குத் தவறினால் பழனி அவர்மீது வழக்குத் தொடரலாம். ஏனெனில், இங்குப் புதிய ஒப்பந்தம் உள்ளது. அதற்கான சிறப்பு அம்சங்களாவன:

(1) புதிய ஒப்பந்தம் அதே நபர்களிடையே அல்லது அவர்களுக்குள் ஒருவரிடையேயும், மூன்றாம் மனிதரிடையேயும் தோன்ற வேண்டும்.

(2) பழைய ஒப்பந்தத்தை ஒழிப்பதற்கு நோக்கம் இருக்க வேண்டும்.

(3) ஒப்பந்த முறிவு ஏற்படுவதற்குள் அஃது ஏற்பட வேண்டும்.

(4) புதிய ஒப்பந்தம் செல்லுபடியாக வேண்டும்.

(5) ஒப்பந்தம் செல்லாவிடில் அதில் ஈடுபட்டுள்ளோர் பழையபடி, பழைய ஒப்பந்தத்தையே நிறைவேற்றிடும் உரிமை பெற்றதாக அஃது இருக்கவேண்டும்.

சட்ட நிறைவேற்றத்தால் ஏற்படும் ஒப்பந்த முடிவுதான் சேர்க்கையாகும். அதாவது, முன்னுள்ள ஒப்பந்தம் பின்வந்த ஒப்பந்தத்தோடு இணைந்துவிடுகிறது. எனவே, அது முடிவடைகிறது. ஒருவர் மற்றொருவருக்குப் புரோநோட்டு எழுதிக் கொடுத்திருந்தால் அதை அமலாக்கலாம். அதன்மீது வழக்குத் தொடர்ந்து நீதிமன்றம் தீர்ப்புக் கட்டளை (Decree) வழங்கிவிட்டதென்றால், வாதி தீர்ப்புக் கட்டளையைத்தான் அமலாக்க முடியும். ஏனெனில், புரோநோட்டின் கடன், தீர்ப்புக் கட்டளையோடு இணைந்துவிட்டது. இனிமேல் புரோநோட்டை அமலாக்க முடியாது. கடனும் நபர்களும் மாறாமல் இருக்க வேண்டும்.

4. கருநிலைத் திருத்தம் அல்லது முக்கிய மாறுதல் (Material Alteration): ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனைபற்றிய மாறுதலாக இருந்தால் அது முக்கிய மாறுதலாகத் திகழ்கிறது. அப்பத்திரத்தின் சட்டபூர்வ விளைவு அதனால் மாறுகிறது. முக்கிய விவரங்களில் மாறுதல்கள் இருந்தால், உரிமைகளும் பொறுப்புகளும் பாதிக்கப்படுகின்றன. அம் மாற்றம் அதன் நபர்களுக்கு அவசியமானால் அவர்களின் இசைவுடன் அதைச் செய்யலாம். ஆனந்தன், பரந்தாமனுக்கு ரூ. 1000-க்கு ஒரு புரோநோட்டு 6% வட்டியுடன் எழுதிக் கொடுத்தார். பின்னர் அவருடைய அனுமதியுடன் 6% என்பது 12% எனத் திருத்தப்பட்டது. எனவே, கடன் பைசல் செய்யும்பொழுது 12% வட்டிதான் வசூலிக்கப்படும். தொடர்ந்து வரும் ஒப்பந்தங்களில் நபர்கள் ஒருவருக்கொருவர் நோட்டீஸ் விட்டு அதை முடித்துக்கொள்ளலாம், அல்லது அதில் குறிப்பிட்டுள்ள காலத் தவணை முடிந்த பின்னரும் முடித்துக்கொள்ளலாம்.

2. நிறைவேற்றுதல் மூலம் முடிவு (Discharge by Performance)

பொதுவாக ஒப்பந்த முடிவு ஏற்படுவது அதை நிறைவேற்றுவதுதான்; அதாவது, வாக்குறுதியை நிறைவேற்றுவது. உதாரணமாக, ஒருவர் மற்றொருவரிடமிருந்து கடனுக்குப் பணம் வாங்குகிறார். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தருவதாக வாக்களிக்கிறார். அதேபோல் அத் தவணைக்குள் பணத்தைக் கொடுத்துவிடுகிறார். இங்கு அவர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் மூலம் முடிவு செய்கிறார். ஒப்பந்த நிபந்தனைகளைச் சிறிதும் வழுவாமல் நிறைவேற்ற வேண்டும். ஒப்பந்தத்தில் காலம் அல்லது தவணை முக்கியமாகக் கருதப்பட்டால் அக் குறிப்பிட்ட காலத்திற்குள் அதை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு காலம் குறிப்பிடவில்லையென்றால், நியாயமான காலத்திற்குள் நிறைவேற்றவேண்டும்.

சில நேரங்களில் வாக்குறுதி நிபந்தனையுடையதாக விளங்கும். அதாவது, நிபந்தனை ஏற்படுவது அல்லது ஏற்படாததைப் பொறுத்துதான் ஒப்பந்த நிறைவேற்றம் தோன்றும். அத்தகைய உடன்பாடுகள், நிகழ்வடைவான ஒப்பந்தங்கள் (Contingent Contracts) அல்லது நிபந்தனையுள்ள ஒப்பந்தங்கள் (Conditional Contracts) என்றழைக்கப்படுகின்றன. 'நிகழ்வடைவான ஒப்பந்தம் ஏதாவது ஒன்றைச் செய்வதற்கோ, செய்யாமலிருப்பதற்கோ செய்யப்படும் வாக்குறுதி, அவ்வொப்பந்தத்திற்குச் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி நேர்ந்தாலும் நேரும்

அல்லது நேராமலும் இருக்கும்' என்ற ஒப்பந்தச் சட்டத்தின் 31ஆவது பிரிவு விளக்குகிறது. காப்புறுதி ஒப்பந்தங்கள் இத்தகைய நிபந்தனைகளைச் சாரும். முக்கியப் பகுதிகளாவன:

1. நிகழ்வடைவு (Contingency).

2. எதிர்காலம் (Futurity). அதாவது, பிற்காலத்தில் ஒரு நிகழ்ச்சி நேர்ந்தாலோ, நேராமலிருந்தாலோ அதைப் பொறுத்துள்ளது. இத்தகைய ஒப்பந்தங்களில் காணும் நிபந்தனைகளாவன:

(1) எதிர்காலத்தில் எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்பட்டால் ஏதாவது செய்வதற்கோ செய்யாமலிருப்பதற்கோ அவை ஏற்பட வேண்டும்.

(2) நேராமல் இருக்க வேண்டும்.

(3) ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிகழவேண்டும்.

(4) ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிகழாமலிருக்க வேண்டும்.

(5) ஒருவர் எதிர்காலத்தில் எவ்வாறு செயல்படுவாரோ அவ்வாறு ஒப்பந்தத்தின் நிறைவேற்றம் காணப்படும்.

உதாரணமாக பாலன், சந்திராவை மணந்துகொண்டால் அவருக்குப் பணம் தருவதாக அரசு கூறினார். நடக்க முடியாத நிபந்தனையைக் கூறினால் ஒப்பந்தம் நன்றாகச் செயல்பட முடியாது. காரணம் அந்த நடவடிக்கை நடக்க முடியாமை நபர்களுக்குத் தெரிந்துமிருக்கலாம் அல்லது தெரியாமலுமிருக்கலாம். இத்தகைய ஒப்பந்தத்தில் அது நிறைவேறும் காலம் நிபந்தனையைப் பொறுத்துள்ளது. ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தாலொழிய ஒப்பந்தம் அமலாகாது. அல்லது நிகழ்ச்சி ஏற்பட முடியாத நிலைமை ஏற்படும்பொழுது நிலைமைக்குத் தக்கவாறு அமலாக்கப்படும். இருகட்சிக்காரரிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் யார் முதலில் நிறைவேற்றுவது என்ற வினா எழும்பக்கூடும். எல்லா உடன்பாடுகளிலும் ஒருவருக்கொருவர் சாரும் வாக்குறுதியுடனோ, இருவரும் ஒரே சமயத்தில் ஒத்துக்கொள்ளக்கூடிய வாக்குறுதியுடனோ செயலாற்ற வேண்டும்.

ஒரு வீடு வாங்கும் ஒப்பந்தத்தினால் ஆறுமுகம் என்பவர் 1-1-75-ல் வீட்டு விலையைக் கொடுக்கவேண்டும். பாலு என்

பவர் 30-1-75-ல் வீட்டைத் தந்துவிடவேண்டும். ஒருவருக் கொருவர் தனித்தனியாகச் செய்யும் வாக்குறுதிக்கு, இது ஓர் எடுத்துக்காட்டு. விலையையும் தனியாகச் செலுத்தலாம். ஆறுமுகம் விலையைக் கொடுக்காவிட்டால்கூட வீட்டை, பாலு கொடுத்தாகவேண்டும். அவ்வாறு ஆறுமுகம் பணம் தராதபோது பாலு அப் பணத்திற்காகவும் வாக்குறுதி தவறியதற்காகவும் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரலாம்.

2. அடுத்து அதே உதாரணத்தில் ஆறுமுகம் 1-1-75-ல் வீட்டு விலையைத் தரவேண்டும். அவ்வாறு பணம் கொடுத்த தும் பாலு 30-1-75-ல் வீட்டைத் தரவேண்டும் என்றிருந்தால் இஃது ஒன்றுக்கொன்று சார்ந்த வாக்குறுதியாகும். வீட்டைக் கொடுப்பது என்பது பணம் செலுத்துவதைச் சார்ந்துள்ளது. ஆறுமுகம் பணம் தராவிட்டால் பாலு வீட்டைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

3. மீண்டும் அதே உதாரணத்தை எடுத்துக்கொண்டால் 1-1-75-ல் ஆறுமுகம் பணம் தரவேண்டும். அதே தேதியில் பாலு வீட்டைத் தரவேண்டும். இது ஒன்றுக்கொன்று உடன் நிகழ்கின்ற உடன்பாட்டிற்கு உதாரணமாகும். ஒரே சமயத்தில் இரு நபர்களும் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். வாக்குறுதி மீறல் ஏதாவது ஏற்பட்டால் ஒவ்வொரு வகையின் சூழ்நிலையைப் பொறுத்துத்தான் ஏற்பட வேண்டும். வாக் குறுதியை நிறைவேற்ற யார் தயாராக இருந்தார் என்று கண்டுபிடிக்க வேண்டும்.

ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வழி, சட்டத்தில் சொல்லப்பட் டுள்ளது. எந்த நேரத்தில் ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒத்துக்கொண்டார்களோ அப்பொழுதே அதை நிறை வேற்ற வேண்டும். வாக்குறுதியை ஏற்றுக்கொண்டவர் நிறை வேற்றுவதற்கு வாக்குறுதி தந்தவரை வேண்டலாம். சுருங்கச் சொன்னால் உடன்பாட்டு நிபந்தனைகளைச் சிறிதும் வழுவாமல் கடைப்பிடிக்க வேண்டும். ஒரே நபருக்கு பல கடன்கள் தர வேண்டி இருந்து, அதைச் செலுத்துவதற்கு ஒவ்வொரு கடனுக் கும் தகுந்த தொகை ஒதுக்கி வைக்கவேண்டும். கிளேடன்ஸ் வழக்கில் (Clayton's Case) கூறிய விதம் தீர்மானம் எடுப்பதற்கு 59,60,61 சட்டப் பிரிவுகள் விதிகளைக் கூறுகின்றன. பல கடன்களை ஒரே நபரிடமிருந்து பெற்ற ஒருவர், பணம் திருப்பிச் செலுத்தும்போது எந்தக் கடனுக்கு எவ்வளவு தொகை ஒதுக்க வேண்டும் என்று சொல்லும் உரிமை கடனாளிக்குண்டு. அங் ஙனம் சொல்லாவிடத்து இதே விதியின்படி செலுத்தப்பட்ட

தொகையை ஒதுக்கி வைப்பதற்குக் கடன் கொடுத்தோருக்கும் உரிமை உண்டு. ஏற்கெனவே ஒதுக்கிவைக்காமலோ, இப்படிச் செய்யவேண்டும் என்ற குறிப்போ இல்லாவிட்டால், கடன் கொடுத்தோர் அதைச் செய்யவேண்டும். நியாயமாகத் தர வேண்டிய கடனுக்கு யோசனைசெய்து தன் முடிவை அவர் எடுக்கலாம். காலாவதியான கடனுக்கும் இத் தொகை ஒதுக்கப் படலாம். இத்தகைய ஏற்பாடு முன்னரே செய்யாமலிருந்தால் காலத்திற்கு அல்லது அக் கடன் கொடுத்த தேதிக்குத் தகுந்த விதம் முடிவைக் கையாளலாம். ஒரே நிலையில் உள்ள பல கடன்களையும் விகிதாசார விதத்தில் பணம் கொடுத்துப் பைசல் செய்யலாம்.

ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய வாரிசுதாரர்கள் இறந்தவர்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். 'ஒருவர் செய்யவேண்டிய செயல் அவர் இறக்கும்போது இறந்து விடுகிறது' (Personal action dies with person) என்ற கொள்கை ஒப்பந்தங்களுக்கு ஒத்துவராது. ஒன்றுக்கு மேற்பட்டோர் செய்த கூட்டு வாக்குறுதிகளில் அவர்கள் கூட்டாகவும் தனித்தும் (Joint and Several) பொறுப்பாளியாவார்கள். அதாவது, ஒவ்வொருவரும் மற்றவர்களோடும், தனித்தனியாகவும் அவ் வாக்குறுதிக்குப் பொறுப்பாளியாவார்கள். நம் நாட்டில் எல்லாப் பொறுப்புகளும் கூட்டாகவும் தனித்தும் காணப்பட்டன. இங்கிலாந்தில் கூட்டுப் பொறுப்பிற்கும் தனிப்பொறுப்பிற்கும் வேறுபாடு உண்டு. மற்றவர்களுடைய அனுமதியின்றி, கூட்டு வாக்குறுதிகளிலிருந்து ஒரு வாக்குறுதியை விடுவித்தால் எல்லா வாக்குறுதிகளும் விடுதலையாகும். கூட்டு வாக்குறுதி செய்தவர்களில் யாராவது ஒருவர் இறந்துவிட்டால் எஞ்சியுள்ளவர்கள்மீது பொறுப்பு விழுந்துவிடும். இந்தியச் சட்டத்தில் எல்லாப் பொறுப்புகளும் கூட்டாகவும் தனித்தும் இருந்தால் மற்றவர்களுக்குத் தீமையில்லாமல் ஒரு வரை விடுவித்துவிடலாம். அதேபோல் ஒருவர் இறந்துவிட்டால் அவரின் வாரிசுதாரரும் மற்றவர்களுடன் சேர்ந்து பொறுப்பாளியாவார். ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குறுதிகள் இருந்தால், அவை அனைத்தும் நிறைவேற்றப்படும். கூட்டு வாணிபத்தைத் தவிர மற்றவைகளில் ஒரு வாக்குறுதி ஏற்றவருக்குச் செலுத்தும் பணம், எல்லா வாக்குறுதி ஏற்றோரின் பொறுப்புகளுக்கும் முடிவு ஆகாது.

ஒப்பந்த உரிமை மாற்றம் (Assignment of Contract): ஒப்பந்தத்தை அதன் பயன் கருதி மாற்றலாமேயன்றி அதன் பொறுப்பை மாற்றக்கூடியதாக இருக்கக்கூடாது என்பது பொது

விதி. தனிப்பட்ட தன்மைவாய்ந்த அதாவது, தனிமனிதன் தன்மைவாய்ந்த ஒப்பந்தத்திற்கு இது பொருந்தாது. 'அ' என் பவர் 'ஆ' என்பவருக்குப் பணம் தரவேண்டியிருந்தால் 'ஆ' வினுடைய அனுமதியின்றி 'இ' என்பவருக்குத் தம் கடப் பாட்டை மாற்ற இயலாது. அதாவது, பணம் தரச்சொல்லிக் கேட்டுக்கொள்ளக்கூடாது. ஆனால் 'ஆ' என்பவர் அதற்கு ஒத்துக்கொண்டால் முன்னைய ஒப்பந்தத்திற்குப் பதிலாகப் புது ஒப்பந்தம் தோன்றிவிடும். இவ் உதாரணத்தில் 'அ' என்பவர் பணம் வசூலிக்கும் உரிமையை 'இ' என்பவருக்கு மாற்றிவிட்டால் 'அ' என்பவர் ஏதாவது தரவேண்டியதாக இருந்தால் அவர்மீது 'இ' என்பவர் வழக்குத் தொடரலாம். ஒப்பந்தத்தில் தோன்றும் பயன் கருதிச் செய்யப்பட்ட ஒப்பந்த உரிமை மாற்றத்திற்கு இஃது ஓர் உதாரணமாகும். சட்டத்தின் 40ஆவது பிரிவு வாக்குறுதியின் நிறைவேற்றத்தை ஒரு பதிலாள் செய்தாலும் அஃது அங்கீகரிக்கப் படும் என்று கூறுகிறது.

3. அளிப்பு முனைவு மூலம் முடிவு (Discharge by Tender)

இதை முயன்று நிறைவேற்றுதல் என்றுகூடச் சொல்லலாம். வாக்குறுதி செய்வோர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற உடனே விருப்பம் தரும்பொழுது, மற்றவர் தவறாக அதை ஏற்க மறுக் கிறார் என்றால் அப்பொழுது அவ் வொப்பந்தம் முடிந்ததாகப் பாவிக்கவேண்டும். கூடிய பொறுப்பு இருந்தால் அதுமட்டும் முடிவாகாது. பின்வரும் பொறுப்பு அதைப் பாதிக்காது. அளிப்பு முனைவின் சிறப்பியல்புகளாவன:

(1) அது நிபந்தனையற்றதாக இருக்கவேண்டும்.

(2) அது முழுக் கடமையையும் செய்வதாக இருக்க வேண் டும். ஒரு பகுதியை மட்டும் குறிப்பதாக இருக்கக்கூடாது.

(3) ஒப்பந்தம் செய்யும் நபர் திறமையுடையவராகவும், ஒப் பந்தத்தை நிறைவேற்றும் விருப்பம் உடையவராகவும் இருக்க வேண்டும். மற்றொருவர் தம் விருப்பத்தை உறுதிப்படுத்த ஒரு வாய்ப்புத் தரவேண்டும்.

(4) அளிப்பு முனைவு சட்டபூர்வமாக இருக்கவேண்டும். மற்றொரு நபரின் இசைவில்லாமல் ஓர் ஒப்பந்தத்தை நிறை வேற்ற அளிக்கும் காசோலை தகுந்த அளிப்பு முனைவாகாது. அல்லது அவர் பணம் வாங்கிக்கொள்ளும் வழியாவது சொல்ல வேண்டும். ஒப்பந்தச் சட்டத்தின் 38ஆவது பிரிவு, ஒப்பந்த இசைவின் முடிவுபற்றிக் கூறுகிறது. ஒப்பந்த இசைவின் முன்பும்

அல்லது பின்பும் உள்ள எந்த நேரத்திலும் அதனுடைய நிறைவேற்றம் வாதியால் வேண்டப்பட்டு மறுக்கப்படுமாயின், ஒப்பந்த இசைவிற்காகச் செய்யும் வேண்டுகோள் நிலைக்காது

4. முறிவினால் முடிவு (By Breach)

'ஒப்பந்தம் செய்த ஒருவர் அதை நிறைவேற்ற மறுத்தாலும் அல்லது அதை நிறைவேற்ற முடியாதபடி அவருக்கு இயலாமை ஏற்பட்டாலும், ஒப்பந்தம் செய்யப்பட்ட வாக்குறுதி தானாகவே முடிவு தேடிக்கொள்ளும்' என்று ஒப்பந்தச் சட்டத்தின் 39ஆவது பிரிவு முறிவுபற்றி விளக்குகிறது. நிறைவேற்றுவதற்கு மறுக்கப்பட்டு ஒப்பந்த முடிவாகிறது. அதாவது, வாக்குறுதி முறிவு ஏற்பட்டு ஒப்பந்தம் முடிவாகிறது. ஒப்பந்தம் நிறைவேற்றும்போதும் அல்லது நிறைவேற்ற வேண்டிய காலம் வரவேண்டியபோதும் அல்லது நிறைவேற்ற வேண்டிய காலத்திற்கு முன்னேரேயும் அத்தகைய மறுப்பு ஏற்பட்டு ஒப்பந்த முடிவு ஏற்படுகிறது.

நிறைவேற்ற வேண்டிய காலம் வரவிருக்கும்போது தவறுதல்: வாணிக நடவடிக்கைகளில் ஒப்பந்தத்திற்குக் காலம் முக்கியமானது. குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் ஒப்பந்தம் நிறைவேற்றப்படவேண்டும். நிறைவேற்றவேண்டிய காலம்சென்று நிறைவேறும் ஒப்பந்தம் நியாயமானதாகாது. புதார் சந்திரா எ. பெட்ஸ் (Bhudhar Chandra *vs.* Betts) என்ற வழக்கில் சிலோனில் யானை பிடிக்கும் பருவ காலத்தில் ஒரு நாளில் ஒருவருக்கு யானை பிடிக்கும் தொழிலுக்காகப் பழக்கப்பட்ட யானை தருதாக ஒப்பந்தம் ஏற்பட்டது. முதலில் ஒரு வாரம் தள்ளித் தருவதாகச் சொன்னார். யானை வாங்குவோரும் அதற்கு இசைந்தார். ஆனால், பின்னரும் காலதாமதம்செய்து 15 நாள்களுக்குப் பின்னர் யானையைக் கொடுத்தார். சிலோன் வியாபாரி யானையை வேண்டாவென மறுத்து நட்டஈடு கோரி வழக்குத் தொடுத்தார். அவருக்கு நீதிமன்றம் நட்டஈடு வழங்கியது. காரணம் வியாபார நடவடிக்கைகளுக்குக் காலம் முக்கியமானது. குறிப்பிட்ட தவணை சென்று நிறைவேற்றப்படும் ஒப்பந்தம் நியாயமானதன்று. தவணைக் காலம் முடிந்த பின்னர் நிறைவேறும் ஒப்பந்தத்தை ஏற்பவர் அதை ஒத்துக் கொள்ளும்போது அவர் நட்டஈடு விரும்புகிறாரா இல்லையா என்பதை ஓர் அறிவிப்புமூலம் தெரிவிக்க வேண்டும்.

ஓர் ஒப்பந்தம் நிறைவேறும்போதும், அல்லது நிறைவேறிக் கொண்டிருக்கும்போதும் ஒப்பந்த முறிவு ஏற்படலாம். முக்கியக்

கைம்மாறாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் ஒப்பந்தத்தில் காணப்படும் நிபந்தனை வெறும் நிபந்தனைதானா அல்லது உத்தரவாதமா என்பதுதான். ஓர் ஒப்பந்தத்தில் காணப்படும் நிபந்தனையைப் பொறுத்துதான் முறிவு ஏற்பட்டதென்றால் அவ் வொப்பந்தம் செல்லாது (void). உத்தரவாதத்தைப் பொறுத்துதான் முறிவு ஏற்பட்டதென்றால் அது செல்லாததாக ஆக்கக்கூடியதாகும் (voidable). ஒப்பந்தம் நிறைவேற்றப் படலாம். ஆனால், பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்டஈடு தரவேண்டும். பென் எ. பர்னெஸ் (Behn *vs.* Burness) என்ற வழக்கில் ஆம்ஸ்டர்டேம் துறைமுகத்தில் நின்றுகொண்டிருக்கும் கப்பலில் பொருள்களை ஏற்றுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. பொருள்களைத் தூக்கிச் செல்லும்போது துறைமுகத்தில் கப்பலைக் காணவில்லை. ஆனால் 15 தினங்களுக்குப் பின் கப்பல் வந்த போது அவர்கள் சரக்குகளைக் கப்பலில் கொண்டு இறக்க மறுத்துவிட்டார்கள். நிபந்தனை முறிவு ஏற்பட்டதால் ஒப்பந்தம் செல்லாது என நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

ஒரு கலையரங்கத்தில் வந்து பாடுவதற்கு ஒரு பாடகர் ஒத்துக்கொண்டார். மேலும் ஒத்திகை பார்ப்பதற்கு ஒரு வாரம் முன்னரே வந்துவிடுவதாகவும் சொன்னார். ஆனால், கச்சேரி நடப்பதற்கு இரண்டு நாள்கள் முன்னரே அவர் வந்தார். உத்தரவாதம் மட்டும்தான் முறிவாகிவிட்டதால் நட்டஈடு கோர உரிமையாளருக்கு உரிமை உண்டு. ஆனால், ஒப்பந்தம் நிறைவேற்றப் படலாம். பெட்டினி எ. கை (Bettini *vs.* Gye) என்ற வழக்கில் மேற்கூறிய கருத்தை நீதிமன்றம் வழங்கியது.

எதிர்பார்த்த முறிவு

(Anticipatory Breach)

ஒப்பந்தம் நிறைவேறும் காலம் வருமுன்னரே, ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாதென அந்த நபர் தம் கருத்தை வெளியிட்டு நிறைவேற்றத்தை விட்டுவிடலாம். அந் நேரத்திலிருந்தே ஒப்பந்தம் முறிந்ததாகக் கருதலாம். நிறைவேற்றுவதற்குக் குறிப்பிடப்பட்டிருந்த காலம் வருவதற்கு முன்னரே பாதிக்கப்பட்டவர் வழக்குத் தொடரலாம். மூன்று மாத வெளிநாட்டுப் பயணம் செய்வதற்கு ஒரு பயணப் பணியாளின் (Courier) உதவி நாடப்பட்டது. அவருடைய வேலை ஜூன் மாதம் முதல் தேதி ஆரம்பமாகவிருந்தது. ஆனால், மே மாதம் 11ஆம் தேதியே

அவருடைய தொண்டு தேவையில்லை என்றுஅறிவிக்கப்பட்டது. அதாவது, நிறைவேறுங் காலம் வருவதற்குள்ளே உடன்பாட்டை ரத்து செய்தாகிவிட்டது. பணியாள் ஒப்பந்த முறினால் ஏற் படும் நட்டத்திற்கு ஈடுகோரி வழக்குத் தொடுத்தார். வழக்கில் வெற்றியும் பெற்றார். வழக்காட அவருக்கு உரிமை உண்டென் றும், ஒப்பந்தம் நிறைவேற்றும் காலம் வரும்வரை அவர் காத் திருக்க வேண்டிய அவசியமில்லையென்றும் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது (Hochester *vs.* Dela Tour). எதிர்பார்த்த முறிவு, நிபந்தனை ஒப்பந்தங்களுக்கும் பொருந்தும். பாரஸ்ட் எ. நைட் (Forest *vs.* Knight) என்ற வழக்கில் பிரதிவாதியினுடைய தகப் பனார் இறந்தவுடன் வாதியைத் திருமணஞ் செய்துகொள்வதாகப் பிரதிவாதி வாக்குறுதி தந்திருந்தார். ஆனால் தம் தகப்பனார் உயிருடனிருக்கும்போதே பிரதிவாதி தம் வாக்குறுதியை நிறை வேற்றாமல் மறுதளிப்புச் செய்துவிட்டார். வாதிக்கு நட்டஈடு தர வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஒப்பந்த மறு தளிப்பையும் முறிவாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அவ் வாறு மறுப்புச் சொல்லாம்ல் பிறகு சூழ்நிலைகள் மாறும்போது தம்முடைய உரிமையை நிலைநாட்டக்கூடாது. இக் கருத்தை ஆவெரி எ. போடன் (Auery *vs.* Bowdon) என்ற வழக்கில் காணலாம்.

5. நிறைவேற்ற இயலாமையால் முடிவு (Discharge by Impossi bility of Performance)

இது நிறைவேற்ற இயலாமையால் எழும் முடிவு என்ற கொள்கை யைப் பின்பற்றி எழும் உடன்பாட்டைப் பற்றியதாகும். 'அதா வது ஒருவர் தம்முடைய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத போது, உட்கிடையான இசைவின் அடிப்படையில் அவர் பொறுப் பிலிருந்து விடுபடுகிறார். ஒரு காரியம் செய்வதற்கு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் அது முடியாமல் போனாலும், அல்லது சட்டத் தடை ஏற்பட்டு அதைத் தடுக்கும் ஆற்றல் வாக்குறுதியளித் தோருக்கு இல்லாதபோதும், அவர் ஒத்துக்கொண்ட காரியம் முடியாமலும், சட்டவிரோதமாகவும் முடிகிறது' என்று ஒப்பந்தச் சட்டத்தின் 56ஆவது பிரிவு கூறுகிறது. இம் முடியாமை தனித்தோ, அல்லது தொடர்புடையதாகவோ இருக்கலாம்; ஆரம்பமாக இருக்கலாம். அல்லது ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து விளையும் விளைவாகவும் இருக்கலாம். உண்மையாக இருக்கலாம் அல்லது சட்டத்தின் விதியாகவும் இருக்கலாம். வாக்குறுதியாகவும் இருக்கலாம் அல்லது வாக்குறுதியின் கைம்மாறாகவும் இருக்க லாம். இயற்கையின் சட்டத்திற்கு விரோதமாக வாக்குறுதி காணும் போதும், உண்மையில் நடக்க முடியாததாகக் காணும்போதும்

அது தனிப்பட்டதாகக் கூறலாம். உதாரணம்: தனக்கு ஏற்கெனவே மனைவி இருந்தும் அதைச் சொல்லாமல் வேறு ஒருத்தியை மணப்பதற்குத் தரும் வாக்குறுதி. ஒரு குறிப்பிட்ட தேதியில் கப்பல் கிளம்பும் என்று அறிவிக்கப்பட்டபடி நிறைவேற்ற முடியாமையால் கப்பல் கிளம்பவில்லை. எனவே, இவ் வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை. ஒப்பந்தம் செய்யும்போதே அது முடியாதெனத் தெரிந்தே ஒப்பந்தம் செய்தால் அதற்கு அவரே பொறுப்பாளியாவார். அவருடைய திறமை அல்லது வாக்குறுதியின் தன்மைபற்றித் தொடர்புடைய அல்லது சிறிய அளவில் முடியாமையுள்ள வாக்குறுதியாக இருந்தால் அவர் ஒப்பந்தத்தை ஒதுக்கிவிட முடியாது. பொருள்களின் விலையேற்றத்தால் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியவில்லையென்று ஒருவர் வாதாட முடியாது. எவ்வளவு அதிக விலையாக இருந்தாலும் ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி அவர் கட்டாயப்படுத்தப்படலாம்.

ஆரம்ப முதல் வாக்குறுதி நிறைவேற்ற முடியாமலிருந்தால் ஒப்பந்தம் ஆரம்ப முதல் செல்லாததாக இருக்கும். ஆறுமுகம் தம் மகள் சந்திரிகாவைப் பன்னீர்செல்வத்திற்குத் திருமணம் செய்து தருவதாக வாக்கு அளிக்கிறார். ஆனால், சந்திரிகா ஏற்கெனவே தாமஸ் என்பவரை மணந்துகொண்டுவிட்டார். ஆரம்பத்திலே முடியாமையுள்ளதற்கு இஃது ஓர் உதாரணம். ஆறுமுகம் நிறைவேற்ற முடியாமைக்குக் காரணம் காட்டித் தம் வாக்குறுதியிலிருந்து விடுதலை பெறலாம். உடன்பாட்டிற்குப் பின்னாலும் வாக்குறுதிகள் நிறைவேறாமல் போவதுமுண்டு. தொடர்ந்து பின்விளையும் நிகழ்ச்சி இதைச் சார்ந்ததாகும். கடவுளின் செயல், ஒப்பந்தத்தின் முக்கிய விஷயத்தை அழித்தல், தொடர்ந்த சட்ட விரோதம், போர் தொடுத்தல், வியாபார ஏமாற்றம் ஆகியவை எல்லாம் இவ் வகையைச் சார்ந்தவை. இங்கிலாந்தில் இது சம்பந்தப்பட்ட சட்டம் மிகவும் கடுமையானது. ஒரு நிகழ்ச்சியின் விளைவாகத் தொடர்ந்து நேரிடும் முடியாமை, ஒப்பந்தம் நிறைவேறாமைக்குக் காரணமாகச் சொல்லமுடியாது. பாரதின் எ. ஜேன் (Paradine *vs.* Jane) என்ற வழக்கில் பாரதின் ஜேன்மீது வாடகைப் பாக்கிக்காக வழக்குத் தொடுத்தார். ஆனால், எதிரிநாட்டுப் படைகள் ஜேனிடமிருந்து சொத்தைப் பறித்து அதை வீணாக்கிவிட்டார்கள். எனவே, சொத்தை ஜேன் அனுபவிக்காததால் வாடகைதரவேண்டிய அவசியமில்லை. மேலும் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமை தமக்கு ஏற்பட்டுவிட்டதாக ஜேன் தெரிவித்தார். இது வாடகை செலுத்தாததற்குத் தகுந்த காரணம் இல்லையென்று நீதிமன்றம் கூறியது.

ஆனால், ஆங்கிலச் சட்டம் இதை விதிவிலக்காக ஏற்றுக் கொண்டுள்ளது.

கடவுள் செயல்கள் என்பது மனித சக்திக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளாகும். இடி, மின்னல், புயல் போன்றவை உதாரணங்களாகும். ராபின்சன் எ. டேவிசன் (Robinson *vs.* Davison) என்ற வழக்கில் ஒரு பியானோ வாசிப்பவர் ஒரு குறிப்பிட்ட நாளன்று ஒரு திரையரங்கில் கச்சேரி செய்வதாக ஒத்துகொண்டார். ஆனால், அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் வாக்குறுதியின்படி கச்சேரி செய்யவர இயலவில்லை. அவருடைய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் தடுத்தது கடவுள் செயல். எனவே, அவருக்கு மன்னிப்புண்டு என்று நீதிமன்றம் முடிவு கூறியது. இவ்வாறு தீர்ப்பு வழங்கும்போது கட்சிக்காரருடைய உள்நோக்கைத்தான் நீதிமன்றம் ஆராய்ந்தது. எந்த மனிதனும் ஒப்பந்தம் நிறைவேற்றும்பொழுது சாதாரண நிலையைத்தான் கருதுவான். ஒப்பந்தம் நிறைவேறும்போது ஏதாவது விபத்தை எதிர்பார்த்தால் அதற்காவன செய்யவேண்டும். அத்தகைய ஏற்பாடு செய்யாவிடில் ஒப்பந்தம் செய்யும் நபர்மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்கமுடியாது. நிறைவேற்றுதல் அறவே முடியாதபொழுது, உடன்பாட்டில் தனி நிபந்தனை இருக்குமாயின் பின்னால் எது நேர்ந்தாலும் பரவாயில்லை என்று வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும்.

மூலச்செய்தி அழிதல் (Destruction of Subject Matter)

டெய்லர் எ. கால்டுவெல் (Tayler *vs.* Caldwell) என்ற வழக்கில் இசை நடக்கும் கூடம் தீ விபத்தால் நாசமாகிவிட்டது. எனவே, அங்கு இசை நடப்பதற்கு ஒத்துக்கொண்டபடி குறிப்பிட்ட நாளில் அவர்களால் வர முடியவில்லை. இசைவிழா நடப்பதற்கு முன்னரே தீ விபத்து ஏற்பட்டு அக் கூடமே அழிந்துவிட்டதால் முக்கியப் பொருளே அழிந்துவிட்டது. எனவே, ஒப்பந்தம் தள்ளப்பட்டுவிட்டது.

பின்தொடரும் இயலாமை (Subsequent Impossibility)

சட்ட விவரிப்பு ஏற்படுத்துவதாலும், அல்லது புதிய சட்டங்கள் அமலுக்கு வருவதாலும், சில ஒப்பந்தங்கள் பயனற்றுப் போய்விடும். அந் நிலையில் ஒப்பந்தம் செய்வோர்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டியதில்லை. அவ்விதமே போர் தொடர்ந்தாலும் உடன்பாடுகள் நிறைவேற்றப்படுவதில்லை. போர்க்காலங்களில் ஒப்பந்தங்கள் தள்ளிவைக்கப்படலாம் அல்லது சூழ்நிலைக்கேற்றவாறு முடிக்கப்பட்டு விடலாம்.

ஒப்பந்த நிலைகுலைவு (Frustration)

சில உடன்பாடுகளைப் பொறுத்தமட்டில் சில பொருள்கள் தோன்றாமல் போகலாம். அல்லது தோன்றித் தொடரலாம். அவ்வாறு தொடர்ந்து தோன்றுவதுதான் ஒப்பந்தத்தின் அடிப்படையாக அமையும். இத் தருணத்தில் நிறைவேற்ற முடியாமைக் கொள்கையை அதாவது, உண்மையிலேயே நிறைவேற்ற முடியாமையைப் பயன்படுத்த முடியாது. நபர்கள் ஒப்புக்கொள்ளும் போது இருந்ததைப்போல அவ் வொப்பந்தத்தை நிறைவேற்றுவது கடினம். எனவே, ஒப்பந்த நிலைகுலைவுக் கொள்கை (Doctrine of Frustration) கையாளப்படுகிறது. ஒப்பந்தத்தின் நோக்கம் குலைக்கப்படுகிறது. கிரெல் எ. ஹென்றி (Krell *vs.* Henry) என்ற வழக்கில் இங்கிலாந்து அரசரின் முடிசூட்டுவிழா ஊர்வலத்தைக்காண அறைகள் முன்கூட்டியே அமர்த்தப்பட்டன. அரசருக்கு உடல்நலம் சரியில்லையென்பதால் ஊர்வலம் நடைபெறவில்லை. அறை எடுத்தவர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறாததால் வாடகை செலுத்த முடியாதென வாதாடினார்கள். நீதிமன்றமும் அவர்கள் கருத்தை ஆதரித்தது. காரணம் உடன்பாட்டின் நோக்கத்தில் குலைவு ஏற்பட்டது. இதேபோல் ஓர் ஒப்பந்தம் முடிவதற்கு முன் நிறைவேற்ற வேண்டிய கடமையையும் நிறைவேற்ற வேண்டும். பின்னால் நிகழ்ந்த நிகழ்ச்சிக்கு 15 தினங்களுக்கு முன்னரே வாடகை செலுத்த வேண்டும் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமெனச் சந்தலர் எ. வெப்ஸ்டர் (Chandler *vs.* Webster) என்ற வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் நபர்கள் தத்தம் கருத்துகளைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். சூழ்நிலைகள் மாறினாலும் ஒப்பந்தத்தில் நிறைவேற்றம் வற்புறுத்தப்பட்டால் அவர்கள் ஏற்காத ஒப்பந்தத்தைக்கூட நிறைவேற்றக் கட்டாயப்படுத்தப்படுவார்கள். எனவே, நபர்கள் சம்பந்தப்படாத நிகழ்ச்சி நிகழும்போதும், அவர்கள் கருதியதை விடுத்து வேறுவிதமாக நிறைவேற்றும் ஒப்பந்தம் ஏற்படும்போதும் அவர்களின் செயலுக்கு அப்பாற்பட்டு எதிர்பாராத விதமாகப் பயனுள்ள ஒப்பந்தம் ஏற்படும்போதும் நிலைகுலைவு (Frustration) ஏற்படுகிறது. மேலும், நிலைகுலைவு தானாகவே நிறைவேறுகிறது. நிகழ்ச்சிகளை அனுசரிக்காமல் ஒப்பந்தக் கடமை நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஒப்பந்தத்தில் வெளிப்படையாகவே குறிப்பிட்டிருந்தால், செயல்குலைவு வேண்டப்படமாட்டாது. நம் நாட்டில் இயலாமைக்கும், நடக்கக்கூடாததற்கும் வேறுபாடில்லாமல் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதேபோல் இயலாமைக்கும் செயல்குலைவிற்கும் வேறுபாடில்லை (பிரிவு 56).

9. ஒப்பந்த மீறுகைக்குப் பரிகாரங்கள்

(Remedies for Breach of Contract)

பொதுச்சட்டத்தின் கீழும், நியாய விதிகளின் கீழும் ஓர் ஒப்பந்தம் முறிந்தபோது பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் சொல்லப்பட்டுள்ளது. ஒப்பந்தச் சட்டத்தின் 73ஆவது பிரிவு, ஒப்பந்த முறிவு செய்தவரிடமிருந்து பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு கோரும் உரிமை உண்டெனச் சொல்லப்பட்டுள்ளது. எந்த அளவிற்குப் பணம் ஒருவரின் நிலைமையைச் சரி செய்யுமோ அந்த அளவிற்குப் பணம் நட்டஈடாகத் தரப்படும்.

இழப்பீடு (Damage) பலவகைப்படும் : சாதாரண இழப்பீடு (Ordinary Damage), தனிமுறை இழப்பீடு (Special Damage), பெயரளவு இழப்பீடு (Nominal Damage), எச்சரிக்கை இழப்பீடு (Exemplary Damage). சாதாரணமாக நீதிமன்றம் சாதாரண இழப்பீட்டைத்தான் ஏற்கிறது. அதாவது, ஒப்பந்த முறிவு என்ற குற்றம் சாட்டும்போது ஏற்படுகின்ற நட்டத்தையும், இயற்கையாக ஏற்படுகின்ற நட்டத்தையுந்தான் நீதிமன்றம் ஏற்கிறது. ஒப்பந்தத்திற்குச் சம்பந்தப்படாத நட்டத்தை ஏற்பதில்லை. பொதுவாக, நட்டத்தின் மதிப்பு வாதிக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றப்படும் தொகையின் மதிப்பைப் பொறுத்துள்ளது. ஆனால், அது பிரதிவாதிக்கு ஆகும் உண்மையான செலவைப் பொறுத்ததன்று. பொதுவாக ஒப்பந்த முறிவு ஏற்படும் தேதியில் தான் நட்டம் அல்லது இழப்புக் கணக்கிடப்படுகிறது. அதற்குப்பின் ஏற்படும் உயர்வோ அல்லது குறைவோ கணக்கில் எடுத்துக் கொள்வதற்கில்லை. பசல் இலாஹி எ. ஈஸ்ட் இண்டியன் ரயில்வே கம்பெனி (Fazal Ilahi *vs.* East Indian Railway Co.) என்ற வழக்கில், தீபாவளிக்கு முன்னர்ப் பட்டாசு வெடிகள் தருவதாக ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், தீபாவளிக்குப் பின்னர்தான் தரப்பட்டது. இதனால் வாதிக்கு நட்டம் ஏற்பட்டது. தீபாவளிக்குப் பின்னர்க் குறித்த காலங்கழித்துத் தரப்பட்டதால் அவருக்கு வரவேண்டிய இலாபம் போய்விட்டது. வாங்கின விலைக்கும், வாதி திரும்ப விற்ற விலைக்கும் உள்ள வேறுபாட்டை இழப்பீடாகத் தரும்படி நீதிமன்றம் கட்டளையிட்டது.

அவர் இலாபமாகச் சம்பாதித்திருக்கும் பணத்தை நட்டமாகக் கருதிக் கொடுக்கவில்லை. உத்தரவாத முறிவு ஏற்பட்டாலும் நட்டஈடு தரவேண்டும். அதாவது, சரக்கு எந்த அளவிற்கு அளிப்பதாக உத்தரவாதம் செய்யப்பட்டதோ அந்த அளவிற்குச் சரக்கில்லையென்றால் இழப்பீடு தரப்படும். டின்களில் அடைக்கப் பட்ட சால்மன் மீனை (Salmon fish) ஒருவர் வாங்கி அவர் மனைவிக்குத் தந்தார். அதை அவள் உண்டதும் இறந்து விட்டாள். சால்மன் மீன் ஆரோக்கியமற்ற உணவாகிவிட்டதால் உத்தரவாதமுறிவு ஏற்பட்டது. எனவே, இழப்பீடு தரச்சொல்லி நீதிமன்றம் ஜாக்சன் எ. வாட்சன் (Jackson *vs.* Watson) என்ற வழக்கில் தீர்ப்புக் கூறியது. தனிப்பட்ட அசௌகரியங்கள் காரணமாக ஒருவர் இழப்பீடு பெறலாம்.

சில தனிப்பட்ட சூழ்நிலைகளில் தனிப்பட்ட அல்லது தனி முறை இழப்பீடு தோன்றும். இத்தகைய நட்டஈடு கோரி அதைப் பெறுவதற்கு அந்தத் தனிப்பட்ட சூழ்நிலையை அறிந்து ஒப்பந் தத்தில் பிரதிவாதி ஈடுபட்டிருக்க வேண்டும். ஹேட்லே எ. பாக் செண்டேல் (Hadley *vs.* Baxendale) என்ற வழக்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. ஒரு மில்லின் உரிமையாளர் உடைந்த இயந்திரத் தண்டைப் பழுதுபார்க்கப் பிரதிவாதியிடம் தந்தார். பிரதிவாதியின் எழுத்தர் பேச்சுவாக்கில் மில் ஓடவில்லை என்று சொல்லிவிட்டார். எனவே, இயந்திரம் பழுதுபார்ப்பதில் தாமதம் ஏற்பட்டது. வியாபாரம் இழப்பிற்குத் தனிமுறை இழப்பீடு கோரி வழக்குத் தொடரப்பட்டது. ஆனால், நீதிமன்றம் சாதாரண இழப்பீடு தந்து தீர்ப்புக் கூறியது. அதாவது, பழுதுபார்ப்பதில் ஏற்பட்ட தாமதத் திற்குத் தகுந்த உண்மையான நட்டத்தை மட்டும் தரச் சொல்லியது; தனிமுறை இழப்பீட்டை நிராகரித்துவிட்டது. பிரதிவாதியின் கவனத்திற்குத் தனிப்பட்ட சூழ்நிலை கொண்டு வரப்பட்டுப் பின்னர் அவர் அதை ஏற்றுக்கொண்டால் தனிமுறை இழப்பீடு தரப்படும் என்பதை நீதிமன்றம் ஆய்ந்து கூறியது. ஹார்ன் எ. மிட்லாண்ட் ரயில்வே கம்பெனி (Horne *vs.* Midland Railway Co.) என்ற வழக்கில், ஓர் ஐரோப்பிய வியாபார நிறுவனம் இலண்டனிலுள்ள ஒரு வியாபாரிக்கு போர்ப்படையினர் பயன்படுத்தும் காலணிகள் அனுப்புவதாக ஒத்துக்கொண்டது. ஆனால், குறிப்பிட்ட நேரத்தில் அவற்றைக் கொடுக்கவில்லை. எனவே, வாதிக்கு அந்தத் தனிமுறை இழப்பீடு தரச்சொல்லி நீதிமன்றம் ஆணையிட்டது. காலம் கடத்திப் பொருள் தந்ததன் விளைவும், தனிப்பட்ட சூழ்நிலையில் பொருள் தரவேண்டிய அவசியமும் பிரதிவாதிக்குத் தெரியும்.

எச்சரிக்கை இழப்பீடு, செய்த குற்றத்திற்குத் தண்டனை அளிப்பதாக அமைந்துள்ளது. சாதாரணமாக இழப்பு அளிக்கப்படுவதில்லை; குற்றம் அல்லது மோசடி நிரூபிக்கப்பட்டுவிட்டால் அப்பொழுது இழப்பு அளிக்கப்படுகிறது. வாடிக்கைக்காரர் பணம் இருந்தும் அவர் விடுத்த காசோலைக்குப் பணம் கொடுக்காமல் மறுப்பது இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. மேலும் அவர் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் குற்றம் செய்ததாக நிரூபிக்க வேண்டும். ஒருவர்மீது விரோதமாகத் தகுந்த காரணமில்லாமல் வழக்குத் தொடர்ந்தால் அதற்கு நட்டஈடு உண்டு.

ஒருவர் உண்மையில் பணமதிப்புள்ள நட்டத்தை அடையாத போது, அவருக்குக் கொடுப்பது பெயரளவு நட்டஈடு. நியாயம் இல்லையெனப் பரிகசிக்கப்பட்ட நியாயத்தில் உரிமையை நிலை நாட்டவும் நட்டஈடு தரப்படுகிறது. இத்தகைய வழக்குகளில் நீதிமன்றம் பெயரளவிற்கு, அதாவது ஒன்று அல்லது இரண்டு ரூபாவுக்கு இழப்பீடு அளிக்கிறது. நட்டஈட்டிற்காகத் தீர்ப்புக் கட்டளை பெற்றவர் வழக்குச் செலவைப் பெற உரிமையுண்டு. அதேவிதம் பாதிக்கப்பட்டவருக்கும் சில கடமைகள் உண்டு. அதாவது, நட்டத்தைக் கூடுமானவரை குறைக்கவேண்டும். உதாரணமாக, சில பொருள்களைச் சொன்னபடி கொடுக்கவில்லையென்றால், அன்றைய விலைக்கு அங்காடியில் வாங்கிக்கொண்டு அவ் விலை ஏற்கெனவே ஒத்துக்கொண்ட விலையைவிடக் குறைவாக இருந்தால், மீதிப் பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்; வாளாவிருந்துவிட்டு முழு இழப்பீட்டையும் பெறலாம் என்று இருக்கக்கூடாது.

சில நேரங்களில் நிகழக்கூடிய ஒப்பந்த முறிவிற்காகப் பணம் செலுத்துவதுமுண்டு. இதற்குக் கொடுத்துக் குறைத்துக்கொள்ளும் முடிவான (Liquidated) அல்லது அறுதியிட்ட இழப்பீடு என்று பெயர். நியாயமானதாக இருந்தால்தான் நீதிமன்றம் இத் தொகையை அனுமதிக்கும். அறுதியிட்ட இழப்பீட்டிற்கும், தண்டனைத் தொகைக்கும் (Penalty) வேறுபாடு ஆங்கிலச் சட்டத்தில் காணப்படுகிறது. தண்டனைத் தொகை தண்டிப்பதை உட்கருத்தாகக் கொண்டு விதிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையோடு காணப்படுகிறது. இங்கிலாந்து நாட்டின் நீதிமன்றங்கள் இத்தகைய நிபந்தனையை விதிப்பதில்லை. அவை அறுதியிட்ட இழப்பீட்டை ஏற்கின்றனவேயொழியத் தண்டனைத் தொகையை அல்ல. நம் நாட்டில் ஒப்பந்தச்சட்டத்தின் 74ஆவது பிரிவு நியாயமான இழப்புத் தொகையை அளிக்க ஆதரவு தருகிறது. ஒப்பந்த முறிவு ஏற்பட்டால், ஒரு குறிப்பிட்ட

தொகையைத் தரவேண்டும் என முன்கூட்டியே உறுதி செய்யப் பட்டிருந்தால், அத் தொகையைத் தந்துவிடவேண்டும்; அல்லது சிறிது குறைத்துக்கொண்டு தரலாம்; மிகவும் குறைத்துவிட முடியாது. ஒரு கடனாளி கடனைத் திருப்பித் தருவதற்குத் தவறிய தேதியிலிருந்து அதிக வட்டி தருவதாக ஒத்துக் கொண்டால் அந் நிபந்தனையை வலியுறுத்தலாம். ஆனால், அத்தகைய கூடுதலான வட்டி கடன் வாங்கிய தேதியிலிருந்து தான் கொடுக்கவேண்டும்; கடன் கொடுக்கத் தவறிய தவணைத் தேதியிலிருந்து அன்று என்று சொன்னால் நீதிமன்றம் அனுமதியாது. ஏனெனில், இது நியாயமானதன்று.

நேர்மையான பரிகாரம் (Equitable Relief)

சில நிகழ்ச்சிகளில் பணமாகத் தரும் இழப்பீடு போதுமான பரிகாரமாக ஆகாது. பொதுச் சட்டத்தில் கூறப்படும் இழப்பீட்டுப் பரிகாரம் போதுமானதன்று. அதாவது, எங்கு நேர்மையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவோ, அங்குச் சில பரிகாரங்கள் தோன்றும். அதாவது, தடையுத்தரவு அளித்தல், தனிப்பட்ட நிறைவேற்றம், திருத்தி அமைத்தல் போன்ற பரிகாரங்கள் எழலாம். மார்டின் எ. நட்கின் (Martin *vs.* Natkin) என்ற வழக்கில், ஒரு மாதாகோவில் மணி இரவு பகல் முழுதும் அடித்துக்கொண்டே இருந்ததால் அங்கு வாழும் மக்களுக்குத் தொல்லையாக இருந்தது. எனவே, அவர்கள் கிறித்தவ மத குருவைக் கண்டு, 'தாங்கள் மாதாகோவிலைப் புதுப்பித்து வளைவு மண்டபம் கட்டிப் புது மணி பொருத்திவிடுகிறோம். ஆனால், மணி குறிப்பிட்ட காலத்தில் மட்டும் அடிக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர்; அவரும் அதற்கிணங்கினார். மாதாகோவிலருகில் வாழ்மக்களும் தாங்கள் சொல்லியபடி காரியங்களை நிறைவேற்றினார்கள். ஆனால் முன்போலவே மணி சதா அடித்துக்கொண்டிருந்தது அவர்களுக்கு மிகவும் தொல்லையாக இருந்தது. எனவே, அவர்கள் வழக்குத் தொடுத் தார்கள். மாதாகோவில் மதகுரு இழப்பீடு தருவதாகச் சொன்னார். அங்கு வாழும் மக்களுக்குப் பணம் பெறுவது முக்கிய நோக்க மன்று; அவர்களின் தொல்லை அகற்றப்படவேண்டும். அதாவது, சதா மணி அடித்துக்கொண்டே இருப்பதைத் தடுக்கவேண்டும். எனவே நீதிமன்றம் மாதாகோவில் அதிகாரிகள்மீது தடையுத் தரவு பிறப்பித்து எப்பொழுதும் மணி அடிக்கும் செயலை ஆதரிக்கக்கூடாது என்றும், சில நேரங்களில் மணி அடிக்கலாம் என்றும் தீர்ப்புக் கூறியது.

இத்தகைய தடையுத்தரவு மேற் சொன்னபடி தவற்றைச் செய்யாமல் தடுப்பது (Restrictive) அல்லது ஒரு செயலைச் செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்துவது (Mandatory) ஆக இரு விதமாகப் பிறப்பிக்கப்படலாம். எங்குச் சரியாகச் செயலாற்ற முடியாதோ அங்குச் செய்யவேண்டிய தடையுத்தரவு (Mandatory Injunction) அமல்படுத்த இயலாது. லம்லே எ. வேக்னெர் (Lumley *vs.* Wagner) என்ற வழக்கில் ஒரு பாடகர் ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தில் ஒரு குறிப்பிட்ட பணத்தொகைக்காகப் பாடுவதாக ஒத்துக்கொண்டார். ஆனால், பதினைந்து தினங்களுக்குள்ளாகவே வேறு இடத்தில் அதிகப் பணம் கிடைப்பதால் இங்குக் கச்சேரியை விட்டுவிட்டு அங்குப் போய்விட்டார். அவர் வேறு எங்கும் பாடமுடியாதபடி கட்டுப்படுத்தும் தடையுத்தரவை (Restrictive Injunction) நீதிமன்றம் வழங்கியது. ஆனால் செய்ய வேண்டிய தடையுத்தரவை, அதாவது, அந்தப் பாடகர் முதலில் சொன்ன இடத்தில் பாடவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறவில்லை. தண்ணீர் உள்ள இடத்திற்குக் குதிரையை ஓட்டிச் செல்லலாம். ஆனால், குதிரையைத் தண்ணீர் குடிக்கும்படி கட்டாயப்படுத்தமுடியாது என்பதைப்போல இஃது உள்ளது. ஆனால், வேறு ஒரு வழக்கில் கார் ஓட்டும் டிரைவர் ஒருவர் தம் பக்கத்து வீட்டுக்காரரின் சுவரின்மீது காரை ஓட்டிச் சேதப்படுத்தி விட்டார். வழக்குத் தொடர்ந்ததில் காரின் உரிமையாளர் அந்தச் சுவரைக் கட்டிக்கொடுத்துவிடவேண்டும் என்று நீதிமன்றம் செய்ய வேண்டிய தடையுத்தரவைப் பிறப்பித்தது.

நிறைவேற்றும் காலத்தைப் பொறுத்தமட்டில் ஒரு தடையுத்தரவு தாற்காலிகமாக அல்லது நிரந்தரமாக இருக்கலாம். கட்டுப்படுத்தும் கட்டளை சில மாதங்களுக்கு அதாவது, தீர்ப்புக் கூறாத வழக்கு முடியும்வரை அல்லது, குற்றப்பிரிவு விதியின்கீழ் 144 பிரிவு அமலிலிருக்கும்வரை தடையுத்தரவு தாற்காலிகமானதாக இருக்கலாம். குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில்தான் அஃது அமலில் இருக்கும். ஆனால், அதற்குமாறாக நிரந்தரமான தடையுத்தரவு எப்பொழுதும் இருக்கும். ஒரு வீட்டின் உரிமையாளர் வெகு நாளாகப் போதுமான காற்று, வெளிச்சம் போன்ற வசதியை அனுபவித்து வருகிறார். ஆனால், அதற்கு இடைஞ்சலாகப் பக்கத்தில் ஒருவர் வீடு கட்டுவாராயின் அவர் ஒரு நிரந்தரத் தடையுத்தரவு மூலம் அவ்வாறு செய்யத் தடுக்கப்படுவார்.

ஒரு குறிப்பிட்ட நிறைவேற்றம் என்பது மற்றொரு பரிகாரம். குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம் (Specific Relief Act) இப் பரிகாரம் பற்றிய சட்டக் கருத்துகளை உண்டாக்கியுள்ளது.

ஒருவர் எப்படிச் செய்து தருவதாக ஒத்துக்கொண்டாரோ அவ்வாறு செய்யவேண்டும் என்று நீதிமன்றம் ஒருவரை வற்புறுத்தும்போது அவர் அதைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையிடும். கரிகாலன், தன் நிலத்தை ரூ. 10,000-க்குச் சேரனிடம் விற்பதாக ஒத்துக்கொண்டு பின்னர் அதே நிலத்தை வளவனிடம் ரூ. 13,000-க்கு விற்றுவிட்டான். அதிகத் தொகை வருவதாலும், மேலும் சேரனுக்கு நட்டஈடு கொடுத்துவிடலாம் என்பதாலும் அவ்வாறு செய்துவிட்டான். ஆனால், சேரன் வழக்குத் தொடர்ந்து தனக்கே நிலம் விற்கப்படவேண்டுமென்று வாதாடினான். ஆனால், இத்தகைய குறிப்பிட்ட நிறைவேற்றம் எல்லா வழக்குகளிலும் நிறைவேற்றப்படுவதில்லை. நீதிமன்றம் எல்லா உண்மைகளையும் ஆய்ந்து அத்தகைய சூழ்நிலையில் பண நட்டஈடு போதுமா, அல்லது ஒத்துக்கொண்டபடியே ஒப்பந்தம் நிறைவேற்றப்படவேண்டுமா என்று தீர்மானித்துத் தீர்ப்புக் கூறும். தகுந்த காரணங்கள் இருந்தால் பத்திரங்களில் ஏற்படும் தவறுகளைத் திருத்தியமைக்க நீதிமன்றம் அனுமதி தருகிறது. மேலும், பாதிக்கப்பட்டவர் ஒப்பந்த முறிவு ஏற்படுத்தித் தம் கடமைகளிலிருந்து விடுதலை அடைய வழக்குத் தொடரலாம். மேலும், ஒருவர் செய்த வேலை அளவிற்கு நட்டஈடு கோரி, ஒப்பந்த முறிவு ஏற்படுவதற்குமுன் வழக்குத் தொடரலாம்.

10. அரை ஒப்பந்தங்கள் அல்லது ஒப்பந்தப் போல்வு

(Quasi Contracts)

ஒப்பந்தச் சட்டத்தின் 68ஆவது பிரிவு முதல் 72ஆவது பிரிவுவரை ஒப்பந்தங்களால் உருவாக்கப்பட்ட இத்தகைய தொடர்புகள்பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவை தொக்கியுள்ள அல்லது உருவாக்கியுள்ள ஒப்பந்தங்கள் என அழைக்கப்படுகின்றன. முனைவும் ஏற்பும் இல்லாதபோது சூழ்நிலையிலிருந்தும், நபர்களின் நடத்தையிலிருந்தும் சட்டம் வாக்குறுதியை ஊகிக்கிறது. ஒப்பந்தப் போல்வு கீழ்க்காணும் வகைகளைச் சாரும்:

1. பெற்றிருந்த அல்லது வைத்திருந்த பணம்பற்றிய வழக்கு (Action for Money had and received).

2. பணித்தகு தொகை (Quantum Merit)

3. கொடுக்கப்பட்ட கணக்கு (Account Stated).

4. அவசியமாகக் கொடுக்கப்பட்ட பொருள் (Necessaries Supplied)

5. பொருள் கண்டெடுத்தவனின் கடமைகள் (Obligation of Finder of Goods).

1. பெற்றிருந்த அல்லது வைத்திருந்த பணம் பற்றிய வழக்கு

வாதி பிரதிவாதிக்குப் பணம் கொடுத்து அதைத் திரும்பக் கோரும் போதும், பிரதிவாதியின் உபயோகத்திற்கு வேறு ஒருவரிடம் வாதி பணம் கொடுத்திருந்தபோதும், அல்லது மூன்றாம் மனிதரிடமிருந்து பிரதிவாதி பணம் பெற்றிருந்த போதும் இச் சூழ்நிலை ஏற்படுகிறது. அதாவது, பணம்பற்றிய வழக்கு ஏற்படுகிறது. தவறாக, தவறான மனிதருக்குப் பணம் செலுத்தப்பட்டிருக்கலாம்; கைம்மாறு செய்வதற்குத் தவறியிருக்கலாம். அல்லது மோசடி மூலம் பணம் பெற்றிருக்கலாம். எனவே, பெற்றிருந்த பணத்தை வழக்காடித் திரும்பப்பெறலாம். சில நேரங்களில் பிரதி

வாதிக்குச் சில அவசியமான கட்டுப்பாட்டினால் பணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை நேரலாம். முதலாளிக்குப் பதிலாக அவரின் பதிலாள் பணம்பெற்றுக் கணக்கில் கட்டாமலிருக்கலாம்; அவ்வாறு பெற்ற பணத்தைத் திருப்பித் தருவதற்கு வழக்காடலாம்.

2. பணித்தகு தொகை

வெளிப்படையான வாக்குறுதியில்லாதபோது, ஒருவர் தாம் செய்த வேலைக்குத் தக்கவாறு பணம் கேட்கும்போது இஃது எழுகிறது. தாம் அனுப்பிய சரக்கின் நியாயமான அளவிற்கு வாதி பணம் கோரலாம். இத்தகைய வழக்குகளில், சட்டத்தில் வாக்குறுதி கலந்திருக்கவேண்டும். ஒருவர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுக்கும்போது அல்லது விட்டுவிடும்போது இது தோன்றுகிறது. பிளான்சு எ. கோல்பர்ன் (Planche *vs.* Colburn) என்ற வழக்கில், ஒரு வாரஇதழில் ஒரு புத்தகத்தைப் பகுதி பகுதியாக வெளியிடுவதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், திடீரென்று வார இதழ் நிறுத்தப்பட்டது. வெளியிட்ட அளவிற் கேற்ப அந் நூலாசிரியர் பணம் பெறலாம் என்று நீதிமன்றம் தீர்ப்புக்கூறியது. கிரவான் எல்லீஸ் லிமிடெட் என்ற கம்பெனியில் ஒருவர் நிருவாக இயக்குநராக அமர்த்தப்பட்டார். ஆனால், அவரை நிருவாக இயக்குநராக அமர்த்துவதற்கு மற்றைய இயக்குநர்களுக்கு அதிகாரம் இல்லையெனப் பின்னர்த் தெரியவந்தது. எனவே, அவர் அப் பதவியை விடவேண்டியுள்ளதால் அவர் அதுவரை செய்த வேலைக்குச் சம்பளம் கோரி வழக்குத் தொடுத்தார். அது ஒரு செல்லாத ஒப்பந்தமாக இருந்தபோதிலும், அதுவரை செய்த வேலைக்குச் சம்பளம் தரவேண்டுமென்று நீதிமன்றம் கூறியது. ஒருவர் மற்றொருவரின் செயலால் பயனையடைந்தாலும், அப் பயனைத் திரும்பத் தரவேண்டும் என்று வாதாடினால், சட்டம் அதை ஆதரித்து அவரைத் திரும்பத் தரச் சொல்லி ஆணையிடுகிறது என்ற அடிப்படையில் இது அமைந்துள்ளது. சில நேரங்களில் ஒருவர் செய்த வேலைக்குத்தகுந்த நீதத்தில் பணம் தரவேண்டும் என்ற தொக்கிய வாக்குறுதி இருந்தால்தான் பரிகாரம் ஏற்படும். கட்டர் எ. பாவெல் (Cutter *vs.* Powell) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஜமைக்காவிலிருந்து லிவர்ப்பூலுக்குக் கடற்பயணம் செய்தால் கட்டருக்கு 30 கினியாக்கள் தருவதாக உடன்பாடு செய்யப்பட்டது. இடையிலேயே கட்டர் இறந்துவிட்டார். அவருடைய மனைவி, செய்த வேலைக்குச் சம்பளம் வேண்டி வழக்குத் தொடர்ந்தாள். ஒப்பந்தம் ஒரு முழு வேலையைச் சார்ந்ததென்றும், அதைத் தனியே பிரிக்கவியலாதென்றும் கூறி நீதி

மன்றம் அவர் மனைவிக்கு நிவாரணம் அளிக்க மறுத்துவிட்டது. ஆப்பிள்பீ எ. மியர்ஸ் (Appleby vs. Myers) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஓர் எந்திரத்தைப் பொருத்த வேண்டு மென்பது உடன்பாடு. ஒரு பகுதி எந்திரம்தான் பொருத்தப் பட்டது. அதுவும் தீயினால் நாசமாகிவிட்டது. எனவே, உடனே வேலையாள்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். செய்த வேலைக்கு ஏற்பக் கூலி தரப்படவில்லை.

3. கொடுக்கப்பட்ட கணக்கு

ஒருவர் காட்டிய கணக்கை மற்றொருவர் ஒத்துக்கொண்டு விட்டால், பின்னர் அவர் அதைத் திரும்பக் கிளறி மீண்டும் கணக்குக் காட்டவேண்டும் என்று சொல்லக்கூடாது. தீர்ந்த கணக்கை மோசடி என்று சந்தேகப்பட்டால்தான் திரும்பக் கேட்கவேண்டும். ஒத்துக்கொண்ட கணக்கில் பாக்கித் தொகை தருவதாக வாக்குறுதி தந்திருந்தால் அவ் வாக்குறுதியின்மேல் நடவடிக்கை எடுக்கலாம். தீர்க்கப்பட்ட கணக்கில் ஒவ்வொரு வரவு விவரத்தையும் காட்டவேண்டிய அவசியமில்லை.

4. அவசியமாகக் கொடுக்கப்பட்ட பொருள் அளித்தல்

மைனர் அல்லது பித்தர் ஆகியவர்களுக்கு அவசியமான பொருளை அளித்தோர், அவர்களின் சொத்துகளிலிருந்து தங்கள் சேவைக்கான பணத்தைப் பெறலாம் என்று ஒப்பந்தச் சட்டத்தின் 68ஆவது பிரிவு கூறுகிறது. இத்தகைய நிகழ்ச்சிகளில் பொறுப்பு தனிப்பட்ட நபர்மீது விழாமல் அவர்தம் சொத்து களின் மீது விழுகிறது. இழப்பீடு தரவேண்டுமென்று சட்டத்தில் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது.

5. பொருள் கண்டெடுத்தவனின் கடமைகள்

தொலைந்த பொருளைக் கண்டுபிடித்தோரின் கடமைகள் யாவை என்பதை ஒப்பந்தச் சட்டத்தின் 71ஆவது பிரிவும், 151ஆவது பிரிவும் கூறுகின்றன. ஓர் ஒப்படை பெறுபவரின் (Bailee) பொறுப்பு எவ்வாறோ அவ்வாறு அவருடைய பொறுப் புள்ளது. அப் பொருளின் உண்மையான உரிமையாளரைக் கண்டு பிடித்து அவரிடம் அதை ஒப்படைக்கும்வரை அவர் அப் பொருளை மிகவும் கண்காணிக்கவேண்டும். அத்தகைய சொத்து கள் பற்றி அவரை ஒப்பந்தத்தில் ஒரு வழக்குத் தொடுக்கலாம்.

இவ்வாறு அரை ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தப் போல்வு, சட்டத்தின் மூலமாக ஏற்பட்ட ஒப்பந்தமாகும். உண்மையில்

அவை ஒப்பந்தம் இல்லை. ஆனால், சட்டத்தின் கண்களுக்கு அவை ஒப்பந்தமாகும். இத்தகைய ஒப்பந்தங்களில் இருவரின் இசைவும் இருக்கவேண்டிய அவசியமில்லை. நேர்மைநெறியின் அடிப்படையில் இத்தகைய ஒப்பந்தங்களுக்குச் சட்ட ஏற்புக் கிடைத்துள்ளது. இத்தகைய நிகழ்ச்சிகளில் தோன்றும் சட்டம் ஒருவர் வேறு ஒருவரிடமிருந்து நன்மை பெற்றால், அவருக்கு அதாவது அந் நன்மை செய்தோருக்கு அதற்காக ஈட்டுத்தொகை அளிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறது. இத்தகைய ஒப்பந்தங்கள் உடன்பாடுகளால் தோன்றுவதில்லை. சட்டத்தால் மறைவாகத் தொக்கிக் கூறப்படுகின்றன. வெளிப்படுத்திய உடன்பாட்டால் ஏற்பட்ட கடமைகள்போன்றும், கடமைகளைச் சட்டம் மனிதர்கள்மீது சுமத்துவதுண்டு. என்றாலும், அத்தகைய ஒப்பந்தங்கள் ஒரு நிறுவனத்தின் அதிகாரத்திற்கும் அப்பாற்பட்டதென்றால், அந் நிபந்தனைகளை வலியுறுத்த முடியாது. சுருங்கச் சொல்லப்போனால் இவ்வகை ஒப்பந்தங்கள் வழக்கறிஞர்களும் நடுவர்களும் இணைந்து நேர்மையின் அடிப்படையில் உண்டாக்கிய ஒருவகை ஒப்பந்தங்களாகும்.

11. ஈட்டுறுதியும் உத்தரவாதமும்

(Indemnity and Guarantee)

உத்தரவாதம் என்ற தலைப்பின்கீழ் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 126-லிருந்து 147வரை இவ் வுத்தரவாதச் சட்டத்தைக் கூறுகின்றன. உத்தரவாதம் என்பது ஒரு வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குச் செய்யப்படும் ஒப்பந்தமாகும்; அல்லது வேறு ஒருவர் தம் கடமையைச் செய்யத் தவறிவிட்டால் அக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பாகும் என்று பிரிவு 126 விளக்குகிறது. 'உத்தரவாதம் என்பது ஒரு கடனுக்கோ அல்லது ஒருவர் சொன்ன சொல் தவறும்போது அதை நிறைவேற்றுவதற்கோ அளிக்கப்படும் ஈட்டு உடன்பாடாகும்' என்று ஆங்கிலச் சட்டம் விவரிக்கிறது. உதாரணமாக அதியமான், பல்லவனுக்கு ரூ. 5000 கொடுக்கச் சொல்லிப் பரந்தாமனை வேண்டுகிறார். மேலும் பல்லவன் கொடுக்கத் தவறினால் தாம் தருவதாக அதியமான் சொல்கிறார் என்றால், இங்கு ஓர் உத்தரவாத ஒப்பந்தம் உதயமாகிறது என்று பொருள். இங்குப் பல்லவன் முக்கியக் கடனாளி. பரந்தாமன் கடன் கொடுத்தோர். அதியமான் உத்தரவாதம் கொடுப்பவர். பொது ஒப்பந்தக் கோட்பாடுகள் இங்குப் பின்பற்றப்படுகின்றன. கருத்தொருமிப்பு, கைம்மாறு, தடையற்ற இசைவு போன்றவை இவண் இருக்கவேண்டும். இதன் நோக்கம் சட்டபூர்வமானதாக இருக்கவேண்டும். ஒரு சிறப்புப் புதுமை என்னவென்றால். மைனர் முக்கியக் கடனாளியாக இருக்கலாம். முக்கியக் கடனாளி பெற்ற கைம்மாறு உத்தரவாத ஒப்பந்தத்திற்குப் போதுமான கைம்மாறாக இருக்க வேண்டும். தனித்தனியான கைம்மாறு இருக்கவேண்டிய அவசியமில்லை. மேற்கூறிய உதாரணத்தில் பரந்தாமனோடு பல்லவன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு ரூ. 5000 எடுத்துக்காட்டு. பல்லவனுக்கு அதியமான் வேண்டுகோளின்படி பணம் கொடுத்து அதனால் ஏற்படும் நஷ்டம், உத்தரவாதம் தருவதற்கு வாக்குறுதியளித்த அதியமானின் வாக்குறுதியை உறுதிப்படுத்தப் போதுமான கைம்மாறாகும். இதனை ஒரே சயத்தில் செய்யவேண்டும். உதாரணமாக அருள், பாலனுக்குப் பணம் தருகிறார். ஒப்பந்தம் முடிவடை

கிறது. சந்திரன் வெகுநாள்கள் கழித்து இக் கடனுக்கு உத்தரவாதம் தருவதாகக் கூறுகிறார். ஆனால், பின்னால் கூறப்பட்ட இவ் வுடன்பாடு செல்லாது. காரணம் பின் கூறப்பட்ட வாக்குறுதியை ஆதரித்து அங்குக் கைம்மாறில்லை.

உத்தரவாத வகைகள்

சட்டரீதியான உத்தரவாத வகைகள் கீழே தரப்பட்டுள்ளன:

(1) நிகழும் கடனுக்கும் வருங்காலக் கடனுக்கும் உத்தரவாதம்.

(2) குறிப்பிட்ட உத்தரவாதம் அல்லது தொடரும் உத்தரவாதம்.

(3) உறுதி செய்யப்பட்ட கடன்பற்றி உத்தரவாதம் அல்லது பொதுவான ஏற்றி (Floating Charge).

(4) உத்தரவாதம் ஒரு முழுத் தொகைக்கோ குறிப்பிட்ட அளவுள்ள தொகைக்கோகூட இருக்கலாம்.

1. நிகழும் அல்லது வருங்காலக் கடன் என்பது தானே விளங்கும். 129ஆவது பிரிவுத் தொடரும், உத்தரவாதத்தை விளக்குகிறது. அடுக்கடுக்கான நடவடிக்கைகளை அது உண்டாக்குகிறது. எழிலன் என்பவர் பாலகிருஷ்ணனுக்கு கைம்மாறு செய்யும் பொருட்டு, சந்திரன் என்பவரை அமர்த்தி, பாலகிருஷ்ணனின் சொத்துகளிலிருந்து வருவாயைச் வசூலிக்கச் செய்தார். மேலும், ரூ. 5000-க்கும் வருவாயைச் சந்திரன் ஒழுங்காக வசூலித்துத் தருவதற்கும் அவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

2. இங்கு ஒரு தொடரும் உத்தரவாதம் தரப்படுகிறது.

3. ஒரு தனிப்பட்ட நடவடிக்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் அது சாதாரண உத்தரவாதமாகும். உதாரணமாக, கண்ணன் கர்ணனுக்குத் தந்த நான்கு மூட்டைச் சர்க்கரையின் விலையை அவன் தவறாமல் செலுத்துவதற்குக் கனகராசு உத்தரவாதம் தருகிறார். இது ஒரு தனி நடவடிக்கைக்குத் தந்த ஒரு சாதாரண உத்தரவாதம். உத்தரவாதம் தந்தவர் இறந்தபோதும் நோட்டீஸ் ஒன்று விட்டபொழுதும் தொடரும் உத்தரவாதம் நின்று போய்விடும். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் எதிர்கால நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் மிகுந்த பலன் உண்டு.

4. ஒரு முழுத் தொகைக்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகைக்கும் உத்தரவாதம் இருக்கும். கடனாளி திவாலாகி விடும்பொழுது இது முக்கியமாகக் கருதப்படுகிறது. இங்கு முழுத்தொகை அல்லது முழுத்தொகையின் ஒரு பகுதிக்காக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கவேண்டும். எல்லீசுக்கும் எம்மானுவேலுக்கும் (Ellis *vs.* Emmanuel) நடந்த வழக்கில், உறுதிசெய்யப்பட்ட கடனுக்கு உத்தரவாதம் அளிக்கப் பட்டதில், முழுக் கடனுக்கும் உத்தரவாதம் என்று வைத்துக் கொள்ளலாம். யாசிம்மிற்குப் பரந்தாமன் ரூ. 50,000 தரவேண்டும். சக்கிரியா ரூ. 30,000-க்கு உத்தரவாதம் தந்துள்ளார். இங்கு உத்தரவாதம் ஒரு பகுதிக்குத்தான். அதாவது ரூ 50,000-ல் ரூ. 30,000-க்குத்தான் உத்தரவாதம் அளிக்கப்பட்டிக்கிறது. பரந்தாமன் திவாலாகிவிட்டால் யாசிம், சக்கிரியாவிடமிருந்து ரூ. 30,000-மும் பரந்தாமன் சொத்திலிருந்து ரூ. 5000-மும் பெறலாம். காரணம் திவாலான கடனாளி சொத்தைப் பங்கு போட்டுப் பார்த்தால் ஒரு ரூபாவுக்கு 25 பைசாதான் வருகிறது. பரந்தாமன் சொத்திலிருந்து சக்கிரியா ரூ. 7500 ரூபாவுக்கு இருபத்தைந்து பைசாவீதம் ரூ. 30,000-ன் பேரில் பெற்றிடுவார். ஆனால், உத்தரவாதம் முழுத்தொகையான ரூ 50,000-லிருந்து அது ரூ.30, 000-க்கு வரையறுக்கப்பட்டிருந்தால் யாசிம் சக்கிரியாவிடமிருந்து ரூ. 30,000-மும் பரந்தாமனின் சொத்தி லிருந்து ரூ. 12,500 அதாவது 50,000-ல் 25 பைசா வீதம் பெற்றதைப் பெறலாம். உயர்ந்த பங்காதாயம் அளித்தாலொழியச் சக்கிரியாவிற்கு ஒன்றும் கிடைக்காது.

உத்தரவாத ஒப்பந்தம் செய்திகள் அனைத்தையும் வெளிப் படையாகக் கொண்ட ஒப்பந்தம் அன்று. மேலும் தேவையு மில்லை; அப்படி உள்ளதைச் சொல்லாவிட்டாலும் அஃது ஒப்பந்தத்தைக் குலைக்காது. என்றாலும், முழுக்க எல்லா வற்றையும் மறைத்தலாகாது. பாதுகாப்பு ஒப்பந்தத்தை யொத்துள்ளஉண்மை அல்லது, விசுவாச ஒப்பந்தத்தில் முக்கியத் தகவல்களைத் தெரிவித்துவிட வேண்டியது மிகவும் அவசிய மானது.

உத்தரவாதத்திலிருந்து ஈட்டுறுதி ஒப்பந்தம் வேறுபடுகிறது. ஒப்பந்தச் சட்டத்தின் 124ஆவது பிரிவு ஈட்டுறுதியைக் கீழ்க் காணுமாறு விவரிக்கிறது. 'தன் நடத்தையாலும் அல்லது பிறர் நடத்தையாலும், ஒருவருக்குப் பிறரால் ஏற்படும் நட்டத்திலிருந்து காப்பாற்ற ஒருவர் தரும் வாக்குறுதி ஒப்பந்தம்தான் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். ஆனால் ஆங்கிலச் சட்டத்தின் விளக்கம் இந்தியச்

சட்டத்தின் விளக்கத்தைவிட விரிவானது : 'ஒரு நடவடிக்கையால் ஏற்பட்ட நட்டத்திலிருந்து ஒரு நல்லவரைக் காப்பாற்றச் செய்யப்படும் வாக்குறுதிதான் ஈட்டுறுதி ஒப்பந்தம்' என்று விவரிக்கிறது ஆங்கிலச் சட்டம். இஃது உட்கிடையான வெளிப்படையான வாக்குறுதிகளைக் குறிக்கிறது. விபத்து ஏற்பட்டதன் காரணமாக ஏற்படும் நட்டத்தையும் இஃது உள்ளடக்கியுள்ளது. சட்டம் நிலைநாட்டலால் ஈட்டுறுதி ஏற்படுகிறது. ஆனால் இந்தியச் சட்டத்தின் எல்லாச் செய்திகளும் சொல்லப்படவில்லை. ஆங்கிலச் சட்டத்தின் நியாயமான கோட்பாடுகள் இந்தியச் சட்டத்திற்கும் பொருந்தும்.

உத்தரவாதத்திற்கும் ஈட்டுறுதிக்கும் உள்ள வேறுபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன :

1. உத்தரவாதத்தில் கடன் கொடுத்தோர், முக்கியக் கடனாளி, உத்தரவாதம் செய்தவர் ஆகிய மூன்று பேர்கள் உண்டு. ஆனால் ஈட்டுறுதி கோருபவர், ஈட்டுறுதி தருபவர் ஆகிய இருவர்கள்தாம் ஈட்டுறுதி ஒப்பந்தத்தில் காணப்படுகின்றனர்.

2. உத்தரவாதம் தருபவரின் பொறுப்பு முதன்மையானதன்று. ஆனால், ஈட்டுறுதி தருபவரின் பொறுப்பு முதன்மையானது.

3. வெளித்தோன்றும் கடனுக்கோ அல்லது கடமைக்கோ உத்தரவாதம் தரப்படுகின்றது. ஆனால் ஈட்டுறுதி எதிர்காலத்தில் தோன்றும் விபத்திற்கோ அல்லது நிகழ்ச்சிகோ வாக்குறுதி தந்து பெரும்பாலும் நட்டத்தில் முடிகிறது.

4. உத்தரவாதம் நிறைவேறிய பின்னர்க் கடனாளிமீது வழக்குத் தொடரலாம். ஆனால் ஈட்டுறுதியில் சில சமயங்களைத் தவிர, பெரும்பாலும் நட்டம் பொறுப்பேற்பவரையே சாருகிறது.

5. உத்தரவாதத்தைத் தவிர, பொறுப்பேற்றவர் அந் நடவடிக்கையில் வேறு எதையும் அக்கறையோடு பார்ப்பதில்லை. ஈட்டுறுதி தவிர, பொறுப்பேற்பவர் நடவடிக்கையில் உள்ள மற்றக் காரியங்களையும் அக்கறையுடன் கவனிக்கிறார்.

6. பணம் செலுத்திய உடனே பொறுப்பாளி உடனே தமக்குள்ள உரிமையின் காரணமாக வழக்குத் தொடரலாம். ஆனால், ஈட்டுறுதியில் ஏற்கெனவே உடன்பாடிலிருந்தாலொழிய பொறுப்பேற்றவர் தம் பெயரைப் பயன்படுத்தி வழக்குத் தொடர முடியாது. அவ்வாறு உடன்பாடிருந்தால் ஈட்டுறுதி பெறுபவரின் மேல் வழக்குத் தொடுக்கலாம்.

சுருங்கச் சொல்லப்போனால் உத்தரவாதத்திற்கும் ஈட்டுறுதிக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டுபிடிக்க ஒரு சோதனை செய்யலாம். அதாவது பிரதிவாதிக்கு ஒப்பந்த நடவடிக்கையில் அக்கறை இருந்தால் அஃது ஈட்டுறுதி என்றும், அக்கறை இல்லையென்றால் அஃது உத்தரவாதமென்றும் உணரலாம். உத்தரவாதம் தந்தவரின் உரிமைகளை 140, 141, 145 போன்ற பிரிவுகள் கூறுகின்றன. பணம் செலுத்துவதற்கு முன்னும், பணம் செலுத்தும்போதும், பணம் செலுத்திய பிறகும் அவருக்குச் சில உரிமைகள் உண்டு. பணம் செலுத்துவதற்கு முன், முக்கியக் கடனாளிதான் பணம் தரவேண்டும், தம்மிடம் கோரப்படலாகாது என்று வழக்குத் தொடரலாம். ஒரு பணியாளருக்கு நன்னடத்தை ஜாமீன் கொடுத்திருந்தால் அவரை வேலையைவிட்டு நீக்கும்படி கேட்டுக்கொள்ளலாம். பணம் செலுத்தும்போது கடன் கொடுத்தோர்களை, ஈடுகளை வரிசைப்படி அல்லது காலக் கிரமப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று வேண்டிக்கொள்ளலாம். உதாரணமாக நிலம், கட்டடம் ஆகிய இரு சொத்துகளும் ஆறுமுகத்திற்கு அடைமானம் வைக்கப்பட்டுள்ளன. அதில் பொறுப்பாளியாக வரும் பாலனுக்குக் கட்டடம் அடைமானம் வைக்கப்பட்டிருந்தால், அவர் ஆறுமுகத்தை நிலம் சம்பந்தப்பட்ட உரிமையை மட்டும் முதலில் பயன்படுத்தவேண்டித் தம் தொகையைத் திரும்பப் பெறுவதற்கு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவார். பாலனின் நன்மைக்காகக் கட்டட சம்பந்தப்பட்ட உரிமையை விட்டுக்கொடுக்கும்படி வேண்டுவார்.

பணம் செலுத்தும் தவணைத் தேதிவந்த பிறகு உத்தரவாதம் தந்தவர் மாற்றமர்வு (Subrogation) மூலம் ஒரு நல்ல உரிமையைப் பெறுகிறார். மாற்றமர்வு என்றால் கடன் கொடுத்தோர் தமக்குப் பதிலாகக் கடன் திருப்பிப் பெறும் உரிமையை, உத்தரவாதம் செய்தவருக்கு மாற்றித் தந்து விடுகிறார். ஈட்டுறுதி ஒப்பந்தங்களில் மாற்றமர்வு ஒரு கிளை ஒப்பந்தமாகும். கடனாளி மீதுள்ள எல்லா உரிமைகளையும் கடன்கொடுத்தோரிடமிருந்து பொறுப்பாளி பெற்றுவிடுகிறார். எடுத்துக்காட்டாக, பாரி என்பவர் காரி என்பவருக்குக் கடன் பட்டிருக்கிறார். காரி ஈடாகத் தம் வீட்டையும் தனிநபர் பொறுப்பாகக் கண்ணனையும் கூறியுள்ளார். கண்ணன் (உத்தரவாதம் தந்தவர்) காரிக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டார். பின்னர், காரியைக் கண்ணன் அணுகிப் பாரிக்குச் சொந்தமான வீட்டின்மீது நடவடிக்கை எடுக்க அவர் மாற்றமர்வு வேண்டுகிறார். முழுக் கடன்தொகையையும் செலுத்தினால் தான் இவ் வுரிமை கடன் செலுத்தியவருக்கும் கிடைக்கும்.

கோவர்தனதாஸ் எ. தி பேங்க் ஆப் பெங்கால் (Govardandas vs. The Bank of Bengal) என்ற வழக்கில், முழுத் தொகையைக் கடன்கொடுத்தோருக்குக் கொடுத்தால்தான் உத்தரவாதம் செய்தவர் மாற்றமர்வு பெறமுடியும். முழுத் தொகையில் தாம் பொறுப்பேற்றிருந்த தொகையை மட்டும் செலுத்திவிட்டால் போதாது என்று கூறப்பட்டது. உதாரணமாக, ஒரு கடனாளி ரூ. 50,000 தரவேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அகிலன் அதற்கு ரூ. 30,000வரை பொறுப்பேற்றிருந்தார். மீதித் தொகைக்குச் சொத்து ஈடாகக் காட்டப்பட்டுள்ளது. அகிலன் தம் பங்கான ரூ. 30, 000 செலுத்திவிட்டுச் சொத்துமீது உரிமை தாடமுடியாது. தம் கடனை மட்டும் பொறுப்பாளி பைசல் செய்து விட்டால் போதாது. கடன்கொடுத்தோர் அதை நியாயமான தாகக் கருதவேண்டும் எனவே, பொறுப்பாளி சொத்துஈட்டின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கமுடியாது. ஆனால், ஆங்கிலச் சட்டத்தில் அச் சொத்து ஈட்டின்மீது உத்தரவாதம் செய்தவர் உரிமை கோரலாம்.

148ஆம் பிரிவின்படி கூட்டு உத்தரவாதிகள் (Co-surities) கடன் தொகையை வழங்கும் உரிமை கொண்டுள்ளார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட உத்தரவாதிகள் இருந்து அதில் ஒருவர் கடனைப் பைசல் செய்துவிட்டால் அவர் ஏனைய உத்தரவாதி களிடமிருந்து அதை வசூலித்துக் கொள்ளலாம். அவர்களில் ஒருவர் திவாலாகிவிட்டால் மற்றவர்கள் முழுத் தொகையையும் சமமாக வழங்கவேண்டும். தம் பங்கைவிட அதிகமாக ஒருவர் செலுத்தி யிருந்தால்தான் அவர் மற்றவர்களைக் கேட்கும் உரிமை பெற்றவராவார். ஆங்கிலச் சட்டத்தில் கடனுக்கு வழங்கும் தொகை விகிதாசாரத்தின்படியேயொழிய நம் நாட்டில் உள்ளபடி சமமாக அன்று.

உத்தரவாதியின் பொறுப்பு (Liability of the Surety)

ஒப்பந்தத்திற்கு எதிர்மறையில்லையென்றால் உத்தரவாதி யின் பொறுப்பு முக்கியக் கடனாளியின் பொறுப்பை ஒத்ததாகும். அதாவது, கடனாளி தரவேண்டிய தொகைக்குமேல் உத்தர வாதியை யாரும் கேட்கக்கூடாது. ரூ. 50,000-க்கு உத்தர வாதம் அளிக்கப்பட்டிருந்தால் அந்தத் தொகைக்கு மட்டும்தான் அவர் பொறுப்பாவார். கடனாளி, கடன் கொடுத்தோருக்குச் சிறுகச் சிறுக ரூ. 10,000 கொடுத்திருந்தால் பாக்கியுள்ள ரூ. 40,000-க்குத்தான் அவர் பொறுப்பாளியாவார்.

மேலும், உத்தரவாதியைச் 'சலுகையுள்ள கடனாளி' (Favoured Debtor) என்றும் அழைப்பதுண்டு. ஒப்பந்தத்தை அதன் முழுப் பொருள் தரும்படியாக நிறைவேற்ற வேண்டும். உத்தரவாதிக்குத் தெரியாமல் அதன் நிபந்தனைகள் மாற்றப் பட்டால் அதற்கு அவர் பொறுப்பாளி அல்லர். விட்சர் எ. ஹால் (Whitcher *vs.* Hall) என்ற வழக்கில் ஒரு கடனாளிக்கு விடப்பட்ட 30 பசுக்களைப் பால் கறப்பதற்கான குத்தகைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால், கடனாளி கொஞ்ச நாளைக்கு 32 பசுக்களைப் பால் கறக்க வேண்டியுள்ளது. பின்னர் 28 பசுக்கள் அவருக்குத் தரப்பட்டன. எனவே குத்தகைப் பணம் குறைந்தது. பசுக்களின் உரிமையாளர் உத்தரவாதியின்மீது வழக்குத்தொடுத்தார். உத்தரவாதியின் பொறுப்பு 30 பசுக்களோடு நின்று விட்டது. 32 அல்லது 28 பசுக்கள் என்று மாறும்போது அவருக்குப் பொறுப்பில்லை என நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

கடனாளி தாமாகவே ஏற்றுக்கொண்ட பொறுப்பிற்கு உத்தரவாதி பொறுப்பாளி அல்லர். காரணம் சட்டத்தின் கண்களுக்குக் கடனாளியும் உத்தரவாதியும் ஒருவராகத் தென்படுவதில்லை. மைனர் செய்த ஒப்பந்தத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் உத்தரவாதி மட்டும்தான் பொறுப்பாவார். அதேபோல் கடன் கொடுத்தோரும் முதன்முதலில் கடனாளி (மைனர்) மீது வழக்குத் தொடரமாட்டார்; உத்தரவாதி மீதுதான் வழக்குத் தொடருவார். பணம் செலுத்தாத அல்லது செலுத்தத் தவறியபோது விடும் நோட்டீஸ் உத்தரவாதிக்கு அனுப்பக்கூடாது. உத்தரவாதி தாம் செய்த ஒப்பந்தத்தை முறிக்கக்கூடாது. தொடரும் உத்தரவாதத்தில் எதிர்கால நடவடிக்கைகளை வேண்டுமானால் அவர் முறித்துவிடலாம். ஆனால், இதற்குக் கடன்கொடுத்தவருக்கு அவர் ஒரு நோட்டீஸ் விடவேண்டும். இருந்தாலும் பாக்கித் தரவேண்டிய பணத்திற்கு அவர் எப்பொழுதும் பொறுப்பாவார்.

உத்தரவாத முடிவு (Discharge of Surety)

உத்தரவாத ஒப்பந்தம் செல்லாமல் போனபோது உத்தரவாதி தம் பொறுப்பிலிருந்து விடுதலையடைகிறார். மோசம் செய்தோ, பொய்க்கூற்றுக் கூறியோ உத்தரவாதம் ஏற்பட்டால் அது செல்லாது. கடன் கொடுத்தோர் முக்கியத் தருணத்தில் செயல்படுத்தாமல் வாளாவிருந்தால், அது செல்லாமல் போய்விடும். தகவல்களை வெளியிடாததால் தவறில்லை. ஆனால், உண்மைகளை மறைத்துவைப்பது தவறு. ஓர் ஒப்பந்தத்திற்கு

வேண்டிய முக்கியக் கூறுகள் இல்லாவிட்டாலும், உத்தரவாத ஒப்பந்தம் செல்லாது. வேறு ஒரு கூட்டு-உத்தரவாதியாக சேருவதாக ஒப்பந்தம் இருந்து அவர் சேராவிட்டால் ஒப்பந்தம் செல்லாது.

உத்தரவாதி இறந்துவிட்டால் ஒப்பந்த முறிவு ஏற்படும். அவர் தரவேண்டிய பொறுப்பிற்கு அவர் சொத்தை ஈடாக எடுத்துக்கொள்ள வழக்குத் தொடரலாம். ஒப்பந்த முறிவு நோட்டீஸ் விட்டுவிட்டு உத்தரவாதி தம் பொறுப்புகளிலிருந்து விடுதலையடையலாம். எதிர்கால நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில், அதுவும் தொடரும் உத்தரவாதமாக இருந்தால் உத்தரவாதியின் இறப்பே ஒப்பந்த முறிவாகத் திகழும் எனப் பிரிவு 131 விளக்குகிறது. ஆனால் கோபால்சிங்கிற்கும், பவானி பிரசாத்திற்கும் (Gopal Singh *vs.* Bhavani Prasad) நடந்த வழக்கில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ள குத்தகைப் பாக்கி உத்தரவாதம் ஏற்றவரின் இறப்பினால் தள்ளுபடியாகவில்லை.

கடன் கொடுத்தோரின் செயலாலும், உத்தரவாதியின் பொறுப்பு முடிவாகிறது. உத்தரவாதிக்குத் தெரியாமல் கடனாளி ஒப்பந்த நிபந்தனைகளை மாற்றினால், உத்தரவாதி தம் பொறுப்பிலிருந்து விடுபடுகிறார். அதேபோல் கடனாளியைக் கடன்கொடுத்தோர் ஒப்பந்தத்திலிருந்து விடுவித்தாலும், அல்லது உத்தரவாதிக்குத் தெரியாமல் கடனாளியோடு தனிப்பட்ட ஏற்பாடு செய்துகொண்டாலும், உத்தரவாதிக்கு ஒப்பந்த முடிவு ஏற்படுகிறது. கடனாளிமீது கடன்கொடுத்தோர் வழக்குப் போடாமல் தடுப்பதே உத்தரவாத ஒப்பந்த முடிவு என்று சொல்லமுடியாது. கடன்கொடுத்தோர் உத்தரவாதியின் பரிகாரத்தைத் தம் செயலால் அழித்திட எண்ணினாலும், உத்தரவாதி தம் பொறுப்பிலிருந்து விடுபடுகிறார். கடனாளி தந்த ஈட்டுப் பொருளை அவர் தொலைத்துவிட்டாலும் அல்லது பிரிந்தாலும் அந்த அளவிற்கு உத்தரவாதியின் பொறுப்பும் போய்விடுகிறது. உத்தரவாதியின் உரிமைகளுக்குப் பாதகமாகக் கடன்கொடுத்தோர் ஏதாவது செய்தாலும் அவர் பொறுப்பு முடிவடைகிறது. 'வாட்ஸ் எ. ஷட்டில்வொர்த்' (Watts *vs.* Shuttleworth) என்ற வழக்கில் பிரதிவாதியின் மரச்சாமான்களைத் தீ விபத்திற்கு எதிராகப் பாதுகாக்கவேண்டியது கடன் கொடுத்தோரின் கடமை. ஆனால், அவர் காப்புறுதி எடுக்கவில்லை. ஒரு

தீ விபத்தில் மரச்சாமான்கள் எரிந்துவிட்டன. இந்த வழக்கில் உத்தரவாதிக்குப் பொறுப்பில்லை என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. காரணம் அவர் பொறுப்பு முடிவாகிவிட்டது. கடனாளிக்கும் கடன்கொடுத்தோருக்கும் புதிய ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால் பழைய ஒப்பந்தப் பொறுப்பு உத்தரவாதிக்கு முடிவடைகிறது. புத்தீடு (Novation) மூலம் உத்தரவாதிக்குப் பொறுப்பு விடுதலை ஏற்படுகிறது.

12. ஒப்படைவு

(Bailment)

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 148ஆவது பிரிவு ஒப்படைவை விளக்குகிறது. அதன்படி ஒப்படைவு என்பது ஒருவர் மற்றொரு வருக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒப்படைக்கும் சரக்கு. அதன் ஒப்பந்தப்படி அந் நோக்கம் நிறைவேறினவுடன் அப் பொருளைக் கொடுத்தவன் விருப்பப்படி அதைத் திரும்பக் கொடுத்துவிடலாம்; அல்லது விற்றுவிடலாம். ஆங்கிலேய நீதிபதியான சர் வில்லியம் ஜோன்ஸ் 'ஒப்படைவை வெளியிடப் பட்ட அல்லது, உட்கிடையான நிபந்தனையின்பேரில் வழங்கப் பட்ட பொருள்' என்று விளக்குகிறார் 'அதன் நோக்கம் முடிந்த வுடனே ஒப்படைப்போனின் விருப்பத்திற்கிணங்க ஒப்படை பெறுபவர் அதைத் திரும்பக் கொடுத்துவிடலாம் ; அல்லது வேறு விதம் பைசல் செய்யலாம்' என்று விளக்கிக் காட்டியுள்ளார். அன்பழகன் தம் காரைத் தண்டாயுதத்திற்குத் தந்தாரென்றால் அங்கு ஒப்படைவுண்டு. கடனுக்கு ஈட்டுப் பொருளாகப் பொருள் கொடுக்கும்போது ஒப்படைவு ஏற்படுகிறது. இங்குப் பொருள்கள் அல்லது சரக்குகள் என்பது அசையக்கூடியதை மட்டும்தான் குறிக்கும். ஆனால், பணம் இந்த அசையக்கூடிய வகையைச் சார்ந்ததன்று. சாதாரணமாக ஒப்படைவு ஒப்பந்தம் ஏற்படு வதற்குத் தனிப்பட்ட கைம்மாறு தேவையில்லை. ஒப்படைப் போன் பொருளைப் பிரிவதே, ஒப்படை பெறுபவர் வாக்குறுதி நிறைவேறியதும் பொருளைத் திரும்பத் தருவதற்குப் போதுமான தடையாக இருக்கிறது. பொருள்களை வாடகை செலுத்தி வைத்துவிட்டுப் போகும் இடங்களில் நிகழ்வதைப்போல், பணம் செலுத்தும் கூடுதலான கைம்மாறும் எழுகிறது.

ஒப்படைவின் முக்கியப் பகுதிகளாவன

அங்கு ஒப்படைத்தல் அல்லது வழங்குதல் நிகழவேண்டும் அதுவும் பொருள்களை வழங்கவேண்டும். பொருள்களின் உரிமையாளரான ஒப்படைப்போரால் அஃது ஒப்படைக்கப்பட வேண்டும். அதுவும் மற்றொருவரான ஒப்படை பெறுபவரிடம்

ஒப்படைக்க வேண்டும். குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறிய பின்னர்ப் பொருளைத் திருப்பித் தரவேண்டும் என்ற ஒப்பந்தம் இருக்க வேண்டும். பொருள்களை ஒப்படைத்தல் என்பது நிகழுறுவதாகவும் (Actual), இயல்புடையதாகவும் (Physical), அடையாளமுடையதாகவும் (Symbolic), ஆக்கம் தருவதாகவும் (Constructive) இருக்கவேண்டும். ஏற்கெனவே ஒருவர் பொருளைப் பெற்றிருந்தால் பிறகு வெளிப்படையான அல்லது தொக்கியுள்ள உடன்பாட்டின்படி அவர் ஒப்படைவு பெறுபவராகிறார். உதாரண மாக, வேலன் தம் கிடங்கிலுள்ள சர்க்கரை மூட்டைகளை முருகனுக்கு விற்றுவிடுகிறார். ஆனால், அம் மூட்டைகளை முருகன் வேலன் கிடங்கிலேயே வைத்துள்ளார். இப்பொழுது வேலன் அம் மூட்டைகள்மீது கொண்டுள்ள உரிமை சட்டப்படி மாறுகிறது. ஏற்கெனவே முதல் உரிமையாளராக வேலன் இருந் தாலும், இப்பொழுது முருகனின் ஒப்பாளியாகிறார். பொருளை ஒப்படைத்தல் என்பது எப்படியும் உண்டாகலாம். அதாவது, மற்றவரிடம் போய்ச் சேரவேண்டும்.

பாதுகாப்புக் காவல் வைப்பு (Safe Custody Deposit)

வாடகைக்கு விடப்படும் பொருள், கடனுக்கு ஈடாகத் தரப் படும் பொருள்கள், செய்யவேண்டிய வேலைக்காகத் தரப்படும் வைப்புப் போன்ற பலவகையான ஒப்படைவுகள் காணப்படு கின்றன. இவ் வொப்படைவு ஒப்படைப்போர் அல்லது ஒப்படை பெறுபவர் அல்லது இருவர் நலனுக்கும் ஏற்படலாம். அல்லது அவர் களில் ஒருவர் நலனுக்காகவும் அல்லது அந்நியர் ஒருவர் நலனுக் காகவும் ஏற்படலாம். பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தூக்கிச் செல்லவும் போக்குவரத்துமூலம் எடுத்துச் செல்லவும் ஒப்படைக்கப்படும் உடன்பாடும் ஒப்படைவாகும். ஆனால், தூக்கிச் செல்வோர் சட்டமும் (Carriers Act) ரயில்வே சட்டமும் அவைகளைப் பெற்றுள்ளன. வங்கியில் பணம்வைப்போ மானால் கடனாளி- கடன் கொடுத்தோர் உறவு எழுகிறது. இவ் வுறவு ஒப்படைப்போருக்கும், ஒப்படை பெறுபவருக்கும் ஏற்படும் உறவன்று. ஆனால், காவல் வைப்பு முறையில் வைக்கப்படும் பொருள் ஒப்படைவிற்குச் சமம். காரணம் அதே பொருளைத் திரும்பத் தரவேண்டும்.

ஒப்படைப்போனின் உரிமைகள்

ஒப்பந்தத்தில் கூறியுள்ளபடி நடப்பதற்கு ஒப்படை பெறுபவர் தவறினால் எல்லாப் பொறுப்புகளுக்காகவும் அவர்மீது

வழக்குத் தொடரலாம். ஒப்படைவு உடன்பாட்டிற்கு எதிராக ஒப்படை பெறுபவர் ஏதாவது செய்தால் அவர் விருப்பப்படி ஒப்ந்தத்தை செல்லுபடியாகாமல் செய்துவிடலாம். உதாரணமாக அக்பர் தம் குதிரையைப் பாதுஷாவிற்குச் சவாரி செய்வதற்கு மட்டும் வாடகைக்கு விட்டார். ஆனால், பாதுஷா குதிரையைத் தம்முடைய சாமான்களை ஏற்றிவரவும் பயன்படுத்தினார். எனவே, அக்பர் தம் ஒப்பந்தத்தை முறித்து பாதுஷாமேல் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரலாம். ஊதியம் பெறாத ஒப்படைவு முறையுள்ளபோது ஒப்படைப்போர் எப்பொழுது வேண்டுமானாலும் தம் பொருளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், சில நேரங்களில் முன்கூட்டியே ஒப்பந்த நிறைவேற்றம் செய்ய வேண்டியிருந்தால் தகுந்த நட்டஈடு தரவேண்டியிருக்கும்.

ஒப்படைப்போனின் கடமைகள்

இவரின் கடமைகளை ஒப்பந்தச் சட்டத்தின் 150, 158, 164, 166, 167 ஆகிய பிரிவுகள் கூறுகின்றன. அவருடைய கடமைகள் மூன்று விதமானவை: தாம் அறிந்த குறைகளைத் தெரிவிக்க வேண்டும்; அசாதாரண செலவுகளை ஏற்க வேண்டும்; ஒப்படை பெறுபவருக்கு நட்டஈடு நல்க வேண்டும்.

குறைகளைத் தெரிவித்தல்

ஒப்படைப்போன் தான் ஒப்படைவு செய்யும் பொருள்களைப் பற்றித் தனக்குத் தெரிந்த குறைகளைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்கத் தவறினால் பின்னர் அதனால் ஒப்பாளிக்கு ஏற்படும் நட்டத்தையும், மதிப்புக் குறைப்பையும் ஏற்க வேண்டும். ஹேய்மேனுக்கும் நையுக்கும் (Hayman *vs.* Nye) நடந்த வழக்கில் ஆணிகள் தளர்ந்த நிலையில் ஒரு வண்டியை ஒப்படைப்போன், ஒப்பாளியிடம் ஒப்படைத்தான். அதனால் அவ் வண்டி விபத்திற்குள்ளாகியது. எனவே, ஒப்படைப்போன் நட்டஈடு தரவேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. ஒப்படைவு ஒரு வெகுமதிக்காகவோ அல்லது வாடகைக்காகவோ ஏற்பட்டால் ஒப்படைப்போன் மிகவும் கவனமுடன், அதுவும் ஊதியம் பெறாமல் பொறுப்பு ஏற்கும் ஒப்பாளி விஷயத்தில் கடமையாற்ற வேண்டும். மேபட்டிற்கும் பேட்மேனுக்கும் (Maffat *vs.* Bateman) நடந்த வழக்கில் ஊதியம் பெறாத ஒப்படைவு ஏற்பட்டது. வாதியை, பிரதிவாதி தம்முடைய வண்டியில் இலவசச் சவாரி செய்ய அழைத்துக்கொண்டார், ஆனால், அவர் வண்டியில் உள்ள ஆணிகள் மற்றும் இணைப்புகளை அவர் சரிபார்த்துக் கொள்ளவில்லை. எனவே,

வண்டி போகும்போது ஒரு விபத்து நேர்ந்தது. பிரதிவாதி தம் வண்டியைச் சரிபார்க்காதது அவர் கடமையிலிருந்து தவறியது ஆகாது என நீதிமன்றம் கருத்து வழங்கியது.

சில நேரங்களில் நெருக்கடி தோன்றும்போது ஒப்பாளி தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளைக் காக்கும்பொருட்டுச் சில செலவுகளைச் செய்ய நேரிடும். அந்த அசாதாரணச் செலவுகளை ஒப்படைப்போன் ஏற்கவேண்டும். எடுத்துக் காட்டாக, ஒரு குதிரை ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒப்பாளியிடம் அக் குதிரையுள்ளபோது அதற்கு உடல்நிலை சரி யில்லை. எனவே, ஒப்பாளி அதற்கு மருத்துவம் பார்த்தார். அம் மருத்துவச் செலவுகளை ஒப்படைப்போன் ஏற்க வேண்டும்.

அதிகார முறிவு ஏற்பட்டபோதும், தவறான உரிமை வந்த போதும் நட்டஈடு என்ற வினா எழுகிறது. வேறு ஒருவருடைய பொருளைக் கொண்டுவந்து ஒப்படைப்போன் தந்திருந்தால் அத்தகைய விரும்பத்தகாத செயலால் விளையும் விளைவிற்கு அவனே பொறுப்பாவான். பாலுவின் காரை அவன் அனுமதியின்றி அருள் சந்திரனுக்குத் தருகிறான். அனுமதியின்றிக் காரைப் பயன்படுத்தியதற்காகச் சந்திரனிடமிருந்து பாலு நட்டஈடு பெறு கிறான். ஆனால் சந்திரன் அத் தொகையை அருளிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். காரணம் அருளுக்குக் காரை ஒப்படைக்கும் உரிமை இல்லை; பொருளைத் திரும்பப் பெறும் உரிமையும் இல்லை. மேலும் அப் பொருளை முடிவாக எவ்வாறு யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற உரிமையும் அவனுக் கில்லை.

ஒப்பாளியின் உரிமைகள்

ஒப்படைப்போன் தன் கடமைகளை நிறைவேற்றத் தவறி விட்டபோது அவன்மீது வழக்குத் தொடர்ந்து கடமைகளை நிறைவேற்ற வற்புறுத்தலாம். ஒப்படைப்போனின் விருப்பப்படி பொருளைத் தவறான பேர்வழிக்குத் திரும்பத் தந்துவிட்டால் ஒப்பாளியின் கடமை முடிகிறது. காரணம் ஒப்படைப்போன் சொற்படி கேட்பதுதான் ஒப்பாளியின் கடமை. கூட்டு ஒப் படைப்பு நிகழும்போது, ஒப்பாளியின் கூட்டு ஒப்படைப்போர் களில் யாராவது ஒருவரிடம் கொடுத்துத் தம் கடமையை முடித்துக்கொள்ளலாம். ஒப்படைக்கப்பட்ட பொருள் சம்பந்த மாக ஏற்பட்ட செலவுகளை வசூல்செய்ய அவருக்குப் பற்றுரிமை (Lien) உண்டு. உதாரணமாக ஒரு கைக்கடிகாரம் பழுதுபார்க்க ஒருவரிடம் தரப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். பழுது

பார்க்கும் கட்டணம் வரும்வரை அவர் கடிகாரத்தை வைத்துக் கொள்ளலாம். இப் பற்றுரிமை அவர் பெற்றுள்ள பொருளின்மீது செலுத்தப்படும் ஒரு குறிப்பிட்ட பற்றுரிமையாகும். அப் பொருள் அவரிடம் இருக்கும்வரைதான் அவருக்கு இப் பற்றுரிமை உண்டு. பொருள் அவரை விட்டுச் சென்றுவிட்டால் இவ் வுரிமையும் போய் விடும். எனவே பொதுப் பற்றுரிமை (General Lien) பாங்கர் களுக்கும், சரக்குடைப் பதிவாளர்களுக்கும் (Factors), கப்பல் துறை மேடை உரிமையாளர்களுக்கும் (Wharfingers) தங்கள் பாக்கிக்காகப் பயன்படுத்தப் பயன்படுகிறது. ஒப்படைக்கப்பட்ட பொருள்களுக்காக திறமையுள்ள உழைப்புப் பயன்படுத்தப்பட்டு அதற்காக வேண்டுமானால் இப்பொழுது பற்றுரிமை பயன்படுத்த லாம். எனவே, அத் திறமையுள்ள வேலை பயன்படுத்தவில்லை யென்றால் இவ் வுரிமை ஏற்படாது. மேலும், அவ் வேலைகள் முழுதும் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கான பணத்தைப் பின்னர்ச் செலுத்தலாம் என்று உடன்பாடு ஏற்படக்கூடாது. அதாவது, கடன் சொல்லக் கூடாது.

ஒப்பாளியின் கடமைகள்

151, 152 பிரிவுகளின்படி ஒப்படைக்கப்பட்ட பொருள்கள் மீது அக்கறை செலுத்தவேண்டும். 155, 157 பிரிவுகளின்படி தம்முடைய பொருள்களோடு கலக்காமல் இருக்க வேண்டும். 153 பிரிவின்படி அனுமதி பெறாமல் பயன்படுத்தக் கூடாது. தவறான உரிமை அமைத்தல் கூடாது. 160 பிரிவின்படி பொருளைத் திருப்பித் தரவேண்டும். அவ்வாறு திருப்பித் தரும் பொழுது பொருளின் பெருக்கத்தையும் கூடுதலையும் ஒப்படைக்க வேண்டும்.

அக்கறை

ஒப்பாளி ஒப்படைக்கப்பட்ட பொருள்மீது மிகவும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது, அந்தப் பொருள் தம்முடையதாக இருந்தால் எவ்வளவு கவனம் செலுத்திப் பாதுகாப்பாரோ அவ்வளவு கவனம் செலுத்த வேண்டும். ஒப்பாளிக்கு ஊதியம் கிடைத்தாலும் சரி, ஊதியம் கிடைக்காமல் கவுரவமாகச் செயலாற்றினாலும் சரி, ஒரே தரமான கவனம் செலுத்த வேண்டும். சரக்குத் தூக்கிச் செல்லுதல் போன்றவை களில் உடன்பாட்டின்பேரில் சிறப்பாக அதிகக் கவனம் செலுத்துவதுமுண்டு. எவ்விதத்திலும் கவனம் செலுத்துவதை வேண்டாவென்று விளம்பவில்லை.

கலவாமை

அடுத்து, ஒப்பாளி தம்முடைய பொருள்களோடு ஒப்படைக்கப்பட்ட பொருளைக் கலக்கக்கூடாது. அவ்வாறு கலந்திட்டால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கு அவர் பொறுப்பாளி யாவார். கலக்கப்பட்ட பொருள் எளிதில் பிரிக்கக்கூடியதாக இருந்தால் பரவாயில்லை. தனித்தனியே பிரித்திடலாம். பிரிக்க முடியாத பொருளாக இருந்தால் ஒப்பாளிதான் அந் நட்டத்தை ஏற்க வேண்டும். ஒப்படைப்போன் அனுமதிபெற்று அப் பொருள்கள் கலக்கப்பட்டால் ஒவ்வொருவரும் அவரவர் பங்கிற்குத் தகுந்தவாறு அக்கறை செலுத்தவேண்டும்.

தவறாகப் பயன்படுத்துதல்

ஒப்படைப்பில் காணப்பட்ட நிபந்தனைகளிலிருந்து ஒப்பாளி நழுவிவிடுதல் கூடாது. அந் நிபந்தனைகளில் சொல்லாதபடி அவர் எதிர்மறையாக நடக்கக்கூடாது. அவர் அவ்வாறு நடந்தால் அவர்மீது தவறில்லாமல்கூட ஏற்படும். நட்டத்திற்கு அவர்தாம் பொறுப்பாளியாவார். அப் பொருளைக் காக்கும் பொருட்டு வேண்டுமானால் அவர் நிபந்தனைகளிலிருந்து வேறு பட்டுச் செயலாற்றலாம். எனவே, ஒப்பாளி தமக்குள்ள அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. முன்பு சொன்னதைப் போல் Aஎன்பவர் B-க்குத் தம்முடைய குதிரையை அவர் மட்டும் சவாரிசெய்யக் கொடுத்தார். ஆனால், B என்பவர் C-க்கு அக் குதிரையைச் சவாரிசெய்யத் தந்தார். C மிகவும் கவனமாக இருந்தபோதிலும் ஒரு விபத்து ஏற்பட்டுக் குதிரைக்குக் காயம் ஏற்பட்டது. இதில் Bதான் நட்டஈடு தரவேண்டும்.

எதிர் உரிமை

ஒப்படைக்கப்பட்ட பொருள் தம்மிடத்தில் இருப்பதைப் பயன்படுத்தி, பொருள் தம்முடையதென உரிமை பாராட்டக் கூடாது.

திருப்பித்தருதல்

ஒப்படைப்பின் நோக்கம் நிறைவேறியவுடன் ஒப்பாளி பொருளை ஒப்படைப்போருக்கோ, அல்லது அவர் சொல்லும் வேறு நபருக்கோ பொருளைத் திருப்பித் தரவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்படைவு இருக்குமானால் அக்காலம் முடிந்தவுடன் கேட்காமலேயேகூடப் பொருளைத் திருப்பித் தந்திடலாம். ஊதியம் பெறாத ஒப்படைப்பில் பொருளைக்

கேட்கும் போதுதான் பொருளைத் தரவேண்டும். ஒப்படைப்புக் காலத்திற்கு முன் பொருளைத் திருப்பித் தர ஒப்பாளி கட்டாயப் படுத்தப்பட்டால் அவர் ஈட்டுத்தொகை கேட்கலாம். கூட்டு ஒப்படைப்பில் அவர் யாராவது ஓர் ஒப்படைப்போருக்குப் பொருளைத் தந்து தம் கடமையிலிருந்து விடுபடலாம். யாராவது ஒருவரிடம் பொருளை ஒப்படைப்பது அனைவருக்கும் திருப்பித் தருவதற்குச் சமம். ஒப்பாளியின்மீது எவ்விதக் குற்றமும் இல்லாமல் பொருள் தொலைந்துவிட்டால் அதற்கு அவர் பொறுப்பாளியல்லர். அப்பொழுது பொருளைத் திருப்பித்தர வேண்டிய அவசியமுமில்லை.

பொருள் பெருக்கம் (Accretion)

ஒப்படைக்கப்பட்ட பொருளின் மதிப்பு உயர்வையும் அல்லது பெருக்கத்தையும் ஒப்படைப்போனுக்கு ஒப்பாளி தெரிவிக்க வேண்டும். உதாரணமாக ஒரு பசு ஒப்படைக்கப்பட்டது. அஃது ஒப்பாளியிடம் இருக்கும்போது கன்று போட்டது. ஒப்படைப்பு முடிந்தவுடன் பசுவையும் கன்றையும் ஒப்படைப்போனிடம் ஒப்பாளி தரவேண்டும்; கன்றைமட்டும் தான் வைத்துக்கொண்டு பசுவைமட்டும் தருதல் கூடாது. ஏனென்றால், பொருளின் பெருக்கம் அல்லது கூடுதல் ஒப்படைப்போனுக்கு உரிமை யுடையதாகும்.

மூன்றாவதாளும் ஒப்படைப்பும் (Third Parties and Bailment)

ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 180, 181 இவற்றை விளக்குகின்றன. மூன்றாவது ஆள் தவறான வழியில் ஒப்பாளியிட மிருந்து பொருளைப் பறித்துச் சென்றுவிட்டால் அதற்குப் பரிகாரம் கோரி ஒப்பாளி வழக்காடலாம். ஒப்படைப்போன் கூட மூன்றாவது ஆளின் செயலுக்காக நீதிமன்றத்தில் முறையிட்டுப் பயன்பெறலாம். ஒப்படைப்போனைத் தவிர வேறு யாராவது வந்து பொருள் தமக்குச் சொந்தம் என்று உரிமை பாராட்டினால் ஒப்பாளி நீதிமன்றத்திற்கு விண்ணப்பஞ் செய்து யார் உண்மையான உரிமையாளர் எனத் தீர்மானிக்க வேண்டிக்கொள்ளலாம். நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்வரை பொருளை ஒப்படைக்காமல் தாமே வைத்துக்கொள்ளலாம்.

ஒப்படைவு முடிவு (Termination of Bailment)

குறிப்பிட்ட காலம் வந்தவுடனும், எந்த நோக்கத்திற்கு ஒப்படைப்பு ஏற்பட்டதோ அந் நோக்கம் நிறைவேறினவுடனும் ஒப்படைப்புஒப்பந்தம் முடிவடைகிறது. பின்னர்க் கேளாமலேயே பொருளைத் திருப்பித் தரவேண்டும்.

ஒப்படைப்பு நிபந்தனைகளுக்கு ஒப்பாளி மாறுபட்டு நடந்தாலும், அதாவது தவறான உபயோகம் ஏற்பட்டாலும் ஒப்படைவு முடிவடைகிறது. ஊதியம் பெறாத ஒப்படைவு ஆள்கள் இறந்தால் முடிவடைகிறது. அவைகள் தவணைத் தேதிக்கு முன்னும் எந்நேரத்திலும் முடிவடையலாம். சில நிகழ்ச்சிகளில் நட்டத்தை ஈடுகட்டுவதும் உண்டு.

தொலைத்த பொருளைக் காண்பவன் (Finder of Lost goods)

தொலைந்த பொருளைக் காண்பவன் வைப்பினை ஏற்றுள்ள ஒப்பாளியின் நிலையிலுள்ளான். அவன் பொருளை மிகுந்த கவனத்துடன் பாதுகாத்து உரியவர் வந்து கேட்கும்பொழுது அதைத் திருப்பித் தரவேண்டும். உண்மையான உரிமையாளரைத் தேடுவதற்கும், அப்பொருளைப் பாதுகாக்கவும் அவன் நியாயமான செலவுகள் செய்யலாம். அந்தச் செலவை உரிமையாளர் ஒத்துக்கொள்ளும்வரை பொருளை வைத்திருக்கலாம். அல்லது, ஒத்துக்கொண்டால் உடனே பொருளைத் திருப்பித் தந்திடலாம். தொலைந்த பொருளைத் திருப்பித் தருவோருக்கு ஏதாவது வெகுமதி தருவதாக விளம்பரப் படுத்தியிருந்தால், அவ் வெகுமதி பெறுவதற்கு வழக்காடலாம். பொருளின் உரிமையாளர் கிடைக்காத பொழுதும், அல்லது பொருளின் உரிமையாளர் பொருளைத் திரும்பப் பெறுவதற்கு மறுத்தபோதும், பொருள்கள் அழுகக்கூடிய அல்லது கெட்டுவிடக்கூடிய நிலையில் இருக்கின்றபோதும் அவன் அப் பொருளை விற்றுவிடுவதற்கு உரிமையுண்டு. ஆனால் அப் பொருளைப் பாதுகாக்க ஆகும் சட்டபூர்வமான செலவும், உண்மையான உரிமையாளரைக் கண்டுபிடிக்க ஆகும் செலவும் அப்பொருளின் மதிப்பில் 2/3 பாகம் உள்ளதாக இருக்கவேண்டும்.

அடகு (Pawn or Pledge)

கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஈடாக எங்கு ஒரு பொருள் ஒப்படைக்கப்படுகிறதோ அங்கு அடகு ஏற்படுகிறது. அடகு என்பது ஒருவகை ஒப்படைவுதான். கடன் பைசலான பின்னர்ப் பொருளைத் திருப்பித் தரவேண்டும். கடன் தொகை வரும்வரை அவர் பொருளைத் தாமே வைத்துக்கொள்ளலாம். தவணைத் தேதியில் பணம் வரவில்லை என்றால், அடகு பிடித்தோர் (Pledgee) அடகு வைத்தவர்மீது வழக்குத் தொடுக்கலாம். அடகு வைப்பவருக்குத் தகுந்த நோட்டீஸ் விட்டுவிட்டு அடகு பிடித்தோர் பொருளை விற்றுத் தம் பணத்தை எடுத்துக்கொள்ளலாம். அவ்வாறு பொருளை விற்கும் பொழுது தமக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகைக்குமேல்

விற்றால் அந்த அதிகத் தொகையை அடகு வைத்தோருக்குத் தந்துவிட வேண்டும். ஆனால், அவ்வாறு விற்ற தொகை தமக்குத் தரவேண்டிய பணத்திற்குக் குறைவாக இருக்குமானால், பாக்கித் தொகைக்கு அவர்மீது வழக்குத் தொடுக்கலாம். பொருளின் சொந்தக்காரர் அல்லாமல் வேறு ஒருவரால் அடகு வைக்கப்பட்டிருக்குமாயின் அடகு பிடித்தோருக்கு எவ்வித உரிமையும் இல்லை. அடகு வைக்கப்பட்ட பொருளில் கட்டணம் குறைக்கப்பட்ட நிகர மதிப்பை அவர் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் வாணிகப் பதிலாள் அடகு வைத்தாரென்றால், அவர் உரிமையாளர் இல்லையென்றாலும், அடகு பிடித்தோருக்கு உரிமை உண்டு. இதைப் பற்றிய கோட்பாடுகளாவன:

1. அடகு வைப்போர் ஒரு வாணிகப் பதிலாளாகத் திகழ வேண்டும்.

2. அவரிடம் பொருள் இருக்க வேண்டும் அல்லது உரிமைப் பத்திரம் இருக்க வேண்டும்.

3. பொருளின் சொந்தக்காரரின் இசைவுடன் பொருள் அவரிடம் இருக்க வேண்டும்.

4. அடகு பிடித்தோர் நன்னம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும்.

5. அடகு வைப்போருக்கு உரிமை உண்டா, இல்லையா என்று பார்க்க வேண்டியதில்லை. அடகு வைப்போருக்கு ஓரளவு பாத்தியததான் பொருள்மீது உண்டென்றால் அந்த அளவிற்குத்தான் அடகு செல்லுபடியாகும்.

ஒப்படைவிற்கும் அடகு வைப்பதற்கும் உள்ள வேறுபாடுகளைக் காணலாம். அடகு வைப்பதில் சட்டபூர்வமான கடமையை நிறைவேற்றும்பொருட்டுத் தரவேண்டிய பணத்திற்குப் பொறுப்பீடாக ஒப்படைவு ஏற்படுகிறது. ஆனால், சாதாரண ஒப்படைவில் அத்தகையக் கருத்துத் திகழவில்லை. அடகு வைப்பதில் அடகு பிடிப்போருக்கு அடகு வைக்கப்பட்ட பொருளால் ஒரு தனிச் சொத்துக் கிடைக்கிறது. ஆனால் ஒப்படைப்பில் ஒப்பாளிக்கு ஒப்படைக்கப்பட்ட பொருளின்மீது ஓர் உரிமை மட்டும் ஏற்படுகிறது. அடகு வைப்பதில் சில நேரங்களில் அடகு பிடித்தோர் பொருளை விற்கும் உரிமையைப் பெற்றுள்ளார்.

இதே வேற்றுமைகளை அடகு வைப்பதற்கும், பற்றுரிமைக்கும் (Lien) சொல்லலாம். மேலும், அடகு வைப்பதற்கும் அடை

மானம் (Mortgage) வைப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. அடகு வைப்பதில் அடகு வைப்போர், அடகு பிடிப்போருக்குப் பொருளை அவர் வசம் வைத்திருக்கும் உரிமையை மட்டும் தந்துள்ளார். சில நேரங்களில் நியாயமான விற்பனை உரிமையும் உண்டு. ஆனால், அடைமானம் வைப்பதில் அடைமானம் வைப்பவர், அடைமானம் பிடிப்போருக்குச் சொத்துரிமையை மாற்றித் தந்துவிட்டு மீட்கும் உரிமையை மட்டும் பெற்றுள்ளார். அடகு வைப்பதில் பொருளை ஒப்படைத்தல் ஒரு முக்கிய முன்னேற்பாடு. ஆனால், அடைமானம் வைப்பதில் அவ் வாறில்லை. அடகு வைப்பதில் அடகு பிடிப்போர் வரையறுக்கப் பட்ட விற்பனை உரிமையைப் பெற்றுள்ளார். ஆனால், அடை மானம் பிடித்தோர் முன்னதாகவே அடைமானத்தை முடிக்கும் உரிமையையும் விற்பனை உரிமையையும் பெற்றுள்ளார்.

13. பதிலாண்மை அல்லது முகமை

(Agency)

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் மொத்தம் 57 அதாவது, 182ஆவது பிரிவிலிருந்து 238ஆவது பிரிவுவரை பதிலாண்மைச் சட்டத்தைப்பற்றி விளக்குகின்றன. இவைகள் அகன்ற பொது நிபந்தனைகளையும் கோட்பாடுகளையும் விளக்குகின்றன. வணிகச் சட்டத்தின் ஒரு முக்கியமான கிளையாகப் பதிலாண்மைச் சட்டம் திகழ்கிறது. வாணிபம் பெருக்கமடைந்துள்ள தற்காலத்தில் அதன் இன்றியமையாமை மேலும் உணரப்படுகின்றது. முதல்வரின் (Principal) எண்ணங்களைப் பதிலான் (முகவர்) நிறைவேற்ற வேண்டும். பதிலாளை வேலைக்கு அமர்த்திக் கொள்பவர்தாம் முதல்வர் எனப்படுவார். ஒரு சுறுசுறுப்பான வியாபாரி எத்தனையோ நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. அவை அனைத்தையும் ஒருவரால் நிறைவேற்ற முடியாது. எனவே, தமக்காக அவர் பதிலாள் ஒருவரை நியமித்துக்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு ஒரு முதல்வர் ஒரு பதிலாளை நியமிக்கும்போது அவருக்குச் சில அதிகாரங்களை வழங்குகிறார். தமக்காகத் தாம் செய்யவேண்டிய அலுவல்களை அவர் செய்ய அனுமதி தருகிறார். எனவே, ஒரு பதிலாள் தம்முடைய முதல்வருக்காக ஓர் அலுவல் செய்கிறார் என்றால், அது முதல்வரே செய்வதுபோன்ற விளைவுடைய செயலாகும். பதிலாள் செய்யும் அத்தனை செயல்களும் முதல்வரைக் கட்டுப்படுத்தும். வேறுவிதமாக விளம்ப வேண்டுமென்றால் முதல்வரின் தோற்ற நீட்டிப்புத்தான் பதிலாள். எனவே, பதிலாளை முதல்வரின் மறுஉரு என்று சொல்லலாம். பதிலாளுக்கு முதல் வருக்காக எங்கும் எச்செயலிலும் பங்குகொள்ளும் அதிகாரமும், அவருக்காகக் காரியங்கள் செய்யும் அதிகாரமும் தரப்பட்டுள்ளன. மூன்றாம் பேர்வழி பதிலாளோடு தொடர்புகொண்டு காரியம் செய்தாலும் அது முதல்வரைக் கட்டுப்படுத்தும். 'யாரொருவர் வேறொருவர் மூலம் காரியம் செய்கிறாரோ அஃது அவரே செய்ததாகும்' (Qui jacit Per alivm facit Pcise) என்ற அடிப்படையில் இஃது அமைந்துள்ளது. 'ஒருவர், மற்றவரின் காரியங்களைச் செய்ய அமர்த்தப்படுகிறார், அல்லது மூன்றாவதாளோடு

தொடர்புகொள்ள அந்த ஒருவர் முதல்வருக்காக வருகை புரிகிறார். அவர்தான் பதிலாள்' என ஒப்பந்தச் சட்டத்தின் 182ஆவது பிரிவு விளக்குகிறது. பதிலாண்மையின் முக்கியத்துவம் அதனுடைய பெயராண்மை அல்லது பிரதிநிதித்துவம் (Representation) ஆகும். ஆனால், ஆங்கிலச் சட்டம் பதிலாள் என்பவர் மற்றொருவரை மூன்றாவதாளோடு சட்டபூர்வமான தொடர்பு ஏற்படச் செய்பவர் என்று விளக்குகிறது. இங்குச் 'சட்டபூர்வமான தொடர்பு' க்குத்தான் முக்கியத்துவம் தரப்படுகிறது. ஒருகால் இந்தியச் சட்டத்தின் பிரதிநிதித்துவத்தைவிட இது சரியானது என்று சொல்லலாம். பதிலாள் என்பவர் வேலையாளிடமிருந்தும், தனிப்பட்ட காண்ட்ராக்டரிடமிருந்தும் வேறுபடுகிறார். இந்த வேறுபாடு அவ்வளவு தெளிவாகக் காணப்படாமலிருந்தாலும், உண்மையில் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

எஜமானரும் பணியாளரும் (Master and Servant)

பதிலாள் என்பவர் பணியாள்போலத் தோன்றலாம். காரணம் சில நேரங்களில் அவரை 'உயர்ந்த பணியாள்' என்று குறிப்பிடப்படுகிறது. ஒரு பணியாள் தாம் செய்யும் தொண்டுமூலம் எஜமானருக்குக் கட்டுப்படுகிறார். அவ்விதமே பதிலாள் தமக்குத் தரப்பட்டுள்ள அதிகாரத்தால் முதல்வருக்குத் தொண்டு செய்கிறார். ஆனால், பணியாள் ஒரு சின்னக் காரியத்திற்குக்கூட எஜமானரிடம் எதிர்பார்த்து அவருடைய கட்டுப்பாட்டில் எப்பொழுதும் உள்ளார். ஆனால், பதிலாள் தமக்களிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குள் தம் விருப்பப்படி அவ்வதிகாரங்களை மாற்றிக்கொள்ளலாம்.


அவ்விதமே ஒரு தனிப்பட்ட காண்ட்ராக்டர் அவர் வேலையின் முடிவிற்குப் பொறுப்பேயொழிய, எப்பொழுதும் எஜமானரின் கட்டுத்திட்டத்தில் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஸ்மித் எ. மோஸ் (Smiths *vs.* Moss) என்ற வழக்கில் ஒருவர் தம்முடைய அன்னையின் காரில் தம் மனைவியை ஏற்றிச் சென்றார். அவருடைய கவனக்குறைவால் மனைவி காயமடைந்தாள். எனவே அவளுடைய மாமியாரிடம் நட்டஈடு கோரி வழக்குத் தொடுத்தாள். நீதிமன்றமும் நட்டஈடு தரச் சொல்லித் தீர்ப்புக் கூறியது. இத் தீர்ப்பு வெளிப்படையாகப் பார்க்கும்போது தவறுபோல் தெரிகிறது. இதில் கணவனை ஒரு பணியாளாகவோ அல்லது தனிப்பட்ட காண்ட்ராக்டராகவோ கருத முடியாது. அவர் ஒரு பணியாளராக இருந்தால் அவர் மனைவியால் சமூகக் குற்றத்திற்காக வழக்குத் தொடர முடியாது

எனவே அவர் அன்னை பொறுப்பாளியாக முடியாது. அவர் ஒரு தனிப்பட்ட கான்ட்ராக்டராக இருந்திருந்தால் அவர்தாம் பொறுப்பாளியேயொழிய அவர் அன்னையார் இல்லை. எனவே இவ்விரு நிலைகளிலும் அன்னையார் பொறுப்பாளியல்லர் எனத் தெரியவருகிறது.

பதிலாண்மை உண்டாக்கல் (Creation of Agency)

பொது ஒப்பந்தங்களின் கொள்கைப்படி பதிலாளரை நியமிக்கும் முதல்வருக்கு ஒப்பந்தம் செய்யும் திறனும் உரிமையும் இருக்கவேண்டும். ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு வேண்டிய தகுந்த வயதடைந்திருக்க வேண்டும். சுய நினைவுடைய வராகவும் இருக்க வேண்டும். அவர் யாரை வேண்டுமானாலும் தம் பதிலாளாக நியமிக்கலாம். ஒரு மைனரையும் அல்லது உன் மத்தம் பிடித்தவரையுங்கூடப் பதிலாளாக நியமிக்கலாம். ஏனெனில், பதிலாள் ஒப்பந்தங்களில் ஈடுபடுகின்ற திறமையுடைய வராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் பதிலாள் முதல்வருக்கும் மூன்றாவதாளுக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தை உண்டாக்குகிறார். அவர் ஓர் இணைக்கும் சங்கிலித்தொடர். திறமையில்லாத நபரைப் பதிலாளாக நியமித்தால் அதனால் ஏற்படும் பலனை முதல்வர் ஏற்கவேண்டும்.

ஒரு பதிலாண்மை, உட்கிடையாகவோ அல்லது வெளிப்படை யாகவோ ஏற்படலாம். பின்னால் உறுதிப்படுத்தும் முறையிலும் அஃது ஏற்படலாம்.



வழக்கமாக முதல்வர் பகர ஆள் செயலுரிமைப் பத்திரம் (Power of Attorney) ஏற்படுத்துவார். அப் பத்திரத்தில்

முதல்வரின் பெயர், பதிலாளின் பெயர், வியாபாரம், பதிலாள் நியமிக்கும் நோக்கம், அவரின் அதிகார வரம்பு ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும். சொல்லப்பட்ட அதிகாரம் பொது, சிறப்பு, குறிப்பானது ஆகிய மூன்று வகைப்படும். பொதுப்படையான அதிகாரத்தில் முதல்வருக்காகப் பல காரியங்கள் செய்யப் பதிலாளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பதிலாண்மை வியாபாரத்தில் செயலாற்ற வேண்டிய அதிகாரமும் தரப்பட்டுள்ளது. இதன்கீழ் நிறைந்த அளவில் செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பதிலாள் ஒரே ஒரு நடவடிக்கையில் ஈடுபடும் பொழுது அவருக்குச் சிறப்பு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக முதல்வரின் சொத்துகளை விற்கவேண்டுமானால் அவருக்கு அதுபற்றிய சிறப்பு அதிகாரம் தரப்படுகிறது. அந்த ஒரு நடவடிக்கைக்காகப் பல காரியங்கள் செய்ய நேரிடலாம். அக் காரியங்கள் அனைத்தையும் செய்வதற்கும், விற்பனையைச் சார்ந்த எல்லாக் காரியங்களைச் செய்வதற்கும் அவருக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது. விளம்பரச் செலவுகளையும் இன்னும் விற்பனைக்குச் செய்யவேண்டிய நியாயமான செலவுகளையும் அவர் செய்யலாம். ஒரு செயலை மட்டும் செய்து முடிப்பதற்கு அதிகாரம் அளித்தால் அது குறிப்பிட்ட அதிகாரம் எனப்படும். உதாரணம், பதிவாளர் அலுவலகத்தில் ஒரு பத்திரத்தைப் பதிவு செய்வதற்கு மட்டும் பதிலாளுக்கு உரிமை அல்லது அதிகாரம் தந்தால் அது குறிப்பிட்ட அதிகாரமாகும். மேற்கூறிய எல்லா வகைகளிலும் பதிலாள் தமக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குமேல் போகக்கூடாது. உட்கிடையான (simplied) பதிலாண்மை ஓர் அனுமானத்தின் விளைவாக ஏற்படுவது. நபர்களின் நடத்தை, சூழ்நிலை, அவசியம் ஆகியவைகளை அனுசரித்துப் பதிலாண்மை ஏற்படுகிறது.

முரண்தடை (Estoppel)

ஒருவர் தம் நடத்தையால் மற்றவரை ஒரு விஷயத்தைப் பற்றி நம்ப வைத்துவிட்டு, பின்னால் உண்மையை அச் சூழ் நிலையில் தெரிவிக்க இயலாமல் போய்விடுமானால், பதிலாண்மையிலும் இம் முரண்தடை தோன்றுகிறது. ஒரு செய்தி உண்மையில்லாவிட்டாலும், அதை ஒருவர் உண்மையெனச் சொல்லிவிட்டுப் பிறிதொருவரையும் அதனை நம்பிச் செயல்பட வைத்துவிட்டுப் பின்னர்த் தாம் சொன்னது அஃதன்று என்று கூறுவது, தடுக்கப்படுவது முரண்தடை. எடுத்துக்காட்டாக எழிலன், பாலன், சந்திரன் ஆகிய மூவரும் உரையாடிக் கொண்டிருக்கும் போது பாலன், சந்திரனிடம் எழிலன் முன்னிலையில் அவருக்குக் கேட்கும் வகையில் தாம் எழிலனின் பதிலாள் என உரைக்கிறார்.

அதற்கு எழிலன் அவ் வுரையை மறுக்காமலும், அல்லது ஒத்துக் கொள்ளாமலும் இருக்கிறார். பின்னால் சந்திரன், பாலனை எழிலனின் பதிலாள் எனக் கருதி ஒப்பந்தம் செய்து அதனால் நட்டம் ஏற்படும்போது எழிலன் பாலன் தன்னுடைய பதிலாள் இல்லையென வாதாட இயலாது. உண்மையிலேயே பாலன் எழிலனின் பதிலாள் இல்லாவிட்டாலும், உண்மையான நிலைமை யை எழிலன் மறுக்க முடியாது. எனவே, முரண்தடை என்ற கொள்கையால் பாலன் எழிலனின் பதிலாளாகக் கருதப்படுகிறான்.

போலி அதிகாரம் (Holding out)

முரண்தடை என்ற கோட்பாட்டின் விஸ்தரிப்புத்தான் போலி அதிகாரமாகும். வெறுங் கூற்றோடு நின்றுவிடுகிறது முரண்தடை. இதற்கு எதையும் 'ஆம்' என்று ஒத்துக்கொள்ளும் உடன்பாட்டு நிலைமை மிகவும் அவசியம். கவனக்குறைவால் ஏற்படும் முரண் தடையைவிட இஃது ஒரு படி அதிகமானது. உதாரணமாகச் சாத்தன் என்பவர் தம் பணியாளை மளிகைக் கடைக்கு அனுப்பிக் கடனுக்கு மளிகைப் பொருள் வாங்கி வருவது வழக்கம். அந்தப் பணியாள் பலதடவை இதுபோல் மளிகைப் பொருள் வாங்கி வந்ததற்கு அவர் பின்னர்ப் பணமும் செலுத்திவிட்டார். பிறகு ஒரு நாள் அப் பணியாள் தமக்காக மளிகைப் பொருள் வாங்கிக் கொண்டு தலைமறைவாகிவிட்டான். பணியாளரின் செயல் தன்னைப் பாதிக்காது, அதற்கு நான் பொறுப்பில்லை என்று சாத்தன் சொல்ல முடியாது. மளிகைக் கடைக்காரர் ஏற்கெனவே பணியாள் பல தடவை மளிகைப் பொருள் வாங்கியிருப்பதால் அவன் சாத்தனின் பதிலாள் என்று எண்ணியதிலும் தவறில்லை.

அவசியம் (Necessity)

சில நேரங்களில் பதிலாண்மை அவசியத்தின் தேவைக்காக ஏற்படுவதுண்டு. நெருக்கடி நேரங்களில் அது தோன்றும். புகைவண்டி மூலமாக ஒரு குதிரை அனுப்பப்படுகிறது. குதிரையை வாங்கியவர் புகைவண்டி நிலையத்திற்கு வந்து குதிரையை ஓட்டிச்செல்லக் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, புகைவண்டி நிலைய அதிகாரி குதிரைக்குத் தீவனம் போடவேண்டிய அவசியத்திற்குள்ளாகிறார். இல்லாவிட்டால் குதிரை இறந்து விடும். குதிரையை அதன் உரிமையாளரிடம் ஒப்படைப்பதற்கு முன் அதற்கான தீவனச் செலவை அவர் பெறுவதற்கு வற்புறுத் தலாம். இஃது ஒரு விநோதமான சூழ்நிலை. புகைவண்டி நிலைய அதிகாரி குதிரைக்காகச் செலவழிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிவிட்டார். இந்தச் செலவைச் செய்வதற்கு அவருக்கு

அதிகாரம் வழங்கியுள்ளதுபோல் தோன்றுகிறது. எனவே, இத் தருணத்தில்தான் முதல்வர் சொல்லாமலேயே தானாகவே பதிலாண்மை செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இது போல் அவசியத்தால் அல்லது கட்டாயத்தால் ஏற்படும் பதிலாண்மை சில நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

1. ஒரு நெருக்கடி அல்லது தவிர்க்கமுடியாத நிலைமை ஏற்பட வேண்டும்.

2. பதிலாள் முதல்வருக்குச் செய்தியை அறிவித்து அவர் அனுமதி பெற முடியாத நிலையில் இருக்கவேண்டும்.

3. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நியாயமானதாகவும் அச் சூழ்நிலைக்கு அவசியமானதாகவும் இருக்கவேண்டும்.

4. பதிலாள் நல்லெண்ணத்தோடு செயலாற்றவேண்டும்.

இக் கருத்தை முன்னோ எ. வில்மால்ட் (Munno *vs.* Willmolt) என்ற வழக்கில் காணலாம். 'அ' என்பவர் 'ஆ' என்பவளுடைய காரை அவள் கடைவீதிக்குப் போகும்போதெல்லாம் தம்முடைய கார் விடும் இடத்தில் விடுவதற்கு அனுமதித்தார். 'ஆ' என்பவள் பல ஆண்டுகளாக அவள் காரை அங்கு நிறுத்திக் கொண் டிருந்தாள். ஆனால் 'அ' என்பவருக்கு அவ்விடம் தேவைப் பட்டதாலும், கார் அவருக்கு இடைஞ்சலாக இருந்ததாலும் அவர் அந்தக் காரை விற்றுவிட்டார். இங்கு நெருக்கடி நிலைமை ஒன்றும் ஏற்படவில்லையென்றும் எனவே, 'அ' என்பவர் காரை விற்றது குற்றமாகும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

கணவன்—மனைவி

திருமணமான நிலை தொக்கியுள்ள பதிலாண்மை பொறுத்த மட்டில் சில பிரச்சினைகளை உண்டாக்கியுள்ளன. மனைவியின் கடன்பற்றிய ஒரு கணவனின் பொறுப்பு பதிலாண்மைக் கோட் பாடுகளைப் பொறுத்துள்ளது. மனைவியின் நடவடிக்கைகளுக்குக் கணவன் வெளிப்படையாகவோ, அல்லது மறைமுகமாவோ ஆதரவு தந்துள்ளதாகக் காணப்பட்டால் கணவன் தம் மனைவியின் கடன்களுக்குப் பொறுப்பாளியாவார். வெளிப்படை யான அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால் அதில் கஷ்டம் இல்லை. மறைமுகமான அல்லது உணரப்படும் அதிகாரம் இருந்தால்தான் பிரச்சினைகளே எழுகின்றன. கணவனுடன் மனைவி வாழ்க்கை நடத்தும்போது அவசியப் பொருள்கள் வாங்குவதற்காகக் கணவனின் பொருளை ஈடுவைத்து வாங்கலாம் என்ற அதிகாரம்

வழங்கப்படுகிறது. இவ் வதிகாரத்தைப் பொய்யென நிரூபிக்கும் தருணங்களும் உண்டு. கீழ்க்காண்பவைகளில் இவ் வதிகாரம் செல்லாது:

1. அக்காரியம் செய்வதற்கு மனைவிக்குத் தடை விதிக்கப் பட்டிருந்தால்,

2. அவசியம் ஏற்படாதபோதும், அவள் செயலுக்கும் அவசியத்திற்கும் தொடர்பு இல்லாதபோதும்,

3. போதுமான பணம் கணவனால் தரப்படும்போதும்,

4. அவளுக்குக் கடனாக எதுவும் தரக்கூடாது என்று விற்பனையாளருக்கு எச்சரிக்கை தந்துள்ளபோதும்.

மனைவி தானாக எடுத்துக்கொள்ளும் இவ் வதிகாரம் அல்லது உரிமை தடுக்கப்படுகிறது. மேலும், கணவனும் மனைவியும் சேர்ந்து வாழாமல் பிரிந்திருந்தால் அவளுக்கு வாழ்க்கைப் பணம் (ஜீவனாம்சம்) தரப்படுகிறதா இல்லையா என்று பார்க்கவேண்டும். அவ்வாறு மனைவிக்கு வாழ்க்கைப்பணம் தரவேண்டிய நிலையில் கணவன் அவளுக்கு அதைத் தராமலிருந்தால் அவளுடைய அத்தியாவசியச் செலவிற்காகக் கணவனின் பொருள்களை அவள் ஈடுகாட்டிப் பணம் வாங்கலாம். எப்படியிருப்பினும் பதிலாண்மைச் சட்டம் பெற்றோருக்கும் குழந்தைக்கும் செல்லுபடியாகாது.

பின்வரு செயலால் பதிலாண்மை ஏற்புறுதி (Expost Facto Agency by Ratification)

ஒரு பதிலாண்மை ஆரம்ப முதலிலேயிருந்து உண்டாக்கப் படுவதோடல்லாமல், பின்வருங் காலத்தையும் சேர்த்து ஏற்புறுதி செய்வதாக இருத்தல் வேண்டும். செல்லத்தக்க ஏற்புறுதிக்கு இரண்டு முக்கியக் கருத்துகள் இருக்கவேண்டும். முதலாவதாக ஏற்புறுதி பின்னோக்கிய காலத்திலிருந்தே அமல் நடத்தக் கூடியதாக இருக்கவேண்டும். அடுத்ததாக ஏற்புறுதியாகப்படும் செயல் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்தே எடுத்துக் கொள்ளப் படவேண்டும். ஏற்புறுதி செய்தலுக்குக் கடந்த காலத்திலிருந்தே பலனுண்டு என்றும் சொல்லலாம். உதாரணமாக 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்காகக் காரியம் ஆற்றுவதாகப் பாவித்துக்கொண்டு 'ஆ'வினுடைய அனுமதியின்றி 1-1-1955-ல் நிலம் வாங்கினார். 'ஆ' என்பவருக்கு இந்த நடவடிக்கை 1-5-1965-ல் தெரியவந்தது. அவரும் அதை ஏற்றுக்கொண்டார். அதாவது, 'ஆ' வினுடைய செயலை உறுதிப்படுத்திவிட்டார். உறுதி செய்யப்பட்ட செயல் நடந்த தேதியிலிருந்து அதாவது,

பின்னோக்கிய தேதியிலிருந்து அச் செயல் உறுதி செய்யப்படுகிறது என்ற கோட்பாட்டிலிருந்து 'ஆ'க்கு அளித்த அதிகாரத்தால், 'அ' என்பவர் 1-1-1965-லேயே அந்த நிலத்தை வாங்கி விட்டதாகக் கருதப்படுகிறது. 'ஆ' வுக்குத் தெரியவந்த 1-5-1965-ல் வாங்கினதாகக் கருதப்படவில்லை. எனவே ஏற்புறுதி செய்தலுக்கு அத்தகைய பின்னோக்கிய விளைவு உண்டென்பதால் அது நிறைவேற்றப்படுவதற்குக் கீழ்க்காணும் நிபந்தனைகள் தேவை:

1. பதிலாள் யாருக்காகப் பணிபுரிகிறாரோ அவர்தான் ஏற்புறுதி செய்தல் வேண்டும்.

2. அவர் அந்த நடவடிக்கையை ஆதரிக்க வேண்டும்.

3. ஏற்புறுதி செய்யப்படும் நாளில் அது தோன்றியிருக்க வேண்டும்.

4. அதன் முக்கியச் செய்திகள் தெரிந்திருக்க வேண்டும்.

5. சட்டபூர்வமான அல்லது சட்டபூர்வமில்லாத செயல்கள் ஏற்புறுதி செய்யப்படலாம். ஆனால், குற்றச் செயல் அல்லது செல்லுபடியாகாத செயல்களுக்காக ஏற்புறுதி செய்தல் கூடாது.

6. உறுதி செய்யப்படும் செயல்கள் முதல்வரே ஏற்புறுதி செய்யக்கூடிய உரிமையுள்ளதாக இருக்க வேண்டும்.

7. ஒரு நடவடிக்கையின் முழுமையும் ஏற்புறுதி செய்யப்பட வேண்டும். அதில் ஒரு பகுதியை மட்டும் உறுதிசெய்யக் கூடாது.

8. உறுதி செய்தல் மற்றவரின் உரிமையைத் தடை செய்வதாகவோ அவருக்கு நட்டம் ஏற்படுத்துவதாகவோ அல்லது அவர்தம் செயலுக்குக் குந்தகம் விளைவிப்பதாகவோ இருக்கக் கூடாது.

9. ஏற்புறுதி செய்தல் வெளிப்படையாகவும் இருக்கலாம்; தொக்கியும் இருக்கலாம்.

10. ஒப்பந்தத்தின் பிறகு நியாயமான காலத்திற்குள் ஏற்புறுதி செய்யப்பட வேண்டும்.

பதிலாள் உறுதிசெய்யப்பட வேண்டிய செயலைத் தமக்காகவோ அல்லது மாற்றாருக்காகவோ அல்லது கற்பனை நபருக்காகவோ செய்தால், அஃது உறுதி செய்வதற்குத் தகுந்த


செயல் அன்று. அதற்கென்று பதிலாள் ஓர் உறுதியான கொள்கை கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக முதல்வரால் அனுமதிக்கப்படாத ஒரு பதிலாள் தமக்காக ஒரு நிலத்தை வாங்கிய பொழுது ஏற்புறுதி செய்தல் என்ற கோட்பாட்டைப் பின்பற்றி முதல்வர் அந் நிலத்தின்மீது உரிமை பாராட்டக்கூடாது.

பதிலாள் செயல்பட்டபோது ஏற்புறுதி செய்பவர் நிகழுற இருந்திடல் வேண்டும். அச் செயலை அங்கீகரிக்கப் போதுமான அதிகாரம் அவருக்கிருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு கம்பெனி பதிவாவதற்கு முன்னர்த் தோற்றுவிப்பாளரின் (Promotor) செயலைக் கம்பெனி உறுதிசெய்யாது. பதிவாவதற்கு முன் கம்பெனி தோன்றவில்லை. தோற்றத்திற்குப் பின்னர் தான் அதற்கு ஒரு சட்டபூர்வமான அமைப்பு ஏற்படுகிறது. இதேபோலத்தான் மைனருக்காகச் செய்யப்படும் செயலும், ஒரு மைனர் தமக்குரிய வயதடைந்த பின்னர்த் தம்செயலை ஏற்புறுதி செய்யமுடியாது. செயல் நிகழும்போது செய்வதற்கு வேண்டிய சட்டத் தகுதி மைனருக்கு இல்லை.

செயலை ஏற்புறுதி செய்வதற்குமுன் அதுபற்றிய முக்கியப் பொருண்மைகள் (Facts) முதல்வருக்குத் தெரியவேண்டும். அச் செயல் செல்லுபடியாகக் கூடியதாகவும், சட்ட விரோதமாக இல்லாமலும் இருக்கவேண்டும். செல்லத்தகாதவையும், குற்ற முள்ள ஒப்பந்தங்களும் ஏற்புறுதி செய்யப்படக் கூடாது. மோசடி செய்த கையெழுத்துடைய போலிச் செயல்கள் ஏற்புறுதி செய்யப் படக்கூடாது. நடக்கக்கூடாத அல்லது நடக்க முடியாத செயலாக இருந்தால் அதை ஏற்புறுதி செய்தல் கூடாது. கூட்டுப் பங்குக் கம்பெனியின் அமைப்புப் பத்திரம் (Memorandum of Association) கம்பெனியின் அலுவல்கள் குறித்தும், அதன் செயல் விதம் குறித்தும் விளக்க வேண்டும். இவ் வமைப்புப் பத்திரத்தில் சொல்லியபடி இயக்குநர் நடவடிக்கையில் ஈடுபடவில்லை யென்றால் அவர் செயலைக் கம்பெனி ஏற்புறுதி செய்யக்கூடாது. ஒரு வழக்கில் இரயில் பெட்டிகளும், இரயில் பாதைகளைச் செப்பனிடும் பணிகளும் ஒரு கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அக் கம்பெனியின் இயக்குநர்கள் பெல்ஜியம் நாட்டு அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு இரயில் ஓட்டுவதற்கே ஆரம் பித்தனர். அஃது அமைப்புப் பத்திரத்தின்படி நடக்கமுடியாத காரியம் எனவும், கம்பெனி அச் செயலை ஏற்புறுதி செய்யக்கூடா தெனவும் நீதிமன்றம் கருத்து வழங்கியது.

முன்கூறியதுபோல் ஒரு நடவடிக்கையின் முழுமையும்தான் ஏற்புறுதி செய்ய வேண்டும். அதன் பகுதியைச் சிறிதுசிறிதாக

ஏற்புறுதி செய்ய முடியாது. அதைச் சிறந்த கொள்கையாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒரு பக்கம் ஏற்படும் நட்டத்தை விட்டுவிட்டு மறுபக்கம் தோன்றும் இலாபத்தை மட்டும் நாடுவது சிறந்த மரபன்று; அனைத்திற்கும் மேலாக மூன்றாம் மனிதர்களின் உரிமைகளைப் பாதிப்பதாகவும், அவர்களுக்கு ஏற்படும் பரிகாரத்தைத் தடை செய்வதாகவும் ஏற்புறுதி செய்தல் கூடாது. உதாரணமாக, முருகனிடமிருந்து கந்தன் சொத்துகளைக் குத்தகைக்கு எடுத்துள்ளான். ஆனால், இக் குத்தகையை ஆறு மாத நோட்டீஸ் விட்டு விடுவித்துக் கொள்ளலாம். போதிய அதிகாரமின்றி அருள் என்பவர் முருகனுக்குக் குத்தகையை ரத்து செய்யும் நோட்டீஸ் விட்டார். அருளின் செயலைக் கந்தன் உறுதிசெய்ய முடியாது. அவர் அதை உறுதி செய்தால் நோட்டீஸ் விடும் உரிமையே ரத்தாகிவிடும். உறுதி செய்தலைக் குறித்த காலத்தில் செய்ய வேண்டும். காலம் கடத்தினால் நியாயம் தவறிவிடும்.



வாணிகப் பதிலாள்

இவர்தான் மிகவும் முக்கியமான பதிலாள். 'வாணிபப் பதிலாள் என்பவர் அன்றாடம் நடக்கும் வாணிபத்தில் பொருளை விற்கவும், வாங்கவும், வேறு இடத்திற்கு அனுப்பவும், பொருளை உடனுக்குடன் காட்டிப் பணம் திரட்டவும் அதிகாரமுள்ள பதிலாள்'

என்று சரக்கு விற்பனைச் சட்டம் விளக்குகிறது. சுருங்கச் சொன்னால் வாணிக உலகில் பழகி மற்றவர்களுக்காக வாணிக நடவடிக்கைகளைக் கொண்டுவருபவர் வாணிகப் பதிலாளாகும். வாணிகப் பதிலாளின் பணிகளை உதாரணத்துடன் காண்போம்.

தரகர்

மற்றவருக்காக யார் பேரம் பேசி, அதற்காகக் கமிஷன் பெறுகிறாரோ அவர்தான் தரகர். வாணிகப் பதிலாளில் இவர் சாதாரண வகையைச் சார்ந்தவர். தரகு என்னும் வெகுமதிக்காக முதல்வரோடு ஒரு நடவடிக்கை பற்றிப் பேசி முடித்துத்தர இவர் இணங்குகிறார். இவர் வசத்தில் பெரும்பாலும் சரக்குகளோ சொத்துகளோ ஒப்படைக்கப்படுவதில்லை. முதல்வருக்காக விற்பனை செய்யும் அதிகாரம் மட்டும் இவரிடம் உள்ளது.

சரக்குடைப் பதிலாள்

இவர்வசம் விற்பனைக்காகச் சரக்குகள் ஒப்படைக்கப்படுகின்றன. இவர் தம் பெயரிலேயே விற்பனை செய்கிறார். சில நேரங்களில் இவர் முதல்வருக்கு முன்பணம் கொடுத்து அந்த அளவிற்கு விற்பனை செய்கிறார். அக்கறையுடைய பதிலாள் என்றும் இவரை அழைக்கலாம். இத்தகைய பதிலாண்மையை வெறும் நோட்டீஸ் விட்டு முடித்துவிடமுடியாது. தம்மிடத்தில் உள்ள முதல்வரின் சரக்குகளின்மேல் இவருக்குப் பொதுப் பற்றுரிமை உண்டு.

ஏலமிடுநர்

பொதுமக்களிடையே போட்டி ஏற்படுத்தி அதிக விலைக்கு ஏலத்தின்மூலம் விற்பனை செய்பவர்தான் ஏலமிடுநர். இவர் வசமும் விற்பனைக்காகப் பொருள்கள் ஒப்படைக்கப்படுகின்றன. உரிய விலையை வாங்கிக்கொண்டு பொருளை ஒப்படைக்கும் உரிமை இவருக்கு உண்டு. இவருக்குக் குறிப்பிட்ட பற்றுரிமை தான் உண்டு. பொருளை வாங்குவோருக்கும், விற்பனை செய்வோருக்கும் இவர் பதிலாளாக இருக்கலாம். ஏல விற்பனையின் இறுதியில் தமக்கு அல்லது மணி அடிப்பதற்குமுன் இவர் விற்பனையாளருக்குப் பதிலாளாக இருப்பார். கடைசி முறை அடித்தவுடன் விற்பனை முடிக்கப்பட்டு, இவர் வாங்குவோருக்குப் பதிலாளாக மாறிவிடுவார். தம் பெயரிலேயே பங்கு வாங்குவோர் மீது விலைக்காக வழக்குத் தொடரலாம். எப்படியாயினும் அவரிடமுள்ள பொருள்மீது உள்ள உரிமை அவரை விட்டுப் போவதில்லை.

நாணயச் சான்றுப் பதிலாள்

ஒரு குறிப்பிட்ட அதிகப்படியான கமிஷனுக்காகத் தம்மோடு ஈடுபடும் ஒப்பந்தக்காரர்களுக்கு உதவும் நடவடிக்கைகளில் முதல்வருக்கு உத்தரவாதம் அளிக்கும் பதிலாள் இவர். இவர் பொருள் விற்பனைக்காக முதல்வரின் பதிலாள் மட்டுமல்லர்; உத்தரவாதம் அளிப்பவர்; பொறுப்பேற்பவர்; நட்டத்தைச் சரிக்கட்டுபவர். எனவே, நாணயச் சான்றுப் பதிலாள் என்பவர் பதிலாளாகவும் உத்தரவாதம் அளிப்பவராகவும் திகழ்கிறார்.

வங்கியர்

தம்முடைய வாடிக்கையாளருக்குப் பதிலாண்மை சேவை ஒரு வங்கியர் செய்யும்போது அவரும் வாணிகப் பதிலாளராகக் காணப்படுகிறார். வங்கியருக்கும் வாடிக்கையாளருக்கும் உள்ள பொது உறவு கடனாளிக்கும் கடன் கொடுத்தோருக்கும் உள்ள உறவுபோலாகும். தம்மிடமுள்ள பணத்தின்மீது வாடிக்கை யாளர் விடுக்கும் செக்குகளை மதித்துப் பணம் வழங்குகிறார். தம்மிடமுள்ள பொருள்மீது பொதுப் பற்றுரிமை வங்கியருக் குண்டு.

காப்பீட்டுப் பதிலாள்

வாடிக்கையாளர்களை இன்சூர் செய்துகொள்ளத் தூண்டு வதற்கு இவர்கள் அமர்த்தப்படுகிறார்கள். இன்சூரன்ஸ் சட்டத்தில் இவர்தம் உரிமைகளும் பொறுப்புகளும் சொல்லப் பட்டுள்ளன.

பதிலாளின் அதிகார அளவு (Scope of Authority)

வெளிப்படையாகவோ அல்லது தொக்கிய நிலையிலோ முதல்வருக்காகப் பதிலாள் எந்தெந்த அலுவல் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ, அவ் வதிகாரங்களுக்குட்பட்டு அவர் செயலாற்ற வேண்டும். அவ்வாறு அதிகாரமுள்ள பதிலாள் ஒரு செயலைச் செய்வதற்கு நியாயமான அவசியங்களை மேற்கொண்டு கடமையாற்றலாம். ஒரு மனை விற்பதற்காக ஒரு பதிலாளை நியமித்தால் அவர் எல்லா நடவடிக்கைகளும் எடுத்து, விற்பனைக்குக் கொணரவேண்டிய நியாயமான செலவுகள் அனைத்தையும் செய்யலாம். விளம்பரக் கட்டணம், பதிவுக் கட்டணம், ஆலோசனைக் கட்டணம் போன்றவைகளை அவர் செலுத்தலாம். பொருள் வாங்குவதற்குப் பதிலாள் நியமித்தால் அவர் பொருள் விற்பனையில் ஈடுபடக்கூடாது. ஒரு லாரி சர்வீசின் மேலாளர் பேருந்தில் காயமடைந்த பயணிகளுக்கு மருத்துவ

உதவி வழங்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. எனவே, தமக்களிக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் பதிலாள் செயலாற்றினால்தான் முதல்வர் பொறுப்பாளியாவார்.

ஆனால், சில நெருக்கடியான நிலைமைகளில் முதல்வருக்காகப் பதிலாளே செயலாற்றலாம். உதாரணமாகக் கெட்டுப் போகக் கூடிய பொருள்களான காய்கறி, பழங்கள் போன்றவைகளை வியாபாரம் செய்யும்போது நட்டம் ஏற்படுவதாக இருந்தால் முதல்வரின் நலன் கருதிப் பதிலாள் காரியம் ஆற்றலாம். போதிய காலம் இல்லாமலும், முதல்வருக்கு அறிவித்துப் பின்னர்ச் செயலாற்ற முடியாத நிலையிலும் தாமே அக் காரியத்தை முடித்துவிடலாம். ஆனால், இதுபோன்ற நிலைமைகள் முதற் கண் ஆங்கு நெருக்கடி இருக்கவேண்டும். அடுத்து முதல்வருக்குத் தெரிவித்து அவர்தம் இசைவுபெறப் போதிய அவகாசம் இல்லாமல் இருக்கவேண்டும். பதிலாள் நியாயமாகவும் புத்திசாலித்தனமாகவும் செயலாற்ற வேண்டும். செய்யும் செயல் உண்மையான செயலாக இருக்கவேண்டும். மற்றபடி இவ்வாறில்லாவிட்டால் பதிலாளின் அதிகத்தனமான அதிகாரத்திற்கு முதல்வர் கட்டுப்பட்டவரல்லர்.

அதிகார ஒப்படைப்பு (Delegation of Authority)

பதிலாள் தம் அதிகாரத்தை வேறு ஒருவருக்கு மாற்றி ஒப்படைக்க முடியாது. தாம் செய்வதாக ஒத்துக்கொண்ட செயலை வேறு ஒருவரைச் செய்யச்சொல்லி அவர் கேட்க முடியாது. ஒரு பதிலாள் அதிகார ஒப்படைப்புச் செய்யமுடியாது (Delegation Non Postest Delegare) என்று இலத்தின் வாசகம் கூறுகிறது. இதற்குக் காரணம் பதிலாண்மை நம்பிக்கையின்பேரில் தான் தோன்றுகிறது. சீதாராமன் என்பவரை ஜானகிராமன் பதிலாளாக நியமிக்கிறார் என்றால், அவருக்குச் சீதாராமன் மீது நம்பிக்கை மிகவும் உண்டு என்று பொருள். மேலும், சீதாராமன் தமக்கிட்ட காரியத்தைக் கோதண்டராமனிடம் ஒப்படைக்கக் கூடாது. காரணம் ஜானகிராமன், சீதாராமனை நம்புகின்ற அளவு கோதண்டராமனை நம்பாமலிருக்கலாம். இவ் விதிக்குச் சில விலக்குகள் காணப்படுகின்றன.

எதிர்பாராத நெருக்கடி ஏற்படும்பொழுதும், பதிலாள் அதிகாரஒப்படைப்புச் செய்ய விரும்புவது முதல்வருக்குத் தெரிந்த போதும், செய்யும் செயலுக்கு அவ்வளவாகத் திறமை தேவையில்லாதபோதும், கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தன்மைக்கு ஓர் உதவியாளர் அவசியம் தேவை என்று ஏற்பட்ட

போதும், ஒப்படைப்பை நடைமுறைப் பழக்கம் ஏற்றிட்ட போதும் அதிகார ஒப்படைப்பு நிகழலாம் என்று கருதப்படுகிறது.

உதவிப் பதிலாள் (Sub-Agent)

நியாயமான நிலைமையில் ஒரு பதிலாள் தமக்கும் கீழ் ஓர் உதவிப் பதிலாளை நியமித்துக் கொள்ளலாம். உதவிப் பதிலாள், பதிலாளின் நேரடிப் பார்வையில் அவரின் கட்டுதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர். அவரின் செயலுக்குப் பதிலாள் பொறுப்பாளி யாவார். ஆனால், உதவிப் பதிலாள் முதல்வருக்குப் பொறுப்பாளி யாக மாட்டார். முதல்வருக்கும் உதவிப் பதிலாளுக்கும் தனிப் பட்ட முறையில் ஒப்பந்தம் ஒன்றும் இல்லை என்றாலும் உதவிப் பதிலாளின் செயலால் மூன்றாம் மனிதர்களுக்கு ஏதாவது குந்தகம் ஏற்பட்டால் அதற்கு முதல்வர் பொறுப்பாளியாவார். மோசடி செய்யப்பட்டாலோ, தவறானவழியில் உதவிப் பதிலாள் நியமிக்கப்பட்டாலோ முதல்வருக்கும் பொதுமக்களுக்கும் பதிலாளே பொறுப்பாளியாவார்.

பதிலிப் பதிலாள் (Substituted Agent)

ஏற்கெனவே உள்ள பதிலாள் இடத்தில் வேறு ஒருவரை முதல்வரே நியமித்தால் அவருக்குப் பெயர் 'பதிலிப் பதிலாள்.' சில சூழ்நிலைகளில் அவரை உடன் பதிலாள் (*vs*—agent) என்றழைப்பதும் உண்டு. பதிலிப் பதிலாள் நியமித்தவுடனே முன்னிருந்த பதிலாள் சென்றுவிடுவார். பதிலிப் பதிலாளுக்கும் முதல்வருக்கும் தனிப்பட்ட ஒப்பந்தம் இருப்பதால், பதிலிப் பதிலாளின் செயல்களுக்கு முதல்வரே பொறுப்பாளியாவார். முதல்வருக்காகக் கூட்டு அதிகாரத்துடன் காரியமாற்றுபவர் களுக்கு, உடன் பதிலாள்கள் என்று பெயர். இவர்கள் தனித்துச் செயலாற்ற முடியாது.

பதிலாளின் கடமைகள்

முதல்வரின் கட்டளைகளை ஏற்றல், நடைமுறைப் பழக்கங் களைப் பின்பற்றல், விவரங்களை உடனுக்குடன் அறிவித்தல், கண்காணிப்புடன் நடத்தல், தகுந்த கணக்கு வைத்திருத்தல், பணத்தை உடனுக்குடன் செலுத்துதல், பதிலாளாக இருக்கும் போது அறிந்த செய்திகளை முதல்வருக்கெதிரான உரிமை பாராட்டாமலிருத்தல், தாமே எதையும் செய்துமுடிக்காமை, அதாவது, முதல்வரின் அனுமதியின்றி ஈடுபடாமை போன்ற கடமைகளை ஒவ்வொரு பதிலாளும் நிறைவேற்ற வேண்டும்.

முதல்வர் தரும் கட்டளைக் குறிப்புகளைப் பிறழாமல் பின்பற்ற வேண்டும். ஒரு குறிப்பிட்ட கிடங்கில் பொருள்களைச் சேகரித்து வைக்கவேண்டும் என்று குறிப்பிருந்தால், அதன்படி பதிலாள் அக் கட்டளையை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறில்லாமல் வேறு இடத்தில் சரக்குகளை வைத்துத் தீ அல்லது தண்ணீர்மூலம் நட்டமேற்பட்டாலும், உண்மையிலேயே பதிலாள் மீது தவறில்லாவிட்டாலும், அந் நட்டத்திற்கு அவர்தாம் பொறுப்பாளியாவார். முதல்வர் சரக்குகளுக்குக் காப்புறுதி எடுக்கச்சொல்லிப் பதிலாள் எடுக்காமல் பொருள்கள் நட்டமடைந்தால் அந்த நட்டத்திற்குப் பதிலாள் பொறுப்பாவார். அதேபோல் முதல்வர் இடும் கட்டளைக் குறிப்புத் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டதாயும் இருக்கவேண்டும். அதில் ஏதாவது இருபொருள் தொனித்தால் பதிலாள் அதைத் தவறாகப் புரிந்து கொண்டு அதன்படி செயலாற்றலாம். சட்ட விரோதமான குறிப்புகளுக்குப் பதிலாள் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை.

நெருக்கடியான நிலைமையில்லாமலிருந்து பதிலாளுக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் அதை முதல்வருக்கு அறிவித்து விட்டுப் பின் அவர் இசைவு பெற்றுச் செயலாற்ற வேண்டும். இவ்வாறு முதல்வருக்குத் தெரிவிக்காததால் ஏற்படும் நஷ்டங்களுக்குப் பதிலாளே பொறுப்பாளியாவார். மேற்கண்ட சூழ்நிலையில் உண்மையிலேயே பதிலாள் முதல்வரின் நலனுக்காகப் பாடுபட்டாலும், தெரிவிக்காத ஒரே குற்றத்தால் பொறுப்பு அவரைச் சாரும்.

பதிலாள் அக்கறையுடனும் கவனமுடனும் செயலாற்ற வேண்டும் என்று குறிப்பிடும்போது, அக் கவனத்திற்கு ஒரு தரம் பிரிக்கமுடியாத ஒவ்வொரு சூழ்நிலையில் செலுத்தவேண்டிய கவனம் வேறுபடும். எனவே, நியாயமான கவனம் செலுத்தினால் போதும். இக் கவனம் செலுத்துவதைப் பொறுத்தமட்டில் சாதாரணப் பதிலாளுக்கும் திறமைசாலிப் பதிலாளுக்கும் இந்தியச் சட்டம் வேறுபாடு செய்துள்ளது. திறமைசால் பதிலாள் காட்டும் கவனம் சாதாரணப் பதிலாள் காட்டும் கவனத்தைவிட அதிகமாக இருக்கவேண்டும்.

ஒரு விசுவாசமுள்ள பதிலாள் தம் முதல்வருக்குத் தகுந்த கணக்குக் காட்டவேண்டும். தம் கடமையாற்றும்போது ஏற்படும் செலவுகளை அவர் கழித்துக்கொள்ளலாம். மோசடியைத் தவிர, மற்றச் சூழ்நிலைகளில் தீர்க்கப்பட்ட கணக்குகளைப் பழையபடி எடுத்துக்கொள்ளக்கூடாது. சட்ட விரோதமான

செயலால் வந்த வருமானத்தைக்கூடப் பதிலாள் இதர வருமானங்களோடு முதல்வருக்கு அவசியம் தந்துவிட வேண்டும்.

ஒருவர் தாம் பதிலாளாக இருந்தபோது சேகரித்த எவ்விதத் தகவலையும் முதல்வருக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது. தம் வசம் இருக்கும் முதல்வரின் பொருள்களையோ, அவர் தம் சரக்குகளையோ சகாயமாக எடுத்துக்கொண்டு முதல்வருக் கெதிரான உரிமைகளை அவர் கொண்டாடக்கூடாது. அதாவது, அப் பொருள் தன்னுடையதுதான் என்று சொல்லிவிட முடியாது. அவ்வாறு செய்தால் முதல்வருக்கு முரணான காரியம் செய்த தாகக் குற்றஞ் சாட்டப்படும். மேலும், தன்விருப்பப்படி பதிலாள் எதையும் செய்யக்கூடாது. அவர்தம் கடமைக்கெதிராக அவருடைய அக்கறை அல்லது கவனம் தென்படுமானால், உண்மை முழுவதையும் முதல்வருக்குத் தெரிவித்து அவருடைய அனுமதி பெற்று வேண்டுமானால் தன்னிச்சைப்படி செய லாற்றலாம். மற்றப்படி ஏற்படும் நட்டத்திற்கு அவர்தாம் பொறுப்பு. பதிலாள் தம் சொந்தப் பொருள்களை முதல்வருக்கு விற்கக் கூடாது. அதேபோல் முதல்வரின் இசைவு இன்றி அவருடைய பொருள்களை வாங்கவும் கூடாது. சாதாரணமாகப் பதிலாள் முதல்வரிடமும், மற்றவரிடமும் ஒரே தருணத்தில் கமிஷன் பெறக்கூடாது. ஆனால், முதல்வர் அதற்கு அனுமதித் தால் அல்லது அவர் பெறுவது அவருக்குத் தெரிந்தும் மறுப்புக் கூறாமலிருந்தால் பதிலாள் கமிஷன் பெறலாம்.

பதிலாளின் உரிமைகள் : பதிலாளின் உரிமைகள் ஊதியம் பெறுதல், பற்றுரிமை செலுத்துதல், நட்டஈடு கோருதல் ஆகிய மூன்று தலைப்பின்கீழ் அடங்கிவிடும்.

ஊதியம் பெறுதல் : இனாமாகப் பணிபுரியும் பதிலாண்மை யைத் தவிர எல்லாப் பதிலாண்மையிலும், பதிலாளுக்கு ஊதியம் பெறும் உரிமை உண்டு. ஆனால், பதிலாள் தம் கடமையை முடித்துவிட்டுத்தான் ஊதியம் கோரவேண்டும். பதிலாள் நன் னடத்தை இல்லாமல் காரியமாற்றினால் ஊதியம் பெறும் உரிமை இல்லை. இவ்வாறு பதிலாளின் தவறான நடத்தைக்கு அவரை வேலையை விட்டு நீக்கிவிடலாம். மேலும், பதிலாள் ஊதியம் பெறாமல் தடுக்கப்பட்டால், அவர் வழக்குத் தொடர்ந்து ஊதியத் துடன் நட்டஈடும் பெறலாம். ஒரு பதிலாண்மை தொழில் எப்பொழுது முடிவடைகிறது என்று விளக்குவது கடினம். கொள்

முதல் செய்துவிட்டாலே பதிலாளுக்கு ஊதியம் தரவேண்டிய நிலை ஏற்படுகிறது. காரணம் பொருள் வாங்கக்கூடிய நபரைக் கொண்டு வருவதே பதிலாளின் கடமை. பொருள் வாங்குவோர் மனத்தில் ஓர் ஒப்பந்த எண்ணத்தை ஏற்படுத்திவிட்டாலே போதும்; பதிலாள் செய்யும் தொழிலுக்கு அவ்வாறு செய்து விட்டால் பின்னால் அந்த நடவடிக்கை எப்படி முடிந்தாலும் அதற்குப் பதிலாளி பொறுப்பில்லை. வல்கன் கார் ஏஜென்டிற்கும் ஃபியட் மோட்டார்ஸ் லிமிடெட்டிற்கும் (Vulcan Car Agency *vs.* Fait, Motors Ltd) நடந்த வழக்கில், ஒரு பதிலாள் கார் அனுப்புவதற்கான ஆர்டர்கள் வாங்கி, அவைகளைப் பியட் மோட்டார்ஸ் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. போர் மூண்டு விட்டதால் ஏற்றுக்கொண்ட ஆர்டர்களை நிறைவேற்ற முடிய வில்லை. எனினும் பதிலாளுக்குக் கமிஷன் கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. பதிலாள் ஏதாவது இரகசிய ஊதியம் பெற்றாரென்றால், அதை முதல்வருக்குத் தெரிவிக்க வேண்டும்; இல்லாவிட்டால் அதைப் பெறாமலிருக்க வேண்டும். பொதுவாகப் பதிலாள் முதல்வரிடமும் மற்றவர்களிடமும் கமிஷன் ஒரே சமயத்தில் பெறக்கூடாது. ஆனால் அங்ஙனம் பெறுவது வழக்கமாக இருந்தாலும், மற்றவர் தரும் கமிஷனுக்காக முதல்வர், பதிலாள் தொண்டுசெய்வதை அனுமதித்தாலும் அவர் கமிஷன் பெறலாம்.

பற்றுரிமை (Lein) : பொதுவாக ஒரு பதிலாளின் பற்றுரிமை ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகக் கொண்டுள்ள பற்றுரிமை யாகும். அவருக்கு முதல்வரிடமிருந்து ஏதாவது பணம் வரவேண்டி யிருந்தால் முதல்வரின் பொருள்களைத் தம் வசத்தில் நிறுத்திக் கொண்டு தம் பாக்கியை வசூலித்துக் கொள்ளலாம். இதற்கான நிபந்தனைகளாவன : பொருள் அவரிடத்தில் இருக்க வேண்டும். அவருடைய கடமைக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாமல் பொருள் அவரிடத்தில் இருக்க வேண்டும். தம்மிடமுள்ள பொருளை அவர் கொடுத்துவிட்டால் அவருக்குப் பொருள் மீதுள்ள பற்றுரிமை இல்லாமல் போய்விடும். ஆனால், ஏதாவது மோசஞ் செய்து பொருளை அவரிடமிருந்து பிரித்திருந்தால் அவருக்கு அப் பற்றுரிமை உண்டு. முதல்வர் திவாலாகி விட்டால்கூடப் பதிலாளுக்கு இப் பற்றுரிமை உண்டு.

இழப்பீடு கோரும் உரிமை : பதிலாள் செய்யும் சட்டபூர்வ மான செயல்கள் அனைத்திற்கும் நட்டஈடு கோரும் உரிமை உண்டு. அவர் கடமை யாற்றும்போது இயற்கையாக ஏற்படும்

நட்டத்திற்கு முதல்வர் அவருக்கு நட்டஈடு தரவேண்டும். மூன்றாம் மனிதர் முதல்வர்மீது வழக்குத் தொடர்ந்து வெற்றி பெற்றபோது செலுத்தும் செலவுத் தொகையைப் பதிலாள் முதல்வரிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம். சட்டத்திற்குப் புறம்பான கள்ளக் கடத்தல், தேர்தலில் செய்யும் தவறான செயல்கள் ஆகியவைகளில் பதிலாள் ஈடுபட்டு அதற்காகத் தண்டனைத் தொகை செலுத்தியிருந்தால் அதை நட்டஈடாகப் பெற முடியாது. பதிலாளுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டு, அதனால் காயங்கள் ஏற்பட்டால் அதற்கு முதல்வர் நட்டஈடு தரவேண்டும். ஆனால் இது வழங்கக் கடமைப்பட்டோரின் புறக்கணிப்பு வேண்டுகோளுக்கும், பொது வேலைவாய்ப்பு விதிகளுக்கும் உட்பட்டு வழங்கப்படும்.

முதல்வரும் மூன்றாம் மனிதர்களும்

கீழ்க்காணும் தருணங்களில் முதல்வர் மூன்றாம் மனிதர்களுக்குப் பொறுப்பாளியாவார் :

1. பதிலாளுக்கு அளிக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் பதிலாள் செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் கட்டுப்பட்டுப் பொறுப்பானவர்.

2. பதிலாளின் பொய்க்கூற்றுக்கும் மோசடிக்கும் பொறுப்பானவர்.

3. பதிலாள் தரும் தகவல்படி பொறுப்பானவர்.

4. பதிலாள் தனிப்பட்ட முறையில் செய்யும் செயலுக்கும் இவர்தாம் பொறுப்பானவர்.

5. முதல்வரின் பெயரைச் சொல்லாமலேயே பதிலாள் செய்யும் ஒப்பந்தத்திற்கும் இவர்தாம் பொறுப்பானவர்.

6. மூன்றாம் பேர்வழிகளுக்குச் சமமாகப் பதிலாளின் செயலில் தலையிடும் பொறுப்பும் இவருக்கு உண்டு.

1. ஏற்கெனவே சொல்லியவண்ணம் அதிகார வரம்பிற்குள் பதிலாள் கடமையாற்றும் செயல்களுக்கு முதல்வர் பொறுப்பாளியாவார். அதிகாரமில்லாமல் செய்யும் காரியங்களுக்கு அவர் பொறுப்பாகமாட்டார். அதிகார எல்லை அல்லது வெளித்தோற்ற மட்டுங்கூடிய அல்லது உணரக்கூடிய அதிகாரம் என்று பொருள். அதாவது சொன்ன அதிகாரங்கள்படி நடப்பதற்கான பொறுப்போடு மட்டுமல்லாமல், ஒரு நடவடிக்கையைக் கொண்டு வருவதற்கான செயல்கள்பற்றிய பொறுப்பும் உண்டு. ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அவசியமான நியாயமான நிகழ்ச்சிகளுக்கும் முதல்வர் பொறுப்பாளியாவார்.

சோன்செஸ் எதிர் லண்டன் தென்மேற்கு இரயில்வேஸ் (Soances *vs.* London and South Western Railways) என்ற வழக்கில் ஒரு பிரயாணி இரயிலைவிட்டு இறங்கினவுடன், கம்பெனி உடையில் தோன்றிய ஒரு போர்ட்டரிடம் சாமான்களை ஒப்படைத்தார். அவன் ஒரு போர்ட்டர் என எண்ணித்தான் சாமான்களைக் கொடுத்தார். ஆனால், பின்னால் அவர் சாமான்களை அவன் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான். எனவே, இழப்பீடு கோரி இரயில்வே கம்பெனிமீது வழக்குத் தொடுத்தார் அவர். ஆனால் இரயில்வே கம்பெனி அவன் அலுவல் நேரத்தில் இல்லையென்றும்-சாமான்களைத் தூக்க அவனுக்கு உரிமையில்லையென்றும், எனவே, கம்பெனி பொறுப்பாளி இல்லையெனவும் வாதாடியது. அவன் ஸ்டேஷனில் தக்க உடையுடன் இருந்ததால் யாரும் அவனைப் போர்ட்டர் என்றுதான் கருதுவார்கள். எனவே, கம்பெனி நட்டஈடு தர வேண்டும் என்று நீதிமன்றம் கருத்து வழங்கியது. இது வெளிப்படையாகவே தோன்றும் அதிகாரம் என்ற தலைப்பின்கீழ் வரும்.

முதல்வர் பதிலாளை ஒரு காரியம் செய்ய அனுமதி தந்து ஆனால், அதே சமயத்தில் அதற்கு ஒரு வரையறை நிருணயித்திருந்தால் அது மூன்றாம் மனிதர்களுக்குத் தெரியாமலிருக்கும் போது பதிலாள் அவ் வரையறையை மீறிக் காரியம் செய்தால், அதற்கு அவர் (முதல்வர்) தாம் பொறுப்பாவார். உதாரணமாக முதல்வர் தம் பொருளைக் கடனுக்கு விற்கவேண்டா என்று பதிலாளிடம் சொல்லியிருக்கும்போது, பதிலாள் கடனுக்கு விற்கிறார் என வைத்துக்கொள்வோம். ஆனால், இவ் விஷயம் வாங்குவோருக்குத் தெரியாது என்றாலும்கூட, இவ்விற்பனையில் முதல்வருக்கும் பங்குண்டு. அதாவது, அதனால் வருவதில் பொறுப்புண்டு. பதிலாள் ஒரு பகுதி அதிகார வரம்பிற்குட்பட்டும், மற்றொரு பகுதி அத்துமீறியும் காரியமாற்றினால் முதல்வரின் பொறுப்பு அந் நடவடிக்கையைப் பிரிக்கமுடியுமா அல்லது பிரிக்க முடியாதா என்பதைப் பொறுத்துள்ளது. பிரிக்கக்கூடிய நடவடிக்கையாக இருந்தால் அதிகாரம் உள்ளவரைக்கும் அவர் பொறுப்பாவார். பிரிக்கமுடியாத நடவடிக்கையாக இருந்தால் அது முழுவதும் செல்லாத நடவடிக்கையாகும். முதல்வர் அதற்குப் பொறுப்பாளியல்லர். ஒரு சமயம் ரூ. 200-க்கு ஒரு உண்டியல் விடுக்கப் பதிலாளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால், அவர் ரூ. 1000-க்கு உண்டியல் விடுத்தார். எனவே, முதல்வருக்கு ரூ. 200-க்குக்கூடப் பொறுப்பில்லை. காரணம் இந் நடவடிக்கை பிரிக்க இயலாத முழு நடவடிக்கையாகும்.

2. சட்டத்தின் கண்களுக்கு முதல்வரும் பதிலாளும் ஒன்றாகவே கருதப்படுவதால், பதிலாள் செய்யும் மோசடி முதல்வர் செய்த மோசடியாகவே கருதப்படும். எனவே, இதற்கு முதல்வரே பொறுப்பாளியாவார். ஆனால், அத்தகைய மோசடி பதிலாள் வேலையில் இருக்கும்போது நிகழ்ந்ததாக இருக்க வேண்டும். பதிலாள் செய்த எந்தச் செய்கைக்கும் அதே கோட்பாடு அமலாக்கப்படும்.

3. அதேபோல் பதிலாள் வேலையிலிருக்கும்போது தந்த தகவல் அனைத்திற்கும் முதல்வர் பொறுப்பாளியாவார். பொறுப்பேற்ற அல்லது ஊகித்தறிந்த அறிவிப்பு என்ற கொள்கையின்படி இது குறிக்கப்படுகிறது. பதிலாண்மையைப் பற்றித் தமக்குக் கிடைத்த தகவல்களைப் பதிலாள் உடனே முதல்வருக்குத் தெரிவிக்கவேண்டும். அந்தத் தகவல் முக்கிய மாகக் குறிப்பிடப்படவேண்டிய செய்தியாகவும், பதிலாண்மைத் தொழிலுக்குச் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அச் செய்தி முதல்வரைக் கட்டுப்படுத்தும். பேச்சுவாக்கிலே எதிர்பாராமல் வந்த ஆதாரமற்ற செய்தியாக இருக்கக்கூடாது. மேலும், மேற்சொன்ன முதல்வரிடம் வேலைக்கிருக்கும்போது கிடைத்த செய்தியாக அமைந்து இருக்க வேண்டும். இக் கருத்தில் ஆங்கிலச் சட்டத்திற்கும் இந்தியச் சட்டத்திற்கும் வேறுபாடுள்ளது.

நார்வுட்டிற்கும் டிரெசருக்கும் (Norwood *vs.* Dresser) நடந்த வழக்கில் 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குக் கமிஷன் அடிப்படையில் விற்பதற்குப் பொருள் தந்தார். ஏற்கெனவே 'ஆ'விடம் வேலையிலிருந்த 'இ'க்கு அப் பொருள் 'ஆ'வுடைய தல்ல, 'அ'வினுடைய பொருள் என்று தெரியும். அதன்பின்னர் 'இ' என்பவர் 'ஈ' என்பவருடைய பதிலாளாக அப் பொருள்களை 'ஈ'க்காக வாங்கினார். ஆனால், அந்தப் பொருள்கள் 'அ'உடை யது என்று 'ஈ'க்குச் சொல்லவில்லை. ஆனால் 'ஈ' என்பவர் 'ஆ'வோடு எதிர் ஈடுசெய்யும் உரிமையை நிறைவேற்ற எண்ணும் போது 'ஆ'என்பவர் அப் பொருள்களுக்கு உரிமையாளர் இல்லை என்று தெரியவந்ததால் தம் ஒப்பந்தத்தைப் பின்வாங்கிக்கொண் டார். 'அ'என்பவர் 'இ'என்பவரின் அனுபவ அறிவினால் பொறுப் புள்ளவராக இருப்பதால் ஒப்பந்தம் அவரைக் கட்டுப்படுத்தும். எனவே அவர் எதிர்ஈடு கையாளும் உரிமைக்கு அனுமதிக்கப் படமாட்டார் என்று ஆங்கில நீதிமன்றம் கருத்துக் கூறியது. ஆனால், நம் நாட்டில் அதன் முடிவு வேறுபடும். 'அ'இடம் வேலைக்கிருக்கும்போது 'இ' என்பவர் அனுபவ அறிவு பெற

வில்லையென்றும், அவர் ஆ-இடம் வேலைக்கிருந்தபோது பெற்ற தென்றும் நம் நாட்டுச் சட்டப்படி முடிவு இருக்கும். ஆனால், இரு நாட்டுச் சட்டங்களும் காட்டப்படும். அறிவிப்புக் கொள்கையின் நீட்டிப்பைப் பின்பற்றவில்லை. காரணம் பதிலாள் மோசடிக் குற்றத்திற்காளாகும்போது இது பயன்படாது.

4. மூன்றாம் மனிதர்களுக்குப் பதிலாள் தனிப்பட்ட முறையில் பொறுப்புள்ளவராக இருந்தாலும் முதல்வரும் பொறுப்பாளியாவார் என்று ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 233, 234 கூறுகின்றன. அதாவது, வேறு அல்லது மாற்றுப் பொறுப்புள்ளது என்று உணரலாம். தனிப்பட்ட முறையில் பதிலாள் பொறுப்பாளியாக இருந்தாலும், மூன்றாம் மனிதர்கள் அவர்கள் விருப்பப்படி பதிலாளையோ, முதல்வரையோ தேர்ந்தெடுத்து வழக்குத் தொடரலாம்.

5. முதல்வரின் பெயரை வெளியிடாமலேயே பதிலாள் செயலாற்றிக் கொண்டிருக்கும்போது முதல்வரின் பெயரை மூன்றாம் மனிதர்கள் கண்டுபிடித்துவிட்டால் அவர்களுக்கு முதல்வர் பொறுப்பாளியாவார்.

6. பெயரை வெளியிடாத முதல்வர் திடீரென்று தம் பெயரை வெளியிட்டு அவரின் பதிலாள் ஈடுபட்டுள்ள நடவடிக்கையைச் செய்வதற்கு விருப்பம் தெரிவிக்கலாம். ஆனால், அப்பொழுதுள்ள நபர்களின் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் கட்டுப்பட்டுத்தான் அவ்வாறு நுழைய முடியும். உதாரணமாக, பதிலாளின்மீது எதிர்ஈடு கோரப்படும் உரிமை மூன்றாம் நபர்களுக்கிருந்தால் அவ் வுரிமையுடன்கூடிய நடவடிக்கைகளை முதல்வர் எடுத்துக்கொள்ளலாம்.

பதிலாளின் தனிப்பட்ட பொறுப்பு (Agent's Personal Liability)

சாதாரணமாகப் பதிலாள் மூன்றாம் மனிதர்களுக்குப் பொறுப்பாளியல்லர். காரணம் அவர் தமக்கென்று எந்த ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை; முதல்வருக்காகத்தான் அவர் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். ஆனால், அதற்காக அவருக்குத் தனிப்பட்ட முறையில் பொறுப்பே இல்லையென்று சொல்லிவிடமுடியாது. ஒப்பந்தம் அதுபோல் வெளிப்படையாகவே இருந்தாலும் வெளி நாட்டு முதல்வருக்காகவும், பெயர் தெரிவிக்காத முதல்வருக்காகவும், வழக்குத் தொடர இயலாத முதல்வருக்காகவும்,

பதிலாள் காரியமாற்றும்போதும், அக்கறையுடன் கூடிய அதிகாரம் உள்ள போதும், வழக்கமான முறையுள்ளபோதும் தவறாக அல்லது மோசடி செய்து பணம் செலுத்தும் போதும், அதிகார உத்தரவாத முறிவு ஏற்படும்போதும் பதிலாள் தனிப் பட்ட முறையில் பொறுப்பாளியாவார். போதிய அதிகாரம் பதிலாளுக்கு இல்லாமலிருக்கும்போது அவர் முதல்வருக்காகச் செயலாற்றினால் உத்தரவாத முறிவு ஏற்படும். பதிலாளின் செயலை முதல்வர் உறுதிசெய்யாவிட்டால், பதிலாள் மூன்றாம் மனிதர்களுக்குப் பொறுப்பாளியாவார். உதாரணமாகப் பதிலாள் பொய்க்கூற்றுக் கூறியிருந்தாலும், மூன்றாம் மனிதர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருந்தாலும், அல்லது அவர்கள் தவறான முறையில் நடத்தப்பட்டாலும், முதல்வர் அந்த நடவடிக்கையை மறுதளிப்புச் செய்யலாம். பதிலாளின் நடவடிக்கையால் நட்டம் ஏற்பட்டிருக்க வேண்டும். அல்லது பொய்க்கூற்றானது சட்ட சம்பந்தமில்லா மல், உண்மையின்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் பதிலாள் பொறுப்பாளியாவார். மோனிபாய் எ. ரூபலிபா (Monibhai *vs.* Rupaliba) என்ற வழக்கில் ஒரு தாய் தன் மகனுக்குப் பதிலாளாகத் திகழ்கிறாள். ஒரு மைனர் பதி லாளைச் சட்டத்தின்கீழ் நியமிக்க முடியாததால், இந்த நியமனம் சட்டத்தின்கீழ்ச் செல்லாது. எனவே, இந் நியமனத்தின்கீழ்ச் செயல்பட்ட எந்த மூன்றாம் நபரும் தமக்குச் சட்டம் தெரியாது என வாதாட முடியாது. மற்றொரு வழக்கில் அஞ்சல் அலுவலகத் தின் தவற்றினால் கிடைத்த தவறான தந்தியின்படி செயலாற்றிய தால், ஒரு தரகர் தனிப்பட்ட முறையில் மூன்றாம் மனிதருக்குப் பொறுப்பாளியாகிவிட்டார். எனவே, ஒரு பதிலாள் உண்மையிலே தமக்காகச் செயலாற்றினாலும், வெளிப்பார்வைக்கு முதல்வருக் காகச் செயலாற்றுவதாகத் தோன்றினால் அந் நடவடிக்கையால் அவர் நன்மையொன்றும் பெற இயலாது.

பதிலாண்மை முடிவு (Termination of Agency)

சட்ட நடவடிக்கையாலும், நபர்களின் செய்கையாலும் பதி லாண்மை முடிவுபெறுகிறது. கீழ்க்காணும் வாதத்தில் சட்ட நடவடிக்கைமூலம் பதிலாண்மை முடிவடைகிறது.

முதல்வர் திவாலானால் பதிலாண்மை தானே முடிவடைகிறது. ஆனால் பதிலாள் திவாலானால் பதிலாண்மை பாதிக்கப்படாது. முதல்வரோ பதிலாளோ இறந்துவிட்டாலும், சுயநினைவு இழந்தாலும் பதிலாண்மை முடிவடைகிறது. கம்பெனி அல்லது கூட்டுவாணிபம் பொறுத்த மட்டில் அவை கலைக்கப்பட்டால்

பதிலாண்மை முடிவடைகிறது. தரப்பட்ட வேலை முடிவடைந்தாலும் பதிலாண்மை முடிந்துவிடுகிறது. ஒரு தனி நடவடிக்கை முடிந்துவிட்டால் அதாவது, ஒரு விற்பனை முடிந்துவிட்டால், விற்பனைக்குக் கொண்டுவந்த பதிலாண்மை முடிகிறது. பணம் செலுத்தும்வரை தொடர்வதில்லை. அதேபோல் பதிலாண்மைக்கு வரையறுக்கப்பட்ட காலம் முடிந்தாலும் பதிலாண்மை முடிகிறது. உதாரணமாக ஓர் ஆண்டிற்குள் ஒரு சொத்தை விற்றுத் தருவதற்குப் பதிலாள் நியமிப்பதாக வைத்துக்கொள்வோம். ஓர் ஆண்டு முடிந்தவுடனே சொத்து விற்கப்பட்டாலும் சரி, விற்கப்படாவிட்டாலும் சரி, பதிலாண்மை முடிந்துவிடும். மூலப்பொருள் அழிந்தாலும் பதிலாண்மை முடிகிறது. உதாரணமாக, விற்பனையின் மூலப்பொருளாக ஒரு வீடு இருந்து, விற்பனை முடிவடைவதற்குள் அவ் வீடு அழிந்துவிட்டால் பதிலாண்மையும் முடிந்துவிடும். ஒரு காரியத்தை நிறைவேற்ற முடியாதபடி ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டாலும், பதிலாண்மை முடிவடைகிறது. எடுத்துக்காட்டாக, போர் ஏற்பட்டாலும் ஒரு குறிப்பிட்ட தொழிலைச் சட்ட விரோதமானது என்று சட்டமன்றம் அறிந்தாலும் அக் காரியம் நடைபெறாமலேயே பதிலாண்மை முடிவடைகிறது.

சம்பந்தப்பட்ட நபர்களின் செய்கையாலும் பதிலாண்மை முடிவடைகிறது. பதிலாள் துறப்புக் கடிதம் (Renunciation) கொடுத்தாலும், முதல்வர் ரத்துச்செய்தாலும் இவர்களின் செய்கையால் பதிலாண்மை ஒரு முடிவிற்கு வந்துவிடுகிறது. எவ்வாறு நபர்கள் பதிலாண்மை ஒப்பந்தம் செய்துகொள்கிறார்களோ அவ்வாறு பதிலாண்மைக்கும் அவர்களே முடிவுகட்டலாம்.

பதிலாண்மை ஒப்பந்தத்திலிருந்து பதிலாள் எப்பொழுது பின்வாங்குகின்றாரோ அப்பொழுதே பதிலாண்மை முடிவடைகிறது. அவருடைய விருப்பத்திற்கெதிராக ஒருவரைப் பதிலாளாக இருக்கக் கட்டாயப்படுத்தக் கூடாது.

நபர்களின் செய்கை

பதிலாள் துறப்புக் கடிதம் தந்தபோதும், முதல்வர் ரத்துச் செய்யும்போதும் நபர்களின் செயலால் பதிலாண்மை முடிகிறது. நபர்கள் விரும்பும்போது பதிலாண்மை ஒப்பந்தம் ஏற்படுகிறது. அதேபோல் அவர்கள் விரும்பும்போது பதிலாண்மை சட்டப் புறம்பான செயல்களுக்காக நீக்கப்பட்டு முடிவடைகிறது. பதிலாண்மை ஒப்பந்தத்திலிருந்து பதிலாள் பின்வாங்கும்போது துறப்பு (Renunciation) ஏற்படுகிறது. ஒருவருடைய விருப்பத்திற்கு எதிராக ஒருவர் பதிலாளாகத் தொடர்ந்து செயலாற்ற

வற்புறுத்தக்கூடாது. பதிலாண்மையை விடும் நோக்கத்தை முதல்வருக்குத் தகுந்த காரணம் காட்டி நோட்டீஸ் விடவேண்டும். அத்தகைய நோட்டீஸ் விடாவிட்டால் முதல்வருக்குத் தோன்றும் நட்டத்தைப் பதிலாள்தான் சரிக்கட்டவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குப் பதிலாண்மை இருக்கும்போது, பதிலாள் அத்தவணைத் தேதிக்குமுன் விலகிவிட்டால் முதல்வரின் நட்டத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

பதிலாளுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை முதல்வர் எப்பொழுது வேண்டுமானலும் ரத்துச் செய்யலாம். ஆனால் அதற்குச் சில வரையறைகள் உண்டு.

ரத்துச் செய்வதற்குரிய நோட்டீஸ் விட்டால்தான் ரத்துச் செல்லுபடியாகும். பதிலாண்மை ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் இருப்பதாக இருக்கும்போது, முன்கூட்டியே முதல்வர் நோட்டீஸ் விட்டுப் பதிலாண்மையை ரத்துச் செய்தால், அதனால் ஏற்படும் நட்டத்திற்கு முதல்வரே பொறுப்பாவார். தனி அக்கறையுடன் கூடிய பதிலாண்மையை முதல்வர் தம் விருப்பப்படி ரத்துச் செய்யவியலாது. அக்கறையுடன் இருக்கும்வரை அப் பதிலாண்மையை மாற்றமுடியாது. சம்பள நோக்கத்துடன் ஒரு பதிலாண்மை காணப்பட்டால் அஃது அக்கறையுடன்கூடிய பதிலாண்மையாகாது. அதேபோல் முதல்வர் தம்பதிலாளைவரும் வருவாயிலிருந்து சம்பளத்தை எடுத்துக்கொள்ள அனுமதித்திருந்தாலும், அதுவும் அக்கறையுடன்கூடிய பதிலாண்மை இல்லை. கிருஷ்ணதாஸ் எ. கோபேஸ்வர லால்ஜி (Krishnadoss *vs.* Gopeswara Lalji) என்ற வழக்கில் மத சம்பந்தமான ஒரு மடத்தை நிருவகிக்க ஒரு பதிலாள் நியமிக்கப்பட்டார். பின்னர் அவரின் அதிகாரத்தை முதல்வர் ரத்துச்செய்துவிட்டார். ஆன்மிகப் பயன் கருதி அக்கறையுடன் அமைக்கப்பட்ட பதிலாண்மையானதால், அவ்வக்கறை இருக்கும் மட்டும் பதிலாண்மையை நீக்கக்கூடாது என்று மறுதளித்து வழக்குத் தொடர்ந்தார் பதிலாள். ஆனால் நீதிமன்றம் இவர்தம் கருத்தை ஒத்துக்கொள்ளாமல் அதிகாரம் ரத்துச்செய்ததைச் சரியெனத் தீர்மானித்துத் தீர்ப்புக் கூறியது. மேலும் பதிலாள் தனிப்பட்ட முறையில் பொறுப்புகளை அவரே ஏற்றுக் கொள்ளும்போது அவர் அதிகாரத்தை ரத்துச்செய்ய முடியாது. அதேபோல் அதிகாரத்தைப் பகிர்ந்து ஒரு பகுதியை மட்டும் கையாளும்போதும் பதிலாண்மையை ரத்துச்செய்ய முடியாது. பதிலாளின் கவனத்திற்கு வந்தால்தான் ரத்துச்செய்தல் செல்லுபடியாகும். மூன்றாம் பேர்வழிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் ரத்துச்செய்த அறிக்கையைப் பெற வேண்டும். முதல்வர் இறந்த

பின்னர்ப் பதிலாள் அவர்தம் கடனை ஒத்துக்கொண்டால் கடன் கொடுத்தோர்களுக்கு அவர் இறந்தது தெரியாமல் இருக்குமானால், முதல்வரின் சொத்துகள்மீது கடன் கொடுத்தோர் நடவடிக்கை யெடுக்கலாம். முதல்வர் இறந்தவுடனே பதிலாண்மை முடிவு பெறுகிறது என்பது உண்மை. ஆனால் இறப்பு நோட்டீஸ் கொடுக்காதவரை அது செல்லுபடியாகாது. பதிலாண்மையின் முடிவு துணைப்—பதிலாண்மையை முடிவாக்கும்; ஆனால் பதிலிப் பதிலாண்மையை முடிவாக்காது.

14. சரக்கு விற்பனை

(Sale of Goods)

1930ஆம் ஆண்டின் இந்தியச் சரக்கு விற்பனைச் சட்டம் அசையும் சரக்கு விற்பனைபற்றிக் கூறுகிறது. ஆங்கிலச் சட்டத்தையொட்டியே இந்தியச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட விலைக்காகச் சரக்குப் பரிமாறிக்கொள்ளப்படுவது சரக்கு விற்பனை எனப்படுகிறது. விற்பனை ஒப்பந்தத்தின் கைம் மாறாக விலை கருதப்படுகிறது. ஒரு விற்பனையில் ஒருபகுதி சரக் கிற்காகவும், மற்றொரு பகுதி பணத்திற்காகவும் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. அல்லது முழுவதும் சரக்கிற்காகவும் அல்லது முழுவதும் பணத்திற்காகவும் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. நீதிமன்றத் தீர்ப்புக்கட்டளையை (Decree) நிறைவேற்றும் விற்பனையைத் தவிர சாதாரணமாக யாரும் தம் பொருளையே வாங்கமாட்டார்கள். சரக்குப் பரிவர்த்தனை செய்து கொள்வது பண்டமாற்று (Barter) நடவடிக்கையைக் குறிப்ப தாகும். பணத்திற்குப் பணத்தை மாற்றிக்கொள்வது நாணய மாற்றமாகும். விற்பனை ஒப்பந்தத்தில் விற்கும் சரக்குகளில் உரிமைமாற்றம் நிகழ்தல் வேண்டும். விற்பதற்கு இசைவுதரும் நடவடிக்கைகளில் விற்பனையில் முடியும்வரை உரிமைமாற்றம் நிகழ்வதில்லை.

விற்பனை உடன்பாட்டிற்கும் விற்பனை ஒப்பந்தத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

விற்பனை ஒப்பந்தம் (Contract of Sale)	விற்பதற்கு உடன்பாடு (Agreement to sell)
1. இஃது ஒரு நிறைவேற்றப் பட்ட ஒப்பந்தம்.	1. இஃது ஒரு நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தம். அதா வது எதிர்காலத்தில் நிறை வேற்ற வேண்டிய காரியம் உள்ளது.
2. அனைத்துலக உரிமை உண்டு.	2. தனிப்பட்ட உரிமை மட்டும் தான் இவண் காணப்படும். அதாவது வாங்குவோருக்கும்

	விற்போருக்கும் இடையில் ஏற்படும் உரிமை மட்டும் தான் இங்குண்டு.
3. உரிமைமாற்றம் நிகழ்ந்த காரணத்தினால் விலைக்காக விற்பவர் வழக்காடலாம்.	3. இங்குப் பொருள்வாங்குவோர் ஒப்பந்த முறிவு செய்துள்ள தால் விற்போர் நட்டஈடு மட்டும்தான் கோரலாம். காரணம் பொருள் உரிமை மாற்றம் ஏற்படவில்லை.
4. மூன்றாம் மனிதர்களுக்கு விற்பனையாளர் பொருளை விற்கமுடியாது. முதலில் வாங்கிய வாங்குநர் அதே பொருளைத் திரும்ப அடைய வழக்குத் தொடரலாம்.	4. மூன்றாம் மனிதர்களுக்கு விற்பனையாளர் பொருள் விற்கலாம். முதலில் வாங்கிய வாங்குநர் நட்டஈடு மட்டும்தான் கோரலாம்.
5. தீவிபத்துப்போன்றவிபத்துகள் ஏற்பட்டுப் பொருள் நாசமானாலும் வாங்குவோர்தாம் நட்டத்தை ஏற்க வேண்டும்.	5. இதுபோன்ற விபத்துகளில் பொருள் விற்போர்தாம் நட்டத்தை ஏற்கவேண்டும்.
6. பொருள் விற்பனையாளர் திவாலாகிவிட்டால், வாங்குவோர் நீதிமன்ற அலுவலரிடமிருந்து பொருளைத் திரும்பப் பெறலாம்.	6. விற்பனையாளர் திவாலாகி விட்டால் வாங்குவோர் ஏற்கெனவே விலையைச் செலுத்தியிருந்தால் விகிதாசார ஈவுத் தொகையைத் தான் திரும்பப் பெறலாம்.
7. வாங்குவோர் திவாலாகி விட்டால், விற்பனையாளர் பற்றுரிமை இல்லாதபோது வாங்குவோரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியிடம் பொருளை ஒப்படைக்க வேண்டும். அதேபோல் வரவேண்டிய விலைக்கு விகிதாசார ஈவுத் தொகைதான் கிடைக்கும்.	7. பணம் செலுத்தாமலேயே வாங்குவோர் திவாலானால் விற்பனையாளர் பணம் பெறாமல் பொருளைத் தரமாட்டார்.

விற்பனையும் வாடகைக் கொள்முறையும் (Sale and Hire Purchase)

வாடகைக் கொள்முறை கிட்டத்தட்ட கடனுக்கு விற்பனை செய்தலை ஒத்துள்ளது. குறிப்பிட்ட தவணைத் தொகையைச் செலுத்திய பின்னர், பொருளை வாங்குதற்கு ஒப்புக்கொண்டு தவணை முறையில் பணம் செலுத்துவதற்கு, ஒத்துக்கொண்ட வருக்குப் பொருளை விற்க ஒருவர் செய்துகொண்ட ஒப்பந்த மாகும். பொருள்கள் இங்கு வாடகைக்கு விடப்படுகின்றன. இது நவீன கால வாணிக நடவடிக்கையின் வளர்ச்சியைக் காட்டு கிறது; ஒப்படைப்புபோல் தோன்றவும் செய்கிறது. பொருளைப் பயன்படுத்துவதற்காக வாடகைக்கு எடுத்துச் சென்றவர் பணம் செலுத்தினும், பொருள்மீது உள்ள உரிமை விற்பனையாளரிடமே உள்ளது. அகிலன் என்பவர் தம் குதிரையைப் பரதன் என்ப வருக்கு வாடகைக் கொள்முறையில் கொடுத்தார். பரதனும் தவணைமுறைப் பணத்தை ஒழுங்காகீக் கட்டிக்கொண்டு வந் தார். இறுதியில் தவணைமுறைப் பணத்திற்கு மேலாக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்துவிட்டுப் பரதன் குதிரையை வாங்கிக்கொள்ளலாம் என்ற விருப்பப் பேரம் (option) தரப் பட்டது. அதைப் பயன்படுத்திப் பரதன் குதிரையின் உரிமை யாளராகவும் ஆகிவிட்டார். வாடகைக் கொள்முறையின் சாரம் என்னவென்றால், சங்கம சொத்துகளை வாங்க அங்கு ஓர் உடன்பாடு ஏற்படவில்லை. ஆனால்,விருப்பப் பேரம்தான் ஏற்படு கிறது. அதுவும் சில் நிபந்தனைகளுடன் ஏற்படுகிறது. எனவே, ஒரு நடவடிக்கை வாடகைக் கொள்முறையா அல்லது ஒரு விற்பனையா என்று பரிசோதிக்க வேண்டுமானால், பொருளை வாங்கினவர் அதைத் திருப்ப உரிமை பெற்றுள்ளாரா? அல்லது வாடகைக்கு முற்றுவைத்து உரிமையாளராக விரும்புகிறாரா என்று அறியவேண்டும்.

வாடகைக் கொள்முறை உடன்பாடு பொருள்களைத் தவணை முறையில் (Instalment System) வாங்குவதற்குப் பயன்படுகிறது. உடன்பாட்டிற்கு முரணாக வாங்குவோர் பொருள்களை விற்று விட்டாலும், விற்பனையாளின் உரிமைக்கு ஆபத்தில்லாமல் இம் முறையுள்ளது. மிகவும் விலையுயர்ந்த பொருள்களாக இருந்தால் அவை நிதிக் கழகங்களுக்கு விற்கப்பட்டு அவை வருங்கால வாங்கு வோரிடம் வாடகைக் கொள்முறையில் விற்கப்படுகின்றன. அத்தகைய எதிர்கால வாங்குநருக்கு நிதிக் கழகங்கள் பண உதவி செய்து அவைகளை வாங்கவும் செய்கின்றன.

வாடகைக் கொள்முறை ஒப்பந்தம் எழுவதற்குமுன், உரிமையாளர் ரொக்க விலையை எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும். உடன்பாட்டுப் பத்திரத்தை வாடகைக்கு வாங்குபவர் கையெழுத்திட வேண்டும். அப் பத்திரத்தில் அடக்க விலையும், வாடகைக் கொள்முறை விலையும் குறிப்பிடப்பட வேண்டும். தொகையும் ஒவ்வொரு தவணைத் தேதியும் குறிப்பிடப்பட வேண்டும். உடன்பாடு சம்பந்தப்பட்ட பொருள்களின் பட்டியல் தரவேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள தாளில் ஒப்பந்தத்தில் ஈடுபட்ட வாடகைக்கு வாங்குவோரின் உரிமைகள் சம்பந்தப்பட்ட அறிக்கை இருக்க வேண்டும். அத்தகைய ஒப்பந்தத்தின் நிபந்தனைகளாவன : பொதுவாக வாணிபத் தன்மை வாய்ந்த பொருள்களாக இருக்க வேண்டும். சொத்து மாறும்போது அதை விற்கும் உரிமை சொந்தக்காரருக்கு இருக்கவேண்டும். வாடகைக்கு வாங்குவோர் பொருள் வாங்கும் நோக்கத்தை அறிவிப்பாரானால் அந் நோக்கத்திற்கு உகந்ததாகப் பொருள் இருக்க வேண்டும். இவை எல்லாம் வெளிப்படையாக முழுதும் இருக்கவேண்டிய நிபந்தனைகள். இவைகளைத் தவிர தொக்கிய நிபந்தனைகள் உள்ளன. அதாவது வாடகைக்கு வாங்குவோர், பொருளைத் தம்வசம் பெற்று அனுபவிக்க வேண்டும். பொருள் அவருக்கு உரிமையாகும்போது எவ்வித வில்லங்கமோ மூன்றாம் மனிதர்களுக்கு உரிமையுள்ளதாகவோ இருக்கக்கூடாது.

செலுத்தும் தொகை பாக்கியாவதற்குமுன் எந்நேரத்திலும் வாடகைக்கு வாங்குவோரின் அறிக்கையினால் உடன்பாடு தீர்மானிக்கப்படுகிறது. அதன்பின் செலுத்தவேண்டிய தவணை முறைத் தொகை அல்லது பாக்கியை அவர் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்திய தொகை வாடகைக் கொள்முறை விலையில் பாதியாவது இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் பொருளைத் திருப்பி அனுப்ப வேண்டும். பொருள் அவரிடம் உள்ளபோது நியாயமான அக்கறையுடன் அதனைக் கவனிக்க வேண்டும். சேதமேற்பட்டால் உரிமையாளருக்கு அவர்தாம் பொறுப்பாக வேண்டும். எதிர்மறை ஒப்பந்தத்திற்கு இது கருப்பொருளாக அமையாது.

விற்பனையும் ஒப்படைவும் (Sale and Bailment)

ஒரு விற்பனையில் பொருள் வாங்குவோர் உரிமையாளராக ஆகிவிடுகிறார். ஆனால், ஒப்படைவில் ஒப்பாளி உரிமை யுள்ளவராக ஆகிவிட முடியாது. ஒப்படைவின் நோக்கம்

நிறைவேறினவுடன் ஒப்படைப்போனிடம் பொருளைத் திரும்பத் தந்துவிட வேண்டும்.

விற்பனையும் வேலை ஒப்பந்தமும் (Sale and Contract for Work)

ஒப்பந்தத்தின் சாரம் ஒருவரின் திறமையைப் பயன்படுத்துவ தாகவும், சங்கம சொத்துகளைக் கொடுப்பதாகவும் இருந்தால் விற்பனை தோன்றாமல் விற்பனைக்கு அடுத்த நிலையாகத்தான் கொள்ளமுடியும். அதே ஒப்பந்தம் சங்கம சொத்துகளை விற்பதற் காக இருந்தால் அந்த நடவடிக்கை ஒரு விற்பனையாகிவிடும். ஒரு பல்மருத்துவர் ஒருவன் வாயில் பொருத்துவதற்காக ஒரு பல் செட்டுத் தயாரித்தார். ஆனால், அந்த நபர் இறந்துவிட்டார். தம்முடைய வேலைக்கும் உழைப்பிற்கும் ஊதியம் கோரி இறந்தவரின் பிரதிநிதிமேல் பல்மருத்துவர் வழக்குத் தொடர்ந்தார். ஆனால் அவர் வெற்றியடைய வாய்ப்பில்லை. காரணம் அவரின் நடவடிக்கை ஒரு விற்பனை ஒப்பந்தமாகி விட்டது. ராபின்சனுக்கும் கிரேவிற்கும் (Robinson *vs.* Gravaes) நடந்த வழக்கில் ஒரு படத்திற்கு வண்ணம் தீட்டும் பொருள்களை அளித்தது ஒரு சாரார். ஆனால் ஓவியருக்குப் பணம் தரவில்லை. தன்னுடைய வேலையின் உழைப்பிற்காகப் பணம் கோரலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. காரணம் ஓவியரின் நடவடிக்கை விற்பனை ஒப்பந்தமாக அமையவில்லை.

விற்பனையும் பதிலாண்மையும் (Sale and Agency)

பொருளின்மீதுள்ள உரிமை கடக்கின்றதா இல்லையா என்று பார்ப்பதுதான் இங்கு முக்கியமான வினாவாகும். அதேபோல் இங்குள்ள நபர்களிடையே நிலவும் தொடர்பு விற்போர் - வாங்குவோர் தொடர்பா அல்லது முதல்வர் - பதிலாள் தொடர்பா என்று அறிவது முக்கியமாகும்.

விற்பனை ஒப்பந்தம் அமைத்தல் (Formation of a Contract of Sale)

இந்தியாவில் உள்ள விற்பனை ஒப்பந்தம் அவசியம் எழுத்தில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. எதிர்காலச் சச்சரவு களைத் தவிர்ப்பதற்காகப் பொதுவாக எழுத்துமூல உடன்பாடுகள் ஏற்படுகின்றன. ஆனால், ஒப்பந்தத்தின் உட்பொருள் சரக்காகத் தான் இருக்க வேண்டும். பொதுவாகப் பொருள் என்றால் அசையும் சொத்துகளைத்தாம் குறிக்கும்; ஏலம் விடுகின்ற பாக்கியையும் பணத்தையும் குறிக்காது. இருப்புகள், பங்குகள், வளரும் பயிர்கள் எல்லாம் பொருள்கள் எனக் கூறலாம். பொருள்களைத் தற்சமயம் தோன்றும் பொருள்கள், எதிர்காலப்

பொருள்கள், நிகழ்வடைப் பொருள்கள் (Contingent goods) என்று பிரிக்கலாம். தற்சமயம் தோன்றும் பொருள்களைக் குறிப்பிட்ட பொருள் (Specific goods) எனவும் பொதுவான (Generic) பொருள் எனவும் பிரிக்கலாம். விற்பதற்கு ஆயத்தமாக உள்ள பொருள்களைத் தோன்றும் பொருள்கள் என்று சொல்லலாம். இனிமேல் உற்பத்தி செய்யப்போகும் பொருள்கள் எதிர்காலப் பொருள்கள் என்று சொல்லப்படுகின்றன. நிலத்தில் விளையும் தானியங்களையும், விற்பனை ஒப்பந்தத்திற்குப்பின் உற்பத்தி செய்யப்படுகின்ற துணிமணிகள் போன்ற பொருள் களையும் எதிர்காலப் பொருள்கள் என்பர். தற்சமயமுள்ள பொருள்களை, எளிதில் குறிக்கப்படுகின்ற பொருள்களாகவும், குறிக்கப்படமுடியாத பொதுப் பொருள்களாகவும் பிரிக்கலாம். அடையாளங்காட்டித் தற்சமயம் விற்பனை ஒப்பந்தத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும் பொருள்களைக் குறிப்பிட்ட பொருள் என்று சொல்லலாம். பொதுவான பொருள்களை வர்ணித்து விளக்கம் காட்ட வேண்டும். ஆறுமுகத்தினிடம் பல குதிரைகள் உள்ளன. அவைகளில் ஒன்றை முருகனுக்குத் தருவதாக உறுதியளித்தார். இங்கு எந்தக் குதிரை என்று குறிப்பிட்டுச் சொல்லாததால் பொதுவான வாக்குறுதியாக இது கருதப்படுகிறது. அதே நேரத்தில் ஆறுமுகம் முருகனிடத்தில் இந்தக் குதிரைதான் என்று சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருந்தால் அது குறிப்பிடப்பட்ட வாக்குறுதியாகும்.

சட்டத்தின் 6(2) பிரிவு, சரக்கினை விற்பதற்குச் செய்து கொள்ளும் உடன்பாட்டை உரைக்கின்றது. அதை நிறைவேற்றும் பொறுப்பு விற்பனையாளருக்கு எதிர்காலத்தில் நிகழும் நிகழ்ச்சியைப் பொறுத்துள்ளது. எனவேதான் இப் பொருள் களுக்கு நிகழ்வடைப் பொருள்கள் என்று பெயர். முகுந்தன், முரளிக்கு ஒரு கைக்கடிகாரம் விற்பதாக ஒத்துக்கொண்டார்; ஆனால், அதற்கு ஒரு நிபந்தனையும் போட்டார். அதாவது, கோபாலனிடமிருந்து கடிகாரத்தை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வாங்கிவிட்டால் முரளிக்குத்தான் விற்பதாகச் சொன்னார் முகுந்தன். இதில் அவர் கோபாலனிடமிருந்து கடிகாரத்தை வாங்குவதைப் பொறுத்துத்தான் முரளிக்கு விற்கமுடியும்.

ஒவ்வொரு விற்பனை ஒப்பந்தமும், மறுபயன் உடையதாக இருக்க வேண்டும். விற்கும் பொருள்களுக்கு விலைதான் பணத்துடன்கூடிய கைம்மாறு. பிரிவு 9 விலையைப்பற்றிய சில அமைப்புகளைக் கூறுகிறது. விலை குறிப்பிடவில்லையென்றால்

விலை நிருணயிக்கப்படவேண்டும். அவ் விலை அங்காடி விலையாக இருந்தாலும் இருக்கலாம். மூன்றாம் மனிதர்தாம் விலையை நிருணயிக்க வேண்டும் என்ற உடன்பாட்டை நிபந்தனையாகக் கொள்ளவேண்டும். அவர் விலையைக் குறிக்கவில்லையென்றால் உடன்பாடு செல்லாது. மூன்றாம் மனிதரை விலை நிருணயிக்க முடியாமல் யாராவது தடுத்தால் அவர்தாம் நட்டஈடு தர வேண்டும். ஓர் ஒப்பந்தத்தின் பேரில் ஒருவர் ஒருவருக்குச் சரக்கு விற்றால் அவர் அவருக்குத் தகுந்த விலையைக் கொடுத்துவிட வேண்டும்.

மற்றபடி பொது ஒப்பந்தத்தின் கொள்கைகளான அளிப்புக் கூற்று, ஏற்ற ஒப்பந்தத் தகுதி போன்றவைகளும் இருக்க வேண்டும்.

அழுகிடும் சரக்குகள் (Perishing of Goods)

பிரிவு 7, 8 அழுகும் பொருள்கள்பற்றிக் கூறுகின்றன. சிமன்ட்டுக் கட்டியாகிவிடுதல், பழங்கள் அழுகிவிடுதல், காய் கறிகள் கெட்டுப்போதல் போன்ற வகைகளில் பொருள்கள் அழிந்து விடுகின்றன. அப்பொழுது சில விதிகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். ஒப்பந்தம் செய்வதற்குமுன் பொருள்கள் அழிந்து விட்டால், உடன்பாடு செல்லாததாக ஆகிவிடும். அதே விதத்தில் விற்பதற்கு ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தில் நபர் களுக்குத் தெரியாமல் பொருள்கள் அழிந்துவிட்டால், உடன்பாடு செல்லாது. ஆனால், ஒப்பந்தப் பொருள் விற்பனையில் மூடிந்தால், உரிமை வாங்குவோருக்கு மாறிவிடுவதால் பின்னால் நிகழும் நட்டத்திற்கு வாங்குவோரே பொறுப்பாளியாவார். பொருள்களில் ஒரு பகுதி அழிந்துவிட்டால் ஒப்பந்தம் முழுமைக் காக அல்லது ஒரு பகுதிக்காக என்று பார்த்து அதற்கேற்பப் பொறுப்பேற்க வேண்டும். முழுமைக்கு ஒப்பந்தமிருந்தால் அது செல்லாது. ஒரு பகுதிக்கு மட்டுமிருந்தால், ஒப்பந்தம் நல்லபடி யாகும். குறிப்பிட முடியாத பொதுவகையான பொருள்களில் அவை அழுகிவிடுவதால்மட்டும் ஒப்பந்தம் செல்லாமல் போய்விடாது. ஒப்பந்த முறிவிற்காக ஏற்படும் நட்ட ஈட்டிற்கு விற்பனையாளர் பொறுப்பாளியாவார். இங்குகூடப் பொருள்கள் குறிப்பிடும் அளவிற்கு அதிக அளவில் வெளியில்வந்து அழிந்து விட்டால், ஒப்பந்தம் செல்லாமல் போய்விடும்.

விற்பனை ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் (Terms of Contract of Sale)

ஒவ்வோர் ஒப்பந்தத்திலும் சில நிபந்தனைகள் இருக்கும். இந் நிபந்தனைகள் கட்டாய நிபந்தனைகளாகவும், அல்லது

உத்தரவாத நிபந்தனைகளாகவும் இருக்கும். ஓர் ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கத்திற்கு அவசியமான நிபந்தனையாய் இருப்பது கட்டாய நிபந்தனை. அது முறிந்துவிட்டால் ஒப்பந்தம் செல்லுபடியாகாது. வாங்குவோர் பொருளை வாங்குவதற்கு மறுத்திடலாம். விற்பவரும் அவருக்குண்டான பரிகாரம் தேடலாம். ஓர் ஒப்பந்தத்தின் நோக்கங்கள் சம்பந்தமான நிபந்தனைகளைக் கூறுவதுதான் உத்தரவாத நிபந்தனையாகும். இதில் ஒப்பந்த முறிவு ஏற்பட்டால் அந்த நபருக்கு நட்டஈடு கிடைக்கும். நடவடிக்கைகளை அவர் மறுக்கமுடியாது. ஒப்பந்தமும் செல்லுபடியாகாது போகாமல் நிறைவேற்றப் படும். இதே கோட்பாடுகளை உணர்த்துவதற்கு முன்னரே பல வழக்குகளைக் கண்டுள்ளோம்.

அன்றாட அங்காடி நடவடிக்கைகளில் சாதாரணக் கொள்கை யாகப் பயன்படுத்துவது 'வாங்குவோர் ஜாக்கிரதை' (Caveat emptor) என்ற முக்கியமான கொள்கையாகும். சரியான தன்மை வாய்ந்த பொருள்களையா வாங்குகிறோம் என்று வாங்குவோர் கவனிக்க வேண்டும். பின்னால் பொருள்கள் பிடிக்க வில்லை என்று அந் நடவடிக்கையை மறுத்து ஒப்பந்தத்தை ரத்துச்செய்யக்கூடாது. வாங்கும்போது நன்றாகக் கவனித்து வாங்க வேண்டும். எப்படியிருப்பினும் வாங்குவோருக்கு அவர் சொன்ன விதத்தில் பொருள் இல்லாதபோதும், மோசடி ஏற்பட்ட போதும், விற்பனையாளரின் திறமையை நம்பி அவர் செயலாற்றும் போதும், விற்பனையாளர் அவரைப் பொய்சொல்லி ஏமாற்றிய போதும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாங்குவோர் கவனிக்க என்ற கொள்கை நிலவாதபோதும் வாங்குவோர் அதைக் கடைப் பிடிக்காத பழக்கம் இருந்தாலும் சிறந்த பரிகாரம் கிடைக்கும். அதாவது, அவர் வாங்குவதாக அல்லது வாங்கி இருந்த பொருளை ரத்துச் செய்யலாம். ஓர் ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் வெளிப்படையாகவும் அல்லது உட்கிடையாகவும் காணப்படலாம். ஒப்பந்தம் எழுத்து மூலமாக அல்லது வாய் மூலமாகக் குறிப்பிடப்பட்டால் அதில் காணப்படும் நிபந்தனைகள் வெளிப்படையானவை. சில நிபந்தனைகள் தொக்கிய நிலையில் உட்கிடையாக உணரப்படுமாயின் அவை உட்கிடையான நிபந்தனைகளாகும். சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் பணம் செலுத்தும் காலம், கப்பலில் சரக்கேற்றும் காலம், பொருள்களின் சேர்ப்பு (Delivery) போன்ற நிபந்தனை களைக் குறிப்பன வெளிப்படையான நிபந்தனைகளாகும். ஏனைய அல்லது மற்ற நிபந்தனைகள் உட்கிடையான நிபந்தனை

களாகும். ஓர் ஒப்பந்தத்தில் வெளிப்படையான நிபந்தனைகள் இல்லாமலிருந்தாலும் உட்கிடையான நிபந்தனைகள் உண்டு. அவையாவன:

1. **விற்கும் பொருள் உரிமை** (Title) பற்றிய நிபந்தனை. விற்பனையாளர் பொருளை விற்பதற்கு உரிமை பெற்றிருக்க வேண்டும். மற்றபடி உரிமையின் உத்தரவாத முறிவு ஏற்பட்டு அவ்வொப்பந்தம் செல்லாது. ஆனால், இந் நிபந்தனையைச் சில வெளிப்படையான நிபந்தனைமூலம் மாற்றி அமைக்கலாம். நீதி மன்றத்தில் நிகழவிருக்கும் ஏல விற்பனையில் கடனாளியின் உரிமை அல்லது பாத்தியம் அல்லது அக்கறையை மட்டும்தான் வெளிப்படையாக அறிவிக்கிறார்கள். எனவே, விற்போரின் உரிமை தவறுடையதாக இருந்தால் வாங்குவோர் குற்றஞ் சாட்டக்கூடாது. ரோலண்டு எ. திவால் (Rowland *vs.* Divall) என்ற வழக்கில் திவாலிடமிருந்து ரோலண்டு கார் வாங்கினார். ஆனால், அந்தக் கார் திவாலின் கார் அன்றென்றும், அவருக்கு விற்கும் உரிமை இல்லையென்றும் அவருக்குத் தெரியாது. சில மாதங்கள் ரோலண்டு காரைப் பயன்படுத்திய பிறகு உண்மை தெரியவந்தது. காரின் உண்மையான சொந்தக்காரர் வந்து காரை எடுத்துச் சென்றுவிட்டார். எனவே காரின் விலையைத் திருப்பித் தரச்சொல்லி ரோலண்டு திவால்மீது வழக்குத் தொடுத்தார். ரோலண்டு சில மாதங்கள் காரைப் பயன்படுத்தி யிருந்தாலும் காரின் விலையை அவருக்குத் திவால் தந்துவிட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

2. **பொருள்களின் தன்மை** (Quality of Goods): பொதுவாக விற்கப்படும் பொருளின் தன்மை அல்லது தரம் பற்றி ஏதும் நிபந்தனையில்லை. ஆனால், சில சூழ்நிலைகளில் பொருள் விற்கும் நோக்கத்தைப் பொறுத்துச் சில நிபந்தனைகள் உள்ளன. தனிப்பட்ட நோக்கத்திற்கோ அல்லது பலநோக்கங் களுக்கோ பொருள்கள் வாங்கப்படலாம்; அல்லது ஆக்கு பொருள் உரிமையாகவும் (Patent Right) அவை வாங்கப்பட லாம். பொருளை வாங்குவோர் தாம் வாங்கும் நோக்கத்தை விற்பனையாளரிடம் சொன்னால் அப்பொழுது பொருளின் தரம் பற்றிய உட்கிடையான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். வாங்கப்பட்ட பொருள்கள் அந் நோக்கத்திற்குச் சரியாக இருக்க வேண்டும். பிரீஸ்ட்டு எ. லாப்டு (Priest *vs.* Lapt) என்ற வழக்கில், வெந்நீர் அடங்கிய சீசாக்கள் விற்கப்பட்டன. ஆனால் கொதிக்கும் வெந்நீரை அச் சீசாக்கள் தாங்கமல் வெடித்து ஒருவரைக் காயப்படுத்திவிட்டது. எனவே, வாங்கு

வோருக்கு நட்டஈடு தரக்கோரி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. காரணம் அவர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வெந்நீரை வாங்கினார். ஆனால் அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. சில பொருள்கள் அநேக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. எனவே, இந்த மாதிரி சமயத்தில் வாங்குவோர் குறிப்பாக நோக்கத்தைக் குறிக்க வேண்டும். பாம்பே டிரேடிங் கார்ப்பரேஷனுக்கும் ஆகா முகம்மதிற்கும் (Bombay Trading Corporation *vs.* Akha Mohemed) நடந்த வழக்கில் மரவிற்பனை சம்பந்தமான பிரச்சினை எழுந்தது. இரயில்வே கம்பெனி இம் மரங்களை ஸ்லிப்பர்களாகப் பயன்படுத்துவதற்காக வாங்கியது. ஆனால், அந்த நோக்கத்திற்கு மரங்கள் சரிப்பட்டுவரவில்லை. எனவே,இரயில்வே கம்பெனி மரங்களை வேண்டாவென்று ஒதுக்கு வதற்கு உரிமை உண்டென நீதிமன்றம் வழக்கில் தீர்ப்புக் கூறியது. காரணம், வாங்கும்போது இரயில்வே கம்பெனி அதன் நோக்கத்தைக் கூறிவிட்டது. அதே சமயத்தில் ரீ ஆண்ட்ரு யூல் அண்டு கம்பெனி (Re Andrew Yule and Co.) வழக்கில் நட்டஈடு மறுக்கப்பட்டது. காரணம் வாங்குவோர் பொருளைக் கட்டுவதற் காக வாங்கப்பட்ட துணியின் நோக்கத்தை முதலில் கூறவில்லை. உணவுப் பொட்டலங்களைக் கட்டுவதற்காகத் துணிகள் தேவைப்பட்டன. ஆனால், தருவிக்கப்பட்ட துணிகள் அதற்குத் தகுதியானவை அல்ல. ஆக்குபொருள் உரிமை விற்கும்போது குறிப்பிட்ட நோக்கத்திற்கான தகுதிபற்றி உட்கிடையான நிபந்தனைகள் எழா. சந்தர் எ. ஹோப்கின்ஸ் (Chanter *vs.* Hopkins) என்ற வழக்கில் சாராயம் காய்ச்சுவதற்கேற்ற புகை நுகரும் அடுப்பு ஆக்குபொருள் உரிமையாக வாங்கப்பட்டது. அது நன்றாகப் புகழ்வாய்ந்த அடுப்பென்றாலும் அந் நோக் கத்தை நிறைவேற்றவில்லை; என்றாலும் விற்பனையாளருக்குப் பொறுப்பு இல்லை எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. தகுதிபற்றி நிபந்தனைகள் வேலை அல்லது உழைப்பு ஒப்பந்தங்களுக்கும் பொருந்தும். ஒரு காரில் ஆறு இணைக்கும் ராடுகள் இருந்தன. உள்ளுக்குள்ளிருந்த சில தவற்றால் ஒரு ராடு உடைந்து இன்ஜினுக் குச் சேதமுண்டாயிற்று. பழுதுபார்க்கும் ஒப்பந்தத்திற்காக மேற்கூறிய கோட்பாட்டைப் பின்பற்றி நட்டஈடு தரக் கோரப் பட்டது. இவ் உண்மை மையர்ஸ் அண்டு கம்பெனிக்கும் பிரன்ட் கிராஸ் சர்வீஸ் கம்பெனிக்கும் (Myers and Co. *vs.* Brent Cross Service Co.) நடந்த வழக்கில் நன்றாகப் புலப்படும்.

3. வாணிகத் தன்மை(Mercantability): விற்கும் பொருள்கள் அங்காடியில் விலை போகக் கூடியனவாக இருக்க வேண்டும். அதாவது, அங்காடியில் விற்பதற்குத் தகுந்த வகையில் பொருள்கள் இருக்க வேண்டும். பீர்முகமதுவிற்கும் டலுராமிற்கும் (Peer Muhammed *vs.* Dalooram) நடந்த வழக்கில் விற்கப்பட்ட கறுப்பு நூல்கள் செல்லரிக்கப்பட்டுச் சேதமாகி விட்டன. எனவே, வாணிபத் தன்மை அதாவது விற்கும் தன்மை போய்விட்டபடியால் ஒப்பந்தம் தள்ளப்பட்டது. கிராண்ட் எ. ஆஸ்திரேலியன் நிட்டிங் மில்ஸ் (Grant *vs.* Australian Knitting Mills) என்ற வழக்கில் உள்ளங்கிகள் விற்பனைக்காக அனுப்பப்பட்டன. ஆனால், மனிதத் தோலுக்கு இடையூறான அதிகப்படியான கந்தகம், துணி உற்பத்தி செய்யும் போது கலக்கப்பட்டதால் அவ் வொப்பந்தம் செல்லாது என நீதி மன்றம் கருதியது. ஆனால் அதை வாங்குவோர், வாங்குவதற்கு முன் நன்றாகப் பார்த்திருந்தால், அவருக்கு நட்டஈடு இல்லை. அதேபோல் தார்நெட் எ. பீர்ஸ் அண்டு சன் (Thornett *vs.* Beers and Son) என்ற வழக்கில் குடுக்கையில் நன்றாக நிரப்பப்பட்டு மூடியுள்ள மரவகைப் பிசின் விற்பனைக்காக அனுப்பப்பட்டது. அதை வாங்குவோர் நன்றாகப் பார்த்துவிட்டு வாங்கிக்கொள்ள இசைந்தார். பின்னால் அதில் சில குறைபாடுகளை அவர் கண்டார். எனவே, அவருக்கு எவ்விதப் பரிகாரமும் இல்லை யென நீதிமன்றம் கருத்து வழங்கியுள்ளது.

4. துய்ப்பதற்கு ஏற்றதாகப்(Wholesome) பொருள்கள் இருக்க வேண்டும். அதாவது மனிதர்கள் துய்ப்பதற்குத் தகுந்ததாக இருக்க வேண்டும். எங்கு எப்பொழுது வாங்கினாலும் இந் நோக்கம் ஆங்கே கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதே சமயத் தில் அப் பொருள் விற்பனைத் தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும். ஒருவர் வாங்கிய ரொட்டியிலுள்ள கல் அவர் பல்லை உடைத்துவிட்டது. எனவே, விற்பனையாளர் வாங்கினவருக்கு நட்டஈடு தரவேண்டும். ஃப்ராஸ்டு எ. அயிலெஸ்பரி டெய்ரி கம்பெனி (Frost *vs.* Aylesbury Dairy Company) என்ற வழக்கு பால் விற்பனை பற்றியது. பால் வாங்கினவர் பாலை அருந்திய தால் டைஃபாய்டு காய்ச்சல் வந்து காலமாகிவிட்டார். அப் பாலில் டைஃபாய்டைப் பரப்பும் கிருமிகள் அடங்கியுள்ளன என்று பின்னர்க் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, பால் விற்பனை செய்த கம்பெனி நட்டஈடு தரவேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

5. விளக்கம் (Description) : தரப்படுகின்ற பொருள்கள் ஏற்கெனவே தந்த விவரம் அல்லது விளக்கத்திற்குத் தகுந்த மாதிரி இருக்கவேண்டும். மற்றபடி நிபந்தனைகளிலிருந்து வேறுபட்டுவிடும். கல்கத்தா ஆளிவிதை எண்ணெய் தருவதாக ஒப்பந்தம் ஏற்பட்டுத் தரப்பட்டது. ஆனால், அது கலப்படமான எண்ணெயாகவிருந்ததால் நிபந்தனை முறிவு அங்கு ஏற்பட்டு விட்டது என்று வீலருக்கும் ஸ்சிலிக்சிக்கும் (Wieler *vs.* Schillizzi) நடந்தவழக்கில் கூறப்பட்டுள்ளது. இதே முடிவுதான் பின்னக்கின் பிரதர்ஸுக்கும் லெவிஸ் அண்டு பீட் லிமிடெட்டிற்கும் (Pinnocle Bros. *vs.* Lewis & Peat Ltd.) நடந்த வழக்கில் ஏற்பட்டது. காரணம், இங்கும் கலப்படமான தேங்காய் கேக் விற்கப்பட்டது. ஆண்ட்ரூஸ் பிரதர்ஸுக்கும், சிங்கர் கம்பெனி லிமிடெட்டிற்கும் (Andrews Bros. *vs.* Singar Company Ltd.) நடந்த வழக்கில் புதிய சிங்கர் கார் வாங்குவதற்கு ஆர்டர் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே ஓடிய கார்கள் புதியதென்று சொல்லித் தரப்பட்டன. எனவே, ஒப்பந்தம் தள்ளப்பட்டு வாங்குவோருக்கு நட்டஈடு தரச் சொல்லித் தீர்ப்புக் கூறப்பட்டது. சரக்கு விற்பனை ஒப்பந்தம் செய்யும்போது விவரிக்கப்பட்ட விவரமும் பொருளும் மாதிரியோடு ஒத்திருந்தால்மட்டும் போதாது; விவரிக்கப்பட்ட அதே பொருளாகவும் இருக்கவேண்டும்.

6. மாதிரி (Sample) : மாதிரிமூலம் விற்பனையைத் தொடங்கும்போது அதற்கான சில நிபந்தனைகளைக் கையாள வேண்டும். விற்கப்படும் மொத்தப் பொருள்கள் ஏற்கெனவே காட்டிய மாதிரிப் பொருளோடு ஒத்திருக்க வேண்டும். வாங்குவோர் பொருள்களை நன்கு சோதித்துப்பார்த்து வாங்குவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும். பொருள்கள் எந்தவிதக் குறைபாடுமில்லாமலிருக்க வேண்டும்.

மாதிரி காட்டிய துணிக்குப் பதிலாக மட்டமான துணி அனுப்பப்பட்டது. துணியின் தரத்திலும் நெசவிலும் சில குறைபாடுகள் இருந்தன. எனவே, விற்பனையாளர் பொறுப்பாளராகி நட்டஈடு தரவேண்டிய நிலை ஏற்பட்டது. இதேபோல் மற்றொரு வழக்கினை ஹெயில்பட் எ. ஹிக்சன் (Heilbutt *vs.* Hickson) என்ற வழக்கில் காலணிகள் மாதிரி விற்பனையில் ஃபிரஞ்சுப் போர் வீரர்களுக்கு விற்கப்பட்டன. ஆனால், காலணிகளுக்கு அடிப்பக்கத்தில் காகிதம் வைத்துத் தைக்கப்பட்டது பின்னால் தெரியவந்தது. முன்னால் பரிசோதிக்கும்போது தெரியாமல் உள்ளுக்குள் இக் குறைபாடிருந்தது. எனவே, போர்

வீரர்கள் அக் காலணியை வாங்கவேண்டா என நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. புகையிலை போன்றவைகளை மாதிரியை வைத்துத்தான் விற்பனை செய்யவேண்டும். விற்பனை ஒப்பந்தத்தை விடுத்து, விற்பனையாளரும் குற்றம் செய்தபோது அல்லது அவருடைய செயல் பிறருக்கு ஊறுவிளைவிக்கும்போது வாங்குவோருக்குப் பொறுப்பாளியாகிறார். கிளார்க் எ. ஆர்மி அண்ட் நேவி கோவாபரேடிவ் சொசைட்டி லிமிடெட் (Clarke *vs.* Army and Navy Co-operative Society Ltd.) என்ற வழக்கில் கிருமிகளைக் கொல்லக்கூடிய மருந்து ஒரு டின் வாங்கப்பட்டது. ஆனால், அந்த டின்னைத் திறக்கும்போது கவனிக்கவேண்டிய எச்சரிக்கையைச் சொல்லவில்லை. எனவே, வாங்கியவர் கவனக் குறைவாக அதைத் திறந்து, கண்களில் காயம் பட்டுவிட்டது. அவருக்கு நீதிமன்றம் நட்டஈடு வழங்கித் தீர்ப்புக் கூறியது. இதே போல் மற்றொரு வழக்கில் விற்கப்பட்ட ஜிஞ்சர் பீர் பாட்டிலின் அடியில் இறந்து அழுகிப்போன நத்தை ஒன்று காணப்படு கின்றது. எனவே, விற்பனையாளருக்கு அவப்பெயர் ஏற்பட்டு நட்டஈடு தரவேண்டிய நிலையில் உள்ளார் (Denoghue *vs.* Stevenson). சில நேரங்களில் இந் நிபந்தனைகள் உத்தரவாதம் வரையில் முடியும். வாங்குவோர் நிபந்தனைகளை நீக்கிப் பொருள்களை ஏற்று ஏற்படும் ஒப்பந்த முறிவுகளுக்கு நட்டஈடு கோரலாம்.

தொக்கிய அல்லது உட்கிடையான உத்தரவாத நிபந்தனைகள் (Implied Warranties)

பொருள்கள் ஒருவன் வசமிருக்க உத்தரவாத நிபந்தனை வேண்டும். எவ்வித வில்லங்கமும் இல்லாதிருக்க உத்தரவாத நிபந்தனை வேண்டும். வாங்குவோர் அமைதியான முறையில் பொருள்களைத் தம்வசம் வைத்திருக்கவேண்டும். தம்மிடம் பொருள் இருப்பதற்கும் அதை அனுபவிப்பதற்கும் குந்தகம் ஏற்பட்டால், நட்டஈடு கோரி, வாங்குவோர் வழக்குத் தொடர லாம். விற்கப்படும் பொருள்மீது மூன்றாம் மனிதர் எவ்வித உரிமையும் கொள்ளாமல் வில்லங்கமின்றி இருக்கவேண்டும். நிப்லெட் எ. கன்பெக்ஷனர்ஸ் மெட்டீரியல்ஸ் கம்பெனி (Niblett *vs.* Confectioners' Materials Co.) என்ற வழக்கில் 'நிஸ்லி பிராண்ட்' என்ற லேபல் ஒட்டியுள்ள பாதுகாக்கப்பட்ட பால் டின்கள் 3,000 விற்கப்பட்டன. அந்த லேபல் வணிகக் குறிக்கு (Trade Mark) மாறாக உள்ளதால் சுங்க அதிகாரிகள் அதை அழித்துவிட்டார்கள். இது விற்பனை மதிப்பைக் குறைத்து

விட்டது. எனவே, வாங்குவோர் பொருளை நிராகரித்து விடலாம் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

சொத்துரிமை மாறுதல் அல்லது கடத்தல் (Passing of Property)

விற்ற பொருளிலுள்ள உரிமை அல்லது சொந்தம் எப்பொழுது விற்பனையாளரிடமிருந்து வாங்குவோருக்கு மாறுகிறது அல்லது கடக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். விற்பனைக்குரிய பொருள் தொலைந்துவிட்டால் யார் அந்த நட்டத்தை ஏற்பது என்ற வினா எழுகிறது. பொது விதியானது யாருக்குப் பொருள் சொந்தமோ அவர்தாம் நட்டத்தை ஏற்க வேண்டும். யார் பொருளைச் சொந்தமாக்கிக் கொள்கிறார்களோ அவர்தாம் பொறுப்பேற்கவேண்டும். இவ் விதிக்கு இரண்டு விதி விலக்குகள் உள்ளன. ஒன்று விற்பனையாளரின் தவறுதலால் பொருள் அனுப்புவதற்குத் தாமதம் ஏற்படுவது. அடுத்தது, வாங்குவோருக்கு உரிமை மாறினாலும் வரும் நட்டத்தைப் பின்னால் பகிர்ந்துகொள்ளலாம் என்று இரு நபர்களும் ஒத்துக்கொள்வது. இவ் விரு நிகழ்ச்சிகளிலும் நட்டவச்சம் (Risk) விற்பனையாளரையே சாரும். எப்பொழுது உரிமைமாற்றம் அல்லது உரிமை கடத்தல் நிகழலாம் என்று இரு நபர்களும் தீர்மானிக்க உரிமை உண்டு. இதுபோல் அவர்களுக்கு விருப்பம் ஒன்றும் தெரிவிக்காமல் அதாவது, ஒப்பந்தம் இதுபற்றி ஒன்றும் கூறாமலேயே இருந்தால் சட்டத்தின் பிரிவு 20 முதல் 24 வரை அதுபற்றி விளக்கம் தரும். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கையாளும் கொள்கைகளாவன : முதலாவதாக ஆய்ந்து கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள் ஒப்படைக்கும் நிலையில் இருந்தால், ஒப்பந்தம் ஏற்பட்டவுடனே சொத்துரிமை வாங்குவோருக்கு வந்துசேருகிறது (பிரிவு 20). இரண்டாவதாக, ஒப்படைப்பு நிலையில் இல்லாத பொருள்களில் உள்ள உரிமை அல்லது உடைமை அவை ஒப்படைப்பு நிலைக்கு வந்தபின்னர் மாறுகிறது (பிரிவு 21). மூன்றாவதாக, பொருள்களுக்கு விலை நிருணயிக்கப்படாமலிருந்தால் உடைமை மாற்றம் விலை நிருணயிக்கும்வரை தள்ளிப்போடப்படுகிறது (பிரிவு 22). நான்காவதாக, பொருள்கள் விற்பனை அல்லது திருப்பம் (Sale or Return) என்ற அடிப்படையில் அனுப்பப்பட்டிருந்தால் பொருளைத் தேர்ந்தெடுத்த பின்னர்தான் உடைமை மாறுகிறது (பிரிவு 24). கடைசியாக, ஆய்ந்து கண்டுபிடிக்காத பொருள்களில் அவை கண்டுபிடித்த பின்னர் அதாவது வகைப்படுத்திய பின்னர் உடைமை மாறுகிறது (பிரிவு 18).

1. ஒப்படைப்பு நிலையில் உள்ள குறிப்பிடப்பட்ட பொருள்களில் உடைமை ஒப்பந்தம் முடிந்தவுடனே வாங்குவோருக்குப்

போய்ச் சேருகிறது. விலை கொடுக்காததாலே உடைமை மாற்றம் தள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஒப்படைப்பு நிலையில் உள்ள குறிப்பிடப்பட்ட பொருள் பற்றியவரை, மாறுபட்ட ஒப்பந்தம் இல்லையென்றால், ஒப்பந்தம் நிபந்தனையற்றதாக இருக்கவேண்டும். ஒப்படைப்பு நிலையில் பொருள் இல்லையென்றால், வாங்குவோர் பொருளை வாங்கும் நிலையில் வைக்கும் போதுதான் உடைமை மாற்றம் நிகழ்கிறது. பொருளை ஒப்படைப்பு நிலையில் கொண்டுவருவதற்கு விற்பனையாளர் பொருளுக்குச் சில ஏற்பாடுகள் செய்யவேண்டும். வாங்குவோருக்குத் தகுந்த நோட்டீஸ் அனுப்பவேண்டும்.

ரக். எ. மின்னட் (Rugg *vs.* Minnett) என்ற வழக்கில் 24 அளவில் டர்பைன்டன் ஊற்றி விற்பதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. அவற்றில் 22 அளவுகள் ஒரு மாதிரியாகவும், பாக்கி இரண்டு ஒரு மாதிரியாகவும் நிரப்பப்பட்டன. இறுதியில் நிரப்பப்பட்டதைத் தான் அளவாகக் கொள்ளவேண்டும் என்று விதி. அநேகமாக எல்லா அளவுகளும் நிரப்பப்பட்டிருக்கும்போது ஏற்பட்ட தீ விபத்தினால் எல்லாச் சரக்கிருப்பும் அழிந்துவிட்டது. நிரப்பப்பட்ட அளவுகளில் உள்ள உடைமை வாங்குவோருக்குச் சென்று விட்டது. அதாவது அவ்வளவுகள் ஒப்படைப்பு நிலையில் தயாராக்கப்பட்டவுடனே வாங்குவோருக்குச் சொத்துரிமை வந்தடைந்துவிட்டது.

அக்ராமம் எ. மோரீஸ் (Acramam *vs.* Morrice) என்ற வழக்கில் மர விற்பனைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. மரங்களை வெட்டி அடிப்பாகத்திலிருந்து பிரித்து, வாங்குவோருக்கு அவைகளைத் தரவேண்டும். அவ்வாறு செய்வதற்கு முன்னே மர விற்பனையாளர் திவாலாகிவிட்டார். எனவே, வாங்குவோரே மரங்களை வெட்டிச் சீர்திருத்தி அவருக்குண்டான பகுதியை எடுத்துக்கொண்டார். ஆனால், விற்பனையாளரின் உரிமை மாற்றம் பெற்றவர் (Assignee) வாங்குவோர் செய்தது தவறு என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். நீதிமன்றமும் 'வாங்குவோர் தம்மிடம் மரங்களைப் பெற்றிருந்தாலும் சொத்துரிமை அவருக்கு இன்னும் போய்ச் சேரவில்லை. பொருள்கள் ஒப்படைப்பு நிலையில் தயாராகவில்லை. விற்பனையாளர்கள் என்ன செய்யவேண்டுமோ அதை வாங்குவோர் செய்யக் கூடாது' என்று தீர்ப்பளித்தது. உரிமை மாற்றம் பெற்றவர் மரங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டார்.

அடுத்து என்ன செய்யவேண்டுமென்பது, பொருள் பற்றி இருக்கவேண்டுமேயொழிய மற்றவைகளைப் பற்றி இருக்கக்

கூடாது. உதாரணமாக, சேமிப்புக் கிடங்கில் பொருள்கள் ஒப்படைக்கப்பட்டு, விற்பனையாளர் சேமிப்புக் கிடங்கின் கட்டணத்தைத் தாம் கட்டுவதாக ஒப்புக்கொண்டால், அவர் அதைக் கட்டும்வரை சொத்துரிமை மாற்றப்படமாட்டாது.

2. பொருள்கள் ஒப்படைப்பு நிலையில் வைக்கப்பட வேண்டும் என்பதுபற்றி முன்னரே சொல்லப்பட்டது. குர்ஷெல் எ. டிம்பர் ஆப்பரேட்டர்ஸ் லிமிடெட் (Kurshell *vs.* Timber Operators Ltd.) என்ற வழக்கிலும் ஒரு காட்டிலுள்ள மரங்களை வெட்டுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வாங்குவோர் மரங்களை வெட்டிவிடவேண்டும். வாங்குவோர் வெட்டினவரையிலும் மரங்கள் ஒப்படைப்பு நிலையில் இல்லை என்று தீர்ப்புக் கூறப்பட்டது. இதேபோல் கில்லோரி எ. பிக்டாநாடாரோ (Gilory *vs.* Pignataro) என்ற வழக்கில் 140 மூட்டை அரிசி விற்கப்பட்டது. இதில் 125 மூட்டைகள் ஒப்படைக்கப்பட்டன. பாக்கியுள்ள 15 மூட்டை களையும் பின்னர் எடுத்துக்கொள்வதாகக் கூறிச்சென்றார். ஆனால், அம் மூட்டைகள் திருட்டுப் போய்விட்டன. மூட்டைகள் தயாரானவுடனேயே அவை வாங்குவோருக்குச் சொந்தம் ஆகிவிட்டதால் அந் நட்டத்தை அவரே ஏற்கவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

பொருள்களை ஒப்படைப்பு நிலையில் தயார்செய்த பிறகு விற்போர் வாங்குவோருக்கு அறிவிக்கவேண்டும். அப்படி அறிவிக்க நோட்டீஸ் விடாவிட்டாலும் வாங்குவோருக்கு உரிமை வந்து சேரும்.

3. **விலை** (Price) : பொருள்கள் நிறுக்கப்படவேண்டுமாயின் அல்லது அளக்கப்படவேண்டுமாயின் அது முடிந்துதான் விலை நிருணயிக்க முடியும். அந்த அளவை முடிவதற்குமுன் சொத் துரிமை கடத்தல் ஏற்படாது. அளப்பது எல்லாம் விலையை நிருணயம் செய்வதற்கேயொழிய, வாங்குவோரின் தனிப்பட்ட திருப்திக்காக அன்று. ஏற்கெனவே கூறியுள்ளபடி சோஷி மோகன் எ. நோபோ கிரிஸ்டோ (Soshi Mohan *vs.* Nobo Kristo) என்ற வழக்கில் ஒரு கிடங்கிலுள்ள அரிசியை விற்பதாக இங்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. வாங்குவோர் விலையைப் பூராவும் கொடுத்துவிட்டு, பொருள்களை எடைபோட்ட பின்னர் அப்புறப்படுத்துவதாகச் சொன்னார். அவர் அவ்விதம் செய்வதற்கு முன்னர், அரிசியில் ஒரு பகுதி தீக்கிரையாகிவிட்டது. பொருள்கள் ஒப்படைப்பு நிலையில் இருந்தமையாலும் சொத்துரிமை மாறிவந்துவிட்ட தாலும், வாங்குவோர்தாம் அந் நட்டத்தை ஏற்கவேண்டும்.

4. **விற்பனை அல்லது திருப்பம்** (Sale or Return) : ஒரு வழக்கில் (Elphick *vs.* Barnes) ஒரு குதிரை, விற்பனை அல்லது திருப்பம் என்ற அடிப்படையில் வாங்குவோருக்கு அளிக்கப் பட்டது. வாங்குவோர் தம் விருப்பத்தை அதாவது குதிரை வைத்துக்கொள்வது அல்லது திரும்பத் தந்துவிடுவதுபற்றி எட்டு நாள்களுக்குள் தெரிவிக்கவேண்டும். இவ் வொப்பந்தம் ஏற்பட்ட நான்கு நாள்களுக்குள் குதிரை, வாங்குவோரிடம் இருக்கும்போதே இறந்துவிட்டது. சொத்துரிமை வாங்கு வோருக்கு ஏற்படாததால் அந்நட்டத்தைக் குதிரையின் சொந்தக் காரரே ஏற்கவேண்டும் என்று நீதிமன்றம் வழக்கில் தீர்ப்புக் கூறியது. ஆனால், அக் குறிப்பிட்ட காலத்திற்கு வாங்குவோர் ஒப்பந்த நிபந்தனைகளுக்குப் புறம்பாக ஏதாவது செய்து அதனால் விற்பனை ஏற்பட்டிருந்தால் சொத்துரிமை மாறி யிருக்கும். உதாரணமாக ஒப்பாளி தாமே பொருள்களின் உரிமையாளர்போல் பாவித்து அவைகளைக் குத்தகைக்கு விடுதல் போலாகும்.

5. **உறுதி செய்யப்படாத பொருள் உரிமை** (Ownership in un-ascertained goods): உறுதி செய்யப்படாத பொதுப் பொருள்களில் உறுதி செய்யப்படாதவரை உரிமை மாறுவதில்லை. எப்பொழுது சொத்து உறுதி செய்யப்படுகிறது என்று தெரியவேண்டிய அவசியமுள்ளது. உறுதிசெய்தல் என்றால் பொருள்களைத் தரம் பிரித்து ஒதுக்கி வைத்துத் தனித்தனியாக வைப்பதுதான். அப் பொழுதுதான் வாங்குவோர் அவைகளை எளிதில் புரிந்துகொண்டு எடுத்துச் செல்லலாம்.

(1) விற்பனையாளரின் இசைவுடன் வாங்குவோர் ஒதுக்கு வித்தல் செய்யலாம்.

(2) வாங்குவோரின் இசைவோடு விற்போர் செய்யலாம்.

(3) பொருள் வைப்புப்,பெட்டகங்களில் தகுந்த முறையில் வைத்தல்.

(4) போக்குவரத்திற்காகப் பொது வண்டிக்காரர்களிடம் ஒப்படைத்தல்.

ஒதுக்கீடு செய்தலை விற்பனையாளரின் இசைவுடன் வாங்கு வோர் செய்யலாம். உதாரணமாகப் பாலமுருகன் கிடங்கில் ஆறுமுகம் தம் பொருள்களை வைத்துள்ளார் என வைத்துக் கொள்வோம். பாலமுருகனுக்கு அப் பொருள்களில் கொஞ்சம் தேவைப்படுகிறது. அதற்குரிய கட்டணத்தை ஆறுமுகத்திடம்

கொடுத்துவிட்டு ஒரு பகுதியை வாங்குகிறார். பாலமுருகனின் வேண்டுகோளுக்கு ஆறுமுகம் இசைகிறார். பாலமுருகன் மொத்தப் பொருள்களில் தாம் விரும்பிய சரக்கை ஒதுக்கீடு செய்கிறார். அப் பொருள்களில் உள்ள சொத்து உரிமை அவரைச் சாருகிறது. எனவே, இங்கு விற்பனையாளரின் இசைவுடன் வாங்குவோர் பொருள்களை ஒதுக்கீடு செய்கிறார்.

அடுத்து, வாங்குவோரின் இசைவுடன் விற்போரும் பொருள் ஒதுக்கீடு செய்வதுமுண்டு. இதுதான் இயற்கையாகப் பெரும் பாலும் செய்யப்படுகிறது. வழக்கமாக விற்பனையாளர் பொருள் களைத் தரம்பிரித்து ஒதுக்கீடு செய்து ஒப்படைப்புக்குத் தயாராக வைத்திருப்பார். இந்த ஒதுக்கீட்டிற்கு வாங்குவோர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அவர் ஒப்புதல் அளிக்காமல் வாளாவிருந் தால் உரிமை மாறாது. அட்கின்சன் எ. பெல் (Atkinson *vs.* Bell) என்ற வழக்கில் பொருள் ஒதுக்கீட்டை விற்பனையாளர் செய்து விட்டு வாங்குவோருக்குப் பொருள்களை எந்தப் போக்குவரத்து மூலம் அனுப்பலாம் எனக் கடிதம் எழுதியதற்கு, வாங்குவோர் பதில் எழுதாமல் வாளாவிருந்துவிட்டார். எனவே, சில இயந் திரத்தின் உரிமை வாங்குவோருக்கு வந்து சேரவில்லை.

பொருள்களைத் தகுந்த பெட்டகத்தில் போட்டுவிட்ட வுடனே, ஒதுக்கீடு முடிந்துவிடும். உதாரணமாக எண்ணெயை டின்களிலும், சிமின்டைப் பைகளிலும், தானியங்களைச் சாக்கு களிலும், சர்க்கரையை அளவுப் பைகளிலும் போட்டு ஒதுக்கீடு செய்யச் செய்யவேண்டும். ஒப்பந்தத்தில் காணப்பட்ட பொருள் களைத் தனியே பிரித்துத் தனித்தனியாகக் கட்டுமானம் செய்ய வேண்டும். அடையாளக் குறிகள் இடவேண்டும். அவ்வாறு செய்தால் நேரடியாகவே உரிமை மாறும்.

பொது வண்டிக்காரர்களிடம் (common carriers) பொருள்களை ஒப்படைக்க வேண்டும். அதுவும் வங்குவோரின் பெயர் பொறித்துத் தரவேண்டும். அப்பெழுதுதான் உடைமை வாங்குவோருக்கு மாறும். பொது வண்டிக்காரர் களிடம் ஒப்படைத்தாலே அது வாங்குவோரிடம் ஒப்படைத்த தற்குச் சமம். பதிலாண்மைச் சட்டத்தின் கொள்கைகள் இங்குப் பொருந்தும். உடைமைப் பத்திரம் அல்லது ஒப்படைப்புப் பத்திரம் ஆகியவை வாங்குவோரின் பெயரிலோ அவருடைய பதிலாளின் பெயரிலோ இருக்கவேண்டும். அதற்கு மாறாக இப் பத்திரங்களைத் தம் பெயரில் விற்பனையாளர் எடுத்திருந்து, பொருளை ஒப்படைக்கும் உரிமையையும் தம்மிடத்தே

வைத்திருந்தால் பொருள் உடைமை வாங்குவோருக்குப் போய்ச் சேராது. இவ் வகையில் போக்குவரத்திடையில் பொருள்கள் நட்டமடைந்தால் அதற்கு விற்பனையாளர் பொறுப்பேற்க வேண்டும்.

வேலி எ. மன்ட்கோமெரி (Wally *vs.* Mantgomery) என்ற வழக்கில் விற்பனையாளர், வாங்குவோர் வேண்டிய சரக்குகளைக் கப்பல் மூலம் அனுப்பினார். கப்பல் ரசீதும் (Bill of Lading) உண்டியலும் வாங்குவோர் பெயருக்கு உடன் அனுப்பப்பட்டன. விற்போரின் உள்ளூர்ப் பதிலாளிடம் உண்டியல் சென்றது. அவர் சரக்கு எடுப்பதற்குமுன் உண்டியலில் கண்ட பணத்தை ரொக்கமாகக் கேட்டார். பணம் தராததால் சரக்கு எடுக்க அனுமதி தரவில்லை. வாங்குவோர் பணம்தர மறுத்துச் சரக்கு ஒப்படைப்பிற்காக வழக்குத்தொடுத்தார்; வெற்றியும் பெற்றார். சொத்து உடைமை ஏற்கெனவே வாங்குவோருக்கு வந்துவிட்டதால் விற்போரின் பதிலாள் சரக்கை நிறுத்திவைத்தது சரியில்லை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

பொருள்கள் கேட்கும்போது தரப்பட்ட விளக்கத்திற்கு ஏற்ப ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அஃது எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்படவேண்டும். எதிர்பாராத விதமாகவோ அல்லது தவறாகவோ அஃது இருக்கக்கூடாது. பொதுவாக ஒரு தடவை செய்த ஒதுக்கீடு முடிவானதாகும்.

உரிமை இல்லாதவர்களால் விற்பனை (Sale by Non-owner)

பொது விதியானது யாருக்குப் பொருள்மீது உரிமை இல்லையோ அவர்கள் அப் பொருளை வாங்குவோருக்கு விற்கக் கூடாது. தனக்கில்லாததை ஒருவன் மற்றவருக்குக் கொடுக்கக் கூடாது (*Nemo dat, quad non habet*), விற்பனையாளர் வகையுள்ளவராக இருந்தால் பிரச்சினையில்லை. அவர் வகையற்றவராக இருந்தால்தான் பிரச்சினை எழும். எனவேதான், உண்மைச் சொந்தக்காரர்கள் யார் என்ற வினா எழுகிறது. உண்மையான வாங்குவோர்களின் நலன் மேற்கூறிய கொள்கைக்கு உள்ள சில விதிவிலக்குகளால் காப்பாற்றப்படுகிறது. விதி விலக்குகள் கீழ்க்காணும் முறைகள்வழிக் கிடைக்கின்றன.

1. **சரக்கு விற்பனைச் சட்டம்** (Sale of Goods Act) : இச் சட்டம் பணம் செலுத்தப்படாத விற்பனையாளரிடம் பொருள் இருக்கும்போது வாங்குவோருக்கு, சொந்த உரிமை மாறியிருப்பினும் விற்பனையாளருக்கு மறுவிற்பனை உரிமையைத்

தருகிறது. அத்தகைய மறுவிற்பனை சட்டப்படி செல்லக் கூடியது. அதை அடுத்து வாங்குவோருக்கு அதன்மீது உரிமை உண்டு.

2. பொது ஒப்பந்தச் சட்டம்: காணாமற்போன பொருளைக் கண்டெடுத்தவர் அதை விற்பதையும், பணம் செலுத்தாதபோது அதை அடகு பிடித்தோர் விற்பதையும் பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 169, 176 தடுக்கின்றன. செலாவணிப் பத்திரத்தை முறைப்படி பெற்றவர்கூட அது யாருக்கு மாற்றப் படுகிறதோ அவருக்கு நல்லதோர் உரிமையை வழங்குகிறார்.

3. முரண்தடை (Estoppel): ஒரு குறிப்பிட்ட வழியில் செயலாற்றுவதற்கு ஒருவரை ஊக்குவிக்கச் சொல்லும் உரையின் உண்மையை மறுப்பதிலிருந்து தடுக்கச்செய்யும் ஒரு காரியத்தை முரண்தடை என்கிறோம். அவர் நடத்தையால் அவர் நிலையி லிருந்து மாறுவதற்குத் தடையாக உள்ளது அது. பொருளின் உண்மையான சொந்தக்காரர் வாங்குவோரைத் தவறாக ஊக்குவித்து அப் பொருள் தம்முடையதல்ல, வேறு ஒருவரது என்று சொல்லிப் பொருளை வாங்கவைத்தால் அவருக்குத் தண்டனை உண்டு. 'அ' என்பவரின் இயந்திரம் 'ஆ' விடம் ஒப்படைக்கப்பட்டது. 'இ' என்பவர் 'ஆ' மீது தொடுக்கப் பட்ட வழக்குக் கட்டளையை நிறைவேற்றுவதற்காக 'இ' சொத்தின்மீது பற்றுரிமை கொண்டாடினார். இப் பற்றுரிமை அநேக மாதங்களுக்கு நீடித்து, பின்னர் 'இ' நீதிமன்றம் மூலம் இச் சொத்தை விற்றார். இதையறிந்த 'அ', 'இ' மீது வழக்குத் தொடர்ந்து தம் சொத்தைத் திரும்பக் கோரினார். ஆனால், அவர் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. காரணம் இயந்திரத்தின்மீது 'ஆ' கொண்டுள்ள உரிமையை 'அ' முதலிலேயே மறுத்திருக்க வேண்டும். 'அ' வெகு நாள்கள்வரை வாளாவிருந்தார்; 'இ' செய்த பற்றுரிமையை எதிர்க்கவில்லை. அவரின் இந் நடத்தையால் வாங்குவோரை 'ஆ' தாம் உரிமை யாளர், தாம் இல்லை என்று நினைக்கச்செய்தார்.

4. வணிகப் பதிலாள் மூலம் விற்றல் (Sale by a mercantile agent): முதல்வரின் பொருள்களைத் தம்மிடத்தில் பெற்று ஒரு வணிகப் பதிலாள் வேறு ஒருவருக்கு விற்றால் முதல்வருக்காகப் பதிலாளே உரிமையுடையவராக மாறிவிடுவதால் வாங்கு வோருக்கு நல்ல உரிமை உண்டு. உண்மையான உரிமையாளர் வாங்குவோரிடமிருந்து பொருளைத் திரும்பப்பெற முடியாது.

அதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளாவன : அவர் ஒரு வணிகப் பதிலாளாக இருக்கவேண்டும். பொருள்களைத் தம் வசம் பெற்றிருக்க வேண்டும் அல்லது பொருள்மீதுள்ள உரிமைப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். உரிமையாளரின் இசைவுடன் விற்க வேண்டும். வணிகப் பதிலாளாக அன்றாட நடைமுறை வியாபாரத்தில் விற்பனை செய்யவேண்டும். வாங்குவோர் உண்மையாகப் பதிலாளின் தவறான உரிமையைப்பற்றித் தெரியாமல் வாங்க வேண்டும்.

வணிகப் பதிலாள்பற்றி முன்பே விவரிக்கப்பட்டுள்ளது. சரக்குடைப் பதிலாள் (Factor), தரகர், ஏலமிடுபவர், பாங்கர் போன்றோர்கள் அனைவரும் இந்த வகையைச் சார்ந்தவர்கள் தாம். வணிகப் பதிலாள் பல இடங்களுக்குச் செல்லும் பதிலாளாகும். பொருள் ஒப்படைக்கும்போது அவர் வணிகப் பதிலாளாக இருக்கவேண்டும்; பொருள் ஒப்படைத்த பின்னர் வணிகப் பதிலாளாக மாறினால் ஒன்றும் பயனில்லை.

வணிகப் பதிலாள் பொருளைத் தம்வசம் பெற்றிருக்க வேண்டும் அல்லது பொருளுடைமை பற்றி உரிமைப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும். சட்டத்தின் பிரிவு 2 (4) இப் பத்திரங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இப் பத்திரங்களின் நோக்கம் இன்னும் விசாலமாகவிரிந்து, சேமிப்புக்கிடங்கு வைத்திருப்போன் சான்றிதழ், ரயில்வே ரசீது போன்ற பத்திரங்களையும் இவைகளுடன் சேர்த்துக்கொள்ளலாம். அவை உண்மையானதாகவும் பொருள்களைப் பாதுகாப்பதாகவும் இருக்கவேண்டும்.

பொருளின் உண்மையான உரிமையாளர் பொருளை வைத்திருக்கும் தம்முடைய பதிலாளுக்கு அவருடைய இசைவை வழங்க வேண்டும். மோசடி செய்தோ தவறான முறையிலோ அவர்தம் இசைவு பெற்றுக்கொள்வதுபற்றி அக்கறை இல்லை. உரிமையாளரின் (முதல்வரின்) இசைவு பின்னால் ரத்துச் செய்யப்பட்டாலும், வாங்குவோரின் உரிமை பாதுகாக்கப்படுகிறது. ரத்து நோட்டீஸ் விட்டது தெரியாமல் வாங்குவோர் உண்மையாக நல்லெண்ணத்துடன் நடக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர் உரிமை பாதுகாக்கப்படும்.

அத்தகைய பதிலாள் தாம் வணிகப் பதிலாளாகப் பணியாற்றும்போது இப் பொருள்களை விற்கவேண்டும். அப்பொழுது

தான் வாங்குவோரின் நலன் பாதுகாக்கப்படும். மற்ற நிலையில் விற்கப்பட்ட பொருளை வாங்கினவருக்கு இவ் உரிமை கிட்டாது. ஹீப் எ. மோட்டாரிஸ்ட் அட்வைஸரி ஏஜன்சி லிமிடெட் (Heap *vs.* Motorist's Advisory Agency Ltd.) என்ற வழக்கில் விற்பனை நடவடிக்கை பதிலாளின் அன்றாடச் சாதாரண வியாபாரப் போக்கில் நடக்காமல், வெளியில் தனியாக நடந்தது என்று தீர்ப்புக் கூறப்பட்டது. தவறான வழியில் ஒருவருடைய காரை ஒருவர் வாங்கி, அதை விற்றுத் தருவதாக வாக்குறுதி அளித்தார். அக் காரைத் தம்மிடத்தில் வைத்துக்கொண்டே, தாம் ஒரு வணிகப் பதிலாள் என்று சொல்லிக்கொண்டு மோட்டார் வாங்கி விற்கும் ஒரு வியாபார நிறுவனத்தில் விற்பனையாளராக வேலைக்குச் சேர்ந்தார். அதன் பின்னர் அக் காரை விற்றுவிட்டு உண்மையான உரிமையாளருக்கு அதற்குரிய பணத்தைத் தர வில்லை. எனவே, அவர் வழக்குத் தொடுத்துவிட்டார். வாங்கின வருக்குத் தொல்லையாகிவிட்டது. எனவே, வாங்கினவரின் உரிமை பாதுகாக்கப்படவில்லை.

பொருள் வாங்குவோரும் நல்லெண்ணத்துடனும் நன்னம்பிக் கையுடனும் நடந்திட வேண்டும். செயல் கவனக் குறைவாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி வாங்குவோர் நேர்மையுடன் நடந்திட வேண்டும். விற்பனையாளரின் உரிமை யில் உள்ள எவ்விதக் குறைபாட்டையும் இவர் கவனிக்காம லிருக்கக் கூடாது. நோட்டீஸ் உண்மையாக இருக்கவேண்டு மென்பதன்று. ஆனால், ஆக்கபூர்வமான நோட்டீஸாக இருக்க வேண்டும்.

5. கூட்டுஉரிமையாளர் மூலம் விற்பனை (Sale by Co-owner) : ஒரு சொத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற் பட்டவர் கூட்டு உரிமையாளர்கள் இருக்கலாம். மற்றக் கூட்டு உரிமையாளர்களின் ஒப்புதல்மேல் ஒருவரே பொருளை வைத்துக் கொள்ளலாம். அந்த ஒருவர் சொத்து முழுவதையும் வேறு ஒருவருக்கு விற்றுவிட்டால், வாங்குவோரின் உரிமை பாதுகாக்கப் பட வேண்டும் என்று பிரிவு 28 கூறுகின்றது. வாங்குவோரும் நல்லெண்ணத்தோடு நடக்க வேண்டும்.

6. தவிர்தகு உரிமை உள்ளவரால் விற்பனை (Sale by one with voidable title) : தவறான உரிமையுடன் ஒருவன் பொருளை வைத்திருந்தால் அதை வாங்குவது ஆபத்து. அவன் அப் பொருளை மோசடி செய்தோ பொய்க்கூற்றுக் கூறியோ அடைந்திருந்தால் அது செல்லுபடியாகாமல் போய்விடும்.

ஆனால், சில சூழ்நிலையில் அவனுக்கு நல்ல உரிமை உண்டாகும். எப்பொழுது ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதைப் பொறுத்துள்ளது அது. முதன் முதலில் ஏற்பட்ட ஒப்பந்தம் செல்லுபடியாகும் நிலையில் இருந்தால் அப்பொழுது விற்கப்படும் பொருள்மீது வாங்குவோருக்கு நல்ல உரிமை தோன்றும்.

ஓர் ஆள் பொய்க்கூற்றுக் கூறி ஒரு நகையை வாங்கி அதற்குச் செக்குக் கொடுத்துவிட்டு, பின்னர் அடகு வைத்துவிட்டு அப் பணத்துடன் ஓடிவிட்டான். செக்கு மறுக்கப்பட்டபோது வியாபாரிக்கு இந்த மோசடி தெரியவந்தது. அடகு பிடித்த வரிடமிருந்து நகையை மீட்க அவர் முயன்றார். அடகு வைத்த வனுக்கு நகைமீது உரிமை இல்லையென வாதித்தார். இந் நடவடிக்கை முதலிலிருந்தே தவிர்தகு (voidable) தன்மையதாக இருக்கிறது. ஒப்பந்தம் தள்ளுகிறவரைக்கும் செல்லுபடியாக இருக்கிறது. மேலும், இவ் வொப்பந்தந் தள்ளுபடி செய்வதற்கு முன்னரே அடகு பிடித்தோர் நகையைப் பெற்றுள்ளார். எனவே, அவர் நிலை பாதுகாக்கப்படுகிறது. ஆதலான், நகையை வியாபாரிக்குத் திரும்பத் தரச்சொல்லிக் கட்டளையிட நீதிமன்றம் மறுத்துவிட்டது. ஆனால், இத்தகைய தன்மை வாய்ந்த நடவடிக்கைகளில் விற்பனையாளர் பொருள் விற்பதற்கு முன்பு தம் வசம் பொருளைப் பெற்றிருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

7. விற்பனையாளர் வசமுள்ள பொருள் விற்பனை (Seller-in-possession): 'அ' என்பவர் பொருளை 'ஆ'விற்கு விற்றார். ஆனால் அப் பொருளைத் தம் வசமே வைத்திருந்தார். பிறகு அப் பொருளை 'இ' என்பவருக்கு விற்றுவிட்டார். 'இ' யின் உரிமை பாதுகாக்கப்படலாம். 'அ' பொருளை வைத்திருந்தது ஒரு விற்பனையாளர் என்ற தகுதியிலேதான்; ஒரு வாடகைக்கு விட்டவராகவோ ஒப்பாளியாகவோ அன்று. மேலும், அப் பொருளை 'இ' என்பவருக்கு ஒப்படைக்க வேண்டும். நிக்கோல்சன் எ. ஹார்ப்பெர் (Nicholson *vs.* Harper) என்ற வழக்கில், விற்பனையாளர் சேமிப்புக் கிடங்கில் வைத்திருந்த பொருளை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டு, மீண்டும் அதே பொருளைச் சேமிப்புக் கிடங்கு உரிமையாளரிடம் அடகு வைத்து விட்டார். அத்தகைய அடகு சரியானதன்று என்று நீதிமன்றம் கூறிவிட்டது. பொருளோ பொருளின் உரிமைப் பத்திரங் களோ அவருக்கு ஒப்படைக்கப்படவோ மாற்றித் தரப்படவோ இல்லை.

8. இதேபோல் வாங்குவோரிடம் உள்ள பொருள் விற்பனை (Sale by buyer-in-possession): உதாரணமாக, 'அ' என்பவர்

பொருளை வாங்கி அதற்குரிய பணம் செலுத்தாமல் தம் வசம் பொருளை வைத்துக்கொண்டு, பின்னர் அதை 'ஆ' என்பவரிடம் விற்கிறார். 'ஆ' வும் இஃது உண்மையென நம்பி அப் பொருளை வாங்கிவிடுகிறார். 'ஆ' வுக்குச் சொத்துரிமை உண்டு. மார்ட்டென் எ. வேல் (Marten *vs.* Whale) என்ற வழக்கில் 'அ' என்பவர் 'ஆ' வினுடைய சட்ட ஆலோசகர் (Solicitor) ஒப்புக்கொண்டால், 'ஆ'விடமிருந்து ஒரு காரை வாங்கிக் கொள்வதாகச் சொன்னார். 'ஆ'விடமிருந்து காரைத் தம் வசம் கொண்டுவந்துவிட்டார். பிறகு 'இ' என்பவருக்கு அதை விற்று விட்டார். அதன்பிறகு 'ஆ' வின் சட்ட ஆலோசகர் ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே 'ஆ' என்பவர் 'இ'யிடமுள்ள காரை மீட்டுத் தமக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், நீதிமன்றம் சொத்துரிமை 'இ'-க்கு மாறிவிட்டது எனத் தீர்ப்புக் கூறியது. ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 30 (2) இக் கோட்பாட்டை விளக்குகிறது. ஆனால், இப் பிரிவு, பொருளை வாங்கு வோருக்கும் அல்லது வாங்குவதாக ஒத்துக்கொண்டவருக்கும் பொருந்தும். வாடகைக் கொள்முதல் நடவடிக்கைகளுக்கு இது பொருந்தாது.

9. வெளிப்படையான சந்தை (Market Overt) : வெளிச் சந்தை அல்லது அங்காடியில் நடைபெறும் நடவடிக்கைகளை இது குறிக்கிறது. இத்தகைய வெளிப்படையான அங்காடியில் ஒருவர் சரக்கு வாங்கினால் அவர் நலன் பாதுகாக்கப்படுகிறது. சொத் துரிமை அவருக்கு உண்டு. வெளிச் சந்தை என்பது வியாபாரத் திற்கு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட இடம். குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்த விற்பனையை எல்லோரும் ஏற்பார்கள். விடுமுறை நாள்களில் நிகழ்ந்த விற்பனையை யாரும் ஒத்துக்கொள்வதில்லை. அத்தகைய இடங்களில் விற்பனையான பொருள் அச் சந்தை விற்பனையின் முக்கியப் பொருளாக இருக்கவேண்டும். உதாரணமாக, துணிக் கடையிலிருந்து சிமென்ட்டு வாங்கினால், வாங்கியவரின் உரிமை பாதுகாக்கப்படமாட்டாது. இவ் வெளிப்படைச் சந்தை ஏற்பாடு ஆங்கிலச் சட்டத்தில்தான் உண்டு; நம் நாட்டுச் சட்டத்தில் இல்லை.

அடக்க விலை – காப்புறுதி – சத்தம் (Cost - Insurance - Freight) **ஒப்பந்தங்கள்**

ஆங்கில எழுத்தான C. I. F. என்பது தமிழில் முறையே அ. க. ச. என்று குறிக்கும். அதாவது C என்பதற்கு அடக்க

விலை (Cost) என்றும், I என்பதற்குக் காப்புறுதி (Insurance) என்றும், F என்பதற்குச் சத்தம் (Freight) என்றும் பொருள். இம் மூன்றையும் உள்ளடக்கும் விலையில் பொருள்கள் விற்கும் போது இத்தகைய ஒப்பந்தம் ஏற்படுகிறது. கடன்மூலம் அனுப்பப்படுகிற பொருள்களுக்கும், அப் பொருள்களை எடுத்துச் செல்பவர் (carrier) வசம் அப் பொருள்கள் இருக்கும்போதும் இது பின்பற்றப்படுகிறது. இத்தகைய ஒப்பந்தம் பொருள் வாங்குவோருக்கும் விற்போருக்கும் பயன் அளிக்கிறது. பணம் செலுத்திய உடனே பொருள் தம்மை அடையவேண்டும் என்று வாங்குவோர் ஆவலாக இருக்கிறார். விற்போரும் பொருள் விலை வந்து சேரவேண்டும் என்று அக்கறை காட்டுகிறார். இருவரும் திவாலாகும்போதும், எதிர்பாராமல் ஏற்படும் விபத்தால் நட்டமடையும்போதும் இருதரப்பினர் நலனும் பாதுகாக்கப்பட வேண்டும். பொருள்களை அனுப்புவதற்கு முன்பு காப்புறுதி செய்து அனுப்பினால் அவைகளுக்குப் பாதுகாப்பு உண்டு. அதைச் செய்வது விற்பனையாளரின் கடமை. மேலும், விற் பனையாளர் சில பத்திரங்களைத் தயாரித்துப் பொருள்களுடன் அனுப்பவேண்டும். பொருள் வாங்குவோர் பொருளின் விலை யைக் காட்டி, அப் பத்திரங்களைப் பெறவேண்டும். அப் பத்திரங்களைப் பொருள் எடுத்துச்செல்லும் கப்பலதிகாரி யிடமோ மற்ற வகையினரிடமோ ஒப்படைத்தால், அவரிடம் பொருள்கள் ஒப்படைக்கப்படும். அவ்வாறு அப் பத்திரங்களைக் கொடுக்கத் தவறினால் பொருள்கள் கொடுக்கப்படமாட்டா. அதைப் பெறுவதற்குரிய உரிமையும் இல்லாது போகும். இவ்விதம் பொருள்களின் விலையை விற்போருக்கு உறுதிப்படுத்தி, அவர்தம் நலன் பாதுகாக்கப்படுகிறது. வாங்குவோர், பணம் செலுத்திப் பத்திரங்களைப் பெறுவதால், இவ் வொப்பந்தத்தை, பத்திரங்களின் விற்பனையேயொழிய, பொருள்களின் விற்பனை அல்ல என்று சிலர் செப்புகிறார்கள். ஆனால், உண்மையில் இதை உரிமைப் பத்திரங்கள்மூலம் சரக்குவிற்பனை என்று கூறுவதுதான் சாலப்பொருந்தும். பொருள் சேதமடையாமல் இருப்பதற்கும் நட்ட வச்சம் (Risk) கருதியும் விற்பனையாளர், காப்புறுதி செய்வ தால் வாங்குவோர் நலனும் பாதுகாக்கப்படுகிறது. பொருள்கள் தொலைந்துவிட்டாலும் சேதமடைந்தாலும் காப்புறுதிக் கம்பெனி யிடம் இழப்பீடு கோரலாம். அவருக்கு நட்டமேற்படுவதில்லை. எனவே, பாதுகாப்பு அல்லது காப்புறுதி செய்தல் வாங்குவோர்-விற்போர் நலன்களைப் பாதுகாக்கிறது. எனவே, இந்தச் சி.ஐ.எஃப். (C.I.F) ஒப்பந்தம், பொருளின் விலையப் பெறு வதற்குப் பயன்படுகிறது. விலையைத் தவிர, காப்புறுதி, சத்தம், இவைகளையும் இவ் வொப்பந்தம் கட்டுப்படுத்துகிறது.

விற்போரின் கடமைகள் (Duties of Seller)

இந்தச் சி.ஐ.எஃப். ஒப்பந்தங்களின்கீழ் விற்போர் செய்ய வேண்டிய கடமைகளாவன: ஒப்பந்தத்தில் கூறிய பொருள் களைச் சேகரிக்க வேண்டும். கப்பல் வாடகை ஒப்பந்தம் பேசி ஒரு கப்பல்மூலம் சரக்கனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். அந்தக் கப்பல் கம்பெனி சரக்குகளை ஏற்றிக்கொண்டு யாரிடம் தர வேண்டுமோ அவரிடம் கொடுப்பதற்கு ஒப்பந்தம் தரும். கப்பலில் பொருள்களை ஏற்றத், துறைமுகத்தில் பொருள்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும். பொருள்மீது காப்புறுதி எடுக்க வேண்டும். அஃது அவசியம் செய்யவேண்டிய கடமை. பின்னர் அவர் பொருள்களின் விலை விவரம், அளவு, அனுப்பப்படும் விதம் போன்றவை அடங்கிய விலைப்பட்டியல் (Invoice) ஒன்று தயார் செய்யவேண்டும். பின்னர் இவ் விலைப்பட்டியலைக் கப்பல் இரசீது (Bill of Lading), காப்புறுதிப் பத்திரம் ஆகியவைகளை உடனே வாங்குவோருக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்ப வேண்டும். இப் பத்திரங்கள் முன்கூட்டியே பொருளைப் பெறப் போகிறவருக்கு நிலவழி அல்லது விமானவழித் தபால்மூலம் உடனே அனுப்பவேண்டும். அப்பொழுதுதான் அவர் அவை களைப் பைசல் செய்து சரக்கினை எளிதில் எடுத்துக்கொள்ள முடியும்.

வாங்குவோரின் கடமைகள் (Duties of Buyer)

வாங்குவோரின் தலையாய கடமை முதன் முதலில் சத்தத் தைக் கழித்துப் பொருளின் விலையைச் செலுத்திப் பத்திரங் களைப் பெறவேண்டும். அவர் பொருளைப் பார்த்தபிறகு பணம் செலுத்துவதைத் தள்ளிப்போட முடியாது. துறைமுகத்தில் சரக்குகளை இறக்கும் கூலி, படகு கட்டணம் (Lighterage), இறக்குமதி வரி, கப்பல் துறைச் செலவு (Wharfage) போன்ற கட்டணங்களைச் செலுத்தியாக வேண்டும். வாங்குவோர் பொருளை எடுத்த பின்னர் அவர் கேட்ட விளக்கப்படி அல்லது விவரப்படி பொருள்கள் இல்லையென்றால் அவைகளை மறுக்கும் உரிமை அவருக்குண்டு. அப் பத்திரங்களையும் மறுத்து விற் போருக்கே அனுப்பிவிட வேண்டும். இவ் உரிமைகள் தனித்துத் திகழ்கின்றன.

கப்பலில் ஏற்றும் செலவு (Free on Board)

இதை F. O. B. என்னும் ஆங்கில எழுத்துகள் காட்டு கின்றன. கப்பலில் ஏற்றும் செலவு உட்பட விற்பனை செய்யும்

ஒப்பந்தத்தை இது குறிக்கின்றது. விற்பனையாளரின் கடமை என்னவென்றால் தம் பொறுப்பில் ஒத்துக்கொண்ட பொருளைக் கப்பலில் ஏற்றுவதுதான். அவர் ஒரு கப்பல் இரசீது எடுத்து, அதை வாங்குவோருக்கு அளிக்கிறார். இங்குக் காப்புறுதியை வாங்குவோர் ஏற்பாடு செய்யவேண்டும். சரக்குகளைக் காப்புறுதி செய்வது விற்பனையாளரின் கடமை இல்லை. கப்பலில் சரக்கு அனுப்பியதை வாங்குவோருக்கு அறிவிக்கவேண்டிய கடமை மட்டும்தான் விற்பனையாளருக்கு உண்டு. கப்பலில் சரக்கு அனுப்பிய பின்னர்தான் சொத்துரிமை வாங்குவோருக்கு வந்து சேருகிறது.

கப்பல்-விலை ஒப்பந்தம் (Ex-Ship Contract) போய்ச் சேர வேண்டிய இடத்தில் சரக்குகளைக் கப்பல்-விலைக்குத் தருவதாக ஏற்படும் உடன்பாட்டை இது குறிக்கிறது. வாங்குவோர் பொருளைப் பெறாதவரை சொத்துரிமை அவருக்குப் போய்ச் சேராது. விற்பனையாளர் தம் நலனைப் பாதுகாக்கும் பொருட்டுச் சரக்குகளைக் காப்புறுதி செய்யவேண்டும். போகும் வழியில் பொருள்கள் தொலைந்துவிட்டால் அல்லது சேதமடைந்து விட்டால் வாங்குவோர் காப்புறுதிக் கம்பெனியிடம் எவ்வித நட்ட ஈட்டையும் பெறமுடியாது. காரணம், அவர் பொருளைப் பெற்றுக்கொள்ளும்வரை சொத்துரிமை அவருக்கில்லை.

வாங்குவோரின் கடமைகள் (Duties of Buyer)

வாங்குவோர் முதற்கண் பொருளை ஏற்றுக்கொள்ள வேண்டும்; பொருளின் விலையைச் செலுத்தவேண்டும். பொருளை ஏற்க மறுத்தால் நட்டஈடு தரவேண்டும்; செலுத்தாத விலையின் மேல் வட்டி செலுத்த வேண்டும்.

பொருள்கள் அனுப்பும்போதும் வாணிபத் தன்மையுடையதாக இருந்தால் வாங்குவோர் அப் பொருள்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒப்பந்தத்தில் சொல்லியுள்ளபடி பொருள்களின் விலையைச் செலுத்தி அவைகளை எடுத்துச்செல்ல வேண்டும். ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது சொன்ன இடத்திலிருந்து மாறுபட்டு வேறு இடங்களுக்குப் பொருளை அனுப்பச்சொல்லி அதனால் பொருள்கள் சேதமடைந்தால் அந் நட்டத்தை வாங்குவோர் ஏற்க வேண்டும். வந்தடைந்த பொருள்களை எடுத்துச் செல்லாமலோ எடுத்துச்செல்லத் தாமதம் ஏற்பட்டோ அதனால் பொருள்கள் சேதமடைந்தால் அதற்கு வாங்குவோர்தாம் பொறுப்பேற்க வேண்டும்.

வாங்குவோரின் உரிமைகள் (Rights of Buyer)

ஒப்பந்தத்தில் கண்டபடி பொருள்களை எடுப்பதற்கு வாங்குவோருக்கு உரிமையுண்டு. முழுப் பொருள்களையும் எடுத்துச் செல்ல அவருக்கு உரிமை உண்டு. தவணை தவணையாகப் பொருள்களை எடுத்துச் செல்லும்படி விற்பனையாளர் கூற முடியாது. மேலும், வாங்குவோர் பொருள்களை ஏற்பதற்கு முன்பு சோதித்தறியப் போதுமான வாய்ப்புத் தரவேண்டும். ஒப்பந்தத்தில் கண்டபடி பொருள் இருக்கவேண்டும்; அல்லது அவர் சொன்ன விவரத்தின்படி பொருள்கள் இருக்கவேண்டும். அவரே சரிசெய்து திருப்தி அடையவேண்டும். பொருள் வாங்கி விட்ட பின்னர் மறுப்பதில்லை என இரு சாராரும் ஒத்துக்கொள்ள வேண்டும். கொடுத்த விளக்கத்தின்படி பொருள்கள் அனுப்பப் படவில்லையென்றால் இந் நிபந்தனை செல்லாது. பொருளை எடுத்துக்கொள்வதாக வாங்குவோர் விற்பனையாளருக்குத் தெரிவித்தபோதும், விற்பனையாளரின் சொத்துரிமைக்கு முரணான காரியத்தை வாங்குவோர் செய்யும்போதும், தேர்ந் தெடுக்காமல் பொருள்களை நீண்ட நாள்களுக்கு வைத்திருந்த போதும், வாங்குவோர் பொருள்களை வாங்குவதற்கு ஒத்துக் கொண்டதாகக் கருதப்படும். வாங்குவோர் பொருளை மறுக்கும் போது, தாம் பொருளை ஏற்க மறுப்பதாக விற்பனையாளருக்குத் தெரிவித்தால் போதும்; திரும்பவும் பொருள்களைக் கொண்டு போய் விற்பனையாளரிடம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. காரணம், விற்பனையாளரே அவைகளைத் திரும்ப எடுத்துச் சென்றுவிடுவார். இந் நிபந்தனைகளிலிருந்தும் வாங்குவோர் விலகினாலும், உத்தரவாத முறிவு ஏற்பட்டாலும், வட்டிப் பாக்கிக்காகவும் நட்ட ஈட்டிற்காகவும் வாங்குவோர் வழக்குத் தொடரலாம். நீதிமன்றத்தின் கட்டளையை எதிர்பார்த்துச் சில சிறப்புச் செய்கைகளுக்காக வழக்குத் தொடரலாம்.

விற்போரின் கடமைகள் (Duties of Seller)

பொருள்களின் ஒப்படைப்புச் செய்தல் அதாவது, வாங்குவோருக்கு அனுப்புதல், சில நேரங்களில் சரக்குகளுக்குக் காப்புறுதி செய்தல் போன்ற கடமைகளை விற்போர் அவசியம் நிறைவேற்ற வேண்டும்.

ஒருவரிடமிருந்த பொருளை மற்றொருவருக்கு இயல்பாக மாற்றும் முறைக்குத்தான் ஒப்படைப்பு என்று பெயர். இவ் வொப்படைப்பு மூன்று வகைப்படும் : நிகழ்வுறு ஒப்படைப்பு (Actual Delivery), தொக்கிய ஒப்படைப்பு (Symbolic Delivery), அடையாள ஒப்படைப்பு (Constructive Delivery). நிகழ்வுறு

ஒப்படைப்பு, பொருள்களைத் தம்வசம் வைத்துள்ள விற்போரால் நிகழ்வது. தொக்கிய ஒப்படைப்பு, பொருள்களைத் தம்வசம் வைத்துள்ள வாங்குவோரால் ஏற்படுத்தப்படுகிறது. அடையாள ஒப்படைப்பு, பொருள்களைத் தம்வசம் வைத்துள்ள மூன்றாம் மனிதரால் ஏற்படுத்தப்படுகிறது. விற்பனை செய்யப்பட்ட பொருள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு உண்மையாகவே மாற்றுவது நிகழ்வுறு ஒப்படைப்பாகும். பொருள்கள் சேகரித்து வைத்திருக்கும் கிடங்கின் சாவியை வாங்குவோருக்கு ஒப்படைப்பது தொக்கிய ஒப்படைப்புக்கு உதாரணமாகும். கிடங்கைத் திறந்து பொருள்களை எடுத்துச்செல்லும் அதிகாரத்தை வாங்குவோருக்கு அளிப்பது தொக்கிய ஒப்படைப்பாகும்.

புதிய நபருக்கு ஒப்படைப்புச் செய்வதுதான் அடையாள ஒப்படைப்பு என்பது. பொதுவான நபர் வசம் உள்ள பொருள்களின் சட்டபூர்வமான நிலை மாறுகிறது. ஆனால் புலப்படாத மாற்றம் அங்கு நிகழ்கிறது. உதாரணமாகக் கந்தனின் பொருள்கள் அவருடைய பதிலாளான விந்தனிடம் இருக்கின்றன. பின்னர், அவை சந்திரனுக்கு விற்கப்படுகின்றன. சந்திரன் அவற்றை விந்தனிடமே இருக்க ஒப்புகிறார். அதாவது, சந்திரனுக்காகப் பொருள்களை விந்தனே வைத்திருக்கிறார். கந்தனின் பதிலாளாக இருந்த விந்தன் இப்பொழுது சந்திரனின் பதிலாளாக இருக்கிறார். இது கீழ்க்காணும் விதங்களில் நேரலாம்: அதாவது, விற்பனைக்குப்பின் பொருளை விற்பவர் அவற்றைத் தம்மிடம் வைத்திருக்கலாம். உதாரணமாக ரமணன் தம் காரை ராகவனுக்கு விற்றுவிட்டு, பின்னர் அதையே கடனாக வாங்கிப் பயன்படுத்துகிறார். அதேபோல் விற்பனைக்கு முன்னரே வாங்குவோர் பொருள்களைத் தம்வசம் வைத்திருப்பது, விற்போர் வாங்குவோர்க்குப் பொருள்களை விற்றுத் தம்மிடத்திலேயே வைத்திருந்து பிறகு ஒப்படைப்பதுமுண்டு. விற்பனை அல்லது திருப்பம் என்ற அடிப்படையில் விற்கும் பொருள்கள் இதற்குச் சான்றாகின்றன. இறுதியாக மூன்றாம் மனிதன் தன் வசம் வைத்திருக்கும் பொருள்களை ஒப்படைப்பது அடையாள ஒப்படைப்பாகும். ஆதனின் பொருள்கள் பரதனின் கிடங்கில் இருந்தால் அவன் அவைகளுக்கு ஒப்பாளியாகிறான். அப் பொருள்களைச் செல்லப்பன் வாங்கிப் பரதன் வசமே வைத்துச் செல்கிறான். பரதன், செல்லப்பனுக்கும் ஒப்பாளியாகிறான். பொருளை வைத்திருக்கும் சட்டபூர்வமான நிலையில் மாற்ற மேற்பட்டு வாங்குவோருக்கு ஒப்படைப்புச் செய்யப்படுகிறது. இவ் வுதாரணத்தில் பரதன் உண்மையாக அல்லது நடைமுறை

யில் பொருள்களைத் தன்வசம் பெற்றிருக்கவேண்டும். பொருள் களை ஒப்படைக்கு முன்பு உறுதி செய்யவேண்டும். அத்தகைய உடன்பாட்டிற்கு எல்லோரும் உடன்பட வேண்டும்.

ஒப்படைப்பிற்கான நிபந்தனைகள் (Conditions for Delivery)

விற்பனையாளர் ஒப்பந்தத்தின்படி பொருள்களை ஒப் படைக்கவேண்டும். குறிப்பிட்ட இடத்திலோ அல்லது விற்கும் தறுவாயில் பொருள் எவ்விடத்தில் இருக்கிறதோ அங்கு ஒப்படைக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளி மூலம் சரக்குகள் வாங்கப்பட்டால் வாங்குவோரின் இடத்திற்கு விற்போர் பொருளைக் கொண்டுபோய்த் தரவேண்டும். பொருள்களை ஒப்படைக்கும் பக்குவத்திற்காக வாங்குவோர் ஏதாவது செலவு செய்தால், அச் செலவை விற்போர் ஏற்கவேண்டும். ஒப் படைப்பு அடைவதற்காகும் செலவை வாங்குவோர் ஏற்க வேண்டும். சாமான்களைத் தூக்கிச் செல்வோருக்கு உரிமை தரப்பட்டிருப்பதால் அவரிடம் பொருள்களை ஒப்படைக்கலாம். காரணம், தூக்கிச் செல்வோரிடம் கொடுத்த ஒப்படைப்பு வாங்குவோருக்குக் கொடுத்த ஒப்படைப்பிற்குச் சமம்.

பொது வண்டிக்காரர்மூலம் பல இடங்களுக்குச் சரக்கு அனுப்புவதாக இருந்தால் விற்பனையாளர் பொருள்களைக் காப்புறுதி செய்யவேண்டும். இது விலை—காப்புறுதி—சத்தம் (C.I.F.) ஒப்பந்தங்களில் மிகவும் அவசியமானது. விற்பனை யாளர் காப்புறுதி செய்யவேண்டிய அவசியமில்லையென்றால் அவர் இது விஷயத்தை வாங்குவோருக்குத் தெரிவிக்கவேண்டும். அப்பொழுதுதான் வாங்குவோர் காப்புறுதிப் பத்திரம் எடுக்க வசதியாக இருக்கும்.

விற்போரின் உரிமைகள் (Rights of Seller)

வாங்குவோர் பொருளை ஏற்க மறுத்துவிட்டால் அவர்மீது நட்டஈடு கோரி விற்போர் வழக்குப்போடும் உரிமை அவருக்குண்டு. வாங்குவோர் பொருளை எடுத்துச்செல்ல மறுத்து அல்லது எடுத்துச்சென்ற பொருளைத் திரும்பத் தர மறுத்துப் பணமும் செலுத்தாமல் இருந்தால், விற்போர் பொருள் களை வேறு யாருக்காவது விற்றுவிடலாம்; நட்டஈடு வேண்டி வாங்குவோர்மீது வழக்கும் போடலாம். சொத்துரிமை வாங்கு வோருக்குப் போய்ச் சேராத பொழுதுதான் இது பொருந்தும். ஆனால் ஒப்பந்தம் தகுந்தமுறையில் செய்திருந்தால் சொத்துரிமை வாங்குவோருக்கு இல்லாவிட்டால் கூடஅவர்மீது

வழக்குத் தொடுக்கலாம். காலம் கடந்து செலுத்தும் பணத்திற்கு வட்டி வசூலிக்கும் உரிமையும் விற்பனையாளருக்கு உண்டு. ஒப்பந்தப் புள்ளியின் தேதியிலிருந்தோ, விற்பனையைச் செலுத்தவேண்டிய தேதியிலிருந்தோ வட்டி பெற நீதிமன்றம் ஆணையிடும்.

கொடுபடா விற்பனையாளரின் உரிமைகள் (Rights of unpaid Vendor)

கொடுபடா விற்பனையாளர் என்பவர் பொருள் விற்றதற்கு அதன் விலையைப் பெறாதவர் அல்லது அவருக்குச் செலாவணிப் பத்திரங்கள் கொடுத்திருந்து அவை மறுக்கப்பட்டு விலையை இன்னும் பெறாதவர். சரக்கு விற்பனைச் சட்டத்தின் கீழ் வாங்குவோருக்கு எதிராக அவருக்குச் சில உரிமைகள் உள்ளன. பற்றுரிமை கொள்ளல், பொருள் செல்லாமல் தடுக்கும் உரிமை, மறு விற்பனை உரிமை, பொருள் விலைக்காக வழக்காடும் உரிமை போன்றவை முக்கிய உரிமைகளாகும்.

பற்றுரிமை கொள்ளல் (Right of Lien)

பொருளுக்குரிய விலை தரப்படும்வரை பொருள்களை வைத்திருக்கும் பற்றுரிமை கொடுபடா விற்பனையாளருக்குண்டு. பொருள் அவர்வசம் இருக்கும்போது அவர் அவ்வாறு செய்ய முடியும். மேலும், கடன்பற்றிய நிபந்தனைகள் ஒன்றுமில்லாத போதும் கடன்வசதி இருந்து, சொன்ன காலக்கெடு முடிந்தும் பணம் பெறாதபோதும், வாங்குவோர் திவாலாகிவிட்டபோதும் அவர் இவ் வுரிமையைப் பயன்படுத்தலாம்.

பற்றுரிமையின் தன்மைகள்

கொடுபடா விற்பனையாளரின் பற்றுரிமை குறிப்பிட்ட பற்றுரிமையாகும். பொருள்விலை செலுத்தப்படாதபோதும், பொருள்கள் விற்பனையாளர்வசம் உள்ளபோதும்தான் பற்றுரிமை செலுத்த முடியும். மேலும் இது தனிநபர் சம்பந்தப் பட்டது. கொடுபடா விற்பனையாளரின் கடனாளர் இவ் உரிமையை வற்புறுத்த முடியாது. மேலும் இதைப் பிரிக்கமுடியாது. விற்பனையாளரின் கைவசமுள்ள முழுப் பொருள்களையும் தாம் இது கட்டுப்படுத்தும். வாங்குவோர் விலையின் ஒரு பகுதியைச் செலுத்திவிட்டு, அதற்குரிய பொருளை எடுத்துச் செல்லவியலாது. பிரிவு 54-ன்படி விற்பனையாளர் பொருள்களை மறுவிற்பனை செய்யலாம். இவ் வுரிமை பொருள்களை வெறுமனே கைவசம் வைத்திருப்பதைக் காட்டிலும் உயர்வானது.

இவ் வுரிமைகளைப் பெறுவதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. அவையாவன : முதற்கண் விற்பனையாளர் கைவசம் பொருள்கள் இருக்கவேண்டும். சொத்துரிமை வாங்குவோருக்குப் போய்ச் சேரவேண்டும். பொருள்களின் விலை செலுத்தப் படாமலிருக்கவேண்டும். ஒப்பந்தத்திற்கு முரணான நிபந்தனைகள் இல்லாமலிருக்க வேண்டும்.

விற்போர் கைவசம் பொருள்கள் இல்லாதபோதும், அதாவது வாங்குவோருக்கோ, தூக்கிச் செல்வோருக்கோ விற்பனை உரிமையை ஒதுக்கிக் கொள்ளாமல் தந்தபோதும், சட்டரீதியான உரிமைபெற்றுப் பொருள்கள் வாங்குவோர் கைவசம் உள்ள போதும், விற்பனையாளர் பற்றுரிமையைத் தள்ளிவிட்ட போதும் பற்றுரிமை இல்லாமல் போகிறது.

நடுவழி நிறுத்தும் உரிமை (Right of Stoppage in Transit)

பற்றுரிமைக் கொள்கையின் விஸ்தரிப்புதான் இது. விற்பனையாளர் வாங்குவோருக்குப் பொருள்களை அனுப்புவதற்காக நடுநிலையாளர் ஒருவரிடம் ஒப்படைத்து அவை செல்லும்போது தடுத்து மீண்டும் தம்மிடமே கொண்டுவரும் உரிமையைப் பெறலாம். ஆனால், அது சில சூழ்நிலைகளில்தாம் செய்ய முடியும். பொருள் நடுவரின் பாதுகாப்பில் இருக்கும் போதுதான் வாங்குவோருக்குப் போகாமல் நிறுத்தமுடியும். மேலும் வாங்குவோர் திவாலானால்தான் இது முடியும். வாங்குவோர் சட்டரீதியாகத் தாம் திவாலானவர் என்று அறிவிக்க வேண்டிய அவசியமில்லை. பொருள் வைத்துள்ள தூக்கிச் செல்வோருக்கு அறிவிப்புக் கொடுத்துவிட்டு விற்பனையாளர் பொருள்களைத் தம் கைவசத்திற்குக் கொண்டு வர முயற்சி செய்யலாம். உண்மையாகவே தம் இருப்பிடத்திற்கும் கொண்டு வந்துவிடலாம். பொருள்கள் நடுவர்வசம் இருக்கும்வரை, ஒப்படைப்புப் பத்திரம் வாங்குவோர் அல்லது அவரது பதிலாள் பெயரில் இல்லாதவரை, விற்பனையாளர் இவ் வுரிமையைப் பயன்படுத்தலாம். மேலும், பொருள்களும் நடுவழியில் இருக்க வேண்டும். அவை வண்டிக்காரர்களுக்கு அல்லது ஒப்பாளிக்குக் கொடுத்து வாங்குவோருக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்ட போதே அவைகளின் பயணம் தொடங்குகிறது. பெற்றனுப்பும் பதிலாள் (Forwarding Agent) வசம் பொருள் இருந்தாலும் அதுவும் பயணத்தின் பாற்படும். வாங்குவோருக்குப் பொருள்கள் ஒப்படைக்காதவரை அவற்றின் பயணம் தொடர்கிறது. ஹனுமன்தாஸ் எ. ஜி.ஐ.பி. ரயில்வேக்கு (Hanumandas *vs.*

G.I.P. Railway) நடந்த வழக்கில் வேறு இடத்திற்குப் பொருள்களை அனுப்புவதற்காக ரயில்வேயிடம் ஒப்படைக்கப் பட்டன. யாருக்கு ரயில்வே ரசீது எழுதப்பட்டதோ அவர் கட்டணத்தைச் செலுத்திவிட்டுப் பொருள்களை எடுத்துச் சென்றார். அவர் ரயில்வே ஸ்டேஷனை விட்டுப் போவதற்குள் கொடுபடா விற்பனையாளரிடம் இருந்துவந்த தந்தியின் பேரில் ரயில்வே அதிகாரிகள் பொருள் எடுத்துச் செல்வதைத் தடுத்து விட்டார்கள். புறக்குறிப்புச் செய்யப்பட்டோரிடம் (அதாவது, பொருளை எடுத்துச் செல்வோரிடம்) ஒப்படைப்பு நடந்துவிட்ட படியால், ரயில்வே அதிகாரிகள் செய்தது சரியில்லையென நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

அதேபோல் வாங்குவோர் பொருளை எடுத்துச்செல்ல மறுத் தாலும் தடுக்கும் உரிமை தொடர்கிறது. அவ் வுரிமையை விற்போரோ அவரின் பதிலாளோ நிறைவேற்றலாம். சரக்குகள் நடுவழியில் வந்துகொண்டிருக்கும்போதே வாங்கு வோர் வேறு ஒருவருக்கு விற்றுவிட்டால்கூட இவ் வுரிமை பாதிக் கப்படவில்லை. விற்பனைக்குத் துணை விற்பனையும் இவ் வுரிமையைப் பாதிக்காது. ஆனால், விற்பனையாளரே இத் துணை விற்பனையை ஏற்றுக்கொண்டிருந்தால், இவ் வுரிமையைப் பயன்படுத்த முடியாது. வாங்குவோர் சரக்குகளை அடகு வைத்திருந்தால் அவ் வடகின் தன்மைக்கேற்பத்தான் இவ் வுரிமையைப் பயன்படுத்த முடியும்.

சரக்குகளின் மாற்றுவழிப் பயணம் (Transit) வாங்கு வோரோ, அவருடைய பதிலாளோ பொருள்களை ஒப்புக் கொண்டு விட்டால் முடிந்துவிடுகிறது. ஒப்பாளியின் வசமுள்ள பொருள்களின் சட்டரீதியான நிலைமை மாறினாலும் அதாவது, ஒப்பாளி சரக்கு வந்தடைந்ததும், வாங்குவோருக்காவது அல்லது அவர் பதிலாளுக்காவது அவற்றை வைத்திருந்தாலும் அது முடிவடைகிறது. ஒப்பாளி தவறான நோக்கத்துடன் சரக்குகளை வாங்குவோருக்கோ, அவர்தம் பதிலாளுக்கோ தர மறுத்தாலும் அது முடிவடைகிறது.

மறுவிற்பனை உரிமை (Right of Resale)

கொடுபடா விற்பனையாளர் பொருள்களை மறுவிற்பனை செய்யலாம். கெட்டுப் போகக்கூடிய பொருள்கள் விஷயத்தில் இது மிகவும் மதிப்பு வாய்ந்த உரிமையாகக் கருதப்படுகிறது. அதேபோல் அங்காடி விலை சரியும்பொழுதும் இவ் வுரிமை கையாளப்படுகிறது. அங்காடி விலை, நட்டஈட்டை உறுதி

செய்வதற்கு வேண்டிய உண்மையான அளவுகோலாக இருக்கிறது. முதல் விற்பனையில் உள்ள வாங்குவோர் பணம் செலுத்தத் தவறினாலும், பொருளை எடுத்துச் செல்ல மறுத்தாலும் விற்பனையாளர் இரண்டாவதாக அல்லது அடுத்ததாக விற்பனை செய்வதைத்தான் மறுவிற்பனை என்கிறோம். அத்தகைய நேரங்களில் விற்பனையாளர் சரக்குகளை நடுவழியில் நிறுத்திவிடுவார். அல்லது பற்றுரிமை உரிமையைப் பயன்படுத்துவார். தாம் பொருள்களை மறுவிற்பனை செய்யப் போவதாகத் தம் விருப்பத்தை வாங்குவோருக்கு நோட்டீஸ் மூலம் தெரிவிப்பார். பின்னால் வருபவர் செய்யும் ஒப்பந்த முறிவிற்காக முதல் நபரிடமே நட்டஈட்டைப் பெற்றுவிடுவார்.

கடமையிலிருந்து தவறிய வாங்குவோர்க்கு விற்பனையாளர் நோட்டீஸ் விடவேண்டியது மிகவும் அவசியம். நோட்டீஸ் விடுவதன் நோக்கம் வாங்குவோருக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒரு வாய்ப்புத் தரவேண்டுமென்பதாகும். ஒப்பந்தத்தை நிறைவேற்ற அவர் விரும்பவில்லையானாலும், வேறு ஒரு வாங்குவோரை அறிமுகப்படுத்தி அவரைச் சரக்கு வாங்கச் செய்யலாம். அழுகி அல்லது கெட்டுப்போகும் சரக்கு விஷயத்தில் நோட்டீஸ் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அத்தகைய பொருள்களை விரைவில் விற்றுவிடலாம். பார்த்தசாரதி எ. கஜபதி (Partha-sarathy *vs.* Gajapathy) என்ற வழக்கில் கெட்டுப்போகக்கூடிய பொருள்கள் எட்டு மாதங்களுக்குப் பின்னர் விற்கப்பட்டன. நட்டஈடு கோரும் உரிமை விற்பனையாளருக்கில்லை என நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

மறுவிற்பனை செய்யும்போது விற்பனையாளருக்கு நட்டம் ஏற்பட்டால் அல்லது குறைவான வருமானம் கிடைத்தால் பற்றாக்குறையைச் சரிக்கட்டும்படி முதன்முதலில் வாங்கின வரைக் கேட்டுக்கொள்ளலாம். அவரும் வித்தியாசத்தைச் செலுத்திவிடலாம். மறுவிற்பனையில் மிகுதியாக வருமானம் கிடைத்தால் அதை விற்பனையாளரே வைத்துக்கொள்ளலாம். முதன்முதலில் வாங்கிய வாங்குநருக்கு உபரி வருமானத்தில் பங்கு கேட்கும் உரிமையில்லை.

பொருள் விலைக்காக வழக்காடும் உரிமை விற்போருக்குண்டு. விற்ற பொருளின் விலையைப் பெற முடியாதபோது வாங்குவோர்மீது வழக்காடும் உரிமையைச் சட்டத்தின் 55 ஆவது பிரிவு வழங்குகிறது. விற்பனையாளர் பொருள்களைத் தம் வசம் வைத்திருக்க முடியாமல் போனாலும், வாங்குவோர் பணம்

செலுத்த அலட்சியப்படுத்தினாலும் வழக்காடும் உரிமை விற்போருக்குண்டு.

ஏல விற்பனை (Auction Sale)

ஏல விற்பனைபற்றிய விதிகளைப் பிரிவு 64 விளக்குகிறது. கூடியவரை உயர்ந்த விலைக்குப் பொதுமக்களிடம் விற்பனை செய்வதுதான் ஏல விற்பனை என்பது. பொதுமக்களின் போட்டி நடவடிக்கைதான் இதன் முக்கியச் சாரமாகக் கருதப்படுகிறது. ஒதுக்கீட்டுடன் விற்பனை (Sale with Reserve), ஒதுக்கீடில்லாமல் விற்பனை (Sale without Reserve) என்னும் இருவகை விற்பனைகள் ஏல விற்பனையில் காணப்படுகின்றன. நிலைமையை வேறாக்கும் அதிக விலையை நிருணயித்து அதற்குக்கீழ் விற்க ஏலமிடுவோன் மறுக்கும்போது ஒதுக்கீட்டு விற்பனை நிகழ்கிறது. அத்தகைய வரையறை இல்லாதபோது ஒதுக்கீடில்லா விற்பனை நிகழ்கிறது. பொருள்களின் உண்மையான விலைக்குச் சம்பந்தமில்லாமல் யார் அதிக விலைக்குக் கேட்கிறார்களோ அவர்களுக்குப் பொருள்கள் ஏலத்தில் விற்கப்படுகின்றன. அளிப்புக் கூற்றிற்கு அழைப்பதைப்போல ஏல விற்பனைக்கு விளம்பரம் தேவைப்படுகிறது. ஏலமிடுவோன் கூறும் ஒவ்வொரு விலையும், ஒரு முனைவாகும் (offer). குறைந்த விலையை அதிக விலை கட்டுப்படுத்தும். வாங்குவோரின் ஏற்பு பல முறைகளில் தெரிவிக்கப்படுகின்றன. வழக்கமாக ஏற்பைத் தெரிவிக்கத் தண்டோரா அல்லது தமுக்கின் ஒலி எழுப்புதலுண்டு. இறுதி விலையை மூன்று முறை உரக்கக் கூவி முடிப்பதுண்டு; மணி அடித்துத் தெரிவிப்பதுமுண்டு. அத்தகைய ஏற்பு ஏற்பட்டவுடன் ஒப்பந்தம் இறுதியாகவும் முடிவாகவும் முடிக்கப்படுகின்றது. வாங்குவோருக்காகப் பின்னர்ப் பொருள்களை ஏலமிடுவோன் ஒப்பாளி என்ற முறையில் அவைகளை வைத்திருக்கிறான். பணம் பெற்றுக்கொண்டவுடன் அவைகளை வாங்குவோரிடம் ஒப்படைக்க வேண்டும். விற்பதற்குரிய தன் அதிகாரத்தை ஏலமிடுவோன் உத்தரவாதம் செய்வதாகக் கொள்ளப்படுகிறது. முதல்வரின் பொருளுரிமை பற்றிய குறைபாடுகள் இவருக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை.

ஏலவிலை கேட்போரிடையே தோன்றும் குறைந்த விலை உடன்பாடு (Knock out Agreement) செல்லத்தக்கதாகும். அவர்கள் அனைவரும் பொருள்களின் விலையைக் குறைப்பதற்காகச் செய்துகொள்ளும் உடன்பாட்டின் பேரில்தான் குறைந்த

விலை உடன்பாடு தோன்றுகிறது. எப்படியும் அத்தகைய உடன் பாடு சட்ட விரோதமானதன்று. ஆனால், 'டம்பிங்' (Dumping) என்பதுதான் சட்ட விரோதம். 'டம்பிங்' என்பது உத்தேச வாங்குவோரை அல்லது ஏலம் கேட்போரை ஏலத்தில் பங்கு கொள்ளாதபடி தள்ளியிருக்கச் செய்வதாகும். அவ்வாறு செய்வதற்குப் பொருள்களில் இல்லாத—கற்பனையான குறை பாடுகளைக் கூறவும் செய்வதுண்டு.

15. கூட்டு வாணிகம்

(Partnership)

வாணிகம் செய்வதற்குச் சில நபர்களின் சேர்க்கையை ஏற்படுத்துவதுதான் கூட்டு வாணிகம் என்பது.

கூட்டு வாணிகத்தின் இலக்கணம்

இந்தியக் கூட்டு வாணிகச் சட்டத்தின் (Indian Partnership Act) பிரிவு 4, கூட்டு வாணிகத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. அதன்படி 'அனைவரும் அல்லது அனைவர் சார்பில் அவருள் யாராவது நடத்தும் ஒரு தொழிலில் வரும் இலாபத்தை எல்லோரும் பங்கிட்டுக்கொள்வது என்று உடன்பட்டவர்களிடையே எழும் தொடர்பு, கூட்டு வாணிகம்' எனப்படும்.

கூட்டு வாணிகத்தின் சிறப்புக் கூறுகளாவன

1. கூட்டு வாணிகம் ஒப்பந்தத்தால் எழும் ஒரு தொடர்பு. கூட்டாகச் சேர விரும்புவோர்கள் செய்துகொள்ளும் உடன் பாட்டினால் விளைவதுதான் கூட்டு வாணிகம். ஆள்களின் தகுதி நிலையால் கூட்டு வாணிகம் தோன்றுவதில்லை.

2. கூட்டு வாணிகம் ஒரு தொழிலை நடத்துவதற்காகத் தான் ஏற்பட வேண்டும்.

3. கூட்டு வாணிகம் நடாத்திட இரண்டு நபர்கள் தேவை. இரண்டு நபர்கள் மட்டுமிருந்தால் ஒருவரின் இறப்பு அல்லது மீறுகை ஏற்பட்டால் கூட்டு வாணிகம் கலைப்பிற்கு வந்துவிடும். எனவே இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் தேவை. வங்கித் தொழில் நடத்தும் வாணிகத்திற்குக் குறைந்த அளவு இரண்டு நபர்களும் உயர்ந்த அளவு பத்து நபர்களும் இருக்க வேண்டும். ஆனால், ஏனைய வாணிகம் செய்யும் கூட்டு வாணிகத்திற்குக் குறைந்த அளவு இரண்டு நபர்களும், உயர்ந்த அளவு இருபது நபர்களும் இருக்கவேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

4. கூட்டு வாணிகத்தைக் கூட்டாளிகள் அனைவரும் சேர்ந்து நடத்தலாம்; அல்லது எல்லோரின் சார்பில் அவருள்

யாராவது ஒருவர் நடத்தலாம். கூட்டாளிகள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குப் பதிலாள் (Agent) என்ற நிலையில் தொண்டாற்றலாம். எனவே, கூட்டு வாணிகத்தில் பதிலாண்மை ஒரு சிறப்பு அம்சமாகத் தோன்றுகிறது.

5. கூட்டாளிகளின் நோக்கம் தொழிலில் கிடைக்கும் இலாபத்தைப் பங்கிட்டுக் கொள்வதேயாகும்.

6. கூட்டு வாணிகத்தில் கூட்டாளிகளின் சொத்து, உழைப்பு, திறமை ஆகியவைகளை ஒன்றாக்கிச் செயலாற்ற வேண்டும்.

7. கூட்டாளிகள் சட்டபூர்வமான தொழிலையே நடத்த வேண்டும்.

குறிப்பிட்ட சில நபர்களிடையில் கூட்டு வாணிகத் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்றறிய அவர்கள் தொழிலில் ஏற்படும் இலாப - நட்டங்களைப் பகிர்ந்துகொள்ள உடன்பாடு இருக்கிறதா என்று அறியவேண்டும். அத்தகைய உடன்பாடிருந்தால் அது கூட்டு வாணிகம் என்று கொள்ளலாம்.

கூட்டு வாணிகத்தில் ஈடுபட்டுள்ள நபர்களைத் தனிப்பட்ட முறையில் கூட்டாளிகள் என்றும், அவர்கள் கூட்டாகச் செய்யும் தொழில் கூட்டு வாணிகத் தொழில் நிறுவனம் என்றும் குறிக்கப்படுகிறது. எனவே, கூட்டு நிறுவனம் என்பது சட்டப்படி ஒரு தனி மனிதரன்று. கூட்டாளிகளைச் சேர்த்துக் கூறும் சொல்தான் நிறுவனம் என்பது. நிறுவனத்திற்கென்று தனியியக்கம் இல்லை. கூட்டாளிகள் இல்லாமல் கூட்டு நிறுவனம் இல்லை. கூட்டு வாணிக நிறுவனத்திற்குக் கூட்டாளிகள் இல்லாமல் தனித் தன்மை இல்லை.

கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாதது (Unlimited). கூட்டு நிறுவனக் கடன்களை அடைக்க அதன் சொத்துகள் போதாநிலையில் கூட்டாளிகளின் சொந்தச் சொத்துகளையும் விற்று நிறுவனத்தின் கடன்களை அடைக்க வேண்டி நேரலாம்.

முன்பு கூறியபடி கூட்டு வாணிகம் உடன்பாடு அல்லது ஒப்பந்தத்தால் தோன்றியது. ஆனால் கூட்டுரிமை (Co-ownership) நபர்களின் தகுதி நிலையால் உண்டானது. எனவே, கூட்டு வாணிகத்திற்கும் கூட்டுரிமைக்கும் வேறுபாடுண்டு.

கூட்டு வாணிகமும் கூட்டுரிமையும் (Partnership and Co-ownership)

கூட்டு வாணிகம் உடன்பாட்டின்மூலம் தோன்றுகிறது. ஆனால், கூட்டுரிமை பெரும்பாலும் நபர்களின் தகுதியால்தான் தோன்றுகிறது. கூட்டு வாணிகம் இலாப-நட்டங்களைப் பகிர்ந்து கொள்ள ஏற்பட்ட தொடர்பாகும். கூட்டுரிமையில் அவ்வாறு தொடர்பு இல்லை. மற்றக் கூட்டாளிகளின் அனுமதியின்றிக் கூட்டு நிறுவனத்தில் தமக்குள்ள சொத்துரிமைகளை வேறு யாருக்கும் மாற்ற முடியாது. ஆனால், கூட்டுரிமையில் மற்றக் கூட்டுரிமையாளர்களின் அனுமதியின்றி அவ்வாறு செய்யலாம். கூட்டு வாணிகத்தில் ஒவ்வொரு கூட்டாளியும் மற்றக் கூட்டாளிகளுக்குப் பதிலாளாகச் செயலாற்றுகின்றார். ஆனால், கூட்டுரிமையில் அவ்வாறில்லை. ஒரு கூட்டாளி, பதிலாள் என்னும் தோரணையில் கூட்டு வாணிக நிறுவனத்தின் சொத்துகள்மீது பற்றுரிமை பெறுகிறார். ஆனால், கூட்டுரிமையில் பொது மூலதனச் செலவையும், மற்றச் செலவுகளையும் பற்றுரிமைமூலம் பெறமுடியாது. ஒரு கூட்டாளி ஒரு குறிப்பிட்ட சொத்தை நாட முடியாது. சொத்துகளைப் பங்கு போடத்தான் அவருக்கு உரிமை உண்டு. ஆனால், ஒரு கூட்டுரிமையாளர் ஒரு குறிப்பிட்ட சொத்துகளைப் பெறும் உரிமை பெறுகிறார்.

வணிக நிறுவனத்திற்குச் சொத்து வழங்கவேண்டிய அவசியம் இல்லை. ஒரு கூட்டாளி கூட்டு வாணிக நிறுவனத்திற்குச் சொத்து ஏதும் வழங்கவேண்டிய அவசியமில்லை. ஆனால், பொறுப்புகளை அவசியம் ஏற்கவேண்டும். கூட்டு வாணிகம் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமென்றால் அதற்கென்று ஒரு தொழில் வேண்டும். அது ஒரு தனி நிறுவனமாக இருக்கலாம்; அல்லது பல தொழில்களைக் கொண்ட நிறுவனமாக இருக்கலாம். **கூப் எ.** எய்யர் (Coop *vs.* Eyer) என்ற வழக்கில் அநேக நபர்கள் ஒன்றுகூடி எண்ணெய் வாங்கி, அவர்களில் ஒருவர் அவருக்கும் ஏனைய நபர்களுக்கும் அதைப் பங்கிட்டுத் தரவேண்டும் என்று உடன்பாடு செய்துகொண்டார்கள். இவ் வுடன்பாட்டின் படி ஒருவர் எண்ணெய் வாங்கினார். ஆனால், அதற்குரிய விலையைக் கொடுக்கவில்லை. விலைக்காக விற்பனையாளர் மற்றவர்களையும் கூட்டாளிகள் என்று நினைத்து வழக்குத் தொடுத்தார். ஆனால், அவர்களிடையே கூட்டு வாணிகம் தோன்றவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. காரணம், அவர்களிடையே ஒரு தொழில் அல்லது வியாபாரம் தோன்றவில்லை. எனவேதான் சமுதாயச் சங்கங்கள், சமய அற

நிலையச் சங்கங்கள் போன்றவைகளைக் கூட்டு வாணிகமாகக் கொள்வதில்லை. காரணம் அவை வாணிகம் செய்வதற்காக அமைக்கப்படவில்லை. முன்னர்க் கூறியவண்ணம் ஒரு கூட்டாண்மை என்பது கூட்டு வாணிகமா, இல்லையா என்று சோதித்தறிய ஒரு நிறுவனத்தின் இலாப-நட்டங்களைப் பகிர்ந்துகொள்ள உடன்பாடு உண்டா இல்லையா என்று பார்க்க வேண்டும். ஆனால், அதுவும் முடிவான நிரூபணம் அன்று. இலாபம் என்பது ஒருவன் வியாபாரத்தில் போட்ட முதலின்மீது வரும் அதிகப்படியான வருவாய் என்று சொல்லலாம். ஆனால், இந் நிகர வருவாயை மொத்த வருவாயோடு ஒப்பிட்டுக் குழப்பம் அடையக்கூடாது. காக்ஸ் எ. கோல்சன் (Cox *vs.* Coulson) என்னும் வழக்கில் பிரதிவாதி ஒரு கலையரங்கத்தைக் குத்தகைக்கு எடுத்தார். மில் என்னும் கலைஞர் அவ்வரங்கத்தில் ஒரு கலை நிகழ்ச்சி செய்ய ஒப்புதல் அளித்தார். மேலும், வரும் வருவாயில் 60 விழுக்காடு கோல்சனுக்கு அவர் கலை யரங்கத்தைப் பயன்படுத்துவதற்காகக் கொடுப்பதாகவும், மீதி 40 விழுக்காட்டைத் தாம் எடுத்துக் கலைஞர்கள் மற்றச் செலவு களைச் சரிக்கட்டிக்கொள்வதாகவும் ஒத்துக்கொண்டார். ஆனால், அதன்படி மில் நடக்கவில்லை. எனவே வழக்குத் தொடரப்பட்டது. அங்குக் கூட்டு வாணிகம் தோன்றாததால் மில் பொறுப்பாளியல்லர் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. அதேபோல் ஒரு நிறுவனத்தில் ஓர் ஆள் வேலை செய்யும்போது அவருடைய சம்பளத்திற்காக வரும் இலாபத்தில் ஒரு பகுதியைத் தருவதாக உடன்பாடு இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவ் வலுவலாளர் இலாபத்தில் ஒரு பங்கு பெறுவதாலேயே அவரைக் கூட்டாளி என்று கொள்ளக்கூடாது. மற்ற நபர்களின் விருப்பத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

பதிலாண்மைக் கொள்கையைக் கூட்டு வாணிகத்தில் பின் பற்றுவதுதான் மிகவும் முக்கியமான செயலாகும். பதிலாண்மைச் சட்டத்தின் விஸ்தரிப்புதான் கூட்டு வாணிகச் சட்டம். ஒவ்வொரு கூட்டாளியும் முதல்வராகவும் முகவராகவும் இணைந்து செயலாற்றுகிறார்கள். காக்சுக்கும் ஹிக்மேனுக்கும் (Cox *vs.* Hiekman) நடந்த வழக்கில், கடனீந்தோர்களுக்குள் கூட்டு வாணிகம் எழவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இங்குக் கடன் கொடுத்தோர்களின் நன்மை கருதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வியாபாரம் பாதுகாவலர்களால் நடத்தப்பட்டு வந்தது. நபர்களின் விருப்பத்தையும் முக்கியப்

பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே இவ் வழக்கில் பாதுகாவலர்கள் கூட்டாளிகளின் (கடன் கொடுத்தோர்களின்) பதிலாள்கள் அல்லர். எனவே, கடன் கொடுத்தோர்கள் பொறுப்பேற்க வேண்டா என்று நீதிமன்றம் கருத்து வழங்கியுள்ளது.

ஓர் இந்தியக் கூட்டுக் குடும்ப வாணிக நிறுவனத்திற்கும் (Hindu Joint Family Concern) கூட்டு வாணிகத்திற்கும் வேறுபாடு உண்டு. இந்தியக் கூட்டுக் குடும்பத்திற்கு வியாபாரம் பரம்பரைச் சொத்தாக இருக்கவேண்டும். அதாவது, குலாசாரத்தின்கீழ் வியாபாரம் திகழ்கிறது. அது பாகம் பிரியாத கூட்டுக் குடும்பமாக இருக்கவேண்டும். அக் குடும்பத்திலிருந்து மூலதனம் போடவேண்டும். குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காக வியாபாரம் மேற்கொள்ளப்படுகிறது. இந்தியக் கூட்டுக் குடும்ப வாணிகத்திற்கும், கூட்டு வாணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளை நோக்குவோம் :

1. கூட்டு வாணிகம் உடன்பாட்டின் அல்லது ஒப்பந்தத்தின் விளைவாகத் தோன்றுவது. ஆனால், கூட்டுக் குடும்ப வாணிக நிறுவனம் நபர்களின் தகுதியாலும் சட்ட நடவடிக்கையாலும் தோன்றுவது.

2. கூட்டாளியின் இறப்புக் கூட்டு வாணிகத்தைக் கலைத்து விடுகிறது. ஆனால், ஓர் உறுப்பினரின் இறப்புக் கூட்டுக் குடும்ப வாணிகத்தைக் கலைப்பதில்லை.

3. மற்றக் கூட்டாளிகளின் அனுமதியின்றிப் புதிய கூட்டாளி கூட்டு வாணிகத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. ஆனால், கூட்டுக் குடும்ப வாணிகத்திற்கு ஒவ்வோர் ஆண்குழந்தையின் பிறப்பு நிரந்தரச் சேர்க்கையாகிறது.

4. கூட்டாளி யொருவருக்கும் கடன் வாங்குவதற்கு அதிகாரம் இல்லை. அவ்வாறு வாங்கினால் அது மற்றவர்களைக் கட்டுப்படுத்தாது. ஆனால், கூட்டுக் குடும்பத்தின் மேலாளர் (தலைவர்) கடன் வாங்கினால் அஃது அனைவரையும் கட்டுப்படுத்தும்.

5. கூட்டு வாணிக நிறுவனத்தின் கடன்களுக்குக் கூட்டாளிகள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாவார்கள். ஆனால்,

கூட்டுக் குடும்ப நிறுவனத்தின் கடன்களுக்கு மேலாளர்தாம் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாவார். இளைஞர்கள் அல்லது உரிமை வயதுவராதவர்கள் (Minors) அவைகளுக்குப் பொறுப்பாளியல்லர். ஒப்பந்தத் தகுதி பெற்ற மற்றவர்கள்தாம் அவைகளுக்குப் பொறுப்பாளியாவார்கள்.

6. கூட்டு வாணிக நிறுவனத்தின் கணக்கு வழக்குகளைக் கேட்கும் உரிமை கூட்டாளிகளுக்கு உண்டு. கூட்டுக் குடும்ப நிறுவனத்தின் உறுப்பினர்கள் தற்பொழுதுள்ள சொத்து களைப் பாகம் பிரித்துத் தரக் கோரும் உரிமையை மட்டும்தான் பெற்றுள்ளார்கள். ஆனால், கடந்தகாலக் கணக்கு வழக்கு களைக் கேட்கும் உரிமை அவர்களுக்கு இல்லை.

இதுகாறும் விளக்கிய வகையிலிருந்து கூட்டுவாணிகம் என்னும் சொற்றொடருக்கு அநேகக் கூட்டாளிகளிடையே தோன்றும் தொடர்பைக் குறிக்கிறது என்றும், நிறுவனம் அதாவது 'கூட்டு வாணிக நிறுவனம்' என்னும் வார்த்தைகள் அவ் வநேகக் கூட்டாளிகளிடையே தோன்றும் தொடர்பை உள்ளடக்கி அழுத்தம் திருத்தமாகத் தோன்றும் சட்டத் தோற்றத்தைக் குறிக்கும் என்றும் நாம் கொள்ளலாம். கூட்டாளிகள் இல்லாமல் அதற்குத் தனித் தோற்றமில்லை. கூட்டு வாணிகத்தின் பேரில் வழக்குத் தொடர வேண்டுமானால் எல்லாக் கூட்டாளிகளையும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். பணியாற்றுவதற்காகக் கூட்டு வாணிக நிறுவனம் ஒரு பெயரை வைத்துக்கொள்ளலாம். மோசடி எண்ணமில்லாதவரை எந்தப் பெயரையும் வைத்துக்கொள்ளலாம். இருந்தாலும் அரசர்கள் அரசிகள் சம்பந்தப்பட்ட பெயர்களை வைத்துக்கொள்ளக் கூடாதெனச் சட்டம் கூறுகிறது.

கூட்டு வாணிகம் அமைப்பதற்குப் பொது ஒப்பந்தக் (General Contract) கோட்பாடுகள் பயன்படுகின்றன. கூட்டு வாணிகத் திலும் அளிப்புக் கூற்று ஏற்புக் கருத்தொருமிப்பு போன்றவை ஏற்பட வேண்டும். ஒப்பந்தத் தகுதிப் பெற்றுள்ள கூட்டாளிகள் தாம் கூட்டு வாணிக ஒப்பந்தம் செய்யவேண்டும். அவ்வொப்பந் தம் மறுபயனை (consideration) உடையதாக இருக்கவேண்டும். பொதுவாக ஒரு நபர் கூட்டாளியாவதற்குச் சட்டதிட்டங்கள் தடையாக இருந்தால் அவற்றையே போதுமான மறுபயனாகக் கருதிக் கூட்டு வாணிகத்தைக் கொண்டுவர அவர் முயற்சி செய்ய வேண்டும்.

உரிமை வயதுவராத இளைஞர்களும் கூட்டு வாணிகமும் (Minors and Partnership)

முன்னர்க் குறிப்பிட்டபடி கூட்டு வாணிகம் ஒப்பந்தத்தால் ஏற்பட்ட நிறுவனம். எனவே, இளைஞர் செல்லத்தக்க ஒப்பந்தத்தில் ஈடுபட முடியாது. ஏனெனில், அவரால் கூட்டு வாணிகத்தை ஏற்படுத்த முடியாது. பதிலாண்மைக் கொள்கையின் விஸ்தரிப்பாகக் கூட்டு வாணிகம் திகழ்வதாலும், இளைஞர் பதிலாளாகப் பணியாற்ற முடியாததாலும் கூட்டு வாணிகத்தின் நன்மை கருதி வேண்டுமானால் அவைக் கூட்டாளியாகச் சேர்த்துக்கொள்ளலாம். கூட்டு வாணிகத்தின் புத்தகங்களைப் பார்வையிடும் உரிமை அவருக்கில்லை. ஆனால், கணக்குகளைப் பார்வையிட்டு அதன் பிரதி வேண்டுமானால் எடுத்துக்கொள்ளும் உரிமை அவருக்குண்டு. கூட்டு வாணிகத்தை விட்டு விலகி விட்டால் கணக்கு வழக்குகளுக்கு அவர் வழக்காடலாம். ஆனால், விலகாதவரை அவர் அவ்வாறு செய்ய இயலாது. அவர் தனிப்பட்ட முறையில் எதற்கும் பொறுப்பாளியாகமாட்டார். ஆனால் அவருடைய பங்கானது பொறுப்பிற்குக் கட்டுப்பட்டது. உரிய வயது அடைந்ததும் (Majority) தொடர்ந்து கூட்டாளியாக இருக்கும் உரிமை அவருக்குண்டு. அல்லது விலகிவிடும் உரிமையும் அவருக்குண்டு. 72ஆவது பிரிவின்படி அத்தகைய விருப்பத்தை அறிக்கைமூலம் தெரிவிக்க அவருக்கு உரிமையுண்டு. கூட்டாளியாகத் தொடர்ந்திருக்க அவர் விருப்பப்படாமல் பொது அறிக்கையும் விட்டுவிட்டால், அந்தத் தேதிக்குப் பின்னர் நிகழும் கூட்டு வாணிகச் செயலுக்கு அவர் பங்கு இலக்காகாது. உரிய வயதடைந்த ஆறு மாதங்களுக்குள் அவர் தம் விருப்பத்தைத் தெரிவிக்கவேண்டும். அல்லது கூட்டு வாணிகத்தின் நன்மை கருதி, தாம் சேர்க்கப்பட்டுள்ள பொருண்மையை அறிந்த ஆறு மாதங்களுக்குள் தம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தம் விருப்பத்தைத் தெரிவிக்காவிட்டால் அவரைச் சேர்த்துக்கொண்ட நாளிலிருந்து ஒரு கூட்டாளியாகவே கருதப்பட்டு எல்லாவற்றிற்கும் பொறுப்பாளியாக வேண்டும். இக் கருத்தில் ஆங்கிலச் சட்டம் வேறுபடுகிறது. ஆங்கிலச் சட்டத்தின்படி உரிய வயது வந்தடைந்த நாளிலிருந்து அவர் பொறுப்பாளி ஆக முடியும். ஆனால், இந்தியச் சட்டத்தின்படி முதன்முதலில் அவர் சேர்ந்த நாளிலிருந்தே பொறுப்பாளியாவார். உரிய வயது வந்தடைந்ததும், உரிய முறையில் தாமே கூட்டாளியாக மாறி பொறுப்பாளியாகிறார்.

கூட்டாண்மைப் பத்திரம் (Partnership Deed)

கூட்டு வாணிகத் தொழில் நடத்தும் கூட்டாளிகள் வாய் மொழி ஒப்பந்தம் செய்துகொண்டாலே போதும். ஆனால், பின்னால் எழும் சண்டை சச்சரவுகளைத் தடுக்கும்பொருட்டு எழுத்துமூலம் ஒப்பந்தம் செய்துகொள்வதுதான் நல்லது. அவ்வாறு எழுத்துமூலம் அமைந்த ஒப்பந்தத்தைத்தான் கூட்டாண்மை அல்லது கூட்டு வாணிகப் பத்திரம் என்று கூறுகிறோம். அப் பத்திரம் கீழ்க்காணும் விவரங்களை உள்ளடக்கி இருக்கும் :

1. கூட்டு வாணிகத்தின் பெயர்.

2. கூட்டாளிகளின் பெயர், முகவரி, அவர்கள் கூட்டில் சேர்ந்த தேதி.

3. கூட்டாளிகள் போட்ட மூலதனம்.

4. கூட்டாளிகளின் முதல்மீது வட்டி.

5. இலாப நட்டங்களைப் பகிரும் விகிதம்.

6. கூட்டு வாணிகத்தின் தொழில்.

7. கூட்டு வாணிகத்தின் கால வரையறை.

8. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள், பொறுப்புகள்.

9. கூட்டாளிகளின் எடுப்பு, அதன்மீதான வட்டி.

10. கூட்டாளிகள் சேர்த்தல், ஓய்வுபெறல், இறப்பு, நொடிப்புபற்றிய செய்திகள்.

11. கூட்டு வாணிகம் கலைக்கப்படும்போது வாணிக நன் மதிப்பு அல்லது நற்பெயர் மதிப்பிடும் முறையும், அதைப் பகிரும் முறையும்.

12. தணிக்கைபற்றிய விவரங்கள்.

13. கூட்டு வாணிகம் கணக்குகளைத் தீர்த்துக்கொள்ளும் முறை.

14. இசைவுத் தீர்ப்புமுறை விதி (Arbitration Clause) கூட்டாளிகளுக்குள் ஏற்படும் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளும் முறை.

கூட்டாளி வகைகள் (Kinds of Partners)

உழைக்கும் கூட்டாளி (Active or Working Partner), உழையாக் கூட்டாளி (Dormant or Sleeping Partner), பெயரளவுக் கூட்டாளி (Nominal Partner), முரண்தடைப்படி கூட்டாளி (Partner by Estoppel), அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி (Partner by holding out), இலாபத்தை மட்டும் பங்கேற்கும் கூட்டாளி (Partner in Profits only), பொறுப்பு வரையறுக்கப் பட்ட கூட்டாளி (Limited Partner), உதவிக் கூட்டாளி (Sub-Partner) என்று பலவகைக் கூட்டாளிகள் கூட்டு வாணிகத்தில் காணப்படுகின்றனர்.

உழைக்கும் கூட்டாளி

கூட்டாளிகள் அனைவரும் ஒப்பந்தம் செய்துகொண்டாலும், அவர்களில் ஒருசிலர்தாம் முன்நின்று மேற்பார்வை செய்து கூட்டு வாணிகத் தொழிலை நடத்துவர். நிருவாகத்தில் இவர்கள் முக்கியப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். இவர்கள் செய்யும் அதிகப்படியான வேலைக்கு ஊதியம் பெறுகின்றனர். கூட்டு வாணிக நிறுவனச் செயலுக்காக ஏற்கும் பொறுப்பு மட்டும் எல்லாக் கூட்டாளிகளையும் சார்ந்ததேயாகும்.

உழையாக் கூட்டாளி

முதல் மட்டும் அளித்துவிட்டுத் தொழில் நடத்துவதில் பங்கேற்காதவரை உழையாக்கூட்டாளி என்று குறிப்பிடுவதுண்டு. கூட்டு வாணிக ஒப்பந்தத்தில் இவர் பெயர் இடம்பெறுவதில்லை. மூன்றாம் மனிதர்களுக்கு இவரும் கூட்டாளிதான் என்று தெரிய வந்தால் அவர்களுக்கும் இவர் பொறுப்பாளியாவார்.

பெயரளவுக் கூட்டாளி

முதலும் வழங்காது தொழில் விவகாரத்தில் பங்கு கொள்ளாது தம் பெயரையும், நாணயத்தையும் கூட்டு வாணிகத்தில் பயன்படுத்திக்கொள்ளச் சில கூட்டாளிகள் அனுமதிப்பதுண்டு. அவர்களைப் பெயரளவுக்குக் கூட்டாளி என்று சொல்வதுண்டு. அவர்களுக்கு இலாபத்தில் பங்குபெறும் உரிமை இல்லை. மற்றபடி கூட்டு வாணிக நிறுவனத்தின் செயல்களுக்கு இவர் பொறுப்பாளியாவார். மாற்றுமுறையாவண (Negotiable Instrument) வழக்குச் சம்பந்தப்பட்ட காரியங்களைத் தவிர இதரக் கூட்டு வாணிகக் காரியங்களுக்கு வேண்டிய நபர் இவரில்லை.

அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி

உண்மையில் கூட்டு வாணிகத்தின் கூட்டாளியாக இல்லாத ஒருவர், தாம் ஒரு கூட்டாளியென்று மற்றவர் நம்புமாறு நடந்து கடன் வாங்கினால், அந் நிறுவனத்தின் சார்பாக அவர்தாம் அக் கடனை அடைக்கவேண்டும். இத்தகைய கூட்டாளியை அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி என்று கூறலாம்.

முரண்தடைப்படி கூட்டாளி

தாம் ஒரு கூட்டாளி இல்லை என்றறிந்தும், ஒருவர் தம்மைக் கூட்டாளி என்று மற்றவர் நம்புமாறு நடந்தும், அவர்கள் பேசுவதை மறுக்காமல் அனுமதித்து வருகிறார் என வைத்துக் கொள்வோம். அந் நிலையில் மூன்றாம் பேர்வழி ஒருவர் இவரிடம் கூட்டு வாணிகத்திற்காகக் கடன் வழங்கினால் சட்டப்படி இக் கடனை இக் கூட்டாளிதாம் மூன்றாம் பேர்வழிக்குத் தர வேண்டும். அவ்வாறு அவர் தராத நிலையில் மூன்றாம் மனிதர் இவர்மீது நிறுவனத்திற்காகக் கொடுத்த கடனை வசூல் செய்ய வழக்குத் தொடுக்கலாம். இதற்கு உதாரணமாக ஓய்வு பெற்ற கூட்டாளி தாம் ஓய்வு பெற்ற செய்தியைப் பொது அறிக்கை மூலம் (பிரிவு 72-ன்படி) தெரிவிக்காமலிருக்கும்போது, அவரை மூன்றாம் பேர்வழிகள் தற்போதுள்ள கூட்டாளி என்றே நம்புகின்றனர். அத்தகைய கூட்டாளி எல்லாச் செயல்களுக்கும் பொறுப்பாளியாவார். ஆனால் நிறுவனத்தின் இலாபத்தில் அவருக்குப் பங்கில்லை. அவருக்கு இன்னல் மட்டுமுண்டு. ஆனால் இலாபத்தில் ஒரு காசுகூடக் கிடையாது (He will have all the kicks but none of the half pence) என்று சொல்வதுண்டு.

ஸ்கார்பிற்கும், ஜார்டினிக்கும் (Scarf *vs.* Jardine) நடந்த வழக்கில் அ, ஆ என்பவர்கள் இ அண்டு கம்பெனி என்ற பெயரில் வியாபாரம் செய்தார்கள். ஈ என்பவர் அந் நிறுவனத்தில் சேர்ந்தார். அ என்பவர் ஓய்வு பெற்றார். ஆனால் பொது அறிக்கை விடவில்லை. அதே பெயரில் அந் நிறுவனம் தொடர்ந்து செயலாற்றி வந்தது. ஒரு கடனீந்தோர் அ, ஆ, ஈ என்பவர்களுக்கெதிராக அ என்பவரையும் கூட்டாளியாக நினைத்து வழக்குத் தொடர்ந்தார். அ என்பவர் முரண்தடை அல்லது மறுக்காமை (Estoppel) என்ற அடிப்படையில் பொறுப்பாளியாகிறார் என்று நீதிமன்றம் கருத்து வழங்கிவிட்டு மேலும் சொன்னதாவது : கடனீந்தோர்கள் உண்மைக்கும் முரண்தடைக்கும் வேறுபாடு அறிந்து அவர்கள் வழக்குத் தொடர்வதற்கு அ, ஆ அல்லது ஆ, ஈ ஆகியோர்களைத்தாம் தேர்ந்தெடுக்க

வேண்டும். அ, ஆ, ஈ என்று அனைவரையும் தேர்ந்தெடுக்கக் கூடாது. காரணம் ஈ-யுடன் அ கூட்டாளியாக இருக்கவில்லை.

இலாபம் மட்டும் பெறும் கூட்டாளி

நட்டம் ஏற்கப் பொறுப்பில்லாமல் இலாபத்தை மட்டும் பகிர்ந்துகொள்ளச் சில கூட்டாளிகள் நிபந்தனை விதிப்பதுண்டு. அவர்களை இலாபம் மட்டும் பெறும் கூட்டாளிகள் என்று அழைப்பதுண்டு. மற்றக் கூட்டாளிகளிடையே அவர் மட்டும் வெறும் இலாபத்தைப் பெறுகிறார். ஆனால் எவ்வித ஐயமுமின்றி மூன்றாம் பேர்வழிகளுக்கு அவர் பொறுப்பாளியாகிறார். தொழிலின் நிருவாகத்தில் அவருக்குப் பங்கில்லை.

பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டாளி

இத்தகைய கூட்டாளி இங்கிலாந்து நாட்டில்தான் உண்டு. அந் நாட்டு வரையறுத்த கூட்டாண்மைச் சட்டப்படி ஒரு கூட்டு வாணிகத்தில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொதுக் கூட்டாளிகளும் (General Partners) ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வரையறுத்த கூட்டாளிகளும் (Limited Partners) இருக்கலாம். பொதுக் கூட்டு வாணிகத்தில் காணப்படும் வரையறாப் பொறுப்பு இங்குள்ள பொதுக் கூட்டாளிகளுக்குண்டு. ஆனால் வரையறுத்த கூட்டாளிகளுக்குள்ள பொறுப்பு அவர்கள் வழங்கிய மூலதனத்தின் அளவிற்கு மட்டுமேயாகும். இக் கூட்டாண்மை அவசியம் பதிவு செய்யப்பட வேண்டும். இக் கூட்டாளிக்குத் தொழில் நிருவாகத்தில் பங்குபெறும் உரிமை இல்லை. அவர்கள் போட்ட முதலைக் கூட்டாண்மையுள்ளவரை திருப்பமுடியாது. தனியார் கம்பெனி ஏற்படுத்தி வரையறுத்த பொறுப்புப் பெறும் நிலைமை 1908 ஆம் ஆண்டுமுதல் ஏற்பட்டு விட்டதால் மிகச் சில வரையறுத்த கூட்டு வாணிகங்களே இங்கிலாந்தில் திகழ்கின்றன. நம் நாட்டில் இத்தகைய கூட்டாண்மைகள் இல்லை.

உதவிக் கூட்டாளி

ஒரு நிறுவனத்தின் இலாபததைப் பெறும் ஒரு கூட்டாளி அந்த இலாபத்தை மற்றொருவரோடு பகிர்ந்துகொள்ளலாம். இக் கூட்டாளிக்கும் மற்றொருவருக்கும் இடையே உதவிக் கூட்டாண்மை தோன்றுகிறது. அந்த மற்றொருவரை உதவிக் கூட்டாளி என்று சொல்லலாம். அவர் கூட்டு வாணிகத்தின் கூட்டாளி இல்லை. மற்றக் கூட்டாளிகளுக்குள்ள எவ்வித உரிமையும் அவருக்கில்லை.

விருப்பக் கூட்டாண்மை (Partnership at will)

ஒப்பந்தமில்லாமலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு என்றில்லாமல் கலைப்புப்பற்றி ஒன்றுங்கூறாமலும் ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மைக்குப் பெயர்தான் விருப்பக் கூட்டாண்மை. கூட்டாளிகளின் விருப்பப்படி எந்நேரத்திலும் அதைக் கலைத்து விடலாம்.

குறிப்பிட்ட கூட்டாண்மை (Particular Partnership)

ஒரு தனி வியாபார நிறுவனமாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட வாணிகம் செய்வதற்காகவோ அமைப்பதுதான் இக் கூட்டாண்மை. இதை இணைந்த வாணிக நிறுவனம் (Syndicate) என்றும் கூறலாம்.

இவைகளைப் போலல்லாமல் சட்ட விரோதக் கூட்டாண்மைகளும் (Illegal Partnership) காணப்படுகின்றன. சட்ட விரோதமான தொழிலை நடத்துவதற்கு அவை அமைக்கப்படுகின்றன. பதிவு கட்டாயமாக உள்ள தொழில் இவை பதிவு செய்யாமலேயே தொழில் நடத்தினால் அவைகளையும் சட்டப்படி இந் நிறுவனங்களை யாரும் அங்கீகரிப்பதில்லை. அவற்றின் சட்ட விரோதத் தன்மை அறிந்த எவர்மீதும் இவை வழக்குத் தொடரமுடியாது.

கூட்டாளிகளின் உரிமைகள்

1. **கூட்டு வாணிகச் சொத்தின் கூட்டுரிமை கோரல்** (Right to Joint Ownership of Partnership Property): ஒவ்வொரு கூட்டாளியும் மற்றக் கூட்டாளிகளைப்போலக் கூட்டு வாணிகச் சொத்திற்கு உரிமையுடையவராவார்கள். ஒப்பந்தம் வேறுமாதிரியாக இருந்தாலொழியக் கூட்டாளிகள் அனைவருக்கும் சாதாரணமாகச் சொத்தில் சம உரிமையுண்டு. தொழிலுக்குக் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு சொத்தும் கூட்டு வாணிகத்திற்குச் சொந்தமானது. கூட்டுவாணிகத்தின் பணத்திலிருந்து வியாபாரம் செய்யும்போது வாங்கப்பட்ட ஒவ்வொரு சொத்தும் கூட்டு வாணிகத்தைச் சார்ந்தது. வாணிக நற்பெயர் (Goodwill) சொத்தின் பாற்பட்டதாகும். அது புலனாகாதச் சொத்தாக இருந்தாலும் அதை எல்லோரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். அதற்குப் பண மதிப்புப் போட்டு அனைவரும் பிரித்துக்கொள்ள வேண்டும்.

2. **இலாபத்தைப் பகிரும் உரிமை :** வேறு வகையாக ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தாலன்றிக் கூட்டாளிகளும் இலாப

நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும். எப்படியிருப்பினும் அவர்கள் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ளும் விகிதத்தை நிருணயிக்க வேண்டும். ஒரு பங்கு இலாபத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு ஒரு கூட்டாளி வழக்குத் தொடுக்கலாம். உரிய வயதுவராத இளைஞர் விலகிவிட்டால் கூட்டு வாணிக இலாபப் பங்கிற்காக வழக்குத் தொடுக்க முடியாது.

3. கூட்டாண்மையின் நிருவாகத்தில் பங்கு கொள்ள ஒவ்வொரு கூட்டாளிக்கும் உரிமையுண்டு. நிருவாகத்திலிருந்து மற்றொருவரை விலக்கும் பொருட்டு எந்தக் கூட்டாளியும் உரிமை கொண்டாடக் கூடாது. ஆனால், இளங் கூட்டாளிகளின் நிருவாக உரிமையைத் தடைசெய்யக் கூடும்.

4. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நெருக்கடி நேரத்தில் செயலாற்ற உரிமை உண்டு. கூட்டு வாணிகத்தில் எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்ச்சியின்போது (நெருக்கடியின்போது) மற்றக் கூட்டாளிகளைக் கலந்தாலோசிக்க நேரமில்லாததால் அந் நேரத்திலேயே—அவ் விடத்திலேயே —தீர்மானம் எடுக்கவேண்டி இருப்பதால் உடனே அவர் செயலாற்றலாம். அச் சூழ்நிலையில் அத் தீர்மானம் நியாயமாக இருந்தால் அது மற்றக் கூட்டாளிகளையும் கட்டுப்படுத்தும்.

5. கூட்டு வாணிக நிறுவனத்தின் கணக்கு ஏடுகளையும் பிற ஆவணங்களையும் பார்வையிடவும் பரிசீலனை செய்யவும் ஒவ்வொரு கூட்டாளிக்கும் உரிமையுண்டு. கூட்டாளியால் அதிகாரபூர்வமாக அமர்த்தப்பட்ட அவருடைய பதிலாளுக்கும் இவ் வுரிமை உண்டு. பிரிவு 30(2)-ன்படி மைனருக்குக் கணக்கு ஏடுகளைத் தவிர பிற ஏடுகளைப் பார்க்கும் உரிமை இல்லை.

6. நிறுவனத்தின் அலுவல்கள் குறித்து ஒவ்வொரு கூட்டாளியும் கலந்தாலோசிக்கப்படும் உரிமையைப் பெற்றுள்ளனர். பதிலாண்மைக் கொள்கை இங்குக் கையாளப்படுவதால் ஒரு கூட்டாளி சொல்லும் தகவல், எல்லாக் கூட்டாளிகளும் சொல்லும் தகவல் எனக் கொள்ளப்படும். எனவே, ஒரு தகவலை அனைவருக்கும் தெரிவிப்பது மிகவும் அவசியம். சாதாரண விஷயங்கள்பற்றிக் கருத்துவேற்றுமை ஏற்பட்டால் பெரும்பான்மையோர் கருத்தை ஏற்கவேண்டும். அக் கருத்தை ஏற்போரும் எதிர்ப்போரும் சமமாக இருந்தால், அக் குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்ற முடியாது. கூட்டு வாணிகத்தின் வளர்ச்சி, வியாபாரத் தன்மை ஆகியவைகளைப் பாதிக்கின்ற

முக்கியமான விஷயங்களில் கூட்டாளிகளின் கருத்து ஒன்றாக இருக்க வேண்டும். பெரும்பான்மையோர் கருத்து மட்டும் போதாது.

7. கூட்டாளியொருவர் தம் மூலதனத்திற்குமேல் கூட்டு வாணிகத்திற்குக் கடன் ஏதும் கொடுத்திருப்பாரேயானால் அக் கடன்மீது ஆண்டொன்றுக்கு 6% வட்டி பெற உரிமையுண்டு.

8. கூட்டு வாணிக நிறுவனத்தின் தொழிலைச் சரியான முறையில் நடத்திவருகையில் கூட்டாளி ஒருவருக்கு ஏற்பட்ட நட்டத்தையும் பொறுப்பையும் ஈடுகட்ட நிறுவனத்தைக் கேட்கும் உரிமை அவருக்குண்டு.

9. கூட்டு வாணிக நிறுவனத்திலிருந்து தகுந்த அடிப்படையான காரணமில்லாமல் ஒரு கூட்டாளியை விலக்கிவிட முடியாது.

10. ஒப்பந்தத்திற்கு முரணான நிபந்தனை இருந்தாலொழிய எல்லாக் கூட்டாளிகளின் இசைவுமின்றிப் புதுக் கூட்டாளி ஒருவரை நிறுவனத்தில் சேர்த்துக்கொள்ள முடியாது.

11. அவர் நிறுவனத்தில் சேருவதற்கு முன்னர் நிகழ்ந்த வற்றிற்குக் கூட்டாளி பொறுப்பாகமாட்டார். அவர் அந் நிறுவனத்தில் சேர்ந்த பிறகு நிகழ்ந்த செயல்களுக்குத்தாம் பொறுப்பாளியாவார்.

12. ஒப்பந்தம் அனுமதித்தால் ஒரு கூட்டாளி ஓய்வு பெறலாம். மற்றக் கூட்டாளிகளின் அனுமதியின்பேரில் அவர் ஓய்வு பெறலாம். விருப்பக் கூட்டாண்மையில் மற்றக் கூட்டாளி களுக்கு அறிக்கை விட்டுவிட்டு ஒருவர் எப்பொழுது வேண்டு மானாலும் ஓய்வு பெறலாம். ஓய்வு பெற்ற கூட்டாளி ஓய்வு பெற்ற பிறகு நிறுவனத்தோடு போட்டிபோடக்கூடிய தொழிலை அந் நிறுவனத்தின் பெயரைப் போடாமலும், அதன் வாடிக்கை யாளர்களை அணுகாமலும் நடத்தலாம். ஆனால், சில நேரங் களில் 37ஆவது பிரிவின்படி நிறுவனத்தின் இலாபத்தைப் பகிரும் உரிமை ஓய்வு பெற்றதற்குப் பின்னர்ச் சில கூட்டாளிகளுக்குண்டு.

கூட்டாளிகளின் கடமை

ஒவ்வொரு கூட்டாளியும் ஊதியத்தை எதிர்பார்க்காமல் தொழிலை மிகவும் அக்கறையுடன் கவனிக்க வேண்டும். தொழிலின் நலனுக்காகக் கடின உழைப்பும் நேர்மையும் கலந்த தொண்டுசெய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும். ஒரு பெரும் பொதுநலனுக்காக அவர் உழைக்கவேண்டும். நேர்மையுடையவ

ராகவும் நன்றி உடையவராகவும் திகழவேண்டும். ஒருவருக் கொருவர் நம்பிக்கையுடன் செயலாற்றுவதுதான் கூட்டு வாணிகத்தின் அடிப்படைக் கொள்கையாகும். ஒவ்வொரு கூட்டாளியும் தொழில் தொடர்பான செய்திகளை அல்லது தகவல்களை மற்றக் கூட்டாளிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். ஒரு கூட்டாளிக்கு அனுப்பப்பட்ட அறிக்கை எல்லாக் கூட்டாளி களுக்கும் அனுப்பப்பட்ட அறிக்கையாகும். மிகவும் முக்கியக் கடமையாகக் கருதப்படுவது யாதென்றால், கூட்டாளிகள் கூட்டு வாணிகத்தின் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்திருக்க வேண்டும். வைத்திருப்பதோடல்லாமல், மற்றக் கூட்டாளிகள் கணக்கு ஏடுகளையும் மற்ற ஏடுகளையும் பார்வையிட அனுமதிக்க வேண்டும். இதுதான் முழுமையான கடமை – முதல் தரமான கடமை. ஒவ்வொரு கூட்டாளியும் தனிப்பட்ட இலாபங் களுக்கும் கணக்கு வைத்திருக்க வேண்டும். அவர் நடத்தும் போட்டி வியாபாரத்தின் இலாபத்தையும் காட்டவேண்டும். பென்ட்லேவிற்கும் கிராவென்னுக்கும் (Bentley *vs.* Craven) நடந்த வழக்கில் அ ஆ என்பவர்களிடையே ஒரு கூட்டு வாணிகம் நடத்தப்பட்டது. ஆ என்பவர் அவருக்குச் சொந்தமான சர்க்கரையைக் கூட்டு வாணிகத்திற்கு அங்காடி விலையில் கொடுத்து இலாபம் பெற்றுவந்தார். அத்தகைய இலாபத்திற்கு அவர் கணக்குக் காட்டிப் பதில் சொல்லும் பொறுப்புடையவராகத் திகழ்கிறார். அந்த இலாபத்தைக் கூட்டு வாணிகத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று நீதிமன்றம் கட்டளையிட்டது.

மற்றொரு வழக்கில் ((Feather Stonehaugh *vs.* Fenvick) ஒரு கூட்டாளி மற்றக் கூட்டாளிகளுக்குத் தெரியாமல் தம் நலனுக் காக நிறுவனத்தின் கட்டடச் சுற்றுப்புறத்தின் (Premises) குத்தகையைப் புதுப்பித்துக்கொண்டுவிட்டார். அக் கட்டடச் சுற்றுப்புறம் கூட்டு வாணிகச் சொத்து. எனவே மற்றக் கூட்டாளி களின் இசைவின் பேரில்தான் அவர் புதுப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கருத்து வழங்கியது. கூட்டாளிகள் தனிப்பட்ட தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் மற்றக் கூட்டாளிகளின் ஒப்புதல் இன்றிப் போட்டியிருக்கக்கூடாது. அவ்வாறு நடத்தும் போட்டி வியாபாரத்தின் இலாபத்தைக் கூட்டு வாணிகத்திற்குக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாகிறார்கள். கூட்டு வாணிகத்தின் கலைப்பு நிகழும்போதுகூட இக் கடமை உண்டு. இலாப நட்டங்களைப் பகிரும் விகிதம் குறிப்பிடப் பட்டிருந்தாலன்றி இலாப நட்டங்களைக் கூட்டாளிகள் சமமாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கூட்டாளியும் தமக்களிக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் செயலாற்ற வேண்டும்.

அதற்கு மீறிய செயலால் நட்டம் ஏற்பட்டால் அதை ஈடுகட்டும் பொறுப்பு அவருக்குண்டு. தமக்குப் பதிலாக வேறு ஒருவரைக் கூட்டாளியாக்கித் தம் உரிமைகளை அவருக்கும் மாற்றும் உரிமை எந்தக் கூட்டாளிக்கும் இல்லை. இலாபம் பெறும் உரிமையும் சொத்துரிமையும் வேண்டுமானால் அவர் வேறு ஒருவருக்கு மாற்றித் தரலாம். மாற்றுபவருக்கு உரிய சொத்தை அடைவதற்குப் பெறுபவருக்கு உரிமை உண்டு. அவருடைய பங்கை உறுதிசெய்ய நிறுவனம் கலைத்த தேதியிலிருந்து கணக்குக் கேட்க அவருக்கு உரிமை உண்டு. அலட்சியப் போக்கிற்காகவும் மோசடிக்காகவும் ஒவ்வொரு கூட்டாளியும் ஈடுகட்டும் கடமையைப் பெற்றுள்ளார். ஒரு கூட்டாளியின் மோசடியால் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்பட்டால், அந் நட்டத்தை அவர் சரிக்கட்டுவதோடு இப் பொறுப்பிலிருந்து அவர் விலகிவிட முடியாது. இறுதியாக முன்கூறியபடி கூட்டாளிகள் யாரும் இரகசிய இலாபம் (Secret Profit) சம்பாதிக்கக்கூடாது. அவ்வாறு சம்பாதித்தால் அதை நிறுவனத்திற்குச் சேர்ப்பிக்க வேண்டும்.

கூட்டாளிகளும் மூன்றாம் பேர்வழிகளும் (Partners and Third Parties)

கூட்டு வாணிகத் தொழில் நடத்தும்போது ஏற்படும் செயல் களுக்காக மூன்றாம் பேர்வழிகளுக்குக் கூட்டாளிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் (Joint and Several) பொறுப்பாளியாவார்கள். இங்கிலாந்து நாட்டுச் சட்டத்தில் ஒப்பந்தக் கடமையைப் பொறுத்தமட்டில் கூட்டாளிகள் கூட்டாகப் பொறுப்பாளி யாவார்கள். ஆனால், சமூக உரிமை இயல் குற்றங்களைப் (Torts) பொறுத்தமட்டில் கூட்டாளிகளின் பொறுப்பு கூட்டாகவும் தனித் தனியாகவும் உள்ளது. ஆனால் நம் நாட்டில் கூட்டாளிகளின் பொறுப்பு, கூட்டாகவும் தனித்தனியாகவும் உள்ளது. கூட்டாளி களின் கடப்பாடுகள் நிறுவனத்தைப் பொறுத்ததாக அவசியம் இருக்கவேண்டும். கூட்டாளிகள் கூட்டாளியாகவும் பதிலாள் களாகவும் ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும். அதுவும் கூட்டு வாணிகத்தின் பெயரில் அவ் வொப்பந்தம் இருக்கவேண்டும். ஒவ்வொரு கூட்டாளிக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குள் அச் செயல் இருக்கவேண்டும். பதிலாண்மையின் பொதுக் கோட் பாடுகள் இவண் பொருந்தும். அதிகார வரம்பிற்குள் இல்லாமல் கொஞ்சம் மீறினாலும் கூட்டாளியின் செயல் வெளிப்படையான அல்லது வெளித் தோன்றக்கூடிய அதிகாரத்தோடு காணப்பட்டா லும் அதற்குப் பொறுப்புக் கூட்டாளியாவார். ஒரு வழக்கில் கூட்டாளிகள் அனைவரும் கசாப்புத் தொழில் செய்பவர்கள். அதில் ஒரு கூட்டாளி மனைத்துணைப் பொருள் கடனுக்கு வாங்கி

விட்டுப் பணம் செலுத்தவில்லை. மற்றக் கூட்டாளிகள் பொறுப்பாளிகள் அல்லர் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. காரணம் அக் கூட்டாளி மனைத்துணைப் பொருள் கடனுக்கு வாங்குவதற்குப் போதிய அதிகாரமில்லை. சில நேரங்களில் கூட்டாளிகளால் ஏற்கப்படும் சேர்க்கை நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும். எனவே, நிறுவனத்தின் அலுவல்களை அனுசரித்துச் சாதாரண நாள்களில்தாம் புதிய கூட்டாளியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். கூட்டாளிகளின் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தால் மூன்றாம் பேர்வழிகள் நிறுவனத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகின்றனர். ஆனால் அந்த அதிகார வரையறை அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

தொக்கிய அதிகாரம் (Implied Authority)

நிறுவனம் நடத்தும் தொழிலைச் சிறந்த முறையில் நடத்துவதற்குக் கூட்டாளிகள் வழக்கமாக எடுத்துக்கொள்ளும் செயல்கள் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும். இவ்விதமாக நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டாளியின் அதிகாரத்தைத் தொக்கிய அல்லது உட்கிடையான அதிகாரம் என்று சொல்கிறோம். நிறுவனத்தின் வளர்ச்சிக்காக நிறுவனத்தின் சொத்துகளைப் பராமரிக்கும் முழு அதிகாரம் ஒரு கூட்டாளிக்கு உண்டு. வியாபார நிறுவனங்களில், அவைகளைக் கட்டுப்படுத்தும் உட்கிடையான அதிகாரம் கூட்டாளிக்கு உண்டு. நிறுவனத்தின் பெயரில் கடனுறுதிச் சீட்டு (Promissory Note), காசோலை மாற்றுச்சீட்டு (Bills of Exchange) போன்றவைகளை விடுக்கவும், கையெழுத்திடவும், புறக்குறிப்புச் செய்யவும், ஏற்கவும், மாற்றவும் ஒவ்வொரு கூட்டாளிக்கும் அதிகாரமுண்டு. ஆனால் அவை நிறுவனத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, நிறுவனத்தின்பேரில் இருக்கவேண்டும். ஒப்பந்தத்தில் வேறுவிதமாக இருந்தாலன்றிக் கீழ்க்காண்பவைகளை ஒரு கூட்டாளி தம் தொக்கிய அதிகாரத்தால் நிறைவேற்ற முடியாது :

1. நிறுவனத்திற்காகத் தம் பெயரில் வங்கியில் கணக்கு வைத்தல்.

2. நிறுவனத்தின் தொழில் சம்பந்தப்பட்ட தகராறுகளை இசைவுத் தீர்ப்பு முறைக்கு விடுதல்.

3 நிறுவனத்தின் முழு அல்லது ஒரு பகுதி உரிமையை விட்டுவிடல்.

4. நிறுவனத்திற்காகத் தொடுத்த வழக்கைத் திரும்பப் பெறுதல்.

5. நிறுவனத்திற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுதல்.

6. நிறுவனத்திற்காக அசையாச் சொத்துகளை வாங்குதல்.

7. நிறுவனத்திற்குச் சொந்தமான அசையாச் சொத்துகளை மாற்றுதல்.

8. நிறுவனத்திற்காகக் கூட்டாண்மையில் சேருதல்.

மேற்கூறியவகளை ஒரு கூட்டாளி தொக்கிய அதிகாரத்தால் அவை செல்லாமற் போய்விடும். நிறுவனத்தின் நிருவாகப் பாதையில் ஏற்படும் அலட்சியப் போக்கிற்கும் மோசடிகளுக்கும் மூன்றாம் பேர்வழிகளுக்குக் கூட்டாளிகள் பொறுப்பாளி யாவார்கள். ஹாம்லின் எ. ஹாஸ்டன் அண்டு கம்பெனி (Hamlin vs. Hoston & Company) என்ற வழக்கில் உள்ள இரு கூட்டாளிகளில் ஒரு வாதியின் எழுத்தருக்குக் கையூட்டுக் கொடுத்து இரகசியத் தகவல்களைத் தெரிந்துகொண்டார். காரணம் வாதிதான் அவர்களுக்குப் போட்டி வியாபாரம் செய்பவர். தகுதியான அல்லது நேர்மையான வழியில் அத்தகைய தகவல்களைச் சேகரிக்கக் கூட்டாளிக்கு அதிகாரமுண்டு. எனவே, அக் கூட்டாளியின் செய்கையால் நட்டமேற்பட்டதால் வழக்குத் தொடரப்பட்டது. நிறுவனம்தான் அதற்குப் பொறுப்பென்று நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. இத்தகைய சூழ்நிலையில் கூட்டு வாணிகத்தின் நன்மை கருதி மோசம் செய்யப்பட்டதா என்பது வினா அன்று. ஆனால், இத்தகைய செயல் கூட்டாளியின் அதிகாரத்திற்கு உட்பட்டதா என்பதுதான் வினா. விரோத மனப் பான்மையுடன் வழக்குத் தொடுத்ததற்காக நட்டஈடு கோரி ஒரு கூட்டாளிக்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட்டதால், அதற்கு மற்றக் கூட்டாளிகள் பொறுப்பாளி அல்லர். அனால், அவ் வழக்குத் தொடுத்தலை அவர்கள் தூண்டிவிடாமலிருந்தால்தான் அப் பொறுப்பிலிருந்து தப்பிக்கமுடியும். ஒரு கூட்டாளி நிறுவனப் பணத்தைக் கையாடிவிட்டு இத் தகவலை மற்றக் கூட்டாளி களுக்குத் தெரிவிக்காமலிருந்தால் இக் கையாடலுக்காக நிறுவனம் மூன்றாம் பேர்வழிகளுக்குப் பொறுப்பாக வேண்டும். வாடிக்கை யாளர்களிடமிருந்து வங்கி பணம் பெற்றுக்கொண்டே இருக்கிறது. அதன் ஒரு கூட்டாளி பணத்தைக் கையாடிவிட்டாலோ தவறாகப் பயன்படுத்தினாலோ அந் நிறுவனமே வாடிக்கை யாளர்களுக்குப் பொறுப்பாளியாகும். புதிய ஒப்பந்தம் ஏற்படும் போதும், நிறுவனக் கலைப்பிற்காகப் பொது அறிக்கை விடுத்த போதும் கூட்டாளிகளின் கூட்டு, தனித் தனியான பொறுப்புப்

போய்விடுகிறது. ஆனால், அச் செயல்கள்பற்றிய பெறுப்பு நிறுவனம் கலைக்கப்பட்டபோதும் கூட்டாளிகளுக்கு உண்டு. காரணம் அத்தகைய பொறுப்பு நிறுவனக் கலைப்பிற்கும் தேவைப் படுகிறது. ஆனால் இது நொடித்த கூட்டாளியின் (Insolvent Partner) செயல்களைக் கட்டுப்படுத்தாது.

நிறுவனப் பதிப்பு (Registration of Firms)

கூட்டு நிறுவனங்களைப் பதிவுசெய்து கொள்வதற்குக் கூட்டாண்மைச் சட்டம் வகை செய்கிறது. கூட்டு நிறுவனத்தைப் பதிவு செய்யாவிட்டால் அதன் பலன் மிகவும் கடுமையாகவிருக்கும் என்று சட்டம் சொல்வதால் ஒவ்வொரு நிறுவனமும் பதிவு செய்ய முன்வருகிறது. சட்டத்தின் அத்தியாயம் 7 பிரிவுகள் 56 முதல் 71 வரை பதிவுசெய்யும் முறைகள்பற்றிச் சொல்லப் படுகின்றன. 1932-ஆம் ஆண்டின் கூட்டாண்மைச் சட்டம் அவ் வாண்டு அக்டோபர்த் திங்களில் அமலுக்கு வந்தது. ஆனால் அத்தியாயம்7 பிரிவு69 பின்னால்தான் அதாவது 1933 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதிதான் அமலுக்கு வந்தது. காரணம் சட்டத்தின் விதிகள்—சிறப்பாகப் பதிவுபற்றிய சரத்துகளை நிறுவனங்கள் நன்கு அறிய வாய்ப்புத் தந்தன. மாநில அரசுகள் நிறுவனப் பதிவாளரை ஒவ்வொரு மாநிலத்திலும் அமர்த்தி அவர் களின் விவகார எல்லையையும் நிருணயித்தன. அவ் வெல்லைக்குள் அவரின் அதிகாரம் செல்லுபடியாகும். அப் பதிவாளர் நிறுவனப் பதிவு அட்டவணை ஒன்று வைத்துக் கொள்ள வேண்டும். பதிவு செய்வதற்காக நிறுவனங்கள் அனுப்பும் விண்ணப்பத் தாள்களைப் பெற்றுச் செயலாற்றும் உரிமை அவருக் குண்டு. அவர் பதிவுசெய்ய அனுமதிக்கவும் அல்லது மறுக்கவும் உரிமை பெற்றுள்ளார். குறிப்பிட்ட விண்ணப்பத்தாளில் வேண்டிய விவரங்களை எழுதித் தேவையான பணம் செலுத்தி அவற்றை அனுப்பவேண்டும். அவ் விண்ணப்பத்தாளில் நிறுவனத்தின் பெயர், தொழில் நடக்கும் இடம், கூட்டாளிகளின் முழுப் பெயர், முகவரிகள், நிறுவனத்தின் காலவரை, தலைமை இடம், தொழில் நடக்கும் மற்ற இடங்கள் போன்ற விவரங்களைத் தருதல் வேண்டும். விண்ணப்பத்தாளில் எல்லாக் கூட்டாளிகளும் கையெழுத்திட வேண்டும்; அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பதிலாள்கள் கையெழுத்திட வேண்டும். பதிவு அளித்தவுடனே பதிவாளர் இவ் விவரங்களை நிறுவன அட்டவணையில் குறித்துக்கொள்ள வேண்டும். அட்டவணையில் எழுதிய விவரங்கள் யாவும் நிறுவனம்பற்றிய உண்மைகளைக் கூறும் முடிவான சான்றாகும். இவ் விவரங்களில் ஏதாவது மாறுதல்

ஏற்பட்டாலும் அவைகளைப் பதிவாளருக்கு அறிவித்து அட்ட வணையைத் திருத்த வேண்டும். பதிவாளரே தம்முடைய முயற்சியால் அவைகளைச் சரிசெய்துவிடலாம்; அல்லது கூட்டாளிகள் அவைகளைத் திருத்துவதற்காக விண்ணப்பஞ் செய்யலாம்; அல்லது நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க அவர் அதைத் திருத்திவிடலாம். உரிய கட்டணம் செலுத்துவோருக்கு அட்டவணையைப் பார்வையிடவும் அதன் விவரங்களைக் குறிப் பெடுத்துக்கொள்ளவும் பதிவாளர் அனுமதிக்கிறார். விவரங் களைத் தயாரிப்போனுக்குத் தெரிந்தே பொய்க்கூற்றுகளை விண்ணப்பத்தில் எழுதுவதைக் கூட்டாளிகள் அனுமதிக்கக் கூடாது. பொய்க்கூற்று இருப்பதாக நிரூபிக்கப்பட்டால் அவர் களுக்குத் தக்க தண்டனை வழங்கப்படும். தண்டனையானது மூன்று மாதச் சிறைவாசமாக இருக்கலாம்; அல்லது அபராதமாக இருக்கலாம்; அல்லது இரண்டும் சேர்ந்திருக்கலாம்.

பதிவு எப்பொழுது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். வழக்குத் தொடுக்கும் நாளில்கூடப் பதிவுசெய்து கொள்ளலாம். வழக்குத் தொடுத்துவிட்டாலும் பரவாயில்லை. அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டு, பதிவுசெய்ய வேண்டலாம். புதிய வழக்குப் பின்னால் தொடுக்கலாம். மேற்கூறிய சட்ட நிபந்தனைகளெல்லாம் வற்புறுத்தப்பட்டுச் செயலாற்றினால், யார் கூட்டாளி, யார் கூட்டாளி இல்லை என்ற கடினமான வினாவிற்கு எளிதாக விடை கிடைக்கும்.

பதிவு செய்யாமையின் விளைவு (Effect of Non-registration)

சட்டத்தின் 69ஆவது பிரிவு பதிவு செய்யாததன் விளைவை விளக்குகிறது, ஒரு நிறுவனம் பதிவு செய்யாவிட்டால், நிறுவன அட்டவணையில் கூட்டாளிகளின் பெயர்கள் காணப்படா விட்டால், நிறுவனத்தின்மீது எந்தக் கூட்டாளியும் வழக்குத் தொடுக்க முடியாது. ஒப்பந்தத்தால் எழுந்த எந்த உரிமையும் கோரி மற்றக் கூட்டாளிகள்மீது வழக்குப் போட இயலாது. ஒப்பந்தத்தால் தோன்றிய உரிமையை நிலைநாட்டும்படி மூன்றாம் பேர்வழிகள்மீது வழக்குத் தொடுக்க முடியாது. எதிர் ஈட்டு (Set off) உரிமையை அமலுக்குக் கொண்டுவர முடியாது. ஒப்பந்த உரிமையை நிலைநாட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் (Civil Court) வழக்குப்போட இயலாது. ஆனால் இதனால் மற்ற உரிமைகள் பாதிக்கப்படமாட்டாது. உதாரணமாக நிறுவனக் கலைப்பிற்காக வழக்குத் தொடுக்கும் உரிமையும், கலைக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்குகளைக் கேட்கும் உரிமையும், கலைக்கப்

பட்ட நிறுவனத்தின் சொத்துகளை விற்பதற்கான உரிமையையும் பதிவு பெறாததால் ஏற்படும் விளைவு பாதிக்காது. அதே போல் நொடிக்கப்பட்டவரின் சொத்தை விற்கும் உரிமையைப் பெற்ற அதிகாரியின் (Official Assignee) அதிகாரத்தையும் இது கட்டுப்படுத்தாது. இச் சட்ட உடன்பாடுகள் அயல்நாட்டு நிறுவனத்தையும் அதன் கூட்டாளிகளையும் பாதிக்காது. காரணம் அந் நிறுவனங்கள் தொழில் நடக்கும் இடங்கள் இந்தியாவில் இல்லை. இந்தியாவில் அவ் விடங்கள் இருந்தாலும் சட்டத்தின் இவ் வத்தியாயம் அங்கு அமலில் இருக்காது. நூறு ரூபாவுக்குக் குறைந்த எந்த எதிர் ஈட்டிற்கும் இச் சட்டம் பயன்படாது.

கூட்டு வாணிக நிறுவனக் கலைப்பு (Dissolution of Partnership Firm)

கூட்டு வாணிகத் தொழில் முடிவதையே கலைப்பு என் கிறோம். நிறுவனத்தின் அலுவல்கள் ஒரு முடிவிற்கு வந்து விட்டால் கூட்டாளிகள் தொழிலை நடத்த விருப்பப்படாமல் நிறுவனம் கலைக்கப்படுகிறது. எனவே நிறுவனக் கலைப்பு என்பது நிறுவனத்தின் ஆயுட் கால முடிவைக் குறிக்கின்றது. கூட்டாண்மை முறிந்து போய்விடும் நிலைதான் கலைப்பு எனப்படும்.

நிறுவனக் கலைப்பிற்கும் (Dissolution of Firm), கூட்டு வாணிகக் கலைப்பிற்கும் (Dissolution of Partnership) வேறுபாடு உண்டு. கூட்டாளிகளிடையே உள்ள கூட்டாண்மையின் முடிவு தான் நிறுவனக் கலைப்பாகும். நிறுவனமே கலைந்துவிட்ட பின்னர்க் கூட்டாண்மை அங்கே இருக்கமுடியாது. ஆனால் ஒன்று அல்லது இரண்டு கூட்டாளிகளிடையேயுள்ள கூட்டாண்மை முறிந்துவிட்டால் அது நிறுவனக் கலைப்பாகாது. நிறுவனம் அதே பெயருடன் தொடர்ந்து பணியாற்றும்; கூட்டாளிகளின் மறு சேர்க்கை ஏற்படும். இத்தகைய சூழ்நிலையில் திரும்ப அமைக்கப் பட்ட கூட்டு வாணிகம் தோன்றுகிறது. X Y என்ற நிறுவனத்தில் அ, ஆ, இ ஆகியோர் கூட்டாளிகளாக இருக்கின்றனர். இ என்பவர் ஓய்வுபெற்றுவிட்டார். அ, ஆ என்ற இருவரும் X Y என்ற நிறுவனத்தின் தொழிலைத் தொடர்ந்து நடத்த விழை கின்றனர். முன்பு மூன்று கூட்டாளிகளைக் கொண்டிருந்த நிறுவனத்தில் இப்பொழுது இரண்டு கூட்டாளிகள் இருக்கின்றனர். எனவே நிறுவனம் திருத்தி அமைக்கப்படுகிறது. பின்வரும் நிலைகளில் நிறுவனக் கலைப்பு ஏற்படுகிறது:

1. எல்லாக் கூட்டாளிகளும் இசைந்தால் கூட்டு நிறுவனம் கலைக்கப்படும்.

2. ஒரு கூட்டாளியைத் தவிர ஏனைய கூட்டாளிகள் நொடித்தவர் என்று தீர்மானிக்கப்பட்டால் கூட்டுக் கலைந்து போகும்.

3. நிறுவனம் நடத்தும் தொழில் சட்ட விரோதமானதாகி விட்டால் அது கலைக்கப்படும்.

4. கலைப்பு அறிக்கை கட்டாயமாக விட்டபோதும் கலைக்கப்படும்.

கூட்டு வாணிகக் கலைப்பு கீழ்க்காணும் விதத்தில் தோன்று கிறது:

1. குறிப்பிட்ட காலத்திற்கு என்று அறுதியிட்டு ஆரம்பிக்கப் பட்ட கூட்டு நிறுவனம் அக்காலம் முடிந்ததும் கலைந்துவிடும்.

2. குறிப்பிட்ட ஒரு வாணிக முயற்சிக்காக ஏற்படுத்தப்பட்ட வணிகம் அம் முயற்சி முடிந்தவுடன் கலைந்துபோகும்.

3. கூட்டாளி ஒருவர் இறந்துவிட்டால் கூட்டு வாணிகம் கலைந்துவிடும்.

4. ஒரு கூட்டாளி நொடித்துவிட்டாலும் அது கலைந்து விடும்.

5. ஒரு கூட்டாளி ஓய்வுபெற்றாலும் அது கலைந்துவிடும்.

இந் நிலைகளில் ஒப்பந்தம் வேறுவிதமாகக்கூட இருக்கலாம். மற்றக் கூட்டாளிகள் தங்கள் வெளிப்படையான அல்லது உட் கிடையான அதிகாரங்களைப் பயன்படுத்தி நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தி ஒப்பந்தத்திற்கு உயிரூட்டலாம்.

நீதிமன்றத்தின்மூலம் கலைப்பு (Dissolution through Court)

ஒரு குறிப்பிட்ட கூட்டு வாணிக நிறுவனம் மேற்கூறிய எந்தக் காரணங்களுக்காகவும் கலைக்கப்படாவிட்டால் நீதிமன்றத்தின் உதவி நாடப்படுகிறது. கீழ்க்காணும் சூழ்நிலைகளில் நீதிமன்றம் கலைப்பிற்காகக் கட்டளையிடும்:

1. கூட்டாளி யொருவர் மனச்சமநிலை இழந்துவிட்டால் கலைப்பு ஏற்படும். கூட்டாளியின் பித்த நிலை காரணத்தாலேயே நிறுவனக் கலைப்பு ஏற்படுகிறதென்று சொல்வதற்கில்லை. மற்றக் கூட்டாளி அல்லது கூட்டாளிகள் இவ் வடிப்படையில்

கலைப்பிற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் கொடுப்பது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது.

2. கூட்டாளி ஒருவர் கூட்டாளி என்ற முறையில் செயலாற்றும் தகுதியை நிரந்தரமாக இழந்துவிட்டாலும் கலைப்பு ஏற்படும்.

3. கூட்டாளியொருவர் தீய நடத்தை என்னும் குற்றத்திற்கு ஆளாகிவிட்டாலும் கலைப்பு ஏற்படும். அத் தீய நடத்தையால் நிறுவனத்தின் தொழில் பாரபட்சமாகப் பாதிக்கப்பட்டால்தான் கலைப்பு ஏற்படும். கார்மிக்கேலுக்கும் ஈவான்சிற்கும் (Carmichael *vs.* Evans) நடந்த வழக்கில் பயணச்சீட்டு இல்லாமல் ஒரு கூட்டாளி பயணம் செய்ததே நிறுவனக் கலைப்பிற்கான தீய நடத்தைக்குப் போதுமான ஆதாரம் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

4. கூட்டாளியொருவர் கூட்டு வாணிக ஒப்பந்தத்தை வேண்டுமென்றே அடிக்கடி மீறினாலும் அவமதித்தாலும் தொழில் நடத்துவதற்கு முடியாமல் போய்விடுகிறது. நிறுவனத்தொழிலில் ஏற்படும் இத் தடையால் நிறுவனக் கலைப்பு ஏற்படுகிறது.

5. கூட்டாளியொருவர் தமது பங்கை மூன்றாம் பேர்வழிக்கு மற்றக் கூட்டாளிகளின் ஒப்புதல் இன்றி மாற்றிவிட்டாலும் கலைப்பு ஏற்படும்.

6. நிறுவனத்தின் தொழிலை நட்டத்தில்தான் நடத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டாலும் நிறுவனம் கலைக்கப்படும்.

7. இறுதியாக நிறுவனக் கலைப்பு ஏற்படுவது நியாயமானதாகவும் நேரிடையானதாகவும் நீதிமன்றத்திற்குத் தோன்றினால் கலைப்பிற்கு அது கட்டளை பிறப்பிக்கும். நியாயமான, நேர்மையான என்னும் சொற்கள் பொருள்பொதிந்து கருத்தாழமிகுந்து காணப்படுவதால், மிகவும் எச்சரிக்கையுடன் கலைப்பைப் புகுத்த வேண்டும். இதைக் கடைசி நிபந்தனையாக வைத்துக்கொள்ள வேண்டும். விருப்பப்படியான கூட்டாண்மையாக இருந்தால் யாராவதொரு கூட்டாளி நிறுவனக் கலைப்பு எண்ணத்தைப் பிற கூட்டாளிகளுக்கு அறிக்கைமூலம் தெரிவித்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

கலைத்தலின் பின்விளைவு(Consequence of Dissolution)

கலைத்தலுக்குப்பின் கூட்டு வாணிகத் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாது. ஆனால் கலைப்பிற்கு வேண்டிய காலவரை முடியும்வரை அவசியம் ஏற்பட்டால் தொழில் நடத்தலாம். நிறுவனச் சொத்துகளைத் திரட்டிக் கடன்களைக் கொடுத்து விட்டு, ஏதாவது உபரித்தொகை இருந்தால் அதைக் கூட்டாளிகளிடையே பிரித்துக் கொடுப்பது அவசியம். நிறுவனக் கலைப்புப் பற்றிப் பொது அறிக்கை கொடுத்தாலொழியப் பொறுப்புகள் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கும். நிறுவனச் சொத்து நிறுவனக் கடனை அடைப்பதற்குப் பயன்படுத்துவதைக் கூட்டாளிகள் வற்புறுத்தலாம். புதிய ஒப்பந்தங்கள் ஏற்படுத்தக் கூடாது. புதிய வியாபாரமும் தொடங்கக்கூடாது. எஞ்சிய கூட்டாளிகள் கலைப்பதற்கு அவசியமான காலக்கெடுவரை வியாபாரத்தை நடத்தும் உரிமையைப் பெற்றுள்ளார்கள். இறந்த கூட்டாளியின் சொத்து அவர் இறந்ததற்குப்பின் நிறுவனக் காரியங்களுக்குப் பொறுப்பாகாது. இறுதியில் நிறுவனத்தின் எல்லாச் சொத்துகளும் திரட்டப்பட்டு விற்கப்படுகின்றன.

கூட்டு வாணிக நிறுவனத்தின் சொத்து, என்பது அஃது ஆரம்பிக்கப்பட்டபோது அல்லது தோன்றியபொழுது உள்ள எல்லாச் சொத்துகளையும், நாளடைவில் வியாபாரம் நடந்து கொண்டே இருக்கும்போது வாங்கப்பட்ட சொத்துகளையும் குறிக்கும். நிறுவனத் தொழிலுக்காக மேற்கூறிய எல்லாச் சொத்துகளும் கூட்டாளிகளால் கையாளப்படுகின்றன. வாணிக நற்பெயர் என்பது நிறுவனத்தின் தொழில் பொதுமக்களிடையே பெறும் பாராட்டுரைதான். அது கண்ணுக்குப் புலனாகாத சொத்து எனவே, அதற்குப் பணமதிப்புத் தேவைப்படுகிறது. நிறுவனக் கலைப்பு ஏற்பட்டுக் கணக்குகள் தீர்க்கும்பொழுது, நற்பெயரையும் மற்றச் சொத்துகளோடு சேர்த்துக் கூட்டாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கும் தன்மை பெற்றுள்ளது. அதையும் விற்கலாம். அது விற்கப்படும்பொழுது, அதை வாங்குவோருக்கு முழு உரிமையும் ஏற்பட்டு அவர் நிறுவனப் பெயரைப் பயன்படுத்திப் பழைய வியாபாரத்தை நடத்திச் செல்லலாம். ஆனால் விற்றவர் போட்டி வியாபாரம் நடத்த இது தடங்கல் இல்லை. ஆனால் சட்டத்தின் பிரிவு 55 (2) வாங்குவோருக்குச் சில பாதுகாப்பு அளிக்கிறது. அதாவது, வாங்குவோர் நற்பெயரை வாங்கும்போது சில தடைகள் விதிக்கலாம். அதன்படி விற்போர் நிறுவனப் பெயரைப் பயன்படுத்த முடியாது. பழைய நிறுவனத்

தின் வாடிக்கையாளர்களையும் தொடர்ந்து ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்ளலாம். பழைய நிறுவனத் தொழிலைத் தாமே நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளலாம். இதன் விளைவாக வரங்குவோர் விற்போரிடம் அதேவிதமான வியாபாரத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குப் போட்டியாக நடத்தக்கூடாது என்று ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். அவ் வொப்பந்தம் நியாய மானதாக இருந்தால் அஃது ஒரு வாணிகத்தடையீடாகத் (Restraint of Trade) திகழாது.

கூட்டு வாணிக நிறுவன அலுவல்கள் ஒரு முடிவிற்கு வரும் வரை நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டாளிகளின் செயல் களும் தொடர்ந்துகொண்டிருக்கும். அதன் பின்னர் அவர்கள் அதிகாரம் மறைந்துவிடும். கணக்குகள் தீர்க்கும்பொழுது ஏதாவது நட்டம் ஏற்பட்டால் முதலில் அந் நட்டத்தை இலாபத் திற்கெதிராகவும், பின்னர் மூலதனத்திற்கெதிராகவும் எழுதிக் கழித்திட வேண்டும். இவ்வாறு செய்தும் நட்டமேற்பட்டால் அதைக் கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டம் பகிரும் விகிதத்தில் பிரித்துக்கொள்ள வேண்டும். நிறுவனத்தின் சொத்துகள் மூன்றாம் பேர்வழிகளுக்குத் தரவேண்டிய கடன்களுக்கும், கூட்டாளிகள் நல்கிய கடன்களுக்கும் போய்ச்சேரும். பின்னர்க் கூட்டாளிகளின் மூலதனங்களைத் திருப்பிக் கொடுக்கவும் அவை பயன்படும். உபரித்தொகை ஏதாவது இருந்தால் அதை இலாப மாகக் கூட்டாளிகள் தமக்குள் பிரித்துக்கொள்வார்கள். நொடித்த அல்லது வகையற்ற கூட்டாளி இருப்பாரேயானால் வகையுள்ள கூட்டாளிகளுக்குக் கூடுதலான சுமை தோன்றும். அவர்களின் முழு மூலதன இருப்பும் திரும்பக் கிடைக்காமல் ஒரு பகுதியை இழக்க நேரிடும். கூட்டு வாணிகக் கடனும் தனிக் கடனும் கலந்த கூட்டுக் கடன்கள் இருந்தால் நிறுவனச் சொத்தைப் பங்கீடு செய்துகொள்வதற்குக் கடனீந்தோர்களிடையே போட்டி ஏற்படும். எனவே, இக் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காகச் சட்டம் சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அதன்படி நிறுவனக் கடனை அடைப்பதற்கு நிறுவனச் சொத்துகள் பயன்படும். கூட்டாளிகளின் தனிப்பட்ட கடனைப் பைசல் செய்வதற்கு அவர்களின் தனிச் சொத்துகள் பயன்படும். இவ்விரு சொத்து களிலும் உபரித்தொகை ஏற்பட்டால் அதை மற்றக் கூட்டாளியின் பற்றாக்குறைக்கு மாற்றிக் கணக்குகள் சரிக்கட்டப்படும். அதாவது நிறுவனச் சொத்தின் உபரி, தனிக் கடனைத் தீர்க்கப் பயன்படும். அதேபோல் கூட்டாளிகளின் தனிச் சொத்தின் உபரி, நிறுவனக் கடனைத் தீர்க்கப் பயன்படும்.

பொது அறிக்கை (Public Notice)

சட்டத்தின் 72ஆவது பிரிவு பொது அறிக்கை விடும் வழி முறைகளை விளக்குகிறது. இரண்டு விதமாகப் பொது அறிக்கை விடலாம். ஒன்று உள்ளூர் அரசாங்க அறிக்கையிலாவது அல்லது அம் மாவட்டத்தில் தாய்மொழியில் வெளியாகும் செய்தித்தாள் களிலாவது அறிக்கையைப் பிரசுரிக்க வேண்டும். அடுத்தது அறிக்கையின் ஒரு படியை நிறுவனப் பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். முதற்கண் கூறிய முறை சாதாரண விஷயங் களுக்குப் பயன்படுத்தலாம். இரண்டாவதாகக் கூறிய முறையை மிகவும் முக்கியமான விஷயங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, பதிவான நிறுவனத்திலிருந்து ஒரு கூட்டாளி ஓய்வு பெறுதல் அல்லது விலக்கப்படுதல், நிறுவனக் கலைப்பு, உரிமை வயதுவந்ததும் ஒரு மைனர் கூட்டாளி ஆவதற்கு அல்லது ஆகாததற்கு அறிவிக்கும் இசைவு போன்ற விஷயங்களை உடனே நிறுவனப் பதிவாளருக்குத் தெரிவிக்க வேண்டும். பிரிவு 72-ன் படி இத்தகைய பொது அறிக்கை விடாவிட்டால் சம்பந்தப்பட்ட கூட்டாளிகள் அவர்கள் ஓய்வுபெற்றாலும் சரி அல்லது விலக்கப் பட்டாலும் சரி, பொறுப்பிலிருந்து விடுதலையடைய முடியாது. உரிய வயதுவந்தடைந்த ஒரு மைனர் பதிவான நிறுவனத்தில் கூட்டாளியாக விரும்பவில்லை என்ற தம் கருத்தைப் பொது அறிக்கைமூலம் தெரிவிக்கத் தவறிவிட்டால் அவர் நிறுவனத்தின் நன்மை கருதிச் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து உண்டான நிறுவனச் செயல்களுக்காக மூன்றாம் பேர்வழிகளுக்குப் பொறுப்பாளி யாவார். அவர் தனிப்பட்ட முறையிலும் பொறுப்பாளியாவார்.

16. மாற்றுமுறையாவணச் சட்டம்

(Negotiable Instruments Act)

சில மாற்றுமுறையாவணங்களைப் பொறுத்த மட்டில் காணப் படும் வாணிக வழக்கிலுள்ள சட்ட நிபந்தனைகளின் தொகுப்பு தான் மாற்றுமுறையாவணச் சட்டம். பொதுவாக இது வாணிக உலகத்தில் சட்டமாகக் கருதப்படுகிறது. மேலும், முறையாவணங் கள் என்பவை முறைப்படி அமையவேண்டிய ஆவணங்களைக் குறிக்கின்றன. சட்டம் வகுத்தபடி அல்லது வியாபார வழக்கிலுள்ள வாறு இவ் வாவணங்கள் அமைந்தால்தான் பயனுடையன வாகத் திகழும். முறையாவணங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அதாவது மாற்றுமுறையாவணங்கள் (Negotiable Instrument), மாற்றுத்தன்மையற்ற (Not Negotiable) முறையாவ ணங்கள் என்பவைகளாகும். மாற்றுச் சீட்டு (Bills of Exchange), காசோலை (Cheque), கடனுறுதிச் சீட்டு (Promissory Note) ஆகிய மூன்றும் சட்டப்படி மாற்றுமுறையாவணங்களாக விளங்குகின்றன. அஞ்சலாணை (Postal Order), வாணிக உறுதிக் கடிதம் (Letter of Credit), I. O. U. எனப்படும் சீட்டு முதலியன மாற்றுத் தன்மையற்ற முறையாவணங்கள். இவைகளைத் தவிர வாணிக அல்லது வியசபார வழக்கில் ரயில்வே ரசீது, கப்பல் ரசீது (Bill of Lading), துறைமுகச் சீட்டு (Dock Warrant), பங்குச் சீட்டு (Share Warrant), இலாப ஈவுச்சீட்டு (Dividend Warrant), கருவூலப் பத்திரங்கள் (Treasury Bonds), அரசின் கடனுறுதிச்சீட்டு (Government Promissory Note) முதலியன மாற்றுமுறையாவணங்களாகக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய ஆவணங்கள் பணத்திற்கு ஒப்பாகக் கொள்ளப்படுகின்றன. வாணிக வழக்கின் காரணமாக இவை ஒரு தனிப்பட்ட வகைச் சொத்துகளாகக் கருதப் படுகின்றன. இத்தகைய வாணிக வழக்கத்திற்குச் சட்ட ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இவற்றை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதாகவும் இயல்பாகவும் மாற்றிவிடலாம். அவ்வாறு மாற்றும் பொழுது சேர்ப்பித்தாலும் (Delivery) போதும் அல்லது மேலெழுதிச் (Endorsement) சேர்ப்பித்தாலும் போதும்.

மாற்றுமுறையாவணம் என்பது வேறு நபருக்குச் சேர்ப்பது மூலமாகவோ அல்லது மேலெழுதிட்டுச் சேர்ப்பதன் மூலமாகவோ அவருக்கு உரிமையை மாற்றிக்கொடுக்கும் ஒரு பத்திரமாகும். இவ் வாவணத்தை நல்லெண்ணத்துடன் பெறுபவர் அதன்மீது முழு உரிமை பெறுகிறார்.

சிறப்பியல்புகள் (Features)

ஒரு மாற்றுமுறையாவணம் ஒரு சொத்தாகக் கருதப்படுகிறது. அதை முழு உரிமையுடன் ஒருவர் வைத்திருக்கலாம். அது பண மதிப்பைக் குறிக்கும். ரொக்கத்தைப்போல் ஒருவரிடமிருந்து மற் றொருவருக்கு இதை எளிதாக மாற்றலாம். இதைச் சட்டபூர்வமாக அடைந்தவர் அவர் சொந்தப் பெயரில் இதைப் பயன்படுத்தலாம். நபர்களிடையே இஃது ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தும். அதாவது, பணம் செலுத்துவதற்குக் கட்டளையிட அல்லது வாக்குறுதி தர ஒப்பந்தம் ஏற்படும். ஒப்பந்தச் சட்டத்தின் பொதுக் கோட்பாடுகளாவன தகுதி, பொறுப்பு, உரிமை, தீர்த்தல் போன்ற எவ்வளவோ விஷயங்கள் இங்கு அமலாக்கப்படுகின்றன. மேலும், இது வழக்குரிமைப் பொருளாகவும் (Chose-in-action), கையுரிமைப் பொருளாகவும் (Chose-in-possession) கருதப்படுகிறது. ஒவ்வொரு முறையாவணமும் வழக்குரிமைப் பொருளான ஒரு கடனைக் குறிக்கிறது. அதாவது, ஒரு பொருள் மீது நீதிமன்றத்தில் வழக்காடும் நிலையில் உள்ளது. கையுரிமைப் பொருளானது அது மற்றவருக்குச் சேர்ப்பிக்கலாம். ஒரு முறை யாவணம் மாற்றப்படும்போது அஃது எந்த இடத்திற்கு மாற்றப் படுகிறதோ அவ் விடத்தின் சட்டத்தைப் பின்பற்றவேண்டும். காரணம் முறையாவணம் ஓர் அசையும் சொத்தாகக் கருதப் படுகிறது. ஆவணத்தைச் சேர்த்து, அல்லது மேலெழுதிச் சேர்த்து மாற்றும்போது உரிமைமாற்றம் பெறுவர். நல்லெண்ணத் துடன் திகழ்ந்தால் பொருளின் உரிமை முழுதும் அவருக்குப் போய்ச் சேரும். உரிமைமாற்றம் செய்பவரின் செயலால் ஏற்படும் குறைபாடுகள் அவரைப் பாதிக்காது. மேற்கூறிய எல்லாச் சிறப்பியல்புகளும் அல்லது முக்கிய இயல்புகளும் கீழ்க்காணும் இலக்கணத்தில் சொல்லப்படுகின்றன. ட்நோமஸ் (Tnomas) என்பவர் தம்முடைய 'வங்கியல் கோட்பாடுகள்' என்னும் நூலில் கீழ்க்காணுமாறு விளக்குகிறார்: 'மாற்றுமுறையாவணம் என்பது சட்டபூர்வமாக ஒத்துக்கொள்ளும் வியாபார வழக்கத்தாலும் அல்லது சட்டத்தாலும் சேர்ப்பித்தும் அல்லது மேலெழுதிச் சேர்ப்பித்தும் மாற்றக்கூடிய ஓர் ஆவணம். அதைப் பெற்றுள்ளவர் தம் பெயரில் வழக்காடு உரிமையையும், உரிமை

மாற்றம் செய்பவரின் குறைபாடுகளைப் பொருட்படுத்தாமல் உரிமைமாற்றம் பெறுபவருக்கு முழு உரிமை அளிப்பதுவும் அதனுடைய சீரிய இயல்புகள்'. வில்லியஸ் என்பவர், 'எந்த ஓர் ஆவணம் அதை நல்லெண்ணத்துடன் பெறுகிறவருக்கு அதிலுள்ள சொத்துரிமையை, அதைக் கொடுப்பவரின் குறைபாடுளையும் பொருட்படுத்தாமல் தருகிறதோ அதுதான் மாற்றுமுறை யாவணம்' என்று விளக்குகிறார். 'மாற்றுமுறை யாவணம் என்பது உத்தரவு பெறுபவருக்கோ அதைப் பெற்றிருப்பவருக்கோ கொடுக்கக்கூடிய வாக்குறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலையாகும்' என்று மாற்றுமுறை யாவணச் சட்டத்தின் 13ஆவது பிரிவு விளக்குகிறது.

இத்தகைய மாற்றுச் சீட்டு, காசோலை, வாக்குறுதிச் சீட்டு போன்றவைகளை விடுத்து வேறு எந்த முறையாவணமும், மாற்று முறை யாவணமாக அல்லது அதன் தகுதிபெற்றுத் திகழலாம். ஆனால், அத் தகுதியுடைய அம் முறையாவணம் பார்த்த மாத்திரத்தில் எவ்விதச் சடங்கும் இல்லாமல் வேறு ஒருவருக்குச் சேர்த்தல்மூலம் மாற்றக்கூடியதாக இருக்கவேண்டும். அத் தகைய ஒப்புதலைச் சட்டமும், வழக்கும், முரண்தடையும் அளிக்கவேண்டும். அம் முறையாவணத்தைக் கொடுக்கும் நபர் நல்லெண்ணத்துடன் உரிமைமாற்றம் பெறுபவருக்கு அது தரப்படும்போது, அதனுடைய மாற்றுத் தன்மையைச் சர்ச்சை செய்யாமல் முரண்தடையுடையவராக இருக்கவேண்டும்.

நன்மைகள்

இம் மாற்றுமுறையாவணத்தின் நன்மைகள் பல. பணம் செலுத்துவதற்கு இஃது ஒரு சிறந்த சாதனமாக உள்ளது. வியாபாரிகள் இதைச் செலாவணியாகவே கருதுகின்றார்கள். நடவடிக்கைகளைக் கடன்பேரில் மேற்கொள்ள இது மிகவும் பயன்படுகிறது.

மாற்றுமுறை யாவணத்திற்கும் மாற்றுத் தன்மையிலா ஆவணத்திற்கும் சில வேறுபாடுகள் உள்ளன. கொணர்பவருக்கு (Bearer) செலுத்தப்படவேண்டிய மாற்றுமுறையாவணத்தைப் பிறரிடம் கொடுத்த மாத்திரத்திலேயே அவருக்கு உரிமை மாறி உரிமையாளராகிறார். கட்டளைப்படி செலுத்தவேண்டிய (Payable to order) மாற்று முறையாவணத்தை மேலெழுதி உரியவரிடம் தந்தால்தான் உரிமை மாறும். ஆனால், மாற்றுத் தன்மையிலா முறையாவணத்தைச் சட்டச் சடங்குகள் செய்துதான் உரிமை மாற்றம் செய்ய முடியும்.

அடுத்து, மாற்றுமுறை யாவணத்தின்மீது பணம் தரவேண்டியவர்மீது முன்னறிவிப்பு ஏதுமின்றி உடையவர் வழக்குத் தொடரலாம். ஆனால், மாற்றுத்தன்மையிலா முறையாவணத்தில் முன்னறிவிப்புத் தரவேண்டும்.

இறுதியாக, மாற்றுமுறை யாவணத்தின் உரிமை மாற்றிக் கொடுப்பவர், குறைபாடுள்ள உரிமையே அதன்மீது பெற்றிருந்தாலும், மாற்றிப் பெறுபவர், முறைப்படி உடையவர் (Holder in due-course) என்ற நிலையுள்ளவராக இருந்தால் அவருக்கு முழு உரிமை உண்டு. ஆனால், மாற்றுத் தன்மையிலா முறை யாவணத்தில் மாற்றிப் பெறுபவர், அவர் யாரிடமிருந்து மாற்றிப் பெற்றாரோ அவருக்குள்ள உரிமைகளை மட்டுமே பெறுகிறார்.

மாற்றுச் சீட்டு (Bills of Exchange)

ஒரு வாணிகர் மற்றொரு வாணிகருக்குச் சரக்குக் கடனுக்கு விற்பதுண்டு. அக் கடனை இரண்டு அல்லது மூன்று மாதங்களில் திருப்பித்தர வேண்டுமென்று உடன்பாடு இருக்கும். எனவே இந் நிலையில் விற்பவர் வாங்கியோர்மீது ஒரு மாற்றுச் சீட்டை எழுதுவார். அந் நாளிலிருந்து குறிப்பிடப்பட்ட காலக்கெடு முடிந்ததும், அத் தொகையை எழுதியவருக்கோ அவர்தம் கட்டளை பெற்றவருக்கோ கொடுக்கவேண்டும். சரக்கு வாங்கியவர் அம் மாற்றுச் சீட்டை ஏற்றுக்கொண்டதாக அதன் முகப்பில் எழுதி, அதன்மீது கையொப்பமிடுவார். இச் சூழ்நிலையில்தான் மாற்றுச் சீட்டு எழுதப்பட்டு ஏற்கப்படுகிறது.

இலக்கணம்

கொணர்பவருக்கோ அதில் குறிப்பிடப்பட்டுள்ளவருக்கோ அவர்தம் ஆணையைப் பெற்றவருக்கோ குறிப்பிட்ட தொகையைச் செலுத்துமாறு எழுதப்பட்டு எழுதுபவரால் கையொப்பமிட்ட, நிபந்தனையற்ற உத்தரவைக்கொண்ட முறையாவணம் தான் மாற்றுச் சீட்டு என்பது.

மாற்றுச் சீட்டு எழுத்தால் எழுதப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட நபர் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தச் சொல்லி உள்ள ஒரு நிபந்தனையற்ற உத்தரவு இருக்க வேண்டும். ஒரு மாற்றுச் சீட்டுக் கீழ்க்காணும் சிறப்பியல்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று சொல்வதுண்டு. அவையாவன : எழுதுபவர் (Drawer) பெயர், பெயரவர் (Drawee) பெயர், பெறுவோரின் (Payee) பெயர், பணம் செலுத்துவதற்கு ஆணை, செலுத்த

வேண்டிய தொகை, மாற்றுச் சீட்டுக் குறிப்பாகவும், தெளிவாகவும், பொருள் மயக்கமின்றியும் இருக்கவேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள காலவரை முடிந்தபின்னர்ப் பணம் செலுத்தப்பட்டாலும் அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சி ஏற்பட்ட பின்னரும் மாற்றுச் சீட்டிலுள்ள உத்தரவு நிபந்தனையற்றதாகத்தான் இருக்கும். அந் நிகழ்ச்சி ஏற்படும் காலம் வேண்டுமானால் உறுதியாகச் சொல்லமுடியாமலிருக்கலாம். ஆனால், அது நிகழ்வது உறுதியாக இருக்கவேண்டும். மேலும், அப் பணம் எதிர்கால வட்டியுடன் திகழவேண்டும். வட்டி வீதமும் குறிப்பிடப்பட வேண்டும். இதுவும் ஆவணத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்க முடியாது. நிச்சயமாக விளங்கும் தன்மையையும் குறைக்காது. இந்நிபந்தனை கடனுறுதிச் சீட்டுக்கும் பொருந்தும்.

மாதிரி மாற்றுச் சீட்டு

அஞ்சல் சிதம்பரம்.

தலை நவம்பர் 19, 1975.

ரூ. 3,000/-

மதிப்புப் பெற்றுக்கொண்டதற்காக, தேதிக்குப் பின்னர் மூன்று தினங்கள் கழிந்ததும் எனக்கு அல்லது என் உத்தரவு பெற்றவருக்கு ரூபா மூன்றாயிரம் செலுத்துக.

நடராசன்

பெறுநர் :

கோவிந்தராசன்,

10, மேலவீதி,

சிதம்பரம்.

மாற்றுச் சீட்டை வரைபவர் அல்லது எழுதுபவர் கடனாளராக (Creditor) இருப்பார். அதை ஏற்றுக்கொள்பவர் கடனாளியாக இருப்பார். பணம் யாரிடம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளதோ அவர் பெறுவோர் (Payee) என அழைக்கப்படுவார். எனவே மாற்றுச் சீட்டோடு எழுதுபவர், ஏற்பவர், பெறுபவர் என்ற மூவர்கள் தொடர்புகொண்டுள்ளார்கள்.

மாற்றுச் சீட்டின் பயன்கள்

மாற்றுச் சீட்டு அநேகப் பயனுள்ள நோக்கங்களை நிறை வேற்றுகின்றது. நவீனகாலத்தில் அது பயணப்பொருளாகவும் பணத்திற்குச் சரியான பதிலியாகவும் திகழ்கிறது.

1. ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மதிப்பு வாய்ந்தவற்றை மாற்றுவதற்கு இச் சீட்டுப் பயன்படுகிறது.

2. வெகுதூரத்தில் உள்ள இடங்களுக்கு உண்மையாகவே பணத்தை அனுப்பாமல் கணக்குகளைச் சரிக்கட்ட இது பயன் படுகிறது.

3. கடன் உரிமை மாற்றத்திற்கு இஃது எளிய உறுதியான வழியை அளிக்கிறது.

4. வழக்குகளில் இது கடனுக்கு எளிய சான்றாகப் பயன் படுகிறது.

5. எதிர்காலத்தில் உள்ள அல்லது பின் தேதியில் உள்ள செலுத்துமாற்றுச்சீட்டில், கடனாளர் முன்னதாகவே கொஞ்சம் தள்ளுபடி கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். எவ்வித ஐயமுமின்றி இது கடனாளருக்கு நன்மை பயப்பதாகும். காரணம் பின்னர் இவர் பாங்கிடம் விற்று ரொக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

6. மாற்றுச் சீட்டில் பணம் செலுத்துவதற்கு இடம், காலம் போன்றவை குறிப்பிடப்பட்டிருப்பதால் கடனைக் குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாகவும் அதிகமாகவும் ஆக்கிடலாம்.

7. ஏற்பவர் ஒரு தடவை மாற்றுச் சீட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டால், அதைப் பைசல் செய்வதற்கு அவரால் ஆனதை முயற்சிசெய்வார். இல்லாவிட்டால், அதன் விளைவு இன்னல்தரும்.

8. எந்த நபரும் தாம் ஏற்றுக்கொண்ட மாற்றுச் சீட்டை அனுமதிக்கமாட்டார். காரணம் அவர் அவ்வாறு செய்தால் வாணிக உலகத்தில் கடன் வாங்குவது கடினமாகிவிடும்.

எனவே, மாற்றுச் சீட்டு எவ்வளவு நற்பயனளிக்கக்கூடிய சக்தி வாய்ந்த கடன் முறையாவணமாகும். நவீன கால வாணிகத்திற்கு ஆதாரமும், தொழில் நிறுவனங்களுக்குத் தசைநார்போல வலுவூட்டுவதும் கடன்தான் என்று சொல்லப்படுகிறது.

மாற்றுச் சீட்டின் வகைகள் (Kinds of Bills)

1. உள்நாட்டு மாற்றுச் சீட்டு (Inland Bills): உள்நாட்டு மாற்றுச் சீட்டை ஒரே நாட்டில் உள்ள வரைபவர் அதே நாட்டிலுள்ள ஏற்போருக்கு எழுதுகிறார். எனவே, வரைபவரும் பெயரவரும் ஒரே நாட்டில் இருக்கவேண்டும். உதாரணமாகச் சென்னையிலுள்ள வாணிகர் பம்பாயிலுள்ள வாணிகருக்கு எழுதும் சீட்டை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இச் சீட்டு ஒரே சீட்டாக அமைவதால் இதனை ஒற்றைச் சீட்டு (Solo Bill) என்று குறிப்பதுவுமுண்டு. மாற்றுமுறையாவணச் சட்டத்தின்படி மேற் கூறிய இரு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதாவது, இம் மாற்றுச் சீட்டு இந்தியாவில் வரைந்து இந்தியாவி லேயே செலுத்தப்பட வேண்டும். வெளிநாட்டிலுள்ள ஒருவர் மீது வரையப்படுவதை இது பொருட்டாக எடுத்துக்கொள்ள வில்லை. மேலும், முன்கூறியபடி வரைபவரும் ஏற்பவரும் இந்தியாவிலேயே இருக்க வேண்டும். அது எங்கு வேண்டு மானாலும் செலுத்தப்படலாம்.

2. அயல்நாட்டு மாற்றுச் சீட்டு (Foreign Bills) : உள்நாட்டு மாற்றுச் சீட்டில் கண்டுள்ள நிபந்தனைகள் இல்லையென்றாலும், அவ்வாறு எழுதப்படவில்லையென்றாலும், அதனை அயல்நாட்டு மாற்றுச் சீட்டு என்று சொல்லலாம். ஓர் அயல்நாட்டு வாணிகருக்கு உள்நாட்டு வாணிகர் எழுதும் மாற்றுச் சீட்டிற்கு அயல்நாட்டு மாற்றுச் சீட்டு என்று பெயர். சென்னையிலுள்ள வாணிகர் இலண்டனிலுள்ள வாணிகர்மீது எழுதும் சீட்டு அயல் நாட்டு மாற்றுச் சீட்டு ஆகும். இது கீழ்க்காணும் ஐந்து விதங்களில் ஒன்றாக விளங்கும் :

(1) இந்தியாவிற்கு வெளியிலுள்ள ஒருவர்மீது இந்தியாவில் எழுதப்பெற்று, வெளியில் செலுத்தப்படுவது.

(2) வெளிநாட்டில் எழுதப்பெற்று இந்தியாவில் செலுத்தப் படுவது.

(3) இந்தியாவிற்கு வெளியிலிருக்கும் ஒருவருக்கு இந்தியா விற்கு வெளியில் எழுதுவது.

(4) இந்தியாவிலிருக்கும் ஒருவருக்கு இந்தியாவிற்கு வெளியி லிருந்து எழுதுவது.

(5) இந்தியாவிற்கு வெளியில் எழுதி, இந்தியாவிற்கு வெளியில் செலுத்துவது.

3. பணவசதி மாற்றுச் சீட்டு (Accommodation Bill): வாணிக நடவடிக்கைகளின் அடிப்படையில்லாமலேயே ஒருவர் தம் பெயரையும் நாணயத்தையும் மற்றொருவர் கடன் வசதி பெறும் பொருட்டுப் பயன்படுத்த அனுமதிப்பதால் ஏற்படும் சீட்டிற்குப் பணவசதி மாற்றுச் சீட்டு என்று பெயர். இதன் நோக்கம் இச் சீட்டைத் தள்ளுபடி செய்து கடன் வசதி பெறுவதேயாகும். இச் சீட்டை ஏற்பவர் நாணயமும் நன்னம்பிக்கையும் உடையவராகத் திகழவேண்டும். அவர் ஏற்றுக்கொடுத்த சீட்டைப் பாங்கிடம் கொடுத்து, தள்ளுபடிசெய்து பணம் பெறுவார். மாற்றுச் சீட்டின் காலம் முதிர்வடைந்ததும் பணம் பெற்றவர் அத் தொகையைப் பாங்கிடம் செலுத்திவிடுவார். அல்லது ஏற்றுக் கொண்டவரிடம் கொடுத்தாலும் அவரும் சீட்டைப் பாங்கில் பணம் செலுத்திய பிறகு பெற்றுக்கொள்வார். இங்ஙனம் வாணிக நடவடிக்கை ஏதுமின்றி ச் சீட்டு எழுதப்படுவதால் இதைப் பெயரளவு மாற்றுச் சீட்டு (Fictitious Bill) என்று கூறுவர். இத்தகைய மாற்றுச் சீட்டில் அதை அளிப்பவர் மறு பயன் கருதாது தம் பெயரை எழுதி மற்றொருவருக்கு அளிக்கிறார். அவர் இச் சீட்டைப் பயன்படுத்திப் பணம் பெற்றுக்கொண்டு தவணைத் தேதியில் கொடுத்துவிடவேண்டும். இந் நடவடிக்கை யில் பண்டமாற்று ஏற்படவில்லை. மற்றவருக்கு அளிக்கும் வாணிகக் கடனில் ஒருவகையாக இது விளங்குகிறது. எனினும், இச் சீட்டை அளித்தவர் அதன் மதிப்பிற்கு உரிமை பெற்றவருக்குப் பொறுப்பாளியாவார். அவர் வேண்டுமானால் இத் தொகையைச் சீட்டுப் பெற்றவரிடமிருந்து வழக்காடிப் பெற்றுக்கொள்ளலாம். நட்டஈடு கார அவருக்கு உரிமை உண்டு. இச் சீட்டைப் பெறுபவருக்கோ, மேலெழுத்து எழுதியவருக்கோ பணம் திரட்டுவதற்காகவே வெளிப்படையாக ஏற்பவரால் ஏற்கப்பட வேண்டும். இச் சீட்டைக் காற்றாடிச் சீட்டு (Kite Bill) என்றும் கூறுவதுண்டு.

4. ஆவணங்கள் சேர்ந்த மாற்றுச்சீட்டு (Documentary Bills): பன்னாட்டு அல்லது வெளிநாட்டு வாணிகத்தில் ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர்மீது மாற்றுச் சீட்டு எழுதி அத்துடன் கப்பல் ரசீது, கடல் காப்பீட்டுப் பத்திரம் போன்றவைகளை அனுப்பிப் பணம் வசூல் செய்யும் பாங்குக்கு அனுப்பி வைப்பர்; இறக்குமதியாளர் உடன்பாட்டின்படி மாற்றுச் சீட்டின் மீதான பணத்தைச் செலுத்திவிட்டு அல்லது அச் சீட்டை ஏற்றுக்கொண்டு விட்டு மேற்கூறிய ஆவணங்களைப் பெறுவர். எனவே, இத்தகைய ஆவணங்களுடன் மாற்றுச் சீட்டை அனுப்புவதால் இதற்கு இவ்வாறு பெயர். ஆவணங்களை அனுப்பாமல் வெறும் சீட்டை

மட்டும் அனுப்பினால் அதனை வெற்று மாற்றுச் சீட்டு (Clean Bill) என்று குறிப்பிடுவர். இவ் வாவணங்கள் ஏற்பின்பேரிலுள்ள ஆவணங்கள் (D/A–Documents against Acceptance) என்றும், செலுத்தலின்பேரில் ஆவணங்கள் (D/P-Documents against Payment) என்றும் இரண்டு வகைப்படும். முதற்கூறிய ஏற்பின் பேரிலுள்ள ஆவணச்சீட்டில் (D/A) பாங்குதான் முகவராகப் பணியாற்றுகிறது. அதன் மூலம்தான் நடவடிக்கைகள் நடை பெறுகின்றன. எழுதுபவருக்கு அறிமுகமாகாத அல்லது தெரியாத ஏற்பவர் அயல்நாட்டில் இருந்தால் அப்பொழுது இரண்டாவது கூறப்பட்ட செலுத்துதலின்பேரில் உள்ள ஆவணச்சீட்டாக (D/P) அனுப்பப்படும். வேண்டிய கப்பல் ஆவணங்கள் பணம் செலுத்தப் படாவிட்டால் பாங்கு சரக்கிற்கான உரிமை யாவணங்களைத் தன்னிடத்தில் வைத்திருக்கும்.

5. **கொணர்பவர் சீட்டு, கட்டளைச் சீட்டு** (Bearer and Order Bills) : கொணர்பவருக்குச் செலுத்து, அல்லது ஆங்கிலத்தில் எழுதியுள்ளபடி 'Pay or Bearer' (X அல்லது கொணர்பவருக்குச் செலுத்து) என்னிம் எழுத்துகளுடன் எந்த மாற்றுச் சீட்டுத் திகழ்கிறதோ அதைக் கொணர்பவர் சீட்டு என்கிறோம். அங்கு ஒரு மேலெழுதுதலிருந்து, அது வெறுமிடமாக இருந்தால் (பூர்த்தி செய்யாமலிருந்தால்) அல்லது அங்கு அநேக மேலெழுதுதல்கள் இருந்து, கடை மேலெழுதுதல் இன்னாருக்குச் செலுத்த வேண்டு மென்ற உத்தரவின்றி இருந்தால், பணம் செலுத்துவதற்கு உத்தரவு உண்டு. ஆனால், பெறுபவரின் பெயர் மட்டும் குறிக்கப் படா நிலை காணப்படும். அத்தகைய மாற்றுச் சீட்டுகளைச் சேர்த்தல்மூலம் மாற்றிவிடலாம்.

இவ்வாறு செலுத்தப்படவேண்டும் என்று அதாவது, X-ன் உத்தரவுக்குச் செலுத்து (Pay X Order) என்னும் வாசகத்துடன் விளங்கும் சீட்டை உத்தரவுச் சீட்டு என்று சொல்லலாம். ஒரு சீட்டின் மாற்றுரிமையைத் தடுக்காமல் ஒரு குறிப்பிட்ட நபருக்குப் பணம் செலுத்த உத்தரவிடுவதுதான் அது. இதைச் சேர்ப்பித்து மேலெழுதி மாற்றிவிடலாம்.

6. **பொருள்மயக்கம் தரும் மாற்றுச் சீட்டு** (Ambiguous Bill) : ஒரு முறையாவணத்தை மாற்றுச் சீட்டா கடனுறுதிச் சீட்டா என்று கண்டறிவது கடினமாக இருந்தால் அதைப் பொருள் மயக்கம் தரும் மாற்றுச் சீட்டு என்று சொல்கிறோம். உண்மை யிலே அதன் தன்மை அல்லது குணாதிசயங்கள் பற்றிய ஐயம்

ஏற்பட்டால் அதைப் பெற்றுள்ளவர் அவரின் விருப்பத்தைப் பயன்படுத்தி இரண்டில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கலாம். ஒரு முறை அதை ஒன்றாகப் பாவித்துத் தேர்ந்தெடுத்துவிட்டால் அம் முறையாவணம் அதன்படியே இருக்க வேண்டும். அதாவது மாற்றுச் சீட்டாகவே அது விளங்கும். அல்லது அதைக் கடனுறுதிச் சீட்டாகக் கருதிவிட்டால் இறுதிவரை அது கடனுறுதிச் சீட்டாகவே இருக்கவேண்டும்.

7. **நிறையுறாத மாற்றுச் சீட்டு** (Inchoate Bills) : சில நேரங்களில் ஒரு முறையாவணத்தில் எல்லா விவரங்களும் கொடுக்கப்படமாட்டாது. பின்னால் இவ் விவரங்களைப் பூர்த்தி செய்யவேண்டியதாக இருக்கும். அத்தகைய சீட்டு நிறையுறாத சீட்டு என்று சொல்லப்படுகிறது. முழுவதும் பூர்த்திசெய்யாத ஓர் ஆவணத்தை ஒருவர் கையெழுத்திட்டு அல்லது ஒன்றுமே யெழுதாத வெற்று ஆவணத்தைக் கையெழுத்திட்டு ஒருவரிடம் கொடுத்து வெற்றிடங்களைப் பூர்த்திசெய்துகொள்ளும் அதிகாரத்தையும் அவருக்கே அளித்துவிடும்போது நிறையுறாத மாற்றுச் சீட்டாக அது மிளிர்கிறது. சட்டத்தின்படி தேவையான வரி வில்லை (Stamp) ஒட்டவேண்டும். அதன் மதிப்பையும் குறிப்பிட வேண்டும். அவ் வரிவில்லைக்குரிய பணத்தைவிட அதிகப் பணத்தை மாற்றுச் சீட்டைப் பெற்றுள்ளவர் பூர்த்தி செய்து கொள்ளலாம். வெற்றிடங்களைப் பூர்த்திசெய்த பின்னர் அது ஒரு முழு மாற்றுமுறையாவணமாகிவிடுகிறது. முறைப்படி அதைப் பெறுபவருக்கு அதில் கையெழுத்து இட்டவர் பொறுப்பாளியாகிறார். வெற்றிடங்களை நிரப்பவில்லை யென்றால் அம் முறையாவணத்தின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது.

8. **பெயரளவு மாற்றுச் சீட்டு** (Fictitious Bill) : இல்லாத நபரின் பேரில் மாற்றுச் சீட்டு எழுதப்பட்டாலோ, இருக்கும் நபர்மீது அவர் பெறுபவராக இருக்க முடியாதபடி மாற்றுச் சீட்டு எழுதினாலோ அதைக் கற்பனையான அல்லது பெயரளவு மாற்றுச் சீட்டு என்கிறோம். அஃது இல்லாத நபர் மீதோ அல்லது பொய்யான நபர்மீதோ எழுதப்பட்டிருக்கலாம். பெறுபவர் கற்பனையான அல்லது இல்லாத நபராக இருந்தால் மாற்றுச் சீட்டுக் கொணர்பவருக்குச் செலுத்தக்கூடியதாகக் கருதப்படும். இருக்கும் மனிதர் ஒருவர்மீது மாற்றுச் சீட்டு எழுதப்பட்டாலும் குறிக்கப்பட்ட நபரை எழுதுபவர் விரும்பவில்லையென்றாலும் அச் சீட்டு இல்லாத மனிதர்மீது எழுதப்பட்டதாகவே கருதப்படும்.

கிளட்டனுக்கும் அட்டன்பொரோவிற்கும் (Clutton *vs.* Attenborough) நடந்த வழக்கில் கிளட்டன் என்பவர் தம் எழுத்தரின் மோசடிச் செய்கைமூலம் இல்லாத நபர்மீது ஒரு காசோலை எழுதும்படி தூண்டப்பட்டார். அவரின் எழுத்தர் மேலெழுதியதைப் பொய்க் கையெழுத்திட்டு நல்லெண்ணத்துடன் செயலாற்றிய அட்டன்பொரோவிடம் அதை ரொக்கமாக மாற்றிக்கொண்டார். இம் மாற்றத்திற்காக அட்டன்பொரோவின் மீது வழக்குத் தொடரப்பட்டது. அக் காசோலை கொணர் பவருக்குச் செலுத்துதற்கு எழுதப்பட்டமையால் அட்டன் பொரோ ரொக்கத்தை வைத்துக்கொள்ள உரிமை உண்டு என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

நார்த் அண்டு சவுத் வேல்ஸ் பாங்க் லிமிடெட்டிற்கும் மேக் பெத் என்பவருக்கும் (North and South Woles Bank Ltd. *vs.* Macbeth) நடந்த வழக்கில் எம் என்பவர் டபிள்யூ என்பவரின் மோசடிச் செய்கையால், கே என்பவருக்கு அனுகூலமாக ஒரு காசோலை எழுதினார். கே என்பவர் பணத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் எம் என்பவரின் விருப்பம். எனவே டபிள்யூ என்பவர் கே என்பவருடைய மேலெழுத்தில் பொய்க் கையெழுத்திட்டுக் காசோலையைத் தம் கணக்கில் பாங்கில் போட்டுவிட்டார். பாங்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு விட்டது. காசோலையில் குறிப்பிடப்பட்ட பணத்திற்காக டபிள்யூ என்பவரின் பாங்கின்மீது எம் என்பவர் வழக்குத் தொடுத்தார். எம் என்பவர் வெற்றிபெற்றார். காரணம் அவர் விரும்பிய கே என்பவர் கற்பனையான அல்லது இல்லாத மனிதரோ அல்லர். அவருக்கு முறைப்படி காசோலை செலுத்தப்படவில்லை என்று நீதி மன்றம் கருத்துத் தெரிவித்தது. பெறுபவர் மாற்றுச் சீட்டுத் தொகையைப் பெறவேண்டும் என்று எழுதுபவர் மோசடி எண்ணத்துடன் விரும்பினாலும் சரி பெறுபவர் இல்லாத மனித ராகக் கருதப்படமாட்டார்.

9. கருவூல மாற்றுச் சீட்டு (Treasury Bills): பொது நிதியைச் சரிக்கட்டுவதற்காக அதாவது, அரசாங்கத்தின் வருவாய்க்கும் செலவிற்கும் ஏற்படும் துண்டைச் சரிக்கட்டுவதற்காக இத்தகைய மாற்றுச் சீட்டுகள் எழுதப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளியில் கண்டபடி 90 நாள்களுள்ள பத்திரங்களை வெளியிடுவது வழக்கம். இப் பத்திரங்கள் பாங்குக்கு நல்லதொரு குறுகியகால முதலீடாக விளங்குகின்றன. அவைகளில் கடனுறுதிச் சீட்டு உருவத்தில்தான் அதிகம் உள்ளன; மாற்றுச் சீட்டு அமைப்பில் அதிகமில்லை. ஏற்ப

தற்கு அளிக்கவேண்டிய அவசியமில்லை. இவை 'டெண்டர் பில்ஸ்' (Tender Bills), 'டேப் பில்ஸ்' (Tap Bills) என்ற இருபகுதி களாக உள்ளன. பொதுமக்களிடமிருந்து வாங்கின கடனுக்குக் கருவூலம் வழங்கும் ரசீதுதான் 'டெண்டர் பில்ஸ்' என்பவை. உபரிப்பணத்திலிருந்து அரசாங்க நிதித் துறைக்கு குறுகிய காலக் கடனாக வழங்கியதைப் பொறுத்தவரை அரசாங்கத்திற்கும் அதன் பதிலாண்மைக்கும் கொடுக்கப்படுபவைதாம் 'டேப் பில்ஸ்' என்பவை. முன்னர்க் கூறிய மாற்றுச் சீட்டுகள் ரொக்க மாக மாறும் தன்மையுடைய கடன்கள். ஆனால், பின்னால் கூறியவை வெறும் பெயரளவுக் கடன்கள்தாம்.

10. மாற்றுச் சீட்டுக் கோவை (Set of Bills): வெகு தொலைவிலுள்ளோருக்கு மாற்றுச் சீட்டு எழுதும்போது கால தாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு மாற்றுச் சீட்டுப் பல பகுதி களாக எழுதப்படும். எல்லாப் பகுதிகளும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு தனிப் பத்திரமாகக் கருதப்படும். ஒவ்வொரு பகுதிக்கும் எண் போடப்பட்டு மற்றப் பகுதியையும் குறிக்கக்கூடியதாக அவை விளங்கும். எனவேதான் இவற்றைக் கோவையில் உள்ள மாற்றுச் சீட்டுகள் என்கிறோம். இவைகளில் ஒரு பகுதி செலுத்தப்பட்டு விட்டால், மற்றப் பகுதிகள் செல்லாமற் போய்விடும். வழக்க மாக அயல்நாட்டு மாற்றுச் சீட்டுகள்தாம் இத்தகைய கோவை களாக எழுதப்பெறுகின்றன.

11. இடங்குறி மாற்றுச் சீட்டு (Domiciled Bill): மாற்றுச் சீட்டை ஏற்பவர் தவணை நாளன்று அதிற்கண்ட பணம் செலுத் தப்படும் வங்கி அல்லது இடம் போன்றவைகளைக் குறிப்பதுண்டு. அவ்வாறு இடம் குறிக்கப்பட்ட சீட்டை இடங்குறி மாற்றுச் சீட்டு என்பர்.

கடனுறுதிச் சீட்டு (Promissory Note)

கடனுறுதிச் சீட்டு, 'புரோநோட்டு' என்றும் கூறப்படும். கடன் பெற்றவர் கடன் தொகையைச் செலுத்த உறுதியளித்து எழுதித் தரும் முறையாவணம்தான் கடனுறுதிச் சீட்டாகும். கொணர்பவருக்கு அல்லது குறிப்பிட்ட நபருக்கு அல்லது அவர் உத்தரவு பெற்றவருக்குக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்த உறுதியளிக்கும் எழுத்தால் காணப்படும் ஆவணமே, கடனுறுதிச் சீட்டு எனப்படும். மாற்றுமுறையாவணச் சட்டத்தின்படி 'குறித்த ஒருவருக்கோ அவரது ஆணை பெற்றவருக்கோ, முறைப்படி அதைக் கொணர்பவருக்கோ, அக் குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதாக நிபந்தனையில்லாமல் பொறுப் பேற்றவர் கையொப்பமிட்டு எழுதிக் கொடுக்கும் பத்திரம்தான்

கடனுறுதிச் சீட்டு' என்று அதன் இலக்கணம் விளக்கப் பட்டுள்ளது. செலாவணிச் சீட்டும் வங்கிச் சீட்டும் கடனுறுதிச் சீட்டாகக் கருதப்படமாட்டா. கடனுறுதிச் சீட்டை ஆன்டிமாண்ட் நோட்டு (On Demand Note) என்றும் வழங்குவர்.

கடனுறுதிச் சீட்டின் சிறப்புக் கூறுகள்

இஃது எழுத்தா லமையவேண்டும். இதில் நிபந்தனையற்ற உறுதிக்கூற்று அடங்கியிருக்க வேண்டும். எழுதுபவர் இதில் கையெழுத்திட வேண்டும். யாருக்குப் பணம் செலுத்தப்படுகிறது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். கடன் தொகைக்கு ஒட்டவேண்டிய வரிவில்லை ஒட்டி அதன்மீது கையெழுத்திட வேண்டும். கேட்டவுடன் பணம் செலுத்துவதாக அல்லது குறிப் பிட்ட காலங்கழிந்தவுடன் பணம் செலுத்துவதாக உறுதிக்கூற்று அமைந்திருக்க வேண்டும். கடனுறுதிச் சீட்டுக்கு இரண்டு நபர்கள் உண்டு.

1. கடனாளி, இவர்தாம் பத்திரத்தை எழுதிக் கொடுப்பவர்.

2. மற்றொருவர் பெறுபவர். இவர் கடன் தந்த நபராக இருப்பார்.

மாதிரிக் கடனுறுதிச் சீட்டு

ரூ. 5000/- 10, தெற்குக் கோயில் தெரு,
அண்ணாமலைநகர்.
நவம்பர் 21, 1975

கோரியவுடன் திரு.பசுபதி அல்லது அவர் உத்தரவு பெற்றவருக்கு ரூபா ஐயாயிரம் 12% வட்டியுடன் செலுத்த உறுதிகூறுகிறேன்.

வரிவில்லை

நல்லநாயகி

கடனுறுதிச் சீட்டு, பணம் தருவதற்காகத்தான் எழுதப்பட வேண்டுமேயொழிய மற்றவை பெறுவதற்காக அன்று. ஒருவர் கடனுறுதிச் சீட்டின்கீழ் ரூ. 1000 தருவதாக ஒப்புக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட தேதியில் ஒரு காவல் நாயைக் கொடுத்தார். எனவே அம் முறையாவணம் ஒரு கடனுறுதிச் சீட்டு ஆகாது. இதேபோல் வேறு ஒருவர் நான் உனக்கு ரூ. 500 தரவேண்டும் (I owe you Rs. 500) என்று கூறினால் இங்குக் கடனுறுதிச் சீட்டுத்

தரவேண்டிய அவசியமில்லை. காரணம் பணம் தருவதாக இங்கு உடன்பாடில்லை. கடன் பெற்றதற்கு அத்தாட்சிதான் இருக்கிறது. அதேபோல் குழந்தை பிறந்த ஒரு மாதத்திற்குப் பின் பணம் தருவதாக ஒருவர் மற்றொருவருக்கு வாக்குறுதியளித்தாலும் இங்கும் கடனுறுதிச் சீட்டுத் தரவேண்டிய அவசியமில்லை.

சில நபர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டாகக் கடன் பெறும்போது கூட்டுக் கடனுறுதிச் சீட்டு எழுதித் தருவர். அந் நிலையில் அவர்களின் பொறுப்பு, கூட்டுத் தனித் தனிப் பொறுப்பாகும்.

காசோலை
(Cheque)

நவீன உலகில் பெருமளவு பயன்படுத்தப்படும் மாற்று முறையாவணம் 'செக்கு' என்ற காசோலையாகும். வங்கியிலிருந்து பணம் எடுத்திடக் காசோலை பயன்படுகிறது. காசோலையும் ஒரு மாற்றுச்சீட்டுதான். காசோலையின் இலக்கணம், 'கோரினாலன்றி அதில் எழுதப்பட்ட பணம் செலுத்தப்படாது என எழுதப்பட்டுக் குறிப்பிட்ட ஒரு வங்கியின்மீது விடுக்கப்படும் மாற்றுச் சீட்டே காசோலை'.

காசோலைகளின் தனித்தன்மைகள்

இது எழுத்தால் அமைந்திருக்க வேண்டும். பணஞ்செலுத்தக் கோரும் நிபந்தனையற்ற கட்டளை காசோலையில் காணப்பட வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட வங்கியின்மீது எழுதப்பட வேண்டும். இதில் எழுதுபவரின் கையெழுத்திருக்க வேண்டும். செலுத்தப்பட வேண்டிய தொகை குறிப்பிடப்பட வேண்டும். கோரியவுடன் (On Demand) தொகை செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். யாருக்குப் பணம் செலுத்தப்பட வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். காசோலை கொணர்பவருக்கோ அல்லது குறிப்பிடப்பட்ட நபருக்கோ அல்லது அவர் உத்தரவு பெற்றவருக்கோ செலுத்தப்பட வேண்டுமென்று எழுதப்படலாம்.

மாதிரிக் காசோலை

இந்தியன் வங்கி
சிதம்பரம்

ஏ 10152

திரு. அரங்கன் அல்லது உத்தரவுப்படி ரூபா மூவாயிரம் மட்டும் செலுத்துக.

ரூ. 3000 தி. திருவேங்கடம்

காசோலை எழுதும் முறை

ஒருவர் வங்கியில் கணக்குத் தொடங்குவதற்கு அறிமுகம் தேவை. பங்கு அளிக்கும் காசோலையை மட்டுமே வாடிக்கையாளர்கள் பயன்படுத்த வேண்டும். காசோலை எழுதும்போது பெறுபவரின் பெயரை எழுதும்போதும் தொகையை எண்ணாலும் எழுத்தாலும் எழுதும்போதும் முன்னும் பின்னும் இடைவெளி அல்லது வெற்றிடம் விடக்கூடாது. அதை ஒரு கோடிட்டு எதையும் திருத்தமுடியாதபடி எழுதவேண்டும். காசோலையில் தேதி அல்லது நாள் குறிப்பிட வேண்டும். பணம் யாருக்குச் செலுத்தப்பட வேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். 'கொணர்பவருக்குச் செலுத்துக' என்ற வாசக முடைய காசோலையை உடையவர் எவரும் அதை வங்கியில் பணமாக மாற்றிக்கொள்ளலாம்; மேலெழுத்துத் தேவையில்லை. சில நேரங்களில் 'எனக்கு' (Self) என்று காசோலை எழுதப்படுவ துண்டு. வாடிக்கையாளர்கள் தாமே நேரில் பாங்கிலிருந்து பணம் எடுக்கும்போது அவ்வாறு எழுதுவர். ஆனால் காசோலை ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது அவருடைய உத்தரவு பெற்றவருக்கோ செலுத்தப்பட வேண்டுமென்று வாசகமிருந்தால் அவர்கள் மேலெழுத்துச் செய்துதான் காசோலையை மாற்ற முடியும். எழுதும்போது ஏதாவது தவறு நேர்ந்தால் வாடிக்கையாளர் முழுக் கையொப்பமிட்டு அதைத் திருத்திவிடலாம். அக் கையொப்பம் முன்பு தந்துள்ள மாதிரிக் கையொப்பப்படி அமைய வேண்டும்.

காசோலையை எழுதுபவர் உண்மையாகவே அதை எழுதும் தேதியைத்தான் குறிப்பிடுவது வழக்கம். இருந்தாலும் சில நேரங்களில் எழுதும் தேதிக்கு முன்னர் உள்ள தேதியைக் காசோலையில் குறிப்பிடும்போது அதை முன்தேதியிட்ட (Ante-dated) காசோலை என்கிறோம். காசோலையில் குறிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் அது மாற்றப்பட வேண்டும். ஆறு மாதங்களுக்குமேல் புழக்கத்திலிருக்கும் காசோலை நாட்பட்ட (Stale) காசோலை எனப்படும். இக் காசோலைமீது பாங்கு பணம் தராது. எனவே இக் காசோலையை வைத்திருப்பவர், மீண்டும் எழுதியவரிடம் சென்று புதுக் காசோலை எழுதிப் பெறவேண்டும். சில சமயம் பின்தேதியிட்டுக் காசோலை எழுதுவதுமுண்டு. அதைப் பின்தேதியிட்ட (Post Dated) காசோலை என்பர். அக் காசோலையில் குறிப்பிடப் பட்டுள்ள தேதி வரும்வரை பாங்கு அதன்மீது பணம் செலுத்தாது.

காசோலையுடன் மூன்று நபர்கள் தொடர்புகொண்டுள்ளனர்: எழுதுபவர், பெயரவர், பெறுவோர் என்போராவர். காசோலையை எழுதுபவர் பாங்கில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர். இவரின் பணம் வங்கியில் இருப்பதால் இவர் கடனாளர் என்ற நிலையிலிருக்கிறார். வங்கிதான் எப்பொழுதும் பெயரவராக இருக்கக்கூடும். வாடிக்கையாளரின் பணத்தை வங்கி வைத்திருப்பதால் அதன் நிலை கடனாளி நிலையாக உள்ளது. பணம் யாருக்குச் செலுத்தப்பட வேண்டுமோ அவர் பெறுவோர் எனப்படுகிறார்.

காசோலைக்கும் மாற்றுச் சீட்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் (Points of differences between Cheque and a Bill of Exchange)

1. கோரியவுடன் பணஞ்செலுத்தப்பட வேண்டும் என்று காசோலையில் எழுதப்பட்டிருக்கும். ஆனால், மாற்றுச் சீட்டில் தவணை கழிந்தவுடனோ கோரியவுடனோ பணம் செலுத்தப்பட வேண்டி எழுதப்படலாம்.

2. காசோலை எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட வங்கிமீது தான் எழுதப்படும். ஆனால், மாற்றுச் சீட்டு வங்கி அல்லது யார் மீது வேண்டுமானாலும் எழுதப்படலாம்.

3. காசோலையை ஏற்புச் செய்ய வேண்டியதில்லை. ஆனால் மாற்றுச் சீட்டைக் கடனாளி ஏற்புச்செய்ய வேண்டும்.

4. காசோலைமீது வருமான வரிவில்லை (Revenue Stamp) ஒட்ட வேண்டியதில்லை. ஆனால், மாற்றுச் சீட்டின்மீது அது அவசியம் ஒட்டப்பட வேண்டும்.

5. காசோலையைச் செலுத்தச் சலுகை நாள்கள் இல்லை. ஆனால், மாற்றுச் சீட்டில் சில வகைகளைச் செலுத்தச் சலுகை நாள்கள் இல்லை.

6. காசோலையில் படிகள் எழுத வேண்டிய அவசியமில்லை. ஆனால் அயல்நாட்டு மாற்றுச்சீட்டில் மூன்று படிகள் எழுத வேண்டும்.

7. காசோலை மறுக்கப்பட்டால் முறைகளேதும் கையாளப் படவேண்டியதில்லை. ஆனால், மாற்றுச் சீட்டு அவமதிக்கப் பட்டால் மறுப்புக் குறிப்புச் (Noting) செய்வதும் மறுப்புச் சான்றிதழ் (Protest) பெறுவதும் உண்டு.

8. காசோலைகளைக் கீறுவதுண்டு. மாற்றுச் சீட்டைக் கீறுவதில்லை.

9. காசோலையை அது நாட்பட்ட காசோலையாவதற்கு முன் எப்பொழுது வேண்டுமானாலும் வசதிப்படி மாற்றிக்கொள்ளலாம். எழுதியவர் பொறுப்புப் பொதுவாக நீங்குவதில்லை. ஆனால், மாற்றுச் சீட்டில் அதன் கெடுத் தேதியன்று அதை ஏற்றவரிடம் காட்டிப் பணம் பெறுவது அவசியம். தவறினால் எழுதியவர் பொறுப்புத் தீர்ந்து போகும்.

10. காசோலை மறுக்கப்பட்டால் அறிவிக்கை அனுப்பத் தேவையில்லை. ஆனால், மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டால் அதனை உடையவர் மேலெழுதியவர்களுக்கும் எழுதியவருக்கும் மறுப்பு அறிவிக்கை (Notice of Dishonour) அனுப்ப வேண்டும்.

கடனுறுதிச் சீட்டிற்கும் மாற்றுச் சீட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்
(Points of Differences between Promissory Note and Bill of Exchange)

1. கடனுறுதிச் சீட்டுக்கு இரண்டு நபர்கள் உண்டு— எழுதுபவர், பெறுவோர். ஆனால், மாற்றுச் சீட்டில் மூன்று நபர்கள் உண்டு— எழுதுபவர், ஏற்பவர் அல்லது பெயரவர், பெறுவோர்.

2. கடனுறுதிச் சீட்டில் பணத்தைச் செலுத்துவதற்கு எழுத்து மூலம் உறுதியளிப்பு உள்ளது. ஆனால், மாற்றுச் சீட்டில் பணம் செலுத்துவதற்கு எழுத்து மூலம் கட்டளை அல்லது உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

3. கடனுறுதிச் சீட்டை யார் விடுக்கிறார்களோ அவர்களுக்கே பணம் செலுத்தப்படமாட்டாது. ஆனால், மாற்றுச் சீட்டில் எழுதுபவரே, பணத்தைப் பெறுபவராகவும் இருப்பதுண்டு.

4. கடனுறுதிச் சீட்டில் எழுதுபவர் முக்கியக் கடனாளியாக முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ளார். ஆனால், மாற்றுச் சீட்டில் 'ஏற்பு'வரை எழுதுபவர் பொறுப்பாளியாவார். ஏற்புக்குப் பின்னர், ஏற்பவர்தாம் முக்கியக் கடனாளியாகப் பொறுப்பாளியாகிறார். இங்கு எழுதுபவரின் பொறுப்பு இரண்டாம் பட்சமானதுதான்.

5. ஏற்புக்கு முன்னுள்ள நிபந்தனை, மறுப்பு அறிவிக்கை வழங்குதல், மறுப்புக் குறிப்பு, மறுப்புச் சான்றிதழ் வழங்குதல் போன்ற சடங்குகள் கடனுறுதிச் சீட்டில் இல்லை.

6. கடனுறுதிச் சீட்டில் எழுதுபவருக்கு அடுத்த நேரடித் தொடர்பில் பெறுபவர் உள்ளார். ஆனால், மாற்றுச் சீட்டில் எழுதுபவர் தம் அடுத்த தொடர்பாக ஏற்பவரைத்தாம் பெற்றுள்ளாரேயொழியப் பெறுபவரை அல்ல.

பணம் அல்லது பாங்குச் சீட்டிற்கும் (Bank Note) கடனுறுதிச் சீட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்

ஒப்பந்தத் தகுதியுடைய எவராலும் கடனுறுதிச் சீட்டு வழங்கமுடியும். சீட்டின் தொகைபற்றியோ அல்லது விடுத்தல் பற்றியோ எவ்விதமான வரையறுப்பும் கட்டுப்பாடுமில்லை. ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அவர்தம் உத்தரவிற்கோ பணம் செலுத்தப் படுகிறது. ஆனால், பண நோட்டுகளை மைய வங்கியான ரிசர்வு பாங்கு வெளியிடுகின்றது. அத்தகைய அதிகாரம்பெற்ற வங்கிதான் அவற்றை வெளியிடமுடியும். ஆனால் அவ் வெளியீட்டிற்குச் சில சட்டதிட்டங்களைப் பின்பற்றவேண்டும். கொணர்பவருக்குக் கோரியவுடனே அவை செலுத்தப் படுகின்றன. அவற்றை ரொக்கமாகக் கருதுவர். அவற்றை மறுபடியும் வெளியிடலாம்.

காசோலைக்கும் தவணை வைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள்

காசோலை என்பது ஒரு குறிப்பிட்ட வங்கியர்மீது எழுதும் மாற்றுச் சீட்டாகும். ஆனால், தவணை வைப்பு ஒரு வங்கியரால் அளிக்கும் ரசீது. காசோலை கோரினவுடன் செலுத்தப்பட வேண்டும். ஆனால், தவணை வைப்புக் குறிப்பிட்ட காலத் தவணை முடிந்த பிறகுதான் செலுத்தப்பட வேண்டும். ஒரு காசோலை ஆறு மாதங்களுக்குப் பின் நாட்பட்டதாக ஆகிவிடும். ஆனால் தவணை வைப்பில் இவ் வச்சமில்லை. முறைப்படி பெறுபவரால் எவ்விதக் குறைபாடுமின்றி ஏற்றுக்கொள்ளும் மாற்று முறையாவணமாகக் காசோலை திகழ்கிறது. ஆனால் தவணை வைப்பு ஒரு மாற்றுமுறையாவணமில்லை. உரிமை மாற்றஞ் செய்பவரின் குறைபாடுகளைக் கண்டறிந்து உரிமைமாற்றம் பெறுபவர் அதனை ஏற்றுக்கொள்கிறார்.

மாற்றுச் சீட்டு முதிர்வடைதலும் சலுகை நாள்களும் (Maturity of Bills and days of Grace)

ஒரு மாற்றுமுறையாவணத்தின் தவணை நாள் அல்லது முதிர்ச்சி, அது என்று செலுத்தப்பட வேண்டுமோ அன்று ஏற்படு கிறது. கோரினவுடனே செலுத்தவேண்டிய முறையாவணம் அது கொடுக்கப்பட்டதும் (On Presentation) பணம் செலுத்தப் படவேண்டும். ஆனால் கோரினவுடனே செலுத்தாத முறை

யாவணங்கள் அவற்றின் தவணைத் தேதிக்குப்பின் மூன்று நாள் களுக்குள் பணம் செலுத்தப்பட வேண்டும். இம் மூன்று நாள்கள் சலுகை நாள்கள் (Grace Days) எனக் கூறப்படு கின்றன. கண்டதும் அல்லது கேட்டதும் அல்லது காட்டியவுடன் பணஞ்செலுத்தக்கோரி எழுதப்பட்ட மாற்றுச்சீட்டுக்குச் சலுகை நாள்கள் கிடையா.

சட்டத்தின் பிரிவுகள் 22, 23, 24, 25 இவற்றைப்பற்றி விளக்குகின்றன.

1. குறிப்பிட்ட மாதங்களுக்குப்பின் காட்டிய உடனே அல்லது அந் நாளில் பணம் செலுத்துவதாக முறையாவணம் எழுதப்பட்டிருந்தால், அதே தேதியை விடுத்து மூன்று நாள் களுக்குள் செலுத்தப்படவேண்டும். 1975 ஏப்பிரல் 30-க்குப்பின் மூன்று மாதங்களுக்குள் செலுத்துவதாக ஒரு மாற்றுச் சீட்டு இருக்குமேயானால் அதே ஆண்டு ஆகஸ்டு 3ஆம் தேதியன்று செலுத்தப்பட வேண்டும்.

2. எந்த மாதத்தில் தவணைத் தேதி வருகிறதோ அந்த மாதத்தில் குறிப்பிடப்பட்ட தேதி வரவில்லையென்றால் கடைசி நாளை அந்தத் தேதியாகக் கொள்ளவேண்டும். காட்டாக, 31—3—75 தேதியிட்ட ஒரு மாற்றுச் சீட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர்ச் செலுத்தப்பட வேண்டுமானால் அது 3—5—75-ல் செலுத்தப்பட வேண்டும். அதாவது ஏப்பிரல் 30-க்கு மேல் மூன்றுநாள் கூட்ட வேண்டும். ஏப்பிரல் மாதத்தில் 31ஆம் தேதி இல்லையே என்று கருதக்கூடாது.

3. மாற்றுச் சீட்டின் தவணைகள் அல்லது முதிர்ச்சி நாள் கணக்கிடும்போது மாற்றுச்சீட்டு எந்த நாளில் எழுதப்பட்டதோ அல்லது ஏற்புக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த நாளை நீக்கி விட வேண்டும்.

4. தவணை நாள் விடுமுறை நாளாகவிருந்தால் அடுத்த வேலை நாளில் பணம் செலுத்தப்பட வேண்டும்.

5. **மாமூல் தவணை** (Usance) : ஒரு நாட்டில் எழுதப்பட்டு மற்றொரு நாட்டில் பணம் செலுத்துவதற்கு வழங்கப்படும் காலத் திற்கு மாமூல் தவணை என்று பெயர். இது அயல்நாட்டு மாற்றுச் சீட்டுகளுக்குப் பொருந்தும். நாடுகளுக்கிடையே உள்ள தூரம், பழக்க வழக்கங்களைப் பொறுத்து இக் காலத்தவணை வேறு படுகிறது.

மாற்றுமுறையாவணங்களுக்கு ஒப்பான ஆவணங்கள் (Documents Analogus to Negotiable Instruments)

மாற்றுமுறையாவணங்களான காசோலை, மாற்றுச்சீட்டு, கடனுறுதிச்சீட்டு போன்ற சில ஆவணங்கள் உள்ளன. உண்டியல் (Hundies), பங்குச்சீட்டு (Share warrant), இலாப ஈவுச்சீட்டு (Dividend warrant), கருவூலச் சீட்டு (Treasury Bills), வங்கியர் பணவிடை (Banker's Draft) என்பவை அவற்றில் முக்கிய மானவைகளாகும்.

உண்டியல்

இந்திய நாட்டு மொழிகளில் எழுதப்படுகின்ற மாற்றுச்சீட்டு உண்டியல் என வழங்கப்படுகின்றது. இதன் நடவடிக்கைகள் வணிகர்களின் பழக்கவழக்கங்களையொட்டி நடைபெறுகின்றன. மாற்றுமுறையாவணச் சட்டதிட்டங்கள் இவற்றைக் கட்டுப் படுத்தா. ஆனால், அதன் நபர்கள் பழக்கவழக்கங்களை விடுத்துச் செயலாற்றினால் சட்டத்தின் நிபந்தனைகளை அவர்கள் கையாளலாம். சில உண்டியல்கள் காசோலைபோல் தோன்றுகின்றன; ஏற்பு எழுத்தில் இருக்கவேண்டிய அவசிய மில்லை; மறுப்பு அறிவிக்கை விடவேண்டிய அவசியமில்லை.

உண்டியல்கள் இருவகைப்படும் :

1. காட்டப்பட்டதும் பணம் செலுத்தக்கூடிய தர்ஷானி (Dharshani) என்பது.

2. குறிப்பிட்ட காலத்திற்குப்பின் பணம் செலுத்தக்கூடிய முடாட்டி அல்லது மியாடி (Muddati or Miadi) என்பது. மேற்கூறிய வகைகளைச் சார்ந்து பொதுவாகப் பழக்கத்தி லிருக்கும் உண்டியல்களாவன :

1. ஷா ஜோக் (Shah Jog), 2. நாம் ஜோக் (Nam Jog), 3. தானி ஜோக் (Dhoni Jog), 4. ஜோக்மி (Jokmi) 5. ஜோவாபி (Jowabi).

1. ஷா ஜோக் என்ற உண்டியல் ஒரு ஷாவின் மூலமோ அல்லது ஒரு ஷாவிற்கு அல்லது வசதி படைத்தவருக்குச் செலுத்தக்கூடிய உண்டியலாகும். இது சேர்ப்பித்தல் மூலம் மாற்றலாம், மேலெழுதுதல் அவசியமில்லை; கீறப்பட்ட காசோலைக்குச் சமமாகும்.

2. நாம் ஜோக் என்ற உண்டியலில் யாருடைய பெயர் எழுதப்பட்டுள்ளதோ அவருக்குத்தான் பணம் செலுத்தப்படும்.

ஷாவிற்குச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. பெற்றிருப் போரின் உத்தரவு பெற்றவருக்குத் தரக்கூடிய ஓர் உத்தரவு முறையான ஃபிர்மேன்ஜோக் என்றும் இதை அழைக்கலாம்.

3. கொணர்பவருக்குச் செலுத்தக்கூடியதுதான் தானி ஜோக் என்ற உண்டியல். தானி என்றால் உரிமையாளர் அல்லது பெற்றிருப்போர் என்று பொருள்.

4. ஜோக்மி என்பது ஒரு நிபந்தனையுள்ள உண்டியலாகும். உண்டியல் எழுதப்பட்ட தொகையைச் சரக்குகள் வந்தால்தான் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை இவ் வுண்டியல் ஏற்றுள்ளது. மாற்றுச் சீட்டையும் காப்பீட்டுப் பாலிசையும் கலந்த ஒரு பத்திரமாக இது தோன்றுகிறது. பணம் முன்னதாகச் செலுத்துவதற்கும், கப்பல் பத்திரமாக வந்தடைந்தபோது பணத்தைப் பெறுவதற்கும் வேறுபாடுண்டு. உண்டியலைப் பெற்றுள்ளோரிடம் சரக்குக்கான பணத்தைத் தரச்சொல்லி வாங்குவோரிடம் விற்போர் கேட்டுக்கொள்வார். சரக்குகளைப் பெற்ற பிறகுதான் உண்டியலில் குறிப்பிடப்பட்ட பணத்தைத் தருவேன் என்ற நிபந்தனையுடன் வாங்குவோர் அதை ஏற்றுக் கொள்கிறார். காப்பீட்டுக் கம்பெனி நட்டவச்சத்தை ஏற்கிறது. எனவே, இவ் வகையான உண்டியல் வாங்குவோருக்கும் விற்போ ருக்கும் நன்மை பயக்கிறது; விற்போருக்குப் பணம் வருகிறது. வாங்குவோருக்குச் சரக்குகள் வந்தாலொழியப் பொறுப்பில்லை.

5. ஜோவாபி என்பது பணம் செலுத்தியவருக்குப் பணம் பெறுபவர் தரும் பதில் கடிதம் போலுள்ள ரசீது. ஒருவர் மற்றோரிடத்திலுள்ள ஒருவருக்குப் பணம் அனுப்ப வேண்டு மானால் பெறுபவருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதை வங்கி யரிடம் தருகிறார். வங்கியர் மேலெழுதிப் பெறுபவர் இடத்தி லிருந்து அண்மையிலுள்ள வங்கிக்கு அனுப்புகிறார். பெறுபவரும் பெற்றுக்கொண்டு பதில் கடிதம் போன்ற ரசீது தருகிறார். இந்த ரசீது முன்போலவே எழுதுபவரை அடைகிறது. உண்டியல் ஏற்கப்படாதபோது அதை முன்னர் வைத்திருந்தோர்கள் தற் சமயம் பெற்றுள்ளோர்க்குப் பயன்படுத்த அளிக்கும் பாதுகாப்புக் கடிதத்திற்குச் சிக்கிரி (Zikkiri Chit) என்று பெயர். மாற்றுச் சீட்டை மதிப்பதற்கு ஏற்கும் ஒருவரின் நிலையைப் போல் இது தோன்றுகிறது.

பங்குச் சீட்டுகள்

வரையறுக்கப்பட்ட பங்குகளையுடைய கம்பெனி பங்குச் சீட்டுகளை வெளியிடுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்கு

களைப் பெறும் உரிமையை அதைப் பெறுபவர் அடைகிறார். அத்தகைய பங்குச் சீட்டுகளை வெளியிடுவதற்கு முன்னர்ச் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

1. இவ் வெளியீட்டைக் கம்பெனியின் செயல்முறை விதிகள் ஒத்துக்கொள்ள வேண்டும்.

2. மத்திய அரசின் ஒப்புதல் பெறவேண்டும்.

3. கம்பெனியின் முத்திரையிட்டு அவை வெளியிடப்பட வேண்டும்.

4. பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக இருக்க வேண்டும்.

5. கொணர்பவருக்குச் செலுத்தக்கூடிய அத்தகைய பங்குச் சீட்டுகளைத் தனிக் கம்பெனி வெளியிடமுடியாது.

இப் பங்குச் சீட்டுகளை மாற்றுமுறையாவணமாக நாம் கருதலாம். பங்குச் சீட்டுகளைச் சேர்ப்பித்துப் பங்குகளை நாம் ஒருவருக்கு மாற்றிடலாம். பங்குச் சான்றிதழ் (Share Certificate) ஒரு மாற்றுமுறை யாவணமன்று. இதில் உரிமைமாற்றம் செய்பவரைவிட உரிமை மாற்றம் பெற்றவருக்கு நல்லதோர் உரிமை போய்ச் சேராது. ஒரு பங்குச் சீட்டு அளிக்கப்பட்டவுடன் உறுப்பினர் பதவியிலிருந்து அவ் வுறுப்பினரின் பெயர் நீக்கப்படும். பங்குச் சீட்டுப் பற்றிய விவரங்கள் அதில் குறிப்பிடப்படுகின்றன. பங்குச் சீட்டுப் பெற்றுள்ளோர் இன்னும் கம்பெனியின் உறுப்பினராகக் கருதப்படுகிறார். ஆனால், கம்பெனியின் செயல்முறை விதிகள் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும். பங்குச் சீட்டு என்னும் சொற்கள் பங்குத் தொகுப்புச் சீட்டையும் (Stock Warrant) உள்ளடக்கியுள்ளன.

இலாப ஈவுச் சீட்டு

இலாப ஈவுச் சீட்டு ஒரு காசோலையாகக் கருதப்படுகிறது. உண்மையிலே இலாப ஈவுச் சீட்டு என்பது ஒரு கம்பெனி ஒரு வங்கியருக்குத் தன்னுடைய பதிவுபெற்ற பங்குதாரருக்கு அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைச் செலுத்தச் சொல்லி இடும் உத்தரவாகக் கருதப்படுகிறது. மேலும் அது ஒரு ரசீதுபோலத் தோன்றுகிறது. இலாப ஈவுச் சீட்டு ஒரு மாற்றுமுறையாவணமாகக் கருதப்பட்டு வங்கியர் ஒரு காசோலை தொடர்பாக எந்தெந்த எச்சரிக்கை எடுக்கின்றாரோ அதே எச்சரிக்கையையும் இதற்காக எடுக்கிறார். காரணம் இலாப ஈவுச் சீட்டைச் செலுத்துவதற்கும் பெறுவதற்கும் சில முன்னெச்சரிக்கை எடுப்பது

அவசியம். காசோலைபோல் இதுவும் கருதப்படலாம். இவை களையும் சேர்ப்பித்தும் மேலெழுதிச் சேர்ப்பித்தும் மாற்றிடலாம். முறைப்படி பெற்றவர் முழு உரிமை பெறுகிறார்.

மாற்றுமுறையாவணங்களுடன் தொடர்புடைய நபர்கள் (Parties to Negotiable Instruments)

ஒப்பந்தம் செய்வதற்குத் தகுதியுடைய எவரும் மாற்றுமுறை யாவணத்திற்குரிய நபர்களாகும் உரிமை உள்ளவராகிறார்கள். பொறுப்பேற்கும் தகுதியும் இவர்களுக்குண்டு. ஒப்பந்தத் திறமை யுள்ளவர் பொறுப்பேற்பதைப் போலவே மாற்றுமுறையாவண நபர்களும் பொறுப்புள்ளவர்களாகத் திகழ்கின்றனர். தம்மை விடுத்து மற்றவர்களைக் கட்டுப்படுத்தும்படி ஓர் உரிய வயது அடையாத இளையவர் (மைனர்) மாற்றுமுறையாவணங்களை எழுதலாம் அல்லது விடுக்கலாம். எடுத்துக்காட்டாக, அரசன் என்பவர் உரிய வயதில்லா இளையவர். அவர் பரந்தாமன்மீது ஒரு மாற்றுச் சீட்டு எழுதுகிறார். அதைச் சக்கரபாணிக்குத் தருகிறார். பரந்தாமன் அதை ஏற்றுக்கொண்டுவிட்டதால் பொறுப்பாளியாகிறார். அதே சமயம் உரிய வயதில்லாக் காரணத்தால் அரசன் எவ்விதப் பொறுப்புமின்றி விளங்குகிறார். எனவே, உரிய வயதில்லா இளையவர் எப்பொழுதும் உரிமை பெறுவாரேயன்றி வரும் பொறுப்புகளுக்குப் பொறுப்பாக மாட்டார்.

அமைப்பு முறையோடு அனுமதித்தால் ஒரு கம்பெனியும் மாற்றுமுறையாவணம் விடுக்கலாம். ஒரு வணிகக் கம்பெனி இது விஷயத்தில் தொக்கிய அதிகாரத்தையும், வணிகம் நடத்தாத கம்பெனி இதற்குரிய தனிப்பட்ட முறையில் பெற்ற அதிகாரத்தையும் கொண்டு விளங்கவேண்டும். ஒரு முகவரின் (பதிலாள்) செயல்களுக்கு முதல்வர் கட்டுப்பட்டாக வேண்டும். ஆனால், முதல்வரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்தை முகவர் பெற்றிருக்கவேண்டும். முகவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொதுப்படையான அதிகாரம், ஒரு மாற்றுச் சீட்டை ஏற் பதற்கோ அல்லது மேலெழுதுவதற்கோ செல்லாது. அதேபோல் விடுப்பதற்கு வழங்கிய அதிகாரம் மேலெழுதுவதற்குச் செல்லாது. எனவே, முகவர் ஒவ்வொன்றிற்கும் தனிப்பட்ட அதிகாரம் பெற்றிருக்கவேண்டும். ஒரு முகவர் ஒரு பத்திரத்தில் கையொப்பம் இடும்போது ஒரு முகவராகப் பாவித்துக் கையெழுத்திடா விட்டால் எல்லாப் பொறுப்பும் அவரைச் சாரும். ஒரு மாற்றுச் சீட்டில் B-யின் மேலாளர் A (A, Manager of B) என்று கையெழுத்திட்டால் முகவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளி

யாவார். ஆனால் A-ன் முகவர் B (B, by Agent of A) என்று கையெழுத்திட்டால் முகவர் பொறுப்பாளியாகமாட்டார். அவ்வாறு கையெழுத்திட்டால் முதல்வரின் சார்பாக முகவர் (Principal per pro Agent) என்று பொருள்படும். ஒரு முகவர் தமக்களிக்கப் பட்ட அதிகாரத்திற்கும் மிஞ்சிச் செயல்பட்டால் தனிப்பட்ட முறையில் அவர் பொறுப்பாளியாவார். அதிகார நம்புறுதி மீறுகைக்காக அவர்மீது வழக்குத் தொடுக்கப்படலாம். கூட்டாண்மையில் இவ்விதம் ஒவ்வொரு கூட்டாளியையும் கட்டுப் படுத்தும் தொக்கிய அதிகாரம் உள்ளது.

இந்துக் கூட்டுக் குடும்பத்தின் மேலாளர், உரிய வயது வராத இளையவர் பங்கு உட்பட அனைவரையும் கட்டுப்படுத்தும் தொக்கிய அதிகாரம் பெற்றுள்ளார். இங்கும் இளையவர் தனிப் பட்ட முறையில் பொறுப்பாளியல்லர். ஒரு சட்டபூர்வமான வாரிசுதாரர் தாம் பெற்ற சொத்துகளுக்கு ஏற்பத் தம் பொறுப்பை வரையறுத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாவார். இல்லா விட்டால் அவர் அப் பொறுப்பிலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும். ஒரு முறையாவணம் இறந்துவிட்டவரால் மேலெழுதிக் கொடுக்கப்படாது இருந்தால் அவரின் வாரிசு வாரிசுதாரர் வெறும் சேர்ப்பால் மட்டும் உரிமைமாற்றவும் முடியாது. அவர் அதை மறுபடியும் மேலெழுதிக் கொடுக்கவேண்டும்.

கடனுறுதிச் சீட்டில் எழுதுபவரும், பெறுபவரும்தாம் நபர்கள். சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை எழுதுபவர் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார். கொடுக்கத் தவறினால் நட்ட ஈடு தரவேண்டும்.

முன்னர்க் கூறிய விதம் மாற்றுச் சீட்டில் மூன்று நபர்கள் தொடர்பு கொண்டுள்ளனர் — எழுதுபவர், பெயரவர் (ஏற்பவர்), பெறுபவர். சீட்டு ஏற்கப்படும்வரை எழுதுபவர் பொறுப்பாளி யாவார். ஏற்பு ஏற்பட்ட பின்னர் அவர் பொறுப்பு இரண்டாம் பட்சமானதே. மறுப்பு அறிவிக்கை கொடுக்கப்பட்டால் அதைப் பெற்றுள்ளவர்களுக்கு ஈட்டுத்தொகை தரவேண்டிய பொறுப்பும் அவருக்குண்டு. காசோலையில் பெயரவர் எப்பொழுதும் வங்கியர் ராக இருப்பதால் அவரிடம் போதுமான பணம் இருக்கும்போது காசோலைப் பணத்தைச் செலுத்துவதற்கு மறுக்கக்கூடாது. மாற்றுச் சீட்டை மதிக்கும் பொறுப்பு அவருக்குண்டு. ஏற்பவர் களில் இருவகையுண்டு: 1. தேவைக்காக ஏற்பவர். 2. நாணயத் திற்காக ஏற்பவர்.

1. மாற்றுச் சீட்டிலோ மேலெழுத்திலோ தேவைப்பட்டால் கேட்குமாறு பெயரவரோடு மற்றொரு நபரின் பெயரும் குறிப்பிட்டிருந்தால் அவரைத் தேவைப் பெயரவர் (Drawee in case of need) என்று கூறுவர். மாற்றுச் சீட்டு அவமதித்துவிட்டதாகக் கருதப்படுவதற்குமுன் இவரிடம் மாற்றுச் சீட்டுக் காண்பிக்கப் படும்போது மறுப்புச் சீட்டோ அல்லது மறுப்புச் சான்றிதழோ வழங்க வேண்டிய அவசியமில்லை. முதன்முதலில் ஏற்றவர் பணத்தைச் செலுத்தி மாற்றுச் சீட்டை மதித்துவிட்டால் தேவைக்காக ஏற்றுக்கொண்டவருக்குப் பரிகாரம் தோன்றும். நாணயத்திற்காக ஏற்பவர் என்பவர், ஏற்கெனவே ஒரு மாற்றுச் சீட்டிற்குப் பொறுப்புள்ள ஒருவரின் மதிப்பை மீட்கும் பொருட்டு மேலே கூறப்பட்ட மறுப்புச் சான்று பெற்றுள்ள மாற்றுச் சீட்டை ஏற்பவர். ஏற்புச் செய்யாததால் மறுக்கப்பட்ட மாற்றுச்சீட்டில் தான் இது நடைபெறும். எவருடைய மதிப்பிற்காக அவர் ஏற்கிறார் என்பதைக் குறிக்கவேண்டும். இதை அவர் குறிக்காமல் வாளாவிருந்தால் எழுதுபவரின் மதிப்பிற்காக மாற்றுச் சீட்டு ஏற்கப்படுகிறது என்று எடுத்துக்கொள்ளப்படும். யாருக்காக இவர் ஏற்றுக்கொள்கிறாரோ அவருக்குப்பின் வரும் நபர்களுக்கும் இவர் பொறுப்பாளியாவார். உதாரணமாக அ, ஆ, இ, ஈ, உ என்பவர்கள் நபர்களாகத் திகழ்கிறார்கள். 'இ'-க்காக மாற்றுச் சீட்டு ஏற்கப்படுகிறது. நாணயத்திற்காக ஏற்கும் ஏற்பவர் ஈ, உ என்பவர்களுக்குப் பொறுப்பாளியாவார்; ஆனால் அ, ஆ-க்குப் பொறுப்பாளியாகமாட்டார். தவணைத் தேதிக்கு முன்னரே மாற்றுச் சீட்டுத் தொகையைக் கோரி ஏற்பவருக்குச் சீட்டைக் கொடுக்கவேண்டும். அவர் பொறுப்பேற்கும் குற்றம் காட்டப்பட மறுப்பு அறிவிக்கை தரவேண்டும். சில சூழ்நிலைகளில் சீட்டுத் தொகை அவருக்கு வழங்கப்படுகிறது. ஏற்புச் செய்யாததற்கு மறுப்புச் சீட்டும் மறுப்புச் சான்றிதழும் பெற வேண்டும். மாற்றுச்சீட்டைப் பெற்றிடுபவருடைய இசைவு அவசியம். நாணயத்திற்காக ஏற்பதை மாற்றுச் சீட்டின்மேல் எழுத்தால் எழுத வேண்டும். எழுதி ஓர் அந்நியரால் தரப்பட வேண்டும். ஏற்கெனவே பொறுப்புள்ள ஒருவரால் தரக்கூடாது. கடனுறுதிச் சீட்டுக்கு இது பொருந்தாது.

2. இதேபோல் பொறுப்புள்ள ஒருவரின் நாணயத்தைக் காக்க மேலே குறிக்கப்பட்டுள்ள மறுப்புச் சான்றுள்ள மாற்றுச் சீட்டின் தொகையைச் செலுத்த வேறு ஒருவர் முன்வரும் பொழுது 'நாணயத்திற்காகச் செலுத்துதல்' (Payment for honour) தோன்றுகிறது. பணம் செலுத்தாததற்கு மறுப்புச் சீட்டும் மறுப்புச் சான்றிதழும் பெற்ற மாற்றுச் சீட்டில்தான்

இது ஏற்படும். சீட்டைப் பெற்றிருப்போரின் இசைவு அவசிய மில்லை. எவருடைய நாணயத்தைக் காப்பாற்ற இவர் ஏற்கிறார் என்பதைச் சான்றுறுதி அதிகாரி முன்னர் உறுதியாகக் கூற வேண்டும். சான்றுறுதி அதிகாரி அவ் வுறுதிக் கூற்றைப் பதிவு செய்து கொள்வார். ஏற்கெனவே பொறுப்புள்ள நபர் உட்பட யார் வேண்டுமானாலும் நாணயத்திற்காக ஏற்பவராக இருக் கலாம். முதலில் ஏற்பவர் பணத்தைச் செலுத்தும்போது ஒரு மாற்றுச்சீட்டை உடையவருக்கு என்ன உரிமையுண்டோ அவ் வுரிமை இவருக்கும் உண்டு. எவருடைய நாணயத்திற்காக இவர் பணம் செலுத்தினாரோ அவரிடமிருந்து தம் பணத்திற்கு வட்டியும் செலவுத் தொகையும் சேர்த்து வசூலிக்க இவருக்கு உரிமை உண்டு.

பெறுபவரும் உடையவரும் (Payee and Holder)

முறையாவணத்தில் எவருடைய பெயர் குறிக்கப்பட்டு யாருக்கு அல்லது எவருடைய உத்தரவிற்குப் பணம் செலுத் தும்படி கட்டளை இடப்படுகிறதோ அவர்தாம் பெறுபவர் (Payee); மேலெழுதப்படுபவர் அவர் அல்லர். ஆனால், அவர் வேறு யாருக்கும் மாற்றுச் சீட்டை மேலெழுதலாம். முறை யாவணத்தை யாரொருவர் தம் முழு உரிமையுடன் பெற்றிருக் கிறாரோ, யார் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தைப் பெறு கிறாரோ அவர்தாம் உடையவர் (Holder) என்பவர். எனவே மாற்றுச் சீட்டை வெறுமனே வைத்திருப்பவர் உடையவரல்லர். அதை முழு உரிமையுடன் வைத்திருப்பவர்தாம் உடையவராவர். அவர் முறையாவணத்தின் பேரில் வழக்குத் தொடரலாம்; செல்லத்தக்க தீர்த்தல் (Discharge) நிறைவேற்றலாம்; முறையா வணத்தை மாற்றிடலாம். இவருக்கு எல்லா நபர்களும் பொறுப்பாளியாவார்கள்.

உரிமைமாற்றம் செய்தவரின் உரிமையில் உள்ள குறைபாடு களையும் பொருட்படுத்தாமல் செலுத்தப்பட வேண்டிய தவணைத் தேதிக்கு முன்னர் மறுபயன் கருதி, யாரொருவர் ஒரு மாற்றுமுறையாவணத்தைப் பெறுகின்றாரோ அவர்தாம் முறைப்படி உடையவர் (Holder in due course) ஆவார். இந்தியச் சட்டத்தின்கீழ் அவர் முறையாவணத்தின் மேலெழுதப்பட்ட வராகவும் பெறுபவராகவும் இருக்கலாம். ஆனால், ஆங்கிலச் சட்டத்தின்படி அவ்வாறிருக்க முடியாது. இவர் சில சிறப்புரிமை களைப் பெற்றுள்ளார்:

1. உரிமைமாற்றம் செய்தவரின் உரிமையில் இருக்கும் குறைபாடுகளைப் பொருட்படுத்தாமல் அவர் உரிமை

பாதிக்கப்படாத நிலையில் முறையாவணத்தை அவர் பெறுகிறார்.

2. அவருக்கெதிராக நிபந்தனையுள்ள சேர்ப்பு வேண்டப் படாது.

3. வேறு எவருக்கும் பணம் பெற்றுக்கொண்டோ அல்லது பெற்றுக்கொள்ளாமலோ பத்திரங்களை அவர் மாற்றிட லாம்.

4. எழுதுபவர்களின் தோற்றம், அவர்களின் கையெழுத்து களின் உண்மை, எழுதுவதற்குள்ள தகுதி, மேலெழுது தல், பெறுபவரின் இருப்பிடம், மேலெழுதுவதற்கு அவருக்குள்ள தகுதி போன்றவைகளை உடையவருக்கு மறுக்காமல் ஏற்பவர் தெரிவிக்கவேண்டும்.

5. இதேபோல் பெறுபவரின் தோற்றம், மேலெழுதுவதற் குள்ள தகுதி முதலியவைகளை மறுப்பதிலிருந்து எழுது பவர் முரண்தடை செய்பவராகிறார்.

6. இதேபோல் எழுதுபவரின் கையெழுத்து, மேலெழுதுதல் போன்ற பொருண்மைகளை மறுப்பதிலிருந்து மேலெழுது பவர் முரண்தடை செய்யப்படுகிறார்.

7. எழுதுபவர் உண்மையில் புனைவு நபர் (கற்பனை மனிதர்) என்று முறைப்படி பெறுபவரிடம் ஏற்பவர் சொல்லக்கூடாது.

8. உத்தரவுக்காகச் செலுத்தப்படுகின்ற பத்திரத்தைப் பொய்க் கையெழுத்திட்டு மேலெழுதினால் முறைப்படி பெறுபவர்கூடப் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. காரணம், பொய்க் கையெழுத்திட்ட மேலெழுத்து உண்மையான மேலெழுத்தாகாது. உத்தரவுப்படி செலுத்தும் முறையாவணமாக இருப்பதால், அதை மாற்றுவதற்கு மேலெழுதிச் சேர்ப்பிக்க வேண்டும். அத்தகைய மேலெழுத்துப் பொய்யானதாக ஆகிவிட் டால் மாற்றுத்தன்மை குறைபாடு உடையதாக ஆகிவிடும், மாற்றமுடியாது. இப் பொய்க் கையெழுத்துத் தவிர, மற்றவைகளில் முறைப்படி பெறுபவர் குறை பாடில்லா உரிமையைப் பெற்றராவார். முறைப்படி பெறுபவரிடமிருந்து உரிமை மாற்றம் செய்யப்பட்ட வருக்கு அவரைப்போல் முழு உரிமை உண்டு.

முறைப்படி செலுத்துதல் (Payment in due course)

ஒரு மாற்றுச் சீட்டின் பெயரவரை அல்லது ஏற்பவரைப் பொறுத்தமட்டில் அவர் எழுதுபவருக்குத் தரவேண்டிய பணம் முழுதும் கொடுத்துக் கணக்குத் தீர்த்தலுக்கு இது மிகவும் அவசியம். முறைப்படி செலுத்துவதைச் செயலாற்றுவதற்கு முறையாவணத்தில் எழுதப்பட்டுள்ள நிபந்தனைகள்படி நடக்க வேண்டும். குறைந்த தொகையோ அல்லது அதிகப்படியான தொகையோ செலுத்தக்கூடாது. தவணைத் தேதிக்கு முன்னரும் பணம் செலுத்தக்கூடாது. மாற்றுச் சீட்டின்மீது பொறுப்புள்ள ஒருவரால் நன்னம்பிக்கையுடனும், புறக்கணிப்பில்லாமலும் பணம் செலுத்தப்படவேண்டும். யாருக்குப் பணம் செலுத்தப்படுகிறதோ அவரிடம் முறையாவணம் இருக்கவேண்டும். பணம் பெறுவதற்கு அவருக்கு உரிமையில்லை என்று நம்புவதற்கே அடிப்படை இருக்கக்கூடாது. பொய்க் கையெழுத்தான முறையாவணங்களை விடுத்து மற்றவைகளில் முறைப்படி செலுத்துதல் ஏற்பட்டுவிட்டால், அங்கு முழுப் பைசல் அல்லது தீர்த்தல் ஏற்பட்டுவிட்டது என்று பொருள்.

மேலெழுதுபவர் (Endorser)

மாற்றுச் சீட்டு மறுக்கப்படும் நிலையில் ஒவ்வொரு மேலெழுதுபவரும் பின்தொடர்ந்து வருகின்ற உடையவர்களுக்குப் பொறுப்பாளியாகிறார். ஒவ்வொரு மேலெழுதுபவரும் மாற்றுச் சீட்டு அவமதிக்கப்பட்டவுடன், கோரியவுடன் செலுத்தும் முறையாவணத்திற்குப் பொறுப்பாளியாவார். இதைப் பொறுத்து இரண்டு நிபந்தனைகள் தேவை :

1. வரைநிலை மேலெழுத்தால் (Qualified Endorsement) பொறுப்பினை வரையறுக்கக்கூடாது.

2. எதிர்மறையான ஒப்பந்தம் இருக்கக்கூடாது. முறையாவணத்தின் தொகை முழுதும் செலுத்தப்படும்வரை அதன் முன்பு அதைப் பெற்றுள்ள ஒவ்வொருவரும் முறைப்படி பெறுபவருக்குப் பொறுப்பாளியாவார். கடனுறுதிச் சீட்டை எழுதுபவரும், ஏற்புவரையுள்ள மாற்றுச் சீட்டு எழுதுபவரும், ஏற்பவரும் முக்கியக் கடனாளிகளாகப் பொறுப்பாளியாவார்கள் என்பதை முன்னரே கண்டோம். பொறுப்புள்ள மற்றவர்கள் எழுதுபவருக்கும் ஏற்பவருக்கும் பிணையாள்களாவார்கள். அப் பிணையாள்களுக்குள்ளேகூட முன்வந்தவர்கள் பின் வந்தவர்களுக்கு முக்கியக் கடனாளியாவார்கள். எடுத்துக் காட்டாக, 'அ' என்பவர் 'இ'-க்குச் செலுத்தக்கூடிய மாற்றுச்

சீட்டை 'ஆ'வின் மீது எழுதுகிறார். 'ஆ' அதை ஏற்கிறார். 'இ' அதை 'ஈ'-க்கு மேலெழுதுகிறார். பின்னர் 'ஈ' அதை 'இ'-க்கு மேலெழுதுகிறார் என வைத்துக் கொள்வோம். இந்நிலையில் எல்லா நபர்களும் 'உ'-க்குப் பொறுப்பாளியாவார். 'உ', 'ஆ' இவர்களிடையேகூட 'ஆ' தான் முக்கியக் கடனாளியாவார். அ, இ, ஈ என்போர் பிணையாள்களாவார்கள். உ, அ இவர்களிடையே ஏற்புக்கு முன்னர் 'அ' என்பவர் முக்கியக் கடனாளி. இ, ஈ என்பவர் பிணையாள்கள். உ, இ இவர்களிடையே 'இ' என்பவர் முக்கியக் கடனாளி. 'அ'-வுக்கும் 'இ'-க்கும் இடையே 'அ' என்பவர் முக்கியக் கடனாளி, 'இ' என்பவர் பிணையாள்; 'இ'-க்கும் 'ஈ'க்கும் இடையே 'இ' என்பவர் முக்கியக் கடனாளி, 'ஈ' என்பவர் பிணையாள்.

மறுப்பு அல்லது அவமதிப்பு
(Dishonour)

ஏற்பு ஏற்கப்படாவிட்டாலும், பணம் செலுத்தப்படாவிட்டாலும் மாற்றுச் சீட்டு மறுக்கப்படும் அல்லது அவமதிக்கப்படும். பெயரவர் மாற்றுமுறையாவணத்தை ஏற்க மறுக்கும்போது, அது ஏற்காமையினால் மறுக்கப்படுகிறது. கூட்டாளிகள் இல்லாத அநேக பெயரவர்கள் இருக்கும்போது அவர்களில் ஒருவர் ஏற்க மறுத்தாலும் ஏற்காமையினால் பத்திரம் மறுக்கப்படுகிறது. காட்டிய பிறகு செலுத்தக்கூடிய மாற்றுச் சீட்டு ஏற்புக்காகக் கொடுக்கப்படவேண்டும். இந்நிலைகளில் இவ்வாறு ஏற்புக்காகக் கொடுக்கப்பட வேண்டியதில்லை. இத்தகைய மறுப்பு ஏற்பட்டால் மறுப்பு அறிவிக்கை உடையவர் எழுதுபவருக்கும், பொறுப்புள்ள அனைவருக்கும் விடவேண்டும். கடனுறுதிச் சீட்டை எழுதிபவர் மாற்றுச் சீட்டின் பெயரவர், காசோலையின் பெயரவர் ஆகியவர்கள் முறையாவணங்களைத் தகுந்த முறையில் கொடுத்துப் பணம் செலுத்த வேண்டும்போது அவர்கள் தவற்றினால் ஏற்படுவதுதான் செலுத்தாததால் ஏற்படும் மறுப்பு. இந்நிலைகளில் செலுத்துவதற்குக் கொடுக்கவேண்டிய விதி தளர்த்தப்படுகிறது.

செயல்முறை

யாருக்கு மாற்றுச் சீட்டின் பணம் தரவேண்டியிருக்கிறதோ அவருடைய அதிகாரபூர்வமான முகவருக்கு மறுப்பு அறிவிக்கை கொடுக்கவேண்டும். இறந்துவிட்டவரின் வாரிசுதாரருக்கும் நொடித்துப் போனவரின் சொத்தைப் பரிபாலிக்கும் அதிகாரிக்கும் மறுப்பு அறிவிக்கை அனுப்பவேண்டும். அறிவிக்கைக்கு என

தனிப்பட்ட அமைப்புக் குறிப்பிடப்படவில்லை. எழுத்து மூலமான அறிக்கையாக இருந்தால் தபாலில் அனுப்பவேண்டும். அவ் வறிக்கை கீழ்க்காண்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:

1. மறுப்பின் உண்மைத் தகவல்.
2. எவ்விதத்தில் மறுக்கப்பட்டது ?
3. பொறுப்பேற்க வேண்டிய நபர்கள் யாவர் ?

தொழில் நடக்கும் இடத்திலிருந்தோ நபரின் இல்லத்தி லிருந்தோ ஏற்றுக்கொள்ளக்கூடிய காலத்திற்குள் மறுப்பு ஏற்பட்ட வுடன் இவ் வறிவிக்கை கொடுக்கப்படவேண்டும். இவ் வறிவிக்கை தவறான செய்தியைத் தருமேயானால், செல்லாமற் போய்விடும்.

இவ் வறிவிக்கையைப் பெற்றவுடன் ஒருவர் முறை யாவணத்தை முன்னர்ப் பெற்றிருந்து பொறுப்பேற்கும் நபர்களுக்கு இவ் வுண்மையைத் தெரிவிக்கவேண்டும். இவ்வாறு அவர்கள் அறிவிக்கையைப் பெற்றுக்கொண்டுவிட்டால் மறு அறிவிக்கை அனுப்பவேண்டிய அவசியமில்லை. ஒரு முகவர் அவர் முதல் வருக்கு இத்தகைய அறிவிக்கை ஒன்று தரவேண்டும். ' இறந்த வருக்கு அறிவிக்கை அனுப்பப்பட்டுவிட்டால் அவரின் வாரிசு தாரருக்கு அனுப்பவேண்டிய அவசியமில்லை. ஒருவர் இறந்தது உடையவருக்குத் தெரியாமலிருக்கும்போது அறிவிக்கை அவசிய மில்லை. தேவைக்காக ஏற்பவரிடம் மறுப்பு அறிவிக்கை விடுவ தற்கு முன்பு, முறையாவணம் காட்டப்பட வேண்டும் என்று முன்னரே சொல்லப்பட்டுள்ளது. இவ்விதம் அவருக்கு மாற்றுச் சீட்டுக் கொடுக்கப்படாவிட்டால் அது மறுக்கப்பட்டதாகவே ஒப்புக்கொள்ள முடியாது. ஏற்பில்லாமல் மாற்றுச் சீட்டு மறுக்கப் பட்டால், ஏற்பவர் பொறுப்பாளியல்லர். காரணம் மாற்றுச் சீட்டின் தொடர்பான நபர் அவரல்லர். பணம் செலுத்தாமல் மறுப்பு ஏற்பட்டால் பெயரவர் பொறுப்பாளியாவார். காரணம் அவர் மாற்றுச் சீட்டை ஏற்றவுடனே அதற்குரிய நபராகி விட்டார்.

மாற்று முறையாவணச் சட்டத்தின் பிரிவு 98-ன்படி கீழ்க் காணும் நிலைகளில் மறுப்பு அறிவிக்கை கொடுக்கவேண்டிய தேவை இல்லை:

1. அறிவிக்கை பெற உரிமையுடைய நபர் அவ் வுரிமையை விட்டுக்கொடுத்தால் அறிவிக்கை செய்யவேண்டிய அவசியமில்லை.

2. எழுதுபவர் செலுத்தலை ரத்துசெய்துவிட்டால் அவருக்கு அறிவிக்கை விடவேண்டிய அவசியமில்லை. காரணம், பணம் செலுத்துதல் ரத்தானதால் மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டது அவருக்குத் தெரியும்.

3. ஒரு நபரைத் தேடியலைந்து அவர் காணப்படாவிட்டாலும் அல்லது தவிர்க்கமுடியாத காரணங்களால் உடையவர் அறிவிக்கைவிட முடியாத நிலையிலிருந்தாலும் அது கொடுக்கப்பட வேண்டியதில்லை.

4. சரக்குகளை அனுப்பாமல் எழுதுபவர் மாற்றுச் சீட்டை எழுதினாலும் அல்லது அறிவிக்கை விடாததால் ஒருவருக்குச் சேதமடையாத நிலையிலிருந்தாலும் அது தேவையில்லை.

5. எழுதுபவரே ஏற்பவராக இருக்கும்போதும் அறிவிக்கை தேவை இல்லை.

6. ஒருவர் நிலைமையை அறிந்து நிபந்தனைகள் ஏதுமின்றிப் பணம் செலுத்த வாக்களித்தபோதும் அறிவிக்கை தேவை இல்லை.

கொடுக்கப்படல் (Presentation)

மாற்றுமுறையாவணத்தை ஏற்பவருக்கோ கடன் உறுதிச் சீட்டை எழுதுபவருக்கோ அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்யும்பொருட்டு அவர்களிடம் கொடுக்கப்படுவதுதான் ஆங்கிலத்தில் 'Presentment' என்று சொல்லப்படுகிறது. பணம் செலுத்தச் சொல்லிக் கோருவது மட்டும் போதாது ; முறையாவணங்கள் மெய்யாகவே அவர்களிடம் கொடுக்கப்பட வேண்டும். நபர்களின் இறப்பு அல்லது நொடிப்பு, முறையாவணம் தொலைந்துபோதல் ஆகியவைகளைக் கொடுக்கப்படாததற்குக் காரணங்களாகக் காட்டக்கூடாது. ஆவணங்கள் ஏற்கப்படுவதற்காகவும், அவைகளின் தொகை செலுத்தப்படுவதற்காகவும் கொடுக்கப்படுவதுண்டு.

ஏற்புக்காகக் கொடுக்கப்படல் (Presentment for Acceptance)

சிலவகையான மாற்றுச் சீட்டுகளுக்கு இஃது அவசியம். மாற்றுச்சீட்டைக் காட்டிய பிறகு (After Sight) கொஞ்ச நாள்களுக்குள் செலுத்துதல் ஏற்பட்டாலும் இது தேவை. ஏற்பதற்கு மாற்றுச்சீட்டைக் கொடுக்கவேண்டும் என்று வெளிப்படையான நிபந்தனையுள்ளபோதும் இது மிகவும் அவசியம். தவணைத்

தேதியைக் குறிப்பிடுவதற்குக் கொடுக்கப்படல் அவசியம் தேவைப்படுகிறது. கோரியவுடன் செலுத்தக்கூடிய சீட்டிற்கும் தவணைத் தேதிக்குப்பின் சில நாள்களில் செலுத்தக்கூடிய சீட்டிற்கும், ஒரு குறிப்பிட்ட நாளில் செலுத்தக்கூடிய சீட்டிற்கும் கொடுக்கப்படல் தேவையில்லை. இந்த வகைகளில் சீட்டை ஏற்பதற்காகக் கொடுப்பதுவும் கொடுக்காததும் நபர்களின் விருப்பத்தைப் பொறுத்துள்ளது. எழுதுபவர்களுக்கும் அல்லது அவர் தம் அதிகாரம் பெற்ற முகவர்களுக்கும் கூட்டாளியில்லாத எல்லா ஏற்பவர்களுக்கும், ஏற்பவர் இறந்துவிட்டால் அவரின் வாரிசுதாரர்களுக்கும், ஏற்பவர் நொடித்துவிட்டபோது சொத்தாட்சி அதிகாரிக்கும் மாற்றுச் சீட்டுக் கொடுக்கப்படல் வேண்டும். ஏற்பைக் கோரும் உரிமை பெற்ற ஒருவருக்கு அவர் தம் இல்லத்திலோ அலுவலகத்திலோ அலுவலக நேரத்தில் நியாயமான காலவரைக்குள் முறையாவணம் கொடுக்கப்படல் வேண்டும். அனுமதிக்கப்பட்டிருந்தால், பதிவுத் தபாலில் அதை அனுப்பலாம். முறையாவணத்தைக் கொடுக்காவிட்டால் ஏற்பவர் தம் பொறுப்பிலிருந்து தீர்த்தல் அடைகிறார். ஏற்பவரைக் காணாத போதும் அவர் புனைவு நபராக (கற்பனையான ஆளாக) நிரூபிக்கப்பட்டபோதும் ஏற்புக்காகக் கொடுக்கப்பட வேண்டியதில்லை. மாற்றுச் சீட்டுகளும் அவமதிக்கப்பட்டுவிடும். ஒரு மாற்றுச் சீட்டை ஏற்பதற்கு முன்னர் ஏற்பவருக்கு ஆழ்ந்து யோசனை செய்ய 48 மணி நேரம் தரப்படுகின்றது. அதற்குள் அவர் யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

செலுத்துவதற்காகக் கொடுக்கப்படல் (Presentment for Payment)

எல்லாக் கடனுறுதிச் சீட்டுகளும், மாற்றுச் சீட்டுகளும், காசோலைகளும் தவணைத் தேதியில் செலுத்தப்படுவதற்காகக் கொடுக்கப்படவேண்டும். இதைச் செய்யத் தவறிவிட்டால், உடையவருக்குப் பணம் செலுத்த மற்றவர்கள் பொறுப்பாளியாக மாட்டார்கள். கோரினவுடன் செலுத்தக்கூடிய கடனுறுதிச் சீட்டிற்குச் செலுத்துவதற்காக அது கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை. முறையாவணங்களை வழக்கமான அலுவல் நேரங்களில்தான் கொடுக்கவேண்டும். கடனுறுதிச் சீட்டுப் பணத்தைத் தவணை முறையில் செலுத்துவதாக இருந்தால் ஒவ்வொரு தவணை செலுத்தக் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குப் பின் மூன்றாம் நாள் கொடுக்கவேண்டும். அவற்றைக் குறிப்பிட்ட இடத்தில் கொடுக்கவேண்டும். காசோலை பெற்ற நியாயமான காலவரைக்குள் உடையவரால் கொடுக்கப்பட வேண்டும். பின்காணும் நிலைகளில் செலுத்துவதற்காக முறையாவணங்கள்

கொடுக்கப்பட வேண்டியதில்லை. மேலும், அவை கொடுக்கப் பட வேண்டிய தேதியில் மறுக்கப்படும்.

1. எழுதுபவரும் ஏற்பவரும் வேண்டுமென்றே முறை யாவணம் கொடுப்பதைத் தடுக்கும்போது தொழில் இடத்தை மூடிவிடும்போதும், தேடியும் அவர்கள் காணப்படாதபோதும் ஆவணங்கள் கொடுக்கப்பட வேண்டா.
2. ஆவணங்கள் கொடுக்கப்படாவிட்டால்கூடப் பணம் செலுத்தப்படுகின்றபோதும் அது தேவையில்லை.
3. ஏற்பவர், தொகையின் ஒரு பகுதியைச் செலுத்திவிட்டு மீதியைப் பின்னர்த் தருவதாக உறுதி அளித்தபோதும் அது தேவையில்லை.
4. செலுத்துவதற்குக் கொடுக்கப்பட வேண்டியதில் ஏற் படும் தவற்றைத் தமக்கு அனுகூலமாக எடுத்துக்கொள் ளும் உரிமையை ஒருவர் விட்டுவிட்டாலும் கொடுக்கப் படுவது தேவையில்லை.
5. கொடுக்கப்படாமையினால் எழுதுபவருக்கு நட்டமேற் படாதபோதும் அது கொடுக்கப்பட வேண்டியதில்லை.

மறுப்புக் குறிப்பு (Noting)

ஒரு மாற்று முறையாவணத்தை உடையவர் ஒருவர் மறுப்பு அறிவிக்கை வெளியிடுவதற்கு முன்னர், மறுப்புபற்றிய பொருண் மையை ஒரு சான்றுறுதி அதிகாரி (Notary Public) மூலம் குறித்துப் பெற வேண்டும். அக் கடிதம் மறுப்பு பற்றிய உண்மைத் தகவல், மறுப்பின் தேதி, மறுப்பின் காரணம், மறுப்புக் கட்டணம் முதலியவைகளைக் குறிக்கின்றன. குறிப்புக் கட்டணம் உண் டென்றால், முறையாவணம் மறுக்கப்பட்டதென்பதை ஊகித்தறிய லாம். சான்றுறுதி அதிகாரி மாற்றுச் சீட்டை ஏற்றவரிடம் காட்டிப் பணம் செலுத்துமாறு கோருவார். அவரிடமும் பணம் தர இயலாதென ஏற்றவர் கூறினால், அம் மறுப்பை மாற்றுச் சீட்டின்மீது குறிப்பார். இந் நிகழ்ச்சி மறுப்புக் குறிப்பு எனப்படும்.

மறுப்புச் சான்று (Protest)

மாற்றுச் சீட்டு அவமதிக்கப்பட்டு, அதற்கு மறுப்புக் குறிப்புத் தந்த செய்தியைச் சான்றுறுதி அதிகாரி விவரமாக எழுதித் தருவதுதான் மறுப்புச் சான்றிதழாகும். மறுப்புச் சான்றுக்கு

அடிப்படையாக விளங்குவது மறுப்புக் குறிப்பு. மறுப்புச் சான்று ஒரு சாதாரணப் பத்திரம் அல்லது சான்றிதழ். அஃது ஒரு சிறு குறிப்புபோன்று அமைகிறது. சான்றுறுதி அதிகாரியால் வழங்கப்படும் இது நல்ல பிணையமாகத் திகழ்கிறது. தவணைத் தேதிக்குமுன் ஏற்பாளர் நொடித்துவிட்டாலும், பணம் செலுத்து தலை நிறுத்திவிட்டாலும், அவருடைய கடன் வெளிப்படையாகக் குற்றம் சாட்டப்பட்டாலும் மாற்றுச் சீட்டை உடையவர், ஒரு குறிப்பிட்ட நியாயமான காலத்திற்குள், இவ் வுண்மைகளின் காரணங்களைக் குறிக்க வேண்டும். இல்லாவிட்டால் எழுது பவரும் மேலெழுத்துப் பெறுபவரும் பொறுப்பாளியாகமாட் டார்கள்.

ஒரு மறுப்புச் சான்று அதன் மூலப்பத்திரத்தையோ அதன் அசல் படியையோ பெற்றிருக்க வேண்டும். யாருக்கெதி ராக முறையாவணம் மறுப்புச் சான்று பெறுகிறதோ அவர் பெயரும் இருக்கவேண்டும். அத்தகைய நபரைச் சான்றுறுதி அதிகாரி பணம் செலுத்தும்படி வேண்டியது, அவருடைய ஏற்பு அல்லது மறுப்பு அல்லது தக்க பதில் அவர் தராதது, அல்லது அவரைக் காணாதது போன்ற விவரங்கள் அனைத்தும் அதில் குறிப்பிடப்பட வேண்டும். மறுக்கப்பட்ட காலமும், இடமும், தக்க பிணையம் தர மறுத்ததும் அதில் குறிப்பிடப்பட வேண்டும். சான்றுறுதி அதிகாரியின் கையொப்பம் அதில் இருக்கவேண்டும். நாணயத்திற்காக ஏற்பவரின் பெயரும், நாணயத்திற்காகச் செலுத்துவது யாருக்கு அளிக்கப்பட்டதோ அவரின் பெயரும் அவர்களின் ஏற்பு ஏற்பட்ட விதமும் அதில் குறிப்பிடப்பட வேண்டும். எங்குச் சட்டபூர்வமான மறுப்புச் சான்றிதழ் தேவைப்படுகிறதோ, அங்கு மறுப்புச் சான்று அறிவிக்கை ஒன்று கொடுக்க வேண்டும். இது மறுப்பு அறிவிக்கைக்குப் பதிலாகத் தரப்படுகிறது. சான்றுறுதி அதிகாரியே இவ் வறிக்கையை வெளி யிடலாம்.

துணிபுகள் (Presumptions)

சட்டத்தின் பிரிவுகள் 118, 119, 120, 121, 122 இவைகளைப்பற்றி விளக்குகின்றன. மாற்றுமுறையாவணங் களுக்கு அனுகூலமாகத் துணிபுகள் காண ப்படுகின்றன. சாதாரண ஒப்பந்தங்களில் நபர்கள் உடன்பாட்டு நிபந்தனைகளை நிரூபிக்க வேண்டும். வேறுவிதமாக நிரூபிக்கப்பட்டாலொழிய மாற்று முறையாவணங்களில் பின்காணும் சிறப்புக் கூறுகள் இருப்பன வாகத் துணிபுகொள்ள வேண்டும்.

1. முறையாவணம் மறுபயன் கருதி எழுதப்பட வேண்டும். அது மறுபயன் கருதியே எழுதப்படுகிறது; விடுக்கப்படுகிறது; மேலெழுதப்படுகிறது; மாற்றப்படுகிறது. இத்துணிபு மறுக்கப்படலாம் அல்லது எதிர்க்கப்படலாம்.

2. முறையாவணத்தில் காணப்படும் தேதி, அதை எழுதிய தேதியாகக் கருதப்படுகிறது.

3. மாற்றுச் சீட்டுகள் ஏற்கப்படுகின்ற நிலைகளில் அவைகளில் நியாயமான காலவரைக்குள் ஏற்கப்பட்டனவாகத் துணிபுகொள்ள வேண்டும்.

4. தவணைத் தேதிக்கு முன்னர் இம் முறையாவணங்கள் மாற்றப்பட்டனவாகத் துணிபுகொள்ளப்படும்.

5. ஒன்றுக்கு மேற்பட்ட மேலெழுத்துகள் இருக்கும்போது ஒவ்வொரு மேலெழுத்தும் பத்திரத்தில் எழுதியுள்ள வரிசைப்படி ஏற்பட்டதாகக் கொள்ளப்படும்.

6. தொலைந்துவிட்ட அல்லது சேதமடைந்த கடனுறுதிச் சீட்டு, மாற்றுச்சீட்டு, காசோலை வேண்டிய அளவுள்ள வருவாய் அஞ்சல் தலைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

7. ஒவ்வோர் உடையவரையும் முறைப்படி பெற்றவராகக் கொள்ள வேண்டும்.

8. மறுப்புச் சான்று நிரூபணம் கிடைத்துவிட்டால், ஆவணம் உண்மையிலேயே மறுக்கப்பட்டுவிட்டது என்று கொள்ளலாம்.

முறையாவணங்களை எழுதுபவர், அது முதலில் எழுதும் போது உள்ள அதன் உண்மையான செல்லும் தன்மையைக் கூற மறுப்பதிலிருந்தும், மேலெழுதுவதற்குப் பெறுவோரின் தகுதி என்ன என்று கூற மறுப்பதிலிருந்தும், முறையாவணங்களை முன்னர்ப் பெற்றுள்ள நபர்களின் ஒப்பந்தத் தகுதி கையொப்பம் போன்றவை கூற மறுப்பதிலிருந்தும் முரண்தடை செய்கிறார்.

முறையாவணங்களில் காணப்படும் மறுபயன் குறித்துச் சட்டத்தின் பிரிவுகள் 43 முதல் 55 வரை விளக்குகின்றன. இது குறித்துக் கீழ்க்காணும் விதிகளைப் பின்பற்ற வேண்டும்: 1. ஒவ்வொரு முறையாவணமும் மறுபயனைத் தாங்கித் திகழவேண்டும். அதாவது, மறுபயன் மிகவும் அவசியம். எதிர்மறையாக நிரூபிக்கப்படும்வரை மறுபயன் இருப்பதாக வைத்துக்கொள்ள வேண்டும். 2. போதிய அளவு மறுபயன் இல்லாததால்

முறையாவணம் செல்லாமற் போய்விடாது. ஆனால், சட்ட விரோதமான மறுபயன் கெடுதலை உண்டாக்கும், ஒப்பந்தத்தைச் செல்லாமற் செய்துவிடும். 3. மாற்றுச் சீட்டோடு அடுத்த நெருங்கிய தொடர்புடைய நபர்களுக்கு மறுபயன் இல்லாமலிருப்பது பாதுகாப்பாக இருந்தபோதிலும், அடுத்துவரும் உடையவருக்குச் சீட்டின் தொகைபற்றி வழக்குத் தொடரப் பாதுகாப்பாகாது. மறுபயன் இருந்தால்தான் முழுத் தொகையையும் உடையவர் வசூலிக்கலாம். 4. பணம் சம்பந்தப்பட்ட மறுபயனில் ஒரு பகுதியைத் தவறவிட்டாலும் அந்த அளவுக்குக் குறைந்த தொகைதான் பெறமுடியும்.

5. சரக்குப் போன்ற பொருள்களில் மறுபயனின் ஒரு பகுதி தவறிவிட்டால் அதற்குரிய தொகை பெறப்படும். தனிப்பட்ட விசாரிப்பின்றிச் சரக்கின் மதிப்பு உறுதி செய்யப்படக்கூடியதாக இருக்கவேண்டும். 6. சம்பந்தப்பட்ட விசாரிப்பு இல்லாமல் சரக்கின் மதிப்பு உறுதிசெய்யப்பட முடியாமல் மறுபயனின் ஒரு பகுதி தவறிவிட்டால், அடுத்து வரும் நபர்கள் முழுத் தொகையையும் பெற்றிடலாம். தவறிவிட்ட மறுபயனின் மதிப்பு பற்றித் தனி வழக்குத் தொடுத்துத் தீர்மானித்துக் கொள்ளலாம்

மேலெழுத்து (Endorsement)

''உரிமைமாற்றம் செய்வதற்காக எழுதுபவரோ உடையவரோ முறையாவணத்தின் பின்புறத்தில் கையொப்பம் இடுவதையும் அல்லது அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் தனித் தாளில் கையொப்பமிடுவதையும் மாற்றுமுறையாவணமாகப் பூர்த்தி செய்திட விரும்பி, போதிய வரிவில்லையுடன் காணும் தாளில் கையொப்பமிடுவதையும் 'மேலெழுத்து' என்று முறையாவணச் சட்டத்தின் 15ஆவது பிரிவு விளக்குகிறது. மேலெழுத்துச் செய்வதன் மூலம் முறையாவணத்தின் மீதான உரிமை, கடமை, நன்மையனைத்தும் மற்றொருவருக்கு மாற்றித் தரப்படுகின்றன. அவ்வாறு மேற்சொன்ன விதத்தில் கையொப்பமிட்டு யார் மேலெழுதுகிறாரோ அவரை 'மேலெழுதுபவர்' (Endorsor) என்கிறோம். யார் பெயருக்கு முறையாவணம் எழுதி மாற்றித் தரப்படுகிறதோ அவரை 'மேலெழுத்துப் பெறுபவர்' (Endorsee) என்கிறோம். முறையாவணத்துடன் இணைக்கப்பட்ட தனித் தாளில் மேலெழுதுவதை 'ஒட்டு உண்டியல்' (Allonge) என்கிறோம். இதன் நோக்கம் முறையாவணத்தின் மாற்றுத் தன்மையை வலுப்படுத்துவதாகும்.

மாற்றுமுறையாவணங்களுக்கும் பிற ஆவணங்களுக்கும் மாற்றுதலில் வேறுபாடு உண்டு. மாற்றுமுறையாவணங்களை

மாற்றுவதை ஆங்கிலத்தில் 'Negotiation' என்கிறோம். மாற்று முறையாவணத்தில் சேர்ப்பு அல்லது மேலெழுதிச் சேர்ப்புச் செய்தால் மட்டுமே உரிமைமாற்றம் நிகழும். ஆனால், ஏனைய ஆவணங்களின் உரிமைமாற்றத்திற்கு உரிமைமாற்றம் செய்பவ ரால் கையொப்பமிட்ட எழுத்துமூலம் கொண்ட பத்திரம் தேவைப்படுகிறது. மாற்றுமுறையாவணங்களில் மாற்றத்தை வலுப்படுத்த மாற்று அறிவிக்கை தேவையில்லை. ஆனால், மற்ற ஆவணங்களில் மாற்று அறிவிக்கை தேவை. மாற்று முறையாவணத்தில் உரிமைமாற்றம் பெறுபவர் முறைப்படி பெறுபவராக இருந்தால், எவ்விதக் குறைபாடுகளுமின்றி அல்லது அதைப் பொருட்படுத்தாமல் பெறுகிறார். ஆனால், மற்ற ஆவணங்களில் உரிமைமாற்றம் செய்பவரின் உரிமையில் உள்ள குறைபாடுகளை நீக்கித்தான் உரிமைமாற்றம் பெறுபவர் ஆவணங்களைப் பெறுகிறார். மாற்றுமுறையாவணங்களில் மறு பயன் ஊகித்தறியப்படுகிறது. ஆனால், மற்ற ஆவணங்களில் மறு பயனை நிரூபிக்கும் பொறுப்பு அல்லது சுமை உரிமைமாற்றம் பெறுபவரைச் சார்ந்தது. மாற்றுமுறையாவண உரிமைமாற்றத் தில் சேர்ப்பு என்பது மிகவும் முக்கியமான தன்மையாகக் கருதப் படுகிறது. அத்தகைய சேர்ப்பு நிகழ்வுறுவானதாகவும், ஆக்க பூர்வமானதாகவும், முழுத் தன்மையுடையதாகவும், நிபந்தனை யற்றதாகவும் இருக்கவேண்டும். நிபந்தனையுள்ள சேர்ப்பில் முறையாவணத்திலுள்ள சொத்துரிமை முழுவதும் உடைய வருக்குப் போய்ச் சேராது. நிபந்தனைக்குட்பட்ட ஆவணம் (Escrow) என்பது ஓர் ஆவணம் நிபந்தனையுடன் சேர்ப்பிக்கப் பட்டாலோ, ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் எழுதப்பட்டாலோ, அல்லது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழும்போது மட்டும் பலன் தெரிவதற்காகவோ முழுச் சொத்துரிமையும் மாற்ற வேண்டா என்பதற்காகவோ எழுதப்பட்ட ஆவணமாகும். நிபந்தனை அறிவிக்கை விடாமல் முறைப்படி பெறுபவரைத் தவிர வேறு யாருக்கும் இதை மாற்றுரிமை செய்யமுடியாது. ஓர் ஆவணத்தை மேலெழுதிச் சேர்ப்பிக்கும்போதுதான் மேலெழுதுபவரிடமிருந்து ஆவணத்தின் சொத்துரிமை மேலெழுத்துப் பெறுபவருக்குப் போய்ச்சேரும். மேலும், அவர் அதை மற்றவருக்கு மாற்றும் உரிமையைப் பெறமுடியும். தம் பெயரில் ஆவணத்தின்மேல் வழக்குத் தொடரும் உரிமை வந்துசேரும்.

மேலெழுத்து வகைகள் (Kinds of Endorsement)

வெற்று மேலெழுத்து (Blank Endorsement) பெறுபவரோ மேலெழுதுபவரோ யாருக்கு மாற்றுச் சீட்டு அல்லது ஒரு முறையாவணத்தின் தொகை செலுத்தவேண்டுமோ அவர்

பெயரைக் குறிக்காமல் தம் கையொப்பத்தை மட்டும் ஆவணத்தின் பின்னர் இட்டுத் தருவதுதான் 'வெற்று மேலெழுத்து'. இது சேர்ப்பித்தல்மூலம் மாற்றப்படுகிறது. இதையுடையவர் தம் பெயரையோ வேறு ஒருவர் பெயரையோ அதில் எழுதி வெற்று மேலெழுத்தை முழு மேலெழுத்தாக மாற்றிடலாம். உதாரணமாகக் கையொப்பம் கண்ணன் என்றிருந்தால் கண்ணனுக்கு மேல் உடையவர் வேறு ஒருவர் பெயரை அதாவது, கிருஷ்ணன் என்று எழுதிடலாம். வெற்று மேலெழுத்துச் செய்யப்பட்ட மாற்றுச் சீட்டு முன்னர் உத்தரவுப்படி செலுத்தவேண்டியதாக எழுதப் பட்டிருந்தாலும் கொணர்பவருக்குச் செலுத்தப்படவேண்டியதாக மாறிவிடும். இவ்வகை மேலெழுத்தைப் பொது (general) மேலெழுத்து என்றும் கூறலாம்.

முழு அல்லது சிறப்பு மேலெழுத்து (Full or Special Endorsement)

மேலெழுதுபவர் முறையாவணத்தின் தொகை யாருக்குச் செலுத்தப்பட வேண்டுமோ அவருடைய பெயரை எழுதிவிட்டால் அது முழு மேலெழுத்தாகும். இதை ஒருவருக்கோ அவர் உத்தரவு பெற்றவருக்கோ என்று எழுதுவதால் சிறப்பு மேலெழுத்து என்றுங் கூறலாம். முகுந்தன் அல்லது அவர் உத்தரவுக்குச் செலுத்துக—கையொப்பம்/கண்ணன் என்றிருந் தால் இதில் முழு விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே இதை மேலெழுதிச் சேர்ப்பித்து மாற்றிடவேண்டும்.

தடையிலா மேலெழுத்து (Absolute Endorsement) என்பது, மேலெழுத்துப் பெறுபவர் எவ்வித நிபந்தனை அல்லது தடையு மின்றி ஆவணத்தின் முழு உரிமை பெற அதிகாரம் தரப்படுவது ஆகும். அவர் ஆவணத்தின் முழு உரிமை உடையவராகிறார்.

வரையறை மேலெழுத்து (Restrictive Endorsement)

மேலெழுதிப் பெறுபவர், ஆவணத்தை மேற்கொண்டு யாருக்கும் மாற்றிவிடக்கூடாது என்று வெளிப்படையாகத் தடை விதிக்கப்படுவதுண்டு. அல்லது அவர் ஒரு குறிப்பிட்ட நோக்கத் திற்குத்தான் பணம் பெற வேண்டும் என்று எழுதுவது நிபந்தனை மேலெழுத்தாகும். இவ்வகையில் சொத்துரிமை மாறவில்லை. உதாரணமாக, 'கிருஷ்ணனுக்கு மட்டும் செலுத்துக—கையொப்பம் / கண்ணன்' என்றிருக்கலாம். அல்லது 'பணம் வசூலிக்கப் பாரத் வங்கிக்கு மட்டும் செலுத்துக—கையொப்பம்/ கண்ணன்' என்றும் இருக்கலாம். 'கிருஷ்ணனின் வழக்கறிஞர்

என்ற முறையில் முகுந்தனுக்குச் செலுத்து—கையொப்பம்/ கண்ணன்' என்றுமிருக்கலாம்.

நிபந்தனை மேலெழுத்து (Conditional Endorsement)

இங்கு மேலெழுதுபவர் வெளிப்படையாகவே தம்முடைய பொறுப்பை நீக்கி ஆவணத்தை மாற்றம் செய்கிறார். அதாவது, குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்த பின்னரே தாம் பொறுப்பேற்பதாக எழுதப்படுவதுதான் நிபந்தனை மேலெழுத்தாகும். அந் நிகழ்ச்சி நேர்ந்தாலும் நேரும், நேராமலுமிருக்கும். ஒரு முகவர் ஒரு முறையாவணத்தில் கையொப்பமிடும்பொழுது தாம் முகவர் என்ற முறையில் மட்டும்தான் கையெழுத்திடுகிறார். தாம் பொறுப்பாளி இல்லையென்பதைத் தெளிவாக ஆவணத்தில் காட்டவேண்டும். இதைத்தான் பொறுப்பில்லை (Sons recourse or without recourse) என்னும் வார்த்தைகள் பயன்படுத்தி எழுதுவதால் இதற்குத் தற்பொறுப்பிலா—கையொப்பம்/கண்ணன்' என்றும் எழுதலாம். அல்லது 'சென்னையிலுள்ள வீடு கட்டி முடிப்பதற்காகக் கிருஷ்ணனின் உத்தரவிற்குச் செலுத்துக—கையொப்பம்/கண்ணன்' என்றும் எழுதலாம். 'சிமென்டுக் கம்பெனியின் சார்பாகவும், அதற்காகவும் கையொப்பம்/ கண்ணன் நெறியாளர்' என்றும் எழுதப்படலாம். இத்தகைய ஆவணத்தில் தம் பொறுப்பில்லை என்று எழுதுவதனால் அவருக்கு (மேல் எழுதுபவருக்கு) பொறுப்பேதுமில்லாமற் போகிறது. ஆவணங்கள் அவமதிக்கப்பட்டாலும் மேலெழுத்துச் செய்பவருக்குப் பொறுப்பில்லை.

கடமைதவிர் மேலெழுத்து (Facultative Endorsement)

மேலெழுதுபவர், தமக்கு ஆவணத்தை உடையவர் செய்ய வேண்டிய கடமை எதையேனும் உரிமை விடுப்புச் (Waive) செய்தால் அதைக் கடமைதவிர் மேலெழுத்து என்கிறோம். உதாரணமாக அவர் 'அவமதிப் அறிவிக்கை உரிமை விடுப்புச் செய்யப்பட்டது' என்று மேலெழுதலாம். அதேபோல் மேலெழுதுபவர் தம் பொறுப்பை அதிகப்படுத்தலாம்.

மேலெழுத்து மாற்றுச் சீட்டின் முகப்பிலோ அல்லது பின் புறத்திலோ செய்யப்படலாம். ஓர் ஆவணத்தின் தொகையில் ஒரு பகுதி மட்டும் செலுத்தப்பட்டால் அது பகுதி அல்லது பாதி மேலெழுத்தாகும். மீதித் தொகைக்கு அதை மேலெழுதலாம். ஆனால், இப் பகுதி செலுத்துதல் ஆவணத்தில் குறிப்பிடப்பட வேண்டும். மற்றப்படி அப் பகுதி மேலெழுத்துச் செல்லாது.

ஆனால், மாற்று ஆவணத்தில் வரவேண்டிய தொகையில் ஒரு பகுதியை மட்டும் உரிமைமாற்றம் செய்ய, மேலெழுத்து எழுதக் கூடாது.

ஒரு முறை, 'கொணர்பவருக்குச் செலுத்து' என்ற முறையாவணமாக இருந்தால் அஃது எப்பொழுதும் அவ்வாறே விளங்கும். சட்டத்தின் 55ஆவது பிரிவு இத்தன்மையினை விளக்குகிறது. ஒரு முறையாவணத்தை வெற்று மேலெழுத்து எழுதிக் கொடுத்தால் அது கொணர்பவருக்குச் செலுத்தக்கூடியதாக ஆகிவிடும். அதை வெறும் சேர்ப்பித்தல் மூலம் மாற்றிவிடலாம். ஆனால், ஒருவர் அதைக் குறிப்பிட்ட நபருக்கு மேலெழுதினால் அவரின் உத்தரவுக்கு அது செலுத்தப்படும். ஆனால், மேலெழுதியவருக்கு முன்னுள்ள எல்லா நபர்களுக்கும், முறையாவணம் வெறும் சேர்ப்பித்தல் மூலமே மாற்றப்படக்கூடியதாகவிருக்கிறது. எடுத்துக்காட்டாக, 'அ' என்னும் பெறுபவர் ஒரு மாற்றுச் சீட்டை வெற்று மேலெழுத்து எழுதி 'ஆ' என்பவருக்குத் தருகிறார். 'ஆ' என்பவர் 'இ' என்பவருக்கோ அல்லது அவர் உத்தரவிற்கோ மேலெழுதுகிறார். 'இ' என்பவர் மேலெழுதாமல் அதை 'ஈ'-க்கு மாற்றுகிறார். எவ்வித ஐயமுமின்றி மாற்றுச் சீட்டைக் கொணர்பவரான 'ஈ'-க்குப் பணம் பெறும் உரிமை உண்டு. மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டுவிட்டால் 'ஈ' என்பவர் எழுதுபவர், ஏற்பவர் (அ) பெறுபவர் ஆகியோர்மீது வழக்குத் தொடரலாம். 'அ'-வுக்கு முன்னால் மேலெழுதியவர்கள்மீதும் வழக்குத் தொடரலாம். ஆனால், ஆ. இ. என்பவர்கள்மீது வழக்குத் தொடர முடியாது. எனவே, இங்குச் சட்டத்தின் பிரிவு 85 (2% மேற்கோளாகக் காட்டி) 'ஒரு தடவை கொணர்பவராக இருப்பவர் எப்பொழுதும் கொணர்பவராக இருப்பார்' எனக் கோட்பாட்டை நம் நாட்டில் அமலுக்குக் கொண்டு வந்துள்ளோம். ஒரு காசோலை முதலில் ஒரு 'கொணர்பவருக்குச் செலுத்தக்கூடியதாக இருந்து, முறைப்படி, ஏற்பவர் மேலெழுத்து வகைகளையும் மாற்றும் தன்மை தடைகளையும் பொருட்படுத்தாமல் பணம் செலுத்திவிட்டால் அவர் கடமை முடிகிறது; பொறுப்பிலிருந்து விடுதலை அடைகிறார். மேலும் உரிமை மாற்றம் செய்வது தடைசெய்யப்படுதல் ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ளபோதும் முறையாவணத்தை மேலெழுத, மேலெழுத்துப் பெறுபவர் ஒரு முகவரை நியமிக்கும்போதும், ஒரு மேலெழுத்துப் பெறுபவர், மேலெழுதுபவருக்காகவும், ஏனைய குறிப்பிடப்பட்ட நபர்களுக்காகவும், உட்பொருளைப் பெறும்பொழுதும் அம் முறையாவணம் உரிமை மாற்றம் செய்யமுடியாமல் விளங்குகின்றது.

முறையற்ற மேலெழுத்து (Irregular Allotment)

எல்லாரும் ஏற்கக்கூடிய கொள்கைகளைப் பின்பற்றாத மேலெழுத்து, முறையற்ற மேலெழுத்தாகிறது. ஒரேவிதமாக இருப்பதற்காகத் தெளிவு, அறிவின்மைபோன்ற சில கொள்கைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. சாதாரணமாக, பெறுபவரும் அல்லது மேலெழுதுபவரும் தங்கள் சாதாரணக் கையொப்பத்தை முன் சேர்ப்பு (Pretix) எதுவுமின்றிப் போட ஒருவர் தம் கையொப் பத்தைக் 'க. கண்ணன்' என்று போடுவதற்குப் பதிலாக 'திரு. கண்ணன்' என்று போட்டால் அது முறையன்று. எந்தச் சுருக் கெழுத்தும் (Abbreviation) பயன்படுத்தக்கூடாது. பெறுபவரின் பெயரிலுள்ள எழுத்துகள் சரியாக எழுதப்பட வேண்டும். அது தவறாக இருந்தால் மேலெழுத்தும் தவறாகிவிடும். ஆனால், சரியான எழுத்துகளை அடைகுறிக்குள் எழுதலாம். எனவே, இம் முறையற்ற செயலைத் தவிர்ப்பதற்காக முதன்முதலில் கையொப்பமிடும்போது முழுக் கையெழுத்தும் போடவேண்டும். திருமணமான மகளிர் அவள் மனைவியா அல்லது விதவையா என்று குறிப்பிட வேண்டும். படிக்காதவர்களின் கைரேகை, சரியான சான்றுக் கையொப்பத்துடனும், சாட்சியுடனும் வாங் கப்பட வேண்டும். கூட்டு வாணிக நிறுவனத்தைப் பொறுத்த மட்டில் கணக்குள் நிறுவனத்தின் பெயரால் வைக்கப்பட்டு நடைபெற்று வருகிறதா என்று பார்க்க வேண்டும். இதே விதம் கம்பெனி, சங்கங்கள் போன்றவைகளின் கணக்குகளும் பரிபாலிக் கப்பட வேண்டும். கூட்டாகப் பெறுபவர்கள் நிலையில், முறை யாவணத்தை அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக மேலெழுத வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகளையும், கோட் பாடுகளையும் கடைப்பிடிக்காவிட்டால், மேலெழுத்து முறையற்ற தாக ஆகிவிடும். வங்கியர் தம்மைக் காத்துக்கொள்ளத் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டும்.

வேறு ஒருவரின் சார்பாகக் கையெழுத்திட்ட மேலெழுத்து (Per Pro Endorsement) விஷயத்தில் உறுதி செய்யாமல் வங்கியர் செயலாற்றக்கூடாது. ஆனால், இந்தியாவில் இத்தகைய மேலெழுத்துப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்றாலும், வங்கியர் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். காரணம் அது வேறு ஒருவருக்காகப் போடும் கையெழுத்து தானே? அதில் சிக்கல் வந்தாலும் வரும். அந்த நபர் தம் முழுக் கையொப்பத்தையும் இடவேண்டும். 'இராமன் சார்பாக— கிருஷ்ணன்' (Per Pro Raman-Krishnan) என்றிருப்பதுதான் வழக்கமாக எழுதும் மேலெழுத்து. 'கிருஷ்ணன் சார்பாக

இராமன்' (Raman per pro Krishnan) என்று எழுதுவது அரிது. அது சரியுமில்லை. இத்தகைய சார்பு மேலெழுத்து அளவான அதிகாரத்தைத்தான் வழங்குகிறது. எனவே, வங்கியர் கவன முடன் இல்லையென்றால், வங்கியரின் கவனமின்மையைத் தீர்மானிப்பதற்கு இச் சூழ்நிலை பயன்பட்டுவிடும்.

காசோலையின் பல்வகைக் கீறலும் அதன் முக்கியத்துவமும்
(Different Kinds of Crossing and Their Significance)

காசோலைகளைக் 'கீறாக் காசோலை'(Open cheque), 'கீறிய காசோலை'(Crossed cheque) என இரு வகைகளாகப் பிரிக்கலாம். கீறாக் காசோலையை வங்கியரிடம் கொடுத்தால், கொடுத்தவர் பணம் பெறும் உரிமையுள்ளவரா எனச் சரிபார்த்து, உடனே பணத்தை அவருக்கு நேரடியாகக் கொடுப்பார். ஆனால், இத்தகைய காசோலையில் ஆபத்துள்ளது. அது திருட்டுப் போய் விடலாம்; தொலைந்துபோகலாம்; தவறாக உரியவரில்லாத நபர் களுக்குப் பணம் கொடுக்கப்பட்டுவிடலாம். எனவே, இவ் வபா யங்களைத் தவிர்க்கும்பொருட்டுக் காசோலையைக் கீறல் செய் கிறோம். இக் கீறிய காசோலைக்கு வங்கியர் நேரடியாக உடனே பணம் தரமாட்டார். வங்கியில் கணக்கு வைத்திருக்கும் நபர்கள் மட்டுமே இத்தகைய காசோலையின்மீது பணத்தைத் தம் கணக்கில் பெற்றுக்கொள்ளலாம். மீண்டும் ஒரு காசோலை எழுதி வேண்டும்போது இப் பணத்தை எடுத்துக்கொள்ளலாம். வங்கியில் கணக்கில்லாதவர் தம்முடைய கீறிய காலோலையைக் கணக்கு உள்ளவரிடம் கொடுப்பார். அவர் தம் வங்கியில் தம் கணக்கில் போட்டு வசூல் செய்ய வேண்டுவார். வசூலானதும் அப் பணத்தை எடுத்து, கணக்கில்லாததால் தம்மிடம் கீறிய காசோலை கொடுத்தவருக்குக் கொடுப்பார். அவர் இவ்வாறு பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது காசோலை தந்தவ ரிடமே சென்று, கீறலை நீக்கி, 'ரொக்கம் செலுத்துக' என்று எழுதி அவர் முழுக்கையெழுத்திட்ட காசோலை கீறாக் காசோலை யாக மாறிவிட்டதால் வங்கியரிடம் காட்டினால் பணம் கொடுக்கப் படும்.

கீறல்


வணிக உலகத்தின் நடைமுறைப் பழக்கங்களாலும், சட்டத் தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உபாயம்தான் காசோலை யைக் 'கீறல்' செய்வது. இதனால், காசோலைகள் ஒரு குறிப் பிட்ட வங்கியரால் மட்டும் அல்லது ஒரு குறிப்பிட்ட வங்கியி லுள்ள கணக்கினால் மட்டும் செலுத்தப்படுகின்றன. 'கீறல்'

என்பது ஒரு காசோலையின் முகப்பில் சாய்ந்த இரு இணை கோடுகளை வரைவதுதான். கீறல் 'பொதுக் கீறல்' (General crossing), 'சிறப்புக் கீறல்' (Special crossing) என இருவகைப்படும். அக் கோடுகளுக்கிடையே 'அண்டு கம்பெனி' போன்ற சொற்களை எழுதினாலும், எழுதாவிட்டாலும் அது கீறிய காசோலையாகக் கருதப்படும்.

மாற்றுமுறையாவணச் சட்டத்தின்படி கீறாத காசோலையை அதன் உடையவர் பொதுவாகவும் சிறப்பாகவும் கீறலாம். ஒரு காசோலை பொதுக்கீறலுடன் காணப்பட்டால் உடையவர் அதைச் சிறப்புக் கீறலாக மாற்றலாம். கீறல் பொதுவாகவும் அல்லது சிறப்பாகவும் இருக்கும்போது வங்கியர் 'மாற்றும் தன்மையற்றது' (Not Negotiable) என்னும் சொற்களைச் சேர்த்திடலாம். சிறப்புக் கீறலுடன் உள்ள ஒரு காசோலையை அது எந்த வங்கியருக்குக் கீறப்பட்டுள்ளதோ அந்த வங்கியர் அதை மற்ற வங்கியருக்கோ, அல்லது அதன் முகவருக்கோ வசூல் செய்வதற்குச் சிறப்புக் கீறலிட்டு அனுப்பலாம். இதற்கு மறுகீறல் (Recrossing) என்று பெயர்.

பொதுக் கீறல்: முன்பு கூறியவிதத்தில் சாய்ந்த இணைகோடுகளிடையே 'அண்டு கம்பெனி' அல்லது அதன் சுருக்கமாகிய 'கோ'

மாதிரிப் பொதுக் கீறல்




அல்லது 'மாற்றுந் தன்மையற்றது' அல்லது 'பெறுவோர் கணக்கு' என்னும் சொற்களை வேண்டுமானால் சேர்த்துக்கொள்ளலாம். இச் சொற்களைச் சேர்க்காவிட்டாலும் பாதகமில்லை. முகப்பில் உள்ள இணைகோடுகள் மேற்சொல்லிய சொற்கள் அவை எழுதப்பட்டாலும் எழுதப்படாவிட்டாலும் 'பொதுக் கீறல்' எனப் பெயர்பெறும். அவ்வாறு கீறப்பட்ட காசோலை பொதுக் கீறல் கொண்ட காசோலை எனப்படும்.

முன்னரே சொல்லியவண்ணம் பொதுக் கீறல் கொண்ட காசோலையை வங்கியரிடம் கொடுத்து நேரடியாகப் பணம்பெற முடியாது. அக் காசோலையில் கண்ட பணம் வங்கிக் கணக்கில் தான் வரவு வைக்கப்படும். எனவே, பணத்தைப் பெற உரிமையில்லாதவர்கள் காசோலையை உடனே மாற்றிப் பணம் வாங்கிட முடியாது.

சிறப்புக் கீறல் : ஒரு காசோலையின் முன்பக்கத்தில் ஒரு வங்கியர் பெயரை எழுதுவதே சிறப்புக் கீறல் எனப்படும். சிறப்புக் கீறலுக்கு இணைகோடுகள் வரைய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் புழக்கத்தில் அவை வரையப்படுகின்றன. 'மாற்றுந் தன்மையற்றது' என்னும் சொற்களை விரும்பினால் எழுதலாம். ஆனால், எழுதவேண்டிய அவசியமில்லை. எனவே, இக் கீறலின் சிறப்பு ஒரு வங்கியரின் பெயரைக் காசோலையில் எழுதுவதாகும். எந்த வங்கியரின் பெயர் அவ்வாறு எழுதப்படுகிறதோ அந்த வங்கியருக்குத்தான் அக் காசோலையின் பணம் தரப்படும் அல்லது அந்த வங்கியரின் முகவர்வங்கி அதை வசூலிக்கலாம். வேறெந்த வங்கியருக்கும் அத் தொகை தரப்படமாட்டாது. எனவே, இத்தகைய சிறப்புக் கீறலின் தனிச் சிறப்பு என்னவென்றால், ஒருவர் எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளார் என்று உறுதியாகத் தெரிந்தபின்னர்தான் காசோலையைச் சிறப்புக் கீறல் செய்யவேண்டும். இதனால், காசோலை பாதுகாப்புப் பெறுகிறது. மோசடி செய்வோர்கள் இக் காசோலையை மாற்றுவது முடியாத காரியம். 'பெறுவோர் கணக்கு' என்னும் சொற்கள் சிறப்புக் கீறலில் சேர்க்கும்போது வசூலிக்கும் வங்கியர், அந்தக் கணக்கில்தான் பணம் பெறப்பட்டதா என்று சரிபார்ப்பது அவ் வங்கியரின் கடமை. சிறப்புக் கீறலிட்ட இத்தகைய காசோலைகளைச் சாதாரணத் தபாலில் அனுப்பலாம். தபாலில் தொலைந்துவிட்டாலும் பெரும் நட்டம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை.

மாதிரிச் சிறப்புக் கீறல்



கீறல்—மாற்றுந்தன்மையற்றது (Not Negotiable)

கீறலிடும்போது இச் சொற்கள் பாதுகாப்பிற்காக எழுதப் படுகின்றன. இச் சொற்கள் காசோலையில் எழுதப்பட்டால், உரிமைமாற்றம் செய்பவரைவிடச் சிறந்த உரிமை மாற்றப்படாது. ஆனால், மேலும் உரிமைமாற்றம் செய்வது தடுக்கப்படவில்லை. நன்றாக விசாரித்து மிக்க கவனமுடன் உரிமை மாற்றம் பெறுவோர் இதைப் பெறவேண்டும். இதில் ஒரு சட்ட நுணுக்கம் காணப்படுகிறது. அதாவது, இக் காசோலையை யாரிடமிருந்து ஒருவர் பெற்றாரோ அவருக்குள்ள உரிமைகளை மட்டும் பெறு கிறார். எனவே, உரிமையற்றவர் யாரும் இக் காசோலையைப் பெற்று உண்மை உரிமையாளரின் உரிமைகளைப் பாதிக்க முடியாது. அதாவது, ஒருவர் 'மாற்றுந்தன்மையற்றது' என்னும் கீறலுள்ள காசோலையைத் திருடி, அதை முறைப்படி உடைய வரிடம் சேர்த்தால்கூட அவர் அக் காசோலைமீது எவ்வித உரிமையும் கொண்டாட முடியாது. காரணம் அவர் யாரிடமிருந்து அதைப் பெற்றாரோ அவர் அக் காசோலையின்மீது எவ்வித உரிமையும் பெற்றவர் இல்லை. எனவே, உண்மை உரிமை யாளரைத் தவிர வேறொருவரும் உரிமை கொண்டாட முடியாத

வகையில் காசோலை எழுத வேண்டுமானால் 'மாற்றுந்தன்மை யற்றது' என்னும் சொற்களைக் காசோலையின் முகப்பில் கீறலாகச் சேர்ப்பது பாதுகாப்பானது.

கீறல் பெறுவோர் கணக்கு (Payer's Account or Account Payer)

பொதுக் கீறலின் ஒரு வகையான 'பெறுவோர் கணக்கு'க் கீறலின் பொருள் அக் காசோலையை வசூலிக்கும் வங்கியர், அதில் பெறுவோர் எனக் குறிப்பிட்ட நபரின் நலன் கருதி, அதை வசூல் செய்து அவருடைய கணக்கில் அத்தொகை வரவு வைக்கப் படுவதற்குப் பொறுப்பாவார் என்பதாகும். அதாவது, அவ்வாறு செய்வதற்கு வசூலிக்கும் வங்கியருக்கு இடப்படும் கட்டளைதான் இக் கீறல். ஆனால், இக் கீறலின் சொற்களால் செலுத்தும் வங்கியர் நிலை பாதிக்கப்படமாட்டாது. இத்தகைய காசோலை களை உரிமைமாற்றம் செய்யமுடியாது. இம்போர்ட்டர்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்கும், வெஸ்ட்மினிஸ்டர் வங்கி லிமிடெட் டிற்கும் (Importers Company Ltd. *vs.* Westminister Bank Ltd.) நடந்த வழக்கில் இந்தக் கம்பெனி ஜெர்மனியில் எஸ் என்ற முகவர் மூலம் காகிதம் வாங்கியது. 'பெறுவோர் கணக்கு மட்டும்' என்னும் சொற்கள் உடைய கீறலுள்ள காசோலை விற் பனையாளரின் பேருக்கு எஸ் மூலம் கொடுத்தனுப்பப்பட்டது. அவரும் விற்பனையாளரிடம் காசோலையைக் கொடுத்து விடுவ தாகச் சொல்லி, அதில் பொய்க் கையெழுத்திட்டு 'எச்' வங்கியில் உள்ள தம் கணக்கில் போட்டுவிட்டார். 'எச்' வங்கி இக் காசோலையை வெஸ்ட்மினிஸ்டர் வங்கிக்கு அனுப்பியது. அது காசோலையை வசூலித்து 'எச்' வங்கிக்கு வரவு வைத்தது. எனவே, இம்போர்ட்டர்ஸ் கம்பெனி வெஸ்ட்மினிஸ்டர் வங்கிமீது வழக்குத் தொடர்ந்தது. டபிள்யூ வங்கிப் பாதுகாப்புடன் வெற்றி பெற்றது. பெறுவோர் கணக்குக் கீறலுடன் சம்பந்தப்பட்ட வகையில் எந்த வங்கியின் புறக்கணிப்பு இது என்று சர்ச்சை செய்யப்பட்டது. தகுந்த முறையில் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் வங்கியரிடம் பணத்தைக் கொடுத்துவிட்ட பின்னர்ச் செலுத்தும் வங்கியருக்குப் பணம் எப்படிக் கையாளப்படுகிறது என்று கவனிக்கவேண்டிய அவசியமில்லை. 'பெறுவோர்கணக்கு' என்னும் சொற்கள், பணத்தைப்பெறும் வங்கியர், அதைப் பெற்றவர் பெற்றபின்னர் எவ்வாறு பயன்படுகிறார் என்று பார்ப்ப தற்காக எழுதப்பட்டவை. எனவே, வசூலிக்கும் வங்கியர் அப் பணத்தை யாருடைய கணக்கில் வரவு வைக்கிறாரோ அவருக்கு உரிமையுண்டா இல்லையா என்று பார்க்காமல்-சரிவர

விசாரிக்காமல் வரவு வைத்துவிட்டால் கவனமின்மை என்ற குற்றச்சாட்டுக்குப் பொறுப்பாளியாவார்.

குறியிட்ட காசோலைகள் (Marked cheques)

சில நேரங்களில் வங்கியர் காசோலையில் கண்ட பணம் செலுத்தப்படுவதற்குக் காசோலையின் முகப்பில் கையெழுத்திட்டு உறுதி அளிப்பதுண்டு. ஆனால், கீறலுக்குச் சமமானதன்று. அது மாதிரியுமில்லை. எனவே, இதில் ஏற்பு ஏற்படாது. அத் தருணத்தில் வாடிக்கையாளரின் கணக்கு நிலையைப் பிரதிபலிப்பதற்கு வங்கியர் இவ்வாறு செய்கிறார்கள். எழுதுபவரின் வேண்டுகோளின்படி, குறியீடு ஏற்பட்டால் வங்கியரின் நிலை எவ்வித ஆபத்துமின்றிச் சரளமாக இருக்கும். அக் காசோலைக்கு உரிய பணத்தை வங்கியர் ஒதுக்கிவைப்பார். வாடிக்கையாளர் அந்தத் தேதிக்குப் பின் பணம் பெறுதலைத் தள்ளிப்போட முடியாது. உடையவரின் வேண்டுகோளின்படி, குறியீடு செய்யப்பட்டால் அது ஆபத்தாகிவிடும். வங்கியருக்கும் தொல்லை ஏற்படும். இக் கருத்தை விளக்குவது பஞ்சாப் நேஷனல் பாங்கிற்கும் பாங்க் ஆப் பரோடாவிற்கும் (The Punjab National Bank *vs.* The Bank of Baroda) நடந்த வழக்கு. கோஷ் என்பவர் பரோடா வங்கியில் கணக்கு வைத்திருந்தார். மிட்டர் என்பவர் பஞ்சாப் பாங்கில் கணக்கு வைத்திருந்தார். 13—6—39-ல் கோஷ் பின் தேதியிட்ட (20—6—39) காசோலையை மிட்டருக்கு எழுதி, அதைப் பரோடா வங்கியில் மாற்றும் பொருட்டு அனுப்பியிருந்தார். மிட்டர் இக் காசோலையை அன்றே பரோடா வங்கியில் காட்டினார். 20—6—39 அன்று செலுத்துவதற்கு உகந்ததாகக் குறியீடு செய்யப்பட்டது. 'பரோடா வங்கியின் மேலாளர் அமீன்' என்ற கையெழுத்தும் அக் குறியிட்ட காசோலையில் காணப்பட்டது. பஞ்சாப் வங்கி மிட்டருக்குக் காசோலைக்குப் பதிலாக ரொக்கம் தந்தது. 20—6—39-க்குப் பின் பஞ்சாப் வங்கி அக் காசோலையின் பணத்தை வசூலிக்க பரோடா வங்கிக்கு அனுப்பியது. ஆனால், பரோடா வங்கி பணம் தர மறுத்தது. எனவே, அதன்மீது வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றம் பரோடா வங்கி பொறுப்பாளியன்று என்று தீர்ப்புக் கூறியது. காரணம் காசோலையின் குறியீடு ஏற்பாகாது என்று நீதிமன்றம் கருதியது. ஒரு காசோலை ஒரு மாற்றுச் சீட்டாக இருந்த போதிலும் சாதாரண நடைமுறையில் ஏற்கப்படமாட்டாது. மறு பயன் இல்லாததால் குறியிடப்படுவதில் வாக்குறுதி இல்லை. ஒரு மேலாளரின் வெளிப்படை அதிகாரம் பின்தேதியிட்ட ஒரு காசோலையைப்பற்றி உறுதியளிப்பதை அடக்காது. வேண்டு

மானால், குறியிட்ட சமயம் பணம் இருந்திருந்தால் தரச்சொல்லி எழுதியிருக்கலாம். சில இடங்களில் முதல்நாள் கடைசியில் தரப் பட்ட காசோலைக்கு அடுத்த நாள் பணம் தருவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர். காசோலை குறியிடப்படலாம். ஆனால், மாற்றும் பொறுப்பினை அது உண்டாக்க முடியாது. எனவே, சாதாரணமாக வங்கியர் இவ் வின்னல்களை நினைத்துக் குறியிடப்படுவதற்கு ஒத்துக்கொள்வதில்லை.

மாற்றுந்தன்மையற்ற முறையாவணங்கள் (Non-Negotiable Instruments)

ஆங்கிலத்தில் கூறப்படும் ஐ.ஓ.யு. (I owe you.) என்னும் எழுத்துகளின் பொருள் நா.உ.க. (நான் உங்களுக்குக் கடன் பட்டவர்) என்பதாகும். கடனாளி ஒருவர் கடன்பட்டதை ஏற்றுக்கொண்டு அதைச் செலுத்த உறுதி கூறும் ஆவணமாக இந்த ஐ.ஓ.யு. என்ற பத்திரம் அமைகிறது. கடனீந்தோர் சொல்லியவண்ணம் பணம் செலுத்தத் தவறி, கடனாளிமீது வழக்குத் தொடராமல் இப் பத்திரத்தை வேறு ஒருவருக்குத் தனிப் பத்திரம் எழுதி உரிமைமாற்றம் செய்யலாம். ஆனால், மேலெழுதி உரிமைமாற்றம் செய்யமுடியாது. காரணம் இது ஒரு மாற்றுமுறையாவணம் அன்று. முன்னர்க் கூறியபடி அஞ்சலா ணையும் வணிக உறுதிக் கடிதமும் மாற்றுமுறையாவணங்களாகா.

17. சரக்கேற்றிச் சட்டம்

(The Law of Carriers)

கேரியர் (Carrier) என்னும் ஆங்கிலச் சொல்லிற்குப் பயணிகளையும் சரக்குகளையும் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்பவர், கொண்டு செல்பவர் என்று பொருள். ஆனால், இங்குச் சரக்கு எடுத்துச் செல்வோர்களை மட்டுமே நாம் விளக்கப்போவதால் இனி அவர்களைச் சரக்கேற்றி என்றே கூறுவோம். சரக்கேற்றி என்னும் சொல் அரசு நடத்தும் இரயில் வேக்களையும் உள்ளடக்கியதாகும். சரக்குகளை நிலம், நீர், விண்வழியாக எடுத்துச் செல்லலாம். இவற்றின் சேவைகளை அல்லது தொண்டுகளை ஒழுங்குபடுத்த நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்கள் உள்ளன. 1865ஆம் ஆண்டின் பொதுச் சரக்கேற்றிச் சட்டம் (The Common Carrier's Act of 1865), 1890ஆம் ஆண்டின் இந்திய இரயில்வே சட்டம்(The Indian Railway Act of 1890), 1865ஆம் ஆண்டின் இந்தியக் கப்பல் ரசீதுச் சட்டம் (The Indian Bill of LadingAct of 1856),1925ஆம் ஆண்டின் கடல்வழிச் சரக்கெடுத்துச் செல்லும் சட்டம் (Carriage of Goods by Sea Act of 1925) 1934ஆம் ஆண்டின் விமான வழிச் சரக்கெடுத்துச் செல்லும் சட்டம் (Carriage of goods by Air Act of 1934) போன்ற சட்டங்கள் அவைகளில் முக்கியமானவை. அவை: சரக்கேற்றிகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். 1. பொதுச்சரக்கேற்றி (Common Carriers), 2. தனிமுறைச் சரக்கேற்றி (Private Carriers), 3. ஊதியம் பெறு சரக்கேற்றி (Gratuitous Carriers).

1. பொதுச் சரக்கேற்றி : பொதுச் சரக்கேற்றி என்பவர் தனிப்பட்ட ஒரு நபராகவோ அல்லது நபர்களின் சங்கமாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட நபர்களின் குழுவாகவோ அல்லது பதிவு செய்யாத நபர்களின் கூட்டுறவாகவோ காணப்பட்டு நிலம் நீர் மூலம் பாரபட்சமின்றி அனைவருக்கும் வாடகைக்காகப் பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஏற்றிச் செல்லும் தொழில் செய்பவர்' என்று பொதுச் சரக்கேற்றிக்கு இலக்கணம் வகுக்கப்படுகிறது. சுருங்கக்கூறின் இது ஒரு வெகுமதிக்காக ஏற்படும் ஒப்படைவு ஒப்பந்தமாகும். ஒரு சரக்கேற்றி ஒரு தனிப்பட்ட

நபராகவோ ஒரு கூட்டு வணிக நிறுவனமாகவோ ஒரு கம்பெனியாகவோ இருக்கலாம். சரக்குகளையும் சொத்துகளையும் தூக்கிச் செல்லும் வியாபார நிறுவனமாக அது இருக்கவேண்டும். எப்போதாவது தூக்கிச் செல்லும் நிறுவனமாக இருக்கக்கூடாது. ஒரு மறுபயன் கருதி, அதாவது வாடகைக்காக ஏற்றிச் செல்ல வேண்டும். இனாமாகச் செய்யக்கூடாது. ஒரு பொதுச் சரக் கேற்றி அனைவருக்கும் பாகுபாடின்றிச் சரக்கேற்றிச் செல்ல வேண்டும். தூக்கிச் செல்லும் சரக்கினை ஏற்பதற்கும் மறுப் பதற்கும் உரிய உரிமையைத் தேர்ந்தெடுத்துத் தனக்கென ஒதுக்கி வைக்கக்கூடாது. அரசாங்கத்தை இந்த வகையில் சேர்க்கக் கூடாது. எனவே, அஞ்சல் நிலையம் பொதுச் சரக்கேற்றியாகக் கருதப்படமாட்டாது.

பொதுச் சரக்கேற்றியின் கடமைகள்

இந்தியாவில் பொதுச் சரக்கேற்றியின் கடமைகளைப் பொதுச் சரக்கேற்றிச் சட்டம் விளங்குகிறது:

1. தூக்கிச் செல்வதற்கு நியாயமான கட்டணம் தருபவர் களின் சரக்கினைத் தூக்கிச் செல்ல வேண்டும். நியாய மற்ற மறுப்பிற்குச் சரக்கேற்றிமேல் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடுக்கும் உரிமை சரக்கேற்றிச் செல்லக் கேட்கும் மக்களுக்கு உண்டு. ஆனால், சில நேரங்களில் அவர் சரக்குகளைச் சுமந்து செல்ல மறுக்கலாம். உதாரணமாக, அவர் சுமந்து செல்ல ஏற்புத் தந்தபோ துள்ள சரக்குபோல் இல்லாமல் வேறு சரக்கைச் சுமக்கச் சொன்னால் அவர் மறுக்கலாம். அவர் வண்டியில் அல்லது தூக்குச் சாதனத்தில் இடம் இல்லாதபோதும் அவர் மறுக்கலாம். பயணம் ஆரம்பிப்பதற்கு வெகு நேரம் முன்னதாகவோ அல்லது வெகுநேரம் தாமதமாகவோ சரக்குகளைக் கொண்டுவந்தால் அவர் மறுக்கலாம். சரக்குகள் அபாயமானவையாகவும் வெடிக்கக்கூடியவை யாகவும் இருந்தால் அவர் மறுக்கலாம். சரக்கேற்றிக்குத் தெரியாத வழியில் சரக்குகளை ஏற்றிப் போகவேண்டு மென்றாலும் அவர் மறுக்கலாம். வாடிக்கையாளர் கட்டணம் செலுத்த மறுக்கும்போதும் அவர் மறுக்கலாம்.

2. அடுத்துச் சரக்குகளை அவர் பத்திரமாகத் தூக்கிச் செல்ல வேண்டும். அவற்றைக் கவனமுடன் கையாள வேண்டும்.

3. தூக்கிச் செல்லும் ஒப்பந்தப்படி சொன்ன இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் சரக்குகளைச் சேர்ப்பித்து ஒப்படைக்க வேண்டும். இடமும் நேரமும் குறிப்பிடப் படவில்லை யென்றால் நியாயமான காலத்திற்குள், வழக்கமான தொழில் இடத்திலோ அல்லது வாடிக்கையாளர் இல்லத்திலோ சேர்ப்பிக்க வேண்டும்.

4. அவர் சரக்குகளைச் சாதாரண வழக்கமான, குறுக்கு வழியில்தான் தூக்கிச் செல்ல வேண்டும். நியாயமான காரணம் இருந்தாலொழிய வழக்கமான வழியை விட்டு மாறிச் செல்லக்கூடாது.

5. அவர் சரக்குகளை நபர்களிடம் உண்மையாகச் சேர்ப்பிக்கும் வரை தன்னுடைய அலுவலகத்திலோ சேமிப்புக் கிடங்கிலோ அல்லது பத்திரமான இடத்திலோ வைத்திருக்க வேண்டும்.

உரிமைகள்

சரக்குகளைத் தூக்கிச் செல்லக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைக் கோரும் உரிமை அவருக்குண்டு. தகுந்த சூழ்நிலையில் சிறப்பாகச் சரக்கு அனுப்புபவர் கட்டணம் தரவில்லை யென்றால், சரக்குகளைத் தூக்கிச் செல்ல அவர் மறுக்கலாம். போக்குவரத்திற்குப் பொருள்களைக் கொண்டுவந்து அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தலாம். முன் கூட்டியே தூக்குக் கட்டணத்தை அவர் பெற்றுக்கொள்ளலாம். அவர் எல்லா வாடிக்கையாளர்களையும் ஒரே விதமாக நடத்த வேண்டும் என்று அவசியமில்லை. அவர் விரும்பினால் சிலருக்குக் கட்டணங்களில் சலுகை காட்டலாம். அவர் தமக்குச் சேராத கட்டணத்திற்காகத் தம் வசமுள்ள சரக்குகளின்மீது பகுதி பற்றுரிமை செலுத்தலாம். ஆனால், அனுப்பப் பெறுபவருக்குச் சரக்கு ஒப்படைக்கப்பட்டாலோ அல்லது அவர் வசம் உள்ள சரக்குகளை அனுப்பியவருக்கு இவராகக் கொடுத்துவிட்டாலோ இவ் வுரிமை இழக்கப்படும். தகுந்த அறிவிக்கை இல்லாமல் அபாயகரமான சரக்குகளை அனுப்பியும், குறைபாடான கட்டுமானத்தால் சரக்குகளை அனுப்பியும் தவறு செய்து ஒப்பந்த நிபந்தனையிலிருந்து அனுப்புபவர் வேறுபடும்போது ஏற்படும் நட்ட ஈட்டைச் சரிக்கட்டச் சரக்கேற்றிக்கு உரிமை உண்டு.

பொறுப்பு

பொதுச் சரக்கேற்றியின் பொறுப்பைப் பொறுத்தமட்டில் இங்கிலாந்து நாட்டின் பொதுச் சட்டத்தின் கோட்பாடுகள் பொருந்தும். அரசு சட்டத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டுச் சரக்கேற்றியின் பொறுப்பை வரையறுக்கக் கூடிய வகையில் அதை மாற்றிச் சில சிறப்பு நிபந்தனைகளுடன் அச் சட்டத்தை நாம் பயன்படுத்தி வருகிறோம். பொதுச் சட்டத்தின்கீழ்ச் சரக்கேற்றி ஒரு காப்பீடு அளிப்பவர் நிலையில் உள்ளார். எனவே, சரக்கு நட்டங்களுக்கு, நட்டஈடு தர வேண்டிய பொறுப்புண்டு. அவருடைய கடமையிலிருந்து தவறியதால் ஏற்படும் நட்டத்திற்கும் அவர் பொறுப்பாளியாவார். சரக்குகள் பத்திரமாக வந்து சேர்ந்தபோதும் அவர் கடமை முறிவிற்குப் பொறுப்பாளியாகிறார். தி செகரட்டரி ஆப் ஸ்டேட்டிற்கும் தி ஸ்கூல் புக் அண்டு ஆப்பரேட்டர்ஸ் டெப்போவிற்கும் (The Secretary of State. *vs.* The School Book and Apparatus Depot) நடந்த வழக்கில் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கக் கூடிய பாடத் தீட்டக்குழுவின் உறுப்பினர்களுக்கு அக் குழுவின் கூட்டம் நடந்த பின்னர் மிகவும் தாமதமாகச் சரக்கேற்றிக் கொண்டுவந்து தந்தார். வெளியிடுவோரின் நோக்கமும் நிறைவேறவில்லை. எனவே, சரக்கேற்றி வாதிக்கு நட்ட ஈடாக அப்பொழுது வந்த புத்தகங்களின் விலையைக் கொடுக்க வேண்டும் என்று நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

பொதுச் சட்டத்தின்கீழ்க் கீழ்க்கண்டவை விதிவிலக்குகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன:

1. நட்டம் கடவுள் அல்லது இயற்கையின் செயலாலும் அந்நிய நாட்டுப் படையெடுப்பாலும் பொருள்களில் உள்ள குறைபாட்டாலும் ஏற்பட்டால், சரக்கேற்றி பொறுப்பாளியாகமாட்டார்.

2. சரக்கு வந்தவுடனே அனுப்பப் பெறுபவருக்குச் சரக்கேற்றி அறிவிக்கை விட்டு, அவர் வந்து சரக்கை நியாயமான காலத்திற்குள் எடுத்துச் செல்லாததால் ஏற்படும் நட்டத்திற்கு அவர் பொறுப்பாளியல்லர்.

3. அவருடைய பொறுப்பைக் குறைக்கும் தனி நிபந்தனைகள் இருந்தாலும் அவர் பொறுப்பாகமாட்டார். ஆனால், பொது விதிவிலக்கை அவர்கள் நன்மை கருதிப் பயன்படுத்தக்கூடாது. குறிப்பிட்ட செயல்கள்பற்றி அவர் குறிப்பிட வேண்டும். எப்படியும் குற்றச் செயலால் ஏற்படும் நட்டத்திற்கு அவர்

பொறுப்பாளியாகியே தீர வேண்டும். பொதுச் சட்டத்தில் கூறப்பட்ட கடும் பொறுப்புகளிலிருந்து விடுதலையடைய, பொதுச் சரக்கேற்றிச் சட்டம் சில விதிவிலக்குகளை அளித்துள்ளது. அவ் விதிவிலக்குகளைக் கோருவதற்காகச் சரக்குகளை அட்டவணையில் சேர்க்கப்பட்ட பொருள்கள் (Scheduled Articles), மதிப்பு வெளியிடப்பட்ட பொருள்கள், அட்டவணையில் சேராப் பொருள்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அட்டவணையில் குறிக்கப்பட்ட பொருள்கள் சாதாரணமாக நகைகள், தங்கம் போன்ற விலையுயர்ந்த பொருள்களாக உள்ளன. இத்தகைய பொருள்களில் சரக்கேற்றி, குறிப்பிட்ட தொகைக்கு நட்டத்திற்குப் பொறுப்பாளியாகமாட்டார். ஆனால், வேண்டுமென்றே அவரோ அவருடைய முகவரோ குற்றச் செயல்கள் புரிந்தால் அதற்குப் பொறுப்பேற்றாக வேண்டும். பொருளை அனுப்புபவர் பொருள்களின் மதிப்பை வெளியிட்டு அதிக மதிப்புள்ளவைகளுக்குத் தனிக்கட்டணம் செலுத்த வேண்டும். மதிப்பு வெளியிடப்பட்டு அதிகமான மதிப்பிற்குத் தனிக்கட்டணம் செலுத்தப்பட்டபோது சரக்கேற்றி வெளியிடப்பட்ட மதிப்பு அளவிற்குப் பொறுப்பாளியாவார். இல்லாவிட்டால் முழுத்தொகையையும் அவரிடமிருந்து பெற முடியாது.

நாரங்க் ராய் அகர்வாலாவிற்கும் தி ரிவர் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனிக்கும் நடந்த வழக்கில் (Narang Rai Agarwalla *vs.* The River Steam Navigation Co. Ltd.) ஒருசில எண்டி என்ற ஒரு வகைப் பட்டுத்துணிகள் அடங்கிய கட்டுகள் கௌஹாத்தியிலிருந்து கல்கத்தாவிற்கு ஈஸ்ட் இந்தியா கம்பெனி மூலம் அனுப்பப்பட்டவை தொலைந்துவிட்டன. உண்மையான நட்டம் ரூபா 100-க்கு மேலாக உள்ளது. ஆனால், அதற்கு மேற்பட்ட நட்ட ஈடு தர முடியாது என நீதிமன்றம் தீர்ப்புக் கூறிவிட்டது. காரணம், பொருள்களை அனுப்பியவர் மதிப்பை வெளியிடவில்லை. மேலும் சரக்கேற்றி, தனிப் பொறுப்பெடுக்கத் தனிக் கட்டணம் செலுத்தவில்லை. அட்டவணையில் சேராத பொருள்கள் விஷயத்தில் சரக்கேற்றி தம் பொறுப்பை உடன்பாட்டின் மூலம் வரையறுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், இப் பொறுப்பு வரையறை அவரின் புறக்கணிப்புச் செயலுக்கும் குற்றச் செயல்களுக்கும் விதிவிலக்கன்று. புறக்கணிப்பு இல்லை என்று நிரூபிக்கும் கடமை சரக்கேற்றிக்கு உண்டு. ஒவ்வொரு நட்ட ஈடு கோரும் போதும் சரக்கேற்றிக்கு அறிவிக்கை விடப்பட வேண்டும். இவ்வாறு அறிவிக்கை விடாமல் வழக்குத் தொடர முடியாது. நட்டமேற்பட்ட ஆறு மாதங்களுக்குள் அறிவிக்கை விடவேண்டும். நட்டமேற்பட்ட ஓர் ஆண்டிற்குள் வழக்குத் தொடரப்பட வேண்டும்.

2. தனிமுறைச் சரக்கேற்றி: இவருடைய முக்கியத் தொழில் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தூக்கிச் செல்வதன்று; ஆனால், எப்போதாவது ஒருவருடைய சரக்குகளைத் தூக்கிச்சென்று கட்டணம் பெறுவார். பொது வேலை வாய்ப்பு இங்கிருக்கவேண்டும் என்று கருதப்படவில்லை. அவர் தம் விருப்பப்படி சரக்குகளை ஏற்றிச் செல்ல உரிமையைத் தம்மிடத்திலேயே ஒதுக்கி வைத்துள்ளார். இவர் பொறுப்பு ஒரு ஒப்பாளியின் பொறுப்பை ஒத்துள்ளது. இவர் கவனமின்மையால் ஏற்படும் நட்டத்திற்கு இவர் பொறுப்பாளியாவார். நியாயமான ஒருவர் தம் பொருள்களைக் காக்க என்ன செய்வாரோ அந்த முறையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சரக்குகளை இவர் பாதுகாக்கவேண்டும்.

3. ஊதியம் பெறாச் சரக்கேற்றி: எவ்விதக் கட்டணமும் மறுபயனும் இன்றிச் சரக்கேற்றிச் செல்பவரை ஊதியம் பெறாச் சரக்கேற்றி என்கிறோம். முதலில் சரக்கேற்றிச் செல்வதாக ஒத்துக்கொண்டு, பின்னர் மறுத்துவிட்டால், அவர்மீது சரக்கு அனுப்புபவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கமுடியாது. காரணம், அவர் செய்த உடன்பாடு மறுபயனைத் தாங்கித் திகழவில்லை. ஆனால், அவர் சரக்குகளை ஏற்றிச் செல்ல ஒத்துக்கொண்டால் ஓர் ஒப்பாளிக்குள்ள பொறுப்பில் அவர் காணப்படுகிறார்.

இரயில்வே சரக்கேற்றி
(Railway Carriers)

நம் நாட்டில் உள்ள சரக்கேற்றும் இரயில்வேயின் பொறுப்பு பொதுச் சரக்கேற்றியின் பொறுப்புப் போன்றதாகும். இதுவரை இரயில்வேயின் பொறுப்பு ஓர் ஒப்பாளியின் பொறுப்புபோலக் கொள்ளப்பட்டது. ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 151, 152, 161ல் கூறிய கோட்பாடுகளின்படி ஒப்படைப்பு நிலைமைதான் இருந்துவந்தது. ஒரு தகுநிலை ஒப்பாளியிடம் ஒப்படைக்கப்பட்ட சரக்குகளின் தன்மை, அளவு, மதிப்பு போன்றவற்றைச் சார்ந்து அவர் எவ்வளவு அக்கறையுடன் கவனித்துக் கொள்கிறாரோ அந்த அளவு இரயில்வேயும் அக்கறையுடன் சரக்குகளைக் கவனித்துக்கொண்டால் பொறுப்பிலிருந்து அது மீளலாம். மேற்கூறிய தரமுள்ள அல்லது அளவுள்ள கவனத்துடன் இரயில்வே செயலாற்றினால், ஏற்படும் நட்டம், அழிவு, கெட்டுப்போதல் போன்றவைகளுக்குத் தனி ஒப்பந்தம் இல்லாதபோது பொறுப்பாளி ஆக வேண்டிய அவசியமில்லை. சரக்குகளைத் திருப்பி

அனுப்பாத காலத்திலிருந்து ஏற்படும் நட்டத்திற்கும், அத் தவற்றினால் குறித்த நேரத்தில் சரக்குகள் சேர்க்கப்படாதுபோய் அதனால் ஏற்படும் நட்டத்திற்கும் இரயில்வே பொறுப்பு உள்ளதாகும். இத்தகைய எளிதான பொறுப்பிலிருந்து இன்னும் அதிகப் பொறுப்பை ஏற்கும்படி, 1890ஆம் ஆண்டின் இரயில்வே சட்டத்திற்கு ஏற்பட்ட 1961ஆம் ஆண்டின் 39ஆவது திருத்திய சட்டம், 1962 ஜனவரியிலிருந்து செய்துவிட்டது. இத் திருத்திய சட்டத்தின்படி இரயில்வேயின் பாதுகாப்பிலிருக்கும் சரக்குகளுக்கும் விலங்குகளுக்கும் அல்லது பிராணிகளுக்கும் இரயில்வேதான் பொறுப்பாளி. இங்கிலாந்தில் உள்ளபடி இத்தகைய அடிப்படைப் பொறுப்பு, ஒப்பாளியின் தன்மையிலிருந்து பொதுச் சரக்கேற்றியின் நிலைமைக்கு இரயில்வேக்கு வந்துவிட்டது. இங்கிலாந்தில் எப்பொழுதும் இரயில்வேயின் பொறுப்புச் சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டுக் காப்பீடு அளிப்பவரின் பொறுப்புபோல் உள்ளது. இக் கருத்தைப் பொறுத்தமட்டில் 1957ஆம் ஆண்டில் இரயில்வே சத்த அமைப்பு விசாரணைக் குழுவின் (Railway Freight Structure Enquiry Committee of 1957) பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டது.

1890ஆம் ஆண்டின் இரயில்வே சட்டம், 1962-ல் திருத்தி அமைத்தபடி, அதன் பிரிவுகள் 73 முதல் 78 வரை பொறுப்பையும் கடமையையும் அதிகரிக்கச் செய்துள்ளன. பிரிவு 73 ஒரு சரக்கேற்றியாக இரயில்வே நிருவாகம் செய்ய வேண்டிய பொறுப்புகளைக் கூறுகின்றன. எனவே தற்சமயம் எவ்வித நட்டம், அழிவு, சேதம், கெட்டுப்போதல், ஏற்றிச்சென்ற விலங்குகளைத் திருப்பிச் சேர்க்காதது போன்றவைகளுக்கு இரயில்வே பதில் சொல்லியாகவேண்டும்; நட்டஈடு தரவேண்டும். ஆனால், கடவுள் செய்கை, போர்க்காலச் செயல், பொது எதிரியின் செயல், சட்டரீதியாக ஏற்படும் தடை அல்லது கைப்பற்றுதல், மத்திய-மாநில அரசுகளால் போடப்படும் தடை உத்தரவு, சரக்கு அனுப்புபவர் அல்லது பெறுபவர் செய்யும் புறக்கணிப்பு, பொருளின் ஊடே காணும் கெடுதல், உள்ளிருக்கும் குறைபாடுகள், தீ அல்லது வெடிக்கும் வீபத்து, எதிர்பாராத விபத்து போன்றவைகளால் நிகழும் நட்டத்திற்கு இரயில்வே பொறுப்பாளியன்று. இந்த எதிர்பாரா நிகழ்ச்சிகளின் விலக்கீட்டைத் தவிர ஏனைய நட்டங்களுக்கு இரயில்வே முழுப் பொறுப்பேற்கவேண்டும்.

இவ் விலக்கீட்டு நிகழ்ச்சிகளில்கூடச் சரக்குகளையும் பிராணிகளையும் காப்பதற்குத் தகுந்த நடவடிக்கையும், பொறுப்பும்,

நியாயமான கவனமும் கையாண்டதாக இரயில்வே நிரூபிக்க வேண்டும். பிரயாணிகளின் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிச் செல்ல இரயில்வே பெற்றுக்கொண்ட பணத்திற்கு ரசீது தர வேண்டும். அம் மூட்டை முடிச்சுகள் தொலைந்துபோனாலும் அல்லது அவை சேர்ப்பிக்கப்படாதபோதும் இரயில்வே பொறுப் பாளியாகும். பிரயாணிகளே மூட்டை முடிச்சுகளை எடுத்துச் செல்லும்போது ஏற்படும் நட்டத்திற்கு, அந்நட்டம் இரயில்வேயின் புறக்கணிப்பால் ஏற்பட்டதென நிரூபித்தாலொழிய, இரயில்வே பொறுப்பாளியாகாது. சரக்கு அனுப்புவோருக்குத் தெரிந்து சரக்குகளைத் திறந்த பெட்டியில் (wagons) அனுப்பி, அதனால் வரும் நட்டத்திற்கு இரயில்வே பொறுப்பாகாது. பொருள் அல்லது சரக்குப் போய்ச் சேர வேண்டிய இடத்திலிருந்து வெளியேற்றாத நிலையில் கப்பல் துறைச் செலவு, தாமதக்கட்டணம் போன்றவை செலுத்தக் கொடுக்கப்பட்ட காலம் அல்லது தவணை முடிந்த 30 நாள்களுக்கு இரயில்வே பொறுப்பெடுத்துச் சரக்கினை அனுப்பு வதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பிரிவு 77 கூறுகிறது. அச் சரக்குகளைச் சேமிப்புக் கிடங்கில் 30 நாள்களுக்கு வைத் திருக்கும் பொறுப்பு இரயில்வேக்கு உண்டு. அம் முப்பது நாள் களுக்கும் ஓர் ஒப்பாளியாக இரயில்வே பொறுப்பேற்கிறது.

முன்னர்க் கூறியதுபோல் நட்டம், சேதம், அழிவு, கெட்டுப் போதல், தாமதித்த ஒப்படைப்பால் வரும் சேதம் போன்றவை களுக்கு முழுப் பொறுப்பேற்கவேண்டும். வழியிலேயே சரக்கு வைத்திருக்கப்பட்டிருந்தாலும் தவறான ஒப்படைப்பு நேர்ந் தாலும் ஏற்படும் நட்டத்திற்கு இரயில்வேதான் பொறுப்பு. இரயில்வேயைச் சாராத தேவையில்லாத வண்டிகளை நிறுத்தி வைக்கும் இடத்தில் (siding) சரக்குகளை ஒப்படைப்பதாக இருந் தால் அதனால் ஏற்படும் சேதத்திற்கு இரயில்வே பொறுப்பாளி அன்று. சரக்குகளை ஒரு பெட்டியிலேயே இடம் மாற்றும் போதும் அல்லது மற்றப் பெட்டிக்கு மாற்றும் போதும் ஏற்படும் நட்டத்திற்கு இரயில்வே பொறுப்பாளி ஆகாது. சரக்குகளை இரண்டு அல்லது மேற்பட்ட இரயில்வேக்கள் ஏற்றிச் செல்ல வேண்டியிருந்தால் பொறுப்புகள் மாறும்; அவைகளிடையே பகிர்ந்து கொள்ளப்படும். சரக்குகளின் பயணம் இந்திய இரயில்வே யிலிருந்து அயல்நாட்டு இரயில்வேயிலும் தொடர்ந்தாலும் பொறுப்பு மாறிப் பகிர்ந்து கொள்ளப்படும். குறைபாடுள்ள சரக்குகள் இருந்தாலும் அல்லது கட்டுமானத்தில் குறைபாடு இருந்தாலும் அதனால் ஏற்படும் நட்டத்திற்கு இரயில்வே பொறுப் பாகாது. சரக்கு அனுப்புபவர் அல்லது பெறுபவர்மேல்

மோசடியும் புறக்கணிப்பும் காணப்பட்டால் அதற்குப் பொறுப் பாளியாக இரயில்வே திகழாது. கொள்ளை, வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்றவைகளால் ஏற்படும் நட்டத்திற்கு இரயில்வே பொறுப்பாகாது.

வரையறுக்கப்பட்ட பொறுப்பு

குறைந்த கட்டுமானத்தில் உள்ள விலைமதிப்புள்ள பொருள்களை எடுத்துச் செல்வதால் ஏற்படும் பொதுச் சட்டத்தில் காணும் அபாயத்தைத் தவிர்த்துப் பொதுச் சரக்கேற்றியைப் பாதுகாக்கச் சில நிலைகளில் பொறுப்பு வரையறுக்கப்படுகிறது. சரக்கின் மதிப்பு ரூபா 500ஐத் தாண்டாத நிலையில், இரயில்வே அவற்றைத் தன் பொறுப்பில் எவ்விதக் கூடுதலான கட்டணமு மின்றி எடுத்துச் செல்லும். அம் மதிப்பிற்கு மேற்பட்ட அதிக மதிப்புள்ள பொருள்களில் அவற்றின் மதிப்பை வெளியிட வேண்டும். தனிக் கட்டணம் கூடுதலாகக் கட்டவேண்டும். அப்பொழுதுதான் இரயில்வே முழுப் பொறுப்பேற்கும். சட்டத்தின் அட்டவணை 11-ல் குறிப்பிட்டுள்ள தங்கம், வெள்ளி, முலாம் பூசப்பட்டுள்ள பொருள்கள், துணிமணிகள், முத்துகள், நகை கள், கடிகாரங்கள், சுவர்க் கடிகாரங்கள் போன்ற பொருள்களைக் குறிக்கின்றன. இவற்றின் மதிப்பை வெளியிடவேண்டும். இவ்வாறு மதிப்பை வெளியிடாவிட்டால் இரயில்வேயின் கவனமின்மையால் நட்டமேற்பட்டாலும் அனுப்புபவர்கள் அவற்றின் முழுமதிப்பைப் பெறமுடியாது. முன்பு கூறிய என். ஆர். அகர்வாலா வழக்கில் மதிப்பை வெளியிடாததாலும், கூடுதலான தனிக்கட்டணம் செலுத்தாததாலும் வழக்கு வெற்றிபெற முடியவில்லை. அம்மாதிரி யான விலையுயர்ந்த பொருள்களை ஏற்கும்போது இரயில்வே அவற்றைப் பார்த்து உண்மையான மதிப்பை வெளியிடச் சொல்ல வேண்டும். அதிக மதிப்பிட்டாலும் குறைவாக மதிப் பிட்டாலும் அனுப்புபவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். ஒருவர் அதிக மதிப்பீடு செய்தாலும்கூட உண்மையான மதிப் பிற்குத்தான் அவருக்கு நட்ட ஈடு கிடைக்கும். குறைவாக மதிப் பீடு செய்தால் அத் தொகைக்குத்தான் நட்ட ஈடு கிடைக்கும்; உண்மையான விலைக்குக் கிடைக்காது. விலங்குகளைப்பொறுத்த மட்டில் சட்டத்தின் முதல் அட்டவணை, இரயில்வேயின் பொறுப்பினைக் குறைக்கும் பொருட்டு ஒவ்வொரு விலங்குக்கும் அல்லது பிராணிக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை வரையறை செய்துள்ளது. அதன்படி ஒவ்வொரு யானைக்கும் ரூ. 1500-ம், ஒவ்வொரு குதிரைக்கும் ரூ. 750-ம், கோவேறுகழுதை, கொம் புள்ள மாடுகள், ஒட்டகங்கள் போன்றவைகளுக்குத் தலா

ரூ. 200-ம் நாய்கள், கழுதைகள், வெள்ளாடுகள், பன்றிகள், ஆடுகள் அல்லது மேலே குறிப்பிடப்படாத ஏனைய பிராணிகள் அல்லது பறவைகள் போன்றவை ஒவ்வொன்றிற்கும் ரூ. 30–ம் நட்ட ஈடாகத் தரப்படும்.

தனி அல்லது சிறப்பு உடன்பாட்டின் மூலம் இரயில்வேச் சரக்குகளைத் தூக்கிச் செல்லும்போது அதன் பொறுப்புகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் குறிப்பிடப்பட்ட தாள்களில் எழுத்து மூலம் எழுதப்பட்டுச் சம்பந்தப்பட்ட நபர்கள் கையெழுத்திட வேண்டும். இத்தகைய தனி உடன்பாடுகள் துணிவுச் சீட்டுகள் (Risk Notse) என்று அழைக்கப்படுகின்றன. ஆங்கில எழுத்துகளில் அநேக எழுத்துகளால் துணிவுச்சீட்டுகள் பலவகைகளாகக் குறிக்கப்படுகின்றன.

சி, எக்ச், ஒய் என்ற தாள்கள் ஒவ்வொரு கட்டத்திலும் பொறுப்பை விதிவிலக்குச் செய்கின்றன.

ஏ,பி,சி,டி,ஜி,எச் என்ற தாள்கள் இரயில்வே ஊழியர்களின் கெட்ட நடத்தையால் ஏற்படும் நட்டத்தின் பொறுப்பை விடுத்து மற்றவைகளில் விலக்கு அளிக்கின்றன.

ஈ, எப் தாள்கள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கான பொறுப்பை வரையறுக்கின்றன. பிரிவு 74-சி விபத்து ஏற்படும் விகிதங்களில்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறுகிறது. பயணிகளை ஏற்றிச்செல்லும் பொதுச் சாதனமாக இரயில்வேக்கள் அமையவில்லை. எனவே, இரயில்வேயின் புறக்கணிப்பால் காயம் பட்ட பயணிகளுக்கு மட்டும் அவை நட்ட ஈடு தரும். யாராவது இறந்துவிட்டால் நபர் ஒன்றுக்கு நட்ட ஈடு ரூபா 10,000 ஆகும். பிரிவு 75-ன்படி இந் நட்டத்தொகையும் இறந்து விட்டவர் அவருடைய புறக்கணிப்பால் அல்லது அஜாக்கிரதையால் இறந்துவிட்டால் கிடைக்காமல் போய்விடும். அயல்நாட்டு இரயில்வேக்களில் கிடைத்த அனுபவங்களைச் சேகரித்து இத்தகைய விதிவிலக்குகளும் பொறுப்பு வரையறைகளும் நம் நாட்டுச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

உரிமை வேண்டல்

வழக்குத் தொடுத்துப் பரிகாரம் தேடப்படுகிறது. இரயில்வே சட்டத்தின் பிரிவு 77-ல் சொல்லியபடி சரக்கைச் சேர்ப்பித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அறிவிக்கை விடவேண்டும்.

அரசினரால் நடத்தப்படும் இரயில்வேக்களைப் பொறுத்தமட்டில் இவ் வறிக்கையோடு, பிரிவு 80-ல் கண்டபடி உரிமை இயல் நடை முறைச் சட்டம் (Civil Procedure Code) ஒன்று வழக்குத் தொடுப் பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு தரவேண்டும். சத்தம் மற்ற கட்டணங்கள் போன்றவைகளுக்காகச் சரக்குகளின்மீது பற்றுரிமை கொள்ள இரயில்வேக்கு அதிகாரமுண்டு.

கடல் மூலம் சரக்கு எடுத்துச் செல்லல்
(Carriage by Sea)

அவ்வப்பொழுது திருத்தி அமைக்கப்பட்ட 1925ஆம் ஆண்டின் கடல்வழிச் சரக்கெடுத்துச் செல்லும் சட்டத்தில் கூறியபடி சரக்கேற்றிகளின் உரிமைகளும் பொறுப்புகளும் காணப்படு கின்றன. சரக்குகளின் சொந்தக்காரர்களுக்கும் சரக்கேற்றி களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுவது மிகவும் அவசியம். அந்த ஒப்பந்தம் கப்பல் சத்தம் பற்றிய ஒப்பந்தமாக இருக்க லாம்; அது ஒரு கப்பல் வாடகை ஒப்பந்தம் (Charter party) ஆக இருக்கலாம் அல்லது கப்பல் ரசீதாக இருக்கலாம். முன்னர்க் கூறியது தானே ஒப்பந்தமான ஒரு முக்கியப் பத்திரம். பின்னால் கூறியது ஒப்பந்தத்தைச் சான்றாகக் காட்டும் ஒரு துணைப் பத்திர மாகும். கப்பல் ரசீதிலுள்ள நிபந்தனைகள் வாடகை ஒப்பந்தப் பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளிலிருந்து வேறுபட்டும் முரணா கவும் இருந்தால், வாடகை ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனை களையே கையாள வேண்டும். வாடகை ஒப்பந்தத்திற்கு உட்பட் டுத்தான் கப்பல் ரசீது உள்ளது.

ஒரு கப்பல் வாடகைப் பத்திரம் என்பது கப்பல் சத்தத்தைக் குறிக்கும் ஒப்பந்தம் அடங்கிய முறையான ஓர் ஆவணம். எந்த நிபந்தனைகளின்மேல் சரக்குகள் கப்பல் மூலம் அனுப்பப்படுகின் றனவோ அந்த நிபந்தனைகளும் விதிகளும் அதில் அடங்கி யுள்ளன. 'சத்தம் என்ற தொகையை மறுபயனாகப் பெறும் பொருட்டு ஒரு குறிப்பிட்ட கப்பலின் சொந்தக்காரர் சரக்கினை அனுப்புபவர்களுக்குத் தம் முழுக் கப்பலையும் அல்லது அதில் ஒரு பகுதியையும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து அல்லது இடங் களிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் சரக்கினை எடுத்துச் செல்லத் தரும் செய்கையை எழுத்தின் மூலம் தரும் ஒப்பந்தம் தான் கப்பல் வாடகை ஒப்பந்தம். எனவே, பெரிய அளவில் ஏற்றுமதி வணிகம் செய்பவர் ஒரு முழுக் கப்பலையே வாடகைக்கு எடுத்துக்கொள்வதுண்டு. இதற்கு ஏற்படும் வாடகை ஒப்பந்

தமே கப்பல் வாடகை அல்லது சத்தம் பற்றிய ஒப்பந்தம் எனப்படும். ஒரு குறிப்பிட்ட பயணத்திற்கு மட்டும் ஏற்படும் ஒப்பந்தம் பயண ஒப்பந்தம் (Voyage charter) என்றும் குறிப் பிட்ட காலத்திற்குச் செய்யப்படும் ஒப்பந்தம் கால ஒப்பந்தம் (Time charter) என்றும் அறியப்படும். இப் பத்திரத்தில் வாட கைக்குக் கொடுப்பவர், பெறுபவர் ஆகியோரின் உரிமை, கடமை, பொறுப்பு, பயணவழி, ஏற்றக்கூடிய சரக்கு, அதன் வாடகை போன்றவை பற்றிய நிபந்தனைகள் அடங்கியுள்ளன.

முன்கூறியபடி கப்பல் வாடகை ஒப்பந்தம் இரண்டு விதமாக அமைந்துள்ளது. ஒன்று முழுக் கப்பலையும் வாடகை அல்லது குத்தகைக்கு எடுத்தல் (Demise or Lease), மற்றொன்று சாதாரண ஒப்பந்தம். முதலில் கூறப்பட்டவற்றில் சரக்கு அனுப்புபவரின் எல்லாச் சரக்குகளையும் ஏற்றுவதற்கு முழுக் கப்பலும் அவருக்குக் கொடுக்கப்படுகிறது. அதாவது அவர் வசத்திலே கப்பல் விடப் பட்டு, அவர் செய்த ஒப்பந்தம் முடியும்வரை அவரே கப்ப லுக்குச் சொந்தக்காரர்போல் விளங்குகிறார். ஆனால், சாதாரண ஒப்பந்தத்தில், சரக்கு அனுப்புபவர் கப்பலைப் பயன் படுத்தும் உரிமை பெற்றுத் தம்முடைய சரக்குகளை ஏற்றி அனுப்புகிறார். உரிமையும் இருப்பிடமும் கப்பலின் சொந்தக் காரர் வசமே உள்ளன. மேற்கூறியபடி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது 6 மாதங்களுக்கு அல்லது ஓராண்டிற்கு என்று ஒப்பந்தம் செய்வதைக் கால ஒப்பந்தம் என்றும், ஒரு குறிப்பிட்ட பயணத்திற்கு அதாவது இலண்டனிலிருந்து சென்னை வரை என்றிருந்தால் பயண ஒப்பந்தம் என்றும் கூறுகிறோம்.

முழுக் கப்பலையும் வாடகைக்கு எடுப்பதால் ஏற்படும் விளைவு: இப்படியுள்ள நிலையில் கப்பலின் சொந்தக்காரருக்குச் சரக்கனுப்புபவருக்கு ஏற்படும் நட்டத்தை ஏற்கும் பொறுப்பில்லை. காரணம் இவ் வொப்பந்தம் முடிகிறவரை ஒப்பந்தம் செய்து கொண்டவர் வசம் கப்பல் இருப்பதால் அவரே அதன் உரிமையா ளராகக் கருதப்படுகிறார். கப்பல் தலைவரும் மாலுமிகளும் இவ் வொப்பந்தத்தை அறியாமல் செய்யும் செயல்களுக்குக்கூடக் கப்ப லின் உரிமையாளர் பொறுப்பாளியல்லர். சட்டத்தின் கீழுள்ள ஒரு சரக்கேற்றிபோல் இவ் வொப்பந்தம் உள்ளது. எனவே, கப்பலின் உரிமையயாளருக்கு வழங்கும் எல்லாப் பாதுகாப்பும் ஒப்பந்தக் காரருக்கும் வழங்கப்படும். 1894ஆம் ஆண்டு வணிகக் கப்பல் சட்டத்தின் கீழ் உள்ள அல்லது குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகளை அடையும் உரிமை அவருக்குண்டு. கப்பல் வாடகை அல்லது சத்தப் பாக்கிக்காகச் சரக்கின்மீது பற்றுரிமை செலுத்தக் கப்பலின்

சொந்தக்காரருக்கு உரிமை இல்லை. காரணம் ஒப்பந்ததாரர் வசம் கப்பல் உள்ளதால் உரிமையாளர் பற்றுரிமை செலுத்த முடியாது. சாதாரணச் சூழ்நிலையில் பணம் செலுத்தப் படாத விற்பனையாளர் (Unpaid Seller) கையாளும் நடுவழி நிறுத்தம் (Stoppage in Transit) என்ற உரிமையை இப்பொழுது கையாள முடியாது. காரணம் கப்பல் தலைவனிடம் சரக்குகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆனால், சாதாரண ஒப்பந்தத்தில் செலுத்தப்படாத விற்பனையாளர் இவ் வுரிமையை நிறைவேற்ற லாம். காரணம் இங்குக் கப்பல் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்ட சரக்கு ஒரு சரக்கேற்றியிடம் ஒப்படைக்கப்பட்ட சரக்கிற்குச் சமம்.

கப்பல் ரசீது

சரக்குகள் குறிப்பிட்ட இடத்திற்கு எடுத்துச் செல்வதற்காகக் கப்பலில் ஏற்றப்பட்டன என்பதற்குச் சான்றாக ஒப்பந்தம் செய்த கப்பல் கம்பெனியின் உரிமையாளரோ அவர் முகவரோ தரும் ஆவணமே கப்பல் ரசீது எனப்படும். எந்த நிபந்தனைகளின் பேரில் பொருள்கள் பெற்றுக்கொள்ளப் பட்டன அல்லது பொருள்கள் ஒப்படைக்கப்படும் என்பதெல்லாம் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். கப்பல் தவலைரின் கையெழுத்து அதில் காணப்படும். இது ஒரு சரக்குரிமை ஆவணமாகும். இது அந்த ஒப்பந்தமே இல்லையென்றாலும் ஒப்பந்தத்தின் நிபந்த னைகளைக் குறிக்கும் சான்றாக உள்ளது. கப்பலில் ஒரு பகுதி யில் ஏற்றப்படும் சரக்குகளுக்குத்தான் இத்தகைய ஒப்பந்தம் ஏற்படுகிறது. கப்பல் ரசீதின் சிறப்புக் குணாதிசயங்களாவன:

1. கப்பலில் ஏற்றிச் செல்வதற்குச் சரக்கினைப் பெற்ற மைக்கு இது ஒரு ரசீது.

2. சரக்குகள் போய்ச் சேரவேண்டிய இடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று சரக்கு அனுப்புவோரும் கப்பல் உரிமையாளரும் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு இது ஒரு சான்றாகும்.

3. கப்பலில் சரக்கு ஏற்றப்பட்டதற்கு இது ஓர் அடை யாளம். அதாவது, இது சரக்குகளுக்குச் சமமாகவே கருதப் படுகிறது. இச் சிறப்புக் கூறுதான் கப்பல் ரசீதை ஒரு மாற்று முறை ஆவணம் போல் கருதச் சொல்கிறது. கப்பல் ரசீது விற்பது, சரக்குகளை மாற்றம் செய்வது போன்று தோன்றுகிறது. இதை அடைமானம் வைக்கலாம். அடகு வைக்கலாம்; முழுமையாகவும் அல்லது நிபந்தனைகளுடனும் உரிமைமாற்றம் செய்யலாம்;

நடைமுறைப் பழக்கத்தில் அதை ஒரு மாற்றுமுறையாவணம் போன்று கருதிச் சேர்ப்பித்தும், மேலெழுதிச் சேர்ப்பித்தும் உரிமைமாற்றம் செய்யலாம். ஆனால், இஃது ஒரு மாற்றுமுறை யாவணமாகாது. காரணம் இதை உடையவர், மதிப்பிற்காகப் பெறுபவராயினும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பின்வரும் குறை பாடுகளுக்குட்பட்டுப் பெற்றிருக்கிறார். உரிமைமாற்றம் செய் பவருக்கு உரிமை இல்லையென்றால் உரிமைமாற்றம் பெறுப வருக்கும் உரிமை இல்லை. மாற்று முறையாவணத்தில் அதன் மதிப்பிற்காகப் பெறுபவர் குறைபாடில்லாத உரிமை பெறுகிறார். அதாவது, உரிமைமாற்றம் செய்பவரின் உரிமையில் குறைபாடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் செல்லத்தக்க உரிமை பெறுகிறார். எனவே, கப்பல் ரசீது மாற்றுமுறை தொடர்பாக, நடைமுறையில் பார்க்கும்போது மாற்றுமுறையாவணம் அன்று. ஆனால், மாற்றுமுறையாவணம்போல் தோன்றுகிறது.

கப்பல் ரசீதை உடையவர் அதில் குறிப்பிட்ட சரக்கினைப் பெறும் உரிமை பெற்றவராகிறார். சரக்கு ஏற்றப்பட்ட இடத்தில் சத்தம் செலுத்தப்படவில்லையென்றால் சரக்கைப் பெற்றுக் கொள்ளும் முன் அது செலுத்தப்படவேண்டும். கப்பல் ரசீதில் கப்பல் பெயர், சரக்கு அனுப்புபவர் பெயர், அனுப்பப் பெறுபவர் பெயர், முகவரி போன்றவையும், சரக்கு ஏற்றப்பட்ட இடம், சேரவேண்டிய இடம், அதன் எடை, சரக்கின் மீதான முத்திரை அல்லது அடையாளக்குறி, கப்பல் சத்தம், ரசீதின் தேதி, நிபந்தனைகள், கப்பல் தலைவரின் கையொப்பம், முத்திரை போன்றவைகள் அடங்கியிருக்கவேண்டும். இதை நான்கு படிகளாகத் தயாரிப்பது வழக்கம். ஒரு படியைக் கப்பல் கம்பெனி வைத்துக்கொண்டு மற்றப் படிகளைச் சரக்கு அனுப்பு பவரிடம் கொடுப்பது வழக்கம்.

கப்பல் ரசீதின் வடிவங்கள் அல்லது வகைகள்

கப்பலில் ஏற்றியதற்கு ரசீது என்பது கப்பலில் ஏற்றப்பட்ட சரக்கினைப் பெற்றதற்காக ஆதாரமாகப் பெறுவது. இதற்குப் பின்னால் ஏற்றப்பட்ட ரசீது அளிக்கப்படும். ஒரு பெயரிடப் பட்ட கப்பலில் சரக்குப் பெற்றுக்கொண்டதைத் தெரிவிப் பதற்காக அளிக்கப்படுவது ஏற்றப்பட்ட ரசீது.

அடுக்காக உள்ள சீட்டுகள் (Bills in a Set)

தனிப்பட்ட நடவடிக்கைக்காக ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரங்களைத் தயாரிக்கும்போது அது ஒரு கோவை அல்லது

அடுக்காக அமைகிறது. எல்லாப் பத்திரங்களும் மூலப்பிரதிகளாக இருப்பதால், ஒன்று சரக்கு அனுப்புபவருக்கு அனுப்பப்படும். மற்றொன்று சரக்குப் பெறுபவருக்கும் மூன்றாவது சரக்கேற்றிச் செல்வோருக்கும் இப்படியாக அவை அனுப்பப்படுகின்றன. ஒரு பகுதி தீர்க்கப்பட்டு முடிந்துவிட்டால் எல்லாப் பகுதிகளும் முடிந்துவிடும்.

நேர்வழி ரசீது

இத்தகைய கப்பல் ரசீது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அதிகப்படுத்தப்பட்ட பயணத்தையும் சேர்த்துக் கடல் மூலமாகவோ அல்லது தரைமூலமாகவோ சரக்கு அனுப்புவதற்கு எழுதப்படுகிறது. மற்ற ரசீதோடு ஒப்பிடும்போது இது மிகச் சமீபத்தில் தோன்றியதால் இரண்டு அல்லது மூன்று படிகள் தயாரிக்க வேண்டிய அவசியமில்லை. சில நேரங்களில் இது கடல்-ரயில் அல்லது ரயில்-கடல்-ரயில் அல்லது ரயில்-கடல் ரசீதைக் குறிக்கும்.

தொகுப்பு ரசீதுகள் (Grouped Bills)

ஒரே இடத்திற்கு அனுப்பக்கூடிய பல சரக்குப் பொட்டலங்களைப் பல வாடிக்கையாளர்களுக்கு அனுப்பவேண்டியிருந்தால் சரக்கேற்றுபவர் தொகுக்கப்பட்ட ரசீதுகளைப் பெறுவார். அவை மொத்தமாகச் சேர்ந்துதான் உரிமை வழங்கும்; ஆனால், கட்டணச் செலவைக் குறைக்கும்.

கடல் ரசீதுகள் (Ocean Bills) தாய்நாட்டிலிருந்து அயல் நாட்டுத் துறைமுகங்களுக்குச் சரக்கேற்றிச் செல்லும் போக்கு வரவைக் குறிக்கின்றன.

கப்பல் ரசீதின் விளைபயன்

முழு வாடகைக்குக் கப்பலை விடாதபோது கப்பலின் சொந்தக்காரரை இது கட்டுப்படுத்திப் பொறுப்பாளியாக்கும். கப்பல் தலைவர் தம் அதிகார வரம்பிற்குள்ளாக இப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டால், கப்பல் வாடகைக்கு ஒப்பந்தம் செய்திருந்தாலும், கப்பலின் உரிமையாளர்தாம் பொறுப்பாவார்.

செண்டிமேனுக்கும் சிவருக்கும் (Sandeman *vs.* Sewer) ஏற்பட்ட வழக்கில், ஒரு கப்பலின் உரிமையாளர் 'அ' என்பவர், கப்பல் வாடகை ஒப்பந்தத்தின்கீழ் 'இ' என்பவரின் சரக்கை 'க'

என்பவருக்கு அனுப்ப அல்லது ஏற்றிச்சென்றிட இசைந்தார். கப்பல் தலைவர், கப்பல் ரசீதில் கையொப்பமிட்டுத் தந்தார். இவ் வொப்பந்தத்தை அறியாமலேயே கப்பல் அதிகாரிகள் சரக்கினைக் 'க'வுக்கு ஏற்றிச்சென்று ஒப்படைத்தனர். அதில் ஏற்பட்ட தகராறுக்காகச் சரக்கு அனுப்பியவர்கள் 'அ' என்ப வரின்மீது வழக்குத் தொடுக்கலாம் என்று கூறப்பட்டது. காரணம், கப்பல் ரசீது கப்பல் தலைவரால்தான் கையெழுத்துப் போடப்பட்டுள்ளது. முழுக் கப்பலையே வாடகைக்கு எடுத்துள்ள போது தரப்பட்டது. கப்பல் ரசீது மூலம் ஏற்படும் நட்டங் களுக்கு அல்லது சரக்குச் சேதத்திற்குக் கப்பலை ஒப்பந்தம் செய்தவரே பொறுப்பாளியாவாரேயொழியக் கப்பலின் உரிமை யாளரல்லர். சாதாரண ஒப்பந்தம் மூலம் சரக்கு அனுப்பும் போதும் அதை அனுப்புபவர் ஒப்பந்தத்தை அறிந்திருந்தால் ஒப்பந்தாரரிடம்தான் நட்டஈடு கோரமுடியும்.

ஒரு கப்பல் தலைவரால் கையொப்பமிட்ட கப்பல் ரசீது, கப்பல் கம்பெனியால் தரம், எடை சொல்லப்பட்ட சரக்கு ஆகியவைகளைக் கப்பல் கம்பெனி ஏற்றுக்கொண்டு சரக்கினைப் பெற்றதற்கு அளிக்கப்படும் முதல் தோற்றச் சான்றாகத் திகழ் கின்றது. ஆனால், இதை ஒரு நல்லெண்ணத்துடன் பெறுப வருக்கு உரிமைமாற்றம் செய்யும்போது சரக்குகளை உண்மை யிலேயே அனுப்பாவிட்டாலும், சரக்கேற்றிக்கு ஒரு முடிந்த முடிவாகக் காணப்படுகிறது. இந்தியாவில் அளிக்கப்படும் கப்பல் ரசீது, சரக்கு அனுப்பியவரின் உத்தரவாதத்தையும் சரக்குகளின் தரம், அளவு போன்றவைபற்றி அவர்கள் கூறிய கூற்றின் உண்மையையும் பரிசோதிக்கும் உரிமை பெற்றுள்ளது.

கடல் மூலம் சரக்கேற்றிச் செல்வோரின் கடமையும் பொறுப்பும்

பொதுச் சட்டத்தின்கீழ் இச் சரக்கேற்றிகள் காப்பீடு அளிப் பவர்போல் முழுப் பொறுப்பேற்க வேண்டும். மேலும் அவர் களின் பொறுப்பு ஓர் ஒப்பாளியின் பொறுப்பைப் போலுள்ளது. அவர்கள் ஒப்பந்தத்தைப் புறக்கணிப்புச் செய்யமுடியாது. இயற்கை அல்லது கடவுளின் செயல், அரசின் எதிரிகளின் செயல், வெளிப்படாத குறைபாடு, தடை, கடலில் ஏற்படும் ஆபத்து போன்றவை எதிர்பார்க்கப்படுகின்ற ஆபத்துகள். சரக் கேற்றிகளின் கடமைகளாவன : முதற்கண் கடலில் பயணம் செய்யக் கப்பல் தகுந்தபடி இருக்கிறதா என்று கவனமுடன் பார்க்க வேண்டும். இரண்டாவதாகச் சரக்குகளை மிகவும் கவன முடன் கையாளவேண்டும். மூன்றாவதாகத் துறைமுகத்தில்

சரக்குகளைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். கடைசியாகத் தம் கடமைகளை நிறைவேற்றிவிட்ட சரக்குப் பெறுபவருக்கு அவைகளை ஒப்படைக்க வேண்டும். சரக்குகளின் மதிப்பு வெளியிடாதபோது, நூறு பவுண்டிற்குமேல் ஏற்படும் நட்டங்களுக்கு அவர் பொறுப்பாளியல்லர். நட்டஈடு கோரி, ஓர் ஆண்டிற்குள் வழக்குத் தொடராவிட்டால் அவர் பொறுப்பிலிருந்து விடுதலை அடைகிறார். சத்தம் அல்லது வாடகை என்பது கடல் மூலம் சரக்கேற்றிச் செல்ல ஏற்படும் ஒப்பந்தத்தின் மறுபயனேயாகும். பயணம் முடிந்த பின்னர் இக் கட்டணம் செலுத்தப்படும். சரக்குகளின் டன் எடைகளுக்குத் தகுந்தபடி இது மாறும். செலுத்தப்படாத சத்தத்திற்காகக் கப்பல் உரிமையாளர் சரக்கின்மீது பற்றுரிமை கொள்ளலாம். அஃது ஒரு குறிப்பிட்ட கைவசமுள்ள பற்றுரிமையாகக் கருதப்படுகிறது. எளிய சத்தம், முன் செலுத்திய சத்தம், இறந்த சத்தம், முழுச் சத்தம், விகிதச் சத்தம், காலச்சத்தம், அதிக அளவு நூற்றுமானச் சத்தம் (Primage) என்று பலவகையான சத்தங்கள் வசூலிக்கப்படுகின்றன.

விமானம் மூலம் சரக்கேற்றிச் செல்லுதல்

(Carriage by Air)

1934ஆம் ஆண்டின் விமானம் மூலம் சரக்கேற்றிச் செல்லும் சட்டத்தின் சரத்துகள் இதுபற்றி விளக்குகின்றன. வார்சா மாநாட்டில் பல்வேறு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளின்படி சரக்கேற்றிச் செல்லுதல் நடந்துவருகின்றது. விமானம்மூலம் பன்னாட்டுச் சரக்குகளை ஏற்றிச் செல்வதன் விதிகளை அம் மாநாடு நிருணயம் செய்தது; அவ் விதிகள் நம் உள்நாட்டிலும் விமானம்மூலம் சரக்கேற்றிச் செல்வதற்குப் பொருந்தும்.

விமான சரக்கேற்றியின் பொறுப்புகள்

பதிவுசெய்யப்பட்ட மூட்டைமுடிச்சுகளுக்கு அதாவது, பயணிகள் எடுத்துச்செல்லும் பொருள்களுக்கு ஏற்படும் நட்டம் அல்லது சேதத்திற்குச் சரக்கேற்றி பொறுப்பாவார். அப் பொருள்கள் பயணிகளின் பொறுப்பிலேயே எடுத்துச் செல்லப்பட்டால், நபருக்கு 5000 பிராங்குகள் (நாணயம்) பொறுப்பாக நட்டஈடு வழங்கப்படும். மற்றவைகளில் ஒரு கிலோவிற்கு 250 பிராங்குகள் வழங்கப்படும். பொருள்களின் மதிப்பை வெளியிட்டுக் கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்டால் அறிவிக்கப்பட்ட மதிப்பின் பணம் நட்டஈடாகத் தரப்படும். பயணிகளைப்

பொறுத்தமட்டில் ஒரு பயணிக்கு 1,25,000 பிராங்குகள் நட்ட ஈடாகத் தரப்படும். இன்னும் அதிகமாக நட்டஈடு தருவதற்கு ஒத்துக்கொள்வதுமுண்டு. சரக்கேற்றி அல்லது அவரின் முகவர் வேண்டுமென்றே செய்த தவறான நடத்தையால் ஏற்படும் நட்டத்திற்குச் சரக்கேற்றி பொறுப்பாளியாகிறார். விமானத்தில் ஒருவர் இறந்துவிட்டாலும், காயம்பட்டாலும், ஏறும்பொழுதும் அல்லது இறங்கும்போது சேதம் ஏற்பட்டாலும் எல்லாவற்றிற்கும் விமானக் கம்பெனி பொறுப்பாளியாகும்.

அவராலோ அவரின் பதிலாளாலோ சேதத்தைத் தடுத்திட வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அந் நடவடிக்கைகள் எடுக்க முடியாதவைகளாகக் காணப்பட்டாலும் அந் நட்டம் விமான ஓட்டியின் அலட்சியப்போக்காலும், அல்லது விமானத்தைச் சரிவர ஓட்டாததால் ஏற்பட்டாலும் அப் புறக் கணிப்பில் பயணிகளுக்கும் பங்குண்டு என்றாலும், சரக்கேற்றி பொறுப்பாளியாகமாட்டார். விமானக் கம்பெனியால் அளிக்கப் படும் சரக்குப் பயணச்சீட்டு (Luggage Ticket) கீழ்க்காணும் விவரங்களைப் பெற்றிருக்க வேண்டும். தோன்றிய அல்லது உரிய இடம், பொருள்கள் பெற்றுக்கொண்ட தேதி, எங்கிருந்து சரக்கு அனுப்பப்படுகிறது, எந்த இடத்திற்குச் சரக்குப் போய்ச் சேரவேண்டும், நபர்களின் பெயர்களும் முகவரிகளும், சரக்குப் பொட்டலங்களின் எண்ணிக்கையும் எடையும், சரக்குகளின் விவரம் போன்றவைகளும் அதில் குறிப்பிடப்பட வேண்டும். சரக்கு அனுப்புபவரை ஒரு விமானவழிச் சரக்கனுப்பும் சீட்டுத் (Air Consignment Note) தயாரித்துத் தரும்படி சரக்கேற்றி வேண்டுவார். ஆனால் சில நேரங்களில் அவரின் ஒப்புதல் பெற்றுச் சரக்கேற்றியே அதைத் தயாரிப்பதுமுண்டு. சரக்கனுப்புவோர் மட்டும்தாம் அதைத் தயாரிக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ள வேண்டும். அச் சீட்டின் உள்ளடக்கமாவன: சரக்குப் புறப்பாட்டின் இடம், போய்ச் சேருமிடம், நபர்களின் பெயர்களும் முகவரிகளும், சரக்குகளின் தன்மையும் விவரமும், சரக்குப் பொட்டலம் அல்லது மூட்டைகளின் எண்ணிக்கையும் எடையும், சத்தம் அல்லது வாடகை, வெளியிடப்பட்ட மதிப்பின் தொகை, கூடுதலான தனிக் கட்டணம், ஒப்புக்கொள்ளப்பட்ட நிறுத்து மிடங்கள், பொறுப்புச் சரத்து முதலியன. இச் சீட்டின் முறையற்ற தன்மையாலும் அல்லது இச் சீட்டு இல்லாவிட்டாலும் அல்லது தொலைந்துவிட்டாலும் ஒப்பந்தத்தின் செல்லுபடித் தன்மை பாதிக்காது. இச் சீட்டில்லாமல் சரக்கேற்றி, சரக்குகளைப் பெற்றுக்கொண்டால், பின்னர் ஏற்படும் தகராறு அல்லது

நட்டங்களுக்கு இச் சட்டத்தின் நிபந்தனைகள் துணைவரா. சரக்கேற்றியின் பொறுப்பை அகற்ற அல்லது குறைக்க முடியாது. இச் சீட்டின் உண்மையான தகவலுக்குச் சரக்கு அனுப்புவோர் தாம் பொறுப்பு. இச் சீட்டின் தன்மையால், முறையற்ற விதத்தால் சரக்கேற்றியும் மற்றவர்களும் நட்டமடைந்தால், அதற்குப் பொறுப்பு, சரக்கு அனுப்புபவரேயாகும். புகார் செய்வதற்கும் வழக்குத் தொடுப்பதற்கும் சட்டத்தில் கூறியுள்ள கால தவணைக்குள் செய்துவிடவேண்டும். உதாரணமாக, மூட்டை முடிச்சுகள் தொலைந்துவிட்டால் அவைகளைப் பெற்ற மூன்று நாள்களுக்குள்ளும், சரக்குகளாக இருந்தால் ஏழு நாள்களுக்குள்ளும் புகார்செய்ய வேண்டும். வழக்குத் தொடர்வதாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்குள் தொடுக்கப்பட வேண்டும்.

18. காப்பீடு

(Insurance)

இவ் விருபதாம் நூற்றாண்டில் காப்பீட்டின் அவசியத்தை விளக்க வேண்டியதில்லை. அதுவும் வணிக உலகில் காப்பீட்டின் பங்கு மிகவும் புகழ் வாய்ந்தது; பயனுள்ளது. வணிகம் செவ்வனே நடந்து வருவதற்குப் பயன்படும் சாதனங்களுள் காப்பீடும் ஒன்றாகும். திடீரென்று ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் ஏற்பாடுதான் காப்பீடாகும். மனித வாழ்வும் உயிரும் அவர்தம் சொத்துகளும் பலவகை அபாயங்களுக்கு உள்ளாகின்றன. வயோதிகம் வந்து இறந்துவிடலாம்; சரக்குகள் போகும் வழியில் அழிந்திடலாம்; தீ விபத்தினால் சரக்குகள் அவ்வளவும் தீக்கிரையாகலாம்; ஊர்திகளில் மோதி கை கால்கள் போய்விடலாம். இவற்றால் பல நட்டங்கள் ஏற்படுகின்றன. எனவே, மனித இனம் எதிர்நோக்கும் ஆனால், எப்பொழுது நிகழும் என்று உறுதியாகச் சொல்லமுடியாத நிகழ்ச்சிகள் பல. இவ்வாறு ஏற்படும் நட்டத்தை நம்மால் அறவே தவிர்க்க முடியாது. ஆனால், அதை ஓரளவுக்குக் குறைத்திடலாம். இத்தகைய நட்டத்தை உறுதியாக ஈட்டிவிடப் பயன்படுவதே காப்பீடு. எனவேதான், அதை ஈட்டுறுதி என்றும் அழைக்கிறார்கள்.

மனித இனத்திற்கும் அவர்தம் பொருளுக்கும் ஏற்படும் நட்டத்தைத் தவிர்ப்பது ஈட்டுறுதியின் நோக்கமன்று. காப்பீடு செய்வதால் மனிதனின் உயிர் போகாது என்று பொருளன்று. ஆனால், அவன் உயிர் போவதால் ஏற்படும் நட்டத்தை எந்த அளவிற்குப் பணத்தைக்கொண்டு ஈடுகட்ட முடியும் என்று அறுதியிட்டுச் செய்யப்படும் ஒப்பந்தமே காப்பீடாகும். எனவே, வருங்காலத்தில் நிகழும் உறுதியற்ற நட்டத்தை உறுதிப்படுத்தப்பட்ட பணமாக நிருணயம் செய்வதே காப்பீடு என்றும் சொல்லலாம். சமுதாயத்தில் உள்ள பலரும் ஒரு நிகழ்ச்சியால் ஏற்படும் நட்டத்தைப் பகிர்வதும் காப்பீடாகும். ஒருவரின் நட்டத்தைப் பலர் பகிர்வதால் ஒவ்வொருவரின் சுமையும் குறைகிறது. மேலும் ஒரு நபர் அடையும் நட்டம் காப்பீடு செய்த அனைவரும் செலுத்திய காப்பீட்டுக் கட்டணத்தைக் கொண்டு ஈடுசெய்யப்படுகிறது. நட்டவச்சத்திலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள விரும்புபவரே காப்பீடு செய்யப்படுபவர். ஏற்படும் நட்டத்தை ஈடு

செய்ய,உறுதி கொடுப்பவரே காப்பீடு செய்பவர். உதாரணமாக, காப்பீடு செய்பவரே காப்பீடு செய்பவர். உதாரணமாக, காப்பீடு கம்பெனி பல வணிகர்களிடமிருந்து காப்பீட்டுக் கட்டணத்தை (Premium) வசூல் செய்து, அதிலிருந்து உண்மையிலே நட்டமடைந்தவரின் நட்டத்தை ஈடுசெய்கிறது. நட்டத்தை இவ்வாறு பரவலாகச் செய்வதால் நட்டத்தின் கடுமை குறைகிறது. இம் முறையில்தான் வாணிபம் தங்குதடையின்றி வளர்கிறது. காப்பீட்டு முறை இல்லையென்றால், ஒவ்வொரு வணிகரும் ஏற்படும் நட்டத்தை தாமே முழுவதும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

காப்பீட்டின் இலக்கணம்

காப்பீடு என்பது ஓர் ஒப்பந்தம், காப்பீடு என்று சொல்லப்படும் ஒரு சிறிய தொகைக்கெதிராகக் குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒன்று நிகழ்வதால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்ய காப்பீடு செய்யப்படுபவருக்குக் காப்பீடு செய்பவர் அளிக்கும் உறுதியே காப்பீடாகும்.

காப்பீட்டு ஒப்பந்தம் என்பது, காப்பீடு செய்யப்படுபவர் என்ற ஒரு நபரால் காப்பீடு பெறுபவர் என்றவரிடம் கட்டணம் என்ற பணம் உருவில் உள்ள ஒரு மறுபயனுக்காக அவருடைய வாழ்வையோ அல்லது சொத்தையோ அல்லது அவர் அக்கறை கொண்ட மற்றவரின் வாழ்வையோ, சொத்தையோ ஒரு விபத்துக்கு அல்லது பொறுப்புக்கு எதிராகக் காப்பீடு செய்வதுதான் என்று சட்டம் கூறுகிறது. ஒப்பந்தம் செய்யத் தகுதிவாய்ந்த ஒரு நபரோ அல்லது கூட்டு வணிகமோ அல்லது ஒரு கம்பெனியோ காப்பீட்டுத் தொழில் தொடங்கலாம். முன்பு கூறியதுபோல், ஒருவர் எதிர்கால விபத்தைத் தடுத்துத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஓர் உபாயமாகக் காணப்படுகிறது காப்பீட்டு ஒப்பந்தம். இஃது ஆபத்து அல்லது எதிர்நோக்கு நிறைந்துள்ள ஓர் ஒப்பந்தம். ஒரு சட்ட பூர்வமாகச் செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் மூலக்கூறுகள் காப்பீட்டு ஒப்பந்தத்திலும் காணப்படவேண்டும். காப்பீட்டுக் கட்டணத்தை ஏற்றாலும் காப்பீடு செய்ய விண்ணப்பம் போட்டாலும் ஒப்பந்தக் காப்பீடு தோன்றுவதற்குப் போதுமானதாகும்.

காப்பீட்டின் பொதுத் தத்துவங்கள் (General Principles of Insurance)

ஆயுள், கடல், தீ, விபத்துக் காப்பீடுகளைத் தொழிலாகக் கொண்டுள்ள கம்பெனிகளின் செயல்களைக் கட்டுப்படுத்திட

காப்பீட்டுச் சட்டம் (Insurance Act, 1938) நிறைவேற்றப்பட்டது. 19—1—1956-ல் ஆயுள் காப்பீடு அரசுடைமையாக்கப்பட்டது. ஆயுள் காப்பீட்டுக் கழகம் 1956-ல் தோன்றியது; 1938ஆம் ஆண்டுச் சட்டத்தின்படியுள்ள கம்பெனிகளின் வைப்புகள், முதலீடு மேற்பார்வை போன்றவைகளைப் புதுக்கழகம் கையாள வில்லை. புதுக்கழகம் முழுக்க முழுக்க ஆயுள் காப்பீட்டுத் தொழிலைத்தான் செய்துவருகின்றது. 1956ஆம் ஆண்டின் ஆயுள் காப்பீட்டுச் சட்டத்தின், சட்ட நிபந்தனைகள் பிரகாரம் இது செயலாற்றி வருகிறது. 1963-ல் கடல் காப்பீட்டுச் சட்டம் நிறை வேற்றப்பட்டுக் கடல் காப்பீட்டுக் கம்பெனிகளின் அலுவல்கள் ஒழுங்குமுறை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகைக் காப்பீட்டின் கோட்பாடுகளைத் தனித்தனியே பார்ப்பதற்கு முன்னர், பொதுக் கோட்பாட்டின்கீழ்க் கட்டணத்தொகை, சலுகை நாள்கள் பாலிசி அல்லது காப்பீட்டுப் பத்திரம், மறுகாப்பீடு, இரட்டைக் காப்பீடு, ஈட்டுறுதி, நன்னம்பிக்கை, காப்பீடு செய்யத் தக்க நலன், அண்மைக் காரணம், மாற்றமர் அடைமானவுரிமை போன்றவைகளை விளக்கி மேற்செல்வது அவசியம்.

காப்பீட்டுக் கட்டணம் (Premium)

நட்டவச்சத்தை ஏற்பதற்காகக் காப்பீடு அளிப்பவருக்குக் காப்பீடு பெறுபவர் செலுத்தும் ஒரு மறுபயன்தான் காப்பீட்டுக் கட்டணத் தொகை. இத் தொகை பெரும்பாலும் ரொக்கமாகத் தான் சொலுத்தவேண்டும். முன்கூட்டியே இதைச் செலுத்துவது காப்பீட்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைப் பொறுத்துள்ளது. இக் கட்டணத்தைத் தீர்மானிப்பதற்கு நட்டவச்சம், வழங்கு மிடம், அமைப்பு, சொத்தின் பயன் ஆகியவைகளைப் பாதிக்கும் சூழ்நிலையைப் பொறுத்துத்தான் கணக்கிட வேண்டும். ஆயுள் காப்பீட்டில் வாழ்நாள் அல்லது ஆயுட்கால அடிப்படையில் கட்டணம் நிருணயம் செய்யப்படுகிறது.

சலுகை நாள்கள்

காப்பீட்டுக் கம்பெனி முதலில் குறிப்பிட்ட தவணை நாள் சென்ற பிறகு கட்டணம் செலுத்திப் புதுப்பிக்கவோ அல்லது தொடரவோ சில சலுகை நாள்கள் வழங்குகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகம் மாதக் கட்டணத்திற்கு 30 நாள்களும் சலுகை நாள்களாகத் தந்துள்ளது. தீக்காப்பீடு போன்றவை களில் ஆண்டொன்றுக்குள் பத்திரத்தைப் புதுப்பிக்காதபோது ஏற்படும் நட்டத்திற்குக் காப்பீட்டுக் கம்பெனி பொறுப் பாளியன்று. ஆயுள் காப்பீட்டில் இவ்வபாயம் தொடர்கிறது. காரணம், கட்டணம் கட்டாவிட்டால் பத்திரம் காலாவதி

யாகிவிடும். சலுகை நாள்களில் ஒருவர் இறந்துவிட்டால்கூட அவருக்குச் சேரவேண்டிய தொகையைக் காப்பீட்டுக் கம்பெனி தரவேண்டியது பொறுப்பாகும்.

காப்பீட்டுப் பத்திரம் (Policy)

காப்பீட்டு ஒப்பந்தத்தில் காணப்படும் நிபந்தனைகள் அடங்கிய எழுத்துமூலம் உள்ள ஒரு பத்திரம்தான் காப்பீட்டுப் பத்திரம். காப்பீட்டுக் கம்பெனியால் முத்திரையிட்டுக் கையொப்பமிட்டு இது வழங்கப்படுகிறது. கடல் காப்பீட்டைத் தவிர மற்றக் காப்பீடுகளுக்குப் பத்திரம் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று அமைப்புக் குறிப்பிடப்படவில்லை. மற்றக் காப்பீடுகளில் இப் பத்திரம் இருந்தால்தான் காப்பீட்டு ஒப்பந்தம் செல்லும் என்ற அவசியமில்லை. இப் பத்திரத்தில் காப்பீடு பெறுபவர் கையெழுத்திடாவிட்டாலும் அவர் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. முதன்முதலில் கட்டவேண்டிய கட்டணம் கட்டிவிட்டால்போதும். இப் பத்திரத்தை ஒப்படைக்கவேண்டும் என்ற அவசியமில்லை. இப் பத்திரம் ஒப்படைக்கப்படாவிட்டாலும் காப்பீட்டு ஒப்பந்தம் காப்பீடு பெறுபவரைக் கட்டுப்படுத்தும். அதேபோல் பத்திரம் முதிர்வடையும்போதும் தகுந்த காரணம் காட்டினால் அதைக் கொடுக்கவேண்டிய தேவையில்லை.

மறுகாப்பீடு (Re-insurance)

தான் எளிதாக ஏற்கும் பொறுப்பைவிட அதிகமாகப் பொறுப்பேற்ற ஒரு காப்பீட்டுக் கம்பெனி ஏற்கெனவே எடுக்கப்பட்ட காப்பீட்டை அல்லது அதன் நட்டவச்சத்தை மற்றக் காப்பீட்டுக் கம்பெனிக்கு முழுதும் அல்லது ஒரு பகுதியை மாற்றக் காப்பீடு செய்வதே மறுகாப்பீடாகும். எனவே, மறுகாப்பீட்டில் தான் ஏற்றுக்கொண்ட நட்டவச்சத்தை மற்றக் கம்பெனியிடம் காப்பீடு செய்கிறது. இதனால் அஃது ஏற்கும் இறுதிப் பொறுப்புக் குறைகிறது. தான் செய்துகொண்ட மூல ஒப்பந்தத்தை, நட்டவச்சத்தை மற்றவருக்குப் பரப்பும் பொறுப்பும் குறைந்த கட்டணம் கட்டி இலாபம் ஈட்டவும் ஒரு கம்பெனி மறு காப்பீடு செய்கிறது. தன்னிடம் நிரம்பக் காப்பீட்டுக் கணக்குகள் ஏற்பட்டுச் சமாளிக்க முடியாமல் போகும்போதும் மறு காப்பீடு மூலம் அவைகளை மற்றக் கம்பெனிக்கு மாற்றுகிறது. மறு காப்பீட்டு ஒப்பந்தம் முதலில் ஏற்பட்ட காப்பீட்டு ஒப்பந்தத்தை மீறாது. காப்பீட்டு ஒப்பந்தத்தின் எல்லாக் கோட்பாடுகளும் மறு காப்பீட்டு ஒப்பந்தத்

திற்கும் பொருந்தும். மறுகாப்பீட்டு ஒப்பந்தத்திற்கு முதலில் காப்பீடு பெற்றவர் தொடர்புடையவர் அல்லர். எனினும், மறு காப்பீட்டு ஒப்பந்தத்தின் செல்லும்படித்தன்மை பற்றி அறிந்துகொள்ள உரிமை உண்டு.

இரட்டைக் காப்பீடு (Double Insurance)

ஒரே சொத்தை அல்லது பொருளை இரண்டு காப்பீட்டுக் கம்பெனிகளிடமோ அல்லது ஒரே கம்பெனியில் இரண்டு காப்பீட்டுப் பத்திரங்கள் எடுத்தோ காப்பீடு செய்வதுதான் இரட்டைக் காப்பீடு எனப்படும். இங்குக் காப்பீடு பெறுபவரே ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டுப் பத்திரங்களை அதே பொருளாக எடுத்துக் காப்பீடு செய்கிறார். ஆயுள் காப்பீட்டில் இது இலாபகரமானது. காரணம் ஒவ்வொரு பத்திரத்திலும் முழுத் தொகையைக் காப்பீடு பெறுபவர் அடையலாம். ஆயுள் காப்பீட்டில் ஒருவர் எத்தனை பத்திரங்கள் வேண்டுமானாலும் எடுக்கலாம். எவ்வளவு தொகைக்கு வேண்டுமானாலும் காப்பீடு செய்யலாம். பத்திரம் முதிர்வடைந்ததும் எல்லாப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட தொகையை அவர் பெறலாம். தீ, கடல் காப்பீடுகளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பாலிசிகள் எடுக்கலாம். ஆனால், நட்டம் ஏற்படும்போது உண்மை நட்டம் அல்லது மொத்தத்தில் காப்பீடு செய்யப்பட்ட மதிப்பு இவைகளில் எது குறைவாக இருக்கிறதோ அதை மட்டுமே பெறலாம். அங்குக் காப்பீட்டுக் கம்பெனிகள் நட்டத்தை விகிதாசாரப்படி பகிர்ந்துகொள்கின்றன.

ஈட்டுறுதி (Indemnity)

ஒருவருக்கு ஏற்படும் நட்டத்திற்கெதிராகக் காக்கும் செயல்தான் ஈட்டுறுதியாகும். இவ் வீட்டுறுதியின் அடிப்படையில்தான் காப்பீட்டு ஒப்பந்தம் எழுதப்படுகிறது. காப்பீடு பெறுபவருக்கு எந்த அளவிற்கு நட்டம் ஏற்படுகிறதோ அந்த அளவிற்கு மட்டும்தான் ஒப்பந்தப்படி நட்டஈடு தரப்படும். மேலும் காப்பீடு பெறும்வரை நட்டமேற்பட்ட நிலையிலிருந்து காத்து அவர் நட்ட மேற்படுவதற்கு முன்பு இருந்த நிலைக்குத் திரும்ப அவரைக் கொண்டுவருவதே காப்பீட்டு ஒப்பந்தத்தில் காணும் ஈட்டுறுதியின் நோக்கமாகும். இவ்வாறு பெறும் ஈட்டுறுதியின் மூலம் இலாபமடைய முடியாது. ஏற்படும் நிகழ்ச்சியால் விளையும் நட்டத்தைத்தான் ஈடுகட்ட முடியும் இவ் வீட்டுத் தொகையும் ஏற்படும் நட்டத்தின் விகிதத்தில்தான் தரப்படும்.

ஆயுள் காப்பீடு, தனி நபர் விபத்துக் காப்பீடு ஆகியவைகளைத் தவிர ஏனைய காப்பீட்டுப் பாலிசிகள் எல்லாம் ஈட்டுறுதியை அடிப்படையாகக் கொண்டவை. இழந்த உயிரையோ, ஏற்பட்ட காயங்களையோ பணம் தருவதால் ஈடுகட்ட முடியாததால் விபத்துக் காப்பீடுகள் பொது விதிகளுக்கு விலக்காக உள்ளன. ஆயுள் காப்பீட்டில் இறப்பை எதிர்பார்த்துக் குறிப்பிட்ட கட்டணம் கட்டப்படுவதால் நிகழ்வடைவான ஒப்பந்தமே யொழிய, ஈட்டுறுதி ஒப்பந்தம் அன்று. அதேபோல் தீ, கடல் காப்பீடுகளிலும் ஒரு குறிப்பிட்ட கட்டணம் கட்டி, நிகழ்ச்சி ஏற்படும்போது பெறுவதாக இருந்தாலும் அவைகளும் நிகழ் வடைவான ஒப்பந்தங்களே.

ஈட்டுறுதியும், காப்பீடு செய்யத்தக்க நலனும் இணைந்திருக்க வேண்டும். காரணம் காப்பீடு பெறுபவர் அவருடைய நட்டத்திற்குமேல் நட்டஈடு பெற முடியாது. ஈட்டுறுதி முழுவதும் கிடைக்காத நிலையும் அல்லது அதிகமாகப் பெறும் நிலையும் தவறானவையேயாகும். தீ, கடல் காப்பீடுகளிலும் ஈட்டுறுதி முழுதும் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால், அதிகமாகக் கிடைப்பதில்லை. பாலிசியில் உள்ள நிபந்தனைகளின்படியும் வரையறுப்புகளின்படியும் ஈட்டுறுதி செலுத்தப்படுகிறது. நட்டம் எவ்வளவு இருந்தாலும் முழு ஈட்டுறுதி கிடைக்கும் என்று ஒருவர் கருதினால் அவர் அதற்குத் தகுந்த முறையில் காப்பீடு செய்திருக்க வேண்டும்.

ஈட்டுறுதி ரொக்கமாகத் தரப்படலாம். அல்லது பழுது பார்க்கவேண்டிய கட்டணம் மட்டும் செலுத்தப்படலாம். நகரும் பொருள்களாக இருந்தால் புதிய பொருள்கள் வாங்கி ஈடுகட்டலாம். நகராப் பொருள்களாக இருந்தால் புதுப்பித்தே அல்லது அதே நிலையில் இருக்கச்செய்தே வழங்கலாம். இவ் வெல்லா நிலைகளிலும் ஈட்டுறுதி பெறுவோர் உண்மையிலேயே அவருடைய பொருள்களைக் கைவிட்டவராக இருக்க வேண்டும்.

நட்டக்குறைப்பு (Mitigation of Loss)

ஏதாவது விபத்து ஏற்பட்டு நட்டம் ஏற்படும்பொழுது காப்பீடு பெறுபவர், ஒரு ஜாக்கிரதையான நபர் தம் பொருளைப் பாதுகாக்க எவ்வளவு நடவடிக்கை எடுப்பாரோ அந்த அளவு கவனமுடன் நடந்து ஏற்படும் நட்டத்தைக் குறைக்கம் பாடுபட வேண்டும். ஆனால், அவர் தமக்கு அபாயம் வரும்படியாக அந் நடவடிக்கையில் இறங்கக் கூடாது. அவ்வாறு அந் நடவடிக்கை எடுக்கும்போது அவருக்கு நட்டம் ஏற்பட்டால் காப்பீடு அளிப் பவர் அதை ஏற்கவேண்டும்.

அதேபோல் ஒவ்வொரு காப்பீட்டு ஒப்பந்தத்திலும் நட்ட வச்சம் அல்லது ஆபத்து இருக்க வேண்டும். அந் நட்டவச்சத்தை ஏற்றிடத்தான் கட்டணம் செலுத்தப்படுகிறது. நட்டவச்சம் இல்லையென்றால் மறுபயனில்லாமல் ஒப்பந்தம் முறிந்துவிடும். காப்பீட்டுக் கம்பெனி பெற்ற கட்டணத்தைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும்.

முழு நம்பிக்கை (Utmost Good Faith)

காப்பீட்டு ஒப்பந்தம் செல்லக்கூடியதாக இருக்கவேண்டு மானால் அவ் வொப்பந்தம் செய்யும் இருவரும் அது ஏற்படும் போது முழு நம்பிக்கையுடன் திகழவேண்டும். 'வாங்குவோர் கவனிக்க' (Caveat Emptor) என்று சாதாரண வணிக ஒப்பந்தம் போலில்லாமல், காப்பீட்டு ஒப்பந்தம் முழு நம்பிக்கையுடன் எழுத வேண்டும். காப்பீடு பெறுபவர் சட்டபூர்வமாகக் காப்பீடு செய்யப்படும் பொருள் அல்லது உயிரைப் பற்றிய முக்கியத் தகவல்களைக் காப்பீடு அளிப்பவருக்கு அவசியம் தெரிவிக்க வேண்டும். நேர்மையான மனிதர் ஒருவர் எவற்றையெல்லாம் முக்கியச் செய்தியாகக் கருதுகிறாரோ அவற்றையெல்லாம் காப்பீடு கோருவோர் வெளியிட வேண்டும். காப்பீட்டு ஒப்பந் தத்தில் இருவரும் நம்பிக்கையுடன் இருப்பது அவசியமானாலும், காப்பீடு செய்ய யார் பெயர் எடுத்துரைக்கப்படுகிறதோ அவர்தான் முழு நம்பிக்கையுடன் விளங்கவேண்டும். காரணம் அவருக்குத்தான் அப் பொருள் அல்லது உயிர்பற்றிய இரகசி யங்கள் தெரியவரும். எனவே, அவர் தமக்கென்று தனி யாகத் தெரிந்த செய்திகளை மறைக்கக்கூடாது. முக்கியச் செய்திகள் என்பவை இரண்டு வகைப்படும்: ஒன்று நட்டவச் சத்தின் தன்மை அல்லது நிகழும் வாய்ப்பைப் பொறுத்தது. மற்றொன்று காப்பீடு விரும்புவோரின் நடத்தைப் பற்றியது. சாதாரணமாக இருக்கக்கூடிய விபத்தைப் பெரிதாக்கும் உண்மை, அபூர்வமாக ஏற்படும் விபத்தினால் ஏற்படும் நட்ட வச்சத்தின் உண்மை, சிறப்பான நோக்கங்களுடன் ஏற்படும் காப்பீடு பற்றிய உண்மை, காப்பீடு விரும்புவோரே ஒரு அசாதாரண மனிதர் என்று உண்மை போன்றவைகளை யெல்லாம் முக்கியச் செய்திகளுக்கு உதாரணமாகச் சொல்லலாம்.

ஆயுள் காப்பீட்டில் காப்பீடு விரும்புவோர் உண்மையான செய்திகளை மறைக்கக் கூடாது; பொய்க்கூற்றுக் கூறப்படாது. மோசடி எண்ணத்துடன் எதையும் மறைக்கக்கூடாது. உண்மை யில் உண்மை இன்மையை அவர் சொல்ல வேண்டும். இந்த முழு

நம்பிக்கையின் முறிவால் காப்பீட்டு ஒப்பந்தம் செல்லாமல் போய்விடும். ஆனால், கீழ்க்காணும் செய்திகள் முழு நம்பிக்கையுடன் இல்லாமல் மறைக்கப்பட்டாலும் பாதகமில்லை. அதாவது, நட்டவச்சத்தைக் குறைக்கும் செய்தி, காப்பீட்டுக் கம்பெனிக்கு ஏற்கெனவே தெரிந்த செய்தி, மிதமிஞ்சிய அதிகப்படியான செய்தி, தொழிலில் சாதாரணமாக உள்ள செய்தி, எல்லோருக்கும் தெரிந்த செய்தி, நாட்டின் சட்டத்தைப்பற்றிய செய்தி, கம்பெனியே தள்ளிவிட்ட செய்தி ஆகியவைகளைச் சொல்லாமல் போனால் பரவாயில்லை.

காப்பீடு செய்யத்தக்க நலன் (Insurable Interest)

ஒவ்வொரு காப்பீட்டு ஒப்பந்தத்திலும் காப்பீடு செய்யத்தக்க நலன் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இத்தகைய நலன் இல்லாமல் காப்பீட்டுப் பத்திரம் காணப்பட்டால் காப்பீட்டு ஒப்பந்தம் ஒரு சூதாட்ட ஒப்பந்தமாகிவிடும். செல்லாததாகவும் வலியுறுத்த முடியாததாகவும் சூதாட்ட ஒப்பந்தம் தோன்றுகிறது. காப்பீடு பெறுபவருக்கும், காப்பீடு செய்யப்படும் பொருளுக்கும் அல்லது உயிருக்கும் சட்டப்படியுள்ள தொடர்பு ஒன்றிருக்க வேண்டும். காப்பீடு செய்யப்படும் பொருள் காப்பாக இருப்பதால் காப்பீடு பெறுபவருக்கு நன்மையும் அது ஒழிந்துபோனால் அவருக்கு நட்டமும் விளைய வேண்டும். இதே தொடர்பு காப்பீடு பெறுபவருக்கும் காப்பீடு செய்யப்படும் பொருளுக்கும் இருந்தால்தான் காப்பீடு பெறுபவருக்குக் காப்பீடு செய்யத்தக்க நலன் இருப்பதாகக் கருதப்படும். காப்பீடு செய்யப்படும் பொருள்மீது காப்பீடு பெறுபவருக்கு ஏதேனும் உரிமை இருப்பது அவசியம். ஒருவருக்கொருவர் காட்டும் அன்பும் பாசமும் காப்பீடு செய்யத்தக்க நலனாகக் கருதப்படாது. காப்பீடு பெறுபவரின் காப்பீடு செய்யத்தக்க நலன் ஏற்பட அவரிடம் சொத்து உரிமையும் அக்கறையும், நல்ல பொறுப்பும் மிளிர்தல் வேண்டும். அத்தகைய உரிமையும் அக்கறையும் காப்பீட்டு ஒப்பந்தத்தின் முக்கிய விஷயமாக இருக்க வேண்டும். அத்தகைய முக்கிய விஷயத்திற்கும், காப்பீடு பெறுபவருக்கும் சட்டபூர்வமான அல்லது ஒரு நியதியுடன் ஒரு தொடர்பு இருக்க வேண்டும்.

ஆயுள் காப்பீட்டில் ஒரு பாலிசி எடுக்கும்போது யாருடைய ஆயுளின்மீது காப்பீடு செய்யப்படுகிறதோ அவர்மீது காப்பீடு பெறுபவர் அத்தகைய நலனை உடையவராக இருக்க வேண்டும். பின்னர் இந் நலன் குறைந்துவிட்டாலும் பாலிசி தொடர்ந்து இருக்கும். பாலிசியை மாற்றம் செய்பவருக்கு இந் நலன் இருக்க

வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவன் உயிர்மீது இந் நலன் உண்டு. அவ் வுயிர்மீது பணம் கட்டிட அதற்கு அளவே இல்லை. எனவே, நடைமுறையில் காப்பீடு செய்யும் தொகை ஒருவரின் செலுத்தும் நிதி நிலைக்கேற்ப அல்லது செலுத்தும் திறமைக்கேற்ப அமைகிறது. இத்தகைய காப்பீடு செய்யத்தக்க நலன் உள்ள உறவுகளைக் காணலாம் மனைவி கணவனின் ஆயுளிலும், கணவன் மனைவியின் ஆயுளிலும், தான் சார்ந்துள்ள தகப்பனாரின் ஆயுளில் மகனும், கொடுத்த கடன் தொகை அளவில் அல்லது கொடுக்கவேண்டிய தொகை அளவிற்குக் கடனாளியின் ஆயுளில் கடனீந்தோறும், உத்தர வாதம் கொடுத்த அளவிற்கு முக்கியக் கடனாளியின் ஆயுளில் உத்தரவாதம் செய்தவரும், வேலையாள்கள் ஆயுளில் முதலாளி யும், சக கூட்டாளிகளின் ஆயுளில் ஒரு கூட்டாளியும் இத்தகைய காப்பீடு செய்யத்தக்க அக்கறை கொண்டுள்ளார்கள். முதல்வரின் பொருள் மீது முகவருக்கும் இந் நலன் உண்டு. அவரின் கமிஷன் பெறுவதற்கு அன்று; ஆனால் அவர் செலவழித்த செலவுகளைத் திரும்பப் பெறுவதற்கு இத்தகைய நலன் உண்டு

தீக் காப்பீட்டில் காப்பீடு செய்யப்பட்ட சொத்தின்மீது காப்பீடு பெறுபவர் ஒப்பந்த ஆரம்பத்திலும், நட்டஈடு கோரும் போது காப்பீடு செய்யத்தக்க நலனைப் பெற்றிருக்கவேண்டும். சொத்தின் முழு அளவிற்கு அந் நலன் இருக்கவேண்டும். கூட்டுச் சொந்தக்காரர் அவரின் பங்குக்கு இந் நலன் கொண்டிருக்க வேண்டும். அடைமானக் கடன் தந்தவர் தம் கடன் அளவிற்கு இந் நலன் கொண்டிருக்கவேண்டும். கணவனும் மனைவியும் ஒருவரின் சொத்தில் மற்றவரும் இந் நலன் கொள்ளலாம். காரணம் அவர்கள் இணைந்தே அதை அனுபவிக்கிறார்கள்.

கடல் காப்பீட்டில் பாலிசி எடுக்கும்போது இந் நலன் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் ஈட்டுறுதி நட்டஈடு கோரும்பொழுது அவசியம் இருக்கவேண்டும். தொலைந்துவிட்ட அல்லது தொலையாத பாலிசிகள் எடுக்கும்போது காப்பீடு பெறுபவருக்கு அவசியம் இந் நலன் இருக்கவேண்டும். அதுவும் எந்தப் பொருள் காப்பீடு செய்யப்பட்டுள்ளதோ அதன்மீது நட்டமடைந்தும் நட்டஈடு பெறாவிட்டாலும் இந் நலன் பெற்றிருக்கவேண்டும். பாலிசி எடுக்கும்போது இந் நட்டம் இருந்தும் அதைக் காப்பீட்டுக் கம்பெனி கவனிக்காவிட்டால் நட்ட ஈடு இல்லை. அதேபோல் நட்டம் ஏற்படும்போது இத்தகைய அக்கறையில்லாவிட்டால் பின்னால் எச் செயலாலும் இவ்வக்கறை கொள்ளமுடியாது.

அண்மைக் காரணம் (Cause Proxima)

ஏற்படும் நட்டத்தின் காரணங்கள் இரண்டு: 1. காப்பீடு செய்யப்பட்ட அபாயம். 2. காப்பீடு செய்யாத அபாயம். **ஆகிய** இரு காரணங்களாலும் நட்டம் ஏற்படுகின்றது. காப்பீடு செய்யாத அபாயத்தால் ஏற்படும் நட்டத்தையும் அல்லது காப்பீடு பெறுபவரின் தவறான நடத்தையாலும் அவர் செய்த குற்றத்தாலும் ஏற்படும் நட்டத்தையும் காப்பீட்டுக் கம்பெனி ஏற்றுக் கொள்ளாது; அதற்குப் பொறுப்பாளியுமாகாது. காப்பீட்டுக் கம்பெனி காப்பிடப்பட்ட விபத்துகளால் ஏற்படும் நட்டத்திற்கும் அண்மைக் காரணத்தால் ஏற்படும் நட்டத்திற்கும் பொறுப்பேற்கும். காப்பீட்டுக் கம்பெனி அபாயமாக இருந்தால் கூட அண்மையில்லாத காரணத்தால் ஏற்படும் நட்டத்திற்குப் பொறுப்பேற்காது. எனவே, காப்பீட்டுக் கம்பெனியின் பொறுப்பைத் தீர்மானிக்க அண்மைக் காரணத்தைத்தான் கொள்ளவேண்டும். அண்மையற்ற காரணத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதை (Cause Proxima, non remota Spectatur) என்ற தத்துவம் விளக்குகிறது. எக்காரணங்களால் ஏற்படக்கூடிய நட்டங்களுக்குக் காப்பீட்டு ஒப்பந்தம் ஏற்படு கிறதோ அக் காரணங்களால் ஏற்படும் நட்டங்களுக்கு மட்டுமே கம்பெனி நட்டஈடு தரும். உதாரணமாக ஒரு மோட்டார் சைக்கிளுக்கு விபத்துக் காப்பீடு செய்யப்படுகிறது. ஆனால் வன்முறையால் அதற்குச் சேதம் நேர்ந்தால் காப்பீடு கம்பெனி நட்டஈடு தராது. சேதத்தின் காரணத்தின் அண்மைக் காரணம் இல்லையென்று கம்பெனி நட்டஈடு தர மறுத்திடும். எனவே, எந்த ஒரு காரணத்தால் காப்பீடு செய்யப்பட்ட பொருளுக்கு நேரடியாகத் தீங்கு ஏற்படுகிறதோ அதுவே அண்மைக் காரண மாகும். எந்த ஒரு காரணத்தால் காப்பீடு செய்யப்பட்ட விபத்தி லிருந்து காப்பீடு பெறுபவரைப் பாதிக்கும் உண்மையான நட்டம் ஏற்படுகிறதோ அதுவரைக்கும் நடுவில் நின்றுவிடாமல் தொடர்ச் சியாக நிகழ்ச்சிகள் நிகழ்கின்றனவோ அந்தக் காரணத்தை அண்மைக் காரணம் என்று சொல்லலாம். பாதுகாக்கப்பட்ட விபத்திலிருந்து தொடர்ச்சியாகவரும் நிகழ்ச்சிகளைப் பாதுகாக்கப் படாத விபத்திலிருந்து தொடர்ந்துவரும் நிகழ்ச்சிகள் தடை செய்து தொடர்ச்சியைத் துண்டித்தாலும் அந்தத் துண்டிப்பு வரை நட்டம் அண்மைக் காரணத்தால் ஏற்பட்டதன்று; நட்ட ஈடு பெறும் தகுதியை அடைகிறது.

காரணத்திற்கும் முடிவிற்கும் இடையேயுள்ள காலம் நீண் டிருக்கலாம்; அல்லது குறைந்திருக்கலாம். இதனால் அண்மைக்

காரணக் கோட்பாடு பாதிக்கப்படா. உண்மையிலேயே அண்மைக் காரணம் என்றால் அது திறமையில் அண்மையில் இருக்கவேண்டும். நேரான செயலாற்றக்கூடிய, திறமையுள்ள காரணத்தைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு பாலிசியில் எலிகள் மூலம் உண்டான நட்டத்தைக் காப்பீட்டு அபாயத்தால் ஏற்பட்டதன்று என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு கப்பலின் அடிப்பாகத்தில் எலிகள் போட்ட ஓட்டையால் தண்ணீர் உள்ளே சென்று சரக்குகளுக்கு நட்டமேற்பட்டது. அதனால் காப்பீடு பெறுபவர் நட்டஈடு கோரி வழக்குத் தொடுத்தார். அவருக்கு நட்டஈடு கொடுக்கச் சொல்லி நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இவ் வழக்கில் எலிகள் அண்மைக் காரணமாக இல்லாவிட்டாலும் கடல் தண்ணீர் அண்மைக் காரணமாக இருந்ததாலும் கடல் விபத்து காப்பீடு செய்யப்பட்ட விபத்தானதாலும் காப்பீட்டுக் கம்பெனி நட்ட ஈடு தரவேண்டி யுள்ளது.

மற்றொரு வழக்கில் ஒரு கப்பலில் ஆரஞ்சுப்பழங்கள் அனுப்பப்பட்டன. மோதல் விபத்தைத் தடுக்கக் காப்பீடு செய்யப் பட்டுள்ளது. ஆனால் அந்தக் கப்பல் உண்மையிலேயே எங்கோ மோதப்பட்டு அதனால் காலதாமதமாகி, பழங்களைத் தவறான முறையில் கையாண்டதால் அவை தின்பதற்குத் தகுதியில்லாமல் கெட்டுப்போய்விட்டன. இங்கு மோதல் ஏற்பட்டது அண்மைக் காரணமன்று. மேலும், பழங்களைத் தவறாகக் கையாண்டதும் தாமதமும் ஏற்பட்டதுதான் நட்டத்திற்கு காரணம். எனவே, நட்டஈடு தரவேண்டிய பொறுப்பு, காப்பீட்டுக் கம்பெனிக்கு இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் காப்பீடு அளிப்பவரின் பொறுப்பைத் தீர்மானிக்க அண்மைக் காரணத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு நிரூபண மாக விளங்குகின்றன.

மாற்றமர் அடைமானவுரிமை (Subvogation)

மாற்றமர் அடைமானவுரிமை அல்லது கடன் பற்றுரிமை மாற்றீடு என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தின் முக்கியத் தத்துவங் களில் ஒன்றாகும். ஒரு நபர்மீது வேறு நபர் கொண்டுள்ள உரிமை களையும் பெறும் தீர்வுவழிகளையும், மற்றொருவர் பெறுவதற் கான உரிமை மாற்றமர் அடைமான உரிமை எனப்படும். காட்டாக ஒரு ஸ்கூட்டரும் ஒரு லாரியும் மோதிக்கொண்டதில்

ஸ்கூட்டர் முழுச் சேதமடைந்துள்ளது. ஸ்கூட்டர் வைத்திருப்பவர் தம் காப்பீட்டுக் கம்பெனியிடம் நட்டஈடு வேண்டுவார். நட்டஈடு செலுத்திவிட்டால், ஸ்கூட்டரின் உரிமையாளருக்கு உள்ள எல்லா உரிமைகளும் காப்பீட்டுக் கம்பெனிக்கு உண்டு. சேதமடைந்த ஸ்கூட்டரை விற்று அப் பணத்தையும் கம்பெனி பெறும். மற்றும் லாரி ஓட்டியவர் தவறாக ஓட்டியதன் விளைவாக ஸ்கூட்டருக்குச் சேதமேற்பட்டிருந்தால் லாரி உரிமையாளர் மீது வழக்குத் தொடுத்து அவரிடம் பெறக்கூடிய உரிமையையும், பரிகாரத்தையும் காப்பீட்டுக் கம்பெனி பெறுகிறது.

ஈட்டுறுதியின் தத்துவத்தின் அனுமானமாக இம் மாற்றம் அடைமானவுரிமை திகழ்கிறது. இது ஒருவிதமான ஈட்டுறுதியாகும். தீ, கடல், காப்பீட்டுப் பாலிசிகளுக்கு மட்டும்தான் இத் தத்துவம் பொருந்தும். ஆயுள், தனி விபத்து போன்ற காப்பீடுகளுக்கு இது பொருந்தாது. காரணம், ஆயுட் காப்பீட்டுப் பாலிசி பெற்றுள்ளவர் அல்லது பாலிசி மாற்றம் பெற்றவர்கள் கம்பெனியிடமிருந்து பணமும், சேதம் ஏற்படுத்தியவர்களிடமிருந்து நட்டஈடும் ஒரே சமயத்தில் பெற வாய்ப்புண்டு. சட்டபூர்வமாக வலியுறுத்த முடியாத பாலிசிகளுக்கு மாற்றமர் அடைமான உரிமை இல்லை.

இவ் வுரிமையின் சிறப்புக் கூறுகளாவன : ஈட்டுறுதி ஒப்பந்தங்களுக்கு மட்டும்தான் இதைப் பயன்படுத்த முடியும். நட்ட மேற்பட்டு நட்டஈடு கோரி, அதைக் காப்பீட்டுக் கம்பெனி அளித்த உடனேதான் இவ் வுரிமை ஏற்படுகிறது. அப்படிக் கோரும் நட்டஈடு காப்பீடு செய்யப்பட்ட பொருளின் முழுமைக்கும் இருந்தால்தான் இவ் வுரிமை உண்டு. பகுதி நட்டஈடு பெற்றால் இவ் வுரிமை பயன்படாது. நட்டஈடு, நட்டத்தின் அளவு செலுத்திவிட்ட காப்பீட்டுக் கம்பெனிக்குக் காப்பீடு பெறுபவர் தம் அனைத்து உரிமைகளையும் தீர்வுவழிகளையும் கம்பெனியின் பேருக்கு மாற்றிடவேண்டும்.

மேலும், ஈட்டுறுதி ஒப்பந்தத்தில் நட்டஈட்டிற்கு மேலாக இலாபம் பெறக்கூடாது. இரண்டு நபர்களிடமிருந்து ஒரே சமயத்தில் நட்டஈடு பெறக்கூடாது. காப்பீட்டுப் பாலிசியில் உள்ள தொகைக்கு மட்டும்தான் நட்டஈடு பெறவேண்டும் என்ற ஈட்டுறுதி ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் எல்லாம் இங்கும் மிகவும் அவசியம் இருக்கவேண்டும். நட்டஈடு கொடுத்த உடனே காப்பீட்டுக் கம்பெனி, காப்பீடு பெறுபவர் நிலைக்கு வந்து அவர் பெறும் உரிமைகளை முழுதும் பெறுகிறது. காப்பீட்டுக் கம்பெனி

யிடமிருந்து நட்டஈடு பெற்றுக்கொண்ட பின்னர், வேறு ஒருவரிட மிருந்தும் நட்டஈடு பெற்றுக்கொண்டால் காப்பீடு பெறுபவர் அத் தொகையை அப்படியே வைத்திருந்து கம்பெனிக்கு எவ்வளவு சேரவேண்டுமோ அதைக் கொடுத்துவிட வேண்டும். அவ்வாறு வேறு ஒருவரிடமிருந்து பெற்ற நட்டஈடு, கம்பெனி கொடுத்ததை விட அதிகமாக இருந்தால் கம்பெனி தான் கொடுத்த தொகை அளவே பெற்றிட உரிமை உண்டு. காப்பீடு செய்யப்பட்ட தொகை அளவிற்குத்தான் கம்பெனி மாற்றமர் அடைமான உரிமையைக் கோர முடியும். அதாவது, காப்பீடு செய்யப்பட்ட பொருளின் அரை மதிப்பிற்குத்தான் காப்பீடு செய்யப்பட்டிருந் தால் மறுபாதியின்மேல் காப்பீடு பெறுபவர் உரிமை கொண்டாட லாம். சுருங்கக்கூறின் காப்பீடு பெறுபவர் எவ்வளவு நட்டஈடு பெறுவாரோ அந்த அளவுதான் காப்பீட்டுக் கம்பெனியும் இவ் வுரிமையால் பெறமுடியும்.

உதாரணமாக, எம் என்பவர் ஆர், எஸ் என்ற இரு கப்பல் களைப் பெற்றிருந்தார். அவை பல்வேறு காப்பீட்டுக் கம்பெனி களுடன் காப்பீடு செய்யப்பட்டிருந்தன. ஆர் என்ற கப்பலின் காப்பீடு கம்பெனி நட்ட ஈட்டை எம்-க்குக் கொடுத்தது. காரணம் ஆர் என்ற கப்பலை எஸ் என்ற கப்பல் மோதிவிட்டது. இங்கு ஆர் என்ற கப்பலின் காப்பீட்டுக் கம்பெனி எம் என்பவரை எஸ் என்ற கப்பலின் உரிமையாளர் என்ற முறைமையில் மாற்றமர் உரிமையைக் கையாண்டு வழக்குத் தொடுக்கலாமா என்பது கேள்வி; முடியாது என்பதுதான் பதில். காரணம் கப்பலின் உரிமையாளரான எம் என்பவருக்கே அவ் வுரிமை இல்லை. காரணம் ஒருவர் தம்மீது தாமே வழக்குத் தொடுத்துக் கொள்ள முடியாது. இரு கப்பல்களுக்கும் எம் என்பவரே உரிமையாள ரானதால் அவர்மீதே அவர் வழக்குத் தொடர முடியாது. இவ் வுண்மை சிம்சனுக்கும் தாம்சனுக்கும் (Simpson *vs.* Thomson) நடந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ளது.

மாற்றமர் அடைமான உரிமை குற்றச் செயலால் எழும் உரிமையாலும் ஏற்படும். உதாரணமாக, மூன்றாம் பேர்வழிக்குச் செய்யவேண்டிய கடமை தடுக்கப்பட்டுவிட்டால் பாதிக்கப் பட்டவர் தவறு செய்தவர்மீது வழக்குத் தொடுப்பார். அவ்வாறு செய்த தவறான செயலால் காப்பீடு பெறுபவருக்கு நட்டம் ஏற்பட்டால் அதைச் சரிக்கட்டி இவ் வுரிமையைக் காப்பீடு கம்பெனி பெறும். அடுத்து, ஓர் ஒப்பத்தத்தால் ஏற்படும் உரிமை யாலும் இவ் வுரிமை தோன்றும். உதாரணமாக, மூன்றாம் பேர்வழி மீது ஒப்பந்தம் ஏற்பட்டு அதை அவர் நிறைவேற்றாத

போது காப்பீடு பெறுபவருக்கு நட்டமேற்பட்டு அதற்கு நட்டஈடு கொடுத்து மூன்றாம் பேர்வழி மீது காப்பீட்டுக் கம்பெனி இவ் வுரிமையைப் பெறுகிறது. இறுதியாகச் சட்டபூர்வமாகத் தோன்றும் உரிமையாலும் இவ் வுரிமை தோன்றுகிறது. உதாரண மாகக் காப்பீடு பெறுபவருக்கு நட்டஈடு தந்த பிறகு சட்டப்படி காப்பீட்டுக் கம்பெனி, சேதமேற்படுத்திய மூன்றாம் பேர்வழி மீது இவ் வுரிமையைப் பெறுகிறது.

பங்களிப்பு (Contribution)

ஒரு பாலிசியின்பேரில் பணம் செலுத்திவிட்ட காப்பீட்டுக் கம்பெனி பங்களிப்பதற்காக ஏனைய காப்பீட்டுக் கம்பெனிகளை இல்லையென்றால் அக் கம்பெனியே நட்ட முழுவதையும் ஏற்கும் பொறுப்புண்டு. பங்களிப்பு முறை எல்லாக் கம்பெனிகளிடை யேயும் நட்டத்தை நியாயமான விகிதத்தில் பகிர்ந்தளிக்கிறது. ஒரு காப்பீடு பெறுபவர் காப்பீடு செய்யப்பட்ட பொருளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கம்பெனிகளிடம் காப்பீடு செய்திருந்தால் ஒவ்வொரு கம்பெனியிடமிருந்தும் விகிதாசார நட்டஈட்டைத் தான் பெறமுடியும், அதற்குமேல் பெறமுடியாது. மாற்றமர் அடைமான உரிமைத் தத்துவத்தைப்போல் பங்களிப்புத் தத்துவமும் ஈட்டுறுதி ஒப்பந்தத்தைப் பயன்படுத்தித்தான் அமலாக்கப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீடுகளைக் கம்பெனிகளிடம் ஒரே மனிதர் ஒரே பொருளைப்பற்றிக் காப்பீடு செய்திருக்கவேண்டும்.

பங்களிப்பைப் பயன்படுத்தவேண்டிய நிபந்தனைகள் :

1. காப்பீடு பெறுபவர் ஒரே (அதே) மனிதராக இருக்க வேண்டும்.

2. நட்டத்தை உண்டாக்கிய எல்லாப் பாலிசிகளும் ஒரே விபத்தைப் பற்றித்தான் எழுதப்படவேண்டும்.

3. அதே அக்கறையை அவை பாதுகாக்க வேண்டும்.

4. நட்ட மேற்படும்பொழுது பாலிசி செல்லக்கூடியதாகவும் வலியுறுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டுப் பத்திரங்களை ஒரே விஷயத் திற்காகக் காப்பீடு செய்திருக்கும்போது காப்பீடு பெறுபவர் ஒரே கம்பெனியிடம் நட்டஈடு முழுவதையும் பெறச் சட்டம் தடுக்க வில்லை. ஆனால், அதற்குரிய தொகை அக் கம்பெனியிடம்

காப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். அப்படி நட்டஈடு முழுவதையும் ஏற்றுக்கொண்ட கம்பெனி மற்றக் கம்பெனிகளிட மிருந்து விகிதாசார முறையில் தன் பணத்தை வசூலித்துக் கொள்ளும். காப்பீடு செய்யப்பட்ட பொருள் தொலைந்து ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீடுகள் செய்திருந்தால் உண்மையான நட்டத்திற்கு மேலாக யாரொருவரிடமிருந்தும் பெற முடியாது. நட்டஈட்டைச் செலுத்தின பிறகுதான் பங்களிப்பு உரிமை காப்பீடு அளிக்கும் கம்பெனிக்கு உண்டு.

ஆயுள் காப்பீடு
(Life Insurance or Life Assurance)

இலக்கணம்

'உடனே அல்லது ஒழுங்காகச் செலுத்தும் ஒரு சிறு தொகையின் மறுபயன் கருதி ஒருவர், மற்றவருக்கு அவருடைய ஆயுட் காலத்தில் ஏற்படும் நிகழ்ச்சியின்போது ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதாக ஒத்துக்கொள்ளும் ஓர் ஒப்பந்தம்தான் ஆயுள் காப்பீடு' என்று பன்யான் (Bunyon) விளக்குகிறார். இங்கு மறுபயன் எனக் கூறப்படுவது காப்பீட்டுக் கட்டணமாகும் (Premium). காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 (ii) ஆயுள் காப்பீட்டுத் தொழிலை விளக்குகிறது. ஆயுள் காப்பீடு என்பது மனித வாழ்வின் மீதான ஒப்பந்தத்தை வலுப்படுத்தும் தொழிலாகும். அத் தொழில் கீழ்க்காணும் ஒப்பந்தங்களை உள்ளடக்கியிருக்கும் :

1. இறப்பு நிகழும்போது ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்குவதாக உள்ள ஒப்பந்தம் அல்லது மனித வாழ்வைச் சேர்ந்த எதிர்கால நிகழ்ச்சி நிகழும்போதும் அத் தொகை அளிப்பதாக உள்ள ஒப்பந்தம்.

2. மனித வாழ்வைப் பொறுத்து அல்லது ஆயுளைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கட்டணம் செலுத்துவதற்காக ஒப்பந்தம்.

3. வயதடைந்த காலத்துத் தரும் தொகை, ஆயுளைப் பொறுத்து வழங்கும் பணம், விபத்து ஏற்படும் காலை வழங்கும் இரட்டிப்பு அல்லது மூன்று மடங்கு ஈட்டுறுதித் தொகை போன்ற பயன்களை அளிப்பதற்கான ஒப்பந்தம்.

எனவே, ஆயுள் காப்பீடு இம் மூன்று விதமாக ஒப்பந்தங் களையும் அவசியம் பெற்றிருக்க வேண்டும். ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகாது. காரணம், காப்பீடு செய்யப்பட்ட ஒருவர் இறந்துவிட்டால் அதனால் ஏற்படும் நட்டம் இவ்வளவுதான் என்று உறுதியாகச் சொல்லமுடியாது. எனவேதான் இவ் வகை ஒப்பந்தத்தில் காப்பீடு செய்யப்படும் நபருடைய வாழ்வில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி ஏற்பட் டால் குறிப்பிட்ட ஒரு தொகையை அளிப்பதாகக் காப்பீடு அளிப்பவர் உறுதி கூறுகிறார்.

ஆயுள் காப்பீட்டுப் பாலிசியின் வகைகள்

இக் காலத்தில் ஆயுள் காப்பீட்டுப் பாலிசிகள் அநேக வகை களாக மனித இனத்தின் தேவை, விருப்பம், வசதி போன்றவை களுக்கு ஏற்ப வெளியிடப்படுகின்றன. அவற்றில் முக்கிய வகை களைப் பார்ப்போம் :

1. **ஆயுட்காலப் பாலிசி** (Whole Life Policy) : இப் பாலிசி யில் கண்ட தொகை, காப்பீடு பெறுபவரின் இறப்புக்கு முன்னர் செலுத்தப்படமாட்டாது. அவரைச் சார்ந்த அல்லது அவரை நம்பியுள்ள வாரிசுதாரர்களின் நன்மைக்காக எடுக்கப்பட்டுள்ள பாலிசி இது. எனவே, அவர் இறந்தவுடன் இப் பாலிசித் தொகை அவரின் வாரிசுதாரர்களுக்கோ அல்லது நியமிக்கப் பெறு பவருக்கோ தரப்படும். அவர் பாலிசியில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் முழுவதும் அல்லது குறிப்பிட்டுள்ள சில ஆண்டுகளுக்கு மட்டும் கட்டணம் செலுத்தலாம்.

2. **காலவரைப் பாலிசி** (Endowment Policy) : இப் பாலிசித் தொகை காப்பீடு பெறுபவர் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த வுடனும் அல்லது முன்னர்க் குறிப்பிட்ட ஒரு தேதியிலும் பெறலாம். அதற்குள்ளாகவே அவர் இறந்துவிட்டால் அவரின் வாரிசுதாரர் அல்லது நியமிக்கப்பெறுபவர் பெறலாம். குறிப்பிடப்பட்ட காலத் திற்குப் பிறகு அல்லது காப்பீடு பெறுபவர் இறப்பு இதில் எது முன்னர் நிகழ்கிறதோ அப்பொழுது பணம் தரப்படும். அற்ப ஆயுள் உடையவர்களின் குடும்பத்திற்குப் பாதுகாப்பாகவும் வயதான காலத்திற்குச் சேமிப்பாகவும் இப் பாலிசித் தொகை திகழ்கிறது.

3. **இலாபத்துடன்கூடிய அல்லது இலாபமில்லாத பாலிசிகள்** (With or Without Profit Policies): இலாபத்துடன்கூடிய பாலிசி எடுத்துக்கொண்டவர்களுக்கு உறுதி செய்யப்பட்ட தொகையுடன்

காப்பீட்டுக் கம்பெனி பெறும் இலாபத்தில் ஒரு பங்கு (Bonus) தரப்படும். இங்ஙனம் இலாபத்தில் பங்கு ஏதும் இல்லாத பாலிசியை 'Without Profit Policy' என்பார்கள்.

4. கூட்டு ஆயுள் பாலிசிகள் (Joint Life Policies): காப்பீட்டுக் கட்டணத்தைக் குறைக்கும்பொருட்டு ஒரு பாலிசியில் இரண்டு அல்லது மேற்பட்ட நபர்களின் ஆயுளைக் காப்பீடு செய்யலாம். அவர்களில் யாராவது ஒருவர் இறந்தாலும் காப்பீட்டுப் பணம் தரப்படும். பொதுவாக இத்தகைய பாலிசிகளைக் கூட்டு வணிக நிறுவனம்தான் தன் கூட்டாளிகளின் ஆயுள்மேல் எடுக்கும்.

5. ஒற்றுமை அல்லது வரையறுத்த கட்டணமுள்ள பாலிசி (Single or Limited Payment Policies): பாலிசியின் காலமுழுவதற்கும் ஒரே கட்டணம் செலுத்தக்கூடியதாகவும் அல்லது கொஞ்ச ஆண்டுகளுக்கு மட்டும் செலுத்தக்கூடியதாகவும் உள்ள பாலிசியை இது குறிக்கிறது. பாலிசி எடுக்கும்போது எல்லாக் கட்டணத்தையும் ஒரே தொகையாகக் கட்டியும் விடலாம். வழக்கமாக இத்தகைய பாலிசிக்குக் கட்டவேண்டிய கட்டணத்தில் காப்பீட்டுக் கம்பெனி, சலுகை அல்லது தள்ளுபடி தருகிறது. எனவே, இத்தகைய பாலிசிகளை ஒற்றைக் கட்டணப் பாலிசிகள் என்கிறார்கள். காப்பீடு பெறுபவர் குறிப்பிட்ட வயதைக் கடந்தவுடன் கட்டணம் கட்டவேண்டிய கடமை நின்றுவிடும்போது அத்தகைய பாலிசி 'வரையறுத்த கட்டணம் உள்ள பாலிசி யாகும்'.

6. ஆண்டுக் கட்டணம் (Annuities): ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஆண்டொன்றுக்கு ஒருமுறைச் செலுத்தும் கட்டண முடைய பாலிசியை ஆண்டுக்கட்டணப் பாலிசி என்பர். ஒரு குறிப்பிடப்பட்ட நிலையான காலத்திற்குச் செலுத்தவேண்டிய கட்டணத்தை அவர் இறக்கும்வரையோ அல்லது குறிப்பிடப்பட்ட ஆண்டுகள் வரையோ செலுத்தவேண்டும். பாலிசி எடுக்கும் போதே, ஆரம்பத்தில் மொத்தத் தொகையைக் கட்டவேண்டும். ஒருவரின் வயதான காலத்திற்கு உதவும் வகையில் இத்தகைய பாலிசிகள் எடுக்கப்படுகின்றன.

7. ஏறுமுக அல்லது வருவாய்க்கேற்ப அதிகரிக்கும் கட்டணமுள்ள பாலிசி (Ascending Premium Policies): நிலையான குறைந்த வருமானமுள்ளவர் பெரிய தொகைக்குக் காப்பீடு செய்யும் வகையில் அவர்கள் வருமானம் பெருகப்பெருக செலுத்தும் கட்டணமும் அதிகரித்து வசூலிக்கப்படும் நிலையில் பாலிசி வழங்கப்படுகிறது. காப்பீடு பெறுவோரின் வருமானம்

பெருகும் விகிதத்தில் கட்டணமும் உயர்ந்துகொண்டேவரும். குறைந்த வருவாய் உள்ளவர்கள் தகுதிக்கு அப்பால் உள்ள தொகைக்குத் தற்சமயம் பாலிசி எடுத்துவிட்டு அதே வருமானம் சிலவாண்டுகளில் அவர்களின் தகுதிக்குள் அமையும்போது அதிகப்படியான கட்டணம் கட்டும் வகையில் இப் பாலிசி நன்மை பயக்கிறது.

8. குழந்தைகளின் காலவரையுள்ள பாலிசி (Children's Endowment Policies): குழந்தைகள் கல்வி, திருமணம் போன்றவைகளுக்குப் பணம் தரும்பொருட்டு இப் பாலிசிகள் எடுக்கப்படுகின்றன. காப்பீடு பெறுபவர் கட்டணம் செலுத்திக் கொண்டு வரவேண்டும். குழந்தைகள் குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் சொல்லப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு குறிப்பிட்ட ஒரு தொகையைக் காப்பீட்டுக் கம்பெனி செலுத்துகிறது. பாலிசி எடுத்தவர் அகாலமாக இறந்து விட்டாலும், காப்பீடு செய்யப்பட்ட தொகை, குறித்த காலத்தில் கொடுக்கப்படும்.

விடுமதிப்பு (Surrender Value)

காப்பீடு அளிக்கும் கம்பெனி காப்பீடு பெறுபவர் பாலிசியின் மீதுள்ள தம் உரிமைகளை விட்டுவிட்டபோது அவர் செலுத்திய கட்டணத்திலிருந்து திரும்ப அளிக்கும் ஒரு தொகையைத்தான் பாலிசியின் விடுமதிப்பு என்கிறோம். இது காப்பீட்டு ஒப்பந்தத்தை முடித்துவிடுகின்றது. எனவே, காப்புறுதி அளித்தவர் மீதுள்ள உரிமை அனைத்தையும் காப்புறுதி பெற்றவர் விட்டுக்கொடுத்துப் பெறும் பயனே விடுமதிப்பாகும். மேலும், காப்புறுதி பெறுபவர் ஒப்பந்தத்தை நடுவில் முடித்துக்கொள்ள விரும்பினால் அதைக் காப்புறுதி அளித்தவருக்குத் தெரிவிக்க வேண்டும். பாலிசியின் விடுமதிப்பு பாலிசிகளின் வகைகளையும் நடைமுறையில் அவை இருந்த ஆண்டுகளையும் பொறுத்துள்ளது. குறைந்தது இரண்டு ஆண்டிற்குக் கட்டணம் கட்டப்பட்டிருந்தாலும், பாலிசியில் எழுதப்பட்டுள்ள மொத்தக் கட்டணத்தில் 1/10 பாகம் கட்டப் பட்டிருந்தாலும்தான் விடுமதிப்புப் பெறமுடியும். ஓர் ஆண்டின் எல்லாக் கட்டணத்தையும்விட அதிகமாக இருந்தால்தான் மொத்தக் கட்டணம் என்று எடுத்துக்கொள்ள முடியும். பொது வாகப் பாலிசியில் உறுதியளிக்கப்பட்ட விடுமதிப்பின் அளவு தரப்பட்டிருக்கும். மொத்தம் செலுத்தப்பட்ட கட்டணத்தில் 30% குறைந்த அளவு விடுமதிப்பாகக் கணக்கிடப்படுகிறது. மொத்தம் செலுத்தப்பட்ட கட்டணத்தைக் கணக்கிடும்போது முதல் ஓராண்டின் கட்டணத்தையும், தனியாகச் செலுத்தப்பட்ட

கட்டணத்தையும், விபத்து நன்மை கோரி செலுத்தப்பட்ட கூடுதலான கட்டணத்தையும் நீக்கிவிட வேண்டும். இலாபத் தோடுகூடிய பாலிசியாக இருந்தால் போனசின் கூடுதலான ரொக்க மதிப்பையும் ஏற்றுக்கொண்டு தரவேண்டும். ஆயுள் காப்பீட்டுச் சட்டத்தின் தண்ட இழப்பில்லாத (Non forfeiture) சரத்து, ஒரு பாலிசியின் கட்டணம் இரண்டாண்டுகளுக்குக் குறையாமல் கட்டப்பட்டு, அதற்குப்பின் கட்டவேண்டிய கட்டணம் கட்டப்பட முடியாவிட்டால், அப் பாலிசி முழுவதும் செல்லாமற் போகாது என்று கூறுகிறது. ஆனால், காப்பீடு செய்யப்பட்ட தொகை, மொத்தத் தவணைகளில் எத்தனை தவணைக் கட்டணம் கட்டப்பட்டுள்ளதோ அந்த விகிதத்தில் குறைக்கப் படும். ரூ. 1000 அல்லது அதற்குமேல் உள்ள பாலிசியில் குறைக்கப்பட்ட பணம் போனசுடன்கூடி ரூ. 100-க்குக் குறையாமல் இருக்கவேண்டும். ரூ. 1000-க்குக் குறைவான பாலிசியில் அத் தொகை ரூ. 50-க்கு குறையாமலிருக்க வேண்டும். காப்பீடு சம்பந்தமாகச் சொல்லவேண்டுமானால் செலுத்திய மதிப்பு என்று இத் தொகையைச் சொல்லவேண்டும்.

மேலும், ஒரு பாலிசியில் மூன்று முழு ஆண்டிற்குக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குப் பின்னுள்ள கட்டணம் செலுத்தப் படாமலிருந்து, செலுத்தப்படாத முதல்கட்டணத்திலிருந்து ஆறு மாதங்களுக்குள் காப்பீடு பெறுபவர் இறந்துவிட்டால், பாலிசி வலியுறுத்தும் நிலையில் இருக்குமேயானால், பாலிசியின் தொகை அவருடைய வாரிசுதாரர்களுக்குச் செலுத்தப்படும். ஆனால் செலுத்தப்படாத கட்டணமும் அதற்குரிய வட்டியும் அத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். பாலிசியின் அடுத்த ஆண்டு முடிவிற்கு முன்னுள்ள பாக்கிக் கட்டணங்களும் அவ்வாறே கழித்துக் கொள்ளப்படும்.

செலுத்திய மதிப்பு (Paid up Value)

மேற்கூறியபடி ஒரு பாலிசியைப் பெற்றுள்ளவர் இரண்டாண்டுக் கட்டணமும் செலுத்திய பின்னர், தொடர்ந்து கட்டணம் கட்டமுடியாமற் போனால் அப்பொழுது அவர் அந்தப் பாலிசியைச் செலுத்திய பாலிசியாக மாற்றிடலாம். செலுத்திய மதிப்பு என்ற சொற்கள் மொத்தம் செலுத்தவேண்டிய கட்டணத்தில் செலுத்தப்பட்ட கட்டண விகிதத்தில் பாலிசியின் தொகைக் குறைக்கப்படுவதைக் குறிக்கிறது. காப்பீடு செய்யப்பட்ட தொகை, பாலிசியைப் பெற்றுள்ளோர் இறப்பு அல்லது பாலிசியின் முடிவுக் காலம் இரண்டில் முதலில் எது நிகழ்கிறதோ அப்பொழுது செலுத்தப்படும். செலுத்திய மதிப்பு உடனே செலுத்தவேண்டிய

அவசியமில்லையென்பதால் விடுமதிப்பைவிட அஃது அதிகத் தொகையாக இருக்கும்.

ஆயுள் காப்பீட்டுப் பாலிசியின் உரிமைமாற்றம்(Assignment of Life Policies)

ஒரு பாலிசியின் கண்ணுள்ள உரிமையையும் பொறுப்பையும் காப்பீடு பெறுபவர் மூன்றாம் பேர்வழிக்கு மாற்றித் தருவதுதான் பாலிசியின் உரிமைமாற்றம் என்பது. செல்லத்தக்க உரிமை மாற்றத்தில் உரிமைமாற்றம் பெறுபவர் ஒப்பந்தத்திலுள்ள எல்லா நன்மைகளையும் அடைய உரிமையுடையவராக உள்ளார். தம்முடைய பெயரிலேயே காப்பீட்டுக் கம்பெனிமீது வழக்குத் தொடுக்கலாம். சில நிலைகளில் பாலிசித் தொகையின் பணம் மட்டும்தான் மாற்றப்படுகிறது.

ஆயுட்காலப் பாலிசிகள் பழைய நிலை அடையும் அக்கறை கொண்டவைகளாகத் திகழ்கின்றன. இவற்றைக் காப்பீடு பெறுபவர் அவர் விருப்பம்போல் மாற்றவும் பிறருக்குக் கொடுக்கவும் செய்யலாம். பழைய நிலைக்குக் கொணரும் அக்கறை என்பது சொத்தில் உள்ள உரிமையாகும். அதை அனுபவிக்கும் உரிமை தள்ளிப்போடப்படுகிறது. இவ் வக்கறையுடன் ஓர் ஆயுட்காலப் பாலிசி பணத்திற்காகவும் அல்லது மறுபயன் இல்லாமல் ஒப்பந்தம் செல்லக்கூடிய சூழ்நிலைகளிலும் தாராளமாக உரிமை மாற்றம் செய்யப்படலாம். உரிமைமாற்றம் பெறுபவர் காப்பீடு பெறுபவர்மீது காப்பீடு செய்யத்தக்க நலன் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இத்தகைய உரிமைமாற்றம் செய்யப் பட்டதை, காப்பீட்டுக் கம்பெனிக்கு அவர் ஓர் அறிக்கைமூலம் தெரிவிக்கவேண்டும். இவ்வாறு அறிக்கைவிடாமல் முன்னுள்ள அக்கறை மீது இவருக்கு உரிமை உண்டு. முதன் முதலில் அறிக்கை விட்டால் நட்டஈடு கோரும் உரிமை அல்லது பணம் கோரும் உரிமையும் முதலில் வந்து சேரும். நிபந்தனையுள்ள உரிமைமாற்றமும் செல்லுபடியாகும். எந்த இடத்திற்கு உரிமை மாற்ற அறிக்கை விடவேண்டும் என்று பாலிசியில் குறிப்பிட வேண்டும். அறிக்கை பெற்றுக்கொண்டதைக் கம்பெனி உரிமை மாற்றம் பெறுபவருக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்குரிய கட்டணம் பெற்றுக் கொண்டதற்கு எழுத்துமூலம் ரசீது தரவேண்டும். காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 38 (1)-ன்படி பாலிசியின் உரிமைமாற்றம் அதன் மேலெழுதியும், அல்லது தனிப் பத்திரத்தில் கையொப்பமிட்டும் செய்யலாம். ஆனால், இவ் விரண்டு முறையிலும் உரிமைமாற்றம் செய்பவர் அல்லது

அவருடைய பதிலாள் கையெழுத்திட்டு அதில் ஒரு சாட்சியாள ரிடம் கையெழுத்து வாங்கி அனுப்பவேண்டும்.

மேற்கூறிய முறையில் உரிமைமாற்றம் செய்து மேலெழுதி யும் தனிப் பத்திரம் தந்தும், சாட்சிகள் போட்ட கையெழுத்துட னும், உரிமைமாற்ற அறிக்கையுடனும் அவ்வாறு செய்யப்பட்ட உரிமைமாற்றத்தில் உரிமை மாற்றம் பெறுபவரும், அளிப்பவரும் கையெழுத்து உள்ள பத்திரத்தின்படியும் காப்பீட்டுக் கம்பெனிக்கு அனுப்பப்பட்டால் இவ் வுரிமைமாற்றம் செல்லாது எனச் சட்டத் தின் பிரிவு 38 (2) கூறுகிறது. உரிமைமாற்றம் செய்வதற்கு காப்பீட்டுக் கம்பெனியின் ஒப்புதல் பெறவேண்டும் என்ற அவசிய மில்லை.

நியமனம் (Nomination)

ஓர் ஆயுட்காலப் பாலிசியைப் பெற்றுள்ளவர் பாலிசி முதிர் வடைவதற்கு முன்னர் இறந்துவிட்டாலும் அல்லது பாலிசி பாதிக்கப்பட்ட நிலையில் இறந்துவிட்டாலும் அதில் கூறப்பட் டுள்ள பணத்தைப் பெறுவதற்கு யாரை நியமிக்கிறாரோ அவர் தாம் அப் பணத்தைப் பெறமுடியும். அவ்வாறு ஒருவரை நியமிப்பதை நியமனம் என்று சொல்கிறோம். வழக்கமாகப் பாலிசி எடுக்கும்போது நியமனம் செய்வதுண்டு. பாலிசியில் உட்கண்ட விஷயங்களில் இதையும் சேர்க்கவேண்டும். அல்லது பாலிசியில் மேலெழுதியும் இதைச் சேர்க்கலாம். காப்பீட்டுத் தொகையை நியமிக்கப்பட்டவருக்குச் செலுத்திவிடுவதால் காப்பீட்டுக் கம்பெனி இறந்துபட்டதால் காப்பீடு பெறுபவரின் வாரிசுதாரருக்கும் உரிமைகோரும் மற்றவரின் வேண்டுதலுக்கும் செவி சாய்க்கவேண்டிய அவசியமில்லை. அப் பொறுப்பிலிருந்து மீள்கிறது. நியமனம் பற்றிய அறிக்கை விட்டு காப்பீடு செய் பவர் எத்தனை முறை வேண்டுமானாலும் நியமனத்தை மாற்ற லாம்; அல்லது ரத்து செய்யலாம்.

உரிமை மாற்றத்திற்கும் நியமனத்திற்கும் உள்ள வேறுபாடுகள் (Distinction between Assignment and Nomination)

1. உரிமை மாற்றத்தில் உரிமைமாற்றம் பெறுபவரின் நன்மைக்காக அவரின் சொந்த உரிமைக்காகப் பாலிசி யின் உரிமை, பாத்தியதை, அக்கறை எல்லாம் மாற்றம் செய்யப்படுகின்றன. தம்முடைய பெயரி லேயே பாலிசியின் தொகை பெறுவதற்கு வழக்காட லாம். நியமனத்தில் நியமனம் பெறுபவர் இறந்தவரின்

பொருளைப்பெறும் உரிமை பெற்றவரின் நலனுக்காகப் பணத்தை மட்டும் பெறலாம். இவர் பாலிசி முதிர்ச்சி யடையும்போதும் அல்லது காப்பீடு பெறுபவர் இறக்கும் போதும்தான் பணத்தை அடையலாம்.

2. பாலிசியில் உள்ள உரிமைகளை மாற்றுவதற்காக உரிமைமாற்றம் ஏற்படுகிறது. ஆனால் நியமனத்தில் பணத்தை அடைவதற்கு வசதியான முறையில் இருப்ப தற்காகத்தான் மாற்றம் ஏற்படுகிறது.

3. உரிமை மாற்றத்தை ரத்துசெய்ய முடியாது. ஆனால், நியமனத்தைக் காப்பீட்டுக் கம்பெனிக்கு அறிக்கை விட்டு விட்டு முதிர்வடைவதற்கும் எந்நேரத்திலும் ரத்து செய்துவிடலாம். மேலும், உரிமைமாற்றமே நிய மனத்தை ரத்துசெய்து வரக்கூடும். ஆனால், அப் பாலிசியின்மீது கம்பெனி கடன் வழங்கியுள்ளபோது மட்டும் அவ்வாறு செய்ய முடியாது.

4. ஒரு செல்லத்தக்க உரிமைமாற்றத்திற்கு மறுபயன் ஒன்று வேண்டும். ஆனால், நியமனத்திற்கு அது தேவை இல்லை.

5. உரிமைமாற்றம் பாலிசியிலும் செய்யலாம். தனிப் பத்திரத்திலும் செய்யலாம். ஆனால், நியமனம் பாலிசி யின் மேலெழுதிதான் செய்யவேண்டும்.

6. உரிமைமாற்றம் எத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்பட்டாலும் பாதிக்கப்படமாட்டாது. ஆனால், நியமனம், பாலிசி முதிர்வடையும்போது அதனை உடையவர் உயிருடன் இருக்கும்போதும், அத் தேதிக்கு முன்னர் நியமனம் பெறுபவர் இறந்தபோதும் செல்லாமற் பயனற்றுப் போய்விடுகிறது.

7. தீ, கடல், ஆயுள் போன்ற எல்லாக் காப்பீடுகளையும் உரிமைமாற்றம் செய்யலாம். ஆனால், ஆயுள் காப்பீடு அதுவும் ஒருவரின் சொந்த ஆயுளின்மீது செய்யப்பட்ட காப்பீட்டுப் பாலிசியை மாற்றமுடியாது.

8. உரிமைமாற்றத்தைப் பாலிசியின் உள்ளடக்கத்தில் குறிப்பிட முடியாது. ஆனால், நியமனத்தைக் குறிக்க லாம்.

9. உரிமைமாற்றம் தானாகவே நியமனத்தை ரத்து செய்து விடும். ஆனால், நியமனம் உரிமைமாற்றத்தைத் தடுக்க முடியாது.

தற்கொலை

தற்கொலை என்பது ஒருவர் வேண்டுமென்றே தன்னுயிரைத் தாம் மாய்த்துக்கொள்வது. இங்கிலாந்தின் பொதுச் சட்டத்தின் கீழ்த் தற்கொலை செய்து கொள்வது பெருங்குற்றமாகும். எனவே, அது பாலிசிக்கு எதிராகக் கருதப்பட்டது. தற்கொலைக்கும் பணம் செலுத்தப்படும் என்று வெளிப்படையாகவே பாலிசிக்குக் குறிப்பிட்டாலும் சமநிலை இழந்த ஒருவர் தற்கொலை செய்து கொண்டால் அப் பாலிசி வலியுறுத்த முடியாததாக அல்லது செல்லாததாக ஆகிவிடும். ஹார்ன்ஸ் வழக்கில் (Horn's case) இக் கருத்து கூறப்பட்டது. தற்கொலையை நிரூபிக்கும் பொறுப்பு, காப்பீட்டுக் கம்பெனியைப் பொறுத்துள்ளது. நம் நாட்டைப் பொறுத்தவரை நிலைமை வேறு. இந்தியாவில் தற்கொலை மட்டுமன்று, தற்கொலை செய்துகொள்ள முயற்சிப் பதே குற்றம். எனவே, தற்கொலை செய்துகொண்டவரின் பாலிசி தவிர்க்கப்படும். ஆனால், இதன் விளைவுபற்றி பாலிசியில் ஏதாவது ஒரு சரத்து இருந்தால் அதன்படி நடக்கவேண்டும். பிரஸ் போர்டுவிற்கும், ராயல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கும் ஏற்பட்ட வழக்கில் இக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

காப்பீட்டுத் தொகைக் கோரல்

காலவரையுள்ள பாலிசியில் குறிப்பிடப்பட்ட காலத்தவணை முடிந்தபோதும் அல்லது காப்பீடு பெறுபவர் இறந்தபோதும் இவர்களில் எது முதலில் நிகழ்கிறதோ அப்போது பாலிசி முதிர்வடைந்த பணம் கோரப்படலாம். ஆயுட்காலப் பாலிசி அவர் இறந்ததும் முதிர்வடைகிறது. பாலிசித் தொகை முதிர்வடைந்ததும் பாதுகாப்பு பெறுபவராலோ அவர் இறந்தபோது அவருடைய வாரிசுதாரர்களாலோ உரிமைமாற்றம் செய்யப்பட்ட போது உரிமைமாற்றம் பெற்றவராலோ கோரப்படும்.

இறப்பு

காப்பீடு பெறுபவர் இறந்தவுடன் காப்பீட்டுப் பணம் கோரப்படுகிறது. எனவே, அவர் இறந்துவிட்டதை நிரூபிக்கவேண்டும். இறப்புச் சான்றிதழ் அளித்தும் அல்லது மற்றச் சான்றுகளுடன் இறந்துவிட்டதை நிரூபிக்கவேண்டும். பாலிசித் தொகை யாருக்குச் செலுத்தவேண்டும் என்ற தகராறு ஏற்பட்டால்

அல்லது அது விஷயமாகச் சச்சரவுகள் ஏற்பட்டால் பணத்தை நீதிமன்றம்மூலம் செலுத்தலாம். ரூபா இரண்டாயிரத்துக்கு மேற்படாமலிருந்தால், சச்சரவை, பணம் கோருவோர்கள் காப்பீடு ஒழுங்குபடுத்தும் அதிகாரியிடம் முறையிட்டுத் தீர்த்துக் கொள்ளலாம். அவ்வாறு ஒழுங்குபடுத்தும் அதிகாரியிடம் போகாமல் அந்தப் பகுதி நீதிமன்றத்திற்குச் சென்றால் நீதிமன்றத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

வயது நிரூபணம் (Age Proof)

பாலிசி முதிர்வடையும்போது நம்பும் வகையான வயதுச் சான்றிதழ் காப்பீடு பெறுபவரால் கொடுக்கப்படவேண்டும். ஏற்கெனவே கொடுத்திருந்தால் அது தேவை இல்லை. இத்தகைய வயதுச் சான்று ஒருவருடைய ஜாதகம், பிறப்புச் சான்றிதழ், குடும்பக் குறிப்பு அல்லது பத்திரம் போன்றவைகளாகவும் இருக்கலாம். இவ்வாறு வயது நிரூபிக்கப்பட்டதும் காப்பீட்டுப் பாலிசியின் முகப்பில் இவ் வுண்மையைக் குறிப்பதற்கு 'வயது ஒத்துக்கொள்ளப்பட்டது' (Age Admitted) என்றெழுதுவது உண்டு. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வயதைப் பின்னர்க் காப்பீட்டுக் கம்பெனி சரியா, தவறா என்று மீண்டும் விசாரணை எழுப்பக்கூடாது. ஆனால், மோசடி மூலம் வயது நிரூபணம் கிடைக்கப் பெற்றால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது. கொடுக்கப்பட்ட வயதைக்காட்டிலும் உண்மையான வயது அதிகமாக இருந்தாலும்கூடப் பணம் தருவதற்குக் காப்பீட்டுக் கம்பெனி மறுக்க முடியாது. வேண்டுமானால் இரு வயதிற்கும் உள்ள கட்டண வித்தியாசத்தைப் பாலிசித் தொகையிலிருந்து கழித்துவிடலாம்.

ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டம், 1956 (The Life Insurance Corporation Act, 1956)

நம் நாட்டில் ஆயுள் காப்பீட்டுத் தொழில் இந்திய அரசு பிறப்பித்த அவசரச் சட்டத்தால் *19—1—1956* அன்று நாட்டுடைமையாக்கப்பட்டது. சட்டத்தின் சரத்துகளின்படி இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் அமைக்கப்பட்டது. அதன் நோக்கங்களாவன: 1. பாலிசிதாரர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பது, 2. சேமிப்பை உற்சாகப்படுத்தி அதிகரிக்கச் செய்து அதை நல்ல முறையில் பயன்படுத்துதல், 3. நாட்டு மக்களிடையே காப்பீட்டுப் பழக்கத்தை உண்டாக்கி காப்பீட்டுத் தொழிலைப் பெருக்குதல், 4. பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்த சேமிப்பின் பெரும் தொகையைக் கிடைக்கச்செய்தல்.

மூதல் (Capital)

சிறப்புச் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு சங்கம் அல்லது கூட்டுருதான் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம். ஆரம்பத்தில் அதனுடைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5 ஆயிரம் கோடி. இது முழுதும் மத்திய அரசால் வழங்கப்பட்டது. பிரிவு 30-ன்படி இந்தியாவில் இக் கழகம் ஆயுள் காப்பீட்டுத் தொழிலின் விற்பனை முற்றுரிமை முழுதும் பெற்றிருந்தது. இது நிறுவப்பட்டவுடனேயே அப்போதுள்ள காப்பீட்டுக் கம்பெனிகளின் சொத்து, பொறுப்பு, அலுவலர்கள் போன்றவைகள் அனைத்தும் இக் கழகத்திற்கு மாற்றப்பட்டன. அப்பொழுது நடைமுறையில் உள்ள ஏனைய பாலிசிகளுக்கும் எதிர்காலத்தில் முன்னாள் கடன் கழகம் வெளியிடக்கூடிய எல்லாப் பாலிசிகளுக்கும் அரசாங்கம் தொகைகளை ரொக்கமாக வழங்குவதாக உத்தரவாதம் கொடுத்துள்ளது.

பணிகள் (Functions)

இக் கழகம் நம் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆயுள் காப்பீட்டுத் தொழிலை நடத்தி வருவதோடல்லாமல், இத் தொழிலைச் சமுதாயத்தின் அதிகபட்ச நன்மைக்காக அபிவிருத்தி செய்து வருகிறது. மூலதன மீட்பு, ஆண்டுத்தொகை, மறு காப்பீடு போன்ற தொழிலைச் செய்வதற்குக் கழகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் தொழிலுக்காக அது எந்தச் சொத்தையும் வாங்கலாம்; வைத்திருக்கலாம்; விற்றுவிடலாம். அதன் அக்கறையைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளலாம்; முதலீட்டை விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம். அசையும் அல்லது அசையாப் பொருள்மீது ஈடாகப் பணம் பெறலாம்; அல்லது கடன் தரலாம்.

நிருவாகம் (Administration)

வணிக நிறுவனங்களைப் போன்றுதான் கழகத்தின் நிருவாகமும் நடைபெறுகிறது என்றாலும், மத்திய அரசு, கழகம் பின்பற்றக்கூடிய கொள்கைகளை அல்லது திட்டங்களை உருவாக்க அதிகாரம் பெற்றுள்ளது. பொதுமக்கள் நலன் போன்ற விஷயங்களில் அரசாங்கம் காட்டும் வழிகளையும் இடும் கட்டளைகளையும் கழகம் ஏற்றுக்கொள்கிறது. கழகத்திற்கு ஒரு மத்திய அலுவலகம் உண்டு. பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை, கான்பூர் என்ற ஐந்து இடங்களில் மண்டல அலுவலகங்களும் (Zonal Offices) உள்ளன. அவை அநேக பிரிவு உட்பிரிவு அலுவலகங்களையும், கிளை அலுவலகங்களையும், கட்டணம் வசூலிக்கும் நிலையங்களையும் பெற்றுள்ளன. கழகத்தின்

நடவடிக்கைகளை அல்லது செயல்முறைகளை மத்திய அரசாங்கம் அமர்த்தப்பட்ட 105 நபர்கள் கொண்ட குழு ஒழுங்கு படுத்தி நிருவாகம் புரிகிறது. இவ் வங்கத்தினர்களில் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுகிறார். யாரொருவரின் நிதி நிலைமை, மற்ற அக்கறைகள் அவரைக் கழகப் பணியில் சுதந்திரமாக ஈடு படுத்தாதோ அவர்களை அரசாங்கம் இக் குழுவின் அங்கத்தின ராக நியமிக்காது. மேலும் சமுதாய நலனுக்கு மாறுபடுபவர் களையும் அரசாங்கம் அங்கத்தினராக நியமிக்காது. இக் குழு கழக அலுவல்களை வழிகாட்டியாக இருந்து நடத்தவும், மேற்பார்வை பார்க்கவும் ஐந்து அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு நிருவாகக் குழுவை அமைக்கிறது. கழகத்தின் நியாயமான முதலீடுகளை உறுதிப்படுத்த முதலீட்டுக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

கணக்கும் தணிக்கையும் (Accounts and Audit)

இரண்டாண்டிற்கு ஒரு முறை கழகம் தன் நிதி நிலைமை யின் உண்மையான மதிப்பைக் காப்பீட்டு மதிப்பாளரால் மதிப்பிட வேண்டும். இவ்வாறு மதிப்பிடும்பொழுது தோன்றும் அதிகப் படியான உபரிப் பணத்தில் 95 விழுக்காடு இலாபத்துடன்கூடிய பாலிசியை உடைய பாலிசிதாரர்களுக்கு ஒதுக்கி வைக்கப்படு கிறது. மீதியுள்ள 5 விழுக்காடு உபரிப் பணம் பாலிசிதாரர்களின் பொது நன்மைக்கும் பொது நலனுக்கும் பயன்படுத்தப்படுகிறது. மத்திய அரசால் அமர்த்தப்படும் தொழில் முறை தணிக்கையாளர் களால் கழகத்தில் கணக்குகள் தணிக்கை செய்யப்படுகின்றன. கழகத்தின் காப்பீட்டு மதிப்பு அறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள், ஆண்டறிக்கை போன்றவைகளை மத்திய அரசிற்குச் சமர்ப்பிக்க வேண்டும். மத்திய அரசு இவைகளை பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கும் அனுப்பி ஒப்புதல் பெறும்.

தீக் காப்பீடு
(Fire Insurance)

தீக் காப்பீட்டு ஒப்பந்தம் என்பது காப்பீட்டுக் கம்பெனி பாது காப்பு பெறுபவருக்குத் தீ மூலம் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட நியாயமான கட்டணத்தை மறுபயனாகப் பெற்றுச் செய்யும் ஓர் ஒப்பந்தம். இவ் வொப்பந்தத்தில் தீ என்பது பெருமளவிற்கு வியாபித்துக் கட்டுக்கடங்காமலிருக்கும் தீயைக் குறிக்கும். காப்பீடு செய்யப்பட்ட பொருள் தீப்பற்றி எரிந்து அதனால் ஏற் படும் நட்டத்தையும் அல்லது ஒரு கட்டடத்தின் ஒரு பகுதியில்

அப் பொருள் இருந்து தீயினால் அடைந்த நட்டத்தையும் தீயினால் ஏற்பட்ட நட்டம் என்று சொல்லலாம். தீயணைப்பு ஏற்பாடு செய்தும் ஏற்படும் நட்டங்களையும் தீயைத் தடுத்து ஏற்படும் நட்டங்களையும் தீக் காப்பீட்டுப் பாலிசி ஏற்றுக் கொள்ளும். அந் நட்டங்களுக்கு ஈட்டுத் தொகையும் தரப்படும். நியாயமாகவும் நடக்கக்கூடியவும், தீயினால் ஏற்படும் இயற்கையாகவும், உள்ள நட்டங்களைத் தீ விபத்தால் ஏற்பட்ட நட்டங்களாக ஏற்றுக் கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டாக 'ஏ' என்பவரின் கார் தீ விபத்துக்கெதிராகக் காப்பீடு செய்யப்பட்டது. ஆனால், மோதலுக்காகக் காப்பீடு செய்யப்படவில்லை. அவர் காரைச் செலுத்திக் கொண்டிருக்கும்போது மின் இணைப்பில் ஏற்பட்ட குறுக்குப் பாய்ச்சலால் கருவிப் பலகையில் (Dash Board) தீப் பிடிக்க ஆரம்பித்தது. அதை அணைத்திட முயலும்போது 'ஏ' என்பவர் காரைக் கட்டுப்படுத்தும் திறனை விட்டுவிட்டதால் கார் மரத்தில் மோதியது. மோதியபின் தீ பரவி, கார் முழுவதும் சேதமடைந்துவிட்டது. மோதலால் ரூ. 8000 நட்டமும், அதன்பின் பற்றிய தீயினால் ரூ. 2000 நட்டமும் என மதிப்பிடப்பட்டது. 'ஏ'க்கு எவ்வளவு நட்டஈடு தரப்படும் என்று வினா எழுந்தது. ஏ என்பவர் ரூ.10,000-கும் நட்டஈடு பெறலாம். தீயினால் ஏற்பட்ட நட்டம் ரூ.2000-மும் அதை அணைக்க முயற்சித்தபோது ஏற்பட்ட நட்டம் ரூ. 8000-மும் சேர்ந்து ரூ. 10,000-மும் அவர் பெறலாம். கருவிப் பலகையில் ஏற்பட்ட தீயை அணைக்க முயலும்போது தான் விபத்து ஏற்பட்டது. மோசடி செய்யப்பட்டாலன்றி தீ விபத்தால் ஏற்படும் நட்டத்திற்குத் தீ ஏற்பட்ட காரணம் முக்கியமில்லை. எனவே, காப்பீட்டுக் கம்பெனியிடமிருந்து 'ஏ' இரண்டு நட்டங்களுக்கும் ஈட்டுத் தொகை பெறலாம்.

வெறும் சூடானதால் ஏற்படும் நட்டத்திற்குக் கம்பெனி பொறுப்பாளியன்று. காப்பீட்டின் கருப்பொருள் அல்லது காப்பீடு செய்யப்பட்ட பொருள் முழுவதும் எரிந்து நட்டமேற்பட வேண்டும். எரிதல் இல்லாமல் தீ இருக்கமுடியாது. எனவே, இத்தகைய நட்டங்களுக்குக் கம்பெனி ஈட்டுத்தொகை தரவேண்டும். தீ பரவின காரணத்தை மட்டும் கேட்டுவிட்டுப் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்ளமுடியாது. ஆனால், காப்பீடு பெறுபவரோ அல்லது அவரின் வேலையாள்கள் அஜாக்கிரதையாக இருந்து அதனால் நட்டமேற்பட்டாலும், அவரே வேண்டுமென்று தீ வைத்துவிட்டு நட்டஈடு கோரினாலும் கம்பெனி தராது. மேலும், காப்பீடு பெறுபவர் வேண்டுமென்றே செய்யாமல் நல்லெண்ணத்

துடன் இருந்து தீப்பிடித்து நட்டம் ஏற்பட்டால் அதற்குக் கம்பெனி பொறுப்பாகும்.

உதாரணமாக எச் என்பவர் தம் நகைகளுக்குத் தீக்காப்பீடு செய்திருந்தார். அவைகளை கரியடுப்பிலுள்ள கரிக்கடியில் மறைத்து வைத்திருந்தார். இதை மறந்து நெருப்பை மூட்டி விட்டார். நகைகள் சேதமடைந்தன. தீ விபத்துப் பாலிசியின்கீழ் அவர் நட்டஈடு பெற முடியுமா என்பது வினா. நல்லெண்ணத் துடன் நடந்த தீ விபத்தால் ஏற்பட்ட நட்டமானதால் கம்பெனி அவருக்கு நட்டஈடு தரவேண்டும். இங்கு நெருப்பை விருப்பத் துடன் பற்றவைத்தாலும் கம்பெனியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கமில்லை.

வெளிச்சம், மின்சாரம், வெடிபொருள் என்பவை நெருப்பல்ல என்றாலும், அவைகளால் உள்ள தீயினால் விபத்து ஏற்படாமல் அது விபத்தாகக் கருதப்படும். வெடிபொருள்கள் பொதுவாக இவ் வகையில் வராவிட்டாலும் தீயினால் வெடித்து நட்டமேற் பட்டால் இவ் வகையைச் சாரும். ஒளியினால் தீ ஏற்பட்டு காப்பீடு செய்யப்பட்ட பொருள் நட்டமடைந்தால்தான் இவ் வகையைச் சாரும். மின்சாரம் என்பது தீ அன்று. அதேபோல் அதனால் ஏற்படும் சேதம் எரிந்துதான் ஏற்படவேண்டும் என்ற அவசியமில்லை ; தீ இல்லாத வெப்பத்தால் ஏற்பட்ட நட்டம் இக் காப்பீட்டில் சேராது. தீ பரவுவதைத் தடுப்பதற்காகப் பிடுங்கி எறியப்பட்ட வீடுகள் காப்பீடு பொறுப்பிற்குத் தகுதி யானவை. காப்பீடு பெறுபவர் அல்லது அவருடைய வேலையாள் போன்றவரின் புறக்கணிப்பால் ஏற்படும் விபத்து தீ விபத்தின் பாற்பட்டதாகும்.

தீக் காப்பீட்டிற்கும் ஆயுள் காப்பீட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்

1. தீக் காப்பீட்டில் சொத்துகளுக்கு ஏற்படும் நட்டம் ஈடு கட்டப்படுகிறது. ஆனால், ஆயுள் காப்பீட்டில் மனித ஆயுள் பற்றிய காப்பீடு திகழ்கிறது.

2. தீக் காப்பீட்டு ஒப்பந்தம் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். ஆனால், ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் அவ்வாறன்று அது ஒரு நிகழ்வடைவான ஒப்பந்தம். மேலும், தீக் காப்பீட்டில் நட்டம் ஏற்படும் காலம் முழுவதும் நிலை இல்லாதது; எப்பொழுது நிகழும் என்று சொல்ல முடியாது; நட்டஈடு கோருதல் நேரலாம்; அல்லது

நேராமலிருக்கலாம். ஆயுள் காப்பீட்டில் பணம் கோருதல் அவசியம் நிகழும். பணம் கோருதல் எப்பொழுது நிகழும் என்பதுதான் நிலையில்லா வினாவாகக் காணப்படுகிறது. பாலிசி முதிர்வடைந்தாலும், பாலிசிதாரர் இறந்தாலும், பாலிசி முதிர்வடைந்து அவர் உயிருடன் இருந்தாலும் இது நிகழும். மேலும், ஆயுள் காப்பீட்டில் கோரும் பணத்தின் அளவு நிலையானது. ஆனால், தீக் காப்பீட்டில் நேர்ந்த நட்டத்திற்கு மட்டும் தான் பணம் பெறப்படும். காப்பீடு செய்யப்பட்ட தொகையைவிட நட்ட ஈடு குறைவாக இருந்தால் அத் தொகையைத்தான் பெற முடியுமேயொழிய பாலிசியின் முழு தொகையைப் பெற முடியாது. நட்டமே ஏற்பட வில்லையென்றாலும் ஒன்றும் பெறமுடியாது.

3. தீக் காப்பீட்டு ஒப்பந்தம் அதிகபட்சமாக ஓர் ஆண்டிற் குத்தான் செய்யமுடியும். ஆனால், ஆயுள் காப்பீடு பல ஆண்டுகளுக்கு எடுக்கலாம்.

4. தீக் காப்பீட்டில் ஒப்பந்தம் ஏற்படும்பொழுதும், நட்ட மேற்படும்பொழுதும் காப்பீடு செய்யப்பட்ட பொருளின் மீது காப்பீடு செய்யத்தக்க நலன் இருக்கவேண்டும். ஆனால், ஆயுள் காப்பீட்டில் பாலிசி ஏற்கும்போது அதாவது ஒப்பந்தம் முடியும்போது இருந்தால் மட்டும் போதும்.

5. தீக் காப்பீட்டில் காப்பீட்டுக் கம்பெனியின் ஒப்புதல் இன்றி உரிமைமாற்றம் செய்ய இயலாது. ஆனால், ஆயுள் காப்பீட்டில் அவ்வாறு செய்யலாம்.

6. தீக் காப்பீட்டுப் பாலிசிக்கு விடுப்பு மதிப்பு ஒன்றுமில்லை. ஆனால், ஆயுள் காப்பீட்டுப் பாலிசிக்கு அது உண்டு. தீக் காப்பீட்டில் செலுத்தப்பட்ட பாலிசி போன்றவை இல்லை.

தீக் காப்பீட்டுப் பாலிசியின் வகைகள்

1. **குறிப்பிட்ட பாலிசி** (Specific Policy) : சொத்தின் மதிப் பிற்குக் குறைவான மதிப்பிற்கு எப்பொழுதும் எடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட தொகையுள்ளது இப் பாலிசி. இக் குறிப்பிட்ட தொகை உண்மையான நட்டத்தையும் அல்லது கோரும் பணத் தையும் தீர்மானிக்கப் பயன்படாது. ஆனால், நட்ட ஈட்டில் அதிகபட்ச வரையறையை நிருணயிக்க இது பயன்படும்.

காப்பீடு செய்யப்பட்டுள்ள பொருளின் உண்மையான மதிப்பு கோரும் பணத்தின் அல்லது நட்டஈட்டின் மதிப்பினை பாதிக்காது. குறிப்பிட்ட பாலிசியில் கண்ட தொகை அளவிற்கு ஏற்படும் நட்டத்திற்குக் காப்பீட்டுக் கம்பெனி பொறுப்பாகும். சராசரிக் கணக்கீட்டிற்கு இப் பாலிசி உட்பட்டதன்று.

2. மதிப்பிட்ட பாலிசி (Valued Policy): காப்பீட்டு ஒப்பந்தம் ஏற்படும்போதே காப்பீட்டுக் கம்பெனியின் பொறுப்பு மதிப்பிடப் பட்டு நிலையாக உள்ளது. இத்தகைய மதிப்பிட்ட பாலிசிகளில் காப்பீடு, காப்பீட்டுக் கம்பெனி குறிப்பிடப்பட்ட தொகையை உண்மையான நட்டம் எவ்வளவு இருந்தாலும் அதைப் பொருட் படுத்தாமல் அளிக்கிறது. இங்குத் தீக் காப்பீட்டு ஒப்பந்தம் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தத்திலிருந்து ஒரு நிகழ்வடைவான ஒப்பந்தத்தி லிருந்து ஒப்பந்தமாக மாற்றப்படுகிறது. நடைமுறையில் இத்தகைய பாலிசிகள் வெளியிடுவது மிகவும் அரிது.

3. சராசரிப் பாலிசி (Average Policy): இப் பாலிசியில் சராசரிச் சரத்து ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இக் காலத்தில் அளிக்கப்படும் பாலிசிகள் பெரும்பாலும் இச் சராசரிச் சரத்திற்கு உட்பட்டு வழங்கப்படுகிறது. ஒருவர் சொத்தின் உண்மையான மதிப்பிற்குக் குறைவாகக் காப்பீடு செய்திருந்தால் நட்டமேற் படும்போது மொத்த நட்டத்தில் சொத்தின் மதிப்பில் காப்பீடு செய்யப்பட்ட தொகையின் விகிதத்திற்கு ஏற்ப நட்டஈடு வழங்கப்படும். மாறாக நட்டமேற்படும்பொழுது காப்பீடு செய்யப்பட்ட தொகை முன்பைவிட அதிகமாக இருந்தால் காப் பீட்டுக் கம்பெனி ஒரு விகிதாச்சார நட்டஈட்டை ஏற்கவேண்டும்.

தீக் காப்பீட்டுப் பாலிசியில் உள்ள சராசரிச் சரத்து என்பது பொதுவாக, எல்லாக் கம்பெனிகளும் குறைந்த மதிப்புக் காப்பீட்டைத் தவிர்க்கும் பொருட்டுத் தங்கள் பாலிசியின் சரத்து களில் இதைச் சிறப்பான சரத்தாகச் சேர்க்கப்படுவதாகும். இதை சராசரிச் சரத்து (Average Clause) என்பர். சொத்தின் உண்மை யான மதிப்பின் விகிதத்திற்கு நட்டஈடு தரும் காப்பீட்டுக் கம்பெனியின் பொறுப்பினை வரையறுக்கவே இச் சரத்து பாலிசியில் சேர்க்கப்பட்டுள்ளது. எந்த அளவிற்குக் குறைத்து காப்பீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த அளவிற்குக் காப்பீடு பெறுபவர் தாமே காப்பீடு அளிப்பவராக மாறியுள்ளார். எனவே, மொத்த நட்டத்திற்குத் தகுந்த விகிதத்தில் அவரே பொறுப்பாளி யாகிறார். உதாரணமாக ஒரு சொத்தின் மதிப்பு ரூ. 40,000. ஆனால், ரூ. 30,000-க்குத்தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நட்டம் ரூ. 10,000 ஏற்பட்டால், காப்பீட்டுக் கம்பெனியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நட்ட ஈடு.

$$\frac{10,000 \times 30,000}{40,000}$$ அல்லது ரூ. 7,500 ஆகும்.

4. பதிலமர்த்திடும் அல்லது பழைய நிலைக்குக் கொணரும் பாலிசி (Replacement or Re-instatement Policy) : இத்தகைய பாலிசிகளில் காப்பீட்டுக் கம்பெனி சேதமடைந்த சொத்தின் மதிப்பைத் தருவதோடல்லாமல் அதேபோல் உள்ள புதிய சொத்தைப் பதிலமர்த்திடும் செலவையும் தருகிறது. ரொக்கம் தராமல் மீண்டும் பழையபடி அதே பொருளை வாங்கிக் காப்பீடு பெறுபவருக்கு பழைய நிலையில் வைத்துத் தருகிறது.

5. நட்டவிளைவு பின்தொடர் பாலிசி (Consequential Loss Policy) : இப் பாலிசியை இலாபமிழக்கும் பாலிசி (Loss of Profit Policy) என்றும் சொல்லலாம். தீ விபத்து ஏற்பட்டால் நிறுவனத்தின் சொத்து மட்டும் அழியவில்லை. அதனுடைய வருவாய் அல்லது ஈட்டும் திறனும் அப் பொருள்கள் பழைய நிலைக்கு வரும்வரை பாதிக்கப்படுகிறது. எனவே, தீ விபத்தால் அது நேராவிடில் சம்பாதித்திருக்கக்கூடிய இலாபமும் இழக்க நேருகிறது. மேலும், வியாபாரத்தில் நிலையான கட்டணங்களை வசூலிக்க முடியாததால் அந் நட்டம் இன்னும் கூடுகிறது. எனவே, தலையான கட்டணங்கள் வசூலாகாததால் ஏற்படும் நட்டம், சம்பாதித்திருக்க வேண்டிய இலாப இழப்பு, போன்ற நட்டங்களைச் சரிகட்டிட நட்டவிளைவுப் பின்தொடர் பாலிசி வெளியிடப்படுகிறது.

6. சென்ற காலத்தையும் அளவளாவிய பாலிசி (Retrospective Policy) : காப்பீடு பெறுபவர்கள் விரும்பினால் காப்பீட்டுக் கம்பெனி சென்ற காலத்திற்கும் செல்லக்கூடிய தன்மை வாய்ந்த பாலிசிகளை வெளியிடும்.

உதாரணமாக ஓர் இடைக்காலப் பாதுகாப்புத் தாள் (Cover Note) ஜூன் பதினைந்தாம் தேதியிலிருந்து ஏற்படும் வியாபாரத்தைக் காப்புறுதி செய்யும் பொருட்டு ஜூன் பதினெட்டாம் தேதி வெளியிடப்பட்டது. இரண்டு நபர்களுக்கும் தெரியாமல் ஜூன் பதினாறாம் தேதி சரக்குகள் தீ விபத்தால் சேதமடைந்தன. காப்பீட்டுக் கம்பெனிதான் நட்டத்திற்குப் பொறுப்பாளி என்று நீதிமன்றம் கூறியது. ஒப்பந்தச் சட்டத்தின் 20ஆவது பிரிவின் படியுள்ள தவறின் அடிப்படையில் இப் பொறுப்பைக் காப்பீட்டுக்

கம்பெனி தவிர்க்க முடியாது என்று இந்திய டிரேடு அண்டு ஜெனரல் நிறுவனத்திற்கும் பைலால் என்பவருக்கும் இடையே நடந்த வழக்கின் வழி அறிகிறோம்.

தீக் காப்பீட்டுப் பாலிசியின் உரிமை மாற்றம் (Assignment of Fire Insurance Policy)

ஆங்கிலச் சட்டத்தில் காப்பீட்டுக் கம்பெனியின் ஒப்புதல் பெற்று இப் பாலிசியை உரிமைமாற்றம் செய்யலாம். காரணம் தீ, களவு, விபத்து இவற்றிற்காக ஏற்படும் காப்பீட்டு ஒப்பந்தம், காப்பீடு செய்யப்படும் பொருளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு தனிப்பட்ட தன்மைவாய்ந்த ஒப்பந்தமாகும். எனவே, காப்பீடு செய்யப்பட்ட சொத்து அல்லது பொருள்களின் உரிமைமாற்றம் தானாகவே பாலிசியின் உரிமைமாற்றத்திற்குள் போய்விடாது. நம் நாட்டிலும் இதே முறைதான் கையாளப்படுகிறது. ஆனால், உரிமைமாற்றம் செய்யும் அறிக்கை ஒன்று காப்பீட்டுக் கம்பெனிக்குத் தரவேண்டும். எனவே, கம்பெனியின் ஒப்புதல் தேவையில்லை. ஆனால், சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 135ஆவது பிரிவின்படி காப்பீடு செய்துள்ள சொத்துரிமை மாற்றம் செய்யாமல் பாலிசி உரிமைமாற்றம் செய்ய முடியாது. எனினும் உரிமைமாற்றம் பெறுபவர் பாலிசியிலுள்ள எல்லாக் குறைபாடுகளுக்கும் உட்பட்டு உரிமைமாற்றம் செய்பவரிடமிருந்து பெறுகிறார். மேற்கூறிய சட்டத்தின் 49ஆவது பிரிவுப்படி இங்ஙனம் உரிமைமாற்றம் பெறுபவர் உரிமைமாற்றம் செய்தவரை இப் பாலிசியின்கீழ் அவர் பெற்ற பணத்தைக் கொண்டு பொருளை அல்லது சொத்தைப் பழைய நிலையில் இருத்தும்படி கேட்கும் உரிமை உண்டு.

நட்டஈடு

தீ விபத்துப் பாலிசியின்கீழ் நட்டஈடு கோருவதற்குச் சில கடமைகளைச் செய்யவேண்டும்.

1. தீ விபத்து ஏற்பட்டவுடனே அவரோ அல்லது அவரின் சார்பாகவோ எவரோ காப்பீடு அளிப்பவருக்கு எழுத்தின் மூலம் அறிக்கை விடவேண்டும். அதற்கென்று அசாதாரணமான விழிப்பும் கவனமும் தேவையில்லை.

2. பாலிசியில், குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்பட்ட நட்டத்தை அல்லது சேதத்தை தோராய மதிப்புடன் எழுதிய பட்டியல் ஒன்றைக் காப்பீட்டுக் கம்பெனிக்கு அனுப்பவேண்டும்.

3. காப்பீட்டுக் கம்பெனி கேட்டால், நட்ட ஈட்டை நிரூபிக்கும் சான்று ஒன்றையும் அனுப்பவேண்டும்.

மேற்கூறிய கடமைகளைச் செய்யத் தவறினால் நட்டஈடு தரப்படமாட்டாது. காப்பீடு பெறுவோர் நட்டஈடு முழுவதையும் இழக்க நேரிடும். மோசடி செய்யும் நோக்கத்துடன் நட்டஈடு கோரினால் அவர் பாலிசியினால் ஏற்படும் எல்லா நன்மைகளையும் இழப்பார். அதேபோல் அவரோ அவரின் முகவரோ வேண்டுமென்றே தவறான நடத்தையுடன் நட்டஈடு கோரினால் நட்ட ஈடு கிட்டாது. இறுதியாகப் பாலிசி வேறு விதமாக இருந்தாலொழியக் கருப்பொருளில் (Subject) காணும் உள்ளிட்ட குறைபாடுகளுக்கும் நட்ட ஈடுஇல்லை.

கடல் காப்பீடு

(Marine Insurance)

'ஒரு குறிப்பிட்ட கடற்பயணத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் கப்பல் மூலம் சரக்கு அனுப்பும்போது, ஏற்படும் கடல் ஆபத்துகளால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட ஒரு குறிப்பிட்ட மறுபயனுக்காக ஒருவர் செய்யும் ஒப்பந்தம்தான் கடல் காப்பீடாகும்' என்று ஆர்னால்டு கடல் காப்பீட்டு ஒப்பந்தத்தை விளக்குகிறார். எனவே, கடல் காப்பீட்டுப் பாலிசி என்பது கடல் அபாயத்தால் சம்பந்தப்பட்ட நட்டங்களுக்கு ஈட்டுறுதி தருவதாகத் திகழ்கிறது. இது ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். காப்பீடு பெறுபவருக்கு ஏற்படும் உண்மையான நட்டத்தை ஏற்கும் பொறுப்பு, காப்பீடு அளிப்பவருக்கு உண்டு. பாலிசியின் தன்மை எப்படியிருந்தாலும் நட்டங்களின் அளவு உறுதிசெய்யப்பட்டாலொழிய காப்பீட்டுக் கம்பெனி ஏற்படும் சேதத்திற்குப் பொறுப்பாளியாகாது. அநேக நேரங்களில் விபத்தின் அளவு முன்கூட்டியே ஒத்துக்கொள்ளப்படுகிறது. ஒப்பந்தச் சட்டம், காப்பீட்டுச் சட்டம் ஆகியவைகளின் சட்டப் பிரிவுகள் கடல் காப்பீட்டு ஒப்பந்தங்களை ஒழுங்குமுறைப்படுத்துகின்றன. ஆங்கிலச் சட்டத்தில் உள்ள அநேக பழக்க வழக்கங்களை நாம் பின்பற்றுகிறோம். நம் நாட்டில் 1963ஆம் ஆண்டுக் கடல் காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவுகள் கடல் காப்பீட்டு ஒப்பந்தங்களை ஒழுங்குமுறைப்படுத்தி நடைமுறையில் கையாளச் செய்துள்ளன.

செல்லத்தக்க கடல் காப்பீட்டுப் பாலிசியில் காணப்பட வேண்டிய முக்கியக் கூறுகளாவன :

1. ஒரு செல்லத்தக்க ஒப்பந்தத்தில் இருக்கவேண்டிய உடன்பாடு, முழு இசைவு, மறுபயன், சட்ட நோக்கம், தகுதியான நபர் போன்றவை பாலிசியில் காணப்படவேண்டும்.

2. ஒரு கடல் காப்பீட்டுப் பாலிசி எழுத்தால் இருக்க வேண்டும்; முத்திரையிட்டிருக்கவேண்டும்.

3. ஒரே சமயத்தில் பன்னிரண்டு மாதங்களுக்கு மேல் காப்பீடு இருக்கக்கூடாது.

4. நட்டமேற்படுகின்றபோது காப்பீடு செய்யப்பட்ட பொருள்மீது காப்பீடு செய்யத்தக்க நலன் இருத்தல் வேண்டும்.

5. கடல் காப்பீட்டு ஒப்பந்தத்தில் காப்பீடு பெறுபவர் முழு நன்னம்பிக்கையுடன் செயலாற்றவேண்டும். காப்பீடு சம்பந்தப்பட்ட எல்லா உண்மைகளையும் காப்பீட்டுக் கம்பெனிக்குச் சொல்லிவிட வேண்டும். காரணம் இவ் உண்மைகளை அறிந்து கொண்ட பின்னர் இவ் விபத்தை எடுத்துக்கொள்வதற்கு விருப்பமில்லாமலும் இருக்கலாம். ஒவ்வொரு தனிப்பட்ட நிலைக்கும் தகுந்தபடி கடல் காப்பீட்டுப் பாலிசி தயாரிக்கப்படவேண்டும். அதில் சில பொதுச் சரத்துகளும் சில சிறப்புச் சரத்துகளும் இருக்கலாம்.

கடல் காப்பீட்டுப் பாலிசியின் வகைகள்

1. மதிப்பிட்ட பாலிசி (Valued Policy): ஒப்பந்தம் ஏற்படும்போதே காப்பீடு செய்யப்பட்ட பொருளின் மதிப்பைத் தீர்மானித்து பாலிசியில் குறிப்பிடப்படுவது மதிப்பிட்ட பாலிசியாகும். நட்டமேற்படும்போது பாலிசியில் குறிப்பிட்டுள்ள தொகைக்குமேல் காப்பீட்டுக் கம்பெனி நட்டஈடு தராது.

2. பயணப் பாலிசி (Voyage Policy): ஒரு குறிப்பிட்ட பயணத்திற்கு அதாவது இரு துறைமுகங்களுக்கிடையில் உள்ள பயணத்திற்கு ஒரு பொருளை அல்லது சரக்கைக் காப்பீடு செய்வது. பயணம் எடுத்துக்கொள்ளும் காலத்தைக் குறிப்பிடுவதில்லை. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சரக்குகள் போவதற்குக் காப்பீடு செய்யப்படுகிறது. இதற்கிடையில் ஏற்படும் நட்டத்திற்குக் காப்பீட்டுக் கம்பெனி பொறுப்பாகும். இது கப்பல் காப்பீட்டிற்குத் தகுதியானதன்று. காரணம் கப்பல்கள் ஒரு வழியில் அல்லது ஒரு பாதையில் மட்டும் செல்லாது எதிர்காலத் தகராறுகளைத் தவிர்க்கக் காப்பீட்டுப் பாங்கியில் பயணத்தின் எல்லையைக் குறிப்பிடுவது வழக்கம்.

3. காலவரையுள்ள பாலிசி (Time Policy): இந்தப் பாலிசியில் காப்பீடு செய்யப்படும் பொருள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பொதுவாக பன்னிரண்டு மாதங்களுக்குமேல் போகாமல் காப்பீடு செய்யப்படுகின்றன. கப்பலின் அடிப்பகுதிப் காப்பீட்டிற்கு இது மிகவும் பொருத்தமானது. பாலிசியில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் கப்பல் போய்ச் சேரவேண்டிய துறைமுகத்தை அடையாவிட்டால் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் விபத்தை ஏற்கும் பொறுப்பை நீட்டிக்கத் தொடர் சரத்து (Contin-uation Clause) ஒன்று இத்தகைய பாலிசியில் உள்ளது. போய்ச் சேரவேண்டிய துறைமுகத்தில் பத்திரமாகக் கப்பல் போய்ச் சேரும்வரை அல்லது பாலிசியின் காலவரை முடியும் போது கப்பல் கடலில் இருந்தால் அதன்பின்னர் நியாயமான காலத்திற்கும் இப் பாலிசி தொடர்ந்து இருக்கும்.

4. கலப்புப் பாலிசி (Mixed Policy): காலவரை பாலிசியும் பயணப்பாலிசியும் சேர்ந்த கூட்டுப் பாலிசியே கலப்புப் பாலிசி. காப்பீடு செய்யப்படும் பொருள் ஒரு குறிப்பிட்ட பயணத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலவரைக்கும் காப்பீடு செய்யப்படுவது கலப்புப் பாலிசியாகும்.

5. மிதக்கும் பாலிசி (Floating Policy): இப் பாலிசி முதலில் காப்பீட்டின் பொது நிபந்தனைகளுடன் எழுதப்படும். கப்பலின் பெயர் போன்ற மற்றத் தகவல்களைப் பின்னர் வெளியிடும். காப்பீடு செய்யப்பட்ட எந்தப் பயணத்திற்கும் எந்தத் தொகைக்கும் அதன் எல்லையில் உள்ள எந்தத் துறைமுகத்தில் உள்ள கப்பல்களில் ஏற்றும் சரக்கினை அது குறிக்கப்படும். விபத்து ஏற்படும்போது சரக்கு அல்லது மற்றப் பொருள்களின் விவரங்களை அவ்வப்பொழுது அது குறிக்கும்.

6. மதிப்பிடாப் பாலிசி (Unvalued or Open policy): இது மிதக்கும் பாலிசியிலிருந்து வேறுபடும். இதை திறந்த பாலிசி என்றும் கூறலாம். காப்பீடு செய்யப்படும் பொருளின் மதிப்பை ஒப்பந்தம் ஏற்படும்பொழுது பாலிசியில் குறிப்பிடுவதில்லை. அல்லது எவ்வளவு என்று நிலையாகக் குறிப்பிடுவதில்லை. காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு ஏற்ப நட்டமேற்படும்போது நட்ட ஈடு நிருணயிக்கப்படுகிறது.

7. வேஜர் அல்லது ஹானர் (Waser or Honour Policy): காப்பீடு செய்யத்தக்க நலன் நிரூபிக்கும் பாலிசி அல்லது அந் நலன் உள்ளது அல்லது இல்லாதது என்ற சொற்கள் உடைய

பாலிசிகளை வேஜர் அல்லது ஹானர் பாலிசி என்கிறோம். இத்தகைய பாலிசிகளில் காப்பீடு பெறுபவர் காப்பீடு செய்யப் பெறும் பொருள்மீது நலனில்லாமல் இருப்பார். நீதிமன்றத் திற்குச் சென்றால் இத்தகையப் பாலிசி செல்லாமல் போய்விடும். என்றாலும் நடைமுறையில் இப் பாலிசிகள் பழக்கத்தில் உள்ளன. ஒப்புறுதியாளர்களால் இவை எப்பொழுதும் மதிக்கப்படு கின்றன.

கடல் காப்பீட்டின் ஒப்பந்தத்தில் காணப்படும் நம்புறுதி : (Warranties in a Contract of Marine Insurance)

ஒப்பந்த நபர்கள் அவசியம் பெற்றிருக்க வேண்டிய நிபந்தனைகளில் ஒன்று நம்புறுதி அல்லது உத்தரவாதம். சரக்கு விற்பனைச் சட்டத்தில் எப்பொருளில் அல்லது எந்த நிபந்தனையில் நம்புறுதி வந்ததோ அதே பொருளில் காப்பீட்டு ஒப்பந்தத்திலும் இருக்கவேண்டும். நம்புறுதியில்லாமல் ஒப்பந்தம் ரத்தாகி விடும். நம்புறுதியில்லாத பாலிசி அல்லாததாகவும் செயலாற்ற முடியாததாகவும் ஆகிவிடும். எனவே நம்புறுதி, காப்பீட்டு ஒப்பந்தங்களுக்கு மிகவும் அவசியம்.

நம்புறுதி, வெளிப்படையான நம்புறுதி அல்லது தொக்கிய நிபந்தனை ஆக இரண்டு வகைப்படும். வெளிப்படையான நம்புறுதி நபர்களின் ஒப்புதல்படி ஒப்பந்தத்தில் எழுத்துமூலத்தில் காணப்படும் நிபந்தனையாகும். பாலிசிகளில் 'நம்புறுதி செய்யப்பட்டது (Warranted) என்ற சொற்களுடன், காப்பீடு பெறுபவர்களுக்குச் சில கடமைகளையும் இது தந்துள்ளது. பாலிசியின் கண்ணுள்ள இதர நிபந்தனைகளுடன் இந் நம்புறுதியும் சேர்க்கப்படுகிறது. உறுதிமொழியுடன் கூடிய அறிக்கையும் நம்புறுதியாகும். கப்பலின் நடுநிலைமை, குறிப்பிட்டபடி கப்பல் விடுதல் போன்றவை வெளிப்படையான நம்புறுதியாகும். கடல் காப்பீட்டுப் பாலிசியின் முக்கிய சரத்தில் (Main clause) நம்புறுதி விளக்கப்படுகிறது.

காப்பீடு அளிப்பவரே நம்புறுதி முறிவை ஒதுக்கிவிடும் போதும், மாறியச் சூழ்நிலையால் நம்புறுதியைப் பற்றமுடியாத நிலையிலும், முக்கியச் சட்டத்தில் ஏற்படும் இணைப்புச் சட்டங்களால் நம்புறுதி சட்ட விரோதமாக ஆகிவிடும் போதும் நம்புறுதி நிபந்தனைகள் தளர்த்தப்படலாம்.

எழுத்துமூல உடன்பாட்டால் வெளிப்பட்டாலொழிய, காப்பீட்டு ஒப்பந்தங்களின் சட்டத்தின்படி தொக்கித் திகழ்வது

தான் தொக்கிய நம்புறுதியாகும். கடல் பயணத்திற்கேற்ப உள்ள கப்பல், குறிப்பிட்ட வழி அல்லது பாதையிலிருந்து மாறாமை, பயணத்தின் செல்லுபடித்தன்மை போன்றவை தொக்கிய நம்புறுதிச் சான்றாகும்.

கடல் பயணத்தகுதி (Sea Worthiness) : கடற் பயணம் ஆரம்பிக்கும்போதும், பல நிலைகள் உள்ள பயணத்தில் ஒவ் வொரு நிலையிலும் கப்பல் பயணத்திற்குத் தகுதியாக இருக்க வேண்டும். கப்பலின் அமைப்பு அல்லது கட்டுமானம், இயங்கும் நிலையிலுள்ள இயந்திரம், மாலுமிகளின் திறமை, கப்பல் தலைவரின் திறமை மற்றபடி தேவையான பொருள்கள் வைத்திருத்தல் போன்றவைகள் பயணத்தகுதி மூலம் சொல்லப் படுகின்றன. மேற் கூறியவாறு தேவையான பொருள்களுடன் இல்லாத கப்பல் பயணத்தகுதியுடையதன்று. ஏற்றுக்கொண்ட விதத்தில் பயணத்திற்கேற்றது இத்தகைய கப்பல் என்பதை பயணத்தகுதி கூறாமல் கூறுகிறது. கப்பலின் உரிமையாளர் களிடமிருந்து இத் தகுதியின்மையால் ஏற்பட்ட நட்டத்திற்கு நட்டஈடு சரக்கு அனுப்புபவர்களால் கோரப்படும். பயணம் துவக்குவதற்கு முன்பு இத்தகைய தகுதியின்மை கண்டுபிடிக்கப் பட்டால் சரக்கு அனுப்புபவர்கள் தங்கள் ஒப்பந்தத்தை மீறி ரத்துச் செய்வார்கள்.

வழிமாறாமை (Non-Deviation) : வழக்கமாகச் செல்லக் கூடிய அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதையிலிருந்து கப்பல் மாறிப் பயணம் செய்யக்கூடாது. தொடு-நில் (Touch and Stay) என்று சரத்து ஒவ்வொரு பாலிசியிலும் உண்டு. அச் சரத்தில் கப்பல் நிற்கவேண்டிய துறைமுகம் நிற்கவேண்டிய கால அளவு போன்றவை குறிக்கப்படும். பாலிசியில் இச் சரத்து இல்லை யென்றால், கப்பல் எந்தத் துறைமுகத்திற்கும் செல்லலாம். ஆனால், வழக்கமாகச் செல்லும் துறைமுகங்களுக்கு வழக்கமான வழியில்தான் செல்லவேண்டும். மேலும், செல்லவேண்டிய பாதை வெளிப்படையாகவே சொல் லப்பட்டிருப்பதால் வழக்க மான வழியில் வழக்கமான கால அளவிற்கு ஒவ்வொரு துறை முகத்திலும் கப்பல் நின்றுபோக வேண்டும்.

வழிமாறுதல் என்பது கப்பல் வேறு வழியில் செல்வதையும், பாலிசியில் குறிக்கப்படாத துறைமுகத்தில் தங்குவதையும், குறிப்பிட்ட காலத்திற்குமேல் தங்குவதும் ஆகும். வழி, துறை முகம், தங்கும் காலம் போன்றவைகள்பற்றிப் பாலிசி ஒன்றும்

கூறாவிட்டால் ஒரு கப்பல் ஒரு வழியைப் பின்பற்றி, துறை முகங்களை அடைந்து, வழக்கத்தைவிட அதிக நேரம் தங்கலாம். பயணத்தைத் துவக்குவதற்காகும் நியாமற்ற காலதாமதம் பாலிசியில் குறிப்பிட்டிருக்கும்படி இல்லாமல், பலவிதத் துறை முகங்களை அடைதல், பயணத்தின் நோக்கத்திற்கு அப்பாற் பட்ட இடங்களுக்குச் செல்லுதல் போன்றவை அனைத்தும் மாறும் வழிகளைப் பின்பற்றியதாகும். விபத்து ஏற்பட்டதற்குப் பின் போகும் இடத்தை மாற்றிச் செல்வதுவும் பயணமாற்றத்தைக் குறிக்கும் ஆனால், அது வழி மாறும் நிலைமையன்று.

இவ்வாறு வழிமாறும்போது காப்பீட்டுக் கம்பெனி நட்டஈடு தராது. ஆனால் சட்டப்படி தளர்த்தவேண்டிய நிபந்தனை யிருந்தால் நட்ட ஈடு உண்டு. நட்டமேற்படுவதற்கு முன்னர் கப்பல் தன் வழியைத் திரும்பப் பிடித்துக்கொண்டுவிட்டது என்றாலும், வழிமாறியதால் விபத்து குறைந்தது என்றாலும், சொத்துகளைக் காப்பதற்காக வழி மாறப்பட்டது என்றாலும் வழி மாறியது நியாயமானதாக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. இக் கருத்து ஸ்காரமங்கா எ. ஸ்டாம்பு (Scaramanga *vs.* Stamp) என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது.

ஒரு கப்பல் குறிப்பிடப்பட்ட வழியிலிருந்து கீழ்க்காணும் நிலைகளில் மாறிச் செல்லலாம்.

1. கப்பல் தலைவரின் சக்திக்கு அப்பால் உள்ள சூழ்நிலை யில் அதாவது, வழக்கமான வழியைப் பின்பற்றினால் கப்பலுக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலையில் அவர் வழியை மாற்றிச் செல்லலாம். உதாரணமாகச் சாதக மில்லா தட்பவெப்ப நிலை. இயற்கை அல்லது செயற்கைச் சக்தி போன்றவைகளால் அச் சூழ்நிலை ஏற்படுகிறது.

2. கப்பலைப் பயணத் தகுதியாக்க அருகில் உள்ள துறை முகங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படும்போதும் அல்லது ஏனைய நம்புறுதியை நிறைவேற்றும்போதும் வழியை மாற்றிச் செல்லலாம்.

3. கடற்கொள்ளைக்காரர், நாட்டின் பகைவர் போன்றவர் களால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்த்திட வழியை மாற்றிடலாம்.

4. ஒருவரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது கப்பல் தளத்தில் மருத்துவ வசதி யில்லையென்றால் வழியை மாற்றிச் செல்லலாம்.

5. மற்றக் கப்பலிலுள்ள ஒருவரின் உயிர் ஆபத்தான நிலையில் உள்ளபோதும், உடைந்த கப்பலில் உயிருக்குப் போராடும் நபர்களின் உயிரைக் காத்திடவும் வழியை மாற்றிடலாம்.

6. கப்பல் கலகத்திற்கெதிராகக் காப்பீடு செய்யப்பட்ட போது அக் கலகம் விளைந்தாலும் வழியை மாற்றிடலாம்.

7. பாலிசியே வழி மாற்றத்தை வெளிப்படையாகவும் தனிப்படையாகவும் ஏற்றுக்கொண்டுள்ள போதும் மாற்றிடலாம்.

சட்டபூர்வமான பயணம் (Legality of Voyage)

காப்பீடு பெறுபவர் செய்யும் முயற்சி அல்லது தொழில் சட்டபூர்வமானதாக இருக்கவேண்டுமென்பது தொக்கிய நம்புறுதியாகும். அவர் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் இருக்குமானால் அவர் செய்யும் தொழில் சட்டபூர்வமானதாக இருக்கவேண்டும். நட்புநாட்டிற்கு மட்டும் கப்பல் செல்வதாக இருக்கக் கூடாது. ஆனால், சட்டபூர்வமான சரக்கை அது ஏற்றிக்கொண்டு போக வேண்டும். கள்ளக் கடத்தல் பொருள்களை ஒரு நாட்டில் இறக்குமதி செய்ய அந் நாட்டுச் சட்டத்தில் தடை செய்யப்பட்டிருந்தால் அப் பொருள்களை இக் கப்பல் ஏற்றிச் செல்லக் கூடாது.

கடல் காப்பீட்டுப் பாலிசியின் முக்கியச் சரத்துகள் :

ஒரு கடல் காப்பீட்டுப் பாலிசியில் கீழ்க்காண்பவை முக்கியச் சரத்துகளாக இருக்க வேண்டும். 1. காப்பீடு பெறுபவரின் பெயர் அல்லது அவருடைய முகவரின் பெயர் 2. காப்பீடு செய்யப்படும் பொருள் 3. காப்பீடு செய்யப்படும் விபத்தின் தன்மை 4. காப்பீட்டின் காலவரை அல்லது பயண விவரம் அல்லது மேற்சொன்ன இரண்டும் 5. காப்பீட்டுத் தொகை 6. காப்பீடு அளிப்பவரின் அல்லது கம்பெனியின் பெயர்.

மேற்கூறியவைகளோடு மற்றச் சரத்துகளையும் நபர்களின் ஒப்புதல் பேரில் பாலிசியில் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால்,

அவ்வாறு சேர்த்துக் கொள்வதின் நோக்கம் காப்பீட்டின் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்காகவோ அல்லது குறைப்பதற் காகவோ இருக்கவேண்டும். மேலும், நட்டமேற்படும்போது அவர்களின் உரிமைகளையும் பொறுப்புகளையும் உறுதி செய்வ தற்காகவும் சேர்த்துக் கொள்ளலாம். அவ்வாறு இணைத்துக் கொள்ளப்படும் சரத்துகள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. குறிப்பிட்ட சராசரியிலிருந்து மீள்கின்ற (Free from Particular Average or F.P.A) அல்லது எல்லாச் சராசரியி லிருந்தும் மீள்கின்ற (Free from All Average or F.A.A.) சரத்து என்று இச் சரத்திற்குப் பெயர். இச் சரத்தின்படி காப்பீடு அளிப் பவர் குறிப்பிட்ட சராசரியிலிருந்தும், எல்லாச் சராசரியிலிருந்தும், ஏனைய பொறுப்பிலிருந்தும் விதி விலக்கு அளிக்கப்படுகிறார்.

2. இன்ச்மாரி (Inchmaree) **சரத்து** : இச் சரத்து, கடல் காப்பீட்டுப் பாலிசியை எல்லா விபத்துகளும் அடங்கிய பாலிசி யாக மாற்றுகிறது. இதில் கடல் விபத்துகளைத் தவிர தீ, கொள்ளை, கடற் கொள்ளை போன்ற விபத்துகளுக்காகவும் காப்பீடு செய்யலாம். கடல் விபத்தால் ஏற்படாத நட்டங்களுக்கும் காப்பீட்டுக் கம்பெனி பொறுப்பாளியாகலாம். இன்ச்மாரி என்பது ஒரு கப்பலின் பெயர். அப் பெயர் இச் சரத்திற்கு வைத்தாகி விட்டது. தற்சமயம் வழங்கப்படும் எல்லாக் கடல் காப்பீட்டுப் பாலிசிகளிலும் இச் சரத்து அடங்கியிருக்கும்.

3. பொறுப்புக் குறைக்கும் சரத்து (Running Down Clause) : ஒரு கப்பலின் சொந்தக்காரர், அவர் கப்பல் வேறு ஒருவரின் கப்பல்மீது கவனக் குறைவால் மோதிவிட்டபொழுது அக் கப்பலின் உரிமையாளர் கோரும் நட்டஈட்டை அவருக்கு இச் சரத்துக் குறைப்பதால் இப் பெயர் வந்தது. முன்சொன்னவர் மற்றவர் கப்பலுக்கு ஏற்படும் நட்டத்தையும் சேர்த்துக் காப்பீட்டுக் கம்பெனியிடம் ஈட்டுத்தொகை கேட்பார்.

4. வழக்கும் உழைப்பும் உள்ள சரத்து (Sue and Labour Clause): ஒரு விபத்து ஏற்பட்டவுடனே ஏற்படும் நட்டத்தைக் குறைக்கும்பொருட்டுக் காப்பீடு பெறுபவர் மேற்கொள்ளும் செயலை இதுகுறிக்கிறது. இவ்வாறு நட்டக் குறைப்பாகச் செல வழிக்கும் செலவையும் நட்டஈட்டையும் சேர்த்து அவர் காப்பீட்டுக் கம்பெனியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஆனால், ஆபத்து ஏற்படாமல் தடுத்த செலவை இச் சரத்தின் கீழ்ப் பெறமுடியாது.

5. அமைப்புமுறைச் சரத்து (Memorandum Clause) : மேற் குறிப்பிட்ட சராசரி நட்டஈட்டின் பொறுப்பை இச் சரத்து வரை யறுக்கின்றது. கப்பல் தரை தட்டினதும் காப்பீட்டுக் கம்பெனியின் பொறுப்பு முழுவதும், அல்லது ஒரு விகிதத்திலும் குறைக்கப்படும். சராசரிப் பொறுப்பிலிருந்து என்.பி. தான்யம் (N.B. Corn), மீன், பழம், மாவு, விதைகள் போன்றவை நம்புறுதி செய்யப்படு கின்றன. கப்பல் தரை தட்டினதும் சர்க்கரை, புகையிலை, தோல்கள் போன்றவை 5 பவுண்டு பர்சென்ட்டு சராசரிப் பொறுப் பிலிருந்து நம்புறுதி அளிக்கப்படுகின்றன என்று இச் சரத்துக் கூறுகிறது.

6. கப்பலில் சரக்கேற்ற இறக்கவேண்டிய நாள் (Lay Days) : ஒவ்வொரு பாலிசியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் எத்தனை நாள் வேண்டும் என்பதை உடன்பாட்டின்மீது குறிப்பிடப்பட வேண்டும். உடன்பாடில்லையென்றால், நியாயமான நாள்கள் சரக்கேற்றவும் இறக்கவும் அனுமதிக்கப்பட வேண்டும். கப்பல் வந்தவுடனும் சரக்கு அனுப்பியவருக்கு அறிவிக்கை விட்ட வுடனும் இந் நாள்களைக் கணக்கிட வேண்டும்.

7. தாமதக் கட்டணம் (Demurrage) : முன் சரத்தில் குறிப் பிடப்பட்டுள்ள காலத்திற்குள் சரக்குகளை ஏற்றாமலும் இறக்கா மலும் இருந்தால் காப்பீடு பெறுபவர் தனிக் கட்டணம் செலுத்த வேண்டிவரும். அக் கட்டணத்திற்குத் தாமதக் கட்டணம் என்று பெயர்.

8. விலக்களிக்கப்பட்ட விபத்துச் சரத்து (Excepted Perils Clause) : இச் சரத்துக் குறிக்கப்பட்டுள்ள பாலிசியை.....வழங்கி யுள்ள கம்பெனி அதில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக நட்டமேற்கும் பொறுப்பிலிருந்து மீள்கிறது. விலக்களிக்கப்பட்ட விபத்திலிருந்து ஏற்படும் நட்டஈட்டைக் கப்பல் கம்பெனி ஏற்காது. ஆனால், அவ் விபத்து அவருடைய வேலையாள்களின் புறக்கணிப்பால் ஏற்படுமானால் அவர் நட்டஈடு தரவேண்டும். பயணத் தகுதியில்லாமல் கப்பல் செலுத்தப்பட்டு அதனால் ஏற்படும் நட்டத்திற்குக் கப்பல் உரிமையாளர் பொறுப்பாளி யாவார். பெரும்பாலான விலக்கு அளிக்கப்பட்ட விபத்துகளால் ஏற்படும் நட்டத்தைக் கடல் காப்பீட்டுப் பாலிசி ஏற்றுப் பாதுகாப் பளிக்கிறது.எவ்வித விபத்துகளின் நட்டத்தை ஏற்கக் காப்பீட்டுக் கம்பெனி மறுக்கின்றதோ அவைகளை விலக்கப்பட்ட விபத்து கள் என்கிறோம். ஒரு காப்பீட்டுப் பாலிசியிலிருந்து இத்தகைய நட்டவச்சங்கள் வெளிப்படையாக வெளியேற்றப்படுகின்றன.

9. கப்பற்கலகம் (Barratry) : கப்பல் தலைவரோ அல்லது மாலுமிகளோ தங்கள் கடமைகளுக்குப் புறம்பாக வேண்டு மென்றே தவறான செயலில் ஈடுபட்டு, கலகங்கள் செய்வதை இது குறிக்கிறது. சரக்குகளுக்கும் கப்பல் உரிமையாளருக்கும் இதனால் நட்டமேற்படும். இந் நட்டத்தையும் ஒரு பாலிசி எடுத்துப் பாதுகாப்பு தேடலாம். கப்பலை வேண்டுமென்றே கரைக்கு அருகே ஓட்டிச் செல்லல் அல்லது அதற்கு நெருப்பு வைத்தல் போன்றவைகள் அதற்கு உதாரணங்களாகும்.

10. எடுத்தல், பறிமுதல் செய்தல் போன்றவைகளிலிருந்து மீளும் சரத்து (F C. and S. Clause is Free of Capture and Seizure Clause) இச் சரத்து கப்பல்கள் பிடிபட்டு எடுக்கப்படும், பறிமுதல் செய்யப்பட்டு ஏற்படும் நட்டத்திலிருந்து கப்பல் உரிமையாளரைக் காப்பாற்றுவதற்குச் சிறப்பாகவே பாலிசியில் எழுதப் பட்டுள்ளதாகும்.

கடல் நட்டங்கள் (Marine Losses)

கடல் நட்டங்கள் மொத்த நட்டம் (Total Loss), அரைகுறை நட்டம் (Partial Loss) என்று இருவகைப்படும். மேலும் மொத்த நட்டத்தை நிகழ்வுறு நட்டம் (Actual Loss) என்றும் ஆக்க சார்பான நட்டம் (Constructive Loss) என்றும் பிரிக்கலாம். அதே போல் அரைகுறை நட்டத்தைப் பொதுச் சராசரி நட்டம் (General Average Loss) என்றும் தனிச் சராசரி நட்டம் (Particular Average Loss)) என்றும் பிரிக்கலாம்.

மொத்த நட்டம்—நிகழ்வுறு மொத்த நட்டம்

காப்பீடு செய்யப்படும் பொருள் தொலைந்துவிடுவது அல்லது அழிந்துவிடுவது அல்லது அடியோடு அழிக்கப்படுவது என்பதைத்தான் நிகழ்வுறு மொத்த நட்டம் என்கிறோம். முதலில் இருந்த தன்மையோடு பொருள்கள் இருப்பதில்லை. காப்பீடு செய்யப்படும் பொருள் முற்றிலும் மாறிவிடுவது. கீழ்க்காணும் பலவழிகளில் இந் நட்டம் தோன்றும்.

1. காப்பீடு செய்யப்பட்ட பொருள் முழுதும் சேதமடைந்தாலும் அல்லது அழிந்துவிட்டாலும்,

2. காப்பீடு செய்யப்பட்ட பொருள் இருந்து, அதன் தன்மை முற்றிலும் மாறிவிட்டாலும். உதாரணமாக சர்க்கரை தண்ணீரில் கரைந்து விடுவதுபோல் மாறி விட்டாலும்,

3. கப்பல் கடற்கொள்ளைக்காரர்களாலும் அல்லது கப்பல் எந் நாட்டைச் சார்ந்ததோ அந் நாட்டு எதிரியின் செயல்களால் கைப்பற்றிவிட்டபோதும்.

4. கப்பல் தொலைந்து லாயிட்ஸ் பதிவேட்டில் உள்ளபடி அறிவித்தபோதும்—உண்மையான மொத்த நட்டம் தோன்றுகிறது.

ஆக்க சார்பான மொத்த நட்டம்

பாதுகாப்பு பெறுபவரைப் பொறுத்த மட்டில் பாதுகாப்பு செய்யப்பட்ட பொருள் உண்மையிலேயே இழக்கப்படாவிட்டாலும், அஃது இழந்து விடப்பட்டதைப்போல் கருதுவது தான் இந் நட்டம். நிகழ்வுறு நட்டம் ஏற்படக்கூடிய அளவிற்கு அது சேதமடைந்துவிட்டால் அதன் உரிமையாளர் அதை விட்டு விடுவதுதான் நியாயமாகத் தோன்றும். உதாரணமாக, ஒரு கப்பல் அழிந்துவிடும் பொருளன்று. ஆனால் அதைப் பழுது பார்த்துப் பழைய நிலைக்குக் கொணர ஆகும் செலவு கப்பலின் மதிப்பிற்குமேல் இருக்கும். மேலும், இவ்வளவு செலவாகியும் கப்பல் பழைய நிலைக்கு வந்தால்போதும். ஆனால், அதைக் காக்கும் பொறுப்பில் விபத்து ஏற்பட்டு இறுதியில் அதை இழக்கவே நேரிடுகிறது. மேற்கூறியவற்றை ஒரு கப்பல் உரிமையாளர் ஆக்க சார்பான நட்டம் என்று கருதி மொத்த நட்டத்திற்காகக் காப்பீட்டுக் கம்பெனியிடம் நட்டஈடு கோருகிறார். எனவே, இந் நிலையில் காப்பீடு செய்யப்பட்ட பொருள் உண்மையிலேயே அழிந்துவிடாவிட்டாலும், அதனுடைய உண்மையான மொத்த நட்டம் தவிர்க்க முடியாதது என்று எண்ணும்போதும் கைவிடப்படுகிறது. அல்லது சேதமடையும் போது அதைப் பழைய நிலைக்குக் கொணர்வதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு ஆகும் செலவு நட்டஈடு கோரும் அளவிற்கு அல்லது அதைவிட அதிகமாகும்போதும்கைவிடப்படுகிறது.

எடுத்துக்காட்டாக ஜே. மௌல் என்பவர் மோஸ் எ. ஸ்மித் (J. Moss *vs.* Smith) என்ற வழக்கில் ஆக்க சார்பான மொத்த நட்டத்தின் தத்துவத்தை இவ்வாறு விளக்குகிறார். ஒருவர் ஆழமான தண்ணீரில் ஒரு ஷில்லிங்கைத் தொலைத்துவிட்டார். ஆனால் அதை எடுத்துவிடலாம். அதை எடுப்பதற்கு இரண்டு ஷில்லிங் செலவாகும். முட்டாள்தனமாக அதை யாரும் அவ்வளவு செலவழித்து எடுக்கக்கூடாது. எனவே, இந் நிலையில் தொலைந்துபோன ஒரு ஷில்லிங்கை, கைவிடுவதுதான் நல்லது. தொலைந்துபோன அந்த ஒரு ஷில்லிங்கின் நட்டத்தைத்தான் ஆக்க சார்பாக மொத்த நட்டம் என்கிறோம்.

கைவிடப்படல் அறிவிக்கை (Notice of Abandonment)

ஆக்க சார்பான மொத்த நட்டத்தில் காப்பீடு பெறுபவர் காப்பீடு அளிப்பவருக்குக் கைவிடப்பட்ட செய்தியை ஓர் அறிவிக்கை மூலம் தெரியப்படுத்தவேண்டும். காப்பீடு செய்யப் பட்ட பொருள் மீதுள்ள அக்கறையை நிபந்தனையில்லாமல் விட்டுவிட வேண்டும். இவ் வறிக்கை வாய் மூலமாகவோ எழுத்து மூலமாகவோ விடலாம். இது கவனமுடன் நியாயமான காலத் திற்குள் விரைவில் தரவேண்டும். அறிவிக்கை முழுவதும் நிபந் தனையில்லாமல் இருக்கவேண்டும். இவ் வறிவிக்கை கொடுத் தால்தான் அல்லது அறிவிக்கை வேண்டாமென்று காப்பீடு அளிப் பவர் விட்டுவிட்டால்தான் இது மொத்த நட்டமாகக் கருதப்படும். இல்லாவிடில் அரைகுறை நட்டமாகத்தான் கருதப்படும். காப்பீடு செய்யப்பட்ட பொருளின்மீதுள்ள உரிமை, பாத்தியதை, அக்கறை எல்லாம் துறந்து காப்பீட்டுக் கம்பெனிக்கு அனுகூலமாக காப்பீடு பெறுபவர் தம் உரிமையை மாற்றம் செய்கிறார். இது விபத்து நடந்த தேதிக்குப் பின்னோக்கிச் செல்லும். காப்பீட்டுக் கம்பெனி பாலிசிதாரர் நிலையிலிருந்து காப்பீடு செய்யப்பட்ட பொருளால் பின்னால் நற்பலன் கிட்டினாலும் அதைப் பெறும் உரிமையும் உள்ளது.

இவ்வாறு தகுந்த முறையில் கொடுக்கப்படும் அறிவிக்கையைக் காப்பீட்டுக் கம்பெனி மறுத்தால் காப்பீடு பெறுவோருக்கு ஒன்றும் நட்டமில்லை. அவர் நலன் பாதிக்கப்பட மாட்டாது. அறிவிக்கையை ஏற்றுக்கொண்டால் நட்டமேற்கும் பொறுப்பிற்கு முடிந்த நிரூபணமாகும். ஆக்க சார்பான மொத்த நட்டத்தின் அடிப்படையில் காப்பீட்டுக் கம்பெனி நட்டஈடு தரவேண்டும். ஆனால், கம்பெனி அறிவிக்கையை ஏற்றுக்கொண்டது வெளிப் படையாக அல்லது தொக்கிய நிலையாக இருக்கவேண்டும். அறிவிக்கை வந்து கம்பெனி மௌனமாக இருப்பதை ஏற்பு என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. அவ்வாறு அறிவிக்கையைக் கம்பெனி ஏற்றுக்கொண்டுவிட்டால், கைவிடல் மாற்றமுடியாத தாக ஆகிவிடும். மொத்த நட்டத்தைக் கம்பெனி செலுத்திவிட்ட பின்னர், காப்பீடு செய்யப்பட்டப் பொருள் திரும்பக் கிடைத்து விட்டால், அது காப்பீட்டுக் கம்பெனியைச் சாரும்.

அரைகுறை நட்டங்கள் (Partial Losses)

எந்த விபத்திற்கெதிராகக் காப்பீடு செய்யப்பட்டுள்ளதோ அவ் விபத்தால் காப்பீடு செய்யப்பட்ட பொருள் அடையும் நட்டத்திற்கு அரைகுறை நட்டம் என்று பெயர். இது பொதுச் சராசரி நட்டமாகாது. பொதுச் சராசரிச் செலவு, மீட்புச் செலவு

போன்றவை தவிர, பொருளைப் பாதுகாக்கச் செலவழிக்கப்படும் செலவை தனிக் கட்டணம் என்று சொல்லலாம். இத் தனிக் கட்டணம் தனிச் சராசரி நட்டத்தில் சேர்க்கப்படமாட்டாது. விபத்தால் தனிப் பொருள் நட்டமடைந்தாலும், அபாயம் வரக் கூடிய தருணம் கப்பலில் இருந்து கடலில் போடப்படும் சில பொருள்களால் ஏற்படும் நட்டமும் தனிச் சராசரி நட்டத்திற்குச் சான்றுகளாகும்.

இவ்விதம் ஏற்படும் நட்டம் முழுவதும் காப்பீடு செய்யப்பட்ட பொருள்மீது அக்கறை கொண்டுள்ளோரையே சாரும். காப்பீடு பெறுபவர் மற்ற நபர்களிடமிருந்து பங்களிப்பு எதிர்பார்க்க முடியாது. அவரே எல்லா நட்டத்தையும் ஏற்கவேண்டும். பொருள் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும் காப்பீடு செய்யப் பட்டுள்ள விபத்தினால் நட்டமேற்படலாம். நட்டம் எதிர்பாராத தாக இருந்தால்தான் காப்பீட்டுக் கம்பெனி பொறுப்பாளியாகும்.

கப்பலின்மீது தனிச் சராசரி (Particular Average on Ship)

தனிச் சராசரி நட்டத்தில் கப்பல் பழுதுபார்க்கும் செலவு நியாயமான நட்டஈடாகக் கருதப்படும். ஆனால், ஏற்படும் விபத்தைப் பொறுத்தமட்டில் காப்பீட்டுக் கம்பெனி பாலிசித் தொகைக்கு மட்டும்தான் பொறுப்பாளியாகும். கப்பலுக்கு அடுத்து அடுத்து ஏற்படும் விபத்துகளால் ஏற்படும் நட்டத்தைக் கம்பெனி அப்போதப்போது அளிக்கும் பாலிசி தொகையைவிட அந் நட்டங்களில் மொத்த நட்டத்தொகை அதிகமாக இருந்தாலும் கம்பெனி செலுத்தியேயாக வேண்டும்.

எடுத்துக்காட்டு : ஒரு கப்பல் காப்பீட்டுக் கம்பெனியிடம் ரூ. 100000-க்கு காப்பீடு செய்யப்பட்டது. கப்பலுக்கு இரண்டு அடுத்தடுத்த குறைந்த நட்டங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு முறையும் பழுதுபார்த்த செலவு ரூ. 20000 ஆயிற்று. பின்னால் கப்பல் முழுவதும் இழக்கப்பட்டது. எனவே காப்பீட்டுக் கம்பெனி தனி அரைகுறை நட்டமான ரூ. 40,00-க்கும் மொத்த நட்டத் திற்கும் பொறுப்பாளியாகும். ஒரு கப்பலுக்குத் தனிச் சராசரி நட்டம் ஏற்படுகிறது. அப்போதே அதைப் பழுதுபார்ப்பதற்கு முன் கப்பல் முழுவதும் நட்டமடைகிறது. இந் நிலையில் காப்பீட்டுக் கம்பெனி மொத்த நட்டத்திற்குத்தான் பொறுப் பேற்கும். காரணம், தனிச் சராசரி நட்டம் உண்மையிலேயே ஏற்படவில்லை. வேறு ஒரு நிலையில் சராசரி நட்டம் ஏற்பட்டு அப் பாலிசி முடியும்வரை பழுதுபார்க்காமலிருந்தார்கள். பின்னர் ஒரு புதிய பாலிசியின்கீழ்க் கப்பல் முழுவதும் நட்டமடைந்து

விட்டது. இத் தருணத்தில் காப்பீடு பெறுபவர் தனிச் சராசரி நட்டத்தைப் பழைய காப்பீட்டுக் கம்பெனியிடமிருந்தும் மொத்த நட்டத்தைப் புதிய காப்பீட்டுக் கம்பெனியிடமிருந்தும் பெறலாம். எனவே, தனிச் சராசரி நட்டம் என்பது காப்பீடு பெறுபவருக்கு முழு இலாபமாகக் கருதப்படுகிறது (Lidget *vs.* Secretan)

சத்தத்தின்மேல் உள்ள தனிச் சராசரி (Particular Average on Freight)

சத்தம் முன்கூட்டிச் செலுத்தப்படாமல் பொருள்கள் பத்திரமாகப் போய்ச் சேருமிடம் சேர்ந்தப் பின்னர் பெறுவதாக உள்ள நிலையில் கப்பல் கம்பெனி அதை முழுவதும் பெறாமல் அல்லது ஒரு பகுதியைப் பெறாமல் இருந்தால், இந் நட்டவச்சத்தையும் ஒப்பீடு செய்யலாம். சத்தம் பெறாமல் இருந்த காரணம் வழியில் பொருள்கள் சேதமடைந்ததாக இருக்கவேண்டும். இந் நிலையில் காப்பீடு பெறும் கப்பல் கம்பெனி பொருள் சேதமடைந்தால் ஏற்படும் சத்த நட்டத்தைக் காப்பீட்டுக் கம்பெனியிடமிருந்து பெறும்.

கப்பல் சரக்கின் மேலுள்ள தனிச் சராசரி (Particular Average on Cargo)

இதைத் தீர்மானம் செய்திட சரக்கின் உண்மையான மதிப்பு, சேதத்தின் உண்மையான மதிப்பு, சரக்குகளின்மீது காப்பீடு செய்யப்பட்ட உண்மையான தொகை போன்றவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். பொருளின் மதிப்பு காப்பீடு செய்யப்பட்ட மதிப்பைவிட அதிகமாக இருந்தால், அவை இரண்டிற்கும் உள்ள விகிதத்தின்படி காப்பீட்டுக் கம்பெனி ஏற்படும் நட்டத்திற்குப் பொறுப்பாளியாகும். உதாரணமாக ஒரு துணிக்கட்டு ரூ. 100-க்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அது வழியில் சேதமடைந்து ரூ. 65-க்கு விற்கப்படும். அத் துணிக் கட்டுப் பத்திரமாகப் போய்ச் சேர்ந்திருந்தால் ரூ. 130-க்கு மதிப்பிடலாம். இதில் தனிச் சராசரி, கீழ்க்காணும் விதத்தில் கணக்கிடப்படலாம்.

மொத்த விற்கக்கூடிய விலை ரூ. 130
மொத்தவிற்ற விலை ரூ. 65

நட்டம் ரூ. 65

பாலிசித்தொகை ரூ. 100 மட்டும். விகிதப்படியுள்ள நட்டம்

ரூ. 50 $\left(\frac{65}{130} \times 100\right)$

பொதுச் சராசரி நட்டம் (General Average Loss)

பொதுச் சராசரி சட்டத்தின்கீழ் ஏற்படும் எல்லா நட்டங்களையும் இது குறிக்கும். அசாதாரண துறப்பு ஏற்பட்டாலும், விபத்து ஏற்படும்பொழுது பொருளைப் பாதுகாக்க நியாயமாகத் தானாக முன்வந்து செலவழிக்கும் அசாதாரண செலவையும் இது குறிக்கும். பொதுச் சராசரியின் முக்கியத் தன்மைகளாவன:

1. பொதுவாகச் செய்யும் காரியம் அபாயத்திலிருக்க வேண்டும்.
2. துறப்பு நிகழவேண்டும் அல்லது செலவு ஏற்பட வேண்டும்.
3. துறப்பு உண்மையானதாகவும் ஏற்பட்டதாகவும் இருக்க வேண்டும். பயனற்ற அல்லது கெட்டுப்போன பொருள்களைக் கடலில் எறிந்துவிடல் ஒரு நல்ல துறப்பாகாது.
4. தானாக முன்வந்து அது செய்யப்பட வேண்டும்; எதிர் பாராமல் செய்ததாக இருக்கக்கூடாது.
5. நியாயமாகவும் கவனமுள்ள புத்திசாலித்தனமாகவும் அமைந்து இருக்கவேண்டும்.
6. காப்பீடு செய்யப்பட்டுள்ள பொருள்களின் பத்திரத்திற்காக அவசியம் செய்யவேண்டிய செயலாக அமைந்து இருக்கவேண்டும். அதாவது, உண்மையான அபாயமும் ஆபத்தும் தோன்றியுள்ள சூழ்நிலையில் அவை செய்யப்படவேண்டும்
7. அமைந்து அசாதாரணத் தன்மையுடன் காணப்பட வேண்டும்.
8. காப்பீடு செய்யப்பட்ட பொருளின்மீது அக்கறையுள்ளவரின் தவறான செயலால் அபாயம் ஏற்படக்கூடாது.

பொதுச் சாரசரி நட்டத்தில் எல்லா நபர்களும் கப்பலின் பாதுகாப்பு, கப்பற் சரக்குச் சத்தம் ஆகியவற்றில் அக்கறையுடையவர்களாக இருக்கவேண்டும். மேலும், அவர்கள் யார்க் ஆன்ட்வெர்ப்பு விதிகள், 1924 (York Antwerp Rules of 1924) படி அவர்களின் அக்கறைக்குத் தகுந்தபடி நட்டத்தை ஏற்க வேண்டும். இத்தகைய சராசரி நட்டம் ஏற்படும்பொழுது பொதுக் காரியம் அல்லது முயற்சியில் அக்கறையுள்ள மற்றவர்களிடமிருந்து விகிதாசாரப்படி பங்களிப்பு இந் நட்டத்தை ஏற்பவருக்கு வந்துசேரும். இழந்த தன்பொருள் மதிப்பிற்கு,

இவரும் நட்டஈட்டுப் பங்களிப்புத் தரவேண்டும். அப்பொழுது தான் அந்த நட்டம் சரிக்கட்டப்படும். பொருள்கள் காப்பாற்றப் பட்டுவிட்டதாக அவர் கருதுவார். தங்களுடைய கூலிக்காகக் கப்பலின் பாதுகாப்பை அக்கறையுடன் நோக்கக் கப்பல் ஓட்டிகள் பொதுச் சராசரி நட்டங்களைச் சரிக்கட்டத் தங்களின் கூலியி லிருந்து ஒரு பகுதியைத் தரவேண்டிய அவசியமில்லை.

பொதுச் சராசரி நட்டங்களுக்கு உதராணங்கள்

1. கப்பலையே துறத்தல் (Sacrifice of the Ship) : கப்பலின் பாய்மரம் மற்றப் பாகங்களை வெட்டிவிடுதல், தீப் பிடித்துள்ள போது கப்பலில் துவாரம் செய்து தண்ணீரை உள்ளிடச் செய்து தீயை அணைத்தல் போன்றவைகளால் சில நேரங்களில் கப்பலே மூழ்கிவிடும். எனவே இது கப்பலைத் துறப்பதாகும்.

2. எறிதலால் ஏற்படும் நட்டம் (Loss on account of Jettison): கப்பல் அல்லது கப்பற் சரக்கு ஆகியவைகளைக் காப்பாற்றும் பொருட்டுப் பயணத்தின் நடுவில் கப்பலிருந்து கடலில் கப்பற் சரக்குகளைத் தூக்கி எறிதல்தான் 'எறிதல்' (Jettison) எனப் படும். இத் தருணத்தில் பொதுச் சராசரி நட்டத்தின்கீழ்க் கணக் கிடப்படும் நட்டம், அப் பொருள்கள் போய்ச் சேரவேண்டிய துறைமுகத்தில் சேர்ந்து பொருள்களை எடுக்கும்போதுள்ள மதிப் பாகும்.

3. அசாதாரணச் செலவு (Extraordinary Expenditure) : பொதுச் சராசரி நட்டத்திற்கான கப்பலைப் பழுதுபார்க்கும் செலவு, கப்பற்சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் ஆகும் செலவு ஆகியவைகளை அசாதாரணச் செலவு என்கிறோம்.

4. நிதி திரட்டும் செலவு (Cost of raising Funds) : கப்பல் தலைவனுக்குக் கப்பலைப் பழுதுபார்க்கப் பணம் தேவையாக இருக்கும்பொழுது, அவன் சரக்கின் ஒரு பகுதியை எடுத்து விற்றுவிட்டுத் தன் பழுதுபார்க்கும் செலவைப் பார்த்துக் கொள்வான். அவன் விற்றவிலைக்கும், அதையே வாங்குவதாக இருந்தால் என்ன விலைக்கு வாங்கலாமோ அவ் விலைக்கும் உள்ள நிகர வித்தியாசம்தான் பொதுச் சராசரி நட்டம். புகல் அடையச் சென்ற இடத்தில் சரக்கு இன்னும் அதிக விலைக்கு விற்கப்படுமானால், பொருளின் சொந்தக்காரர் நிகர மதிப்பைப் பெறுவார்.

கப்பல் அடகு பத்திரம் (Bottomry Bonds)

கப்பல் தலைவன் கப்பலையும் கப்பற் சரக்கையும் பிணைய மாக வைத்துக் கடன் வாங்கும்போது எழுதித் தரவேண்டிய

பத்திரத்திற்குக் கப்பல் அடகு பத்திரம் என்று பெயர். கடன் வாங்கப்பட்ட தொகையைத் திரும்பச் செலுத்துவதற்குப் பிணையமாகக் கப்பலும் சரக்கும் அடகு வைக்கப்பட்டுள்ளன. போய்ச் சேரவேண்டிய துறைமுகத்தில் கப்பல் பத்திரமாகச் சென்றடைந்தால்தான் இவ்வாறு கடன் வாங்கப்பட்ட தொகை செலுத்தப்படும்.

கப்பல் சரக்கீட்டுக் கடன் பத்திரம் (Respondentia Bond)

பயணத்தின்போது கப்பல் தலைவன் வாங்கின கடனுக்கு அடைமானமாகச் சரக்குகளை வைத்து எழுதித் தரும் பத்திரத்தைக் கப்பல் சரக்கீட்டுக் கடன்பத்திரம் என்பர். கப்பல் போய்ச் சேரவேண்டிய இடத்தில் போய்ச் சேர்ந்தவுடன் அப் பணம் திரும்பச் செலுத்தப்படும். மிகவும் முக்கியமான அவசியம் ஏற்பட்டால்தான் கப்பல் தலைவன் இப் பத்திரத்தின் மூலம் பணம் வாங்கலாம். உதாரணமாக, கப்பலை எதிர்நோக்கியுள்ள உடனடியான அபாயத்தைத் தவிர்ப்பதற்கும் அல்லது கப்பலைப் பயணத்திற்குத் தகுதியாக்குவதற்கும் இவ்வாறு கடன் வாங்கலாம்.

கீழ்க்காணும் சூழல்களில் கப்பல் தலைவன் ஒரு முகவராகத் தமக்குள்ள தொக்கிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவசியத்திற்காகக் கடன் வாங்கலாம்.

1. நாடிடும் உதவி இல்லாவிட்டால் பயமே ஏமாற்றத்தில் முடிந்துவிடும் நிலையில் உள்ளபோதும்.,
2. சரக்குகளின் சொந்தக்காரர்களுக்குத் தகவல் கொடுக்க முடியாத நிலையில் அவர் ஒப்புதல் பெறமுடியாத நிலையிலும்,
3. வேறு எந்த வகையிலும் பணம் திரட்ட முடியாத நிலையிலும் கப்பல் தலைவன் கடன் வாங்கிடலாம்.

கடல் காப்பீட்டுப் பாலிசியின் உரிமைமாற்றம் (Assignment of Marine Insurance Policy)

வழக்கமாக இப் பாலிசி, பொருளை விற்போர் வாங்குவோருக்கு அல்லது யாருக்குப் பொருள் அனுப்பப்படுகிறதோ அவருக்கு உரிமைமாற்றம் செய்யப்படும். பாலிசியின் பின்னால் மேலெழுதியும் அல்லது உரிமைமாற்றத் தனிப் பத்திரம் எழுதிக் கொடுத்தும், மாற்றம் செய்யும் விருப்பத்துடன் வெறுமனே சேர்ப்பித்தும் அல்லது மற்றெந்த வாடிக்கையான முறையிலும் உரிமைமாற்றம் செய்யலாம்.

கடல் காப்பீட்டுப் பாலிசி நட்டமேற்படுவதற்கு முன்னால் அல்லது பின்னால் மாற்றப்படலாம். நட்டமேற்படுவதற்குமுன் பொருளின்மீது நலன் கொண்டவருக்கே உரிமைமாற்றம் செய்யலாம். நட்டமேற்பட்டதற்குப் பின்னர் உரிமைமாற்றம் செய்தால் சட்டத்தின்படி உரிமைமாற்றம் செய்தவரின் தனிப்பட்ட உரிமைதான் நட்டஈட்டைப் பொறுத்த வரையிலும் உரிமை மாற்றம் பெறுபவருக்குப் போய்ச் சேரும். இவ் விருநிலைகளிலும் உரிமைமாற்றம் பெறுபவர் ஒப்பந்தத்தில் உள்ள எல்லா நலன்களையும் பெறும் உரிமை பெறுகிறார். ஆனால், இதற்கான நிபந்தனைகளும் உள்ளன :

1. உரிமை மாற்றத்தைத் தடைசெய்யும் எந்தச் சரத்தும் வெளிப்படையாகப் பாலிசியில் இருக்கக்கூடாது.

2. உரிமைமாற்றம் செய்யும்போது காப்பீடு செய்யப்பட்டுள்ள பொருளின்மீது உரிமைமாற்றம் செய்பவருக்கு அக்கறை இருக்கவேண்டும். நட்டமேற்பட்ட பின்னர்ச் செய்யப்படும் உரிமைமாற்றத்தில் இது தேவையில்லை.

3. உரிமைமாற்றம் செய்யும்போது நட்டவச்சம் தொடர்ந்ததாக இருக்கவேண்டும்.

கடல் அபாயங்கள் (Maritime Perils)

கடற் பயணத்தின்போது எதிர்பாராமல் ஏற்படும் அபாயம் தான் கடல் அபாயங்களாகும். தீ, போர் அபாயம், கடற் கொள்ளை, திருடர் பயம், எடுத்துக்கொள்ளுதல், பறிமுதல், தடைசெய்தல், இளவரசர்களையும் மக்களையும் தடுத்து நிறுத்துதல், தூக்கி எறிதல், கப்பல் கலகம் போன்ற மற்ற வகைகளும் கடல் அபாயங்களாகும். இவைகள் எல்லாம் பாலிசியில் குறிப்பிடப்பட்டிருக்கும். சாதாரணக் காற்றினாலும் அலைகளாலும் ஏற்படும் சாதாரணச் செயல்களை இக் கடல் அபாயம் குறிக்காது.

கடல் காப்பீட்டுச் செயல்கள் (Marine Insurance Adventures)

ஒரு காப்பீடு செய்யப்பட்ட பொருள் கடல் அபாயங்களுக்கு இலக்காகும்போது கடல் காப்பீட்டுச் செயல் தோன்றுகிறது. சத்தத்தின் மூலம் சம்பாதித்த பணம், கடக்கும் பணம், கமிஷன் இலாபம், கடன்களின் பிணையம், கடன் கொடுத்த பணம் போன்றவைகளுக்குக் கடல் அபாயத்தால் ஆபத்து ஏற்படும்

போதும் அது தோன்றுகிறது. உரிமையாளர் மூன்றாம் பேர் வழிக்குப் பொறுப்பாளியாவதும், கடல் அபாயத்தால் காப்பீடு செய்யப்பட்ட பொருளுக்குப் பொறுப்பாளியாகும் நபர்களின் பொறுப்பும் காப்பீட்டுச் செயலாகும்.

லாயிட்ஸ் கம்பெனியின் காப்பீடு (Insurance by Llyods)

இங்கிலாந்தில் கடல் காப்பீட்டுத் தொழில் புரிபவர்கள் அநேகமாகத் தனியார் கம்பெனியைச் சார்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் லாயிட்ஸ் கழகத்தின் (Llyods Corporation) அல்லது அதுபோன்ற சங்கங்களின் அங்கத்தினராவார்கள். லாயிட்ஸ் பாலிசியைப் பொறுத்தவரை காப்பீட்டுத் தரகர்கள் அமர்த்தப் பட்டுள்ளார்கள். தரகர், கட்டணத்தொகையை அல்லது அதன் விகிதத்தைக் குறிப்பிடுகிறார். அது காப்பீடு பெறுவோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அவர் ஒரு தாளில் அல்லது ஒரு குறிப்புப் புத்தகத்தில் முக்கியத் தகவல்களைக் குறித்துக் கொள் கிறார். பின்னர் அவர் லாயிட்ஸ் அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள ஒப்புறுதியாளரிடம் காட்டி நட்ட வச்சத்தைக் காப்பீடு செய்கிறார். அதன்பின்னர் முறையான பாலிசி தயாரித்து அதில் பலவிதமான காப்பீட்டுக் கம்பெனியாளர்களின் கையொப்பம் வாங்குகிறார். அவர்கள் ஒத்துக்கொண்ட காப்பீட்டுத் தொகையும் குறிக்கப்படுகிறது. பின்னர் முத்திரையிட்டுக் காப்பீடு பெறு வோருக்கோ அல்லது அவர்தம் முதல்வருக்கோ கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு பாலிசி தரப்படுகிறது.

பல்வகைக் காப்பீடுகள்
(Miscellaneous Types of Insurance)

இக் காலத்தில் காப்பீட்டுத் தொழில் பெரிதும் பரவி, நட்ட வச்சத்திற்காகக் காப்பீடு செய்யாத துறையே இல்லை. அநேக விதமான விபத்துகளுக்கெதிராகப் பல்வகைப்பட்ட பாலிசிகள் உள்ளன. உதாரணமாக, தனிநபர் விபத்துக் காப்பீடு (Personal Accident Insurance), விசுவாசக் காப்பீடு (Fidelity Inusrance), கொள்ளைக் காப்பீடு (Burglary Insurance), மோட்டார் விபத்துக் காப்பீடு (Motor Vehicle Insurance), தொழிலாளர் நட்டஈட்டுக் காப்பீடு (Workmen's Compensation Insurance), எல்லாம் அடங்கிய ஒரு பாலிசி (All-in-one Policy) போன்றவை முக்கிய மானவைகளாகும்.

தனி நபர் விபத்துக் காப்பீட்டுப் பாலிசி

விபத்தினால் இறப்பு அல்லது உறுப்பிழப்பு ஏற்பட்டால் காப்பீடு பெறுபவருக்கோ அவர்தம் சட்டப் பிரதிநிதிக்கோ பணம்

செலுத்துவதாகக் காப்பீடு அளிப்பவர் அளிக்கும் உறுதிமொழி தான் தனிநபர் விபத்துக் காப்பீட்டு ஒப்பந்தமாகும். விபத்து என்ற சொல்லை விளக்குவது மிகவும் கடினம். விபத்து என்பது எதிர்பாராத நிகழ்ச்சி. அது எப்பொழுது ஏற்படும் என்று யாராலும் சொல்ல முடியாது. ஒருவர் வேண்டுமென்றே ஓடும் ரயிலில் விழுந்து இறப்பாரானால் அது விபத்து அன்று. ஆனால், அவர் ரயிலில் பயணம் செய்துகொண்டிருக்கும்போது தற்செயலாக நழுவி விழுந்து இறந்துவிட்டால் அல்லது காயமடைந்தால் அது விபத்தாகும்.

தனி நபர் காப்பீடு, ஆயுள் காப்பீடுபோல் தோன்றினாலும் இதில் ஈட்டுறுதி ஒப்பந்தம் இல்லை. விபத்து ஏற்பட்டால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் கிடைக்கும். விபத்திற்குக் காரணமாக இருந்தவர் ஏதாவது பணம் கொடுத்தால் அதைக் காப்பீடு தன் நட்டஈட்டுப் பணத்தில் கழித்துக்கொள்ள முடியாது. அதேபோல் மாற்றமர் அடைமான உரிமையும் நட்டஈடு தந்துவிட்ட பின்னர் பெறமுடியாது. மற்றக் காப்பீடுகள் வலியுறுத்துதல் போல் இதுவும் வலியுறுத்தப்படுகின்றது. காப்பீட்டின் பொதுத் தத்துவங்களான நன்னம்பிக்கை, காப்பீடு செய்யத்தக்க நலன் போன்றவை இதற்கும் பொருந்தும். அண்மைக் காரணம் இங்கு அவசியம் இருக்க வேண்டும். விபத்து நேரடியாக ஏற்பட்டு இறப்பில் முடிந்தால் காப்பீட்டுக் கம்பெனி பொறுப்புக்கொள்ளும். இறப்பு தொற்றுநோயினால் ஏற்பட்டாலும், விபத்தினால் முடமாக்கப்பட்டாலும் காப்பீடு அளிப்பவர் நட்டஈடு தரவேண்டும். விபத்தினால் ஏற்பட்ட தொற்றுநோயாக இருக்கவேண்டும். அவ்வாறில்லாமல் விபத்து ஏற்படுவதற்கு முன்பே அவருக்கு நோய் இருந்து அல்லது முடமாக இருந்து விபத்து ஏற்பட்டதும் இறந்துவிட்டால் கம்பெனி காப்பீடு தராது. (பிட்டன் எ. ஆக்சிடென்டு டெத் இன்சூரன்ஸ் கம்பெனி.)

காப்பீடு பெறுபவர் மது அருந்தியுள்ளபோது ஏற்பட்ட விபத்திற்கும், உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் தொழிலில் அவர் ஈடுபட்டிருக்கும்போது ஏற்பட்ட விபத்திற்கும் காப்பீட்டுக் கம்பெனி பொறுப்பாகாது.

விசுவாச அல்லது மோசடிக்கெதிரான காப்பீடு

தொழிலாளிகள் அல்லது பணிபுரிவோர்கள் செய்யும் மோசடிகளிலிருந்து ஏற்படும் நட்டத்திற்கு எதிராகக் காப்பீட்டுக் கம்பெனி காப்பீடு பெறுவோருக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. ஒரு குறிப்பிட்ட

பணியாள் அல்லது எல்லாப் பணியாள்கள் சேர்ந்த நிலையில் காப்பீடு செய்யப்படுகிறது.

கொள்ளைக்கெதிரான காப்பீடு

இத்தகைய காப்பீட்டுப் பாலிசி கொள்ளை, வீட்டை உடைத்தல், திருடு போன்றவைகளால் ஏற்படும் நட்டத்திற்கெதிராகப் பாதுகாப்பு அளிக்கிறது. பாலிசியில் இப் பொருள்களின் விவரம் கொடுக்கப்படவேண்டும். உயர்ந்த மதிப்புள்ள பொருள்களும் ஒருவர் பொறுப்பில் உள்ள பொருள்களும் இத்தகைய பாலிசியில் எடுத்துக்கொள்ளப்படா.

தொழிலாளர் நட்டஈட்டுக் காப்பீட்டுப் பாலிசி

காயம்பட்ட தொழிலாளர்களுக்கு நட்டஈடு அளிப்பதற்கு வேலைக்கு அமர்த்துவோரால் எடுக்கப்படுவது இப் பாலிசி. மேலும், தொழிலாளர்கள் வேலைசெய்யும்போது ஏற்படும் நோய்களினின்று பாதுகாப்பு கோருவதற்கும் இப் பாலிசி ஏற்படுகிறது. செலுத்தப்படும் மொத்தக் கூலிகளின் அடிப்படையில் காப்பீட்டுக் கட்டணம் கணக்கிடப்படும்.

எல்லாம் அடங்கிய ஒரே பாலிசி

பல நட்டவச்சங்களையும் ஒரே சமயத்தில் அடங்கியுள்ள ஒரே பாலிசியில் இருக்கும்படி காப்பீடு செய்யப்படுகிறது. அத்தகைய ஒரே பாலிசி தீ, திருடு, விபத்து, நம்பிக்கைத் துரோகம் போன்றவைகளுக்குப் பாதுகாப்பாக எடுக்கப்படுகிறது.

மோட்டார் விபத்துக் காப்பீடு

ஒரு மோட்டார் கார் விபத்தில் காருக்கே நட்டம் அல்லது சேதம் ஏற்படும். ஒரு பயணிக்குக் காயம் ஏற்படலாம்; அல்லது பயணி இறந்திடலாம்; அல்லது மூன்றாம் பேர்வழி காயமடையலாம்; அல்லது இறந்திடலாம். ஒரு மோட்டார் காரின் உரிமையாளர் இத்தகைய நட்டவச்சங்கள் அனைத்தும் அடங்கிய ஏட்டுப் பாலிசியை எடுக்கவேண்டும். 1939ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின்படி மோட்டார் உரிமையாளர் அவர் பயன்படுத்தும் காரால் மூன்றாம் பேர்வழிக்கு விபத்து ஏற்பட்டு அதனால் ஏற்படும் பொறுப்பையும் காப்பீடு செய்ய வேண்டும். இதற்கு மூன்றாம் பேர்வழி விபத்துக் காப்பீடு என்று பெயர். மூன்றாம் பேர்வழிக்கு ஏதாவது நட்டம் அல்லது சேதம் ஏற்பட்டால் அதற்காக அவர் காப்பீட்டுக் கம்பெனிமீது வழக்குத் தொடுக்கலாம். மூன்றாம் பேர்வழிக்கும் காப்பீட்டுக்

கம்பெனிக்கும் தனியாக ஒப்பந்தம் இருக்க வேண்டிய அவசிய மில்லை.

மோட்டார் வாகனச் சட்டம் (1939) இத்தகைய மூன்றாம் பேர்வழி விபத்துக் காப்பீட்டைக் கட்டாயமாக எல்லாக் கார் உரிமையாளர்களும் எடுக்கவேண்டும் என்று சொல்கிறது. இப் பாலிசி ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். இது உரிமையாளர் அல்லது பணியாள் செய்த புறக்கணிப்பிற்காகப் பாதுகாப்புச் செய்கிறது. இப் புறக்கணிப்பால் மூன்றாம் பேர்வழி இறந்து விட்டாலும் இது சமுதாயத்திற்குப் புறம்பான ஒப்பந்தம் இல்லை. வேண்டுமென்றே ஏற்படும் விபத்திற்கு இது உதவாது. ஆனால், புறக்கணிப்பின் அளவை அங்குக் கணக்கிட முடியாது.

பாலிசியில் குறிப்பிடப்பட்ட மோட்டார் வாகனத்திற்குத் தான் இக் காப்பீடு பொருந்தும். பாதையில் காரின் உரிமை யாளர் பயன்படுத்தும்போது இக் காப்பீடு எத்தகைய பொறுப் பிற்கும் அவருக்குப் பாதுகாப்புத் தரும். ஆனால், காரின் உரிமை அவரை விட்டுப் போய்விட்டால் இப் பாதுகாப்பும் நின்றுவிடும். காரின் உரிமையாளரின் அனுமதி பெற்று அவரின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் காரைச் செலுத்தும்போது ஏற்படும் விபத்தையும் இது பாதுகாக்கும். பாலிசியின் நிபந்தனைகளில் கண்ட எந்த நபருக்கும் இப் பாதுகாப்புக் கிடைக்கும். சட்டத் தின்படி தன் காரை வேறு ஒருவர் ஓட்டுவதற்குத் தண்டனையாக மூன்று மாதச் சிறையும் அல்லது ரூ. 500 அபராதமும் அல்லது இரண்டும் வழங்கப்படும். அதேபோல் காப்பீடு செய்யப்படாத காரை ஓட்டும் காரோட்டியும் தண்டனைக்குள்ளாவார். இப் பாலிசியை அங்கீகாரம்பெற்ற காப்பீட்டுக் கம்பெனிகளிடமிருந்து தான் பெறவேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு, உள்ளூர் அரசு, அரசுரிமையாக் கப்பட்ட வாகனம் அல்லது ரயில்வே போன்றவை பயன்படுத்தும் வாகனங்களுக்கு இத்தகைய காப்பீடு செய்யவேண்டிய அவசிய மில்லை. மாநில அரசாங்கங்களுக்கு இக் காப்பீட்டைக் கட்டாயப் படுத்தி விபத்தால் ஏற்படும் இறப்பு அல்லது உறுப்பிழப்பு போன்றவைகளைக் கண்காணிக்கப் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, மாநில அரசு இத்தகைய பாலிசியின் அமைப்பு, தொழிலாளர் நட்டஈட்டின்கீழ் உள்ள பொறுப்பு விபத்தினால் இறப்பு, உறுப்பிழப்பு, செலுத்தும்போது ஏற்படும் விபத்துப் போன்றவைகளை வற்புறுத்தலாம்.

காப்பீடு பெறுபவருக்குக் காப்பீட்டுப் பத்திரத்தைச் சேர்ப்பித்தவுடனே மூன்றாம் பேர்வழிகளுக்கு ஏற்படும் நட்டத்தைச் சரிக்கட்டும் பொறுப்புக் காப்பீட்டுக் கம்பெனிக்கு வந்து சேர்கிறது. அவர் பாலிசியைத் தவிர்த்தாலும் அல்லது ரத்து செய்தாலும் மூன்றாம் பேர்வழியின் உரிமை மாறாது. சட்டத்தின்படி காப்பீடு பெறுபவர் திவாலாகிவிட்டாலும் மூன்றாம் பேர்வழிகளின் உரிமை பாதிக்காப்படமாட்டாது. அவர் திவாலாகிக் கடனீந் தோர்களோடு ஓர் ஏற்பாடு செய்துகொண்டுள்ள போதும் மூன்றாம் பேர்வழி, காப்பீட்டுக் கம்பெனிமீது நட்டஈடு கோரலாம். இதே உரிமை ஒரு கம்பெனி காப்பீடு செய்திருந்து திவாலாகி விட்டாலும், மூன்றாம் பேர்வழிகளுக்கு உண்டு. ஆனால், இணைதல் அல்லது புனரமைப்பு போன்றவைகளுக்காகக் கம்பெனி தானே கலைத்துவிட்டால் மூன்றாம் பேர்வழிகளுக்கு இவ் வுரிமை இல்லை.

19. கம்பெனிச் சட்டம்

(Company Law)

1956ஆம் ஆண்டுக் கம்பெனிச் சட்டம் அவ் வாண்டின் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வந்தது. ஜம்மு காஷ்மீரைப் பொறுத்தமட்டில் சட்டத்தின் சில முக்கிய நிபந்தனைகளாவன: கம்பெனி, வங்கி, காப்பீடு, இதர நிதிக் கழகங்கள் போன்றவைகளின் தோற்றம், ஒழுங்குமுறை, கலைத்தல் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் பொருந்தும். இங்கிலாந்து நாட்டின் கம்பெனிச் சட்டத்தைப் பின்பற்றி நம் நாட்டுக் கம்பெனிச் சட்டம் உருவாக்கப்பட்டது. சமீபத்தில்தான் சில மாற்றங்கள் ஏற்பட்டன.

நம் நாட்டில் முதன்முதலாக 1850ஆம் ஆண்டில் கூட்டுப் பங்குக் கம்பெனியின் பதிவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1857-ல்தான் வரையறுத்த பொறுப்புப் புகுத்தப்பட்டது. 1866, 1882, 1913ஆம் ஆண்டுகளில் சட்டத்தில் அவ்வப்பொழுது திருத்தங்கள், சேர்க்கைகள் செய்யப்பட்டன. எனவே, இத்தனை சட்டங்களையும் ஒன்றாக்கி, திருத்தி 1956ஆம் ஆண்டுக் கம்பெனிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1963ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட சட்டம், கம்பெனி நிருவாகத்தைக் கம்பெனிச் சட்ட நிருவாகக் குழுவிடம் (Board of Company Law Administration) ஒப்படைத்தது. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஐந்துக்கு மேற்படாத உறுப்பினர்களும், ஒவ்வொரு மாநிலத்திலும் மத்திய அரசால் அமர்த்தப்பட்ட கம்பெனிப் பதிவாளர்களும் அதில் பணிபுரிகின்றனர். மேலும், 1963ஆம் ஆண்டின் திருத்திய சட்டம், கம்பெனிச் சர்ச்சைகளைத் தீர்த்துவைக்கக் கம்பெனிகளின் நீதிமன்றம் (Companies Tribunal) என்ற அமைப்பை நிறுவிட வழிகோலியது. 1965ஆம் ஆண்டின் திருத்திய சட்டம் ஏற்கெனவே இருந்த ஆலோசனைக் குழுவிற்குப் பதிலாக ஆலோசனைச் சபை ஒன்றை நிறுவியது.

இவ்வாறு அவ்வப்போது திருத்தப்பட்ட சட்டங்கள் கம்பெனியின் நிருவாகம், ஒழுங்குமுறை, பணிகள் ஆகியவைபற்றிதான் இருந்தன. இவ்வாறு செய்யப்பட்டதால்தான் தற்சமயம்

உள்ள நம்முடைய கம்பெனிச் சட்டம் ஒருபுறம் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும், மறுபுறம் ஜனநாயக சமுதாய நலனைச் சாதிப்பதாகவும் உள்ள நிலைக்கு வளர்ந்துள்ளது. தனியார் முதலீட்டை ஆதரித்துப் பங்குதாரர்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. நிருவாகத்திடம் குவிந்துள்ள அதிகாரம் பங்குதாரர்களின் நலனைப் பாதிக்காத நிலையில் சில தடைகளை விதிக்கிறது கம்பெனிச் சட்டம். மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு அதிக அளவு அதிகாரத்தை அரசாங்கம் பெற்றுக் கம்பெனிச் சட்டத்தை அவ்வப்பொழுது திருத்தி, சமுதாய நலனைக் கண்காணித்து வருகிறது.

கம்பெனி இலக்கணம்

ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைப் பொதுவாக நிறைவேற்றும் பொருட்டு ஒருசிலர், மாற்றவும் பிரிக்கவும் கூடிய பங்குகளை முதலாகப் போட்டு அவர்களாகவே ஒன்றுசேரும் ஒரு சங்கம்தான் கூட்டுப் பங்குக் கம்பெனியாகும். 'கம்பெனி என்பது பங்கும் பணம் திரட்டி அதைப் பொதுவான காரியம் ஒன்றுக்குப் பயன்படுத்தும் பலபேர் சேர்ந்த சங்கமாகும். அவர்கள் வழங்கும் பணம் கம்பெனியின் முதலாகும் ; அதை வழங்குகின்றவர்கள் உறுப்பினர்கள்; கம்பெனியின் முதலில் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் உரிய பகுதி அவருடைய பங்கு எனப்படும்' என்று கம்பெனிக்கு இலக்கணம் சொல்கிறார் லிண்ட்லே பிரபு. 'சட்டத்திற்கு மட்டும் தோன்றியுள்ள நபராகவும், மற்றவர் கண்களுக்குப் புலனாகாத செயற்கை நபராகவும் விளங்குவதுதான் கம்பெனி' என்று அமெரிக்கத் தலைமை நீதிபதி மார்ஷல் வருணித்துள்ளார். கம்பெனிச் சட்டத்தின் பிரிவு 3 (1) () 'சட்டத்தின்கீழ் எந்த ஒரு கம்பெனி அமைக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுகிறதோ அல்லது முந்தைய கம்பெனிச் சட்டங்களின்படி தோன்றிப் பதிவு செய்யப்படுகிறதோ அதுதான் கூட்டுப் பங்குக் கம்பெனியாகும்' என்று கூறுகிறது. அத்தகைய கம்பெனி, சட்டத்தின் கண்களுக்கு மட்டும்தான் தோன்றும். உருவத் தோற்றம் அதற்கில்லை. இயல்பான நபர்களுக்கு அளிக்கப்படும் உரிமை, சட்டத்தால் இதற்கு அளிக்கப்படுகிறது. சட்டம்தான் இதை உருவாக்குகிறது. அதே சட்டம் தான் அதைக் கலைக்க முடியும்.

தனிப்பட்ட நபர்களையுடைய எந்தச் சங்கமும் பொது நோக்கத்திற்காக ஒரு கம்பெனியாகப் பதிவு செய்துகொள்ளலாம். வியாபார நோக்கம் வேண்டும் என்ற அவசியமில்லை. அறம், ஆராய்ச்சி, அறிவு முன்னேற்றம் போன்ற நோக்கங்களுக்காகக் கூடக் கம்பெனி பதிவுசெய்து கொள்ளலாம்.

கம்பெனியின் சிறப்பியல்புகள்

1. **தன்விருப்பச் சங்கம்** (Voluntary Association) : கம்பெனி என்பது முன்கூறியவிதம் தன் விருப்பப்படி பல நபர்கள் ஒன்று சேரும் சங்கமாகும். எந்த நபரும் சட்டத்தால் கட்டுப்படுத்தப் பட்டு உறுப்பினராகச் சேருவதில்லை. பின்னர் உறுப்பினர் பதவியை விடுவதில்லை. தனி நபர்களின் விருப்பந்தான் அது. இலாபமடையவோ அல்லது வேறு நோக்கங்களைப் பூர்த்தி செய்துகொள்ளவோ அவர்கள் கம்பெனியில் சேரலாம்.

2. **சட்டபூர்வமான தனி இயக்கம் அல்லது தோற்றம்** (Independent Legal Entity) : கம்பெனியின் உறுப்பினர்களினின்று தனித்த சட்டபூர்வமான இயக்கம் இதற்கு உண்டு. சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புனைவு நபர் (Artificial Person) தான் கம்பெனி. அது சொத்துகளைத் தன் விருப்பப்படி பெற்று, தன் விருப்பப்படி விற்கவும் உரிமை உண்டு. அது ஓர் ஒப்பந்தத்தில் ஈடுபடலாம்; வங்கிக் கணக்கைத் தன் பெயரில் தொடங்கலாம். அது தன் உறுப்பினர்கள் மீதும் வெளியாள்கள் மீதும் வழக்குத் தொடரலாம். அவர்களால் வழக்குத் தொடரப்படலாம். கம்பெனி உள்ளபோதோ அல்லது கலைக்கப்படும்போதோ அதன் சொத்துகள்மீது எந்த உறுப்பினரும் உரிமை கொண்டாட முடியாது (திருமதி B. F. காஸ்தாருக்கும், பம்பாய் இன்கம் டாக்ஸ் கமிஷனருக்கும் நடந்த வழக்கு உதாரணம்). கம்பெனியின் சொத்துகள்மீது உறுப்பினருக்குக் காப்பீடு செய்யத்தக்க நலன் இருக்கக்கூடாது. எனவே, இத் தகைய தனிப்பட்ட சட்ட இயக்கத்தால் கம்பெனியின் கடன் ஈந்தோர்கள், கம்பெனியின்மீதோ அல்லது அதன் சொத்து களின்மீதோதாம் வழக்குத் தொடர முடியும்; உறுப்பினர் மீதன்று. சட்டம் கம்பெனியின் தோற்றத்தை அதன் நோக்கம், எண்ணம், திட்டம், தனிப்பட்ட உறுப்பினரின் நடத்தை ஆகியவைகளைப்பற்றிப் பொருட்படுத்தாமல் அங்கீகரிக்கின்றது.

இந்தத் தனிச் சட்டபூர்வமான இயக்கத்தை அல்லது அதன் தத்துவத்தை இங்கிலாந்தின் பிரபு சபை சாலமன் எ. சாலமன் கம்பெனி லிமிடெட் (Solomon *vs.* Solomon Co. Ltd.) என்ற புகழ் வாய்ந்த வழக்கின்கீழ் நீதித்துறையின் மூலமாக ஏற்றுக் கொண்டது.

புகழ் வாய்ந்த காலணித் தொழிலின் உரிமையாளரான திரு. சாலமன் அவர், அவர் மனைவி, அவர் மகள், அவரின் நான்கு மகன்கள் ஆகிய ஏழுபேரைப் பங்குதாரர்களாகக் கொண்ட சாலமன் கம்பெனி லிமிடெட் என்ற கம்பெனியைத்

தொடங்கினார். புதிய கம்பெனி பழைய சாலமன் வியாபாரத்தை 30,000 பவுண்டிற்கு வாங்கியது. வாங்கின விலைக்கு 20,000 பவுண்டிற்குப் பங்கும், 10,000 பவுண்டிற்குக் கடனீட்டுப் பத்திரமும் (Debenture) வழங்கப்பட்டன. கடனீட்டுப் பத்திரங்களுக்குக் கம்பெனியின் சொத்துகள் அடைமானப் பிணையமாக வைக்கப்பட்டன. கொஞ்ச நாள் சென்று கம்பெனி கலைக்கப் பட்டது. கம்பெனியின் சொத்துகளைவிடக் கடன் 11,000 பவுண்டு அதிகமிருந்தது. பொது ஒற்றியில்லாத கடனீந்தோர்கள், பொது ஒற்றியுள்ள கடனீந்தோர்கள்மீது அதாவது, கடனீட்டுப் பத்திரங்களைக் கொண்டுள்ள சாலமன்மீது வழக்குத் தொடுத்தனர். சாலமனும், சாலமன் கம்பெனியும் ஒன்றுதான். எனவே, அவர்களுக்குத்தாம் தொகை திருப்பி முதலில் அளிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் வாதிட்டனர். ஆனால், கம்பெனியின் தோற்றம் அதன் உறுப்பினர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டது. எனவே, சாலமன் வேறு, சாலமன் கம்பெனி வேறு என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. கம்பெனியின் உறுப்பினர்கள் கடனீந்தோர்களாக இருக்கலாம். எனவே, கம்பெனியின் தோற்றத்தின் தனித்தகு; நிலையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

இந்தத் தனித்தியங்கும் தன்மையைக் கொண்டு ஒரு கம்பெனி ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெறமுடியாது. அத்தகைய உரிமை இயற்கை மனிதர்களுக்குத்தான் உண்டு. ஆனால், குடிமகனாகவோ குடிமகன் அல்லாதவர்கள் அடையும் அடிப்படை உரிமையோ பாதுகாப்புக் கம்பெனிக்கு உண்டு. ஆனால், குடிமகனுக்கே கிடைக்கும் அடிப்படை உரிமை கம்பெனிக்குக் கிடைக்காது.

3. நிரந்தரத் தோற்றம் அல்லது தொடர்ச்சி (Perpetual Existence): ஒரு கம்பெனி நிரந்தரமான தொடர்ச்சியைப் பெற்றுள்ளது. கம்பெனியைத் தோற்றுவிக்கும் விதம், கலைக்கும் விதம், பங்கினை மாற்றிடும் உறுப்பினர் உரிமை ஆகியவை கம்பெனியின் தொடர்ந்த தோற்றத்தைக் குறிக்கின்றன. உறுப்பினர்களின் ஆயுளைப் பொருட்படுத்தாமல் என்றும் நிரந்தரமாகக் கம்பெனி இருக்கும். கம்பெனியின் தோற்றத்தைச் சட்டமூலம் தான் முடிவுகாணமுடியும். கம்பெனியின் உறுப்பினர்கள், அதுவும் கப்பெனியின் அமைப்பு ஏட்டிற்குக் கையொப்பமிட்டவர்கள் அல்லது கம்பெனியை நிறுவியவர்கள் எல்லோரும் இறந்து பட்டாலும் கம்பெனி இறக்காது. காரணம் அஃது ஒரு புனைவு

நபர். கம்பெனியின் உறுப்பினர்களில் மாற்றம் ஏற்பட்டாலும் அது வழக்கம்போல் உடன்பாடுகளிலும் ஒப்பந்தங்களிலும் ஈடுபடும்.

4. பொது முத்திரை (Common Seal) : கம்பெனிக்குச் சட்டத்தால் ஒரு புனைவு உருவம் கொடுக்கப்பட்டாலும் அஃது இயக்குநர்கள் என்ற மனிதர்கள் மூலம்தான் செயலாற்ற முடியும். அவர்கள் கம்பெனியின் முகவர்களாகப் பணியாற்றுகின்றனர்; உறுப்பினர்களின் முகவர்களாக அல்லர். கம்பெனியின் எல்லாச் செயல்களுக்கும் முத்திரையிடப்பட வேண்டும். பொது முத்திரை என்பது கம்பெனியின் அலுவலக சம்பந்தமான கையொப்பமாகும். கம்பெனியின் இம் முத்திரையில்லாத பத்திரங்கள் கம்பெனியைக் கட்டுப்படுத்தா.

5. வரையறுக்கப்பட்ட பொறுப்பு (Limited Liability) : கம்பெனி உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் பெற்றுள்ள பங்குகளின் இயல் மதிப்பிற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. எந்த விதத்திலும் பங்குப் பணத்தில் செலுத்தாத தொகைக்குமேல் பணம் செலுத்தச் சொல்லிக் கேட்கப்படமாட்டாது. உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியில், அது கலைக்கப்படும்போது உறுப்பினர்கள் ஒத்துக்கொண்ட தொகையைக் கம்பெனியின் பொறுப்புகளைத் தீர்க்கக் கொடுக்க வேண்டும்.

6. பங்கு மாற்றித் தருதல் (Transferability of Shares) : தனிக் கம்பெனியைத் தவிர்த்து ஒரு கூட்டுக் கம்பெனியின் பங்கை மற்றவருக்கு மாற்றிடலாம். முழுத் தொகையும் செலுத்தப்பட்ட பங்கை உடையவர்கள் தங்கள் விருப்பம்போல் அவைகளை மாற்றிடலாம். பங்கை மாற்றிடும் உரிமைகளைத் தடைசெய்யும் கம்பெனியின் செயல்விதிகளின் சரத்துச் செல்லாது. கம்பெனியின் செய்விதிகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைத் தவிர, தனிக் கம்பெனியின் பங்குகள் மாற்றிடமுடியா.

கூட்டுக் கம்பெனிக்கும் கூட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

1. கூட்டு வணிகத்தில் குறைந்த அளவு இருவரும், உயர்ந்த அளவு வங்கித் தொழிலில் பத்து நபர்களும், ஏனைய தொழில்களில் இருபது நபர்களும் இருப்பர். ஆனால், கம்பெனி அமைப்பில் தனிக் கம்பெனியில் குறைந்த அளவு இரு நபர்களும் உயர்ந்த அளவு 50 நபர்களும் இருக்கலாம். பொதுக்கம்பெனியில் குறைந்த அளவு எழுவர் இருக்க வேண்டும்.

2. கூட்டு வணிகத்திற்குத் தனி ஆள் என்ற சட்டத்தகுதி நிலை இல்லை. ஆனால் கம்பெனிக்கு அத் தகுதியுண்டு.

3. கூட்டு வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாய மில்லை. கம்பெனி அமைப்பு அவசியம் பதிவு செய்யப்பட வேண்டும்.

4. கூட்டு வணிகத்தில் கூட்டாளி ஒருவரின் இறப்பு, திவால், மனச் சமநிலை இழத்தல் காரணமாகக் கூட்டாண்மை கலையும். கம்பெனி உறுப்பினரின் நொடிப்பு, இறப்பு, பித்தநிலை கம்பெனியின் வாழ்வை அல்லது நீடிக்கும் தன்மையைப் பாதிப் பனவல்ல. கம்பெனிக்கு நீடித்த வாழ்வு உண்டு.

5. கூட்டு வணிகத்தில் கூட்டாளிகள் தமது பங்கை மூன்றாம் பேர்வழிகளுக்கு மாற்றித்தர முடியாது. பங்குதாரர்கள் தம் பங்குகளை மற்றவருக்கு மாற்றித் தரலாம்.

6. கூட்டு வணிகத்தில் கூட்டாளி ஒவ்வொருவரும் தொழிலில் பங்குபெறும் உரிமையுள்ளவர். ஆனால், பங்குதாரர் கம்பெனி நிருவாகத்தில் பங்கு உரிமையில்லாதவர்கள்.

7. கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. ஆனால், பங்குதாரர்களின் பொறுப்பு அவர்கள் எடுத்துள்ள பங்களவே வரையறை செய்யப்பட்டுள்ளது.

8. கூட்டாளிகள் தமது முதலைத் தொழிலில் போட்டிருப் பதால் தொழிலை அக்கறையுடன் கவனிப்பர். ஆனால், கம்பெனி யில் நேரடித் தொடர்பு பங்குதாரர்களுக்குக் கிடையாது. மேலும், இயக்குநர்கள் இவ்வளவு அக்கறையுடன் தொழிலை நடத்த மாட்டார்கள்.

9. கூட்டு வணிகத்தில் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்வது கூட்டாளிகளின் விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால், கம்பெனிக் கணக்குகள் கட்டாயமாகச் சட்டப்படி தணிக்கை செய்யப்பட வேண்டும்.

10. கூட்டு வணிகத்தில் கூட்டாளிகள் அதன் கடன்களுக்குக் கூட்டுத் தனித்தனிப் பொறுப்பு உள்ளவர்களாவார்கள். ஆனால், பங்குதாரர்கள் தனிப்பட்ட முறையில் கம்பெனியின் கடன் களுக்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

11. கூட்டு வணிகத்தை அமைப்பது மிக எளிது. அநேகச் சட்டச் சடங்குகளை மேற்கொள்ள வேண்டுவதில்லை. ஆனால், கம்பெனியை அமைக்க ஏராளமான சடங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

12. கூட்டு வணிகம் சிற்றளவு நிறுவனமாக இருப்பதால் பேரளவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. ஆனால், கம்பெனி அதிக அளவு முதலுடன் இயங்கிவருவதால் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களை வேலைக்கமர்த்தித் திறமையிகு நிருவாகம் செய்ய வாய்ப்புண்டு.

13. கூட்டு வணிகத்தில் கூட்டாளிகளின் இசைவின்பேரில் தொழிலைத் தேவைக்கேற்ப, சூழ்நிலைக்குத் தக்கவாறு மாற்றியமைத்துக் கொள்ளலாம். கம்பெனி அமைப்பில் இஃது எளிதாக முடியாது. காரணம் கம்பெனியில் அமைப்பு முறையேட்டிலுள்ள நோக்கச் சரத்தில் சொல்லியுள்ள காரியங்களைத் தவிர வேறெந்தத் தொழிலையும் கம்பெனி மேற்கொள்ளக் கூடாது.

கம்பெனியின் கூட்டுருத் திரை (Corporate Veil of a Company)

சட்டத்தால் பிறந்த ஒரு தனி ஆளாகக் கம்பெனி காணப்பட்டாலும், உண்மையில் பார்க்கப்போனால் அது பல நபர்கள் இணைந்த ஒரு சங்கமாகும். அவர்கள் கம்பெனியின் சொத்துகள் மீது உண்மையான அக்கறை கொண்ட சொந்தக்காரர்கள்; கம்பெனி தோன்றிவிட்ட உடனே மறைந்து விடுகிறார்கள். அவர்கள் தங்களின் கூட்டுருவைக் கம்பெனிக்குத் தந்து அதை ஒரு சட்டபூர்வமான தகுநிலை உடையதாக ஆக்கிவிடுகின்றனர். ஆனால், சில நேரங்களில் இந்த மொத்தக் கூட்டுருத் திரை கிழிக்கப்பட்டு, அவர்கள் நபர்களாகத் தோன்றக்கூடிய நிலை ஏற்படுகின்றது. கம்பெனி பொதுநலன் நோக்கத்திற்கு எதிர்மாறாக நடக்குமானால் நீதிமன்றம் இத் திரையைக் கிழித்து அதன்பின் மறைந்துள்ள உறுப்பினர்களைப் பொறுப்பாளிகளாக்கத் தயங்குவதில்லை.

1. கம்பெனியின் நடத்தையைத் தீர்மானிக்கும்போது இந்நிலைமை ஏற்படுகிறது. உதாரணமாக, ஒரு கம்பெனியை ஒரு நாட்டின் எதிரிகள் சொந்தம் கொண்டாடினால் நீதிமன்றம் கூட்டுருத் திரையை அகற்றி, கம்பெனியை உண்மையிலே அதிகாரம் செய்யும் நபர்களின் நடத்தையை ஆராயும் (டைம்லர் கம்பெனி லிமிடெட் எ. காண்டிநென்டல் டயர் அண்டு ரப்பர் கம்பெனி). அயல்நாட்டு சீதிரிகளை உள்நாட்டில் இத்தகைய வணிகம் செய்ய அனுமதிப்பது மிகவும் தவறு.

2. வருவாய் நலன் கருதி நீதிமன்றம் கம்பெனியின் அப்போர்வையை அகற்றலாம். உதாரணமாக, வரி ஏய்ப்பு நடத்திட வரி செலுத்துவோரே இதுமாதிரி கம்பெனியின் போர்வையில்

இருந்தால், கம்பெனியை விடுத்து அவரை வரி கட்டச் செய்திடும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு. எனவே அரசாங்கத்தின் வருவாய் நலனுக்கு எதிராகக் கம்பெனி நடந்தால் நீதிமன்றம் கம்பெனியின் பங்குதாரர்களைக் கம்பெனியாகப் பாவிக்காது.

3. தவறான நடத்தைகளையும் மோசடியையும் தடுக்க நீதிமன்றம் இவ்வாறு செய்யலாம். சட்ட நிபந்தனைகளை மீறுவதற்கும், கடன் ஈந்தோர்களை மோசடி செய்யவும், சட்டபூர்வமான கடமைகளைப் புறக்கணிக்கவும் இவைபோன்ற மோசடி நோக்கங்களுடன் கம்பெனி அமைக்கப்பட்டிருந்தால் நீதிமன்றம் கூட்டுருத் திரையை அகற்றிச் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கும்.

எனவே, மேற்கூறிய சூழ்நிலைகளில் நீதிமன்றம் கம்பெனியின் சட்டபூர்வமான தோற்றத்தை மதியாது; அதன் போர்வையில் ஒளிந்திருக்கும் மோசடிக்காரர்களையும் மன்னிக்காது. எனவே, இத்தகைய கம்பெனியின் உறுப்பினர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாவார்கள்.

கம்பெனி வகைகள் (Kinds of Company)

1. **சாசனக் கம்பெனிகள்** (Chartered Companies): பழைய காலத்தில் மன்னர்கள் அளித்த சாசனத்தின்படி உண்டாக்கப்பட்ட கம்பெனிகளைச் சாசனக் கம்பெனிகள் என்பார்கள். இவைகளுக்கு உதாரணம், இந்தியாவில் ஆங்கிலேயரால் தொடங்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனி.

2. **சட்டமுறைக் கம்பெனிகள்** (Statutory Companies): கம்பெனிகளுக்கென்றே அரசாங்கம் தனிச் சட்டம் இயற்றித் தோற்றுவிக்கும் கம்பெனிகளைச் சட்ட முறைக் கம்பெனிகள் என்கிறோம். இவைகள் மத்திய அல்லது மாநிலச் சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் சட்டங்களால் உருவாக்கப்பட்டவை. ஒவ்வொரு சட்டமும் அதனுடைய சரத்துகளால் அமலாக்கப்படுகிறது. இத்தகைய கம்பெனிகளுக்கு அமைப்புமுறையேடும், செயல்முறை விதிகளும் இல்லை. அவைகளில் மாறுதல் செய்ய வேண்டுமென்றால் சட்டமன்றம் திருத்திய சட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும். அவைகளின் ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும். இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (Auditor General of India) மேற்பார்வையில் இக் கம்பெனிகளின் கணக்குத் தணிக்கை செய்யப்பட வேண்டும். இவை பெரும்பாலும் பொதுத்துறைக் கம்பெனிகளாகவே உள்ளன.

இவற்றின் நோக்கம் தொண்டு மனப்பான்மையேயொழிய இலாப மனப்பான்மை அன்று. இவற்றின் பொறுப்பு வரையறுக்கப் பட்டாலும் பெயர்களுக்குப் பின்னால் 'வரையறுக்கப்பட்டது' என்னும் வார்த்தை சேர்க்கப்படுவதில்லை. இந்திய ரிசர்வு வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவை இவைகளுக்கு உதாரணமாகும்.

3. பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் (Registered Companies): இந்தியக் கம்பெனிச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளைப் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் என்கிறோம். இவைகளைக் கம்பெனிச் சட்டத்தின் சரத்துகளும் அமைப்பு முறையேடும் செயல்முறை விதிகளும் ஒழுங்குபடுத்துகின்றன. இவைகளைப் பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பெனி, உத்தர வாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனி, வரையறாக் கம்பெனி என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

(அ) பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பெனி (Company Limited by Share): அதிக அளவில் பதிவு செய்யப்படும் கம்பெனிகள் பெரும்பாலும் பங்குகளால் வரையறுக்கப்பட்ட பொறுப் புடையதாக இருக்கின்றன. இக் கம்பெனியின் மூலதனம் பல பங்கு களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒருவர் எத்தனை பங்குகள் வாங்கு கிறாரோ அத்தனை பங்குகளின் மதிப்பிற்கே அவர் பொறுப்பா வார். எடுத்துக்காட்டாக, ஒரு பங்கு ரூ. 10 என்று ஒருவர் 50 பங்கு வாங்குவாரானால் ரூ. 500-க்கே அவர் பொறுப்பாளி யாவார். எனவே, அவரின் பொறுப்பு ரூ. 500 என வரை யறுக்கப்பட்டுள்ளது. 'கம்பெனிக்குக் கடன் ஏற்பட்டு நட்ட மடையும்பொழுது அவர் பொறுப்பு அவர் வாங்கியுள்ள பங்கின் மதிப்பேயாகும். இவ்வகையான கம்பெனிகள் தங்கள் பெயரின் பின்னால் 'வரையறுக்கப்பட்டது' (Limited) என்ற சொல்லை அவசியம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்டவை கம்பெனி (Company Limited by Guarantee): இத்தகைய கம்பெனிகள் இலாப நோக்கத்துடன் தோற்றிவைப்பதல்ல. அறம், கலை, மதம், மருத் துவம், அறிவியல் போன்றவை வளர்ச்சியடையும் பொருட்டு ஏற்படுத்தப்படுபவை. உறுப்பினர்கள் செலுத்தும் நுழைவுக் கட்ட ணம், சந்தாத் தொகை போன்றவை இவைகளின் மூலதனமாகும். இங்குக் கம்பெனியின் கலைப்புச் செலவையும், மற்றக் கடனையும் ஏற்க ஒவ்வோர் உறுப்பினரும் குறிப்பிட்ட ஒரு தொகையின் அளவு பொறுப்பேற்று உறுதிமொழி அளிக்கின்றனர். மத்திய

அரசின் அனுமதி பெற்ற இத்தகைய கம்பெனிகள் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் 'வரையறுக்கப்பட்டன' என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளாமலிருக்கலாம்.

(இ) வரையறாக் கம்பெனி (Unlimited Company): பொறுப்பு வரையறுக்கப்படாத கம்பெனிகளின் உறுப்பினர்கள் கம்பெனியின் கடன்களை அடைக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்க கடமைப்பட்டவர்கள். உறுப்பினர்களின் பொறுப்பு இவ்வளவுதான் என்று வரையறுக்கப்படவில்லை. இங்கு உறுப்பினர்கள் கம்பெனியில் ஏற்படும் கடன்கள் முழுவதையும் தீர்க்கவேண்டும். கடனீந்தோர்கள் உறுப்பினர்கள்மீது நேரடியாக வழக்குத் தொடர முடியாது. கலைப்பிற்குத்தான் ஏற்பாடு செய்யவேண்டும். நம் நாட்டில் இத்தகைய கம்பெனிகள் இல்லை.

மேற்கூறிய ஒவ்வொரு வகைக் கம்பெனியிலும் பொதுக் கம்பெனி, தனிக் கம்பெனி என்ற பாகுபாடு உண்டு.

தனிக் கம்பெனி (Private Company)

தனிக் கம்பெனி குறைந்த அளவு இரண்டு நபர்களையும், உச்ச அளவு ஐம்பது நபர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. கம்பெனியின் வேலையிலிருந்தவர்களும் இருப்பவர்களும் மேற்கூறிய உச்ச அளவில் சேர்த்துக் கொள்ளக் கூடாது. தனிக் கம்பெனியின் பங்குகளை மாற்றித்தர இயலாது. பொது மக்களுக்கு இக் கம்பெனியின் பங்குகள், கடன்பத்திரங்கள் போன்றவை வழங்கப்படுவதில்லை. தனிக் கம்பெனியின் உறுப்பினர்கள் பெரும்பாலும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள், அல்லது அவர்களின் உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களாவார்கள். எனவேதான், மேற்கூறிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இங்கு உறுப்பினர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்திருப்பதால் சட்டம் இதன் நிருவாகத்தில் அவ்வளவாகத் தலையிடுவதில்லை. இக் கம்பெனிகள் தம் பெயரின் கடைசியில் 'தனிவரையறுத்தது' (Private Limited) என்ற சொற்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

அரசுக் கம்பெனி (Government Company)

அரசுக் கம்பெனி என்பது நம் நாட்டில் மாநில அரசு அல்லது மத்திய அரசு அல்லது இரண்டும் சேர்ந்து தொழில்களை நடத்தத் தொடங்கும் கம்பெனிகளாகும். மேலும், இவ் வரசாங்கங்கள் அரசின் நடைமுறைச் சட்டங்களுக்கு உள்ளாகாமல் மற்ற வணிகர்கள் நடத்துவதுபோல் கம்பெனிச் சட்டப்படி இக்

கம்பெனிகளை நடத்தி வருகின்றன. பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் லிமிடெட், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் போன்றவைகளை உதாரணங்களாகக் கூறலாம். அரசுக் கம்பெனி அதன் பங்குத் தொகையில் 51 விழுக்காட்டை மத்திய அரசுக்கோ மாநில அரசுக்கோ கொடுத்திருக்கும். அல்லது இவ்விரு அரசுகளும் 51 விழுக்காடு உள்ள அல்லது அதற்கு மேலுள்ள பங்குகளுக்கு உரிமையுடையனவாக விளங்கும்.

பிடிப்புக் கம்பெனியும் துணைக் கம்பெனியும் (Holding Company and Subsidiary Company)

பிடிப்புக் கம்பெனிக்கு மற்றொரு கம்பெனியின் பெரும் பான்மை இயக்குநர்களை நியமிக்கும் அல்லது நீக்கும் அதிகாரம் உண்டு. மேலும், மற்றொரு கம்பெனியின் 50 விழுக்காட்டிற்கு மேற்பட்ட வாக்குரிமையைக் கட்டுப்படுத்துகிறது. மேலும் மற்றொரு கம்பெனியின் பங்குகளில் 50 விழுக்காடு அளவிற்கு மேற்பட்ட பங்குகளைத் தன்வசம் வைத்துள்ளது.

இப் பிடிப்புக் கம்பெனியின் பிடியில் அடங்கியுள்ள மற்றக் கம்பெனியை துணைக் கம்பெனி என்கிறோம். எடுத்துக்காட்டாக 'அ' எனும் கம்பெனி 'ஆ' எனும் கம்பெனியில் உள்ள 10 இயக்கு நர்களில் அறுவரை நியமிக்கும் உரிமை பெற்றுள்ளது, அல்லது முன்னர்க் குறிப்பிட்டுள்ள கம்பெனியின் சொல்லப்பட்ட கம்பெனி யின் 51 விழுக்காடு ஓட்டுரிமை பெற்றுள்ளது. அல்லது முன் சொன்ன கம்பெனியின் சொல்லியுள்ள கம்பெனியின் சாதாரணப் பங்கு மூலதனமான ரூ. 10,00,000-த்தில் ரூ. 6,00,000 மதிப்புள்ள பங்குகளைத் தன்வசம் வைத்துள்ளது. எனவே 'அ' கம்பெனி யைப் பிடிப்புக் கம்பெனி என்றும் 'ஆ' கம்பெனியைத் துணைக் கம்பெனியென்றும் கூறுகிறோம். மேலும் 'அ' கம்பெனி 'இ' கம்பெனிக்குத் துணைக் கம்பெனியானால் 'ஆ' கம்பெனிக்கு 'அ' கம்பெனிக்கு மட்டும் துணைக் கம்பெனியாகாமல் 'இ' கம்பெனிக்கும் துணைக் கம்பெனியாகும். எனவே, 'அ' 'ஆ' கம்பெனிகளுக்கு 'இ' கம்பெனி பிடிப்புக் கம்பெனியாகும்.

ஒரு பொதுக் கம்பெனியின் துணைக் கம்பெனியாக ஒரு தனிக் கம்பெனி இருந்தால் அதையும் பொதுக் கம்பெனியாகவே கருதப் படும். அது தனிக் கம்பெனியாக அனுபவித்து வந்த சலுகைகள் போய்விடும். பிடிப்புக் கம்பெனியில் துணைக் கம்பெனி பங்குகள் பெறும் உரிமை இல்லை. ஒரு பிடிப்புக் கம்பெனி தன்னுடைய ஆண்டுக் கணக்குகளுடன் துணைக் கம்பெனியின் ஆண்டுக் கணக்குகளின் படியை இணைத்துச் சமர்ப்பிக்க வேண்டும்.

அயல் நாட்டுக் கம்பெனி (Foreign Company)

வெளிநாட்டில் தோற்றுவிக்கப்பட்டு 1956ஆம் ஆண்டின் கம்பெனிச் சட்டத்திற்குமுன் இந்தியாவில் தொழில் ஆரம்பிக்கப் பட்டிருந்த பின்னர் அத் தொழிலையே தொடர்ந்து செயலாற்றிக் கொண்டுவரும் கம்பெனியையும் அல்லது இந்தியாவில் அதன் தொழில் நிறுவப்பட்டாலும் அக் கம்பெனியை அயல்நாட்டுக் கம்பெனி என்கிறோம்.

ஒருநபர் கம்பெனி அல்லது ஒருகுடும்பக் கம்பெனி (One-man Company or Family Company)

ஒரு தனிக் கம்பெனி குறைந்தது இரு உறுப்பினர்களைக் கொண்டும் ஒரு பொதுக் கம்பெனி குறைந்தது ஏழு உறுப்பினர் களைக் கொண்டும் தொடங்கப்படுகிறது. ஒருவர் தம்முடன் மற்றொரு நபரையும் அல்லது ஒருவர் தம்முடன் மற்ற ஆறு நபர் களையும் சேர்த்துக்கொண்டால் முறையே தனிக் கம்பெனியும் பொதுக் கம்பெனியும் ஆரம்பிக்க இருக்கவேண்டிய உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஒருவர் கம்பெனியைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு வேண்டிய பங்குகளைத் தாமே வைத்திருப்பாரே யானால் அதை 'ஒருநபர் கம்பெனி என்கிறோம்'. சில நேரங் களில் ஒருவர் தம் குடும்ப உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு கம்பெனியைத் தொடங்கினால் அதை ஒருகுடும்பக் கம்பெனி என்கிறோம். இங்குக் கம்பெனிகூடத் தம் உறுப்பினர்களிட மிருந்து தனித்தியங்கும் தன்மையைப் பெற்றுள்ளது. (உதாரணம் சாலமன் எ சாலமன் கம்பெனி லிமிடெட்)

பொதுக் கம்பெனிக்கும் தனிக் கம்பெனிக்கும் உள்ள வேறுபாடுகள்

1. தனிக் கம்பெனியை அமைப்பதற்குக் குறைந்தது இரண்டு உறுப்பினரும் அதிக அளவு ஐம்பது உறுப்பினர்களுக்கு மிகாமலும் இருந்தால் போதும். ஆனால் பொதுக் கம்பெனிக்கு குறைந்த அளவு ஏழு உறுப்பினர்கள் வேண்டும். உச்ச வரம்பு கிடையாது. எவ்வளவு நபர்கள் வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

2. தனிக் கம்பெனியில் பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப் படுவதில்லை. ஆனால், பொதுக் கம்பெனியின் நோக்கமே பொது மக்களுக்குப் பங்குகள் வழங்குவதுதான்.

3. தனிக் கம்பெனியில் பங்குகள் மாற்றித்தர முடியாது. அதாவது, ஒருவர் தம் பங்கை மற்றவருக்கு மாற்றித் தரமுடியாது. ஆனால், பொதுக் கம்பெனியின் உறுப்பினர்கள் தம் பங்கை மற்ற வர்களுக்கு மாற்றித் தந்திடலாம்.

4. தனிக் கம்பெனி தன் தொழிலைப் பதிவுச் சான்று பெற்ற வுடனே தொடங்கிவிடலாம். கம்பெனி பதிவாளரிடமிருந்து தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்ற பின்னரே பொதுக் கம்பெனி தொழில் தொடங்கலாம்.

5. தனிக் கம்பெனியில் குறைந்த அளவு இரண்டு இயக்குநர் களும் பொதுக் கம்பெனியில் குறைந்த அளவு மூன்று இயக்குநர் களும் இருக்க வேண்டும்.

6. தனிக் கம்பெனியில் கம்பெனியின் முதற்கூட்டமான சட்டமுறைக் கூட்டம் (Statutory Meeting) நடத்த வேண்டிய அவசியமில்லை. பொதுக் கம்பெனி இக் கூட்டத்தை அவசியம் நடத்தவேண்டும்.

7. தனிக் கம்பெனிகள்மீது அரசின் கண்காணிப்பும் கட்டுப் பாடும் அதிகமில்லை. ஆனால், பொதுக் கம்பெனியின் நடவடிக்கை களைக் கம்பெனிச் சட்ட நிருவாகத்துறை நுணுக்கமாகக் கண்காணித்து வருகிறது. மேலும் கம்பெனிச் சட்டம் விதிக்கும் கட்டுப்பாடுகள் எண்ணிக்கையில் பல.

8. தனிக் கம்பெனியின் பங்குகள் பங்குமாற்றுச் சந்தையில் விற்கப்படுவதில்லை பொதுக் கம்பெனியின் பங்குகளைப் பங்குச் சந்தையில் வாங்குவதும் விற்பதுவும் உண்டு.

தனிக் கம்பெனியின் தனியுரிமை

மேற்கூறிய ஒப்புநோக்குகளினால் பொதுக் கம்பெனியைவிடத் தனிக் கம்பெனி சில சிறப்புரிமைகளையும் தனிச் சலுகைகளையும் பெற்றுள்ளது தெரியவருகின்றது. தனிக் கம்பெனிக்குக் குறைந்த அளவு உறுப்பினர்கள் இருந்தால்போதும். இரண்டு இயக்கு நர்கள் போதும். அவர்களின் ஒப்புதலைக் கம்பெனி பதிவாள ருக்கு அனுப்பவேண்டிய அவசியமில்லை. பதிவாளரிடம் தகவலறிக்கை அல்லது அதற்குப் பதிலாக உள்ள அறிக்கை முதலியவைகள் சமர்பிக்க வேண்டிய அவசியமில்லாமல் பதிவுச் சான்றிதழ் வந்தவுடனே தொழிலைத் தொடங்கலாம். பங்குகளின் வகை, குறைந்த அளவு பங்கெடுப்பு, பங்கு ஒதுக்கீடு போன்ற வைகள்மீது தனிக் கம்பெனியில் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. கம்பெனியின் முதற் கூட்டமான சட்டமுறைக் கூட்டம் நடத்த வேண்டிய அவசியமில்லை. விகித அளவு வாக்குரிமை இல்லாத பங்குகளை அது வெளியிடலாம். கூட்டம் நடத்துதல், ஓட்டுரிமை, இயக்குநர்களை வேலைக்கு அமர்த்துதல், இயக்குநர்களை முறைப்படி ஓய்வுபெறச் செய்தல், இயக்குநர்களுக்குக் கடன்

வழங்குதல், நிருவாக முகவர்களை அமர்த்துதல், நிருவாக ஊதியம் வழங்குதல் போன்றவை மீதுள்ள கட்டுப்பாடுகள் தனிக் கம்பெனிக்குப் பொருந்தாது. எனவே, தனிக் கம்பெனி ஒருபுறம் கூட்டுப் பாங்குக் கம்பெனியின் சிறப்புக்கூறுகளான சட்டத் தோற்றம், நிரந்தரமான இயக்கம், வரையறுக்கப்பட்ட பொறுப்பு போன்றவைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. மறுபுறம் பொதுக் கம்பெனிகளின் மீதுள்ளான கட்டுப்பாடுகள் இல்லாமல் சுதந்திரமாக உள்ளது. எனவே, அநேக விதங்களில் பொதுக் கம்பெனியைவிடத் தனிக் கம்பெனி தனி உரிமைகள் பல பெற்றுச் சிறந்து விளங்குகின்றது.

கம்பெனி தோற்றுவித்தல்
(Formation of Company)

தோற்றுவிப்பாளர் (Promotor)

கம்பெனி ஒன்றைத் தோற்றுவிக்க, பெரும் முயற்சி எடுத்து திட்டம் தீட்டி அதைச் செயலில் காட்டுபவர்தாம் தோற்றுவிப் பாளர். இவர் முதற்கண் என்ன தொழிலில் ஈடுபடலாம் என்று ஆய்ந்து பின்னர் அதற்குத் தேவையான மூலதனம், இடம், தொழில் நுட்பம் போன்றவைகளை எவ்வாறு பெறுவது எனத் திட்டமிடுவதுதான் இவரின் முக்கிய வேலை. பின்னர், பல வல்லுநர்களின் உதவியுடன் கம்பெனியைத் தோற்றுவிக்கும் பொருட்டு அதைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை மேற் கொள்வார்.

தோற்றுவிப்பாளர் என்ற சொல் வணிகச் சம்பந்தப்பட்டதே யன்றிச் சட்ட சம்பந்தமானது அன்று. சட்டத்தில் எங்கும் இவரைப்பற்றி விளக்கிக் கூறவே இல்லை. எனவே, மேற் சொல்லியபடி யாரொருவர் வியாபார வாய்ப்பினைக் கண்டு பிடித்து கம்பெனியை உருவாக்கி அதன் வளர்ச்சிக்கு வழிகோலு கின்றாரோ அவரே தோற்றுவிப்பாளர். அவர்கள் வியாபாரத் தன்மை, கம்பெனியின் நோக்கம், விவகார எல்லை போன்ற வற்றைதிட்டமிட்டுத் தீர்மானிக்கின்றனர்; ஆரம்ப மூலதனத் திற்கு வழி வகுக்கின்றனர்; நடந்துவரும் வியாபாரத்தை வாங்கு கின்றனர்; வழக்கறிஞர்களைத் தேவையான பத்திரங்களைத் தயார்செய்ய வேண்டுகின்றனர். இயக்குநர்களைத் தேர்ந்தெடுக் கின்றனர். தகவல் அறிக்கை வெளியிடுகின்றனர் கம்பெனியின் பங்குகளை மக்கள் வாங்கிடத் தூண்டுகின்றனர்; பதிவுக் கட்ட ணத்திற்குப்பணம் சேர்க்கின்றனர்; கம்பெனி தோன்றுவதற்கான

இதர வேலைகளில் ஈடுபடுகின்றனர். கம்பெனி தோற்றுவிப் பதற்கு ஆகும் செலவிற்குப் பணம் வழங்கியதாலோ அமைப்பு முறையேட்டில் கையொப்பம் இட்டதாலோ ஒருவர் தோற்றுவிப் பாளராக முடியாது என்று திருவேங்கடாச்சாரிக்கும், வேலு முதலியாருக்கும் நடந்த வழக்கில் நீதிமன்றம் கருத்துக் கூறியுள்ளது. எனவே, ஒருவர் அமைப்பு முறையேட்டில் கையொப்பமிட்டுத் தோற்றுவிப்பாளர் ஆற்றும் செயலை ஆற்றாமலிருந்தால் அவர் தோற்றுவிப்பாளர் அல்லர்.

ஊதியம்

தோற்றுவிப்பாளர் ஊதியம் பெறும் உரிமையிலிருந்தும் அவர் 'ஊதியம் கொடுங்கள்' என்று கம்பெனி நிருவாகத்தினரிடம் கேட்பது அரிது. அவர் வாங்கின சொத்துகளை அதிக விலைக்குக் கம்பெனிக்கு விற்று அதில் வரும் இலாபத்தை ஊதியமாகப் பெறுவார். நடந்துவந்த வியாபாரத்தை வாங்கின விலையின் மீது அவருக்குக் கழிவு கொடுப்பதுண்டு. அவருக்கு ஊதியம் ரொக்கப் பணமாகவோ, பங்காகவோ, கடனீட்டுப் பத்திர மாகவோ வழங்கப்படலாம். கம்பெனியால் விற்கப்பட்ட பங்கு களின்மேல் ஒரு குறிப்பிட்ட விகிதம் ஊதியமாகத் தரப்படலாம். இவ்வாறு இவருக்கு அளிக்கப்படும் ஊதியம் தகவலறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்.

தோற்றுவிப்பாளரின் பொறுப்பு

கம்பெனி தோன்றினாலன்றித் தோற்றுவிப்பாளர் ஒரு முகவ ராகவோ, பாதுகாவலராகவோ ஆக முடியாது. அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கம்பெனிக்கும் அவர்களால் ஊக்குவிக்கப் பட்ட பங்குதாரர்களுக்கும் நம்பிக்கையுள்ளவராக அவர் நடந்திட வேண்டும். கம்பெனியின் சார்பாக அவர்கள் ஈடுபடும் செயல் களில் இரகசிய இலாபம் ஒன்றும் பெறக்கூடாது. கம்பெனி அமைக்கும்போது அவர்கள் பெற்ற இலாபத்தைத் தகவல் அறிக்கையில் குறிக்கப்பட வேண்டும். இயக்குநர் குழு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். கம்பெனி கணக்கில் அவர்கள் பெற்றுக்கொண்ட பணத்தைக் காட்டவேண்டும். அவர் நேர்மை யுடனும், நன்னம்பிக்கையுடனும், கம்பெனியின் நலனில் அக்கறையுடையவராகவும் காணப்பட வேண்டும். அவர்கள் வெளியிடும் செய்தி உண்மையானதாகவும் வெளிப்படையாகவும் இருக்கவேண்டும். அவர்கள் எல்லாப் பங்குதாரர்களுக்கும் புரியும் படியாக அல்லது தெரியும்படியாக வெளியிட வேண்டும்.

தகவல் அறிக்கையில் முக்கியமாக வெளியிட வேண்டியதை விட்டுவிட்டாலும் அல்லது பொய்யுரை புனைந்திருந்தாலும் அவர்கள் பொறுப்பாளியாவார்கள். இரகசிய இலாபம் அல்லது வெளியிடாத இலாபம் போன்றவைகளை அவர்களிடமிருந்து கம்பெனி வசூல் செய்துவிடும். அவர்கள் செய்துள்ள ஒப்பந்தத்தைக் கம்பெனி ரத்து செய்துவிடலாம் அல்லது அதனால் அவர் பெற்றுள்ள இலாபத்தைத் திரும்ப வசூல்செய்து விடலாம். அவர்களின் கடமை தவறிய செயல்களாலும் மோசடிகளாலும் ஏற்படும் நட்டங்களுக்கு அவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

தொடக்க ஒப்பந்தமும் தோற்றுவிப்பாளர் பொறுப்பும்

கம்பெனி தோன்றுவதற்குமுன் அது யார்மீதும் வழக்குத் தொடர முடியாது. அதன் மேலும் யாரும் வழக்குத் தொடுக்க வியலாது. தோன்றுவதற்குமுன் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் கம்பெனிக்கு எவ்வித அனுகூலமும் இல்லை. தோன்றப் போகிற ஆனால், இன்னும் தோன்றாத கம்பெனிக்காகத் தோற்றுவிப்பாளர்கள் சில சொத்துகளை வாங்குவர். இன்னும் தோன்றாத கம்பெனியின் முகவராகவும் பாதுகாவலராகவும் அவர்கள் விளங்குகிறார்கள். அத்தகைய ஒப்பந்தங்கள் கம்பெனி தோன்றிய பிறகு செல்லாது. கம்பெனி தோற்றிவைத்த பின்னர் இவ்வொப்பந்தங்கள் உறுதி செய்யப்படமாட்டா. விற்பனையாளர் மீது வழக்குத் தொடர முடியாது. கம்பெனி ஒப்பந்தங்களை ஏற்கும்வரை அவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாவார்கள். கம்பெனி இதே நிபந்தனைகளுடன் மூன்றாம் பேர் வழிகளிடம் ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தும். அத்தகைய ஒப்பந்தம் வெளிப்படையாக இருக்கவேண்டிய அவசியமில்லை. முதல் ஒப்பந்தத்தில் தாங்களும் மூன்றாம் பேர்வழிகளும் பொறுப்பாளியில்லையென ஒரு சரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். கம்பெனி தோன்றுவதற்கு முன் ஏற்பட்ட ஒப்பந்தங்களைச் சிறப்புத் தீர்மானத்தால் தீர்மானிக்கக்கூடாது. மேலும், கம்பெனி அமைப்பு முறையேட்டில் இவ் வொப்பந்தத்தை ஒரு நோக்கமாகக் குறிப்பிடக்கூடாது.

கம்பெனி தோற்றுவிப்பதற்கான நிலைகள் (Stages in the formation of a Company)

பொதுக் கம்பெனியாக இருந்தால் ஏழு நபரும் தனிக் கம்பெனியாக இருந்தால் இரண்டு நபரும் சேர்ந்து சட்டபூர்வமான நோக்கத்திற்காக கம்பெனி முறையேட்டில் தங்கள் பெயர்களை எழுதச்செய்து, சட்டவிதிப்படி கம்பெனியைத்

தொடங்கலாம். கம்பெனி தோற்றுவிப்பதில் மூன்று நிலைகள் உள்ளன.

1. முக்கியப் பத்திரங்களைத் தயாரித்துப் பதிவாளரிடம் தாக்கல் செய்தல்.
2. உரிய கட்டணம் செலுத்துதல்
3. கம்பெனியின் பதிவு அதாவது, கம்பெனித் தோற்றச் சான்று பெறுதல்.

முக்கிய ஆவணங்களைத் தாக்கல் செய்தல்

கம்பெனி தோற்றுவிப்பதின் முதல் நிலையாகக் கீழ்க்காணும் ஆவணங்களை, கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எங்குள்ளதோ அம் மாநிலப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும் என்று சட்டத்தின் பிரிவு 33 கூறுகிறது.

1. அமைப்பு முறையேடு (Memorandum of Association).
2. செயல்முறை விதிகள் (Articles of Association).
3. இயக்குநர் பட்டியலும் எழுத்தாலமைந்த அவர் களுடைய இசைவும்.
4. கம்பெனியின் முதல் இயக்குநர்கள் செயல்முறை விதிகளால் அமர்த்தப்பட்டால் அவர்கள் ஒவ்வொருவரும் எழுத்துமூலம் உள்ள தங்கள் இசைவைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும். மேலும், கம்பெனியில் தகுதிப் பங்கெடுத்துக் கொள்வதாக ஓர் உடன்பாடும் தாக்கல் செய்யவேண்டும். இவை இரண்டும் தனிக் கம்பெனியும் மூலதனம் இல்லாத கம்பெனியும் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால், மற்றக் கம்பெனிகளில் அவ்வாறு எழுதவில்லை யென்றால் அவர்களின் பெயர், தகவல் அறிக்கையில் அதற்குப் பதிலாகத் தாக்கல் செய்யும் பத்திரத் திலும் இருக்காது. இவ்விரு ஆவணங்களையும் தனிக் கம்பெனியும், மூலதனம் இல்லாத கம்பெனியும் பொதுக் கம்பெனியாக மாறு வதற்கு முன்னர் தனிக் கம்பெனியாக இருந்த கம்பெனியும் தொழில் தொடக்க உரிமையுள்ள கம்பெனி ஒரு வருடம் கழித்துத் தகவல் அறிக்கை விடுத்தபோதும் தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை.
5. வருங்கால நிருவாக முகவர், செயலர், கருவூலர் போன்ற வர்கள் கம்பெனியுடன் செய்துகொண்ட உடன்பாடு.
6. கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எங்குள்ளது என்று அறிக்கை விடவேண்டும். இவ் வறிக்கையைப் பதிவு சான்றுபெற்ற 30 நாள்களுக்குள் விடவேண்டும்.

7. பதிவிற்குரிய சட்டச் சடங்குகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று சட்டமுறையான கூற்றைக் கீழ்க் காண்பவர்கள் கூறித் தாக்கல் செய்ய வேண்டும்.

அ) தலைமை நீதிமன்ற அல்லது உயர்நீதி மன்ற நீதிபதிகள்.

ஆ) உயர்நீதி மன்றத்தில் வாதாடும் உரிமையுள்ள வழக் கறிஞர்.

இ) கம்பெனி தோற்றுவிப்பில் கலந்துகொண்டு இந்தியாவில் தொழில் செய்யும் சாசனக் கணக்கர்.

ஈ) செயல் முறை விதிகள் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் இயக்குநர் அல்லது நிருவாக முகவர், செயலர், கருவூலர், மேலாளர் அல்லது செயலர்.

கட்டணம் செலுத்துதல்

மேற்கூறிய ஆவணங்களைத் தாக்கல் செய்த பின்னர் உரிய கட்டணமும் செலுத்த வேண்டும். கம்பெனிப் பதிவாளர் அவைகளைச் சரிபார்த்து ஒவ்வொன்றும் ஒழுங்காக உள்ளது என்று திருப்தி அடைந்தால் தோற்றுவிப்புச் சான்று வழங்குவார் (பிரிவு 33). இச் சான்று வழங்கிய தினத்திலிருந்து கம்பெனி சட்ட பூர்வமாகத் தோன்றிவிட்டதாகப் பொருள். கம்பெனி உண்மையிலே தோன்றிவிட்டதற்கு இச் சான்றுதான் முடிவான ஆதாரம். இச் சான்று கம்பெனிக்குச் சட்ட உருவமும், கூட்டுருவும், நிரந்தர நீடிப்பும் வழங்குகிறது. அமைப்பு முறையேட்டின்படி பங்கு வாங்கியவர்களைத் தவிர, கால வேகத்தில் மற்றவர்களும் பங்குதாரர்களாக ஆகிவிடுவார்கள். அமைப்பு முறையேடும் செயல்முறை விதிகளும் அங்கத்தினர்களைக் கட்டுப்படுத்தும்.

கம்பெனியின் பதிவு, தோற்றம் ஆகியவைகளைப்பற்றி இச் சான்றுதான் முடிவான ஆதாரமாகும். அதில் உள்ள குறைபாடுகளுக்காக அதன்மீது வழக்குத் தொடர முடியாது. சட்ட விரோதமாக அது பதிவு செய்யப்பட்டிருந்தாலும், உதாரணமாகப் பொய்க் கையொப்பம் போட்டும், ஏழு பேருக்கு அறுவர் கையெழுத்திட்டும், ஒப்பந்தத் தகுதியில்லாதவர்கள் ஒப்பந்தத்தில் ஈடுபட்டும் காணப்பட்டால்கூடக் கம்பெனி, தோற்று விப்புச் சான்றை ஒன்றும் செய்ய முடியாது. இச் சான்றில் தேதி தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதில் உள்ள தேதியைத் தான் அதன் தேதியாகக் கொள்ள வேண்டும். பீல்ஸ் (Peel's) வழக்கில் கம்பெனி அமைப்பு முறையேடு பங்குதாரர்கள் கையெழுத்து போட்ட பின்னரும் பதிவு ஆவதற்கு முன்னரும்

திருத்தப்பட்டது. ஆனால், பங்குதாரர்களின் அனுமதி பெற வில்லை. ஒருதடவை தோற்றுவிப்புச் சான்று வழங்கப்பட்டது என்றால் முன்னுள்ள முறைகேடுகளை நோக்கக்கூடாது என்று கைரன்ஸ் பிரபு தீர்ப்புக் கூறினார். எனவே, இச் சான்று பெற்ற பின்னர் கம்பெனியின் தோற்றத்தை யாரும் மறுக்க முடியாது.

அமைப்பு முறையேடு (Memorandum of Association)

கம்பெனி தொடங்கப்பட்டிருக்கும் நோக்கம், கம்பெனியின் பெயர், பதிவலுவலகம், மூலதனம் போன்ற தகவல்கள் அடங்கிய ஆவணமே அமைப்பு முறையேடு என்பது. இதில் குறிப்பிடப் பட்டுள்ள நோக்கங்களை விடுத்து, வேறு எந்த நோக்கத்திற்கும் கம்பெனி தொழிலை நடத்தக் கூடாது. எனவே, இதைக் கம்பெனியின் சாசனம் என்றும் கூறுவர். இனி அமைப்பு முறை யேட்டின் முக்கியச் சரத்துகளைக் காணலாம்:

1. பெயர்ச் சரத்து (Name Clause) : கம்பெனியின் பெயர் இன்னதென்று இதில் குறிப்பிடவேண்டும். வரையறுத்த பொதுக் கம்பெனியாக இருந்தால் 'வரையறுக்கப்பட்டது' என்றும் தனிக் கம்பெனியாக இருந்தால் 'தனி வரையறுக்கப்பட்டது' என்ற சொற்களைக் கம்பெனியின் பெயருக்குப் பின்னால் இணைத்துக்கொள்ள வேண்டும். இக் கம்பெனியின் பெயர் ஏற்கெனவே உள்ள ஒரு கம்பெனியின் பெயராகவோ அல்லது அரசு தொடர்புள்ளதாகவோ இருக்கக்கூடாது. அரசினரின் சின்னம்-பெயர் தவறாகப் பயன்படுத்தும் தடைச் சட்டத்தின் (1950) பிரிவு 20-ன்படி ஏற்கக்கூடாத பெயராக இருத்தல் கூடாது. கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் வட்டார மொழியில் தெளிவாக எழுதப்பட்ட பெயர்ப் பலகை தொங்க விடப்பட வேண்டும். கம்பெனியின் எல்லாக் கடிதங்களிலும், மாற்று முறையாவணங்களிலும், ரசீதுகளிலும் கம்பெனியின் பெயரும் இடமும் அச்சிட்டிருக்க வேண்டும். கம்பெனியின் முத்திரையிலும் இவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

2. இடச் சரத்து (Situation Clause) : எந்த மாநிலத்தில் கம்பெனியின் பதிவு அலுவலகம் அமைந்துள்ளது என்பது இச் சரத்தில் குறிப்பிடப்பட வேண்டும். கம்பெனியின் விவகார எல்லைக்குள் அமைந்துள்ள நீதி மன்றத்தைத் தீர்மானித்திட இஃது உதவும். எங்குக் கம்பெனி அமைந்துள்ளது என்பதைக் கம்பெனி தோன்றிய 30 தினங்களுக்குள் பதிவாளரிடம் ஒரு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

3. நோக்கச் சரத்து (Object clause) : கம்பெனி மேற் கொள்ளக்கூடிய தொழில்களைக் குறிப்பிடுவது நோக்கச் சரத்தாகும். இதில் காணும் நோக்கங்களைத் தவிர வேறு நோக்கங்களுக்குக் கம்பெனி தொழில் செய்யக்கூடாது. எனவே, இச் சரத்தை மிகவும் அக்கறையுடன் அமைக்கவேண்டும். இந் நோக்கங்களில் மிகவும் முக்கியமான நோக்கங்கள் என்றும், அவ்வளவு முக்கியமில்லாத நோக்கங்கள் என்றும் இருவகை உண்டு. வியாபாரமில்லாத கம்பெனி எந்த மாநிலத்திற்குத் தங்கள் நோக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட வேண்டும். இச் சரத்தில் குறிப்பிடாத நோக்கங்களைக் கம்பெனி செய்தால் அவை செல்லுபடியாகா. மேலும், அவை அதிகார வரம்பிகந்த (Ultravires) நோக்கங்களாக மாறிவிடும். கம்பெனி யின் எல்லா உறுப்பினர்களாலும் அது உறுதி செய்யப்பட மாட்டாது.

4. மூலதனச் சரத்து (Capital clause) : இச் சரத்தால் கம்பெனியின் மொத்த முதல் எவ்வளவு என்று அறியலாம். இம் மூலதனத்தை அனுமதித்த மூலதனம் (Authorised Capital) அல்லது பதிவு செய்த மூலதனம் (Registered Capital) அல்லது பெயரளவு முதல் (Nominal Capital) என்றும் சொல்வார்கள். இங்குக் கம்பெனி வெளியிடும் பங்கு வகைகள், பங்குகளின் மதிப்பு போன்றவை வெளியிடப்படும். ஒவ்வோர் உறுப்பினரும் குறைந்த பட்சம் ஒரு பங்காவது எடுத்திருக்க வேண்டும். அவர்களின் பெயருக்கு எதிரில் எத்தனைப் பங்குகள் வாங்கியுள்ளார்கள் என்று குறிப்பிடப்படவேண்டும். 'மூலதனம் என்பது கம்பெனியின் கடன் அன்று; பங்குதாரர்களின் கடனுமன்று' என்ற கருத்து எவர்னர் எ. ஜெனரல் அண்டு சி. ஐ. டிரஸ்ட்டு (Evernor *vs.* General and C. I. Trust) என்ற வழக்கில் கூறப்பட்டது.

5. பொறுப்புச் சரத்து (Liability clause) : இச் சரத்தில் பங்குதாரர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதா இல்லையா என்று குறிப்பிடப்பட வேண்டும். வரையறுக்கப்பட்ட பொறுப்பு பங்குகளின் எண்ணிக்கையை அல்லது தொகையை ஒட்டித்தான் அமையும். மேலும் இயக்குநர்கள், நிர்வாக முகவர், மேலாளர் இவர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாமலிருக்க வேண்டு மானால் அவர்கள் பதவி ஏற்பதற்கு முன் அவர்களிடம் தெரிவிக்க வேண்டும். எனவே, இச் சரத்தினால் பங்குதாரர்கள் ஒருமுறை ஒரு பங்கின் முழு அளவைச் செலுத்திவிட்டால் பின்னர் அவர் பணம் செலுத்தவேண்டிய அவசியமில்லை.

6. சங்கச் சரத்து (Association clause) : இச் சரத்தை ஒப்புதல் சரத்து (Subscription clause) என்றும் சொல்லலாம். இச் சரத்தில் அமைப்பு முறையேட்டில் கையெழுத்திட்டவர்கள் தாம் ஒரு கம்பெனியை அமைக்க விரும்புவதாகவும், அவர்கள் பெயருக்கெதிரில் குறிக்கப்பட்ட அளவு பங்குகளை எடுத்துக் கொள்ள ஒப்புவதாகவும் அதன் சொற்களில் உள்ள வாசகம் காணப்பட வேண்டும். மேலும், ஒப்பியவர்கள் தனித்தனியாகத் தம் கையெழுத்தைத் தகுந்த சாட்சியுடன் இடுவார்கள். இங்குக் குறைந்தபட்சம் எழுவர் கையெழுத்திட வேண்டும். இவ்வாறு அமைப்பு முறையேட்டில் கையெழுத்திட்டவர்கள் கம்பெனி இயக்குநர்கள் அமர்த்தப்படும் வரையில் இவர்களே இயக்குநர்களாகத் திகழ்கிறார்கள். தனிக் கம்பெனியின் அமைப்பு முறையேட்டில் இரண்டு நபரும், பொதுக் கம்பெனி முறையேட்டில் எழுவரும் அவசியம் கையெழுத்திட வேண்டும். ஒவ்வொரு முறையேடும் அச்சடித்துப் பத்திக்கட்டி தொடர்ந்த எண்ணிக்கையிட்டு ஒவ்வோர் ஒப்பியவரும் கையெழுத்திட வேண்டும்.

அமைப்பு முறையேட்டின் திருத்தம்

மேற்கண்ட சரத்துகளைக் கொண்டுள்ள அமைப்பு முறையேடு மிகவும் முக்கியமானது. எனவே, இதை எளிதில் திருத்த முடியாது. இருந்தாலும், சில நேரங்களில் இதைத் திருத்திடலாம். கம்பெனியின் பெயரை மாற்றிட, இடத்தை மாற்றிட, நோக்கங்களைமாற்றிட, மூலதன அமைப்பை மாற்றிட, இயக்குநர் பொறுப்பு அல்லது நிர்வாக அதிகாரிகளின் பொறுப்பை மாற்றிடக் கம்பெனி அமைப்பு முறையேட்டை மாற்றிடலாம்.

பெயர்த் திருத்தம்

ஒரு கம்பெனி தன்னுடைய பெயரை ஒரு சிறப்புத் தீர்மானம் போட்டும் மத்திய அரசின் முன் அனுமதிபெற்றும் மாற்றிடலாம். ஒரு கம்பெனியின் பெயர் வேறு ஒரு கம்பெனியின் பெயர்போல் தோன்றினாலும் தானாகவோ மத்திய அரசின் கட்டளையுடனோ மாற்றிடலாம். இவ் விரு நிலைகளிலும் ஒரு சாதாரண தீர்மானமும் மத்திய அரசின் அனுமதியும் பெற வேண்டும். ஆனால், சில நேரங்களில் கம்பெனி தன் பெயருக்குப் பின்னால் 'தனி' (Private) என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளவும் அல்லது தள்ளிவிடவும் மத்திய அரசின் அனுமதி தேவையில்லை.

பதிவு அலுவலக மாற்றம்

கம்பெனியின் அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றிட ஒரு சிறப்புத் தீர்மானம்

தேவை. மேலும், இதை 30 தினங்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். உறுதி செய்யும் பொருட்டுப் பின்னர் கம்பெனி நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். நீதிமன்றத்தின் உறுதிச் சான்றும், பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அம் மாநிலத்திற்குள்ளாகவே மாற்றம் செய்தால் ஒரு சிறப்புத் தீர்மானம் மட்டும் போதும். ஒரே நகரத்திற்குள்ளாகவே மாற்ற வேண்டியிருந்தால் இயக்குநர் குழுவின் தீர்மானமும் பொது மக்களுக்கு ஓர் அறிவிக்கையும் வேண்டும். இச் செய்தியைப் பதிவாளருக்குத் தெரிவிப்பது அவசியம்.

நோக்கச் சரத்தின் மாற்றம்

கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக ஒரு கம்பெனி இச் சரத்தை மாற்றிடலாம் :

1. முன்னைவிடத் திறமையாகவும் இலாபகரமாகவும் தொழிலை நடத்திச் செல்ல மாற்றிடலாம்.

2. புதிய வழிகளால் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றிட மாற்றிடலாம்.

3. கம்பெனி தன் விவகார எல்லையை மாற்றிடவும் விஸ்தரிக்கவும் மாற்றிடலாம்.

4. கம்பெனி தன் தொழிலோடு லாபகரமாகவோ வசதியுடனோ வேறு ஒரு தொழிலைச் சேர்த்துக்கொள்ள மாற்றிடலாம்.

5. தற்போதைய நோக்கங்களை விட்டுவிடுவதற்கும் மாற்றிடலாம்.

6. கம்பெனி மேற்கொண்டுள்ள தொழிலை முழுதும் அல்லது ஒரு பகுதியை விற்றிடவும் மாற்றிடலாம்.

7. மற்றக் கம்பெனியுடன் இணைந்திடவும் கம்பெனி மாற்றிடலாம்.

இச் சரத்தை மாற்றிட சிறப்புத் தீர்மானமும் நீதிமன்றத்தின் உறுதிமொழியும் தேவை. நீதிமன்றத்தின் ஆணையின் ஒரு படியும் திருத்தப்பட்ட முறையேட்டின் ஒரு படியும் மூன்று மாதங்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். இதை உறுதி செய்வதற்கு முன்னர் நீதிமன்றம் கடனீட்டுப் பத்திரதாரர்களின் மறுப்பு ஏதாவது உண்டா என அறிந்துதான் உறுதிச் சான்று வழங்க வேண்டும். பதிவாளரின் மறுப்பு ஏதாவது உண்டா என அறிந்துதான் நீதிமன்றம் மேற்கூறிய சான்றிதழை வழங்கவேண்டும்.

மூலதனச் சரத்துத் திருத்தம்

ஒரு கம்பெனி தன் அனுமதித்த மூலதனத்தை அதிகப்படுத்தவும், மூலதன அமைப்பைத் திருத்தி அமைக்கவும், மூலதனத்தைக் குறைத்திடவும் இச் சரத்தைத் திருத்திடலாம். முதலிரண்டிற்கும் செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சாதாரண அல்லது சிறப்புத் தீர்மானத்துடன் மாற்றிடலாம். திருத்தப்பட்ட படி ஒன்றைப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். மூலதனக் குறைப்பிற்குச் செயல்முறை விதிகள் அனுமதிக்க வேண்டும். சிறப்புத் தீர்மானமும் நீதிமன்ற உறுதிச் சான்றும் வேண்டும். நீதிமன்ற உறுதிச் சான்றை அல்லது அதன் படியொன்றைச் சான்றீட்டுப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

இயக்குநர்களின் பொறுப்பு மாற்றம்

கம்பெனியின் இயக்குநர்களின் அல்லது மேலாளர்களின் பொறுப்பை வரையறுக்கப்படாததாக மாற்றிட செயல்முறை விதிகளில் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்களின் ஒப்புதலும் சிறப்புத் தீர்மானமும் இவர்களின் பொறுப்பை மாற்றிடத் தேவை.

செயல்முறை விதிகள் (Articles of Association)

இவ் வாவணம் கம்பெனியின் உள் நிர்வாகம்பற்றிய ஒழுங்கு விதிகளைக் கொண்டது. கம்பெனிமீது உறுப்பினர்களுக்குள்ள உரிமை, உறுப்பினர்களின்மீது கம்பெனிக் கொண்டுள்ள உரிமை, இயக்குநர்களின் அதிகாரம், கம்பெனி கூட்டங்களை நடத்தும் முறை, வாக்களிக்கும் முறை, பங்குகளை மாற்றித் தருவது, கணக்கு ஏடுகளை வைத்திருக்கும் முறை போன்ற உள் நிர்வாகம் தொடர்பான செய்திகளனைத்தும் செயல்முறை விதிகளில் அவசியம் இடம் பெற வேண்டும். ஒவ்வொரு கம்பெனியும் இவ் வாவணத்தைப் பதிவாளரிடம் அவசியம் தாக்கல் செய்ய வேண்டும். பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பெனிகள் செயல்முறை விதிகளைத் தயாரிக்காத போது, கம்பெனிச் சட்டத்தில் உள்ள அட்டவணை A-ல் கண்டுள்ள விதிகளைத் தங்கள் செயல்முறை விதிகளாக ஏற்றுக் கொள்ளவேண்டும். இதைச் சட்டம் அனுமதிக்கும்.

அமைப்பு முறையேட்டிலுள்ள செய்திகளுக்கு முரணாக இது அமையக்கூடாது. காரணம், இது கம்பெனியின் உயர்ந்த ஆவணமாகக் கருதப்படுகிறது. நம் நாட்டுக் கம்பெனிச் சட்டம் கம்பெனிகளின் செயல்முறையையும் அமைப்பு முறைகளையும்

கட்டுப்படுத்துவதால் கம்பெனி அமைப்பு முறையேடும், செயல் முறை விதிகளும் கம்பெனிச் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் செயல்படும். சட்டத்திற்கு முரணான எந்த விதியும் சரத்தும் செல்லாமற் போய்விடும்.

செயல்முறை விதிகளின் திருத்தம்

செயல்முறை விதிகளைத் திருத்த கம்பெனிக்கு அதிகாரம் உண்டு. ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றிக் கம்பெனியைத் தனிக் கம்பெனியாக மாற்றிட மத்திய அரசின் அனுமதி வேண்டும். அதேபோல் இயக்குநர்கள், நிர்வாக இயக்குநர், மேலாளர் போன்றவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கும், அவர்களின் ஊதியத்தை மாற்றுவதற்கும் அல்லது இது தொடர்பான எவ்விதத் திருத்தங்களுக்கும் மத்திய அரசின் அனுமதி தேவை.

நிபந்தனைகள்

(1) கம்பெனி அமைப்பு முறையேட்டில் காணப்படுகின்ற நிபந்தனைகளுக்கு மாறாக எவ்விதத் திருத்தமும் செய்யக் கூடாது.

(2) கம்பெனிச் சட்டத்தின் உடன்பாடுகளுக்குப் புறம்பாக எவ்விதத் திருத்தமும் செய்யக்கூடாது.

(3) சட்ட விரோதமான திருத்தங்கள் நிகழக்கூடாது.

(4) உறுப்பினர்களின் எழுத்துமூல ஒப்புதலின்றி அவர்கள் மீது அதிகக் கூடுதலான நிதிச் சுமை அமையும் பொருட்டு திருத்தம் ஏற்படக்கூடாது.

(5) இத்தகைய திருத்தங்களால் கம்பெனிக்கும் வெளியாருக்கும் ஒப்பந்த முறிவு ஏற்படக்கூடாது.

(6) பெரும்பான்மையோர் சிறுபான்மையோரை மோசடி செய்யும் வகையில் திருத்தங்கள் ஏற்படக்கூடாது.

செயல்முறை விதிகளின் விளைவு ஒரு கம்பெனிக்கும் அதன் பங்குதாரர்களுக்கும் இடையே உள்ள தொடர்பையும், பங்குதாரர்களுக்கிடையே ஏற்படும் தொடர்பையும், ஒரு கம்பெனிக்கும் வெளியாருக்கும் ஏற்படும் தொடர்பையும் பொறுத்துள்ளது.

கம்பெனி பதிவானதும் அதன் அமைப்புமுறையேடும் செயல்முறை விதிகளும் அதன் நிபந்தனைகளை ஒவ்வோர் உறுப்பினரும் ஏற்றுக்கொண்டு தனித்தனியாகக் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாகக் கருதி எல்லா உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும். எனவே, மேற்கூறிய ஆவணங்களின்

விதிகள் எல்லா உறுப்பினர்களையும் கம்பெனியையும் கட்டுப்படுத்தும். எனவே, கம்பெனி இந் நிபந்தனைகளையோ சட்ட விதிகளையோ பயன்படுத்தி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தலாம். அதேபோல் ஒவ்வோர் உறுப்பினரும் கம்பெனியைக் கட்டுப்படுத்தலாம் என்றாலும் கம்பெனியை ஓரளவுதான் கட்டுப்படுத்த முடியும். ஓர் உறுப்பினருக்கும் மற்ற உறுப்பினருக்கும் இடையே தோன்றியுள்ள ஒப்பந்தமாக இவ் வாவணங்கள் கருதப்படமாட்டா. எனவே, ஓர் உறுப்பினர் மற்றோர் உறுப்பினரை அவர் செயல்முறை விதிகளைப் புறக்கணித்துவிட்டார் என்பதற்காக வழக்குத் தொடர முடியாது. எனவே, அவர்மீது கம்பெனிதான் நடவடிக்கை எடுக்க முடியும். எனினும், சிறுபான்மையோருக்குப் பெரும்பான்மையோர் மோசம் செய்தால் அத் தருணம் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் புரிந்தோர்கள்மீது வழக்குத் தொடரலாம். இருந்தபோதிலும், உறுப்பினர்களுக்கிடையே உள்ள உரிமைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது செயல்முறை விதிகளாகும்.

அவ்விதமாகக் கம்பெனிக்கும் வெளியாருக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தை இவ் வாவணங்கள் உண்டாக்கவில்லை. எனவே, வெளி ஆள் ஒருவர் இவ் வாவணங்கள் அளிக்கும் உரிமைகளையே முழுதும் நம்பியிருக்க வேண்டியதில்லை; முடியவும் முடியாது. ஒப்பந்தத்திற்கு அவர் ஓர் அந்நியராக இருப்பதால் கம்பெனிமீது வழக்கும் தொடர முடியாது. கம்பெனியுடன் வெளியில் கொண்டுள்ள ஒப்பந்தத்திற்காக வேண்டுமானால் அவர் கம்பெனிமீது வழக்குத் தொடரலாம். சுருங்கக் கூற வேண்டுமாயின் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள வெளி ஆள் கம்பெனி அமைப்பு முறையேட்டையும் செயல்முறை விதிகளையும் நன்றாகக் கவனித்து இருக்கவேண்டும்; இதை ஆக்கபூர்வமான அறிவிக்கைக் கோட்பாடு என்பர். இருந்தாலும், அவர் உள் விவகாரச் சடங்குகளைக் கடைப்பிடிக்கவேண்டும். இதை உள் நிர்வாகக் கோட்பாடு என்பர்.

தகவலறிக்கை (Prospectus)

தனிக் கம்பெனிகள் கம்பெனி அமைப்புச் சான்றிதழ் பெற்றவுடன் தொழிலை ஆரம்பிக்கலாம். ஆனால், பொதுக் கம்பெனிகள் தொழிலைத் தொடங்குவதற்கு முன் மேலும் சில சட்டச் சடங்குகளைச் செய்து முடிக்கவேண்டும். அவைகளில் ஒன்று தகவலறிக்கை தயாரித்து வெளியிடுதலாகும். ஒரு பொதுக் கம்பெனியின் பங்கையோ கடனீட்டுப் பத்திரத்தையோ பொதுமக்கள் வாங்கிட அவர்களுக்குக் கம்பெனி விடும் ஓர்

அழைப்பே தகவலறிக்கையாகும். அது ஒரு புத்தகம், அறிவிக்கை, அல்லது ஒரு விளம்பரம் போன்ற அமைப்பில் இருக்கும். ஒரு தனிக் கம்பெனி தகவலறிக்கை வெளியிட வேண்டிய அவசிய மில்லை. காரணம் அதன் பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப் படுவதில்லை. ஆனால், ஒரு பொதுக் கம்பெனி அவசியம் ஒரு தகவலறிக்கையைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும். இல்லாவிடில் பங்குகளை ஒதுக்கீடு செய்ய முடியாது அல்லது தொழிலை ஆரம்பிக்க முடியாது.

ஒவ்வொரு தகவலறிக்கையும் தேதியிடப்பட வேண்டும். பொதுமக்களுக்கு வெளியிடுவதற்கு முன்பு எல்லா இயக்குநர்களும் கையெழுத்திட்ட அதன் ஒரு படியைப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்த 90 நாள்களுக்குள் தகவலறிக்கை வெளியிடப்பட வேண்டும்.

தகவலறிக்கையில் குறிப்பிட வேண்டிய செய்திகள்

(1) அமைப்பு முறையேட்டிலுள்ள செய்திகளின் சுருக்கம்.

(2) பங்குகள், அவைகளின் வகைகள், எண்ணிக்கை.

(3) இயக்குநர்களின் தகுதிப் பங்களவு.

(4) குறைந்தளவுப் பங்கெடுப்பு (Minimum subscription).

(5) வெளியிடப்படும் மீட்பு, முன்னுரிமைப் பங்குகளைப் பற்றிய செய்திகள்.

(6) கம்பெனியின் நிர்வாக முறை.

(7) இயக்குநர், நிர்வாக இயக்குநர் போன்றவர்களின் ஊதியம்.

(8) தொடக்கச் செலவுகள் பற்றிய விவரம்.

(9) ஒப்புறுதியாளர் (Underwriter) பெயர், முகவரி, ஒப்புறுதிக் கழிவு போன்ற விவரங்கள்.

(10) ஏற்கெனவே இயங்கிவரும் தொழிலைக் கம்பெனி ஏற்று நடத்துவதாக இருந்தால் கடந்த 5 ஆண்டுகளில் அத் தொழில் நடந்துவந்த விவரங்கொண்ட அறிக்கை.

தகவல் அறிக்கையில் பொய்யுரை

தகவல் அறிக்கை கம்பெனிக்கும் பங்கு வாங்குவோருக்கும் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் பொய்யுரை இல்லாமல் உண்மையாக இருக்க வேண்டும்.

குற்ற இயல்பில்லாப் பொறுப்பு (Civil Liability)

ஒரு தகவல் அறிக்கையில் பொய்யுரை இருந்து அதை நம்பி பங்குதாரர்கள் பங்குகளை வாங்கி அதனால் ஏற்படும் நட்டத்திற்கு இயக்குநர்கள், தோற்றுவிப்பாளர்கள், இன்னும் பொறுப்புள்ள அதிகாரிகள் போன்றவர்கள் அந் நட்டத்தை ஈடு கட்ட வேண்டிய பொறுப்பாளியாகிறார்கள். ஆனால், இப் பொறுப்பிலிருந்து விடுதலை அடைய இவர்களுக்குச் சில பாதுகாப்பும் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன.

குற்ற இயல்புள்ள பொறுப்பு (Criminal Liability)

ஒரு தகவல் அறிக்கையில் பொய்யுரை இருக்குமேயானால் அதைத் தயாரித்த ஒவ்வொரு நபருக்கும் இரண்டாண்டு சிறை வாசமும் ரூ. 5,000 அபராதமும் விதிக்கப்படும். ஆனால், அவ்வுரை முக்கிய உரை அன்று என்று நிரூபித்தாலும் அல்லது அச் செய்தி உண்மையானதாக இருக்கவேண்டுமென்று அவர்கள் உண்மையிலேயே நம்பினதற்குத் தகுந்த ஆதாரம் காணப்பட்டாலும் அவர்கள் இப் பொறுப்பிலிருந்து விடுதலை அடைகின்றனர். தகவலறிக்கையில் மோசடி செய்யும் வண்ணம் செய்திகள் இருக்குமேயானால், அதனால் பங்கு வாங்குவோருக்கு ஏற்படும் நட்டத்தையும் அவர்கள் ஈடு செய்ய வேண்டும். தணிக்கையாளர்கள், வங்கியர்கள், திறமை வாய்ந்தவர்கள் ஆகியோருக்குக் குற்ற இயல்புப் பொறுப்பில்லை.

தகவலறிக்கைக்குப் பதிலான அறிக்கை (Statement in lieu of Prospectus)

கம்பெனி தனக்கு வேண்டிய பங்கு மூலதனத்தை உற்றார், உறவினர், நண்பர்களிடமிருந்தே திரட்டி விடுமேயானால் பொது மக்களிடமிருந்து திரட்ட வேண்டிய அவசியமில்லை. எனவே, தகவலறிக்கைக்குப் பதிலான இவ்வறிக்கையைத் தயாரித்துப் பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும். இதிலும் உண்மையான செய்திகளை மட்டுமே குறிப்பிட வேண்டும். இதிலும் எல்லா இயக்குநர்களும் கையெழுத்திட வேண்டும். பங்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர் குறைந்தது மூன்று நாள்களுக்கு முன் இதைப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். இதைத் தாக்கல் செய்யாமல் செய்யப்படும் பங்கு ஒதுக்கீடு செல்லாது. இது சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் பகுதி ஒன்று, இரண்டில் அடங்கியுள்ள விஷயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தகவலறிக்கையின் உள்ளடக்கமும் இதன் உள்ளடக்கமும் ஒன்றுதான்.

தொழில் தொடக்கச் சான்றிதழ் (Certificate of Commencement of Business)

தகவலறிக்கையைப் பார்த்த மக்கள் கம்பெனியில் பங்குகளைப் பெற விரும்பி கம்பெனிக்கு விண்ணப்பம் செய்வார்கள். அவ் விண்ணப்பத்தில் அவர்கள் வாங்க விரும்பும் எண்ணிக்கை குறித்து விண்ணப்பத்துடன் செலுத்தவேண்டிய தொகையையும் சேர்த்து அனுப்புவார்கள். மொத்தம் எடுத்துக்கொள்ளப்பட்ட பங்குகளின் அளவு, குறைந்த அளவு பங்கெடுப்பிற்குள் (Minimum Subscription) இருந்தால், பதிவாளர் தொழில் தொடக்கச் சான்றிதழ் வழங்குவார். இச் சான்றிதழைப் பெற்ற பின்னரே பொதுக் கம்பெனி தொழிலைத் தொடங்கலாம். தனிக் கம்பெனி இச் சான்றிதழ் பெறவேண்டிய அவசியமில்லை. தகவலறிக்கை, கம்பெனியின் பதிவலுவலகம் இருக்குமிடம் பற்றிய அறிக்கை, பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முதலிய எல்லாச் சட்டச் சடங்குகளும் நிறைவேற்றப்பட்டன என்ற மற்றொரு கூற்று போன்றவைகளைப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அவர் குறைந்த அளவு பங்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளதா, இயக்குநர்கள் தத்தம் தகுதிப் பங்குகளின்மீது பணம் செலுத்தி விட்டனரா என்று சரிபார்த்துத் திருப்தி அடைந்த உடனே தொழில் தொடக்கச் சான்றிதழை வழங்குகிறார்.

பலவகைப் பங்குகள் (Different kinds of Shares)

சாதாரணமாகப் பங்குகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். அவை :

1. முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares).
2. சாதாரண அல்லது பொதுநிலைப் பங்குகள்.

முன்னுரிமைப் பங்குகள்

முன்னுரிமைப் பங்குகளை வெளியிடுவதன் நோக்கம் குறிப்பிட்ட அளவு இலாப ஈவு பெற விரும்பும் பங்குதாரர்களை இவ் வகையான பங்குகளில் ஈடுபடச் செய்து முதலீட்டை அதிகப் படுத்துவதுதான். இப் பங்கினைப் பெற்றவர்களுக்கு இரண்டு சிறப்புரிமை உண்டு. கம்பெனியின் இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் பங்காதாயமாக முதன்மையாகப் பெறும் உரிமை. கம்பெனி கலைக்கப்பட்டுவிட்டால், தன் பங்குப் பணத்தைச் சாதாரணப் பங்குதாரர்களுக்கு முன்னர் பெறும் உரிமை இவர்களுக்கு உண்டு. முன்னுரிமைப் பங்குகளிலேயே பல வகைகள் உள்ளன. உதாரணமாகக் குவிவு முன்னுரிமைப் பங்குகள்

(Cumulative Preference Shares), எஞ்சியதில் பங்கு பெறும் முன்னுரிமைப் பங்குகள் (Participating Preference Shares), மீட்பு முன்னுரிமைப் பங்குகள் (Redeemable Preference Shares), மாற்றக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் (Convertible Preferece Shares) போன்ற வகைகள் உள்ளன.

குவிவு முன்னுரிமைப் பங்கினை உடையவர்கள் கம்பெனி இலாபம் பெற்றாலும் பெறாவிட்டாலும் குறிப்பிட்ட அளவு பங்காதாயம் பெறும் உரிமையுள்ளவர்களாவர். கம்பெனி சில ஆண்டுகளுக்கு இலாபம் பெறாவிட்டாலும் அப்பொழுது தர வேண்டிய பங்காதாயத்தைச் சேர்த்து வைத்து அது இலாபம் பெறும் ஆண்டில் அனைத்தையும் ஒன்று சேர்த்துத் தர வேண்டும். பின்னர் நடப்பு ஆண்டுக்குரிய இலாப ஈவு தரப்படும்.

எஞ்சியதில் பங்கு பெறும் முன்னுரிமைப் பங்குகளில் பங்கு தாரர்கள், கம்பெனி நிரம்ப இலாபம் ஈட்டும் ஆண்டுகளில் தமக்குத் தானாக வரவேண்டிய குறிப்பிட்ட இலாப ஈவைப் பெறுவதுடன், சாதாரணப் பங்குதாரர்களுடனும் மேலும் இலாப ஈவு பெறும் உரிமை பெற்றுள்ளனர்.

மீட்பு முன்னுரிமைப் பங்குகள் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் கம்பெனியால் மீட்டுக் கொள்ளப்படும். அதாவது, குறிப்பிட்ட காலம் முடிவுற்றதும் பங்குதாரர்களிடமிருந்து பங்கைத் திருப்பிப் பெற்றுக்கொண்டு பங்குத் தொகையை அவரிடம் கொடுப்பர்.

இம் மூன்று வகைகளைத் தவிரக் குவிவு இல்லாத முன்னுரிமைப் பங்குகளும், எஞ்சியதில் பங்கு பெறாத முன்னுரிமைப் பங்குகளும், மீட்பில்லா முன்னுரிமைப் பங்குகளும் புழக்கத்தில் உள்ளன. 1956 ஆம் ஆண்டு கம்பெனிச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன் பின்னுரிமைப் பங்குகள் (Deferred Shares) என்ற வகைப் பங்குகளும் புழக்கத்தில் இருந்தன. இச் சட்டத்திற்குப் பிறகு இவ்வகைப் பங்குகள் வெளியிடப்படுவ தில்லை.

சாதாரணப் பங்குகள் (Ordinary Shares)

கம்பெனிகள் வெளியிடும் பெரும்பான்மையான பங்குகளில் சாதாரணப் பங்குகள் அல்லது பொதுநிலைப் பங்குகள் அதிகம் உள்ளன. இவ்வகைப் பங்குதாரர்களுக்குக் கம்பெனி இலாபத்தில்

செயலாற்றி வரும்போது மட்டும் தான் இலாப ஈவு கிடைக்கிறது. சாதாரணப் பங்குதாரர்களுக்கு மட்டுமே கம்பெனி இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. கம்பெனிக் கூட்டங்களில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உரிமையும் இப் பங்குதாரர்களுக்குண்டு. முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு கொடுத்த பின்னரே சாதாரணப் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு கிடைக்கும். கம்பெனி நல்ல ஆதாயம் பெறும் ஆண்டில் முன்னுரிமைப் பங்குதாரர்களைவிட அதிகமான இலாப ஈவு இப் பங்குதாரர்களுக்குக் கிடைக்கும்.

கம்பெனி கலைக்கப்படும்போதும் முன்னுரிமைப் பங்குதாரர்களின் பங்குக்குரிய தொகையைக் கொடுத்த பின்னர்தான் இவர்களுக்குரிய தொகை கொடுக்கப்படும். இவர்களுக்கு வழங்கப்படும் பங்காதாயம் இயக்குநர்கள் சிபாரிசு செய்யும் தொகைக்கு மேல் வழங்கப்படமாட்டாது. பங்காதாய விகிதம் இலாபத்திற்கேற்ப வருடா வருடம் மாறிடும். விகிதாசாரப்படி ஓட்டுரிமை இல்லாத பொதுக் கம்பெனி பொதுநிலைப் பங்குகளை வழங்காது. கம்பெனி கொண்டு வரும் எல்லாத் தீர்மானங்களிலும் பொதுநிலைப் பங்குதாரர்கள் ஓட்டு அளித்திடலாம். தேர்தல் நடந்தால் அவர்களின் பங்குத் தொகைக்குச் சமமான ஓட்டுரிமை தான் உண்டு.

குறைந்த அளவுப் பங்கெடுப்பு (Minimum Subscription)

பொதுமக்களுக்குப் பங்கு வழங்கிடும் ஒவ்வொரு பொதுக் கம்பெனியும் தொழில் ஆரம்பிக்கக் குறைந்த அளவுப் பங்கெடுப்பு எவ்வளவு இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இதைக் கம்பெனி தகவலறிக்கையில் குறிப்பிட வேண்டும். இக் குறைந்த அளவுப் பங்கெடுப்பைப் பொதுமக்கள் அல்லது ஒப்புறுதியாளர்கள் மூலமாகப் பெற்றிடலாம். கம்பெனி பெற்றிடும் பங்கு விண்ணப்பங்கள் இத் தொகைக்குக் குறைவாக வந்தால் கம்பெனி பங்குகளை ஒதுக்கீடு செய்யாது. ரொக்கத்திற்கில்லாமல் மறுபயன் கருதித் தரப்பட்டுள்ள பங்குகளை இதில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. தகவல் அறிக்கையில் காணப்படும் குறைந்த அளவு பங்கெடுப்புக் கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்:

(1) பங்குத் தொகை விற்பனையால் வரும் பணத்திலிருந்து வாங்கியுள்ள சொத்துகளுக்குத் தரப்போகும் விலை.

(2) தொடக்கச் செலவுகள், ஒப்புறுதியாளர் கழிவு, பங்கு விற்பனையில் தரப்படும் கழிவு போன்ற விவரங்கள்.

(3) மேற்கூறிய நோக்கங்களுக்காக வாங்கப்பட்ட கடன் தொகையைப் பைசல் செய்தல்.

(4) நடைமுறை மூலதனம்.

(5) தொகைகள் குறிப்பிடப்பட்டுள்ள இதரச் செலவினங்கள்.

பங்கு ஒதுக்குதல் (Allotment of Shares)

ஒரு நபரின் விண்ணப்பத்தை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய பங்குகளை ஒதுக்கித் தருவதற்குத்தான் 'பங்கு ஒதுக்கீடு' என்று பெயர். பங்கு ஒதுக்கீட்டில் ஒரு விண்ணப்பதாரரின் முனைவினைக் கம்பெனி ஏற்கிறது என்று பொருள். பங்கு ஒதுக்கீட்டுக் கடிதம் அனுப்பிய பின்னர்தான் கட்டுப்படுத்தக்கூடிய ஒப்பந்தம் தோன்றுகிறது. வழக்கமாகப் பங்கு ஒதுக்கீடு செய்ய இயக்குநர் குழுவிற்குத்தான் அதிகாரம் உண்டு. பறிமுதலான பங்குகளை மறுவெளியீடு செய்வது பங்கு ஒதுக்கீடாகாது.

ஒதுக்கீடு செய்வதற்கு முன் கவனிக்க வேண்டிய விதிகள்

1. முதன்முதலாகப் பங்கு ஒதுக்கீடு செய்வதற்குமுன் ஒரு பொதுக் கம்பெனி பதிவாளரிடம் தகவலறிக்கை அல்லது அதற்குப் பதிலான அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். முதன் முதலாகத் தகவலறிக்கை வெளியிட்ட 120 நாள்களுக்குள் குறைந்த அளவு பங்கெடுப்பிற்காகப் பங்கு கோரும் விண்ணப் பங்கள் பெறவேண்டும்.

2. பங்கு விண்ணப்பத் தொகையை ரொக்கமாகப் பெற்றுக் கம்பெனியின் வங்கியில் போடவேண்டும். விண்ணப்பக் கட்டணம் குறைந்தது பங்குப் பெயரளவு மதிப்பில் 5% இருக்க வேண்டும்.

3. பங்கு வாங்கிட ஒப்பியவர்களின் பட்டியல் தொடங்கும் நாளுக்கு முன்பே பங்கை ஒதுக்கீடு செய்யக்கூடாது. அதேபோல் அதன் முடிவு நாள் முடியாமல் விண்ணப்பத்தைத் திரும்பப் பெறமுடியாது. இம்மூன்று தொடக்க நாளிலிருந்து ஐந்தாவது நாளாகும்.

4. ஒரு கம்பெனி தன் பங்குகளைப் பங்குமாற்றுச் சந்தை யின் (Stock Exchange) பட்டியலில் சேர்த்திடத் தவறினால் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள பங்கு ஒதுக்கீடு செல்லாது.

முறையற்ற பங்கு ஒதுக்கீடு (Irregular Allotment)

மேற்கூறிய நிபந்தனைகளுக்கு வேறுபட்டு எந்தக் கம்பெனி யாவது பங்கு ஒதுக்கீடு செய்யுமேயானால் அதற்கு 'முறையற்ற

பங்கு ஒதுக்கீடு' என்று பெயர். சட்டமுறைக் கூட்டம் நடந்த இரண்டு மாதங்களுக்குள் ஒரு பங்குதாரர் இத்தகைய முறையற்ற பங்கு ஒதுக்கீட்டைத் தவிர்க்கலாம். கம்பெனிக்கும் பங்குதாரர்களுக்கும் ஏற்படும் நட்டத்திற்கு இயக்குநர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

பங்கு ஒதுக்கீடு அறிக்கை (Return of Allotment)

கம்பெனிச் சட்டத்தின் 75ஆவது பிரிவின்படி ஒவ்வொரு கம்பெனியும் (பொது அல்லது தனி) ஒதுக்கீடு நடந்த 30 தினங்களுக்குள் குறிப்பிடப்பட்ட பங்கு ஒதுக்கீடு அறிக்கையொன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். அவ் வறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளின் மதிப்பு, எண்ணிக்கை, ஒதுக்கீடு பெறுவோர்களின் பெயர், முகவரி, ஏனைய விவரங்கள், ஒவ்வொரு பங்கின் மீது செலுத்தப்பட்ட தொகை, செலுத்த வேண்டிய தொகை போன்ற விவரங்களைக் குறிப்பிடவேண்டும்.

சொக்கமில்லாமல் முழுதும் அல்லது ஒரு பகுதியும் செலுத்தப்பட்ட நிலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அதையும் 30 நாள்களுக்குள் ஒதுக்கீடு பெறுபவர்களின் ஒப்பந்தத்துடன் பதிவாளரின் மேற்பார்வைக்கும் சரிபார்ப்பதற்கும் தாக்கல் செய்ய வேண்டும். இவ் வொப்பந்தத்தோடு வேறு விற்பனை ஒப்பந்தம், மற்றச் சேவைகளுக்கான ஒப்பந்தம், வேறு மறு பயனுக்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தம் போன்றவைகளையும் தாக்கல் செய்யலாம். இங்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளின் மதிப்பு, எண்ணிக்கை, எந்த அளவிற்குப் பங்குகள் செலுத்தப்பட்டுள்ளன போன்ற விவரங்களையும் குறிப்பிடவேண்டும். மேலும், மேற்கூறிய ஒப்பந்தங்களின் சரிபார்க்கப்பட்ட படிகளைத் தாக்கல் செய்ய வேண்டும். மேலுதியப் பங்கு (Bonus Share) ஒதுக்கப்படுமானால் அதன் மதிப்பு, எண்ணிக்கை பற்றிய அறிக்கை ஒன்றைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும்.

இல்லாத நபர்கள்மீது அல்லது கற்பனையான நபர்கள்மீது பங்குகள் வாங்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுமாயின் அவர்களுக்கு 5 ஆண்டுச் சிறைவாசம் தண்டனையாகக் கிடைக்கும்.

உறுப்பினர்கள் (Members)

ஒரு கம்பெனியில் அடங்கியுள்ள நபர்களை அல்லது எந்தெந்த நபர்களைக் கொண்டு கம்பெனி திகழ்கிறதோ அவர்களை 'உறுப்பினர்கள்' என்கிறோம். கம்பெனியின் உறுப்பினர்களாவதற்கு வேறு எந்தச் சிறப்புத் தகுதியும் குறிப்பிடப்படவில்லை.

ஓர் உறுப்பினர் ஒரு தனிப்பட்ட நபராகவோ கூட்டு வணிக நிறுவனமாகவோ அல்லது ஒரு கம்பெனியாகவோ இருக்கலாம். உரிய வயது வராத மைனர் உறுப்பினராக முடியாது. பங்குரிமைச் சீட்டைப் பெற்றுள்ளவர் உறுப்பினரல்லர். ஒரு கம்பெனியின் உறுப்பினராக ஆவதற்கு ஒருவர் அதனுடைய அமைப்பு முறையேட்டை ஒப்பியவராக இருக்க வேண்டும். அல்லது கம்பெனியில் பங்கு வாங்கி, உறுப்பினர் பதிவுப் புத்தகத்தில் அவர் பெயரை இடம் பெறச் செய்ய வேண்டும்.

உறுப்பினரின் வகைகள்

கீழ்க்காணும் வழிகளில் ஒருவர் ஒரு கம்பெனியின் உறுப்பினராக முடியும்:

(1) அமைப்பு முறையேட்டை ஒப்பியவராக ஒருவர் கம்பெனியின் உறுப்பினராகலாம். கம்பெனி பதிவு செய்யப்பட்ட கணத்திலேயே அமைப்புமுறையேட்டை உரிய பங்கெடுத்து ஒப்பியவர்கள் எல்லோரும் உறுப்பினர்களாவார்கள். அவர்களின் பெயர்கள் உறுப்பினர் பதிவுப் புத்தகத்தில் காணப்பட்டாலும் அல்லது இல்லாவிட்டாலும் அவர்கள் உறுப்பினர்களாவர்.

(2) விண்ணப்பித்தும், பங்கு ஒதுக்கீடு செய்தும் உறுப்பினராதல்: கம்பெனியின் பங்குக்காக விண்ணப்பம் செய்பவர், அவருக்குப் பங்குகள் ஒதுக்கீடு செய்யும்போது உறுப்பினராகிவிடுகிறார். பங்கு ஒதுக்கீடு கடிதம் அனுப்பிய உடனே அவர் பெயர் உறுப்பினர் பதிவுப் புத்தகத்தில் எழுதப்படுகிறது. அவ்வாறு அவர் பெயர் எழுதப்படாதவரை அவர் உறுப்பினரன்று. எனவே, அவர் பெயர் எழுதப்பட அவர் வழக்காடலாம். விண்ணப்பஞ் செய்வதற்கு ஒரு நிபந்தனையிலிருந்து அதைப் பூர்த்தி செய்யாமல் பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டால் அது செல்லாது. அதே நிபந்தனை பங்கு ஒதுக்கீட்டிற்குப் பின்னரும் தொடர்வதாக இருந்தால் அப் பங்கு ஒதுக்கீடு செல்லுபடியாகும். ஆனால், ஒதுக்கீடு பெறுபவர் நிபந்தனை நிறைவேற்றத்திற்காகக் கம்பெனி மீது வழக்குத் தொடரலாம்.

(3) பங்கு மாற்றித் தருவதால் உறுப்பினராகலாம் (Membership by transfer of Snares): ஒருவர் வேறொருவர் பங்கினைத் தன் மீது மாற்றித் தருவதால் உறுப்பினராகலாம். அவர் பெயரையும் உறுப்பினர் பதிவுப் புத்தகத்தில் எழுத வேண்டும்.

(4) மரபு வழி பங்கு மாற்றப்பட்டு உறுப்பினராதல் (Membership by transmission of Shares) : ஒருவர் இறந்துவிட்டாலோ நொடித்துவிட்டாலோ, அல்லது மனச்சமநிலை இழந்துவிட்டாலோ அவர் பெற்றிருந்த பங்கு மரபு வழியாக மற்றொரு வருக்குச் சொந்தமாகிவிடுகிறது. ஆனால், இத்தகைய மரபு வழி மாற்றத்தைக் கம்பெனிப் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும். அவர் பெயரும் உறுப்பினர் பதிவுப் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும்.

(5) முரண்தடையால் உறுப்பினராதல் (Membership by estoppel): ஒருவர் உண்மையிலேயே உறுப்பினராக இல்லாதிருந்தும் ஓர் உறுப்பினராகப் பாவித்து நடந்து கொண்டால் அவர் பொறுப்பாளியாகிறார். இது முரண்தடைச் சட்டத் தத்துவத்தால் ஏற்படுகிறது.

உறுப்பினர்களின் பொறுப்பு (Liability of members)

பொறுப்பு வரையறுக்கப்படாத கம்பெனியின் கடன்களுக்கு உறுப்பினர்கள் தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாளியாகிறார்கள். பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனியில் அவர்கள் வாங்கியுள்ள பங்குகளின் முழு மதிப்பை ரொக்கமாகக் கட்டிவிட வேண்டும். இதேபோல் உத்தரவாதத்தில் வரையறுக்கப்பட்ட கம்பெனியின் உறுப்பினர்கள் தாங்கள் உறுதி அளித்த தொகையைக் கட்டிவிட வேண்டும். கம்பெனியின் வாழ்நாளுக்குள் அதாவது கம்பெனி கலைக்கப்படாததற்கு முன் அவர் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தச் சொல்லி இயக்குநர்கள் வேண்டலாம். கம்பெனிகள் கலைக்கப்படும்போது கலைப்பதிகாரி (Liquidator) அழைப்புப் பணத்தைக் கோரலாம். அவர் உறுப்பினர் தகுதியைத் துறந்து ஓர் ஆண்டுவரை செலுத்த வேண்டிய தொகைக்காக அவரைக் கம்பெனி நாடலாம். அவரும் அதுவரை அத்தொகையைச் செலுத்தப் பொறுப்பாளியாகிறார். முன்னாள் உறுப்பினராக ஒருவரை பொறுப்பாளியாக்கிட கீழ்க் காணும் நிபந்தனைகள் தேவை:

1. அவர் உறுப்பினர் பதவியைத் துறந்த ஒரு வருடத்திற்குள் கம்பெனி கலைக்கப்பட வேண்டும்.

2. அவர் ஓர் உறுப்பினராக இருந்தபோது பங்கின்மீது கொஞ்சம் தொகை செலுத்த வேண்டியுள்ளதாகப் பாக்கி இருக்க வேண்டும்.

3. தற்சமயம் பங்குகளைப் பெற்றுள்ளோர்களிடமிருந்து கலைப்பதிகாரி இப் பணத்தை வசூலிக்க முடியாமலிருக்க வேண்டும்.

4. அவர் உறுப்பினராக இருந்தபோது ஏற்பட்ட கடனைப் பைசல் செய்வதற்காக அத் தொகை தேவைப்படுவதாக இருக்க வேண்டும்.

உறுப்பினர் நிலையின் முடிவு

கீழ்க்காணும் வழிகளில் ஏதாவது ஒரு வழியில் ஒருவரின் பெயர் உறுப்பினர்ப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டால் அவர் உறுப்பினராக இருக்க முடியாது.

1. அவர் தம் பங்கை வேறு ஒருவருக்கு மாற்றிடும்போதும்,

2. அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்கு பறிமுதலான போதும்,

3. கம்பெனிக்கே தன் பங்கைத் திரும்பக் கொடுத்திடும் போதும்,

4. அவருடைய பங்குகள் அவரை விடுவித்து வெளியேறும் போதும்,

5. அவருடைய பங்குகள் மீது பற்றுரிமை கொண்ட கம்பெனியால் அவருடைய பங்குகள் விற்கப்படும்போதும் அல்லது அவை மீதுள்ள நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றும் போதும்,

6. அவர் இறந்தபோதும், அல்லது திவாலானபோதும், அல்லது மனச் சமநிலை இழந்தபோதும்,

7. பங்கு ஒதுக்கீட்டின் முறைகேட்டிற்காகவும், தகவ லறிக்கையில் காணப்பட்ட பொய்க் கூற்றிற்காகவும், பங்கினை ஒப்ப மறுத்து அவர் ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும்போதும்,

8. அவர் மீட்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகளைப் பெற்றிருந்து அவைகள் மீட்கப்பட்டபோதும்,

9. முழுதும் செலுத்தப்பட்ட பங்கினுக்குப் பதிலாகப் பங்குறுதிச் சீட்டுகள் வாங்கப்பெற்று அவைகளைச் செயல்முறை விதிகள் ஏற்காதபோதும்,

10. கம்பெனியின் அலுவல்கள் கலைக்கப்பட்டபோதும், ஒருவரின் உறுப்பினர் நிலைக்கு முடிவு ஏற்படுகிறது.

பங்குதாரர்களின் வாக்குரிமை (Shareholders' Voting Right)

முன்னுரிமைப் பங்கினைப் பெற்றுள்ளோர்கள் அப் பங்குகளைப் பாதிக்கின்ற அல்லது அவர்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற நிலையில் எழும் தீர்மானத்தின்மேல் வாக்களிக்கலாம். கம்பெனியைக் கலைப்பதற்காக வரும் எத் தீர்மானத்தின் மேலும் இவர்கள் ஓட்டு வழங்கலாம். பங்குக் குறைப்பு அல்லது பங்கைத் திரும்பச் செலுத்துதல் போன்ற தீர்மானங்கள்மீதும் ஓட்டளிக்கலாம். கூட்டம் நடக்கும் தேதிக்கு முன்னர் இரண்டாண்டுகளுக்குக் குறையாமல் குவிவு முன்னுரிமைப் பங்குகளின் இலாப ஈவு செலுத்தப்படாமலிருந்தாலும், அதேபோல் குவிவு இல்லாத முன்னுரிமைப் பங்குகளின் இலாப ஈவு இரண்டாண்டுகளுக்குக் குறையாமல் அல்லது கூட்டத்திற்கு முன்னுள்ள 6 வருடங்களில் 3 வருடங்களுக்குப் பங்காதாயம் செலுத்தப்படாமலிருந்தபோதும், இவர்கள் இது சம்பந்தமான தீர்மானம் வரும்போது ஓட்டளிக்கலாம். ஆனால், சாதாரண அல்லது பொதுநிலைப் பங்குதாரர்கள் கம்பெனிக் கூட்டத்தில் வரும் எந்தத் தீர்மானத்தின்மீதும் ஓட்டளிக்கலாம். தேர்தல் நடத்துங்கால் ஒவ்வொரு பங்குதாரரின் ஓட்டுரிமை அவர்கள் பெற்றுள்ள பங்குகளின் மதிப்புப் பொதுமூலதனத்தில் உள்ள மதிப்பின் விகிதத்தில் அமையும்.

பங்கு அழைப்பு (Call on Share)

கம்பெனி தன் பங்கின் முழு மதிப்பையும் அல்லது முழுத் தொகையையும் ஒரே சமயத்தில் பெறுவது அரிது. விண்ணப்பம் பெறும்பொழுது ஒரு பகுதியும் ஒதுக்கீடு செய்யும்பொழுது ஒரு பகுதியும் பணம் பெறப்படுகிறது. மீதியுள்ள பணத்தை ஒன்று இரண்டு தவணைகளில் வசூலிக்கலாம். எனவே, விண்ணப்ப நிலைக்கும் ஒதுக்கீட்டு நிலைக்கும் அடுத்த நிலைதான் 'அழைப்பு நிலையா'கும். அழைப்பு என்ற சொல்லிற்குப் பங்கின் பணத்தை விரைவில் கட்டச்சொல்வது அல்லது பாக்கித் தொகையைக் கோருவது என்று பொருள். இவ் வழைப்புத் தொகைகள் ரொக்கமாகத்தான் செலுத்தப்படவேண்டும். செயல்முறை விதிகள் கூறப்பட்டுள்ள விதிகளைப்பற்றி இவ் வழைப்பு வெளியிடப்படும். பொதுவாக இயக்குநர் குழு, தீர்மானம் போட்டு அழைப்பு அதிகாரத்தைப் பெற்றுள்ளது. இவ் வதிகாரம் மிகவும் பொறுப்புள்ளதாக இருப்பதால் மிகவும் நல்லெண்ணத்துடன் இதைப் பயன்படுத்த வேண்டும். மற்றபடி இவ் வழைப்புச் செல்லாமற் போய்விடும்.

எப்பொழுது, எப்படி, யாரால் இவ்வழைப்பு விடவேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால், கம்பெனிகள் பொதுவாகப் பின்பற்றும் அட்டவணை (A) என்பது சில விதிகளைக் கூறியுள்ளது:

1. ஒரு பங்கின் இயல் மதிப்பில் 25 விழுக்காட்டிற்குமேல் அழைப்புத் தொகை இருக்கக்கூடாது.

2. இரண்டு அழைப்புகளுக்கு நடுவில் குறைந்தது ஒரு மாதமாவது இடைவெளியிருக்க வேண்டும்.

3. குறைந்த அளவு 14 நாள்களைக் கொண்ட ஓர் அறிவிக்கை பங்குதாரர்களுக்குத் தரவேண்டும்.

4. பங்குகளைக் கூட்டாகப் பெற்றுள்ளோர் தனியாகவும் கூட்டாகவும் அழைப்புத் தொகையைச் செலுத்த வேண்டிய பொறுப்பாளியாகிறார்கள்.

5. குறித்த காலத்தில் பணம் செலுத்தவில்லையென்றால் 5% வட்டியும் சேர்த்துக் கட்டவேண்டும்.

6. அப்படியும் அழைப்புத் தொகையைக் கட்டாவிட்டால் பங்கு பறிமுதல் செய்யப்படும். ஒரு பங்குதாரர், கம்பெனி தனக்குத் தரவேண்டிய கடன் தொகையில் இவ் வழைப்புத் தொகையைச் சரிக்கட்டிக் கொள்ளலாம். ஆனால், கம்பெனி கலைக்கப்படும்போது இவ்வாறு சரிக்கட்ட முடியாது. காரணம், கலைப்பு அதிகாரி அழைப்புத் தொகையைக் கோருவார். இயக்குநர்கள் முன்கூட்டிச் செலுத்தப்படும் அழைப்புத் தொகையைப் பெற்றிடலாம். அதற்கு 6% வட்டி செலுத்த வேண்டும். இவ்வாறு முன்கூட்டிப்பெற்ற அழைப்புப் பணம் திருப்பித் தரப்பட மாட்டாது. ஆனால், கலைப்பின்போது திருப்பித் தரப்படும். பங்காதாயம் கணக்கிடுவதற்கு இதை எடுத்துக்கொள்ளக் கூடாது.

சொந்தப் பங்குகளை வாங்குதல் (Purchase of Own Shares)

மூலதனத்தைக் குறைப்பதால், ஒரு கம்பெனி தன் சொந்தப் பங்குகளைத் தானே வாங்குவது சட்ட விரோதமாகும். கம்பெனியின் அமைப்பு முறையேடு இதை அனுமதித்தால்கூட இதைச் செய்யக்கூடாது. மூலதனக் குறைப்பிற்கு நீதிமன்றம் அனுமதி தந்தாலொழியக் கம்பெனி தன்பங்கை வாங்கக்கூடாது (பிரிவு77). ஒரு பொதுக் கம்பெனி தன் பங்குகளை வாங்கவோ அல்லது ஒரு பிடிப்புக் கம்பெனியின் பங்குகளை வாங்கவோ கடன் தரக்கூடாது.

இவ் விதி, வங்கிக் கம்பெனிகளுக்குப் பொருந்தாது. ஒரு கம்பெனி தன்னுடைய மீட்பு முன்னுரிமைப் பங்குகளை மீட்டுக் கொள்ளலாம்.

தள்ளுபடி செய்து பங்கு வெளியிடுதல் (Issue of Shares on a Discount)

ஒரு கம்பெனி தன் பங்கின் இயல்பான விலையைவிடக் குறைந்த விலைக்குப் பங்கை வெளியிடுவது இதன் பொருள். ஒரு கம்பெனி தன்னுடைய பங்குகளைத் தள்ளுபடி செய்து வெளியிட கீழ்க்காணும் நிபந்தனைகள் தேவை:

1. அது தன்னுடைய தொழிலை ஆரம்பிக்க உரிமை பெற்ற ஓர் ஆண்டு கழித்துத்தான் இவ்வாறு தள்ளுபடி செய்து வெளியிடலாம்.

2. ஏற்கெனவே விற்றுப்போன ஒருவகைப் பங்குகளைத் தள்ளுபடி செய்து வெளியிடலாம்.

3. இத்தகைய வெளியீட்டைக் கம்பெனி தன் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கிறது.

4. 10 விழுக்காட்டிற்கு மேற்படாத அதிக அளவு தள்ளுபடியை இத் தீர்மானம் குறிப்பிடும். தகுந்த நிலைகளில் மத்திய அரசு அனுமதி பெற்று இவ் விகிதத்தை உயர்த்திடலாம்.

5. இத்தகைய வெளியீட்டை நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும்.

6. நீதிமன்றம் அனுமதித்த இரண்டு மாதங்களுக்குள் பங்கு தள்ளுபடி செய்து வெளியிடப்பட வேண்டும்.

7. ஒவ்வொரு தகவலறிக்கையிலும் தள்ளுபடி பற்றிய விவரங்களைக் குறிப்பிடவேண்டும்,

மதிப்புயர்வுடன் பங்கு வெளியிடல் (Issue of Shares at a Premium)

ஒரு கம்பெனி தன் பங்கின் இயல் மதிப்பைவிட அதிகமான விலைக்குப் பங்கை வெளியிட்டால் அதை 'மதிப்புயர்வுடன் வெளியிடுதல்' என்பர். இதற்கான சில நிபந்தனைகளைப் பிரிவு 78 அனுமதித்துள்ளது.

1. இங்ஙனம் பெறும் மதிப்புயர்வை (Premium) பங்கு மதிப்புயர்வுக் கணக்கு என்ற தனிக் கணக்கில் காட்டி வைத்திருக்க வேண்டும்.

2. இக் கணக்கில் உள்ள இருப்பைப் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து தரும் இலாபமாகக் கருதக்கூடாது. ஆனால், கற்பனையான சொத்துகளைப் போக்கிடவும் மேலூதியப் பங்கு வெளியிடவும் பயன்படுத்தலாம்.

பங்குச் சான்று (Share Certificate)

பங்குதாரர்கள் பெற்றுள்ள பங்கிற்கு உரிமையுடைய பத்திரமாகப் பங்குச் சான்று திகழ்கிறது. ஒவ்வோர் உறுப்பினரும் பெற்றுள்ள பங்கைக் குறிப்பிட்டுக் கம்பெனி தன் முத்திரையின்கீழ் வழங்கும் சான்றுதான் பங்குச் சான்றாகும். அதன் உருவம் அல்லது அமைப்புச் செயல்முறை விதிகள் குறிப்பிடப்பட்டிருக்கும். ஒருபங்குச் சான்றில் பங்குகளின் எண்ணிக்கை, பங்குகளின் இயல்பான மதிப்பு, பங்குச் சான்றின் எண், பங்குதாரரின் அல்லது பங்கினைப் பெற்றுள்ளவரின் பெயர், உண்மையாகச் செலுத்தப்பட்ட தொகை போன்ற விவரங்கள் குறிப்பிடப்படவேண்டும். ஒரு பங்கை ஒன்றுக்கு மேற்பட்ட பலர் பெற்றிருந்தாலும் ஒரு பங்குச் சான்றுதான் வழங்கப்படும். மேலும், அவர்களில் யாராவது ஒருவரிடம் பங்குச் சான்றைச் சேர்ப்பித்தால் அஃது எல்லோருக்கும் சேர்ப்பித்ததாகப் பொருள். பங்கு வெளியிடும் நிபந்தனைகள் வேறுவிதமாக இருந்தாலொழிய, பங்கு ஒதுக்கீடு நிகழ்ந்த மூன்று மாதங்களுக்குள்ளும், பங்கு உரிமை மாற்றப் பதிவு நிகழ்ந்து இரண்டு மாதங்களுக்குள்ளும் பங்குச் சான்று வழங்கப்படவேண்டும். இந் நிபந்தனைக்கு மாறுபாடாக நடந்தால் கம்பெனியும், வேண்டுமென்றே இத்தவற்றைப் புரிந்த அதிகாரியும், இத் தவறு தொடரும்வரை நாளொன்றுக்கு ரூபா 500 தண்டத்தொகை செலுத்த நேரிடும். ஒரு பங்குச் சான்று, யாருடைய பெயர் அதில் எழுதப்பட்டுள்ளதோ அவருக்குப் பங்கு உரிமையுடையது என்பதை மறுப்பதிலிருந்து முரண்தடை செய்கிறது. யாருடைய பெயருக்குப் பங்குச் சான்று தரப்படுகிறதோ அவர்தாம் பங்குதாரர் என்று கம்பெனி பொதுவாக அறிவிக்கிறது.

பங்குச் சீட்டு (Share Warrant)

பொறுப்பால் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுக் கம்பெனி, அதன் செயல்முறை விதிகளால் அனுமதிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, பொது முத்திரையிட்டுப் பங்குச் சீட்டு வழங்கலாம். பங்குச் சீட்டைப் பெற்றவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளைப் பெறும் உரிமையுடையவராகிறார். அதனுடன் வழங்கப்படுகின்ற கூப்பன்களால் (Coupons) பின்னர்

கம்பெனியின் இலாப ஈவு பெறலாம். இஃது ஒரு மாற்றுரிமை ஆவணமாகக் கருதப்படுகிறது. இதைச் சேர்ப்பித்தல்மூலம் உரிமைமாற்றம் செய்திடலாம்.

பங்குச் சீட்டு வெளியிட்டவுடன் யாருக்கு அது வழங்கப் பட்டதோ அவர் பெயரை உறுப்பினர் பதிவேட்டிலிருந்து நீக்கி விட வேண்டும். அதற்குப் பதிலாகப் பங்குச் சீட்டின் எண்கள், பங்குச் சீட்டு வெளியிட்ட தேதி போன்றவைகளைப் பதிவேட்டில் பதிய வேண்டும். ஒரு பங்குச் சீட்டு முத்திரையுடன் வெளியிட வேண்டும். கம்பெனியின் செயல்முறை விதிகள் வேறுவிதமாகக் கூறினாலன்றி, பங்குச் சீட்டு வெளியிட்டவுடன் பங்குதாரர் உறுப்பினராக இருக்க முடியாது. ஒருவர் இயக்குநர் ஆவதற்குரிய தகுதிப் பங்கிற்காகப் பங்குச் சீட்டை, பங்கிற்குப் பதிலாகத் தர முடியாது. பங்குச் சீட்டைப் பெற்றிருப்பவர் கம்பெனிக் கலைப் பிற்காக வேண்டுகோள் விடுக்கமுடியாது. அவர் ஓட்டளிக்க முடியாது. ஒரு பங்குச்சீட்டை எப்பொழுது வேண்டுமானாலும் ரத்து செய்துவிட்டுப் பழையபடியும் ஒருவர் உறுப்பினராகலாம். செயல்முறை விதிகள் இம் முறையைத் தடுக்காமலிருந்தால் அவர் பெயரை மீண்டும் உறுப்பினர் பதிவேட்டில் எழுதிவிடலாம்.

பங்குத் தொகுப்பு (Stock)

கம்பெனியின் செயல்முறை விதிகள் அனுமதித்தால் உறுப்பினரின் ஒரு சாதாரணத் தீர்மானத்தின்மூலம் முற்றிலும் செலுத்தப்பட்ட பங்குகளைப் பங்குத் தொகுப்பாக மாற்றிடலாம். ஒருவரின் பங்கு மூலதனத்தின் இணைந்த தொகுப்புதான், பங்குத் தொகுப்பாகும். அதைப் பகுத்து மிகச் சிறிய பகுதியைக்கூட மாற்றிடலாம். பல பகுதிகளாகப் பிரிப்பதற்கு வசதியாக அதன் இயல்பான மதிப்பைப் பொருட்படுத்தாமல் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கலாம். உரிமை மாற்றப் பதிவிற்காக இயக்குநர்கள் அதன் குறைந்தபட்சப் பகுதியை அல்லது அளவை நிருணயம் செய்யலாம். இப் பங்குத் தொகுதி பதிவு செய்யப் பட்டது அல்லது பதிவு செய்யப்படாதது அல்லது கொணர்பவ ருடையது என்று பலவகைப்படும். முதற்கூறியது ஒரு பங்கைப் போல் பதிவுப் பத்திரத்தின்மூலம் மாற்றிடலாம். ஆனால், பின்னால் கூறப்பட்டவை வெறும் சேர்ப்பித்தல்மூலம் மாற்றிட லாம். பங்குத் தொகுப்பைப் பழையபடியும் பங்குகளாக ஒரு சாதாரணத் தீர்மானத்தின்மூலம் மாற்றிடலாம். பங்குத் தொகுப்பைப் பெற்றுள்ளோர்கள் பங்குதாரர்களைப்போல் உரிமைகள், தனி உரிமைகள், நன்மைகள் பெறலாம். கம்பெனிக் கூட்டங்களில் ஓட்டளிக்கும் உரிமையும் பெறலாம்.

ஆனால், பங்காதாயத்தில் பங்குகொள்ளுதல், கலைப்பு ஏற்படும் போது கம்பெனிச் சொத்தில் பங்குகொள்ளுதல் போன்ற உரிமைகளைத் தவிர, வேறு உரிமைகள் இவர்களுக்கில்லை.

இவ்வாறு, பங்கைப் பங்குத் தொகுப்பாக மாற்றியதுபற்றி ஓர் அறிக்கை 30 நாள்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். பங்குத் தொகுப்பில் குறிப்பிட்ட பிரிவுகள் இல்லை. எவ்வளவு தொகைக்கு வேண்டுமென்றாலும் அது வைத்துக் கொள்ளலாம்.

பங்கு உரிமை மாற்றம் (Transfer of Shares)

பொதுக் கம்பெனியின் பங்குதாரர்கள், தங்கள் பங்குகளை மாற்றித்தரும் உரிமை பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். கம்பெனியின் செயல்முறை விதிகள் மாற்றித் தருவதைத் தடை செய்யாவிட்டாலும், சில உரிமை மாற்ற வழிகளின்மீது சில கட்டுப்பாடுகள் விதித்துள்ளன. தனிக் கம்பெனியின் செயல் முறை விதிகள் உரிமை மாற்றலைத் தடைசெய்துள்ளன.

பங்கு உரிமை மாற்றத்தில் கையாளவேண்டிய சட்டமுறை விதிகளாவன :

1. உரிமை மாற்றப் பத்திரம், உரிமை மாற்றம் செய்பவர் கையெழுத்திடுவதற்கு முன்னர் பதிவாளரிடம் அனுப்பித்துக் கொடுக்கப்படும். தேதியை மேலெழுதி வாங்கவேண்டும்.

2. அந்தப் பத்திரத்தில் எல்லா விதிகளும் எழுதி முடிந்த பின்னர், முத்திரையிட்டு, உரிமை மாற்றம் செய்பவரும், பெறுபவரும் கையொப்பம் இடவேண்டும். அங்ஙனம் கொடுத்து இரண்டு மாதத்திற்குள் அதைக் கம்பெனியிடம் சேர்ப்பிக்க வேண்டும். இத்தகைய விதிகள் 1965-ல் வெற்றுரிமை மாற்றத்தைப் புகுத்துவதற்காக ஏற்பட்டன.

3. உரிமை மாற்றப் பத்திரத்துடன் பங்குச் சான்று அனுப்பப்பட வேண்டும்.

4. உரிமை மாற்றம் செய்திட மாற்றம் பெறுபவர் அல்லது செய்பவர் அல்லது அவர்களில் யாராவது விண்ணப்பம் செய்யலாம். உரிமை மாற்றம் செய்பவர் விண்ணப்பித்திருந்தால், மாற்றப்படும் பங்கு முழுதும் செலுத்தப்பட்டதாகவிருந்தால் கம்பெனி உரிமை மாற்றம் பெறுபவருக்குப் பதிவுத் தபாலில் அறிவிக்கை அனுப்ப வேண்டும். அவர் பதிலுக்காக இரு வாரங்கள் பொறுத்திருக்க வேண்டும். இவ் விரண்டு வாரங்

களுக்குள் அவரிடமிருந்து மறுப்பு ஏதும் வாராவிடில் கம்பெனி பங்கு மாற்றத்தைப் பதிவு செய்துவிடும்.

5. கம்பெனி இவ் வுரிமை மாற்றத்தை ஏற்கவில்லை யென்றால் பத்திரம் வந்தடைந்த இரண்டு மாதங்களுக்குள் மாற்றம் செய்பவருக்கும், மாற்றம் பெருபவருக்கும் தன் மறுப்பைத் தெரிவித்துவிட வேண்டும். இம் மறுப்பு வந்த இரண்டு மாதங் களுக்குள் இதற்கு எதிரான மேல்முறையீடு (Appeal) ஒன்றை மத்திய அரசிற்கு அனுப்பலாம்.

6. உரிமை மாற்ற வீண்ணப்பம் வந்த மூன்று மாதங் களுக்குள் புதிய பங்குச் சான்று கம்பெனியால் அனுப்பப்பட வேண்டும்.

7. கம்பெனியின் கட்டாயக் கலைப்பு ஆரம்பித்த பிறகும் அல்லது நீதிமன்றத்தின் மேற்பார்வையில் கம்பெனிக் கலைப்பு நடக்கும்போதும் உரிமை மாற்றம் செய்தால் அது செல்லாது.

8. இறந்தவரின் சட்டப் பிரதிநிதியும் நொடிந்தவரின் அதிகார முறையான கலைப்பு அதிகாரியும் உறுப்பினர்களாக இல்லாவிடினும் பங்கு உரிமை மாற்றம் செய்யலாம். மேற்கூறிய விதிகள் கடனீட்டுப் பத்திரங்கள் உரிமை மாற்றம் செய்வதற்கும், பங்கு மூலதனமற்ற மீதியுள்ள சொத்துகளை மாற்றிடவும் பயன் படும். அழைப்புப் பண பாக்கிக்காகவும், பங்குகளின்மீது கம்பெனி பற்றுரிமை கொண்டபோதும், பங்குகளின் முழுத் தொகைச் செலுத்தாமல் ஒரு பகுதி மட்டும் செலுத்தப்பட்டுள்ள போதும், வருங்கால உரிமை மாற்றம் பெறுபவர் நல்லவராக இல்லாதபோது உரிமை மாற்றப் பத்திரத்தில் குறைகள் உள்ள போதும் இயக்குநர்கள் குழு உரிமை மாற்றத்தை மறுக்கலாம் எனச் செயல்முறை விதிகள் செப்புகின்றன. மேலும், அக் குழு நல்லெண்ணத்துடன் தன் அதிகாரத்தையும் விருப்பத்தையும் பயன்படுத்தலாம். பங்கு உரிமை மாற்றம் பதிவு ஆகும்வரை உரிமை மாற்றம் பெறுபவருக்கு, உரிமை மாற்றம் செய்பவர் பங்குகளின் பாதுகாவலராகவும் காணப்படுகிறார்.

வெற்று உரிமை மாற்றம் (Blank Transfer)

உரிமை மாற்றப் பத்திரத்தில் பெயர், உரிமை மாற்றம் பெறுபவரின் கையெழுத்து, உரிமை மாற்றத் தேதி ஆகியவைகள் குறிப்பிடப்படவில்லை யென்றால், 'அதை வெற்று உரிமை

மாற்றம்' என்று சொல்லலாம். இத்தகைய வெற்று உரிமைத் தாளையும் பங்குச் சான்றையும் பொதுவாக உரிமை மாற்றம் செய்பவர் அதை வாங்குவோரிடமோ ஒரு வங்கியரிடமோ கடனுக்கு ஈடாகத் தரப்படுகிறது. இதை அவர்கள் வெற்றிடங் களைப் பூர்த்திசெய்து அவர்கள் விருப்பம்போல் உறுப்பினர்களாக ஆகலாம். பின்னர் கடன் வாங்கியவர்கள் கடனைப் பைசல் செய்ய முடியவில்லையென்றால் அவர்கள் பங்கை விற்றுக் கடன் தொகையை எடுத்துக்கொள்ளலாம். இத்தகைய வெற்று உரிமை மாற்றத்தைப் பெற்றுள்ளவர் பங்குகள்மீது சமமாக அக்கறை பெறலாம். பிரிவு 108-ன்படி இரண்டு மாதங்களுக்குமேல் நோட்டாக (Currency) வைத்திருக்க முடியாது. வெற்று உரிமை மாற்றம் இலக்காகும் சில குற்றங்களைப் போக்குவதற்காக இது பயன்படுகிறது.

பொய் ஆவணம் புனைந்த உரிமை மாற்றம் (Forged Transfer)

உரிமை மாற்றம் செய்பவரின் கையெழுத்தை, வேறு ஒருவர் கள்ளக் கையெழுத்துப் போட்டு உரிமை மாற்றம் செய்வதை இவ்வாறு கூறுகிறோம். அத்தகைய உரிமை மாற்றத்தைக் கம்பெனி பதிவு செய்தாலும் அது செல்லாது. உரிமை மாற்றம் பெறுபவருக்கும் அதன்மீது உரிமை உண்டாகாது. உண்மையான உரிமை உடையவர் நட்டத்திற்காகக் கம்பெனிமீது வழக்குத் தொடுக்கலாம். மேலும், கம்பெனியின் உறுப்பினர் பதிவு ஏட்டில் அவர் பெயரைத்தான் எழுதவேண்டும் என்று கம்பெனியைக் கட்டாயப்படுத்தலாம். இத்தகைய உரிமை மாற்றத்தால் பெற்றவர் பங்குகளை விற்றால் அவற்றை நல்லெண்ணத்துடன் வாங்குபவருக்கு உரிமை இல்லாமல் போய்விடுகிறது. அவரும் கம்பெனி உறுப்பினராக முடியாது. ஆனால், கம்பெனியை நட்ட ஈடு கோரலாம். அதேபோல் இவ் வடிப்படையில் பதிவு செய்த நபரிடமிருந்து நட்ட ஈடு கம்பெனி கோரிடும்.

மரபுவழிப் பங்கு உரிமை மாற்றம் (Transmission of Shares)

பங்குரிமை சட்டபூர்வமான ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தானாகவே மாறுவதை 'மரபுவழிப் பங்குரிமை மாற்றம்' என்று சொல்கிறோம். இது ஓர் உறுப்பினரின் இறப்பு, நொடிப்பு, மனச் சமநிலை இழப்பு போன்ற நிகழ்ச்சிகள் நிகழும்போது ஏற்படு கிறது. ஒருவர் இறந்துவிட்டால் அவ் வுரிமை அவருடைய வாரிசுதாரர்களுக்கும், ஒருவர் நொடிந்துவிட்டால் உரிமை அதிகார முறையில் வரும் கலைப்பு அதிகாரிகளுக்கும், மனச் சமநிலை இழந்தால் உரிமை, நீதிமன்றம் அவருக்கு அமர்த்திய

பாதுகாவலருக்கும் மாறுகிறது. இவ் வழியில் உரிமை மாற்றம் பெறுபவர் நீதிமன்றத்தின் கட்டளை அல்லது வாரிசுச் சான்றுடன் கம்பெனிக்குத் தம் பெயர் உறுப்பினர் பதிவேட்டில் பதியவேண்டி விண்ணப்பம் தரவேண்டும். அவ்வாறு வந்த வேண்டுகோளைக் கம்பெனி பரிசீலனை செய்து திருப்தியடைந்தால் உடனே அவர் பெயரைப் பதிவு ஏட்டில் பழைய உறுப்பினர் பெயர் இருந்த இடத்தில் அதை அடித்துவிட்டு இவர் பெயரை எழுதிவிடும். எனவே, வழக்கமான உரிமை மாற்றுப் பத்திரம் தேவை இல்லை.

உரிமை மாற்றுச் சான்று (Certification of Transfer)

ஒருவரின் பங்குச் சான்றில் ஒரு பகுதியை மட்டும் மாற்றி விடும்போது இஃது ஏற்படுகிறது. பங்குரிமை மாற்றுப் பத்திரத் தையும் பங்குச் சான்றையும் கம்பெனியிடம் கொடுக்கும்போது கம்பெனி பங்குச் சான்றைத் தன்னிடம் வைத்துக்கொண்டு உரிமை மாற்றத்தில் இவ்வாறு பங்குச் சான்று மாற்றத்திற்காகத் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சான்று எழுதிப் பத்திரத்தை உறுப்பினரிடம் கொடுத்துவிடும். இதைத்தான் 'பங்கு உரிமை மாற்றச் சான்று' என்கிறோம். இச் சான்று பங்குச் சான்றுக்குச் சமமானது. இச் சான்றின் அடிப்படையில் பங்குரிமை மாற்றம் ஏற்படுகிறது. எஞ்சியுள்ள பங்குகளுக்கும் புதுப் பங்குச் சான்று பெறும் பொருட்டு இருப்புச் சீட்டு (Balance Ticket) ஒன்றைக் கம்பெனி வழங்குகிறது.

மேலுதியப் பங்கு (Balance Shares)

மேலுதியத்திற்குப் பதிலாக வழங்கப்படும் பங்குதான் மேலுதியப் பங்காகும். இது பங்குதாரர்கள் கொண்டுள்ள, முழுதும் செலுத்தப்பட்ட பங்குகளுக்கு ஏற்றவாறு அல்லது ஒரு பகுதிமட்டும் செலுத்தப்பட்ட பங்கை முழுதும் செலுத்தப்பட்ட தாக மாற்றிட வெளியிடப்படுகிறது. அதற்காக இலாபத்தை யும் அல்லது வெகுநாளாகப் பிரித்துத் தராமல் வைத்துள்ள இலாபத்தையும் ரொக்கமாகத் தராமல் இவ்வாறு மேலுதியப் பங்காகக் கம்பெனி தருகிறது. உதாரணமாக வருவாய், இலாபம், மூலதன இலாபம். மூலதன மீட்புக் காப்புநிதி, பறிமுதலான பங்குமூலம் கிட்டும் இலாபம், பங்கு அதிகரிப்புத் தொகை போன்ற வைகளிலிருந்து இப் பங்கு வெளியிடப்படுகிறது. இலாபத்தை மூலதனமாக்குவதற்கு இஃது ஒரு சிறந்த வழி. பங்கு விற்கும் அங்காடிக்குச் செல்லாமலேயே கம்பெனி, தன் பங்கு மூலதனத்தை அதிகரிக்கச் செய்கிறது. இதைக் கம்பெனி தன் இலாபத்தை மீண்டும் தன்னிடத்தில் அல்லது தன் மூலதனத்தில் சேர்த்துக்கொள்கிறது என்பர்.

ஒரு கம்பெனி இவ்வாறு தன் இலாபத்தை மூலதனமாக்கி மேலூதியப் பங்கு வெளியிடுவதற்கு அதன் செயல்முறை விதிகள் அனுமதிக்க வேண்டும். கம்பெனியின் பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றவேண்டும். மத்திய அரசின் அனுமதியும் இதற்குத் தேவை.

பங்குப் பறிமுதல் அல்லது தண்ட இழப்பு (Share forfeiture)

ஒரு கம்பெனி தன் பங்கு அழைப்பின்மீது செலுத்தப்படாத பணத்திற்காகத்தான் பங்குகளைப் பறிமுதல் செய்து தண்ட இழப்புச் செய்யலாம். பங்குதாரர்கள் தரவேண்டிய வேறு எந்தக் கடனுக்கும் அவ்வாறு செய்யக்கூடாது. அவ்வாறு பங்குகளைத் தண்ட இழப்பிற்கு ஆளாக்குவதற்கு அதன் செயல் முறை விதிகள் அனுமதிக்கவேண்டும். தண்ட இழப்புப்பற்றிய செயல்முறை விதிகள் கூறும் விதிகளை மிகவும் கவனமுடன் பின்பற்றவேண்டும். பங்குகளின் தண்ட இழப்பு அதிகாரம் ஒரு பொறுப்பான அதிகாரமானதால் நல்லெண்ணத்துடன் செயல்பட வேண்டும். தண்ட இழப்பு நடந்தவுடன் ஒரு பங்குதாரர், உறுப்பினர் நிலையைத் துறந்து, அப் பங்கின்மீது, தான் கொண்டுள்ள உரிமைகள் அனைத்தையும் இழந்துவிடுகிறார். கம்பெனியின் செயல்முறைகள் அனுமதித்தால் அவர், மூன்றாண்டு வரை அப் பணத்திற்குப் பொறுப்பாளியாக இருந்து அதற்குள் பணத்தைக் கட்டித் தன் நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். பங்குகளின் தண்ட இழப்பு ஏற்பட்டு ஓர் ஆண்டிற்குள் கம்பெனி கலைக்கப்பட்டால் பங்களிப்போர் பட்டியல் 'ஆ'வின்படி அவரும் பொறுப்பாளியாகிறார். தண்ட இழப்புச் செய்யப்பட்ட பங்கு, கம்பெனியின் சொத்தாகிவிடுவதால் அஃது அதை ரத்துச் செய்யலாம்; மறுபடியும் வெளியிடலாம். இதை ரத்துச் செய்வதால், பங்கு மூலதனத்தில் குறைப்பு ஏற்பட்டாலும் நீதி மன்றத்தின் அனுமதி தேவையில்லை. தண்ட இழப்பில் ஏதாவது முறைகேடுகள் நிகழ்ந்தால் அது செல்லாமல் போய்விடும். பாதிக்கப்பட்ட பங்குதாரர் தண்ட இழப்புச் செல்லாதென நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவார்.

பங்குகளைச் சரணளித்தல் (Surrender of Shares)

பங்குதாரர்கள் தாமாகவே தங்கள் பங்குகளைக் கம்பெனியிடம் கொடுத்துவிடுதலைப் 'பங்குகளைச் சரணளித்தல்' என்பர். கம்பெனியின் செயல்முறை விதிகள் அனுமதித்தால்தான் இயக்குநர்கள் இப் பங்குகளை ஏற்பார்கள். ஒவ்வொரு சரணளிப்பும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஏற்கப்படவேண்டும். தண்ட இழப்பு நியாயமானதாகக் கருதப்படும்போதும் பகுதிப் பணம்

செலுத்தப்பட்ட பங்குகளைச் சரணளிக்கலாம். சரணளிப்பினை ஏற்பதில் கெட்ட நோக்கம் எதுவும் இருக்கக்கூடாது. முழுதும் செலுத்தப்பட்ட பங்கைக் கம்பெனி ஏற்கக்கூடாது. காரணம், தன் பங்கைத் தானே வாங்குவது சட்ட விரோதமாகும். தண்ட இழப்புக்கு உள்ள விளைவு பங்குச் சரணுக்கும் உண்டு.

பங்குகளின்மேல் பற்றுரிமை (Lien on Shares)

ஓர் உறுப்பினர் கம்பெனிக்குத் தரவேண்டிய பணத்திற்காக அவர்கள் பங்குகளின்மீது கம்பெனி உரிமை கொண்டாடுவதைப் 'பங்குகளின் மீதுள்ள பற்றுரிமை' என்கிறோம். அவருக்குச் சேர வேண்டிய இலாப ஈவு மீதும் மேலூதியப் பங்குமீதும் இவ் வுரிமையைச் செலுத்தலாம். பொதுவாக, இவ் வுரிமையைக் கம்பெனிச் சட்டமுறை விதிகள் அளிக்கின்றன. தகுந்த அறிக்கை விட்டுவிட்டுக் கம்பெனி, அப் பங்குகளை விற்றுக்கூட இவ் வுரிமையை வலுப்படுத்தலாம். ஆனால், பங்குகளின் தண்ட இழப்பு மூலம் இப் பற்றுரிமையை வற்புறுத்த முடியாது. பங்குகளை வாங்குபவர்கூட இப் பற்றுரிமைக்குக் கட்டுப்பட வேண்டும். அடைமான அறிக்கை பெறுவதற்கு முன்பு அடைமானம் வைத்துள்ளவர் தரவேண்டிய கடனுக்குப் பங்கு மேல் உள்ள அடைமானமும் இப் பற்றுரிமைக்குக் கட்டுப்பட்ட தாகும்.

கம்பெனி கடன் பெறும் அதிகாரங்கள் (Borrowing Powers of a Company)

வியாபாரம் நடத்தும் கம்பெனி தகுந்த பிணையம் (Security) கொடுத்துக் கடன் பெறுவதற்கு அதிகாரம் உண்டென உணரப் படுகிறது. ஆனால், கடன் பெறும் அளவு செயல்முறை விதிகளில் குறிப்பிடப்படும்; வியாபாரம் நடத்தாத கம்பெனிகளுக்கு அத்தகைய உட்கிடையான அதிகாரங்கள் இல்லை. அவைகளின் செயல்முறை விதிகளும், அமைப்பு முறையேடும் வெளிப்படை யாக அவ் வதிகாரத்தை வழங்கவேண்டும். அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டால், எந்த அளவுவரை கடன் வாங்கலாம் என்பதை வரையறுத்திடும்.

ஒரு கம்பெனி தன் அதிகாரத்திற்கு மீறிக் கடன் பெற்றால் அக் கடன் அதிகார வரம்பிகந்ததாகும் (Ultravires). முடிவில் கடனும் அதற்குரிய பிணையமும் செல்லாமற் போய்விடும். கடன் ஈந்தோர் கம்பெனியிடமிருந்து ஈட்டுத்தொகை பெற முடியாது. ஆனால், கடன் தொகையைப் பின்தொடரும் உரிமை அவருக்

குண்டு. மேலும், கடன் தொகையைக் கம்பெனி பிரியாமல் இருக்க அவர் ஒரு தடையுத்தரவைப் பெறலாம். கம்பெனி அப் பணத்தை வேறு வழியில் பயன்படுத்துவதற்கு முன்னர் அவர் தலையிட்டு அவ்வாறு நிகழாமல் தடுக்கவேண்டும். அப் பணத்தைத் தன் கடனீந்தோருக்குக் கம்பெனி கொடுக்குமேயானால் அவர் தீர்வு செய்யப்பட்ட கடனீந்தோராக மாறிக் கம்பெனிமீது வழக்குத் தொடுக்கலாம். உட்கிடையான உத்தரவாத முறிவிற்காகக் கடன் தந்தவர் இயக்குநர்கள்மீது தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடுக்கலாம்.

கடன் வாங்குவது இயக்குநர்களின் அதிகார வரம்பிகந்தது என்றால் பங்குதாரர்கள் பொதுக்கூட்டத்தில் அதை உறுதிப் படுத்தலாம். இந் நிலையில் கடன் தந்தவர்கள் கம்பெனிமீது வழக்குத் தொடுத்திடலாம். இங்ஙனம் பங்குதாரர் அதை உறுதிப் படுத்தவில்லையென்றால் மேற்கூறிய உரிமைகளைக் கடன் தந்தவர்கள் பெறுவர். ஒரு பொதுக் கம்பெனி, தன்னுடைய பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் இசைவின்றி அதனுடைய செலுத்திய மூலதனத்திற்குமேல் அல்லது அதனுடைய ஒதுக்கிருப் பிற்குமேல் கடன் வாங்கிடக் கூடாது. ஒரு பொதுக் கம்பெனி, தொழில் தொடக்கச் சான்று வாங்கிடாமல் தன் கடன் பெறும் அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது.

கடனீட்டுப் பத்திரங்கள் (Debentures)

பொதுமக்களிடமிருந்து வாங்கின கடனுக்குச் சான்றாகக் கம்பெனி தன் முத்திரையிட்டு வழங்கும் ஆவணமே கடனீட்டுப் பத்திரமாகும். மேலும், எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட தவணைக்குப் பின் திரும்பத் தந்துவிடுவதாகக் கம்பெனி உறுதியளிப்பதுவும் அதில் அடங்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வட்டியைக் காலாகாலத்தில் செலுத்துவதாகவும் அதில் வாக்குறுதி அடங்கியுள்ளது. பங்குகளைப் போலவே கடனீட்டுப் பத்திரங்களும் மக்களுக்குத் தகவலறிக்கை மூலம் வெளியிடப் படுகின்றன. அவை இயல்பான மதிப்பிற்கு அல்லது அதற்குக் குறைவாக அல்லது அதைவிட மிகுதியாக வெளியிடப்படுகின்றன. பொதுவாகக் கடனீட்டுப் பத்திரங்கள் கோவைகோவையாக வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு கோவையிலும் ஒரே இனமுள்ள கடனீட்டுப் பத்திரங்கள் சிலவிருக்கும். கடனீட்டுப் பத்திரச் சான்றுகளின் பின்னால் அவை வெளியிடப்பட தேவையான நிபந்தனைகள் எழுதப்பட்டிருக்கும். அதில் ஒரு நிபந்தனை கடனீட்டுப் பத்திரங்களின் கோவை எல்லாம் சமமான தகுதி

உடையவைகளாக இருக்க வேண்டும். தேவைப்பட்டால், அவைகளைச் சமவிகிதத்தில் குறைத்திடலாம். எனவே, இச் சமத் தகுதி நிபந்தனை கையாளப்படவில்லை யென்றால், அவை வெளியிடப்பட்ட தேதியை முதலாவதாகவும், வரிசை எண்களை இரண்டாவதாகவும் வைத்து முன்னுரிமைத் தகுதியை நிருணயம் செய்யலாம். கம்பெனியின் செயல்முறை விதிகள் ஏற்றுக்கொண் டால்தான் கடனீட்டுப் பத்திரங்கள் தள்ளுபடியில் வெளியிடலாம். கம்பெனிக்கு இலாபம் வந்தாலும் வராவிட்டாலும் இதன் மீதான வட்டி அவசியம் செலுத்திவிட வேண்டும். ஓட்டுரிமை உள்ள கடனீட்டுப் பத்திரங்களைக் கம்பெனி வெளியிடக்கூடாது. கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதற்கும் அவற்றை வாங்கு வதற்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு அஃது இரண்டு நபர்களிடையேயும் வலியுறுத்தப்பட வேண்டும் என்று பிரிவு 122 இயம்புகிறது.

கடனீட்டுப் பத்திரங்களின் வகைகள் (Kinds of Debentures)

1. கொணர்பவர் கடனீட்டுப் பத்திரங்கள் (Bearer Debentures) : இப் பத்திரங்களின் தொகை, கொணர்பவருக்குச் செலுத்தப்படும். இவைகளை வெறும் சேர்ப்பித்தல் மூலம் மாற்றிடலாம். இவைகளை மாற்றுவதற்குப் பத்திரப் பதிவுக் கட்டணப் பொறுப்பில்லை. பங்குச் சீட்டுகளைப்போல இவை களும் மாற்றுமுறை ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. இதன் விளைவாக இவ்வகைப் பத்திரங்களை முறைப்படி உடையவர்கள் உரிமை மாற்றம் செய்பவர்களைவிட நல்லதோர் உரிமையுடைய வர்களாகின்றனர். கொணர்பவர்களுக்கு வட்டி செலுத்துவதற்கு வசதியாக அவைகளுடன் கிழித்துத் தரக்கூடிய வட்டிச் சீட்டுகள் (Interest Coupons) இணைக்கப்பட்டுள்ளன.

2. பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரங்கள் (Registered Debentures) : கம்பெனியின் பதிவேட்டில் வேறெவருடைய பெயர் பதியப்பட்டுள்ளதோ அவர்கள் அதைக்கொண்டு வந்தால் அவர்களுக்கு அதன் தொகை செலுத்தப்படும். இவைகளை உரிமை மாற்றுப் பத்திரம் ஒன்று தயாரித்து அதைப் பதிவு செய்த பின்னரே மாற்றலாம். உரிமை மாற்றம் செய்யக்கூடிய வழிகள் அதன் சான்றுகளுக்குப் பின்னால் மேலெழுதப்பட்டுள்ளன. இவை மாற்றுமுறை ஆவணமாகக் கருதப்படமாட்டா. இவைகளின் மீதான வட்டியைப் பதிவு செய்யப்பட்ட உடையவர்களுக்கே வட்டிச் சீட்டு அல்லது ரொக்க மூலமாகவும் செலுத்தலாம்.

3. வெற்றுக் கடனீட்டுப் பத்திரங்கள் (Naked Debentures) : இவைகளைச் சாதாரண அல்லது பிணையமற்ற கடனீட்டுப்

பத்திரங்கள் என்றுகூடச் சொல்வதுண்டு. அவைகளுக்குப் பின்னால், தனியான துணைப் பிணையம் ஒன்றுமில்லை. கம்பெனி கலைக்கப்படும்போது இவர்கள் பிணையமற்ற கடனீந்தோர்களாகக் கருதப்படுகின்றனர்.

4. பிணையமுள்ள அல்லது அடைமானக் கடனீட்டுப் பத்திரங்கள் (Secured or Mortgaged Debentures): இவைகளுக்குப் பின்னால் துணைப்பிணையம் இருக்கும். அஃது அடைமானம் அல்லது ஒப்படைப்பு உருவத்தில் உள்ளது. கம்பெனி கலைக்கப் படும்போது பிணையமுள்ள கடனீந்தோர்களாக இவர்கள் கருதப் படுகின்றனர். இப் பிணையம் நிலையான பற்றுப் பொறுப்பு அல்லது இழைவுறு பற்றுப்பொறுப்புப் போன்ற அமைப்பு களிலிருக்கும். பொதுவாகக் கடனீட்டுப் பத்திரங்களை ஈடுகாட்ட நம்பிக்கைப் பத்திரமூலம் கம்பெனியின் சொத்துகளை நம்பிக்கை யாளர்கள் வசம் ஒப்படைப்பார்கள். அவர்கள் கடனீட்டுப் பத்திர தாரர்களின் நன்மை கருதி அச் சொத்துகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள்.

5. மீட்கக்கூடிய கடன்பத்திரங்கள் (Redeemable Debentures) : கடன் பத்திரங்கள் வெளியிடும்போது அவைகளை மீட்கக்கூடிய தேதியைக் கம்பெனி தெரிவித்து, வெளியிடும் கடனீட்டுப்பத்திரங்களை 'மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்கள்' என்கிறோம். அவை ஒரு குறிப்பிட்ட எதிர்காலத் தேதியில்அல்லது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி கழிந்த பின்னர் மீட்கப்படுகின்றன. இவ்வாறு மீட்ட பின்னர், செயல்முறை விதிகள் அனுமதித்தால் அதே சலுகையுடன் அவைகளைத் திரும்பவும் வெளியிடலாம். அவ்வாறு வெளியிடும்போது திரும்பவும் பத்திரக் கட்டணம் கட்டி வெளியிடவேண்டும்.

6. மீட்கமுடியாத கடனீட்டுப் பத்திரங்கள் (Irredeemable Debentures): இவற்றை 'நிரந்தரமான கடனீட்டுப் பத்திரங்கள்' என்றும் சொல்லலாம். இவைகளின் மீட்பிற்கு ஒரு குறிப்பிட்ட தேதியை நிருணயம் செய்வதில்லை என்றாலும் கம்பெனியின் விருப்பம்போல் இவை மீட்கப்படுகின்றன. கம்பெனி கலைக்கப் பட்டாலும் உரிய வட்டி செலுத்தத் தவறினாலும் இவை மீட்கக் கூடிய கடனீட்டுப் பத்திரமாக மாறிவிடும்.

நம்பிக்கைப் பத்திரம் (Trust Deed)

அடைமானக் கடனீட்டுப் பத்திரங்கள் பெரும்பாலும் நம்பிக்கைப் பத்திரங்களால் ஈட்டுறுதி அளிக்கப்படுகின்றன. இப் பத்திரம் கம்பெனியின் சொத்துகளைப் பாதுகாவலர்கள்

பொறுப்பில் வைத்துக் கடனீட்டுப் பத்திரதாரர்களின் நன்மையைக் கருதுகிறது. பாதுகாவலரின் ஊதியம், கடனீட்டுப் பத்திரதாரர்களின் உரிமைகள்போன்ற நிபந்தனைகளை இப் பத்திரம் தன்னகத்தே கொண்டுள்ளது. பாதுகாவலர்கள் அவர்களின் நலனில் அக்கறை காட்ட வேண்டும். பிணையத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் இவர்களே நீதிமன்றத்தின் உதவியில்லாமல்கூடப் பிணையங்களை விற்றுக் கடனீட்டுப் பத்திரதாரர்களுக்குப் பணத்தைக் கொடுத்துப் பத்திரங்களை மீட்டிடுவர். இத்தகைய நம்பிக்கைப் பத்திரத்தால் விளையும் நன்மைகளாவன: நம்பிக்கைப் பத்திரம், கம்பெனியைத் தன் செலவில் பிணையத்தைக் காட்டச் செய்கிறது. கம்பெனியின் சொத்துகளுக்குப் பாதுகாவலர்கள் சட்டப்படி உரிமையாளர்கள் ஆகிவிட்டதால் மறுபடியும் கம்பெனி அவைகளை வேறு யாருக்கும் அடைமானம் வைக்க முடியாது. நாட்டின் நாலாதிசைகளில் சிதறிக்கிடக்கும் கடனீட்டுப் பத்திரதாரர்களைவிடப் பாதுகாவலர்கள் மிகவும் விரைவாகச் செயல்பட முடியும் என்றாலும் பாதுகாவலர்கள் தங்கள் கடமையிலிருந்து வழுவினாலும் புறக்கணிப்புச் செய்தாலும் அவர்களும் பொறுப்பாளி ஆகக்கூடும். ஒரு கடனீட்டுப் பத்திரதாரர் நம்பிக்கைப் பத்திரத்தைப் பார்வையிடவும் தக்க பணம் செலுத்தி அதன்படி ஒன்றைப் பெறவும் உரிமையுள்ளவராகிறார்.

இழைவுறு பற்றுப் பொறுப்பு (Floating Charge)

கம்பெனியின் சொத்துகள்மீது செலுத்தப்படும் பற்றுப் பொறுப்பு நிலையானதாகவும் அல்லது இழைவுறுமான (Floating) தாகவும் இருக்கலாம். கம்பெனியின் குறிப்பிட்ட சொத்துகள்மீது பொறுப்பு ஏற்பட்டு ஏனைய சொத்துகள்மீது அவ்வாறு ஏற்படாமல் இருந்தால் அது நிலையான பற்றுப் பொறுப்பாகும். அச் சொத்துகளின் சட்டபூர்வமான உரிமை பாதுகாவலருக்குச் சென்று விடுவதால் கம்பெனி தன் விருப்பப்படி அவைகளை விற்க முடியாது. பற்றுப் பொறுப்பிற்கு உட்பட்டும் பாதுகாவலரின் அனுமதி பெற்றும்தான் கம்பெனி அச் சொத்துகளை அனுபவிக்கலாம்.

குறிப்பிட்ட சொத்துகள்மீது என்றில்லாமல் எல்லாச் சொத்துகள்மீதும் பற்றுப் பொறுப்பு கொள்வதுதான் இழைவுறு பற்றுப் பொறுப்பாகும். இந்நிலையில் கம்பெனி சொத்துகளைத் தொழில் நடந்துவரும் நாளில் பயன்படுத்தவும் வேண்டுமானால் விற்கவும் உரிமை பெற்றுள்ளது. இதன் விளைவாகப் பற்றுப்

பொறுப்புக்குட்பட்ட சொத்துகளின் குவியல் மாறி, அவை தன் அமைப்பை மாற்றிக் கொள்கின்றன. தற்சமயம் அல்லது எதிர் காலத்தில் உள்ள சொத்துகள்மீது உள்ள நியாயமான பொறுப்பு தான் இழைவு பற்றுப் பொறுப்பாகும். நிலையான நிலைமையை அடையும்வரை அவை மாறிக்கொண்டே இருக்கும். பிறகு அவைகளுக்குண்டான சொத்தின்மீது நிரந்தரமாகி நிலையான பற்றுப் பொறுப்பை உண்டாக்குகின்றன.

கம்பெனி தன் கடனீட்டுப் பத்திரங்களின்மீது அசல் அல்லது வட்டியைச் செலுத்தத் தவறியபோதும், அல்லது கம்பெனி கலைக்கப்படும்போதும், கம்பெனியின் சொத்துகளைப் பராமரிக்க நீதிமன்றம் ஒரு கலைப்பதிகாரியை நியமித்தபோதும், இம் மாற்றம் நிகழ்கிறது. இஃது எதிர்கால அல்லது எதிர்பாராத நிகழ்வடைவான பற்றுப் பொறுப்பன்று. கம்பெனியின் கலைப்பு ஏற்படுவதற்கு முன்னர் 12 மாதங்களுக்குள் ஏற்படும் இழைவு பற்றுப் பொறுப்பு செல்லாமற் போய்விடும். வேறு சில உரிமைகளுக்காக இதைத் தள்ளிப்போடலாம். பொதுவாகப் பின் ஏற்படும் நிலையான பற்றுப் பொறுப்பு முன்னுள்ள இழைவுறு பற்றுப் பொறுப்பின்மீது தனிச் சலுகை பெறும். ஆனால், இழைவுறு பற்றுப் பொறுப்பு பதிவுசெய்யப்பட்டுக் கம்பெனி பின்னால் அடைமானம் வைக்காமலிருந்தால் இச் சலுகை ஏற்படாது.

அடைமானத்தையும் பொருட்பிணைப் பொறுப்பையும் பதிவு செய்தல் (Registration of Mortgage and Charges)

எல்லா அடைமானமும் பொருட்பிணைப் பொறுப்பும் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற அவசியமில்லை. கீழ்க்காணும் சில வகை ஈடுகாட்டுகளை மட்டும் பதிவு செய்தல் போதுமானது.

1. கடனீட்டுப் பத்திரங்களை ஈடுகாட்டும் அடைமானமும் பொருட்பிணைப் பொறுப்பும்.

2. அழைப்பு விடுப்புக்காகப் பங்கு மூலதனத்தின் மீதுள்ள பொருட்பிணைப் பொறுப்பு.

3. அசையா சொத்துகள் மீதுள்ள பொருட்பிணைப் பொறுப்பு.

4. இழைவுறு பற்றுப் பொறுப்பு.

மேற்கூறியவைகள் ஏற்பட்டு 21 நாள்களுக்குள் பதிவாளரிடம் பதிவு செய்யவேண்டும். மேற்கூறிய அடைமானம், பொருட்பிணைப் பொறுப்பிற்கு உட்பட்டுக் கம்பெனிச் சொத்துகள் வாங்கும்போதும் இதே மாதிரியான பதிவுசெய்தல் தேவை.

இவ்வாறு பதிவு செய்யப்படுவதைப் பின்னால் சொத்துகளைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் கவனித்துச் செயல்பட வேண்டும். இவ்வாறு பதிவு செய்யாவிட்டால் அவை தரும் ஈடுகாட்டுகள் செல்லாமற் போய்விடும். கம்பெனி கலைப்பதிகாரிக்கும் கடனீந் தோருக்கும் எதிராக இவ் வீடுகாட்டுச் செல்லாது என்றாலும் பதிவு செய்யப்படாத அடைமானம் பொருட்பிணைப் பொறுப்பும் கம்பெனி தன் கடனைப் பைசல் செய்யும் பொறுப்பைத் தளர்த்தி விடவில்லை. உண்மையில் அவ்வாறு 30 தினங்களுக்குள் அவைகளைப் பதிவுசெய்யக் கம்பெனி தவறிவிட்டால் கடன்களை உடனே பைசல் செய்தாகவேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

கடனீட்டுப் பத்திரதாரர்களுக்குக் கிடைக்கும் பரிகாரம் (Remedies of Debenture Holders)

கடனீட்டுப் பத்திரதாரர் கீழ்க்காணும் பரிகாரங்களைப் பெற்றுள்ளார்.

1. அவர் தம் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு வழக்குத் தொடுக்கலாம் அல்லது ஈட்டுப் பொருளை விற்றுத் தம் பணத்தை எடுத்துக்கொள்ளலாம். இதைத் தமக்காகவும் மற்றக் கடனீட்டுப் பங்குதாரர்களுக்காகவும் அவர் செய்யலாம். பிறகு நீதிமன்றம் தன் அதிகாரியை அனுப்பிச் சொத்துகளை விற்பதற்கு ஏற்பாடு செய்யும்.

2. கடனீட்டுப் பத்திரங்களின் நிபந்தனைகள் அவரை அனுமதித்தால் அவரே அவ் அதிகாரியை நியமிக்கலாம்.

3. கடனீட்டுப் பத்திரங்களைக் கம்பெனி மீட்பதைத் தடை செய்ய அவர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

4. நம்பிக்கைப் பத்திரம் அனுமதித்தால் பாதுகாவலர்கள் விற்கும் சொத்துகளை அவர் பெற்றிடலாம்.

5. கம்பெனியைக் கலைக்கும்பொருட்டு அவர் நீதிமன்றத் திற்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

6. கம்பெனிக் கலைப்பு ஏற்படும்பொழுது தன் ஈட்டுப் பொருளைத் தானே மதிப்புப் போட்டுக் கடனின் பாக்கித் தொகையைக் கோரலாம்.

கடனீட்டுப் பத்திரத்திற்கும் பங்கிற்கும் இடையே உள்ள வேறு பாடுகள்

1. கம்பெனியின் மூலதனத்தின் ஒரு பகுதியாகப் பங்குகள் காணப்படுகின்றன. ஆனால், கடனீட்டுப் பத்திரம் மூலதனத்தின் பகுதியாகாது.

2. பங்குதாரர்கள் கம்பெனியின் உரிமையாளர்களில் ஒருவர். ஆனால், கடனீட்டுப் பத்திரதாரர் கம்பெனியின் கடனாளர்களில் ஒருவர்.

3. கம்பெனி கலைக்கப்படும்போது கடனீந்தோர்கள் என்ற முறையில் கடனீட்டுப் பத்திரதாரர்களே கடனைத் திருப்பிப் பெறும் முந்துரிமை பெறுகிறார்கள். ஆனால், இவர்களுக்கும் பணத்தைச் செலுத்தி, மூன்றாம் நபர் கடனீந்தோர்களுக்கும் பணத்தைச் செலுத்தி பின்னர்தான் பங்குதாரர்கள் தமது மூலதனப் பணத்தைத் திரும்பப் பெறுகிறார்கள்.

4. பங்குதாரர்கள் கம்பெனியின் நிருவாகத்தில் கலந்து கொள்ளும் உரிமையுடையவர்கள். ஆனால், கடனீட்டுப் பத்திர தாரருக்கு இவ் வுரிமை இல்லை.

5. கம்பெனிக்கு இலாபம் வரும் ஆண்டுகளில்தான் இலாப ஈவு பங்குதாரர்களுக்குக் கிடைக்கும். கம்பெனி இலாபம் கிட்டினாலும் அல்லது நட்டம் அடைந்தாலும் கடனீட்டுப் பத்திர தாரர்கட்கு அவசியம் வட்டி தரவேண்டும்.

6. பங்குகள் பெரும்பாலும் மீட்கப்படுவதில்லை. ஆனால், கடனீட்டுப் பத்திரங்கள் பெரும்பாலும் மீட்கப்படுவனவாகவே வெளியிடப்படும்.

7. கம்பெனி பதிவு செய்யப்பட்டவுடன் பங்குகள் வெளி யிடப்படும். ஆனால், கடனீட்டுப் பத்திரங்கள் பெரும்பாலும் கம்பெனி, தொழிலைத் தொடங்கிய சில ஆண்டுகள் கழித்தே வெளியிடப்படும்.

8. கடனீட்டுப் பத்திரங்களுக்குப் பிணையாகக் கம்பெனியின் சொத்துகள் அடைமானம் செய்யப்படுகின்றன. பங்குதாரர் களுக்குப் பிணையேதும் அளிக்கப்படுவதில்லை. நல்ல திறமை யான நிருவாகத்தை நம்பியே மக்கள் பங்குகளை வாங்கு கின்றனர்.

9. ஒரு கம்பெனி சாதாரணமாகத் தன் பங்கைத் தானே வாங்கி உறுப்பினர் நிலையைத் துறப்பதில்லை. ஆனால், ஒரு கம்பெனி தன் கடனீட்டுப் பத்திரத்தைத் தானே மீட்டுக் கடனீட்டுப் பத்திரதாரர் நிலையைப் போக்கிவிடுகிறது.

கூட்டங்களும் தீர்மானங்களும்
(Meetings and Resolutions)

கம்பெனி நடத்தும் உறுப்பினர் கூட்டங்கள் நான்கு வகைப்படும்: 1. சட்டமுறைக் கூட்டம் (Statutory Meeting), 2. ஆண்டுப் பொதுக்கூட்டம் அல்லது சாதாரணக் கூட்டம் (Annual General Meeting or Ordinary Meeting), 3. அசாதாரணப் பொதுக்கூட்டம் (Ex-traordinary Meeting), 4. வகுப்புக் கூட்டம் (Class Meeting).

1. சட்டமுறைக் கூட்டம்: பங்கு மூலதனமுடைய ஒவ்வொரு பொதுக்கம்பெனியும் தொழில் தொடக்கச் சான்று பெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்கு முற்படாமலும் ஆறு மாதங்களுக்கு பிற்படாமலும் இச் சட்டமுறைக் கூட்டத்தை நடத்த வேண்டும். உறுப்பினர்களின் சாதாரண முதற்கூட்டம் இதுதான். இயக்குநர்கள் சட்டமுறை அறிக்கை (Statutory Report) ஒன்றைக் கூட்டம் நடப்பதற்கு 21 நாள்களுக்கு முன்னர் ஒவ்வோர் உறுப்பினருக்கும் அனுப்ப வேண்டும். உறுப்பினர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சட்ட முறை அறிக்கையில் கீழ்க்காணும் தகவல்கள் இருக்கவேண்டும்.

(1) பங்கு ஒதுக்கீடு பற்றிய விவரம், செலுத்தப்பட்ட பகுதி, ஒதுக்கீட்டின் மறுபயன்.

(2) பங்குகள் மூலம் பெற்ற ரொக்கத்தின் மொத்த மதிப்பு.

(3) கம்பெனியின் வரவு செலவுக் கணக்கு தொடக்கச் செலவின் மதிப்பீடு, பங்குகள் வெளியீட்டில் கொடுத்த தள்ளுபடி, கழிவு முதலியன.

(4) இயக்குநர்கள், நிருவாகத்தினர்கள் போன்றோர் பற்றிய விவரங்கள், அழைப்பின்மீது வரவேண்டிய தொகை, பங்கு விற்றதற்கு அளித்த கழிவு.

(5) ஒப்பந்தங்கள் பற்றிய விவரங்கள், கம்பெனியின் அனுமதி கோரி வைக்கப்போகிற உத்தேச மாற்றங்கள்.

(6) ஒப்புறுதியாளர்களால் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களின் அளவு.

சட்டமுறை அறிக்கையில் குறைந்தபட்சம் இரு இயக்குநர்கள் கையெழுத்திட வேண்டும். பங்குகளின் ஒதுக்கீடு ரொக்கம் பெற்றது போன்ற அதன் பகுதிகளைத் தணிக்கையாளர் சான்றுறுதி

செய்யவேண்டும். இவ் வறிக்கையின் ஒரு படியைப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். இக் கூட்டம் நடத்துவதற்கோ அல்லது அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கோ தவறினால் கம்பெனி கட்டாயக் கலைப்பிற்கு இலக்காகும். இவை எல்லாம் ஒரு தனிக் கம்பெனிக்குத் தேவையில்லை.

2. ஆண்டுப் பொதுக்கூட்டம்: கம்பெனி தோன்றிய 18 மாதங்களுக்குள் முதல் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடத்திட வேண்டும். பிறகு வரும் கூட்டங்கள் எல்லாம் ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும். எப்படியும் கடந்த கூட்டம் நடந்து 15 மாதங்களுக்குமேல் போகாமல் அடுத்த கூட்டத்தை நடத்திட வேண்டும். எந்த உறுப்பினர் ஒருவரின் விண்ணப்பத்தின் பேரிலும் மத்திய அரசு கூட்டத்தைக் கூட்டிடக் கம்பெனிக்கு ஆணையிடும். ஆனால், இலாப நோக்கில்லாத கம்பெனி இவைகளிலிருந்து விதி விலக்கு பெறும். சாதாரணமாகத் தொழில்பற்றி விவாதிக்க ஆண்டிற்கொருமுறை இக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இக் கூட்டங்கள் வேலை நாள்களில் தொழில் நடக்கும்போது அல்லது கம்பெனியின் அலுவல் நேரத்தில் அதன் பதிவலுவலகம் உள்ள இடத்தில் நடக்க வேண்டும். இக் கூட்டத்தை நடத்தத் தவறினால் கம்பெனியும் அதன் அதிகாரிகளும் தண்டனைக்கு உள்ளாவார்கள். இக் கூட்டத்தில் கடந்த ஆண்டின் இலாப-நட்டக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பு ஆயப்படும். மற்றும் இயக்குநர்கள் தேர்தல், தணிக்கையாளர் நியமனம், இலாப ஈவு வழங்கல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு 21 நாள்களுக்குக் குறையாமல் உள்ள அறிவிக்கை ஒன்று எல்லா உறுப்பினர்களுக்கும் தர வேண்டும். அவ் வறிவிக்கையில் கூட்டத்தின் இடம், தேதி, காலம், நிகழ்ச்சி நிரல் போன்றவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மாற்றாள் (Proxy) மூலம் ஓட்டளிப்பு அனுமதிக்கப்படும் என்ற குறிப்பு ஒன்று அறிக்கையுடன் இணைக்கப்பட வேண்டும். குறைவெண் (Quorum) அமைந்திடப் பொதுக் கம்பெனியாக இருந்தால் 5 பேரும் தனிக் கம்பெனியாக இருந்தால் 2 பேரும் கூட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். செயல்முறை விதிகள் அனுமதித்தால் வந்திருப்பவர்களுள் ஒருவரைக் கூட்டத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம். ஓர் உறுப்பினர் கூட்டத்தில் ஓட்டளிக்கலாம், அல்லது மற்றொருவரைத் தம்முடைய மாற்றளாக நியமித்து அவரை ஓட்டளிக்கச் செய்யலாம். மாற்றாளுக்குக் கூட்டத்தில் பேசும் உரிமை இல்லை.

செயல்முறை விதிகள் வேறுவிதமாகச் சொன்னாலொழிய ஒரு மாற்றாள் தேர்தல் நடந்தால் மட்டும்தான் ஓட்டளிக்கலாம். மாற்றாள் நியமனப் பத்திரம் தகுந்த முறையில் முத்திரையிட்டும் அமர்த்துவோரின் கையெழுத்துடனும் காணப்பட வேண்டும். இவ்வாறு கம்பெனியில் கொடுக்கப்பட்ட மாற்றாள் பத்திரங்களை ஒவ்வோர் உறுப்பினரும் பார்வையிட உரிமை உண்டு. ஒரு பொதுக்கூட்டத்தின் தீர்மானத்தின்மேல் ஓட்டளிக்கையில் கைதூக்கும் முறையே கையாளப்பட்டு வருகிறது. இவ்வாறு ஓட்டளித்து அறிவிக்கப்பட்டு கூட்ட நடவடிக்கைக் குறிப்பேட்டில் எழுதிவிட்டால் அது நிகழ்ச்சியின் சான்றாகக் கருதப்படுகிறது. தலைவருக்கு ஓட்டளிக்கும் உரிமை சாதாரணமாக இல்லை. கை தூக்கும் முறையில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஓர் ஓட்டுண்டு. கைதூக்கும் முறையில் நடந்த ஓட்டளிப்பின் முடிவைத் தெரிவிக்குபோது ஒரு குறிப்பிட்ட உறுப்பினர்கள் வாக்கெடுப்புக் கோரலாம். அதன் பேரில் தலைவர் 48 மணிக்குள் வாக்கெடுப்பு நடத்த ஆணையிடலாம். கடன் தரவேண்டியவர் களுக்கும் அழைப்புப் பணத்தைச் செலுத்தாதவருக்கும் ஓட்டளிப்பு மறுக்கப்படுகிறது. வாக்கெடுப்பில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட ஓட்டு உண்டு. ஒரு மாற்றாள் வாக்கெடுப் பிலும் ஓட்டளிக்கலாம். இவ்வோட்டுகளைச் சோதனை செய்ய இரு சோதனையாளர்கள் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களில் ஒருவர் உறுப்பினராக இருக்க வேண்டும்.

3. **அசாதாரணப் பொதுக்கூட்டம்:** உறுப்பினர்களின் மேற் கூறிய இரண்டு கூட்டங்களைத் தவிர, சில நெருக்கடி நடவடிக்கை களை விவாதிக்க அதாவது, அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வரை தள்ளிப்போட முடியாத விஷயங்களை ஆராய அசாதாரணப் பொதுக்கூட்டம் நடத்தப்படுகிறது. இக் கூட்டங்கள் இயக்குநர் களின் விருப்பத்தின் பேரிலும், அல்லது கூட்டம் நடக்க வேண்டு மென்று ஒரு குறிப்பிட்ட உறுப்பினர்கள் விரும்பி தங்கள் கையெழுத்து அடங்கிய ஒரு வேண்டுகோளைக் கம்பெனியிடம் கொடுக்கின்ற போதும் நடத்தப்படுகின்றன. 21 நாள்களுக்குள் கூட்டம் நடத்திட வேண்டிய நடவடிக்கைகளை இயக்குநர்கள் எடுத்திட வேண்டும். உறுப்பினர் கொடுத்த வேண்டுகோள் வந்த 45 நாள்களுக்குமேல் போகாமல் ஒரு நாளில் கூட்டம் நடத்திட வேண்டும். இவ்வாறு நடத்திட இயக்குநர்கள் தவறி விட்டால், வேண்டுகோள் விடுத்தவர்களே கூட்டத்தை நடத் திடலாம். கடனீட்டுப் பத்திரதாரர்களின் வேண்டுகோளுக் கிணங்கியும் கூட்டம் கூட்டப்படலாம். சட்டத்தின் பிரிவு 186-ன் படி நீதிமன்றம் இக் கூட்டத்தைக் கூட்டிட கட்டளையிடலாம்.

செய்யலாம்; கம்பெனியின் சார்பாக ஒப்பந்தத்தில் ஈடுபடலாம். கம்பெனியின் செயல்முறை விதிகள் அனுமதித்தால் அவர்கள் தங்கள் அதிகாரங்களை மற்ற நிர்வாக அதிகாரிகளுக்கும் உதவிக் குழுக்களுக்கும் ஒப்படைக்கலாம். என்றாலும், சில அதிகாரங்களைக் கம்பெனிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அவர்கள் தாம் செய்ய வேண்டும். உதாரணமாக, பங்கழைப்புச் செய்தல், கடனீட்டுப் பத்திரம் வெளியிடுதல், கம்பெனியின் பணத்தை முதலீடு செய்தல், கடன் பெறுதல் (பிரிவு 292) போன்றவைகளை அவர்கள் நேரிடையாகச் செய்ய வேண்டும். ஆனால், கடனீட்டுப் பத்திரங்களைத் தவிர வேறு வழியில் கடன் பெறுதலிலும், கம்பெனியின் பணங்களை முதலீடு செய்வதிலும் கடன் வாங்குவதிலும் அதிகாரங்களை ஒப்படைக்கலாம்.

கடமைகள்

கம்பெனியின் தொழில்தன்மை, அளவு பொறுத்துத்தான் இயக்குநர்களின் கடமைகள் மாறுகின்றன. அவைகளைப் பற்றி சாதாரணமாகச் செயல்முறை விதிகளில் விளக்கப்படுகின்றன. இதற்கான சில பொது விதிகள் கூறப்பட்டுள்ளன:

1. இயக்குநர்கள் நியாயமான அக்கரையுடனும், எச்சரிக்கையுடனும் செயலாற்ற வேண்டும்.

2. அவர்கள் பெருந்தன்மையுடனும் தகுதியுடனும் செயலாற்ற வேண்டும்.

3. அவர்கள் கம்பெனியின் முழுநேர ஊழியர்கள் அல்லர். இயக்குநர் அவைக் கூட்டங்களில் வெவ்வேறிடங்களில் நடக்கும் தொழிலாக அவர்கள் கடமைகள் உள்ளன.

4. அவர் எல்லா இயக்குநர் அவைக் கூட்டங்களுக்கும் வரவேண்டிய தேவையில்லாவிட்டாலும் முக்கியமான கூட்டங்களுக்கு அவசியம் வரவேண்டும்.

5. தங்கள் அதிகாரங்களை நிர்வாக அதிகாரிகளுக்கு ஒப்படைக்கும் கடமையும் அவர்களுக்கு உண்டு. அளவை அவர்கள் ஐயமின்றி வரையறுக்க வேண்டும்.

6. தங்கள் அதிகாரங்களுக்குத் தகுந்த முறையில் தங்கள் கடமைகளை அவர்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

7. அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும், சட்டத்திற்கும், செய்முறை விதிகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டும்.

சிறப்புத் தீர்மானம் (Special Resolution): தீர்மானத்துக்கு எதிர்ப்பாக உள்ள வாக்குகளைவிட மூன்று மடங்கு தீர்மானத்திற்கு ஆதரவாக இருந்து நிறைவேற்றப்படும் தீர்மானத்தைச் 'சிறப்புத் தீர்மானம்' என்கிறோம். அதாவது, ஒரு பொதுக் கூட்டத்தில் வந்துள்ள அதாவது நேரிலும் மாற்றாள் மூலமாகவும் வந்துள்ள உறுப்பினர்களில் ¾ பாகம் பெரும் பான்மை பெற்று இத் தீர்மானம் நிறைவேற்றப்படும். இதை நிறைவேற்ற இரண்டு நிபந்தனைகள் உண்டு. இதை இயற்றுவதற்குக் கூட்டப்படும் கூட்டத்திற்கு 21 நாள்கள் முன்னறிவிப்புத் தரவேண்டும். மேலும், அக் கூட்டத்தில் இத் தீர்மானம் கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். கம்பெனியின் பெயரை மாற்றிடவும், கம்பெனியின் நோக்கச் சரத்தை மாற்றிடவும், மூலதனத்தைக் குறைத்திடவும், செயல் முறை விதிகளை மாற்றிடவும் சிறப்புத் தீர்மானம் தேவை.

சிறப்பு அறிவிக்கை தேவைப்படும் தீர்மானம் (Resolution Requiring Special Notice): இவ் வகைத் தீர்மானம் கூட்டத்தில் கொண்டுவரப்படும் என்ற தகவல் உறுப்பினர்களுக்குக் கூட்டம் நடைபெறுவதற்கு 7 நாள்களுக்கு முன்னர்த் தெரிவிக்கப்பட வேண்டும். இத் தீர்மானத்தைக் கொண்டுவர விரும்புபவர் கூட்டம் நடைபெறுவதற்கு 14 நாள்கள் முன்னர் இதுபற்றி அறிவிக்கை ஒன்றை கம்பெனிக்கு அனுப்ப வேண்டும். இயக்குநர் பதவிக் காலம் முடியுமுன் அவரை நீக்கிட, அவ்வாறு நீக்கப்பட்ட இடத்தில் வேறு ஒருவரை இயக்குநராக நியமிக்க, ஓய்வு பெறும் தணிக்கையாளரையன்றி வேறு ஒருவரைத் தணிக்கையாளராக நியமிக்க போன்ற மேலும் சில முக்கிய முடிவுகளை எடுக்க இத் தீர்மானம் இயற்றப்பட வேண்டும்.

கம்பெனி நிருவாகம் (Company Management)

பங்குதாரர்கள் தாம் கம்பெனியின் உரிமையாளர்கள் என்று முன்பு கண்டோம். ஆனால் பல்லாயிரக்கணக்கான பங்கு தாரர்கள் நிருவாகத்தில் பங்கு பெறுவது முடியாத காரியம். எனவே, பங்குதாரர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் இயக்குநர் அவையிடம் நிருவாகத்தை ஒப்படைக்கின்றனர்.

இயக்குநர்கள் (Directors)

தனிக் கம்பெனியாக இருந்தால் குறைந்தது இருவரும், பொதுக் கம்பெனியாக இருந்தால் குறைந்தது மூவரும் இயக்குநர்

களாக இருக்கவேண்டும். இயக்குநர்கள் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தனி நபர்கள் மட்டும்தாம் இயக்குநர்களாக நியமிக்கப்படுகிறார்கள். செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிப் பங்கை அவர்கள் அவர்களின் பெயரில் எடுத்திருக்க வேண்டும். இதற்காக இரண்டு மாதங்கள் அவகாசம் தரப்படும். பொதுக் கம்பெனிகளிலும் அல்லது அதன் துணைக் கம்பெனிகளிலும் மூன்றில் ஒரு பாக இயக்குநர்கள்தான் நிரந்தரமாக இருப்பார்கள். எஞ்சியுள்ளவர்களில் மூன்றில் ஒரு பாகம் சுழல் முறைப்படி (By rotation) ஓய்வு பெறுவார்கள். ஓய்வடைந்த இயக்குநர்கள் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்படலாம். செயல்முறை விதிகள் அல்லது கம்பெனி அமைப்பு முறையேடு ஆகியவைகளின் விதிகளுக்கேற்ப எண்ணிக்கை அதிகரிக்கலாம். ஆனால், மத்திய அரசின் அனுமதி தேவை. ஒருவர் ஒரே சமயத்தில் 20 பொதுக் கம்பெனி அல்லது அவைகளின் துணைக் கம்பெனிகளுக்கு இயக்குநராக இருக்கலாம். அதற்குமேல் இருக்கக்கூடாது.

ஒரு கம்பெனி சிறப்பு அறிவிக்கை கொடுத்துச் சாதாரணத் தீர்மானம் நிறைவேற்றி ஓர் இயக்குநரை நீக்கிவிடலாம். ஆனால், மத்திய அரசால் நியமிக்கப்பட்ட இயக்குநரையோ, விகிதாசாரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட இயக்குநரையோ அவ்வாறு நீக்கிவிட முடியாது. ஓர் இயக்குநர் தம் பதவியைத் தாமாக ராஜிநாமா (பதவி விலகல்) செய்யலாம். ஆனால், கம்பெனி ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதை அவர் திரும்பப் பெற முடியாது.

கீழ்க்காணும் நபர்களை இயக்குநர்களாக நியமிக்கக்கூடாது:

(1) சம மனநிலை இழந்தவர்கள்.

(2) தீர்வு காணப்படாத திவாலானவர்.

(3) திவால் என்று தீர்மானிக்க விண்ணப்பம் கொடுத்த ஒருவர், அத்தகைய ஒருவரின் விண்ணப்பம் நிறுத்தி வைத்துள்ள நிலையில் உள்ளவர்.

(4) ஒழுக்கக் குறைவிற்காக ஆறுமாதம் சிறைத் தண்டனை பெற்றவர்.

(5) பங்கழைப்புப் பணத்தை ஆறு மாதத்திற்குள் கட்டத் தவறினவர்.

(6) பிரிவு 203-ன்கீழ்த் தகுதியற்றவர்கள் என நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டவர். மேற்கூறிய சூழ்நிலையில் இயக்குநர் கள் தாங்களாகவே பதவியை விட்டு நீங்கும்படி சட்டநிலை அமைந்துள்ளது. மேலும், ஓர் இயக்குநர் விடுமுறைக் கடிதம் இல்லாமல் மூன்று அவைக் கூட்டத்திற்குத் தொடர்ந்தாற்போல் வராவிட்டாலும், அவரோ அவர் கூட்டாளியாக இருக்கும் கூட்டு வணிகமோ அவர் உறுப்பினராக இருக்கும் தனிக் கம்பெனியோ கடன் வாங்கினாலும் அல்லது கடனுக்கு உத்தரவாதமளித்தாலும், கம்பெனியுடன் அவர் கொண்ட ஒப்பந்தத்தின்மீது உள்ள அக்கறையை அவர் வெளியிடாதபோதும், அவர் இயக்குநராக இருப்பது நீதிமன்றத்தால் தடைசெய்யப்பட்டபோதும், பதவி நீக்கல் செய்யப்பட்டபோதும் அவர் தாமாகவே இயக்குநர் பதவியிலிருந்து நீங்க வேண்டியுள்ளது.

இயக்குநர்கள் அவர்களின் அவை அல்லது குழு மூலம்தான் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தனிப்பட்ட இயக்குநர் களுக்குப் போதிய அதிகாரம் இல்லை. ஆனால் அவைக் கூட் டத்தில் தனியாகச் சொத்து விஷயங்களில் அதிகாரம் தரப்படும். இயக்குநர் அவை, குறிப்பிட்ட சில விஷயங்களைக் கவனிப்பதற் காக உதவிக் குழுக்களை (Subcommittee) அமைத்துக் கொள் ளலாம்.

கம்பெனியின் சொத்துகளுக்குப் பாதுகாவலர்களாக இயக்கு நர்கள் விளங்குகிறார்கள். கம்பெனியின் நன்மைக்காக மட்டும் அச் சொத்துகளை அவர்கள் பயன்படுத்தலாம். தன் சொந்த உபயோகத்திற்கு அவைகளைப் பயன்படுத்தினால் நம்பிக்கை முறிவு ஏற்படும். அதேபோல் இயக்குநர் அவை ஒரு முகவர் நிலையிலும் உள்ளது. ஒப்பந்தங்களில் கம்பெனிக்காக இவர்கள் தாம் கையெழுத்திடுகின்றார்கள். இவர்கள் தங்கள் அதிகாரத் தையும் கடமைகளையும் கவனமுடன் பயன்படுத்தினால் ஏற் படும் நட்டங்களுக்கு இவர்கள் பொறுப்பாளியல்லர். ஆனால், இவர்கள் மொத்தப் புறக்கணிப்பிற்கும், நம்பிக்கை முறிவிற்கும், கம்பெனிக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் நிலையில் உள்ளார் கள். இவர்களின் பொறுப்பைக் குறைத்துக் காட்டும் எவ்வித விதிகளும் செல்லா.

நியமனம்

கம்பெனியின் முதல் இயக்குநர்கள் தோற்றுவிப்பாளர்களால் அமர்த்தப்படுகின்றனர். அல்லது செயல்முறை விதிகளில் அவர் களின் பெயர் குறிக்கப்பட்டுள்ளன. செயல்முறை விதிகள்

பதிவு செய்வதற்கு முன்னர் இவ் வியக்குநர்கள் தங்கள் ஒப்புதலை எழுத்து மூலம் எழுதிப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறில்லாவிட்டால் அமைப்பு முறையேட்டுக்குப் பங்கெடுக்க ஒப்பிய தனி நபர்கள் பொதுக்கூட்டத்தில் முதல் இயக்குநர்கள் அமர்த்தப்படும் வரை இயக்குநர்களாகச் செயலாற்றுவர்.

கம்பெனியின் பொதுக்கூட்டத்தில் மொத்த இயக்குநர்களின் எண்ணிக்கையில் 2/3 பாகம் நியமிக்கப்பட்டு அவர்கள் வரிசைப்படி முறையாக ஓய்வுபெற வேண்டும். அவர்களில் 1/3 பாகம் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் முதலில் வந்தவர் முதலில் போக வேண்டும் (First come, First go) என்ற அடிப்படையில் ஓய்வு பெற வேண்டும். 2/3 பாகம் என்ற ஒதுக்கீடு அவசியப் பங்குதாரர்களுக்குத்தாம் இருக்க வேண்டும். ஒரு பொதுக் கம்பெனியின் செயல்முறை விதிகள் மொத்த இயக்குநர்களில் 2/3 பாகம் விகிதாசார பிரதிநிதிகளாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றன. அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப்படுகின்றனர். முறைப்படியாக, ஓய்வு பெறும் விதி இவர்களுக்குப் பொருந்தாது. இதேபோல் ஒரு கம்பெனி 1/3 பாக இயக்குநர்களை நிரந்தர இயக்குநர்களாக அமர்த்தலாம். இவர்களும் முறைப்படி ஓய்வு பெற வேண்டிய அவசியமில்லை. இவர்களின் இசைவு இவர்களால் கையெழுத்திடப்பட்டுப் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும். கம்பெனியின் செயல்முறை விதிகள் அனுமதித்தால் இயக்குநர்களின் அவைக் கூட்டம் கூடுதலான இயக்குநர்களை அடுத்த பொதுக்கூட்டம் வரை நியமிக்கலாம். இவர்களையும் சேர்த்து மொத்த இயக்குநர்களின் எண்ணிக்கை செயல்முறை விதிகள் அனுமதித்த உயர்ந்தபட்ச எண்ணிக்கைக்குமேல் போகக்கூடாது. இறுதியாக, மத்திய அரசு, பிரிவு 408-ன்கீழ் இரண்டு இயக்குநர்களை மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பதவி வகிக்கும் வகையில் அமர்த்தலாம்.

இயக்குநர்களின் அதிகாரங்களும் கடமைகளும்

அதிகாரங்கள்

ஒரு கம்பெனியின் அதிகாரங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று இயக்குநர் அவை செலுத்துவது, மற்றொன்று பொதுக் கூட்டங்களில் கம்பெனி நிறைவேற்றுவது. கம்பெனியின் உயர்ந்த அதிகார வரம்பில் உள்ள இயக்குநர்கள் கம்பெனியின் கோட்பாடுகளை உருவாக்கி, செயலாற்றி வருகின்றனர். அவர்கள் பங்குகளை வெளியிடலாம்; பங்கு விடுப்பை ஏற்கலாம்; கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடலாம்; இலாப ஈவுக்குப்

பரிந்துரை செய்யலாம்; கம்பெனியின் சார்பாக ஒப்பந்தத்தில் ஈடுபடலாம். கம்பெனியின் செயல்முறை விதிகள் அனுமதித்தால் அவர்கள் தங்கள் அதிகாரங்களை மற்ற நிருவாக அதிகாரி களுக்கும் உதவிக் குழுக்களுக்கும் ஒப்படைக்கலாம். என்றாலும், சில அதிகாரங்களைக் கம்பெனிக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றி அவர்கள்தாம் செய்யவேண்டும். உதாரணமாக, பங்கழைப்புச் செய்தல், கடனீட்டுப் பத்திரம் வெளியிடுதல், கம்பெனியின் பணத்தை முதலீடு செய்தல், கடன் பெறுதல் (பிரிவு 292) போன்றவைகளை அவர்கள் நேரிடையாகச் செய்ய வேண்டும். ஆனால், கடனீட்டுப் பத்திரங்களைத் தவிர வேறு வழியில் கடன் பெறுதலிலும், கம்பெனியின் பணங்களை முதலீடு செய்வதிலும், கடன் வாங்குவதிலும் அதிகாரங்களை ஒப்படைக் கலாம்.

கடமைகள்

கம்பெனியின் தொழில் தன்மை, அளவு பொறுத்துத்தான் இயக்குநர்களின் கடமைகள் மாறுகின்றன. அவைகளைப்பற்றிச் சாதாரணமாகச் செயல்முறை விதிகளில் விளக்கப்படுகின்றன. இதற்கான சில பொது விதிகள் கூறப்பட்டுள்ளன:

1. இயக்குநர்கள் நியாயமான அக்கறையுடனும் எச்சரிக்கை யுடனும் செயலாற்ற வேண்டும்.
2. அவர்கள் பெருந்தன்மையுடனும் தகுதியுடனும் செய லாற்ற வேண்டும்.
3. அவர்கள் கம்பெனியின் முழுநேர ஊழியர்கள் அல்லர். இயக்குநர் அவைக் கூட்டங்களில் வெவ்வேறிடங்களில் நடக்கும் தொழிலாக அவர்கள் கடமைகள் உள்ளன.
4. அவர் எல்லா இயக்குநர் அவைக் கூட்டங்களுக்கும் வரவேண்டிய தேவையில்லாவிட்டாலும் முக்கியமான கூட்டங்களுக்கு அவசியம் வரவேண்டும்.
5. தங்கள் அதிகாரங்களை நிருவாக அதிகாரிகளுக்கு ஒப்படைக்கும் கடமையும் அவர்களுக்கு உண்டு. அளவை அவர்கள் ஐயமின்றி வரையறுக்க வேண்டும்.
6. தங்கள் அதிகாரங்களுக்குத் தகுந்த முறையில் தங்கள் கடமைகளை அவர்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.
7. அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும், சட்டத் திற்கும் செயல்முறை விதிகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டும்.

ஊதியம்

இயக்குநர்களின் ஊதியம் செயல்முறை விதிகளால் தீர்மானிக்கப்பட வேண்டும். அதற்காகக் கம்பெனியின் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இருந்தாலும் பிரிவுகள் 198, 309 ஆகிய வைகளின் விதிகளுக்கு உட்பட்டு இருக்கவேண்டும். கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக அவர்களுக்குப் பணம் தரப்படுகிறது. கம்பெனியின் முழுநேர இயக்குநர்களாக இல்லாதிருப்பவர்களுக்கு ஊதியம் அல்லது கமிஷன் ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றித் தரப்படுகிறது. அவ் வூதியம் அக் கம்பெனிக்கு நிருவாக இயக்குநர் அல்லது மேலாளர் இல்லாதபோது கம்பெனியின் இலாபத்தில் 1% என்றும், மற்ற நிலைகளில் 3% என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், மத்திய அரசின் அனுமதி பேரில் அதிகமாகவும் தரலாம். ஒவ்வொரு கூட்டத்திற்கும் கலந்து கொள்ளும் பணத்தை ரூ. 250 வரை உயர்த்துவதற்கு அவ் வனுமதி தேவையில்லை.

நிருவாக இயக்குநர் (Managing Director)

ஏற்கெனவே ஒரு கம்பெனியின் இயக்குநராக இருக்கும் ஒரு தனி நபரைத்தான் நிருவாக இயக்குநராக நியமிக்கலாம். ஒரு கம்பெனி ஒன்று அல்லது இரண்டு நிருவாக இயக்குநர்களைப் பெற்றிருக்கலாம். இயக்குநர் அவையும் கம்பெனியும் அவருக்கு அளித்துள்ள அகிகாரங்களைத்தாம் அவர் பயன்படுத்தலாம். ஒருவர் இரண்டிற்கு மேற்பட்ட கம்பெனிகளிலோ அல்லது அவைகளின் துணைக் கம்பெனிகளிலோ நிருவாக அல்லது முழுநேர இயக்குநராக இருக்க முடியாது. இரண்டாவது கம்பெனியில் அவர் வேலை செய்ய எல்லா இயக்குநர்களின் ஏகோபித்த ஒப்புதல் தேவை. என்றாலும் மத்திய அரசு ஒருவரை நிருவாக இயக்குநராக இரண்டிற்கு மேற்பட்ட கம்பெனிகளில் வேலைக்கு அமர்த்தமலாம். அவருக்கு ஊதியம் மாதாந்தர அடிப்படையிலோ இலாபத்தில் ஒரு குறிப்பிடப்பட்ட விழுக்காடோ தரப்படும்.

ஒரே சமயத்தில் ஒருவரை ஐந்தாண்டுகளுக்கு மேல் நிருவாக இயக்குநராக எந்தப் பொதுக் கம்பெனியும் நியமிக்காது. அதே போல் ஒரே சமயத்தில் அப் பதவியை ஐந்தாண்டிற்குப் புதுப்பித்து நீட்டித்தரலாம். அவ்விதம் அமர்த்துவதற்கும், திரும்ப அமர்த்துவதற்கும், அவைகளில் மாற்றம் செய்வதற்கும், அவர்கள் ஊதியத்தில் மாறுதல் செய்வதற்கும் மத்திய அரசின் அனுமதி தேவை. பிரிவு 198, 309களில் சொல்லியுள்ள சட்டபூர்வமான விதிகளுக்குட்பட்டுச் செயல்முறை விதிகளின்படியும் தீர்மானம் நிறைவேற்றி ஊதியம் நிருணயம் செய்யப்படும்.

கம்பெனியில் ஒரு நிருவாக இயக்குநர் இருந்தால் கம்பெனியின் இலாபத்தில் 5% ஊதியமும், இருவரிருந்தால் 10% ஊதியமும் தரப்படும். மத்திய அரசு விரும்பினால் அதிக ஊதியம் தரலாம். தான் பணியாற்றும் கம்பெனியின் துணைக் கம்பெனிகளிடமிருந்து ஊதியம் அவர்கள் பெறக்கூடாது. இவர்களின் பதவி இழப்பிற்கு நட்டஈடு தர வேண்டும். முற்றுப் பெறாத காலத்திற்குத் தர வேண்டிய ஊதியம் அல்லது மூன்று ஆண்டு ஊதியம் இவைகளில் எது குறைவாக உள்ளதோ அதை நட்ட ஈடாகத் தரவேண்டும். தன் விருப்பப்படி பதவி விலகும்போதும் 20 கம்பெனிக்குள் தம் இயக்குநர் பதவியை நிலைநாட்ட அதிகப்படியான பதவியை விடும்போதும், பிரிவு 203 அல்லது 283-ன்கீழ் அவர் தகுதி யில்லாதவராக அறிவிக்கப்பட்டபோதும், மோசடி, நம்பிக்கை மோசம், மொத்தப் புறக்கணிப்பு போன்றவைகளுக்கும் நட்டஈடு தர வேண்டிய அவசியமில்லை.

நொடிந்தவராக அறிவிக்கப்பட்ட நபர்களும், கடனீந் தோருக்குப் பணம் தராத நபர்களும், ஒழுங்கீனத்திற்குத் தண்டனை அடைந்த நபர்களும் அவ்வாறிருக்கச் சட்டப்படி தடைசெய்யப்பட்டவர்களும், நிருவாக இயக்குநர்களாகப் பதவி வகிக்கத் தகுதியில்லை.

நிருவாகர் அல்லது மேலாள் (Manager)

ஒரு பொதுக் கம்பெனிக்கும் அதன் துணைக்கம்பெனிக்கும் ஒரு தனி நபர்தாம் நிருவாகராக நியமிக்கப்படவேண்டும். ஒரு கம்பெனி தன் இயக்குநர்களில் ஒருவரை நிருவாகராக நியமிக்கும். அது ஒரு நிருவாகரைத்தாம் நியமிக்கும். அவர் ஒருவர்தாம் கம்பெனியின் முழு அலுவல்களைக் கவனிப்பார். அவையின் கட்டளைப்படியும் கட்டுதிட்டத்துடனும் அவர் பணி யாற்ற வேண்டும். ஒருவர் இரண்டுக்கு மேற்பட்ட கம்பெனி களில் நிருவாகராக இருக்கக்கூடாது. இரண்டாவது கம்பெனிக்கு அவரை நியமிக்க எல்லா இயக்குநர்களின் ஏகோபித்த இசைவு வேண்டும். என்றாலும், மத்திய அரசு அனுமதித்தால் அவர் இரண்டிற்கு மேற்பட்ட கம்பெனிகளில் நிருவாகராகவிருக்கலாம். எந்தப் பொதுக் கம்பெனியும் ஒருவரை ஐந்தாண்டுகளுக்குமேல் முதலிலோ அல்லது மறுபடியோ வேலைக்கு அமர்த்தாது. அத் தகைய வேலைக்கு அமர்த்துதல், திரும்ப அமர்த்துதல், ஊதியத் தில் மாற்றம் செய்தல் போன்றவைகளுக்கு மத்திய அரசின் அனுமதி தேவை. பிரிவு 198-ன் சட்ட விதிகளுக்குட்பட்டுச் செயல்முறை விதிகளாலும் கம்பெனியின் தீர்மானத்தாலும் இவரின் ஊதியம் நிருணயிக்கப்படுகிறது. மாதாமாதம் அல்லது

இலாபத்தில் விழுக்காடு ஊதியம் தரப்படலாம். அது ஓர் ஆண்டிற்கு ஒரு கம்பெனியின் நிகர லாபத்தில் 5 விழுக்காட்டிற்குமேல் இருக்கக்கூடாது. மத்திய அரசு அனுமதித்தால் அதிக ஊதியம் தரலாம்.

தகுதியின்மை

கீழ்க்காணும் நபர்கள் பொது அல்லது தனிக் கம்பெனியின் நிருவாகராக நியமிக்கப்படக் கூடாது.

1. தீர்வு (விடுதலை) அடையாத நொடிப்பாளர்.

2. கடந்த ஆண்டுகளில் நொடிப்பாளர் என்று அறிவிக்கப் பட்டவர்.

3. கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் கடனீந்தோருக்குப் பணம் திருப்பித்தர மறுத்தவர்கள் அல்லது பணம் தருவதை நிறுத்தியவர்கள்.

4. கடந்த 5 ஆண்டுகளுக்குள் ஒழுக்கக் குறைவிற்காகத் தண்டனை அனுபவித்தவர்கள்.

நிருவாக முகமை முறை (Managing Agency System)

இந்தியத் தொழில்துறையில் இம்முறை மிகவும் நூதன மானது; விந்தையானதும் கூட. இந்தியத் தொழில் அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளை அகற்றிட இம்முறை நம் நாட்டிற்கு வந்தது. இந்தியத் தொழில் துறையில் நிருவாகத்திறன், தொழில் திறமை, மூலதனம் போன்றவைகள் போதாத நிலையில் இருந்தபோது இத்தகைய நிருவாக முகவர்கள் மிகவும் தைரிய முடன் இந்தியாவில் நுழைந்து, மேற்கூறிய முன்று தேவை களையும் வழங்கித் தொழில் வளர பாடுபட்டனர்.

தொழில் அல்லது வணிக நிறுவனங்களின் தோற்றுவிப்பாளர் களாகவும், நிதியுதவி அளிப்போர்களாகவும், நிருவாகத்தினர் களாகவும் அவர்கள் பணியாற்றினார்கள். இந்தியப் பொருளா தார முன்னேற்றத்திற்கு அவர்கள் ஆற்றிய தொண்டு மிகவும் முக்கியமானது.

ஆனால், நாளாவட்டத்தில் அவர்கள் ஒழுங்கீனங்களில் ஈடு படலாயினர். எனவே 1936ஆம் ஆண்டு முதற்கொண்டு அவர்கள் நடத்தையையும் தகாத காரியங்களையும் தடை செய்ய அரசாங்கம் அநேக திருத்தச் சட்டங்களையும், அமைப்புமுறை மாற்றங்களையும் அமலுக்குக் கொண்டுவந்தது. ஆனால் அவர்கள்

திருந்தியபாடில்லை. நாட்டில் அவர்களுக்கு எதிர்ப்பு வளர்ந்து கொண்டே வந்தது. உச்சக்கட்டமாக அது வளர்ந்து 3-4-1970 லிருந்து அம் முறையை 1969ஆம் ஆண்டுக் கம்பெனி திருத்திய சட்டம் ரத்து செய்து விட்டது. எனவே, தற்சமயம் இம்முறை நடைமுறையில் இல்லை.

செயலர்-கருவூலர் (Secretaries and Treasurers)

1956ஆம் ஆண்டுக் கம்பெனிச் சட்டத்தால் இம் முறை சட்ட பூர்வமான அங்கீகாரம் பெற்றது. நிருவாக முகவர்கள் பொது மக்களின் மனக்கசப்பிற்கு ஆளானபோது அவர்களுக்குப் பதிலாக இம் முறை கொணரப்பட்டது. எனவே, நிருவாக முகவர்கள் செய்த பணிகளை இவர்கள் செய்தனர். ஆனால், இவர்கள் இயக்குநர் அவையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவராவார்கள்.

வேறுபாடுகள்

1. நிருவாக முகமையில் தனிஆள், கூட்டு நிறுவனம், கம்பெனி ஆகியவைகள் நிருவாக முகவர்களாகப் பணியாற்ற லாம். ஆனால், செயலர்-கருவூலர் முறையில் தனிநபர் நீக்கிக் கூட்டு நிறுவனமும், கம்பெனியும்தான் அங்ஙனம் பணி யாற்றலாம்.

2. நிருவாக முகமையில் இயக்குநர்களை நியமனம் செய்யும் அதிகாரம் உண்டு. ஆனால், செயலர்-கருவூலர் முறையில் அவ்வதிகாரம் இல்லை.

3. முன்னர்க் கூறிய முறையில் அதிகபட்ச ஊதியம் கம்பெனியின் நிகர இலாபத்தில் 10% ஆகும். ஆனால், பின்னர் கூறிய முறையில் அது 7½% ஆகும்.

4. பிரிவுகள் 324, 330, 332 கூறியுள்ள விதிகள் நிருவாக முகமை முறைக்குப் பொருந்தும். ஆனால், செயலர்-கருவூலர் முறைக்கு அவை பொருந்தா.

ஆனால், இவ்விரு முறைகளும் 3-4-1970-லிருந்து ரத்து செய்யப்பட்டன.

கம்பெனியின் கலைப்பு

(Winding up of a Company)

கம்பெனியின் வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் கலைத்தால் ஆகும். சொத்துகளை விற்றல், கடனைத் திருப்பித் தருதல், மீதி ஏதாவது இருந்தால் உறுப்பினர்களுக்கு அவர்களின்

உரிமைப்படி பிரித்துத்தருதல் போன்ற செயல்களை அஃது அடக்கியுள்ளது. தொழில் ஐக்கியம், கலப்பு, திவால் போன்ற காரணங்களால் கலைப்பு ஏற்படலாம். ஒரு கம்பெனியால் தன் கடன்களைக் கொடுக்க முடியவில்லையென்றால்கூட அதைத் திவால் என்று முடிவாகச் சொல்ல முடியாது. ஆனால், அதைக் கலைத்து விடலாம். தனி நபர் ஒருவர் திவாலாவதற்கும், கம்பெனி ஒன்று திவாலாவதற்கும் வேறுபாடு இருக்கிறது. கம்பெனிச் சட்டத்தின் விதிகளின்படி ஒரு கம்பெனி கலைக்கப்படும். ஆனால், பொது திவால் சட்டத்தின் விதிகளும் இங்கும் அங்கும் கையாளப்படுகின்றன.

கலைப்பின் வகைகள்

1. கட்டாயக் கலைப்பு அல்லது நீதிமன்றத்தால் கலைப்பு (Compulsory Winding up or Winding up by the Court)
2. தன்விருப்பக் கலைப்பு (Voluntary Winding up)
3. நீதிமன்றத்தின் மேற்பார்வைக்குட்பட்ட கலைப்பு (Winding up Subject to the Superistion of the Court)

தன்விருப்பக் கலைப்பு, உறுப்பினர்களின் தன் விருப்பக் கலைப்பு (Members' Voluntary Winding up), கடனீந்தோர்களின் தன் விருப்பக் கலைப்பு (Creditors' Voluntary Winding up) என்று இருவகைப்படும்.

கலைப்பின் விளைவு (Consequence of Winding up)

கலைப்பு ஆரம்பித்த உடனே கம்பெனியின் எல்லா அதிகாரிகளும் அலுவலர்களும் தொழில் தொடர்ந்து செயலாற்றினாலொழியத் தங்கள் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். எல்லாவகைக் கலைப்புகளிலும் கலைப்பதிகாரி நியமிக்கப்படுகின்றனர். அவர்களின் நியமனத் தன்மையும் அதிகாரங்களும் கலைப்பு வகையைப் பொறுத்துள்ளன. நீதிமன்றத்தின் அனுமதியுடனல்லாமல் வேறு எந்தச் சட்ட நடவடிக்கைகளும் கம்பெனி மீது அப்பொழுது எடுக்கமுடியாது. கடந்த கால, தற்போதைய பங்குதாரர்கள் தங்களின் பங்குகளின்மீது செலுத்தவேண்டிய பாக்கியைச் செலுத்த வேண்டும். கலைப்பு ஏற்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட அசையும், அசையாச் சொத்துகளின் உரிமை மாற்றம் கடனீந்தோர்களுக்கு மோசடி வழியில் செய்யும் முந்துரிமைகளாகக் கருதப்படும். எனவே, அவைகள் செல்லுபடியாகா. கடனீந்தோர்களுக்குக் கலைப்பு விதிகள் குறிப்பிட்டபடி பணம் செலுத்திட வேண்டும். கலைப்பிற்காகும்

செலவுகளை எல்லா உரிமைகளுக்கும் முன்னதாகக் கம்பெனியின் சொத்துகள் விற்கப்படும் தொகையிலிருந்து சரிக்கட்ட வேண்டும். ஆனால், பிணையமுள்ள கடனீந்தோர்களுக்குக் கொடுத்து விட்டுத்தான் இச் செலவுகளைச் சரிக்கட்ட வேண்டும்.

கட்டாயக் கலைப்பு

இக் கலைப்பை நீதிமன்றத்தால் நடத்தப்படும் கலைப்பு என்று கூறலாம். ஓர் இலட்ச ரூபாய்க்கும் அதற்கு மேலுமுள்ள மூலதனமுள்ள கம்பெனியின் கலைப்பை உயர்நீதிமன்றம் நடத்தும். அதற்குக் குறைவான மூலதனமுள்ள கம்பெனிகளின் கலைப்பை உயர்நீதிமன்றம் தன் விவகார எல்லைக்குள் உள்ள மாவட்ட நீதிமன்றத்தின் பொறுப்பில் விட்டுவிடும்.

அடிப்படைக் காரணங்கள்

ஒரு கம்பெனி, பிரிவு 433-ன்கீழ், கீழ்க்காணும் காரணங்களுக்காகக் கட்டாயக் கலைப்பிற்கு இலக்காகும்.

(1) நீதிமன்றத்தால் கலைக்கப்பட வேண்டும் என்று ஒரு கம்பெனி ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி கலைப்பு ஏற்படலாம்.

(2) சட்டமுறை அறிக்கையைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யாதபோதும் அல்லது சட்டமுறைக் கூட்டம் நடத்தாத போதும் இக் கலைப்பு ஏற்படலாம்.

(3) கம்பெனி தோன்றிய நாளிலிருந்து ஓர் ஆண்டுவரை தொழிலைக் கம்பெனி தொடங்காமலிருந்தாலும் அல்லது அவ் வாண்டு முழுதும் தொழிலைக் கம்பெனி நிறுத்திவைத்திருந்தாலும் இக் கலைப்பு ஏற்படும். ஆனால், திருப்தி தரக்கூடிய பதிலைக் கம்பெனி தந்தால் நீதிமன்றம் கலைப்பிற்குக் கட்டளையிடாது.

(4) பொதுக் கம்பெனியாக இருந்து அதன் உறுப்பினர் எண்ணிக்கை ஏழுக்கும் குறைந்தாலும், தனிக் கம்பெனியாக இருந்து இரண்டிற்குக் குறைந்தாலும் கலைப்பு ஏற்படலாம்.

(5) கம்பெனி தன்னுடைய கடன்களைச் செலுத்தமுடியாமற் போனாலும் கலைப்பு ஏற்படலாம்.

(6) வேறு எந்த நியாயமான அடிப்படைக் காரணங்களுக்காகவும் கம்பெனி குறைக்கப்படலாம்.

கலைப்புக் கோரும் நபர்கள்

கம்பெனியே கலைப்புக் கோரலாம். கடனீந்தோர்-ஈட்டுறுதி பெற்ற கடனீந்தோர்கள், கடனீட்டுப் பத்திரத்தின் பாது காவலர்கள் கலைப்புக் கோரலாம். எந்தப் பங்களிப்பவரும் (Contributory) கோரலாம். முழுதும் செலுத்தப்பட்ட பங்கு தாரர்கள்கூடக் கோரலாம். பங்களிப்பவர் சட்டபூர்வமான குறைந்தபட்ச எண்ணிக்கை குறையும்போதும், சட்டபூர்வ அறிக்கை வெளியிடாதபோதும் சட்டமுறைக் கூட்டம் நடத்தாத போதும், கம்பெனி ஓராண்டிற்குள் தொழிலைத் தொடங்காத போதும், இறுதிநிலைக் குறிப்பின்படி கம்பெனி கடனைப் பைசல் செய்யத் தவறியபோதும் கலைப்புக் கோரி விண்ணப்பம் போடலாம். பிரிவு 243-ன்படி பதிவாளர் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டிருந்தால் கலைப்பிற்காக அவரும் விண்ணப் பிக்கலாம். அல்லது அப் பிரிவின்கீழ் மத்திய அரசு அனுமதித்த எந்த நபர்களும் விண்ணப்பம் போடலாம். தன்விருப்பக் கலைப்பு ஏற்படும்போது, அதிகாரபூர்வமான கலைப்பதிகாரி அல்லது பிரிவு 439-ன்படியுள்ள வேறு நபர்கள் ஆகியவரின் விண்ணப்பத்தின் பேரில் அதை நீதிமன்றம் கட்டாயக் கலைப்பாக மாற்றிடலாம்.

இத்தகைய வேண்டுகோள் விண்ணப்பங்களைக் கேட்டுச் சரி பார்த்து நீதிமன்றம் அவைகளைத் தள்ளுபடி செய்யலாம். அல்லது கலைப்பிற்குரிய கட்டளை பிறப்பிக்கலாம். பின்னது ஏற்பட்டால் அதிகாரபூர்வமான கலைப்பதிகாரி கம்பெனியின் நிருவாகத்தை எடுத்துக்கொள்வது மிகவும் அவசியம். அவர் பங்களிப்போரின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும்; பங்கழைப்பு விடுத்து பணம் கட்டச்சொல்லி வற்புறுத்த வேண்டும். கலைப்பு தொடர்பான வேறு செய்திகளை அவர் தீர்மானிக்கவேண்டும். கம்பெனியின் அலுவல்கள் முழுதும் முறிக்கப்பட்டபின்னர் நீதிமன்றம், கம்பெனிக் கலைக்கப்படலாம் என்று கட்டளையிடும்.

கலைப்பதிகாரி (Liquidatory)

கம்பெனியைக் கலைப்பதற்கு நீதிமன்றம் ஆணையிட்ட வுடனே நீதிமன்றத்தைச் சார்ந்த அதிகாரபூர்வமான கலைப்பதி காரி கம்பெனியின் கலைப்பதிகாரியாகிவிடுவார். நீதிமன்றம் தன் உத்தரவை அனுப்புவதற்கு முன்பே, அவரைத் தற்காலிகக் கலைப்பதிகாரியாக நியமிக்கும். அவர் கம்பெனிச் சொத்துகள் முழுவதையும் தம்வசம் அல்லது தம் மேற்பார்வையில் வைத்துக் கொள்ள வேண்டும். கலைப்புக் கட்டளை பிறப்பித்த 21 நாள் களுக்குள் அவர் கம்பெனியின் அலுவலாளர்களிடமிருந்து

நிலைமை விவரம் (Statement of Affairs) ஒன்று குறிப்பிட்ட முறையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடமைகள்

அவருடைய முக்கியமான கடமையாவது கம்பெனி சொத்துகளை விற்றுக் கடனைப் பைசல் செய்துவிட்டு, மீதியுள்ள பணத்தைப் பங்களிப்பாளரிடையே பிரித்துத் தருவதுதான். குறிப்பிட்ட காலத்திற்குள் அவரோடு பணியாற்ற மேற்பார்வைக் குழு ஒன்றை அவர் அமர்த்தவேண்டும். அக் குழுவின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை 12 பேர்கள். கடனீந்தோர் களிலிருந்தும், பங்களிப்பாளர்களிலிருந்தும் சம அளவான நபர்கள் எடுத்து அக் குழு அமைக்கப்பட வேண்டும். கடனீந்தோர்கள், பங்களிப்பாளர்கள், மேற்பார்வைக் குழு ஆகியவர்களின் விருப்பத் திற்கிணங்க கலைப்பு நடக்க வேண்டும். தகுந்த புத்தகங்களும், கணக்குகளும் அவர் ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். ஆண்டிற்கு இரண்டுமுறை அவர் கணக்குகளை நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அக் கணக்குகளின் தணிக்கை செய்த படி ஒன்றை ஒவ்வொரு கடனீந்தோருக்கும், பங்களிப்பாளருக்கும் அனுப்ப வேண்டும். இந்திய ரிசர்வ் வங்கியின் 'இந்தியப் பொதுக் கணக்கு' (Public Account of India) என்ற தலைப்பில் எல்லாப் பணங்களையும் வைத்திருக்க வேண்டும்.

அதிகாரங்கள்

கம்பெனியின் பெயரால் அவர் வழக்குத் தொடுக்கலாம். அல்லது கம்பெனிமீது தொடுக்கப்படும் வழக்கை எதிர் வழக் குரைக்கலாம். கம்பெனியின் கலைப்புநலன் கருதி அவரே தொழிலை நடத்திடலாம். கம்பெனியின் சொத்துகள் முழுவதை யும் அவர் விற்கலாம். அவரால் செய்ய இயலாத வேலைகளுக்கு முகவர் ஒருவரை நியமித்து அவரிடம் வேலையை ஒப்படைக்க லாம். பங்குதாரர்களின் பங்குகள் மீதுள்ள அழைப்பை விடுத்துப் பணம் செலுத்துவதற்கு வற்புறுத்தலாம். ஆனால், மேற்கூறிய அதிகாரங்கள் அனைத்தையும் நீதிமன்றக் கட்டுப்பாட்டிற்குட் பட்டுத்தான் அவர் நிறைவேற்றலாம். நீதிமன்றத்தின் தனி அனுமதி அவருக்குத் தேவை.

தன்விருப்பக் கலைப்பு

ஒரு கம்பெனியும் அதன் கடனீந்தோர்களும் நீதிமன்றத்தின் தலையீடு இன்றித் தமக்குள்ளே அலுவல்களைத் தீர்த்துக்கொள் வதைத்தான் 'தன்விருப்பக் கலைப்பு' என்பர். இதனால் தேவை

யானபோது இரு தரப்பினரும் நீதிமன்றத்திற்குப் போக முடியாது. என்பது நிபந்தனை அன்று. அவர்களுக்குள் முடிவு ஏற்படவில்லையென்றால் நீதிமன்றத்தின் உதவியை நாடலாம்.

உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பு

கலைப்பு ஏற்பட்டு மூன்றாண்டுகளுக்குள் கம்பெனி வகையுடையதாக இருந்து அதாவது, அதற்குக் கடனே இல்லாமலிருந்தாலும் அல்லது கடனைப் பைசல் செய்யக்கூடிய நிலையில் இருந்தாலும் இத்தகைய கலைப்பு ஏற்படுகிறது. இயக்குநர் அவைக் கூட்டத்தில் பெரும்பான்மையான இயக்குநர்கள் வகையுள்ளதை (நொடிப்பில்லாமையை) உறுதி கூற வேண்டும். இவ் வறிவிப்பு, பதிவாளருக்கு அனுப்பவேண்டும். இத்துடன் உறுதி மொழிப் பத்திரம், தணிக்கையாளர் அறிக்கை, சொத்து—பொறுப்பு பற்றிய அறிக்கை போன்றவைகள் இணைக்கப்பட வேண்டும். இத்தகைய உறுதிக்கூற்று (Declaration) அனுப்பிய ஐந்து வாரங்களுக்குள் பங்குதாரர்களின் பொதுக்கூட்டத்தில் ஒரு சாதாரண அல்லது சிறப்புத் தீர்மானம் மூலம் இந்த தன்விருப்பக் கலைப்பை நிறைவேற்ற வேண்டும். கம்பெனியின் வாழ்விற்குக் குறிப்பிடப்பட்ட காலம் முடிந்தபோதும், எந்த நிகழ்ச்சி ஏற்பட்டால் கம்பெனி கலைக்கப்படுமோ அந் நிகழ்ச்சி ஏற்படும்போதும், சாதாரணத் தீர்மானம்போதும், குறிப்பிடப்பட்டுள்ள முறையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அறிவிக்கை மூலம் விளம்பரப்படுத்த வேண்டும். இவ் விரு முறைகளும் இரண்டு விதமான தன்விருப்பக் கலைப்புகளுக்கும் தேவைப்படுகின்றன. தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் தன்விருப்பக் கலைப்பு ஆரம்பமானதாகக் கொள்ளவேண்டும்.

கடனீந்தோர்கள் தன்விருப்பக் கலைப்பு

கம்பெனி தன் கடன்களை முழுவதும் செலுத்த முடியாத நிலையில் இஃது எழுகிறது. இக் கலைப்பில் கடனீந்தோர்களுக்கு அதிக அதிகாரம் இருந்தாலும் பங்குதாரர்கள் பொதுக் கூட்டத்தில் மேற்கூறிய விதம் சாதாரண அல்லது சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர்தான் இக் கலைப்பு ஏற்படும். கடனீந்தோர்கள் அதே தினத்தில் கூட்டும் அவர்கள் கூட்டத்தில் $\frac{3}{4}$ பங்கு பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவர்கள் கூட்டம் மறுநாளும் நடப்பதுண்டு. கடனீந்தோர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் எந்தத் தீர்மானமும் 10 நாள்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

பின்விளைவு

கலைப்புத் தீர்மானம் நிறைவேறியதும் தன்விருப்பக் கலைப்பு தொடங்கிவிட்டதாகக் கொள்ளலாம். தன் நலம் காக்கும் வகையில் தொழிலைத் தொடரலாமே யொழிய மற்ற வகையில் தொழிலைக் கம்பெனி உடனே நிறுத்திட வேண்டும். கலைப் பதிகாரி நியமிக்கப்பட்ட பின்னர் இயக்குநர்கள், கம்பெனி அலுவலாளர்கள் போன்றோர்களுக்கு அதிகாரமில்லை.

உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பில் கலைப்பதிகாரி நியமிக்கப்பட்டு அவரின் ஊதியம் பொதுக்கூட்டத்தில் நிருணயம் செய்யப்படுகிறது. ஆனால்,கடனீந்தோர் தன்விருப்பக் கலைப்பில் கம்பெனியும் கடனீந்தோர்களும் ஒருவரை நியமித்தால் ஒழிய கடனீந்தோர்களால் நியமிக்கப்பட்ட ஒருவர் கலைப்பதிகாரியாகப் பணிபுரிவார்.

கடன்களும் அதிகாரங்களும்

உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பில் ஒன்று அல்லது இரண்டு கலைப்பதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். அவர்களின் ஊதியம் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ஊதியம் எச் சூழ்நிலையிலும் அதிகரிக்கப்படக் கூடாது. மேற்பார்வைக் குழு அவசியமில்லை. கலைப்பு ஆரம் பித்த பின்னர் ஒவ்வோர் ஆண்டும் அவர்கள் இடைக்காலக் கணக்கையும், தலைப்பு முன்னேற்ற அறிக்கை போன்றவை களையும் கம்பெனியின் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். கலைப்பு முடிந்த பின்னர்க் கம்பெனியின் இறுதிக் கணக்குகளைப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இறுதிக் கணக்குகளின் படிகள் பதிவாளருக்கும் அதிகாரம் பூர்வமான கலைப்பதிகாரிக்கும் அனுப்பப்பட வேண்டும். அதிகார பூர்வமான கலைப்பதிகாரி இதை ஏற்று நீதிமன்றத்திற்கு ஓர் அறிக்கை கொடுத்துவிட்டால் போதும். அதன் விளைவாக கம்பெனி கலைக்கப்பட்டுவிட்டது என்று கொள்ளப்படும்.

கடனீந்தோர் தன்விருப்பக் கலைப்பில், கடனீந்தோர்களும் கம்பெனியும் கலைப்பதிகாரியை நியமிக்கும். அவ்வாறில்லை யென்றால் கடனீந்தோர்களால் நியமிக்கப்பட்ட ஒருவர் கலைப் பதிகாரியாகப் பணிபுரிவார். கடனீந்தோர்களின் விருப்பத்தின் பேரில் ஒரு மேற்பார்வைக் குழு நியமிக்கப்பட்டு கலைப்பதி காரியின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. அக் குழு அல்லது கடனீந்தோர்கள் அவரின் ஊதியத்தைக் குறிப்படு கிறார்கள். கலைப்பதிகாரி ஒவ்வோர் ஆண்டும் இடைக்காலக்

கணக்குகளையும் கலைப்பு முடிந்த பின்னர் இறுதிக் கணக்குகளையும் பொதுக்கூட்டத்திற்கும் கடனீந்தோர் கூட்டத்திற்கும் அனுப்ப வேண்டும்.

மேற்கூறிய வேறுபாடுகளைத் தவிர இருவகைக் கலைப்பின் கலைப்பதிகாரிகள் பொதுவாகச் சில கடமைகளைச் செய்ய வேண்டியுள்ளது. அவையாவன: அவர்களின் முக்கியக் கடமையாகக் கருதப்படுவது கம்பெனியின் சொத்துகளை விற்று, கடன்களைப் பைசல் செய்து, மீதியுள்ளவைகளைப் பங்களிப்போர்கள் மத்தியில் பிரித்துத் தருவதாகும். மேற்கூறியபடி அவர்கள் கணக்கு வழக்குகளை ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். இடைக்கால இறுதிக் கணக்குகளை ஒழுங்காகத் தயாரிக்க வேண்டும். ஷெட்டியூல்டு வங்கியில் தனியாகத் துவக்கப்பட்ட கணக்கில் கம்பெனியின் பணங்களைப் போட்டு வைத்திருக்க வேண்டும். அவர்கள் கம்பெனியின் ஊதியம் பெறும் முகவர்கள் ஆனதால் அவர்களின் புறக்கணிப்பிற்கும், சட்ட விரோத செயலுக்கும் ஆளாகி ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு. அவர்களின் நியமனத்தை அலுவலக வெளியீட்டில் (Official Gazette) வெளியிட வேண்டும். இச் செய்தியை 30 நாள்களுக்குள் பதிவாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

அதிகாரிகள்

1. கம்பெனியின் பெயரால் வழக்குத் தொடுக்கவும் செய்யலாம்; அவ் வழக்கை எதிர்க்கவும் செய்யலாம்.

2. கம்பெனியின் நன்மை பயக்கும் கலைப்புக் கருதி, தொழிலை அவர்கள் தொடரலாம்.

3. கம்பெனியின் சொத்துகளை அவர்கள் விற்றிடலாம்.

கம்பெனி அல்லது கடனீந்தோர்களின் ஒப்புதல் இன்றி இவ்வதிகாரங்களை அவர்கள் செலுத்தலாம். மற்ற அதிகாரங்களை அவர்களின் அனுமதியுடன்தான் பயன்படுத்தலாம். மேலும் பங்களிப்போரின் பட்டியலைத் தீர்மானித்தல், பங்கழைப்பு விடுதல், உரிமையை ஒத்துக்கொள்ளல் போன்ற நீதிமன்ற அதிகாரங்களை இவர்களும் செலுத்தலாம்.

பங்களிப்போர் அல்லது பங்கு வழங்கக் கடமைப்பட்டவர் (Contributory)

கம்பெனி கலைக்கப்படும்போது அதன் சொத்திற்காக வழங்கக் கடமைப்பட்டவரைத்தான் பங்களிப்போர் என்கிறோம். கம்பெனி கலைக்கப்பட்டாலும் கலைக்கப்படாவிட்டாலும் பணம் வழங்கக் கடமைப்பட்ட கடன்காரர்கள் பங்களிப்போர்கள் அல்லர்.

சாதாரணமாகக் கம்பெனியின் பங்குதாரர்கள், உறுப்பினர்கள் கம்பெனியின் கலைப்பு ஆரம்பித்த பின்னர், பங்கு வழங்கக் கடமைப்பட்டோர்களாகின்றனர். கம்பெனி கலைக்கப்பட்ட போது ஒவ்வொரு முன்னாள் அல்லது இறந்தகால உறுப்பினர் களும், தற்போதைய உறுப்பினர்களும், அல்லது பங்குதாரர்களும் அவர்கள் பெற்றுள்ள பங்குகளில் பாக்கி செலுத்தவேண்டிய தொகையை அவசியம் செலுத்தக் கடமைப்பட்டவர்களா கின்றனர். உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியில் உத்தரவாதம் செய்யப்பட்ட தொகையில் செலுத்தாத தொகை அளவிற்குத்தான் பொறுப்புள்ளது. இத்தகைய பொறுப்புகளை கலைப்பதிகாரி பங்கழைப்பு செய்தும் தேவைப்பட்டால் வழக்குத் தொடுத்தும் வற்புறுத்தலாம். இத்தகைய பங்களிப்பு கடனீந் தோர்க்குப் பணம் செலுத்தவும், கலைப்புச் செலவைச் சரிக்கட்ட வும், பங்கு வழங்கக் கடமைப்பட்டோர்களிடையே உள்ள உரிமை யைச் சரிக்கட்டவும் அவசியம் தேவைப்படுகிறது. கம்பெனி யிலிருந்துதனக்கு வரவேண்டிய பணத்திற்கு ஒரு பங்களிப்பாளர் இதற்கு எதிர் ஈடு செய்ய முடியாது. தற்போதைய உறுப்பினர் கள் மட்டும்தாம் இவ்வாறு பங்களிப்பு வழங்க வேண்டியுள்ளதால் அவர்களை 'A பட்டியலில் காணப்படும் பங்களிப்போர்கள்' என்று சொல்வர். எல்லா முன்னாள் உறுப்பினர்கள் பொறுப்பாளியாவ தற்கு வேண்டிய மூன்று நிபந்தனைகளாவன: கலைப்பு ஏற்படு வதற்கு முன்னர் ஒரு வருடத்திற்குள் அவர்கள் உறுப்பினர்களாக இருந்திருக்க வேண்டும். அடுத்ததாக அவர்கள் பெற்றுள்ள பங்குகளில் ஒரு பகுதி இன்னும் செலுத்தாமலிருக்க வேண்டும். இறுதியாக அவர் உறுப்பினராக இருந்தபோது வாங்கின கடனை பைசல் செய்ய இப் பங்கு வழங்குதல் தேவைப்பட வேண்டும். பங்கு வழங்கப் பொறுப்புள்ள முன்னாள் உறுப்பினர்களை 'B பட்டியலில் காணப்படும் பங்களிப்போர்கள்' என்று கூறலாம். அவர்களுக்கிடையே அவர்கள் சமமான தகுதியையுடையவர்கள். தற்போதைய கடன் பின்னர்தான் (எதிர்காலத்தில்தான்) செலுத்தப்படும் என்பதற்கு முன்னாள்-இந்நாள் உறுப்பினர்களின் பொறுப்புச் சான்றாகும். இது சட்டபூர்வமான பொறுப்பு. ஒப்பந்த அடிப்படையில் எழுந்த பொறுப்பு அன்று. ஒரு பங்களிப் போர் இறந்துவிட்டால் அவரின் சட்டப் பிரதிநிதி பொறுப்பாளி யாவார். அவர் திவாலாகிவிட்டால் அவரின் அதிகார பூர்வ மான கலைப்பதிகாரி பொறுப்பாளியாவார்.

நீதிமன்றத்தின் மேற்பார்வையில் நடத்தப்படும் கலைப்பு

சாதாரணமாகத் தன்விருப்பக் கலைப்பில் நீதிமன்றம் அதன் உதவியைக் கடனீந்தோரோ அல்லது பங்களிப்போரோ அல்லது

கலைப்பதிகாரியோ கோரினாலொழியத் தானாகத் தலையிடாது. எனவே, கலைப்பதிகாரி நீதிமன்றத்தின் அனுமதி அல்லது தலையீடு இன்றித் தம் கடமைகளையும் உரிமைகளையும் செய்யலாம். ஒரு கம்பெனி தன்விருப்பக் கலைப்பிற்கு இலக்காகும் போது, நீதிமன்றம் தன் மேற்பார்வையில் தன்விருப்பக் கலைப்புத் தொடர்வதற்கு ஆணையிடலாம். இவ் வுத்தரவிற்கு 'மேற்பார்வை உத்தரவு' (Supervision Order) என்றும், இக் கலைப்பை 'நீதிமன்றத்தின் மேற்பார்வையில் நடத்தப்படும் கலைப்பு' என்றும் கூறுவர். கட்டாயக் கலைப்பில் நீதிமன்றத் திற்கு எந்தெந்த அதிகாரங்கள் உண்டோ அவ் வதிகாரங்கள் இக் கலைப்பிலும் உண்டு. உண்மையில் மேற்பார்வை உத்தரவு தன்விருப்பக் கலைப்பைக் கட்டாயக் கலைப்பாக மாற்றுகிறது. பொதுவாக, இவ் வுத்தரவு கலைப்பதிகாரியின் புறக்கணிப் பாலும் பாரபட்ச நிலையாலும் இடப்படுகிறது.

இருந்தபோதிலும் கலைப்பதிகாரி ஒரு தன் விருப்பக் கலைப்பில் கையாளப்படும் அதிகாரங்களைப்போல் நீதிமன்றத் தின் அனுமதி இன்றி இவர் தம் அதிகாரங்களைச் செலுத்தலாம். ஆனால் நீதிமன்றம் விதித்துள்ள கட்டுப்பாடுகளுக்குட்பட்டுத் தான் இவர் செயலாற்ற வேண்டும். எனவே, இத்தகைய கலைப்பு தன்விருப்பக் கலைப்பிற்கும் கட்டாயக் கலைப்பிற்கும் நடுநிலையில் உள்ளது.

சலுகை பெறும் கடனீந்தோரும் முந்துரிமை செலுத்துதல்களும் (Preferential Creditors and Preferential Payment)

ஒரு கம்பெனி கலைக்கப்படும்போது கடனீந்தோர்கள் என உரிமை பாராட்டுபவர்கள் தங்களின் கடன் தொகையை நீதி மன்றம் அல்லது கலைப்பதிகாரி தந்த காலத்தவணைக்குள் தெரிவிக்க வேண்டும். கீழ்க்காணும் வரிசைக் கிரமத்தில் கடன் களைப் பைசல் செய்ய வேண்டும்.

1. பிணையமுள்ள கடனீந்தோர்களின் தொகையை முதலில் தரவேண்டும். கலைப்பதிகாரி அல்லது கடனீந்தோர் போன்றோர்கள் தாங்களாகவே பிணையத்தை விற்றுப் பணத்தை எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு விற்ற தொகை அவர்களின் கடன் தொகையைவிடக் குறை வாக இருந்தால் மீதியுள்ள தொகைக்குப் பிணைய மில்லாத கடனீந்தோர்களாகி அம் முறையில் அதைக் கோரலாம்.

2. கலைப்பிற்காகும் செலவு, கட்டணம் முதலியவை கொடுக்க வேண்டும்.

3. இதர முந்துரிமை செலுத்துதல்களைச் செலுத்த வேண்டும். அவையாவன :

(அ) கலைப்பு ஏற்படுத்துவதற்கு முன்னர் 12 மாதங்களாக மத்திய, மாநில அரசுகளுக்கும் நகரசபைகளுக்கும் தரவேண்டிய வரிகள்.

(ஆ) ரூ. 1000-க்கு மேற்படாமலிருந்தால் ஒவ்வொரு நிலையிலும் செலுத்த வேண்டிய 4 மாதச் சம்பளம் அல்லது கூலியை அலுவலர்களுக்குத் தரவேண்டும். இதுவும் முன்னர்க் கூறியபடி கலைப்பு ஏற்படுவதற்கு முன்னர் 12 மாதங்களாகப் பாக்கியிருக்க வேண்டும்.

(இ) விடுமுறையில் சேர்ந்த ஊழியர்களின் ஊதிய பாக்கியைத் தரவேண்டும்.

(ஈ) ஊழியர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின்கீழ், கம்பெனி வழங்க வேண்டிய தொகையையும் செலுத்த வேண்டும்.

(உ) தொழிலாளர் நட்டஈடு சட்டத்தின்கீழ்க் கம்பெனி செலுத்த வேண்டிய ஈட்டுத் தொகையையும் செலுத்தவேண்டும்.

(ஊ) ஓய்வுப் பணம் போன்ற எல்லாத் தொழிலாளர் நலன் நிதிகளிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகைகளையும் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

4. அடுத்துக் கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கும், கம்பெனியின் சொத்துகள்மீது இழையுறு பற்றுப் பொறுப்பு உடைய கடனீந்தோர்களுக்கும் தரவேண்டும்.

5. பிணையமில்லாத இதரக் கடனீந்தோர்களுக்குத் தர வேண்டும்.

6. செலுத்தவேண்டிய இலாப ஈவுபோல் பங்குதாரர்களுக்குக் கம்பெனி தரவேண்டிய இதரப் பாக்கிகளையும் தர வேண்டும்.

காலாவதியான கம்பெனிகள் (Defunct Companies)

தொழிலையே தொடங்காத கம்பெனிகளையும் அல்லது தொழில் செய்வதை நிறுத்திவிட்ட கம்பெனிகளையும் 'காலாவதியான கம்பெனிகள் என்பர்.

சட்டத்தின் பிரிவு 560-ன்படி இத்தகைய கம்பெனிகளைப் பதிவாளர் தம்முடைய பட்டியலிலிருந்து நீக்கிவிடலாம். அதாவது, அவைகளின் பெயரைக் கீழ்க்காணும் காரணங்களுக்காக நீக்கி விடலாம். தொழில் தொடங்கி விறுவிறுப்பில்லாமல் நிறுத்தி விட்டலும், கலைப்பு ஏற்பட்டாலும், அறிக்கை கேட்கப்பட்டுக் கலைப்பதிகாரி ஆறுமாதங்களுக்குத் தொடர்ந்து சட்டபூர்வமான அறிக்கை அனுப்பாதபோதும் பதிவாளர் இத்தகைய கம்பெனிகளின் பெயரை அடித்துவிட்டு அவைகளைக் காலாவதியான கம்பெனிகள் என அறிவிக்கலாம்.

பதிவாளருக்கு அக் கம்பெனி செயலாற்றவில்லை என்று தெரிய வருமானால் அவர் அதற்கு அறிவிக்கை அனுப்ப வேண்டும். அதில் கம்பெனி செயலாற்றுகிறதா இல்லையா எனக் கேட்க வேண்டும். இவ் வறிவிக்கைக்கு ஒரு மாதத்திற்குள் பதில் வரவில்லையென்றால், அதிலிருந்து 14 நாள்களுக்குள் இரண்டாவது கடிதம் ஒன்று தபால் மூலம் அனுப்ப வேண்டும். அதில் முன் அறிவிக்கை அனுப்பியதும் அதற்குப் பதில் வராததையும் குறிப்பிட வேண்டும். மீண்டும் ஒரு மாதத்திற்குள் பதில் வரவில்லையென்றால் கம்பெனியின் பெயர் நீக்கப்படும் என்ற விவரத்தை அலுவலக வெளியீட்டில் வெளியிட வேண்டும். இதற்கும் பதில் வரவில்லையென்றால் ஒரு மாதத்திற்குப்பின் அவர் அலுவலக வெளியீட்டில் வெளியிட்டுவிடலாம். கம்பெனியின் பெயர் அடிக்கப்பட்டதையும் கம்பெனிக்குத் தெரிவிக்க வேண்டும். முதல் அறிவிக்கை அனுப்பிய மூன்று மாதங்களுக்குப் பின்னர்க் கம்பெனியின் பெயர் பதிவாளரின் கம்பெனிகளின் பதிவு ஏட்டிலிருந்து நீக்கப்பட்டுக் கலைக்கப்பட்டுவிட்டதாகக் கொள்ள வேண்டும்.

பொதுவாகக் கலைப்பதிகாரி இல்லாமல் கலைக்கப்பட்ட கம்பெனிகளில் உண்டான எல்லாமுறைகளும் இங்கும் பின்பற்றப் படும். இவ்வாறு கம்பெனியின் பெயர் நீக்கப்பட்டு அவ் வுண்மை அலுவலக வெயீட்டில் வெளியானாலும் நிருவாக அதிகாரிகள், உறுப்பினர்கள் போன்றோர்களின் பொறுப்பு வற்புறுத்தப் படலாம். பின்னர் நீதிமன்றம் கம்பெனியைக் கலைத்திட ஆணை யிடும்போதும்தான் கம்பெனி கலைக்கப்பட்டுவிட்டதாகக்கொள்ள

வேண்டும். கலைப்புக்கு முன்னர் இயக்குநர்கள் பொறுப்பில்லா மல் இருந்தால் பின்னரும் அவ்வாறே இருக்கலாம்.

இங்ஙனம் கம்பெனியின் பெயர் நீக்கப்பட்டதை எதிர்த்து யாராவது நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விடுத்தால் நீதிமன்றம் மீண்டும் கம்பெனியின் பெயரைப் பதிவாளர்ப் பதிவேட்டில் எழுதிட ஆணையிடும். இது கம்பெனியை நீக்கும்படியான வெளியீடு இட்ட இருபது ஆண்டுக்குள் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும். இக் கம்பெனியின் பெயர் நீக்கப்படும் போது அது செயலாற்றிக் கொண்டிருந்தது அல்லது அதன் பெயரை மீண்டும் எழுதுவது நியாயமானதாகவும் தகுதியுடைய தாகவும் இருக்கும் என்று நீதிமன்றம் கருதினால்தான் அதன் பெயரை மீண்டும் எழுத அனுமதி வழங்கும்.

பதிவு செய்யப்படாத கம்பெனிகள் (Unregistered Companies)

கம்பெனிச் சட்டத்தின் பிரிவுகள் 582 முதல் 589 வரை இத்தகைய பதிவு செய்யப்படாத கம்பெனிகளின் கலைப்பைப் பற்றிப் பேசுகின்றன. கூட்டுவணிகம், கம்பெனிகள், சங்கங்கள் போன்றவைகளில் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர் கொண்டவைகளைப் பதிவு செய்யப்படாத கம்பெனிகள் என்கிறோம். மேலும், இந்தியச் சட்டத்தின் கீழும், இங்கிலாந்தின் சட்டத்தின்கீழும் தோற்றுவிக்கப்பட்ட ரயில்வே கம்பெனிகள், 1956ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி தோன்றியுள்ள கம்பெனிகள் அதற்கு முன்னர் உள்ள சட்டத்தின்கீழ்த் தோன்றி, பதிவு அலுவலகங்கள் இந்தியாவில் பெற்றுள்ள கம்பெனிகள் ஆகியவை பதிவு செய்யப்படாத கம்பெனி வகைகளைச் சாராது. இந்தியா விற்கு வெளியில் பதிவு செய்யப்பட்டு இந்தியாவில் தொழில் செய்யும் கம்பெனியைக் கலைப்பு நோக்கத்திற்காகப் பதிவு செய்யப்படாத கம்பெனியாகப் பாவிக்கப்படுகிறது. ஆனால், அக் கம்பெனி தொழிலை நிறுத்திவிட வேண்டும். பதிவு செய்யப் படாத கம்பெனிகள் சட்டவிரோதமான சங்கங்களுடன் சேர்க்கப் படமாட்டா.

இவ்வாறு பதிவு செய்யாத கம்பெனிகள் கம்பெனிச் சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தின் ஆணையின்பேரில் கலைக்கப் படலாம். தன்விருப்பமாகவோ அல்லது நீதிமன்றத்தின் மேற் பார்வை மூலமாகவோ கலைக்கப்படமாட்டா. நீதிமன்றமும் அதிகாரபூர்வமான கலைப்பதிகாரியும் பதிவு செய்யப்பட்ட கம்பெனி கலைப்பிற்கு எவ்வளவு அதிகாரம் பெற்றிருந்தார்களோ, அவ்வளவு அதிகாரம் இதற்கும் பெற்றுள்ளார்கள். எந்த

மாநிலத்தில் அக் கம்பெனியின் முக்கியத் தொழிலகம் அமைந் துள்ளதோ, அம் மாநிலத்தின் நீதிமன்றத்தின் கட்டளைக்கேற்ப பதிவு செய்யப்படாத கம்பெனி கலைக்கப்படும். பதிவு செய்யப் படாத கம்பெனி தன் தொழிலை நிறுத்தியபோதும், தன் கடன் களைச் செலுத்த முடியாமற்போனாலும், அதைக் கலைப்பது நியாயமானது என்று நீதிமன்றம் கருதும்போதும் கலைக்கப் படுகிறது.

தொழில் ஐக்கியமும் புனரமைப்பும்

(Amalgamation and Reconstruction)

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே தொழில் செய்யும் இரு கம்பெனிகள் ஒன்றாக இணைந்து தொழில் செய்வதைத் 'தொழில் ஐக்கியம்' என்கிறோம். தொழில் ஐக்கியத்தால் போட்டியைத் தவிர்க்கலாம். விலைகளைச் சீராக வைத்திருக் கலாம். உற்பத்திப் பொருள்களுக்குத் தயார் நிலையிலுள்ள அங்காடியில் கிராக்கி உண்டு.. நியாய விலையில் மூலப்பொருள் கள் கிடைக்கின்றன. ஓர் இரும்புக் கம்பெனி ஒரு நிலக்கரி கம்பெனியோடு இணையுமானால் சுரங்கத்திற்கு நிலக்கரியை விற்கும் பொறுப்பான பிரச்சினை இல்லை. அதேபோல் இரும்புக் கம்பெனிக்குத் தேவையான நிலக்கரிக்கும் பஞ்சமில்லை. அதிக அளவு உற்பத்தியினால் உற்பத்தி விலையும் விற்பனை விலையும் குறைவானதால் இலாபம் அதிகமாகும். ஏற்கெனவே உள்ள கம்பெனிகளோடு ஐக்கியமாகிப் புதுக் கம்பெனி தோன்றினால் அதற்குத் 'தொழில் ஐக்கியம்' என்று பெயர்.

'புனரமைப்பு' என்பது ஒரே ஒரு கம்பெனியில் தோன்றுவது. இரண்டு அல்லது அதற்கதிகமான கம்பெனிகளில் தோன்றுவ தில்லை; அவைகள் இணைவதும் இல்லை. வெற்றியடையாத கம்பெனிகள் புனரமைப்புச் செய்கின்றன. பங்குதாரர்கள் மாறுவதில்லை. குவிந்து உள்ள நட்டங்களையும், அதிக மதிப்பீடு களையும் போக்கி ஒரு புதிய நிலையில் காட்டுவதுதான் புனரமைப்பாகும். பழைய கம்பெனி கலைக்கப்பட்டுப் புதுக் கம்பெனி தோன்றித் தொழிலை எடுத்துச் செயல்படுத்துகிறது. இதை 'வெளிப் புனரமைப்பு' என்பர்.

இதற்கு மாற்றுமுறை வழியும் உண்டு. கம்பெனி நீதி மன்றத்தை நாடி மூலதனக் குறைப்பையும் நாடலாம். கம்பெனி யின் செலுத்தப்பட்ட ஒவ்வொரு பங்கின் மதிப்பையும் குறைத்து அவற்றிற்கெதிராகப் பழைய நட்டங்களையும் சொத்துகளின்

அதிக மதிப்பையும் சரிக்கட்டுவதுண்டு. இங்குக் கம்பெனி கலைக்கப்படுவதில்லை; புதிய கம்பெனியும் தோன்றுவதில்லை. இதை உள் புனரமைப்பு என்கிறோம்.

மேற்கூறிய தொழில் ஐக்கியத்தையும் புனரமைப்பையும் இரண்டு விதங்களில் கம்பெனி வலியுறுத்துகிறது. ஒன்று தன் விருப்பக் கலைப்பின் மூலமும், மற்றொன்று பிரிவு 391-ல் கூறப்பட்டுள்ள ஏற்பாடு திட்டத்தின் மூலமும் இவைகள் நிறைவேற்றப்படுகின்றன. முன்னர்க்குறிப்பிட்டமுறை மிகவும்செலவு உடையது; காலமும் ஆகும். ஆனால் பின்னால் கூறப்பட்டது அதோடு ஒப்பிடும்போது எளிதாகவும் செலவு குறைந்தும் காணப்படுகிறது.

பிரிவுகள் 394, 395-ல் சொல்லியுள்ள புனரமைப்பைத்தான் 'உள் புனரமைப்பு' என்கிறோம். இங்குக் கம்பெனி கலைக்கப்பட வேண்டிய அவசியமில்லை. வழக்கமாக பிரிவு 391-ல் தரவேண்டிய விண்ணப்பம் ஒன்றை நீதிமன்றத்தின் அனுமதிக்காகத் தர வேண்டும். நீதிமன்றம் எல்லா நிபந்தனைகளையும் சரிபார்த்துத் திருப்தியடைந்தால்தான் புனரமைப்பு அல்லது தொழில் ஐக்கியத்திற்கு அனுமதி வழங்கும். உரிமை மாற்றம் செய்யும் கம்பெனிகளின் சில அல்லது எல்லாச் சொத்துகளையும் பொறுப்புகளையும் உரிமை மாற்றம் பெறும் கம்பெனிக்கு மாற்றிட நீதிமன்றம் உத்தரவிடும். அவ் வுத்தரவில் வாங்கின விலையும், அதை எவ்வாறு வாங்கிய கம்பெனி செலுத்த வேண்டும் என்ற விவரமும் கருத்து வேறுபட்ட பங்குதாரர்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்பன போன்ற விவரங்களும் அடங்கியிருக்கும்.

பிரிவு 395-ன்படி அத்தகைய பங்குதாரர்களின் பங்கை உரிமை மாற்றம் பெற்ற கம்பெனி கட்டாயமாக எடுத்துக் கொள்ள வேண்டும். 9/10 பாகப் பங்குகளின் மதிப்பை உடைய பங்குதாரர்கள் பங்குகளின் மாற்றத்தை ஒத்துக்கொண்டால் அவர்கள் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள்படியே கருத்து வேறுபட்ட பங்குதாரர்களின் பங்கையும் உரிமை மாற்றம் பெற்ற கம்பெனி வாங்கிடலாம். அவ்வாறு அக் கம்பெனி பங்குகளை வாங்கி உரிமை மாற்றம் செய்யும் கம்பெனியின் பங்குகளில் 9/10 பாகம் பெற்றுவிட்டால், கருத்து வேறுபட்ட பங்குதாரர்களுக்கு அது உடனே அறிவிக்கை கொடுக்கவேண்டும். அறிவிக்கை விட்ட மூன்று மாதத்திற்குள் அத்தகைய பங்குதாரர்களுக்கும் பங்கினை வாங்கிட அது தேவைப்படுகிறது. அவ்வாறு தேவைப்படும் பொழுது உரிமை மாற்றம் பெறும் கம்பெனி பங்குகளை அவசியம் பெற்றிட வேண்டும்.

பிரிவு 396-ன்கீழ் மத்திய அரசு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள் கட்டாயமாக ஐக்கியப்பட வேண்டும் என்று ஆணையிடும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. நாட்டின் நலன் கருதி மத்திய அரசு இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தலாம். இத்தகைய தொழில் ஐக்கியத்தின் விளைவாகப் பங்குதாரர்களும் கடனீந்தோர்களும் புதிய கம்பெனியின் நலனில் குறைந்த அக்கறைதான் காட்டுவார்கள். ஆனால் அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படும்.

20. திவால் அல்லது முறிவுச் சட்டம்

(Law of Insolvency)

திவால் சட்ட விளக்கம்

நம் நாட்டின் 'திவால் சட்டம்' 1909 ஆம் ஆண்டின் மாகாண நகரத் திவால் சட்டம் (The Presidency Towns Insolvency Act of 1909) என்றும், 1920 ஆம் ஆண்டின் மாகாணத் திவால் சட்டம் (The Provincial Insolvency Act, 1920) என்றும் இரண்டு சட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. முதலில் கூறப்பட்டது மாகாண நகரங்களான சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்குப் பொருந்தும். பின்னர்க் கூறப்பட்டது முன்கூறிய நகரங்களை விடுத்து ஏனைய உள்நாட்டுப் பகுதிகளுக்குப் பொருந்தும். இச் சட்டங்களின் நோக்கங்கள் இரண்டு. ஒன்று நேர்மையான கடனாளிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது. பிறிதொன்று கடனீந்தோர்களின் நலனைப் பாதுகாப்பது. கடனாளிகள் அடிக்கடி துரதிர்ஷ்ட வசத்தால் தாங்கள் பெற்ற கடனைத் திருப்பித்தர இயலாதபடி இன்னல் அடைகிறார்கள். நாட்டின் பொதுக் கொள்கை என்ற அடிப்படையில் அவர்களுக்கு உதவ அரசாங்கம் முன்வருகிறது. அவர்கள் பழைய கடன் சுமைகளிலிருந்து விடுபடவும், புதிய வாழ்க்கை ஆரம்பிக்கவும் அரசாங்கம் இச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு உதவுகிறது. அதேபோல் கடனீந்தோர்களுக்கும் அரசாங்கம் உதவுகிறது. திவாலானவரின் சொத்துகளைக் கடனீந்தோர்களிடையே நியாயமாகப் பிரித்து வழங்குவதற்கு நீதிமன்றம் ஏற்பாடு செய்கிறது. தகாத சலுகைகளையும் மோசடிகளையும் நீதிமன்றம் தடுக்கிறது. நீதி, நேர்மை, மனிதாபிமானம் போன்றவைகளின் அடிப்படையில் திவால் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மேலும், வியாபார நன்மை கருதியும் இச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஒருவரைத் திவாலானவர் என்று முடிவுகட்டித் தீர்ப்பளிக்க வேண்டிய சட்டப் பகுதிகளை இச் சட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது. திவாலானவரின் சொத்துகளை விற்கவும், நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கவும் இச் சட்டத்தில் விதிகள் உள்ளன. மாநில நகரச் சட்டத்தின்கீழ்த் திவாலானவரின் அலுவல்களைக் கவனிக்க அமர்த்தப்பட்ட அதிகாரிக்கு,

அதிகார முறையில் உரிமைமாற்றம் பெறும் அதிகாரி (Official Assignee) என்றும், மாநிலச் சட்டத்தின்கீழ் அவ்வாறு அமர்த்தப்படுவோருக்குக் கடனாளி சொத்ததிகாரி (Official Receiver) என்றும் பெயர்.

இந்திய நீதிமன்றத்தின் விவகார அல்லது அதிகார எல்லைக் குட்பட்ட கடனாளிகள் தொடர்பான விஷயங்களுக்குத்தாம் இச் சட்டம் செல்லுபடியாகும். எனவே, உலகில் உள்ள கடனாளிகளை இது குறிக்காது. தான் பெற்ற கடனைத் திரும்பத் தர இயலாத கடனாளிக் கெதிராக, ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பளிப்பின் முறையான கட்டளைதான் 'திவால்' என்பது. ஒருவர் கடனாளியாக இருக்க வேண்டும்; பின்னர் அவர் திவாலாகி இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவரைத் 'திவாலானவர்' அல்லது 'நொடிந்தவர்' என்று தீர்ப்பளிக்கலாம்.

ஒருவருடைய நிதிச் சங்கடத்தைத் தெளிவாகக் குறிப்பிடுவது அல்லது குறிக்கும் செயல்தான் 'திவால்' என்பது. சட்டத்தால் உருவாக்கப்படும் நிலைதான் இத் திவால் அல்லது முறிவு. தான் பெற்ற கடனைத் திரும்பத்தர இயலாதபோது கடனாளி செய்யும் எட்டு விதமான செயல்களைச் சட்டம் (Acts of Insolvency) குறிப் பிடுகிறது. இத்தகைய செயல்களில் ஏதாவது ஒன்றைக் கடனாளி செய்திருந்தால்தான், அவரைத் திவாலானவர் என்று தீர்ப்பளிக்க நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம். கடனாளியின் இச் செயல்களை அவர் தம் சொத்துகளோடு கொண்டுள்ள விவகாரம் என்றும், அவர் தம்மைப் பற்றிக் கொண்டுள்ள விவகாரம் என்றும், அவர் தம் அலுவல்களோடு கொண்டுள்ள நிலைமை என்றும் மூன்று வகைப்படுத்தலாம். முதலில் அவர் சொத்துகளைப் பொறுத்தமட்டில் தம் கடனீந்தோர்களின் நலனுக்காகத் தம் முழு அல்லது ஒரு பகுதிச் சொத்துகளை அவர் உரிமை மாற்றிட லாம். கடனீந்தோர்களின் உரிமைகளை முறியடிக்கவும் அல்லது தாமதப்படுத்தவும் இத்தகைய சொத்துமாற்றம் பயன்படும். மேலும், மோசடியான சலுகைகளை (Fraudulent Preference) இம் மாற்றம் ஏற்படுத்தலாம். அதாவது, கடனீந்தோர் பலரில் மற்றவர் களை விடுத்து ஒருவரை தேர்ந்தெடுத்துச் சலுகை காட்டுவ தாகும். அச் சூழலில் அது தகாதமுறையில் காட்டும் சலுகையாகக் கருதப்படுகிறது. முதற்கூறிய சொத்து மாற்றம் நேர்மையானது. பின்னர்க் கூறியது மோசடி எண்ணம் கலந்தது. ஆனால், இவை களெல்லாம் கடனாளியின் இக்கட்டான நிலையினைக் காட்டுவ தாகும். மேற்கூறிய சொத்துகள் இந்தியாவில் அல்லது வேறு எந்த இடத்திலும் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

ஒரு கடனாளர் தம் கடனை அடைக்க முடியாது என்று நன்றாக அறிந்து தம் வியாபார இடத்தைவிட்டுத் தலைமறைவாக வேறு எங்காவது போய்விடுவதும் உண்டு. இந்தியாவிற்கு வெளியேயும் போய்விடலாம். வழக்கமான தம் வியாபார இடத்திலும் அல்லது அவரது வீட்டிலும்கூடக் காணமுடியாமல் மறைந்திருக்கலாம். அல்லது மாறு வேடத்தில் இருக்கலாம். இச் செயல்களை அவர் தம்மைப்பற்றிக் கொண்டுள்ள விவகாரங்களாகக் கருதலாம்.

இறுதியாக ஒரு கடனாளரின் செயல் அவர் வாழ்க்கை நிலையைக் குறிப்பதாகக்கூட இருக்கும். அதாவது, தம் அலுவல் அல்லது விவகாரங்களை மறு ஏற்பாடு செய்துகொள்வதாகவும் இருக்கலாம். ஒரு வழக்கின் தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டு அவர்தம் சொத்துகள் விற்கப்படலாம். மாநில நகரங்களின் சட்டத்தின்கீழ்க் கடனாளியின் சொத்துகளை வழக்கோடு இணைத்தாலே (attach) போதும். விற்க வேண்டிய அவசியமில்லை. அத்தகைய இணைப்பு இருபத்தொரு நாள்களுக்குக் குறையாமல் நீடிக்கும். மேலும், ஒரு கடனாளி தாமே, தம்மைத் திவாலானவர் என்று அறிவிக்க விண்ணப்பம் தருவதுண்டு. பணம் செலுத்துவதை நிறுத்துவதற்கு அவர் ஓர் அறிவிக்கை தர வேண்டும். அதாவது, தம் கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு விருப்பமில்லை; அல்லது தம் கடனீந்தோர்களுக்குப் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டார் என்று அவ் வறிக்கை மொழிய வேண்டும். மேலும், ஒரு வழக்கின் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக அவரைக் கைது செய்து சிறையில் அடைக்கலாம்.

இவை அனைத்தும் திவால் சட்டங்களில் வரும் செயல்களாகும். மேற்கூறிய சட்ட நடவடிக்கைகளில் எவ்வித நடவடிக்கையும் வரவில்லையென்றால் அது திவால் சட்டத்தின்பாற்பட்டதாகாது. காட்டாக, ஒரு கடனாளி விடுத்த மாற்றுச் சீட்டு ஏற்றுக் கொள்ளாமலோ, பணம் செலுத்தப்படாமலோ மறுக்கப்பட்டு விட்டால், அது திவால் சட்டத்தின் பாற்பட்டதாகாது. இச் செயலால் கடனாளி நிதி நெருக்கடியில் உழன்றபோதும், இச் சட்டத்தின் பட்டியலில் அச் செயல் சேர்க்கப்படவில்லை. எனவே, திவாலுக்குரிய செயலைக் கடனாளி செய்துவிட்டால் கடனீந்தோர் ஒரு விண்ணப்பம் தரவேண்டும். அல்லது கடனாளி தம்மைத் 'திவாலானவர்' என்று தீர்ப்பளிக்க விண்ணப்பம் செய்யலாம். இவ் விண்ணப்பத்தைப்பற்றிய நிபந்தனைகள் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடனீந்தோரின் விண்ணப்பம் (Creditor's Petition)

ஒரு கடனாளியைத் 'திவாலானவர்' என்று தீர்ப்பளிக்கக் கடனீந்தோர் விண்ணப்பிக்க வேண்டுமானால் கீழ்க்காணும் நிபந்தனைகள் தேவை:

1. கடனாளி கடன்பட்ட தொகை ரூ. 5000 அல்லது அதற்கு மேல் இருக்கவேண்டும். இது பணவரையறையாகும். ஒன்றுக்கு மேற்பட்ட கடனீந்தோர்கள் இருந்தால், மொத்தமாக அவர்களுக்குத் தர வேண்டியதொகை ரூ. 500 அல்லது அதற்கு மேலிருந்தால் போதும்.

2. அப் பணம் உடனடியாகவோ எதிர் காலத்திலோ செலுத்த வேண்டும் என்று உறுதி செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். தரவேண்டிய பணம் உறுதியான தாகவும் இவ்வளவுதான் எனத் தனித்துச் சொல்லக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

3. கடனாளி திவாலான தொண்ணூறு நாள்களுக்குள் விண்ணப்பம் செய்யவேண்டும். அதாவது, விண்ணப்பம் ஏற்பட்ட திவால் செய்கையின் அடிப்படையிலும் விண்ணப்பம் தருவதற்குமுன் மூன்று மாதங்களுக்குள் நடந்ததாகவும் இருக்கவேண்டும். இந் நிபந்தனைகள் ஏக காலத்தில் கூடியுள்ள நிபந்தனைகளாக இருக்க வேண்டும்.

பிணையமுள்ள கடனீந்தோர், மேற்கொண்டு சில காரியங்கள் செய்யவேண்டும். அதாவது, அவர் தாம் பெற்றுள்ள பிணையத்தைத் துறந்துவிட்டுச் சாதாரணக் கடனீந்தோராக ஆக வேண்டும். அவர், தாம் பெற்றுள்ள பிணையத்தை விலை மதிப் பிட்டு, மீதியுள்ள தொகைக்குத்தான் கோரிக்கை விடவேண்டும். அல்லது பிணையத்தை வைத்துக்கொண்டு திவால் விஷயத்தில் ஈடுபடாமலிருந்துவிடலாம்.

கடனாளியின் விண்ணப்பம் (Debtor's Petition)

கடனாளி விண்ணப்பம் தாக்கல் செய்யும்போது அவரால் கடனைத் திரும்பச் செலுத்த முடியவில்லை என்று அறிவிக்க வேண்டும். கீழ்க்காணும் நிலைகளில் அவர் விண்ணப்பம் தாக்கல்செய்யலாம்.

1. அவர் பெற்றுள்ள கடன் ரூ. 500 அல்லது அதற்கு மேற்பட்டிருக்கவேண்டும்.

2. நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டு அவர் கைது செய்யப்பட்டுச் சிறையிலிடப்பட வேண்டும்.

3. அவர் சொத்துக்கெதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை நிறை வேற்றும் பொருட்டு அவர் சொத்துகளைப் பறிமுதல் செய்யும் கட்டளை இருக்கவேண்டும். இந் நிபந்தனை கள் மாற்று நிபந்தனைகளாகும். ஏக காலத்தில் எழ வேண்டிய அவசியமில்லை. இந்நிபந்தனைகளில் ஒன்று அல்லது இரண்டிருந்தாலே போதும்.

ஒரு கடனாளி இவ் விண்ணப்பத்தைத் தகுந்த முறையில் கவனமுடன் தாக்கல் செய்யவில்லையென்றால், அவரது விண் ணப்பம் தள்ளுபடி செய்யப்படும். எனவே, அவர் மறுமுறை விண்ணப்பம் செய்திட நீதிமன்றத்தின் அனுமதி வேண்டும். மறு விண்ணப்பம் செய்ய, முன் விண்ணப்பம் சரியான முறையில் தாக்கல் செய்யப்படாததற்கு நியாயமான காரணங்களை அவர் காட்டியாக வேண்டும். மேலும், மறு விண்ணப்பத்தில், முதல் விண்ணப்பத்தில் அடங்காத உண்மைகள் அடங்கி இருக்க வேண்டும்.

செயல்முறை

சட்டத்தில் கூறப்பட்டுள்ள தத்தம் விவகார எல்லைக்குட் பட்ட நீதிமன்றங்களில்தாம் கடனாளி இவ் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யவேண்டும். கடனாளி எங்கு வசிக்கிறாரோ, அந்த எல்லையில் உள்ள நீதிமன்றத்தில்தான் அவர் தம் விண்ணப் பத்தைத் தாக்கல் செய்யவேண்டும். அல்லது அவர் எங்கு வாணிபஞ் செய்கிறாரோ அங்கும், அல்லது அவருக்குச் சொத்து எங்குள்ளதோ அங்கும், அல்லது அவர் எங்குக் கைது செய்யப் பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாரோ அங்கும், அவர் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பம் குறிப்பிடப்பட்டுள்ள தாளில் எழுத்தால் எழுதப்பட வேண்டும். விண்ணப்பத்தில் வேண்டிய விவரங்கள் அடங்கியிருக்கவேண்டும். அவர் அதில் கையெழுத்திட்டிருக்கவேண்டும். மேலும், கீழ்க்காணும் விவரங் கள் விண்ணப்பத்தில் சேர்க்கப்படவேண்டும்.

1. கடனைத் திரும்பத் தர இயலவில்லை என்ற அறிக்கை ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

2. விவகார அல்லது அதிகார வரம்பு எல்லையைக் கண்டு பிடிக்க அவர் வசிக்கும் இடம், வாணிபம் செய்யுமிடம் ஆகியவைகளை அதில் குறிப்பிட வேண்டும்.

3. அவர் தரவேண்டிய கடன்களின் விவரம்.

4. அவர் பாக்கித் தரவேண்டிய கடனீந்தோர்களின் பெயர்கள்.

5. அவரின் சொத்து விவரம், அதன் மதிப்பு, சொத்து உள்ள இடம், நீதிமன்ற அதிகாரியின் பாதுகாப்பில் அச் செத்துகளை விட, விருப்பம் தெரிவித்த அறிக்கை ஆகியவைகள் அடங்கியிருக்க வேண்டும்.

6. முன்பு தாக்கல் செய்த விண்ணப்பம் ஏதாவதிருந்தால் அதன் விவரமும், முடிவும் குறிப்பிட வேண்டும். கடனீந்தோர், கடனாளி செய்த திவால் செய்கையைக் குறிப்பிட வேண்டும். அவர் எந்தத் தேதியில் அச் செயலைப் புரிந்தார் என்றும் குறிப்பிட வேண்டும். மேலும், கடனாளி தமக்கு எவ்வளவு தொகை பாக்கித் தரவேண்டும் என்றும் கூற வேண்டும்.

நீதிமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் எந்த விண்ணப்பத் தையும் திரும்பப் பெற முடியாது. எல்லா விண்ணப்பங்களையும் ஒன்றுசேர்த்து, ஒரே நேரத்தில் அவை அனைத்தையும் விசாரணை செய்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. இடைக்காலச் சொத்துப் பராமரிப்பு அதிகாரியை அமர்த்தும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு. கடனாளர் விண்ணப் பத்தின்பேரில் நீதிமன்றம் செயல்படும்போது இவ் வதிகாரியை அமர்த்துவது நீதிமன்றத்தின் கடமையாகும். ஆனால், மாநில நகரங்களின் சட்டத்தின்கீழ், இது நீதிமன்றத்தின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். விசாரணைக்கு நாள் குறித்து, நீதிமன்றம் பதிவுசெய்யும் ஒரு தேதியிலிருந்து, மறு தேதிக்கு விசாரணையை நீதிமன்றம் ஒத்தி வைக்கலாம். விசாரணையின்போது கட னாளரை விசாரித்த குறிப்பும், சாட்சியங்கள் விசாரணை செய்யப் படும்போது எடுக்கப்பட்ட குறிப்பும் நிரந்தரச் சான்றாகத் திகழும். குற்றப் பிரிவில்லாத சமூக நடைமுறைச் சட்டத்தில் விசாரணைக் குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை முறைகளும் திவால் நீதிமன்ற விசாரணைக்கும் பொருந்தும். ஒப்பந்தம் செய்யத் தகுதி யான எந்த நபரும் திவாலானவராகத் தீர்ப்பளிக்கப்படலாம். எனவே, வயதுவராத இளவர் (Minor) நொடிந்தவராகத் தீர்ப்பளிக்கப்படமாட்டார். கவனக்குறைவாக அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டால், அது செல்லாது. திவால் சட்டம் ஒரு தனிப்பட்ட நபரைப் பற்றிய சட்டம். நம் நாட்டில் இளவர், அவர் நன்மை கருதி செய்யப்பட்ட காரியத்திற்கும், அவருக்கு

அவசியமான பொருளைத் தந்ததற்கும் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாகமாட்டார்.

சித்தம் கலங்கியவர்கூட, அவர் நல்ல முறையில் உள்ள போது பட்ட கடனுக்குத்தான் திவாலானவராகத் தீர்ப்பளிக் கப்படலாம். அவர் சித்தம் கலங்கியுள்ளபோது பட்ட கடனை இது கட்டுப்படுத்தாது. திவாலான செய்கை புரிவதற்குச் சட்ட திட்டத்திலிருந்து விலகி நடப்பது அவசியம். கடனீந்தோர் களின், கடனைத் தருவதற்குக் காலதாமதம் செய்வதும் அல்லது அதைச் செலுத்துவதற்கு ஏமாற்றும் நோக்கமும் கடனாளரிடம் இருக்கவேண்டும். அந் நோக்கம் புத்தி சுவாதீனமில்லாதவரிடம் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. திருமணமான பெண் அவள்மீது சொத்திருக்குமானால், திவாலானவள் என்று தீர்ப்பளிக்கப்படலாம். கூட்டாளிகள் கூட்டமாகவும், தனித் தனியாகவும் அவர்கள் திவால் செய்கையைச் செய்திட்டால், அவர்களையும் திவாலானவர்கள் எனத் தீர்ப்பளிக்கலாம். ஆனால், முன்னர்க் கூறியதுபோல் உரிய வயதுவராத இளவரை அவ்வாறு கூறமுடியாது. கூட்டு நிறுவனத்தின் பெயரால் அதற் கெதிராகத் திவால் கட்டளை பிறப்பிக்கலாம். உரிய வயதுவராத இளவரைத் தவிர ஏனைய கூட்டாளிகளைத் திவாலானவர்கள் எனத் தீர்ப்பளிக்கலாம். கம்பெனிச் சட்டத்தின் 8ஆவது பிரிவின் படி கம்பெனி திவாலாகாது. அதற்குப் பதிலாக அச் சட்டம் கம்பெனியின் கலைப்பிற்கு வழி வகுத்துள்ளது.

இறந்துவிட்டவர்களின் சட்டபூர்வமான வாரிசுதாரர்கள், திவாலானவர்களாகத் தீர்ப்பளிக்கமாட்டார்கள். அவர்கள் தனிப்பட்ட முறையில் இறந்துவிட்டவர்களின் செயல்களுக்குப் பொறுப்பாளியாக மாட்டார்கள். திவாலாவதற்குரிய விண்ணப்பம் தந்துவிட்ட பிறகு, கடனாளி இறந்துவிட்டால் அவரது சொத்துகளை நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி கண் காணித்து வருவார்.

இந்தியக் கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்தமட்டில், அதன் தலைவரான கர்த்தாமீதுதான் திவால் விண்ணப்பம் தாக்கல் செய்யமுடியும். குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள், தனிப் பட்ட முறையில் பொறுப்பாளியாகமாட்டார்கள். கூட்டுக் குடும்பச் சொத்தில் தங்களுக்கு எவ்வளவு பங்கு உண்டோ அந்த அளவிற்குத்தான் அவர்கள் பொறுப்பாளியாவார்கள். ஒரு கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும், திவால் செய்கையைக் கூட்டாகச் செய்திருந்து, அவர்கள் பொறுப்பாளி யானால் அவர்கள்மீது திவால் விண்ணப்பம் தாக்கல் செய்யலாம்.

ஓர் அயல்நாட்டவர் இந்தியாவில் வசித்துவரும்பொழுது திவால் செய்கையைப் புரிந்தால், அவரையும் திவாலானவர் என்று தீர்ப்பு வழங்கலாம். அவர் இந்தியாவில் வசித்துவரும் பொழுது திவாலானாலொழிய அவரைத் திவாலானவர் என்று அழைக்க முடியாது. திவால் சட்டத்தின்கீழ் ஒரு கடனாளர் என்பவர் இந்தியச் சட்டத்திற்கு மட்டும் உட்பட்டவரேயொழிய உலகச் சட்டம் முழுவதற்கும் உட்பட்டவர் அல்லர். எனவே, அயல்நாட்டினர் இந்தியாவில் வசித்து வரும்பொழுது திவால் செய்கை புரிந்திருந்தால் அவர் விண்ணப்பம் தாக்கல் செய்யும் போது இங்கு இல்லாமலிருந்தால்கூட அவரைத் திவாலானவர் என்று தீர்ப்பளிக்கலாம். இங்கு அவர் புரிந்த திவால் செய்கை முக்கியமே யொழிய, விண்ணப்பம் தாக்கல் செய்வது முக்கியமன்று.

திவால் தீர்ப்பளிப்பு (Adjudication)

சட்டத்தின் 27 ஆவது பிரிவின்படி கடனாளி அல்லது கடனீந்தோர்களின் விண்ணப்பத்தை நீதிமன்றம் தள்ளுபடி செய்யாவிட்டால் அது திவால் தீர்ப்பளிப்பு ஆணையைப் பிறப்பிக்கும். முறையாகக் கடனாளியைத் திவாலானவராக அறிவிக்கும் நீதிமன்றக் கட்டளைதான் திவால் தீர்ப்பளிப்பாகும். அத்தகைய ஆணை கடனாளி எந்தக் காலப்பகுதிக்குள் தன்னுடைய விடுதலைக்கு விண்ணப்பம் போடவேண்டும் என்று குறிப்பிட வேண்டும். மேலும், இவ் வாணை அரசிதழில் (Gazette) வெளியிடப்பட வேண்டும். அதில் திவாலானவரின் பெயர், முகவரி, அவரைப்பற்றிய விவரங்கள், நீதிமன்றம் தீர்ப்பளித்த தேதி, நிறைவேற்றப்பட்ட கட்டளை, விடுதலைக்கு விண்ணப்பிக்க வேண்டிய காலவரை போன்றவை அடங்கியிருக்க வேண்டும். கடனாளி விண்ணப்பித்து, தகுந்த காரணமிருந்தால் விடுதலைக்குக் குறிப்பிட்ட காலவரையை நீட்டிக்கலாம்.

தீர்ப்பளிப்புக் கட்டளையின் விளைவுகளாவன: கடனாளி திவாலானவராகக் கருதப்படுவார். சட்டபூர்வமான நபர் நிலையை அவர் இழந்துவிடுகிறார். சமூக இயலைப் பொறுத்த மட்டில் அவர் இறந்துவிட்டவராகக் கருதப்படுகிறார். அவர் எவ்விதமான அலுவல்களிலும் ஈடுபடமுடியாது. நீதிமன்றத்தின் அனுமதியின்றி அவர்மீது வழக்குத் தொடுத்திட இயலாது. அவர் சொத்துகளை நீதிமன்ற அதிகாரிவசமோ, அல்லது அதிகார முறையில் உரிமை மாற்றம் பெற்றுள்ள அதிகாரிவசமோ, அல்லது சொத்தினைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரிவசமோ ஒப்படைக்க வேண்டும். பொறுப்புரிமை சொத்து (Trust Property), தொழிற்

கருவிகள் போன்றவை நீங்கலாக உள்ள ஏனைய நகரும் அல்லது நகராச் சொத்துகளை அவர் அவ் வதிகாரியிடம் ஒப் படைக்க வேண்டும். இந்தியாவிற்கு வெளியில் உள்ள நகரும் சொத்துகளையும், வெளிநாட்டுச் சட்டத்தால் விதிவிலக்கு அளிக்கப்படுகின்ற நகராச் சொத்துகளையும் அவரிடம் ஒப் படைக்க வேண்டும்.

மேலும், தம் சொத்துகளை விற்றுக் கடனீந்தோர்களிடையே பகிர்ந்தளிக்க நீதிமன்றத்தால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அவர் உதவ வேண்டும். நீதிபதியாகவோ உள்ளாட்சித்துறை அதிகாரியாகவோ திவாலானவர் பணியாற்ற முடியாது; நகராட்சியில் உறுப்பினராக இருக்கமுடியாது; கம்பெனிச் சட்டத்தின்கீழ்க் கம்பெனியின் இயக்குநராக ஆகமுடியாது. சுருங்கக்கூறின், சமூக இயலில் சில உரிமைகளை அவர் இழந்து விடுகிறார்.

அவர் செய்த உரிமை மாற்றங்கள் எதுவும் செல்லுபடி யாகா. திவால் விண்ணப்பம் சமர்ப்பித்த இரண்டாண்டு களுக்குள் அவராகவே செய்த உரிமை மாற்றங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை. அவர் தம் நண்பருக்கோ உறவினருக்கோ தம் சொத்தைக் கொடையாகக் கொடுத்திருந்து, அக் கொடை செய்ததிலிருந்து இரண்டாண்டிற்குள் அவர் திவாலாகிவிட்டால் அக் கொடை செல்லுபடியாகாது. எனவே, அக் கொடையைப் பெற்றவர்கள் நீதிமன்ற அதிகாரியிடம் அச் சொத்தைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும். மாநில நகரங்களின் திவால் சட்டத்தின்கீழ், திவாலானவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட இரண்டாண்டிற்குள் செய்யப்பட்ட கொடை செல்லுபடி யாகாது. திவால் விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர்ச் செய்யப்பட்ட மோசடியான சலுகை களும், தகாத நடவடிக்கைகளும் செல்லுபடியாகாமல் ஒதுக்கப் படும். நன்னம்பிக்கையுடன் தகுந்த முனைவிற்காகச் செய்யப் படும் உரிமை மாற்றங்களும், திருமணத் தருணத்தில் மனை விக்குச் செய்யப்படும் மாற்றங்களும் செல்லுபடியாகும். திவால் கட்டளை பிறப்பித்த பின்னர் வாங்கப்பட்ட சொத்துகளும், அதாவது, தீர்ப்புக் கூறுவதற்குமுன் வாங்கப்பட்ட சொத்து களும் நீதிமன்றச் சொத்ததிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு, கடனீந்தோர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். திவால் தீர்ப்பளிப்பு உத்தரவு திவாலானவர்மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒரு தடையாக இருக்கிறது. பிணையம் பெற்றுள்ள கடனீந்தோர் இவ் வுத்தரவால் பாதிக்கப்பட

மாட்டார்கள். அதாவது, சொத்துகளைத் திரட்டவோ பிணையங்களைச் சொத்துகளின்மீது பயன்படுத்தவோ அவர்களுக்குள்ள அதிகாரம் எப்பொழுதும் உண்டு.

நம்பிக்கை உரிமைக் கோட்பாடு (Doctrine of Reputed Ownership)

சொத்துகளின் உண்மையான உரிமையாளரின் இசைவு பெற்றுத் திவாலானவர்வசம் உள்ள சொத்துகளை, அவ் வுண்மையான உரிமையாளர்கூட நீதிமன்ற அதிகாரிக்கு எதிராக உரிமைகொள்ள முடியாது. காரணம், திவாலானவர்தாம் அச் சொத்துகளின் நம்பிக்கை உரிமையாளர். எனவே, திவால் சட்டம் நீதிமன்ற அதிகாரிக்கு அச் சொத்தின்மீது முழு உரிமை அளிக்கிறது. சில சூழ்நிலைகளில் உண்மையிலேயே சொத்துகள் திவாலானவரின் சொத்துகளாக இல்லாவிட்டாலும், அவருடைய தாகக் கருதப்படுகின்றன. அதற்கான நிபந்தனைகளாவன:

அச் சொத்துகள் நகரும் சரக்குகளாக இருக்க வேண்டும். வியாபாரக் கடன் பாக்கி, திவாலானவருக்குச் சேரவேண்டிய விளைபொருள்கள் போன்றவைகளை விடுத்து மற்றவைகளாக இருத்தல் கூடாது. அச் சரக்குகள் வியாபாரம் செய்யும்பொழுது அவர்வசம் இருத்தல் வேண்டும். தனிப்பட்ட முறையில் பயன் படுத்தும் வீட்டுக்கு வேண்டிய பொருள்களாக அவை இருத்த லாகாது. இப் பொருள்கள் பெரும்பாலும் வியாபாரத்திற்குத் தாம் பயன்படுத்த வேண்டும். காரணம் கடனாளி, கடனீந்தோர் களிடமிருந்து வியாபாரம் விடுத்து ஏனைய நோக்கங்களுக் காகக் கடன் வாங்கிடக்கூடாது. திவால் ஆரம்பமாகும்போது அப் பொருள்கள் திவாலானவர்வசம் இருக்கவேண்டும். இது உண்மையான உரிமையாளரின் அனுமதியுடன் திவாலானவரின் வசம் இருக்க வேண்டும். எனவே, இத்தகைய தருணங்களில் அவர் உண்மையான நம்பிக்கை உரிமையுடையவராகிறார். எடுத்துக்காட்டாக, பொருளை வாங்கிவிட்டு விற்பனையாளரி டமே அதை விட்டுச் செல்கிறார் வாங்கினவர். அதன் பின்னர், விற்பனையாளர் திவாலானவராக அறிவிக்கப்படுகிறது. எனவே, வெளித் தோற்றத்திற்கு அவர் பொருளின் உரிமையாளராக விளங்கலாம். ஆனால், உண்மையான உரிமையாளர் அப் பொருளை வாங்கினவர்தாம். இருப்பினும், அப் பொருள் நீதி மன்ற அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். திவாலான வருக்கு உரிமை இல்லாத பொருள்கூட அவ் வதிகாரியிடம் ஒப் படைக்கப்பட வேண்டும். இத்தகைய நிலையில் அவ் வதிகாரிக் குத் திவாலானவரைவிட அதிக உரிமையுள்ளது. பொருள்களின் அடைமானங்களில் இது மிகவும் சகஜம். அடைமானம் ஏற்றுக் கொண்டவர் தம் பிணையத்தை இழக்க நேரிடும்.

பொருள்களை அடகு வைக்கும்போது அப் பொருள் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டதா என்று பார்க்க வேண்டும். மேலும், அடகுப் பிடிப்பவருக்கு அதைப் பயன்படுத்த உரிமை உண்டா என்றும் பார்க்க வேண்டும். முதற்கூறிய வகையில் அப் பொருள் திவாலானவருக்கு உரியதாகும். அடுத்துக் கூறிய வகையில் அஃது அவருக்கு உரியதன்று. எனவே, அதைக் கடனாளிச்சொத்ததிகாரியிடம் ஒப்படைக்கத் தேவையில்லை.

கிரீனிங் எ. கிளார்க் (Greening *Vs.* Clarke) என்ற வழக்கில் 'ப' என்பவரிடமிருந்து 'அ' பருத்தி வாங்கிக்கொண்டு பணம் கொடுத்துவிட்டார். ஆனால், சரக்கு 'ப'விடமே இருந்ததால் அதை அவர் 'ச' விடம் அடகு வைத்துவிட்டார். 'ச' அவைகளை விற்றுத் தனக்குச் சேரவேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டார். ஆனால், அவருக்குச் சேரவேண்டிய பணம் போக மீதிக் கொஞ்சம் இருந்தது. 'ப' திவாலாகிவிட்டார். அந்த அதிகபடியான தொகையை 'அ' கோரினார். நீதிமன்ற சொத்ததிகாரியும் அப் பணத்தைக் கோரினார். காரணம் அது 'ப' வுக்குச் சேர வேண்டியது என்பது அவர் வாதம். அச்சரக்குத் திவாலானவரிடம் இல்லாததால் அந்த மீதித் தொகையை 'அ'தான் பெற முடியும்; சொத்ததிகாரி பெற முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இங்கு நம்பிக்கை உரிமை, அடகு வைப்பதைப் பாதிக்கவில்லை என்று தெரியவருகிறது.

வெப் எ. வின்னே (Webb *Vs.* Winney) என்ற வழக்கில் ஒரு தகப்பனார் தம் மகனுக்கு ஒரு தட்டை அன்பளிப்பாகக் கொடுத்தார். அதை அவர் ஓர் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுச் சாவியை வைத்துக்கொண்டார். ஆனால், அந்தப் பெட்டி, தகப்பனாரிடம் இருந்தது. அவர் அதை வங்கியில் உள்ள காப்புப் பெட்டகத்தில் வைத்திருந்தார். பின்னர் அவர் வங்கியில் வாங்கியிருந்த கடனுக்காக அதை ஈட்டுப் பொருளாக வைத்து விட்டார். அத் தகப்பனார் திவாலாகிவிட்டார். நீதிமன்றச் சொத்ததிகாரி அப் பெட்டியை எடுத்துக்கொண்டார். திவாலானவரின் மகன் உரிமைகோரி வழக்குத் தொடுத்தார். மகனுக்குத்தான் உரிமை உண்டு என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

வாரண்டு மூலம் பறிக்கப்பட்ட பொருள்கள் இக் கோட்பாட்டின்கீழ் வாராது. அதேபோல் மோசடி அல்லது தவறான வழி மூலம் பெற்ற பொருள்களும் பாதிக்கப்படமாட்டா. ஒருவருடைய பொருளை மற்றொருவர் பாதுகாப்பில் விட்டுச்செல்வது வியாபார வழக்கம். எனவே, அது நம்பிக்கை உரிமை

யின்பாற்படாது. திவால் விண்ணப்பம் தாக்கல் செய்யும் போதோ, திவால் தீர்ப்பளிக்கும்போதோ வாடகைக் கொள் முதல் மூலம் வாங்கிய நகரும் பொருள்களும் கடனாளி வசம் இல்லாத பொருள்களும் இக் கோட்பாட்டின்கீழ் வாராது.

மாகாண நகரங்களின் திவால் சட்டத்திற்கும், மாகாண திவால் சட்டத்திற்கும் இக் கோட்பாட்டைப் பொறுத்தமட்டில் வேற்றுமை உண்டு. முதற்கண் கூறிய சட்டத்தில் திவால் ஆரம்ப மாகும்போதே திவாலானவர் வசம் இப் பொருள்கள் இருக்க வேண்டும். அடைமானத்தில் உள்ள பொருள்களையும் இது கட்டுப்படுத்தும். அதிகார முறையில் உரிமை மாற்றம் பெற்ற அதிகாரி இதில் தலையிட்டால்தான், பொருள்கள் அவர்வசம் ஒப்படைக்கப்படும்; தானாகவே அவரிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது.

ஆனால், மாகாண திவால் சட்டத்தின்கீழ், திவால் தீர்ப்பு உத்தரவு வழங்குவதற்காக விண்ணப்பம் தாக்கல் செய்யும்போது அவரிடம் அப் பொருள்கள் இருக்க வேண்டும். அடைமானத்தில் உள்ள பொருள்களை இது பாதிக்காது. இங்குப் பொருள்கள் உடனே நீதிமன்றச் சொத்துதிகாரிவசம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் தலையிட வேண்டும் என்ற அவசியமில்லை.

பின்செல் உரிமைக் கோட்பாடு (Doctrine of Relation Back)

திவால் சட்டத்தின் பிரிவு 28, உட்பிரிவு 7-ன்படி திவால் தீர்ப்பளிப்பு உத்தரவு அது பிறப்பிக்கப்படும் அடிப்படையான விண்ணப்பம் தாக்கல் செய்யும் தேதியைப் பின்சென்று பெறு கிறது. மாநிலநகரங்களின் திவால் சட்டத்தின்கீழ், திவால் தீர்ப்பு உத்தரவு அத் தேதியிலிருந்து, விண்ணப்பம் தாக்கல் செய்யும் நாளுக்குமுன் மூன்று மாதங்களுக்குள் கடனாளி செய்யும் முதல் திவால் செய்கை புரியும் நாளுக்குப் பின்னோக்கிச் செல்கிறது.

அதாவது, நிறைவேற்றப்படும் உத்தரவிற்குப் பின்னோக்கிச் செல்லும் பலன் உண்டு. இதன் நோக்கம் கடனாளி, தீர்ப்பளிக்கும் உத்தரவு வருவதற்கு முன்னரும், அவருக்கெதிராகத் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பத்திற்குப் பின்னரும் தம் சொத்துகளை விற்றிடக்கூடாது என்பதுதான். விண்ணப்பம் தாக்கல் செய்யும் நாளிற்கும், அதன்மீது தீர்ப்பளித்து உத்தரவு பிறப்பிக்கும் நாளிற்கும் இடையில் கொஞ்சம் காலத் தவணை இருத்தல் வேண்டும். விண்ணப்பம் தாக்கல் செய்ததிலிருந்து அப்படியே கடனாளியை விட்டுவிடுவோமானால், தீர்ப்பளிக்கும் உத்தர விற்குச் செயல்முறையான பலன் இல்லாமற் போய்விடும்.

நீதிமன்ற சொத்ததிகாரி இடைக்கால நடவடிக்கைகளைத் தள்ளி விட்டுச் சொத்துகளைத் தம்வசம் கொண்டுவரலாம். காரணம், அவருக்குக் கடனாளியைவிட அதிக உரிமை உண்டு. இவ்விதியின் கடுமை உண்மையான நல்லெண்ணத்துடன் காணும் நடவடிக் கைகளில் குறைந்து காணப்படுகிறது. ஆனால், அவை பாதுகாக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, ஒரு கடனாளி 1-1-66-ல் மோசடி மூலம் ஒரு சலுகையைப் பெற்றார். தம் கடனீந்தோரை ஏமாற்றும் பொருட்டுத் தம் சொத்துகளை 1-3-66-ல் வேறு ஒருவரின் பெயரில் உரிமை மாற்றம் செய்துவிட்டார். 1-4-66-ல் தம் ஊரையே விட்டுவிட்டு வேறு இடத்தில் தலைமறைவானார். இவை அனைத்தும் திவாலானவர்கள் செய்யும் காரியங்கள்தாம். அவரின் கடனீந்தோர் அவர் ஊரைவிட்டகல்வது என்ற மூன்றாவது செயலைச் செய்தபோது அவர்மீது திவால் விண்ணப் பம் 20-5-66-ல் தாக்கல்செய்தனர். நீதிமன்றம் 20-6-66-ல் தீர்ப்பு உத்தரவு பிறப்பித்தது. மாகாணத் திவால் சட்டத்தின் கீழ் இவ் வுத்தரவு திவால் விண்ணப்பம் தாக்கல் செய்த நாளாகிய 20-5-66-க்குப் பின்நோக்கிச் சென்று செல்லத்தக்க தாகத் திகழ்கிறது. ஆனால், மாகாண நகரங்களின் திவால் சட்டத்தின்படி கடனாளியின் முதல் திவால் செய்கை ஏற்பட்ட 1-3-66-ல் அதாவது, விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு முன் மூன்று மாதங்களுக்கு இவ் வுத்தரவு முன்னோக்கிச் சென்று விளங்குகிறது. மேற்கூறிய காலவரைக்குள் திவாலானவர் செய்யும் நடவடிக்கைகள்மீது நீதிமன்ற அதிகாரி குற்றம் சாட்டலாம்.

காக்கப்பெறும் நடவடிக்கைகள் (Protected Transaction)

திவால் நடவடிக்கையால் செல்லத்தகாதனவாக ஆக்க முடியாத சில நடவடிக்கைகளை இவை குறிக்கின்றன. மாகாண திவால் சட்டத்தின் 55ஆவது பிரிவின்படி கீழ்க்காணும் நடவடிக்கைகளைத் திவால் நிலை பாதிக்காது.

1. கடனீந்தோர்களில் யாராவதொருவருக்குத் திவாலான வர் பணம் செலுத்துவது.
2. அதே திவாலானவருக்கு யாராவது பணம் செலுத்து வது.
3. மதிப்பு வாய்ந்த மறுபயனுக்காகத் திவாலானவர் உரிமை மாற்றம் செய்தது.

4. திவாலானவருடன் செய்துகொண்டு எவ்வித ஒப்பந்தமும் அல்லது மற்ற உடன்பாடும். ஆனால், அவை திவால் தீர்ப்பளிப்பு உத்தரவு வழங்குவதற்கு முன்னர் ஏற்பட வேண்டும்.

திவால் நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னர்த் திவாலானவர் ஈடுபட்டுள்ள நடவடிக்கைகள் பெரும்பாலும் ஏற்கக்கூடியதாக உள்ளன. ஆனால், திவால் ஆரம்பமாவதற்கு முன் இரண்டாண்டிற்குள் மறுபயனில்லாமல் செய்யப்பட்டுள்ள உரிமை மாற்றங்கள் செல்லுபடியாகாதவை. ஆனால், திருமணத் தருணத்தில் மனைவிக்குச் செய்த உரிமை மாற்றங்கள் இதற்கு விதிவிலக்கானது. மேலும், திவாலானவர் செய்த மோசடிச் சலுகைகள் செல்லுபடியாகாதவை.

திவால் விண்ணப்பம் தாக்கல் செய்ததற்கும், தீர்ப்பளிப்பு உத்தரவு வழங்குவதற்கும் இடையேயுள்ள காலங்களில் ஈடுபட்டுள்ள நடவடிக்கைகள், தம் விருப்ப உரிமை மாற்றங்களாக இல்லாமலிருந்தாலும், மற்ற நபருக்கு விண்ணப்பம் தாக்கல் செய்ததே தெரியாமலிருந்தாலும், பாதுகாக்கப்படுகின்றன. அவ்வாறில்லாமல் தீர்ப்பு வழங்கிய பின்னர் ஈடுபடும் நடவடிக்கைகள் பாதுகாக்கப்படமாட்டா.

நிரூபணமான கடன்கள்

திவால் சட்டத்தின் 34 ஆவது பிரிவின்படி, திவாலில் நிரூபிக்கக் கூடிய கடன்களை மட்டும்தான், கடனீந்தோர்கள் நிரூபிக்கவேண்டும். சொத்துகளைப் பகிர்ந்தளிக்கும்போது, தமக்குக் கிடைத்திட உரிமையுள்ள கடன்களை மட்டும்தான் நிரூபிக்க வேண்டும். தற்கால, எதிர்கால, உறுதியான, பிற்காலத்தில் தோன்றக்கூடிய கடன்களை நிரூபிக்கப்படும் உண்மையான கடன்களாகக் கொள்ளலாம். ஆனால், நியாயமாக மதிப்பிட முடியாத கடன்களையும், நம்பிக்கை முறிவு அல்லது ஒப்பந்தம் காரணமாக வழங்கப்படாமலுள்ள இழப்பீட்டுக் கோரிக்கைகளையும் நிரூபிக்கப்பட்ட கடன்களாக எடுத்துக் கொள்ள முடியாது. மேற்கூறிய கடன்களை நிரூபணம் செய்யக் கடனீந்தோர், அக் கடன்களைச் சரிவர ஒழுங்கு பார்த்து, அவற்றின் விவரங்கள் அடங்கிய உறுதிமொழிப் பத்திரம் ஒன்றை நீதிமன்றத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

ரத்துச் செய்தல்

(Annulment)

திவால் தீர்ப்பளிப்பு உத்தரவை நீக்கிவிடுவதுதான் 'ரத்துச் செய்தல்' என்பது. ரத்துச் செய்த உத்தரவு அதிகாரபூர்வ மான அரசாங்க வெளியீட்டில் வெளியிடப்பட வேண்டும். கீழ்க்காணும் நிலைகளில் நீதிமன்றம் தீர்ப்பு உத்தரவை ரத்துச் செய்யலாம்:

1. ஒரு கடனாளி திவாலானவராக முடிவுகட்டப்பட்டிருக்கக் கூடாது என்று நீதிமன்றம் கருதினால், தீர்ப்பு உத்தரவை அது ரத்து செய்யலாம். அதாவது, உரிய வயதடையாத இளவர், இறந்தவர், அதிகார எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிறைவேறிய தீர்ப்புப் போன்றவைகளை இது குறிக்கும். இத் தருணங்களில் தவறு உணரப் பட்டால், தீர்ப்பளிப்பு உத்தரவு ரத்துச் செய்யப்படும்.
2. கடனாளி அவர் கடன்களை முழுதும் பைசல் செய்து விட்டார் என்று நிரூபிக்கப்பட்டாலும் தீர்ப்பு ரத்துச் செய்யப்படும்..
3. நீதிமன்றத்தின் அனுமதி வேண்டும்போது அதன் அனுமதியில்லாமல் தீர்ப்பளிப்பு ஏற்பினும் நீதிமன்றம் அத் தீர்ப்பை ரத்துச் செய்யும்.
4. வேறு ஒரு நீதிமன்றத்தில் இதே நடவடிக்கைகளுக்காக வழக்குத் தொடுக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படாமலிருந் தாலும், கடனாளியின் சொத்துகளை நீதிமன்றம் எளிதாகப் பிரித்துக்கொடுக்கும் நிலையிலிருந்தாலும் தீர்ப்பு உத்தரவு ரத்துச் செய்யப்படும்.
5. கடனாளியால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் அவரது கடன் ரூ. 500 அல்லது அதற்கு மேற்படாம லிருந்தால் தீர்ப்பு ரத்துச் செய்யப்படும்.
6. திவாலானவரின் வழக்கு விசாரிக்கும்போது அவர் வராமலிருந்தாலும், குறிப்பிட்ட தவணைத் தேதிக்குள் தீர்த்தலுக்காக விண்ணப்பம் போடாமலிருந்தாலும் தீர்ப்பு ரத்துச் செய்யப்படும்.
7. உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வையில், மாநில திவால் சட்டத்தின்கீழ்த் திவால் வழக்குப் பூர்த்தியாகாமல் ஒரு நீதிமன்றத்தில் இருந்தாலும் தீர்ப்பு ரத்துச் செய்யப் படும்.

8. பணம் திரட்டுவதற்குத் திவாலானவரின் சொத்துகளை அடைமானம் வைத்திடலாம் அல்லது அடகு வைத்திடலாம்.

9. எளிதாகப் பிரிக்க முடியாத சொத்துகளை நடுவர் தீர்ப்பிற்கு விட்டிடலாம்.

மாநில அரசின் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் நீதி மன்றமோ அதன் அதிகாரிகளோ திவால் தீர்ப்பளிப்பு உத்தரவை மாற்றிடலாம். எந்த நபரையும் அதிகார முறையில் வரவழைத்துத் திவாலானவரின் சொத்துகள்பற்றிய விவரங்களை அறியலாம். அத்தகைய நபர்கள் உரிய ஆவணங்களைத் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யத் தவறினால் அவர்கள் கைது செய்யப்படலாம்.

அரசாங்கத்திற்கு வருவாய்தரும் நகராச் சொத்துகளையோ வேளாண்மை நோக்கத்திற்குப் பயன்படும் நகராச் சொத்துகளையோ சொத்ததிகாரி விற்றிட முடியாது. ஆனால், இச் சொத்துகளைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியை நாடி நிவாரணம் பெற்றிடலாம். கடனுக்காக அத்தகைய சொத்துகளின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன் சொத்ததிகாரி சில விவரங்களை அறிந்துகொள்ள வேண்டும். அதாவது, ஏற்கனவே பணமாக்கப்பட்ட தொகையைக் கழித்த பின்னர் கடனைப் பைசல் செய்யவேண்டிய தொகை, இன்னும் விற்காத நகராச் சொத்துகள், ஏனைய வில்லங்கங்கள் போன்றவைகளைச் சொத்ததிகாரி அறிந்துகொள்ள வேண்டும். இவ்விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கவேண்டும். அவர் பணத்தை வசூல் செய்து சொத்ததிகாரியிடம் கொடுப்பார்.

கடன்களைப் பைசல் செய்யும்போது கீழ்க்கண்ட முன்னுரிமைப்படி பைசல் செய்ய வேண்டும் :

1. அரசாங்கத்திற்கோ நகராட்சிக்கோ தரவேண்டிய கடன்.

2. விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு முன்னர் நான்கு மாதங்களில் எழுத்தர், வேலையாள் அல்லது தொழிலாளி போன்றோருக்கு ரூ. 20-க்கு மிகாமல் உள்ள சம்பளம் அல்லது கூலி. மாநில நகரங்களின் திவால் சட்டத்தின் கீழ் ஒவ்வோர் எழுத்தருக்கும் இத் தொகை ரூ. 300 ஆகும். வேலையாள் அல்லது தொழிலாளிக்கு ரூ. 100 ஆகும். நிலக்கிழாருக்குச் சேரவேண்டிய ஒரு மாத

வாடகை, மேற்கூறிய பாக்கிகள் ஒரே சலுகையை உடையன. எனவே, சமமாக அல்லது சமவிகிதத்தில் பிரித்தளிக்க வேண்டும்.

3. சொத்ததிகாரி தம் நிர்வாகச் செலவிற்குக் கொஞ்சம் பணம் எடுத்துக் கொள்ளலாம்.

4. பிறகு தாக்கல் செய்யப்பட்ட கடன் பட்டியலில் காணப் பட்ட கடன்களை விகிதாசார முறையில் பைசல் செய்ய வேண்டும்.

5. மேற்கண்டவைகளைச் செலுத்தியபின்னர், மீதி ஏதாவது இருந்தால் தீர்ப்பளிப்புத் தேதியிலிருந்து கடன் தொகை களுக்கு ஐந்து விழுக்காடு வட்டி தரலாம்.

6. கடனீந்தோர்களுக்குத் தர வேண்டிய விகிதாசார ஈவுத் தொகையைக் கணக்கிடுவதற்கு முன், சொத் ததிகாரி சில சொத்துகளைத் தொலைதூரத்தில் உள்ள நபர்களுக்குத் தர வேண்டிய கடனுக்காகவும், கடன் நிரூபிக்கப்பட்டுச் சேரவேண்டிய நிர்ணயிக்கப்படாம லுள்ள தொகைக்கும், சர்ச்சைக்குரிய கடன்களுக்கும், நிர்வாகச் செலவிற்கும் ஒதுக்கி வைப்பார்.

திவாலானவரின் பயன்படாத சுமை சார்ந்த சொத்துகள் (Onerous property) சொத்ததிகாரி எடுத்துக்கொள்ளாமல் விட்டு விடலாம். மாகாண நகரங்களின் சட்டத்தின் 62ஆவது பிரிவு இதுபற்றி விளக்குகிறது. மாகாண திவால் சட்டத்தில் அவ் வாறில்லை. அதிகார முறையில் சொத்துரிமை மாற்றம் பெற்ற அதிகாரி, சுமைசார்ந்த ஒப்பந்தங்களால் வந்துள்ள நிலம், கம்பெனிப் பங்குகள், இலாபமில்லா ஒப்பந்தம், எளிதில் விற்க முடியாத சொத்துகள் போன்றவைகளை வேண்டாமென்று விட்டுவிடலாம். சுருங்கக் கூறின், திவாலானவரின் பயன்படாத சொத்துகளை விட்டுவிடலாம். அவ்வதிகாரி தம் விருப்பத்தைப் பயன்படுத்தி, தீர்ப்பளிப்பு உத்தரவிற்குப் பின் 12 மாதங் களுக்குள் அச் சொத்துகளை நிராகரிக்கலாம் அல்லது தீர்ப்பளிப்பு உத்தரவிற்கு ஒரு மாதத்திற்குப் பின் அவருக்கு அச் சொத்து விவரம் தெரியவந்தால் அதிலிருந்து பன்னிரண்டு மாதங் களுக்குள் அச் சொத்துகளை நிராகரித்து விடலாம். குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகளை நிராகரிக்க நீதிமன்றத்தின் அனுமதி தேவை. சொத்துகளை அவ்வதிகாரி எழுத்து மூலம் நிராகரிக்க வேண்டும். அச் சொத்துகளில் அக்கறையுடைய எவரும் அவ் வதிகாரிக்கு எழுத்துமூலம் அவர் அதன் உரிமையை விட்டுவிடப்

செய்து இடரையும் செலவையும் குறைப்பதாக இந் நடவடிக்கைகள் உள்ளன. திவாலானவரின் சொத்துகளை எளிதில் விற்றிடலாம். ஒரே முறையில் தரக்கூடிய ஈவாகப் பிரித்துக் கொடுத்திடலாம்.

மாகாண நகரங்களின் சட்டத்தின்கீழ்ச் சிறு திவால் நடைமுறை நடவடிக்கைகள், திவாலானவரின் சொத்துகளின் மதிப்பு ரூ. 3000-க்குக் குறைவாக இருந்தால், கையாளப்படும் முறைகளும் எளிதாக்கப்படும். கடனீந்தோர் அல்லது அதிகாரி, விண்ணப்பம் தாக்கல் செய்தாலொழிய திவாலானவரை விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. சொத்துகளை விரைவில் விற்று ஒரே தவணையில் பணத்தைக் கொடுத்திடலாம். நீதிமன்றத்தின் உத்தரவிற்குப் புனர் விசாரணை இல்லை. வேண்டுமானால் நீதிமன்றம் ரத்துச் செய்யலாம்.

மாநிலத் திவால் சட்டத்தின் கீழ்ப் பண அளவு ரூ. 500 இருக்க வேண்டும். அரசாங்க வெளியீட்டில் அறிக்கை வெளியிட வேண்டிய அவசியமில்லை. நீதிமன்றச் சொத்ததிகாரியிடம் சொத்துகள் ஒப்படைக்கப்பட வேண்டும். கடனீந்தோர் பட்டியல் தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை. நீதிமன்றம் இங்கும் விரைவாகச் சொத்துகளைத் திரட்டி விற்றுக் கடனீந்தோர்களுக்கு ஒரே தவணையில் உரிய பணத்தைக் கொடுத்து விடுகிறது. ஆறு மாதங்களுக்குள் கடனாளி விடுதலைக்கு விண்ணப்பம் போடலாம். இந் நடவடிக்கைகளை எளிதாக மாற்றி அமைக்க நீதிமன்றம் விதிகளை மாற்றி அமைக்கலாம். அல்லது சட்டத்தின் விதிகளையே மாற்றாமல் பின்பற்றிடவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

திவாலானவரின் சொத்து : தீர்ப்பளிப்பு உத்தரவு வழங்கப் பட்டவுடனே திவாலானவரின் சொத்துகளை நீதிமன்ற அதிகாரி வசம் ஒப்படைக்க வேண்டும். எந்தெந்தச் சொத்துகளுக்குத் திவாலானவர் உரிமையுடையவராகத் திகழ்கிறாரோ அந்தந்தச் சொத்துகளும் எந்தெந்தச் சொத்துகளை விற்றிட அவருக்கு உரிமை உண்டோ அந்தந்தச் சொத்துகளும் திவாலானவரின் சொத்துகளாகக் கருதப்படும். பங்கீடு செய்வதற்குக் கிடைக்கக் கூடிய சொத்துகளாவன :

1. நகரும் அல்லது நகராச் சொத்துகளுக்குத் திவாலானவர் திவால் ஆரம்பமாவதற்கு முதற்கொண்டே உரிமையுடையவராக இருக்க வேண்டும். ரொக்கம், நகைகள், ஆயுள் கஸ்டிப் பத்திரம், நன்மதிப்பு, உரிமைக்காப்பு,

நூலுரிமை, ஏல உரிமை, கட்டடம், நிலம் போன்ற வைகளை இச் சொத்துகளுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

2. திவாலானவர் தாமாகவே சம்பாதித்த சொத்துகள் அல்லது திவால் ஆனதற்குப் பின்னரும் விடுதலைக்கு முன்னரும் வாரிசுமுறையில் அவருக்கு வந்த சொத்துகள்.

3. வேறு ஒருவரின் பொருள் திவாலானவரிடமிருந்து, அதை விற்கும் உரிமை அவருக்கிருந்தால், அதையும் சொத்ததி காரியிடம் ஒப்படைக்க வேண்டும். கஸ்டிக, பாகம் பிரியாத ஒரு குடும்பத்தில் உள்ள மகளின் சொத்தைத் தந்தையார் விற்பதைப் போன்ற அதிகாரத்தைச் சொல்லலாம்.

4. எந்த எந்தப் பொருளுக்கு அவர் நம்பிக்கையுடையவராக இருக்கின்றாரோ அந்தந்தப் பொருள்கள்.

ஆனால், கீழ்க்காணும் சொத்துகள் மேற்சொன்னவைகளில் வாரா.

1. எதிர்கால நலன் சேமிப்பு நிதி, ஓய்வுகால சேமிப்புத் தொகை (Gratuity), ஓய்வுகால உதவிச் சம்பளம் (Pension).

2. மற்றவரின் நலனுக்காகப் பொதுப் பாதுகாப்பில் வைத் துள்ள சொத்துகள்.

3. எதிர்பார்த்த வகையில் ஒருவரின் சொத்துக்கு மரபுரிமை யாதல்.

4. சமூக இயல் சட்ட விதிகளுக்கு விதிவிலக்காகத் திகழும் நடவடிக்கை எடுக்க முடியாத சொத்துகள். உதாரண மாக, தொழிற்கருவிகள், அணிகலன்கள், சமையல் பாத்திரங்கள் போன்ற வகையில் ரூ. 300 மதிப்பிற்கு மேற்படாதவை.

பணமாக்கல் (Realisation)

திவால் தீர்ப்பு உத்தரவு வழங்கப்பட்ட பின்னர், நீதி மன்றம் ஒரு சொத்ததிகாரியை நியமிக்கும். திவாலானவரின் சொத்துகள் அவரிடம் ஒப்படைக்கப்படும். அச் சொத்துகளை

நிருவகிக்கும் பொறுப்பு அவ் வதிகாரிக்கு உண்டு. அவ் வதிகாரி பிணையம் கட்டவேண்டும். நீதிமன்றம் அவருடைய ஊதியத்தை நிருணயித்து அதைத் திவாலானவரின் சொத்துகள் விற்பனையிலிருந்து எடுத்துக்கொள்ள அனுமதிக்கும். நீதிமன்றம் சொத்ததிகாரியை நியமித்த பின்னர், திவாலானவரின் சொத்துகளை வைத்துள்ளவர்கள் அவற்றை அவ் வதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். திவாலானவர் யாரை நீக்கிட முடியாதோ அவர் வசம் சொத்துகள் இருந்தாலும் இவ் விஷயத்தில் நீதிமன்றம் தலையிடாது.

சொத்ததிகாரிவசம் உள்ள சொத்துகளைப் பறிமுதல் செய்து விற்றிட நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அதாவது, சொத்ததிகாரி வேண்டியபடி கணக்கு வைத்துக் கொள்ளத் தவறியபோதும், அவர் செலுத்த வேண்டிய பாக்கியைச் செலுத்தாதபோதும், அவருடைய புறக்கணிப்பாலும், நன்னடத்தையின்மையாலும் நட்டமேற்பட்டால் அவரிடமுள்ள சொத்துகளை நீதிமன்றம் மீண்டும் எடுத்துக்கொள்ளும். இடைக்காலத்தில் அமர்த்தப்பட்ட சொத்ததிகாரிக்கும் இது பொருந்தும். சொத்ததிகாரி நியமிக்கப்படாதபோது நீதிமன்றமே அவர் அதிகாரம் முழுவதையும் செலுத்தும்.

சொத்ததிகாரியின் அதிகாரங்களும் கடமைகளும்

1. திவாலானவரின் சொத்துகளை விரைவாகப் பணமாக்கிக் கடனீந்தோர்களிடையே விகிதாசார ஈவைப் பிரித்தளிக்க வேண்டும்.

2. இந் நோக்கத்திற்காகத் திவாலானவரின் சொத்துகளை முழுவதும் அல்லது அதில் ஒரு பகுதியை அவர் விற்றிடலாம்.

3. அவர் பெற்றுக்கொண்ட பணத்திற்கு ரசீது அளிக்க வேண்டும்.

4. நீதிமன்ற அனுமதி பெற்றுத் தொழிலை நடத்த வேண்டும்.

5. எந்த வழக்கையும் தொடுக்கலாம்; அல்லது அவ் வழக்கை ஆதரிக்கலாம்; அல்லது தொடர்ந்து நடத்திடலாம்.

6. இந் நோக்கத்திற்காக வாதாடுபவரையோ முகவரையோ நியமிக்கலாம்.

7. எதிர்காலத்தில் பணம் செலுத்துவதற்குப் பிணையம் கோரிடலாம்.

8. பணம் திரட்டுவதற்குத் திவாலானவரின் சொத்துகளை அடைமானம் வைத்திடலாம் அல்லது அடகு வைத்திடலாம்.

9. எளிதாகப் பிரிக்க முடியாத சொத்துகளை நடுவர் தீர்ப்பிற்கு விட்டிடலாம்.

மாநில அரசின் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் நீதி மன்றமோ அதன் அதிகாரிகளோ திவால் தீர்ப்பளிப்பு உத்தரவை மாற்றிடலாம். எந்த நபரையும் அதிகார முறையில் வரவழைத்துத் திவாலானவரின் சொத்துகள்பற்றிய விவரங்களை அறியலாம். அத்தகைய நபர்கள் உரிய ஆவணங்களைத் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யத் தவறினால் அவர்கள் கைது செய்யப்படலாம்.

அரசாங்கத்திற்கு வருவாய்தரும் நகராச் சொத்துகளையோ வேளாண்மை நோக்கத்திற்குப் பயன்படும் நகராச் சொத்து களையோ சொத்ததிகாரி விற்றிட முடியாது. ஆனால், இச் சொத்துகளைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியை நாடி நிவாரணம் பெற்றிடலாம். கடனுக்காக அத்தகைய சொத்துகளின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன் சொத்ததிகாரி சில விவரங்களை அறிந்துகொள்ள வேண்டும். அதாவது, ஏற்கெனவே பணமாக்கப்பட்ட தொகையைக் கழித்த பின்னர் கடனைப் பைசல் செய்யவேண்டிய தொகை, இன்னும் விற்காத நகராச் சொத்துகள், ஏனைய வில்லங்கங்கள் போன்றவைகளைச் சொத்ததிகாரி அறிந்துகொள்ள வேண்டும். இவ்விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கவேண்டும். அவர் பணத்தை வசூல் செய்து சொத்ததிகாரியிடம் கொடுப்பார்.

கடன்களைப் பைசல் செய்யும்போது கீழ்க்காணும் முன் னுரிமைப்படி பைசல் செய்யவேண்டும்:

1. அரசாங்கத்திற்கோ நகராட்சிக்கோ தரவேண்டிய கடன்.

2. விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு முன்னர் நான்கு மாதங்களில் எழுத்தர், வேலையாள் அல்லது தொழிலாளி போன்றோருக்கு ரூ. 20-க்கு மிகாமல் உள்ள சம்பளம் அல்லது கூலி. மாநில நகரங்களின் திவால் சட்டத்தின் கீழ் ஒவ்வோர் எழுத்தருக்கும் இத் தொகை ரூ. 300 ஆகும். வேலையாள் அல்லது தொழிலாளிகளுக்கு ரூ. 100 ஆகும். நிலக்கிழாருக்குச் சேரவேண்டிய ஒரு மாத வாடகை, மேற்கூறிய பாக்கிகள் ஒரே சலுகையை உடையன. எனவே, சமமாக அல்லது சமவிகிதத்தில் பிரித்தளிக்க வேண்டும்.

3. சொத்ததிகாரி தம் நிர்வாகச் செலவிற்குக் கொஞ்சம் பணம் எடுத்துக்கொள்ளலாம்.

4. பிறகு தாக்கல் செய்யப்பட்ட கடன் பட்டியலில் கர்ணப் பட்ட கடன்களை விகிதாசார முறையில் பைசல் செய்ய வேண்டும்.

5. மேற்கண்டவைகளைச் செலுத்திய பின்னர், மீதி ஏதா வது இருந்தால் தீர்ப்பளிப்புத் தேதியிலிருந்து கடன் தொகைகளுக்கு ஐந்து விழுக்காடு வட்டி தரலாம்.

6. கடனீந்தோர்களுக்குத் தர வேண்டிய விகிதாசார ஈவுத் தொகையைக் கணக்கிடுவதற்கு முன், சொத்ததிகாரி சில சொத்துகளைத் தொலைதூரத்தில் உள்ள நபர் களுக்குத் தரவேண்டிய கடனுக்காகவும், கடன் நிரூபிக் கப்பட்டுச் சேரவேண்டிய நிர்ணயிக்கப்படாமலுள்ள தொகைக்கும், சர்ச்சைக்குரிய கடன்களுக்கும், நிர் வாகச் செலவிற்கும் ஒதுக்கி வைப்பார்.

திவாலானவரின் பயன்படாத சுமை சார்ந்த சொத்துகளை (Onerous Property) சொத்ததிகாரி எடுத்துக்கொள்ளாமல் விட்டு விடலாம். மாகாண நகரங்களின் சட்டத்தின் 62ஆவது பிரிவு இதுபற்றி விளக்குகிறது. மாகாண திவால் சட்டத்தில் அவ் வாறில்லை. அதிகார முறையில் சொத்துரிமை மாற்றம் பெற்ற அதிகாரி, சுமைசார்ந்த ஒப்பந்தங்களால் வந்துள்ள நிலம், கம்பெனிப் பங்குகள், இலாபமில்லா ஒப்பந்தம், எளிதில் விற்க முடியாத சொத்துகள் போன்றவைகளை வேண்டாமென்று விட்டுவிடலாம். சுருங்கக் கூறின், திவாலானவரின் பயன்படாத சொத்துகளை விட்டுவிடலாம். அவ் வதிகாரி தம் விருப்பத்தைப்

பயன்படுத்தி, தீர்ப்பளிப்பு உத்தரவிற்குப் பின் 12 மாதங்களுக்குள் அச் சொத்துகளை நிராகரிக்கலாம் அல்லது தீர்ப்பளிப்பு உத்தரவிற்கு ஒரு மாதத்திற்குப் பின் அவருக்கு அச் சொத்து விவரம் தெரியவந்தால் அதிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் அச் சொத்துகளை நிராகரித்து விடலாம். குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகளை நிராகரிக்க நீதிமன்றத்தின் அனுமதி தேவை. சொத்துகளை அவ் வதிகாரி எழுத்துமூலம் நிராகரிக்க வேண்டும். அச் சொத்துகளில் அக்கறையுடைய எவரும் அவ் வதிகாரிக்கு எழுத்துமூலம் அவர் அதன் உரிமையை விட்டுவிடப் போகிறாரா அல்லது இல்லையா என்று எழுதிக் கேட்கவேண்டும். சொத்ததிகாரி 28 நாள்களுக்குள் இதைத் தீர்மானிக்க வேண்டும். நீதிமன்றம் விரும்பினால் இக் காலக்கெடு நீட்டிக்கப்படும். அனுமதிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் அவர் தீர்மானம் செய்யத் தவறினால், அவர் உரிமையை விடும் உரிமை பறிபோய்விடும். மேலும், சொத்து அவரிடம் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து எல்லாப் பொறுப்புகளும் அவரைச் சாரும். எனவே, திவாலானவரின் உரிமைகளும் பொறுப்புகளும் இச் சொத்துரிமை விடும் நாளிலிருந்து ஆரம்பமாகின்றன. ஆனால், மற்றவர்களின் உரிமைகளும் பொறுப்புகளும் பாதிக்கப்படுவதில்லை.

நீதிமன்றமும் புனர் விசாரணை மனுக்களும்

சட்டத்தில் மாவட்ட நீதிமன்றத்திற்குத்தான் புனர் விசாரணை மனுக்களை ஏற்றிட உரிமை உண்டு. தகுந்த அறிவிக்கைமூலம் மாநில அரசு துணை நீதிமன்றங்களுக்கு அவ் வதிகாரத்தை வழங்கலாம். திவால் சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் தீர்மானிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. நீதிமன்றத்தின் முடிவு அல்லது தீர்ப்பு இறுதியானது; மற்றவர்களைக் கட்டுப்படுத்தக்கூடியது. சமூகச் சட்டவியல் விதிமுறையில் கூறப்பட்டுள்ள எல்லா விதிகளும் இதற்குப் பொருந்தும்.

கீழ் நீதிமன்றங்களிலிருந்து மாவட்ட நீதிமன்றங்களுக்குப் புனர் விசாரணை மனுப்போடலாம். ஆனால், அறுபது நாள்களுக்குள் அவ்வாறு செய்யவேண்டும். பாதிக்கப்பட்ட நபர்களும் சொத்ததிகாரியும் புனர் விசாரணையை விரும்பலாம். உயர்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பரிசீலனை செய்ய அதன் ஆவணங்களையும் தீர்ப்பையும் கோரலாம். எனவே, மாவட்ட நீதிமன்றத்திலிருந்து உயர்நீதிமன்றத்திற்குப் புனர் விசாரணை மனுப்போடலாம். பட்டியல் I-ல் குறிப்பிடப்பட்டுள்ள

உத்தரவுக்கெதிராகப் புனர் விசாரணை மனுப் போடலாம். அதாவது தீர்ப்பளிப்பு உத்தரவு, ரத்துச் செய்யும் உத்தரவு, உரிமை நிலைநாட்டும் உத்தரவு, சலுகை, தகாத முறையில் உண்டான சலுகை, இழப்பீடு வழங்கும் உத்தரவு, பட்டியலில் காணப்பட்டவைகளை ஏற்காத உத்தரவு போன்றவைகளை எதிர்த்துப் புனர் விசாரணை மனு போட்டிடலாம்.

சட்டத்தின் 68ஆவது பிரிவின்படி திவாலானவர் பாதிக்கப் பட்டால் அவர் புனர் விசாரணை மனுப் போடலாம். நீதிமன்றம் விசாரணை நடத்தி நிகழ்ச்சிகளுக்குத் தகுந்த மாதிரி உத்தரவை உறுதிப்படுத்தலாம் அல்லது உத்தரவை ரத்துச் செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம். ஆனால், திவாலானவர் 21 நாள் களுக்குள் புனர் விசாரணை மனுப்போட வேண்டும்.

அபராதம் அல்லது தண்டத் தொகை

திவால் சட்டத்தின் பிரிவுகள் 60 முதல் 72 வரை அபராதம் பற்றிக் கூறுகின்றன. சில சூழ்நிலைகளில் கடனாளியைத் தண்டிப்பதற்காக அபராதம் விதிக்கப்படுகிறது. கடனாளி மோசடி செய்து ஆவணங்களை அழித்தாலோ, தன்னுடன் வைத்திருந்தாலோ, தவறான கணக்குகள் வைத்திருந்தாலோ, பொய்யான பதிவுகள் செய்திருந்தாலோ, தீர்ப்பளிப்பு உத்தர விற்குப் பின்னர் அல்லது முன்னர் பிரிவு 22-ன்படி நடக்கத் தவறினாலும், தம் சொத்துகளை ஒப்படைக்கத் தவறினாலும் அவருக்கு ஓராண்டுக் கடுங்காவல் விதிக்கப்படும்.பிரிவு 22-ன்படிக் கடனாளி விண்ணப்பத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டவுடன் எல்லாக் கணக்குப் புத்தகங்களையும் ஒப்படைக்க வேண்டும். தன்னிடமுள்ள பொருள்களின் பட்டியல், கடனாளி-கடனீந்தோர் பட்டியல், அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகை அல்லது அவர்களுக்குத் தரவேண்டிய தொகை போன்ற விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்றத்திற்குச் சென்று முறையான ஆவணங்கள் எழுதித் தரவேண்டும்; மேலும், நீதிமன்றம் இடும் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். மேலும், திவாலானவர் தகாத முறையில் சலுகைகள் காட்டி கடனீந்தோர்களுக்கு வரும் கடன் ஈவுத் தொகையைக் குறைத்தாலும், தமக்கு வரவேண்டிய அல்லது தாம் கொடுக்க வேண்டிய பணத்தை மறைத்தாலும், பிணையமுள்ள கடன்களில் பிணையங்களை மறைத்தாலும் ஓர் ஆண்டுக் காவல் தண்டனைக்கு ஆளாகலாம்.

மேற்கூறிய சட்ட மீறுகைகள் ஏற்பட்டால், நீதிமன்றம் இவைகளைப் பதிந்து முதல் வகுப்பு நடுவரிடம் ஒரு புகார்

கொடுக்கும். அவர் அதை ஆய்ந்து செயலாற்றுவார். பொறுப்புத் தீர்ப்பு அல்லது பகிர்வு ஏற்பாடு போன்றவை திவாலானவர்மீது தொடுக்கப்படும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதிக்காது. தாம் பொறுப்புத் தீர்க்கப்படாத திவாலானவர் என்ற உண்மையை மறைத்து ஒருவர் ரூ. 50 அல்லது அதற்கு மேல் கடன் வாங்கினால் அவருக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். விடுதலை தரப்படாத திவாலானவர்களைப் பொறுத்தமட்டில் நீதிமன்றம் பூர் வாங்க விசாரணை செய்து அண்மையில் உள்ள நியாயாதிபதியிடம் விசாரணைக்காக அனுப்பப்படுகிறார்கள். குற்றஞ் சாட்டப் பட்டவர் காவலில் வைக்கப்படவேண்டும்.

திவாலானவரின் பொறுப்புத் தீர்ப்பு

(Discharge of the Insolvent)

ஒருவர் எப்பொழுதும் திவாலானவராகவே இருக்கச் சட்டம் அனுமதிப்பதில்லை. அவர் கடன்களிலிருந்து விடுபட்டு, புதிய தோர் வாழ்க்கையைத் தொடங்கச் சட்டத்தின் விதிகள் உதவு கின்றன. தகுதியின்மை நீக்கப்படும். திவாலானவர் தன் பொறுப்புத் தீர்ப்புக் கோரி மனுப் போடவேண்டும். தீர்ப்பளிப்பு உத்தரவு நிறைவேறும்போது, தீர்வுக்கு நீதிமன்றம் ஒரு காலம் ஒதுக்க வேண்டும் என்று முன்னரே பார்த்தோம். அக் காலக் கெடுவிற்குள் திவாலானவர் பொறுப்புத் தீர்ப்புக்காக விண்ணப்பம் போடவேண்டும். நீதிமன்றம் விரும்பினால் அக் காலக் கெடுவை நீட்டிக்கலாம். மாநில நகரங்களின் திவால் சட்டத்தின்கீழ் விடுதலை கோரி அவர் விடுத்த விண்ணப்பத்தைச் சரி பார்ப்பதற்கு முன்னர், பொது விசாரணை நடத்தி முடிக்க வேண்டும். சில வழக்குகளில் இப் பொது விசாரணை நடத்திடாமல், விடுதலை கோரிப் போடப்பட்ட விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படும்.

விடுதலை கோரி வந்துள்ள விண்ணப்பத்தை நீதிமன்றம் பெற்று அதை முழுதும் ஏற்று விடுதலை உத்தரவு வழங்கலாம்; அல்லது அவ்வாறு விடுதலை உத்தரவு வழங்க மறுக்கலாம்; அல்லது விடுதலை உத்தரவு வழங்கி அதைக் கொஞ்ச நாள் களுக்கு நிறுத்தி வைக்கலாம்; அல்லது சில நிபந்தனைகளை விதித்து அவ்வுத்தரவு வழங்கிடலாம். திவாலானதற்குப் பின் அவர் சம்பாதித்த சொத்துகளைப்பற்றித்தான் அந் நிபந்தனைகள் விதிக்கப்படும்.

மேற்கூறிய உத்தரவுகள் நிறைவேறுவதற்கு முன்னர், விண்ணப்பத்தின் பேரில் விசாரணை செய்ய நீதிமன்றம் ஒரு நாளைக் குறிக்கும்; அந் நாளில் சம்பந்தப்பட்ட நபர்களை விசாரணை செய்யும். திவாலானவரின் நடத்தை, அலுவல் சம்பந்தப்பட்ட ஓர் அறிக்கையை நீதிமன்ற அதிகாரி யொருவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். மேற்கூறிய தகவல்களை நன்றாக அலசிப் பார்த்துத்தான் நீதிமன்றம் விண்ணப்பத்தை நிறைவேற்றிடும். திவாலானவர் பொய்க் கணக்குக் காட்டினாலும், மோசடி செய்து எதையாவது மறைத்திருந்தாலும், பொது விசாரணைக்கு வரத் தவறினாலும் அவர் திவால் சட்டத்தின்கீழ்க் குற்றவாளியாவார். இக் குற்றங்களுக்காக நீதிமன்றம் விடுதலை உத்தரவை நிறைவேற்றிட மறுத்திடும். திவாலானவர் இந்தியக் குற்றப் பிரிவுச் சட்டத்தின் பிரிவுகள் 421, 424-ன்கீழ்க் குற்றம் புரிந்திருந்தாலும் இதே நிலைமையைத்தான் அவர் பெற்றிருக்க முடியும். மோசடி மூலம் சொத்துகளை அப்புறப்படுத்துதல், மறைத்தல், விற்றல், கடன்களைப் பணமாக்க முடியாத நிலையில் தடுத்தல், தவறான முறையில் மறுபயன் பெறுதல் போன்றவைகள் அக் குற்றங்களாவன. எனவே, மாநில நகரங்களின் திவால் சட்டத்தின் கீழ் திவாலானவரின் நிலைமை இவ்வாறுள்ளது.

கீழ்க்காணும் நிலைகளில் நீதிமன்றம் திவாலானவருக்கு முழு விடுதலை உத்தரவு அளிக்க மறுத்திடும்:

1. திவாலானவரின் சொத்துகள் ஒரு ரூபாயில் 25 பைசா திரும்பக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளபோது, மாநில திவால் சட்டத்தில் இது ஒரு ரூபாயில் ஐம்பது காசாகும்;

2. சரியான கணக்கு வழக்குகள் சமர்ப்பிக்கத் தவறிய போதும், திவாலாவதற்கு முன் மூன்றாண்டுகளுக்குண்டான சொத்து விவரங்களைத் தெரிவிக்காத போதும்;

3. தான் ஒரு திவாலானவர் என்று தெரிந்தும், தொழிலைத் தொடர்ந்து நடத்தி வருகின்றபோதும்;

4. தெரிந்தும் கடன்களைக் குறைத்துக் கூறியபோதும், கடனைத் திரும்பச் செலுத்த முடியாத போதும்;

5. சொத்துகளின் நட்டத்தைச் சரிக்கட்டத் தவறிய போதும்;

6. அவரின் திவால் நிலைமைக்கு அவசரமாகவும் அபாயகரமாகவும் அவர் வழங்கியபோதும் ;

7. தன் நிலைமைக்கு முக்கியமில்லாத — தொந்தரவுள்ள பாதுகாப்புத் தேடியபோதும் ;

8. தவறான தொந்தரவு உள்ள வழக்குகளை அவர் கொணர்ந்தபோதும்;

9. திவால் விண்ணப்பம் தாக்கல் செய்வதற்குமுன் மூன்று மாதங்களில் தவறான சலுகைகளைப் பயன்படுத்திய போதும்;

10. அவர் மோசடிக் குற்றம் புரிந்தபோதும், மோசடி மூலம் நம்பிக்கை முறிவு ஏற்படுத்தியபோதும் நீதிமன்றம் விடுதலை உத்தரவை நீக்கி, சில நிபந்தனைகளை இணைத்து ஒரே சமயத்தில் உடன் நிகழ்கின்ற உத்தரவை நிறைவேற்றும். நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளாவன :

(1) திவாலானவர் நீதிமன்ற அதிகாரியிடம் தம் எதிர்கால வருமானம் முழுவதையோ அதில் ஒரு பகுதியையோ, திவாலான பின்னர் ஏற்பட்ட சொத்துகளையோ ஒப்படைக்க வேண்டும்.

(2) கடனீந்தோர்களுக்கு ஒரு ரூபாயில் 25 காசு கடன் ஈவு செலுத்தும் வரை விடுதலை உத்தரவை நிறுத்திவைக்க வேண்டும்.

(3) பின்னர் பரிசீலனை செய்யக்கூடிய கடனுக்கும் மீத முள்ள கடனுக்கும் நீதிமன்ற அதிகாரியின் பேரில் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு வழக்குத் தீர்ப்பிற்கு, திவாலானவர் உடன்பட வேண்டும். மாகாண நகரங்களின் திவால் சட்டத்தின்கீழ் திவாலானவர் பிரிவு 43-ன்படி சொத்ததிகாரியோடு ஒத்துழைக்கத் தவறினாலும், திவாலான பிறகு வந்தடைந்த சொத்து விவரங்களைத் தெரியப்படுத்தத் தவறினாலும், நீதிமன்ற அதிகாரியின் பேரில் நிறைவேற்றப்பட்ட வழக்குத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அவருடைய விடுதலை உத்தரவு ரத்துச் செய்யப்படும்.

ஆனால், மாநில திவால் சட்டத்தின்கீழ் இவ்வாறு குறிப்பிடப்படக்கூடிய சட்ட நிபந்தனைகள் இல்லை.

பொறுப்புத் தீர்ப்பு உத்தரவின் பலன் : முழுமையான பொறுப்புத் தீர்ப்பு உத்தரவு திவாலானவரை அவரின் கடன்களிலிருந்து முழுதும் விடுதலையடைய உதவுகிறது. தீர்ப்பளிப்பு உத்தரவு வழங்கும்போது அவருக்குண்டான தனிப்பட்ட தகுதியின்மைகளைப் போக்குகிறது என்றாலும், கீழ்க்காணும் கடன்களிலிருந்து அவர் மீள முடியாது :

1. அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய கடன்.

2. மோசடி மூலம் ஏற்பட்ட கடன், அதாவது, இரகசிய லாபம் வைத்துள்ளதற்காகக் கம்பெனி தோற்றுவிப் பாளரின் பொறுப்பு.

3. தவறான வழிகளில் வழக்குத் தொடர்வதற்கான வசதியுள்ள அவரது கடன்கள்.

4. குற்றப் பிரிவுச் சட்டத்தின்கீழ் அவர் மனைவி அல்லது அவரது குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கும்படி நீதிமன்றம் நிறைவேற்றிய பொறுப்பு.

5. அவரது கூட்டுப் பொறுப்பால் ஏற்பட்ட கடன். அதாவது அவர் உத்தரவாதம் அளிப்பவராகவும், சக-பாதுகாப் பாளராகவும் இருந்தால் அவருக்குரிய பொறுப்பால் ஏற்பட்ட கடன்.

6. தீர்ப்பளிப்பு உத்தரவிற்குப் பின்னும் விடுதலை உத்தரவிற்கு முன்னும் ஏற்பட்ட கடனுக்கு அவர் பொறுப்பாளியாகிறார். காரணம் அக் கடன்கள் திவாலில் நிரூபிக்கப்பட முடியாத கடன்கள்.

7. விடுதலை அளிக்கப்பட்ட பின்னர், நீதிமன்ற அதிகாரி வசம் திவாலானவரின் சொத்துகள் காணப்பட்டால் கடனீந்தோர் தம் பாக்கிக்காக உரிமை கோரலாம். ஆனால், ஏற்கெனவே வழங்கிய கடன் ஈவு இதனால் பாதிக்கப்படக் கூடாது.

8. இப் பொறுப்புத் தீர்ப்பு உத்தரவு இந்தியாவிற்கு வெளியே செல்லாது.

21. நடுவர் அல்லது இசைவுத் தீர்ப்புமுறைச் சட்டம்

(The Law of Arbitration)

தற்சமயம் நடைமுறையில் உள்ள நடுவர் தீர்ப்புமுறைச் சட்ட விதிகள் 1940ஆம் ஆண்டு நடுவர் தீர்ப்புமுறைச் சட்டத்தில் அடங்கியுள்ள விதிகளைக் கொண்டது. மேலும் அச்சட்டம் 1940ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதி அமலுக்கு வந்தது. இது ஏற்கெனவே நடுவர் தீர்ப்புமுறை சம்பந்தமான விதிகளைக் கொண்ட 1899ஆம் ஆண்டு இந்திய நடுவர் தீர்ப்புமுறைச் சட்டத்தையும், 1908ஆம் ஆண்டுச் சமூக உரிமை இயல் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையையும் ரத்துச் செய்தது. இச் சட்டம் இந்தியாவில் ஜம்மு காஷ்மீரைத் தவிர ஏனைய மாநிலங்களுக்குச் செல்லுபடி ஆகும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இலக்கணம்

நடுவர் தீர்ப்புமுறை என்பது இரு நபர்களுக்கிடையே ஏற்படும் பணம், சொத்து, ஒப்பந்த முறிவு போன்ற சமூக உரிமையியல் செய்திகள் குறித்து ஏற்படும் சர்ச்சைகளை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நடுவர்களின் தீர்ப்பின்படி நீதிமன்றத்திற்குப் போகாமலேயே தீர்த்துக்கொள்வதுதான் நடுவர் தீர்ப்பு முறையாகும். நடுவர் தீர்ப்புமுறையின் சாரம் என்ன வென்றால் நடுவர்கள் நீதிமன்றத்திற்குப் போகாமலேயே ஒரு வழக்கின் தீர்ப்பை வழங்குகின்றனர். ஆனால் நடுவர் தீர்ப்பு முறையின் நடவடிக்கைகளில் தலையிடும் உரிமையும் அதனுடைய முடிவுபற்றித் தீர்ப்பு வழங்கும் உரிமையும் நீதி மன்றத்திற்கு உண்டு.

நம் நாட்டில் வழக்குகளைக் கிராமப் பஞ்சாயத்து முறையில் தீர்த்துக்கொள்ளும் முறையும் நடுவர் தீர்ப்புப்படி வழக்குமன்றத்திற்குச் செல்லாமல் அவர் தீர்ப்பை ஏற்று வரும் பழக்கமும் வெகு காலமாகவே இருந்துவருகிறது. நடுவர் அல்லது பஞ்சாயத்தார்,

நடுவர் தீர்ப்புக்கு விடல் அல்லது பஞ்சாயத்து என்ற இரு சொற்களும் நம்நாட்டு வரலாற்றைப்போலப் பழமை வாய்ந்தவை. பஞ்சாயத்து என்ற சொல் வழக்கமாக நான்கு அல்லது ஐந்து பேர்கள், வழக்காடும் நபர்களின் வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் முறையைக் குறிப்பதாகும். ஒரு வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதைவிட நடுவர் தீர்ப்புமுறையில் தீர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. செலவும் மிச்சம். காலவிரயம் இல்லை. நீதிமன்றங்களில் ஏற்படும் காலதாமதம்பற்றி ஏற்படும் எரிச்சல் இல்லை. நடத்திடும் முறையும் எளிது. நடுவர்களின் தீர்ப்பை நீதிமன்றம் ஒருமுறை ஏற்றுவிட்டால் அதுவே இறுதியானது. அதன் பின்னர் மேல்முறையீடு (appeal) இல்லை. எனவேதான் வணிக நடவடிக்கைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் நடுவர் தீர்ப்புமுறைச் சரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளன. காரணம், ஒப்பந்தம் பற்றி ஏதாவது சர்ச்சைகள் எழுமானால் அதை நடுவர் தீர்ப்பு முறையில் தீர்த்துக்கொள்ளலாம்.

நடுவர் தீர்ப்பு உடன்பாடு (Arbitration agreement)

சட்டத்தின் பிரிவு (2) 'அ' வின்படி நடுவர் தீர்ப்பு உடன்பாடு என்பது நடுவர் பெயர் அதில் குறிப்பிட்டிருந்தாலும் குறிக்கப்படாமலிருந்தாலும் அவருக்குத் தற்கால அல்லது எதிர்காலச் சர்ச்சைகள்பற்றிச் சமர்ப்பிக்கப்படும் ஓர் எழுத்துமூலமான உடன்பாடாகும். ஒரு செல்லத்தக்க நடுவர் தீர்ப்பு கீழ்க்காணும் சிறப்புக் கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும் :

1. உடன்பாடு எழுத்து மூலம் இருக்க வேண்டும்:

செல்லுபடியாக வேண்டுமென்றால் ஒரு நடுவர்தீர்ப்பு உடன்பாட்டின் நிபந்தனைகள் அல்லது உள்கூறுகள் எழுத்துமூலம் வெளிப்பட வேண்டும். எனினும், அத்தகைய உடன்பாடு இரு சாராரும் சேர்ந்து எழுதித்தர வேண்டிய முறைப்படியான பத்திரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் இருவரும் கையெழுத்திட வேண்டிய அவசியமுமில்லை. அத்தகைய உடன்பாடு பல ஆவணங்களிலிருந்து சேகரித்ததாகக்கூட இருக்கலாம் அல்லது இரு சாரார்களுக்குமிடையே ஏற்பட்ட கடிதப் போக்குவரத்து மூலம்கூட ஏற்படலாம். அத்தகைய உடன்பாட்டில் ஒரு நபர் கையெழுத்திட்டால் போதும். மற்றவர் அதை எழுத்து மூலமாகவோ வாய்ச்சொல் மூலமாகவோ அல்லது நடத்தையாலோ ஏற்றிடலாம். உடன்பாட்டிற்கு என்ன தேவை என்றால் அது எழுத்துமூலம் இருக்க வேண்டும். இம்முறையின்படி சர்ச்சைகளுக்குத் தீர்வு காண அவர்கள் இசைய வேண்டும்.

எனவேதான் சரக்கு அனுப்பு கோரிக்கையில் (indent) நடுவர் தீர்ப்புமுறைச் சரத்து உள்ளடங்கியிருக்கிறது. பின்னர் அதன்படி சரக்கு அனுப்பப்பட்டு ஏதாவது தகராறு ஏற்பட்டால் நடுவர் தீர்ப்புமுறை இரு சாரார்களுக்குமே நன்மையளிக்கிறது.

2. தற்கால அல்லது எதிர்காலச் சர்ச்சைகளை நடுவர் தீர்ப்புக்கு விடும் வகையில் உடன்பாடு இருக்கவேண்டும்.

நடுவர் தீர்ப்பிற்கு விடுவதற்கு சர்ச்சையோ வேறுபாடோ தோன்றி இருந்தால்தான் அது செல்லுபடியாகும். எதிர்காலச் சர்ச்சைகளுக்கு உடன்பாடு ஏற்பட்டால் அத்தகைய சர்ச்சைகள் தோன்றும்வரை நடுவர் தீர்ப்புக்கு விடமுடியாது. சர்ச்சைகள் இல்லையென்றால் நடுவர் தீர்ப்பு உடன்பாட்டைக் கையாள முடியாது. சர்ச்சைகள் சமூக உரிமையியல் சம்பந்தப்பட்ட விஷயங்களைத்தான் கொண்டிருக்க வேண்டும். குற்றவியல் விஷயங்கள் நடுவர் தீர்ப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

3. சர்ச்சைகளுக்குத் தீர்வுகாண சம்பந்தப்பட்ட நபர்கள் விரும்ப வேண்டும்.

நடுவர் தீர்ப்புமுறை உடன்பாட்டில் நடுவர் தீர்ப்புமுறை மூலம் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ள இரு சாராரும் விருப்பம் தெரிவிக்க வேண்டும்.

4. நடுவர் தீர்ப்புக்கு நபர்கள் கட்டுப்பட வேண்டும்.

மேலும் நடுவர் தீர்ப்புமுறை உடன்பாட்டில் நபர்கள் நடுவர் அல்லது நடுவர்களின் தீர்ப்புக்கு உட்பட்டு நடப்பதாக ஒப்புதல் வழங்க வேண்டும்.

5. நடுவர் தீர்ப்பு உடன்பாடு ஓர் ஒப்பந்தத்தின் சிறப்புக் கூறு களைப் பெற்றிருக்க வேண்டும்.

ஒரு நடுவர் தீர்ப்பு உடன்பாட்டில் ஒரு செல்லத்தக்க ஒப்பந் தத்தின் சிறப்புக் கூறுகள் எல்லாம் இருக்க வேண்டும். குறிப்பாக நபர்கள் கருத்து ஒற்றுமை பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் உடன்பாடு அவர்களைக் கட்டுப்படுத்தாது. உடன்பாட்டின் நிபந்தனைகள் தெளிவாகவும் பொருள் விளங்கக் கூடியதாகவும் சிலேடை மொழிகளில் இல்லாமலும் இருக்க வேண்டும். தெளிவு இல்லாமலும் உறுதி இல்லாமலும் இருந்தால் உண்மையிலேயே சட்டத்தில் உடன்பாடு எழ முடியாது.

6. நடுவரின் பெயர்கள் உடன்பாட்டில் குறிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

நடுவர்களின் பெயர்கள் உடன்பாடு ஏற்பட்ட பின்னர்தான் எழுதப்பட வேண்டும். ஆனால் நடுவர் தீர்ப்பு உடன்பாடு ஏற் பட்டுவிட்டால் நடுவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டாக வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால்தான் நடுவர் தீர்ப்பு முறை ஒப்பந்தம் செல்லத்தக்கது. நடுவர் தீர்ப்பு நிபந்தனைகள் அல்லது நடுவரின் நிபந்தனைகள் அதில் பயன்படுத்தப்பட்டனவா என்பதெல்லாம் தேவை இல்லை. மேலும் நபர்கள் நடுவர் தீர்ப்புக்கு இசையவில்லை என்றால் உடன்பாடு செல்லாது. தீர்ப்பும் அவர்களைக் கட்டுப்படுத்தாது. 'ஜோதி பிரதர்ஸ் எ. ஸ்ரீ துர்கா மைனிங் கம்பெனி' என்ற வழக்கில் நடுவர் தீர்ப்புச் சரத்தின்படி, சர்ச்சை ஏற்பட்டால் அது ஓர் ஆலோசனை மூலம் தீர்த்துக் கொள்ளப்படலாம் என்று இருந்தது. எனவே, அந்த வழக்கில் அது ஓர் உடன்பாடு இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. காரணம் அங்குச் சொற்கள் உறுதி யாகவில்லை. நடுவர் தீர்ப்புக்குப் போக முடியும் என்றுதான் இருந்ததேயொழிய போகவேண்டும் என்று இல்லை. அதேபோல் ஓர் உடன்பாட்டில் நடுவர் தீர்ப்புச் சரத்து ஆரம்பத்திலிருந்து செல்லத்தகாததாகவும் சட்ட விரோதமானதாகவும் இருந்தால் அந்த நடுவர் தீர்ப்பு முறைச் சரத்து அதைக் கட்டுப்படுத்தாது. மோசடி, பொய்க்கூற்று என்ற அடிப்படையில் செல்லத்தகாத ஓர் ஒப்பந்தத்தில் நடுவர் தீர்ப்புச் சரத்து இருந்தால் அது அமல் படுத்தக்கூடியதாக உள்ளது என்று 'எல்டேட் ஆஃப் பாம்பே' எ. ஆடம்ஜி என்ற வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.

நடுவர் தீர்ப்பு உடன்பாட்டின் விளைவு

தங்களின் வழக்குகளை ஒரு நடுவர் தீர்ப்பு முறைக்குத் தாக்கல் செய்துவிட்டு அதே விஷயத்திற்கு நீதிமன்றத்தில் வழக் குப் போட முடியாது. ஒரு நபர் இந்த உடன்பாட்டை உதாசீனப் படுத்திவிட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தால் மற்றொரு நபர் அந்த வழக்கு நடக்காதபடி தடுத்துவிடலாம். சட்டத்தின் 34ஆவது பிரிவின்படி நீதிமன்றம் அத்தகைய வழக்கைத் தள்ளு படி செய்யலாம். ஆனால் மற்றொரு நபர் அந்த வழக்கிற்குத் தடை விதிக்கக் கோராவிட்டால் நீதிமன்றம் அவ்வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கிடலாம்.

நடுவர் தீர்ப்பு முறையின் நன்மைகள்

நீதிமன்றத்திலுள்ள ஒரு வழக்கோடு ஒப்பிடும்பொழுது நடுவர் தீர்ப்புமுறை பின்வரும் நன்மைகளைப் பெற்றுள்ளது : இதனுடைய நடைமுறை விதிகள் மிகவும் எளிது. நீதிமன்றங்களில் கையாளப்படும் அளவில்லாத முறையான நடவடிக்கைகள் இதற்கில்லை. மேலும் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுப்பதற்கு ஆகும் செலவைவிட இதற்காகும் செலவு குறைவு. காலத்தை மிச்சப்படுத்துகிறது. நீதிமன்ற நடவடிக்கைகளில் ஏற்படும் கால தாமதத்தால் உண்டாகும் அசௌகரியத்திலிருந்து இது நம்மைக் காத்து வேகமாகச் செயல்படுகிறது. நீதிமன்ற நடவடிக்கைகள் போல அவ்வளவாக வெளி உலகிற்கு இது தெரிய வராது. ஆனால், இதன் நடைமுறைகளைத் தனியாகத்தான் நடத்திட முடியும். வழக்கு சம்பந்தமான சர்ச்சை தொழில்நுட்பம் சம்பந்தப்பட்டதானால் தொழில்நுட்ப வல்லுநரை நடுவராக அமர்த்திடலாம்.

தீமைகள்

நடுவர் தீர்ப்புக்கு வந்துள்ள வழக்கு அல்லது தகராறு சட்டபூர்வமான வினாவை எழுப்பினால் நடுவர் அதைப் பைசல் செய்வதற்குத் தகுதிவாய்ந்தவர் அல்லர். சம்பிரதாயமற்ற முறையில் வழக்கு நடைபெறுவதால் சிலநேரங்களில் அநீதி கிட்டிடவும் வாய்ப்பு உண்டு.

நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் செல்லும் விஷயங்கள்

பொதுவாகச் சமூக உரிமையியல் தன்மை வாய்ந்த எல்லா விஷயங்களையும் நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் சென்றிடலாம். ஆனால் முழுதும் குற்றப்பிரிவு சார்புடைய விஷயங்களை எடுத்துச்செல்ல முடியாது. எனினும், கீழ்க்கண்ட விஷயங்களை எடுத்துச்செல்லலாம். நபர்களின் தனி உரிமையைப் பாதிக்கும் விஷயங்கள்—உதாரணமாக ஒரு கோயிலில் பூசாரியாகப் பணியாற்றும் உரிமை; காலங்கடந்த உரிமை கோருதல்; சட்ட சம்பந்தமான வினா; திருமண சம்பந்தப்பட்ட வினாக்கள்; மனைவிக்கு வழங்கப்படும் ஜீவனாம்சம்; ஒப்பந்த முறிவிற்காக நிர்ணயிக்கும் நட்ட ஈடு; ஒருவரின் மரியாதை சம்பந்தமான சர்ச்சைகள்; ஒரு நொடிந்தவர்-அவரின் கடனாளிகள் இவர்களுக்கிடையே ஏற்படும் சர்ச்சைகள் போன்றவைகளை நடுவர் தீர்ப்பிற்கு எடுத்துச் செல்லலாம். கீழ்க்காணும் விஷயங்களை நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் செல்ல இயலாது:

திருமண சம்பந்தமான சர்ச்சைகளான விவாகரத்து போன்றவைகள்; நொடிப்பு சம்பந்தமான நடவடிக்கை விதிமுறைகள்;

ஒருவர் எழுதி வைத்துச் சென்ற உயிலின் செல்லுபடித் தன்மை பற்றிய பிரச்சனைகள்; இளவர், மனச் சமநிலை இழந்தவர்கள் போன்றவர்கள் பற்றிய விஷயங்கள்; அறநிலையங்கள்-பொது அறம் போன்றவைபற்றிய சர்ச்சைகள்; கடனாளியின் சொத்துகளைப் பொது விற்பனைக்குக் கொண்டுவர எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் நிறைவேற்றம், திருடு, கொலை போன்ற குற்றப்பிரிவியல் சம்பந்தமான விஷயங்கள் போன்றவையாகும்.

நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் செல்லும் நபர்கள்

ஒரு நடுவர் தீர்ப்பு உடன்பாடு ஓர் ஒப்பந்தமாகும். எனவே, எந்தச் சர்ச்சையும் நடுவர் தீர்ப்புக்கு எழுத்து மூலம் உள்ள உடன்பாட்டின் அடிப்படையில்தான் எடுத்துச் செல்ல இயலும். எனவே, உடன்பாடு செய்யும் நபர்கள் ஒப்பந்தம் செய்யும் தகுதியற்ற இளவர்கள், மனச்சமநிலை இழந்தவர்கள் நடுவர் தீர்ப்புக்குத் தகராறுகளை எடுத்துச் செல்ல முடியாது. எனவே, நடுவர் தீர்ப்புக்கு ஒரு வழக்கை எடுத்துச் செல்லும் தகுதி ஓர் ஒப்பந்தம் செய்யும் தகுதியைப் பொறுத்துள்ளது. அதாவது யார் ஒருவர் ஒப்பந்தம் செய்யும் தகுதியைப் பெற்றுள்ளாரோ அவர் தாம் வழக்கை எடுத்துச் செல்ல முடியும். அவ்வாறு ஒப்பந்தம் செய்யும் தகுதியில்லாதவர்கள் வழக்கை எடுத்துச் செல்ல இயலாது. இந்த அடிப்படையில் ஓர் இந்துக் குடும்பத்தின் தலைவர், அதிகாரம் பெற்ற முகவர், வழக்காடுபவருக்காக வாதாடும் வழக்கறிஞர், மரபுரிமைப் பத்திரத்தின் நிபந்தனைக் குட்பட்ட பாதுகாவலர், நொடிப்பு நீதிமன்றத்தின் அனுமதி பெற்ற நீதிமன்ற அதிகாரி (official receiver), ஓர் இளவரின் பாதுகாவலர் அமைப்புப் பத்திரம், நடைமுறை விதிகள் ஆகியவைகளின் சரத்துகளுக்குட்பட்ட ஒரு கூட்டுப்பங்குக் கம்பெனி ஆகியவர்கள் ஒரு வழக்கை நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் செல்லலாம். ஆனால், ஓர் இளவர், மனச்சமநிலை இழந்தவர், நொடிந்தவர், ஒரு கூட்டாளி, ஓர் உயிலின் நிறைவேற்றாளர் போன்றவர்கள் அவ்வாறு வழக்கை எடுத்துச் செல்லமுடியாது.

நடுவர் தீர்ப்பை வேண்டும் வழிகள் (Modes of Submission)

நடுவர் தீர்ப்பை வேண்டும் வழிகளைப் பார்ப்பதற்கு முன்னர் நிகழ்காலச் சர்ச்சையைச் சமர்ப்பித்தல் (submission) என்பது பற்றியும் எதிர்காலச் சர்ச்சைபற்றி வேண்டல் (reference) என்பது பற்றியும் நாம் அறிய வேண்டும்.

நிகழ்காலச் சர்ச்சையைச் சமர்ப்பித்தல்

இரு நபர்களிடையே ஏற்பட்டுவிட்ட அதாவது ஒரு நிகழ் காலச் சர்ச்சையை நபர்கள் ஓர் உடன்பாட்டின்படி சமர்ப்பிப்பது

நிகழ்கால சர்ச்சை சமர்ப்பணம் ஆகும். அதாவது நபர்கள், அவர்களின் சர்ச்சைக்குப் பின்னால் நடுவர் தீர்ப்பு முறைக்கு உடன்பட்டால் அது நிகழ்கால சர்ச்சை சமர்ப்பணமாகும். உடன்பாடு ஏற்பட்டபொழுது அங்குச் சர்ச்சை இருக்கவேண்டும்.

மேற்கூறியதற்கு மாறாக நபர்கள் எதிர்காலத்தில் தோன்றக் கூடிய வேறுபாடுகளை ஓர் உடன்பாட்டின்மூலம் சமர்ப்பித்தால் அஃது ஓர் உடன்பாடு வேண்டல் ஆகும். ஓர் உடன்பாடு வேண்டல், சமர்ப்பணம் ஆகாது. காரணம், உடன்பாடு ஏற்படும்பொழுது அங்குச் சர்ச்சைகள் இல்லை. மேற்கூறிய இரு சொற்றொடர்களும் 1899ஆம் ஆண்டின் நடுவர் தீர்ப்புமுறைச் சட்டத்தில் கையாளப்பட்டன. ஆனால், தற்சமயம் நடுவர் தீர்ப்புமுறை உடன்பாடு என்ற சொற்றொடர் அவைகளுக்குப் பதிலாக 1940ஆம் ஆண்டுச் சட்டத்தில் திருத்தி எழுதப்பட்டது. அச் சட்டத்தின்படி ஒரு சர்ச்சையை நடுவர் தீர்ப்புக்கு மூன்று வழிகளில் சமர்ப்பிக்கலாம். அவைகளாவன :

1. நீதிமன்றத்தின் குறுக்கீடு இல்லாத நடுவர் தீர்ப்பு முறை.

2. தீர்ப்பு வழங்கப்பெறாத நிலையில் இல்லாதபோது நீதி மன்றக் குறுக்கீட்டுடன் நடுவர் தீர்ப்புமுறை.

3. தீர்ப்பு வழங்கப்பெறாத நிலையில் நடுவர் தீர்ப்புமுறை.

நீதிமன்றக் குறுக்கீடு இல்லாத நடுவர் தீர்ப்புமுறை

இம் முறையில் நபர்கள் தங்கள் சர்ச்சைகளை நீதிமன்றக் குறுக்கீடு இல்லாமல் யதேச்சையாக நடுவர் தீர்ப்பு முறைக்குச் சமர்ப்பிக்கலாம். ஏற்கெனவே சொல்லியவிதம் இதுகுறித்து நபர் களிடையே ஓர் உடன்பாடு எழுத்துமூலம் ஏற்படவேண்டும்.

நடுவர் தீர்ப்பு உடன்பாட்டில் உள்ள தொக்கியுள்ள விதிகள்

நபர்கள் நடுவர் தீர்ப்பு உடன்பாட்டில் அவர்களுக்கு வேண்டிய நிபந்தனைகளை எழுதிக்கொள்ளலாம். ஒவ்வோர் உடன்பாட்டிலும் அது வெளிப்படையாகத் தெரிவிக்காத நிலை யில் சில தொக்கிய நிபந்தனைகள் உள்ளன. சட்டத்தின் மூன்றாவது பிரிவில் அவைகள் சொல்லப்பட்டுள்ளன. வெளிப் படையாகச் சொல்லாத நிலையில் ஒரு நடுவர் தீர்ப்பு உடன்

பாட்டில் முதல் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் சேர்க்கப் பட்டுள்ளன. சட்டத்தின் முதல் பட்டியலில் அவ் விதிகளை ஒவ்வோர் உடன்பாடும் பெற்றுள்ளது எனக் கொள்ளப்பட வேண்டும். நடுவர் தீர்ப்பு உடன்பாட்டில் உள்ள தொக்கிய விதிகள் என அவைகள் அழைக்கப்படுகின்றன. அவைகள் கீழ்க்காண்பவற்றை உள்ளடக்கியுள்ளன :

1. ஒரு தனி நடுவரை அது குறிக்கும். ஒருவர் தீர்ப்பு உடன்பாட்டில் எத்தனை நபர்கள் எனக் குறிப்பிடப்பட வில்லையென்றால் ஒரே ஒரு நடுவர் என எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. பல நடுவர்கள் அமர்த்தப்பட்டால் அவர்களுக்குள் ஒரு நடுநிலையாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவும் ஒரு மாதத்திற்குள் நடுநிலையாளரை அமர்த்த வேண்டும்.

3. நடுவர்கள் நான்கு மாதங்களுக்குள் அவர்கள் தீர்ப்பை வழங்க வேண்டும்.

4. அவ்வாறு நான்கு மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்கா விட்டால் நடுவர் தீர்ப்பு உடன்பாட்டின் நபர்களில் யாராவது ஒருவருக்கு அவர்கள் அறிக்கை அனுப்ப வேண்டும். அல்லது நடுநிலையாளர்களுக்கு அவர்கள் உடன்படவில்லை எனத் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர் அவர் நடுவர்களுக்குப் பதிலாக நடுவர் தீர்ப்பு வேண்டுகோளில் அதை எழுதுவார். நடுவர்களிடையே உடன்பாடு ஏற்படவில்லையென்றால் தீர்ப்பு இல்லை. நடுநிலையாளரின் அதிகார எல்லை தெரிய வேண்டும். அவர் எல்லா விஷயங்களையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார்.

5. நடுநிலையாளர் வழக்கை எடுத்துக்கொண்ட இரண்டு மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்குவார் அல்லது நீட்டித் தந்த காலத்திற்குள் தீர்ப்பை வழங்குவார்.

6. நடுவர்களும் நடுநிலையாளரும் வழக்கு விடுத்த நயர் களை விசாரிக்கலாம்.

7. நபர்கள் நடுவர்கள்முன் நேரடியாகவோ வழக் கறிஞர் மூலமாகவோ ஆஜராகலாம். நடுவர் அல்லது

நடுநிலையாளர் போன்றவர்களுக்குத் தேவையான கணக்கு ஏடுகள், பத்திரங்கள் போன்றவைகளை நபர்கள் தாக்கல் செய்வார்கள்.

8. நடுவர் தீர்ப்பு இறுதியானது. நடுவர் தீர்ப்புக்கு வேண்டுகோள் விடுத்த நபர்கள் அனைவரையும் அது கட்டுப்படுத்தும். நடுவர்களும் நடுநிலையாளர்களும் வழக்குச் செலவையும் அதை யார் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்புக் கூற அவர்களது விருப்பத்தைப் பயன்படுத்தலாம்.

நடுவர்கள்

இரு நபர்களிடையே ஏற்படும் வேறுபாடுகளையும் சர்ச்சைகளையும் தீர்ப்பதற்காக அமர்த்தப்படும் நபர்தான் நடுவர் ஆவார். நபர்கள் ஒருவருக்கொருவர் இசைந்து அவரை அமர்த்துகின்றனர். ஆனால், உடன்பாட்டில் அவர்களின் பெயர்களைக் குறிப்பிட வேண்டும் என்று அவசியமில்லை. நபர்கள் யாரை வேண்டுமானாலும் அமர்த்தலாம். உதாரணமாக இளவர், மனச் சமநிலை இழந்தவர் ஆகியவர்களைக்கூட அமர்த்தலாம். நடுவராக அமர்த்தப்பட்டவர் அவ்வாறு செயலாற்றுவதற்குத் தனக்கு விருப்பம் என்று ஒப்புதல் தரவேண்டும். அவ்வாறு அவர் இசைவு தரும்வரை அவர்களுடைய நியமனம் முழுமையடைந்தது அன்று.

நடுவர் நியமனம்

நடுவர் ஒருவரை எல்லா நபர்களும் ஏகோபித்து ஒருமனதாக நியமனம் செய்யலாம். அல்லது நீதிமன்றம் மூலம் நியமனம் செய்யலாம். சட்டத்தின் 9ஆவது பிரிவின்படி நபர்கள் தங்களுக்குள் ஒருவரை நடுவராக நியமனம் செய்யலாம் அல்லது அவர்கள் யாரை விரும்புகிறார்களோ அவரை நியமனம் செய்யலாம். காரணம் சட்டத்தில் நடுவர் ஆவதற்குத் தகுதிநிலை ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஒரு நடுவர் தீர்ப்பு உடன்பாடு ஒரு வழக்கை விசாரிக்க இரண்டு நடுவர்கள் வேண்டும் என்று சொன்னால், ஒவ்வொரு நபரும் தனித்தனியே ஒரு நடுவரை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட நடுவர் தன்னுடைய கடமையைப் புறக்கணிப்புச் செய்தாலோ மறுத்தாலோ இறந்து விட்டாலோ அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்கலாம். இருவரில் ஒருவர் நடுவரை நியமிக்கத் தவறினால் அல்லது அவருக்குப் பதிலாக வேறு ஒரு நபரை நியமிக்கத் தவறினால் ஏற்கெனவே நடுவரை நியமனம் செய்யக்கோரி

ஒரு 15 நாள் அறிவிக்கை தரவேண்டும். மேற்கூறிய அறிவிக்கைக்கும் அவர்கள் நடுவரை நியமனம் செய்யத் தவறினால் மற்றொருவர் தன்னுடைய நடுவரை தனி ஒரு நடுவராகப் பணிபுரிய அனுமதிப்பார். அவ்வாறு நியமிக்கப்பட்ட தனி ஒரு நடுவர் வழங்கும் தீர்ப்பு இரு நபர்களையும் கட்டுப்படுத்தும். ஆனால் நீதிமன்றம் அத்தகைய நியமனத்தைத் தள்ளிவிட்டு நியமனம் செய்யத் தவறியவருக்குக் கால நீட்டிப்புக் கொடுத்து நியமனம் செய்ய வேண்டும். அல்லது நீதிமன்றம் எந்த முடிவை விரும்புகிறதோ அதன்படி செயலாற்றும்.

நீதிமன்றம் மூலம் நடுவர் நியமனம்

கீழ்க்காணும் நிலைகளில் ஒரு நடுவரை நீதிமன்றம் நியமனம் செய்திடலாம்:

1. நடுவர்தீர்ப்பு உடன்பாட்டின்படி நபர்களின் இசைவின்படி நடுவர் நியமனம் செய்யப்படலாம். ஆனால் நபருக்குள்ளே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நியமனம் ஏற்படவில்லையென்றால் நீதிமன்றம் மூலம் நடுவர்கள் அமர்த்தப்படலாம்.

2. அவ்வாறு அமர்த்தப்பட்ட நடுவர்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறினால், கடமையாற்றத் திறமையில்லாமல் இருந்தால் அல்லது இறந்துவிட்டால் நபர்கள் அந்தக் காலி இடத்தை நிரப்ப மாட்டார்கள். நீதிமன்றமே ஒரு நடுவரை நியமிக்கும். நபர்களோ நடுவர்களோ ஒரு நடுநிலையாளரை அமர்த்த வேண்டப்பட்டு அவர்கள் அமர்த்தப்படாமல் இருந்தால் நடுவரை அமர்த்திடும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு. நடுவரின் நியமனம் குறித்து ஒரு நபர் மற்றொரு நபருக்கு அறிவிக்கை செய்திடலாம். அறிவிக்கை கொடுத்த 15 நாள்களுக்குள் நடுவர் நியமனம் ஏற்படாவிட்டால் அவர்களின் விண்ணப்பத்தின் பேரில் நீதிமன்றம் நடுவரையோ நடுநிலைமையாளரையோ நியமனம் செய்திடலாம். தீயநடத்தை அல்லது வேறு காரணங்களுக்காக நீதிமன்றம் நடுவரையோ நடுநிலைமையாளரையோ நியமனம் செய்திடலாம். தீய நடத்தை அல்லது வேறு காரணங்களுக்காக நீதிமன்றம் நடுவரையோ நடுநிலைமையாளரையோ நீக்கிவிட்டால் அந்த இடத்தில் வேறு ஒருவரை நியமனம் செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு.

நீக்கம்

பிரிவு 11 ஆவதின்படி கீழ்க்காணும் நிலைகளில் நடுவர் தீர்ப்பு வேண்டியுள்ள நபர்களில் யாராவது ஒரு நபர் நடுவரை நீக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தால் நீதிமன்றம் அவரை நீக்கிவிடலாம். குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்ப்பு வழங்காவிட்டாலும் நீதிமன்றம் ஒருவரை நீக்கிவிடலாம். அதாவது நடுவர் 4 மாதங்களுக்குள் தீர்ப்பை வழங்கிட வேண்டும். நடுநிலையாளர் 2 மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்கிட வேண்டும். இவர்கள் அவ்வாறு தீர்ப்பை வழங்காத நிலையில் நீதிமன்றம் தீர்ப்பை வழங்கிடலாம்.

நடுவர் அல்லது நடுநிலையாளர் தவறாக நடந்துகொண்டாலும் நீதிமன்றம் அவர்களை நீக்கிடலாம். இங்குத் தவறான நடத்தை என்பது ஒழுக்கக்கேடான லஞ்சம், மோசடி, பாரபட்சம் போன்றவைகளோடு மட்டுமல்லாமல், சட்ட சம்பந்தத் தவறான நடத்தைகளான புறக்கணிப்பு, கடமை முறிவு, நடுவர் தீர்ப்புமுறை பொறுப்புப் போன்றவைகளும் ஆகும். மேலும் நடுவர் தீர்ப்பு நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் நடத்தாவிட்டாலும் நீதிமன்றம் அவர்களை நீக்கிவிடலாம். சட்ட ஒழுக்கக் கேடு நீதியைப் பாதிக்கிறது.

நடுவர் அதிகாரத்தை இரத்துச் செய்தல் (பிரிவு 5)

ஒரு தடவை ஒரு செல்லத்தக்க வழக்கை நடுவரிடம் எடுத்துச் சென்றுவிட்டால் நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் அதை இரத்துச் செய்ய முடியாது. அதாவது நியமனம் செய்யப்பட்ட ஒரு நடுவரின் அதிகாரத்தை நீதிமன்றத்தின் அனுமதியோடுதான் இரத்துச் செய்யமுடியும். ஆனால் நீதிமன்றம் அனுமதி தந்திடலாம் அல்லது மறுத்திடலாம். கீழ்க்காணும் நிலைகளில் அதிகாரத்தை இரத்துச் செய்திட நீதிமன்றம் அனுமதி தந்திடும். ஒரு நடுவர் பணியாற்றிட புறக்கணித்தாலும் அல்லது மறுத்தாலும் நடுவரின் தவறான நடத்தையாலும் தகுநிலையற்ற தன்மையாலும் மோசடி செய்தபோதும் நியாயமான காலதாமதத்திற்கு மேல் தீர்ப்பு வழங்கினாலும் அவர்களை நீதிமன்றம் நீக்கிடலாம்.

நடுவரின் அதிகாரங்கள் (பிரிவு 13)

நடுவர் தீர்ப்புமுறைச் சட்டத்தின் 13ஆவது பிரிவு நடுவரின் அதிகாரத்தைப்பற்றி உள்ளது. நடுவர் தீர்ப்பு உடன்பாட்டில் வெளிப்படையாகச் சொல்லாத நிலையில் ஒரு நடுவர் பின்வரும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். அதாவது நபர்களுக்கு உறுதி

மொழி செய்து வைப்பதற்கும் சாட்சிகளை விசாரிப்பதற்கும் இவர்களுக்கு அதிகாரமுண்டு. சட்டமுறை நுட்பம்பற்றி நடுவர் தீர்ப்பு நடைமுறைகள் தள்ளிவைக்கப்பட்டிருந்தால் நடுவர் அதை நீதிமன்றத்திற்கு ஒரு சிறப்பு வழக்காக எடுத்துச் செல்லலாம். மேலும் நடுவர் ரகசிய முறையில் தீர்ப்பு வழங்கிடலாம். உதாரணமாக ஒரு வைர மோதிரத்தின் உரிமைபற்றி ஒரு சர்ச்சை எழுந்தது. அதை வைத்திருப்பவர் மற்ற நபருக்கு ஆயிரம் ரூபாய் தரவேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் வைர மோதிரம் பதினான்கு நாள்களுக்குள் திரும்பத் தரப்பட்டால் 1000 ரூபாய்க்குப் பதிலாக 5 ரூபாய் கொடுத்தால் போதும் என்று சொல்லப்பட்டது. அதேபோல் மாற்றுத்தீர்ப்புக் கூறும் அதிகாரம் நடுவருக்குண்டு. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட பொருளை ஒப்பந்தப்படி தரவில்லையென்று தொடுக்கப்பட்ட வழக்கில் அப் பொருளைத் தந்துவிட வேண்டுமென்றும் அல்லது அதற்குப் பதிலாகக் கொஞ்சம் பணம் தந்திடவேண்டும் என்றும் தீர்ப்புக் கூறலாம். தீர்ப்பில் ஏற்படும் சாதாரண தவறுகளையும் விட்டு விடும், எழுதாது விடும் பிழைகளையும் சரிசெய்திட நடுவருக்கு அதிகாரமுண்டு. ஆனால் நடுவரின் தீர்ப்பு மறுபரிசீலனைக்கு வந்தால்தான் இது செய்யமுடியும். வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களைக் கேள்வி கேட்கும் அதிகாரம் அவருக்கு உண்டு. நடுவர் தீர்ப்பு உடன்பாட்டில் தொடர்பு கொண்ட ஒருவர் இறந்து விட்டால் அவருடைய வாரிசுதாரரை நியமிக்கும் அதிகாரம் உண்டு. ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றிட கட்டளையிடும் அதிகாரம் இவருக்கு உண்டு.

கடமைகள்

நியாயமாகச் செயலாற்றும் கடமைகள் எல்லாம் இவருக்குண்டு. ஒரு நடுவர் தீர்ப்பு முறையின் முக்கிய நோக்கமே நீதி மன்றத்திற்குச் செல்லாமல் ஒரு வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவது ஆகும். அதாவது பகுதி (Partial) சட்ட சம்பந்தமான முறையாகும். வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நியாயமான அறிவிக்கை தரவேண்டும். அவர்கள் தங்கள் வாதத்தைச் சொல்லிடப் போதிய வாய்ப்புத் தரவேண்டும். எனவே ஒரு நடுவர் சட்ட சம்பந்தமான முறையில் எப்படி பணியாற்ற வேண்டுமோ அப்படி பணியாற்ற வேண்டும்.

உடன்பாட்டின்படி நடுவர் செயலாற்ற வேண்டும். அதாவது நடுவர் தீர்ப்புமுறை உடன்பாட்டின் அதிகார வரம்பிற்குள் அவர் செயலாற்ற வேண்டும். நியாயமாக வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும். அதாவது முழுமையான—இறுதியான தீர்ப்பை

வழங்க வேண்டியது அவருடைய கடமையாகும். இரு சாரா ருக்கும் நேர்மையாக நடக்க வேண்டும். சட்டபூர்வமான நிலையில் இருந்து ஒரு நடுவர் பணியாற்றுவதால் வழக்கு முழுவ தற்கும் இரு சாராருக்கும் பாரபட்சம் இல்லாமல் நியாயமான முறையில் அவர் செயலாற்ற வேண்டும். லஞ்சம் போன்றவை களைப் பெற்றுக்கொண்டு தவறாக நடக்கக்கூடாது. வழக்கு நடைமுறைகளைத் தவறாக நடத்திடவும் கூடாது. அவருக் கென்று தனி அக்கறை இருந்தால் அதை தெரிவிக்க வேண்டும். ஒரு நடுவராகப் பணியாற்றுவதை ஏற்பதற்கு முன்னர் வழக்கு விஷயத்திலோ நபர்கள் விஷயத்திலோ அவருக்குத் தனி அக்கறை இருந்தால் அவர் மற்ற நபர்களிடம் தெரிவித்திட வேண்டும். ஒரு குறிப்பிட்ட நபரின் வழக்கறிஞராகவோ முகவராகவோ அவர் பணியாற்ற முடியாது. ஒரு நீதிபதியைப்போல் பாரபட்சம் இல்லாமல் அவர் நடந்திட வேண்டும். ஒரு நடுவர் தன்னுடைய அதிகாரத்தை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்து தரமுடியாது. எனவே அவரே அந்தப் பணிகளை நேரிடையாகச் செய்து முடிக்கவேண்டும். ஒரு நடுவர் வழக்குச் சம்பந்தப்பட்ட சர்ச்சை களை நன்றாக ஆராய்ந்து ஓர் இறுதியான தீர்ப்பை வழங்க வேண்டும். தீர்ப்பு அளிப்பதில் அவருக்குத் தனி அதிகாரம் தரப்பட வேண்டும். ஒரு நடுவர் தன் அதிகார எல்லைக்குமேல் செயலாற்றக்கூடாது. உடன்பாட்டின் விதிகளுக்குட்பட்டுத்தான் செயலாற்ற வேண்டும். அவ்வாறு இல்லாமல் தம் அதிகாரத்தை மீறியும் தம்முடைய அதிகார எல்லைக்கு அப்பாலும் நீதி வழங்கி னால் அந்தத் தீர்ப்புத் தள்ளுபடியாகிவிடும். உதாரணமாக ஒரு நடுவர் ஒரு நிலத்தின் அளவைத் தீர்மானிக்கவோ அதன் எல்லையை வரையறுக்கவோ நியமனம் செய்யப்பட்டால் அவர் அது குறித்துத்தான் தீர்ப்பு வழங்கவேண்டும். மாறாக அந்த நிலம் யாருக்குச் சொந்தம் என்று தீர்மானம் செய்ய முற்பட்டால் அவர் அதிகார எல்லையை மீறுவதாகும். இறுதியாக அவர் ஒரு குறிப் பிட்ட காலத்திற்குள் தீர்ப்பை வழங்கிட வேண்டும். அதாவது ஒரு வழக்கு, கொடுக்கப்பட்ட நான்கு மாதங்களுக்குள் தீர்ப்பை வழங்கிட வேண்டும். ஆனால் ஒரு நடுநிலையாளர் இரண்டு மாதங்களுக்குள் தீர்ப்பை வழங்கிட வேண்டும்.

தீர்ப்பளித்தல் (Award)

ஒரு நடுவரின் முடிவு அல்லது தீர்ப்பு என்பதுதான் தீர்ப் பளித்தல் ஆகும். ஒரு நடுவர் வழக்கு விவகாரத்தைப் பற்றி முடிவு அல்லது கண்டறிந்த உண்மையைக் கூறும் அறிக்கைதான்

தீர்ப்பளித்தல் ஆகும். தீர்ப்பளித்தல் எழுத்துமூலம் இருக்க வேண்டும். அதில் எல்லா நடுவர்களும் ஒருவருக்கொருவர் முன்னிலையில் கையெழுத்திட வேண்டும். அதன் பொருள் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும்; தெளிவில்லாமலும் நிச்சயமற்றதாகவும் இருக்கக்கூடாது. நடுவர் தீர்ப்புமுறை உடன்பாட்டில் தரப்பட்டுள்ள அதிகாரத்தை மீறமுடியாத வகையில் சட்டபூர்வமாக இருக்க வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள எல்லா விஷயங்கள்பற்றியும் ஆராய்ந்து ஓர் இறுதி முடிவு தரவேண்டும்.

தீர்ப்பளித்தலின் சட்ட விளைவு

தீர்ப்பளித்தல் என்பது ஒரு முடிவாக இருப்பதால் அல்லது ஒரு நீதிமன்றத் தீர்ப்புப்போல் இருப்பதால் வழக்குச் சம்பந்தப்பட்ட நபர்களை அது கட்டுப்படுத்தும். தீர்ப்பளித்தவுடனே நடுவரின் அதிகாரம் முடிவடைகிறது. இத் தீர்ப்பளித்தல் மீது முறையீடு செய்வதை நீதிமன்றம் விரும்புவதில்லை. மேலும், இவ்வாறு நடுவர் கொடுத்த தீர்ப்பினை மறுபடியும் விசாரிக்கும் வழக்கை நீதிமன்றம் ஏற்பதில்லை. நடுவர் தம் முடிவை ஒரு நாளில் தந்து விட்டு வேறு ஒரு நாளில் கையெழுத்திட்டால் அந்தத் தீர்ப்பளித்த தேதியிலிருந்துதான் அமலுக்கு வரும். அவர் கையெழுத்திட்ட நாளிலிருந்து வராது. இத்தகைய தீர்ப்பளிப்பு இறந்த நபரின் வாரிசுதாரரைக் கட்டுப்படுத்தும்.

திருத்தம்

தீர்ப்பளித்தலை ஒரு நடுவரோ நீதிமன்றமோ திருத்தம் செய்யலாம். ஏற்கெனவே கூறியபடி நடுவர் தீர்ப்பை வழங்கிவிட்ட பின்னர் அவர் அதிகாரம் முடிவடைகிறது. எனவே தீர்ப்பளித்தலிலுள்ள தவறுகளைத் திருத்துவதற்கு அவருக்கு அதிகாரமில்லை. ஆனால் கீழ்க்காணும் இரு நிலைகளில் அதைத் திருத்தும் அதிகாரம் அவருக்குண்டு :

1. தீர்ப்பளித்தலில் எழுத்தர் ஏதாவது தவறு செய்திருந்தால் அதைத் திருத்தும் அதிகாரத்தைச் சட்டத்தின் பிரிவு 13 அவருக்கு வழங்குகிறது.

2. மறுபரிசீலனைக்குத் தீர்ப்பளித்தல் அவரிடம் திரும்ப வரும்பொழுது சட்டத்தின் 16ஆவது பிரிவின்படி அவர் அதைத் திருத்திடலாம்.

நீதிமன்றம் கீழ்க்காணும் நிலைகளில் அவைகளைத் திருத்திடலாம். முதலாவதாக வழக்குத் தொடர்பில்லாத விஷயங்கள்

தீர்ப்பளித்தலில் சேர்ந்து இருந்தால் அதைத் தீர்ப்பளித்தலின் பொருள் மாறாத வகையில் வெளியே எடுத்துவிட்டுத் தீர்ப்பினை மாற்றிடலாம். உதாரணமாக, ஒரு வழக்கின் சர்ச்சை வீட்டைப் பொறுத்து இருந்தால் வழக்கு வீட்டையும் நிலத்தையும் சார்ந்ததாக இருந்தால் நிலம் வழக்குக்குரிய விஷயத்தைச் சார்ந்தது அல்ல. அதுபோன்ற வழக்கில் தேவை இல்லாத பகுதியை மட்டும் நீக்கிவிட்டு மற்றப் பகுதிக்குத் தீர்ப்பு வழங்கி மாற்றம் செய்திடலாம். எனவே, ஒரு நடுவரின் தீர்ப்பு உடன்பாட்டில் கூறியுள்ள விஷயத்தைப்பற்றித்தான் இருக்கவேண்டும். அடுத்து, தீர்ப்புச் சரியான அமைப்பில் இல்லாமல் இருந்தாலும்எளிதாகத் திருத்தக்கூடிய பிழைகள் இருந்தாலும் அதை நீதிமன்றம் திருத்திடலாம். உதாரணமாக வழக்கின் முடிவு 'A' என்பவருக்குச் சாதகமாக இருக்கும்பொழுது தவறாக 'B' என்று எழுதிவிட்டால் நீதிமன்றம் இதைத் திருத்திடலாம். காரணம் இது வெளிப்படையாகத் தெரியும் பிழையாகும்.

இறுதியாக எழுத்தர் செய்யும் தவறு தீர்ப்பில் காணப்பட்டாலும் வழக்கமாகத் தோன்றும் எதிர்பாராத பிழைகள் இருந்தாலும் அதை நீதிமன்றம் திருத்திடலாம். உதாரணமாக கணக்குச் சம்பந்தப்பட்ட பிழைகளை நீதிமன்றமே திருத்திடலாம்.

மறுபரிசீலனை

மேற்கூறிய விதத்தில் நீதிமன்றம் பிழைகளைத் திருத்த முடியாத நிலையில் ஒரு தீர்ப்புக் காணப்பட்டால் நடுவருக்கே பரிசீலனை செய்யத் திருப்பி அனுப்பப்படுகிறது. கீழ்க்காணும் நிலைகளில் நடுவரின் மறு பரிசீலனைக்கு வழக்கு அவருக்கே திரும்ப அனுப்பப்படுகிறது. அவருடைய முடிவு தேவைப்படும் எல்லா வழக்குகளிலும் அவர் தீர்ப்பு வழங்குவது அவரின் கடமையாகும். எல்லா வழக்குகளிலும் அவர் தீர்மானம் செய்ய முடியாமல் சில வழக்குகளுக்குத் தீர்ப்பு அளிக்கவில்லையென்றால் அவர் கடமையிலிருந்து தவறியவர் ஆகிறார். அந்நிலையில் நீதிமன்றம் தீர்ப்பினை அவருக்கே திருப்பி அனுப்பி அவருடைய முடிவைக் கோருகிறது.

நடுவர் தன்னிடம் வந்த வழக்குகளின் சர்ச்சைகளுக்கு மட்டும்தான் தீர்ப்பு வழங்கவேண்டுமேயொழிய தன்னிடம் வராத சர்ச்சைகளுக்குத் தீர்ப்பு வழங்கக்கூடாது. அவர் அவ்வாறு வழங்கிவிட்டால் அந்தப் பகுதியை மட்டும் நீதிமன்றம் திருத்தம் செய்திடலாம் என்று முன்பு கண்டோம். அத்தகைய சர்ச்சை அவ்வாறு தனியாகப் பிரிக்கப்படமுடியாத நிலையில் இருந்தால்

தீர்ப்பை அவருக்கே திருப்பி அனுப்பி மறுபரிசீலனை செய்யக் கோரலாம்.

தீர்ப்பு உறுதியாகவும் சரியாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அம் முடிவை மறுபரிசீலனை செய்ய நடுவருக்கே நீதிமன்றம் திருப்பி அனுப்பிடும்.

தீர்ப்பில் சட்ட சம்பந்தமான தவறுகள் இருந்தால் அதையும் மறுபரிசீலனைக்காக நீதிமன்றம் அனுப்பிடும். ஆனால் தவறான முடிவின் அடிப்படையில் அவைகள் அனுப்பப்படமாட்டா.

இவ்வாறு மறுபரிசீலனை செய்ய ஒரு குறிப்பிட்ட காலத்தை நீதிமன்றம் நிர்ணயிக்கும். அதற்குள் நடுவர் மறுபரிசீலனை செய்து வழக்கின் முடிவை நீதிமன்றத்திற்கு அனுப்பிடவேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் அவர் முடிவை அனுப்பத் தவறினால் வழக்கின் தீர்ப்புச் செல்லுபடியாகாது.

தீர்ப்பை ரத்துச் செய்தல்

வழக்கின் முடிவுபற்றித் திருப்தி ஏற்படாத நபர்கள் அதை இரத்துச் செய்யக்கோரி நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம். நடுவர் தகுந்த முறையில் நியமனம் செய்யப்படாதபோதும், அவர் தவறான நடத்தையுடையவராக இருந்தபோதும், தவறான நடவடிக்கை விதிமுறைகளைப் பின்பற்றியபோதும், நடுவர் தீர்ப்பைச் செல்லத்தகாத நிலையில் வழங்கியபோதும், தீர்ப்புச் சரியில்லாத முறையில் பெறப்பட்டபோதும், அதை நீதிமன்றம் ரத்துச் செய்யலாம்.

தகுதியான முறையில் நியமனம் செய்யப்படாத ஒருவரால் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையிலும், ஒருவரின் நியமனம் செல்லத் தகாததாக இருந்தபோதிலும், அவர் வழங்கியத் தீர்ப்புச் செல்லாமல் போய் ரத்துச் செய்யப்படுகிறது. அடுத்து நடுவர் தவறான முறையில் நடந்துகொண்டாலும் அவர் வழங்கிய தீர்ப்பு ரத்துச் செய்யப்படுகிறது. அதாவது லஞ்சம், மோசடி, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், பாரபட்சம் காட்டுதல் போன்றவைகள் தவறான நடவடிக்கைகளாகும். நடுவர் தீர்ப்பு உடன்பாட்டிலும் சட்டங்களிலும் சொல்லியுள்ள விதிமுறைகளையும் அவர் பின்பற்ற வில்லையென்றால் அவர் சரியாக நடக்கவில்லை என்று பொருள். அத்தகைய நிலையில் அவர் வழங்கிய தீர்ப்பு ரத்துச் செய்யப்படுகிறது.

ஒரு நடுவர் சாதாரணமாகக் கடைப்பிடிக்க வேண்டிய இயல்பான நீதியின் விதிமுறைகளைக் கையாளத் தவறினால் அது சட்ட சம்பந்தமான தவறான நடத்தையாகும். ஒரு சாட்சியினை விசாரிக்க அவர் மறுத்தால் தவறான நடவடிக்கை விதிமுறைகளை அவர் கையாளுகிறார் என்று பொருள். இதேபோல் ஒருவர் இல்லாதபோது மற்றொருவரை விசாரிப்பதும், எதிர்த்தரப்பு நபர்களை வைத்துக்கொள்ளாமல் சாட்சியாளர்களை விசாரிப்பதும் சட்டமுறையான விதிமுறையிலிருந்து விலகுவதாகும். வழக்குத் தொடுத்த நபர்களுக்குத் தெரியாமல் வெளி நபர்களிடமிருந்து விவரங்களைச் சேகரித்தல், கறுப்புச் சந்தை விலையில் நட்டஈட்டை நிர்ணயம் செய்தல், சாட்சியாளர்கள் வந்தபொழுது விசாரிக்கத் தவறுதல் போன்றவைகள் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளாகும். அப்பொழுது தீர்ப்பு ரத்துச் செய்யப்படலாம்.

சட்டத்தின் 19ஆவது பிரிவின்கீழ் ஒரு நடுவர் தீர்ப்புமுறையின் நடவடிக்கை விதிமுறைகளை ரத்துச் செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு. அவ்வாறு ரத்துச் செய்துவிட்டால் நடுவருக்குத் தீர்ப்புக் கூறும் அதிகாரம் இல்லை. நீதிமன்றம் நடுவர் தீர்ப்புமுறையை ரத்துச் செய்தபின்னர் கூறப்பட்ட வழக்கின் தீர்ப்பு ரத்துச் செய்யப்படலாம்.

நடுவர் தீர்ப்புமுறையின் எல்லா நடவடிக்கைகளும் நீதிமன்றத்தால் நிறுத்திவைக்கப்பட்ட போதும் அல்லது வழக்குச் சம்பந்தமாக நீதிமன்றத்தால் சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுத்தபோதும் வழங்கப்பட்ட தீர்ப்புச் செல்லுபடியாகாது. ஆனால், இதுபற்றி ஓர் அறிக்கை நடுவருக்குக் கொடுக்கப்பட்டால் தீர்ப்பு ரத்துச் செய்யப்பட மாட்டாது.

ஒரு தீர்ப்பு முறையான முறையில் பெறப்படவில்லை யென்றால் அதாவது மோசடி வலுக்கட்டாயத்தின் மூலம் பெறப்பட்டால் அது ரத்துச் செய்யப்படும்.

ஒரு தீர்ப்பை ரத்துச்செய்ய வேண்டுமென்றால் ஒருவர் தீர்ப்பு வழங்கிய முப்பது நாள்களுக்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பம் செய்யப்படவில்லையென்றால் மேற்கூறிய எந்த அடிப்படையிலும் ஒரு தீர்ப்பை ரத்துச் செய்யமுடியாது.

வழக்கு முடிவடையாத நிலையின்போது நீதிமன்றத் தலையீட்டின் மூலம் நடுவர் தீர்ப்புமுறை

இதுகாறும் நடுவர் தீர்ப்பு வழங்கும் மூன்று முறைகளில் முதல் முறையான நீதிமன்றத்தின் தலையீடு இல்லாமல் நடுவர் தீர்ப்பு முறை என்பதுபற்றிப் பார்த்தோம். அடுத்து நீதிமன்றத் தலையீட்டுடன் நடுவர் தீர்ப்புமுறை என்ன என்பதைப் பார்ப்போம். வழக்காடுபவர்களுக்கு நீதிமன்றத்தின் குறுக்கீடு அல்லது நீதிமன்றத்தின் குறுக்கீடு இல்லாதபோதும், உடன்பாட்டின்படி நடுவர் தீர்ப்புக்கு விடக்கூடிய ஒரு விருப்பம் நபர்களுக்குத் தரப்பட்டுள்ளது. நடுவர்தீர்ப்பு உடன்பாடு நபர்களிடையே ஏற்கெனவே ஏற்பட்ட பொழுதிலும் அதை நடுவருக்கு எடுத்துச் செல்லாத நிலையில் உடன்பாட்டைத் தாக்கல் செய்யக் கோரி நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம். சட்டத்தின் 20ஆவது பிரிவின்கீழ் நீதிமன்ற மேற்பார்வையுடன் நடுவர்தீர்ப்பு முறையின் நடவடிக்கை விதிமுறைகள் தொடங்கிடலாம். இப் பிரிவின் விதிமுறைகள் பின்வருமாறு :

1. நடுவர் தீர்ப்பு உடன்பாட்டின் நபர்களில் யாராவது ஒருவர் நடுவருக்கு வழக்கை எடுத்துச் செல்வதற்கு முன்னர் அவ்வுடன்பாட்டைத் தாக்கல்செய்யக் கோரி நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

2. மேற்கூறிய விண்ணப்பம் எழுத்து மூலம் இருக்க வேண்டும்.

3. விண்ணப்பத்தைப் பெற்ற பிறகு ஏனனய நபர்களுக்கு ஏன் உடன்பாடு தகுந்த நேரத்தில் தாக்கல் செய்யவில்லை என்று காரணம் காட்டுமாறு நீதிமன்றம் ஓர் அறிவிக்கை அனுப்பும்.

4. தகுந்த காரணம் காட்டாவிடில் உடன்பாடு தாக்கல் செய்வதற்கும், நடுவருக்கு எடுத்துச் செல்வதற்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும். நபர்கள் நடுவரை ஏற்காவிட்டால் நீதிமன்றமே நடுவரை நியமனம் செய்யும்.

5. நீதிமன்றத் தலையீடு இல்லாமல் உள்ள நடுவர்தீர்ப்பு முறையில் உள்ள விதிகளும் நடைமுறைகளும் இதற்கும் பொருந்தும். அதனால் ஒருவர் உடன்பாட்டை நீதிமன்றம் ஏற்றிடும் நிலையை ஆரம்பத்திலேயே பெற்றிடுவார். நடுவர்

தீர்ப்புமுறைக்கு ஓர் உடன்பாட்டை எடுத்துச் செல்வதற்கு முன்னர் அதிலுள்ள மறுப்புகளைச் சரிசெய்து கொள்ள வேண்டும்.

வழக்கு முடிவு பெறாதபொழுது நடுவர் தீர்ப்புமுறை

சில சமயங்களில் நிறைவு பெறாமல் நீதிமன்றத்திலிருக்கும் வழக்கினை நடுவர் தீர்ப்புமுறையில் தீர்த்துக்கொள்ள நபர்கள் விழைவதுண்டு. அந் நிலையில் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னர் நபர்கள் அது நடுவர் தீர்ப்புமுறைக்கு எடுத்துச்செல்ல வேண்டி விண்ணப்பம் செய்வர். அவ் விண்ணப்பம் எழுத்து மூலம் இருக்க வேண்டும். விண்ணப்பத்தை ஆய்ந்து நீதிமன்றம் நடுவரை நியமிக்கும். நடுவர் நியமனம் ஏற்பட்ட பின்னர் நீதிமன்றம் வழக்கினை விசாரித்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்ப்பினை வழங்க வேண்டுமென்று நடுவரை வேண்டிடும். இவ்வாறு ஒரு விஷயம் நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் சென்ற பின்னர் சட்டத்தில் சொல்லியுள்ள விலக்கு முறைகளைத் தவிர சாதாரணமாக நீதிமன்றம் அதில் தலையிடாது.

22. தொழிற்சங்கச் சட்டம் (1926)

இலக்கணம்

தொழிற்சங்கச் சட்டத்தின் இலக்கணம் கீழ்க்காணும் சொற் றொடர்களில் அடங்கியுள்ளது : (1) உரிய அரசு (Appropriate Government) (2) தொழிற் சர்ச்சை (Trade Dispute) (3) தொழிற் சங்கம் (Trade Union) (4) பதிவாளர் (Registrar).

உரிய அரசு

தொழிற்சங்கத்தின் நோக்கம் ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்குள் அடங்காமல் இருந்தால் மத்திய அரசாங்கம் உரிய அரசாகும். மாறாக அதன் நோக்கம் ஒரு மாநிலத்திற்குள்ளேயே அடங்கி விட்டால் மாநில அரசு உரிய அரசாகும்.

தொழிற் சர்ச்சை

தொழிற் சர்ச்சை என்பது முதலாளிக்கும் (பணியாண்மையருக் கும்) தொழிலாளிக்குமிடையே அல்லது தொழிலாளிக்கும் தொழி லாளிக்குமிடையே அல்லது முதலாளிக்கும் இதர அலுவலாளர் களுக்குமிடையே ஏற்படும் சர்ச்சையாகும். அத்தகைய சர்ச்சை வேலை வாய்ப்பு, வேலைவாய்ப்பில்லாத துறை, வேலை வாய்ப்பு நிபந்தனைகள், தொழில் நிலைமை போன்றவை களைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

தொழிற் சங்கம்

தொழிற்சங்கம் என்பது நிரந்தரமாகவோ தற்காலிக மாகவோ தொழிலாளர்களிடையே ஏற்படுவது. அதன் முக்கிய நோக்கம் தொழிலாளர்கள்-முதலாளிகளிடையே அல்லது தொழி லாளர்-தொழிலாளர்களிடையே ஏற்படும் உறவுகளை ஒழுங்கு படுத்துவது. வியாபாரம் அல்லது வாணிகம் நடக்கும்பொழுது சில நிபந்தனைகளை விதிப்பது. தொழிற்சங்கம் என்ற சொற்றொடர் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தொழிற்சங்கத்தின் ஒன்றியம் அல்லது கூட்டமைப்பையும் குறிக்கும். தொழிற்சங்கச் சட்டத்தின்படி கூட்டாளிகளின் சொந்த வியாபாரங்களுக்காக அவர்களிடையே ஏற்படும் ஓர் உடன்பாடு, முதலாளிக்கும் அலுவ

லாளர்களுக்குமிடையே ஏற்படும் உடன்பாடு ஒரு வாணிபத்தின் நன்மதிப்பைப் பெற்றிட பெறும். மறுபயன் அல்லது ஏதாவது தொழில், உத்தியோகம், கைத்தொழில் பெறுவதற்குப் பெறும் மறுபயன் பற்றிய உடன்பாடு ஆகியவைகள் அடங்காது.

பதிவாளர்

ஒரு மாநிலத்திற்கு ஒரு பதிவாளர் வீதம் உரிய அரசால் நியமிக்கப்படுகின்றனர். மேலும் துணைப் பதிவாளர், கூடுதல் பதிவாளர் போன்றவர்களை அமர்த்திட உரிய அரசுக்கு அதிகாரம் உண்டு.

தொழிற்சங்கப் பதிவு [பிரிவு (4)]

ஏதாவது ஏழு அல்லது அதிகமான நபர்கள் தொழிற் சங்கத்தில் விதிமுறைக்குட்பட்டுத் தங்கள் பெயரைக் கொடுத்துச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுப் பதிவாளருக்குப் பதிவுகோரி விண்ணப்பம் செய்ய வேண்டும். அதன் பிறகு விண்ணப்பம் செய்தவர்களில் பாதி நபர்கள் தங்கள் பெயர்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டாலும் அல்லது தொழிற்சங்க உறுப்பினர்கள் நிலையிலிருந்து விலகினாலும் தொழிற்சங்கம் அமைத்திடப் போடப்பட்டுள்ள விண்ணப்பம் மதிக்கப்பட்டுத் தொழிற்சங்கம் பதிவாகிறது. ஆனால், விருப்பமில்லாத நபர்கள் பதிவாளருக்கு ஓர் அறிவிக்கை கொடுக்க வேண்டும்.

தொழிற்சங்கப் பதிவு விண்ணப்பம் [பிரிவு (5)]

இத்தகைய விண்ணப்பம் குறைந்தளவு 7 பேரால் பதிவாளருக்கு விண்ணப்பிக்கப்பட வேண்டும். தொழிற்சங்க விதிமுறைகளின் ஒரு படிவம் இத்துடன் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் செய்யும் நபர்களின் பெயர்கள், தொழில், முகவரி, தொழிற்சங்கத்தின் பெயர், பதிவு அலுவலகத்தின் முகவரி, தொழிற்சங்கப் பணியாளர்களின் தகுதி, பெயர்கள், வயது, முகவரி, தொழில் போன்றவைகளையும் விண்ணப்பத்தில் எழுத வேண்டும். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்டுகளாக ஏற்கெனவே தொழிற்சங்கம் இயங்கிக் கொண்டிருந்தால் அதனுடைய சொத்துகள் பொறுப்புகளடங்கிய அறிக்கை ஒன்றும் அனுப்பப்படவேண்டும். பதிவாளர் விரும்பினால் மேலும் சில விவரங்களைப் பதிவு செய்வதற்கு முன்னர் கோரலாம். அவர் கோரிய விவரங்கள் கொடுக்கப்படவில்லையென்றால் தொழிற் சங்கம் பதிவு செய்வதை மறுத்திடலாம். தொழிற்சங்கத்தின்

பெயர் ஏற்கெனவே உள்ள தொழிற்சங்கத்தின் பெயராக இருந்த பொழுதும் அல்லது ஒரு வெளியாளைக் குறிப்பதாக இருந் தாலும், பதிவாளரைத் தவறாக நினைக்கச் செய்தாலும் தொழிற் சங்கத்தின் பெயரை மாற்றிட விண்ணப்பம் செய்தவர் களை வேறுபெயர் தந்திடக் கேட்டுக்கொள்ளலாம். தொழிற் சங்கத்தின் சட்ட அமைப்பை மாற்றிடப் பதிவாளர் மறுத்திட லாம். தொழிற்சங்கச் சட்டத்தின்படி ஒரு நிர்வாகக்குழு அமைக் காதபோதும் விதிமுறைகள் எழுதாதபோதும் தொழிற்சங்கம் பதிவு செய்வதைப் பதிவாளர் மறுத்திடுவார். ஒரு தொழிற்சங்கத்தின் சட்ட அமைப்பும் விதிகளும் கீழ்க்காண்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும் :

1. தொழிற் சங்கத்தின் பெயர்
2. தொழிற் சங்கத்தின் முகவரி
3. உறுப்பினர்களின் சேர்க்கைபற்றிய விதிகள்
4. கௌரவ உறுப்பினர்கள் - தற்காலிக உறுப்பினர்கள் சேர்க்கை பற்றிய விதிகள்.
5. தொழிற்சங்கப் பணியாளர்கள் தேர்தல்பற்றிய விதிகள்
6. தொழிற்சங்கம் அமைக்கப்பட்ட நோக்கம்
7. தொழிற்சங்க நிதிகள் பயன்படுத்தும் நோக்கம்
8. தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் பெயர்களடங்கிய ஒரு பட்டியல் வைத்தல். அதை உறுப்பினர்களும் நிர்வாகக் குழுவினர்களும் மேற்பார்வை செய்திட வசதி ஏற்படுத்துதல்
9. ஒவ்வொரு மாதமும் உறுப்பினர் தொகை 25 காசு களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
10. தொழிற்சங்கத்தின் விதிகளைத் திருத்தி அமைக்கும் முறை.
11. தொழிற்சங்க விதிப்படி உறுப்பினர் பயன் பெறுவதற் கான நிபந்தனைகள்.

12. அபராதம், ஒறுப்பிழப்பு போன்றவைகளை விதித்திட நிபந்தனைகள்.

13. தொழிற்சங்கப் பணியாளரை நீக்குதல் தொடர்பான விதிகள்.

14. தொழிற்சங்க விதிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய விதிகள்.

15. ஆண்டுக் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர் பான விதிகள்.

16. தொழிற்சங்கக் கணக்குகளை மேற்பார்வையிடுவதற் கான விதிகள்.

17. தொழிற்சங்கக் கலைப்பு முறை.

பதிவு

பதிவு கோரிய விண்ணப்பம் சரியாக இருக்கிறதெனவும், தொழிற் சங்கச் சட்டத்தின் தேவைகளனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டது எனவும் பதிவாளர் திருப்தி அடைந்தால் தொழிற்சங்கத்தைப் பதிவு செய்து ஒரு சான்றிதழ் வழங்கிடுவார்.

தொழிற் சங்கப் பதிவை ரத்து செய்தல்

கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் பதிவாளர் தொழிற்சங்கப் பதிவினைத் திரும்பப் பெற்றிடலாம், அல்லது ரத்து செய்திடலாம். அதாவது தொழிற்சங்கமே ரத்து செய்யக் கோரி விண்ணப்பம் செய்தாலும், மோசடி அல்லது தவறான விதத்தில் பதிவுச் சான்று பெற்றிருப்பதாகப் பதிவாளர் கருதினாலும், தொழிற்சங்கம் செயலாற்றாமல் இருந்தாலும், தொழிற்சங்கம் வேண்டுமென்றே சட்டத்தின் விதிகளைப் புறக்கணித்தாலும், சட்டத்திற்குப் புறம் பான விதிகள் தொடர்வதை அனுமதித்தாலும், சட்டத்தின் விதி களை மாற்றிடப் பதிவாளருக்குத் தரவேண்டிய அறிவிக்கை கொடுக்காமல் அவ்விதிகளை ரத்து செய்தாலும் பதிவாளர் தொழிற் சங்கப் பதிவை ரத்து செய்திடலாம்.

மேல் முறையீடு (Appeal)

ஒரு தொழிற்சங்கத்தைப் பதிவு செய்திட பதிவாளர் மறுத்த போதும், பதிவுச் சான்றைத் திரும்பப் பெற்ற போதும், அல்லது ரத்து செய்த போதும் ஒரு குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் பாதிக்கப்பட்ட தொழிற்சங்க உறுப்பினர்கள் மேல் முறையீடு செய்யலாம். தொழிற்சங்கத்தின் தலைமையகம் மாநிலத் தலை நகரில் இருந்தால் உயர்நீதி மன்றத்திற்கும் அல்லது வேறு இடங்

களிலிருந்தால் உதவி அல்லது கூடுதல் நடுவர் நீதிமன்றத்திற்கும் மேல் முறையீடு செய்ய வேண்டும்.

உறுப்பினர் தகுதி

15 வயது நிரம்பிய ஒருவர் ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு உறுப்பினராகலாம். ஓர் உறுப்பினருடைய எல்லா உரிமைகளையும் அனுபவிக்க அவருக்கு உரிமையுண்டு.

தொழிற்சங்கத்தில் பதவி வகிப்போரின் தகுதியின்மை

ஒருவர் 18 வயது நிரம்பாத போதும், ஒழுக்கக் குறைவிற் காகச் சிறைத் தண்டனை பெற்றபோதும், அத்தண்டனையிலி ருந்து விடுதலையாகி ஐந்தாண்டுகள் நிறைவேறாதபோதும், தொழிற் சங்கத்தின் நிர்வாகக் குழுவிலோ வேறு பதவியிலோ பதவி வகிக்க முடியாது. தொழிற்சங்க உறுப்பினர்களில் 50 சதவிகிதத்திற்குக் குறையாமல் தொழிற்சங்கம் சார்ந்துள்ள தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும் அல்லது வேலையில் இருக்க வேண்டும். என்றாலும் இந்த விதிகளிலிருந்து அரசு உரிய விதி விலக்குத் தந்திடலாம்.

பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் பெயர் மாற்றம் (பிரிவு 23, 25, 26)

ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் பெயரை மொத்த உறுப்பினர்களில் 2/3 பங்கு உறுப்பினர்கள் நிறைவேற்றும் தீர்மானத்தால் மாற்றிடலாம். இப்பெயர் மாற்றம் சம்பந்தமான எழுத்துமூலமுள்ள ஓர் அறிவிக்கை செயலாளர் மற்றும் ஏழு உறுப்பினர்களால் பதிவாளருக்குக் கொடுக்கப்படவேண்டும். சொல்லப்பட்டுள்ள பெயர் ஏற்கெனவே உள்ள பெயர்போல இல்லாவிட்டாலும் சட்ட விதிமுறைகளை நிறைவேற்றியிருந் தாலும் பதிவாளர் பெயர் மாற்றம் செய்திடுவார். இத்தகைய பெயர் மாற்றம் சங்கத்தின் உரிமைகளையும் கடமைகளையும் பாதிப்பதில்லை.

பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் தனி உரிமைகள்

(i) தண்டனையிலிருந்து விலக்கு : இந்தியக் குற்றச் சார்புச் சட்டத்தின் பிரிவு 120-ன்படி குற்றச் சார்புச் சதித் திட்டங் களுக்கு உள்ள தண்டனை ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்திற்கு இல்லை. அதன் உறுப்பினருக்கும் அலுவலாளர் களுக்கும் இந்தியக் குற்றப்பிரிவுச் சட்டத்தின் பிரிவு 120 (2) இல்

உள்ள தண்டனை இல்லை. ஆனால் அவர்கள் பிரிவு 17-ல் குறிப்பிட்டுள்ள குற்றப்பிரிவுச் சதியைச் செய்யாமல் தொழிற்சங்கத்தின் நோக்கங்களை விரிவுபடுத்துவதாக இருக்கவேண்டும்.

(ii) உரிமையியல் (civil) வழக்கிலிருந்து விலக்கு (பிரிவு 18) : உரிமையியல் நீதிமன்றங்களில் ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்தின்மீது வழக்குத் தொடுக்க முடியாது. தொழிற்சங்க உறுப்பினர்களின் வேலை ஒப்பந்தங்களை முறித்திடல், வியாபாரத்தில் தலையிடல், உறுப்பினர்களைத் தூண்டிவிடல் போன்றவைபற்றி வழக்குத் தொடுக்க இயலாது. அதேபோல் எந்த உரிமையியல் வழக்கிலும் ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்திற்குப் பொறுப்பு இல்லை. ஆனால் தொழிற்சங்கத்தின் முகவர் தெரியாமலும் தொழிற்சங்க நிர்வாகி கொடுத்துள்ள செய்முறைகளை மீறினாலும் தண்டனை உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தாது.

உடன்பாடு வலியுறுத்தல்

ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்க உறுப்பினரிடையே ஏற்படும் உடன்பாடு செல்லத்தகாதது அல்ல. வியாபாரத் தடை உடன்பாடு என்ற காரணத்தைக் காட்டி அதைச் செல்லத் தகாதது என்று வலியுறுத்த முடியாது. அதாவது உறுப்பினர் களிடையே ஏற்படும் உடன்பாடு செல்லத்தக்கதாகும்.

சட்டபூர்வமான தோற்றம்

ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கமும் எந்தப் பெயரில் பதிவு செய்யப்பட்டதோ அந்தப் பெயரில் உள்ள ஒரு நிறுமமாகும். தொடர்ந்து செயலாற்றும் தன்மையும் அசையும், அசையாச் சொத்துகளை வாங்கி விற்றிடும் அதிகாரமும் கொண்ட பொது முத்திரை இதற்குண்டு. அதன் பெயரால் அது வழக்கு தொடுக்கலாம் அல்லது தொடுக்கப்படலாம்.

அரசியல் காரணங்களுக்காகத் தனி நிதி

ஒரு தொழிற்சங்கம் தன் உறுப்பினரிடமிருந்து பெற்ற பணத் திலிருந்து அவர்களின் உரிமையியல், அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் நலனைக் காக்கவும் தனி நிதி ஒதுக் கிடலாம். உதாரணமாகத் தேர்தலுக்காகும் செலவுகள், சட்ட சபையில் உள்ள உறுப்பினர்களின் பராமரிப்புச் செலவுகள் போன்றவையாகும்.

கணக்கு ஏடுகளை மேற்பார்வையிடுதல் (பிரிவு 20)

ஒரு தொழிற்சங்கத்தின் விதிமுறைகளில் சொல்லியபடி அதில் பதவி வகிப்போர்களும் உறுப்பினர்களும் அதனுடைய கணக்கு ஏடுகளை மேற்பார்வை செய்திடலாம்.

இளவர் உரிமை (பிரிவு 21)

15 வயது நிரம்பிய ஒருவர் தொழிற்சங்கத்தின் உறுப்பினராகலாம் என்பதிலிருந்து அவருக்கு உரிய வயதுடையவர்கள் அனுபவிக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

பொதுநிதிகளின் நோக்கம் (பிரிவு 15)

ஒரு தொழிற்சங்கம் ஒரு பொது நிதியை அதன் உறுப்பினர்களின் சந்தாத் தொகைகளிலிருந்து ஒதுக்கி வைத்திடும். அந்நிதி கீழ்க்காணும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது: அதாவது தொழிற்சங்கப் பதவி வகிப்போர்களின் ஊதியத்திற்கும் படிகளுக்கும் செலவழித்தல்; நிர்வாகம் மற்றும் கணக்குத் தணிக்கைச் செலவுகளைச் செய்தல்; உறுப்பினர்கள்மீது போடப்பட்டுள்ள வழக்குசம்பந்தமாகச் செலவழிக்கப்படும் சட்டத்தொடர்பான செலவுகள்; சங்கம் அல்லது உறுப்பினருக்காக ஏற்படும் சர்ச்சைகளைத் தீர்த்திட ஆகும் செலவுகள், தொழிற் சர்ச்சைகளால் ஏற்படும் நட்டத்திற்கு உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் இழப்பீடுகள்; இறப்பு, வயதான காலம், நோய், விபத்து, வேலையின்மை போன்ற காரணங்களால் உறுப்பினர்களுக்கும் அவர்களை நம்பியுள்ளவர்களுக்கும் செலுத்தப்படும் படிகள்; உறுப்பினரின் ஆயுள்மீது எடுக்கப்பட்டுள்ள காப்பீட்டிற்குச் செலுத்தும் சந்தாத் தொகை; நோய், விபத்து, வேலையின்மை இவைகளுக்கெதிராகச் செலுத்தப்படும் கட்டணங்கள்; உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கும் கல்வி, சமுதாய-மதச் சார்பான நன்மைகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகள்; முதலாளி-தொழிலாளி உறவைப் பாதிக்கும் பிரச்சனைகளை ஆய்வதற்காக வெளியிடப்படும் பத்திரிகைகளை வெளியிடுவதற்காகும் செலவுகள்; பொதுவாக உறுப்பினர் நலனுக்காகச் செலவிடப்படும் ஏனைய செலவுகள் (ஆனால் இவைகள் எந்த நிலையிலும் மொத்த வருமானத்தில் 25 சதவிகிதத்திற்குமேல் போகக்கூடாது;) இதன் சார்பாக அரசு வெளியிடும் அறிக்கையில் காணப்படும் செலவுகள் போன்றவையாகும்.

மேற்கூறிய நோக்கங்களைத் தவிர்த்துச் செலவழிக்கப்படும் செலவுகள் சட்டவிரோதமானவை; சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டவை. தொழிற்சங்கம் அவ்வாறு செலவழிக்கும் செலவுகளைத் தடை செய்வதற்குச் சட்டத்தில் வழியுண்டு.

அரசியல் சார்பான நிதியின் சட்ட அமைப்பு

சட்டத்தின் 16ஆவது பிரிவின்படி அரசியல் காரணங்களுக்காக ஒரு தனி நிதியை ஒதுக்கிடலாம். பொது நிதியிலிருந்து இது வேறுபடுகிறது. இதன் கணக்குமுறைகள் தனியாக இருக்க வேண்டும்.

நிபந்தனை

தொழிற்சங்க உறுப்பினர்களிடமிருந்து பொது நிதிக்குச் சந்தாத் தொகையை வசூலிக்கும்போதே அரசியல் நிதிக்கும் உறுப்பினர்களிடமிருந்து பணம் திரட்டப்படுகிறது. ஆனால் இது கட்டாயமில்லை. இந்நிதிக்கு ஓர் உறுப்பினர் பணம் கொடுக்காத காரணத்தினால் மற்ற நன்மைகள் அவருக்கு மறுக்கப்படுவதற்கில்லை. இதற்குப் பணம் கொடுத்த நபர்களைப் போலவே பணம் கொடுக்காத நபர்களும் நடத்தப்படுகின்றனர். தொழிற்சங்கத்தில் சேருவதற்கு இப்பணம் தருவதை ஒரு நிபந்தனையாகக் கொள்ளக் கூடாது.

நோக்கம்

இவ்வாறு உறுப்பினர்களிடமிருந்து திரட்டப்பட்ட பணத்தை உறுப்பினர்களின் சமூக-அரசியல் நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தவேண்டும். மேலும் ஓர் உறுப்பினர் சட்டசபை அல்லது உள்ளாட்சித் தேர்தலில் நின்றால் அவருக்கு ஆகும் செலவுகளை ஏற்றிடலாம். அந்த வேட்பாளர் சார்பாக வெளியிடப்படும் தேர்தல் சம்பந்தமான பிரசுரங்கள் அச்சிடும் செலவையும், கூட்டங்கள் நடத்தற்காகும் செலவையும் அது ஏற்றிடும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பராமரிப்புச் செலவும் இந்நிதியிலிருந்து தரப்படும். வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கும், வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கும் ஆகும் செலவுகளையும் இது தந்திடும். அரசியல் சார்பான கூட்டங்களை நடத்துவதற்கும், தொழிற்சங்க அலுவலர்கள் நடத்தும் கூட்டத்திற்கும் ஆகும் செலவுகளை இது ஏற்றிடும்.

தொழிற்சங்கங்கள் ஒருங்கிணைதல் (பிரிவு 24) (Amalgamation of Trade Unions)

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் கலைப்பு இல்லாமலும் தங்களின் நிதிகள் பிரிக்கப்படாமலும் ஒரே தொழிற்சங்கமாக ஒருங்கிணையலாம். ஆனால் வாக்களிக்கும் தகுதி பெற்ற உறுப்பினர்களில் குறைந்தளவு 50 சதவிகிதமாவது

இதற்கு வாக்களிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஓட்டுகளில் குறைந்தளவு 60 சதவிகிதம் ஒருங்கிணைப்புத் திட்டத்திற்குச் சாதகமாக இருக்க வேண்டும். ஒருங்கிணைப்புபற்றிப் பதிவாளருக்குச் சங்கத்தின் செயலாளரும் ஏழு நபர்களும் தெரிவிக்க வேண்டும். ஏனைய நபர்களும் அறிவிக்கை ஒன்று அனுப்ப வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் தலைமையகம் உள்ள மாநிலங்களில் அந்தந்த மாநிலத் தொழிற் சங்கப் பதிவாளருக்கு ஓர் அறிவிக்கை அனுப்ப வேண்டும். ஒருங்கிணைப்பு சம்பந்தமான விதிகளைப்பற்றிப் பதிவாளருக்குத் திருப்தி ஏற்பட்டால்தான் அவைகள் ஒருங்கிணைப்புத் தகுதிபெற்று, ஒருங்கிணைப்பு ஏற்கப்படுகிறது. ஒருங்கிணைந்த தேதியிலிருந்து அத்தகைய தொழிற்சங்கப் பதிவு ஆரம்பமாகிறது. ஒருங்கிணைப்பு ஒரு தொழிற்சங்கத்தின் உரிமைகளுக்கும் உறுப்பினர் உரிமைகளுக்கும் ஊறு விளைவிக்காமல் இருக்க வேண்டும்.

தொழிற்சங்கக் கலைப்பில் பதிவாளரின் கடமைகள்

ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கம் அதனுடைய உறுப்பினர்களால் கலைக்கப்படும்பொழுது செயலாளர் மற்றும் ஏழு உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கலைப்பு அறிவிக்கை ஒன்று கலைப்பு ஏற்பட்ட பதினான்கு நாள்களுக்குள் பதிவாளருக்குத் தரவேண்டும். கலைப்பு முறைப்படி நடந்ததாகப் பதிவாளர் கருதினால் அதன் கலைப்பைப் பதிவு செய்வார். அந்தப் பதிவுத் தேதியிலிருந்துதான் கலைப்பு அமலுக்கு வரும். அவ்வாறு கலைப்பு பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்ட பின்னர் சங்க நிதிப் பகிர்வுபற்றி யாதொரு நிபந்தனைகளும் இல்லாத நிலையில் பதிவாளரே சங்கநிதியை உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிப்பார்.

23. தொழிலாளர்கள் இழப்பீடு சட்டம் (1923)

(The Workmens' Compensation Act, 1923)

தொழிலாளர்கள் இழப்பீடு சட்டம் 1924ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதி அமலுக்கு வருவதற்கு முன்னர் ஒரு தொழிலாளி வேலை செய்யும்பொழுது காயமடைந்தாலோ இறந்தாலோ முதலாளியினுடைய புறக்கணிப்பால் அவர் அவ்வாறு காயமடைந்தார் அல்லது இறந்தார் என்று நிரூபிக்கப்பட்டால்தான் முதலாளி இழப்பீடு தந்திடுவார். தொழிலாளி பாமரராக இருந்ததாலும், அவருடைய உரிமை என்னவென்று அவருக்குத் தெரியாமல் இருந்ததாலும், நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வசதி இல்லாத ஏழ்மையில் இருந்ததாலும் இழப்பீடு பெருவதில் காலதாமதம் ஆயிற்று. முதலாளி மீது இழப்பீடு கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தாலும் கீழ்க்காணும் அடிப்படையில் முதலாளி இழப்பீடு தராமல் தப்பித்துக் கொள்கிறார்:

1. தொழிலாளி வேலையில் சேரும்பொழுது வேலையைச் சார்ந்துள்ள நட்டவச்சம் அல்லது விபத்தை அறிந்து சேருவதால் வேலை செய்யும்பொழுது ஏற்படும் காயத்திற்கும் சாவிற்கும் முதலாளிகள் பொறுப்பாக மாட்டார்கள்.

2. பல தொழிலாளர்கள் வேலை செய்யும் பொழுது அவர்களுடைய புறக்கணிப்பால் யாராவது ஒருவருக்குக் காயம் அல்லது சாவு ஏற்பட்டாலும் முதலாளி பொறுப்பாக மாட்டார்.

3. மேற்கூறிய காயம் அல்லது சாவிற்குத் தொழிலாளிகளின் புறக்கணிப்பே காரணமாக இருந்தால் வழங்கல் புறக்கணிப்புக் கோட்பாட்டின்படி முதலாளி பொறுப்பாக மாட்டார்.

4. ஒரு தொழிலாளி அவரின் தனிப்பட்ட செயலால் மரணம் அடைந்து விட்டால் அவருக்கும் முதலாளிக்குமுள்ள உறவு முறிந்து விட்டது என முதலாளி வாதிட்டால் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர் இழப்பீடு தர வேண்டிய அவசிய

மில்லை. காரணம் முதலாளிக்கும் இறந்தவர்களின் வாரிசுதாரர் களுக்குமிடையே எவ்வித ஒப்பந்தமும் இல்லை.

மேற்கூறிய காரணங்களால் தொழிலாளர்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை. இது அவர்களுக்குக் கடினமாகத் தான் இருக்கும். முதலாளிகளின் இத்தகைய மறுப்புகளைத் தவிர்த்து இழப்பீடு தருவதற்காக அரசாங்கம் பல சட்டங்களை இயற்றியது. உதாரணமாக 1855ஆம் ஆண்டின் தீவிர விபத்துச் சட்டம் (Fatal Accidents Act, 1855), 1923ஆம் ஆண்டின் தொழிலாளர்கள் இழப்பீடு சட்டம், 1938ஆம் ஆண்டின் முத லாளிகள் பொறுப்புச் சட்டம் போன்றவைகளைச் சொல்லலாம். ஆனால் இங்கு 1923ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீடு சட்டத்தின் முக்கிய சிறப்புக் கூறுகளைப் பற்றிதான் அதிகம் கூறப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி காயமடைந்த தொழி லாளர்கள் கீழ்க்காணும் விதத்தில் இழப்பீடு பெறலாம். அதாவது இழப்பீடு அல்லது நட்டஈடு கோரி முதலாளிமீது சிவில் வழக்கு ஒன்றைத் தொடுக்கலாம். அல்லது 1923ஆம் ஆண்டின் தொழி லாளர்கள் இழப்பீடு சட்டத்தின்கீழ் இழப்பீடு கோரலாம். சட்டத் தின் 3ஆவது பிரிவின்படி முதலாளிமீது ஏற்கெனவே இது சம்பந்த மாகச் சிவில் வழக்குத் தொடுத்திருந்தால் தொழிலாளி இழப்பீடு சட்டத்தின்கீழ் இழப்பீடு கோர முடியாது. இதேபோல் தொழி லாளர் இழப்பீடு சட்டத்தின்கீழ் இழப்பீடு கோரப்பட்டிருந்தால் சிவில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியாது. இது சம்பந்தமாகத் தொழிலாளர் ஓர் உறுதியான முடிவு எடுக்க வேண்டும். அவ்வாறு முடிவு எடுத்துவிட்டால் அதை மாற்ற முடியாது.

1938ஆம் ஆண்டின் முதலாளிகள் பொறுப்புச் சட்டம் (The Employers' Liability Act, 1938)

இச் சட்டத்தின்படி முதலாளிகளின் பொறுப்புகளை மேற் கூறியவை பாதுகாக்கின்றன. அதாவது ஒரு தொழிலாளர் தானே ஏற்றிடும் புறக்கணிப்பு, தொழிலாளர்களின் செயல்களின் காரணம், அவர்களின் இறப்போடு முடிவது, தொழிலாளர் வேலையைத் தொடங்கிடும்பொழுது அவ்வேலையோடு இணைந்த நட்டவச்சத்தை அவரே ஏற்பது போன்றவைகளை இங்குக் காரணமாகக் காட்ட முடியாது. சட்டத்தின் மூன்று பிரிவு களும் இதைச் சுட்டிக் காட்டுகின்றன. தொழிற்சாலையிலுள்ள இயந்திரம் போன்றவைகளைச் சரியான நிலையில் முதலாளி பரா மரிக்கத் தவறி அதன் காரணமாக ஒரு தொழிலாளிக்குக் காயம் ஏற்பட்டாலும், முதலாளிக்காக வேறு ஒருவர் அவ்வாறு

பராமரிக்கத் தவறினாலும், முதலாளி சார்பாகப் பணிகளை மேற் பார்வையிடும் ஒருவரின் புறக்கணிப்பால் காயமேற்பட்டாலும், அத்தகைய மேற்பார்வையாளர் சொல்லியுள்ள வழிமுறைகளைத் தொழிலாளி புறக்கணித்து அதனால் காயமேற்பட்டாலும் சாதாரணமாக வேலை செய்யும்பொழுது காயமேற்பட்டாலும், முதலாளியிடும் விதிகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படியும் பொழுது காயம் ஏற்பட்டாலும், முதலாளி அதிகார மாற்றம் செய்த வர்களின் ஆணைக்குட்பட்டுப் பணியாற்றும்பொழுது காயமேற் பட்டாலும் அதற்காக அவர் நட்டஈடு கோரலாம்.

இலக்கணங்கள் (Definitions) :

சார்ந்தவர்கள் (Dependent)

இறந்த ஒருவரின் உறவினர்களைச் சார்ந்தவர்கள் என்று சொல்லலாம். உதாரணமாக ஒரு விதவை, ஓர் இளவர் மகன், திருமணமாகாதவர்கள் ஆகியோர். அடுத்து 18 வயது நிரம்பிய ஒரு மகனும் மகளும் கைகால் விளங்காதவர்களாக அல்லது ஊன முற்றவர்களாக இருந்தால் அவர்கள் தொழிலாளியின் வருவாயை முழுதும் சார்ந்தவர்கள் ஆவர். தொழிலாளர் வருவாயை முழுதும் அல்லது ஒரு பகுதியை நம்பியுள்ளவர்கள் — மனைவியை இழந்தவர், விதவைத் தாயைத் தவிர வேறு ஒரு நபர், முறை யாகப் பெறாத ஓர் இளவர் மகன், திருமணம் ஆகாத—முறை யாகப் பிறக்காத மகள், திருமணமான முறையாக—முறையற்ற தாகப் பெற்ற மகளும் ஓர் இளவரும் அல்லது மனைவியை இழந்த வரும், இளவரும், ஓர் இளவர் சகோதரர், உரிய வயதுவராத-திருமணம் ஆகாத தமக்கை, உரிய வயதுவராத கணவனை இழந்த சகோதரி அல்லது திருமணமாகாத சகோதரி, கணவனை இழந்த மருமகள், இறந்த மகனின் இளங்குழந்தை, பெற்றோர் இல்லாத நிலையிலுள்ள இறந்த மகனின் இளங் குழந்தை அல்லது தொழிலாளியுடைய பெற்றோர், உயிருடன் இல்லாத நிலையில் தகப்பன்வழிப் பாட்டனார் போன்றோரும் தொழி லாளரைச் சார்ந்தவர்களாகிறார்கள்.

முதலாளி அல்லது பணியான்மையர் அல்லது வேலைக்கமர்த்து பவர் (Employer)

முதலாளி அல்லது வேலைக்கமர்த்துபவர் என்னும் சொற் றொடர் கூட்டுறவு ஆக்கம் உள்ள அல்லது இல்லாத நபர்களின் குழு முதலாளியின் நிர்வாக முகவர், இறந்த முதலாளியின் சட்டப் பூர்வமான பிரதிநிதி ஆகியோரைக் கொண்டதாகும். முதலாளி என்ற சொற்றொடர் ஒப்பந்ததாரரையும் குறிக்கும். ஒருவர்

முதலாளியா இல்லையா என்பது ஒவ்வொரு குறிப்பிட்ட நிலையைப் பொறுத்தது.

இயலாதவர்கள் (Disabled)

விபத்து போன்றவைகளால் சம்பாதிக்கும் திறனை இழந்தவர்களை பலஹீனர்கள் அல்லது இயலாதவர்கள் என்கிறோம். அதேபோல் இயலாமை என்பது ஒரு தொழிலாளரின் சம்பாதிக்கும் திறனைக் குறைப்பதாகும். இது பகுதி இயலாமை, முழு இயலாமை என இரு வகைப்படும். மேலும் நிரந்தர இயலாமை, தற்காலிக இயலாமை என இருவகைப்படும்.

பகுதி இயலாமை

ஒரு தொழிலாளி வேலை செய்து கொண்டிருக்கும்பொழுது ஏற்படும் காயத்தால் அவருடைய ஈட்டும் திறன் பாதிக்கப்படும் பொழுது அது பகுதி இயலாமை எனப்படுகிறது. இத்தகைய இயலாமை தற்காலிகப் பகுதி இயலாமை, நிரந்தரப் பகுதி இயலாமை என இரு வகைப்படும்.

ஒரு தொழிலாளி வேலை செய்துகொண்டிருக்கும்பொழுது அவருடைய ஈட்டும் திறன் ஒரு விபத்தினால் பாதிக்கப்படுமானால் அது தற்காலிகப் பகுதி இயலாமை எனப்படும். அதேபோல் ஒவ்வொரு வேலையிலும் ஒரு தொழிலாளியின் ஈட்டும் திறனைப் பாதிப்பதாக இருந்தால் அது நிரந்தரப் பகுதி இயலாமை ஆகும்.

இவ்விரு இயலாமைகளுக்கும் வேறுபாடு உண்டு. அதாவது முதல்வகையில் விபத்து ஏற்படும்பொழுது ஒருவர் செய்துகொண்டு இருந்த வேலைத் தொடர்பாகத்தான் அவருடைய ஈட்டும் திறன் குறைக்கப்படுகிறது. ஆனால் இரண்டாவது வகையில் அவர் செய்யக்கூடிய ஒவ்வொரு வேலையிலும் அவருடைய ஈட்டும் திறன் குறைகிறது. சட்டத்தின் முதல் பட்டியலின் பகுதி இரண்டில் கூறியுள்ளபடி ஒருவருக்குக் காயம் ஏற்பட்டால் நிரந்தரப் பகுதி இயலாமை அவருக்கு ஏற்படுகிறது.

முழு இயலாமை

விபத்து நடந்தபொழுது ஒரு தொழிலாளர் செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் நிரந்தரமாகச் செய்யமுடியாமல் செய்வது முழு இயலாமை ஆகும். சட்டத்தின் முதல் அட்டவணைப் பகுதி 2-ல் கூறியுள்ளவை அனைத்தும் நிரந்தர முழு இயலாமை

ஆகும். அதேபோல் பகுதி 2-ல் கூறியுள்ளபடி காயங்கள் ஏற் பட்டால் அது நூற்றுக்கு நூறு முழு இயலாமையைக் குறிக்கும். ஜெனரல் மேனேஜர் ஜி. ஐ. பி. (G. I. P.) எ. சங்கர், நாக்பூர், 1950 என்ற வழக்கில் சொல்லியபடி முழு இயலாமை ஏற்படுவ தற்கு விபத்து ஏற்படும்பொழுது செய்த வேலையைச் செய்ய முடியாதது மட்டுமல்லாமல் வேறு எந்த வேலையும் செய்ய முடியாமல் இருப்பதாகும்.

கூலி [பிரிவு 2 (1)]

கூலி என்பது பணத்தினால் மதிப்பிடக்கூடிய ஒரு தனி உரிமை அல்லது நன்மையாகும். கூலி என்பது அதிக நேரத் திற்கு அதாவது வழக்கமாகப் பணியாற்றும் நேரத்திற்கு மேல் பணியாற்றும் காலத்திற்கு வழங்கும் தனிக் கூலி, மேல் ஊதியம் அல்லது சாதாரண உற்பத்திக்கு மேல் அதிக உற்பத்தி செய்ய வழங்கப்படும் கூலி, இலவச உணவு, முதலாளி வழங்கிடும் மலி வான தானியங்கள், இலவச வீடு, தண்ணீர், வெளிச்சம், அல்லது வியாபார மரபு அல்லது பழக்கவழக்கங்கள், ஏற்கும் தனி வருமானம். உதாரணமாக, முதலாளிக்குத் தெரிந்து தொழிலாளி பெறும் டிப்ஸ் போன்றவை உள்ளடங்கியுள்ளது. சித்ரு டன்டி எ. டாடா கம்பெனி, 1946, பாட்னா, கோதாவரி சுகர் மில்ஸ் லிமிடெட் எ. சகுந்தலா, 1948 பம்பாய் போன்ற வழக்குகளின் தீர்ப்புப்படி விலைவாசிப் படி (Dearness Allowance), இலாபத்தைப் பகிரும் மேலூதியம் போன்றவைகளும் கூலியில் அடங்கும். ஆனால், கீழ்க்காண்பவை கூலிகள் அல்ல.

(1) பயணப்படி

(2) தொழிலாளிக்காக முதலாளி செலுத்தும் ஓய்வு நிதி

(3) எதிர்கால நலன் நிதி

வேலையின் தன்மைக்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு வழங்கப் படும் தனிச்செலவுகள் போன்றவைகளாகும். இச்சட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளியின் கூலி ஆயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு மேல் இருந்தால் இழப்பீடு கோர முடியாது.

தொழிலாளி

தொழிலாளி என்பவர் ஒரு ரயில்வே துணைப் பிரிவு அலுவலகம், மாவட்ட நிர்வாகம் போன்றவைகளில் நிரந்தரமாக அமர்த்தப் பெறாத ஒரு ரயில்வே பணியாள், சட்டத்தின் பட்டியல் இரண்டில் சொல்லியபடி மேற்படி அமர்த்தப்படாதவர்,

மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறாத பணியாள் ஆகியவர்களைத் தொழிலாளி என்று கூறிட லாம். வேலை ஒப்பந்தம் வெளிப்படையாக இருக்கலாம் அல்லது உட்கிடையாக இருக்கலாம். வாய்மொழியாக இருக்கலாம் அல்லது எழுத்து மூலமாகவும் இருக்கலாம். இச்சட்டம் நிறை வேறுவதற்கு முன்னரும் இருக்கலாம், பின்னரும் இருக்கலாம்.

கோபால்தாஸ் நந்தி எ. அலாடி-பீ-பி 1967 என்ற வழக்கில் கூறப்பட்ட எப்பொழுதாவது வேலை செய்பவர்களும், வியாபார நோக்கத்துடன் வேலை செய்பவர்களும், மத்திய அரசாங்க தரைப்படையில் பணியாற்றுபவர்களும், 1800 ரூபாய்க்கு மேற் பட்டு சம்பளம் பெறுபவரும், நிர்வாகம், எழுத்து போன்ற துறையில் வேலை செய்பவரும் தொழிலாளி என்று சொல்ல முடி யாது. ஒரு தொழிலாளி காயமடைந்து இறந்துவிட்டால் அவரைச் சார்ந்துள்ளவர்கள் தொழிலாளர்கள் என்று ஜி. எம். குமாரி எ. நன்னிபாய் நாதுலால், 1950 என்ற வழக்கின் தீர்ப்பு மூலம் அறிகிறோம்.

இழப்பீடு கோருவதற்காகத் தொழிலாளர்கள் இழப்பீடு சட்டத்தின்கீழ் யார் முதலாளி யார் தொழிலாளி என்று வேறு படுத்துவதற்குப் பல கருத்துகள் சொல்லப்படுகின்றன. ஒரு வரைத் தொழிலாளி என்று சொல்வதற்கு அங்கு எசமானர்-பணி யாள் என்ற தொடர்பு இருக்க வேண்டும். அவர்கள் இருவ ரிடையே வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தம் இருக்க வேண்டும். ஒருவர் வேறு ஒருவருக்குத் தானாக உதவி செய்தால் அவர் தொழிலாளி ஆகமாட்டார். அது போலவே ஓர் ஒப்பந்தக்காரர் தொழிலாளி ஆகமாட்டார்.

இழப்பீடு கோருவதற்குத் தொழிலாளியின் பொறுப்பு

1. தனிப்பட்ட காயம் : ஒரு தொழிலாளி வேலை செய்யும் பொழுது ஏற்படும் விபத்தினால் அவர் காயமடைந்தால் முதலாளி அவருக்கு இழப்பீடு தரவேண்டும். அத்தகைய இழப்பீடு கோரு வதற்குக் கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்:

1. தொழிலாளிக்கே காயம் ஏற்பட வேண்டும். அத்தகைய காயம் தொழிலாளியின் சாவிலோ முழு அல்லது பகுதி இயலாமையிலோ முடியவேண்டும். அத்தகைய காயம் விபத்துகளினால் ஏற்படவேண்டும்.

2. விபத்து தொழிலாளியின் பணியினால் ஏற்பட வேண்டும்.

3. அந்த விபத்து வேலை புரியும்பொழுது ஏற்பட வேண்டும்.

4. பட்டியல் 3 பகுதி 'சி'யில் சொல்லியுள்ள வேலைக்கு ஒரு தொழிலாளி அமர்த்தப்பட்டு அதனால் ஒரு தொற்று நோய் ஏற்பட்டால் அதை ஒரு விபத்து எனக் கூறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட முதலாளிகளின் கீழ் அவர் வேலை செய்தால் ஒவ்வொரு முதலாளியும் விகித முறையில் இழப்பீடு தரவேண்டும். ஒரு தொழிலாளிக்கு ஏற்படும் காயம் என்பது அவர் உடலை மட்டும் பாதிப்பதில்லை. அவர் உள்ளத்தையும் பாதிப்பது ஆகும். அவர் உள்ளக் காயத்தையும் அது குறிக்கும். அவர் நரம்புகள் பாதிக்கப் பட்டு வேலை செய்யும் திறன் இழக்கப்பட்டால் அதுவும் அவருக்கு நேரும் காயமாகும். ஆனால் தொழிலாளர் களைச் சார்ந்தவர்களுக்கு ஏற்படும் காயம் அவருக்கு ஏற்பட்ட காயம் அல்ல. அதற்கு இழப்பீடு தரப்பட மாட்டாது.

2. விபத்து : விபத்தினால் காயம் என்பது தொழிலாளியால் எதிர்பார்க்காமலும் வேண்டுமென்றே யாரும் செய்யாமலும் இருக்க வேண்டும். அதாவது திட்டமிட்டு ஏற்படாமல் எதிர்பாராமல் காயம் இருக்க வேண்டும்.

3. ஒரு வேலையைச் செய்யும் பொழுது அவ்வேலையில் காயம் ஏற்பட வேண்டும். ஒரு தொழிலாளி இழப்பீடு பெறு வதற்குக் காயம் ஏற்படும்பொழுது வேலை செய்துகொண்டிருக்க வேண்டும். அதுவும் அவர் சார்ந்த தொழிற்சாலையின் வேலை யைச் செய்ய வேண்டும். சொந்த நலனுக்காகச் செய்யும் வேலையை இது குறிக்காது. மேலும் விபத்து என்பது வேறு வேலை செய்யும்பொழுது ஏற்பட்டதா என்பதை லங்காஷயர் அண்டு யார்க்ஷயர் இரயில்வே கம்பெனி எ. ஹைலே என்ற வழக்கில் கூறியுள்ள பரிசோதனையின் மூலம் அறியலாம். அந்த வேலை தொழிலாளி செய்யக்கூடிய வேலையின் ஒரு பகுதியா, அதனால் காயம் ஏற்பட்டதா, அவர் துன்பமுற்றாரா போன்ற வினாக்கள் எழுப்பப்பட வேண்டும். 'ஆம்' என்று பதில் கிடைத் தால் அந்த விபத்து அவருடைய வேலையால் ஏற்பட்டது எனலாம். இல்லையென்று பதில் வந்தால் அந்த வேலை

யினால் ஏற்பட்டது இல்லை எனக் கொள்ளலாம். ஒப்பந்தத்தின் படி ஒரு தொழிலாளி நேரடியாகவும் மறைமுகமாகவும் அவர் பணி செய்து கொண்டிருக்கும்பொழுது ஏற்படும் விபத்து அவர் பணி யினால் (வேலையால்) ஏற்படும் விபத்து எனச் சொல்லலாம். இது தொடர்பான சில வழக்குகளைக் காண்போம்:

(1) பம்பாயிலுள்ள எம். பிரபுராம் பைன் நெட்டிங் மில்ஸ் கம்பெனி 1956 என்ற வழக்கில் ஒரு தொழிலாளி அவர் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது வெளி நபர் ஒருவரால் தாக்கப் பட்டார். அதனால் அவருடைய தோள்பட்டை முறிந்துவிட்டது. நஷ்ட ஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததற்கு அத் தகைய விபத்து அவர் செய்யும் வேலையில் இருந்து ஏற்பட்ட விபத்தாகக் கருதி நஷ்ட ஈடு தரச் சொல்லி நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

(2) பம்பாயில் 1955 இல் நடந்த பகுபி எ. சென்ரல் ரயில்வே என்ற வழக்கில் ஒருவர் சென்ட்ரல் ரயில்வேயில் வேலை செய்து கொண்டிருந்தார். புகைவண்டி நிலையத்திற்கு அருகில் இருந்த ரயில்வே கட்டடத்தில் குடி இருந்தார். முன்பின் தெரியாத ஒருவரால் கத்தியால் குத்தப்பட்டு இறந்துவிட்டார். அவருடைய மனைவி இழப்பீடு கோரி வழக்குத் தொடுத்தார். ஆனால் வேலை செய்யும் பொழுது ஏற்பட்ட விபத்து அல்ல என்று ஆணையாளர் (commissioner) வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார். ஆனால் பம்பாய் உயர்நீதி மன்றம் வேலையி னால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று கூறித் தொழிலாளர் மனைவிக்கு இழப்பீடு வழங்க ஆணையிட்டது. இதேபோல் பம்பாய் எ. சென்ட்ரல் ரயில்வே பம்பாய் 1955 என்ற வழக்கில் ஒரு தொழிலாளி அவர் வேலை செய்யப் போகும் வழியில் கத்தி யால் குத்தப்பட்டு இறந்துவிட்டார். அவருடைய மனைவி இழப்பீடு கோரி நீதிமன்றத்தில் போட்ட வழக்கிற்கு, அந்த விபத்து அவர் செய்யும் வேலையினால் ஏற்பட்டதுதான் என நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இழப்பீடும் கிடைத்தது.

விபத்தினால் ஏற்பட்ட காயம் மூன்று நாள்களுக்கு மேற்பட்ட காலத்தில் தொழிலாளிகளுக்கு முழு அல்லது பகுதி இயலா மையை ஏற்படுத்தாவிட்டால் முதலாளி தொழிலாளிக்கு இழப்பீடு தர அவசியமில்லை. வேலை செய்யும்பொழுது தொழிலாளி குடித் திருந்தாலும் போதைப் பொருள்களை சுவைத்துக் கொண்டிருந் தாலும் பாதுகாப்புக்காக முதலாளி இட்ட ஆணையைப் புறக் கணித்திருந்தாலும் அல்லது பாதுகாப்புச் சாதனத்தை இவர் வேண்டுமென்றே நீக்கி அதனால் ஏற்படும் காயத்தால் இறந்து

விட்டாலும் முதலாளி பொறுப்பாக மாட்டார். வேலை செய்யும் பொழுதோ அல்லது வேலையினாலோ விபத்து ஏற்படாமல் இருந்து காயம் ஏற்பட்டால் அதற்கும் அவர் பொறுப்பு ஆக மாட்டார். உரிமையியல் நீதி மன்றத்தில் நஷ்டஈடு கோரி ஒரு வழக்குப் போட்டிருந்தாலும் முதலாளி பொறுப்பாக மாட்டார்.

வேலையால் ஏற்படும் தொற்றுநோய்

மூன்றாவது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையில் ஒரு தொழிலாளி ஈடுபட்டிருக்கும்பொழுது அவருக்குத் தொற்றுநோய் ஏற்பட்டு அது 6 மாதத்திற்குத் தொடர்ந்து இருக்குமானால் அது வேலை செய்யும்பொழுது ஏற்பட்ட காயம் எனச் சட்டம் ஏற்றுக் கொள்கிறது. அவ்வேலையினால்தான் இந்நோய் ஏற்பட்டது என நிரூபிக்கப்பட்டால் முதலாளி தொழிலாளிக்கு இழப்பீடு தர வேண்டும். சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் பணியி னால் ஏற்படும் தொற்றுநோய் பற்றி ஒரு விரிவான பட்டியல் தரப்பட்டுள்ளது.

காயத்திற்கான இழப்பீடு, வேலையின் தொற்று நோய்க்கான இழப்பீடு, இயலாமை, சாவிற்கான இழப்பீடு போன்றவைகள் முறையே முதல் பட்டியல், மூன்றாவது பட்டியல், நான்காவது பட்டியல்களில் கூறப்பட்டுள்ளது.

இழப்பீடுகோரும் முறை

தொழிலாளி விபத்து நடந்தவுடனே ஓர் அறிவிக்கை எழுத்து மூலம் தரவேண்டும். முதலாளிக்கு அது தரப்பட வேண்டும். பல முதலாளிகள் இருந்தால் அவர்களில் யாருக்காவது ஒருவருக்கு அல்லது முதலாளிக்குப் பொறுப்பானவர் ஒருவருக்கு அது தரப்படவேண்டும். காயம்பட்ட தொழிலாளியின் பெயர், முகவரி, காயத்தின் காரணம், விபத்து நாள் போன்றவைகளை அந்த அறிவிக்கை தெரிவிக்கவேண்டும். முதலாளிக்கு அவ் வறிக்கை அனுப்பப்பட வேண்டும். அல்லது பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்பவேண்டும். அல்லது அறிவிக்கை ஏட்டில் ஒரு பதிவு ஏற்படுத்த வேண்டும்.

மாநில அரசாங்கம் முதலாளிகளை இத்தகைய அறிவிக்கை ஏடுகளைத் தொழிற்சாலையில் வைத்திருக்க வேண்டியிருக்கிறது. அதுவும் வேலைசெய்யும் இடத்தில் ஏற்படும் விபத்தின் சான்றுப் பதிவாக இது நிகழ்கிறது. அத்தகைய ஏடு ஒரு நியாயமான குறிப்பிட்ட காலத்திற்குள் காயமடைந்த தொழிலாளருக்கு அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்குக் கிடைத்திட வகைசெய்ய

வேண்டும். மேற்கூறிய அறிவிக்கை விடாமல் யாருக்கும் இழப்பீடு தரப்படமாட்டாது. ஆனால் தொழிற்சாலை வளாகத்திலேயே தொழிலாளி இறந்துவிட்டாலும், தொழிலாளியின் சாவைப் பற்றி ஏதோ ஒரு வழியில் தெரிந்து இருந்தாலும் தகுந்த காரணங்களினால் அத்தகைய அறிவிக்கை தரப்படவில்லை என்பதை ஆணையாளர் தெரிந்திருந்தபோதும், அறிவிக்கை கொடுக்க வேண்டிய தேவையில்லை. ஒரு தொழிலாளி இறந்து இரண்டு ஆண்டுகளுக்குள் இழப்பீடு கோரும் விண்ணப்பத்தை ஆணையாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

பேராபத்தான விபத்து (Fatal Accident)

தொழிலாளரின் பேராபத்தான விபத்தைப் பற்றியும் அபாயமான உடல் காயத்தைப் பற்றியும் அவைகள் ஏற்பட்டு ஏழு நாட்களுக்குள் அவைகள் நடந்த சூழ்நிலைகளை விளக்கி ஆணையாளருக்கு முதலாளி தகவல் அனுப்பவேண்டும். அவ்வாறு தகவல் அனுப்ப முதலாளி தவறினால் ரூ. 500 அபராதம் கட்டவேண்டும். அவ்வாறு விபத்துபற்றித் தகவல் அறிந்ததும் ஆணையாளர் முதலாளிக்கு அதன் விவரம் பற்றி முப்பது நாள்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்று ஆணையிடுவார். மேலும் இழப்பீடு பணத்தைத் தன்னிடம் கொண்டுவந்து தருவது தேவைதானா அல்லது இல்லையா என்று கூறுவார். அதன்படி முதலாளி இழப்பீடு தொகை அவரிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்று கருதினால் 30 நாள்களுக்குள் அத்தொகையைக் கொடுத்துவிட வேண்டும். அதற்கு மாறாக அவர் தாம் பொறுப்பாளியன்று என்று கருதினால் அதற்கான காரணங்களைச் சொல்ல வேண்டும். தாம் இழப்பீடு தரவேண்டியதில்லை என முதலாளி சொல்லிவிட்டால் ஆணையாளர் இறந்த தொழிலாளியின் வாரிசுதாரர்களை நட்டஈடு கோரச் சொல்வார்; அவர்களுக்கு வேண்டிய தகவல்களையும் தருவார்.

மருத்துவப் பரிசோதனை

விபத்து ஏற்பட்டு இழப்பீடு கோருவதற்குத் தொழிலாளி மருத்துவப் பரிசோதனைச் சான்றிதழ் ஒன்று தரவேண்டும். அத்தகைய பரிசோதனை விபத்து நடந்த மூன்று தினங்களுக்குள் முதலாளியால் இலவசமாகச் செய்யப்படுகிறது. மேலும் பரிசோதனைக்குத் தொழிலாளி மறுத்தாலும் அதைத் தடை செய்தாலும் இழப்பீடு உரிமை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது. தொழிற்சாலையிலும், தொழிற்சாலைச் சுற்றுப்புறத்திலும் மருத்துவப் பரிசோதனை செய்யாமல் தொழிலாளி சென்று

விட்டால் அவர் திரும்ப மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளும்வரை இழப்பீடு கோரும் உரிமை தற்காலிகமாகத் தள்ளி வைக்கப்படுகிறது. தொழிலாளி மருத்துவப் பரிசோதனையையும், மருத்துவம் பார்க்கப்படுவதையும் மறுத்து அதன் பிறகு இறந்து விட்டாலும்கூட அவருக்கு இழப்பீடு தரவேண்டுமென ஆணையாளர் ஆணை பிறப்பிக்கலாம். ஆனால் மருத்துவப் பரிசோதனை அல்லது மருத்துவம் பார்த்தல் போன்றவைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ள காலத்திற்கு இழப்பீடு செலுத்தப்பட மாட்டாது. தொழிலாளி மருத்துவப் பரிசோதனைக்கும் மருத்துவம் பார்ப்பதற்கும் மறுத்து அதனால் அவருடைய காயம் மோசமடைந்தால் அல்லது மருத்துவரின் அறிவுரைகளை ஏற்க மறுத்தாலும் நியாயமாக உள்ள காயத்திற்கு மட்டும்தான் அவருக்கு நட்டஈடு தரப்படும். மோசமடைந்த காயத்திற்கு நட்டஈடு தரப்படமாட்டாது.

ஆணையாளர் (Commissioner)

தொழிலாளர் இழப்பீடு சட்டத்தின்கீழ் தொழிலாளர் சர்ச்சையைத் தீர்த்து வைப்பதற்கு மாநில அரசு தன்னுடைய அரசு செய்தி இதழ் மூலம் யாரை அறிவிக்கிறதோ அவரை ஆணையாளர் என்கிறோம். அவர் தொழிற் சர்ச்சைகள்பற்றித் தனி அறிவுரை கூறச் சிலரைத் தன்னுடைய உதவிக்குத் தேர்ந்தெடுக்கிறார். பல்வேறு உள்ளூர்ப் பகுதிகளுக்குச் சில ஆணையாளர்களும் நியமிக்கப்படுகின்றனர். அவர் விரும்பினால் சில வழக்குகளைச் சட்டநுட்ப ஆலோசனைக்காக உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிடலாம். அவர் அவ்வாறு செய்தால் அத்தகைய சட்டநுட்பத்தை அவர் முடிவு செய்ய வேண்டும்.

ஆணையாளரின் அதிகாரங்கள்

(1) சர்ச்சைகளைத் தீர்க்கும் அதிகாரம் : ஒருவர் நட்டஈடு செலுத்தப் பொறுப்புள்ளவரா இல்லையா, காயமடைந்தவர் தொழிலாளியா இல்லையா, எவ்வளவு தொகை இழப்பீடு செலுத்தவேண்டும்? இயலாமையின் தன்மை என்ன? போன்ற சர்ச்சைகள் எழும்பொழுது அவைகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரம் அவருக்குண்டு.

(2) மாற்றல் அதிகாரம் : ஆணையாளர் தன்னிடம் வந்த வழக்கை அதே மாநிலத்தில் அல்லது வேறு மாநிலத்தில் உள்ள ஆணையாளர்கள் நடத்தினால் நல்லது என்று கருதினால் அவ் வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதற்கும் அல்லது அதுபற்றித்

தனக்குத் தெரிவிப்பதற்கும் அவ்வழக்கை மாற்றும் அதிகாரம் அவருக்குண்டு. எனவே, அவர் அவ்வழக்கு பற்றிய எல்லா ஆவணங்களையும் அந்த ஆணையாளருக்கு மாற்றிடுவார். தன் கையில் உள்ள பணத்தையும் வழக்காடும் நபரின் நன்மைக்காக முதலீடு செய்த பணத்தையும் அவருக்கு மாற்றிடுவார்.

(3) பேராபத்தான விபத்திற்காகக் கூடுதலான வைப்புத் தொகை தரச்சொல்லிக் கேட்கும் அதிகாரம் : தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தின் காயங்களால் ஒரு தொழிலாளி இறந்த பொழுது முதலாளி இவரிடம் தரும் வைப்புத் தொகை குறை வானது என்று இவர் கருதினால் எழுத்துமூலம் ஓர் அறிவிக்கை விடுப்பார். அதன்மூலம் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர் கூடுதல் வைப்புப் பணத்தைத் தரவேண்டும் என ஆணையிடுவார். முதலாளி தகுந்த காரணம் கூறாவிட்டால் இழப்பீடு தொகை முழுவதையும் அவரிடம் தரவேண்டுமென ஆணையிடுவார்.

(4) உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரம் : ஓர் உரிமை யியல் நீதிமன்றத்தின் அதிகாரங்களான உறுதிமொழி மூலம் சாட்சி விசாரித்தல், சாட்சியின் வருகையை வற்புறுத்தல், ஆவணங்களைத் தாக்கல் செய்ய வலியுறுத்தல், இதர ஆவணங் களைத் தாக்கல் செய்யக் கோரல் போன்றவைகளை அவர் பெற்றுள்ளார்.

(5) வழக்குச் செலவுபற்றி அதிகாரம் : ஆணையாளரிடம் வழக்கிலிருக்கும் வழக்குபற்றிச் செலவாகும் செலவிற்கான விதி முறைகளை அவரின் விருப்பப்படி ஒழுங்குபடுத்துவார்.

(6) வழக்குகளைச் சமர்ப்பிக்கும் அதிகாரம் : அவருக்குச் சரியெனப்பட்டால் சட்ட நுட்பம்பற்றித் தெரிந்துகொள்ள உயர் நீதிமன்றத்திற்கு வழக்கினைத் தாக்கல் செய்வார். அவ்வாறு செய்யும் பொழுது உயர்நீதி மன்றத்தின் முடிவுப்படி சட்ட விளைவுகளை முடிவு செய்வார்.

(7) பேராபத்து பற்றி வினவும் அதிகாரம் : பெரிய விபத்து பற்றி முழு விவரங்களை முதலாளியிடமிருந்து அறிந்துகொள்ளும் அதிகாரம் இவருக்குண்டு.

ஆணையாளரின் ஆணையின்மீது மேல்முறையீடு (Appeal)

கீழ்க்காணும் நிபந்தனைகளின் பேரிலும் சூழ்நிலைகளிலும் சட்டத்தின் முப்பதாவது பிரிவின்கீழ் ஆணையாளர் ஒருவரின்

தீர்ப்பாணைக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டில் போதுமான அளவு சட்டநுட்பம் பற்றி ஐயம் இருந்தாலும் வழக்கில் உள்ள தொகை முன்னூறுக்குக் குறையாமல் இருந்தாலும் குறைவான இழப்பீடு தொகைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டாலும் ஒரு வழக்கின் இழப்பீடு கோருதல் முழுவதாக அல்லது பகுதியாக நிராகரிக்கப்பட்டாலும் இறந்த தொழிலாளரைச் சார்ந்தவர்களிடையே இழப்பீட்டுத் தொகை பிரித்தளிக்கப்பட்ட பொழுதும், இறந்த தொழிலாளரைச் சார்ந்தவர் என ஒருவர் கூறியதை மறுத்தபோதிலும், நட்டஈட்டிற்காகக் கோரப்பட்டதை ஏற்றாலும் அல்லது மறுத்தாலும் ஓர் உடன்பாட்டைப் பதிவு செய்தாலும், பதிவு செய்ய மறுத்தாலும், சில நிபந்தனைகளுடன் பதிவு செய்தாலும் மேல்முறையீடு செய்யலாம். ஆனால் ஆணையாளரின் ஆணைக்குட்பட்டு நடப்பதாக ஏற்றுக்கொண்ட நபர்கள் பின்னர் மேல் முறையீடு செய்ய முடியாது.

தண்டனைக்குரிய சட்ட விதிகள்

முதலாளி இழப்பீட்டுத் தொகையை அதைக் கொடுக்க வேண்டிய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கொடுக்கத் தவறினால் 6 சதவிகித வட்டியுடன் சேர்த்து அதைக் கொடுக்க ஆணையாளர் ஆணையிடுவார். முதலாளி அவ்வாறு பணம் தராமலிருப்பதில் நியாயமில்லை என அவர் கருதினால் இழப்பீட்டுத் தொகையில் 50 சதவீதம் தண்டனைத் தொகையாக முதலாளி தரவேண்டுமென ஆணையிடுவார். சட்டத்தின் பிரிவு 10 (3)இன் கீழ் வைத்திருக்க வேண்டிய அறிவிக்கை ஏடு வைத்திருக்கத் தவறியவரும், பிரிவு 10A (1)இன் கீழ் ஆணையாளருக்குத் தேவையான அறிக்கை அனுப்பத் தவறியவரும் சட்டத்தின் பிரிவு 10 (B) இன் கீழ் வேண்டப்பட்ட அறிக்கையை அனுப்பத் தவறியவரும் ரூபாய் 500 அபராதம் கட்டவேண்டியவர்களாகிறார்கள்.

ஒப்பந்த வேலை

சட்டத்தின் பிரிவு (12) இன் கீழ் ஒருவர் தன்னுடைய வேலையைச் செய்யச் சொல்லி, வேறு ஒருவருக்கு ஒப்பந்தம் விட்டுவிட்டால் அவ்வாறு ஒப்பந்தம் செய்தவர் அவர் வேலைக் கமர்த்திக் கொண்ட தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும். சில நேரங்களில் முதன்மை முதலாளியான ஒப்பந்தத்திற்கு விட்டவர் நட்டஈடு தரவேண்டும். சட்டத்தின் பிரிவு 12 உட்பிரிவு 3இன்படி நட்டஈட்டை ஒப்பந்தக்காரரிடமிருந்து தொழிலாளி பெறுகிறார். மேற்கூறியதிலிருந்து ஒப்பந்தக்காரர் ஒரு

துணை ஒப்பந்தக்காரருக்கோ தொழிலாளிக்கோ காயம் ஏற்பட்டு நட்டஈடு கோரினால் அவர்கள் முதன்மை முதலாளியிடமிருந்து நட்டஈட்டைப் பெறலாம். அல்லது ஒப்பந்தக்காரரிடமிருந்து பெறலாம். அதற்குரிய நிபந்தனைகளாவன :

(1) முதல்வர் முதலாளி ஒரு வேலையை முழுவதாக அல்லது பகுதியாகச் செய்து முடிக்க ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(2) அத்தகைய ஒப்பந்தம் இயல்பான வியாபார முறையில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

(3) முதல்வர் முதலாளியின் வியாபாரம் அல்லது தொழில் பற்றிய வேலையாக இருக்கவேண்டும்.

(4) முதல்வர் முதலாளி அமர்த்தப்பட்டு தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டதைப் போல ஒப்பந்தக்காரர் அமர்த்தப்பட்ட தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டுக் காயம் ஏற்படவேண்டும்.

(5) முதல்வர் முதலாளி வேலை செய்வதற்குப் பயன்படுத்தும் இடத்தில் விபத்து ஏற்படவேண்டும். அல்லது அவருடைய கட்டுப்பாடு அல்லது நிர்வாகம் உள்ள இடத்தில் விபத்து ஏற்படவேண்டும். மேற் கூறிய நிபந்தனைகள் தோன்றியபொழுது முதல்வர் முதலாளிதான் இழப்பீடு தர வேண்டும். ஆனால் ஒப்பந்தக்காரரும் இழப்பீடு செலுத்துவதற்குப் பொறுப்பாளியாகிறார். ஆனால் அவ்விருவரின் பொறுப்பு கூட்டுப் பொறுப்பல்ல. தொழிலாளி ஒருவரிடமிருந்து இழப்பீடு பெறமுடியவில்லையென்றால் மற்றவரிடமிருந்து பெற முடியாது. ஆனால் இருவரும் இணைந்து இழப்பீடு தரலாம். யார் இழப்பீடு தர வேண்டுமென்று சந்தேகம் ஏற்பட்டாலும் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும்.

(6) முதல்வர் முதலாளி இழப்பீடு தர வேண்டுமானால் அதை அவர் ஒப்பந்தக்காரரிடமிருந்து பெற்றுத் தந்திடலாம்.

(7) முதல்வர் முதலாளி ஒப்பந்தக்காரரால் அமர்த்தப்பட்ட தொழிலாளிக்கு நட்டஈடு தரவேண்டியதில்லை. அதாவது ஒப்பந்தக்காரர் எங்கு தன்னுடைய

வேலையைச் செய்கிறாரோ அங்கு விபத்து ஏற்படாத பொழுதும் அவ்விடம் முதல்வர் முதலாளியின் கட்டுப் பாட்டிற்கும் நிர்வாகத்திற்கும்கீழ் உள்ளபொழுதும் அவர் பொறுப்பாளியல்லர்.

ஒப்பந்தம் இன்மை

ஒரு தொழிலாளி இழப்பீடு கோரும் உரிமையைத் தவிர்க்கும் உடன்பாடு அல்லது ஒப்பந்தம் செல்லுபடியாகாத ஒப்பந்தமாக ஆகாது.

அயலாள் ஒருவரால் தொழிலாளிக்குக் காயமேற்பட்டால் அவரிடமிருந்து தொழிலாளிக்கு அவர் செலுத்திய இழப்பீட்டுத் தொகையையும் அவருடைய நட்ட ஈட்டையும் பெறலாம். தொழிலாளர் நட்ட ஈடு சட்டத்தின்கீழ் ஒரு முதலாளி காப்பீடு செய்திருந்து அவர் திவாலாகிவிட்டால் முதலாளியுடைய உரிமை காப்பீட்டுக் கம்பெனிக்கு எதிரான முதலாளியின் உரிமை தொழி லாளிக்கு வந்துவிடுகிறது. காப்பீட்டுக் கம்பெனியின் பொறுப்பு தொழிலாளி முதலாளிக்குத் தரவேண்டிய பொறுப்பை விடக் குறைவாக இருந்தால் திவால் நடவடிக்கையிலும் கலைப்பு நடவடிக்கையிலும் தொழிலாளி மீதியைப் பெற்றிடுவார். காப்பீடு கட்டணம் செலுத்தியுள்ளவரை முதலாளி செய்திடும் ஒப்பந்த முறிவு தொழிலாளியைப் பாதிக்காது.

24. தொழில் சர்ச்சைகள் சட்டம் (1947)

(The Industrial Disputes Act, 1947)

இலக்கணங்கள் (Definitions) :

உரிய அரசு

மத்திய அரசு அல்லது மத்திய அரசு அதிகாரம் பெற்ற அரசு, இரயில்வே, மத்திய அரசுக்குக் கட்டுப்பட்ட தொழில்கள் சம்பந்தமான தொழில் சர்ச்சைகளுக்கு உரிய அரசு என்பது மைய அரசாகும்.

தொழில் நிதிக் கழகம் அல்லது தொழிலாளர் அரசுக் காப்பீட்டுக் கழகம், இந்திய விமானக் கழகம் அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகம், வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம் அல்லது வைப்புக் காப்பீட்டுக் கழகம் அல்லது இந்திய நம்புறுதிக் கடிதம் அல்லது ஒரு வங்கிக் காப்பீட்டு நிறுமம் அல்லது சுரங்கம் அல்லது ஓர் எண்ணெய்க் கிணறு அல்லது ஒரு பெரிய துறைமுகம் போன்ற சர்ச்சைகளுக்கு உரிய அரசு மைய அரசாகும். ஏனைய தொழில் சர்ச்சைகளுக்கு உரிய அரசு மாநில அரசாகும்.

சராசரி ஊதியம்

ஒரு தொழிலாளருக்கு மாத அடிப்படையில் ஊதியம் செலுத்தும் பொழுது மூன்று முழு மாத ஊதியமும், வார அடிப்படையில் ஊதியம் செலுத்தும்பொழுது நான்கு முழு வார ஊதியமும், நாள் அடிப்படையில் செலுத்தும்பொழுது 12 முழு வேலை நாள்களுக்குரிய ஊதியமும் ஒரு தொழிலாளருக்குச் செலுத்தக்கூடிய சராசரி ஊதியமாகும்.

தீர்ப்பு (Award)

ஒரு தொழில் சர்ச்சை பற்றியும் அதுபற்றித் தொழிலாளர் நீதிமன்றம், தொழில் தீர்ப்பாயம், தேசியத் தொழில் தீர்ப்பாயம் போன்றவை வழங்கும் இடைக்கால - இறுதியான தீர்மானமே தீர்ப்பு ஆகும்.

கட்டுப்படுத்தப்பட்ட தொழில் (Controlled Industry)

பொதுமக்கள் நன்மைக்காக மத்திய அரசால் கட்டுப்படுத்தப் பட்ட தொழிலாகும்.

பணியாண்மையர் (Employer)

மத்திய அரசு, மாநில அரசு, நகராட்சிகள் நடத்தும் தொழிலை நிர்வகிக்கும் நபர் அல்லது துணைத் தலைவர் போன்ற வர்களைப் பணியாண்மையர் என்கிறோம். இவ்விலக்கணம் தனியார் தொழில்களை நிர்வகிக்கும் தொழில் அதிபர்களுக்கும் பொருந்தும்.

ஆக்கத் தொழில் (Industry)

ஆக்கத்தொழில் என்பது ஒரு வாணிகம், வியாபாரம், உற்பத்தி நிறுவனம், சேவை நிறுவனம், வேலை வாய்ப்பு, கைத்தொழில், ஒரு தொழிலாளியின் வேலை போன்றவை களைக் குறிக்கும். இதை இரண்டு பகுதியாகப் பிரிக்கலாம். முதல் பகுதியில் வாணிகம், வியாபாரம், உற்பத்தி நிறுவனம் போன்றவைகளின் ஒரு பகுதியாகவும், சேவை நிறுவனம்,வேலை வாய்ப்பு, கைத்தொழில், தொழிற் சம்பந்தமான வேலை அல்லது ஒரு தொழிலாளர் ஈடுபட்டிருக்கும் பணி மற்றொரு பகுதியாகவும் பிரிப்பது உண்டு. ஆனால் பல நீதிமன்றங்களின் தீர்ப்புப்படி ஒரு நடவடிக்கை ஒழுங்காக நடந்து வருமானால் சரக்கு உற்பத்திக்கும் சேவை செய்வதற்கும் அது நடக்குமானால் அது ஆக்கத்தொழில் எனக் கூறப்படுகிறது. 4-12-80இல் 'தி இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற பத்திரிக்கையில் நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பு வெளியானது. அதன்படி தேசியக் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் கழகத்தால் அமர்த்தப்பட்ட விரிவுரையாளர்களும் ஆராய்ச்சி யாளர்களும் தொழிலாளர்கள் எனவும் அக்கழகத்தின் செயல்கள் ஓர் ஆக்கத் தொழில் எனவும் தீர்ப்புக் கூறப்பட்டது. 1956இல் எலெக்ட்ரிக் சப்ளை, பரோடா முனிசிபாலிடி எ. தொழிலாளர்கள் என்ற வழக்கில் மின்சாரம் வழங்கிய நகராட்சியின் ஒரு துறை ஓர் ஆக்கத்தொழில் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. மருத்துவமனையும் ஒரு தொழிற்சாலை என ஸ்டேட் ஆப் பாம்பே எ. ஹாஸ்பிடல் மஸ்தூர் சபா, 1960 என்ற வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது. ஆனால் அரசாங்கத்தால் நடத்தப்படும் மருத்துவமனை ஓர் ஆக்கத்தொழில் அன்று என்பதாக மேனேஜ்மென்ட் ஆப் ஹாஸ்பிடல் ஓரிஸ்ஸா எ. தேர் ஓர்க்மென் 1976 என்ற வழக்கில் கருத்துக் கூறப்பட்டது. மன்றங்களும் சிற்றுண்டிச் சாலைகளும் ஓர் ஆக்கத் தொழில் என மெட்ராஸ் பின்ஜாரோபோல் எ. தேர்

ஒர்க்மென் 1967 என்ற வழக்கில் கூறப்பட்டது. ஆனால் கல்வி நிலையங்களும் பல்கலைக்கழகங்களும் தொழிற்சாலைகள் அல்ல என்பதை யூனிவர்சிடி ஆஃப் டில்லி எ. ராம்நாத் 1963 என்ற வழக்கிலும் தி ஏஷியாடிக் சொஸைட்டி எ. தி ஸ்டேட் ஆஃப் வெஸ்ட் பெங்கால் என்ற வழக்கிலும் காண்கிறோம்.

ஒரு வழக்கறிஞர் தனக்கு உதவிட சிலரை வேலைக்கு அமர்த்துவது தொழில் அல்ல என்று பி. எம். பகாரியா எ. என். சி. சட்டர்ஜி என்ற வழக்கு கூறுகிறது. ஆனால் இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் ஒரு கூட்டு வாணிபத்தை அமைத்துத் தொழில் நடத்தினால் அது ஓர் ஆக்கத் தொழிலாகக் கருதப்படுகிறது.

மெட்ராஸ் ஜிம்கானா கிளப் எம்ப்ளாயீஸ் எ. மேனேஜ்மெண்ட் 1968 என்ற வழக்கின்படி கழகங்களும் மன்றங்களும் தொழிற் சாலைகள் அல்ல. காரணம் மேற்கூறிய வழக்கில் அவர்களே சேவை செய்துகொள்ளும் ஒரு சிற்றுண்டிச் சாலையை நடத்தி வந்தனர். பட்டய்க் கணக்கர்களின் நிறுவனம் ஒரு தொழில் அன்று என்பதாக டி. கே. மேனன் சன்ஸ் எ. லேபர் கமிஷனர், கோழிக்கோடு, 1968 என்ற வழக்கில் கூறப்பட்டது. ஒரு கல்லூரி மருத்துவமனை நடத்தியும் அதற்கான மருந்துகளைத் தயாரித்தும் வந்தது. அம்மருந்துகளே மருத்துவமனையில் பயன்படுத்தப்பட்டன. (வெளியாருக்கும் விற்கப்பட்டன.) இது சம்பந்தமான வழக்கில் உச்சநீதிமன்றம், கல்லூரி மருத்துவமனையையும், மருந்துக் கடையையும் நடத்திவந்தால் அது ஒரு தொழிற் சாலை எனத் தீர்ப்பு கூறியது. லலித்காரி ஆயுர்வேதி காலேஜ் எ. பார்மஸி ஒர்க்கர்ஸ் யூனியன் (1960). பங்களூர் வாட்டர் சப்ளை அண்ட் சீவேஜ் போர்டு எ. தேர் ஒர்க்மென் 1978 என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் எந்த நிறுவனத்தில் ஒழுங்காகச் செயல்கள் நடந்து வருகிறதோ, எங்கு சரக்குகளும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுகிறதோ, எங்கு தொழிலாளர் ஒத்துழைப்புடன் அவைகள் நடத்தப்படுகிறதோ அங்குள்ள செயல்களைத் தொழில் எனலாம் என்று தீர்ப்புக் கூறியது.

தொழில் சர்ச்சை அல்லது தகராறு

தொழில் சர்ச்சை என்பது பணியாண்மையர்களுக்கிடையேயும், பணியாண்மையர் தொழிலாளர்களுக்கிடையேயும், வேலையில் உள்ளோர் அல்லது வேலையில் இல்லாதவர்களுக்கிடையேயும், வேலைவாய்ப்பு நிபந்தனை பற்றியும் ஒருவருடைய உழைப்பு நிபந்தனைபற்றியும் எழக்கூடிய சர்ச்சை அல்லது

வேறுபாடாகும். பொதுவாகச் சொல்லப்போனால் தொழிற் சர்ச்சை என்பது ஒரு தொழிலில் உள்ள பணியாண்மையருக்கும் தொழிலாளிக்குமிடையே ஏற்படும் சர்ச்சையாகும். இரு தொழிலாளர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டால் அது தொழில் சர்ச்சையாகாது. காரணம் அது பணியாண்மையரோ தொழிலாளர்களோ சம்பந்தப்பட்டது அல்ல. ஆனால் அத்தகைய சர்ச்சை ஒரு தொழிலாளியின் வேலை நீக்கம் பற்றிய சர்ச்சையானால் மற்றத் தொழிலாளர்கள்பற்றிச் சர்ச்சை இல்லாவிட்டாலும் அது ஒரு தொழிற்சர்ச்சையாகும். ஒரு தொழிற்சாலையில் ஒருவர் திறமையான வேலை செய்தாலும், திறமையில்லா வேலை செய்தாலும், மேற்பார்வை பார்த்தாலும், தொழில்நுட்பப் பணியாற்றினாலும், எழுத்து வேலை செய்தாலும், அவர் தொழிலாளியாகக் கருதப்படுகின்றார். ஆனால் சட்டத்தின் பிரிவு 2 (3)இல் சில விதி விலக்குகள் கூறப்பட்டுள்ளன. அத்தகைய விதி விலக்கு பர்மாஷெல் ஆயில் ஸ்டோரேஜ் கம்பெனி லிமிடெட்டிற்கும் தி மேனெஜ்மென்ட் ஸ்டாஃப் அசோசியேஷனுக்கும் நடந்த வழக்கில் கூறப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் மரியாதையான வேண்டுகோள் மறுக்கப்படுமாயின் அது ஒரு தொழிற்சர்ச்சையில் முடிவடையும் என்பதை ஸ்ரீ மீனாட்சி மில்ஸ் எ. ஸ்டேட் ஆஃப் பெங்கால் (1951) என்ற வழக்கு மூலம் அறிகிறோம். மேலும் தொழிற்சர்ச்சை ஒரு தனிப்பட்டவரைச் சாரும் தன்மையுடையதாக இல்லாமல் ஒரு குழுவைப் பாதிப்பதாக இருக்க வேண்டும். ஆனால் முன்னர் சொல்லியபடி ஒரு தொழிலாளி பதவி நீக்கம் செய்யப்பட்டால் அது ஒரு தனிநபர் சம்பந்தப்பட்டதாக இருந்தபோதிலும் தொழிற்சர்ச்சையாகும். சுருங்கச் சொன்னால் தொழிற் சர்ச்சை என்பது பலர் சம்பந்தப்பட்ட சர்ச்சையாக இருக்கவேண்டும். உதாரணமாகக் கூலி,மேலூதியம், லாபத்தில் பங்கு, பணி நேரம், கூலியுடன் விடுமுறைகள், வேலை நீக்கம், நிறுவனம் மூடுதல் போன்றவைகளைப்பற்றிய சர்ச்சையாக இருக்கவேண்டும். என்றாலும் பிரிவு (2) A இன் படி ஒரு பணியாண்மையர் ஒரு தொழிலாளியை வேலையிலிருந்து நீக்கி விட்டால் அத்தகைய சர்ச்சை ஒரு தொழிற் சர்ச்சையாகும். எந்த ஒரு தொழிலாளியும் அல்லது தொழிற் சங்கமும் இது சம்பந்தமாக ஈடுபடாவிட்டாலும் அது தொழிற்சர்ச்சையாகும்.

தற்காலிக வேலை விலக்கு (Lay Off)

தற்காலிக வேலை விலக்கு என்பது ஒரு தொழிலாளியின் பெயர் தொழிலாளர் பட்டியலில் இருந்தபொழுதிலும் ஆட்குறைப்புக் காரணத்தால் அவர் வெளியேற்றப்படாதபோது, நிலக்கரி, விசை, மூலப்பொருள், சரக்கிருப்பு, நோக்கம்,

இயந்திரம் பழுது அடைதல் போன்ற காரணங்களால் அவருக்கு வேலை தரப் பணியாண்மையர் தவறுவது அல்லது மறுப்பது அல்லது முடியாத நிலையில் இருப்பது போன்றவைகளைக் குறிக்கும். அவர் அவ்வாறு தொழிலாளருக்கு வேலை கொடுக்கத் தவறுவதும் மறுப்பதும் முடியாமல் இருப்பதும் கீழ்க்காணும் காரணங்களினால் ஏற்படுகிறது :

1. மூலப்பொருள், விசை, நிலக்கரி போன்றவைகளின் பற்றாக்குறை.
2. சரக்குத் தேக்கம்.
3. இயந்திரங்கள் பழுதடைதல்
4. வேறு காரணங்கள்

ஒரு தொழிலாளி தற்காலிகமாக வேலையில்லாமல் இருப்பது கீழ்க்காணும் காரணங்களால் இருக்க வேண்டும்:

1. வேலை செய்வதற்கு அவர் தயாராக இருந்து தொழிற் சாலைக்கு வரவேண்டும்.

2. தொழிலாளர் பெயர்ப் பட்டியலில் அவர் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.

3. அவர் வேலையைத் துவக்குவதற்கு முன் இரண்டு மணிக் குள் வேலை தராமல் இருக்க வேண்டும்.

வருகைப் பட்டியலில் பெயர் உள்ள ஒரு தொழிலாளி தாமே தொழிற்சாலை வழக்கமாக இயங்கும் நேரத்தில் வந்திருக்க வேண்டும். அவர் அவ்வாறு வந்து இரண்டு மணிக்குள் அவருக்கு வேலை தராமல் இருந்தால் அந்த நாளுக்குத் தற்காலிக வேலை விலக்கில் இருந்தார் என்று கூறலாம். ஒரு தொழிலாளர் முதல்பணி மாற்று முறை (shift) ஆரம்பத்தில் தன் வேலையை ஆரம்பித்து இருக்கும்பொழுது அடுத்த பணிமாற்று முறைக்கு அவர்கள் வர வேண்டினால் முதல் பணிமாற்று முறையில் வேலை விலக்கில் இருந்தார் என்று பொருள். எனவே, அந் நாளின் அப்பகுதி நேரத்திற்கு முழு அடிப்படைக் கூலியையும், வி லை வா சி ப் ப டி யை யு ம் பெறுவதற்கு உரியவராகிறார். அவருக்குப் பணி மாற்று முறையின் இரண்டாவது பகுதிக்கு வேலை தராவிட்டால் அவர் தற்காலிக வேலை விலக்கில் இருந்தார் என்று கொள்ள முடியாது. ஆனால் அந்நாளின் அந்தப் பகுதி நேரத்திற்கு முழு அடிப்படைக் கூலியையும் விலை வாசிப்படியையும் பெறும் உரிமை அவருக்குண்டு.

கதவடைப்பு (Lock out)

கதவடைப்பு என்பது தொழிற்சாலையை மூடுவது அல்லது வேலையைத் தற்காலிகமாக நிறுத்துவது. ஒரு பணியாண்மையர் தன்னால் அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்வதை மறுப்பது என்று பொருள்படும்.

மூடுவதற்கும் கதவடைப்பிற்கும் உள்ள வேறுபாடு

1. மூடுதலில் பணியாண்மையர் தொழில் நடக்குமிடத்தை மட்டும் மூடாமல் தொழில் செய்வதையே மூடிவிடுகிறார்; வியாபாரத்தையே நிறுத்திவிடுகிறார். ஆனால் கதவடைப்பு என்பது தொழிலாளர்கள் வேலை செய்யும் இடத்தை மட்டும் தான் மூடுகிறார்கள். ஆனால் தொழிலையே மூடுவதல்ல.

2. மூடுதலில் (Closure) தொழிலாளி பணியாண்மையர் இருவருக்குமிடையே ஏற்படும் தொடர்பு முடிவடைகிறது. ஆனால் கதவடைப்பில் அத்தொடர்பு கதவடைப்பு நீக்கப்படும் வரை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

3. கதவடைப்பு தொழில் சர்ச்சைகளின் வலியுறுத்தலால் ஏற்படுவது. ஆனால் மூடுதலில் அத்தகைய வலியுறுத்தல் இல்லை.

மேற்கூறியவைகளிலிருந்து மூடுதலுக்கும் கதவடைப்பிற்கும் உள்ள வேறுபாடு மிகவும் குறைவு என்றும், தொழில் விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் ஆவண அத்தாட்சி, வாய்மொழி சாட்சியம், போன்றவைகளால் நிரூபிக்கப்படும்பொழுது உண்மைகளை வைத்துக் கொண்டுதான் இவைகளின் வேறுபாடுகளைக் காணமுடியும் என்று மேனேஜ்மென்ட் ஆஃப் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் பிரைவேட் லிமிட்டெட் எ. ஒர்க்கர்ஸ் என்ற வழக்கின் முடிவிலிருந்து அறிகிறோம்.

கதவடைப்பிற்கும் தற்காலிக வேலை விலக்கிற்கும் உள்ள வேறுபாடு

1. பணியாண்மையர் தொழிலாளியோடு தொழிற்சர்ச்சைகளில் ஈடுபடும்பொழுது கதவடைப்பு ஏற்படுகிறது. ஆனால் தற்காலிக வேலை விலக்கில் அத்தகைய சர்ச்சைகள் அவர்களிடையே இல்லை. நிலக்கரி, விசை, மூலப்பொருளின் பற்றாக்குறை, இயந்திரப் பழுது போன்றவையால் ஏற்படுவது. எனவே, பணியாண்

மையர் தொழிலாளருக்கு வேலை கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்.

2. கதவடைப்பு தொழிற்சர்ச்சைகள் தீரும்வரை நீடிக்கும். ஆனால் தற்காலிக வேலை விலக்கு நிலக்கரி, விசை, மூலப்பொருள்கள் போன்றவைகள் தாராளமாகக் கிடைத்தாலும் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டு நன்றாக வேலை செய்தாலும் நீக்கப்பட்டுவிடும்.

3. கதவடைப்பு மூலமாக முதலாளி தொழிலாளிகளை அவர்களின் கோரிக்கையை விடும்படி வற்புறுத்துகிறார். அல்லது தன் கோரிக்கையை ஏற்கும்படி செய்கிறார். ஆனால் தற்காலிக வேலை விலக்கில் அத்தகைய சர்ச்சைகள் இல்லை. முதலாளிக்கு ஏற்படும் தொழில் இன்னல்களால்தான் அது ஏற்படுகிறது.

பொது வசதிச் சேவைகள் (Public Utility Services)

ரயில்வே சேவை, பொருள்களையும் பயணிகளையும் விமானத்தில் ஏற்றிச் செல்லும் போக்குவரத்துச் சேவை, துறை முக வசதி, தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்கள் பாதுகாப் புக்காகச் செய்யப்படும் வசதி, அஞ்சல், தந்தி, தொலைபேசி போன்ற சேவைகள், விசை ஒளி, தண்ணீர் போன்றவைகளை வழங்கும் வசதிகள், சுகாதார வசதிகள், அரசாங்க முதல் பட்டியலில் அரசு செய்தித்தாள் மூலம் அறிவிக்கப்படும் பொது வசதிச் சேவைகள் போன்றவைகள் எல்லாம் பொதுமக்கள் வசதிச் சேவைகள் என அழைக்கப்படுகின்றன. முதல் பட்டி யலின்படி வங்கித் தொழில், சிமெண்ட், நிலக்கரி, துணி ஆலை கள், உணவு உற்பத்தி ஆலைகள், இரும்பு ஆலைகள், பாதுகாப்பு நிறுவனங்கள் (மருத்துவச் சேவை பணிக்கும் நிறுவனங்கள்) போன்றவைகள் பொது வசதிச் சேவை நிறுவனங்கள் என்று சொல்லப்படுகின்றன.

ஆட்குறைப்பு (Retrenchment)

ஆட்குறைப்பு என்பது முதலாளி தன் தொழிலாளியை ஏதாவது ஒரு காரணம் காட்டி வேலை நீக்கம் செய்வது ஆகும். இது ஒழுங்கு நடவடிக்கைக்காக ஒரு தண்டனை வழங்குவது போல் உள்ளது. ஆனால் தொழிலாளர்கள் தன்னிச்சையாக வேலையிலிருந்து நீங்குவது தொழிலாளர்கள் உரிய வயது வந்த வுடன் ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தின்படி வேலையிலிருந்து விலகுவது, உடல்நலக் குறைவால் தொழிலாளியை வேலையி

லிருந்து நீக்குவது போன்றவைகள் ஆட்குறைப்பு ஆகாது. அதிகப்படியான தொழிலாளர்கள் அல்லது அலுவலாளர்கள் இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் வேலை நீக்கம் செய்வது ஆட்குறைப்பு ஆகாதென புராகர் கோல் கம்பெனி லிமிட்டெட் எ. அசிமுடின் அஷராஃப் என்ற வழக்கின் தீர்ப்பு மூலம் அறிகிறோம்.

தீர்வு (Settlement)

தீர்வு அதிகாரி அல்லது அமைதிக் குழுவிற்கு வந்துள்ள தீர்வு நடவடிக்கைகளிலிருந்து ஏற்பட்ட ஒரு முடிவைத் தீர்வு என்கிறோம். தொழில் சர்ச்சை பற்றி இருநபர்களிடையே ஏற்படுவது தீர்வாகும். அத்தகைய தீர்வு எழுத்துமூலம் இருக்க வேண்டும். இருநபர்களும் கையெழுத்திட வேண்டும். அதன் ஒரு படி உரிய அரசிற்கும், அமைதி ஏற்படுத்தும் அதிகாரிக்கும் அனுப்பப்பட வேண்டும்.

வேலை நிறுத்தம் (Strike)

ஒரு தொழிலில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் ஒருமுகமாகச் சேர்ந்து வேலையை நிறுத்துவது அல்லது வேலையைத் தொடர்வதற்கு மறுப்பது அல்லது வேலையை ஏற்க மறுப்பது அல்லது அவர்களில் ஒருவரின் பேச்சை ஏற்று வேலையைத் தொடர மறுப்பது அல்லது வேலையை ஏற்க மறுப்பது போன்ற செயல்களைத்தான் வேலை நிறுத்தம் என்கிறோம்.

தொழிலாளர்களிடையே ஏற்படும் ஒற்றுமையின் காரணமாக வேலையைத் தொடர்வதற்கு, வேலையை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவிப்பதும் அதன் காரணமாக எல்லாரும் வேலைக்கு வராமலிருப்பதும் முக்கியமாகும். ஒரு தொழிலாளி வேலைக்கு வராமலிருப்பது மட்டுமே வேலை நிறுத்தம் அன்று. ஒரு தொழிலாளிக்கும் ஏனைய தொழிலாளிக்கும் இடையே வேலை நிறுத்தம்பற்றி ஒரு பொதுவான ஒற்றுமை இருப்பதற்குச் சான்று வேண்டும்.

கூலி (wages)

கூலி என்பது ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கக்கூடிய எல்லா ஊதியங்களையும் குறிக்கும். ஆனால் அது பணமாகத் தரப்பட வேண்டும். ஒரு தொழிலாளி செய்த வேலைக்கு வெளிப்படையான அல்லது உட்கிடையான பணி நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செலுத்தப்படும் பணம்தான் கூலி. விலைவாசிப்படி, வீட்டு வசதிப்படி, விளக்கு, தண்ணீர், மருத்துவ வசதிகள், சலுகை விலையில் தரப்படும் உணவுப் பொருள்கள், ஏனைய

பொருள்கள், பயணச் சலுகை போன்றவை கூலிக்குள் அடங்கிடும்.

ஆனால் மேலுதியம், ஓய்வு நிதி, எதிர்கால நலன் நிதி போன்றவைகளுக்குப் பணியாண்மையர் தரும் பணம், ஓய்வு பெறும்பொழுது தரப்படும் மொத்தத் தொகை (gratuity) போன்றவை கூலியாகா.

தொழிலாளி (Workman)

ஊதியத்திற்காக ஒரு தொழிலில், தொழிற்பயிற்சி பெற்ற வேலை, பயிற்சி பெறாத வேலை, மேற்பார்வை, தொழில் நுட்பம், எழுத்து போன்றவைகளைச் செய்திட அமர்த்தப்படும் அனைவரும் தொழிலாளர்கள் அல்லது வேலை செய்பவர்கள் ஆவார்கள். வேலை நிபந்தனைகள் வெளிப்படையாக அல்லது உட்கிடையாக இருக்க வேண்டும். தொழிற்சர்ச்சை ஏற்பட்டால் தொழிலாளர் சர்ச்சைச் சட்டத்தின்கீழ் அவைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டுப் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டவர்கள், விமான-கடற்படை அலுவலர்கள், காவல்துறையில் பணியாற்றுபவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 500-க்கு மேல் ஊதியம் பெறும் மேற்பார்வை அதிகாரிகள் தொழிலாளர்கள் அல்லர்.

பர்மா ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் கம்பெனி லிமிடெட் எ. தி மேனெஜ்மெண்ட் ஸ்பிப் அசோசியேஷன் 1970 என்ற வழக்கின் தீர்ப்புப்படி சட்டத்தின் பிரிவு 2(3) இல் கூறியுள்ள விதிவிலக்குகளைத் தவிர மேற்கூறிய அனைவரும் தொழிலாளர்கள் ஆவார்கள்.

ஒரு தொழிற்சாலை தன் அலுவலாளர்களுக்குத் தோட்டம் இணைந்துள்ள பெரிய கட்டடங்களைத் தந்தது. தோட்டத்தைப் பராமரிக்கத் தோட்டக்காரர்களையும் அமர்த்தியது. தோட்டத்திற்கு வேண்டிய விதை, தண்ணீர், தோட்டக்காரர் ஊதியம் போன்ற செலவுகளையும் அதுவே ஏற்றது. அத்தகைய தோட்டக்காரர்களும் 'தொழிலாளர்கள்'தாம் என உச்ச நீதி மன்றம் காட்டன் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் கம்பெனி எ. தி லேபர் அப்பலேட் ட்ரிபூனல் ஆஃப் இந்தியா (1954) என்ற வழக்கில் தீர்ப்புக் கூறியது.

பாட்லி தொழிலாளி (Padli Workers)

ஒரு தொழில் நிறுவனத்தின் வேலையாள் பட்டியலில் உள்ள ஒரு தொழிலாளிக்குப் பதிலாக யாரொருவர் பெயர் எழுதப்படுகிறதோ அவருக்குப் பாட்லி தொழிலாளி என்று பெயர். அவர் ஓராண்டு தொடர்ச்சியாக அந்நிறுவனத்தில் பணியாற்றி விட்டால் பாட்லி தொழிலாளியாகப் பணியாற்றிய நிலை போய் மற்ற தொழிலாளி போல் கருதப்படுகிறார்.

சட்டத்தில் காணப்படும் அதிகார அமைப்புகள்

தொழில் சர்ச்சைகளைத் தீர்க்கவும் மத்தியஸ்தம் செய்யவும் சட்டத்தின்கீழ்ப் பல அதிகார அமைப்புகள் காணப்படுகின்றன :

1. பணிக் குழுக்கள் (பிரிவு 3)
2. சமாதான அதிகாரிகள் (பிரிவு 4)
3. சமாதானக் குழுக்கள் (பிரிவு 5)
4. விசாரிப்பு நீதிமன்றம் (பிரிவு 6)
5. தொழில் நீதிமன்றம் (பிரிவு 7)
6. தொழில் தீர்ப்பாயம் (பிரிவு 7-A)
7. தேசிய தீர்ப்பாயம் (பிரிவு 7-B)

தொழிற் சர்ச்சைகள் ஏற்பட்டால் அவர்களுக்குள்ளேயே அமைதியாகத் தீர்த்துக் கொள்ளலாம். தொழிலாளர்கள் தங்களுக்குள் சர்ச்சைகளைத் தீர்க்க முடியவில்லையென்றால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வழக்குகளை அரசு மேற்கண்ட அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கும்.

பணிக் குழுக்கள்

ஒரு தொழில் நிறுவனத்தில் சென்ற ஆண்டு நூறு அல்லது நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தால் பணியாண்மையர் ஒரு பணிக்குழுவை நியமிக்க வேண்டும் என அரசாங்கம் ஆணையிடும். அப்பணிக் குழுவில் பணியாண்மையர்- தொழிலாளர் ஆகியவர்களின் பிரதிநிதிகள் சம அளவில் இருக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்க உறுப்பினர்களின் ஆலோசனையுடன் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் பணிக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

பணிக்குழுவின் கடமைகள்

1. தொழிலாளர் - பணியாண்மையர் இவர்களிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்தும் கடமை பணிக்குழுவிற்கு உண்டு.

2. குழு அவர்களிடையே எழும் கருத்துவேற்றுமைகளைப் போக்க பாடுபட வேண்டும். எனினும், குழுவின் பரிந்துரைகள் அவர்களைக் கட்டுப்படுத்தாது என்று கெமிகல் மஸ்தூர் சங்க் எ. கெம் அண்டு கம்பெனி லிமிடெட் பம்பாய் 1955 என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது.

3. மேற்கூறிய வழக்கின்படி குழுவின் முடிவுகள் பரிந்துரைகளே தவிர முடிந்த முடிவுகள் அல்ல.

4. குழுவிற்கு எடுத்துச் செல்லப்படும் சர்ச்சைகள் பெரிய அளவில் உள்ளவைகளாகத் திகழ்கின்றன. உதாரணமாக தொழிலாளர் நலன் பற்றிய பணி நேரம், குழந்தைகளுக்குத் தொட்டில் வழங்கல், பணி நிலைமை, ஊதியத்துடன் விடுமுறை போன்றவைகள்பற்றிப் பணிக்குழு தீர்வு வழங்குகின்றது.

அமைதி காக்கும் அதிகாரி (Conciliation Officer)

சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு அமர்த்தப்படும் அதிகாரி தான் அமைதி காக்கும் அதிகாரி. உரிய அரசு தன் அதிகார பூர்வமான செய்தி மலரில் இதை வெளியிட்டு அமைதி காக்கும் அதிகாரிகளை நியமனம் செய்கிறது. அவர் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள குறிப்பிட்ட தொழிலுக்கும் அல்லது ஒன்று அல்லது அதிகத் தொழிலுக்கும் நியமிக்கப்படலாம். நிரந்தரமாகவும் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கும் அவர் நியமிக்கப்படலாம்.

கடமைகள்

பொதுவாக ஓர் அமைதி நிலைநாட்டும் அதிகாரியின் கடமைகள் தொழில் சர்ச்சைகளுக்குத் தீர்வு காண்பதும் தொழிலாளர்களிடையே சமரசம் செய்வதுமாகும். எனினும், கீழ்க் காணும் கடமைகளையும் அவர் செய்தாக வேண்டும் :

1. பொது வசதிச் சேவை குறித்து ஏற்படும் தகராறுகளுக்குக் குறிப்பிட்ட முறையில் சமரச நடவடிக்கையை அவர் எடுக்கவேண்டும்.

2. தகராறுகள்பற்றி அவர் ஆய்வு நடத்திடலாம்; இதற்காக அவர் சரியெனக் கருதும் வழிகளைப் பின்பற்றித் தகராறுகளைச் சுமூகமாகத் தீர்த்து வைக்க வேண்டும்.

3. தகராறுகளை அவரே தீர்த்து வைக்க முடியுமானால் தீர்வு பற்றிய ஒப்பந்தத்தில் நபர்களின் கையெழுத்து வாங்கி அதனுடன் ஓர் அறிக்கையும் அரசுக்கு அவர் அனுப்ப வேண்டும்.

4. தீர்வு ஏற்படாவிட்டால் அதன் காரணத்தையும் அவர் எடுத்த நடவடிக்கை குறித்தும் ஓர் அறிக்கை அவர் அனுப்ப வேண்டும்.

5. சமரச நடவடிக்கைகள் ஆரம்பமான 14 தினங்களுக்குள்ளும் அல்லது அரசு விரும்பும் குறுகிய காலத்திற்குள்ளும் அந்த அறிக்கை அரசிற்கு அவரால் அனுப்பப்பட வேண்டும்.

அறிக்கையைப் பெற்ற பின்னர் அதை அமைதிக்குழுத் தொழில் நீதிமன்றம், தொழில் தீர்ப்பாயம் (Industrial Tribunal), தேசியத் தீர்ப்பாயம் (National Tribunal) போன்றவைகளின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும் என்று கருதினால் அரசு அனுப்பிவைக்கும். அவ்வாறு தேவையில்லையெனக் கருதினால் இதைப் பதிவு செய்துவிட்டுச் சம்பந்தப்பட்ட நபர்களுக்குக் காரணங்களை விளக்கிக் கடிதம் அனுப்பிவிடும்.

சமாதானக் குழு (Board of Conciliation) (பிரிவு 5)

உரிய அரசு தன் அரசாங்கச் செய்தி மலரில் அறிவித்து விட்டுத் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்திடச் சமாதானக் குழுவை அமர்த்துகிறது.

குழுவின் அமைப்பு

1. குழு தனித்தியங்கும் ஒருவரைத் தலைவராகவும், அரசு விரும்பும் இரண்டு அல்லது நான்கு பேர்களையும் கொண்டிருக்கும்.

2. தொழிலாளி - பணியாண்மையர் ஆகியவர்களின் பிரதிநிதிகள் சம அளவில் உறுப்பினர்களாக அமர்த்தப்பட வேண்டும்.

3. அவர்கள் தொழிலாளர், பணியாண்மையர் முதலியவர்களின் பரிந்துரையால் அமர்த்தப்படுகின்றனர். அவ்வாறு பரிந்துரை செய்யப்; யாராவது தவறினால் அரசே அவர்களை அமர்த்திடும்.

4. உரிமையியல் முறைக் கோட்பாட்டைக் கூறியுள்ள பிரிவு 21 - ன் பொருள்படி சமாதானக் குழுவின் உறுப்பினர் பொதுப் பணியாளர் (Public Servant) ஆகிறார். அவர் இரகசிய உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். ஒருவரைச் சாட்சியாகத் தோன்ற வேண்டலாம். ஒருவரை ஆவணச்சான்று, கணக்கேடுகள், பதிவேடுகள் போன்றவைகளைத் தாக்கல் செய்ய வேண்டலாம்.

சமாதானக் குழுவின் கடமைகள்

1. தொழிற்சர்ச்சைகளுக்குத் தீர்வு வழங்கல்.

2. அரசு எந்தச் சர்ச்சையையும் தீர்வுக்காகக் குழுவிற்கு அனுப்பி வைக்கும்.

3. வாதாடுபவர்களிடையே சுமுகமாக அவர்களின் சர்ச்சையைக் குழு தீர்த்து வைக்கும்.

4. தீர்வு ஏற்பட்ட பின்னர் வாதாடுபவர்களின் கையெழுத்து வாங்கித் தீர்வு அறிக்கையைக் குழு அரசுக்கு அனுப்பும்.

5. தீர்வு ஏற்படாவிட்டால் எந்தக் காரணத்தால் தீர்வு ஏற்படவில்லை என்பதுபற்றி ஓர் அறிக்கை அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

6. இவ்வறிக்கையில் எல்லா உறுப்பினர்களின் கையெழுத்து வாங்கி இரண்டு மாதங்களுக்குள் உரிய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அரசு விரும்பினால் இதற்கும் குறைந்த காலத்தில் அறிக்கை அனுப்ப வேண்டும்.

7. பொது வசதி சேவை பற்றிய தகராறு தொடர்பான அறிக்கை பெறப்பட்டு அதை அரசு தொழில் நீதிமன்றம் அல்லது தொழில் தீர்ப்பாயம் அல்லது தேசியத் தீர்ப்பாயம் ஆகியவைகளின் ஆலோசனைக்கு அதைப் பிரிவு 10-ன் கீழ் அனுப்பாத நிலையில் அது சம்பந்தப்பட்ட நபர்களுக்கே அதை அனுப்பிவிடும்.

நீதி விசாரணை (பிரிவுகள் 13, 14)

1. தொழிற்சர்ச்சைகள் பற்றிய செய்திகளை விசாரிப்பதற்காகச் சில வேளைகளில் அரசாங்கச் செய்தி மலரில் அறிவிப்புச் செய்துவிட்டு உரிய அரசு நீதி விசாரணைக் குழுவை அமைத்திடும்.

2. அத்தகைய விசாரணைக் குழுவில் ஒருவர் அல்லது அரசு விருப்பப்படி மேற்பட்ட நபர்கள் அமர்த்தப்படலாம்.

3. அதில் இரண்டுக்கும் மேற்பட்டவர் அங்கம் வகித்தால் ஒருவரைத் தலைவராக அரசு நியமிக்கும்.

4. அத்தகைய குழு நீதி விசாரணை முடிவை அரசுக்குச் சாதாரணமாக ஆறு மாதங்களுக்குள் தெரியப்படுத்தும்.

தொழில் நீதிமன்றம் (Labour Court)

சட்டத்தில் சொல்லியுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கும் இரண்டாவது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொழில் தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்கும் உரிய அரசு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் நீதிமன்றங்களை நிறுவும். இரண்டாவது இணைப்புப்பட்டியலில் கூறப்பட்டுள்ள விஷயங்களாவன :

1. நிரந்தர ஆணையின்கீழ்ப் பணியாண்மையரால் நிறை வேற்றப்பட்ட ஆணையின் தகுதி அல்லது நேர்மை.

2. நிரந்தர ஆணையின் விண்ணப்பம்—அதன் விளக்கம்.

3. வேலை விலக்கம், தவறாக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளியைத் திரும்ப வேலைக்கமர்த்தல்—நிவாரணம் அளித்தல் போன்றவை.

4. வழக்கமாகத் தரப்படும் சலுகை—தனியுரிமை போன்றவைகளை மறுத்தல் முதலியன.

5. சட்ட விரோதச் செயல்கள், வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்றவைகள்.

6. தொழில் தீர்ப்பாயத்தின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட எல்லா விவகாரங்களுமாகும்.

தொழில் நீதிமன்ற அமைப்பு

தொழில் நீதிமன்றத்தின் தலைமையேற்க அரசு ஒருவரை நியமிக்கும். அவர் உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக இருக்க வேண்டும். மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் மாவட்ட நீதிபதியாகவோ கூடுதல் மாவட்ட நீதிபதியாகவோ பணியாற்றியிருக்க வேண்டும். அல்லது நம் நாட்டில் குறைந்தது ஏழு ஆண்டுகளுக்கு நீதித்துறையில் அதிகாரியாகப் பணியாற்றி யிருக்க வேண்டும். அல்லது குறைந்தது ஏழு ஆண்டுகளுக்குத் தொழில் நீதிமன்றத்தின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றி யிருக்க வேண்டும். தொழில் உயர் தீர்ப்பாயத்தின் தலைவ ராகவோ உறுப்பினராகவோ இரண்டாண்டுகளுக்குக் குறை யாமல் பணியாற்றியிருக்க வேண்டும். இப் பதவி காலியாக இருந்தால் வேறு ஒருவரை அமர்த்திடும் அதிகாரம் அரசுக்கு உண்டு. தொழில் நீதிமன்றத்தின் தலைவரை அமர்த்திடும் அரசு அதிகாரம் பற்றி எந்த நீதிமன்றமும் வினா எழுப்ப முடியாது.

கடமைகள் (பிரிவு 15)

தொழில் தகராறுகள் விசாரணைக்கு வந்ததும் அதை விரைவில் விசாரித்து முடிவை அரசுக்கு உடனடியாக அனுப்ப வேண்டும்.

தொழில் தீர்ப்பாயம் (பிரிவு 7-A)

சட்டத்தின் மூன்றாவது அல்லது இரண்டாவது இணைப்புப் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தகராறுகளை விசாரித்துத் தீர்ப்புக் கூற அரசு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற் பட்ட தீர்ப்பாயங்களை அமைக்கும். தொழில் தீர்ப்பாயத்தின் ஆலோசனைக்குத் தகராறுகளைக் கொண்டு செல்வதற்கும் இரு தரப்பினரும் இணங்கவேண்டும்; அரசும் அது தேவை என உணர வேண்டும்.

அமைப்பு

1. தீர்ப்பாயத்தில் ஒருவர்தாம் பதவி வகிக்க வேண்டும்.
2. அவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்க வேண்டும் அல்லது பணியாற்றியிருக்க வேண்டும்.
3. மூன்றாண்டுகளுக்குக் குறையாமல் அவர் மாவட்ட நீதிபதியாகவோ கூடுதல் மாவட்ட நீதிபதியாகவோ பணியாற்றியிருக்க வேண்டும்.

4. தொழில் மேல்விசாரணைத் தீர்ப்பாயத்தின் உறுப்பின ராகவோ தலைமையதிகாரியாகவோ பணியாற்றியிருக்க வேண்டும்.

5. குறைந்தது இரண்டாண்டுகளுக்குத் தீர்ப்பாயத்தின் அலுவலகத்தில் பணியாற்றியிருக்க வேண்டும்.

தொழில் நீதிமன்றம் என்னும் தலைப்பின்கீழ் இரண்டாவது இணைப்புப் பட்டியலில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் முன்னரே கூறப்பட்டுள்ளன. மூன்றாவது இணைப்புப் பட்டியலில் கீழ்க் காண்பவை அடங்கியுள்ளன :

1. கூலி, கூலி செலுத்தப்பட வேண்டிய காலம், முறை முதலியன.
2. இழப்பீடு, படிகள், இதரப் படிகள்
3. பணிநேரம், ஓய்வு இடைவேளை
4. ஊதியத்துடன் விடுமுறை
5. மேலூதியம், இலாபப் பகிர்வு, தொழிலாளர் நலன் நிதி, ஓய்வு மொத்தத் தொகை
6. மாற்று வேலைமுறை
7. தரம், வகைப்படுத்தல்
8. ஒழுங்கு விதிமுறைகள்
9. புனரமைப்பு
10. தொழிலாளர் ஆட்குறைப்பு, நிறுவனம் மூடுதல்
11. பிரிவு 7-A-ல் கூறியுள்ள இதரச் செய்திகள்.

கடமைகள்

தொழில் நீதிமன்றத்தின் கடமைகள்தாம் தீர்ப்பாயத்தின் கடமைகளாகும். தீர்ப்பாயத்திற்கு வரும் வழக்குகளுக்கு அறிவுரை கூற இரு மதிப்பீட்டாளர்களை அரசு அமர்த்திடும்.

தேசியத் தீர்ப்பாயம் (பிரிவு 7-B)

தேசிய முக்கியத்துவம் உடைய தொழில் தகராறுகளையும் இரண்டு மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனத் தில் ஏற்படும் தொழில் தகராறுகளையும் கருத்தில்கொண்டு மைய அரசு தன் அரசு செய்தி மலரில் அறிவிப்புச் செய்து ஒன்று அல்லது அதிகமான தேசியத் தீர்ப்பாயங்களை அமைத்திடும்.

இத் தீர்ப்பாயத்தின் தலைமையதிகாரியாக ஒருவரைத்தான் மைய அரசு நியமிக்கும். அவர் உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக இருக்க வேண்டும் அல்லது பணியாற்றியிருக்க வேண்டும். இரண்டாண்டு களுக்குக் குறையாமல் தொழில் மேல்விசாரணைத் தீர்ப்பாயத் தின் தலைவராகவோ உறுப்பினராகவோ இருக்கவேண்டும். தேவையானால் மைய அரசு தேசியத் தீர்ப்பாயங்களுக்கு வரும் வழக்குகளுக்கு அறிவுரை கூற இரண்டு மதிப்பீட்டாளர்களை நியமிக்கும்.

தொழில் தகராறுகளைத் தீர்க்கும் முறை

பணியாண்மையருக்கும் தொழிலாளருக்கும் இடையே தொழில் தகராறு ஏற்பட்டால் அதைத் தீர்க்க உரிய அரசுக்கு மூன்று படிகளில் விண்ணப்பிக்க வேண்டும். அவ் விண்ணப் பத்தோடு தகராறு தொடர்பான நபர்கள், தகராறு சம்பந்தப் பட்ட விஷயம், பாதிக்கப்பட்ட மொத்தத் தொழிலாளர்கள், தகராறைத் தீர்க்க எடுத்த முயற்சி போன்றவைகள் பற்றிய ஓர் அறிக்கையும் அனுப்ப வேண்டும். சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளபடி மேற்கூறிய இரு ஆவணங்களிலும் உரியவர்கள் கையெழுத்திட்டிருக்க வேண்டும். இவ் விண்ணப்பத்தைப் பெற்றதும் உரிய அரசு நீதிமன்றம், தீர்ப்பாயம், தேசியத் தீர்ப்பாயம் போன்றவைகளின் பெயர்களை அந்தந்த நிலைக் கேற்ப அறிவித்திடும். அவைகளுக்குரிய உறுப்பினர் பெயர்களை யும் அறிவிக்கும். தொழில் தகராறு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அவர்களின் பிரதிநிதிகளை இத்தகைய குழு அல்லது நீதிமன்ற அமைப்பு அந்தந்த அமைப்புக்கேற்ப அரசு நியமித்திட வேண்டும்.

இத்தகைய நீதிமன்ற அமைப்புகள் அவைகள் அமைக்கப் பட்ட ஆறு வாரங்களுக்குள் தகராறுபற்றிய விசாரணையைத் தொடங்க வேண்டும். இத்தகைய நீதிமன்றக் குழுக்கள், நீதி மன்றங்கள், அவைகளின் உறுப்பினர்கள் தகராறு நடந்த இடத்தைச் சென்று பார்வையிடலாம். ஆனால் தகுந்த அறிவிக்கை விடவேண்டும். அங்கு நபர்களையும் விசாரிக்கலாம். இத்தகைய வழக்குகள் பொதுமக்கள் மத்தியில் வெளிப்படையாக நடக்கும். நீதிமன்ற அமைப்புகள் அறிவுரை பெறுவதற்காக மதிப்பீட்டாளர்களை நியமிக்கும். அத்தகைய அறிவுரைகள் நீதிமன்றங்களையும், தீர்ப்பாயங்களையும் கட்டுப்படுத்தும். அமைதி நிலைநாட்டும் அதிகாரிகள் வழக்கைத் தீவிரமாக நடத்திடும். எப்படி நடத்த வேண்டும் என அவைகள் விரும்பு கின்றனவோ அவ்வாறு நடத்திட வேண்டும்.

வேலைநிறுத்தமும் கதவடைப்பும்

வேலை நிறுத்தம், கதவடைப்புப் போன்றவைகளின் இலக்கணங்களை ஏற்கெனவே கண்டோம். கீழ்க்காணும் வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் சட்டத்தில் தடை செய்யப் பட்டுள்ளன.

பொது வசதி சேவைத்துறையில் வேலைநிறுத்தத் தடை

1. வேலைநிறுத்தம் செய்வதற்குச் சட்டத்தில் சொல்லி யுள்ளபடி ஆறுவாரங்களுக்கு முன்னர்ப் பணியாண்மை யருக்கு அறிவிக்கை தராவிட்டாலும்,

2. அவ்வறிக்கை கொடுத்து 14 நாள்களுக்குள்ளும்,

3. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற் குள்ளும்,

4. அமைதி நிலைநாட்டும் அதிகாரி முன்னிலையில் முடியாமல் உள்ள வழக்கு இருந்தபோதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும் பொது வசதி சேவைத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது. எத்தனை நபர்கள் இவ்வறிக்கையைத் தரவேண்டும் என்று கூறுகிறதோ அத்தனை பேர்கள் தரவேண்டும். இவ் வறிவிக்கை ஆறு மாதங்களுக்குத்தான் செல்லுபடியாகும்.

பொதுவசதி சேவை நிறுவனக் கதவடைப்புத் தடை

பொது வசதி சேவை நிறுவனங்களும் தொழிலாளர்களுக்குக் கதவடைப்பிற்கு ஆறு வாரங்களுக்கு முன் அறிவிக்கை தராமலும் அவ்வறிவிக்கை கொடுத்து 14 நாள்களுக்குள் நடுவர் தீர்ப்பு முடிவடையாத போதும் அதன் முடிவு வந்து இரண்டு மாதங்களுக்குப் பின்னும் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள்ளும் அமைதி நிலைநாட்டும் அதிகாரி முன்னிலையில் உள்ள வழக்கு முடியாத போதும் அல்லது அது முடிந்த 7 நாள்களுக்குப் பிறகும் கதவடைப்புச் செய்யக்கூடாது.

சட்டத்தில் கூறியுள்ளபடி அறிவிக்கை விடப்பட வேண்டும். ஏற்கெனவே தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் உள்ளபோது பணியாண்மையர் கதவடைப்புச் செய்தால் அறிவிக்கை தேவை இல்லை. எனினும், உரிய அரசு அதிகாரிக்குக் கதவடைப்பைத் தெரிவிக்க வேண்டும். ஏதாவது ஒரு நாளில் பணியாண்மையர்

பெறும் வேலைநிறுத்த அறிவிக்கையையும், அவர் கோரும் கதவடைப்பு அறிவிக்கையையும் 5 நாள்களுக்குள் உரிய அரசு அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும் அவர் பெற்ற அறிவிக்கையின் எண்ணிக்கையையும், கொடுத்த அறிவிக்கையின் எண்ணிக்கையையும் குறிப்பிட வேண்டும்.

தொழில் நிறுவனங்களில் நடக்கும் வேலைநிறுத்தத்திற்கும் கதவடைப்பிற்கும் தடை (பிரிவு 23)

ஒரு குழுவினால் மேற்கொள்ளும் அமைதி நடவடிக்கைகள் முடியாமலிருக்கும்போது அது முடிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும், தொழில் நீதிமன்றம், தேசியத் தீர்ப்பாயம் இவைகளிடையே நடந்து வரும் வழக்குகள் பூர்த்தியடையாதபோதும் அதன் முடிவு தெரிந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகும், ஒரு தகராறுபற்றித் தீர்ப்பு வழங்கிட விசாரணை நடந்துகொண்டிருக்கும் போதும் ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது. அதன் பணியாண்மையர் கதவடைப்புச் செய்யக் கூடாது.

பொதுவசதி சேவை நிறுவனங்களில் சட்ட விரோத வேலை நிறுத்தம் (பிரிவு 24)

இந் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கை கொடுக்காமலும், அறிவிக்கை கொடுத்த 14 நாள்களுக்கும் அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள காலக் கெடுவிற்குள்ளும் அமைதி நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும்போதும், முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும் வேலைநிறுத்தம் செய்தால் அது சட்ட விரோதமானது.

தொழில் நிறுவனங்களில் சட்ட விரோத வேலை நிறுத்தம்

ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிலாளர்கள், அமைதி நடவடிக்கை பூர்த்தியடையாதபோதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும், தொழில் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்துகொண்டிருக்கும் போதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பின்னரும், ஒரு வழக்கின் தீர்ப்புக்காக விசாரணை நடந்துகொண்டிருக்கும்போதும் வேலைநிறுத்தம் செய்யக் கூடாது.

தொழில் நிறுவனங்களில் சட்ட விரோதக் கதவடைப்பு

ஒரு தொழில் நிறுவனத்தில் பணியாண்மையர், அமைதி நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும் போதும் அதன் முடிவு

தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும் வழக்கின் தீர்ப்புக்காக விசாரணை நடந்துகொண்டிருக்கும் போதும், தொழில் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்துகொண்டிருக்கும் போதும் கதவடைப்புச் செய்தால் அது சட்ட விரோதமானது.

எனினும், சட்ட விரோத வேலைநிறுத்தத்திற்காகச் செய்த கதவடைப்பும், சட்டவிரோதக் கதவடைப்பிற்காகச் செய்த வேலைநிறுத்தமும் சட்ட விரோதமானவை அல்ல.

சில வழக்குகள்

1. ஸர்க் காலியரி லிமிடெட் (எ) சௌத் கரன்பூரா கோல் மைன்ஸ் ஓர்க்கர்ஸ் யூனியன் (1951) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட நாளில் நிலக்கரிச் சுரங்கத்தில் எந்தத் தொழிலாளியும் வேலை செய்யவில்லை. எனவே, அன்று எந்த வேலையும் நடைபெறவில்லை. எனவே, அந்த வேலைநிறுத்தம் சட்ட விரோதமானது ஏனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. காரணம் போட்டித் தொழிற்சங்கங்களிடையே ஏற்பட்ட ஒற்றுமையின்மையால் அந்த வேலைநிறுத்தம் ஏற்பட்டது.

2. அப்பர் இண்டியா கூப்பர் பேப்பர் மில்ஸ் கம்பெனி லிமிடெட் (எ) தி ஓர்க்மென் (1954) என்ற வழக்கில் கம்பெனிக்கும் தொழிலாளிக்குமிடையே பட்டியலில் கண்ட விடுமுறை நாளில் தொழிலாளர் வேலை செய்தால் அதற்கு ஈடுகட்ட விடுமுறை தரப்படும் என உடன்பாடு ஏற்பட்டது. என்றாலும் தொழிலாளர்கள் பட்டியலில் கண்ட விடுமுறையில் வேலை செய்ய மறுத்தனர். எனவே, வேலைநிறுத்தம் சட்ட விரோதமானது என்று நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

3. ராம்கிருஷ்ணா அயர்ன் பௌண்டரி ஹௌரா (எ) தி ஓர்க்மென் (1954) என்ற வழக்கில் தொழிலாளர் நேர்மையற்ற ஆனால் சட்ட விரோதமில்லாத வேலைநிறுத்தத்தில் சேர்ந்ததற்காகப் பணியாண்மையர் அவரை வேலையிலிருந்து நீக்க முடியாது என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

சட்ட விரோதமான வேலைநிறுத்தத்திற்கும் கதவடைப்பிற்கும் தண்டனை

1. சட்ட விரோத வேலைநிறுத்தத்திற்குத் தண்டனை

சட்டத்தில் கூறப்பட்ட சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தை ஒரு தொழிலாளர் செய்தால் அவருக்கு ஒரு மாத

சிறைத்தண்டனையும் ரூபா ஐம்பது அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

2. சட்ட விரோதக் கதவடைப்பிற்குத் தண்டனை

சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்ட விரோதக் கதவடைப்பை ஒரு பணியாண்மையர் செய்தால் ஒரு மாதச் சிறைத்தண்டனையும் ரூ. 50 அபராதமும் அல்லது இரண்டுமே விதிக்கப்படும்.

3. தூண்டுதலுக்குத் தண்டனை

சட்ட விரோத வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்வதற்கும் சட்ட விரோதக் கதவடைப்புச் செய்வதற்கும் ஒருவர் தூண்டினால் அவருக்கு 6 மாதச் சிறைத் தண்டனையும் ரூ. 1000 அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

4. நிதி உதவிக்குத் தண்டனை

ஒருவர் சட்ட விரோதமான வேலைநிறுத்தத்திற்கும், கதவடைப்பிற்கும் தெரிந்தே நிதியுதவி செய்தால் ஆறுமாத சிறைத் தண்டனையும் ரூ. 1000 அபராதமும் அல்லது இரண்டுமே விதிக்கப்படும்.

தாற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளியின் உரிமைகள்

1. அவருக்கு இழப்பீடு தரப்பட வேண்டும்.

2. இழப்பீடு பெறுவதற்கு அவருடைய பெயர் நிறுவனத் தொழிலாளர் பெயர்ப் பட்டியலில் குறைந்தது ஓர் ஆண்டிற்குத் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

3. மேலும் அவர் 'பாட்லி' தொழிலாளியாகவும் எப் பொழுதாவது வேலை செய்யும் தொழிலாளியாகவும் இருக்கக்கூடாது. தொடர்ச்சியாகவும் அல்லது விட்டு விட்டும் தாற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டவராக இருக்கக்கூடாது. அவர் தாற்காலிக வேலைநீக்கம் செய்யப்படாமல் இருந்தால் எவ்வளவு ஊதியமும் விலை வாசிப்படியும் பெறுவாரோ அவைகளில் 50 சதவீதம் நட்ட ஈடு பெறும் உரிமை அவருக்கு உண்டு. ஆனால் வாராந்தர விடுமுறை நாள்களுக்கும் ஏனைய விடுமுறை நாள்களுக்கும் இழப்பீடு தரப்படமாட்டாது.

4. ஏதாவது 12 மாதத்திற்குள் ஒரு தொழிலாளி 45 நாள் களுக்கு மேல் தாற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டால் மேற்கண்ட நாள்களுக்கு இழப்பீடு தரப்படமாட்டாது. ஆனால், இதற்குத் தொழிலாளருக்கும் பணியாண்மை யருக்குமிடையே ஓர் உடன்பாடு இருக்கவேண்டும். தற் காலிக வேலைநீக்கம் 45 நாள்களுக்குமேல் சென்று விட்ட நிலையில் ஒரு பணியாண்மையர் சட்டப்படி தொழிலாளரை வேலைநீக்கம் செய்திடலாம்.

இழப்பீடு உரிமையின்மை

ஒரு தொழிலாளி அதே நிறுவனத்தில் மாற்றுவேலை தரப் பட்டு அதை மறுத்தாலும், பணியாண்மையருக்குச் சொந்தமான அதே ஊரிலுள்ள 5 மைலுக்குட்பட்ட இடத்தில் வேலை தந்ததை மறுத்தாலும், அதே வேலைக்கு எவ்விதத் திறமையும் அனுபவமும் தேவையில்லை எனப் பணியாண்மையர் கருதி னாலும், வழக்கமான கூலி தருவதாகச் சொன்னபோதும் தொழிலாளி இணங்க மறுத்துவிட்டால் அவருக்கு இழப்பீடு தரப் படமாட்டாது. குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நாளுக்கு ஒரு தடவைகூடத் தொழிலாளி வேலை செய்ய வருகை தரவில்லை யென்றால் இழப்பீடு இல்லை. அத்தகைய தாற்காலிக வேலை நீக்கம் நிறுவனத்தின் மறுபகுதியில் உள்ள தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தாலும் உற்பத்திக் குறைவுச் செயலாலும் ஏற் பட்டால் அதற்கு இழப்பீடு இல்லை.

ஆட்குறைப்பு வேலைநீக்கத்திற்கு (Retrenchment) நிபந்தனைகள்

1. தொடர்ந்து குறைந்தது ஓர் ஆண்டு வேலையிலிருக்கும் தொழிலாளியை ஆட்குறைப்பு வேலைநீக்கம் செய்ய முடியாது. ஆனால் அத்தகைய வேலைநீக்கத்தின் காரணம்காட்டி ஒரு மாத அறிவிக்கை தொழிலாளர்களுக்குக் கொடுத்தபோதும், அதன் காலக்கெடு முடிந்தபோதும், அத்தகைய அறிவிக்கைக் காலத்திற்கு உரிய ஊதியத்தைத் தொழிலாளருக்குச் செலுத்திய போதும் அவரை வேலையிலிருந்து நீக்கிடலாம். ஆனால், தொழி லாளருக்கும் பணியாண்மையருக்குமிடையே உடன்பாடு இருந்து அதில் வேலைநீக்கத் தேதி குறிப்பிடப்பட்டிருந்தால் அறிவிக்கை தேவை இல்லை.

2. வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் அவ்வாறு வேலையிலிருந்து நீக்கப்படும் பொழுது முடிவடைந்த ஒவ்வோர் ஆண்டு சேவைக்கும் 15 நாள் சராசரி ஊதியத்தை இழப்பீடாகப் பெறுகிறார்கள்.

3. இது தொடர்பாக உரிய அரசுக்கோ அல்லது அதனால் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிக்கோ அறிவிக்கை தர வேண்டும்.

திரும்ப வேலைக்கமர்த்தல்

பணியாண்மையர் தம்முடைய தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துவிட்டுப் பின்னர்ச் சில தொழிலாளர்களை வேலைக் கமர்த்தும்பொழுது ஏற்கெனவே வேலையிலிருந்து நீக்கப்பட்டவர் களுக்கு முன்னுரிமை தந்து அவ் வேலையைத் தரவேண்டும். ஆனால், அவர்கள் மறுத்தால் வேலை தரவேண்டிய அவசிய மில்லை. இவ்வாறு வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் திரும்ப வேலைக்கு ஆள்கள் எடுக்கும் பொழுது தனிச் சலுகை பெறுகின்றனர்.

நிறுவனத்தின் நிருவாகம் அல்லது உரிமை மாறும் பொழுது தொழி லாளர்களின் உரிமைகள்

ஒரு நிறுவனத்தின் உரிமையும் நிருவாகமும் உடன்பாட் டாலோ சட்டத்தாலோ வேறு ஒரு பணியாண்மையருக்கு மாறும்பொழுது 12 மாதங்களுக்குக் குறையாமல் வேலை செய்த தொழிலாளர்களுக்கு அவர்கள் நீக்கப்படுவதாக இருந்தால் அறி விக்கையும் நட்டஈடும் தரப்படவேண்டும். ஆனால், அத் தகைய மாற்றம் தொழிலாளர்களின் வேலையைப் பாதிக்காமல் இருந்தாலும் முன்னர் இருந்ததைப் போலவே பணி நிபந்தனை கள் இருந்தபோதும் அத்தகைய இழப்பீடு அறிவிக்கையும் தர வேண்டிய தேவையில்லை. மேலும் அத்தகைய மாற்றத்தி லேயே தொழிலாளர்களுக்கு நட்டஈடு தரவேண்டுமென்று குறிப் பிடப்பட்டிருந்தாலும் மேற்கூறிய அறிவிக்கை தேவை இல்லை.

நிறுவனம் மூடப்பட்டபொழுது தொழிலாளர்களின் உரிமைகள்

நிறுவனம் எந்தக் காரணத்திற்காக மூடப்பட்டாலும் மூடுவதற்கு முன்னர்க் குறைந்தது ஓராண்டு தொடர்ந்து பணியாற்றிய தொழிலாளர்களுக்கு அறிவிக்கை விடவேண்டும். பிரிவு 25 (F)-ல் சொல்லியுள்ளபடி அவருக்கு மூன்றுமாதச் சராசரி ஊதியத்திற்குச் சமமான இழப்பீடு தரவேண்டும். பணியாண்மை யரின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள சில சூழ்நிலைகளால் நிறுவனம் மூடப்பட்டால் தொழிலாளருக்குத் தரப்படும் இழப்பீடு மூன்று மாதச் சராசரி ஊதியத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். நிதித் தொடர்பான இடர்கள், நட்டங்கள் ஏற்படும் போதும், விற்கப்படாமல் சரக்கிருப்புக் குவிந்திருக்கும்போதும்,

குத்தகைக் காலம் முடிந்தபோதும், உரிமைக் காலம் முடிந்த போதும், சுரங்கத்தில் கனிப்பொருள்கள் தீர்ந்துவிட்டபோதும் மூடுதல் ஏற்பட்டால் அது பணியாண்மையரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில் ஏற்பட்டது எனச் சொல்ல முடியாது. சுரங்க நிறுவனமானால் கனிப்பொருள்கள் தீர்ந்த நிலையில் தொழிலாளர்களுக்கு அதே ஊதியத்தில், அதே நிபந்தனை களுடன் வேலை தரப்பட்டாலும், தொடர்ச்சியான மாற்று வேலை அளிக்கப்பட்டாலும், வேலைநீக்கத்தின்பொழுது இழப்பீடு தரவேண்டும் என்ற நிபந்தனையுள்ள வேலையிலிருந்து இம் மாற்றுவேலை மாறுபட்டிருந்தாலும் இழப்பீடு தரவேண்டிய அவசியமில்லை. வீடு, அணை கட்டுதல், பாதை-கால்வாய் அமைத்தல் போன்ற வேலைகள் ஆரம்பித்த நாளிலிருந்து இரண்டாண்டுக்குள் முடிந்துவிட்டால் தொழிலாளர்களுக்கு இழப்பீடு தரவேண்டியதில்லை. மாறாக இரண்டாண்டுகளுக்கு மேல் சென்று தொழிலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அறிவிக்கை விடவேண்டும்; இழப்பீடு தரவேண்டும். இந் நிலையில் தொழிலாளர் விரும்பினால் தொடர்ந்து வேலை செய்யும் உரிமை அவருக்குண்டு. இண்டஸ்ட்ரியல் எம்பிளாயீஸ் யூனியன் (எ) ஜே. கே. காட்டன் ஸ்பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி 1956 என்ற வழக்கில் ஓர் அலுவலக எழுத்தருக்குக் கூலி வேலை தரப்பட்டது. அதை அவர் ஏற்க மறுத்துவிட்டார். அவர் மாற்று வேலையை மறுத்தது நியாயம் என்றும் அவருக்கு இழப்பீடு தரவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

25. தொழிற்சாலைகள் சட்டம் (1948)

(The Factories Act, 1948)

1948ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டம் தொழிலாளர்கள் உடல்நலன், பணிநேரம், பெண்களை வேலைக்கமர்த்தல், சிறுவர்களை வேலைக்கமர்த்தல் போன்றவைகளை விளக்கமாகக் கூறுகிறது.

தொழிற்சாலை [பிரிவு 2 (m)]

எந்த ஒரு கட்டடத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகிறார்களோ அல்லது கடந்த 12 மாதங்களில் பணிபுரிந்தனரோ அந்த இடம் தொழிற்சாலை எனப்படும். அங்கு விசையின் உதவியோடோ சாதாரணமாகவோ உற்பத்தி நடந்து கொண்டிருக்க வேண்டும். அதேபோல் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் விசையுதவியில்லாமல் பணிபுரிந்தாலும் அதனையும் தொழிற்சாலையாகக் கொள்ளலாம். ஆனால், 1952ஆம் ஆண்டு சுரங்கச் சட்டத்தின்படி இயங்கும் சுரங்கமும், இரயில்வே கூடமும் தொழிற்சாலைகளாகா. எளிய சொற்களில் சொல்ல வேண்டும் என்றால் தொழிற்சாலை என்பது ஒரு கட்டடமும் அதன் சுற்றுப் புறமுமாகும். அங்கு 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் விசையின் உதவியுடன் உற்பத்திப் பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். கடந்த 12 மாதங்களாகப் பணியாற்றி வர வேண்டும் அல்லது விசை உதவியின்றி 20 பேர்கள் அல்லது அதற்கு மேல் உள்ளவர்கள் பணியாற்ற வேண்டும். 'Precinct' என்னும் ஆங்கில வார்த்தைக்குச் சுற்றுச் சுவர்களுக்கு உட்பட்ட பகுதி எனப் பொருள். அதாவது ஓர் எல்லை, வரையறை, சுவர்களால் சூழப்பட்ட இடம் அல்லது எல்லைகள் அமைக்கப்பட்ட ஓர் இடம் அல்லது கட்டடம் அல்லது தொழிற்சாலையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட இடம் எனத் தொழிற்சாலை இலக்கணத்தில் கூறப்பட்டுள்ளது. விற்பனைக்காக மூலப் பொருள்களை மாற்றியும் சுத்தம் செய்தும் தரப்படுகின்ற விவசாயப் பண்ணைகளுக்கும் தொழிற்சாலைச் சட்டத்தைப் பயன்படுத்தலாம். ஆனால், அங்கு எப்பொழுதும் 20 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டே இருக்க வேண்டும். 10 அல்லது

20 தொழிலாளர்களுக்குக் குறைந்து உற்பத்திப் பணியில் ஈடுபடாத இடங்களைக் கடைகள் - சிறு நிறுவனங்கள் சட்டம் கண் காணிக்கும். ஒரே குடும்பத்தைச் சாராத 10 அல்லது 20 தொழி லாளர்களுக்குக் குறைந்து பணியாற்றும் இடத்தைத் தொழிற் சாலை என மாநில அரசு அறிவிக்கலாம். பயிற்சி நிலையம், கல்வி நிலையம் போன்றவைகளில் 20-க்குக் குறைந்தவர்கள் பயிற்சி பெற்றால் மாநில அரசு அவைகளுக்குத் தொழிற்சாலைச் சட்டத் தின் விதிகளிலிருந்து விதிவிலக்கு அளித்திடும் பிராஸ் (எ) இலண்டன் கவுன்சில், 1904 என்ற வழக்கின்படி ஒரே கட்டடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்சாலையிருக்கலாம். ஒரே கட்டடத்தில் உள்ள பல்வகைத் துறைகள் பல்வகைத் தொழிற்சாலைகளாகக் கருதப்படுகின்றன.

திறந்த வெளியில் உப்புத் தயாரிக்கப்படும் உப்பளமும் அதற்காகத் தாற்காலிகமாகப் போடப்பட்டுள்ள கொட்டகையும் தொழிற்சாலைதான் என்ற கருத்து எ. ஹெச். பிலாண்டிவாலா (எ) ஸ்டேட் ஆஃப் பாம்பே 1958 என்ற வழக்கில் கூறப்பட்டது. கீழ்க்காணும் சிறு நிறுவனங்களும் தொழிற்சாலைகளாக நீதி மன்றத்தால் கருதப்பட்டன:

1. பொதுமக்கள் தேவைக்காக உணவு, பானங்கள் முதலியன தயாரிக்கப்படும் நிறுவனங்கள் தொழிற்சாலை களாகும் (மூசா காசிமி (எ) கே. எம். ஷெரீப், 1950, சென்னை).

2. இரயில்வே பணிமனைகள் (இந்தர்சிஸ் (எ) செக்ரட்டரி ஆஃப் ஸ்டேட், 1929, லாகூர்).

3. ஒரு கட்டடத்தில் உற்பத்தித் தொழிலில் 7 நிரந்தரத் தொழிலாளர்களும் 3 தாற்காலிகத் தொழிலாளர்களும் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதில் ஈடுபட்டிருந்தார் கள். எனவே, அது ஒரு தொழிற்சாலையென ஹரி கிருஷ்ணன் (எ) உ. பி. ஸ்டேட், 1959 என்ற வழக்கில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

4. பருத்திக்கொட்டையிலிருந்து பஞ்சைப் பிரிப்பதும் அதை ஒழுங்குபடுத்துவதும் உற்பத்தி முறைதான். எந்தக் கட்டடத்தில் மேற்கூறிய நடவடிக்கை நடந்ததோ அது தொழிற்சாலையெனத் தீர்ப்புக் கூறப்பட்டது (ஷெக் ஜாபர் (எ.) ஷெக் இஸ்மாயில், 1937, நாக்பூர்).

நெருக்கடி காலத்தில் விதிவிலக்கு (பிரிவு 5)

பொதுமக்கள் நன்மைக்காக நெருக்கடி காலத்தில் மாநில அரசு பிரிவு 67 விதியைத் தவிர ஏனைய தொழிற்சாலைச் சட்டத்தின் விதிகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தளர்த்திடலாம். ஆனால், இதுபற்றி அரசாங்கச் செய்தி மலரில் அறிவிப்பு வர வேண்டும். அத்தகைய காலம் ஒரே நேரத்தில் மூன்று மாதங்களுக்கு மேல் போகக் கூடாது.

உற்பத்தி முறைகள்

ஒரு பொருளைச் செய்வற்கும், மாற்றுவதற்கும், பழுது பார்ப்பதற்கும், அலங்கரிப்பதற்கும், முடிப்பதற்கும், கட்டுவதற்கும், எண்ணெய் இடுவதற்கும், துடைப்பதற்கும், சுத்தம் செய்வதற்கும், உடைப்பதற்கும், தகர்ப்பதற்கும் பயன்படுத்தும் முறைகளே உற்பத்தி முறைகள் என்கிறோம். ஆனால் இங்கு அப் பொருளைப் பயன்படுத்த வேண்டும் அல்லது விற்க வேண்டும். சேர்ப்பிக்க வேண்டும் அல்லது எண்ணெய் எடுக்க வேண்டும் அல்லது எண்ணெய், தண்ணீர், கழிவுநீர் போன்றவைகளை இறைக்க வேண்டும். அச்சிற்காக அச்சு வார்ப்புகளைக் கோத்தல், அச்சடித்தல், புத்தகங்களைச் சேர்த்துக் கட்டுதல் போன்றவைகளும் உற்பத்தி முறையாகும். கப்பல் கட்டுதல், திருத்தி அமைத்தல், பழுதுபார்த்தல், சுத்தம் செய்தல், உடைந்த கப்பல்களைத் திரும்பக் கட்டுதல் போன்றவைகளும் உற்பத்தி முறையாகும். பாதுகாத்தல், குளிர்சாதனத்தில் சேமித்தல் போன்றவைகளும் உற்பத்தி முறைகளாகும். விசை உற்பத்தி செய்தல், விசை மாற்றுதல் போன்றவையும் உற்பத்தி முறைகளாகும்.

கீழ்க்காணும் வழக்குகளில் காணப்பட்ட முறைகள் உற்பத்தி முறைகளென நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டன:

1. வி. எம். படேல் (எ) இன்ஸ்பெக்டர் ஆஃப் பேக்டரீஸ், 1938, கரேல் என்ற வழக்கில் விற்பனைக்காக மிளகைச் சுத்தம் செய்யும் முறையும் உற்பத்தி முறையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

2. மேனேஜர், ஜெமினி ஸ்டுடியோ மெட்ராஸ் (எ) ஸ்டேட் 1951 என்ற வழக்கில் கச்சா சினிமாப் படச் சுருள்களைத் திரையரங்கில் திரையிடுவதற்குத் தகுதியாக மாற்றியமைத்த முறை உற்பத்தி முறையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

3. தண்ணீர் இறைப்பதற்குப் பயன்படுத்திய மின்சார மோட்டாரும் ஓர் உற்பத்தி முறையாகும்.

4. புகையிலையை ஈரம் போக்கி விறைப்பாக்கிக் கட்டுமானம் செய்வதும் ஓர் உற்பத்தி முறையென்று வி. கோபால் ராவ் எ. பப்ளிக் பிராசிகியூட்டர் 1969 என்ற வழக்கில் உறுதி செய்யப்பட்டது.

5. பீடி உற்பத்தி செய்வதும் உற்பத்தி முறையே என்று சிந்தாமன் ராவ் எ. ஸ்டேட் ஆஃப் மத்திய பிரதேஷ் 1968 என்ற வழக்கில் சொல்லப்பட்டது.

6. ஒரு சிற்றுண்டிச் சாலையின் சமையலறையில் தயாரிக்கப் படும் உணவுகள், தின்பண்டங்கள் தயாரிக்கப்படுவதும் உற்பத்தி முறையாகும் என்பதே லட்சுமணராவ் அண்ட் சன்ஸ் எ.அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஆஃப் பேக்டரீஸ் 1950, ஆந்திரப்பிரதேஷ் என்ற வழக்கில் கூறப்பட்டது.

7. சாக்குப்பைகளைப் பயன்படுத்துவதற்காகப் பழுது பார்ப்பதும் உற்பத்தி முறையாகும் என்பது S.E. செட்டியார் எ. இன்ஸ்பெக்டர் ஆஃப் பேக்டரீஸ் 1966 என்ற வழக்குக் கூறுகிறது.

ஒரு பொருள் துய்ப்பதற்காகவும் மற்றோர் உற்பத்தி முறைக்கு மூலப்பொருளாகவும் மாற்றும் முறையே உற்பத்தி முறையாகும்.

தொழிலாளி

ஒருவர் நேரடியாகவோ, முகவர் மூலமோ, ஊதியத்திற் காவோ, இனாமாகவோ ஏதாவது ஓர் உற்பத்திமுறையில் அல்லது எந்திரத்தைச் சுத்தப்படுத்துவதில், உற்பத்திமுறை சம்பந்தப் பட்ட வேலையில் இருந்தாலும் தொழிலாளி எனப்படுவார். அவர் நிரந்தரமாக வேலைக்கமர்த்தப்பட வேண்டும் என்று அவசிய மில்லை. எனவே தினக் கூலிக்காக அமர்த்தப்படும் ஒருவரும் இப் பிரிவின் நோக்கத்திற்காகத் தொழிலாளியாகக் கருதப்படுகிறார். பணி அடிப்படையில் கூலி பெறும் ஒருவரும் தொழிலாளியாவார். அமர்த்தப்பட்டவர் என்ற சொல்லில் எஜமானர்-வேலையாள் என்ற உறவு இருக்க வேண்டுமென்பதைப் பிர்திசந்த் சர்மா எ. பர்ஸ்ட் சிவில் ஜட்ஜ், நாக்பூர், 1961 என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது. வேலைக்கேற்ப ஊதியம் பெறுவோரும் தொழிலாளியாவர்; பயிற்சி பெறுவோரும் தொழிலாளியாவர்.

ஒருவர் தொழிலாளியா அல்லரா என்பது அவருக்கும் பணி யாண்மையருக்குமிடையே உள்ள உறவைப் பொறுத்துள்ளது.

எனவே தனித்தியங்கும் ஒப்பந்ததாரரும் அவரின்கீழ் வேலை செய்பவர்களும் தொழிலாளிகள் அல்லர். காரணம் அவர்களிடையே எஜமானர் - வேலையாள் என்னும் உறவு இல்லை.

இலக்கணங்கள்

உரிய வயதுடையோர் (Adult)

18 வயது நிரம்பியவர்கள் அனைவரும் உரிய வயதை உடையவர்களாகிறார்கள்.

காளையர் (Adolescent)

காளைப் பருவத்தை எய்தியவர்கள், அதாவது 15 வயது நிரம்பியும் அதேசமயம் 18 வயது நிரம்பாமலும் இருப்பவர்கள்.

குழந்தை (Child)

15 வயது நிரம்பாதவர்கள்.

இளையவர்கள் (Young Persons)

இவர்கள் ஒரு குழந்தையாகவும் இருக்கலாம் அல்லது காளைப் பருவத்தினராகவும் இருக்கலாம்.

நாட்காட்டி ஆண்டு (Calender Year)

ஜனவரி 1ஆம் தேதியை ஆரம்பமாகக் கொண்டு 12 மாதங்களுக்கான காலம் நாட்காட்டி ஆண்டாகும்.

நாள்

நடுநிசியிலிருந்து ஆரம்பிக்கும் 24 மணிகளைக் கொண்டதாகும்.

வாரம் (Week)

சனிக்கிழமை நடுநிசியிலிருந்து ஆரம்பித்து ஏழு நாள்கள் வரையிலுள்ள காலப்பகுதியாகும். அல்லது தொழிற்சாலை, தலைமை மேற்பார்வையாளரின் அனுமதியுடன் கொண்ட நடுநிசியிலிருந்து ஏழு நாள்களாகும்.

விசை (Power)

மின்சார விசை அல்லது இயந்திரம் மூலம் கிடைக்கும் விசை, மனிதர்கள்-விலங்குகளால் உருவாக்கப்படாத விசை ஆகியவைகளைக் கொண்டதாகும்.

பொறி இயக்கம்

ஒரு பொறியின் முக்கியப் பாகங்களான தண்டு, சக்கரம், உருளை, கப்பி, பிடி, இணைத்தல் போன்ற பாகங்களைக் கொண்டு பொறியையோ ஒரு கருவியையோ இயங்கச் செய்வது பொறியியக்கமாகும்.

முக்கிய விசைக்கருவி

இயந்திரம், மோட்டார் போன்ற சாதனங்களைக் கொண்டு விசையை உண்டாக்குவது முக்கிய விசைக்கருவியாகும்.

பொறி

முக்கிய விசைக்கருவி, இயந்திர இயக்கம், ஏனைய சாதனங்களை உள்ளடக்கி விசையை உண்டாக்கும் அல்லது மாற்றிடும் அல்லது பயன்படுத்தும் கருவியாகும்.

கட்டுப்பாட்டாளர் (Occupier)

ஒரு தொழிற்சாலையின் அலுவல்களை எவர் ஒருவர் இறுதியாகக் கட்டுப்படுத்துகிறாரோ அவர் கட்டுப்பாட்டாளர் ஆவார். தொழிற்சாலையில் அலுவல்கள் ஒரு மோலாண்மை இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் அவர்தாம் நிருவாகக் கட்டுப்பாட்டாளராவார்.

தொழிற்சாலையின் நிருவாகத்திற்கு யார் பொறுப்போ அவர் தாம் கட்டுப்பாட்டாளர். அவர் தொழிற்சாலையின் உரிமையாளராகக்கூட இருக்கலாம். ஆனால் ஒரு கூட்டு வாணிக நிறுவனமோ அலுவலக மேலாளரோ கட்டுப்பாட்டாளராக முடியாது. ஆனால் ஒரு தொழிற்சாலையின் நிருவாகத்தில் இறுதி அதிகாரம் உடைய ஒரு கூட்டாளி கட்டுப்பாட்டாளராவார். இக் கருத்து சோகன்லால் எ. ஸ்டேட் ஆஃப் ராஜஸ்தான் 1962 என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது. ஒருவர் உரிமையாளராக இருக்கலாம், அல்லது குத்தகைதாரராகவோ அல்லது உரிமை பெற்றவராகவோ இருக்காலம். ஆனால் சொத்துரிமையும் நிருவாக உரிமையும் பெற்றிருந்தால் அவர் கட்டுப்பாட்டாளர் ஆகிறார் என எம்பரர் எ. ஜாம் ஷெட்ஜி என். மோதி 1931 பம்பாய் என்ற வழக்கில், தொழிற் சாலைக் கட்டடத்திலேயே குடியிருப்பதால் ஒருவர் கட்டுப்பாட்டாளராகமாட்டார் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலாளர் இல்லாதபோது கட்டுப்பாட்டாளர்தாம் மேலாளர் என ராம் கிளோர் ஜீன்ஜீ என்லாலா எ. பிரஸ்கிரப்டு அதாரிடி 1976) என்ற வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது.

மாற்றுமுறையில் வேலை செய்தல் (Relay)

ஒரு நாளிலுள்ள வெவ்வேறு காலப் பகுதிகளில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேலைக் குழுக்கள் மாற்றுமுறையில் வேலை செய்வது அஞ்சல் முறையில் வேலையாள்கள் பணி செய்வதாகும். அத்தகைய ஒவ்வொரு காலப் பகுதியும் மாற்றுமுறைக் காலப்பகுதி (Shift) ஆகும்.

நேரத்தை நிருணயம் செய்தல்

தொழிற்சாலைகள் சட்டத்தில் ஒரு நாளின் நேரத்தையும் அல்லது இந்தியத் தர நேரத்தைப் பற்றியும் சொல்லப் பட்டுள்ளது. இந்தியத் தர நேரம் என்பது கிரீன்வீச் நேரத்தை விட 5½ மணிகள் அதிகமாகும். அதைப் பின்பற்றாத இடங்களில் மாநில அரசு அங்குக் கடைப்பிடிக்க வேண்டிய நேரத்தைப் பற்றியவிதிகளை ஏற்படுத்தும்.

தொழிற்சாலைகளின் ஏற்பு–உரிமம்-பதிவு (பிரிவு–6)

1. எந்த மாநிலத்தில் தொழிற்சாலை நிறுவப்படவிருக்கிறதோ அம் மாநிலத்தின் ஏற்பு அல்லது அனுமதி தேவை.

2. தொழிற்சாலை அமைப்புபற்றிய விதிகளை நிருணயம் செய்யும் அதிகாரம் அதற்குண்டு. தொழிற்சாலையைப் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல்-திட்டம் - குறிப்பிட்ட கட்டணம் செலுத்துதல் போன்றவைகளைப்பற்றிய விதிமுறைகளை மாநில அரசு வற்புறுத்திடும்.

3. சட்டத்தின் 7ஆவது பிரிவில் கூறியுள்ள நிபந்தனைகள் படிதான் உரிமம் புதுப்பிக்கப்படும்.

4. தொழிற்சாலை ஆரம்பித்து மூன்று மாதங்களுக்குப் பின் மாநில அரசிடமிருந்து அல்லது தலைமை மேற்பார்வையாளரிடமிருந்து எவ்விதப் பதிலும் வராவிட்டால் அனுமதி தரப்பட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

5. மாநில அரசோ தலைமை மேற்பார்வையாளரோ தொழிற்சாலை அமைத்திட உரிமம் தரவும் அல்லது புதுப்பிக்கவும் மறுத்தால் முப்பது நாள்களுக்குள் மைய அரசுக்கு முறையீடு செய்ய வேண்டும்.

கட்டுப்பாட்டாளரின் அறிவிக்கை (பிரிவு–7)

தொழிற்சாலையைத் தம்வசம் எடுத்துக்கொள்வதற்கு அல்லது அதைப் பயன்படுத்துவதற்குமுன் 15 நாள்கள் அறிவிக்கை

யொன்றைக் கட்டுப்பாட்டாளர் தரவேண்டும். அத்தகைய அறிவிக்கை கீழ்க்காணும் தகவல்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்:

1. தொழிற்சாலையின் பெயர், முகவரி.
2. கட்டுப்பாட்டாளர் அல்லது உரிமையாளர் பெயர், முகவரி.
3. கட்டட-சுற்றுப்புற உரிமையாளரின் பெயர், முகவரி.
4. கடிதத் தொடர்பு அனுப்ப வேண்டிய முகவரி.
5. தொழிற்சாலை தொடங்கப்பட்ட பொழுதும் அல்லது கடந்த மாதங்களிலும் அல்லது எதிர்வரும் 12 மாதங்களிலும் காணப்படும் உற்பத்தி முறையின் தன்மை.
6. பயன்படுத்தும் பொருள்களின் அளவு-தன்மை.
7. இச் சட்டத்தின் நோக்கத்திற்காக உள்ள மேலாளரின் பெயர்.
8. தொழிற்சாலையில் விரைவில் அமர்த்தப்படப்போகிற தொழிலாளர்களின் எண்ணிக்கை.

மேற்பார்வை அதிகாரி (பிரிவு 8)

அரசு செய்தி மலரில் அறிவிப்புச் செய்து மாநில அரசு மேற்பார்வை அதிகாரிகளை வேலைக்கு அமர்த்துகிறது. மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் சட்டத்தில் சொல்லியுள்ளபடி அமைக்கப்பட்டுள்ளனவா, அதன்படி செயல்படுகின்றனவா என அவர்கள் மேற்பார்வை செய்கின்றனர். மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கைக்கேற்ப இவர்களின் எண்ணிக்கையும் உள்ளது. இவர்களில் தலைமை மேற்பார்வையாளர், இணை மேற்பார்வையாளர், துணைத் தலைமை மேற்பார்வையாளர் போன்றோர் உள்ளனர். சட்டத்தின் 8 ஆவது பிரிவின்படி மேற்கூறிய அதிகாரிகளும் ஏனைய அதிகாரிகளும் இந்தியக் குற்றப் பிரிவுச் சட்டத்தில் சொல்லிய பொருள்படி பொதுப் பணியாளர்கள் ஆகிறார்கள்.

தொழிற்சாலையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறையுடைவர்களும் அல்லது அங்குள்ள உற்பத்தி முறை-வியாபாரம், பொறி ஆகியவைகளோடு தொடர்புடையவர்களும் மேற்கூறிய மேற்பார்வை அதிகாரிகளாக நியமிக்கப்படமாட்டார்கள்.

மேற்பார்வை அதிகாரியின் அதிகாரங்கள்

எந்த உள்ளூர் எல்லைக்கு அமர்த்தப்பட்டாரோ அந்த எல்லைக்குள் உள்ள மேற்பார்வை அதிகாரி எந்தத் தொழிற் சாலைக்குள்ளும் அரசு அலுவலர் உதவியுடன் நுழைந்திடலாம்; கட்டடச் சுற்றுப்புறத்தையும் தளவாடங்களையும் மேற்பார்வை யிடலாம்; தொழிற்சாலை தொடர்பான எத்தகைய ஆவணங் களையும் பதிவேடுகளையும் காட்டச் சொல்லிக் கேட்கலாம். அவருக்குள்ள ஏனைய அதிகாரங்களையும் பயன்படுத்தலாம். அவரைக் குற்றம் சாட்டும் அதிகாரம் எவருக்குமில்லை.

மேற்பார்வையாளரைத் தடுப்பதற்கான தண்டனை

தொழிற்சாலை ஆவணங்களை மேற்பார்வையிடாமல் அவரைத் தடுப்பவருக்கும், தொழிற்சாலை எந்திரம், கட்டடம் ஆகியவைகளை மேற்பார்வையிடாதபடி தடுப்பவருக்கும் மூன்று மாதச் சிறைத் தண்டனையும், ரூ. 500 அபராதமும், அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

சான்று வழங்கும் மருத்துவ அதிகாரி (பிரிவு 10)

மாநில அரசு எந்த ஒரு பகுதிக்கும் அல்லது எந்த ஓர் இடத் திற்கும் சான்று வழங்கும் மருத்துவ அதிகாரியாக தகுதி வாய்ந்த மருத்துவர்களை நியமிக்கும். ஆனால் அவர் தொழிற்சாலையின் உரிமையாளராகவோ, தொழிற்சாலை விவகாரத்தில் அக்கறை யுடையவராகவோ, தொழிற்சாலையிலுள்ள எந்திரம் அல்லது தொழிலாளிகளிடம் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர் புடையவராக இருக்கக் கூடாது.

கடமைகள்

1. சட்டத்தில் சொல்லியுள்ளபடி இளம்வயதினர்களைப் பரி சோதித்துச் சான்று வழங்கல்.

2. அபாயகரமானது என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் வேலை செய்பவர்களைப் பரிசோதித்தல்.

3. மருத்துவ உதவி அளித்தல். ஆனால் தொழிற்சாலையின் உற்பத்தி முறையாலும், ஏனைய பணி நிபந்தனைகளாலும் நோய் வர வேண்டும். உற்பத்திமுறையில் ஏற்பட்ட மாறுதலாலும் அல்லது உற்பத்திக்காகப் பயன்படுத்திய பொருள்களாலும் நோய் வரவேண்டும். அவர்களின் உடல்நலத்தைக் கெடுக்கும் வேலையில் அவர்கள் ஈடுபட்டிருக்க வேண்டும்.

தொழிலாளர்கள் உடல் நலன் (பிரிவு 1–120)

சட்டத்தின் மூன்றாவது அத்தியாயத்தில் பணியாண்மையர் தொழிலாளர் உடல்நலனுக்குச் செய்யவேண்டிய காரியங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவைகளாவன:

1. சுத்தம்-தேவையில்லாப் பொருள்களையும் வீணான பொருள்களையும் அப்புறப்படுத்தல் :

தொழிற்சாலை சுத்தமாக இருக்க வேண்டும். குப்பை கூளங்களை அகற்ற வேண்டும். உற்பத்திமுறையின்போது உண்டாகும் வீணானவைகளையும் தேவையற்ற பொருள்களையும் அகற்ற வேண்டும். வேலை செய்யப்படும் ஒவ்வோர் அறையும் குறைந்தது வாரத்திற்கு ஒருமுறையாவது சுத்தப்படுத்தப்பட வேண்டும். தொற்றுநோய் போக்கும் மருந்துகளைத் தெளிக்க வேண்டும். உற்பத்தி முறையில் ஏதாவது திரவம் சிந்தக்கூடியதாக இருந்தால் தகுந்த வடிகால் வெட்டி அது வடியக்கூடிய வசதியைச் செய்து தரவேண்டும்.

2. காற்று வசதி

உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்கும் காற்றை அகற்றிப் புதுக் காற்று உள்ளே வரும்படியான நவீன காற்றுவசதி இயந்திரக் கருவிகளைப் பொருத்த வேண்டும்.

3. தூசு அகற்றல்

உற்பத்தி முறையால் ஏற்படும் தூசு, ஏனைய அசுத்தங்களை அப்புறப்படுத்த வேண்டும். தொழிலாளர்கள் அவைகளை நாசி மூலம் இழுக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. செயற்கைமுறை ஈரப்பசை (Artificial humidity)

காற்று ஈரப்பசையைச் செயற்கை முறையில் அதிகப்படுத்த முயலும்போது பயன்படுத்தப்படும் தண்ணீர் சுத்தமானதாக இருக்க வேண்டும்; தொழிலாளர்கள் உடல்நலனைப் பாதிக்கக் கூடியதாக இருக்கக்கூடாது. எந்த அளவிற்கு அஃது இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு இருக்க வேண்டும்.

5. அதிக நெருக்கம் இருக்கக்கூடாது

தொழிற்சாலைகளில் அதிக நெருக்கம் இருக்கக்கூடாது. தொழிற்சாலைச் சட்டம் அமலுக்கு வருவதற்குமுன் அறையின் தரைக்குமேல் உள்ள 14 அடி உயரத்திற்குமேல் உள்ள இடத்தில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் 350 கன அடி இடம்

இருக்க வேண்டும். தொழிற்சாலைச் சட்டம் வந்த பிறகு அத்தகைய இடத்தில் 500 கனஅடி இடம் இருக்க வேண்டும். கூரை தரையிலிருந்து குறைந்தது 14 அடி உயரத்தில் இருக்க வேண்டும்.

6. வெளிச்சம்

தொழிலாளர் வேலைசெய்யும் இடத்திலும் அல்லது புழங்கும் இடத்திலும் போதுமான இயற்கை அல்லது செயற்கை அல்லது இரண்டும்கூடிய வெளிச்சம் இருக்க வேண்டும். ஜன்னல்களில் வெளிச்சம் ஊடுருவும் கண்ணாடிகளைப் பொருத்த வேண்டும். அவை இருபுறமும் சுத்தமாக இருக்க வேண்டும்; வெளிச்சம் வருவதைத் தடுக்கக் கூடாது.

7, குடிதண்ணீர் வசதி

நல்ல குடிதண்ணீர் வசதி எல்லாருக்கும் சௌகரியமான இடத்தில் அமைக்கப்பட வேண்டும். அத்தகைய இடங்களில் 'குடிதண்ணீர்' என்று பெரும்பான்மையானவர்கள் புரிந்து கொள்ளும் மொழியில் எழுதப்பட வேண்டும். 250 தொழிலாளர் கள் வேலை செய்யும் இடத்தில் கோடைக்காலத்தில் தண்ணீரைக் குளிராக்க வேண்டும். குடிதண்ணீர் வைக்கப்பட்டிருக்கும் இடம் கழிவறையிலிருந்து குறைந்தது 20 அடி தள்ளியிருக்க வேண்டும்.

8. கழிவறைகள்

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் போதுமான சிறுநீர் கழிக்கும் இடங்களும், கழிவறைகளும் எல்லாருக்கும் எல்லா நேரங்களிலும் வசதியாகவும் அருகிலும் கிடைக்கும்படி அமைக்கப்பட வேண்டும். அத்தகைய கழிவறைகள் சுத்தமாக வைத்திருக்கப் பட வேண்டும். அதற்காகச் சுத்தம் செய்பவர்களை அமர்த்திச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஆண்களுக்கும் பெண் களுக்கும் தனித்தனியாகச் சிறுநீர் கழிக்கும் இடங்களும் கழிவறைகளும் இருக்க வேண்டும். அவைகளில் போதிய வெளிச்சமும் காற்றுவசதியும் இருக்க வேண்டும்.

9. துப்பும் தொட்டிகள்

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் போதுவான துப்பும் தொட்டி கள் வசதியான இடங்களில் வைக்கப்பட வேண்டும். அவை சுத்தமாக இருக்க வேண்டும். இவற்றில் தவிர வேறு இடங்களில் யாரும் துப்பிட அனுமதிக்கக் கூடாது. இதை மீறுபவர்களுக்கு ரூ. 5 அபராதம் விதிக்க வேண்டும்.

தொழிலாளர் பாதுகாப்பு (பிரிவு 21–41)

தொழிற்சாலைகள் சட்டத்தின்படி தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் பாதுகாப்பை, உரிமையாளர் சட்டப்படி செய்தாக வேண்டும். இதுபற்றிய சட்ட விதிகள் முழுதும் கைப்பற்றியாக வேண்டும். தொழிற்சாலைத் தலைமை மேற் பார்வையாளரிடமிருந்து அறிவிக்கையோ எச்சரிக்கையோ வர வேண்டும் என்று அவசியமில்லை. சட்டத்தில் அத்தியாயம் IV-ல் இதுபற்றிய விதிகள் கூறப்பட்டுள்ளன.

1. இயந்திரத் தடுப்பு

அபாயகரமான இயந்திரங்களைச் சுற்றிப் பாதுகாப்பான வேலியோ தடுப்புகளோ போடப்படவேண்டும். அத்தகைய பாதுகாப்புத் தடுப்புகள் என்றும் பராமரிக்கப்பட வேண்டும். இயந் திரத்தின் பாகங்கள் இயங்கும்பொழுது அவை தக்க இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

2. இயங்கிக்கொண்டிருக்கும் இயந்திரத்தில் வேலை

இயங்கிக்கொண்டிருக்கும் இயந்திரத்தின் ஒரு பகுதியைச் சோதனை செய்ய வேண்டுமென்றால், அதனை மூத்த ஆண் தொழிலாளர் உரிமையாளர் தந்த இறுக்கமான உடையணிந்து செய்ய வேண்டும். ஆனால் அப் பகுதி பெரியதாக இருந்தால் அவ்வாறு சோதனை செய்யக் கூடாது. எனவேதான் மாநில அரசு ஓர் இயந்திரம் இயங்கிக் கொண்டிருக்கும்போது சுத்தம் செய்வதையும், பசை போடுவதையும், சரிக்கட்டுவதையும் தடை செய்துள்ளது.

3. சக்கரங்களைச் சக்கரங்களால் இயக்குதல்

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் சக்கரங்களைச் சக்கரங் களால் இயக்கும் முறை பயன்படுத்தி இயக்கும் பட்டையைக் கப்பி மீது மேலும் கீழும் இயங்கச் செய்ய வேண்டும். இத்தகைய இயக்கும் பட்டை பயன்படுத்தாதபோது இயங்கிக் கொண்டிருக்கும் தண்டின் மீது படக்கூடாது, அல்லது அதன்மீது இயங்கக்கூடாது.

4. தானே இயங்கும் இயந்திரம்

தானே இயங்கும் இயந்திரத்தில் அது நகர்ந்து செல்லும் போது அது ஏற்றிச்செல்லும் பொருள்களை யாரும் கடந்து செல்லக்கூடாது. ஒரு தொழிலாளர் வேலையில் ஈடுபட்டிருந் தாலும் சரி, சும்மா இருந்தாலும் சரி அத்தகைய இயங்கிக் கொண் டிருக்கும் அல்லது ஓடிக்கொண்டிருக்கும் இயந்திரத்திலிருந்து

45 சென்டிமீட்டர் தள்ளியே இருக்க வேண்டும். ஆனால் தொழிற் சாலைச் சட்டம் அமலுக்கு வருவதற்குமுன் தலைமை மேற் பார்வையாளர் கருதினால் அத்தகைய இயந்திரம் தொடர்ந்து இயங்கிட இசைவு தரலாம்.

5. புதிய இயந்திரம்

விபத்துகளைத் தடுக்கும்படி புதிய இயந்திரங்கள் பொருத் தப்பட வேண்டும்.

6 உயர்த்தும் இயந்திரம் (Lift)

இச் சாதனம் நல்ல உலோகத்தால் வன்மையுடையதாக உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அடிக்கடி பழுதுபார்க் கப்படவேண்டும். குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை யாவது தகுந்தவரால் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

7. உயர்த்தும் இயந்திரம், சங்கிலி, கயிறு, சகடை போன் றவை குறித்து மிகுந்த பாதுகாப்புத் தரப்பட வேண்டும். மனிதர் களையும் பொருள்களையும் ஏற்றும்போதும் இறக்கும்போதும் குறிப் பிடப்பட்டுள்ள பாதுகாப்புகள் எடுக்கப்பட வேண்டும். இதுபற்றித் தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்தினைத் தடுக்க மாநில அரசு மேலும் சில விதிகளை நிருணயித்துள்ளது.

8. சுழலும் இயந்திரம்

சுழலும் அல்லது அரைக்கும் இயந்திரங்கள் மூலம் தொழி லாளர்களுக்கு ஏற்படும் விபத்துகளைத் தடுக்கப் போதிய பாது காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கல் இயந்திரங் களில் விளிம்பு சுற்றும் வேகத்தையும் ஒவ்வொரு சக்கரம் சுற்றும் வேகத்தையும் குறிப்பிட்டு அந்த வேகத்தை மீறக்கூடாது என்ற அறிவிப்பு ஒன்று எழுதி வைக்கப்பட வேண்டும்.

9. அழுத்தம் தரும் இயந்திரம் (Pressure plant)

உற்பத்தி முறையில் அழுத்தம் தரும் இயந்திரத்தைப் பயன் படுத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்குமேல் அழுத்தம் போகாமல் தகுந்த பாதுகாப்பு எடுக்க வேண்டும்.

10. தரைகள், படிகள் முதலியன

தரைகள், படிகள், செல்லும் வழிகள் போன்றவை வழுக்கக் கூடியதாகவும் பாதுகாப்பில்லாமலும் இருக்கக்கூடாது. எங்கெங்குத் தேவையோ அங்கெல்லாம் படிகளும் வழிகளும் வழுக்காமலிருப்

பதற்காகத் தண்டவாளங்கள் அல்லது வேலிகள் அமைக்கப்பட வேண்டும்.

1. குழிகள் முதலியன

தரையில் வெட்டப்பட்டுள்ள குழிகள், எண்ணெய்க் குழிகள், பள்ளங்கள் ஆகியவைகளைச்சுற்றித் தொழிலாளர்கள் விழுந்து விடுவதைத் தடுத்திடத் தகுந்த வேலி போடவேண்டும்.

12. அதிகச் சுமைகள்

எந்தத் தொழிலாளரும் அதிகக் கனமுள்ள—காயம் ஏற்படக் காரணமாக உள்ள சுமைகளைத் தூக்கிட அனுமதிக்கக் கூடாது.

13. கண், நுரையீரல் போன்றவைகளின் பாதுகாப்பு

தொழிலாளர்களின் கண், நுரையீரல் போன்றவைகளைப் பாதுகாக்க வேண்டும். உற்பத்தி முறையில் ஏற்படும் சுவாலை, அதிக வெளிச்சம், தூசு போன்றவைகளிலிருந்து அவ் வுறுப்பு களைக் காப்பாற்ற வேண்டும். கண்களுக்குப் பாதுகாப்பாகத் திரைச்சீலைகளையும், குளிர்ச்சியூட்டும் கண்ணாடிகளையும் பொருத்த வேண்டும் என்று மாநில அரசு விதிகள் இயற்ற வேண் டும். எங்கு வெடிக்கக்கூடிய—எளிதில் எரியக்கூடிய—வாயு பயன் படுத்தப்படுகின்றதோ அங்கு விபத்தைத் தடுக்கும் முன் னெச்சரிக்கைகள் எடுக்க வேண்டும்.

14. தீபற்றிய முன்னெச்சரிக்கை

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தீ விபத்துக் காலங்களில் தப் பித்துக்கொள்ள வழிவகை ஏற்படுத்த வேண்டும். கதவுகள் வெளிப் புறமாகத் திறக்கும்படி இருக்கவேண்டும். வெளியே செல்லும் வழி (Exit) என்பது சிவப்பு ஒளியால் எழுதப்பட வேண்டும். அல்லது பெரும்பான்மையான தொழிலாளர்களுக்குப் புரியும்படியான மொழியில் அந்த எழுத்துகள் எழுதப்பட வேண்டும். எச்சரிக்கை மணி ஒலித்தல் அல்லது வேறு விதமான உபாயம் இருக்க வேண்டும். மேற்கூறியவை இல்லையென்றால் தலைமை மேற் பார்வையதிகாரி அவைகளை வழங்கிட உரிமையாளருக்கு அறிவிக்கை தருவார் அல்லது அவர் சரியெனக் கருதும் தீ விபத்துத் தடுக்கும் நடவடிக்கைகளை அமைத்திட வேண்டுவார்.

பெண்கள்–குழந்தைகள் பாதுகாப்புக்கான சிறப்பு விதிகள்

1. இயக்கத்திலிருக்கும் எந்த இயந்திரத்தின் பகுதிகளையும் சுத்தம் செய்யவோ, எண்ணெய் போடவோ அல்லது ஒரு

பகுதியைச் சரிக் கட்டவோ பெண்களையும் குழந்தைகளையும் அனுமதிக்கக்கூடாது. காரணம் அந்த இயந்திரத்தாலும் அருகில் உள்ள இயந்திரத்தாலும் அவர்களுக்கு ஆபத்து ஏற்பட வழி யுள்ளது.

2. ஓர் இயந்திரத்தால் விளையும் ஆபத்தையும் அதற்கு எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கையையும் சொன்னால் ஒழிய எந்த ஓர் இளைஞரையும் அங்கு வேலை செய்ய அனுமதிக்கக் கூடாது.

3. பஞ்சு எடுக்கும் இயந்திரம் உள்ள தொழிற்சாலையில் பெண்களையும் குழந்தைகளையும் அதற்காக வேலைக்கமர்த்தக் கூடாது.

தொழிலாளர் நலன் (பிரிவு 42–50)

தொழிலாளர்கள் நலனுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கைகள், சட்டத்தின் 5ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன. அவைகளாவன :

1. சுத்தம் செய்யும் வசதிகள்

பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனியாகச் சுத்தம் செய்யும் வசதிகள் செய்து தரப்பட வேண்டும். அவர்களுக்கு எளிதில் கிடைக்கும்படியாகவும், சுத்தமாகவும், தகுந்த முறையி லும் இவ் வசதி செய்து தரப்பட வேண்டும்.

2. துணி உலர்த்தும் வசதி

வேலை செய்யும்போது தொழிலாளர்கள் துணிமணிகளை வைத்துக்கொள்வதற்கும் உலர்த்துவதற்கும் தகுந்த இடம் அளிக்கப்பட வேண்டும் என்று தொழிற்சாலைகளுக்கு மாநில அரசு ஆணையிட வேண்டும்.

3. உட்காரும் வசதி

நின்றுகொண்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் ஓய்வு எடுப்பதற்கு உட்காரும் இடவசதி அளிக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையிலோ அல்லது குறிப்பிட்ட அறை களிலோ அமர்ந்துகொண்டே தொழிலாளர்கள் திறமையாக வேலை செய்ய முடியும் எனத் தலைமை மேற்பார்வையதிகாரி கருதினால், குறிப்பிட்ட நாள்களுக்குள் அவ் வசதி செய்து தர எழுத்து மூலம் வேண்டுவார். எல்லாருக்கும் இவ் வசதி செய்து தரப்பட வேண்டும்.

4 முதலுதவிப் பெட்டி

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் முதலுதவிப் பெட்டிகளும் சுவர் அலமாரிகளும் உரிய மருந்துடன் இருக்க வேண்டும். 150 தொழிலாளர்களுக்கு ஓர் அலமாரி அல்லது பெட்டி வீதம் இருக்க வேண்டும். தொழிற்சாலைப் பணி நேரங்களில் இவை எளிதில் கிடைக்கும்படியாகவும் முதலுதவி மருத்துவத்தில் பயிற்சி பெற்ற ஒருவரின் மேற்பார்வையிலும் இவை இருக்க வேண்டும். மாநில அரசின் சான்றிதழ் அவர் பெற்றிருக்க வேண்டும். தொழிற் சாலைப் பணி நேரத்தில் அவர் எப்பொழுதும் உதவி புரிபவராக இருக்கவேண்டும். 500 தொழிலாளர்களுக்குமேல் உள்ள தொழிற் சாலை, முதல் உதவிச் சிகிச்சை அறையொன்றையும், அதில் தேவையான மருந்துகளையும், மருத்துவ சேவை செய்யும் அலுவலர் ஒரு வரையும் பெற்றிருக்க வேண்டும்.

5. சிற்றுண்டிச்சாலை (பி. 46)

250 தொழிலாளர்களுக்குமேல் வேலை செய்திடும் தொழிற் சாலையில் ஒன்று அல்லது இரண்டு சிற்றுண்டிச்சாலைகள் இருக்க வேண்டும் என மாநில அரசுகள் விதிகள் விதிக்க வேண்டும். சிற்றுண்டிச்சாலையை நிருவகிக்கத் தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய சிற்றுண்டி மேலாண்மைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அத்தகைய சிற்றுண்டிச் சாலையின் அளவு, கொள் ளிடம், வசதி, மனைத்துணைப்பொருள், அளிக்கப்படும் உணவு வகை, மேலாண்மைக் குழுவின் அமைப்பு, தொழிலாளர்களின் பிரதிநிதிகள், சிற்றுண்டிகளின் விலைகள் போன்றவைகளைப் பற்றி மாநில அரசு விதிகள் ஏற்படுத்த வேண்டும். சிற்றுண்டிச் சாலை நடத்தும் செலவைப் பணியாண்மையர் ஏற்க வேண்டும். அத்தகைய செலவுகள் சிற்றுண்டிகளின் விலையை நிருணயம் செய்ய எடுத்துக்கொள்ளக் கூடாது.

6. தங்குமிடம், ஓய்வு அறை, உணவு அருந்தும் அறை முதலியன

150 தொழிலாளர்களுக்குமேல் உள்ள ஒவ்வொரு தொழிற் சாலையிலும் தங்குமிடமும், ஓய்வு எடுக்கும் அறையும், அவர்கள் கொண்டுவரும் உணவை அருந்த உணவருந்தும் அறைகளும் அவசியம் இருக்க வேண்டும். அவை நல்ல வெளிச்சமும் காற் றோட்டமும் பெற்றிருக்க வேண்டும்; குளிர்ச்சியாகவும் தூய்மை யாகவும் இருக்க வேண்டும். பணியாண்மையரால் நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகளுக்கு மேற்கூறிய விதிகள் தேவையில்லை.

7. குழந்தை தங்குமிடம் (Creche)

முப்பதுக்கு மேற்பட்ட பெண்தொழிலாளிகள் பணிபுரியும் தொழிற்சாலைகளில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் அறைகள் இருக்க வேண்டும். அத்தகைய அறைகள் ஆறுவயதிற்குட்பட்ட குழந்தைகள் தங்குவதற்கு வசதியாக இருக்க வேண்டும். அத்தகைய அறைகள் வெளிச்சமும் காற்றோட்டமும் உடையனவாக இருக்க வேண்டும்; பயிற்சியளிக்கப்பட்ட ஒன்று அல்லது இரண்டு மகளிரின் கண்காணிப்பில் இருக்க வேண்டும். அத்தகைய அறைகளின் அளவு, அமைப்பு, மனைத்துணைப் பொருள்கள், குழந்தைகளின் துணிமணிகளைச் சலவை செய்யும் வசதி, இனாமாக வழங்க வேண்டிய பால், சிற்றுண்டி போன்றவைகளைப் பற்றி மாநில அரசு விதிகளை இயற்ற வேண்டும். போதுமான இடைவெளிகளில் அத்தகைய குழந்தைகளுக்குப் பால் புகட்டவோ உணவு அளிக்கவோ தாய்மார்களுக்கு வசதி செய்து தரப்பட வேண்டும்.

8. தொழிலாளர் நல அதிகாரிகள்

500 தொழிலாளர்களுக்குமேல் பணிபுரியும் தொழிற்சாலைகளில் உரிமையாளர்கள் தகுந்த கல்வித்தகுதியுடையவர்களைத் தொழிலாளர் நல அதிகாரிகளாக நியமிக்க வேண்டும். இவர்களின் தகுதி, கடமைகள், தொண்டுகள் போன்றவைகளை மாநில அரசு வரையறை செய்யும்.

9. சட்டம் இயற்றும் அதிகாரம்

மேற்கூறிய விதிகளிலிருந்து விலக்கு அளிக்கவும், மாற்று நல வசதிகளைச் செய்ய ஆணையிடவும், தொழிலாளர் பிரதிநிதிகள் நிருவாகத்துடன் ஒத்துப்போகவும் மாநில அரசிற்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் உண்டு.

வயதுவந்த தொழிலாளர்களின் பணி நேரம் (பிரிவு 51–66)

தொழிலாளர் சட்டத்தின்கீழ்க் கூறப்பட்ட வயதுவந்த தொழிலாளர்களின் பணிநேரங்கள்பற்றியுள்ள விதிகள் கீழே சொல்லப்பட்டுள்ளன :

1. வார நேரம்

ஒரு வாரத்தில் 48 மணிக்குமேல் எந்த வயதுவந்த தொழிலாளரும் வேலை செய்யக் கூடாது; அவர்களை அவ்வாறு வேலை செய்ய அனுமதிக்கக்கூடாது.

2. தின நேரம்

எந்தத் தொழிலாளியும் ஒரு நாளைக்கு ஒன்பது மணிக்குமேல் வேலை செய்யக் கூடாது. ஆனால் தலைமை மேற்பார்வை அதிகாரியின் முன்அனுமதி பெற்று மாற்று வேலை நேரத்திற்குத் தகுந்தபடி அதிகப்படியான நேரத்திற்கு வேலை செய்திடலாம்.

3. ஓய்விற்காக இடைவேளை

வயதுவந்த தொழிலாளர்கள் ஒரேயடியாக ஐந்து மணி நேரத்திற்குமேல் வேலை செய்யக் கூடாது. குறைந்தது அரைமணி நேரமாவது ஓய்வு இருக்க வேண்டும். மாநில அரசோ தலைமை அதிகாரியோ எழுத்து மூல ஆணையின்படி இந்த விதியிலிருந்து விதிவிலக்குத் தரலாம். ஆனால் ஒரே நேரத்தில் அவர்கள் ஆறு மணிக்குமேல் வேலை செய்யக் கூடாது.

4. வேலை நேரம் (Spread over)

வயதுவந்த தொழிலாளர்களின் வேலை நேரம் ஓய்வு நேர இடைவேளை உட்படப் பத்தரை மணிக்குமேல் இருக்கக்கூடாது. ஆனால் தலைமை அதிகாரி விரும்பினால் வேலை நேரம் 12 மணிக்கு நீட்டிக்கப்படலாம்.

இரவு மாற்றுவேலை

ஒரு தொழிலாளியின் இரவு மாற்றுவேலை நடுநிசிக்கு மேல் சென்றால் அவரின் வாராந்தர அல்லது ஈடுகட்டும் விடுமுறை ஒரு நாளைக்கு இருபத்துநான்கு மணி நேரமாகும். ஆனால் இரவு மாற்றுவேலை முடிந்தவுடன் இருபத்துநான்கு மணி நேரம் ஆரம்பிக்க வேண்டும். மாற்றுவேலை முடிந்த மறுநாள்தான் அந்த இருபத்துநான்கு மணி நேரம். நடுநிசிக்குப் பிறகு அவர் செய்யும் வேலை முதல் நாள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஒரேவிதமான மாற்றுவேலைத் தடை

தொழிலாளர்கள் ஒரே விதமான வேலையை ஒரே சமயத்தில் செய்யும்படியாக மாற்றுவேலை இருக்கக்கூடாது. ஆனால், இதுபோல் வேலை செய்வதற்குத் தலைமை மேற்பார்வை அதிகாரி விதிவிலக்கு அளித்திடலாம்.

அதிகப்படியான நேரத்திற்குத் தனிக்கூலி

ஒரு தொழிற்சாலையில் ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு ஒன்பது மணிக்கு மேலும் அல்லது ஒரு வாரத்திற்கு நாற்பத்தெட்டு மணிக்கு மேலும் வேலை செய்தால் அவர் அதிகப்படியான

வேலை செய்ததாகக் கொள்ள வேண்டும். அத்தகைய அதிகப் படியான நேரத்திற்குச் சாதாரணமான நேரத்திற்குத் தரும் கூலி போல் இரண்டு மடங்கு விகிதத்தில் கூலி தர வேண்டும். வேலை விகிதத்தில் கூலி தருவதாக இருந்தால் மாநில அரசும் தொழிலாளர் பிரதிநிதிகளும் கலந்து நிருணயம் செய்த விகிதத்தில் அதாவது சராசரி தொழிலாளர்கள் பெறும் கூலியை வைத்து நிருணயம் செய்த கால விகிதத்தில் கூலியை நிருணயம் செய்ய வேண்டும். அவ்வாறு நிருணயம் செய்யப்படும் கூலி, தொழிலாளர்களின் சாதாரணக் கூலி விகிதத்தில் இருக்கவேண்டும். அதிக நேரத்திற்குச் செலுத்ததப்படும் கூலி அதாவது சாதாரணக் கூலி, அடிப்படைக்கூலி, விலைவாசிப் படி, ஏனைய படிகள், சலுகை விலையில் தரப்பட வேண்டிய உணவுப் பொருள்களின் விலை போன்றவைகள் உள்ளடங்கியிருக்க வேண்டும். ஓர் அளவான குடும்பம் என்பது தொழிலாளி, அவர் மனைவி, பதினான்கு வயதிற்குட்பட்ட இரண்டு குழந்தைகள் அதாவது மொத்தத்தில் மூன்று வயது வந்தவர் களுக்கிடைய நுகர்பொருள்களுடையதாக இருக்க வேண்டும்.

இரண்டு இடத்தில் வேலை செய்யத் தடை (பிரிவு 60)

ஒரு நாளில் எந்த வயதுவந்த தொழிலாளியும் ஏற்கெனவே ஒரு தொழிற்சாலையில் வேலை செய்துவிட்டு மற்றொரு தொழிற் சாலையில் வேலை செய்யக் கூடாது. ஆனால் சில நேரங்களில் சட்டத்தில் குறிப்பிட்டபடி அதே நாளில் வேலை செய்யலாம்.

வேலை நேரத்தைப்பற்றி அறிவிக்கை (பிரிவு 61)

அறிவிக்கையில் சொல்லியுள்ள நேரத்திற்கு வயதுவந்த தொழிலாளர்கள் வேலைசெய்ய வேண்டும். அத்தகைய அறிவிக்கை ஆங்கிலத்திலோ பெரும்பான்மையான தொழிலாளர்கள் புரிந்துகொள்ளும் மொழியிலோ எழுதப்பட்டு நுழைவாயிலிலோ அல்லது எல்லாருக்கும் தெரியும் இடத்திலோ ஒட்டப்பட வேண்டும். அவ் வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு மேல் ஏந்த வயதுவந்த தொழிலாளியும் வேலை செய்ய வேண்டிய அவசியமில்லை. அவ் வறிவிக்கை தவறாக ஒட்டப்பட்டிருந்தால், அறிவிக்கையே இல்லையென்று கொள்ள வேண்டும். அதில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமானால் மேற்பார்வை அதிகாரியின் முன் அனுமதி தேவை. பதிவு செய்யவில்லை என்ற காரணத்திற்காக மட்டும் ஒரு தொழிலாளி வேலை செய்வதைத் தடுக்க முடியாது. நுகர்வோர்களுக்குப் பொருள் தருவதற்காக அதிக வேலை செய்ய வேண்டியிருந்தாலும், சட்டப்படியான நேரத்திற்குமேல் வேலை செய்திட வற்புறுத்தக்கூடாது.

வயதுவந்த தொழிலாளர்களின் பதிவேடு (பிரிவு 62)

தொழிற்சாலையின் மேலாளர் வயதுவந்த தொழிலாளர் களின் பதிவேடு ஒன்றை வைத்திருக்க வேண்டும். வேலைநேரத் தில் அஃது எப்பொழுதும் மேற்பார்வை அதிகாரிக்குக் கிடைக்கும் படி வைத்திருக்க வேண்டும். அல்லது, தொழிற்சாலையில் வேறு எந்த வேலை செய்துகொண்டிருக்கும் போதும் அது காண்பிக்கப் பட வேண்டும். அத்தகைய பதிவேட்டில் தொழிலாளர் பெயர், பணித்தன்மை, அவர் சார்ந்துள்ள குழு, மாற்றுவேலை, மாற்று வேலையில் அவருள்ள அணி போன்றவைகள் அடங்கியிருக்க வேண்டும். ஒரு தொழிற்சாலையில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ள 'தொழிலாளர்களின் பெயர்ப் பட்டியல் இருந்தால்' இத்தகைய பதிவேடு தேவையில்லை என மேற் பார்வையதிகாரி விரும்புகிறார்.

வார விடுமுறைகள் (பிரிவு 52)

வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமையில் எந்த வயது வந்த தொழிலாளியும் வேலை செய்யக்கூடாது அல்லது வேலை செய்ய அனுமதிக்கக்கூடாது. ஆனால், வேறு ஏதாவது ஒருநாள் அல்லது வாரத்தின் முதல் நாளுக்கு முன்னோ பின்னோ உள்ள ஒருநாள், விடுமுறை விடவேண்டும். அவ்வாறு விடுமுறை விடப் பட்ட நாள் உள்ள வாரத்தின் முதல் நாள் மேலாளர் மேற்பார்வை அதிகாரிக்குத் தம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். அதா வது அந்த வாரத்தின் முதல் நாள் வேலை செய்ய வேண்டி ட வேண்டும். அதற்குரிய அறிவிக்கை ஒட்டப்பட வேண்டும். எவ் விதத்திலும் ஒரு தொழிலாளி தொடர்ச்சியாக ஒரு முழுநாள் விடு முறையில்லாமல் பத்துத் தினங்களுக்கு வேலை செய்யக் கூடாது.

ஈடுகட்டும் விடுமுறைகள் (பிரிவு 53)

சட்டத்தின் விதிகளால் ஒரு தொழிலாளிக்கு வாராந்தர விடு முறை தரப்படவில்லையென்றால் அந்த மாதத்திற்குள் அவருக்கு ஈடுகட்டும் விடுமுறை அளிக்கப்பட வேண்டும். அல்லது அவ்வாறு விடுமுறை தராத மாதத்திற்கு உடன்வரும் அடுத்த இரண்டு மாதத்திற்குள் விடுமுறையளிக்கப்பட வேண்டும்.

குழந்தைகளை வேலைக்கமர்த்தல் (பிரிவு 67–77)

குழந்தைகளை வேலைக்கமர்த்தலைத் தடுத்தல் : பதினான்கு வயது நிரம்பாத குழந்தைகளை வேலைக்கமர்த்தக் கூடாது.

தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்படும் குழந்தைகளின் வயதை உறுதிப்படுத்தும் கடமை பணியாண்மையருக்கு உண்டு.

காளைப்பருவத்தினர் (Adolescent)

14 வயது முடிந்தும் 18 வயது முடியாத நிலையிலும் உள்ளவர்கள் காளைப் பருவத்தினர் எனக் கூறப்படுகின்றனர். இவர்கள் வேலைத் தகுதிச்சான்று பெற்றால்தான் வேலை செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அது மேலாளரிடம் இருக்கும் இதன் தொடர்பாக அவர்களுக்கு ஓர் அடையாளச் சீட்டுத் தரப்படும். இவ்வாறு தகுதிச்சான்று பெறாதவர்கள் குழந்தைகளாகவே பாவிக்கப்படுவர்.

குழந்தைகளின் வேலைநேரம் (பிரிவு 71)

எந்தக் குழந்தையும் தொழிற்சாலையில் 4½ மணிக்கு மேல் வேலை செய்யக்கூடாது. இரவில் அவர்களை வேலை செய்ய அனுமதிக்கக் கூடாது. எல்லாக் குழந்தைத் தொழிலாளர்களின் வேலைநேரம் ஐந்து மணி நேரத்திற்குமேல் போகாத இரண்டு மாற்றுவேலைக் காலத்திற்குள் முடிந்துவிட வேண்டும். தலைமை மேற்பார்வை அதிகாரி அனுமதித்தால் ஒழிய ஒரு மாற்றுப் பகுதிக் காலத்திற்குமேல் வேலை செய்யக்கூடாது. மூத்த அல்லது வயதுவந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற வாராந்தர விடுமுறை இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். ஒரே நாளில் இரண்டு மாற்றுவேலையிலும் இரண்டு தொழிற்சாலைகளிலும் அவர்கள் வேலை செய்யக்கூடாது.

குழந்தைகளின் வேலைநேர அறிவிக்கை (பிரிவு 73)

குழந்தைகளை வேலைக்கமர்த்தும் தொழிற்சாலைகளின் மேலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள் பதிவேடு ஒன்று வைத்திருக்க வேண்டும். குழந்தைகளின் பெயர், வேலைத் தன்மை, அவர்களை உள்ளடக்கிய குழு, இக் குழு செய்யும் மாற்று வேலை, அவர்கள் சார்ந்த அணி, வேலைத்தகுதிச் சான்று எண் போன்றவைகளை அவர்கள் கொண்டிருக்க வேண்டும்.

மருத்துவச்சான்று (பிரிவு 75)

தொழிற்சாலையில் தகுதிச்சான்று இல்லாமல் வேலை செய்யும் குழந்தைகளையும், அவ்வாறு தகுதிச்சான்று பெற்று அதில் கூறியபடி உடல் தகுதி பெறாதவர்களையும் மருத்துவப் பரிசோதனை செய்யச் சொல்லி மேற்பார்வையதிகாரி தொழிற் சாலை மேலாளருக்கு அறிவிக்கை தந்திடுவார். புதிய தகுதிச்

சான்று கொடுக்காதவரை அவர்களை வேலைக்கு அனுமதிக்கக் கூடாது என்றும் வேண்டுவார். அவ்வாறு வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தகுதிச்சான்று பன்னிரண்டு மாதங்களுக்குத் தான் செல்லுபடியாகும். சட்டத்தில் சொல்லியுள்ள விதிகளின்படி மருத்துவர் இத் தகுதிச்சான்றை வழங்க வேண்டும். இதை வழங்க மருத்துவர் மறுத்தால் அதற்குரிய காரணங்களை அவர் கூற வேண்டும். தகுதிச்சான்றுக்குரிய கட்டணத்தை உரிமையாளர் வழங்க வேண்டும்.

குழந்தைத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு

வயதுவந்த தொழிலாளர்களுக்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் அத்தனையும் இவர்களுக்கும் தரப்பட வேண்டும். உடல் காயம், நஞ்சு, தொற்றுநோய் போன்ற ஆபத்துள்ள வேலைகளில் இவர்களை ஈடுபடுத்தக் கூடாது.

பெண்களை வேலைக்கமர்த்தல்

ஒரு தொழிற்சாலையில் வயதுவந்த ஆண் தொழிலாளர்களுக்கு உடல்நலன் பாதுகாப்பு, நல்வாழ்வு, பணிநேரம், விடுமுறை போன்றவை பற்றிய விதிமுறைகள் வயதுவந்த பெண் தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இவைகளைத் தவிர மேலும் சில கீழ்க்காணும் விதிகள் பின்பற்றப்படுகின்றன:

1. எந்தப் பெண் தொழிலாளியும் காலை 6 மணியிலிருந்து மாலை 7 மணிக்குமேல் தொழிற்சாலையில் பணிபுரியக் கூடாது. அதாவது இரவில் எந்தப் பெண் தொழிலாளியும் வேலை செய்யக் கூடாது. ஆனால் மாநில அரசு சிலவகைத் தொழிற்சாலையில் பெண்கள் இரவில் வேலை செய்வதை விதிவிலக்காக அனுமதிக்கிறது. ஆனால் எப்படியும் இரவு 10 மணிக்குமேல் காலை 5 மணி வரையுள்ள காலத்தில் அவர்கள் பணிபுரியக்கூடாது.

பிரிவு 54-ன்படி எந்த வயதுவந்த தொழிலாளர்களும் 9 மணிக்குமேல் ஒரு நாளில் வேலை செய்யக்கூடாது என்ற விதியிலிருந்து பெண் தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு அளிக்கமுடியாது. வாராந்தர அல்லது பிற விடுமுறைகளுக்குப்பின் பெண் தொழிலாளர்களுக்கு மாற்றுவேலையில் எந்தவித மாற்றமும் செய்யக் கூடாது. இயக்கத்திலுள்ள இயந்திரங்களுக்கு அருகிலும் இயந்திரத்திலும் பெண் தொழிலாளர்களை வேலை செய்ய அனுமதிக்கக் கூடாது. பருத்தி உடைக்கும் இயந்திரங்களுக்கு அருகில் இவர்களையும் குழந்தைகளையும் வேலை செய்ய அனுமதிக்கக்கூடாது. 50 பெண் தொழிலாளர்களுக்குமேல் பணிபுரியும் தொழிற்சாலை

களில் குழந்தைகள் காப்பிடம் இருக்க வேண்டும். ஆறு வயதிற் குட்பட்ட குழந்தைகள் அவர்களின் தாய்மார்கள் பணியில் ஈடு பட்டிருக்கும்போது காப்பகத்தில் இருக்க வேண்டும். இக் காப் பகங்களைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் செலவில் அமைத்துத் தரவேண்டும். உடற்காயம், நச்சுத்தன்மை, தொற்றுநோய் போன்ற விபத்துகள் உள்ள பணியில் பெண் தொழிலாளர்களை அமர்த்தக்கூடாது.

ஊதியத்துடன் வழங்கப்படும் விடுமுறைகள் (பிரிவுகள் 52, 79)

தொழிற்சாலைகள் சட்டத்தின் எட்டாவது அத்தியாயத்தின் பிரிவுகள் 78 முதல் 84 வரை ஊதியத்துடன் கூடிய விடுமுறைகள் பற்றி விவரமாகச் சொல்லப்பட்டுள்ளன. ஊதியத்துடன் கூடிய வாராந்தர விடுமுறையின் விதிகளை முன்பே தொழிலாளர்களின் பணி நேரங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது கண்டோம். ஊதியத் துடன் கூடிய ஆண்டு விடுமுறையின் விதிகளை இப்பொழுது காண்போம். அரசினரால் நடத்தப்படும் ரயில்வே பணிமனை களுக்கு இவ் விதிகள் பொருந்தா.

ஊதியத்துடன் கூடிய ஆண்டு விடுமுறை (பிரிவு 79)

கடந்த நாட்காட்டி ஆண்டில் 240 நாள்கள் அல்லது அதற்கு மேல் பணிபுரிந்த ஒவ்வொரு தொழிலாளியும் அடுத்த ஆண்டில் கீழ்க்காணும் விதத்தில் கணக்கிடப்பட்ட விடுமுறைகளைப் பெறத் தகுதியைப் பெறுகின்றனர்.

வயதுவந்த தொழிலாளியாக இருந்தால் சென்ற நாட்காட்டி ஆண்டில் பணிபுரிந்த ஒவ்வொரு 20 நாள்களுக்கு ஒரு நாளும் குழந்தைத் தொழிலாளியாகவிருந்தால் 15 நாள்களுக்கு ஒரு நாளும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும். இவ் விடுமுறை வழக்கமாக உள்ள விடுமுறைகளை உள்ளடக்கியதன்று. கணக்கிடுவதற்காக 240 நாள்களை எடுத்துக்கொள்ளும் போது தாற்காலிக வேலைநீக்கம், 12 வாரங்களுக்கு மேற்படாத பிள்ளைப்பேறு விடுமுறை, சென்ற ஆண்டில் அவர் பெற்ற விடு முறை போன்றவைகளை எடுத்துக்கொண்டு அந் நாள்களில் அவர் வேலை செய்ததாகக் கொள்ள வேண்டும்.

ஒரு தொழிலாளியின் பணி ஜனவரி முதல் நாளைக்குப் பிறகு தொடங்கினால் அதாவது அவர் ஜனவரி முதல் நாளைக்குப் பிறகு வேலையில் சேர்ந்தால், மீதியுள்ள நாள்களில் $\frac{2}{3}$ பாகம் அவர் பணி புரிந்திருந்தால்தான் மேற்கூறிய கணக்கீட்டின்படி ஊதியத் துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும்.

ஒரு தொழிலாளர் வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் நீக்கம் செய்யப்பட்டாலும் மேற்கூறியபடி ஊதியத்துடன் கூடிய விடுமுறை அவருக்கும் வழங்கப்படும். ஆனால், அதற்கு மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளும் தேவையில்லை. அதாவது 240 நாள்கள் அல்லது $\frac{2}{3}$ பணி நாள்கள் வேலை செய்திருக்க வேண்டிய அவசியமில்லை. விடுமுறையைக் கணக்கிடும்பொழுது $\frac{1}{2}$ நாள்களை ஒரு நாளாகவும் $\frac{1}{2}$ நாள்களுக்குக் குறைந்ததை விட்டுவிட்டும் கணக்கிட வேண்டும்.

ஒரு தொழிலாளருக்கு ஓர் ஆண்டில் வழங்கப்பட்ட விடுமுறை அந் நாட்காட்டி ஆண்டுக்குள் அவர் எடுக்காவிட்டால், அடுத்த ஆண்டில் அவர் எடுக்கக்கூடிய விடுமுறையோடு சேர்த்துக்கொள்ளப்படும். ஆனால் அவ்வாறு அடுத்த ஆண்டிற்கு எடுத்துச்செல்லும் விடுமுறை வயதுவந்தவராக இருந்தால் 30 நாள்களுக்கும், குழந்தையாக இருந்தால் 40 நாள்களுக்கும் மேல் இருக்கக்கூடாது. ஆனால், ஒருவருக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படவில்லையென்றால் அடுத்தாண்டிற்கு அவர் விடுமுறையை எடுத்துச்செல்லும்போது மேற்கூறிய வரையறை இல்லை. முழு விடுமுறை நாள்களையும் அடுத்தாண்டிற்கு எடுத்துச் செல்லலாம். விடுமுறை எடுப்பதற்கு 15 தினங்களுக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். பொதுவசதி நிறுவனத் தொழிலாளர்கள் 40 நாள்களுக்கு முன்னரே விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் இவ் விடுமுறை ஓர் ஆண்டிற்கு மூன்று தடவைதான் எடுக்கமுடியும். அதற்குமேல் எடுக்க முடியாது.

ஊதியத்துடன் கூடிய இவ் விடுமுறையை ஒருவர் தம் உடல் நலன் சரியில்லாத காலத்திற்கு எடுக்க விரும்பினால் அவர் விண்ணப்பம் குறிப்பிட்ட காலத்தில் போடாவிட்டால்கூட அவருக்கு விடுமுறை அளிக்கப்படும். பிரிவு 81-ல் கூறியுள்ள இவர்களின் ஊதியம் இவர்களுக்கு விடுமுறை விண்ணப்பம் வந்த 15 நாள்களுக்கு மேல் போகாமலும் பொதுவசதி சேவை நிறுவனத் தொழிலாளர்களுக்கு 30 நாள்களுக்கு மேல் போகாமலும் கொடுக்கப்படும்.

இத்தகைய விடுமுறை கோரி விண்ணப்பங்கள் சட்டத்தின் விதிகளுக்கு மாறுபட்டு இல்லாமலிருந்தால் அவைகளை மறுத்திடக் கூடாது. ஆனால், தாற்காலிகமாக மறுப்பது நடைமுறையில் இருந்தால் மறுத்திடலாம்.

விடுமுறைக் காலங்களுக்கு ஊதியம் (பிரிவு 80)

பிரிவு 79-ல் கூறப்பட்ட ஊதியத்துடன் கூடிய விடுமுறைக்கு அவர் எடுத்த விடுமுறை நாள்களின் மொத்தக் கூலியில் நாள் சரா

சரி அடிப்படையில் கணக்கிடப்பட்ட கூலியை அவருக்குத் தர வேண்டும். மேற்கூறிய கணக்கீட்டிற்கு அதிக நேரக் கூலி, மேலூதியம் போன்றவை நீக்கிவிட வேண்டும். அவர் வேலை செய்யும் முந்தின மாதத்தின் விலைவாசிப்படியையும், சலுகை விலையில் தரப்பட்டுள்ள பொருள்களால் ஏற்பட்டீ நன்மைகளின் ரொக்க மதிப்பையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஊதியம் முன் செலுத்துதல்

வயதுவந்தவர்களுக்கு 4 நாள்களுக்கும் குழந்தைகளுக்கு 5 நாள்களுக்கும் இவ்வாறு ஊதியத்துடன் விடுமுறை அளிக்கப் பட்டால் விடுமுறை ஆரம்பமாவதற்கு முன்னரே விடுமுறை நாள் களுக்குரிய ஊதியம் தரப்படும்.

செலுத்தப்படாத கூலியைப் பெறும் முறை (பிரிவு 82)

பணியாண்மையரால் செலுத்தப்படாத கூலியை 1956 ஆம் ஆண்டு ஊதியம் செலுத்தும் சட்டத்தின் 15-ஆவது பிரிவின்படி காலந்தாழ்த்துச் செலுத்தப்படும் கூலி எனப் பெற்றிடலாம்.

தொழிலாளர் பாதுகாப்பு உடல்நலக் கண்டாய்வு :

1976ஆம் ஆண்டுத் தொழிற்சாலைத் திருத்தச் சட்டத்தின் 91-A என்ற பிரிவின்படி தொழிலாளர் உடல்நலக் கண்டாய்வு தலைமை மேற்பார்வை அதிகாரி அல்லது தொழிற்சாலை அறிவுரை நிலையம், தொழிலாளர் பயிற்சி நிலையம் ஆகியவைகளின் தலைமை நெறியாளர் அல்லது இந்திய அரசின் உடல்நலத் தொண்டு நிறுவனத்தின் தலைமை நெறியாளர் அல்லது மாநில அரசு அனுமதி பெற்ற அதிகாரி போன்றவர்களால் நடத்தப்பட லாம். இவ் வதிகாரிகள் தொழிற்சாலை அதிகாரி அல்லது மேலாளருக்கு முன்னறிவிப்புச் செய்துவிட்டு இக் கண்டாய்வை நடத்திட லாம். உரிமையாளரும் மேலாளரும் இவ் வதிகாரிகள் இயந்திரங் களை மேற்பார்வையிடவும், மாதிரிகளைச் சேகரிக்கவும், கண்டாய்வு தொடர்பான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கவும் உதவ வேண்டும்.

கண்டாய்வு நடத்துபவர்கள் விரும்பினால் ஒவ்வொரு தொழி லாளியும் மருத்துவப் பரிசோதனைக்கு உடன்பட வேண்டும். அவரிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுகின்ற விவரங்களைச் சொல்ல வேண்டும். இவ்வாறு பரிசோதனையில் ஈடுபட்டிருக்கும் தொழி லாளி அவர்களின் ஊதியம் கணக்கிடும் நோக்கத்திற்குப் பணியில் இருப்பதாகக் கொள்ள வேண்டும்.

தொழிலாளர் கடமைகள் (பிரிவு 111)

அவர்களின் உடல்நலன், பாதுகாப்புப் போன்றவைகளுக்காக உள்ள கருவிகளையும், சாதனங்களையும் தொழிலாளர்கள் வேண்டுமென்றே கெடுக்கக் கூடாது; தவறாகப் பயன்படுத்தக் கூடாது. வேண்டுமென்றோ நியாயமான காரணங்கள் இல்லாமலோ தங்களுக்கோ, மற்றவர்களுக்கோ அபாயத்தை விளைவிக்கும் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. அவர்களின் உடல்நலன், பாதுகாப்பு முதலியவைகளுக்காக உள்ள சாதனங்களையும் ஏனைய வசதிகளையும் புறக்கணிக்கக்கூடாது. மேற்கூறிய விதிகளுக்குப் புறம்பாக நடந்தால் ரூ. 100 அபராதமும் அல்லது மூன்று மாதச் சிறைத் தண்டனையும் அவர்களுக்குத் தண்டனையாக வழங்கப்படும்.

26. தொழிலாளர்கள் அரசு காப்பீட்டுச் சட்டம், 1948

[The Employee's State Insurance Act, 1948]

இச் சட்டம் தொழிலாளர்களுக்கு எதிர்பாராதவிதமாக ஏற் படும் விபத்திற்கு நிவாரணம் அளிப்பதற்காக இயற்றப்பட்டது. நோய், மகப்பேறு, வேலை செய்யும்போது ஏற்படும் விபத்துப் போன்றவைகளையும், மேலும் தொழிலாளர்களுக்கு ஏற்படும் இதர அசௌகரியங்களையும் பாதுகாத்திட இச் சட்டம் வழி கோருகிறது. அரசாங்கத் தொழிற்சாலைகள் உட்பட எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் இது பொருந்தும். ஆனால், பருவகால அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு இது பொருந்தாது. [பிரிவு 1.C. (40)]

உரிய அரசு ஆறு திங்கள் அறிவிக்கை விடுத்தும் அரசாங்கச் செய்தி மலரில் அறிவிப்புச் செய்தும் இச் சட்டத்தின் விதிமுறை களைக் கையாளத் தொழில், வணிக, வேளாண்மை போன்ற நிறுவனங்களுக்கு ஆணையிடலாம் [பிரிவு 1. C. (5)]

கீழ்க்காணும் நிறுவனங்கள் இச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை :

1. பருவகாலத் தொழிற்சாலைகள் [பிரிவு 1. C. (4)]
2. போர்ப்படை உறுப்பினர்கள் [பிரிவு 2 (9)]
3. மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்குமேல் ஊதியம் பெறு பவர்கள்.
4. சுரங்கங்கள் [பிரிவு 2 (12)]
5. இரயில்வே கூடங்கள் [பிரிவு 2 (12)]
6. 1948ஆம் ஆண்டின் தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ்க் கூறப்பட்டுள்ள விசையில்லாமல் இயங்கும் தொழிற் சாலைகள்.
7. விசையோடு இயங்கும் தொழிற்சாலைகள். ஆனால் இதில் 20 தொழிலாளர்களுக்குக் குறைவாக வேலை செய்யவேண்டும்.

இலக்கணங்கள் :

1. உரிய அரசு [பிரிவு 2 (1)]

மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிறுவனங்களுக்கும் அல்லது இரயில்வே நிருவாகத்திற்கும் அல்லது பெரிய துறைமுகத்திற்கும் அல்லது பெரிய சுரங்கத்திற்கும் அல்லது பெரிய எண்ணெய்க் கிணறுகளுக்கும் உரிய அரசு மத்திய அரசாகும். மற்றவைகளுக்கு உரிய அரசு மாநில அரசாகும்.

2. பயன்பெறும் காலம் (Benefit period) [பிரிவு 2 (2)]

பயன்பெறும் காலம் என்பது 25 வாரங்களுக்குக் குறையாமலும், 27 வாரங்களுக்கு மேற்போகாமலும் அல்லது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்ச்சியான ஆறு மாதங்களும் கொண்ட காலமாகும்.

3. பேறுகாலம் (Confinement) [பிரிவு 2 (3)]

பேறுகாலம் என்பது ஒரு பெண் தொழிலாளி உயிருடன் கூடிய ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த காலப்பகுதியாகும். அல்லது கருவுற்ற 26 வாரங்களுக்குப் பிற்பட்டுக் குழந்தை உயிருடனோ இறந்தோ பிறந்த காலப்பகுதியாகும்.

4. பங்களிப்பு (Contribution) [பிரிவு 2 (4)]

பங்களிப்பு என்பது முக்கியப் பணியாண்மையர் கழகத்திற்குத் தொழிலாளிக்காக அளிக்கப்படும் தொகையாகும். இது சட்டத்தின் விதிகளில் சொல்லியுள்ளபடி தொழிலாளர்களால் அல்லது தொழிலாளிகளுக்காகச் செலுத்தப்படும் தொகையாகும்.

5. பங்களிப்புக் காலம் (Contribution period) [பிரிவு 2 (5)]

பங்களிப்புக் காலம் என்பது சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி 25 வாரங்களுக்குக் குறையாமலும் 27 வாரங்களுக்கு மேற்படாமலும் அல்லது தொடர்ச்சியான ஆறு மாதங்களும் கொண்ட காலமாகும்.

6. கழகம் (Corporation) [பிரிவு 2 (6)]

கழகம் என்பது இச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள தொழிலளர் அரசு காப்பீட்டுக் கழகத்தைக் குறிக்கும்.

7. சார்ந்தவர்கள் (Dependant [பிரிவு 2 (6) (அ)]

சார்ந்தவர்கள் என்பவர்கள் காப்பீடு செய்துள்ள இறந்தவரின் பின்காணும் உறவினர்களாவர்:

1. ஒரு விதவை, ஒரு சட்டபூர்வமான இளவர், ஒரு தத்து எடுக்கப்பட்ட மகன், ஒரு கலியாணமாகாத மகள், ஒரு தத்து எடுக்கப்பட்ட மகள் அல்லது ஒரு விதவைத் தாய்.

2. காப்பீடு செய்தவரின் வருமானத்தை முழுவதும் நம்பி உள்ள கீழ்க்காண்பவர்களும் சார்ந்தவர்களாவார்கள் :

(அ) பெற்றோர் அல்லது விதவைத் தாய்.

(ஆ) சட்டபூர்வமில்லாத ஓர் இளவர், சட்டபூர்வமில்லாத திருமணமாகாத ஒரு மகள், திருமணமாகியிருந்தால் சட்டபூர்வமான ஒரு மகள், ஒரு தத்தெடுக்கப்பட்ட மகள், ஓர் இளவர்.

(இ) ஓர் உரிய வயதுவராத சகோதரர் அல்லது திருமண மாகாத சகோதரி அல்லது திருமணமாகி விதவையான உரிய வயதுவராத ஒரு சகோதரி.

(ஈ) விதவை மருமகள்

(உ) இறந்துவிட்ட மகன் அல்லது மகளின் உரிய வயது வராத குழந்தைகள்

(ஊ) உரிய வயதுவராமல் இறந்துவிட்ட மகனின் இளம் குழந்தை

(எ) காப்பீடு செய்தவரின் உயிருடன் இருக்கும் தந்தையின் பெற்றோர்கள், அவர்களின் பெற்றோர்கள்.

8. வேலை செய்யும்போது ஏற்படும் காயம்

ஒரு விபத்துமூலம் ஏற்படும் காயத்தையும் வேலை செய்வ தால் ஏற்படும் தொற்றுநோயையும் இது குறிக்கும். ஆனால், இவைகளைக் காப்பீடு செய்யலாம். இத்தகைய விபத்தும், தொற்றுநோயும் இந்திய எல்லைக்குள்ளும் அல்லது வெளியிலும் ஏற்படலாம்.

9. தொழிலாளர்

இச் சட்டம் அமலில் இருந்திடும் நிறுவனத்திலும் தொழிற் சாலையிலும் கூலிக்காக அமர்த்தப்படுபவர்கள் தொழிலாளிகள் ஆவார்கள். மேலும் அவர்கள் முதன்மைப் பணியாண்மையரால் நேரடியாக நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும் அமர்த்தப் படுபவர்களாக இருக்க வேண்டும். அவ் வேலையைத் தொழி லாளர்கள் தொழிற்சாலைகளிலோ அல்லது நிறுவனங்களிலோ

அல்லது வேறு எங்கோ செய்திடலாம். அவர்களின் சேவைகள் தாற்காலிகமானதாகவும் அல்லது வாடகைக்காகவும் ஒப்பந்த அடிப்படையில் எழலாம். மேலும் அவர்கள் தொழிற்சாலை நிருவாகத்தில், துறை, கிளை நிருவாகத்தில், கச்சாப் பொருள்கள் கொள்முதல் செய்வதில், பொருள் விற்பனையில், விநியோகத்தில் பங்குகொள்ள ஊதியம் பெற்றுப் பணிபுரிபவர்களாக இருக்க வேண்டும். ஆனால், இந்தியக் கப்பற்படை, தரைப்படை, விமானப்படை உறுப்பினர்கள் தொழிலாளிகள் அல்லர். அதிக நேரக் கூலியுடன் ஒருவர் மாதம் ஒன்றுக்கு ரூ. 1000-க்கு மேல் ஊதியம் பெற்றால் அவர் தொழிலாளி அல்லர்.

10. விதிவிலக்கு அளிக்கப்பட்ட தொழிலாளி (Exempted employee [பிரிவு 2 (10)]

இச் சட்டத்தின்கீழ்ப் பங்களிப்புச் செலுத்தத் தேவையில்லாத தொழிலாளர் விதிவிலக்கு அளிக்கப்பட்ட தொழிலாளி ஆவார்.

11. குடும்பம் [பிரிவு 2 (11)]

காப்பீடு செய்தவரின் மனைவி அல்லது கணவன், உரிய வயதுவராத குழந்தைகள், தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள், பெற்றோர்கள் அடங்கியது ஒரு குடும்பம் ஆகும்.

12. தொழிற்சாலை [பிரிவு 2 (12)]

எந்த இடத்தில், அதன் சுற்றுப்புறத்தில் இருபது அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப் படுகிறார்களோ, எங்குக் கடந்த ஓராண்டில் ஏதாவது ஒரு நாளைக்கு ஊதியம் பெறுகிறாரோ எங்கு விசையின் உதவியுடன் அல்லது விசையில்லாமல் உற்பத்தி நடக்கிறதோ அந்த இடம் தான் தொழிற்சாலையெனச் சட்டம் கூறுகிறது. அனால், 1952 ஆம் ஆண்டுச் சுரங்கச் சட்டத்தின்கீழ் இயங்கும் சுரங்கமும், இரயில்வே கூடங்களும் தொழிற்சாலைகள் அல்ல.

13. பருவகாலத் தொழிற்சாலை (Seasonal Factory)

பருத்திக்கொட்டை நீக்கல், பருத்தி அல்லது சணல் அழுத்தம், மணிலா உடைத்தல், காப்பி தயாரித்தல், சாயம் தயாரித்தல், அரக்குத் தயாரித்தல், ரப்பர், சர்க்கரை, டீ தயாரித்தல் போன்றவைகளில் ஏதாவது ஒன்றில் ஈடுபட்டிருக்கும் தொழிற் சாலையைப் பருவகாலத் தொழிற்சாலையெனக் கூறிடலாம். மேலும் டீ, காப்பி போன்றவைகளைக் கலத்தல், கட்டுமானம் செய்தல் போன்றவைகளில் ஆண்டுக்கு ஏழு மாதங்களுக்கு மேல்

போகாமல் ஈடுபட்டிருக்கும் தொழிற்சாலையும் பருவகாலத் தொழிற்சாலையாகும். மைய அரசு தன் செய்தி மலரில் அறிவிக்கும் ஏனைய தொழிற்சாலைகளும் பருவகாலத் தொழிற் சாலைகளாகும்.

14. அடுத்த பணியாண்மையர் (Immediate Employer) [பிரிவு 2 (13)]

இச் சட்டம் அமலில் உள்ள தொழிற்சாலையில் யாரொருவர் அவரால் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் செயல்முறையைக் கவனிக்கின்றாரோ அவர்தாம் அடுத்த பணியாண்மையராவார். இவர் முதன்மைப் பணியாண்மையரின் மேற்பார்வை அல்லது அவருடைய முகவரின் மேற்பார்வையில் தொழிற்சாலையின் அலுவல்களில் ஒரு பகுதி அல்லது முழுவதையும் கவனிக்கின்றார். தொழிலாளர்களின் சேவைகளைக் கவனித்திடத் தாற்காலிகமாக அல்லாது பணத்திற்காக அமர்த்தப்படுகிறவரும் அடுத்த பணியாண்மையராவார்.

15. காப்பீடு வேலைவாய்ப்பு

இச் சட்டம் அமலில் இருக்கும் நிறுவனம் அல்லது தொழிற் சாலையில் உள்ள, வேலைவாய்ப்பாகும்.

16. காப்பீடு செய்பவர் [பிரிவு 2 (14)]

இச் சட்டத்தின்கீழ்ச் சொல்லியுள்ள காப்பீட்டுப் பங்களிப்பைச் செலுத்தினாலும் சரி செலுத்தாவிட்டாலும் சரி தொழிலாளியாக இருக்கிற இருந்த ஒருவர் காப்பீடு செய்பவராகக் கொள்ளப்படுவார். இக் காரணத்தால் இச் சட்டத்தின்கீழ் அவர் நன்மை பெறுகிறார்

17. கருச்சிதைவு (Miscarriage)

கருச்சிதைவு என்பது ஒரு பெண் கருவுற்ற 26ஆவது வாரத் திலோ அதற்கு முன்னரோ கருப்பையில் உள்ள கருவை வெளி யேற்றுவதாகும். ஆனால் இந்தியக் குற்றச் சார்பு சட்டத்தின் கீழ்த் தண்டனையடையக் கூடிய கருச்சிதைவு ஆகாது.

18. கட்டுப்பாட்டாளர் (Occupier)

தொழிற்சாலைச் சட்டத்தில் கூறியுள்ள இலக்கணம் இங்கும் பொருந்தும்

19. நிரந்தரப் பகுதி இயலாமை (Permanent partial disablement) [பிரிவு 2 (15-அ)]

சாதாரணமாகத் தொழிலாளர் செய்யக்கூடிய வேலையைச் செய்ய முடியாதபடி விபத்து ஏற்பட்டு அதனால் நிரந்தரமாக ஒன்றும் செய்ய இயலாமல் போவது நிரந்தரப் பகுதி இயலாமை ஆகும். இஃது அவருடைய சம்பாதிக்கும் திறமையைக் குறைத்திடும்.

20. நிரந்தர முழு இயலாமை (Permanent total disablement) [பிரிவு 2 (15-ஆ)]

விபத்து ஏற்படும்பொழுது செய்யக்கூடிய எல்லா வேலைகளும் செய்ய முடியாதபடி நிரந்தரமான இயலாமையை இது குறிக்கும்.

21. முதன்மைப் பணியாண்மையர் (Principal Employer)

முதன்மைப் பணியாண்மையர் என்பவர் ஒரு தொழிற்சாலையில் அதன் உரிமையாளர் அல்லது கட்டுப்பாட்டாளராவார். அவர்களின் மேலாண்மை இயக்குநர், இறந்த உரிமையாளர் அல்லது கட்டுப்பாட்டாளர் போன்றோர் சட்டபூர்வமான வாரிசுதாரர்கள், தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் மேலாளர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேலாளர் போன்றோர்கள் முதன்மைப் பணியாண்மையர் ஆவார்கள்.

இந்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களில் அரசால் அமர்த்தப்பட்ட அதிகாரிகள் அவ்வாறு அமர்த்தப்படாவிட்டால் அத் துறையின் தலைவர் முதன்மைப் பணியாண்மையராவார்.

வேறு நிறுவனமாக இருந்தால் அதன் கட்டுப்பாட்டையும் மேற்பார்வையையும் யார் பெற்றுள்ளாரோ அவர் முதன்மைப் பணியாண்மையராவார்.

22. தாற்காலிக இயலாமை (Temporary disablement) [பிரிவு 2 (21)]

விபத்து ஏற்பட்டபோதும் அதற்கு முன்னரும் தொழிலாளி செய்துவந்த வேலைகளைச் செய்ய முடியாமல் தாற்காலிக இயலாமையை ஏற்படுத்துவது. இதற்கு மருத்துவம் பார்த்தால்போதும்.

23. ஊதியம் (Wages) [பிரிவு 2 (22)]

வேலை ஒப்பந்தத்தில் வெளிப்படையாக அல்லது உட்கிடையாகச் சொல்லியுள்ளபடி தொழிலாளர்களுக்குச் செலுத்திய அல்லது செலுத்தக்கூடிய ஊதியமாகும். அனுமதிக்கப்பட்ட விடு

முறை, சட்டபூர்வமான கதவடைப்பு, வேலைநிறுத்தம் போன்ற காலங்களை எடுத்துக்கொள்ளாமல் செலுத்தப்படுவது ஊதிய மாகும். இரண்டு மாத இடைவெளிக்கு மேற்படாத காலத்திற்குச் செலுத்தப்பட்ட கூடுதல் ஊதியமும் இதனுள் அடங்கும். ஆனால், பணியாண்மையரால் தொழிலாளியின் ஓய்வுநிதி, எதிர்கால நல நிதி போன்றவைகளுக்கு அளிக்கப்படும் அளிப்பு ஊதியம் ஆகாது. மேலும், பயணப்படி அல்லது பயணச் சலுகை ஈடுகட்டும் செலவுகள், ஓய்வு பெறும் போது அளிக்கப்படும் மொத்தத் தொகை (Gratuity) போன்றவை ஊதியம் அல்ல.

தொழிலாளர்கள் அரசு காப்பீட்டுக் கழகம் (Employee's State Insurance Corporation)

தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் நிருவாகத்திற்காக மைய அரசு ஒரு கழகத்தை நிறுவியது (பிரிவு 3). அது சட்ட பூர்வமான கூட்டுருவாகும். தொடர்ந்து இயங்கும் தன்மை அதற்குண்டு. பொது முத்திரையும் உண்டு, நீதிமன்றத்தில் அது வழக்குத் தொடரலாம். அதன்மீது வழக்குத் தொடரப்படலாம்.

அமைப்பு [பிரிவு (4)]

இக் கழகம் கீழ்க்காண்பவைகளைத் தன்னகத்தே பெற்றுள்ளது :

1. மைய அரசால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர்.
2. துணைத் தலைவர் ஒருவர் மைய அரசால் நியமிக்கப் படுவார்.
3. ஐந்துக்கு மேற்படாத நபர்களை உறுப்பினர்களாக மைய அரசு நியமிக்கும்.
4. மத்திய அரசாட்சிக்குட்பட்ட பகுதிகளின் பிரதிநிதி யாக ஒருவரை மைய அரசு நியமிக்கும்.
5. சட்டம் அமலிலிருக்கும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒருவர் நியமிக்கப்படுவார்.
6. மைய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பணியாண்மையர் அமைப்பைக் கலந்து அவர்களின் பிரதிநிதிகளாக ஐந்து பேர்களை மைய அரசு நியமிக்கும்.
7. இதே போல் மைய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொழி லாளர் அமைப்பைக் கலந்து அவர்களின் பிரதிநிதிகளாக ஐந்து பேர்களை மைய அரசு நியமனம் செய்யும்.

8. மைய அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவர்கள் அமைப்பின் ஆலோசனையுடன் அதன் பிரதிநிதிகளாக இருவரை மைய அரசு நியமிக்கும்.

9. பாராளுமன்ற உறுப்பினர் இருவரும் ராஜ்யசபை உறுப்பினர் ஒருவரும் ஆக மொத்தம் மூன்று பேர்கள் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுவார்கள்.

10. பதவி முறையில் (ex-officio) முதன்மை இயக்குநரும் உறுப்பினர் ஆவார்.

கழக உறுப்பினர்களின் பதவிக் காலம் (பிரிவு 5)

1. மேலே சொல்லப்பட்ட 6, 7, 8, 9 தலைப்பில் சொல்லப் பட்ட வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் நியமனத் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பர். ஏனைய உறுப்பினர் அரசாங்கம் விரும்பும் வரை பதவி வகிப்பர்.

2. உறுப்பினர்கள் தங்கள் பதவியை மைய அரசிற்கு ஓர் அறிவிக்கை விட்டுவிட்டுத் தங்கள் பதவியைத் துறந்திடலாம். அவர்களின் இடம் காலியாகும்.

3. பதவிக்காலம் முடியும் உறுப்பினர்கள் நியமனம் அல்லது அடுத்த உறுப்பினர்கள் தேர்வு அறிவிக்கும்வரை பதவி வகிக்கலாம்.

4. வெளியேறும் உறுப்பினர்கள், நிலைக்குழு, மருத்துவ நலக்குழு போன்றவற்றின் மறுநியமனத்திற்கும் மறு தேர்தலுக்கும் தகுதி வாய்ந்தவர்கள்.

உறுப்பினர் தகுதியின்மை (பிரிவு 13)

1. ஓர் உறுப்பினர் மனச் சமநிலை இழந்தவர் என நீதி மன்றம் தீர்ப்பளித்தாலும்,

2. ஒருவர் குற்றத்தவிர்ப்புப் பெறாத நொடித்தவராக இருந்தாலும்,

3. மருத்துவர், பங்குதாரர், இயக்குநர் ஆகியவர்களைத் தவிரக் கழக வேலைகளுக்கான ஒப்பந்தத்தில் அக்கறை யுடையவர்களாக இருந்தாலும் அவர்கள் தகுதியற்றவர் களாக ஆகிவிடுகிறார்கள்.

கழக அதிகாரங்கள்

1. கழகம் அசையும், அசையாச் சொத்துகளை வாங்கிடலாம், பின்னர் விற்கவும் செய்திடலாம் [பிரிவு 29 (1)].

அதன் மிகுதியான நிதியினை முதலீடு செய்யலாம் [பிரிவு 29 (2)]

3. மைய அரசின் முன் அனுமதி பெற்றுக் கடன் வாங்கிடலாம் பின்னர் அதனைப் பைசல் செய்ய நடவடிக்கைகள் எடுத்திடலாம் [பிரிவு 29 (3)]

4. அலுவலர்களின் நலனுக்காக இஃது எதிர்கால நலன் நிதி அல்லது வேறு நிதிகளை ஏற்படுத்தலாம். [பிரிவு 29 (4)]

5. தன் அலுவல் நன்றாகத் திறமையுடன் நடத்திடத் தேவையான அலுவலர்களை இஃது அமர்த்திடலாம் [பிரிவு 7]

6. காப்பீடு செய்துள்ளவர்களின் நல்வாழ்விற்கும் நன்மைக்கும் இது நடவடிக்கைகள் எடுத்திடலாம். மேலும், காயம்பட்டவர்களுக்கும் இயலாமையடைந்தவர்களுக்கும் மறுவாழ்வு அல்லது மறு வேலைவாய்ப்புத் தந்திட முயற்சி எடுக்கிறது [பிரிவு 19].

7. உள்ளூர்ப் பகுதிகளுக்கேற்ப அது விரும்பும் நபர்களை மேற்பார்வையதிகாரிகளாக இது நியமிக்கும் [பிரிவு 45 (1)].

8. இச் சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தனியார், நகராட்சி, மாநில அரசு, மைய அரசு போன்றவைகளிடமிருந்து உதவிப்பணம், நன்கொடை, வெகுமதி போன்றவைகளை இஃது ஏற்கும் [பிரிவு 26 (2)].

9. எந்தத் தொழிற்சாலையில் தொழிலாளர்களின் அறிவிப்பைப் பற்றிய விவரமும், பதிவும், சான்றும் இல்லாமலிருக்கிறதோ அங்கு அளிப்பை இது தீர்மானிக்கிறது.

10 மாநில அரசு ஒப்புதலுடன் ஒரு மாநிலத்தில் மருத்துவமனைகளையும் அறுவைச் சிகிச்சை வசதிகளையும் காப்பீடு செய்தவர்களின் நலனுக்காக இஃது அளிக்கும். அவர்களின் குடும்பங்களுக்கும் மேற்கூறிய வசதிகள் தேவைப்பட்டால் அவைகளையும் இஃது அளிக்கும். மேற்கூறிய வசதிகளுக்காகத் தனியார்களிடமும் உள்ளூர் நிறுவனங்களிடமும் இஃது ஒப்பந்தத்தில் ஈடுபட்டு அதற்காக ஆகும் செலவை இஃது ஏற்கும்.

11. கழகத்தின் நிருவாகத்தைத் திறம்பட நடத்திடச் சட்டத்தில் குறிப்பிடாத விதிமுறைகளையும் இது கையாளும். உதாரணமாகக் கழகத்தின் சட்டங்களின்

காலம், இடம், தொழிற்சாலையைப் பதிவுசெய்யும் விதம், நிலைக் குழுவிற்கு எடுத்துச் செல்லும் விஷயங்கள், கட்டுப்பாட்டாளர் பங்களிப்பின் மதிப்பீடு, உடல் நலக்குறைவுச் சான்றிதழ் போன்றவைகள் அதில் அடங்கும்.

கழகத்தின் கடமைகள்

1. அடுத்த ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தை ஒவ்வோர் ஆண்டும் தயாரித்து மைய அரசிற்கு அதன் ஒப்புதல் கோரி அனுப்ப வேண்டும் [பிரிவு 32].

2. மைய அரசு குறிப்பிட்டுள்ளபடி கணக்கு முறைகளைச் சரியாக வைத்திருக்க வேண்டும் [பிரிவு 33].

3. மைய அரசால் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்களால் அதன் கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும் [பிரிவு 34].

4. அதன் செயல்முறைகள் அடங்கிய ஆண்டறிக்கை ஒன்று மைய அரசிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும் [பிரிவு 35].

5. ஒவ்வோர் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மைய அரசு இசைவின் பேரில் அமர்த்தப்பட்ட மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் [பிரிவு 37].

நிலைக்குழு [பிரிவு 8]

(Standing Committee)

கழகத்தின் செயலாற்றும் அங்கமாக உறுப்பினர்களைக் கொண்டு அமைப்பதுதான் நிலைக்குழு. அதன் உறுப்பினர்கள் கீழ்க்காணும் விதத்தில் செயலாற்றுவார்கள்:

(அ) மைய அரசால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர்.

(ஆ) மைய அரசால் நியமிக்கப்பட்ட கழகத்தின் மூன்று உறுப்பினர்கள்.

(இ) கழகத்தால் தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் பின்வருமாறு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:

(1) பணியாண்மையரின் சார்பில் மூன்று உறுப்பினர்கள்.

(2) தொழிலாளர் சார்பில் மூன்று உறுப்பினர்கள்.

(3) மருத்துவர்கள் சார்பாக ஒருவர்.

(4) பாராளுமன்ற உறுப்பினர்களின் சார்பாக ஒருவர்.

(ஈ) பதவிமுறைப்படி முதன்மை இயக்குநர்.

நிலைக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் [பிரிவு 9]

சட்டத்தில் வேறுவிதமாகச் சொன்னாலொழிய ஒவ்வோர் உறுப்பினரும் நியமன தேதியிலிருந்து இரண்டாண்டுகள் பதவி வகிப்பார். ஆனால் பிரிவு 8-ல் கூறியுள்ள அ, ஆ, இ தலைப்பில் கூறப்பட்டுள்ளவர்கள் இதில் அடங்கமாட்டார்கள். பதவிக்காலம் முடிந்து அடுத்த உறுப்பினர்கள் நியமனம் செய்யும்வரை இவர்கள் பதவியில் நீடிப்பார்கள். ஒருவரின் கழக உறுப்பினர் பதவி முடியும்போது இக் குழுவின் உறுப்பினர் பதவியும் தானாக முடிவடையும்.

நிலைக்குழுவின் அதிகாரங்களும் கடமைகளும் [பிரிவு 18]

1. கழகத்தின் பொது மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு நிலைக்குழு கழகத்தின் அலுவல்களை நிருவகிக்கும்.

2. விதிமுறைகளில் கூறியுள்ளபடி விஷயங்களைக் கழகத்தின் முடிவிற்கும் ஆதரவிற்கும் இது முன்வைத்திடும்.

3. இதன் விருப்பப்படி ஏனைய விஷயங்களையும் கழகத்தின் முடிவிற்கு முன்வைத்திடும்.

மருத்துவ நலக்குழு [பிரிவு 10]
(Medical Benefit Council)

மருத்துவ சம்பந்தப்பட்ட விஷயங்களில் கழகத்திற்கு அறிவுரை கூறிட இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் உறுப்பினர்கள் பின்வருமாறு:

(அ) நல்வாழ்வுத்துறை முதன்மை இயக்குநர் பதவிமுறைப்படி தலைவராவார்.

(ஆ) மைய அரசால் நியமிக்கப்பட்ட துணை முதன்மை இயக்குநர் ஒருவர்.

(இ) பதவிமுறைப்படி கழக மருத்துவ ஆணையாளர் ஒருவர்.

(ஈ) இச் சட்டம் அமலிலிருக்கும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஓர் உறுப்பினர் மாநில அரசால் நியமிக்கப்படுவார்.

(உ) பணியாண்மையர் அமைப்பின் ஆலோசனையுடன் மைய அரசு அவர்கள் சார்பில் மூன்று பேர்களை நியமிக்கும்.

(ஊ) தொழிலாளர் அமைப்பின் ஆலோசனையுடன் மைய அரசு அவர்கள் சார்பில் மூன்று பேர்களை நியமிக்கும்.

(எ) மருத்துவர்கள் அமைப்பினைக் கலந்தாலோசித்து மைய அரசு அவர்கள் சார்பில் மூன்று பேர்களை நியமிக்கும். அவர்களில் குறைந்தது ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டும்.

மருத்துவ கலக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக் காலம்

மேற்கூறிய (உ), (ஊ), (எ) தலைப்பில் கூறப்பட்டுள்ள உறுப்பினர்கள் நான்காண்டுகளுக்குப் பதவி வகிப்பார்கள். ஆனாலும் அடுத்த உறுப்பினர்கள் நியமனம் செய்யும்வரை அவர்கள் பதவி வகிப்பார்கள். (ஆ), (இ) என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள உறுப்பினர்கள் அரசு விரும்பும்வரை பதவி வகிப்பார்கள்.

அதிகாரங்களும் கடமைகளும் [பிரிவு 22]

1. இக்குழு மருத்துவநல நிருவாகம், மருத்துவச் சான்றிதழ், இன்னும் பிற விஷயங்கள்பற்றிக் கழகத்திற்கும் நிலைக்குழுவிற்கும் அறிவுரை வழங்கும்.

2. மருத்துவம் பார்த்தல், மருத்துவர்கள் வருகைபற்றி வரும் புகார்களை விசாரித்து அதற்குரிய நடவடிக்கை எடுத்தல் போன்றவைகளைச் செய்திடும்.

3. விதிமுறைகளில் கூறப்பட்டுள்ள ஏனைய விஷயங்களைக் கவனித்திடும்.

கழகத்தின் முதன்மை அதிகாரிகள் [பிரிவு 16]

மைய அரசு கழகத்தைக் கலந்தாலோசித்துக் கீழ்க்காணும் முழுநேர அதிகாரிகளை நியமிக்கும். அவர்கள்தாம் முதன்மை அதிகாரிகளாவர்.

1. கழகத்தின் முதன்மை இயக்குநர் தலைமைச் செயல் நிறைவேற்ற அதிகாரியாகப் பணிபுரிவார்.

2. ஒரு மருத்துவ ஆணையாளர்.

3. ஒரு தலைமைக் கணக்கு அதிகாரி.

4. காப்பீட்டுக் கணிப்பாளர்.

இவர்கள் முழுநேரம் பணியாற்றும் அதிகாரிகள். அரசு இசைவின்றி வேறு வேலைகளில் இவர்கள் ஈடுபடக்கூடாது. இவர்கள் ஐந்தாண்டுகளுக்குப் பதவி வகிப்பர். மீண்டும் பதவி வகித்திடும் தகுதியும் இவர்களுக்குண்டு.

கடமைகள் [பிரிவு 23]

விதிமுறைகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களும் கடமைகளும் இவர்களுக்குண்டு.

மேற்பார்வையதிகாரிகளும், அவர்களின் நியமனம், பணிகள், கடமைகள் முதலியனவும் [பிரிவு 45]

1. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு மேற்பார்வையதிகாரியைக் கழகம் நியமிக்கும்.

2. இவர்கள் முதன்மை அல்லது அடுத்த பணியாண்மையர் தாக்கல் செய்த தொழிலாளர் பற்றிய விவர அறிக்கை சரியாக உள்ளதா எனப் பார்க்க வேண்டும்.

3. மேற்கூறிய நோக்கங்களுக்காக வேண்டிய விவரங்களை அளிக்கும்படி பணியாண்மையரை இவர் வேண்டுவார்.

4. ஒரு மேற்பார்வை அதிகாரி நியாயமான நேரத்தில் எந்த அலுவலகத்திலும் தொழிற்சாலையிலும் நுழைந்து கணக்குகளைச் சரிபார்த்திடலாம். இது தொடர்பாக எந்தத் தொழிலாளரையும் கேள்வி கேட்டிடலாம்.

5. தொழிற்சாலைகளில் உள்ள கணக்கு ஏடுகள், பதிவேடுகள் இவைகளின் பிரதிகளை எடுத்திடும் அதிகாரம் இவருக்குண்டு.

6. கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளையும் கடமைகளையும் செய்திட வேண்டும்.

தொழிலாளர் அரசு காப்பீட்டு நிதி [பிரிவு 26]

இச் சட்டம் தொழிலாளர் அரசு காப்பீட்டு நிதி ஒன்று ஏற்படுத்திட வழிகோலுகிறது.

நிதியின் பெறுதல்கள் [பிரிவு 26]

நிதியின் பெறுதல்கள் கீழ்க்காணும் வழிமுறைகளிலிருந்தே பெறப்படுகின்றன:

1. பணியாண்மையர்கள் வழங்கிடும் அளிப்புகள் - சட்டத்தில் கூறியுள்ள ஏனைய வழிகளிலிருந்து பெறும் பணம்.

2. தொழிலாளர்களிடமிருந்து பெறும் அளிப்புகள்.

3. சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும், அல்லது ஏதாவது ஒரு நோக்கத்திற்காகவும், தனியார், நகராட்சி, மாநில

அரசு, மைய அரசு ஆகியவைகளிடமிருந்து பெறும் மான்யம், நன்கொடை, வெகுமதி போன்றவை.

இந் நிதிக்காகப் பெறப்படும் எல்லாப் பணமும் ரிசர்வ் வங்கியிலோ, மைய அரசு அனுமதிபெற்ற இதர வங்கியிலோ வைப்பாக வைத்திட வேண்டும். மேலும் இத்தகைய பணம் தொழிலாளர் அரசு காப்பீட்டு நிதி கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். கழகத்தின் ஒப்புதல் பேரில் நிலைக்குழுவின் அதிகாரம் பெற்ற அலுவலர்களால் நிதி நிருவகிக்கப்படுகிறது.

நிதிச்செலவின் நோக்கங்கள் [பிரிவு 28]

கீழ்க்காணும் நோக்கங்களுக்காக நிதியின் தொகையைச் செலவழித்திடலாம் :

1. தொழிலாளர் - அவரைச் சார்ந்தவர்களின் மருத்துவ சிகிச்சைக்குச் செலவழித்தல்.

2. கழகம், நிலைக்குழு, மருத்துவ நலக்குழு, பிரதேசக் குழுக்கள், உள்ளூர்க் குழுக்கள், பிரதேச-உள்ளூர் மருத்துவ நலக் குழுக்கள் ஆகியவைகளின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் கட்டணங்களும் படிகளும்.

3. கழக அலுவலர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியம், படிகள், ஓய்வுத்தொகை, ஓய்வுக் காலத்தில் செலுத்தப்படும் மொத்தத் தொகை முதலியன.

4. மருத்துவமனைகளையும் இதர நிறுவனங்களையும் நிருவகிக்கும் செலவு, பராமரிக்கும் செலவு, இன்னும் துணைச் சேவைகளுக்காக ஆகும் செலவு முதலியன.

5. காப்பீடு செய்த நபர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் அளிக்கப்பட்ட மருத்துவச் செலவிற்காக மாநில அரசு, நகராட்சி, தனியார் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை.

6. கணக்கு ஏடுகளின் தணிக்கைச் செலவு - சொத்துகளையும் பொறுப்புகளையும் மதிப்பீடு செய்யும் செலவு.

7. இச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தொழிலாளர் அரசு காப்பீடு நீதிமன்றம் சார்பாகச் செலவாகும் சட்டச் செலவுகள்.

8. வழக்கு, சமாதானம், தீர்வு, கடமையாற்றல் தொடர்பாகக் கழக அலுவலர்களின்மீது தொடுக்கப்பட்ட வழக்குத் தீர்ப்பு சம்பந்தமாக ஆகும் செலவுகள்.

9. இச் சட்டத்தின்கீழ்த் தொடுக்கப்பட்ட குற்றவியல், உரிமையியல் வழக்குச் சம்பந்தமாகச் செலுத்தவேண்டிய கட்டணங்களைச் செலுத்துதல்.

10. காப்பீடு செய்தவர்களின் நல்வாழ்வீற்காகவும், நலனிற்காகவும் அவர்களின் வேலைவாய்ப்பு, மறுவாழ்வு, மறுவேலை வாய்ப்பு போன்றவைகளுக்காகவும் உடலால் இயலாதவர்களின் மறு வேலைவாய்ப்பு, மறுவாழ்வு போன்றவைகளுக்காகவும் ஒரு குறிப்பிட்ட தொகை செலவழிக்கப்படும்.

11. மைய அரசின் முன் அனுமதி பெற்றுக் கழகம் ஏற்றுக் கொண்ட ஏனைய செலவுகள்.

அளிப்புபற்றிய விதிகள் [பிரிவு 38—42]

1. இச் சட்டம் அமலில் இருக்கும் தொழிற்சாலைகள் — நிறுவனங்கள் போன்றவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சட்டத்தின் நிபந்தனைகள்படி சட்டத்தில் சொல்லியுள்ளபடி காப்பீடு செய்யவேண்டும்.

2. அளிப்பு என்பது பணியாண்மையர் - தொழிலாளர் ஆகிய இரு சாராரின் அளிப்பைக் குறிக்கும்.

3. அளிப்பு செலுத்துவதற்குக் கால அளவு ஒரு வாரமாகும்.

4. பணியாண்மையரால் செலுத்தப்படும் அளிப்பு பணியாண்மையர் அளிப்பு என்றும், தொழிலாளரால் செலுத்தப்படும் அளிப்பு தொழிலாளர் அளிப்பு என்றும் அழைக்கப்படுகிறது.

5. இவர்களின் அளிப்பு விகிதம் பிரிவு 39 பட்டியல் I-ல் உள்ள அட்டவணையில் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

பட்டியல் I [பிரிவு 39]

அட்டவணை

	தொழிலாளர்களின் சராசரி தினக்கூலி	தொழிலாளர் வார அளிப்பு (சம்பளத்திலிருந்து பிடிப்பு)	பணியாண்மையர் வார அளிப்பு	மொத்த வார அளிப்பு (இரு சாராரின் அளிப்பு)	சமின வாழ்க்கைத் தர நலன் விதிதம்
		காசு	காசு	காசு	காசு
1.	ரூ. 2-க்குக் கீழ்	—	75	75	100
2.	ரூ. 2-க்கு மேலும் ரூ. 3 -க்குக் கீழும்	40	80	120	130
3.	ரூ. 3 -க்கு மேலும், ரூ. 4 -க்குக் கீழும்	50	100	150	175
4.	ரூ. 4 -க்கு மேலும் ரூ. 6 -க்குக்கீழும்	70	140	210	250
5.	ரூ. 6-க்கு மேலும் ரூ. 8-க்குக் கீழும்	95	190	285	350
6.	ரூ. 8-க்கு மேலும் ரூ.12-க்குக் கீழும்	125	250	375	500
7.	ரூ.12-க்கு மேலும் ரூ.16-க்குக் கீழும்	175	350	525	700
8.	ரூ.16 -க்கு மேலும் ரூ.24 -க்குக் கீழும்	275	550	825	1,000
9.	ரூ. 24-ம் அதற்கு மேலும்	375	750	1,125	1,500

6. அளிப்புகள் வாராந்திர அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும்.

7. உடல் நலனின்மை, மகப்பேறு, விபத்து ஆகிய மூன்று இடர்கள் தொடர்பாக அளிப்பு அளிக்கப்படுகிறது.

8. முதன்மைப் பணியாண்மையர்கீழ்ப் பணியாற்றினாலும் அவருக்கு அடுத்தவரிடம் பணியாற்றினாலும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தம்முடைய அளிப்பையும் சேர்த்து அவர்கள் அளிப்பையும் செலுத்துகிறார்.

9. பணியாண்மையர் தொழிலாளர்களின் அளிப்பை அவர்களின் ஊதியத்திலிருந்து பிடித்துக்கொள்ள வேண்டுமேயொழிய வேறு வகையில் பிடித்துக்கொள்ளக் கூடாது.

10. முதன்மைப் பணியாண்மையர் தொழிலாளர்களின் அளிப்பைக் கழகத்திற்கு அனுப்பிடும் செலவை ஏற்க வேண்டும்.

11. ஒரு நாளைக்கு ரூ. 1½-க்குக் குறைவாக ஊதியம் பெறும் தொழிலாளர்களிடமிருந்து அளிப்புப் பெறக்கூடாது. ஆனால் சட்டத்தில் கூறப்பட்டுள்ள எல்லா நன்மைகளும் அவருக்குண்டு (பிரிவு 42).

12. ஒரு வாரத்தின் ஒரு பகுதிக்குப் பணியாண்மையர் தொழிலாளருக்குக் கூலி தர வேண்டியிருந்தால் அவ்வாரத்திற்குரிய இரு சாராரின் அளிப்பையும் அவர் செலுத்திவிட்டுப் பின்னர் தொழிலாளர் ஊதியத்திலிருந்து பிடித்துக்கொள்ள வேண்டும்.

நலன்கள் [பிரிவு 46—59]

தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு உடல் நலமின்மை, மகப்பேறு போன்ற நேரங்களில் நன்மை அளித்திட இக் காப்பீட்டுத் திட்டத்தைக் கட்டாயமாக்குகிறது இச் சட்டம். இரண்டு ரூபாய்க்குக் குறைவாகத் தினக்கூலி பெறும் தொழிலாளர் எவ்வித அளிப்பும் அளிக்கத் தேவையில்லை. ஆனால், அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பயன்களும் உண்டு. பண உருவில் பெறும் நலவிகிதம் பட்டியல் I-ல் கூறப்பட்டுள்ளது. அளிப்பு அளித்தாலும் சரி, அளிக்காவிட்டாலும் சரி இத் திட்டத்தின்கீழ்த் தொழிலாளர்கள் பெறும் நன்மைகள் கீழே தரப்பட்டுள்ளன. மருத்துவ வசதியைத் தவிர ஏனைய நன்மைகள் பண உருவில் தரப்படுகின்றன.

1. நோய் நலன்
2. மகப்பேறு நலன்
3. ஆற்றலற்றவர் நலன்
4. சார்ந்து வாழ்பவர் நலன்
5. மருத்துவ நலன்
6. ஈமச்சடங்கு நலன்

1. நோய் நலன் (Sickness Benefit)

கீழ்க்காணும் விதிமுறைகளின்படி நோய்நலன் அளிக்கப்படும்:

(அ) காப்பீடு செய்தவர் நோய் நலனைப் பெற்றிட உரிமையுள்ளவராகிறார். ஆனால் அவர் அந்த நலன் பெறும் காலத்தில் ஏற்

படும் நோய்களுக்கு நலன் பெறுகிறார். மேலும் 13 வாரங்களுக்குக் குறையாமல் அவர் அக்காலப் பகுதியில் அளிப்பு அளித்திருக்க வேண்டும்.

(ஆ) அவர் முதல் நலன் காலப் பகுதிக்குள் நோய்க்காகப் பயன் பெற்றிட அதுவரை உள்ள வாரங்களில் பாதி அளவு வாரங்களுக்கு அளிப்பு செலுத்தியிருக்க வேண்டும் (பிரிவு 47).

(இ) மேற்கூறிய பிரிவு 47-ல் உள்ள விதிப்படி பட்டியல் I-ல் கூறிய விகிதத்தில் அவருக்கு நன்மையளிக்கப்படும்.

(ஈ) நோய் கண்ட முதல் இரண்டு நாள்களுக்கு அவருக்கு இத்தகைய நலன் கிடைக்காது. முதல்நோய் நலன் காலத்திற்குப் பணம் செலுத்தி 15 நாள்களுக்கு மேற்படாமலிருந்தால் இந் நலன் கிடைக்கும்.

(உ) அடுத்தடுத்து வரும் இரண்டு நலக் காலங்களில் 56 நாள் களுக்கு மேற்பட்டு நோய் நலன் தரப்படமாட்டாது.

(ஊ) நோய் நலனில் தரப்படும் தின ஊதியம் முதல் பட்டி யலில் தரப்பட்டுள்ளது.

2. மகப்பேறு நலன்

(அ) காப்பீடு செய்த ஒரு பெண்ணிற்கு நலக்காலத்தில், மகப்பேறு ஏற்பட்டாலும், ஏற்படும் என எதிர்பார்த்தாலும் அவர் 13 வாரங்களுக்கு அளிப்புத் தொகை செலுத்தியிருந்தால் மகப் பேறு நலன் வழங்கப்படும்.

(ஆ) முதல் நலக்காலத்தில் மகப்பேறு ஏற்பட்டாலும் அல்லது ஏற்படும் என எதிர்பார்த்தாலும் அவர் அளிப்புக்கால வாரங் களில் பாதியளவு வாரத்திற்கு அளிப்புச் செலுத்தியிருக்க வேண்டும்.

(இ) மகப்பேறு நலன் கோரும் இவர் மகப்பேற்றுக்கு முன்னர் உள்ள 12 வாரங்களில் 6 வாரங்கள் வேலை செய்யாமல் இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால்தான் முதல் பட்டியலில் கூறப்பட் டுள்ள தின ஊதிய விகிதத்தில் அவருக்கு மகப்பேறு நலன் அளிக்கப்படும்.

(ஈ) காப்பீடு செய்யப்பட்ட பெண் மகப்பேறு காலத்தில் அல்லது அதற்குப் பின்னுள்ள 6 வாரங்களுக்குள் இறந்து, குழந்தை உயிருடன் இருந்தால் மகப்பேறு நலன் பெற்றிடலாம்.

(உ) குழந்தை உயிருடன் இருக்கும்வரை இந்நலன் தரப்படும். மேற்கூறியபடி (இ), (ஈ) தலைப்பில் தரப்படுகின்ற நலன் இறந்த பெண்ணின் வாரிசுதாரருக்கு வழங்கப்படும்.

(ஊ) கருச்சிதைவு ஏற்பட்ட பின்னுள்ள ஆறு வாரங்களுக்கு ஒரு பெண்ணிற்கு இந்நலன் முதல் பட்டியலில் கூறியுள்ள விகிதப்படி ஊதியம் செலுத்தப்படும். ஆனால் அந்நாள்களில் அவர் வேலை செய்யக்கூடாது. விதியில் கூறியபடி அவர் ஒரு சான்றிதழ் வாங்கித் தர வேண்டும்.

(எ) கர்ப்பம், மகப்பேறு, முன்னதாகப் பிறந்த குழந்தை, கருச்சிதைவு இவைகளால் ஏற்படும் நோய்க்கும் மகப்பேறு நலன் உண்டு. ஆனால் இதற்குரிய சான்றிதழ் தரப்பட வேண்டும். இத்தகைய நலன் மகப்பேறு நலத்துடன் வேலை செய்யாத நாள்களுக்கு ஒரு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்குரிய விகிதத்தில் அளிக்கப்படும்.

3. ஆற்றலற்றவர் நலன்

ஆற்றலற்றவர் அல்லது இயலாதவர் காப்பீடு செய்திருந்தால் அவருக்கும் இந்நலன் வழங்கப்படும். அதற்குக் கீழ்க்காணும் விதிகளைக் கையாள வேண்டும் :

(i) இயலாமை நலன்

(அ) ஒருவர் தாற்காலிக இயலாமையை அடைந்தால் விபத்து நாளை விடுத்து மூன்று நாள்களுக்குக் குறையாமல் முதல் பட்டியலில் கூறியுள்ள விகிதத்தின்படி இவருக்கு ஊதியம் வழங்கப்படும்.

(ஆ) ஒருவர் நிரந்தரமான இயலாமையடைந்தால் முதல் பட்டியலில் கூறப்பட்டுள்ள விகிதத்தில் அவருக்கு நலன் வழங்கப் படும். நிரந்தர இயலாமை முழுவதாகவோ, ஒரு பகுதி யாகவோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டால் அக்காலத்திற்கு அல்லது வாழ்நாளுக்குத் தகுந் தாற்போல் நலன் அளிக்கப்படும்.

(ii) பணியின்போது விபத்து ஏற்பட்டது என்று அனுமானம்

ஒரு காப்பீடு செய்த தொழிலாளர் பணிபுரியும்போதுதான் விபத்து ஏற்பட்டது எனக் கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு எதிரான சாட்சியங்கள் இல்லாமலிருக்க வேண்டும்.

(iii) விதிமுறைகளை மீறிச் செயலாற்றும்போது ஏற்பட்ட விபத்து முதலியன

ஒரு தொழிலாளி விதிமுறைகளுக் கெதிராகப் பணிபுரிந்து ஏற்படும் விஷயத்தையும் அவர் பணிபுரியும்போது ஏற்பட்ட விபத்தாகக் கொள்ளலாம். காரணம் பணியாண்மையரின் ஆணைக் கெதிராக நடக்காமலும் அவர் செய்முறைகள் கொடுக்காத போதும் விபத்து அவ்வாறே ஏற்பட்டிருக்கலாம். மேலும் அவரின் வாணிகத்திற்கும் தொழிலுக்கும் தொடர்பாகத் தொழிலாளர் செயல் இருக்க வேண்டும்.

(iv) பணியாண்மையரின் வாகனத்தில் பயணம் செய்யும்போது ஏற்படும் விபத்து

பணியாண்மையரின் அனுமதியுடன் அவருடைய வாகனத்தில் ஒரு பயணியாக வேலை செய்யும் இடத்திற்கோ அல்லது அங்கிருந்தோ பயணம் செய்யும்போது ஏற்படும் விபத்து பணி புரியும்போது ஏற்படும் விபத்தாகக் கொள்ளப்படும். ஆனால் அந்த விபத்து அவ்வாறு அந்தக் கடமையின்கீழ் ஏற்பட வேண்டும். விபத்து நடந்தபோது வாகனத்தைப் பணியாண்மை யருக்காக அவர் அதிகாரம் பெற்றவர் ஓட்டிச் செல்ல வேண்டும். பொது போக்குவரவு வசதிக்காக வாகனம் ஓட்டிச் செல்லக் கூடாது.

(v) ஒரு நெருக்கடியைச் சந்திக்கும்போது ஏற்படும் விபத்து

ஒரு காப்பீடு செய்தவர் பணியாண்மையரின் தொழிற் கூடத்தில் சாதாரண வேலையில் ஈடுபட்டிருக்கும்போது வேறு ஒரு தொழிலாளரை விபத்திலிருந்து காப்பாற்ற முயலும்போது ஏற்பட்ட விபத்து பணிபுரியும்போது ஏற்பட்ட விபத்தாகக் கொள்ளப்படும் (பிரிவு 51.1)

தொழில் முறையில் ஏற்படும் தொற்று வியாதிகள் [பிரிவு 52 – A]

சட்டத்தின் மூன்றாவது பட்டியல் பகுதி அ, ஆ, இ தலைப் பில் கூறியுள்ள நோய்கள் ஒருவருக்கு வருமானால் வேலை செய் யும்போது ஏற்படும் காயமாகக் கொண்டு அதற்குரிய நலனைப் பெற்றிடுவார். அந்த வியாதியால் காயம் ஏற்பட்டால்தான் அதை விபத்தாகக் கொண்டு நலன் அளிக்கப்படும். இல்லாவிட்டால் கொடுக்கப்பட மாட்டாது. ஈயம், பாஸ்பரஸ், மெர்க்குரி, நைட்ரஸ் சுவாலை, டெலக்கிராபிக் கிராம்ப், சில்லிகோசிஸ் போன்றவை களின் விஷத்தன்மையால் ஏற்படும் நோய்களை இதற்கு

உதாரணமாகச் சொல்லலாம். இது தொடர்பான விஷயங்களை மூன்றாவது பட்டியலில் பார்த்துக் கொள்ளலாம்.

இயலாமை நலனின் விகிதம் [பிரிவு 51]

(அ) முதல் பட்டியலில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி ஒரு வருக்கு மூன்று நாள்களுக்குக் குறையாமல் தாற்காலிக இயலாமை ஏற்பட்டால் அந் நாள்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) முழு அல்லது பகுதி நிரந்தர இயலாமை ஒருவருக்கு ஏற்பட்டால் அவ்வியலாமை உள்ள நாள்களுக்கு முதல் பட்டியலில் கூறியுள்ளபடி ஊதியம் அளிக்கப்படும்.

(இ) முழு அல்லது பகுதி நிரந்தர இயலாமையை ஒரு குறிப் பிட்ட காலத்திற்கோ அல்லது இறுதியாகவோ தீர்மானித்தால் அக்குறிப்பிட்ட காலத்திற்கோ அல்லது வாழ்நாள் முழுவதுமோ நலன் கிடைத்திடும்.

கீழ்க்காணும் விகிதத்தில் இத்தகைய நலன் அளிக்கப்படும்:

(i) தாற்காலிக இயலாமைக்கு முழு ஊதிய விகிதம்.

(ii) நிரந்தர முழு இயலாமைக்கு முழு ஊதிய விகிதம்.

(iii) இரண்டாவது பட்டியலில் கூறப்பட்டுள்ள ஒரு காயத் தால் ஏற்பட்ட நிரந்தரப்பகுதி இயலாமைக்கு, நிரந்தர முழு இய லாமைக்குத் தரப்படும் முழு விகிதத்தில் சம்பாதிக்கும் திறன் பாதிக்கப்பட்டுள்ளதால் நலன் அளிக்கப்படும்.

(iv) இரண்டாவது பட்டியலில் கூறப்படாத ஒரு காயத்தால் ஏற்பட்டுள்ள நிரந்தரப் பகுதி இயலாமைக்கு நிரந்தர முழு இயலாமைக்குத் தரும் முழு விகிதத்தில் சம்பாதிக்கும் திறன் பாதிக்கப்பட்டுள்ள அளவிற்கு நலன் அளிக்கப்படும்.

4. சார்ந்து வாழ்பவர் நலன் [பிரிவு 52]

காப்பீடு செய்த தொழிலாளி ஒருவர் விபத்துக் காயங்களால் இறந்துவிட்டால், பிரிவு 6-A –ல் கூறப்பட்டுள்ள அவரைச் சார்ந்த வர்களுக்கு இந் நலன் அளிக்கப்படும். அவருக்குத் தாற்காலிக நலன் அளிக்கப்பட்டதா இல்லையா என்பது அவசியமில்லை. அவர் யாரையும் தம்மைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிடாமல் இறந்துவிட்டால் அவருடையமற்றச் சார்ந்தவர்களுக்கு இந்நலன் அளிக்கப்படும். இந்நலனின் அளவு முதல் பட்டியலின் 8ஆவது விதியில் கூறப்பட்டுள்ளது.

5. மருத்துவ நலன் [பிரிவு 52]

ஒரு தொழிலாளி அளிப்புக் காலத்தில் பாதிகாலத்திற்கு அல்லது பதின்மூன்று தவணைகளுக்குக் குறையாமல் அளிப்பு அளிக்கப் பட்டிருந்தால் அவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் மருத்துவ நலன் உண்டு. அவர்கள் தொழிலாளர் அரசு காப்பீட்டு மருத்துவமனையில் உட்புற நோயாளியாகவோ வெளிப்புற நோயாளியாகவோ அல்லது மருத்துவர் வந்து பார்க்கும் நோயாளியாகவோ சிகிச்சை பெற்றிடலாம். சட்டத்தின் 22ஆவது பிரிவின் படி மருத்துவநலக்குழு கழகத்திற்கு மருத்துவ நலனின் தரம் குறித்து அறிவுரை வழங்கும்.

6. ஈமச்சடங்கு [பிரிவு 46 (1) (f)]

காப்பீடு செய்த தொழிலாளி இறந்துவிட்டால் அவரின் ஈமச் சடங்கிற்கான செலவுகள் அவர் குடும்பத்தில் உள்ள மூத்த உறுப்பினரிடம் கொடுக்கப்படும். அவருக்குக் குடும்பம் இல்லாத போது அவர் யாருடன் வசித்தாரோ அவருக்கு அல்லது ஈமச் சடங்குச் செலவுகளை உண்மையில் யார் செலவழித்தாரோ அவருக்கு அது வழங்கப்படும். இந்நலன் நூறு ரூபாய்க்குமேல் தரப்படமாட்டாது. இதைக் கோரும் காலம் ஆறு மாதங்களுக்கு மேல் போகக்கூடாது. ஆனால் கழகம் சில நேரங்களில் அதற்கு மேலும் நீட்டிப்புத் தரும்.

நலன்பற்றிய பொது விதிகள்

1. மாற்றுரிமை இல்லை

இச் சட்டத்தின்கீழ் நலன் பெறும் உரிமையை யாருக்கும் மாற்ற முடியாது [பிரிவு 60 (1)].

2. தொடர முடியாது

இச் சட்டத்தின்கீழ்ப் பெறும் ரொக்கத்தை வேறு எந்த வழக்குத் தீர்ப்பிற்காகவும் நீதிமன்ற ஆணைக்காகவும் தொடர முடியாது [பிரிவு 60 (2)].

3. ஒரு நலன் ஒரு தடவை

இச் சட்டத்தின்கீழ் நலன் பெறுபவர்கள் ஒரே சமயத்தில் வேறு சட்டத்தின்கீழ் உள்ள நலன்களைப் பெறக்கூடாது [பிரிவு 61].

4. ரொக்க நலனை மாற்றிப் பெறக்கூடாது

இச்சட்டத்தில் கூறியுள்ள விதிமுறைகளைத் தவிர ஏனைய வழிகளில் அவ்வப்பொழுது தரும் செலுத்தல்களை ஒரே மொத்தமாக யாரும் மாற்றிப்பெற முடியாது (பிரிவு 62).

5. வேலை செய்த நாள்களுக்கு நலனில்லை

ஏதாவது ஒரு நாளில் வேலை செய்து கூலி பெற்றால் அந்நாளுக்கு நோய், மகப்பேறு, இயலாமைபோன்ற நலன்கள் செலுத்தப்பட மாட்டாது (பிரிவு 63).

6. சில நிபந்தனைகள்

(i) ஒருவர் நோய் அல்லது இயலாமை நலன் பெற்றிடுவாரானால், அவர் சட்டத்தில் கூறியுள்ள மருத்துவமனை அல்லது வேறு நிறுவனத்தில் காட்டி அல்லது தங்கி மருத்துவம் செய்து கொள்ள வேண்டும். மருத்துவ அதிகாரி அல்லது அவர் உதவியாளர் தரும் அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும்.

(ii) மருத்துவம் பார்த்துக் கொள்ளும்போது, நோய் நீங்குவதற்கெதிரான நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது.

(iii) மருத்துவ அதிகாரி அல்லது அவர் உதவியாளரின் அனுமதியின்றி மருத்துவம் பார்த்துக் கொள்ளும் இடத்தை விட்டுப் போகக்கூடாது.

(iv) கழகத்தின் அதிகாரம் பெற்ற மருத்துவ அதிகாரி அல்லது அவர் உதவியாளர் நோயாளியைப் பார்வையிடுவார். இவர்கள் தங்களைப் பரிசோதிக்க அனுமதிக்க வேண்டும்.

7. நலன் இணையக் கூடாது

காப்பீடு செய்தவர்கள் ஒரே காலத்திற்கு நோய்நலனையும் மகப்பேறு நலனையும் பெறக்கூடாது. நோய் நலனையும் தாற்காலிக இயலாமை நலனையும் பெறமுடியாது. மகப்பேறு நலனையும் தாற்காலிக இயலாமை நலனையும் பெறமுடியாது. அவ்வாறு ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட நலன் பெற உரிமையுள்ளவராக இருந்தால் ஏதாவது ஒரு நலனை அவர் தேர்ந்தெடுக்க வேண்டும் (பிரிவு 65).

கோருரிமைக்கும் சர்ச்சைகளுக்கும் தீர்ப்பளித்தல் [பிரிவு 74,75]

கோருரிமை, சர்ச்சை போன்றவைகளைத் தீர்த்துவைத்திட மாநில அரசு தன் செய்தி மலரில் அறிவிப்புச் செய்து தொழிலாளர்கள் அரசு காப்பீட்டு நீதிமன்றங்களை அமைத்திடும்.

நீதிமன்றத்தின் அமைப்பு

(i) உள்ளூர்ப் பகுதிகளுக்கு அரசு விருப்பப்படி எத்தனை நீதி பதிகள் வேண்டுமானாலும் அமர்த்தப்படலாம்.

(ii) நீதிபதியாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் அல்லது ஐந்தாண்டுகளுக்கு வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருக் கும் ஒருவர் நீதிபதியாக அமர்த்தப்படுவார்.

(iii) ஒரே நீதிமன்றம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதி மன்றங்கள் ஒரே பகுதிக்கும் பணியாற்றும் அதிகாரத்தை அரசு அளித்திடும்.

கீழ்க்காண்பவைகளை நீதிமன்றம் தீர்மானித்திடும்

1. ஒருவர் தொழிலாளியா இல்லையா? தொழிலாளியாக இருந்தால் அளிப்பு அளிக்க வேண்டும்.
2. கூலி விகிதம், சராசரி தினக்கூலி முதலியவைகள்.
3. தொழிலாளர்களுக்காக முதன்மைப் பணியாண்மையர் அளித்திடும் அளிப்பு.
4. தொழிலாளர்களுக்கு யார் முதன்மைப் பணியாண்மை யராக இருந்தார்—இருக்கிறார்?
5. நலன் கோரும் உரிமை; அதற்காக அளிப்பு அளித்திடும் உரிமை.
6. தொழிலாளரைச் சார்ந்தவர்களுக்கு அளிக்கப்படும் செலுத்துதல்பற்றிப் பிரிவு 55 (A)-ல் கழகம் கூறும் செய் முறைக் கட்டளைகளைப் பரீசீலித்தல்.
7. இதர விஷயங்கள்.

கோருரிமை

கீழ்க்காணும் கோருரிமைகளை நீதிமன்றம் தீர்மானிக்கும்:

1. முதன்மைப் பணியாண்மையர் அளிப்புப் பெறுதல் பற்றிய கோருரிமை.
2. தனக்கடுத்த பணியாண்மையரிடமிருந்து அளிப்புப் பெற்றிட முதன்மைப் பணியாண்மையரின் கோருரிமை.
3. பிரிவு 68-ல் உள்ளபடி முதன்மைப் பணியாண்மையர்க் கெதிரான கோருரிமை — அதாவது, அவர் அளிப்புச் செலுத்தத் தவறியது அல்லது புறக்கணித்தது.

4. பிரிவு 70-ல் சொல்லியுள்ள சட்டப்படி பெற உரிமையில் லாத தொழிலாளிக்குத் தவறாக அல்லது சட்டத்திற்குப் புறம்பாகச் செலுத்தப்பட்ட நலனைத் திருப்பக் கோருதல்.

உரிமையியல் நீதிமன்றத்திற்கு மருத்துவக்குழு, மருத்துவ முறையீடு நீதிமன்றம், தொழிலாளர் அரசு காப்பீட்டு நீதிமன்றம் தீர்மானித்த சர்ச்சைகள் சம்பந்தமான வழக்குகளை எடுத்திட உரிமையில்லை (பிரிவு 75).

அதிகாரங்கள் [பிரிவு 78]

தொழிலாளர் அரசு காப்பீடு நீதிமன்றத்திற்குக் கீழ்க்காணும் அதிகாரங்கள் உண்டு :

1. சாட்சிகளை நேரடியாக வரவழைக்கும் அதிகாரம்.
2. முக்கிய ஆவணங்களைக் கண்டுபிடித்துத் தாக்கல் செய்ய ஆணையிடும் அதிகாரம்.
3. உறுதிமொழி செய்து வைப்பதற்கும், சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கும் உள்ள அதிகாரம்.

மேல்முறையீடு [பிரிவு 82]

1. இப்பிரிவில் கூறியுள்ளதை விடுத்து இந் நீதிமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட வேறு எந்தக் கட்டளைக்கும் முறையீடு செய்யமுடியாது.
2. சட்ட வினா சம்பந்தப்பட்ட விஷயங்களைத்தாம் உயர் நீதி மன்றத்திற்கு முறையீடு செய்யலாம்.
3. எந்த மேல்முறையீட்டினையும் 60 நாள்களுக்குள் செய்திட வேண்டும்.
4. இருப்பினும், இந்தியக் காலக்கெடு சட்டத்தின் பிரிவுகள் 5, 12-ன் விதிகள் இப்பிரிவின்கீழ்ச் செய்திடும் மேல்முறையீட்டிற்கும் பொருந்தும்.

விதிவிலக்குகள் [பிரிவு 87 – 90]

1. சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு ஒரு தொழிற் சாலைக்கு அல்லது ஒரு வகையான தொழிற்சாலைகளுக்கு, ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு வகையான நிறுவனங்களுக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஓராண்டிற்கு இச்சட்டத்தைப் பின்பற்று வதற்கு விதிவிலக்கு அளித்திடலாம். ஆனால் ஓராண்டிற்குள்

அவ்விதிவிலக்கைப் புதுப்பித்தாக வேண்டும். அத்தகைய தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் 'விதிவிலக்கு அளிக்கப் பட்ட தொழிற்சாலைகள்' அல்லது 'விதிவிலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள்' என்று அழைக்கப்படும் (பிரிவு 87).

2. சில நிபந்தனையின்கீழ் உரிய அரசு ஒரு நபருக்கு அல்லது ஒரு வகையான நபர்களுக்கு இச் சட்டத்தைப் பின்பற்று வதற்கு விதிவிலக்கு அளித்திடலாம். அவர்கள் 'விதிவிலக்களிக் கப்பட்ட நபர்கள்' என அழைக்கப்படுவர் (பிரிவு 88).

3. மேற்கூறிய விதிவிலக்குகள் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம் அரசை வேண்டினால் ஒழிய தரப்படமாட்டாது (பிரிவு 89).

4. **அரசாங்கத் தொழிற்சாலைகளுக்கு விதிவிலக்கு :** அர சாங்கத் தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் இச் சட்டத்தில் கூறியுள்ள நலன்களையும் அல்லது இதைவிட அதிக நலன்களை யும் பெற்றிருந்தால் கழகத்தின் ஆலோசனையுடன் அத்தகைய தொழிற்சாலைகளுக்கு இச் சட்டத்தைப் பின்பற்றுவதிலிருந்து விதிவிலக்கு உரிய அரசால் அளிக்கப்படும் (பிரிவு 90).

கலைச்சொற்கள்

A

Abandonment	—	கைவிடல்
Actionable claim	—	தொடர்தகுபாத்தியம்
Act of Bankruptcy	—	நொடிப்புநிலை தருவினை
Adjudication	—	நீதித் தீர்ப்பு
Agent	—	பதிலாள், முகவர்
Agent, mercantile	—	வாணிக முகவர்
Alteration Material	—	கருநிலைத் திருத்தம்
Amalgamation	—	நிறுவன இணைப்பு
Apportionment	—	விகிதப் பகிர்வு
Appropriation	—	ஒதுக்கீடு
Arbitration	—	இசைவுத் தீர்ப்பு முறை
Articles of Association	—	செயல்முறை விதிகள்
Assignee	—	உரிமை மாற்றம் பெறுபவர்
Assignor	—	உரிமை மாற்றம் செய்பவர்
Authority	—	அதிகாரம்

B

Bailee	—	ஒப்படை பெறுபவர்
Bailment	—	ஒப்படைப்பு
Bankruptcy	—	நொடிப்புநிலை
Bonafide	—	நல்லெண்ணத்தில்
Bonus	—	மேலூதியம்
Breach	—	முறிவு அல்லது மீறுகை
Breach of contract	—	ஒப்பந்த மீறுகை

C

Carriers common	—	பொதுச் சரக்கேற்றி
Caveat emptor	—	வாங்குபவர் கவனிக்க
Charges and Mortgages	—	பொருட்பிணைப் பொறுப்பும் அடைமானமும்
Chose-in-action	—	வழக்குரிமைப் பொருகள்
Chose-in-possession	—	கையுரிமைப் பொருள்

Coercion	—	வலுக்கட்டாயம்
Collateral Security	—	துணைப் பிணையம்
Commission, Delcredere	—	பிணைமுகவர்
Consideration	—	மறுபயன், கைமாறு
Contingent liability	—	நிகழ்வடைவான பொறுப்பு
Corporation	—	கூட்டுரு, கழகம்

D

Delivery	—	சேர்ப்பு, ஒப்படைப்பு
Discharge of bill	—	உண்டியல் தீர்த்தல்
Discharge of contract	—	ஒப்பந்தம் தீர்த்தல்
Discharge by breach	—	மீறுகையால் தீர்த்தல்
Dividend	—	இலாப ஈவு
Documentary Bill	—	ஆவணங்கள் சேர்ந்த உண்டியல்
Documents of title	—	உரிமை ஆவணங்கள்
Drawee	—	பெயரவர்
Drawer	—	எழுதுபவர்

E

Endorsor	—	மேலெழுதுபவர்
Endorsee	—	மேலெழுத்துப் பெறுபவர்
Endorsement	—	மேலெழுத்து
Endorsement, qualified	—	நிபந்தனை மேலெழுத்து
Endowment Policy	—	காலவரைப் பாலிசி
Equitable Mortgage	—	பத்திரவைப்பு அடைமானம்
Estoppel	—	முரண்தடை
Executor	—	நிறைவேற்றாளர்
Exemption	—	விலக்களிப்பு

F

Fiduciary relationship	—	நம்பக உறவு
Floating charge	—	இழையுறு பற்றுப்பொறுப்பு
Forfeiture	—	தண்ட இழப்பு
Forgery	—	பொய் ஆவணம் புனைதல்
Fradulent preference	—	ஓரவஞ்சகக் கடனடைப்பு
Frustration	—	ஒப்பந்த நிலைகுலைவு

G

General Agent — பொது முகவர்
General Average — பொதுப் பகிர்மானம்
General Endorsement — பொது மேலெழுத்து
Goodwill — வாணிக நற்பெயர்
Guarantee — உத்தரவாதம்
Guarantor — உத்தரவாதி

H

Holder — உடையவர்
Holder in due course — முறைப்படி உடையவர்
Holding out — அதிகாரப் போலிச் செயல்

I

Inchoate Instrument — நிறையுறாத பத்திரம்
Instrument — முறை ஆவணம்
Insurance — காப்பீடு
Insured — காப்பீடு பெறுபவர்
Insurer — காப்பீடு அளிப்பவர்

J

Joint and Several Liability — கூட்டுத் தனித்தனிப் பொறுப்பு

L

Letter of Credit — வாணிக உறுதிக் கடிதம்
Life assurance — ஆயுள் காப்பீடு
Liquid assets — ரொக்கமாக்கக்கூடிய சொத்துகள்
Liquidator — கலைப்பதிகாரி

M

Managing agent — நிருவாக முகவர்
Material alteration — கருநிலைத் திருத்தம்
Memorandum of association — அமைப்புமுறையேடு
Mercantile agents — வணிக முகவர்
Mistake — தவறு
Mortgage — அடைமானம்
Mortgage and charge — அடைமானமும் பொருட் பிணைப் பொறுப்பும்

Mortgage Debenture	—	அடைமானக் கடன் பத்திரம்

N

Negligence	—	கவனமின்மை
Negotiability	—	ஆவணமாற்றுத் தன்மை
Negotiable Instrument	—	மாற்றுமுறை ஆவணம்
Notary public	—	சான்றுறுதி அதிகாரி
Notice of dishonour	—	மதிப்பு மறுப்பறிவிக்கை
Noting	—	மறுக்குறிப்பு
Novation	—	புத்தீடு

O

Offer	—	முனைவு, அளிப்புக்கூற்று
Offer and acceptance	—	முனைவும் ஏற்பும்
Official Liquidator	—	கம்பெனிக் கலைப்பு அதிகாரி
Official receiver	—	சொத்தாட்சி அதிகாரி
Overdraft	—	மேல்வரைப்பற்று

P

Partial endorsement	—	அரைகுறை மேலெழுத்து
Partnership	—	கூட்டு வணிகம்
Patent	—	புனைபொருள்
Pawn	—	அடகு
Pawnbroker	—	அடகு வணிகர்
Payee	—	பெறுபவர்
Payment for honour	—	பெயர் பேணுஞ் செலுத்தம்
Payment in due course	—	முறைப்படி செலுத்தம்
Premium	—	முனைமம்
Promissory Note	—	கடனுறுதிச் சீட்டு
Protest	—	உண்டியல் மறுப்புக் குறிப்பு

Q

Qualified acceptance	—	மாற்றியேற்பு
Quantum merit	—	பணித்தகு தொகை
Quid pro quo	—	மறுபயன்
Quorum	—	குறைவெண்

R

Rebate — தள்ளுபடி
Revocation — பின்னழிப்பு

S

Schedule — பின்னிணைவு
Scheme of arrangement — ஏற்பாட்டாவணம்
Security, bearer — உடையவர் பிணையம்
Security, collateral — துணைப் பிணையம்
Shares, preference — முன்னுரிமைப் பங்குகள்
Solvent — வகையுள்ளவர்
Special agent — சிறப்பு முகவர்
Special endorsement — சிறப்பு மேலெழுத்து
Subrogation — மாற்றமர் அடைமான உரிமை
Surety — உத்தரவாதி
Surrender Value — விடுமதிப்பு

T

Tender — அளிப்பு முனைவு
Title Deed — உரிமை மூல ஆவணம்
Tort — உரிமைத் தீங்கு
Trade mark — வாணிகக்குறி
Transferee — உரிமை மாற்றம் பெறுபவர்
Transferor — உரிமை மாற்றம் செய்பவர்
Trust — பொறுப்புரிமை
Trust Deed — பொறுப்புரிமை ஆவணம்
Trustee — பொறுப்புரிமையர்

U

Uberrimae Fidei — முழு நம்பிக்கையில் எழுகிற
Ultra Vires — அதிகார வரம்பிகந்த
Undue influence — தகாநிலை வற்புறுத்தம்
Usufructuary mortgage — சுவாதீன அடைமானம்
Usury — கடுவட்டி

V

Valid — செல்லும் நிலையது
Void — இல்லா நிலையது

Voidable	—	தவிர்தகு

W

Waiver	—	உரிமை விடுப்பு
Warranty	—	நம்புறுதி
Warranty, implied	—	தொக்கி நிற்கும்

———

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை – 600 006



தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)



இதுவரை பல்வேறு துறைகளுக்கான
910 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.



கிடைக்குமிடம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலக வளாகம்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,

சென்னை-600 006.

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்.